தீங்கியல் சட்டம்

THE LAW OF TORTS

சோ. மு. தேவரத்தினம்

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

த. பா. நி. (க. வெ.) வரிசை எண்—634

தீங்கியல் சட்டம்

(பட்டப்படிப்பிற்குரியது)

ஆசிரியர்

சோ. மு. தேவரத்தினம், எம்.ஏ. (பொருளாதாரம்),
எம்.ஏ. (அரசியல்), பி.எல்.,
இளநிலைப் பேராசிரியர், சட்டக் கல்லூரி,
சென்னை.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

First Edition—July, 1975
T.N.T.B.S. (C.P.) No. 634

© Government of Tamilnadu

THE LAW OF TORTS

S. M. DEVARATHNAM

Price Rs. 13-15

Published by the Tamilnadu Textbook Society under the Centrally Sponsored Scheme of Production of books and literature in regional languages at the University level, of the Government of India in the Ministry of Education and Social Welfare (Department of Culture), New Delhi.

Printed by
The Darwin Printing Works.
5/5, Whannels Road,
Egmore, Madras-8.

அணிந்துரை

திரு. இரா. நெடுஞ்செழியன்

(தமிழகக் கல்வி அமைச்சர்)

தமிழைக் கல்லூரிக் கல்வி மொழியாக ஆக்கிப் பதினைந்தாண்டுகள் ஆகிவிட்டன. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் பட்டப் படிப்பு வகுப்புவரை மாணவர்கள் தங்கள் பாடங்கள் அனைத்தையும் தமிழிலேயே கற்றுவருகின்றனர். 1969ஆம் ஆண்டிலிருந்து அறிவியல் பாடங்களையும் தமிழிலேயே கற்பிக்க ஏற்பாடு செய்துள்ளோம். தமிழிலேயே கற்பிப்போம் என முன்வந்துள்ள கல்லூரி ஆசிரியர்களின் ஊக்கம், பிற பல துறைகளில் தொண்டு செய்வோர் இதற்கெனத் தந்த உழைப்பு, தங்கள் சிறப்புத் துறைகளில் நூல்கள் எழுதித் தர முன்வந்த நூலாசிரியர்கள் தொண்டுணர்ச்சி இவற்றின் காரணமாக இத் திட்டம் நம்மிடையே மகிழ்ச்சியும் மன நிறைவும் தரத்தக்க வகையில் நடைபெற்று வருகிறது. இவ்வகையில், கல்லூரிப் பேராசிரியர்கள் கலை, அறிவியல் பாடங்களை மாணவர்களுக்குத் தமிழிலேயே பயிற்றுவிப்பதற்குத் தேவையான பயிற்சியைப் பெறுவதற்கு மதுரைப் பல்கலைக்கழகமும், சென்னைப் பல்கலைக்கழகமும் ஆண்டுதோறும் எடுத்துவரும் பெருமுயற்சியைக் குறிப்பிட்டுச் சொல்லவேண்டும்.

வரலாறு, அரசியல், உளவியல், பொருளாதாரம், மெய்ப் பொருளியல், புவியியல், புவியமைப்பியல், மனையியல், கணிதம், இயற்பியல், வேதியியல், உயிரியல், வானியல், புள்ளியியல், விலங்கியல், தாவரவியல், பொறியியல், சட்டம் ஆகிய எல்லாத் துறைகளிலும் மூல நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் என்ற இரு வகையிலும் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் வெளியிட்டு வருகிறது.

இவற்றுள் ஒன்றான **'தீங்கியல் சட்டம்'** என்ற இந் நூல் தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் **634** ஆவது வெளியீடாகும், கல்லூரித் தமிழ்க்குழுவின் சார்பில் வெளியான **35** நூல்களையும் சேர்த்து இதுவரை **669** நூல்கள் வெளிவந்துள்ளன, இந் நூல் மைய அரசு கல்வி, சமூக நல அமைச்சகத்தின் மாநில மொழியில் பல்கலைக்கழக நூல்கள் வெளியிடும் திட்டத்தின்கீழ் வெளியிடப் படுகிறது.

தமிழில் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம் பெறவேண்டும் என்பதே நம் குறிக்கோளாகும். கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும், கலையியற் பாடங்களையும் அறிவியற் பாடங்களையும், தொழில்நுட்ப அறிவுப் பாடங்களையும் பயிலுகின்ற மாணவர்கள், அவற்றைத் தமிழில் பயில வேண்டும் என்பதை வலியுறுத்தி வருவதற்குக் காரணம், தமிழறிவு வளர வேண்டும் என்பதைவிட, தமிழ் மக்களின் அறிவு ஆற்றல் எளிதாக, விரைவாக வளரவேண்டும் என்பதுதான், 'எதிலும் தமிழ் எங்கும் தமிழ்' என்ற குறிக்கோளை நிறைவேற்றவேண்டிய கடப்பாடு, தமிழகத்து ஆசிரியப் பெருமக்களையும் மாணவர்களையும் சார்ந்ததாகும். தமிழ்நாட்டுப் பல்கலைக்கழகங்களின் பல்வகை உதவிகளுக்கும் ஒத்துழைப்புக்கும் நம் மனம் கலந்த நன்றி உரியதாகுக.

இரா. நெடுஞ்செழியன்

பொருளடக்கம்

		பக்கம்
1.	தீங்கின் இயல்பு ...	1
2.	தீங்கியலின் அடிப்படைக் கருத்து ...	12
3.	தீங்கியற் சட்டத்தில் பொறுப்பு பற்றிய பொதுவான கொள்கை ...	18
4.	தீங்குக்கான பொறுப்பின் பொதுவான இயல்புகள் ...	23
5.	தவறுகை அல்லது பிழை (fault)—பொதுவான எதிர் வாதங்கள் (General defences) [49-108] ...	32
6.	இசைந்து ஏற்பது தீங்காகாது (Volenti non fit-injuria) ...	37
7.	தவிர்க்க முடியாத விபத்து (Inevitable accident) ...	51
8.	தெய்வச் செயல் (Act of God) ...	55
9.	தவிர்க்க முடியாத தவறு (Inevitable mistake) ...	58
10.	தற்காப்பு உரிமை (Private defence) ...	61
11.	கட்டாய நிலை (Necessity) ...	70
12.	சட்டம் விதிக்கும் செயல்கள் (Acts done under statutory authority) ...	74
13.	இறைமை நிலைச் செயல் அல்லது அரசு முறைச் செயல் (Act of State) ...	81
14.	கூட்டுரு அல்லது கார்ப்பரேஷன் (Corporation) ...	85
15.	தாயின் கருப்பையில் உள்ள சேய் (Child in the mother's womb) ...	90
16.	இளவர் அல்லது உரிமை வயது வராதோர் (Minor) ...	93
17.	மணமான பெண்கள் (Married women) ...	100

பக்கம்

18. பெற்றோர், மற்றும் பெற்றோர் நிலையில் உள்ளவர்களின் அதிகாரங்கள் (Parental and quasi-parental authority) ... 103

19. பைத்தியக்காரர் (Lunatics) ... 106

20. பகரப் பொறுப்பு : பணித்தலைவரும், பணியாளரும் (Vicarious liability : master and servant) ... 110

21. அரசின் பகரப் பொறுப்பு (Viearious liability of the State) ... 149

22. கூட்டாகத் தீங்கிழைப்பவர்கள் (Joint Tort Feasors) 156

23. நீதிமுறை அதிகாரங்கள் (Judicial authority) ... 164

24. நீதிமுறை நிவாரணங்கள் (Juctieial remedies) ... 171

25. நீதிமன்றத்துக்கு வெளியே பெறக்கூடிய நிவாரணங்கள் (Extra-judicial remedies) ... 189

26. தீங்கீடு பெறமுடியாத வழக்கினங்கள் (Classes of cases where damages are irrecoverable) ... 195

27. இடையில் குறுக்கிடும் புதிய செயல் (Novus actus interveniens) ... 215

28. மன அதிர்ச்சி அல்லது நரம்பு மண்டலத்தைப் பாதிக்கும் அதிர்ச்சி (Nervous shock) ... 225

29. ஒரே தீங்குக்காகத் தொடர்ந்து பலமுறை வழக்கிடல் (Successive actions for the same injury) ... 233

30. வெளிநாட்டில் இழைக்கப்பட்ட தீங்குகள் (Foreign torts) ... 237

31. தீங்கு தீரும் வகைகள் (Discharge of torts) ... 241

32. உடலைத் தாக்குதலும் (Battery), தாக்க முனைதலும் (Assault) ... 256

33. முறையின்றிச் சிறைப்படுத்தல் (False imprisonment) 262

34. அவதூறு (Defamation) ... 276

35. நிலத்தில் அத்துமீறல் (Trespass to land) ... 321

36. அசைவியல் சொத்து குறித்த தீங்குகள் (Wrongs to movable property) ... 336

பக்கம்

37. தொல்லை (Nuisance) ... 351

38. கவனமின்மை (Negligence) ... 380

39. செயலே புலப்படுத்துகின்றது (Res ipsa loquitur) ... 401

40. தற்கவனமின்மை (Contributory Negligence) ... 407

41. கடும் பொறுப்பு (Strict liability) ரைலண்ட்ஸ் v. பிளெட்சர் (Rylands v. Flatcher) வழக்கில் சொல்லப்பட்ட விதி ... 421

42. விலங்குகளை வைத்திருப்பதால் உண்டாகும் பொறுப்பு (Liability for animals) ... 432

43. ஆபத்தான கட்டடங்களால் ஏற்படும் பொறுப்பு (Liability for dangerous premises) ... 450

44. ஆபத்தான பொருள்களால் ஏற்படும் பொறுப்பு (Liability for dangerous chattels) ... 471

45. குடும்ப உறவுக்கும் பணி உறவுக்கும் இழைக்கப்படும் தீங்குகள் (Injuries to family and service relation. ships) ... 483

46. ஒப்பந்த முறிவைத் தூண்டுதல் (Inducement of breach of contract) ... 488

47. அச்சுறுத்தல் (Intimidation) ... 495

48. சதி (Conspiracy) ... 498

49. ஏமாற்றுதல் (Deceit) ... 505

50. தீங்கான பொய்ம்மை (Injurious falsehood) ... 515

51. தீங்கெண்ணத்துடன் குற்ற வழக்கிடல் (Malicious prosecution) ... 527

52. வழக்குதவியும் (Maintenance), பங்கு விழை வழக்குதவியும் (Champerty) ... 536

53. வேறு சில தீங்குகளும், தீங்கென உறுதியாகச் சொல்ல முடியாத தீமைகளும் ... 538

மேற்கோள் நூற்பட்டியல் ... 542

கலைச்சொற்கள் ... 543

1. தீங்கின் இயல்பு

தீங்கினைக் குறிக்க ஆங்கிலத்தில் 'டார்ட்' (Tort) என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. முன்பு 'டார்ட்' என்ற ஆங்கிலச் சொல்லும் 'ராங்' (wrong) என்ற சொல்லும் ஒரே பொருளைக் குறித்தன. 'டார்ட்' என்ற சொல் 'Tortum' என்ற லத்தீன் மொழிச் சொல்லிலிருந்து வந்தது. 'ராங்' என்ற சொல்லோ அதன் மூலத்தில் 'ரங்' (wrung) என்ற சொல்லாகும். இந்த 'டார்ட்டம்' என்ற லத்தீன் மொழிச்சொல்லும் 'ராங்' என்ற ஆங்கிலச் சொல்லும், முதலில் நேரல்லாத, சரியல்லாத, குறுகிய, வளைந்த, நெறி பிறழ்ந்த நடத்தையைக் குறிப்பிட்டன. ஆயினும் காலப்போக்கில் 'டார்ட்' என்ற சொல் தனித்த பொருள் கொண்டதாய் மாறிவிட்டது. 'ராங்' என்ற சொல்லோ பொதுவான பொருள் கொண்டதாய் நிலைத்து விட்டது.

எனவே 'டார்ட்' என்ற சொல், குறையற்ற, நெறிபிறழ்ந்த, சட்ட முரணான நடத்தையைக் குறிப்பிடும். இதைத் தமிழில் தீங்கு என்று சொல்கிறோம். ஒருவர் சட்டப்படி பெற்றுள்ள உரிமையை, மற்றவர் மீறி நடந்து கொள்வதே தீங்கான செயலாகக் கருதப்படுகிறது. சமுதாயத்தில் வாழ்கின்ற ஒருவர் சட்டப்படி பெற்றுள்ள உரிமைகளை மதித்து நடக்கவேண்டிய கடமை மற்றவர்களுக்கு உண்டு. இக் கடமையிலிருந்து தவறினால், அவர் தீங்கிழைத்தாகக் கருதப்படுவர்; அவரிடமிருந்து அறுதியிடப்படாத தீங்கீட்டுத்தொகை (unliquidated damages) கோரி நீதிமன்றத்தில் வழக்கிடலாம். குற்றம் (crime) என்பது குற்றவியல் சட்டத்தில் (criminal law) சொல்லப்பட்டுள்ள கடமைகளை மீறும் முறையற்ற செயலைக் குறிக்கும்; ஒப்பந்தமுரிவு (Breach of Contract) என்பது, ஒப்பந்தம் ஒன்றினைச் செய்துகொண்டுள்ள தரப்பினரில் ஒருவர், தான் ஒப்பந்தப்படி செய்வதாக ஏற்றுக் கொண்டுள்ள கடமையை மீறும் செயலாகும். இதைப்போலவே தீங்கியற்

சட்டத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கடமையை மீறுவதே தீங்காகும். எடுத்துக்காட்டாக, ஒருவருடைய புகழுக்கு ஊறு அல்லது இழுக்கு ஏற்படுத்தாமல் இருக்க வேண்டிய கடமை மற்றவர்க்கு உண்டு. இக் கடமையிலிருந்து அவர் தவறினால் அவர் அவதூறு (defamation) என்ற தீங்கினை இழைத்தவராகக் கருதப்படுவார்.

ஒருவருக்கு மற்றவருடைய பொருளைத் தன் சொந்தப் பயனுக்காகக் கையாடாமல் இருக்க வேண்டிய கடமையுண்டு. இக்கடமையிலிருந்து அவர் தவறினால், அவர் கையாடல் (conversion) எனும் தீங்கினைப் புரிந்தவராவார். இதைப் போலவே, ஒருவருக்கு உடைமையாக உள்ள நிலத்தில் முறையின்றி அடுத்தவர் நுழைந்தால், அந்நிலத்தில் அத்துமீறல் (trespass) எனும் தீங்கினை அவர் இழைத்ததாகக் கருதப்படுவார். எனவே, தீங்கு என்பது ஒருவருடைய உரிமைக்கு இழைக்கப்படும் தீமையாகும்.

வின்ஃபீல்ட் (Winfield) அவர்களின் கருத்துப்படி தீங்கியலில் காணும் கடமைகள் யாவும் சட்டத்தாலேயே விதிக்கப்பட்டுள்ளன. இக் கடமைகளுக்கு ஆளாகியுள்ள நபர்களின் உடன்பாட்டையோ அல்லது ஒப்புதலையோ பொறுத்து இக் கடமைகள் அமைந்திருக்கவில்லை. உங்களைத் தாக்காமல் இருக்கவும், உங்களைப்பற்றி அவதூறு சொல்லாமலிருக்கவும், உங்கள் நிலத்தில் அத்துமீறி நுழையாதிருக்கவும் எனக்குக் கடமையுண்டு. இதற்குக் காரணம், சட்டம் எனக்கு அப்படிப்பட்ட கடமையிருப்பதாகச் சொல்கின்றது. இக் கடமை நான் உங்களோடு செய்துகொண்ட ஒப்பந்தம் அல்லது உடன்பாட்டினால் தோன்றவில்லை. இக்காரணத்தால் தீங்கியலில் ஏற்படும் பொறுப்பு ஒப்பந்தப் பொறுப்பு, ஒப்புடைவு (bailment) பொறுப்பு ஆகியவற்றிலிருந்து மாறுபட்டிருக்கிறது. ஒப்பந்தத்திலும் (contract) ஒப்படைவிலும் அவற்றைச் செய்துகொண்டுள்ள தரப்பினரிடையே ஒப்பந்தமோ அல்லது எதிர்வாதியின் இசைவோ இல்லாமல் பொறுப்பு ஏற்படாது. எனினும், சில தீங்குகளைப் பொறுத்தவரை அவ்ற்றிற்குப் பொறுப்பு ஏற்படவேண்டுமானால் எதிர்வாதியின் இசைவை வாதி முன்னரே பெற்றிருக்கவேண்டியது இன்றியமையாததாகும். எடுத்துக்காட்டாக, ஒருவருடைய கட்டடத்திற்கு வருபவர்கள்பால் அக்கட்டடத்தை உடையவர் (occupier) கொண்டுள்ள பொறுப்பு, இங்கிலாந்தில் கட்டடத்தை உடையவர் பொறுப்பு பற்றிய சட்டம், 1957-ன்படி (Occupier's Liability Act, 1957) யமைந்துள்ளது. கட்டடத்தை உடையவர் கட்டடத்தில் நுழைய அனுமதித்துள்ளவர்பால் காட்டவேண்டிய கடமையிலிருந்து தவறினால் பொறுப்பாளியாவார். ஆனால் கட்டடத்தினுள் அவரது இசைவின்றி அத்துமீறி நுழைபவர்

trespasser) பால் அவர் காட்டவேண்டிய கடமைகள் அத்தகைய தல்ல. கட்டணம் ஏதும் பெற்றுக் கொள்ளாமல் தனது காரில் ஒருவரை ஏற்றிக்கொண்டு செல்லும் ஓட்டுநருக்குத் தீங்கியலில் பொறுப்புள்ளதெனினும், அந்தப் பொறுப்பு அப்பயணியைக் காரில் ஏற்றிக்கொண்டுசெல்ல ஓட்டுநர் தந்த இசைவைப் பொறுத்த தாகும். எனவே, தீங்கியலில் எழுகின்ற கடமைகள் அனைத்துமே எதிர்வாதியின் விருப்பம் அல்லது இசைவைப் பொறுத்தவை அல்ல என்று கூறுவது உண்மையாகாது. ஒப்பந்தவியலில் கடமைகள் அனைத்தும் அவரது இசைவையொட்டி அமைகின்ற தென்பதும் உண்மையாகாது. ஒருவர் செய்துகொண்டுள்ள ஒப்பந்தத்தை மீறக் கூடாது எனும் கடமையே சட்டத்தில் விதிக்கப்பட்டுள்ள கடமையாகும். ஒப்பந்தம் செய்துகொண்டுள்ள தரப்பினரிடையே இசைவு இல்லாதபோதும், ஒப்பந்தவியலில் பொறுப்பு ஏற்படுவதுமுண்டு.

ஒப்பந்தவியலில் ஏற்படும் பொறுப்புக்கும் தீங்கியலில் எழும் பொறுப்புக்கும் உள்ள வேறுபாடுகளாவன : ஒப்பந்தவியலில் எழும் கடமைகளை ஒப்பந்த வாசகங்களைக் கொண்டு அறியலாம். இக்கடமைகளை ஒப்பந்தமே நிர்ணயிக்கிறது. தீங்கியலில் தோன் றும் கடமைகளை சட்டமே நிர்ணயிக்கிறது. நான் உங்களை என் கட்டடத்திற்குள் நுழைய அனுமதித்தால் நான் உங்கள்பால் எத்தகைய கவனம் காட்ட வேண்டிய கடமை கொண்டுள்ளேன் என்பதைக் கட்டடத்தை உடையவரின் பொறுப்புச் சட்டம் நிர்ண யிக்கிறது. ஆனால் நீங்களும் நானும் செய்துகொண்டஒப்பந்தத்தின் படி, நான் உங்களுக்கு அனுப்ப வேண்டியது 10 மூட்டை அரிசியா அல்லது 20 மூட்டை அரிசியா என்பதை நாம் இருவரும் செய்துகொண்ட ஒப்பந்தத்தில் உள்ள வாசகங்களைப் பார்த்துத் தான் தீர்மானிக்கமுடியும். ஆயினும் இந்த வேறுபாடுகூட எல்லாச் சமயங்களிலும் பொருந்துவதில்லை. சில சமயங்களில் ஒப்பந்தத்தின்படி தோன்றக்கூடிய கடமைகளையும் சட்டமே நிர்ணயிக்கிறது. எடுத்துக்காட்டாக, சரக்கு விற்பனை, தவணை முறையில் பொருள் வாங்குதல் ஆகிய ஒப்பந்தங்களில் சில கடமைகளை ஒப்பந்தம் செய்துகொண்டுள்ளவர்கள் குறிப்பிட்டாக வேண்டும் என்று சட்டம் வற்புறுத்துகின்றது. மறுதலையாக, சில சமயங்களில் தீங்கியலில் ஏற்படும் பொறுப்புகளில் தரப்பினர் உடன்பாட்டின் மூலம் மாற்றம் செய்து கொள்ளலாம்.

தீங்கியலில் தோன்றும் கடமை ஒருவர் பொதுவாக மற்றவர் பால் செலுத்த வேண்டிய கடமையாகும். இதன்படி, ஒருவர் மற்றவருடைய பொருளினைத் தன் சொந்தப் பயனுக்கென்று

கையாடாமல் இருக்கவேண்டிய கடமையுண்டு என்று முன்பே சொன்னேம். ஆனால் அவர் ஒரு பொருளை வேறு ஒருவருக்கு விற்றுவிட்டால், அப்பொருளை அவர் வசம் ஒப்படைக்க வேண்டிய ஒப்பந்தக்கடமையுண்டு. அதாவது, அவர் அப்பொருளை யாருக்கு விற்றாரோ அவருக்கு மட்டுமே காட்டவேண்டிய கடமையாக இது அமைந்துள்ளது. ஆயினும் இவ்விரு கடமைகளும் வெவ்வேறு நிலையில் உள்ள கூற்றினை ஒப்பு நோக்குவதேயன்றி வேறல்ல.

பிறர் பொருளைக் கையாடல் செய்தல்போன்ற தீங்குகளைப் புரியாமலிருக்கும் பொதுவான கடமைகள் ஒருவருக்குண்டு; இதைப்போலவே, அவர் செய்துகொண்டுள்ள ஒப்பந்தத்தை மீறுமலிருக்க வேண்டிய கடமையும் அவருக்கு உண்டு. குறிப்பிட்ட செயலை மட்டும் நாம் கருத்தில் கொண்டு பார்த்தால், ஒரு குறிப்பிட்ட சரக்கைக் கொடுக்க வேண்டிய கடமை அவற்றை வாங்கியவர்பால் மட்டும் காட்டவேண்டியதாகும்; இதைப் போலவே ஒரு குறிப்பிட்ட பொருளை ஒருவர் தமது சொந்தப் பயனுக்காகக் கையாடாமல் இருக்கும் கடமையும் அப்பொருளின் மீது உடமை கொண்டவர்பாலோ அல்லது உடனடியாக உடமையைப்பெறும் பாத்தியதை கொண்டவர்பாலோ மட்டும் கொண்டுள்ள கடமையாகும்.

பொதுவாகச் சொன்னால், ஒப்பந்தம் செய்துகொண்டுள்ள தரப்பினர் ஏற்றுக்கொண்டுள்ள கடமையை மீறுவது ஒப்பந்த மீறல் ஆகும். இந்த ஒப்பந்தம் அவர்கள் தாமாகவே இசைந்து ஏற்றுக் கொண்டதாகும். ஆனால் தீங்கியலிலோ, தரப்பினர் ஏற்றுக் கொண்டுள்ள கடமை எதையும் மீறுவதால் பொறுப்பு ஏற்படுவ தில்லை. தீங்கியலில் கடமைகள் சட்டமே சுமத்தியுள்ளது. எடுத்துக்காட்டாக,பிறரைத் தாக்காமலிருக்கவும்,அவதூறு புரியாம லிருக்கவும், அவரது நிலத்தில் அத்துமீறி நுழையாமலிருக்கவும் ஒருவருக்குக் கடமையுண்டு. இக்கடமையை அவரே தன்னிச்சை யாக விரும்பி ஏற்றுக்கொண்டுள்ளதாகச் சொல்ல முடியாது. இக்கடமையைச் சமுதாயத்தில் வாழும் ஒவ்வொருவர் மீதும் சட் டம் சுமத்தியுள்ளது. இக்கடமைகளை மீறுவதையே தீங்கு என் கிறோம். ஒருவர் எனக்கு ஒரு பொருளைத் தருவதாக ஒப்பந்தம் செய்து கொண்டு பின்னர் அதை எனக்குத் தராமலிருப்பது, அவர் தன்னிச்சையாக ஏற்றுக்கொண்ட கடமையை மீறிய செய லாகும். இது ஒப்பந்த மீறலாகும்.

இரண்டாவது தீங்கியற் சட்டத்தில் உள்ள கடமைகள், குறிப்பிட்ட நபர் அல்லது நபர்கள்பால் காட்டப்பட வேண்டியன

வல்ல; உலகத்தில் உள்ள அனைவர்பாலும் பொதுவாகக் காட்டப்படவேண்டியனவாகும். எனவே, ஒருவர் கடமையை மீறியதால் இழப்பு அல்லது காயம் உற்ற எவரும் வழக்கிடலாம். டானகு v. ஸ்டீவன்சன் (Donoghue v. Stevenson) வழக்கின் தீர்ப்பின்படி ஒரு பொருளை உற்பத்தி செய்பவர் அதை நுகரக் கூடியவர் யாராயினும் அவருக்கு ஊறு நேராமலிருக்கக் கவனம் காட்டவேண்டிய கடமை கொண்டவராகிறார். இங்கு அவர் கொண்டுள்ள கடமை அவர் செய்துகொண்ட எந்த ஒப்பந்தத்தையும் மீறியதன் விளைவாக ஏற்படுவதல்ல.

தீங்கிழைக்கப்பட்டதாக வழக்கிடப்படும்போதும், ஒப்பந்த மீறலுக்காக வழக்கிடப்படும்போதும், நிவாரணமாக நீதிமன்றம் அளிப்பது தீங்கு அல்லது இழப்பீடேயாகும். ஒப்பந்த மீறலுக்காக அளிக்கப்படும் நிவாரணம் அறுதியிடப்பட்ட தீங்கீடாகும் (liquidated damages). இது ஏற்கெனவே நிர்ணயிக்கப்பட்ட தொகையாகும். இது எவ்வளவு என்று ஒப்பந்தத்திலேயே தரப்பினர் குறிப்பிட்டிருப்பார்கள். இதன் அளவை எளிதில் கணக்கிட முடியும். ஆனால் தீங்கிற்காக அளிக்கப்படும் நிவாரணம் அறுதியிடப்படாத தீங்கீடாகும். நீதிபதி எந்தத் தொகையை நியாயமானது என்று கருதுகிறாரோ அதை நிவாரணமாகத் தர உத்தரவிடும் சுதந்திரம் அவருக்கு உண்டு. தீங்கிற்கான பொறுப்பை வாதி அறுதியிடப்படாத இழப்பீடு கேட்பதிலிருந்து அறியலாம். இதுவே தீங்கியலில் பொதுவாகக் கேட்கப்படும் நிவாரணமாகும். ஆயினும் இதைத் தவிர வேறு நிவாரணங்களும் தீங்கியலில் உண்டு. தனக்குத் தனித்த தொல்லை (private nuisance) ஏற்பட்டதென்று வாதி வழக்கிடும்போது, எதிர்வாதி குறித்த செயல் ஒன்றைச் செய்யவேண்டுமென்று உறுத்துக் கட்டளை (injunction) ஒன்றை நீதிமன்றம் பிறப்பிக்கலாம்; ஒருவர் மற்றவரது பொருளைக் கையாடியிருந்தால் அவர் அதை அதற்குரியவரிடம் மீட்டு ஒப்படைக்கும்படி (specific restitution of property) நீதிமன்றம் உத்தரவிடலாம். ஒருவர் தமது நிலத்தின் உடைமையிலிருந்து (possession) அகற்றப்பட்டிருந்தால், அவ்வாறு நிலத்தின் உடைமையிலிருந்து அவர் விலக்கப்பட்டிருந்த காலத்தில் அவருக்கு ஏற்பட்ட வருமான இழப்புக்கு ஈடு (mesne profits) பெறுவதோடு அந்த நிலத்தையும் அவர் மீட்டுப் பெறலாம். சில சமயங்களில் ஒரே செயலுக்காக எதிர்வாதி ஒருவருக்குத் தீங்கியலில் பொறுப்பும் மற்றொருவருக்கு ஒப்பந்தமீறலுக்காகப் பொறுப்பும் ஏற்க நேரலாம். எடுத்துக்காட்டாக, ஒருவர் தன் மனைவியைப் பல் வைத்தியரிடம் அழைத்துச் செல்கிறார். பல் வைத்தியர் கவனமின்றிப் பல்லைப் பிடுங்கியதால் மனைவிக்குக் காயம் ஏற்பட்டால், ஒப்பந்த

மீறலுக்காகக் கணவருக்குப் பொறுப்பும், கவனமின்றி பல்லைப் பிடுங்கிக் காயப்படுத்தியதற்காக மனைவிக்குத் தீங்கியலில் பொறுப்பும் பல் வைத்தியர் ஏற்க நேரிடும்.

தீங்கும் ஒப்பந்தப் போல்வும் (Quasi Contract)

தீங்கியலுக்கும் ஒப்பந்தப் போல்வுக்கும் உள்ள வேறுபாட்டை இவற்றில் முதலாக எழுகின்ற கடமைகளைக்கொண்டு அறியலாம். முறையின்றி அடுத்தவர் பொருளைப் பெற்றுக் கொண்டவர் அதை அவருக்குத் திருப்பித்தர வேண்டிய கடமையை ஒப்பந்தப் போல்வு குறிப்பிடுகிறது. ஒருவருக்குத் தரப்படவேண்டிய பணத்தை நான் தவறுதலாக வேறொருவருக்குத் தந்துவிட்டால், அதைத் திருப்பித் தரவேண்டிய கடமை அவருக்கு உண்டு. எடுத்துக்காட்டாக, நான் உங்களுக்கு ரூ. 100/- தரவேண்டுமென்று வைத்துக் கொள்வோம். உங்களைப்போலவே தோற்றமுள்ள உங்கள் தம்பியை நீங்கள் என்று தவறுக எண்ணிக்கொண்டு நான் அவரிடம் நூறு ரூபாய் தந்துவிடுகிறேன். அவரும் தனக்கு என்னிட மிருந்து வரவேண்டிய பணம்தான் அது என்று தவறுக நம்பி விடுகிறார். இப்போது அவர் சட்டப்படி அந்தத் தொகையைத் திருப்பித்தர வேண்டும். இதைத்தீங்கியலில் அடிப்படையில் உள்ள ஒரு கடமையினை மீறியதன் விளைவாக ஏற்பட்டதென்றோ, ஒப்பந்தப் பொறுப்பின் விளைவாக எழுந்ததென்றோ சொல்ல முடியாது. இங்கு உங்கள் தம்பி நான் தந்த பணத்தை ஏற்றுக் கொள்ளாமலிருக்க வேண்டிய கடமையைக் கொண்டிருந்தா ரென்றோ அல்லது வேறு ஏதாவது ஒரு கடமையைக் கொண்டிருந் தாரென்றோ சொல்லமுடியாது. அவர் கொண்டிருந்த கடமை என்னவென்றால், என்னுடைய பணத்தைக்கொண்டு முறை யின்றிச் சேர்த்த செல்வம் என்பதால், அதைத் திருப்பித் தந்து நிவாரணம் அளிப்பதாகும். ஒப்பந்தப் போல்விலும், தீங்கியலிலும் எழுகின்ற கடமை சட்டத்தால் விதிக்கப்பட்டதாகும். இரண்டுக் கும் சில வேறுபாடுகள் உண்டு. ஒப்பந்தப் போல்வில் உள்ள உரிமை பணத்தைப் பற்றியதாகும். இது பொதுவாக அறுதியிடப் பட்டதாகும். தீங்கியலில் கிடைக்கும் நிவாரணம் அறுதியிடப் படாத இழப்பீட்டுத் தொகையாகும். தீங்கியலில் இழப்பீடு மட்டுமன்றி வேறு நிவாரணங்களும் உள்ளனவென்று கண்டோம். இதைத் தவிர, ஒப்பந்தப் போல்வில் உள்ள கடமை குறிப்பிட்ட ஒருவரிடத்தில் மட்டுமே காட்டப்பட வேண்டியதாகும்; தீங்கிய லில் எழும் கடமையோ பொதுவாக மற்றவர்கள்பால் காட்டப்பட வேண்டிய கடமையாகும். தீங்கினை எய்தியவர் சில சமயங்களில் தனக்கு ஏற்பட்ட ஊறுக்காக, தீங்கீடு கோரித் தீங்கியலி

வழக்கிடுவதற்குப் பதிலாக ஒப்பந்தப் போல்வின் கீழ் தீங்கிழைத்தவர் பெற்ற பொருளைத் திருப்பித்தர வழக்கிடலாம். இவ்வாறு கையாடல் செய்யப்பட்ட பொருளைப்பெறத் தீங்கியலில் கையாடலுக்காக வழக்கிடாமல் ஒப்பந்தப் போல்வில் வழக்கிடலாம். இவ்வாறே நிலச் சொத்தில் அத்துமீறல் (trespass to land), வஞ்சித்தல் அல்லது ஏமாற்றுதல் (Deceit) போன்ற தீங்குகளுக்குத் தீங்கியலில் உள்ள நிவாரணத்தைக் கைவிடலாம். ஆயினும் அவதூறு, தாக்க முனைதல் (assault) போன்ற தீங்குகளுக்கு இவ்வாறு செய்தல் இயலாது.

தீங்கும் பொறுப்புரிமை மீறலும் (Breach of trust)

மற்றவர் பயனுக்குரிய சொத்தை நிர்வகிக்கும் பொறுப்பினை உரிமையாகக் கொண்டுள்ளவர் (trustee) நம்பிக்கை மோசம் செய்து கையாடினால், அச்சொத்தின் பயனாளி (beneficiary) அந்தப் பொறுப்புரிமைச் சொத்திற்கு ஏற்பட்ட இழப்புக்கு ஈடு செய்யக் கோரி வழக்கிடலாம். இங்கு அச்சொத்திற்கு ஏற்பட்ட இழப்பினை வழக்கிடு முன்னரே நிர்ணயிக்க முடியும். எனவே அறுதியிடப்படாத இழப்பீடு கோரி வழக்கிடும் சோதனையைக் கொண்டு இவ்விரண்டுக்கும் உள்ள வேறுபாட்டினை அறியலாம்.

தீங்கும் ஒப்படைவும்

ஒப்படைவு என்பது ஒருவர் மற்றொருவரிடம் குறித்த நோக்கத்துடன் ஒரு பொருளை ஒப்படைத்து அந்த நோக்கம் நிறைவேறியதும், தம்மிடமோ அல்லது தாம் ஏவுகின்றவரிடமோ அதைத் திருப்பித்தர வேண்டும் என்ற ஒப்பந்தம் செய்துகொள்வதாகும். இந்த ஒப்பந்தத்தின்படி பொருளைத் தருபவரை ஒப்படைவு செய்பவர் (bailor) என்றும், அப்பொருளை ஏற்றுக்கொள்பவரை ஒப்படைவு பெறுபவர் (bailee) என்றும் சொல்கின்றோம். எடுத்துக்காட்டாக மிதிவண்டியை ஒரு சிறு தொகையைப் பெற்றுக்கொண்டு வாடகைக்கு விடுபவரையும், அடகு ஏற்றுக் கொள்பவரையும் சொல்லலாம். மறுபயன் (consideration) பெற்றுக் கொள்ளாமலும் ஒருவர் ஒரு பொருளைக் கடனுகப் பெறலாம். இதுவும் ஒப்படைவே. எடுத்துக்காட்டாக, தம்மிடமுள்ள அரிய நூல்களைப் பணம் வாங்கிக்கொள்ளாமல் மற்றவரைப் படிக்க ஒருவர் அனுமதிக்கலாம். ஒப்படைவு பெறுபவர், அப்பொருளை முறையின்றிப் பயன்படுத்தினாலோ, சேதம் விளைவித்தாலோ, ஒப்படைவு செய்தவர் அவர்மேல் உரிமை வழக்கிடலாம். இங்கு ஒப்படைவு செய்தவர், ஒப்படைவு பெறுபவர் இருவரும் தங்களுக்குள் ஏற்படுத்திக்கொண்ட உறவின் காரணமாகவே

கடமை தோன்றுகிறது. ஒருவருக்கு விருப்பமில்லாவிட்டால் அவர் ஒப்படைவு பெறுபவர் ஆக வேண்டியதில்லை. அவர் தமது விருப்பத்திற்கு மாறுகத் தம்மீது திணிக்கப்பட்ட பொருளை பத்திர மாக வைத்துக் காக்கத் தேவையில்லை. ஒப்படைவில், ஒப்படைவு பெறுபவர் ஒப்படைவு செய்பவர் ஆகிய இருவருக்கும் இடையே உள்ள உறவின் காரணமாகவே பொறுப்புத் தோன்றுகிறது. இதுவே தீங்குக்கும் ஒப்படைவு மீறலுக்கும் உள்ள வேறுபாடாகும்.

தீங்கும் குற்றமும்

தீங்கு என்பது ஒருவரது உரிமைக்கு இழைக்கப்படும் தீமைகள் அல்லது ஊறுகள் ஆகியவற்றின் ஒருவகையாகும். உரிமைக்கு இழைக்கப்படும் தீமைக்கும், குற்றமாகக் கருதப்படும் தீமைக்கும் உள்ள வேறுபாடு சட்டம் அவற்றிற்கு அளிக்கும் நிவாரணங்களின் தன்மையை ஒட்டி அமைந்துள்ளது. உரிமைக்கு ஊறு விளைவித்தால், அதற்கு நிவாரணம் தேட உரிமையியலில் நடவடிக்கை எடுக்கவேண்டும். எதிர்வாதிக்கு எதிராக வாதி கோரும் உரிமையைப் பெற்றுத் தருவது, உரிமையியல் நடவடிக்கை யின் நோக்கமாகும். ஆனால், குற்றவியல் நடவடிக்கைகளின் நோக்கமோ குற்றமாகக் கருதத்தக்க செயலைச் செய்தார் என்று குற்றம் சார்ந்தவரை (accused) தண்டிப்பதாகும். தண்டனை வழங்குவது என்பது மரணத்தை ஏற்படுத்துதல், சிறையடைத்தல், அபராதம் விதித்தல் ஆகியன. மரணதண்டனை, சிறைத்தண்டனை ஆகியவற்றிற்கும் தீங்கிழைத்தவருக்காக வழக்கிட்டுப்பெறும் அறுதியிடப்படாத தீங்கீட்டிற்கும் பொதுவான தன்மை எதுவு மில்லை. சில சமயங்களில் குற்றத்துறை நீதிமன்றங்கள் தண்டிக்கப் பட்டவர் காயமுற்றவருக்கு இழப்பீடாக ஒரு தொகையைத் தருமாறு உத்தரவிடலாம். ஒருவன் மற்றொருவனுடைய சொத்திற்கு வேண்டுமென்றே சேதம் விளைவித்திருந்தால் நீதிமன்றம் அவனுக்கு தண்டனையோ, அபராதமோ விதிப்பதோடு தகுந்த இழப்பீடாகக் கருதத்தக்க தொகை ஒன்றை மற்றவருக்குத் தரவேண்டும் என்றும் உத்தரவிடலாம். நீதிமன்றம் இத்தொகையை எவ்வளவு என்று குறிப்பிடும் வரை சொல்லமுடியாதாயினும், அது ஏதாவதொரு தண்டனையுடன் சேர்த்தே கேட்கப்படக் கூடியதாகும். இதை முதற்கண் கேட்க முடியாது.

சில சமயங்களில் ஒரே தீமை உரிமைத் தீங்காக மட்டும் அல்லாது குற்றமாகவும் அமைந்திருக்கலாம். எடுத்துக்காட்டாக, களவு (theft), நிலை வடிவ அவதூறு (libel), தாக்க முனைதல், சதி (conspiracy), தொல்லை (nuisance) ஆகியவற்றைச் சொல்லலாம்.

இவற்றின் இலக்கணம் தீங்கியலிலும், குற்றவியலிலும் மாறுபட்டிருக்கலாம். உரிமையியலில் பொறுப்பு ஏற்படுத்த வேண்டுமானால் தீங்கியலில் சட்ட விதிகளை நாம் பின்பற்ற வேண்டும். குற்றவியலில் பொறுப்பு உண்டா என்று அறிய குற்றவியல் விதிகளைப் பார்க்க வேண்டும். தனித்த தொல்லை (private nuisance) ஒரு தீங்காகும். அதற்கான பொறுப்பு தீங்கியல் சட்டத்தின்படி அமையும். பொதுத்தொல்லை (public nuisance) ஒரு குற்றமாகும். அது இந்தியக் குற்றவியல் சட்டம் 268ஆம் பிரிவில் சொல்லியுள்ளவாறு அமைந்துள்ளதா என்று பார்க்க வேண்டும். இதற்காக ஒருவன் குற்றவியலில் தண்டிக்கப்பட்டாலும் அத் தீமையால் ஏற்படும் இழப்புக்குத் தனியே தீங்கியலில் பொறுப்பு உண்டு. இரண்டும் தனிப்பட்டவை. எனவே, உரிமையியல், குற்றவியல் ஆகிய இரண்டிலும் நிவாரணம் பெறலாம். தீமை புரிந்தவரைக் குற்றவாளியாகக் கருதி அவரைச் சிறைக்கு அனுப்பி தண்டிப்பதோடு, அவர்மேல் உரிமையியலில் வழக்கிட்டு அவர் செயலால் நட்டமடைந்தவருக்கு இழப்பீடோ அல்லது பொருளை மீட்டு ஒப்படைத்தலோ செய்யுமாறு கட்டாயப்படுத்தலாம்.

குற்றவியலில் தீமையை எய்தியவர் தனிப்பட்ட நபராயினும் நாட்டுக்கு எதிராக ஒரு தீமையை இழைத்தவராகவே கருதப்படுகின்றார். என்வே, பெரும்பாலான குற்றங்களில் தீமையுற்றவர் வழக்கிடுவதற்குப் பதிலாக அரசு வழக்கிடுகிறது. குற்றவியல் நடைமுறைச்சட்டப் பிரிவு 345 (Criminal Procedure Code Sec. 345) நீங்கலாக மற்றக் குற்றங்களைப் பொறுத்தவரை வழக்கினைக் கொடுத்தவர் அவ்வழக்கைத் தொடர்ந்து நடத்துவதில்லை என்று குற்றச் சார்ந்தவருடன் உடன்பாடு செய்து கொள்ளமுடியாது.

தீங்கியலில் ஊறு அல்லது இழப்பு அடைந்தவருக்குத் தீங்கீடு தருவதன் மூலம் நீதி நிலைநாட்டப்படுகிறது. ஏனென்றால் தீங்கு தனி மனிதருக்கு எதிராக இழைக்கப்படுவதாகும். குற்றமோ சமுதாயத்திற்கு எதிராக இழைக்கப்படும் தீமையாகக் கருதப்படுவதால், குற்றம் புரிந்தவர் தண்டிக்கப்படுகிறார். ஊறு எய்தியவனுக்குத் தீங்கீடு தருவதன் நோக்கம் அவர் அடைந்த இழப்பைச் சரி செய்தல் அல்லது ஈடுகட்டுதலாகும். ஆனால் குற்றவியலில் குற்றவாளி தொடர்ந்து குற்றத்தை இழைக்காமல் தடுக்கவும், குற்றம் செய்யும் இயல்பு கொண்ட மற்றவர்கள், அவ்வாறு செய்தலைத் தடுக்கவும் அவனுக்குத் தண்டனை அளிக்கப்படுகிறது. இந்த முறையில் சமுதாயம் பாதுகாக்கப்படுகிறது. இங்கு நாம் கவனிக்கவேண்டிய கருத்துகள் இரண்டாகும். முதலாவதாக, தீங்கு என்பது ஒருவனுடைய உரிமைக்கு இழைக்கப்படும் தீமையாகும். இரண்டாவதாக, ஒருவனுடைய உரிமைக்கு இழைக்கப்படும் ஊறுகள்

அல்லது தீமைகள் அனைத்தும் தீங்காக மாட்டா. தீங்கு தவிர அவனது மற்ற உரிமைகளுக்கு இழைக்கப்படும் வேறு தீமைகளும் இருக்கின்றன; ஒப்பந்த மீறல், பொறுப்புரிமை மீறல் ஆகியவற்றை இவற்றிற்கு முக்கிய எடுத்துக்காட்டுகளாகச் சொல்லலாம். தீங்கீடு கோரி வழக்கிட்டுத் தக்க நிவாரணம் பெறமுடியாத எந்தத் தீமையும் தீங்காகாது. தீங்காயின், தீங்கீடு கோரப்படக்கூடியதாக இருக்கவேண்டியது இன்றியமையாததாகும்.

தீங்கு என்றால் என்ன என்ற கேள்விக்குச் சரியான விளக்கம் இதுவரை யாரும் அளிக்கவில்லை. மேலே கூறியுள்ள கருத்துகளின் அடிப்படையில் வின்ஃபீல்ட் (Winfield) தீங்கியலில் சட்டத்தால் முதற்கண் விதிக்கப்படும் கடமைகளிலிருந்து தவறியதால் ஒருவருக்குப் பொறுப்பு ஏற்படுகிறது என்றும், இக்கடமை பொதுவாக மக்கள்பால் காட்டப்படவேண்டியது என்றும், இக்கடமையிலிருந்து ஒருவர் தவறும்போது அவர்மேல் அறுதியிடப்படாத தீங்கீடு கேட்டு நிவாரணம் பெறவேண்டும் என்று விளக்குகிறார். ஒப்பந்தவியலில் உள்ளது போல என்னென்ன இயல்புகள் அமைந்திருந்தால் தீங்கியலில் பொறுப்பு ஏற்படும் என்று உறுதியாகச் சொல்ல முடியவில்லை. இதற்குக் காரணம் தீங்கியலில் காணும் பல்வேறு தீங்குகள் மாறுபட்ட வரலாற்றுப் பின்னணியைக்கொண்டவை. பல தீங்குகள் அத்துமீறல் நீதிப்பேராணை (writ of trespass), அதனடியாக எழும் வழக்குக்கான நீதிப்பேராணை (trespass on the case) ஆகிய தொன்மையான நீதிப்பேராணைகளிலிருந்து தோன்றியவை. பல்வேறு தீங்குகள் மட்டுமல்லாமல் ஒப்பந்தச் சட்டமும் இந்த நீதிப் பேராணைகளிலிருந்தே பிறந்தது எனலாம். இந்த நீதிப் பேராணைகளிலிருந்து தோன்றிய தீங்குகளைத் தவிர, வேறு தீங்குகளும் உள்ளன. இவற்றிற்கும் மேற்கூறிய பண்டைய நீதிப்பேராணைகளுக்கும் சம்பந்தமில்லை. தீங்கியல் துறை வளர்ந்து கொண்டே வருவதாகும். சமுதாய வளர்ச்சிக்கிசைய புதிய தீங்கினங்களும் தோன்றிக்கொண்டேயிருக்கின்றன.

தீங்கு என்றால் என்ன என்று விளக்கும் பல ஆசிரியர்கள் எது தீங்காகாது என்ற விளக்கமே தர முற்பட்டனர்; தீங்குக்கும், மற்ற உரிமைத் தீமைகளுக்கும் உள்ள வேறுபாட்டைச் சுட்டிக் காட்டி, தீங்கியலில் உள்ள எந்தெந்த இயல்புகள் அவற்றில் இல்லை என்பதைக் குறிப்பிடுகின்றனர். ஒருவனுக்கு இழைக்கப்பட்ட தீமை அவனது உரிமைக்கு இழைக்கப்பட்டதா என்று கருதிப்பார்த்து அத்தீமை ஒப்பந்த மீறல், பொறுப்புரிமை மீறல் போன்ற வகையின்பாற்பட்டதல்லவாயின், அதைத் தீங்கு என்று

சொல்லுகின்றனர். புகழ்பெற்ற சட்டப்பேரறிஞர் சால்மண்ட் (Salmond) தீங்கு என்ருல் என்ன என்று விளக்கும்போது அதை இயற்ருச் சட்டத்தின்படி வழக்கிட்டு அறுதியிடப்படாத இழப்பீடு பெறத்தக்க உரிமைத் தீங்கு என்றும், அது வெறும் ஒப்பந்த மீறல், பொறுப்புரிமை மீறல், அல்லது மற்ற தகைமை நெறியின்படி அமைந்துள்ள கட்டுப்பாடு (equitable obligation) அல்லவென்றும் விளக்குகிருர்.

2. தீங்கியலின் அடிபபடைக் கருத்து

எதிர்வாதியின் முறையற்ற செயலால் வாதிக்கு ஊறு நேகு கிறது. தீங்கியற் சட்டத்தின் நோக்கம் வாதியின் உரிமையில் எதிர்வாதி சட்டம் ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணமோ, நியாயமோ இல்லாமல் குறுக்கிடுவதைத் தடுப்பதேயாகும். 'செயலாலும் சொல்லாலும் மற்றவர்க்கு ஊறு விளைவிக்காதே' என்பதே தீங் கியலின் அடிப்படைக்கொள்கை எனலாம் (alterum non laedere). இதுவே எல்லாத் தீங்குகளிலும் இழையோடும் கருத்தாகும். 'நல் லவை செய்தல் ஆற்றீராயினும் அல்லவை செய்தல் ஓம்புமின்' என்றும், 'ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டா' என்றும், நம் ஆன்றோர் கூறினர். வள்ளுவப் பெருந்தகை இதற்கும் ஒருபடி மேலே சென்று 'இன்னு செய்தார்க்கும், இனியவே செய்யாக்கால், என்ன பயத்ததோ சால்பு' என்று வாய் மலர்ந்தருளினர். எனவே, தீங்கியலின் அடிப்படைத் தத்துவம் அல்லது குறிக்கோள் தமிழர் அறியாததன்று.

எனவே, சட்டத்தால் பாதுகாக்கப்பட்ட நமது நலன்களில் அயலார் குறுக்கிட்டு நமக்கு ஊறு விளைவிக்கும்போது, நமக்கு ஏற் படும் இழப்புக்காகத் தீங்கீடாக ஒரு குறிப்பிட்ட பணத்தொகை யைத் தர வேண்டுமென்று கோரி நாம் நீதிமன்றம் செல்கின்றோம். நாகரிகம் அடைந்துள்ள சமுதாயத்தில் வாழும் நாம், நம்முடைய விருப்பு, ஆசை, பாத்தியதை, தேவை ஆகியவற்றை சமுதாயத் தால் பாதுகாக்கப்படவேண்டிய நலன்களாகக் கருதுகிறோம். பல்வேறு இயல்புகளையுடைய மக்களைக் கொண்ட சமுதாயத்தில் முரண்பட்ட நலன்கள் இருப்பதைத் தவிர்க்க முடியாது; தனி மனித னின் செயலாலோ, அல்லது ஒரு குழுவினரின் செயலாலோ பிறருக் குத் தீங்கு நேரலாம்; இது பலவகைப்படும். உடலில் காயம்ஏற்படல்; சொத்திற்குச் சேதம் ஏற்படல்; புகழுக்கு இழுக்கு ஏற்படல்; வாணிப, பண நலன்களுக்கு இழப்பு ஏற்படல் முதலிய வகைகளில் தீங்கு நேரலாம். எனவே, மனிதன் தனது நலன்களுக்கு ஊறுநேரும் போது நிவாரணம் தருமாறு சட்டத்தின் துணையை நாடுகிறான்.

சட்டம் அவனுக்குத் துணை நின்று நிவாரணமளிக்க அவனுக்குத் தீங்கு நேரக் காரணமாக இருந்தவரை ஒரு செயலைச் செய்யுமாறே அல்லது ஒரு செயலைத் தவிர்க்குமாறே கூறுகிறது. ஊறு எய்தியவருக்கு இழப்பீடு தரவேண்டுமென்று தீர்ப்பளிக்கிறது. இவ்வாறு சமுதாயத்தில் உள்ள ஒவ்வொருவரும் தங்களது நலன்கள் பாதுகாக்கப்பட வேண்டுமென்று விழையும்போது அவற்றைச் சீர்தூக்கிப் பார்த்துப் பாதுகாக்கப்படவேண்டிய நலன்கள் யாவை, பாதுகாக்க வியலாத—பாதுகாக்கக்கூடாத—நலன்கள் யாவை என்றும் முடிவு செய்வது நீதிமன்றங்களின் பொறுப்பாகும். மனிதனின் ஆசைக்கு இலக்கான பொருள்கள் அனைத்தும் சட்டத்தின் பாதுகாப்பினைப் பெறுவது இயலாது; தவிர சிலவற்றிற்குப் பாதுகாப்புத் தரவும் கூடாது. எனவே, ஒரு மனிதனுக்கு இழப்போ அல்லது ஊறோ நேரும்போதெல்லாம் நிவாரணம் தரப்படும் என்று எந்தச் சட்டமும் விதிக்க முடியாது. மனித ஒழுக்கநெறியின்படி எத்தனையோ செயல்களும் (acts) செயல் தவிர்ப்புகளும் (omissions) குற்றமெனக் கருதப்பட்டுக் கண்டிக்கப்படுகின்றன. ஆனால் இவற்றுல் ஊறு அடையும் நபர்களுக்கெல்லாம் நிவாரணம் வழங்குவது என்பது நடைமுறையில் இயலக்கூடியதல்ல; எனவே வழக்கிடக் கூடிய நபர்களின் தகுதியையும், அவர்களுக்கு அளிக்கப்படக் கூடிய நிவாரணத்தின் எல்லையையும் வரையறை செய்துசட்டம் விதிகளை வகுத்துள்ளது.

தீங்கியலின் நோக்கம் ஒருவருக்கு ஏற்படக்கூடிய இழப்புக்கு 'எப்போது நிவாரணம் தரவேண்டும்; எப்போது தரக்கூடாது' என்பதை முடிவு செய்வதாகும். அவ்வாறு ஒருவருக்கு நிவாரணம் கொடுக்கப்படும்போது சட்டம் பின்பற்றும் விதிகள் யாவை என்பதையே இந்நூலில் நாம் படிக்கப் போகின்றோம். தீங்கியல் சட்டம் எந்தச் சூழ்நிலைகளில் பொறுப்பு ஏற்படும் என்று விதிகளைக் கூறுகின்றது; அவ்வாறு அமைத்துள்ள சூழ்நிலைகளின்படி வாதிக்கு ஊறு ஏற்பட்டிருந்தால், அவன் தீங்கெய்தியவன் ஆகிறான். வேறு விதமாகச்சொன்னால், நிவாரணம் அளிக்கப்படத்தக்க தீமையைத் தீங்கு என்று சொல்கிறோம். ஆனால் தீங்கியல் சட்டம் தீமையெனக் கருதாத ஒரு செயலால் வாதி ஊறு அடைந்திருந்தால், அவனுக்கு நிவாரணமே கிட்டாது என்று நாம் சொல்லமுடியாது; தீங்கியலில்தான் அவனுக்கு நிவாரணம் கிட்டாதேயன்றி, ஒப்பந்தம், ஒப்பந்தப் போல்வு, நேர்மை நெறி (equity), பொறுப்புரிமை அமைப்பு போன்ற சட்டத்துறைகளின் துணையை நாடி அவன் நிவாரணம் பெறலாம்; இதற்குத் தடை ஏதும் இல்லை.

நமது உடலுக்குப் பிறரால் எந்தக் காயமும் ஏற்படக்கூடாதென்று நாம் விழைகின்றோம். நமது நிலைச்சொத்து, அசை

வியல் சொத்து ஆகியவற்றில் நமக்குள்ள உரிமையில் யாரும் தலை யிடக்கூடாது என நாம் விரும்புகின்றோம். இதைப்போலவே நமது புகழுக்கு மற்றவர்களால் இழுக்கு ஏற்படக்கூடாதென்றும் கவலைப்படுகிறோம். சட்டம் இந்த நலன்களையே முதலில் காக்கத் தொடங்கி, பின்னர் காலப்போக்கில் வேறு நலன்களையும் அர வணைத்துக்கொண்டது. இவ்வாறு சட்டம், வாணிக ஒப்பந்த உறவுகளையும், குடும்ப உறவுகளையும் பாதுகாப்புக்குரியதாக ஏற்றுக் கொண்டது. அண்மைக் காலத்தில், கவனமின்றி ஒருவர் பிறருக்கு மன அதிர்ச்சி ஏற்படுத்துவதற்கு எதிராகவும், ஒருவரது பொரு ளாதார நலன்களில் மற்றவர் கவனமின்றித் தலையிடுவதற்கெதி ராகவும் சட்டம் பாதுகாப்பு நல்கியது.

தீங்கில்லாக்கேடு அல்லது சட்டத் தீங்கற்ற சேதம் (Damnum sine injuria)

சட்டத்திற்கு முரண்பாடில்லாமல் செய்யப்படும் செயல்களால் கேடு அல்லது சேதம் ஏற்படலாம். இவற்றைச் சட்டம் பொருட் படுத்துவதில்லை; தீங்காகக் கருதுவதில்லை. இச் செயல்களைச் சட் டம் அனுமதிப்பதற்குப் பல காரணங்கள் உண்டு. ஒருவர் தனக் குரிமையுள்ள செயலைச் செய்யும்போது மற்றவருக்கு ஊறு விளைய லாம். எடுத்துக்காட்டாக வணிகர்களுக்கிடையே உள்ள வாணி பப் போட்டியின் விளைவாக ஏற்படும் இழப்பினைச் சொல்லலாம். எனக்குப் போட்டியாக மற்றொருவர் செய்யும் வாணிபத்தால் நான் பொருளை இழக்க நேரலாம். ஆனால் நான் அடைந்த இழப்பு தீங்காகாது. ஏனெனில், என்னைப்போலவே வாணிபம் செய்ய அவருக்கு உரிமையிருக்கிறது. கிளஸ்டர் கிராமர் ஸ்கூல் மாஸ்டர் (Gloucester Grammar Schoolmaster Case) வழக்கில் வாதியின் பள்ளிக்குப் போட்டியாக எதிர்வாதி — தலைமையாசிரியர் வாதியின் பள்ளிக்கு அருகிலேயே ஒரு பள்ளிக்கூடம் திறந்ததன் விளைவாக, வாதி தனது பள்ளிக்கூடக் கட்டணத்தை மூன்றிலொரு பங்கிற்கும் கீழாகக் குறைக்க நேர்ந்தது. இதனால் வாதிக்கு ஏற்பட்ட இழப் புக்கு எதிர்வாதிகள் ஈடுதரவேண்டியதில்லையென நீதிமன்றம் தீர்ப் பளித்தது. என்னுடைய ஆலைக்கு எதிரிலேயே வேறொருவர் ஆலை யைக் கட்டினால் எனது வருவாய் குறையும். ஆயினும் இச்சட்டப் படி தீங்காகாது. எனது ஆலைக்குக் கிடைத்து வரும் தண்ணீரைத் தடுத்து நிறுத்துதல் அல்லது அதைப்போல் வேறு தொல்லை செய் தால் மட்டுமே நான் சட்டப்படி வழக்கிட முடியும்.

மொகல் ஸ்டீம்ஷிப் கம்பெனி *v.* மெக்ரிகர் கோ அண்டு கம்பெனி (Moghul Steamship Co., *v.* Megregor Gow & Co.) வழக்கில் போட்டியாளராகிய வாதியைத் தங்கள் தொழிலிலிருந்து

விரட்டும் நோக்கத்துடன் எதிர்வாதி நிறுமங்கள் கூடிச் சதிசெய்து குறைந்த கட்டணத்திற்குச் சரக்கேற்றிச் செல்ல முன்வந்தன. தவிர வாதி, எதிர்வாதி ஆகிய இருவருக்கும் பொதுவான முகவராய் (agent) சீனுவில் இருந்து வந்த சிலரை வாதியின் முகவராய்த் தொடர்ந்து இருந்தால் தங்களுடைய முகவையை (agency) விலக்கிக் கொள்வோம் என்று எதிர்வாதிகள் அச்சுறுத்தவே அவர்களும் வாதிக்காகச் செயலாற்றுவதை விட்டொழித்தனர். இதன் விளைவாக வாதிக்கு இழப்பு ஏற்பட்டது. முதலாளித்துவ பொருளாதார அமைப்பில் எதிர் வாதிகளின் செயல்கள் முறையானவை என்றே கருதப்படும். ஒருவரே எதிர்வாதிகளுக்கும் வாதிகளுக்கும் முகவராக இருப்பது முரண்பட்ட செயலாகும். எனவே, அது ஏற்றுக் கொள்ள முடியாததாகும். தங்கள் வாணிபத்தைப் பெருக்கவும் கட்டிக்காக்கவும், வருவாயைக் கூட்டவும் எதிர்வாதிகள் சட்டத்திற்கு இசைந்த முறையிலேயே செயல்பட்டனர். எனவே, எதிர் வாதிகள் பொறுப்பாளியல்லர் எனப் பிரபுக்கள் மன்றத்தால் தீர்ப்பளிக்கப்பட்டது.

ஆக்டன் v. பிளன்டெல் (Acton v. Blundell) வழக்கில் எதிர் வாதி தமது நிலத்தில் நிலக்கரிச் சுரங்கம் தோண்டியதால் ஒரு மைல் தொலைவில் இருந்த வாதியின் கேணியில் ஊறிய நீர் வற்றி விட்டது. இவ்வழக்கில் எதிர்வாதிகள் பொறுப்பாளியல்லரெனத் தீர்ப்பளிக்கப்பட்டது. நிலத்தின் மேற் பரப்பின் உரிமையாளர் தம் சொந்தக் காரியத்திற்காகத் தம் விருப்பப்படி கிணறு வெட்டலாம். அது அவரது உரிமையாகும். அவ்வாறு அவர் கிணறு வெட்டியதால் அடுத்துள்ள நிலத்தில் உள்ள கிணற்றின் அடியில் சுரக்கும் நீர் ஊற்று வற்றிப்போகலாம்; அல்லது அந்நிலத்தின் அடியில் ஓடும் நீரோட்டம் நின்று விடலாம்; இதன் விளைவாக அந்நிலத்தின் உரிமையாளருக்கு ஏற்படும் இழப்பு, தீங்கில்லாச் சேதமே யன்றி வேறல்ல என்று தீர்ப்பளிக்கப்பட்டது. சேஸ்மோர் v. ரிச்சர்ட்ஸ் (Chasmore v. Richards) வழக்கில் ஆலைச் சொந்தக்காரராகிய வாதி பல ஆண்டுகளாகத் தமது ஆலைக்கு ஒரு நீரோடையில் இருந்துவரும் நீரைப் பயன்படுத்தி வந்தார்; இந்த நீரோடையில் வந்த நீர் மழை நீராகும். இது வரையறைக்குட்பட்ட எந்தப் போக்கு வழியாகவும் ஓடி நீரோடையின் அடித்தளத்தில் கசிந்து, சேரவில்லை. எதிர்வாதிகள் தங்கள் நிலத்தில் நகர் மக்களின் குடிநீர்த் தேவைக்காக நிலத்தில் ஓர் அகலமான கிணறு தோண்டி குழாய் மூலம் அதிக அளவில் நீரை இறைத்தனர். இதன் விளைவாகக் கால்வாயில் வந்துசேரும் கசிவு நீர் குறைந்து விட்டது; இதற்கு எதிர்வாதி பொறுப்பாளியாக மாட்டார் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. என் நிலத்தை அடுத்துள்ளவர் தம் நிலத்தில்

கிணறு தோண்டினால் என் கிணற்றில் ஊறும் நீர் வற்றிப்போகும் எனத் தெரிந்தால், நான் என் கிணற்றை ஆழப்படுத்தவேண்டும். இதைத் தவிர எனக்கு வேறு வழியில்லை.

மற்றும், பெரிய கேடு ஒன்று ஏற்படாமல் தடுப்பதற்குத் தேவைப்படும் செயல் ஒன்றைச் செய்வதால் மற்றவர்க்குக் கேடு ஏற்படலாம். எடுத்துக்காட்டாக கோப் v. ஷார்ப் (Cope v. Sharpe) வழக்கில் எதிர்வாதி தனது பணித்தலைவருக்குத் துப்பாக்கியால் சுட்டுப் பறவைகளை வேட்டையாடும் உரிமையிலிருந்த நிலத்திற்குத் தீ பரவாமல் தடுப்பதற்காக வாதியின் நிலத்தில் அத்துமீறி நுழைந்தார். உண்மையில் அப்போது எதிர்வாதியின் பணித்தலைவரின் சொத்திற்குத் தீயினால் எந்தச் சேதமும் ஏற்படவில்லை யென்றும் எதிர்வாதி தற்காப்பு நடவடிக்கை எடுத்திராவிட்டாலும், தீயினால் எந்தச் சேதமும் விளைந்திராதென்றும் நிரூபிக்கப்பட்டது. ஆயினும் அப்போது பணித்தலைவரின் சொத்துக்கு உண்மை யாகவே உடனடியாக ஆபத்தேற்பட்டிருந்தால் பணியாளரின் செய்கை முறையானதாகவே கருதப்பட்டது. மற்றும் சிறப்புரிமை யுள்ள வேளையில் ஒருவன் வெளியிடும் அவதூறான அறிக்கையினால் நட்டம் அல்லது ஊறு ஏற்பட்டிருப்பினும் வழக்கிடமுடியாது. சில சமயங்களில் ஒருவனுக்கு ஏற்பட்ட ஊறு மிகவும் அற்பமானதாக இருக்கக் கூடும்; அல்லது இப்படிப்பட்டதெனக் குறிப்பிட்டு உறுதி யாகச் சொல்லமுடியாததாக அது இருக்கலாம்; அல்லது மெய்ப்பித் தல் மிகவும் கடினமானதென்பதால், சட்டத்தின் துணைகொண்டு அதைத் தடுத்தல், வீண் முயற்சி யெனக் கருதப்பட்டுக் கைவிடப் படலாம். எனவே உடலுக்கு ஊறு விளையாமல் வெறும் மனத்துயர் அல்லது இடுக்கண் மற்றும் ஏற்பட்டிருந்தால் அதற்காகத் தீங்கீடு கோரமுடியாது. சில சமயங்களில் சட்டம் தீங்கியலில் நிவாரணம் அளிப்பதை விட்டு வேறு துறைகளில் நிவாரணமளிப்பது உசித மெனக் கருதலாம். எடுத்துக்காட்டாகப் பொதுவான தொல்லைக் குக் குற்ற வழக்கிட்டே நிவாரணம் பெற முடியும்.

சேதம் இல்லாத தீங்கும் (சேதம் விளைவிக்காத தீங்கும்) (Injuria Sine Damno)

சேதம் விளைவித்திருந்தாலும், தீங்காகக் கருதப்படாத செயல்கள் உண்டென மேலே கண்டோம். இதற்கு மறுதலையாக, எவ்விதச் சேதமோ, ஊறோ, அல்லது கேடோ ஏற்படாதபோதும், சட்டத்தால் தீங்கெனக் கருதப்படும் செயல்களும் உண்டு.

தீங்கான செயல்கள் இருவகைப்படும். முதலாவதாக உண்மையில் எந்தச் சேதமோ, ஊறோ ஏற்படாமலிருந்தாலும்

வழக்கிடக் கூடியது. ஒருவர் மற்றவர்களது உரிமைக்கு ஊறு விளைவித்தால், உண்மையில் எந்தச் சேதமும் ஏற்பட்டிரா விட்டாலும், அவர்மேல் வழக்கிடலாம். எடுத்துக்காட்டாக வாதியின் நிலத்தில் அத்துமீறி நுழையும்போது வாதிக்கு எள்ளளவு சேதம்கூட ஏற்படாவிட்டாலும் அவர் வழக்கிட முடியும். இச்செயலால் அவரது சொத்துரிமைக்கு ஊறு விளைந்துள்ளதால் நிவாரணமாக அவருக்குப் பெயரளவில் சிறு தொகை தீங்கீட்டுத் தொகையாக அளிக்கப்படும். வாதி தமது உரிமைக்கு இவ்வாறு ஊறு நேர்ந்தால், உண்மையில் சேதம் ஏற்பட்டதென நிரூபிக்காமலேயே வழக்கிட்டு வெல்ல முடியும். இதற்கு எடுத்துக் காட்டாக, ஒருவரது உடல் அல்லது சொத்து ஆகியவற்றிற் கெதிரான அத்துமீறலைச் சொல்லலாம். ஆஷ்பி v. வைட் (Ashby v. White) வழக்கில் நாடாளுமன்றத் தேர்தல் அலுவலர்களாகிய எதிர்வாதிகள், வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்த வாதிக்கு வாக்குச் சீட்டைக் கொடுக்க முறையின்றி மறுத்துவிட்டனர். வாதி வாக்களிக்க விரும்பிய வேட்பாளர் அத்தேர்தலில் வெற்றி பெற்றுவிட்டார். எனவே வாதிக்கு உண்மையில் இழப்பு எதுவும் ஏற்படவில்லை, எனினும் அவர் உரிமைக்கு ஊறு விளைவிக்கப் பட்டதாக பிரபுக்கள் சபை கருதி எதிர்வாதி பொறுப்பாளியாவார் எனத் தீர்மானித்தது. வாதிக்கு உரிமையொன்று இருப்பின், அதை நிலைநாட்டும் வழியும் அவருக்கு இருத்தல் இன்றியமை யாதது. எனவே, அந்த உரிமையை அவர் அனுபவிக்க முடியாமல் தடுக்கப்பட்டதன் விளைவாக அவருக்கு ஊறு ஏற்பட்டால் அதற்கு அவருக்கு நிவாரணமும் கிடைக்க வேண்டும். நிவாரணமில்லாமல் பெறும் உரிமையிருப்பதால் எந்தப் பயனும் இல்லை. அவதூறான மொழியால் பொருட்சேதம் ஏற்படாவிட்டாலும் ஊறு ஏற்படத்தான் செய்கிறது. எனது நிலத்தில் மற்றவர் குதிரை சவாரி செய்வதால் எனக்குப் பொருட்சேதம் ஏற்படாவிட்டாலும் நான் எனது சொத் தில் அத்துமீறியதற்காக அவர்மேல் வழக்கிட முடியும். இங்கு எதிர் வாதியின் நடத்தையால் எனக்குச் சேதம் ஏற்பட்டதென நான் மெய்ப்பிக்க வேண்டியதில்லை. எதிர்வாதியே தன் நடத்தை சட்டப்படி முறையானதென்று நிரூபிக்க வேண்டும்.

இரண்டாவது, உண்மையில் சேதம் அல்லது இழப்பு அல்லது ஊறு ஏற்பட்டிருந்தால் மட்டுமே வழக்கிடக்கூடிய தீங்கு களாகும். எடுத்துக்காட்டாக கவனமின்மை (negligence) தீங்கு எண்ணத்துடன் குற்ற வழக்கிடல் (malicious prosecution) போன்ற தீங்குகளில், எதிர்வாதியின் நடத்தை சட்டப்படி முறை யற்றதென மெய்ப்பிக்க வேண்டியது வாதியின் கடமையாகும்.

3. தீங்கியல் சட்டத்தில் பொறுப்பு பற்றிய பொதுவான கொள்கை

தீங்கியலில் ஏற்படும் பொறுப்பிஙைக் குறித்து இரண்டு கொள்கைகள் இருக்கின்றன: (1) எந்த முகாந்திரமோ நியாயமோ இல்லாமல் செய்யப்படுகிற முறையற்ற செயல் எதுவாயினும் அதை தீங்கு என்று கருத வேண்டும். (2) தீங்கியலில் சில குறிப்பிட்ட தீங்குகளேயுள்ளன. அவற்றிற்குப் புறம்பாகத் தீங்கியலில் பொறுப்பு இல்லை என்று கருத வேண்டும். அதாவது சட்டம் முறையற்றதெனக் கருதுகின்ற சில குறிப்பிட்ட ஊறுகளைச் செய்தால்தான் பொறுப்பு ஏற்படும். மற்ற செயல்கள் எதுவாயினும் பொறுப்பு ஏற்படாது. இவற்றில் முதலில் கூறப்பட்ட கருத்தை வின்ஃபீல்ட் ஆதரித்தார். சட்டத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட காரணம் எதுவும் இல்லாமல் ஒருவர் மற்றொருவருக்குப் புரியும் கேடு அல்லது ஊறு அனைத்தும் தீங்காகும் என்று அவர் கருதினர். நான் என் அண்டை வீட்டுக்காரருக்கு ஊறு விளைவித்தால், அந்த தீமையைத் தாக்க முனைதல், தாக்குதல், வஞ்சித்தல், அவதூறு என்ற ஒரு பெயர் சொல்லியழைத்தாலும், அல்லது அதற்குப் பெயரே இல்லாவிட்டாலும் அவர் என்மேல் தீங்கியலில் வழக்கிட முடியும். என் செயல் முறையற்றதாயின் நான் அவருக்குப் பொறுப்பாளியாவேன். இக்கருத்து விரிவானதாக அமைந்துள்ளது.

ஆயினும் சால்மண்ட் இக்கருத்தை ஏற்கவில்லை. அவர் கருத்தின்படி தீங்கியலில் சில கேடான செயல்களைத் தடுக்கும் சில குறிப்பிட்ட விதிகளே இருக்கின்றன. இந்த விதிகளுக்கு அப்பாற்பட்டு செய்யப்படும் செயல் எதுவாயினும் சட்டத்தில் பொறுப்பு ஏற்படுவதில்லை. குற்றவியல் சட்டத்தில் எவ்வெச் செயல்கள் குற்றமாகும் என்று தெளிவாக விதிகள் மூலம் நிறுவப் பட்டுள்ளன. இதைப் போலவே தீங்கியலிலும் எந்தச் செயல்கள் சட்ட முரணன செயல்களாகும் என்று விதிகள் மூலம் நிறுவப்

பட்டுள்ளது. எனவே என்மேல் தீங்கியலிலோ, அல்லது குற்றவியலிலோ வழக்கிடப்பட்டால், ஏற்கெனவே நிறுவப்பட்டுள்ள சில குறிப்பிட்ட விதிகளின்படி என் செயல் தீங்காகுமென்றே அல்லது குற்றமாகுமென்றே என் எதிராளிதான் மெய்ப்பிக்க வேண்டுமே அல்லாது, எனது செயல் குறிப்பிட்ட சில விதிகளின்படி நியாயமானது, முறையானதென்று நான் நிரூபிக்க வேண்டியதில்லை. எனவே, சால்மண்டின் கருத்தின்படி ஆங்கில தீங்கியல் சட்டம் என்று எதுவும் இல்லை; தீங்குகளைப்பற்றிய சட்டம் மட்டுமேயுள்ளது. அதாவது சில குறிப்பிட்ட சூழ்நிலையில் வழக்கிடத் தக்கதாக அமைந்துள்ள செயல்களும், செயல் தவிர்ப்புகளுமே சட்டத்தில் சொல்லப்பட்டுள்ளன. எனவே, தன் நூலுக்கு அவர் தீங்குகளைப்பற்றிய சட்டம் (Law of torts) என்று பெயரிட்டாரேயன்றி தீங்கியல் சட்டம் (Law of tort) என்று பெயரிடவில்லை. வழ[illegible]ல் முறைகள் மடிந்துவிட்டன; ஆனால் அவற்றின் [illegible] நீதித்துறையில் இன்னும் சுற்றித்திரிகின்றன. அவை [illegible] இருக்கும்போது தீமைசூழும் ஆற்றல்பெற்று விளங்கின. அதற்குப் பின்னரும் அவை தொல்லை தருவதை நிறுத்திவிட்டன என்று சொல்ல முடியவில்லை. வழக்கிடும் வாதி ஏற்கெனவே அங்கீகரிக்கப்பட்டு, ஏற்றுக் கொள்ளப்பட்ட ஏதாவது ஒரு தீங்கின்கீழ் தனது வழக்கைக் கொணர வேண்டும். எனவே, வாதி தனக்கு இழைக்கப்பட்ட தீமை, ஏற்கெனவே பெயர் சூட்டப்பட்டுள்ள ஏதாவதொரு தீங்காகும் என்று நிரூபித்தாலன்றி வழக்கில் வெல்ல முடியாது. புருக்கூடு போன்ற அமைப்பில் ஒவ்வொரு பொந்திலும் ஒரு குறிப்பிட்ட தீங்குக்கு இடம் அளிக்கப்பட்டதாக வைத்துக் கொண்டால், வாதி தன்னுடைய வழக்கு ஏதாவது ஒரு 'அறை அல்லது பொந்தில்' பொருந்தக் கூடியது என்று காட்டவேண்டும். அவனது வழக்கிற்கு பொருந்தக்கூடிய 'அறை இல்லையெனின்' எதிர்வாதி தீங்கிழைத்ததாக கருதப்படமாட்டான்.

ஆயினும், வழக்கு மூலம் புதியதாக அமைந்துள்ளதென்ற காரணத்தினால் மட்டும் வாதிக்கு நிவாரணம் கிடைக்காமல் போனதாகச் சொல்வதற்கு எந்த ஆதாரமும் இல்லை. ஆஷ்பி v. வைட் (Ashby v. White) வழக்கில், புதுமையான வழக்கு என்பதால் வழக்கிட முடியாது என்று சொல்லக் கூடாது என்று கூறப்பட்டது. மனிதர்கள் ஊறுகளைப் பெருக்கினால், அதற்கேற்ப வழக்குகளையும் அதிகமாக்க வேண்டும். ஏனெனில் ஊறினை எய்திய ஒவ்வொருவருக்கும் நிவாரணம் இருந்தாக வேண்டும். தீங்குகள் எண்ணிறந்தவை; எந்த வரையறைக்கும், எல்லைக்கு. அவை உட்பட்டவையல்ல. இயற்கையின் அமைப்பில் இடம் சூழும் கருவியாக அமையாத பொருளே இல்லையெனலாம்,

நியாயம் என்று நீதிமன்றங்கள் கருதும் இடத்து, வாதி கோரும் உரிமை புதிதாக இருந்தாலும், அவை ஏற்றுக்கொண்டுள்ளன. இன்று ஏற்றுக்கொள்ளப்பட்ட பல தீங்குகள் நீதிமற்றத்தின் தீர்ப்பு களின் விளைவாகவே தோன்றியுள்ளன.

எடுத்துக்காட்டாக, இன்று நாம் ஏற்றுக்கொண்டுள்ள பல தீங்குகளுக்கு மூலமாக நீதிமன்றத் தீர்ப்புகள் அமைந்துள்ளதைச் சுட்டிக்காட்டிட முடியும்; பாஸ்லி v. பிரீமன் (Pasley v. Freeman) வழக்கில் வஞ்சித்தல் எனும் தீங்கும், லம்பி v. கை (Lumly v. Gye) வழக்கில் ஒப்பந்த முறிவை தூண்டிவிடுத லாகிய தீங்கும், வின்ஸ்மூர் v. கிரீன் பேங்க் (Winsmore v. Greenbank) வழக்கில், தனது கணவனை விட்டுப் பிரிந்து செல்லுமாறு மனைவியைத் தூண்டிவிடுதலாகிய தீங்கும் இவ்வாறு தீர்ப்பின் வழித்தோன்றியவையே. இவ்வாறு குறிப்பிட்ட தீர்ப்பின் அடிப்படையாகத் தோன்றிய தீங்குகளுக்கு எடுத்துக்காட்டாக தீங்கெண்ணத்துடன் குற்றவழக்கிடல் நிலைவடிவ அவதூறு, கவன மின்மை ஆகியவற்றைச் சொல்லலாம். கவனமின்மை தனித்த தீங்காக இந்நூற்றாண்டின் துவக்கத்தில்தான் ஏற்றுக்கொள்ளப் பட்டது. அபாயகரமான பொருட்கள் வெளியேறிச் செல்வதால் ஏற்படும் இழப்பு அல்லது ஊறுக்கு கடும் பொறுப்பு உண்டென ரைலண்ட்ஸ் v பிளெட்சர் (Rylands v. Fletcher) வழக்கில் 1868-ல் விதி செய்யப்பட்டது. 1964-ம் ஆண்டில்தான் மாறி வரும் சமுதாய சூழ்நிலைகளுக்கு ஏற்ப இயற்றுச் சட்டத்தைத் திருத்த அதிகாரம் உண்டென பிரபுக்கள் சபை கூறி ரூக்ஸ் v. பர்னார்ட் (Rooks v. Barnard) வழக்கில் அச்சுறுத்தல் (intimidation) எனும் புதிய தீங்கை நிறுவியது. 1833-ல் பிரிஸ்ட்லி v. ஸ்டோன் (Priestley v. Stone) வழக்கில் ஒரு கவன மில்லா அறிக்கையால் ஏற்பட்ட பொருளாதார நட்டம் தீங்கெனக் கோரப்பட்டபோது, நீதிமன்றம் புதிய வழக்கினை உற்பத்தி செய்வ தாகுமென்று கூறிப் புறக்கணித்துவிட்டது. ஆயினும் 1963-ம் ஆண்டு ஹெட்லிபர்ன் & கம்பெனி v. ஹெல்லர் & கம்பெனி லிமிடெட் (Hedley Byrne & Co. v. Heller and Co., Ltd.) வழக்கில் இத்தகையதொரு தீங்கு ஏற்கப்பட்டுவிட்டது. ஆயினும் புதிய நிபந்தனைகளையும், வரையறைகளையும் நீதிமன்றம் தன்னிச்சையாக ஏற்படுத்த முடியாது. இவற்றை நாடாளு மன்றமே ஏற்படுத்த முடியும். சட்டத்தை விரிவாக்கவேண்டு மாயின். அடிப்படையான கொள்கைகளை பயன்படுத்தியே தீர வேண்டும்.

சட்டத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நியாயம் இருந்தாலொழிய ஒருவன் மற்றொருவருக்குச் செய்யும் ஊறுகள் அனைத்தும்

தீங்காகவே கருதவேண்டும் என்று வின்ஃபீல்ட் கூறினர் என்று கண்டோம். இவர் கருத்துக்கு பொதுவான வரவேற்பு கிட்டவில்லை. அவர் தமது கொள்கையைச் சற்றே மாற்றி, குறுகிய நடைமுறைக் கண்ணோட்டத்தின்படி சால்மண்டின் கருத்து ஏற்றுக்கொள்ளத் தக்கது என்று கூறினர். ஆனால் பரந்த கண்ணோட்டத்தின்படி தமது கருத்து சரியானதென்று வாதிட்டார். பல நூற்றாண்டுகளாக தீங்கியல் சட்டம் வளர்ந்து வந்துள்ளதென்றும் இன்னும் வளர்ந்து கொண்டுதான் வருகிறதென்றும் கூறப்படும் பரந்த கருத்தை நாம் ஏற்றால் வின்ஃபீல்டின் கொள்கையை அதன் பின்னணியில் காணலாம். தற்சமயத்தில் உள்ள தீங்கியல் சட்டத்தை மட்டும் கருத்தில் கொண்டு இறந்த காலத்தில் ஏற்பட்ட வளர்ச்சியையும் எதிர் காலத்தில் ஏற்படும் வளர்ச்சியையும் ஒதுக்கிவிட்டுப் பார்த்தால் சால்மண்டின் கருத்து சரியானதாகத் தோன்றும். சாலையில் செல்பவர் தமக்கு எதிரில் உள்ள மரத்தின்மேல் மோதாமலிருக்க அதைக் கல்போன்ற உயிரல்லாப் பொருளாக அவ்வேளையில் அதைக் கருதுவதற்கும் அம்மரம் வளர்ந்து வருவதை நாம் அறிந்துள்ளதால் அதை உயிருள்ளதென உணர்வதற்கும் உள்ள வேறுபாடு போன்றதே இவ்விரண்டு கொள்கைகளுக்கும் உள்ள வேறுபாடாகும்.

ஆயினும் சால்மண்ட் தீங்கியலை வளர்ச்சி நின்றுபோன சட்டமாகக் கருதவுமில்லை. புறுக்கூட்டு அமைப்பில் உள்ள பொந்துகளில் தீங்குகளைச் சேர்க்கலாம் என்று கூறுவதால், இந்தப் பொந்துகள் கொள்ளவில் சுருங்கியவையன்றோ, புதிய பொந்துகளை ஏற்கமுடியாத வடிவமைப்பு கொண்டவையென்றோ பொருளாகாது. ஆயினும் இந்த மாற்றங்களுக்கு காரணமாகும் என்று சொல்லத்தக்க விதத்தில் எந்த ஒரு தனிப்பட்ட கொள்கையும் இல்லையென்றுதான் அவர் கருதினர். நியாயமின்றி இழைக்கப்படும் தீமைகள் அனைத்தும் தீங்குகள் என்று வின்ஃபீல்ட் கூறியதால், தகுந்த காரணம் இருப்பின் அவை தீங்காகாது என்று அவர் ஏற்றுக்கொண்டார் என்றாகிறது. எனவே சால்மண்ட், வின்ஃபீல்ட் ஆகிய இருவருடைய கொள்கைகளுக்கும் பெரிய வேறுபாடு இருப்பதாகச் சொல்வதற்கில்லை.

பொறுப்பு பற்றிய பொதுவான விதியொன்றை நாம் இன்னும் உருவாக்கவில்லையெனினும், அதை நோக்கியே மெதுவாக முன்னேறிக்கொண்டிருக்கிறோம் என்று சொல்லலாம். மேலே கூறப்பட்ட இரு கொள்கைகளுக்குமுள்ள வேறுபாடு நாம் பிரச்னையை எந்தக் கோணத்திலிருந்து அணுகுகிறோம் என்பதைப் பொறுத்தே அமைந்திருக்கிறது. இந்த இரண்டு கொள்கையிலுமே

நீதிமன்றங்கள் முன் உள்ள புதுமையான வழக்குகளில் பொறுப்பு ஏற்படுத்துவதற்கோ, அல்லது பொறுப்பில்லை என்று சொல்வதற்கோ ஏற்றவாறு அமைந்துள்ள பொதுவான விதியில்லை. முதற் கொள்கையின்படி பொறுப்பு ஏற்படுவதற்கான விதிகள் விரிவானவை; இரண்டாவது கொள்கையின்படி பொறுப்பின்மைக்கான சில விதிகளும் விரிவானவை; அவ்வளவே. எனவே இவ்விரண்டு கொள்கைகளின்படி அமையாதெனத் தோன்றக் கூடிய வழக்காயின் நீதிமன்றங்களுக்கு யார்பக்கம் தீர்ப்பளிப்பதென்று வழிகாட்டக் கூடிய கொள்கை எதுவும் இவற்றில் இல்லை, எனவே முரண்பட்டதாகத் தோன்றும், இவ்விரண்டு கொள்கைகளைப்பற்றிய வாதங்களை முடிவுக்கு கொண்டுவந்து, நாம் பொறுப்பு ஏற்படுத்தும் சில பொதுவான விதிகளும் அவற்றைப்போன்று பொறுப்பிலிருந்து விலக்களிக்கும் சில பொதுவான விதிகளும் தீங்கியலில் உள்ளவென்றும் கூறலாம். இவற்றிற்கிடையே கருத்து வேறுபாட்டுக்கு இடமாகியுள்ள பகுதியில் நீதிமன்றம் 'எல்லை நிர்ணயக் குழுவினை' போல் செயல்படலாம். இவ்வேளைகளில் வாதிக்குச் சாதகமாகத் தீர்மானிக்கப்பட்டால், பொறுப்பு ஏற்படுத்துவதற்கான பொது விதிகளை ஏற்றுக்கொள்ளத்தக்க வழக்காக வாதியின் வழக்கை நீதிமன்றம் கருதுவதாகக் கொள்ள வேண்டும்.

4. தீங்குக்கான பொறுப்பின் பொதுவான இயல்புகள்

1. வழக்கிடல் முறைகள் (Forms of Action)

தீங்கியல் சட்டம் முக்கியமாக இயற்றுச் சட்டத்தையே மூல மாகக் கொண்டுள்ளது. அதாவது, இச்சட்டம் பெரும்பாலும் முடிவு செய்யப்பட்ட வழக்குகளையும், நீதிபதிகளின் கருத்துகளை யுமே அடிப்படையாகக் கொண்டு வளர்ந்துள்ளது. இயற்றிய சட்டங்கள் தீங்கியலில் குறைவே. தீர்ப்புகளால் சேர்ன்றியுள்ள சட்டங்களை அடிப்படையாக வைத்தே தீங்கியல் சட்டம் ஒரு மாளிகையாக எடுப்பாக ஓங்கி நிற்கிறது. மேலும் மற்ற சட்டத் துறைகளைப் போலவே சட்ட ஆட்சி முறைகளின் பின்னணியில் தீங்கியல் வளர்ந்துள்ளதென்றும் சொல்லலாம். 19ஆம் நூற்றாண் டின் இடைக்காலம் வரை எதிர்வாதி தனக்குத் தீமை புரிந்ததாக வாதி வழக்கிட்டபோது, வாதியின்பால் கொண்டுள்ள கடமையை எதிர்வாதி காட்டத்தவறினானா என்று கேட்பதற்குப் பதிலாக எதிர் வாதியின்மேல் வழக்கிட வாதிக்கு வழக்கியல் முறை ஏதாவது இருக்கிறதா என்றே கேட்கப்பட்டது. அவ்வாறு வழக்கு நெற் முறை இருப்பின் அவன் எந்த வழக்கிடல் அமைப்பின் கீழ் வழக் கிட வேண்டும் என்று வினவப்பட்டது. வாதியின் வழக்கு மூலம் அல்லது அவன் கேட்கும் நிவாரணம் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள வழக்கிடல் முறைகள்(forms of action)எதிலும் பொருந்தாதாயின் அவனுக்கு நிவாரணம் கிடைக்காது. எனவே, வாதி தவருன வழக் கிடல் முறையினைத் தேர்ந்தெடுத்திருந்தால் அவனது வழக்கு நியாயமானதாயினும் தோல்வி அடையும். அரசாங்கத்துறை யாகிய 'சான்சரி'யினால் (Chancery) தரப்பட்ட அரசு நீதிப் பேராணையை (Royal Writ) வாதி அதற்குரிய விலையைக் கொடுத்து வாங்கி தன் வழக்கினைத் தொடர வேண்டும். ஆங்கிலச் சட்ட வரலாற்றில் நெடுங்காலமாகச் சட்டம் அரசாணையின் வகை

களாகவே வளர்ந்தது. இன்று நாம் தீங்குகள் என்று கருதும் பல ஊறுகளுக்கு நிவாரணம் அளித்தவை இந்த அரசு ஆணைகளே. இவற்றில் முக்கியமானவை அத்துமீறலுக்கான (trespass) ஆணையும், அதனடி எழும் வழக்கில் தரப்படும் ஆணையும் (trespass on the case) ஆகும். நாம் அத்துமீறல் என்று பொதுவாக இன்று கருதுவது அனுமதியின்றி பிறரது நிலத்தில் நுழைவதேயாகும். ஆயினும் சட்டத்தின் இதன் பொருள் விரிவானதாகும். அத்துமீறலுக்காக அளிக்கப்படும் அரசு ஆணை நிலம், சொத்து, உடல் ஆகியவற்றிற்கு இழைக்கப்படும் ஊறுகளுக்கும் பொருந்தியது. ஆனல் நேரடியாகவும் உடனேயும் ஏற்பட்ட ஊறுகளுக்காக மட்டும் இவை பொருந்தும். எடுத்துக்காட்டாக நெடுஞ்சாலையில் குறுக்கே எறியப்பட்ட மரக்கட்டையால் தடுக்கி விழும் மனிதனுக்கு ஏற்படும் உடனடிக் காயங்களுக்கு மட்டுமே இந்த அரசு ஆணை பொருந்தியது. இதன் நேரடி விளைவாக இல்லாமல் பின்னர் ஏற்பட்ட ஊறுகளுக்கு இந்த அரசாணை கிடைக்காது. ஆகவே இப்படிப்பட்ட ஊறுகளுக்கு நிவாரணம் தேட வழக்கினடியாக எழும் அத்துமீறல் அரசு ஆணை பயன்பட்டது. இவ்விருவகை வழக்குமுறைகளும் பல நூற்றாண்டுகளாக இருந்து வந்துள்ளன. நமது தீங்கியல் சட்டத்தின் பெரும்பகுதி இவற்றின் அடிப்படையில் எழுந்தவை. இவற்றிற்கிடையேயுள்ள வேறுபாடு முக்கியமாகக் கருதப்பட்டதால் வாதி வழக்கிடும்போது தனது வழக்கிற்குரிய வழக்கிடல் வகையை சரியாகத் தேர்ந்தெடுக்காவிட்டால் தோல்வி அடைவான். முன்னர் நீதிப்பேராணை இன்றேல் உரிமை ஏது மில்லை (ubi remedium ibi jus) என்று கருதப்பட்டது. இந்நிலை இப்போது மாறி, சட்டப்படி உரிமை உண்டாயின் சட்டப்படி நிவாரணமும் உண்டு அல்லது நிவாரணம் கிடைக்காத உரிமை எதுவுமில்லை (ubi jus ibi remedium) என்ற நிலை உள்ளது. இன்று வழக்கு மூலம் என்பது நீதிமன்றத்தில் ஒருவனிடமிருந்து மற்றவன் நிவாரணம் பெறக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளதைக் குறிக்கிறது. பிரபுக்கள் சபை யூனட்டட் ஆஸ்திரேலியா லிமிடெட் v பார்க்லேயிஸ் பேங்க் (United Australia Ltd. *v.* Barclays Bank) வழக்கிலும், அப்பீல் நீதிமன்றம் லெட்டாங் *v.* கூப்பர் (Letang *v.* Cooper) வழக்கிலும், வழக்கிடல் வடிவம் அல்லது முறையை விட வழக்கின் சாரமே (substance) முதன்மையானதென்று கூறியுள்ளன.

19ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட சீர்திருத்தத்தின் பயனாகவே இந்த வழக்கிடல் அமைப்புகளின் கெடுபிடியொழிந்தது. 500 ஆண்டு காலம் நீதி அரசாணை மூலம் உரிமைகள் முடிவு செய்யப்பட்டன. வழக்கிடல் வடிவங்கள் அல்லது முறைகள், இயற்றுச்

சட்ட நடைமுறைச் சட்டம், 1872 (Common Law Procedure Act, 1872), நீதிமுறைச் சட்டம், 1873 (The Judicature Act, 1873), அதற்கு 1875-ல் ஏற்பட்ட விதிகள் ஆகியவற்றின் விளைவாகத் தேவையற்றவை ஆயின. இவற்றின் விளைவாக வாதி தனது வாதுரையில் சுருக்கமாகத் தன்னுடைய தரப்பில் முக்கியமானதென்று கருதுவதைக் குறிப்பிட்டால் போதும். அவனுடைய உரிமையின் சாரமே முதன்மையானதாகும். அவனுடைய வழக்கு குறிப்பிட்ட அமைப்புக் கொண்டதா என்று பார்க்கத் தேவையில்லை. ஆயினும் முன்பிருந்த வழக்கிடல் முறைகள் அல்லது வடிவங்களை நாம் தெரிந்து கொள்ள வேண்டியுள்ளது. தற்போதுள்ள சட்டப் பாகுபாடுகள் இவற்றையொட்டியே எழுந்துள்ளன. இன்னும் சில சமயங்களில் வழக்கிடல் அமைப்புகள் தீங்கியலில் பொறுப்பை முடிவு செய்யப் பயன்படுகின்றன. பேராசிரியர் மெயிட்லண்டு (Maitland) வழக்கிடல் அமைப்புகள் புதைக்கப்பட்டு விட்டாலும் அவை தங்கள் சமாதிகளில் இருந்து கொண்டே நம்மை ஆட்சி செய்கின்றன என்றார். ஆனால், இவற்றில் சில உயிரோடு புதைக்கப்பட்டு விட்டனவோ என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

2. பொறுப்பின் வகைகள் (Forms of liability)

(அ) ஒரு மனிதன் புரிகின்ற செயலின் (act) விளைவாக சட்டப்படி அவனுக்கு பொறுப்பேற்படலாம். அல்லது சட்டப்படி அவன் செய்ய வேண்டிய கடமையினை புறக்கணித்து, அவன் செய்ய வேண்டிய செயலைச் செய்யாமல் விடுவதால் (Omission) அவனுக்குப் பொறுப்பு ஏற்படலாம். ஒருவன் வேண்டுமென்றே ஒரு பொருளைப் பற்றிப் பொய்யான தகவல் சொல்லி மற்றொருவனை ஏமாற்றினால் அவன் வஞ்சித்தல் அல்லது ஏமாற்றுதல் என்ற தீங்கினை இழைத்ததாகக் கருதப்படுவான். இதைத் தவிர அவன் சட்டப்படி சரியான தகவல் ஒன்றை முழுமையாகத் தரக் கடமைப் பட்டிருந்தும், அதைச் சொல்லாமல் விடுவதால் ஒருவருக்குத் தீங்கியலில் பொறுப்பு ஏற்படலாம். முக்கியமான தகவல் ஒன்றைச் சொல்லாமல் விடுவதால் மற்றவருக்கு இழப்பு ஏற்பட்டால் ஒரு பொருளைப்பற்றி விசாரித்துத் தகவல் ஒன்றைக் கண்டறிந்து சொல்ல ஒரு முகவர் நியமிக்கப்பட்டிருக்கிறார் என்று வைத்துக் கொள்வோம். அத்தகவலை அவர் தமது முதல்வருக்குச் சொல்லாமல் விடுவதால் முதல்வருக்கு இழப்பு ஏற்பட்டால் அதற்கு அவர் பொறுப்பாளியாவார். ஒரு மருத்துவர் நோயாளியைப் பார்த்து உரிய சிகிச்சை அளிக்காமலும், கவனமின்றியும் இருந்ததால் நோயாளிக்கு ஊறுக் ஏற்பட்டால் அவர் சட்டப்படி செய்ய

வேண்டிய கடமையை செய்யாமல் இருந்ததற்காகப் பொறுப்பாளி யாவார். இதைத் தவிர ஒருவர் மற்றவரோடு கொண்டுள்ள தனித்த உறவின் காரணமாக மற்றவரது செயலுக்கும், செயல் தவிர்ப்புக்கும் பொறுப்பேற்க வேண்டி வரலாம். எடுத்துக் காட் டாக ஒரு பணியாள் அவருக்குள்ள பணியை புரியும் வகையில் இழைத்த தீங்குக்குப் பணித் தலைவர் பகரப் பொறுப்பு ஏற்க நேரும்.

(ஆ) சில சமயங்களில் தவறுகை அல்லது பிழை (fault) இருந்தால்தான் பொறுப்பு ஏற்படும். சில சமயங்களில் பிறருக்கு ஊறு செய்யும் கருத்து அல்லது நோக்கு (intention) இருந்தால் தான் எதிர்வாதி பொறுப்பாளியாவான். ஆனால் பெரும்பான்மை யான சமயங்களில் தீயகருத்து அல்லது நோக்கு இல்லாவிடினும் அவன் கவனமின்றி இருந்தாலே பொறுப்பேற்படும். கடும் பொறுப்பு (Strict liability) உள்ளதென்று சொல்லப்படும் மற்ற சமயங்களில் தவறுகை அல்லது குற்றம் இல்லாத போதும் பொறுப்பு ஏற்படும். இவற்றைப் பற்றி இனிவரும் பகுதிகளில் விரிவாகக் காண்போம்.

3. ஊறு

பெரும்பான்மையான தீங்குகளில் வாதிக்கு ஏற்படும் இழப்பு அல்லது ஊறு எதிர்வாதியினுடைய நடத்தையின் முன்னறிய முடியாத, சேய்மையான விளைவாக (remote consequence) இருக்கக் கூடாது. ஆயினும் சிலவகை அத்துமீறல் தீங்குகளிலும், நிலைவடிவ அவதூறு போன்ற தீங்குகளிலும் வாதிக்கு உண்மையில் இழப்பு அல்லது ஊறு ஏற்பட்டது என்று நிரூபிக்கத் தேவை இல்லை.

நோக்கு அல்லது கருத்து

இது எதிர்வாதியின் மனத்தில் அவருடைய நடத்தையைப் பற்றியும் அதன் விளைவுகளைப்பற்றியும் அவர் முழுவதும் உணர்ந் திருப்பதோடு அந்த விளைவுகளை விரும்புவதையும் குறிக்கும். அவரது நடத்தையிலிருந்து அவரது கருத்து அல்லது நோக்கு என்னவென்று சட்டத்தால் ஊகிக்க முடியும். ஒரு மனிதன் என்ன நினைக்கிறான் என்று யாராலும் சொல்ல முடியாதென்றாலும், அவன் சொல்லியும் செயலியும் கொண்டு அவன் என்ன கருதி யிருக்கக்கூடும் என்று சட்டம் ஊகிக்க முடியும். மேலும் ஒருவன் ஒன்றைக் கருதிச் செய்தான் என்னும்போது அவனது செயல், செயல் தவிர்ப்பு ஆகியவற்றின் விளைவுகளையும் அவன் விரும்பு கிறான் என்றே பொருளாகும். ஆயினும் அவன் தான் 'விரும்பாத' விளைவுகளுக்கும் மனத்தில் எண்ணிக்கூடப் பார்த்திராத விளைவு களுக்கும் சில சமயங்களில் பொறுப்பாளியாகின்றான். சட்டத்தின்

படி ஒரு மனிதன் தனது செயலின் இயல்பானதும், நிகழக்கூடியது மாகிய விளைவுகளைக் கருதியே செயலாற்றியதாக கொள்ளப்படும். ஒருவன் தன்னுடைய துப்பாக்கியால் மற்றொருவனுடைய நாயை விரட்டக் கருதி சுடுகின்றான். அதைக் கொல்லும் நோக்கம் அவனுக்கு இல்லையென்று வைத்துக் கொள்வோம். அவன் துப்பாக்கியிலிருந்து கிளம்பிய ஒரு குண்டு, அதன் தலையைத் துளைக்கிறது. பின்னர் அவன் அதைச் சுடுவதற்காக குறி வைக்க வில்லையென்றும் அதை விரட்டவேண்டுமென்று மட்டுமே கருதிய தாகவும் கூறுவதை சட்டம் ஏற்காது. மேலும் அக்குண்டு குறி தவறி அந்த நாயின் அருகில் நின்றிருந்த ஒருவர்மேல் பாய்ந்து அவருக்கு காயம் ஏற்பட்டால் அவரைச் சுட தான் கருதவே இல்லை என்று கூறினாலும் சட்டம் ஏற்காது. இது நியாயமானதே.

கவனமின்மை (Negligence)

ஒருவன் தனது நடத்தையைப் பற்றியும், அதன் விளைவுகளைப் பற்றியும் முழுமையாமவோ அல்லது ஓரளவோ மனத்தில் உணராத நிலையையே கவனமின்மை என்ற மன நிலை குறிக்கும். சில சூழ்நிலைகளில் அவன் தன் நடத்தையைப் பற்றியும் அதன் விளைவுகளைப் பற்றியும் உணர்ந்திருக்கலாம். ஆயினும் அந்த விளைவுகள் ஏற்பட வேண்டுமென்று அவன் விரும்புவது இல்லை. இதுவே தீய நோக்குக்கும் கவனமின்மைக்கும் உள்ள வேறுபாடு. ஒருவன் தன் செயலின் விளைவைப் பற்றி முழுமையாக உணராமல் இருப்பதற்கு எடுத்துக்காட்டாக, புகைவண்டிக்கு சைகை காட்டுபவன் உறங்கி விட்டதன் விளைவாக ஏற்படும் விபத்தைச் சொல்லலாம் ஒருவன் தன் நடத்தையைப்பற்றியும் அதன் விளைவுகளைப்பற்றியும் உணர்ந்திருந்தும் அவை ஏற்பட விரும்பாத நிலைக்கு எடுத்து காட்டாக வாகன் v. மென்லவ் (Vaughan v. Menlove) வழக்கைச் சொல்லலாம். இதில் எதிர்வாதி தனது வைக்கோர் போர் சூடேறி தீப்பற்றி அருகிலுள்ள நிலத்திற்கு தீ பரவக்கூடிய ஆபத்து இருப்பதை அறிந்திருந்தும், தற்காப்பு நடவடிக்கை எடுக்காமல் கவனமின்றி இருந்துவிட்டார். இங்கு அவர் தன்னுடைய நடத்தையைப் பற்றியும் அதன் விளைவுகளையும் உணர்ந்திருக்கிறார் ஆயினும் அந்த விளைவுகள் ஏற்பட வேண்டுமென்று விரும்பினார் என்று சொல்ல முடியாது. இவ்வழக்கில் அவர் தனது கவனமின்மைக்குப் பொறுப்பாளியாகக் கருதப்பட்டார். இங்கு கவனமின்மையை ஒரு மன நிலையாகக் கண்டோம். அதாவது ஒருவன் தனது நடத்தையைப் பற்றியும் அதன் விளைவுகளைப் பற்றியும் போதிய அக்கறை காட்டாத மன நிலையை இது குறிக்கும். இதை அவனது நடத்தையின் போக்கிலிருந்து நாம் ஊகித்தறியலாம். இதைத் தவிர தனிப்பட்ட தீங்காகவும், கவனமின்மை கருதப்படு

கிறது. அதாவது ஒருவர் கவனமாக இருக்க வேண்டுமென்று சட்டம் விதித்துள்ள கடமையில் தவறியதால் அவர் விரும்பாமல் இருந்தாலும் பிறருக்கு ஏற்படும் ஊறு அல்லது இழப்பு உண்டாகும் நிலையைக் குறிக்கும். இங்கு கவனமின்மை என்பது ஒருவரது நடந்தையைக் குறிப்பிடுகின்றது. இதைப்பற்றி விரிவாகப் பின்னர் காண்போம்.

கடும் பொறுப்பு (Strict liability)

சில சமயங்களில் வாதிக்கு தீமை இழைக்கவேண்டுமென்ற கருத்தோ அல்லது கவன மின்மையோ எதிர் வாதிக்கு இல்லாமல் இருக்கலாம். ஆயினும் வாதிக்கு ஊறு நேர்ந்தால் எதிர்வாதிக்கு பொறுப்பு ஏற்படும். இவ்வாறு எதிர்வாதிக்குப் பொறுப்பு ஏற்படும் வேளைகளைக் கடும் பொறுப்பு ஏற்படும் வேளைகள் என்கிறோம். இதைப்பற்றி விளக்கமாக ரைலண்ட்ஸ் v. பிளட்சர் வழக்கில் சொல்லப்பட்டுள்ளது. வெளியேறிச் சென்றால் அண்டையிலுள்ள வர்க்கு இடர் விளைவிக்கக் கூடிய தன்மையுள்ள ஒரு பொருளைத் தமது நிலத்தில் கொணர்ந்தோ, சேகரித்தோ வைத்துள்ளவர் அப்பொருள் தமது நிலந்திலிருந்து வெளியேறிச் செல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். அவ்வாறு அப்பொருள் வெளியேறிச் சென்று பிறருக்குத் தீமை அல்லது இடர் விளைவிக்குமானால், அவர் அவ்வளவு கவனத்தோடு இருந்திருந்தாலும் அல்லது அது கேடு புரியாதவாறு பாதுகாப்பு ஏற்பாடு செய்திருந்தாலும் அவர் பொறுப்பாளியாகவே கருதப்படுவார். இங்கு அவருக்கு ஏற்படும் பொறுப்பு கடுமையானதாகும். இந்தக் கடும் பொறுப்பைப் பற்றியும், அதற்கமைந்துள்ள எதிர்வாதங்களைப் பற்றியும் பின்னர் விரிவாகக் காண்போம்.

சில சமயங்களில் சட்டமன்றம் இயற்றிய சட்டப்படி கடமைகள் விதிக்கப்பட்டிருக்கும். அப்போது அக்கடமையிலிருந்து ஒருவர் தவறியதாக வழக்கிடும்போது அவர் கவனம் இன்றி இருந்தார் என்று நிரூபிக்கத் தேவை இல்லை. எடுத்துக்காட்டாக ஆபத்தான இயந்திரத்தை வேலியிட்டு வைத்திருக்க வேண்டும் என்று தொழிற்சாலைகள் சட்டம் (Factories Act) கூறுகிறது. இவ்வாறு இயந்திரத்தை ஒரு தொழிற்சாலை உரிமையாளர் வேலியிட்டு வைத்திருக்கத் தவறினார் என்று அவர்மீது வழக்கிடும் போது, அவர் கவனமின்றியிருந்தார் என்று நிரூபிக்கத் தேவையில்லை.

குறிநோக்கமும் தீங்கெண்ணமும் : (Motive and Malice)

குறிநோக்கம் என்பது ஒரு செயல் செய்வதின் அடிப்படையான நோக்கமாகும், அதாவது எதைக் குறித்து ஒரு செயல்

செய்யப்படுகிறதோ அதைக் குறிக்கின்றது. ஒருவருடைய உடனடியான கருத்து அல்லது நோக்கு (immediate intention) பணத்தை களவு செய்வதாக இருக்கலாம். ஆனால் அவனது குறி நோக்கு (motive) அப்பணத்தைக் கொண்டு அவனது மனைவி மக்களுக்குத் தின்பண்டங்கள் வாங்குவதாக இருக்கலாம். இங்கு நாம் ஒருவனது செயலின் குறிநோக்கத்தைப் பொறுத்து தீங்கியலில் பொறுப்பு ஏற்படுமா என்பதைக் காண்போம்.

தீங்கெண்ணம் என்பது ஒருவன் நியாயமான காரணமோ அல்லது முகாந்திரமோ இல்லாமல் வேண்டுமென்றே ஒரு செயலைச் செய்வதைக் குறிப்பிடும். ஒருவனது நடத்தை சட்டத்திற்கு முரணானதாக இருப்பின், அவன் நல்ல நோக்கத்தோடு நடந்து கொண்டிருந்தாலும் அவன் பொறுப்பிலிருந்து தப்பமுடியாது. ஒருவனுடைய நோக்கம் முறையற்றதாக இருந்தாலும், அவனது நடத்தை சட்டத்திற்கு இசைந்ததாக இருந்தால் அவன் பொறுப்பாளியாக மாட்டான். சட்டம் எதிர்வாதி என்ன செய்தான் என்று மட்டும் கேட்குமே தவிர அதை ஏன் செய்தான் என்று கேட்பதில்லை. எனவே, ஒருவனது செயல் சட்டத்திற்கு இசைந்த செயலாக அமைந்திருப்பின் அவன் தீங்கெண்ணத்துடன் செயல்பட்டிருந்தாலும் அது தீங்காகாது. இதற்குக் காரணம் ஒருவனது குறிநோக்கு என்ன என்று அறிவது கடினம் என்பதேயாகும்.

மேயர் ஆஃப் பிராட்போர்ட் v. பிக்கில்ஸ் (Mayor of Pradeford v Pickles) வழக்கில் எதிர்வாதி பிக்கில்ஸ் தமது நிலத்தில் பள்ளம் தோண்டியதன் விளைவாக வாதியின் நீர்த்தேக்கத்திற்கு போய்ச் சேரவேண்டிய அடி நிலக்கசிவு நீர் தடுக்கப்பட்டு விட்டது. நகரமக்களுக்கு குடிநீர் வழங்கும் சட்டத்தின் கீழ் மாநகராட்சியாகிய வாதியை, எதிர்வாதி தாம் குறிப்பிடும் விலைக்கே தமது நிலத்தை வாங்கும்படி கட்டாயப்படுத்துவதே அவரது நோக்கமாகும். வரையறைபுள்ள வழியில் அல்லாமல் நிலத்துக்கடியில் ஊறிச் செல்லும் நீரை இறைத்து எடுத்துக்கொள்வது தீங்காகாது. எனவே, ஒருவர் கருதியோ அல்லது வேண்டுமென்றே இச்செயலைச் செய்திருந்தாலும் அவர்மேல் வழக்கிடமுடியாது. பிக்கில்ஸ் வழக்கில் ஒருவர் இத்தகைய கருத்தோடு மட்டுமல்லாமல் தீங்கெண்ணத்துடனும் இச்செயல் புரிந்திருந்தால் பொறுப்பாளியாவார் என்று வாதிடப்பட்டது. எதிர்வாதி தான் சொன்ன விலைக்கு மாநகராட்சி தன்னுடைய நிலத்தை வாங்கமறுத்ததால், மாநகரட்சியைப் பழிவாங்க மாநகராட்சியின் நீர்த்தேக்கத்திற்கு ஊறும் நீரைத் தடுத்துவிட்டார். எதிர்வாதி பிக்கில்ஸ்க்கு மாநகராட்சி மன்றத்தின் மீது காழ்ப்புணர்ச்சியோ அல்லது வன்மமோ இல்லை. விற்கக்

கூடிய பொருள் அவரிடமிருந்தது. அதைத் தான் சொல்லும் விலைக்கு மாநராட்சி ஏன் வாங்கக்கூடாது? என்றுதான் அவர் கேட்டார். அவருக்குப் பொது நலத்தைவிட சொந்த நலனே பெரி யது. ஆயினும் அவருக்கு தீங்கெண்ணம் எதுவும் இல்லை; மாநகராட்சி மேல் எந்தப்பகையும் இல்லை. அவரது நிலத்தையும் நீரையும் அவர் தாம் குறிப்பிடும் விலையை மாநகராட்சி தர முன் வந்தால் விற்கத் தயாராகவே இருந்தார். சட்டப்படி அவரது செயல் முறையற்றதாகாது. இங்கு ஒருவரது அடிநோக்கு என்னவென்று பார்க்கத் தேவையில்லை. அவரது செயலைத்தான் நாம் பார்க்க வேண்டும். எனவே அவரது செயலின் விளைவாகச் சட்டப்படி ஊறு என்று சொல்லமுடியாத இழப்பு ஏற்பட்டிருந்தால், அவருடைய குறிநோக்கு எவ்வளவு கொடியதாயினும் அவர் பொறுப்பாளியாக மாட்டார்.

ஆயினும் பின்வரும் தீங்குகளுக்கு ஒருவருக்கு பொறுப்புண்டா என அறிய அவனுக்கு தீங்கெண்ணம் அல்லது தீய குறி நோக்கு இருந்ததா என அறியவேண்டும்.

(அ) தீங்கெண்ணத்துடன் குற்றவழக்கிடல், தீங்கான பொய்ம்மை (injurious falsehood) ஆகிய தீங்குகளில் எதிர் வாதிக்குத் தீங்கெண்ணம் இருந்ததாக வாதி மெய்ப்பிக்கவேண்டும்

(ஆ) அவதூறு வழக்கில், எதிர்வாதி அவதூறுகக்கருதப்பட்ட சொற்களை வெளியிட தனக்கு வரம்புக்குட்பட்ட சிறப்புரிமை இருந்ததென்றே (qualified previlege) அல்லது தன்னுடைய சொற்கள் நேர்மையான கருத்துரை (fair comment) என்றே வாதிடலாம். ஆனால் அவர் தீங்கெண்ணத்துடன் அவற்றை வெளியிட்டிருப்பின் அவரது எதிர்வாதம் தோற்றுப்போகும்.

(இ) சதி

(ஈ) தொல்லை சட்டத்திற்கு முரணான நோக்கத்துடன் ஒரு வனுக்கு வசதிக்குறைவோ உடலுக்கு அசௌகரியமோ ஏற்படும் படியான செயலைச் செய்தால், அது சட்டத்திற்கிசைந்த செய லாயினும், தொல்லையாகவே கருதப்படும்.

சமநிலை அறிவு அல்லது நல்லறிவு உள்ள மனிதன் (Reasonable Man)

தீங்கியல் சட்டத்திலும் மற்ற சட்டத்துறைகளிலும் பல இடங் களில் வரும் சொற்றொடர் இது. இதன் பொருளை அறிதல் இன்றி

யமையாதது. ஒருவனுடைய நடத்தையின் தன்மையை நாம் ஆய்ந்து அது கவனமின்மை ஆகுமா என்று முடிவுசெய்ய வேண்டியுள்ளபோது அவனது நடத்தை குறிப்பிட்ட சூழ்நிலையில் தகுந்ததென்று கூறமுடியுமா என்று முடிவு செய்யவேண்டும். இதற்கு நாம் வரையளவாகக் கொள்வது ஒரு சாதாரண மனிதன் அத்தகைய சூழ்நிலை ஏற்படும்போது நடந்து கொள்ளக்கூடிய நிலையே ஆகும். நல்லறிவு – சமநிலை அறிவுள்ள மனிதன் என்பவன் நாம் நாள்தோறும் சாலையில் சாதாரணமாகக் காணக்கூடிய மனிதன் எனலாம். இவனுக்கு அக்கிலிஸ்க்கு (Achilles) இருந்த நெஞ்சுரமோ, யுலிசிஸ்க்கு (Ulysses) இருந்த மதிநுட்பமோ, ஹெர்க்குலிஸ்க்கு (Hercules) இருந்த உடல் வலிமையோ இல்லை. இவனுக்கு அசாதாரணமான அறிவாற்றலோ நெஞ்சுரமோ வலிமையோ இல்லையென்பது உண்மையாயினும் இவன் ஒரு கோழையுமல்லன்; இவன் கழிமிகையற்றவன். நல்லது, கெட்டது அறிந்தவன்; வாழ்க்கையில் அனுபவங்கள் காட்டும் பாடங்களை ஏற்றுக்கொண்டு, மற்றவர்கள் கவனமின்றி இருக்கக்கூடிய வேளைகள் எவை என்று முன்னுணர்ந்து தகுந்த எச்சரிக்கையோடிருப்பான். சட்டம் ஒருவன் எவ்வாறு நடந்து கொள்ளவேண்டும் என்று காட்டும் வழிகளைப் பின்பற்றத் தயங்காதவன். இவன் தான் செல்லும் சாலையின் குறுக்கே சிங்கமும் புலியும் எதிர்ப்படும் என்று அஞ்சி ஒடுங்குபவனல்லன். ஆயினும் என்வரினும் கவலையில்லை என்ற அசாதாரணமான துணிச்சலுமில்லாதவன். எனவே இவன் சமநிலை அறிவுள்ள மனிதன் அல்லது தகுந்த அறிவுள்ள மனிதன் என்று சொல்லலாம்.

ஒருவன் ஒரு தொழிலைச்செய்பவனுயின், அத்தொழிலைச் சிறப்பாகச் செய்யத் தேவையான திறமையும் தகுதியும் உடையவனாக அவன் இருக்கவேண்டும் என்று சட்டம் எதிர்பார்க்கிறது. சாதாரண மனிதன் ஒருவன் ஒரு அறுவை சிகிச்சை நிபுணராகவோ அல்லது வழக்கறிஞராகவோ இல்லாவிட்டால் அவர்கள் காட்டும் திறமையையும் கவனத்தையும் காட்டத் தேவையில்லை.

5. தவறுகை அல்லது பிழை (Fault)

எதிர்வாதிக்குத் தீங்கியலில் பொறுப்பு ஏற்படவேண்டுமானால், அவருக்குத் தீங்கிழைக்கும் கருத்து இருக்க வேண்டும் அல்லது அவர் கவனமின்றி செயல்பட்டிருக்க வேண்டும். இவ்வாறு அவர் பிழையோ அல்லது தவறுகையோ (fault) புரிந்திராவிட்டால், எதிர்வாதியைப் பொறுப்பாக்குவது பொருந்தாது என்று சால்மண்ட் கருதினார், மற்றவர்க்கு ஊறு புரிபவர் மேல் பொறுப்பைச் சுமத்தி அவரைத் தண்டிப்பதன் நோக்கம் அந்தகைய ஊறினைத் தடுப்பதேயாகும். அவர் செயலால் ஊறு அடைந்தவர்க்கு ஒரு தொகையைத் தருமாறு கட்டாயப்படுத்துவதன் மூலம் அவர் தண்டிக்கப்படுகிறார். குற்றமனமின்றி செயல் பட்ட ஒருவரை குற்றவியலிலோ அல்லது தீங்கியலிலோ ஒறுத்தல் பயனற்றதாகும்; அது நியாயமாகாது. ஒருவன் ஒரு தீங்கினை செய்யக் கருதியிராதபோது, அதை நேராவண்ணம் தடுக்க அவனால் இயன்றதனைத்தும் செய்திருந்தும், அவனைத் தண்டிப்பதாக அச்சுறுத்துவதால் விளையப்போவது ஒன்றுமில்லை.

சால்மண்டின் கருத்துக்கு மூன்று மறுப்புகளைச் சொல்லலாம். முதலாவதாக, இன்றுள்ள சூழ்நிலையில், உண்மையில் தீங்கிழைத்தவர் தாம் புரிந்த ஈடுக்காக இழப்பீடு தருகிறார் என்று சொல்வதற்கில்லை. பார்க்கப் போனால், அவர் மேல் வழக்கிடுவதால் பயனில்லை. அவரிடம் தீங்கீடு தரப் பணம் இருப்பதில்லை. சாதாரணமாக அவருக்குப் பதிலாக தீங்கீடு தருபவர் அவரது பணித் தலைவராகவோ (employer) அல்லது காப்பீட்டுக் கழகமாகவோ (insurance company) இருக்கும்.

தவறுகை அல்லது குற்றம் இருந்தால்தான் தீங்குக்குப் பொறுப்பு உண்டென முன்பும் கருதப்பட்டது கிடையாது; இன்றும் அவ்வாறு கருதப்படவில்லை. ஹோல்ம்ஸ் (Holmes) என்பாரின் கருத்துப்படி சட்டம் துவக்கத்தில் உண்மையில்

ஒருவன் தீமை புரியும் கருத்தோடு அவனே பிழை புரிந்திருந்தால் தான் பொறுப்பு உண்டென்று கூறியது. பின்னர் சட்டம் வளர்ச்சியுற்றபோது புறத்தே சில தகுநிகளை உருவாக்கி ஒருவன் மேல் குற்றமோ, தவறுகையோ இல்லையெனினும் அவன் பொறுப் பாளியாவான் என்று கூறியது. விக்மூர் (Wigmore) என்பாரின் கருத்துப்படி, சட்டம் முதலில் ஒரு செயலைச்செய்பவனுக்குக் கடும் பொறுப்பு (strict liability) உண்டென்று கூறியது. நாளடைவில் அது அறநெறியைத் தழுவி ஒருவன் பிழை புரிந்திருந்தால்தான் பொறுப்புண்டெனச் சொல்லியது. சால்மண்டு, விக்மோரின் கருத்தை ஆதரித்தார். கவனமில்லாத் தீங்கில் நாம் சமநிலை அறிவுள்ள மனிதன் (reasonable man) ஒரு குறிப்பிட்ட சூழ்நிலை யில் எவ்வாறு நடந்து கொண்டிருப்பான் என்று கேள்வியை எழுப்பி, அவன் காட்டக்கூடிய கவனத்தை எதிர்வாதி காட்டத் தவறியிருந்தால் பொறுப்பாளி ஆவான் என்று சொல்கிறோம். எனவே, இச்சூழ்நிலையில் எதிர்வாதி பிழை புரிந்திருந்தானா என்றறிய நாம் முயல்கின்றோம்.

ஆயினும், இவ்விரண்டு கருத்துகளில் எதுவுமே முழுதும் சரியானதென்று சொல்ல முடியாது. சட்டம் இவ்விரண்டு வட்டங்களிலுமே மாறி மாறிச் சுழன்றிருக்கிறது. கடும் பொறுப்பு சுமத்தப்பட்ட காலத்தைத் தொடர்ந்து குற்றமிருந்தால்தான் பொறுப்பு என்ற காலம் வருகிறது; பின்னர் இச்சுழற்சி மாறி, கடும் பொறுப்பு சுமத்தப்படும் காலம் வருகிறது.

குற்றமனம் (mens rea) இருந்தால்தான் பொறுப்பு உண்டு என வலியுறுத்தும் சால்மண்டுக்கு தவறுகை அல்லது பிழை ஒரு மனிதனுக்குள்ள குறைபாட்டைக் குறிக்கும். ஆயினும் பொறுப்பேற்படத் தேவை எனக் கருதப்படும் பிழை அல்லது தவறுகை ஒரு தனி நபருக்குக் குற்றம் குறைபாடாக இல்லாமல், சமுதாயக் குற்றம் அல்லது தவறுகையாக அமைந்திருக்கலாம். சில சமயங்களில் இவ்விரண்டும் வேறுபட்டிருக்கலாம். எடுத்துக் காட்டாகவும், குறிக்கோளாகவும் கருதத்தக்க நடத்தையைப் பின் பற்றி ஒழுகாமல் ஒருவர் இருப்பின் சட்டம் அவனது நடத்தை யைப் பிழையானதெனச் சொல்கிறது.

இரண்டாவதாக, ஒரு செயல் புரியப்பட்ட காரணத்தையும் அதன் விளைவினையும் ஆராயும் நோக்கம் யாதெனில் பொறுப்பு வாய்ந்தவராக உள்ள ஒருவரைத் தீங்கீடு தர வைத்து அதன் மூல மாக வாதிந்து விளைந்த ஊறுக்குப் பரிகாரம் தேடுவதையல்லாமல், கடமையினின்றும் தவறியதற்காக ஒருவரைத் தண்டிப்பதல்ல.

எடுத்துக் காட்டாக நிலை வடிவ அவதூறு (libel) வழக்குகள் சில வற்றில் தீங்கீட்டின் நோக்கம் இழப்புக்கு ஈடு செய்வதேயன்றி அப ராதம் விதிப்பதல்ல என்று வலியுறுத்தப்பட்டது. எதிர்வாதியின் தவறுகைக்கு ஏற்றவாறு, உரிமையியல் வழக்கில் தரப்படும் தீங்கீட் டுத்தொகை அமைந்திருப்பதாய் சொல்ல முடியாது. ஒரு விநாடி எதிர்வாதி கவனமின்றி இருந்ததன் விளைவாக பல்லாயிரம் ரூபாய் தீங்கீட்டுத் தொகை அவர் தர நேரலாம். அவர் மிகவும் அதிகமாக கடினமின்றி இருந்திருப்பினும் நல்ல வேளையாக மிகச் சிறிய ஊறே ஏற்படலாம்.

தவறுகை இருந்தால்தான் பொறுப்பேற்படும் நிலைகள்

தாக்க முனைதல், தாக்குதல், முறையின்றிச் சிறைப்படுத்தல், வஞ்சித்தல், தீங்கெண்ணத்துடன் குற்றவழக்கிடல், சதி ஆகிய தீங்குகளைப் புரிந்ததற்காக ஒருவர் மேல் வழக்கிடும்போது அவர் எந்த மனநிலையுடன் அத்தீமையைப் புரிந்தார் என்று அறிய வேண்டியுள்ளது. ஒரு தீங்கான செயலை அவர் கருதியோ, அல்லது தீங்கெண்ணத்துடனோ புரிந்தாரா என்றறிய வேண்டி யிருக்கும். சில சமயங்களில் எதிர்வாதி சமநிலை அளவுள்ள மனிதனைப் போல் நடந்து கொண்டானா என்றறிய வேண்டும் என்றும், எதிர்வாதியின் நடத்தை சமநிலையறிவுள்ள மனிதனு டைய நடத்தையின் வரையளவுக்கும் கீழானதாக அமைந்திருப் பின் கவனமின்மைக்குப் பொறுப்பாளியாவான் என்றும் கண் டோம். குறிப்பிட்ட சூழ்நிலையில் அவன் கவனத்தோடு நடந்து கொள்ள வேண்டியிருக்கலாம். அக்கடமையில் அவன் தவறினால் பொறுப்பாளியாவான். ஆயினும், அவனிடமிருந்து எதிர்பார்க்கத் தக்க கவனத்தை அவன் காட்டியிருப்பின் அவன் வாதிக்குப் பொறுப்பாளியாக மாட்டான். இதைத் தவிர, எதிர்வாதியின் செயல் தவிர்க்க முடியாத விபத்தின் (inevitable accident) காரணமாக நிகழ்ந்ததாகக் கருத முடிந்தால் அவன் பொறுப் பாளியாக மாட்டான். மற்றும் குறிப்பிட்ட சில சூழ்நிலைகளில், பெரிய ஆபத்து நேராமல் தடுப்பதற்காக, சிறிய ஊறு ஒன்றை எதிர்வாதி புரியலாம். இங்கு எதிர்வாதி தீங்கிழைக்க வேண்டும் என்று கருதிச் செயல்படவில்லை. இச்சூழ்நிலைகளின்படி தேவை யான (necessity) செயலாக அமைந்திருக்கும். அடுத்துள்ள நிலத்திற்குத் தீ பரவாமல் தடுக்க அந்த நிலத்தில் நுழைய வேண்டிய கட்டாயம் ஏற்படலாம். இது அத்து மீறலாகாது. இதைப் போலவே நீரில் மூழ்கித் தத்தளிப்பவனைக் காப்பாற்றும் செயலும், சாலை விபத்தில் சிக்கிக் காயமுற்று தன்னுணர்வின்றிக் கிடப்பவனுக்குத் தேவைப்படும் அறுவை சிகிச்சையளிக்கும் செயலும் தீங்குகளாகக் கருதப்பட மாட்டா.

தவறுகை இன்றியும் பொறுப்பேற்படும் நிலைகள்

ஆயினும், சில தீங்குகளைப் பொறுத்தவரை, தீங்கிழைத்தவர் மனநிலையைப் பற்றி அறியத் தேவையில்லை. எதிர்வாதி தீங்கிழைக்கும் கருத்தினைக் கொண்டிராவிட்டாலும், அல்லது கவனமின்றியிருந்திராவிட்டாலும், அவன் செயல் தீமையாக அமைந்திருந்தால் பொறுப்பாளியாகிறான். எடுத்துக் காட்டாக நிலைவடிவ அவதூறு என்னும் தீங்கில் எழும் பொறுப்பு, எதிர்வா அவதூறுதி இழைக்கக் கருதினார் என்பதைப் பொறுத்து அமைவதில்லை. அவரது செயல் அவதூறாக, இருப்பதற்கே பொறுப்பேற்படுகின்றது. ஒருவர் வளர்க்கும் வனவிலங்கு ஒன்று மற்றவரைக் கடித்துக் காயப்படுத்தினால், அவர்களும் பொறுப்பேற்க வேண்டும். இதைப் போலவே வெளியேறிச் சென்றால் ஆபத்து விளைவிக்கத்தக்கப் பொருளைத் தன் நிலத்தில் கொணர்ந்து சேகரித்து வைத்திருப்பவர் அது வெளியேறிச் சென்று ஏற்படுத்தும் இயல்பானதும் நிகழத் தக்கதுமாகிய ஆபத்தான விளைவுக்குப் பொறுப்பேற்க வேண்டும். எனவே, அவரது பொறுப்பு கடும் பொறுப்பாகும். இவ்விதி ரைலண்ட்ஸ் *v.* பிளெட்சர் (Rylands *v.* Fletcher)வழக்கில் சொல்லப்பட்டது. கையாடல் (conversion) தீங்கில் எதிர்வாதி தான் நிரபராதி என்றோ, நேர்மையாகத் தவறு (honest mistake) ஒன்றைச் செய்து விட்டதாகக் கூறியோ பொறுப்பிலிருந்தும் தப்ப முடியாது. எனவே, ஒரு ஏல விற்பனை செய்பவர் தனது வாடிக்கையாளருக்கு உரிமையற்ற ஒரு பொருளை அவர் சார்பாக விற்பனை செய்கிறார் என்று வைத்துக் கொள்வோம். அவன் அப்பொருளை விற்கும்போது, அப்பொருள் வாடிக்கையாளருடையதென்று உண்மையாகவும், நேர்மையாகவும் நம்பியதாகக் கூறினாலும் நீதிமன்றம் ஏற்காது.

பொதுவான எதிர்வாதங்கள் (General Defences)

எதிர்வாதி ஒரு குறிப்பிட்ட தீங்கை இழைத்ததாகச் சொல்லும் வாதி அத்தீங்கிற்குத் தேவையான உட்கூறுகள் அனைத்தையும் நிரூபிக்க வேண்டும். இல்லையேல் அவன் வழக்கில் தோல்வியுறுவான். வாதி அவற்றை நிரூபித்தாலும் எதிர்வாதி தான்செய்த செயல் முறையானதே என்று காட்டும் வகையில், தன்மீது நடவடிக்கை எடுப்பதற்கு நியாயம் எதுவுமில்லை என்பதற்குக் காரணம் காட்டி எதிர்வாதம் செய்யலாம். இந்த எதிர்வாதங்களில் சில குறிப்பிட்ட தீங்குகளுக்கே உரியனவாகும். இந்தத் தனிப்பட்ட எதிர்வாதங்களுக்கு எடுத்துக் காட்டாக, அவதூறு வழக்கில் சொல்லப்படும் உண்மை (truth), நேர்மையான கருத்துரை (fair comment), சிறப்புரிமை (privilege) ஆகியனவற்றைச்

சொல்லலாம். இந்த எதிர்வாதங்கள் அவதூறு என்னும் தீங்குக்கே உரியவை. ஆயினும், இத்தகைய சிறப்பான எதிர் வாதங்கள் தவிர, தீங்குகள் அனைத்துக்கும் பொதுவாகப் பொருந்தக் கூடிய சில எதிர்வாதங்கள் உண்டு. வாதி தன்மீது தீங்கிழைத்த தாக வழக்கிடும்போது எதிர்வாதி இந்தப் பொதுவான எதிர் வாதங்களை தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளலாம். இவற்றில் முதன்மையாகச் சொல்லக் கூடியவை: 1. இசைந் தேற்பவை தீங்காகாது (Volenti non fit Injuria), 2. தவிர்க்க முடியாத விபத்து (Inevitable Accident), 3. தெய்வச் செயல் Act of God), 4. தவறு (Mistake), 5. தற்காப்புரிமை (Private Defence), 6. கட்டாயநிலை (Necessity) 7. சட்டம் விதிக்கும் செயல்கள் (Statutory Authority). இந்த எதிர்வாதங்களை இனி நாம் விளக்கமாகக் காண்போம்.

6. இசைந்து ஏற்பது தீங்காகாது
(Volenti Non Fit Injuria)

ஒருவன் தனக்கு மற்றொருவன் காயம் ஏற்படுத்த இணங்கி யிருந்தால், அதற்காக வழக்கிட்டு, தீங்கியலில் நிவாரணம் பெற முடியாது. ரோம் நாட்டுச் சட்டத்தில் சுதந்திரம் உள்ள குடிமகன் தன்னையே அடிமையாக விற்றுக் கொள்வது அனுமதிக்கப்பட்டி ருந்தது. இது எவ்வாறே 19ஆம் நூற்றாண்டில் தீங்கியல் சட்டத்தில் நுழைந்து விட்டது. வாதி தன்னிச்சையாகக் காயம் பட இசைவு தந்த பின்னர், எதிர்வாதி தன்னைத் தாக்கியதாகப் புகார் செய்ய முடியாது. அவ்வாறு வாதி காயமுற முன்னரே இசைவு தந்து விட்டார் என்று எதிர்வாதி கூறலாம். இதை சட்டம் ஏற்றுக் கொள்ளும். ஒருவன் முழு மனதோடு தன்னிச் சையாக விட்டுக் கொடுத்த உரிமைகளையும், வேண்டாம் என்று உதறித் தள்ளிய உரிமைகளையும் நீதிமன்றத்தில் நிலைநாட்ட முடியாது.

இந்த எதிர்வாதம் தீங்கியலில் இருவகைகளில் பயன்படுத்தப் படுகிறது. முதலாவது, கருதிச் செய்யல்படும் செயல்களால் விளையும் ஊறுகளுக்கு இசைவு தருவதைக் குறிக்கிறது. அதாவது வாதி தனது நலனைப் பாதிக்கும் செயல் தீங்காயினும் அதைச் செய்ய இசைவு தருவதைக் குறிக்கிறது. இரண்டாவது, விபத் தினால் ஏற்படும் ஆபத்தை அவன் ஏற்றுக் கொள்ள இசைவு தருவதையும் குறிக்கும். அதாவது ஒரு குறிப்பிட்ட ஆபத்தினால் தனக்கு காயம் ஏற்படக் கூடிய நிலையை மேற்கொள்ள அவன் இணங்குவதைக் குறிக்கும்.

கருதிச் செய்யப்படும் ஊறுகள்

இந்த எதிர்வாதம் தீங்கெனக் கருதப்படத்தக்க செயல்களை கருதிச் செய்யப்படுவதற்கு இசைவு தருவதைக் குறிக்கும். ஒரு

செயலே ஒருவன் செய்ய வெளிப்படையாகவோ, உட்கிடை யாகவோ இசைவு தந்தபின்னர் அதைத் தீங்கெனக் கூறி வழக்கிட முடியாது. எடுத்துக்காட்டாக, ஒருவன் தன் நிலத்தில் மற்றொரு வன் நுழைய இசைவு தந்தபின்னர், அவன் அத்துமீறி நுழைந் ததாக வழக்கிட முடியாது. மக்கள் கூட்டம் நிரம்பி வழிகிற சாலையில் செல்பவர் அடுத்தவர் தம்மேல் அறியாமல் உரசிச் செல்வதைத் தாக்க முனைந்ததாகக் கூறமுடியாது. அவ்வாறு செய்வதால் அவரது உடலுக்கு ஏற்படும் ஊறுக்கு இசைவு தந்த தாகவே கருத வேண்டும். இந்த எதிர்வாதத்தை நோயாளியிட மிருந்து முறையாக இசைவு பெற்று அவருக்கு மருத்துவ உதவி தரும் மருத்துவரும், அவருக்கு அறுவை சிகிச்சை செய்யும் அறுவை மருத்துவரும் பயன்படுத்திக் கொள்ளலாம். எனவே ஒரு மருத்துவ மனையில் தன்னிச்சையாக அறுவை சிகிச்சை செய்து கொள்ள உடன்பட்டுள்ள நோயாளி அங்கு அறுவை சிகிச்சை செய்யப்படும் அறையில் மயக்க மருந்து கொடுக்கப்பட்ட தாகக் கூறித் தன்னை முறையின்றி மருத்துவர் சிறைப்படுத்தினர்; என்று வழக்கிட முடியாது. இதைப் போலவே ஓட்டப் பந்தயங் களிலும் விளையாட்டுகளிலும் பங்கெடுத்துக் கொள்ளும் விளையாட்டு வீரர்கள் விளையாடும்போது இயல்பாக ஏற்படுகின்ற காயங்களுக்கு இசைவு தருகின்றார்கள் என்றே கொள்ள வேண்டும். ஆனால், விளையாடும்போது வேண்டுமென்றே, தேவையில்லாமல் ஒரு விளையாட்டு வீரன் மற்றொருவரை வன்முறையில் தாக்கியிருந்தால் அவர் இந்த எதிர் வாதத்தைச் சொல்ல முடியாது.

ஆயினும், சில சமயங்களில் ஒருவன் அறுவை சிகிச்சைக்கு தன் இசைவைத் தெரிவிக்க முடியாத நிலையில் இருக்கக்கூடும். ஆயினும் அவனுக்கு உடனே அறுவை சிகிச்சை செய்யப்பட வேண்டிய அவசர நிலை ஏற்பட்டிருக்கலாம். பொதுவாக ஒருவ ருக்கு அறுவை சிகிச்சை செய்யுமுன்னர் அவருடைய இசைவை எழுத்து வடிவில் பெறும் வழக்கம் உண்டு. சில சமயங்களில் நோயாளியின் பெற்றோரிடமிருந்தோ, உறவினரிடமிருந்தோ இசைவு பெறப்படுகிறது. ஆயினும், சாலை விபத்தொன்றில் சிக்கி மிகவும் ஆபத்தான நிலையில், மயக்க முற்றுக் கிடப்பவர் அறியா மலும், அவரது இசைவைப் பெருமலும், அவருக்கு அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டிய நிலை ஏற்படலாம். அப்போது அவர் தாம் அறுவை சிகிச்சை செய்து கொள்ள உட்கிடையாக இணங்கினர் என்ற எதிர்வாதம் ஏற்றுக் கொள்ளப்படும். அல்லது அவருக்கு அறுவை சிகிச்சை செய்ய வேண்டிய கட்டாயநிலை அல்லது தேவை (necessity) ஏற்பட்டது என்று மருத்துவர் வாதிடலாம்.

இந்த இசைவை வாதியோ அல்லது அவரது அதிகாரம் பெற்ற வரோ தரலாம். எடுத்துக்காட்டாக ஒரு 5 வயது குழந்தையின் சொத்தைப்பல்லை பல் மருத்துவர் ஒருவர் அக்குழந்தையினுடைய தந்தையின் அனுமதி பெற்றுப் பிடுங்கும்போது, குழந்தை வன்மையாக பல்மருத்துவர் செயலை எதிர்த்தாலும், மருத்துவர்மேல் குழந்தையைத் தாக்கியதாக வழக்கிடமுடியாது. ஒரு குழந்தை நிலத்தில் அத்துமீறி நுழைந்ததென வாதி வழக்கிட்டால் அதற்கு எதிர்வாதமாக வழக்கமாகவே குழந்தைகள் அந்த நிலத்தில் விளையாட வாதியினால் அனுமதிக்கப்பட்டனர் என்று கூறலாம்.

இவ்வாறு வாதியிடமிருந்து பெறப்படும் இசைவு புகார் செய்யப்படும் செயலுக்கே பெறப்பட்டதாக இருக்கவேண்டும். எனவே, ஒருவர் தன்னுடைய நோய் இன்னதென்று அறிந்துகொள்ளத் தேவைப்படும் ஒரு சிறு அறுவைச் சிகிச்சை செய்துகொள்ள மட்டுமே இணங்குகிறார் என்று வைத்துக்கொள்வோம். ஆனால் அந்த நோயாளிக்கு முன்னறியமுடியாத ஆபத்தான ஒரு சூழ்நிலை ஏற்படலாம். அப்போது அவனது உயிரைக் காக்க உடனடியாக ஒரு முடிவு எடுக்க வேண்டிய அவசர நிலை அந்த அறுவை மருத்துவருக்கு ஏற்படலாம். எனவே, அவர் அவனுயிரைக் காக்க ஒரு பெரிய அறுவை சிகிச்சை செய்ய நேரலாம். இவ்வாறு செய்யப்படும் பெரிய அறுவை சிகிச்சைக்கும் அந்த நோயாளி இசைவு தந்ததாகவே கருதவேண்டும்.

வாதி தரும் இசைவு முழுமனச் சம்மதத்தோடு, சுதந்திரமாக, கட்டுப்பாடு இன்றித் தரப்பட்டு இருக்கவேண்டும். எனவே நிறைய மது அருந்தி இருந்த ஒரு முதியவனை இளைஞன் ஒருவன் மிருகத்தனமாகத் தாக்கியதற்கு எதிராக வழக்கிடப் பட்டபோது, முதியவர் தன்னைத் தாக்க இசைவு தந்தார் என்று சொல்லப்பட்ட எதிர்வாதம் ஏற்கமுடியாததென லேன் v. ஹாலோவே (Lane v. Holloway) வழக்கில் சொல்லப்பட்டது.

இரண்டாவதாக இந்த எதிர்வாதம் விபத்தினால் ஏற்படும் காயங்களுக்கும் பொருந்தும். விபத்தினால் காயமேற்படக் கூடிய ஆபத்தை ஏற்றுக்கொள்ள இசைவு தந்தவன் தனக்கு அந்த விபத்தை ஏற்படுத்தியவனின் கவனமின்மையால் ஊறு ஏற்பட்டதென வாதிட முடியாது.

வாதிக்கு ஊறு நேராமல் கவனம் காட்டவேண்டிய கடமை எதிர்வாதிக்குண்டு. இந்தக் கடமையிலிருந்து எதிர்வாதிக்கு

விலக்களிக்க வாதி வெளிப்படையாகவோ, உட்கிடையாகவோ இணங்குகிறார். இதையே இங்கு இசைவு என்று சொல்கின்றோம்.

ஹால் v. புருக்லண்ட்ஸ் ஆட்டோ ரேஸிங் கிளப் (Hall v. Brooklands Auto Racing Club) வழக்கில் வாதி ஒரு கார் பந்தயத்தைக் காண அனுமதிச் சீட்டு பெற்றுக்கொண்டு எதிர்வாதிக்குச் சொந்தமான பந்தயத் தடத்திற்குச் சென்றார். பந்தயத்தின் போது இரு கார்கள் மிக வேகமாக ஓடி, ஒன்றோடொன்று மோதியதின் விளைவாக ஒரு கார் மேலே எழும்பிச் சென்று பார்வையாளர் குழுமியிருந்த இடத்தில் விழுந்து, வாதி படுகாயமுற்றார். இதைப் போன்ற பந்தயங்களில் இயல்பாகவே ஆபத்து இருக்கிறது என்று பார்வையாளர் எவரும் முன்னறிய முடியும். எனவே, அத்தகைய ஆபத்தினால் ஏற்படக்கூடிய காயத்தை ஏற்றுக்கொள்ள உட்கிடையாக இசைவு தெரிவித்தே வாதி அங்கு சென்றதாகக் கருதப்பட்டு, எதிர்வாதி பொறுப்பாளியாக மாட்டார் என்று தீர்ப்பளிக்கப் பட்டது.

உல்ரிஜ் v. சம்னர் (Woolridge v. sumner) வழக்கில் புகைப் படக்காராகிய வாதி குதிரைப் பந்தயத்தில் குதிரைகள் ஓடும் பகுதியின் எல்லையில் நின்றுகொண்டு அவை ஓடுவதைப் புகைப் படம் எடுத்துக் கொண்டிருந்தார். எதிர்வாதிக்குச் சொந்தமான குதிரை மிகவேகமாக ஓடிவந்ததால் அச்சமுற்ற வாதி குதிரைகள் ஓடும் பகுதிக்குள் விழுந்துவிட்டார். அவர் அக்குதிரையால் மிதிக்கப்பட்டு படுகாயமுற்றார். அக்குதிரை போட்டியில் வென்றது. எதிர்வாதி உரிய கவனம் காட்டியிருந்தால் அவர் பொறுப்பாளியாக மாட்டார் என்று தீர்ப்பளிக்கக்கப்பட்டது. இங்கு எதிர்வாதி காட்டவேண்டிய கடமை கவனத்தோடு இருக்கவேண்டிய கடமையே அல்லாது, திறமையோடு இருக்கவேண்டிய கடமையல்ல. எனவே இப்படிப்பட்ட போட்டிகளையும் விளையாட்டுகளையும் காணச் செல்பவன் அவற்றில் கலந்துகொள்பவரின் திறமையின்மையாலும், முடிவு எடுப்பதிலும் தவறு செய்வாலும் காயம் ஏற்படக்கூடிய ஆபத்தையும் ஏற்றுக்கொள்கிறார் என்றே சொல்ல வேண்டும். ஆயினும் விளையாட்டு அல்லது போட்டியில் பங்கெடுத்துக்கொள்பவர் பார்வையாளருடைய பத்திரம் அல்லது பாதுகாப்பைப் பற்றி எள்ளளவும் அக்கறை காட்டாமல் கவனமின்றி நடந்து கொண்டு அவர்களுக்குக் காயம் ஏற்படுத்தினால் பொறுப்பாளியாகவே கருதப்படுவார்.

டி. சி. பாலகிருஷ்ணன் v. டி. ஆர். சுப்பிரமணியன் (T.C. Balakrishnan v. T. R. Subramanian) வழக்கில் கேரள

உயர்நீதிமன்றம் இந்த எதிர்வாதத்தை ஏற்கவில்லை. இவ்வழக்கில் ஒரு திருவிழாவின்போது ஒரு திறந்த வெளியில் நடைபெற்ற வாண வேடிக்கையைக் காணச் சென்றிருந்த ஒரு பார்வையாளர்மீது ஒரு வெடி விழுந்து அவருக்குக் காயம் ஏற்பட்டது. அந்த வெடி வானில் செங்குத்தாகச் செல்லாமல் சாய்வாகச் சென்று மக்கள் கூட்டத்தில் பாய்ந்து, வாதியின்மேல் விழுந்து வெடித்தது. இவ் வழக்கில் மக்கள் நிற்க இடமிருந்த ஒரு பரந்த வெளியில் குழுமி யிருந்த பல்லாயிரக்கணக்கான மக்களிடையே எங்காவது ஓர் இடத்தில் இருக்கக் கூடிய ஒருவன் தானே இசைந்து ஆபத்தை ஏற்றுக்கொள்ள முன்வந்தவன் என்று சொல்ல முடியாது எனக் கூறப்பட்டது. வெடிகள் வைக்கப்பட்டு, அவை கொளுந்தப் படுகின்ற வேலியிட்டுள்ள இடத்திற்குள் நுழைபவனே அவ்வாறு ஆபத்தை ஏற்க இசைந்து முன்வந்தவன் என்று சொல்ல முடியும். எதிர்வாதி உரிய கவனமின்றி நடந்து கொண்டதால் ஏற்படும் விளைவுகளுக்கு வாதி இசைவு தந்ததாகக் கருதமுடியாது.

போல்டன் v. ஸ்டோன் (Bolton v. Stone) வழக்கில் ஒரு கிரிக்கெட் விளையாடுமிடத்தை அடுத்திருந்த நெடுஞ்சாலையில் வாதி நின்று கொண்டிருந்தபோது, ஆட்டக்காரர் ஒருவர் விளை யாடுமிடத்திலிருந்து அடித்த பந்து அவள்மேல் பட்டதால் காய முற்றாள். இதற்காக அவள் தீங்கீடு பெறமுடியவில்லை. சாலையில் செல்லும் வழிப்போக்கர் தவிர்க்க முடியாத விபத்திற்கு இசைவு தந்ததாகவே எடுத்துக் கொள்ளவேண்டும். ஆயினும், மற்றவர் கவனமின்மையால் ஏற்படும் விபத்திற்கு இசைவு தந்ததாகச் சொல்லமுடியாது. சாலையையொட்டி சொத்தை வைத்திருப்பவர் கள் சாலையைப் போக்குவரத்துக்கு சாதாரணமாகப் பயன்படுத்துவ தால் ஏற்படக்கூடிய விபத்துக்கு இசைவு, தந்ததாகவே கருதப் படும். டில்லெட் v. வார்டு (Tillett v. Ward) வழக்கில் எதிர்வாதி தனது கால்நடைகளை நெடுஞ்சாலை வழியாக ஓட்டிச் செல்லும் போது அவருடைய எருது ஒன்று சாலையை ஒட்டி அமைந்திருந்த ஒரு இரும்புக் கடையின் திறந்திருந்த கதவின் வழியாக உள்ளே நுழைந்து சேதம் ஏற்படுத்தியது. இதற்கு அவர் பொறுப்பாளி ஆக மாட்டார் என்று தீர்ப்பளிக்கப் பட்டது. இதைப்போலவே சந்தை, அங்காடி முதலியவற்றிற்குச் செல்பவர்கள் அங்கு தப்பி வரும் விலங்குகளால் சாதாரணமாக ஏற்படக்கூடிய ஆபத்தை ஏற்றுக் கொண்டதாகக் கருத வேண்டும்.

வாதி சுதந்திரமாகவும், முழுமையாகவும், முழு மனச் சம்மதத தோடும் இசைவு தந்திருக்க வேண்டும். அதாவது அவரது

இசைவு உண்மையான இசைவாக இருக்க வேண்டும். வாதியைத் தாக்கியோ அல்லது தாக்க முனைந்தோ, எதிர்வாதி அவரிடமிருந்து இசைவு பெற்றிருந்தால், அதை இசைவு என்று ஏற்றுக்கொள்ள முடியாது. ஆயினும் வாதி தான் வேண்டா வெறுப்புடனும், தயக்கத்தோடுந்தான் இசைவு தந்ததாக மட்டும் கூறினால் போதாது. லேட்டர் v. பிராட்டெல் (Latter v. Braddel) வழக்கில் ஒரு வேலைக்காரி சூலுற்று இருக்கிறாளா என்றறிய மருத்துவச் சோதனைக்கு உட்படுமாறு அவளது பணித்தலைவி உத்திரவு இட்ட போது அவள் அழுது கொண்டும், தன் மறுப்பினைத் தெரிவித்துக் கொண்டும், தயக்கத்தோடும் இணங்கினால் இவ்வழக்கில் அவள் உண்மையான இசைவு தந்ததாகாவே, கருதப்பட்டது. ஆயினும் வாதியை அச்சுறுத்தியோ, அதிகாரத்தைக் காட்டியோ, வற்புறுத்தியோ எதிர்வாதி வாதியிடமிருந்து இசைவு பெற்றிருந்தால் வாதி தான் உண்மையில் இசைவு தரவில்லை என்று வாதிடலாம். எடுத்துக்காட்டாக, ஒரு காவலர் ஐயத்திற் குரியவர் என வாதியைக் கைது செய்து தன்னுடன் காவல் நிலையத்திற்கு வருமாறு கூறுகிறார். அவரது அதிகாரத்திற்குக் கட்டுப்பட்டு வாதி அவருடன் செல்லுகிறார். இந்த சூழ்நிலையில் காவலர் தனது செயலுக்கு வாதி இசைவு தந்ததாக எதிர்வாதம் செய்ய முடியாது. அதிகாரத்தைக் காட்டிப் பெறுவது இசைவு ஆகாது. வாதி குடித்திருந்தாலோ, அல்லது இசைவு தரமுடியா நிலையில் இருந்தாலோ எதிர்வாதி இந்த எதிர்வாதத்தைப் பயன் படுத்த முடியாது; எதிர்வாதியின் மோசடியின் காரணமாக அவருக்கு ஒரு செயலைச் செய்ய உரிமையிருப்பதாக நினைத்ததாலேயே தான் இசைவு தந்ததாக வாதி கூறினால் அதை நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளும். சட்டப்படி கடமையை ஆற்ற வேண்டிய கட்டாயத்தின் காரணமாக ஒருவன் ஒரு செயலைச் செய்திருந்தால் அவன் அதற்கு உண்மையான இசைவு தந்ததாகச் சொல்ல முடியாது. எடுத்துக் காட்டாக, பணித் தலைவரின் சொத்தைத் தீ விபத்திலிருந்து காக்க வேண்டியது பணியாளனின் கடமையாகும். இவ்வாறு பணித் தலைவரின் சொத்தைக் காக்கும் பணியில் ஈடு பட்டிருக்கும்போது பணியாளுக்குக் காயம் ஏற்பட்டால் அவன் கவனமின்றித் தீ விபத்தை ஏற்படுத்தியவனிடமிருந்து தீங்கீடு பெறலாம் என்று டர்சோ v. சான்சன் (D'urso v. Sanson) வழக்கில் சொல்லப் பட்டது.

ஆபத்தை அறிந்திருப்பதாலேயே அதை இசைந்து ஏற்றுக் கொண்டதாகச் சொல்ல முடியாது.

எதிர் வாதியின் முறையற்ற செயலால் தனக்கு ஆபத்து ஏற்பட்டிருக்கிறது என்று வாதி அறிந்துள்ளதாலேயே, அந்த ஆபத்திற்கு உட்பட அவன் இசைவு தந்துவிட்டதாகக் கருதமுடி முடியாது.

(1) ஆபத்திருந்ததை வாதி அறிந்திருந்தார் என்றும், (2) ஆபத்து இருப்பதை அறிந்தும் அதனால் ஏற்படக்கூடிய விளைவு களை அவன் ஏற்றுக் கொள்ள இசைவு தந்தான் என்றும் எதிர்வாதி நிரூபிக்க வேண்டும். ஆபத்தை வாதி அறிந்திருந்தான் என்று மட்டுமே எதிர்வாதி மெய்ப்பித்தால் போதாது. சட்டம் இசைந் தேற்றுக் கொண்டது தீங்காகாது (volenti non fit injuria) என்று தான் சொல்கிறதே தவிர ஒருவன் அறிந்து ஏற்றுள்ளது தீங்காகாது (scienti non fit injuria) என்று சொல்லவில்லை. எடுத்துக் காட் டாக ஒரு கட்டிடம் ஆபத்தான நிலையில் உள்ளதை அறிந்திருந் தும் ஒரு தொழிலாளி அங்கு வேலை செய்ய ஒப்புக் கொள்ளலாம், வேலை செய்யும் கருவிகளும் சாதனங்களும் கோளாறு உடையவை பழுதானவை என்று அறிந்தும் அவற்றை ஒரு பணியாள் பயன் படுத்தலாம். இதன் விளைவாக அவனுக்குக் காயம் ஏற்பட்டால் அதனை ஏற்றுக் கொள்ள இசைவு தந்ததாகக் கருதி அவன் பணித் தலைவர் மேல் வழக்கிட முடியாது என்று சொல்ல முடியாது. பணி யாட்கள் ஆபத்து இருப்பதை அறிந்திருந்தார்கள் என்று மட்டும் சொன்னால் போதாது. அதை ஏற்றுக் கொள்ளவும் அவர்கள் இசைவு தந்ததாக எதிர்வாதி நிரூபிக்க வேண்டும். அதாவது அவற்றால் விளையும் ஆபத்தை ஏற்படுத்தாமல் இருக்கும் கடமை யிலிருந்து பணித் தலைவருக்கு விலக்களித்தும், தனக்கு அவற்றால் காயம் ஏற்பட்டால் இழப்பைத் தானே ஏற்றுக் கொள்வதாக பணி யாள் ஒத்து கொண்டிருக்க வேண்டும். அவர் ஆபத்து இருப் பதை அறிந்திருந்தார் என்பதை அதற்கு உடன்பட்டதற்கு சான்றாக மட்டுமே கொள்ள முடியும். 19ஆம் நூற்றாண்டில் எழுந்த வழக்குகளில் பணியாட்கள் ஆபத்திருப்பதை அறிந்தும் வேலை செய்து வந்தால் அவர்கள் ஆபத்தினை ஏற்க உட்கிடையாக இசைந்ததாகவே கருதப் பட்டது. ஆனால் மாறி வரும் சமுதாய பொருளாதார கருத்துகளை பிரபுக்கள் சபை ஸ்மித் v. பேக்கர் (Smith v. Baker) வழக்கில் ஏற்றுக் கொண்டது. இவ் வழக்கில் எதிர்வாதியின் பணியாளாகிய வாதி உடைக்கப்பட்ட பாறைகளில் துளை போடும் பணியைச் செய்து வந்தார். எதிர்வாதி ஒரு பாரந்தூக்கி எந்திரத்தின் மூலமாகக் கற்களை ஒரு இடத்தி லிருந்து மற்றொரு இடத்திற்கு வேலை செய்யும் தொழிலாளிகளின் தலைகளுக்கு மேலாக எடுத்துச் செல்லும் ஆபத்தான வழக்கத்தை சில மாதங்களாகவே பின்பற்றி வந்தார். எதிர்வாதி கவனமின்றி

இவ்வாறு செயல்பட்டதால் தனது உயிருக்கும் உடலுக்கும் ஆபத்தான நிலை ஏற்பட்டுள்ளதென்பதை பல மாதங்களாக அங்கு வேலை செய்து வந்த வாதி அறிந்திருந்தார். பாரந்தூக்கி எந்திரத்திலிருந்து ஒரு கல் வாதியின் தலையின் மேல் விழுந்து அவர் படுகாயமுற்றார். இவ்வாறு ஆபத்து ஏற்பட்டுள்ள வேலையில் வாதிக்கு எச்சரிக்கை தராமல் எதிர்வாதி கவனமின்றி இருந்து விட்டார். இங்கு ஆபத்து இருப்பதை வாதி அறிந்திருந்தாரேயன்றி, இசைந்து ஏற்றுக் கொண்டிருக்கவில்லை என்று நீதி மன்றம் கருதி எதிர்வாதி பொறுப்பாளியாவார் என்று தீர்ப்பளித்தது. ஆயினும் சில தொழில்கள் இயல்பாகவே மிக ஆபத்தானவை. அவற்றில் வேலை செய்யும் பணியாட்களுக்கு முழு பாதுகாப்புத் தர இயலாது. அந்த வேலைகளில் ஆபத்து உள்ளடங்கி இருப்பதால் அங்கு வேலை செய்பவர்களுக்கு அவற்றிலுள்ள ஆபத்தினைக் கருதி அதிக மான கூலி தரப்படுவதைக் கொண்டு அவர்கள் ஆபத்தை இசைந்து ஏற்றுக் கொண்டதாக ஊகிக்கலாம். ஆயினும் இந்த வேலைகளிலுங் கூட அவற்றிலுள்ள வழக்கமானதும் எதிர்பார்க்கக் கூடியதுமான ஆபத்துக்களையே அவர்கள் ஏற்றுக் கொள்வதாகக் கருத வேண்டும்; முன்னறிய முடியாத விதத்தில் அசாதாரணமான முறையில் ஏற்படுகின்ற விபத்திற்கு அவர்கள் இசைவு தந்ததாகச் சொல்ல முடியாது. இவ்வாறு பணித்தலைவர்கள் தமது பொருளாதார அதிகாரத்தை முறையின்றி பயன்படுத்தி தொழிலாளருக்கு ஊறு விளைவிக்காமல் நீதி மன்றங்கள் பார்த்துக் கொள்கின்றன.

போவாட்டர் v. ரோலி ரீஜிஸ் கார்பரேஷன் (Bowater v. Rowley Regis Corporation) வழக்கில் வண்டியோட்டியாகிய வாதியை ஒரு குதிரையை ஓட்டிச் செல்லுமாறு எதிர்வாதி உத்தரவிட்டார். அக் குதிரை முரட்டுத்தனமானதென்றும், இடக்கு செய்யக் கூடியதென்றும், அபாயகரமானதென்றும் இருவரும் அறிவர். எனவே வாதி அதையோட்ட மறுத்தார். ஆயினும் அவர் இறுதியில் தமக்கிடப்பட்ட உத்தரவுக்குக் கீழ்ப்படிந்து குதிரையை ஓட்டிச் சென்றார். குதிரை, வண்டியிலிருந்து அறுத்துக் கொண்டு ஓடிவிடவே, வாதி வண்டியிலிருந்து தூக்கியெறியப்பட்டு காயமுற்றார். அவர் கவனமின்மைக்காக எதிர்வாதியின் மேல் வழக்கிட்டார். ஒருவர் தாம் சாதாரணமாக செய்ய வேண்டிய கடமையைப் புரியும்போது ஏற்படும் ஆபத்திற்கு இசைவு தந்ததாகச் சொல்ல முடியாது என்றும் இவ்வழக்கில் கூறப்பட்டது. ஒருவர் செய்யும் வேலையில் இயல்பாகவே ஆபத்து உள்ளடங்கி இருப்பின் அவர் இசைவு தந்ததாகச் சொல்லலாம்.

ஒரு பணியாள் தனது பணித் தலைவரது கட்டளைகளுக்குப் புறம்பாகவும், சட்டத்தை மீறியும் நடந்து கொண்டதால் அவனுக்

குக் காயம் ஏற்பட்டிருந்தால், அவன் இசைந்தே அந்த ஆபத்தை ஏற்றுக் கொண்டதாகப் பணித் தலைவர் எதிர்வாதம் செய்யலாம். இம்பீரியல் கெமிக்கல் இண்டஸ்ட்ரீஸ் v. ஷேட்வெல் (Imperial Chemical Industries v. Shatwell) வழக்கில், ஜார்ஜ் ஷேட்வெல், ஜேம்ஸ் ஷேட்வெல் ஆகிய இரு சகோதரர்களும் எதிர்வாதியின் கல் உடைக்கும் இடத்தில் பணி செய்து வந்தனர். அவர்கள் இருவரும் சில வெடி மருந்துகளைத் தகுந்த முன்னெச்சரிக்கை இல்லாமல் சோதித்துப் பார்க்க முடிவு செய்தனர். இது பணித் தலைவர் கொடுத்திருந்த எச்சரிக்கைக்கும், சட்டத்திற்கும் முரணான செயலாகும். இவ்வாறு அவர்கள் வெடி மருந்தினைச் சோதிக்கும் போது ஏற்பட்ட வெடி விபத்தில் வாதி ஜார்ஜ் ஷேட்வெல்லுக்குக் காயம் ஏற்பட்டது. அவர் இந்த விபத்திற்குத் தானும் தனது சகோதரனும் பொறுப்பாளியாவார் என்று சொல்லி தனது சகோதரரின் நடத்தைக்குப் பணித் தலைவர் என்ற முறையில் எதிர்வாதி பகரப் பொறுப்பு ஏற்க வேண்டும் என்றும் வாதிட்டார். இவ் வழக்கில் வாதி தான் இசைந்து ஏற்றுக் கொண்டதை தீங்கென்று சொல்லக் கூடாது என்று எதிர்வாதம் செய்யப் பட்டது. சட்டப்படி அமைந்த கடமைகள் மீறப் பட்டதால் இந்த எதிர்வாதம் பொருந்தாது என்று வாதி கூறினர். ஆனால் பிரபுக்கள் சபை இந்த வாதத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. அது வாதி அந்த ஆபத்தை இசைந்து ஏற்றுக் கொண்டதாகவே தீர்ப் பளித்தது.

குடிபோதையில் கார் ஓட்டுபவர்

ஒருவன் குடிபோதையில் கவனமின்றி காரினை ஓட்டினால் அதில் பயணம் செய்பவருக்குக் காயம் ஏற்படக்கூடும். அப்போது ஏற்படும் காயத்தைப் பயணி இசைந்து ஏற்றுக் கொண்டதாகக் கருத வேண்டுமா என்னும் கேள்வி எழுகிறது. டான் v. ஹேமில்டன் (Dann v. Hamilton) வழக்கில் நிறைய மதுவருந்தியிருந்த ஹேமில்டன் ஓட்டிச் சென்ற காரில் வாதி டானும் இருந்தாள். அந்தக் காரில் வாதியுடன் டான்டன் என்பவரும் பயணம் செய்தார். அவர்கள் எட்டாம் எட்வர்டு மன்னரின் முடிசூட்டு விழாவிற்காக லண்டன் மாநகரில் செய்யப் பட்டிருந்த அலங்காரங்களையும், வண்ண ஒளி விளக்குகளையும் கண்டு களிப்பதற்காக காரில் சுற்றிக் கொண்டிருந்தார்கள். குடிபோதையில் இருந்த ஹேமில்டன் மிக விரைவாக ஓட்டிச் சென்றதால் டான்டன் நடு வழியிலேயே காரை நிறுத்தச் சொல்லி இறங்கிக் கொண்டார். அப்போது அவர் வாதியைப் பார்த்து, "என்னை விட உங்களுக்கு நெஞ்சுரம் அதிகம்" என்று கூற, அதற்கு வாதி "நீங்களும்

என்னைப் போல இருக்க வேண்டும். என்ன நேர்ந்தாலும் நேரட்டும்'' என்று கூறினான். எனவே, குடிபோதையில் இருந்த ஹேமில்டனின் கவனமின்மையால் கார் விபத்து ஏற்படக் கூடிய வாய்ப்பு மிகக் கணிசமான அளவில் அதிகரித்துள்ளது என்பது வாதிக்குத் தெரிந்திருந்தது. ஹேமில்டன் தொடர்ந்து கவன மின்றி காரை ஓட்டிச் சென்று சிறிது நேரங் கழித்து ஒரு விளக்குக் கம்பத்தில் மோதியதால் விபத்து ஏற்பட்டது. ஹேமில்டன் அந்த இடத்திலேயே மாண்டார். வாதிக்குக் கடுமையான உடற் காயங்கள் ஏற்பட்டன. அவள் ஹேமில்டனின் சொத்திலிருந்து தனக்குத் தீங்கீடு தருமாறு வழக்கிட்டாள். இங்கு தரப்பின ரிடையே அமைந்துள்ள உறவுகளைக் கொண்டு பார்க்கும்போது இசைவு இருப்பதாகக் கருத முடியுமாயினும் வழக்கின் சூழ்நிலை களின்படி வாதிக்குச் சாதகமாக தீர்ப்பளிக்கப்பட்டது. வாதி விரும்பியிருந்தால் அவர் பேருந்தில் பயணம் செய்திருக்க முடியும். ஒருவர் கவனமின்றிக் காரை ஓட்டுகிறார் என்பதாலேயே அவரு டன் பயணம் செய்யும் நாம் நிவாரணத்தை இழந்து விட மாட்டோம். ஆனால் ஆபத்திருக்கிறது என்பதை முன்னதாகவே அறிந்துள்ள வாதி, ''அது எனக்கு ஏற்படும் என்று நான் நினைக்க வில்லை'' என்று கூற நாம் ஏன் அனுமதிக்க வேண்டும் ?

இவ்வழக்கில் சொல்லப்பட்ட தீர்ப்பு கண்டனத்திற்குள்ளாகி யிருக்கிறது. மது போதையில் நிதான மில்லாமல் கார் ஓட்டும் ஒருவர் உடன் அக்காரில் பயணம் செய்பவர் தன்பால் கவனமின்றி யிருப்பவராகவே நாம் கருத வேண்டும். ஒரு காரினை நிறுத்தும் விசையில் கோளாறு உள்ளதென அறிந்தும் அதிலேறுபவனைக் கவனம் உடையவன் என்று கருத முடியுமா ? இதைப் போலவே காரை ஓட்டுபவன் அளவு கடந்து மது வருந்திவிட்டு வந்திருக் கிறான் என்பதைத் தெரிந்தும் அவனோடு பயணம் செய்பவனைத் தன்பால் கவனமில்லாதவனாகவே (contributory negligence) கருத வேண்டும். இன்சூரன்ஸ் கமிஷனர் *v.* ஜாய்ஸ் (Insurance Commmissioner *v.* Joyce) வழக்கில் இதே போன்ற சூழ் நிலையில் ஒரு குடிகாரன் ஓட்டிய காரில் பயணம் செய்த வாதி தனக்கு ஏற்பட்ட காயங்களுக்குத் தீங்கீடு பெற முடியவில்லை. குடிபோதை யில் காரையோட்டும் ஒருவன் எவ்வளவு கவனம் காட்ட முடியுமோ அதையே நாம் அவனிடமிருந்து எதிர் பார்க்க வேண்டும். காரை ஓட்டுபவன் மது போதையில் உள்ளான் என்பதை அறிந்தும் அதில் பயணம் செய்பவனைத் தன் பாதுகாப்பில் அக்கறை செலுத்து பவனாகக் கருத முடியாது. ஆபத்து இருக்கிறது என்பதை தெரிந்திருந்ததாலேயே அதற்குட்பட அவன் இசைந்ததாகக் கருத முடியாது என்று கூறினேம். ஆயினும், அவ்வாறு ஆபத்து இருக்

கிறது என்று வாதிக்கு எதிர்வாதி அறிவித்திருந்தால் அவன் தான் கவனமின்றி இருக்கவில்லை என்று வாதிடலாம். எடுத்துக்காட்டாக 'அ' என்பவன் தனது பழுதடைந்துள்ள மின்விசிறியை 'ஆ' என்பவனுக்குக் கடனுகத் தரும்போது, அந்த மின்விசிறியில் என்ன கோளாறு உள்ளதென்று கூறினுலேயே போதும்; அவன் 'ஆ'வின்பால் கவனம் காட்ட வேண்டிய கடமையை நிவைவேற்றி யவன் ஆவான். ஒரு பணித் தலைவரிடம் ஒரு முரட்டுக் குதிரை இருக்கிறதென்று வைத்துக் கொள்வோம். அவர் தம் பணியாளி டம் அக்குதிரை ஆபத்தானது என்றும், அதற்குத் தீவனம் போட அதனருகில் செல்ல வேண்டாம் என்று எச்சரித்திருந்தும் அப் பணியாள் உத்தரவைமீறி அக் குதிரைக்குத் தீனி போட அருகே சென்று மிதிபட்டால் பணித் தலைவர் பொறுப்பாளியாக மாட்டார்.

மீட்சி வழக்குகள் (Rescue cases)

இசைந்தேற்பது தீங்காவதில்லை என்ற கருத்துக்கு மீட்சி வழக்குகள் விதி விலக்குகளாகும். மீட்சி என்றால் என்ன? 'இ' என்பவர் கவனமின்றி நடந்து கொண்டதன் விளைவாக 'ஆ' என்பவரின் உயிருக்கோ, அல்லது உடல் உறுப்புகளுக்கோ பேராபத்து ஏற்படலாம். அப்போது அவரை மீட்கும் பணியில் 'அ' என்பவர் ஈடுபட்டுத் தன் உயிரையே இழக்கக் கூடும், அல்லது அவருக்குக் காயம் ஏற்படலாம். 'ஆ' என்பவர் 'அ' என்பவரின் குடும்பத்தைச் சேர்ந்தவராகவோ, அல்லது அவரை முன்பின் அறியாதவராகவோ இருக்கலாம். இவ்வாறு தெரிந்தே, உணர்ந்தே ஆபத்தைத் தழுவிக் கொள்ளும் 'அ' என்பவருக்கு ஏற்படும் இழப்பு அல்லது ஊறுக்கு 'இ' என்பவர் பொறுப்பாளி யாவார். இதுவே சட்டமாகும். இங்கு 'அ' என்பவரின் செயல் மனிதருக்கு இயல்பாக அமைந்துள்ள பண்பு நலமாகும். இச்சீரிய் கடமை உணர்ச்சியினை சமுதாயமும் நீதி மன்றங்களும் போற்றி வளர்க்கக் கடமைப் பட்டுள்ளன.

ஹேய்ன்ஸ் *v.* ஹார்வுட் (Haynes *v.* Harwood) வழக்கில், மக்கள் கூட்டம் மிகுந்திருந்த வீதியொன்றில் எதிர் வாதியின் பணியாள் அவரது வண்டியையும், குதிரைகளையும் காவல் இன்றி நிறுத்திச் சென்று விட்டார். ஒரு சிறுவன் குதிரைகளின் மேல் கல்லெறியவே அவை மிரண்டு ஓடின. அப்போது காவல் நிலையம் ஒன்றினுள் பணியாற்றிக் கொண்டிருந்த வாதி அவ்வாறு குதிரை கள் தறிகெட்டு ஓடுவதைக் கண்ணுற்றார். அவற்றைத் தடுத்து நிறுத்தா விட்டால் வீதியில் சென்றுக் கொண்டிருந்த ஒரு பெண்ணுக்கும் சில குழந்தைகளுக்கும் பேராபத்து ஏற்படும என்பதைக் கண்டு, தனக்கு ஏற்படக் கூடிய பெரிய ஆபத்தைத்

பொருட்படுத்தாது அவர் பாய்ந்து சென்று அக் குதிரைகளைத் தடுத்து நிறுத்தினர். அவ்வாறு செய்கையில் ஒரு குதிரை அவர் மேல் விழுந்ததன் விளைவாக அவருக்குக் கடுமையான உடற் காயங்கள் ஏற்பட்டன. இதற்கு எதிர் வாதி பொறுப்பாளியாவார் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது. அவர் ஆபத்தை இசைந்து ஏற்றுக் கொண்டார் என்ற எதிர்வாதத்தையும் நீதிமன்றம் நிராகரித்தது. அவரது செயல் இடையில் நிகழ்ந்த புதிய செயல் என்று சொல்லப் பட்டால் அது எதிர்வாதியின் கவனம் இல்லாமையால் ஏற்பட்டக் கூடியதே யாகும். அவருக்கு ஏற்பட்ட காயங்கள் எதிர்வாதிகளின் கவனமின்மையால் ஏற்படக் கூடிய இயல்பானதும், நிகழுக் கூடியதுமான விளைவு களேயாகும். ஆயினும் இவ்வாறு எந்த ஆபத்தையும் தோற்று விக்காத குதிரையைத் தடுத்துநிறுத்தும் முயற்சியில் ஈடுபட்டுக் காயமுறும் வாதிக்கு நிவாரணம் கிடைக்காதென கட்லர் v. யுனைட்டெட் டெய்ரீஸ் (லண்டன்) லிமிடெட் (Cutler v. United Dairies (London) Ltd) வழக்கில் அப்பீல் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இவ்வழக்கில், எதிர்வாதிகளுக்குச் சொந்தமான பால்வண்டியை இழுக்கும் குதிரை, வண்டியோட்டி இல்லாமல் ஒரு தோட்டத்துக்குள் ஓடியது. வண்டியை ஓட்டுபவர் குதிரையை நிறுத்த முயற்சித்தார். ஆனால் அவரால் குதிரையை அடக்கமுடியாமல் போகவே " உதவி உதவி " என்று கத்தினர். அதைக் கேட்ட வாதி அவனது உதவிக்கு சென்றார். அக்குதிரை பின்னால் நகர்ந்து அவரை எட்டி உதைத்தது. இங்கு வாதி தமக்கேற்பட்ட ஊறினை இசைந்து ஏற்றுக் கொண்டதாகவே கருதப்பட்டது. ஆனால், சட்டப்படி மீட்கவேண்டிய கடமை இல்லையெனினும் சீரிய பண்பினாலும், அற உணர்வினாலும் உந்தப் பட்டு வாதி மற்றொருவரை மீட்கும்போது காயமுற்றிருந்தாலும் அவர் நிவாரணம் பெறமுடியும். அப்போது அவர் தற்கவனமின்றி இருந்தார் என்று சொல்லமுடியாது. மார்கன் v. ஏலன் (Morgan v. Aylen) வழக்கில் எதிர்வாதியின் மோட்டார் சைக்கிள் ஒரு சிறுமியின் மேல் ஏறுமல் காப்பாற்றும் முயற்சியில் காயமுற்ற வாதி தீங்கீடு பெற்றுள். இவ்வழக்கின் கவனமின்றி எதிர்வாதி மோட்டார் சைக்கிளை ஓட்டிக்கொண்டிருந்தார். வாதி தன்பால் கவனமின்றி இருந்ததாக எதிர்வாதி கூறியதை நீதிமன்றம் ஏற் காமல் குழந்தையைக் காப்பாற்ற வாதி ஓடிய செயல் இயல்பான தும் முறையானதும் ஆகும் என்று கூறிவிட்டது. லேங்கன்டார்ஃப் v. பென்சில் வேனியன் ரெயில்வே கம்பெனி (Langendorf v. Pennsylvanian Railway Company) என்ற அமெரிக்க வழக்கில் எதிர்வாதி தமக்குச் சொந்தமான இருப்புப்பாதை கடப்பு வாயி

லில் காவலாள் வைத்திருக்கவில்லை, தவிர, புகைவண்டி கவனம் இன்றி மிகையான வேகத்தில் ஓட்டப்பட்டது. இதன்விளைவாக இருப்புப்பாதையைக் கடக்க முயன்ற ஒரு குழந்தைக்கு ஆபத்து ஏற்பட்டிருந்ததைக் கண்டவாதி தம் உயிரைத் துச்சமென மதித்து அக் குழந்தையைக் காப்பாற்றப் பாய்ந்து சென்றார். அவர் புகைவண்டியில் அடிபட்டுப் படுகாயமுற்றார். இதைப் போன்ற சூழ்நிலைகளில் மீட்சிப்பணியில் ஈடுபட்டுள்ளவர் உடனே ஒரு சில விநாடிகளுக்குள்—துணிந்து ஒரு முடிவெடுத்துக் காப்பாற்றும் பணியில் இறங்க வேண்டியிருக்கும். உடனடியான ஆபத்து ஏற்பட்டுள்ள அந்தச்சூழ்நிலையில் அவன் தனக்கு ஏற்பட்டுள்ள ஆபத்தையும், தான் காப்பாற்றச் செல்லுகின்ற மனிதனுக்கு ஏற்படுகின்ற ஆபத்தையும் சிந்தித்து, சீர்தூக்கிப் பார்த்துத்தான் செயலாற்ற வேண்டும் என்று கூறுவது பொருந்தாது.

பேக்கர் v. ஹாப்கின்ஸ் & சன் லிமிடெட் (Baker v. T. E. Hopkins & Son Ltd) வழக்கில் நச்சுப் புகை மண்டியிருந்த கிணற்றில் சிக்கியிருந்த இரு பணியாட்களைக் காப்பாற்ற, உயர்ந்த மனித உணர்ச்சிகளால் உந்தப்பட்டு கிணற்றினுள் இறங்கி மடிந்த மருத்துவர் செயல் மீட்சியின்பாற் பட்டதென்றே கருதப்பட்டுத் தீர்ப்பு தரப்பட்டது. ஒருவர் தனது கவனமின்மையால் மற்றொருவரை ஆபத்தான நிலைக்கு உட்படுத்தினால் மூன்றாவது மனிதன் ஒருவன் தனது உயிரையும் நலத்தையும் துச்சமென மதித்து அஞ்சா நெஞ்சத்துடனும் அவரைக் காப்பாற்ற வரக்கூடும் என்று எதிர்பார்க்க வேண்டும். இது இயல்பானதும், நிகழக்கூடியதுமாகிய செயலாகும்.

விடியன் v. பிரிட்டிஷ் டிரான்ஸ்போர்ட் கமிஷன் (Videan v. British Transport Commission) வழக்கில் எதிர் வாதியின் பணியாள் புகைவண்டி நிலையத்தின் அருகே ஒரு டிராலியை ஓட்டிக் கொண்டு வந்தார். அப்போது புகை வண்டி நிலையத் தலைவரின் இரண்டு வயது குழந்தை இருப்புப் பாதைக்கு அருகில் வந்து விட்டது. அப்போது குழந்தையை நோக்கி டிராலி நெருங்கி வருவதைக் கண்ட புகைவண்டி நிலையத் தலைவர் டிராலியை நிறுத்துமாறு, அதை ஓட்டுபவருக்குச் சைகை காட்டினார். ஆனால், அவர் அதன் வேகத்தைக் குறைத்தாரேயன்றி, நிறுத்தவில்லை. அவர் காலம் கடந்துதான் இருப்புப் பாதையின் அருகில்குழந்தை இருப்பதைக் கண்டார். உடனே அவர் வண்டியின் நிறுத்தும் விசையை அழுத்தினார். அதனால் ஆபத்தை தவிர்க்க முடியவில்லை. தன்னுடைய குழந்தையைக் காப்பாற்ற புகை

வண்டி நிலையத் தலைவர் தான் நின்று கொண்டிருந்த புகை வண்டி நிலைய மேடையிலிருந்து தாவிக் குதித்தார். அந்த வண்டி மோதி அவர் கொல்லப் பட்டார்; குழந்தை படுகாயமுற்றது. குழந்தையும், புகை வண்டி நிலையத் தலைவரின் மனைவியும் இட்ட வழக்கில் அக் குழந்தை இருப்புப் பாதையில் அத்து மீறி இருந்தாகக் கருதப் பட்டு அக்குழந்தையின்பால் டிராலியை ஓட்டுபவர் கவனத்தோடு இருக்க வேண்டிய கடமை எதுவும் கொண்டிருக்கவில்லை யென்றும், அது முன்னறியத் தக்கதல்ல என்றும் தீர்பளிக்கப் பட்டது. எனவே, குழந்தைக்கு நிவாரணம் கிடைக்க வில்லை. ஆனால், எதிர்வாதிகளின் பணியாளாகிய புகைவண்டி நிலையத் தலைவர் இருப்புப் பாதையில் அத்து மீறி இருந்தவராகச் சொல்ல முடியாது. அவர் அங்கிருந்ததை டிராலி ஓட்டுநர் முன்னறிந் திருக்க வேண்டு மென்பதால் அவர்பால் கவனத்தோடு இருக்க வேண்டிய கடமையை காட்டியிருக்க வேண்டும். புகை வண்டி நிலையத் தலைவர் தண்டவாளத்தின் அருகே செல்லக் கூடிய சூழ் நிலை ஏற்படக் கூடும் என்று அவர் முன்னறிந்திருக்க வேண்டும். எனவே, புகைவண்டி நிலையத் தலைவரின் மனைவி தன் கணவனின் மரணத்திற்குத் தீங்கீடு பெற முடியும் என்று தீர்ப்பளிக்கப் பட்டது.

சில சமயங்களில் எதிர்வாதியின் கவனமின்மையால் அவனது உயிருக்கே ஆபத்து ஏற்பட்டிருக்கலாம். அப்போது அவனைக் காப்பாற்ற வாதி சென்று காயமுற்றிருந்தாலும் அவன் எதிர்வாதியினிடமிருந் ' தீங்கீடு பெற முடியும். புரூக் v. பிக்லோ (Brugh v Bigelow) வழக்கில் எதிர்வாதி கவனமின்றி காரைச் செலுத்தி வேறு ஒரு காருடன் மோதியதால் கார் கவிழ்ந்து அதனடியில் அவரே சிக்கிக் கொண்டார். அவரை வெளியே காப்பாற்றிக் கொண்டுவரும் மீட்சி வேலையில் ஈடுபட்டிருந்த வாதி காயமுற்றார். இவ்வழக்கில் எதிர்வாதி பொறுப்பாளியாவார் என்று தீர்ப்பளிக்கப் பட்டது. இக் கொள்கையின் அடிப்படை யில் மீட்சியில் ஈடுபட்டவர் தமது சொத்தையோ, எதிர்வாதியின் சொத்தையோ, அல்லது மற்றவர்களின் சொத்தையோ காப்பாற் றும் முயற்சியில் ஈடுபடும்போது ஆபத்தில் சிக்கினாலும் எதிர் வாதி பொறுப்பாளியாவார் என்று கூறலாம்.

7. தவிர்க்க முடியாத விபத்து
(Inevitable Accident)

விபத்து என்பது நாம் சற்றும் எதிர்பாராத போது ஏற்படுவ தாகும். இதை நாம் உரிய கவனமோ, எச்சரிக்கையோ காட்டி யிருந்தாலும் தவிர்க்க முடியாதாயின் தவிர்க்க முடியாத விபத் தென்று கூறலாம் இந்த விபத்து வாதிக்கு ஏற்படக் காரண மாயிருந்த செயல் எதிர்வாதியால் கருதிச் செய்யப் பட்டதோ. அல்லது உரிய கவனம் காட்டியிருந்தால் தவிர்க்கப் படக்கூடி யதோ அல்ல. எனவே, தவிர்க்கமுடியாத விபத்து என்று எதிர் வாதம் செய்யும்போது, நான் தகுந்த கவனத்துடன் இருந்தும் விபத்து ஏற்பட்டு விட்டதென்றும் இதற்குத் தான் எவ்விதத்திலும் பொறுப்பாளியல்லவென்று எதிர்வாதி சொல்கின்றான். எனவே, விபத்து தவிர்க்க முடியாத தென்பதை அவனே நிரூபிக்க வேண்டும்.

தவிர்க்க முடியாத விபத்து என்று கூறும்போது அது எந்த விதத்திலும் தடுத்திருக்கவே முடியாது என்று பொருளாகாது. எடுத்துக் காட்டாக, குதிரையை ஓட்டிச் செல்லும் மனிதன் தகுந்த கவனத்தோடு இருந்தும் ஒரு விபத்து ஏற்படுகிறது என்று வைத் துக் கொள்வோம். அவன் குதிரையை ஓட்டுவது போன்ற ஆபத் தான செய்கையில் ஈடுபடாமல் இருந்திருந்தால் லாயத்திலிருந்து குதிரையை ஓட்டிச் சென்றிராவிட்டால் - இந்த விபத்து ஏற்பட்டி ராது என்று கூறுவது அவனது எதிர்வாதத்திற்குச் சரியான பதிலா காது. எதிர்பாராத விபத்தென்பது ஏற்பட்டுள்ள ஆபத்திற்கும் தான் இருந்த சூழ்நிலைக்கும் தேவையானதும் ஏற்றதுமாகிய கவன மும், எச்சரிக்கையும் காட்டி ஒருவனால் தடுத்திருக்க முடியாத தொன்றாகும், கால்நடைகளின் அத்துமீறலால் ஏற்படும் சேதத் தையும், நிலத்தில் கொண்டு வரப்பட்டோ, வைக்கப்பட்டோ உள்ள தீ, நீர் மற்றும் வேறு அபாயகரமான பொருட்கள் வெளி

யேறிச் செல்வதால் ஏற்படும் சேதத்தையும் தவிர்க்க முடியாது என்று எதிர்வாதம் செய்வது ஏற்றுக் கொள்ளப் படுவதில்லை. அவற்றிற்குத் தவிர்க்க முடியாத விபத்து இனத்தைச் சேர்ந்த தெய்வச் செயல் எனும் எதிர்வாதத்தைப் பயன்படுத்தலாம்.

ஸ்டான்லி *v.* பவல் (Stanley *v.* Powell) வழக்கில் எதிர் வாதியும் வாதியும் பறவைகளை வேட்டையாடச் சென்ற ஒரு குழு வில் இருந்தனர். எதிர்வாதி ஒரு பறவைக்கு வைத்த ஒரு குறி தவறி ஓக் மரத்தில் பட்டு, திசைமாறிப் பாய்ந்து, வாதிக்குக் காயம் ஏற்படுத்தியது. அவருக்கு ஏற்பட்ட காயம் எதிர்வாதியின் கவனமின்மையால் ஏற்பட்டதல்லவென்று தீர்ப்பளிக்கப் பட்டது.

பிரௌன் *v.* கெண்டல் (Brown *v.* Kendall) வழக்கில், வாதியின் நாயும் எதிர்வாதியின் நாயும் சண்டையிட்டுக் கொண் ருந்தன. அவற்றை விலக்குவதற்காக எதிர்வாதி தனது தடியினால் அடித்துக் கொண்டிருந்தார். அவருக்குப் பின்னால் வாதி நின்று கொண்டிருந்தார். எதிர்வாதி தடியைத் தமது தோளுக்கு மேல் உயர்த்தியவாறு பின்னே நகர்ந்து செல்லும்போது சற்றும் எதிர் பாராத விதமாக அவருக்குப் பின்புறமாக நின்று கொண்டிருந்த வாதியின் கண்ணில் தடி இடித்து அவர் படுகாயமுற்றார். இது எதிர் பாராத விபத்தென்று கருதப்பட்டது. ஒருவர் சட்டத்திற்கிசைந்த செயல் ஒன்றைச் செய்யுங்கால் விபத்தொன்று ஏற்பட்டால் அதன் விளைவாக ஏற்படும் காயங்களுக்கு அவர் பொறுப்பாக மாட்டார்.

ஹோம்ஸ் *v.* மாதர் (Holmes *v.* Mather) வழக்கில், எதிர் வாதியின் குதிரைகளை அவரது பணியாள் ஓட்டிச் சென்றார். ஒரு நாய் குரைக்கவே குதிரைகள் மிரண்டு ஓடின. தன்னால் இயன்ற வரை அவற்றை அடக்க எதிர் வாதியின் பணியாள் முயற்சி செய்தும் அவற்றை நிறுத்த முடியவில்லை. சாலையின் மூலை யொன்றில் அவர் அவற்றைத் திருப்ப முயற்சித்தபோது அவை வாதியைக் கீழே தள்ளி அவருக்குக் காயமுண்டாக்கின. அந்த மூலையைத் தாண்டிச் செல்ல பணியாள் முயற்சி செய்திரா விட்டால் அவை வாதியின் மேல் மோதாது. நேரேயிருந்த கடை யொன்றினுள் ஓடியிருக்கும் இதில் குதிரைகளை ஓட்டிய பணி யாள் மேல் எக்குற்றமும் இல்லாததோடு அவர் அந்தச் சூழ்நிலை யில் எது ஏற்றதோ அதையே செய்திருக்கிறார். நாய்கள் குரைத்த தால் மிரண்டதாலேயே குதிரைகள் பணியாளையும் அவர் அருகில் அமர்ந்திருந்த பணித் தலைவரையும் இழுத்துக் கொண்டு ஓடியிருக் கின்றன. இச் சூழ்நிலையில் இதற்கு வழக்கிட வாதிக்கு உரிமை உண்டென்று வைத்துக் கொண்டால், சாதாரணமாக ஒருவன்

குதிரையை ஓட்டிச் செல்லும்போது சாலையில் புழுதி கிளம்பி வாதியின் ஆடையில் பட்டு அழுக்கடைந்ததாகவோ, அல்லது கண்ணில் மண் விழுந்து காயம் ஏற்பட்டு விட்டதென்றே கூட அவன் வழக்கிடலாம். எனவே, இதைப் போன்ற சூழ்நிலைகளில் அவன் வழக்கிட முடியாது என்பது தெளிவாகிறது. எனவே மனிதர்கள் வாழ்க்கையில் தத்தம் பணிகளை முறையாக நடத்திச் செல்வதற்கு வசதியாக, சாலையில் செல்கிறவர்கள், மற்றவர்களால் தக்க கவனம் காட்டப் பட்டாலும் தவிர்க்க முடியாமல் போகிற இன்னல்களை எதிர்பார்த்து அவற்றை சகித்துக் கொள்ளத்தான் வேண்டும்.

ரையன் v. யங் (Ryan v. Young) வழக்கில், ஒருவர் சாலையில் காரை ஓட்டிச் செல்லும்போது அவருக்குத் திடீரென்று மாரடைப்பு ஏற்பட்டு இறந்து போனதால் ஒரு விபத்து ஏற்பட்டது. இது தவிர்க்க முடியாத விபத்தென்று கருதப்பட்டது.

இதைப் போலவே விபத்தினால் சொத்து சேதம் உறும்போதும் பொறுப்பேற்படுவதில்லை எனத் தீர்ப்புகளில் சொல்லப்பட்டிருக்கிறது. நைட்ரோ கிளிசரின் (nitro glycerine case) வழக்கில், எதிர்வாதிகளிடம் மரப் பெட்டியொன்றில் நைட்ரோ கிளிசரின் என்னும் வெடி மருந்து, ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு எடுத்துச் செல்வதற்காகத் தரப்பட்டது. அப் பெட்டியில் என்ன இருந்தது என்று எதிர்வாதிக்களுக்குத் தெரியாது. அப் பெட்டி ஒழுகிக் கொண்டிருந்தால் எதிர்வாதி இடைவழியில் தங்கள் அலுவலகம் இருந்த இடத்திற்குக் கொண்டு சென்றனர். அங்கு அவரது பணியாள் உதவி கொண்டு அப் பெட்டியைத் திறக்க முயற்சித்தபோது நைட்ரோ கிளிசரின் வெடித்து மிகுந்த உயிர்ச் சேதம் ஏற்பட்டதோடு கட்டடமும் சேதம் அடைந்தது. கட்டடத் திற்குச் சொந்தக்காரரான வாதி எதிர்வாதியின் மேல் வழக் கிட்டார். நைட்ரோ கிளிசரின் என்னும் வெடி மருந்தின் அபாய மான தன்மையைப் பற்றி எதிர்வாதிக்கோ, அதைக் கையாண்ட பணியாட்களுக்கோ எதுவும் தெரியாது. இதைத் தவிர, அப் பொருளைக் கொண்டு செல்ல அவர்கள் அந்தப் பெட்டியைப் பெற்றுக் கொண்டபோது ஐயத்தைத் தோற்றுவிக்கக் கூடிய காரணங்கள் எதுவும் இல்லாத போது, அதனுள் என்னவிருந்தது என்பதையறியத் திறந்து பார்க்க வேண்டிய கடமை அவர்களுக்கு இல்லை. எனவே, அவர்கள் கவனமின்றி நடந்து கொண்டார்கள் என்றும் சொல்ல முடியாது. எனவே, சட்டத்திற்கு இசைந்த வகையில் தொழில் செய்யும் போது ஏற்படும் விபத்திற்கு அவர்கள் பொறுப்பாளியாக மாட்டார்கள் என்று தீர்ப்பளிக்கப் பட்டது.

நேஷனல் கோல் போர்டு v. இவான்ஸ் (National Coal Board v. Evans) வழக்கில் சொத்தில் அத்துமீறல் செய்யப்பட்ட தென வழக்கிடப்பட்டபோது, இந்த எதிர்வாதம் வெற்றிகரமாகப் பயன் படுத்தப்பட்டது. இவ்வழக்கில் வாதிக்கு முன்பு சொத்தின் மீது உரிமை கொண்டிருந்தவர்கள் உள்ளூராட்சி மன்றத்திற்குத் தெரி யாமல் அதற்குச் சொந்தமான நிலத்தில் மின்சாரக் கம்பிகளைப் பதித்திருந்தனர். தனது நிலத்தில் சில தொழிற் கூடங்களைக் கட்ட உள்ளூராட்சி மன்றம் ஒப்பந்தப் பணியாரை நியமித்திருந்தது. அந்தப் பணியர் சாக்கடை அமைப்பதற்காக அமர்த்தி இருந்தவ ரின் பணியாட்கள் நிலத்தைத் தோண்டும் போது வாதிக்குச் சொந்தமான கம்பிகளுக்குச் சேதம் விளைவித்தனர். தனது சொத் தில் அத்துமீறியதற்காகவும், கவனமின்மைக்காகவும் ஒப்பந்தப் பணியர் மேலும், அவர் வேலைக்கு அமர்த்தியிருந்தவர் மேலும் இடப்பட்ட வழக்கில் அவர்கள் பொறுப்பாளியல்ல எனத் தீர்ப் பளிக்கப்பட்டது. இந்தக் கம்பிகள் போடப்பட்ட விவரம் உள்ளூ ராட்சி மன்றத்திற்குத் தெரிவிக்கப்படவில்லை. உள்ளூராட்சி மன்ற மும் அக்கம்பிகள் இருப்பதை எதிர்வாதிக்குக் கொடுத்த வரை படத்தில் குறிப்பிடவில்லை. அவை இருப்பதை அறியும் வாய்ப்பு எதிர்வாதிக்கு இல்லை. எனவே, தங்கள் பணியை உரிய முறையில் செய்த எதிர்வாதிகள்மேல் எப்பிழையும் இல்லையெனத் தீர் மானிக்கப்பட்டது. அவர்கள் பொறுப்பாளியாக மாட்டார்கள் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

8. தெய்வச் செயல் (Act of God)

இந்த எதிர்வாதத்தின்படி மனிதனின் குறுக்கீடு எதுவுமில்லாமல், இயற்கைக் காரணங்களால் ஒரு பொருள் வெளியேறிச் சென்று ஊறுவிளைவிக்கிறது ; இதை யாரும் முன்னறிந்து போதிய தற்காப்பு நடவடிக்கை யெடுத்து, தடுத்து நிறுத்த முடியாது. எனவே அது நேரக்கூடும் என எதிர்நோக்கத் தேவையில்லை இவ்வாறு யாரும் தடுத்து நிறுத்த முடியாததும், உணர்ந்து கொள்ள முடியாததுமாகிய இயற்கைச் சக்திகளின் சீற்றத்தால் விளையும் ஊறுகளுக்கு எதிர்வாதி பொறுப்பாளியாக மாட்டார். இதையே தெய்வச் செயல் என்கிறோம். எனவே இது சமயக் கருத்து அல்ல.

இந்த எதிர்வாதத்தை ரைலண்ட்ஸ் v. பிளட்சர் (Rylands v. Fletcher) வழக்கில் சொல்லப்பட்ட விதிக்கு ஒரு எதிர்வாதமாகக் கொள்ளலாம் என நீதிபதி பிளாக்பார்ன் கருதினார். ஆயினும் வெற்றிகரமாக இந்த எதிர்வாதம் பயன்படுத்தப்பட்ட வழக்கு நிக்கல்ஸ் v. மார்ஸ்லேண்டு (Nichols v. Marsland) ஆகும். இவ்வழக்கில் எதிர்வாதி நீரோடையொன்றில் அணையிட்டு தனது நிலத்தில் சில செயற்கைக் குளங்களை பல ஆண்டுகட்கு முன்பே கட்டியிருந்தார். இவற்றின் தடுப்புச் சுவர்களையும், (அணைகளையும்) அவர் தகுந்த கவனத்தோடு நல்ல முறையில் கட்டியிருந்தார். ஆயினும் அசாதாரணமாகப் பெய்த பெருமழையின் காரணமாகப் பெருவெள்ளம் புகுந்து தடுப்புச் சுவர்களை உடைத்துக் கொண்டு கரை புரண்டோடி வெளியேறிச் சில பாலங்களை அடித்துச் சென்றதாக அவர்மேல் வழக்கிடப் பட்டது. இவ் வழக்கில் சாட்சி சொன்னவர்கள் தாங்கள் நினைவறிந்த நாள் முதலாய் இவ்வளவு கடுமையான பெருமழையைக் கண்டதில்லை என்று சொன்னார்கள். இவ்வழக்கில் எதிர்வாதி, ரைலண்ட் v. பிளட்சர் வழக்கில் சொல்லப்பட்ட கடும் பொறுப்பு உள்ளவர் என வாதிக்கப்பட்டதை

நீதி மன்றம் ஏற்காமல், இயற்கையின் சீற்றமாகிய இச் செயல் எதிர்வாதியால் எதிர்பார்க்கத் தக்கத்தல்ல என்று தீர்ப்பளித்தது. யாரும் கவனமின்றி இருக்கவில்லை; ஏற்பட்ட விபத்து தெய்வச் செயல் என்று கருதப்பட்டது. இவ்வழக்கில் அடிப்படையாக அமைந்துள்ள கொள்கையில் யாருக்கும் ஐயமில்லை யெனினும் தீர்ப்பில் குறை காணப் பட்டுள்ளது. எடுத்துக் காட்டாக கிரீனுக் மாநகராட்சி v. கலிடோனியன் ரயில்வே கம்பெனி (Greenock Corporation v. Caledonian Railway Co.) வழக்கில் மாநகராட்சி ஒரு பூங்கா அமைக்கும்போது, நீரோடையின் படுகையில் குழந்தைகள் படகோட்டி மகிழ ஒரு நீர்க்குளம் அமைத்தது. இதன் விளைவாக அதன் இயல்பான ஓட்டத்தைத் தடுத்து விட்டார்கள். ஒருமுறை பெருமழை பெய்து வெள்ளம் நீர்க்குளத்தில் நிரம்பி வழிந்து சாலை வழியே ஓடி இருப்பு பாதை நிறுவனத்திற்குச் சொந்தமான சொத்தில் புகுந்து அதை வெள்ளக் காடாக்கி பெரிய சேதம் விளைவித்தது. இதை இயற்கையான விளைவுகள் என்று கூற முடியாது. எதிர்வாதி—மாநகராட்சி நீரோட்டத்தின் திசையை மாற்றி அமைக்காமல் இருந்திருந்தால் வெள்ளம் தன் இயல்பான வழியிலேயே நீரோடையில் சென்றிருக்கும்; சேதம் விளைந் திருக்காது. எனவே, எதிர்வாதிகள் பொறுப்பாளியாவார்கள் எனக் கருதப்பட்டது. இதைப் போன்ற மழையை ஸ்காட்லாந்து முன்பு கண்டதே இல்லை என்று கூற முடியாது. நிக்கல்ஸ் வழக்கில் ஒரு நீர்த்தேக்கத்தில் தண்ணீர் தேக்கப்பட்டிருந்ததைப் பற்றி நீதி மன்றம் ஆய்ந்தது. இவ்வழக்கில் இயற்கையாக அமைந்துள்ள நீரோடையின் நீர்வழிப்போக்கு குறுக்கிடப்படவில்லை. அவ்வாறு குறுக்கிடுபவர், அசாதாரணமாகப் பெய்யும் பெரு மழையாலும் சேதம் விளையாதவாறு தடுப்பு நடவடிக்கை எடுக்கவேண்டும், பெருமழையை தெய்வச்செயல் எனக் கருதிவிட முடியுமா என்பது ஐயத்திற்குரியது. எனினும் ஒரு வழக்கில் உள்ள சூழ்நிலைகளைக் கருதிப் பார்த்தே அது தெய்வச் செயலா என்று முடிவு செய்ய வேண்டும். அசாதாரணமான சூருவளிக் காற்று, வழக்கத்திற்கு மாறுன அலை எழுச்சி, நில அதிர்ச்சி, புயல், மின்னல் ஆகியவை தெய்வச் செயல்கள் எனக் கருதப்பட்டுள்ளன. மேற்கு ஆஸ்திரேலி யாவில் மின்னலால் ஏற்பட்ட தீ விபத்திற்கு எதிர்வாதி பொறுப்பாளி ஆக மாட்டார் என்று ஹார்கிரேவ் v. கோல்டுமன் (Hargrave v. Goldman) வழக்கில் கூறப்பட்டது. 'ஏன் எனில் அது வானத்தி லிருந்து வந்ததாகும்.' ஒரு செயல், தெய்வச் செயல் என்று கருதப் பட வேண்டுமானால் அது இயற்கையின் சீற்றத்தால் மனிதனின் குறுக்கீடு எதுவுமில்லாமல் நேரடியாக ஏற்பட்டிருக்க வேண்டும். எடுத்துக்காட்டாக, பெரும்புயல் காரணமாகக் கப்பல் அலைக்கழிக்

கப்பட்டு தரை தட்டியிருந்தால் அது தெய்வச் செயலாகும். ஆனல் பனி மூட்டத்தின் காரணமாகத் திசையறிய முடியாமல் கப்பலின் தலைவனின் தவறுதல் காரணமாக கப்பல் கரையில் ஒதுக்கப பட்டால், அது எவ்வளவு தவிர்க்க முடியாததாயினும், மனிதனின் செயலே யாகும். இதைப் போலவே மின்னல், இடி ஆகியவற்றின் காரணமாக ஒரு வீடு தீப்பற்றி எரிந்தால் அது தெய்வச் செயல் லாகும். ஆனல் வீட்டில் உள்ள ஒரு விளக்கை ஒருவர் உறங்கும் போது தவறுதலாகத் தட்டி விட்டதன் விளைவாக தீ விபத்து ஏற் பட்டிருந்தால் அது மனிதனின் செயலே யாகும். தெய்வச் செயல் ஆகாது. பொதுவாக இயற்கைச் சக்தியும் மனிதனும் சேர்ந்தே ஒரு விளைவு ஏற்படுத்தினலும் இது தெய்வச் செயலா, மனிதனின் செயலா என்பதை அறிய விபத்தேற்பட உடனடியான, நேரடியான காரணம் என்னவென்பதையே காணவேண்டும். புயலின் காரண மாகத் தரை தட்டிய கப்பல் அதன் சொந்தக்காரன் கடற் பயணத் திற்குப் பயன்படுத்திரா விட்டால் விபத்து ஏற்பட்டிராது என்பது உண்மை யாயினும், அதனல் ஏற்படும் இழப்பை தெய்வச் செய லாகவே கருத வேண்டும். மனிதனின் முன்னறியும் திறமையால் அது நிகழக் கூடும் என்று உய்த்துணர முடியாததே தெய்வச் செயல் எனலாம்.

9. தவிர்க்க முடியாத தவறு
(Inevitable Mistake)

தவிர்க்க முடியாத தவறு என்று கூறப்படும் இந்த எதிர்வாதம் தீங்கியலில் ஏற்கப்படுவதில்லை. மற்றவர்களது சொத்து, சுதந்திரம், புகழ், உடல் ஆகியவற்றில் உள்ள உரிமைகளில் ஒருவன் தக்க காரணமோ, நியாயமோ இல்லாமல் குறுக்கிடுவதைச் சட்டம் அனுமதிப்பதில்லை. அவ்வாறு செய்பவன் அதனால் விளையும் தீமைகளுக்குப் பொறுப்பேற்க வேண்டியிருக்கும். உண்மையில் எந்தக் காரணமும் இல்லாமல் மற்றவர்களது சொத்து, புகழ் மற்றும் வேறு உரிமைகளில் குறுக்கிடுபவன் தனது செயலுக்குத் தக்க காரணங்களும், நியாயமும் இருந்ததாக நேர்மையாகவும், நல்லெண்ணத்துடனும், நம்பியதாகவும், அந்த நம்பிக்கை தவருக அமைந்து விட்டது என்றும் கூறுவது எதிர்வாதமாக ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. இது குற்றவியல் சட்டத்தில் பொதுவான விதிவிலக்காக ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தாலும், தீங்கியலில் பொதுவாக அனுமதிக்கப்படுவதில்லை.

மற்றவர்களுக்குச் சொந்தமான நிலத்தை நம்முடையதென்று தவருக நினைத்து அதில் நுழைந்தால் அத்துமீறலாகவே கருதப்படும். எந்தக் குற்ற நோக்கமும் இல்லாமல், மற்றவரது பொருளை என்னுடையதென்று தவருக நம்பி நான் கையாண்டிருந்தால் அந்த பொருளுக்குரியவருக்கு அதனால் ஏற்படும் இழப்புக்கு நான் பொறுப்பாளியாவேன். 'அ' என்பரைக் கைது செய்வதற்குப் பதிலாக நான் தவறுதலாக 'ஆ' என்பவரைக் கைது செய்து விட்டால் நான் பொறுப்பேற்க வேண்டியிருக்கும்.

மற்றவருக்கு அவதூறு இழைக்க வேண்டுமென்ற கருத்தில்லாமல், ஒருவன் அவரது புகழுக்குக் கேடு விளைவித்திருந்தால் அவன் அவதூறு புரிந்ததாகவே கருதப்படுவான் (ஹல்டன் & கம்

பெனி v. ஜோன்ஸ்; நியூஸ்டேட் v. லண்டன் எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர் லிமிடெட்).

மாரிசன் v. ரிட்சீ & கம்பெனி (Morrison v. Ritchie & Co.) வழக்கில், செய்தித்தாள் உரிமையாளராகிய எதிர்வாதி தம் செய்தித் தாளில் வாதி இரட்டைக் குழந்தைகளைப் பெற்றார் என்ற செய்தியை வெளியிட்டிருந்தார். அச்செய்தி தவருனது. ஆனால் அது உண்மை என நம்பியே அவர் வெளியிட்டிருந்தார். ஆனால் உண்மையில் வாதிக்கு திருமணமே ஒரு மாதத்திற்கு முன்புதான் நடைபெற்றிருந்தது. இது எதிர்வாதிக்குத் தெரியாது. ஆயினும் எதிர்வாதி இதற்கு பொறுப்பாவார் என்றே தீர்ப்பளிக்கப்பட்டது.

கன்சாலிடேடட் கம்பெனி v. கர்டிஸ் (Consolidated Co. v. Curtis) வழக்கில் ஒரு ஏல விற்பனை செய்பவரை அவரது வாடிக்கையாளர் ஒரு பொருளை ஏலத்தில் விடும்படி கேட்டுக் கொண்டார். அந்தப் பொருள் வாடிக்கையாளருக்குச் சொந்தமானதென்று நேர்மையாக நம்பி, ஏல விற்பனை செய்பவர் அப்பொருளை ஏலத்தில் விற்றுக் கிடைத்த தொகையை வாடிக்கையாளருக்குத் தந்துவிட்டார். உண்மையில் அந்த பொருள் வேறு ஒருவருக்குச் சொந்தமானது. அப்பொருளின் உண்மையான சொந்தக்காரஏல விற்பனை செய்பவர் மேல் வழக்கிட்டார். ஏல விற்பனை செய்பவர் உண்மையில் நேர்மையாகவும், கவனத்தோடும் நடந்து கொண்டிருந்தாலும், தனது வாடிக்கையாளருக்கு அப்பொருளை விற்றுக் கிடைத்த தொகையை ஏற்கெனவே தந்துவிட்டிருந்தாலும், அதன் மதிப்பை உண்மையான சொந்தக்காரருக்குத் தர வேண்டும் என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

தவறுக்கு முழுப்பொறுப்பு உண்டு என்ற பொதுவான விதிக்கு சில விலக்குகள் ஏற்பட்டுள்ளன. இவ்விதிவிலக்குகள் இன்றேல் சட்டத்திற்கிசைந்த காரியங்களைச் செய்வதில் இடையூறு ஏற்படும். எனவே ஒரு நிரபராதியின்மேல் தவறுதலாகக் குற்ற வழக்கிட்டதாலேயே பொறுப்பு ஏற்படாது. இதற்குப் பொறுப்பு உண்டென்றால் அது குற்றவியல் சட்டம் நல்லமுறையில் நிறைவேற்றுவதைத் தடுத்துவிடும். தீங்கெண்ணத்துடனும், தக்க காரணம் இல்லாமலும் நடந்து கொண்டிருந்தால் ஒழியக் குற்றவழக்கிடுபவர் மேல் எந்தப் பொறுப்பும் ஏற்படாது. பணியாளின் தவறு ஒரு செயலை அவர்க்குரிய பணிக்குப் புறம்பானதாக்கி விடக்கூடும். எனவே அதற்கு அவரது பணித்தலைவருக்கு பகரப்பொறுப்பு ஏற்படாது. (போல்டன் v. L & S ரயில்வே கம்பெனி; போலண்ட் v. பார்). ஒருவன்மேல் ஏமாற்றுதலுக்காக வழக்கிடும்போது, தான் வெளியிட்ட தகவல் உண்மையென்று நேர்மையாக நம்பியதா

அவன் எதிர்வாதம் செய்யலாம். (டெர்ரி v. பீக்) கவனமின்மைக் காக வழக்கிடப்படும்போது, ஒரு மனிதன் தக்கமுறையில், அதாவது நியாயமாக நடந்து கொண்டிருந்தானு என்று அறிய வேண்டியிருக்கும். இதைத் தீர்மானிக்கும்போது அவன் ஒரு செயலைத் தவருக நம்பிச் செய்தானு என்பதையும் கருதவேண்டி யிருக்கும். பல தீங்குகளில் எதிர்வாதி புரிந்த செயலை நல்லறி வுள்ள மனிதன் ஒருவன் செய்திருப்பானு என்பதைப் பொறுத்தே பொறுப்பு ஏற்படும். சில சமயங்களில் ஒரு மனிதன் தவறு செய் திருந்தாலும் நியாயமாகவும், தகுந்த முறையிலும் நடந்துகொண் டிருக்கக் கூடும். எனவே இங்கு ஒருவன் புரிந்த தவறு கருதிப் பார்க்க வேண்டிய ஒன்றுக அமையும். ஒருவனை முறையின்றிச் சிறைப்படுத்திய எதிர்வாதி அத்தச் சூழ்நிலையில் அவனைச் சிறை படுத்தத் தனக்கு உரிமையிருந்ததாக நம்பியதாக எதிர்வாதம் செய்யலாம். சில சமயங்களில் எதிர்வாதியின் தவறை வாதியே தூண்டிவிட்டிருக்கலாம். எடுத்துக்காட்டாக குறும்பாக ஒருவன் தான் செய்யாத குற்றம் ஒன்றைச் செய்ததாக ஒரு காவலரிடம் கூறித் தன்னைக் கைது செய்யுமாறு தூண்டிவிட்டிருக்கலாம். அப் போது காவலர் தனது தவறை எதிர்வாதமாகக் கூறலாம்.

10. தற்காப்பு உரிமை (Private Defence)

தன்னுடைய உடலையையும், சொத்தையும் பாதுகாக்க ஒருவன் மற்றவரைத் தாக்கலாம். இத்தாக்குதல் முறையானதாக இருப்பின் சட்டம் அனுமதிக்கும். இவ்வாறு தன்னுடைய தற்காப்புக்காக எதிர்வாதி தாக்கியிருந்தால் அதன் விளைவாக வாதிக்கு அவன் ஏற்படுத்தும் காயத்திற்குப் பொறுப்பாளியாக மாட்டான். இதைப்போல, தன்னால் காப்பாற்றபட வேண்டிய தன் மனைவி, மக்கள் ஆகியவரைக் காப்பாற்றுவதற்காகவும் ஒருவன் இந்த உரிமையைப் பயன்படுத்தலாம். இதைப்போலவே பணியாள் தன் பணித்தலைவர் தாக்கப்பட்டால் அவருக்குத் துணை நிற்கலாம். இவ்வாறே பணியாள் தாக்கப்பட்டால் பணித்தலைவர் அவர்பொருட்டுத் தாக்குதல் நடத்தலாம். சட்டத்திற்கு ஒவ்வாத முறையில் யார் தாக்கப்பட்டாலும் அவர்களுக்குத் துணையாகச் சென்று தாக்குதல் புரியலாம் என்று கூறுவாறும் உளர். எனவே, சட்டம் அனுமதிக்கும் வகையில் தன்னுடைய உடல், பொருள் ஆகியவற்றையும், பிறரது உடல், பொருள் ஆகியவற்றையும் காக்கும் உரிமையையே தற்காப்பு உரிமை எனலாம். இவ்வுரிமையை நிலை நாட்டும் நோக்கத்துடன் செய்யப்படுகின்ற செயல்களைத் தீங்காகக் கருத முடியாது. சட்டத்திற்கு ஒவ்வாத முறையில் சட்டப்படி அமைந்த பிடியாணை இல்லாமல், தம்மைக் கைது செய்ய வருபவரை ஒருவர் அளவோடு தாக்கி, தாம் கைதாகாமல் தவிர்க்கலாம்; இதைச் சட்டம் அனுமதிக்கிறது.

தற்காப்புக்காகவே ஒருவன் தாக்குதல் நடத்தலாம். ஒருவனுடைய உடலுக்கோ அல்லது பொருளுக்கோ உடனடியானதொரு ஆபத்து உண்மையில் ஏற்பட்டிருக்க வேண்டும். அப்போதுதான் அவன் தாக்குதலைக் கையாள முடியும். ஒருவன் நாளை என்னைத் தாக்கக் கூடும் என்று கருதி இன்று அவனை நான் தாக்குதல் முறையான செயலன்று. இதைப்போலவே எதிராளியின் தாக்குதல்

நின்றுபோன பின்னர் அவனைப் பழி வாங்கும் கருத்தோடு நான் அவனைத் தாக்கினால் அதைத் தற்காப்பு என்று சொல்ல முடியாது. எனவே, எதிர்வாதி தனது தற்காப்புக்காகத் தாக்குதல் நடத்திய போது இருந்த சூழ்நிலையை ஆய்ந்து பார்க்கும்போது அவன் தாக்குதல் நடத்தியது முறையானதாகத் தோன்ற வேண்டும், தவிர அவன் மேற்கொண்ட தாக்குதலும் அளவுக்கு மீறியதாகவோ, அல்லது பொருத்தமற்றதாகவோ அமையக் கூடாது. எடுத்துக்காட்டாக, காக்ராஃப்ட் v. ஸ்மித் (Cockroft v Smith) வழக்கில் நீதிமன்றத்தில் நிகழ்ந்த கைகலப்பில் தம்முடைய விரலை வழக்கறிஞர் ஒருவர் கடித்துத் துண்டாக்கி விட்டதாக நீதிமன்றத்தில் பணிபுரியும் எழுத்தர் ஒருவர் வழக்கிட்டார். முதலில் வாதியே எதிர்வாதியின் கண்களை நோக்கிக் கைவிரல்களை நீட்டியதாகக் கூறிய எதிர் வாதத்தை நீதிமன்றம் ஏற்கவில்லை. லேன் v ஹாலோவே (Lane v. Holloway) வழக்கில் '1966 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 21-ம் தேதி டார்செஸ்டரில் அமைதி குலைந்தது.' இதற்கு காரணம் என்னவென்றால் வாதியும் எதிர்வாதியும் ஆண்டை வீட்டுக் காரர்கள். எதிர்வாதி நடத்தி வந்த உணவு விடுதியின் பின்புறம் வாதி குடியிருந்தார். இரவு 11-மணிக்கு மதுக்கடையிலிருந்து திரும்பி வந்த வாதி தன் வீட்டின் வாசலில் நண்பர் ஒருவருடன் பேசிக் கொண்டிருந்தார். இதைப் பார்த்த எதிர்வாதியின் மனைவி அவர்களை பாழாய்ப்போனவர்கள் என்று ஏசினாள். இதற்குச் சரியான பதில் தர விரும்பிய வாதி அவளைப் பார்த்து "சீ! குரங்கு முஞ்சி வேசி வாயை மூடு" என்று சொல்ல, அப்போது படுக்கையில் இருந்தவாறு காபி அருந்திக் கொண்டிருந்த எதிர்வாதி குதித்தெழுந்து "என் மனைவியிடம் என்ன சொன்னாய்" என்று கூச்சலிட்டார். இதற்குப் பதிலாக வாதி "உனக்கு சரியான பாடம் புகட்டுகிறேன்" என்ற முறையில் சண்டையிட சவால் விட்டார். ஆடை எதுவும் மாற்றாமல் அப்படியே எழுந்து, எதிர்வாதி தான் வாதியை அடிக்கப் போகிறார் என்று வாதி எண்ணும்படியாக அவர் அருகில் நெருங்கினார். உடனே எதிர்வாதியின் தோள் பட்டையில் வாதி குத்தினார். உடனே வாதியின் கண்ணில் எதிர் வாதி கடுமையாகத் தாக்கினார். கண்ணில் 19 தையல் போடவும், மருத்துவமனையில் ஒரு மாதம் வாதி இருக்கவும் நேர்ந்தது. எதிர் வாதி தமது சினத்தை அளவுக்கு மீறிக் காட்டிவிட்டதாக நீதி மன்றம் கருதியது. அந்தச் சமயத்தில் அவர் கொடுத்த அடி அளவுக்கு மீறியதாக இருந்தது. எனவே, அவர் பொறுப்பாளி யானார். ஒருவன் தன் மீது சிறு தாக்குதல் நடத்தி முனைந்ததற்காக அவனைக் கடுமையாக முறைபின்றித் தாக்குவதை ஏற்க முடியாது என்று நீதிமன்றம் கூறியது. எனவே, தற்காப்புக்காகக் கையாளும் தாக்குதல் நியாயமானதாக அமைந்திருக்க வேண்டும்.

எதிராளியின் முதலடி நம்மேல் விழும்வரை பொறுத்திருந்து, பின்னர்தான் பதிலடி கொடுக்க வேண்டும் என்பது சட்டமல்ல. ஏன் எனில் நம் மேல் விழும் அடி பலமானதாக அமைந்து, நாம் பதிலடி கொடுப்பதற்கே நமக்கு வாய்ப்பின்றிப் போய்விடலாம். என்னை அடிப்பதற்காக தடியினை ஓங்கிக் கொண்டு, என்னை ஏசிய வாறு என் முன் எதிராளி நின்றால் நான் அவனை முதலில் தாக்க லாம்; இது முறையான செயலாகும். ஆனால் ஒருவன் என்னை தன் கையினால் அறைந்ததற்காக நான் கத்தி, மண்வெட்டி, ஈட்டி போன்ற கொலை ஆயுதங்களைக் கொண்டு அவன் கைகளை வெட்டிச் சாய்ப்பது அடாத செயலாகும். அத்துடன் தற்காப்புக்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் எதிராளியின் தாக்குதலை விலக்கும் முறையில் அமைந்திருக்க வேண்டும். இது தாக்குதல் நடந்த சூழ்நிலையைக் கொண்டு முடிவு செய்ய வேண்டும். என்னைப் பயங்கரமான கொலை ஆயுதம் கொண்டு ஒருவன் தாக்கி னால், எனது தற்காப்புக்காக நானும் ஒரு பயங்கரமான கொலை ஆயுதத்தைக் கையில் எடுத்துக் கொள்ளலாம். இதில் சட்டம் ஆயுதங்களின் கூர்மை, நன்மையைப் பற்றிய நுட்பமான ஆராய்ச் சியில் ஈடுபடாது; தற்காப்புக்காக தாக்குபவருக்கு ஓரளவு சுதந் திரத்தைத் தருகிறது. என்னையொரு மற்போர்வீரர் தாக்கினால் என்னை நான் காப்பாற்றிக் கொள்ள மற்போர் விளையாட்டு விதிமுறை களைப் பின்பற்றிப் பதிலடி கொடுக்கத் தேவையில்லை. தவிர என்னை ஒருவன் தாக்க வரும்போது அவனை நான் தாக்குமுன்பாக முன்னெச்சரிக்கை தரவோ, அல்லது வேண்டுகோள் விடவோ தேவையில்லை. அவனுடைய தாக்குக்குத் தாக்குதல் மூலம் நான் பதில் சொல்லலாம். எனவே, தற்காப்புச் செயல் நியாயமானதா என்றறிய வாதிக்கு ஏற்பட்ட ஆபத்தின் தன்மை அவன் கையாண்ட தற்காப்பு முறைகள் ஆகியவற்றைப் பார்க்கவேண்டும். எடுத்துக்காட்டாக, 'அ' என்பவன் 'ஆ' என்னும் பருவப் பெண்ணைச் சுவரோடு அழுத்தி, அவள் விருப்பத்திற் கெதிராக, பலமுறை முத்தமிடுகிறான். அவன் அவ்வாறு செய்யாமல் தடுக்க அவள் கத்தரிக்கோலால் அவன் மணிக்கட்டில் கீறிக் காயம் ஏற்படுத்துகிறாள். இதைத் தவிர அவளுக்கு வேறு தற்காப்பு வழி இல்லாமல் இருக்கலாம். அவள் இந்த சூழ்நிலையில் இச் செயல் முறையான தற்காப்புச் செயல் என்றே நீதிமன்றம் கருதும்.

ஒருவன் நமது சொத்தில் அத்துமீறி நுழையாமல் தடுக்கவோ அல்லது அங்கிருந்து அவனை வெளியேற்றவோ வேண்டுமானால் நமக்கு அச் சொத்தில் உடைமையோ, அல்லது உடைமையைப் பெறும் உரிமையோ இருக்க வேண்டும். ஹோம்ஸ் v. பேக் (Holmes

v. Bagge) வழக்கில், வாதியும் எதிர்வாதியும் ஒரு கிரிக்கட் விளையாட்டு மன்றத்தில் உறுப்புனர்கள் ஆவர். ஒரு விளையாட்டுப் போட்டியின்போது எதிர்வாதி விளையாடும் குழுவிற்குத் தலைவராக இருந்தார். அந்த விளையாட்டைக் கண்டு களிக்க வாதி வந்திருந்தார். அப்போது எதிர்வாதி விளையாடுபவர்களில் ஒருவருக்கு மாற்றுளாக இருக்குமாறு வாதியைக் கேட்டுக் கொண்டார். வாதியும் அதற்கு இசைந்தார், வாதியின் மேல் அங்கியை அகற்றுமாறு அதிகாரம் செய்யும் தோரணையில் எதிர்வாதி கட்டளை இடவே வாதி மனம் நொந்து அவ்வாறு செய்ய மறுத்ததோடல்லாமல் விளையாடுமிடத்தை விட்டு வெளியேறவும் மறுத்து விட்டார். எனவே எதிர்வாதியின் உத்தரவின்படி அவர் பலவந்தமாக அங்கிருந்து, வெளியேற்றப்பட்டார். அவர் எதிர்வாதி தன்னைத் தாக்க முனைந்ததாக வழக்கிட்டார். இவ் வழக்கில் எதிர்வாதி விளையாடுமிடம் தனது உடைமையில் இருந்ததென வாதிட்டார். இதை நீதிமன்றம் ஏற்காமல், விளையாடுமிடத்தின் உடைமை மன்றத்தின் குழுவிடமே யிருந்தது என்று கூறியது. வாதி சட்டத்துக்கு இசைந்த விளையாட்டு ஒன்றைச் சட்டத்திற்கிசைந்த முறையில் விளையாடிக் கொண்டிருந்தவர்களுக்கு இடையூறு செய்தார் என்று எதிர்வாதி கூறியிருந்தால் அதை நீதிமன்றம் ஏற்றுக்கொண்டிருக்கக் கூடும்.

சொத்தில் அத்துமீறி நுழைபவரைத் தடுப்பதற்காக அவருடைய உயிருக்கோ, உடலுறுப்புகளுக்கோ பேராபத்தை ஏற்படுத்தும் முறையில் வன்முறையில் தாக்குதல் செய்திருந்தால், அது தேவையாயிருந்தால்கூட சட்டம் அனுமதிக்காது. காலின்ஸ் v. ரெனிசன் (Collins v Renison) வழக்கில், எதிர்வாதி தன்னைத் தாக்க முனைந்ததாகவும், தாக்கியதாகவும் வாதி வழக்கிட்டார். எதிர்வாதியின் தோட்டத்திற்கு வாதி சென்று அங்கு சுவரில் ஏணியைச் சாய்த்து ஒரு பலகையை ஆணி கொண்டு சுவரில் அடித்துக் கொண்டிருந்தார். அவரை ஏணியில் இருந்து கீழே இறங்கி வருமாறு வாதி கேட்டார். எதிர்வாதி கீழே இறங்க மறுத்ததால், வாதி அச்சிறிய ஏணியை 'மெல்ல அசைத்து' மெல்லப் புரட்டி வாதியை மெதுவாக தரையில் விழுமாறு செய்ததாகக் கூறினார். அதாவது அவர் வாதி அத்துமீறி நுழைந்ததாக வாதிட்டார். எதிர்வாதி தன் நிலத்தில் கொண்டுள்ள உடைமையைக் காத்துக் கொள்ள நடத்திய தாக்குதல் முறையற்றதென நீதிமன்றம் கூறியது. வாதி அத்துமீறிக் கொண்டிருந்ததாகவும், பலமுறை எச்சரித்தும் தொடர்ந்து அத்துமீறல் செயலைச் செய்து வந்ததாகவும், எனவேதான் அவர் சிறிய ஏணியை மெல்ல அசைத்து, அதை மெல்ல புரட்டி தரையில் மெல்லத் தள்ளி

அவருக்கு மிகக் குறைந்த காயமே விளைவித்ததாக எதிர்வாதி கூறினர். அவர் செயல் வன்முறையானது என்று நீதிமன்றம் கருதி அத்து மீறலைத் தடுக்க அவர் செய்த செயல் முறையற்ற தென்று தீர்ப்பளித்தது.

ஒருவர் தமது சொத்தை அழித்து நாசம் செய்யும் விலங்கு களுக்கு எதிராக நியாயமான பாதுகாப்பு நடவடிக்கையை எடுக்க லாம். கிரெஸ்வெல் v. சிர்ல் (Cresswell v. Sirl) வழக்கில், எதிர் வாதியின் உத்திரவுப்படி அவரது மகள் வாதியின் நாயைச் சுட்டுக் கொன்றாள். எதிர்வாதியின் பண்ணையில் இரவில் இது நடந்தது. அப்போதுதான் வாதியின் நாய் எதிர்வாதியின் ஆடு களை விரட்டி ஓய்ந்திருந்தது. (பின்னர் சில ஆடுகள் உரிய காலத் திற்கு முன்பே இறந்த குட்டிகளை ஈன்றன.) அந்நாய் காட்டுத் தனமாக, பயங்கரமாக முறைத்தவாறு வாதியின் மகளை நோக்கி ஓடிவரும் நிலையில் இருந்தது. வாதி தமது அசையியல் சொத் துக்கு அத்துமீறல் செய்ததாக எதிர்வாதியின் மேல் வழக்கிட்டார். இவ்வழக்கில் பின்வருவனவற்றை எதிர்வாதி நிரூபித்து தன் செயல் நியாயமென்று காட்டாவிட்டால் வாதிக்கு தீங்கீடு தர வேண்டும் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது. நீதிமன்றம் உரு வாக்கிய அந்த விதிகள் வருமாறு: (1) தான் சுட்டது நியாயமான செயலே என்று எதிர்வாதியே நிரூபிக்க வேண்டும். (2) எதிர்வாதி முதற்கண் அந்த நாய் தனது கால்நடைகளை உண்மையில் தாக்கிக் கொண்டிருந்ததாகவோ, அல்லது அதை ஒன்றும் செய்யாது விட்டி ருந்தால் அது மீண்டும் வந்து தாக்கக் கூடும் என்றோ நிரூபிக்க வேண்டும். (3) அந்த நாய் அப்போது தாக்குவதைத் தடுக்க, அதைச் சுடுவதைத் தவிர நடைமுறையில் இயலக்கூடிய வேறு வழி இல்லையென்றோ, அல்லது தாம் சுட்டது அந்த சூழ்நிலையில் முறையானதென்றோ அவர் நிரூபிக்க வேண்டும்.

மாரிஸ் v. நூஜண்ட் (Morris v. Nugent) வழக்கில் வாதியின் வீட்டருகே எதிர்வாதி சென்று கொண்டிருந்தபோது வாதியின் நாய் வெளியே ஓடிவந்து எதிர்வாதியின் காலுறையைக் கடித்தது. எதிர்வாதி திரும்பிப் பார்த்து, தனது துப்பாக்கியைத் தூக்கவே நாய் ஓடிவிட்டது. ஆயினும் எதிர்வாதி ஓடுகின்ற நாயைச் சுட்டார். எதிர்வாதி நாயைச் சுட்ட செயல் முறையானதல்ல வென்று நீதி மன்றம் தீர்ப்பளித்தது. உண்மையில் அவரை நாய் கடிக்கும்போது சுட்டிருந்தால்தான் அது நியாயமானதாகக் கருதப்படும். ஒரு நாய் வேறு ஒரு நாயுடன் விளையாடிக் கொண்டி ருந்தது என்ற ஒரே காரணத்திற்காக அதைச் சுட்டுக் கொல்வது சட்டத்திற்கு முரணான செயலாகும். நம்முடைய வீட்டுக்கு எந்த

ஊறும் விளைவிக்காமல் அவ்வப்போது வந்து போகும் நாய், பூனை ஆகிய விலங்குகளை அத்துமீறி நுழைபவையாகக் கருதி, அவற்றின் உரிமையாளரிடமிருந்து தீங்கீடு பெற முடியாது. ஆயினும், தக்க முறைகளைக் கையாண்டு அவற்றைத் துரத்தலாம்.

சொத்திற்குச் சேதம் அல்லது ஊறு விளைவிக்கும் மனிதர்களுக்கெதிராகவும் ஒருவர் உரிய தற்காப்பு நடவடிக்கைகளை எடுக்கலாம். ஒரு வீட்டுக்குள் நுழையும் கள்ளனைக் கண்டதும் சுட்டுக் கொல்லலாம் என்றும், அத்துமீறி ஒரு கட்டிடத்தில் நுழைபவர் அதில் என்ன ஆபத்திருந்தாலும் அதை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும் பொதுவாக மக்கள் எண்ணுகின்றனர். ஆனால், இது தவறான கருத்தாகும்; சட்டமும் அவ்வாறு சொல்லவில்லை. என் வீட்டில் அத்துமீறி நுழைபவன் பத்திரமாக இருக்க நான் எந்த வசதியும் செய்து தர வேண்டியதில்லை. எடுத்துக் காட்டாக, இரவில் என் வீட்டில் நுழையும் கள்ளன், வீட்டிலுள்ள மாடிப்படிக்கட்டில் ஆணி சரியாகப் பொருத்தப் படாததால் சறுக்கி விழுந்து காயம் அடையக் கூடும். படிக்கட்டு சரியாகப் பொருத்தப் படவில்லை யென்றோ, அல்லது அங்கு போதிய விளக்கொளி இல்லையென்றோ கள்ளன் குறை சொல்ல முடியாது. இதைப் போலவே நிரபராதியான வழிப்போக்கன் ஒருவன் என் வீட்டில் அத்துமீறி நுழைந்து குழாயில் நீர் அருந்தும்போது நான் வளர்த்து வரும் நாய் அவனைக் கடித்து விடலாம்; அல்லது என் கட்டிடத்தில் உள்ள குழி ஒன்றில் விழுந்து அவன் கால்கள் முறியலாம்; அல்லது எனது மாடு அவனை முட்டித் தள்ளலாம். இதற்கு நான் பொறுப்பாளியாக மாட்டேன். என் வீட்டைப் பாதுகாக்க நான் நியாயமான எந்த நடவடிக்கையையும் எடுக்கலாம். எடுத்துக்காட்டாக என் வீட்டுச் சுவர்களில் கண்ணாடித் துண்டுகளைப் பதிக்கலாம்; மூர்க்கத்தனமான நாயினைக் காவலுக்கு வைத்திருக்கலாம். இவற்றின் காரணமாக அத்துமீறி நுழைபவருக்குக் காயம் ஏற்பட்டால் நான் பொறுப்பாளியாக மாட்டேன். ஆனால், அவருக்குக் கடுமையான காயம் ஏற்படுத்த வேண்டும் என்ற கருத்தோடு விசைத் துப்பாக்கி போன்ற கொல்லும் கருவிகளை மறைத்து வைத்தலைச் சட்டம் ஏற்காது. சொத்துரிமையைப் பேண உயிரை விலையாகத் தர முடியாது. உயிரை விட சொத்து முக்கியமானதல்ல. எனவே, ஒருவர் தமது சொத்தைப் பாதுகாக்க மற்றவர் உயிரைப் பறிக்க வேண்டுமென்றே செய்யும் செயலை சட்டம் அனுமதிக்காது.

பேர்ட் *v.* ஹால்புரூக் (Bird *v.* Halbrook) வழக்கில் எதிர் வாதி தனது தோட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட விலையுயர்ந்த மணி வடிவப் பூக்கள் (tulibs) களவு போய்க் கொண்டிருந்ததால்

அவற்றைக் காப்பதற்காக ஒரு விசைத் துப்பாக்கியை அங்கு மறைத்து வைத்தார். வாதி சிறுவன் அந்த தோட்டத்தில் நுழைந்த தன்னுடைய கோழியைத் தேடிக் கொண்டு வந்து அதைப் பிடிப்ப தற்காக சுவர் ஏறிக் குதித்து, விசைத் துப்பாக்கியை மிதிக்கவே அது வெடித்து காயமுற்றான். எதிர்வாதி அதற்குப் பொறுப்பாளி யாவார் என்று தீர்ப்பளிக்கப் பட்டது. இங்கு அவன் அத்துமீறி நுழைந்திருந்தாலும், எதிர்வாதி அங்கு துப்பாக்கிகள் இருப்பதை எச்சரித்து அறிவிப்பு வைக்காததால் எதிர்வாதி தீங்கீடு தர வேண்டியதாயிற்று. இதற்குமுன் முடிவு செய்யப்பட்ட இலாட் v. வில்க்ஸ் (Ilott v. Wilkes) வழக்கில், வனத்தில் உள்ள விலங்குகளைக் காப்பதற்காக வைக்கப்பட்டிருந்த விசைத் துப்பாக்கி யால் அங்கு அத்துமீறி நுழைந்த வாதி காயமுற்றான். அவன் அங்கு விசைத் துப்பாக்கி இருப்பதை அறிவான். எனவே அவனுக்கு எதிராக வழக்கில் தீர்ப்பு அளிக்கப் பட்டது. அங்கு துப்பாக்கி இருப்பதை அறிந்தும் அவன் வேண்டும் என்றே ஆபத்தை நாடிச் சென்றதால் அவன் இசைந்து ஏற்றுக் கொண்ட தாகக் கருதப்பட்டு அவனுக்கு எதிராகத் தீர்ப்பு அளிக்கப்பட்டது.

இங்கிலாந்தில் சட்டப்படி இவ்வாறு விசைத் துப்பாக்கி, கண்ணி அல்லது இதைப்போன்ற கொல்லக் கூடியதும், பெரிய காயம் ஏற்படுத்தக் கூடியதுமாகிய பொறிகள் வைப்பது குற்ற மாகும். ஆனால் இவற்றை ஒருவர் தாம் குடியிருக்கும் வீட்டில் மாலை நேரமுதல் விடியற்காலை வரை தற்காப்புக்காக வைத்துக் கொள்ளலாம். எனவே, பகற்பொழுதை விட இரவு நேரத்தில் வீட்டைப் பாதுகாப்பதற்கு ஒருவர் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு அதிகப் பரிவு காட்டப்படும். இதைப் போலவே, அத்துமீறி ஒருவர் நுழையும் போது சொத்திற்குரியவர் அங்கிருந்தால் எடுக்கக் கூடிய பாதுகாப்பு நடவடிக்கையைவிட அவர் இல்லாத போது எடுக்கும் நடவடிக்கைக்கு அதிகப் பரிவு காட்டப்படும். ஒருவன் தன்னுடைய நிலத்தில் வெள்ளம் புகாமல் தடுப்பதற்காக தடுப்புச் சுவர் எழுப்பலாம். இதன் விளைவாக வெள்ளநீர் அடுத் துள்ளவர் நிலத்தில் வடிந்து சென்றால் அதற்கு அவர் பொறுப் பாளியாக மாட்டார். ஆனால், தேங்கியுள்ள நீரைச் செயற்கை முறையில் அடுத்தவர் நிலத்தில் செல்லுமாறு வடித்துவிடுதலைச் சட்டம் அனுமதிக்காது. வேல்லி v. லங்காஷயர் மற்றும் யார்க் ஷயர் ரெயில்வே கம்பெனி (Whalley v. Lancashire & Yarkshire) Railway Co.) வழக்கில், பெருமழை காரணமாக வெள்ளம் எதிர்வாதியின் இருப்புப் பாதையின் தடுப்புச் சுவரை அடுத் திருந்த வடிகாலில் நுழைந்தது. இதன் மட்டம் உயர்ந்து தடுப்புச் சுவருக்கே ஆபத்தேற்படுத்தியது. எனவே, எதிர்வாதி அதை

வெட்டி விட்டு நீர் வாதியின் நிலத்திற்கு வடிந்து செல்லுமாறு செய்தார். இதற்கு எதிர்வாதிகள் பொறுப்பாளியாவார் எனத் தீர்ப்பு அளிக்கப்பட்டது. வெள்ளம் வருமுன்னர் அதை அவர்கள் தடுத்திருக்கலாம். ஆனால், ஊறு ஏற்பட்டபின் அதன் விளைவு களை மற்றவர்கள் மேல் வேண்டுமென்றே சுமத்த முடியாது.

கிரே வென்ஸ்டைன் v. ஹேட்டிங் (Greyvenstein v. Hatting) வழக்கில் வெட்டுக்கிளிகள் வாதியின் நிலத்தில் படையெடுத்தன. எதிர்வாதிகள் தங்கள் நிலத்தில் அவை நுழைந்து பயிர்களை நாசம் செய்வதைத் தடுக்கும் நோக்கத்தோடு அடுத்திருந்த வேறு ஒருவருடைய நிலத்திற்குச் சென்று அங்கிருந்து வெட்டுக் கிளி களைத் துரத்தியதால் அவை மீண்டும் வாதியின் நிலத்திற்குள் நுழைந்து பயிர்களை நாசம் செய்தன. எதிர்வாதிகள் அசாதரண மான ஒரு கேட்டைத் தவிர்த்து தங்கள் பயிரைக் காப்பதற்காக தற்காப்புரிமையைப் பயன்படுத்தியதால் அவர்கள் பொறுப்பாளிகள் அல்லர் என்று தீர்ப்பளிக்கப்பட்டது. தற்காப்பு உரிமையை ஒருவன் பயன் படுத்தும்போது அதனால் குற்றமற்ற மூன்றுவது நபர் ஒருவருக்குக் காயம் ஏற்படக் கூடும். இந்தச் சூழ்நிலையில் வேறு வழியில்லாமல் கட்டாயத்தினால் ஊறு விளைவிக்கும் செயலை இடையில் யார் புரிந்தாலும் அவர்கள் தற்காப்புக்காகச் செயல் பட்டதாகக் கருதப்படுவர்.

ஸ்காட் v. ஷெப்பர்ட் (Scott v. Shepherd) வழக்கில் 'அ' என்பவர் மக்கள் கூட்டமாக நின்று கொண்டிருந்த ஒரு சந்தை யில் ஒரு சிறிய வெடியைத் தீப்பற்ற வைத்து எறிந்தார். அது யேட்ஸ் என்பவரின் ரொட்டிக் கடையில் வந்து விழுந்தது. அங்கு நின்று கொண்டிருந்த வில்லிஸ் என்பவர் தமக்குக் காயமும் யேட்ஸ் கடையில் உள்ள பொருட்களுக்குச் சேதமும் ஏற்படாமல் தடுக்க அதைப் பொறுக்கி எடுத்து எறிய ரையால் என்பவர் கடை யில் வந்து விழுந்தது. ரையால் தமது பொருட்களுக்குச் சேதம் ஏற் படாமல் தடுக்க அதை எடுத்து எறிந்தார். அது 'ஆ' என்பவர் முகத்தில் விழுந்து, வெடித்து அவரது கண்ணில் பட்டு அவருக்கு கண்பார்வை போய் விட்டது. 'அ' அத்துமீறல், தாக்கமுனைதல், ஆகிய தீங்குகள் புரிந்ததாகக் கருதப்பட்டு 'ஆ' வுக்கு பொறுப் பாளியாவான் என்று தீர்ப்பளிக்கப்பட்டது. வில்லிஸ், ரையால் ஆகியோர் மீது வழக்கிடப்படவில்லை. அப்படி வழக்கிடப்பட்டி ருந்தால் அவர்கள் பொறுப்பாளியாக மாட்டார் என்று இரு நீதிபதி கள் கருதினர். ஏனெனில் அவர்கள் தங்கள் பாதுகாப்புக்காகவும் தங்கள் உயிரைப் பாதுகாக்கவும் அவ்வாறு நடந்து கொண்டனர் என்று கூறினர். வில்லிஸ் தனக்குக் காயம் ஏற்படாமல் இருக்கவும்,

யேட்ஸின் பொருட்களுக்கு சேதம் ஏற்படாமல் இருக்கவும் அவ்வாறு நடந்து கொண்டான் என்று சொல்லலாம். ஆனால், ரையாலோ தனது பொருளைக் காப்பதற்காக மட்டுமே அவ்வாறு நடந்து கொண்டான். தனது பொருளைக் காப்பதற்காக வெடியைக் கூட்டத்தில் எறிவது போன்ற செயலை புரியும் எண்ணம் நல்லறிவுள்ள மனிதன் உள்ளத்தில் தோன்றுது எனலாம். எனவே, ரையாவின் செயலுக்கு எந்த நியாயமான காரணமும் இல்லை யென்றே கூறலாம்.

11. கட்டாய நிலை (Necessity)

சில சமயங்களில் எதிர்வாதி ஒரு பெரிய தீமையொன்று ஏற்படாமல் தடுக்க வேண்டிய தேவை அல்லது கட்டாயநிலை ஏற்பட்டதால் வாதிக்கு கருதியே ஊறு விளைவித்திருக்கலாம். அதற்கு அவர் பொறுப்பாளியாக மாட்டார். நாட்டுக்கோ, தமக்கோ அல்லது பிறருக்கோ, அல்லது தம்முடைய சொத்துக்கோ, அல்லது பிறருடைய சொத்துக்கோ, பெரிய சேதம் அல்லது கேடு ஏற்படுவதைத் தடுக்கும் நோக்கம் எதிர்வாதிக்கு இருக்க வேண்டும். அப்போதுதான் இந்த எதிர்வாதத்தை அவர் பயன்படுத்திக் கொள்ளமுடியும்.

கட்டாய நிலை அல்லது தேவை எனப்படும் இந்த எதிர்வாதத்திற்கும், தற்காப்பு என்னும் எதிர்வாதத்திற்கும் உள்ள வேறுபாடு என்னவென்றால், தேவையில், நிரபராதியான ஒருவனுக்கு ஊறு விளைவிக்கப்படுகிறது ; தற்காப்பில், தீமை செய்யும் வாதிக்கு ஊறு விளைவிக்கப்படுகிறது. தேவைக்கும், தவிர்க்க முடியாத விபத்திற்கும் உள்ள வேறுபாடு என்ன என்றால், தேவையில், ஊறு எதிர்வாதியால் கருதியே இழைக்கப்படுவது. தவிர்க்கமுடியாத விபத்திலோ, ஊறைத் தடுக்க தன்னால் இயன்றதனைத்தும் செய்தும் அவனால் அது ஏற்படுவதைத் தவிர்க்கமுடியாமல் போய்விடுகிறது என்பதாகும். கட்டாய நிலை என்று சொல்லப்படும் இந்த எதிர்வாதத்திற்குப் பல எடுத்துக்காட்டுகளைக் கூறலாம். தீப்பற்றி எரிகின்ற ஒரு வீட்டின்மேல் நீரைக் கொட்டவேண்டிய கட்டாயநிலை ஏற்படலாம் ; மற்ற வீடுகளுக்குத் தீ பரவாமல் தடுக்க ஒரு வீட்டையே இடித்துத்தள்ள வேண்டிய தேவை ஏற்படலாம். தீயினால் மிகவும் சேதம் உற்று இடிந்து விழக்கூடிய நிலையில் உள்ள வீட்டின் பகுதிகள் அடுத்துள்ள சாலையில் சாய்ந்து விழுந்து, சாலையில் செல்பவருக்குக் காயமோ, அடுத்தவர் சொத்துக்கு சேதமோ விளைவிக்காமல் தடுப்பதற்காக அவற்றை அழிக்கும்

போது, அவை பக்கத்தில் உள்ள வாதியின் வீட்டுக்குச் சேதம் ஏற்படுத்தலாம். மற்றும் பெரும் புயலில் சிக்குண்ட கப்பல் கடலில் மூழ்கும் அபாயம் ஏற்படும்போது, கப்பல் தலைவன் அதை மீண்டும் நீரில் மிதக்கச் செய்வதற்காக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டி கப்பலின் சுமையை குறைக்கலாம். அவர் இதற்காக கப்பலில் உள்ள பொருட்களைக் கடலில் வீசி எறியலாம். இச்செயல் கப்பலையும் அதில் உள்ளவர்களையும் காப்பாற்றத் தேவையான செயலாக அமையக்கூடும்; ஆனால் இச்செயல் முறையானதாக இருக்கவேண்டும். கிரெக்சன் *v.* கில்பெர்ட் (Gregson *v.* Gilbert) வழக்கில், ஒரு கப்பல் தலைவன் கப்பலில் உள்ள குடிநீர் அதிலுள்ளவர்களுக்குப் போதுமானதாக இல்லாத காரணத்தால், 50 நீக்ரோ அடிமைகளைக் கடலில் தூக்கியெறிந்து குடிநீர்ப் பிரச்னையைத் தீர்த்து வைத்தார். இச்செயல் இன்று சட்டத்திற்கிசைந்த செயல் ஆகாது. நீரில் மூழ்கிக்கொண்டிருக்கும் ஒருவனைக் காப்பாற்றும் செயலும், விபத்தில் படுகாயமுற்று உணர்வற்ற நிலையில் மயங்கிக் கிடக்கும் ஒருவனுக்கு முதலுதவி செய்தலும், அவனுடைய உயிரைக் காப்பாற்ற வேண்டி அவசர நிலையில் அவனுடைய இசைவு இன்றியே, அவன் அறியாமலே அறுவை சிகிச்சைசெய்யும் மருத்துவர் செயலும் தேவையான வையே. இவற்றிற்கு எதிராக வழக்கிடமுடியாது. லீ *v.* கிலாட்ஸ்டன் (Leigh *v.* Gladstone) வழக்கில் உண்ணாவிரதமிருந்த கைதியின் உயிரைக் காக்க கட்டாயமாக சிறையதிகாரிகள் உணவைப் புகட்டினர். தன் உடலைத் தாக்கியதாக அவள் தொடர்ந்த வழக்கில் அவள் உயிரைக் காக்க கட்டாயமாக உணவைப் புகட்ட வேண்டிய நிலை ஏற்பட்டதென்று சொல்லப்பட்ட எதிவாதம் ஏற்றுக் கொள்ளபட்டது. ஆனால் இவ்வாறு ஏற்பட்டுள்ள அபாயத்தையும், அவச நிலையையும் கருதிப் பார்க்கும்போது எதிர்வாதியின் செயல் தகுந்ததாயும் நியாயமானதாகவும் அமைந்திருக்க வேண்டும்.

பெருந்தீமை விளையாமல் தடுக்கச் சிறிய தீமையைச் செய்ய வேண்டிய தேவை அல்லது கட்டாயம் எதிர்வாதிக்கு ஏற்படும் போது, இரண்டையும் சீர்தூக்கிப் பார்த்து ஏதாவது ஒரு தீமையை தேர்ந்துதெடுத்துக் கொள்ளும் வாய்ப்பு அவனுக்கு ஏற்படுகிறது. ஆயினும் தீ தன்னுடைய வீட்டுக்குப் பரவாமல் தடுக்க அடுத்தவர் வீட்டை இடித்துத் தள்ளுபவன் தன்மேல் நீதி மன்றத்தில் வழக்கிடப்படும் என்பதை எதிர்பார்க்கவேண்டும். அவன் தீயணைக்கும் படையின் உதவியை, தொலைபேசியின் மூலம் நாடி இருக்க வேண்டும் என்று நீதிமன்றம் கூறக்கூடும். அடுத்தவர் நலன்களில் கவனமின்றிக் குறுக்கிடுவதைச் சட்டம் எளிதில் அனுமதிப்ப

தில்லை. தீயணைக்கும் உந்திணை ஓட்டிச் செல்பவர் சாலைவிதி களையும், சைகைகளையும் மதிக்காமல் செல்ல அனுமதிக்கப் பட மாட்டார். தேவை எனப்படும் இந்த எதிர்வாதத்தை நீதிமன்றங் கள் எளிதில் ஏற்பதில்லை. யாரும் உதவியை நாடாமல் இருக்கும் போது வலியச் சென்று உதவிசெய்யும் அருளாளரை ஆங்கிலச் சட்டம் வரவேற்பதில்லை.

உயிரைப் பாதுகாக்கப் புரியும் செயல், சொத்தை பாதுகாக்கப் புரியும் செயலைவிட உயர்ந்ததாக மதிக்கப்படுகிறது. இவ்விரண்டை யும் ஒன்றுகக் கருத முடியாது. எனவே, ஒரு உயிரைப் காப்பாற்ற வேண்டி அடுத்தவர் சொத்திற்குச் சேதம் விளைவித்தால் அது தீங் காகாது. எதிர்வாதி தேவையெனக் கருதி எடுக்கும் நடவடிக்கை கள் நியாயமானதாக இருக்கவேண்டும். இது ஏற்பட்டுள்ள ஆபத்து, உயிருக்கா அல்லது சொத்துக்கா என்பதையும் பொருத் திருக்கும். எதிர்வாதி குறுக்கிட்டிருக்கத் தேவை இல்லையென்றால் அவன் பொறுப்பாளியாவான். தவிர, எதிர்வாதி தன்னுடைய பாது காப்புக்காக அல்லாமல் பொதுமக்களுடைய பாதுகாப்புக்காகச் செயல்புரிந்திருந்தால் நீதிமன்றம் அவனுக்கு அதிகப் பரிவு காட்டும் என்றும் சொல்லலாம். கிரிக் v. கிரிகரி (Kirk v. Gregory) வழக்கில் 'அ' என்பர் இறந்துவிட்டார். அவருடைய பணியாட் களோ வீட்டில் ஒரு அறையில் கூடிக் குடித்துக் கும்மாளம் இட்டுக் கொண்டிருந்தனர். அங்கு வந்திருந்த 'அ' வின் மைத்துனி 'அ' வின் நகைகளைப் பாதுகாக்க அவை வைக்கப்பட்ட அறையில் இருந்து எடுத்து அவற்றைப் பத்திரப்படுத்த வேண்டி வேறு ஒரு அறையில் வைத்தாள். அங்கிருந்து அந்நகைகள் களவாடப் பட்டன. அந்த நகைச் சொத்தின்மீது அத்துமீறல் செய்யப்பட்ட தாக அவள் மேல் இடப்பட்ட வழக்கில், அவள் குறுக்கிட வேண்டிய நியாயமான தேவை எதுவும் ஏற்பட்டதாக நிரூபிக்கப் படவில்லை எனக்கூறி அவளைப் பொறுப்பாளியென நீதி மன்றம் தீர்ப்பளித்தது. கார்ட்டர் v. தாமஸ் (Carter v. Thomas) வழக்கில் வாதியின் வீட்டைப் பற்றியிருந்த தீயை அணைக்க எதிர்வாதி அதில் நுழைந்தார். அப்போது தீயணைக்கும் படையினர் அத் தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டிருந்தனர். எதிர்வாதியின் செயல் அச்சூழ்நிலையில் தேவையற்றதாகும். எனவே, அத்து மீறியதற்காகப் பொறுப்பாளியாக்கப்பட்டார்.

ஆனால், எதிர்வாதி குறுக்கிட்டபோது இருந்த சூழ்நிலையைக் கொண்டே அவரது செயல் நியாயமானதா என்று தீர்மானிக்க வேண்டும். பின்னர் ஏற்பட்ட நிகழ்ச்சிகளைக் கருதிப்பார்க்கும் போது எதிர்வாதி குறுக்கிட்டு இருக்கவேண்டியதில்லை யென்று தெளிவாகத் தெரிந்தாலும், எதிர்வாதி இந்த எதிர்வாதத்தை இழக்க

மாட்டார். கோப் v. ஷார்ப் (Cope v. Sharpe) வழக்கில், 'அ' என்பவரின் நிலத்தில் தீவிபத்து ஏற்பட்டது. 'அ' வின் பணியாட்கள் அதை அணைத்துக் கொண்டிருந்தபோது அந்த நிலத்தில் பறவைகளைச் சுட்டு வேட்டையாடும் உரிமை பெற்றிருந்த 'இ' என்பவரின் பணியாளாகிய 'ஆ' என்கின்ற வேட்டைக்காரர் அங்கு நுழைந்தார். அவர் அங்கு தீப்பற்றி எரிந்து கொண்டிருந்த இடத்திற்கும், தனது பணித்தலைவரின் புருக்கள் இருந்த இடத்திற்கும் இடையில் இருந்த காய்ந்த புதருக்குத் தீ வைத்தார். 'ஆ' என்னும் பணியாள் தீ வைத்ததன் நோக்கம் அந்தத் தீ பரவி தன்னுடைய பணித்தலைவரின் பறவைகளுக்கு ஆபத்து ஏற்படாமல் தடுப்பதாகும். அவர் அந்த செயலைச் செய்தபோது வாதியின் நிலத்தில் பற்றியிருந்த தீயை அணைப்பதில் சுமார் 50 பேர் ஈடுபட்டிருந்தனர். பணியாளாகிய எதிர்வாதி அவர்களுக்கு அத்தீயை எப்படி அணைப்பது என்று தெரியவில்லையென்று தான் கருதியாகக் கூறினர். ஆயினும், சற்று நேரங்கழித்து அவர்கள் அத்தீயை அணைத்து விட்டனர். எதிர்வாதியின்மேல் அத்துமீறலுக்காக வாதி வழக்கிட்டார். இவ்வழக்கில் பணியாளாகிய 'ஆ' குறுக்கிட்டபோது அவரது பணித்தலைவரின் பறவைகளுக்கு உண்மையாகவே உடனடியான ஆபத்தொன்று ஏற்பட்டிருந்தது. எனவே, அச்சூழ்நிலையில் அவனது செயல் தேவையெனக் கருதத் தகுந்ததாகும். எனவே, அவர் பொறுப்பாளியல்ல எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. எதிர்வாதியின் நிலையில் ஒரு நல்லறிவுள்ள மனிதன் இருந்திருப்பின் இதைப் போலவேதான் நடந்து கொண்டிருப்பான் என்று கருதப்பட்டது. எனவே, அத்துமீறலாக அமையும் செயல்களுக்கு இத்தீர்ப்பில் கூறப்பட்ட கொள்கையைத் தகுந்த காரணமாகக் காட்டலாம். எனவே, ஒருவன் தனது சொத்துக்கு உண்மையில் உடனடியாக ஆபத்தொன்று ஏற்பட்டிருப்பின் அதைக் காப்பதற்காக மற்றவருக்குச் சொந்தமாகவோ, உடைமையானதாகவோ உள்ள விலங்கைக் கொல்லலாம். அவர் அவ்விலங்கைத் தாக்குதலைத் தடுப்பதற்கும், மீண்டும் தாக்கவராமல் தடுப்பதற்கும், அதைக் கொல்வதைத் தவிர தமக்கு வேறு வழியில்லை என்றோ, தமக்குத் தேவையென்று கருதிச் செய்த காரியத்தில் நியாயமாக நடந்து கொண்டதாகவோ நிரூபிக்க வேண்டும். எதிர்வாதி தனது சொத்தை பாதுகாப்பதற்கு அல்லாமல் வேறு வகையில் நல்லெண்ணத்துடன் நடந்து கொண்டிருந்தாலும் இந்த எதிர்வாதத்தை நீதிமன்றம் ஏற்கக்கூடும். எடுத்துக் காட்டாக, பேருந்து மேலே ஏறியதால் அடிபட்டுச் சாகும் தறுவாயில் துடித்துக் கொண்டிருக்கும் நாயின்மேல் இரக்கம் கொண்டு அதைச் சுட்டுக் கொள்பவர்மேல் நீதிமன்றம் பரிவு காட்டும் என்று எதிர்பார்க்கலாம்.

12. சட்டம் விதிக்கும் செயல்கள்
(Acts done under Statutory Authority)

தீங்கெனச் சொல்லத்தக்க செயல்களை செய்வதற்குச் சட்ட மன்றம் அங்கீகாரம் வழங்கியிருந்தால் அதனால் ஏற்படும் நட்டம் அல்லது இழப்பிற்கு யாரும் பொறுப்பாளியல்ல. இவ்வாறு சட்ட மன்றத்தால் இயற்றப்பட்ட ஒரு சட்டத்தால் இழப்பினை அடைந்துள்ள நபர்கள் வழக்கிட்டு நிவாரணங்கள் பெற முடியாது. அந்தச் சட்டத்திலேயே ஏதேனும் இழப்பீட்டுக்கு வழி செய்யப் பட்டு இருந்தால், பாதிக்கப்பட்ட நபர்கள் அதனைக் கேட்டு வழக்கிடலாம். இதைத் தவிர வேறு வழியில்லை. சட்ட மன்றம் இயற்றிய சட்டம் தீங்கெய்திய மனிதர்களுக்குக் கிடைக்கக் கூடிய நிவாரணங்களைப் பறித்துக் கொண்டு விடுகிறது. சட்ட மன்றம் எதிர்வாதிக்கு அதிகாரம் வழங்கி அவனைப் பொறுப்பிலிருந்து விடுவிக்கிறது.

எதிர்வாதி புரிந்த செயலுக்கு மட்டுமல்லாமல், அதனால் ஏற்படக்கூடிய விளைவுகளுக்கும் சட்டம் பாதுகாப்பு அளிக்கிறது. எதிர்வாதிக்கு ஒரு செயலைச் செய்ய சட்டம் அனுமதி வழங்கும் போது, அச்செயலினால் ஏற்படும் தவிர்க்க முடியாத விளைவுகளுக்கும் அனுமதி வழங்குவதாகவே நாம் எடுத்துக் கொள்ள வேண்டும். இல்லையென்றால் அச்செயலைச் செய்ததற்காகத் தரப்பட்ட அனுமதி பொருளற்றதாகி விடும். எடுத்துக் காட்டாக, புகை வண்டி செல்வதற்காக இருப்புப் பாதை போடும்போது அது தனியார் நிலத்திலும் குறுக்கிட நேரும், இது தவிர்க்க முடியாதது. இதைத் தவிர புகை வண்டி செல்வதன் விளைவாக பேரிரைச்சலும், அதிர்ச்சியும், புகையும், தீப்பொறியும் தோன்றுவதால் தனிப்பட்ட நபர்களுக்குத் தொல்லையும், இடையூறும், இழப்பும் ஏற்படலாம். இவற்றைப் பொறுத்துக் கொள்வதைத் தவிர வேறு வழி இல்லை. எனவே, தனது நிலத்தின் குறுக்கே தண்டவாளம் போடப்பட்டதற்கும் புகை வண்டி செல்வதால் ஏற்படக் கூடிய வேறு நட்டங்

களுக்கும் வாதி புகை வண்டி அமைய வழி செய்த சட்டத்தில் சொல்லப்பட்டுள்ள நிவாரணங்களே மட்டுமே நாடிப் பெறமுடியும். வாதிக்கு ஏற்பட்ட இழப்பு தவிர்க்க முடியாததென்று எதிர்வாதியே நிரூபிக்க வேண்டும். எதிர்வாதி தான் உரிய கவனமும் திறமையையும் காட்டியும் வாதிக்கு ஊறு ஏற்பட்டது என்றும் நிரூபிக்க வேண்டும். எனினும் எதிர்வாதி தனக்கு ஏற்படக்கூடிய செலவையும், சூழ் நிலையையும் கருதிப் பார்க்கும்போது வாதிக்கு ஏற்பட்ட இழப்பைத் தவிர்ப்பது நடை முறையில் இயலக்கூடியதல்ல என்று நிரூபித்தால் போதும். எதிர்வாதி சட்டம் அனுமதித்த செயலைக் கவனத்தோடு செய்தும் வாதிக்கு ஊறு விளைந்தால் அதற்கு அவர் பொறுப்பாளியாக மாட்டார். ஆனல் அவர் சட்டம் அனுமதித்த செயல்களைக் கவனமின்றிச் செய்ததன் விளைவாக வாதிக்கு இழப்பு ஏற்பட்டிருந்தால் பொறுப்பாளியாவார். ஸ்மித் v. லண்டன் அண்டு சவுத் வெஸ்டர்ன் ரெயில்வே கம்பெனி (Smith v. London and South Western Railway Co) வழக்கில் புகைவண்டிக் கம்பெனியின் பணியாட்கள் இருப்புப் பாதையின் ஒரத்தில் கவனமின்றிப் புல்லையும், புதரையும் வெட்டிப் போட்டிருந்தனர். புகைவண்டியிலிருந்து புறப்பட்ட தீப்பொறியினல் இவை தீப்பற்றி பலமாக வீசிய காற்றினல் அடித்துச் செல்லப் பட்டு 200 கெஜத் தொலைவில் இருந்த வாதியின் குடிசை தீப்பற்றியது. அக்குடிசை எரிந்து போயிற்று. புகைவண்டிக் கம்பெனியின் கவனமின்மையால் இத்தீ விபத்து ஏற்பட்டதாகையால் அவர்கள் பொறுப்பாளியாவார் என்று தீர்ப்பளிக்கப் பட்டது. சட்டம் அனுமதித்த செயலைத் தக்க கவனத்தோடும், எச்சரிக்கையோடும் செய்தால் பிறருக்கு ஊறு அல்லது இழப்பு ஏற்படுவதைத் தடுக்க முடியும் என்ருல் அந்த முறையில் அதிகாரத்தைப் பயன் படுத்தாமல் இருப்பதையே கவனம் இன்மை என்கிறோம்.

பிரைட் ஆஃப் டெர்பி அண்டு டெர்பிஷையர் ஏங்ளிங் அசோசியேஷன் லிமிடெட் v. பிரிட்டிட் சேலனிஸ் லிமிடெட் (Pride of Derby and Derbyshire Angling Association Ltd v. British Celanese Ltd). வழக்கில் இரண்டாம் எதிர்வாதியாகிய டெர்பி மாநகராட்சி, டெர்வென்ட் ஆற்றில் அமைந்திருந்த மீன் பிடிக்கும் பகுதியில் உரிய மாற்றம் செய்யப்படாத கழிவு நீரை ஆற்றில் செலுத்தியதன் விளைவாக நீரின் தன்மை கெட்டு வாதிக்கு நட்டம் ஏற்பட்டது. 1901-ல் இயற்றப்பட்ட டெர்பி மாநகராட்சி சட்டப்படி சாக்கடை அமைக்கும் கடமை தனக்கு உண்டென்றும், டெர்பி மாநகரில் மக்கள்தொகை பெருகி விட்டதன் காரணமாக முன்னர் அமைக்கப்பட்ட சாக்கடை வசதி போதுமானதாக இல்லையென்றும் டெர்பி மாநகராட்சி எதிர்வாதம் செய்தது. ஆனல்,

1901 ஆம் ஆண்டு சட்டப்படி செய்யப்பட்ட பணிகளால் தொல்லைகள் ஏற்படுவது தவிர்க்கமுடியாது என்று கூற முடியாதென்றும், இச்சட்டம் தொல்லையை ஏற்படுத்த அதிகாரம் வழங்கவில்லையென்றும் அப்பீல் நீதிமன்றம் கூறி இந்த எதிர்வாதத்தை நிராகரித்து விட்டது.

வாகன் *v.* டாஃப்வேல் ரெயில்வே கம்பெனி வழக்கில் (Vaughan *v.* Taffvale Railway Co.) எதிர்வாதிக்குப் புகை வண்டியில் நீராவி என்ஜினைப் பயன்படுத்த அதிகாரம் வழங்கப் பட்டது. அதிலிருந்து கிளம்பிய தீப்பொறிகளால் வாதியின் காடுகளில் தீப்பற்றிச் சேதம் ஏற்பட்டது. இதற்கு எதிர்வாதி பொறுப்பாளியாக மாட்டார் என்று தீர்ப்பளிக்கப் பட்டது. எதிர்வாதி தனது என்ஜின்களை தகுந்த கவனத்தோடும், திறமையோடும் செய்திருந்தார். அவற்றிலிருந்து தீப்பொறி எதுவும் வெளியேறுமல் தடுப்பது இயலாது.

முழுமையான அதிகாரமும் (Absolute Authority), நிபந்தனையுடன் கூடிய அதிகாரமும் (Conditinal Authority)

ஒருவர் ஒரு செயலைச் செய்வதற்குச் சட்டம் முழுமையான அதிகாரம் தந்திருக்கலாம். இத்தகைய செயலைச் செய்யும்போது தொல்லையோ, வேறு கேடான விளைவுகளோ ஏற்பட்டிருந்தாலும் அதற்குப் பொறுப்பு இல்லை. முகம்மது மொகிதீன் சேட் *v.* சென்னை மாநகராட்சி (Mohamed Moideen Sait *v.* Madras Corporation) வழக்கில், நகருக்குள்ளேயும் வெளியேயும் இறந்த வர்களைப் புதைக்கவும், எரிக்கவும், தகுந்ததும் வசதியானதும் ஆகிய இடங்களை மாநகராட்சி ஆணையாளர் அமைக்க வேண்டும் என்றும் இதற்கேற்றவாறு போதிய நிலங்களை அவர் எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும் சென்னை மாநகர் நகராட்சி சட்டம் விதித்திருந்தது. இச் சட்டத்தின்படி நிலத்தைக் கட்டாயமாக தனியாரிடமிருந்து இதற்கென எடுத்துக்கொள்ளவும், அதிகாரம் வரம்பு மீறிச் செலுத்தப் பட்டிருந்தால் அதற்காகத் தீங்கீடு அளிக்கப் படுவதற்கும் இச் சட்டத்தில் வழி செய்யப்பட்டிருந்தது. இச் சட்டத்தின்படி ஏற்பட்டுள்ள பொறுப்பும், கடமையும் கட்டாயமானதாகவும், தவிர்க்க முடியாததாகவும் இருந்தது. எனவே, ஆணையாளர் குறிப்பிட்ட இடத்தை இதற்கெனத் தேர்ந்தெடுத்ததால் வாதிக்குத் தொல்லை ஏற்பட்டிருந்தாலும் ஆணையாளர் பொறுப்பாளியாக மாட்டார் என்று தீர்ப்பளிக்கப் பட்டது.

இக் கருத்துக்கு விளக்கம் தரும் மற்றொரு வழக்கு எட்ஜிங்டன் *v.* ஸ்விண்டன் கார்ப்பரேஷன் (Edgington *v.* Swindon Corpora-

tion) வழக்கு ஆகும். ஸ்வின்டன் மாநகராட்சி சட்டம் மாநகராட்சி மக்கள் தங்க வசதியான காப்பிடங்களைக் கட்டவும் பராமரிக்கவும் வேண்டும் என்றும், இதற்காக வீதிகள், சாலைகள் ஆகியவற்றின் பகுதிகளைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்றும் கூறியது, இவ் வழக்கில் வாதியின் கட்டடத்திற்குத் தங்கு தடையின்றிச் செல்லக் கூடிய வழியை மறைக்குமாறு மாநகராட்சி அவற்றைக் கட்ட முழு அதிகாரம் உண்டா? அல்லது தனிநபர்களின் உரிமைகளை பாதிக்காமல்தான் அவர்கள் அதைக் கட்ட முடியுமா? எனும் கேள்வியெழுந்தது. இச் சட்டத்தை நாடாளுமன்றம் இயற்றிய போது அவற்றைக் கட்டுவதன் விளைவாக தனியார் வீட்டு முகப்பு அல்லது வாயில் ஆகியன மறைக்கப்படக்கூடும் என்பதையெல்லாம் உணர்ந்தேயிருக்க வேண்டும் எனவே இவ்வாறு மாநகராட்சி செயல்பட அதிகாரம் உட்கிடையாகப் பெற்றிருப்பதாகவே ஊகிக்க வேண்டும். எனவே, மாநகராட்சி பொறுப்பாளியாகாது என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

ஆனால், சட்டம் நிபந்தனையோடு அதிகாரம் வழங்கியிருந்தால் மற்றவருக்குத் தொல்லையோ, அல்லது வேறு எந்த இழப்போ ஏற்படாமல் ஒரு செயலைச் செய்ய முடிந்தால்தான் அதனைச் செய்யலாம். மெட்ரோபாலிடன் அசைலம் டிஸ்ட்ரிக்ட் v. ஹில் (Metropolitan Asylum District v. Hill) வழக்கில் எதிர்வாதி நகர மன்றத்திற்குப் பெரியம்மை நோய் சிகிச்சைக்காக ஒரு மருத்துவமனை கட்டவும், அதை நிர்வகிக்கவும் சட்டம் அனுமதி வழங்கி இருந்தது. அந்த நகர் மன்றம் மக்கள் குடியிருக்கும் பகுதியில் மருத்துவமனை கட்டுவதைத் தடுத்து நீதிமன்றம் உத்தரவு இட்டது. ஏன் எனில் அங்கு மருத்துவமனை கட்டப்பட்டால் அங்கு வாழும் மக்களுக்குப் பெரியம்மை நோய் தொற்றிக் கொள்ளக் கூடிய ஆபத்து இருந்தது. தாங்கள் விரும்பிய இடத்தில் மறறவர்களுக்கு தொல்லையாக இருந்தாலும் மருத்துவமனை கட்டிக் கொள்ளலாம் என்று அவர்களுக்குச் சட்டம் நிபந்தனை அற்ற அதிகாரம் வழங்கவில்லை. பிறருக்குத் தொல்லை ஏற்படாத இடம் கிடைத்தால் அங்கு மட்டுமே எதிர்வாதிகள் மருத்துவமனை கட்டிக் கொள்ளலாம் என்ற நிபந்தனையோடுதான் இந்த அதிகாரம் வழங்கப்பட்டதாக நீதிமன்றம் கருதியது. இவ்வழக்கில் எதிர்வாதிகள் தங்களுக்கு ஒரு மருத்துமனை கட்டும் அதிகாரம் வழங்கப்பட்டிருக்கும் காரணத்தால் தாங்கள் அதை எங்கு வேண்டுமானாலும் கட்டலாம் என்று வாதிட்டனர். அதை நீதிமன்றம் ஏற்கவில்லை.

ஒரு குறிப்பிட்ட செயலைச் செய்ய ஒருவருக்குச் சட்டப்படி வெறும் அதிகாரம் மட்டும் வழங்கப்பட்டிருக்கிறது என்று வைத்

துக் கொள்வோம். இவ்வாறு அதிகாரம் தரப்பட்டதாலேயே அச் செயலை அவர் செய்தே தீரவேண்டும் என அவரை வற்புறுத்த முடியாது. அதிகாரம் பெற்றுள்ள செயலை அவர் செய்யாமல் இருந்துவிட்டதாலோ அல்லது பாதியிலேயே அதை நிறுத்தி விட்டதாலோ தமக்கு நட்டம் ஏற்பட்டதென்று அவர்மேல் ஒருவர் வழக்கிட முடியாது. ஒரு குறிப்பிட்ட செயலைச் செய்தாக வேண்டிய கடமை ஒருவருக்கு இல்லாவிட்டால் அவர் அதைச் செய்யாமல் விடுவது கவனமின்மையாகாது.

நெடுஞ்சாலையில் ஒளி விளக்குகள் அமைக்கும் கடமை

சாலைகளில் ஒளி விளக்குகள், வைக்கப்படா விட்டாலும் அல்லது அங்கு வைக்கப்பட்டுள்ள ஒளி விளக்குகள் போதுமான தாக இல்லாவிட்டாலும் விபத்துகள் ஏற்படுவது உண்டு. அவற்றைப் பராமரிக்கும் நகர் மன்றம் அல்லது நெடுஞ்சாலைத்துறை போன்ற அமைப்புகளுக்கு விளக்குகளை வைப்பதற்கு வெறும் அதிகாரம் அல்லது அனுமதி மட்டும் சட்டத்தினால் வழங்கப் பட்டிருப்பின், அவை விளக்குகள் அமைக்காமல் இருந்து விட்டாலோ அல்லது முன்னர் வைத்திருந்த விளக்குகளை எடுத்து விட்டாலோ அவற்றின் மீது வழக்கிட முடியாது. விளக்கு வைக்க வேண்டிய கடமை சட்டப்படி அவைகளுக்கு இல்லையெனின் தீங்கியலில் பொறுப்பில்லை. ஆனால் விளக்கு வைக்க வேண்டிய கடமை அவற்றிற்கு இருக்குமேயானால் அந்தக் கடமையைச் செய்யாமல் விட்டாலோ, அல்லது சரிவரச் செய்யாமல் இருந்தாலோ அவற்றின் மீது வழக்கிடலாம். தவிர இயற்றுச் சட்டத்தின் படியும் அவற்றிற்குக் கடமை இருக்கலாம். எடுத்துக் காட்டாக, நெடுஞ்சாலையில் போக்குவரத்துக்கு இடையூறாக ஏதாவது தடங்கல் அல்லது தடை வைக்கப்பட்டிருந்தால் குற்றமாகும் என இயற்றுச் சட்டத்தில் கருதப்பட்டது. எனவே, அவ்வாறு வைக்கப்பட்டுள்ள தடையினால் ஒருவனுக்குத் தனித்த நட்டம் அல்லது ஊறு ஏற்பட்டிருந்தால் அவன் வழக்கிடலாம். சாலையில் போக்குவரத்துக்கு இடையூறாக ஏதாவது இருப்பின் அது அங்கு இருப்பதை உரிய முறையில் அனைவரும் அறியும்படியாக விளக்கு வைக்க வேண்டும். இல்லையேல் அது குற்றமாகும். ஆனால், சாலையினைப் பராமரிக்கும் அதிகாரம் கொண்டவர்கள் அங்கு விளக்குக் கம்பங்கள், தெருக் குப்பைத் தொட்டிகள், மலர்த் தொட்டிகள் ஆகியவற்றை வைப்பது குற்றமாகாது. ஆனால், இந்தத் தடைகளால் பொதுமக்களுக்கு ஆபத்து ஏற்படாமல் இருக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய கடமை நெடுஞ்சாலை அதிகாரிகளுக்கு உண்டு. இந்தத் தடைகள் அல்லது

இடையூறுகள் சாலையில் இருப்பதை இரவு நேரங்களில் போதிய விளக்கொளி மூலம் புலப்படுத்த வேண்டும்.

நைட் v. ஷெப்பீல்டு கார்ப்பரேஷன் (Knight v. Sheffield Corporation) வழக்கில் போரினைக் கருதி இருட்டடிப்பு (blackout) செய்யப்படும்போது இத்தகைய தடங்கள் சாலையில் இருப்பதை விளக்குகள் வைத்து மக்களுக்கு எச்சரிக்க வேண்டிய கடமை நகர மன்றத்திற்கு உண்டா என்று கேள்வி எழுந்தது. குண்டு வீச்சிலிருந்து தப்புவதற்காக மக்கள் ஒளிந்து கொள்ளக்கூடிய புகலிடக் குழிகளை நகராட்சியினர் கட்டினர். இதைக் கட்ட வேண்டிய கடமையைச் சட்டம் விதித்திருந்தது. இவ்வாறு அவர்கள் கட்டிய புகலிடம் ஒன்றிற்கு இறங்கிச் செல்ல நடைப்பாதையிலிருந்து படிகள் வைத்திருந்தனர். அங்கு குழி இருப்பதைக் காட்டுவதற்கு அவர்கள் படிக்கட்டுகளுக்கு மேலே விளக்கெரிய விட்டிருந்தனர். ஒரு குறிப்பிட்ட இரவில் இவ்விளக்கு என்ன காரணத்தாலோ அணைந்து போயிற்று. வாதி இந்த விளக்கு வெளிச்சத்தைத் துணையாகக் கொண்டு வழக்கமாக சாலையில் சென்று வந்தவர். விளக்கில்லாத காரணத்தால் தடுமாறி இடறி படிக்கட்டில் விழுந்து அவர் காயமுற்றார். தொடர்ந்து விளக்கினை எரிய வைத்தன் மூலம் அங்கு தடையிருப்பதை மாநகராட்சி காட்டி வந்ததால் அந்த எச்சரிக்கையை நம்பி சாலையில் நடப்பதை மக்கள் வழக்கமாக்கி கொண்டுவிட்டனர். எனவே, அவ் விளக்கை வைத்திருக்க வேண்டிய கடமையை எதிர்வாதிகள் தாங்களாகவே ஏற்றுக் கொண்டனர். ஆகவே, அவர்கள் வாதிக்குப் பொறுப்பாளியாவார் என்று தீர்ப்பளிக்கப் பட்டது.

தகுதி (Capacity)

பொதுவாக ஒவ்வொருவருக்கும் தீங்குக்காக வழக்கிடத் தகுதியுண்டு. அதைப்போலவே தீங்கு விளைவித்தால் பொறுப்பேற்க வேண்டிய கடமையும் உண்டு. இப்பகுதியில் இந்தத் தகுதியையும், பொறுப்பையும் பற்றி நாம் காண்போம். சில குறிப்பிட்ட நபர்களைப் பொறுத்தவரை, இந்த விதியில் சில மாறுபாடுகள் உண்டு. அவற்றைத்தான் இங்கு நாம் விளக்கமாகக் காணப் போகின்றோம். முக்கியமாக (1) இறைமை நிலைச் செயல் (Act of State), (2) கூட்டுருக்கள் (Corporations), (3) தாயின் கருப்பையில் உள்ள சேய் (en ventre sa mere), (4) இளவர் (Minor), (5) மணமான பெண்டிர் (Married women), (6) பெற்றோரும் பெற்றோர் நிலையில் உள்ளோரும் (Persons with parental and quasi-parental authority), (7) பைத்தியக்காரர் (Lunatics or

persons with mental disorder), (8) அரசின் பகரப் பொறுப்பு (vicarious liability), (9) பணித் தலைவரும் பணியாளும் (Master and Servant), (10) கூட்டாகத் தீங்கிழைப்பவர்கள் (Joint tort feasors), (11) நீதிமுறை அதிகாரம் (Judicial authority) ஆகிய நிலைகளில் தகுதியும், பொறுப்பும் பற்றி இங்குக் காண்போம்.

13. இறைமை நிலைச்செயல் அல்லது அரசுமுறைச் செயல் (Act of State)

ஒரு நாடு தனக்குள்ள இறைமை அதிகாரத்தைப் பயன் படுத்தி வேறு ஒரு நாட்டுக்கோ அல்லது வேறு நாட்டுக் குடிமகன் ஒருவனுக்கோ தீங்கு புரிந்திருந்தால், அது குறித்து உள்நாட்டு நீதி மன்றம் (Municipal Courts) எதிலும் வழக்கிட முடியாது. இச்செயல் அந்நாட்டு அரசின் நிர்வாகச் செயலிலிருந்து வேறு பட்டது.

ஒரு நாடு அயல்நாடுகளோடும், அவற்றின் குடிமக்களோடும் கொண்டுள்ள தொடர்பினைக் கருதி எவ்வாறு செயல்பட வேண்டும் என்ற கொள்கையினை வகுத்து, அதற்கேற்பச் செயலாற்றுகின்றது. இதன் விளைவாக அயல் நாடுகளுக்கோ, அயல்நாட்டாருக்கோ ஊறு அல்லது இழப்பு ஏற்படலாம். எடுத்துக் காட்டாக ஒரு நாடு வேறு ஒரு நாட்டின் பகுதியைப் போரிட்டுக் கைப்பற்றித் தன்னோடு வலிந்து இணைத்துக் கொண்டால், அது குறித்து வழக்கிட முடியாது. தஞ்சாவூர் அரசு வழக்கில் (Secretary of State for India *v.* Kamatchi Boye Saheba) கிழக்கிந்திய கம்பெனி, தஞ்சாவூர் அரசை வல்லிணைப்புச் (annexation) செய்த தற்காக நீதிமன்றத்தில் வழக்கிட முடியாது என்று தீர்ப்பளிக்கப் பட்டது.

சுதந்திர நாடுகளிடையே நிலவும் உறவையும், தொடர்பை யும் உள்நாட்டுச் சட்டங்கள் கட்டுப்படுத்த மாட்டா. இவற்றை நெறிப்படுத்த உள்நாட்டு நீதி மன்றங்களுக்கு வழி முறைகள் கிடையாது. தவிர இவற்றைக் கட்டுப்படுத்தித் தீர்ப்பு வழங்கினால் அதை நிறைவேற்றும் அதிகாரம் இல்லை. எனவே, அயல் நாட்டாருக்கு எதிராகத் தனது இறைமை அதிகாரத்தை ஒரு நாடு

பயன்படுத்தி ஒரு செயலைச் செய்தால் அது சட்டத்திற்குட்பட்ட செயலாகாது. அவ்வாறு எதிர்பார்க்கவும் முடியாது. குறிப்பிட்ட செயல் இறைமை நிலைச்செயல் என்பதால் அரசுக்குப் பொறுப்பில்லையென்று வாதிடும்போது, அரசின் செயல் சட்டத்தின்படி முறையானதாகும் என்று கூறுவதாகப் பொருளாகாது. இறைமை நிலைச் செயல் என்று எதிர்வாதம் செய்யும் அரசோ, அதன் அதிகாரிகளோ தங்கள் செயல் குற்றமற்றது என்று வாதிடுவதில்லை. அவர்கள் வழக்கை விசாரிக்க உண்மையில் அதிகாரம் ஏதும் அற்ற நீதிமன்றத்தில் வாதி வழக்கிட்டிருக்கின்றார் என்றே வாதிடுகின்றனர்; அரசின் செயல் சட்டத்திற்குட்பட்டதா, அல்லது நியாயமானதா என்று தீர்ப்பளிக்க நீதிமன்றத்திற்கு அதிகாரமே கிடையாது என்று அவர்கள் வாதிடுவதாகப் பொருள் கொள்ள வேண்டும். இதைப் போலவே அரசாங்கம் செய்யும் போர் அறிவிப்பு, சமாதானம், முற்றுகை (blockade), சமாதான உடன்படிக்கை (treaty of peace), (வாணிப உடன்படிக்கை) வெளிநாட்டு நிலத்தைக் கைப்பற்றுதல் (seizure), தனது ஆள் நிலத்தைக் வேறுநாட்டுக்குத் தன்னிச்சையாக அளித்தல் (cession) ஆகியவற்றுல் ஒருவருக்கு நட்டம் ஏற்படலாம். இதற்காக உள் நாட்டு நீதி மன்றத்தில் வழக்கிட முடியாது.

ஒரு செயல் இறைமை நிலைச்செயல் என்று கூற வேண்டுமானுல்—

1. அச்செயல் ஒரு நாட்டின் சார்பாளர் அல்லது பிரதிநிதியால் செய்யப் பட்டிருக்க வேண்டும்.

2. அச்செயலால் வேறு நாடு ஒன்றுக்கோ, வேறு நாட்டவர் ஒருவருக்கோ இழப்பு அல்லது ஊறு ஏற்பட்டிருக்க வேண்டும்

3. அச்செயலைச் செய்ய ஒரு நாடு ஏற்கெனவே அனுமதித்திருக்கலாம் அல்லது அச்செயல் செய்யப்பட்ட பின்னர் அதை யேற்று உறுதி செய்திருக்கலாம் (ratification).

புரன் *v.* டென்மன் (Buron *v.* Denman) வழக்கில் பிரிட்டிஷ் போர்க்கப்பல் தளபதியாய்ப் பணியாற்றிய எதிர்வாதி, டென்மன் பிரிட்டிஷ் ஆட்சிப்பகுதிக்கு வெளியே அமைந்திருந்த ஆப்பிரிக்காவின் மேற்கு கடலோரப் பகுதியில் அடிமை வாணிபத்தில் ஈடுபட்டிருந்த வாதியின் அடிமை குடியிருப்புகளை (barracoon) எரித்து அழித்ததோடு அடிமைகளையும் விடுவித்தார். எதிர்வாதிக்கு அவ்வாறு செய்ய அதிகாரம் இல்லையெனினும், அவர் செயலை

பிரிட்டிஷ் அரசாங்கம் ஏற்று உறுதி செய்தது. இது இறைமை நிலைச் செயல் என்று கருதப்பட்டு எதிர்வாதிக்கும் பொறுப்பில்லை யெனத் தீர்ப்பளிக்கப் பட்டது. இதைப் போன்ற சூழ்நிலைகளில் நிவாரணத்தை ஒரு நாட்டின் தூதுவர் மூலமாகவே தேடிக் கொள்ள வேண்டும். இதைப் போலவே அயல்நாட்டாரைத் தனது நாட்டின் எல்லைக்குள் நுழையாமல் தடுக்கும் அதிகாரமும் ஒரு அரசாங்கத்துக்கு உண்டு. இவ்விதி அமைதிக் காலத்தில் உள் நாட்டில் இழைக்கப்படும் தீங்குகளுக்குப் பொருந்தாது. நட்புறவு கொண்டுள்ள அயல்நாடு ஒன்றினைச் சேர்ந்தவர் இங்கிலாந்தில் வசிக்கும்போது இங்கிலாந்து அரசுக்குக் கட்டுப் படுகிறார். இங்கிலாந்தின் குடிமக்கள் தங்களுக்கு எதிராக அரசு இழைக்கும் தீங்குகளுக்கு வழக்கிடும் உரிமை உள்ளது போலவே அவருக்கும் உண்டு. எடுத்துக்காட்டாக ஜான்சன் v. பெட்லர் (Johnson v. Petler) வழக்கில் பெட்லர் என்னும் ஐரிஷ்காரன் ஒருவனுக்கு அமெரிக்கக் குடிமகனுகும் உரிமை அளிக்கப் பட்டது. அவர் மீண்டும் அயர்லாந்து சென்றார். அங்கு சட்ட முரணான செயல்களில் ஈடுபட்டதால் கைதாக்கப்பட்டு அவர் வைத்திருந்த பணமும் காவலரால் பறிமுதல் செய்யப்பட்டது. இச்செயலை இறைமை நிலைச்செயல் என அயர்லாந்தின் தலைமைச் செயலரால் ஏற்கப்பட்டது. பெட்லர் காவல்துறை தலைமை ஆணையரிடம் தம் பணத்தை மீட்க வழக்கிட்டார். இவ்வழக்கில் எதிர் வாதி தமது செயல் இறைமை நிலைச்செயலென வாதிட் டார். பெட்லருக்குச் சாதகமாகத் தீர்ப்பு வழங்கப்பட்டது. இங்கிலாந்து நாட்டில் வசிக்கும் அயல் நாட்டாருக்கும் பிரிட்டிஷ் குடிமக்களுக்குள்ள உரிமைகள் உண்டென்று சொல்லப் பட்டது. நட்புறவு கொண்ட அயல் நாட்டைச் சேர்ந்தவர் வெளிநாட்டில் வசிப்பவராகவும் இங்லாந்தில் சொத்துடையவராகவும் இருந்தால் அவருக்குக் குடிமகனைப் போலவே சொத்துரிமையுண்டு. ஆனால் பகைமை கொண்டுள்ள அயல் நாட்டவருக்கு இதைப் போன்ற பாதுகாப்பு இல்லை. அவரை நாட்டினுள் சிறை வைக்கவோ அல்லது வெளியேற்றவோ அரசுக்கு அதிகாரமுண்டு.

ஒரு அரசு தன் குடிமக்கள் மீது செலுத்தும் அதிகாரம் இறைமை நிலைச்செயலாகாது. ஒரு இந்திய அரசாங்க அலுவலர் சட்டத்திற்கு முரணான செயல் ஒன்றைச் செய்து இந்தியக் குடி மகனுக்குத் தீங்கு விளைவித்துத் தான் அரசாங்க உத்தரவின் பேரில்தான் அதைச் செய்ததாகக் கூறித் தப்பமுடியாது.

அர்தயாள்சிங் v. ஸ்டேட் ஆஃப் பெப்சு (Hardiyal Singh v. State of Pepsu) வழக்கில் நாபா மன்னர் நாபாவிலிருந்த

"மால்வா ஹவுஸ்" எனப்படும் வீட்டை ஹர்தயாள்சிங் என்பவருக்குக் கொடையாகத் தந்திருந்தார். பின்னர் நாபா அரசு பாட்டியாலா, கிழக்குப் பஞ்சாப் அரசுகளின் கூட்டமைப்பில் (Pepsu) சேர்க்கப்பட்டது. இவ்வாறு 20—8—1948-ல் உருவான பெப்சு மாநிலம் மேற்கூறிய கொடையை 1952ஆம் ஆண்டில் செல்லாது எனக் கூறியது. இதை எதிர்த்து வழக்கிட்டபோது இறைமை நிகழ்ச்செயல் என்று எதிர்வாதம் செய்யப்பட்டது. பஞ்சாப் உயர்நீதி மன்றம் இது இறைமை நிகழ்ச்செயல் ஆகாது என்று கூறி மன்னர் கொடுத்த கொடையை உறுதி செய்தது பல தனிப்பட்ட அரசுகளின் மன்னர்கள் தங்களிடையே ஒரு ஒப்பந்தம் செய்து அதன் விளைவாக அரசுகள் இணைந்து புதிய பெப்சு மாநிலம் 20—8—1948-ல் தோன்றி விட்டதால், இவ்வாறு ஒப்பந்தம் செய்து கொண்ட நாடுகளின் குடிமக்கள் இணைப்பினால் பெப்சு மாநிலத்தின் குடிமக்களாக அந்தத் தேதியிலிருந்து ஆகி விட்டார்கள். எனவே, 1952-ல் மன்னரின் கொடையை நிராகரித்த செயல் ஒரு நாடு தனது குடிமகனுக்கு எதிராகச் செய்த செயலாகவே கருத வேண்டும். அது இறைமை நிகழ்ச்செயலாகாது.

ஒரு நாடு தனது சுதந்திரத்தை ஓரளவு இழந்திருக்கலாம் எடுத்துக் காட்டாக தற்காப்பு, அயல்நாட்டு உறவு முதலிய அதிகாரங்களை வலிமையுள்ள வேறு ஒரு நாட்டுக்கு மாற்றம் செய்திருக்கலாம். அப்போது அந்நாடு கட்டுப்பாட்டுக்குள்ளான நாட்டின் மீது இறைமை நிகழ அதிகாரம் செய்ய முடியுமா? வலிமையுள்ள நாடு ஒன்றினைச் சார்ந்திருப்பதால் ஒரு நாடு தனது முக்கியமான அரசு அல்லது இறைமைப் பண்புகளை இழக்காமல் இருந்தால் அது இறைமை நிகழ்ச்செயல்களைப் பொறுத்தவரை சுதந்திரமான தனி நாடாகவே கருதப்படும்.

14. கூட்டுரு அல்லது கார்ப்பரேஷன்

(Corporation)

கூட்டுரு அல்லது கார்ப்பரேஷன் இரண்டு வகைப்படும். முதலாவது கூட்டுருத் தனிமம் (Corporation Sole). இது ஒரே சமயத்தில் ஒரு உறுப்பினர் மட்டுமே கொண்டு தொடர்ந்து இயங்குவது. இது ஒரு தனி உறுப்பினர் வரிசையாய்த் தொடர்ந்து வர நிலைபெறுவதாகும். எடுத்துக்காட்டாக, மன்னர், பல்கலைக் கழகத் துணைவேந்தர், மாநில ஆட்சித் தலைவர் அல்லது ஆளுநர், குடியரசுத் தலைவர் ஆகியோரைச் சொல்லலாம். இரண்டாவது, கூட்டுறவு குழுமம் (Corporation Aggragate). இது ஒரே சமயத்தில் பல உறுப்பினர்களைக் கொண்டதாகும். எடுத்துக்காட்டாக, பதிவு செய்யப்பட்ட கம்பெனிகள், நகர் மன்றங்கள் ஆகியவற்றைச் சொல்லலாம். இவை சட்டப்படி நபராகவே கருதப்படும் கற்பனை நபர்கள் (artificial persons) ஆகும். சட்டத்தின் கண்ணோட்டத்தில் உயிர் உள்ள நபர்களைப் போலவே இவையும் கடமையும், உரிமையும் கொண்டவை. இவை நாடாளுமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டப்படி தோன்றலாம் அல்லது அரசு அதிகாரப்படியோ, வழமைப்படியோ இயங்குவதாக இருக்கலாம். இவை எவ்வளவு தோன்றியிருப்பினும் சில பொதுவான இயல்புகள் கொண்டவை. அவற்றிற்குத் தனிப்பெயர், முத்திரை, நீடித்து நிலவும் தன்மை ஆகியன உண்டு. கூட்டுறவில் உறுப்பினர்கள் அனைவரும் மாண்டு விட்டாலும் கூட்டுரு தொடர்ந்து நிலவும். இவை உயிரில்லா நபர்கள் ஆதலால், நேரடியாக ஒருவருக்குத் தீங்கிழைக்க முடியாது. எனவே, இவற்றைச் சார்ந்திருக்கிற முகவர்கள், பணியாட்கள், உறுப்பினர் மூலமே இவை செயல்படுகின்றன. எனவே, கார்ப்பரேஷன் அல்லது கூட்டுரு செய்கின்ற தீங்கு உள்ளிட்ட செயல்கள் அனைத்தும் உண்மையில் அதன் முகவர்களும், பணியாட்களும் செய்த செயல்களேயாகும்.

எனவே, கூட்டுரு அவர்களின் செயலுக்குப் பகரப் பொறுப்பு ஏற்கும். தவிர, இயற்ருச் சட்டத்தின் கீழ் பணித்தலைவர் தமது பணியாட்களுக்கு ஆற்ற வேண்டிய கடமைகளிலிருந்து தவறும் போது பொறுப்பு ஏற்படுவது போல கூட்டுருக்களுக்கும் தனிமுறையில் பொறுப்புண்டு. சில தீங்குகளுக்குத் தீங்கெண்ணம் இருந்தால்தான் பொறுப்புண்டு. கூட்டுருகளுக்கு உடலும், உயிரும் இல்லையெனினும், அதன் முகவர்களுக்கும், பணியாட்களுக்கும் தீங்கெண்ணம் இருக்க முடியுமாதலால், அவர்கள் தங்களுக்கு உரிய பணியைத் புரியுங்கால் இழைக்கும் தீங்குகளுக்கு அவைகளது பணித்தலைவர் என்ற முறையில் கூட்டுருக்களுக்குப் பகரப் பொறுப்பு ஏற்படும்.

தீங்கியலில் வழக்கிடும் உரிமை

கூட்டுரு தனக்கு இழைக்கப்பட்ட தீங்குகளுக்கு எதிராக வழக்கிடும் உரிமையுண்டு. ஆயினும், கூட்டுருக்கள் உயிரல் பொருட்கள் ஆதலால் அவற்றிற்கு எதிராகச் சில தீங்குகளை இழைக்க முடியாது. எடுத்துக்காட்டாக, ஒரு கூட்டுருவை முறையின்றி சிறைப் படுத்துதல் (false imprisonment) இயலாது; அதனைத் தாக்க முனைதல் இயலாது; ஏன் எனில் இதைப் போன்ற தீங்குகளை தனி மனிதர்களுக்கே இழைக்க முடியும். ஒருவர் கூட்டுருவின் வாணிபப் புகழை பாதிக்கும் வகையில் அதைப்பற்றி அவதூருன அறிக்கை வெளியிட்டிருந்தால் அவர் மேல் கூட்டுரு வழக்கிடலாம். இதைப் போலவே ஒருவர் கூட்டுருவைக் கலைப்பதற்காகத் தீங்கெண்ணத்துடன் விண்ணப்பித்திருந்தால் (malicious presentation of winding-up petition) அவர்மீது கூட்டுரு வழக்கிட முடியும். கூட்டுருவின் உணர்ச்சிகளைப் புண்படுத்த முடியாது. ஏன் எனில் அதற்கு உயிர் இல்லை. ஆனல், அதன் பணப் பைக்குச் சேதம் விளைவிக்க முடியும். அவதூருன அறிக்கையை வெளியிட்டு அதன் புகழைக் கெடுக்கலாம். ஆனல் அந்தக் கேடு பணத்துக்கு ஏற்ற கேடாக இருக்க வேண்டும். கூட்டுரு தனது வருவாய் இழப்பு மட்டுமன்றி வாணிப நற்பெயருக்கு (Good-Will) ஊறு நேர்ந்தாலும் வழக்கிட முடியும்.

தீங்கிழைத்ததற்குப் பொறுப்பு

கூட்டுருக்கள் தோன்றும்போது அவை இன்ன செயல்களைப் புரிய ஏற்பட்டவை என்று அவற்றின் கூட்டுருவாக்க நிபந்தனைகள் தெளிவாக நிர்ணயிக்கின்றன. இவற்றிற்கு மாருக அவை செயல் படச் சட்டம் அனுமதிக்காது. எனவே, கூட்டுருவின் சார்பாக அதன் அதிகார வரம்புக்குட்பட்ட (intra vires) செயல்களை

முகவர்களோ அல்லது பணியாட்களோ தங்களுக்குரியப் பணியைச் செய்யும்போது செய்தால் கூட்டுருவிற்குப் பொறுப்புண்டு. எனவே, கூட்டுறவின் அதிகார வரம்புக்குட்பட்ட செயல்களை அதன் முகவர்களோ, பணியாட்களோ செய்யும்போது யாருக்காவது தீங்கிழைத்திருந்தால் அதற்குக் கூட்டுரு பொறுப்பேற்க வேண்டும். இதே சூழ்நிலையில் தமது பணியாட்கள் அவர்களுக்குரிய பணியைப் புரியும்போது தீங்கிழைத்திருந்தால் பணித் தலைவருக்கு எவ்வாறு பொறுப்பு ஏற்படுமோ அதைப்போலவே கூட்டுருக்களுக்கும் பகரப் பொறுப்பு உண்டு.

ஆனால், அவர்கள் கூட்டுருவின் அதிகார வரம்பினை மீறி (ultra vires) சட்டத்திற்கு முரணாகச் செய்யும் செயல்களுக்குக் கூட்டுருவைப் பொறுப்பாக்க முடியாது என்று கருதப்பட்டது. போல்டன் v L. & S. W. ரெயில்வே (Poulton v L. & S. W. Ry) வழக்கில் எதிர்வாதிகளின் பணியாளாகிய புகைவண்டி நிலையத் தலைவர் வாதி தனது குதிரைக்கு உரிய கட்டணம் செலுத்தாத காரணத்தால் அவரைக் காவலில் வைத்தார். பயணி தனக்குரிய கட்டணத்தைச் செலுத்தாமல் இருந்தால் அவரைக் கைது செய்ய ரெயில்வே கம்பெனிக்கு அதிகாரம் இருந்தது. ஆனால், குதிரையை கொணர்ந்ததற்காகச் செலுத்தவேண்டிய சரக்குக் கட்டணத்தைச் செலுத்தாமல் போனதற்கு வாதியைக் கைது செய்ய ரெயில்வே கம்பெனிக்கு அதிகாரம் இருக்கவில்லை. எனவே, ரெயில்வே கம்பெனிக்கு இந்த அதிகாரம் இல்லாதபோது அச்செயலைச் செய்ய புகைவண்டிநிலையத் தலைவருக்கு அது அதிகாரம் தரமுடியாது. எனவே, ரெயில்வே கம்பெனி அதன் பணியாளாகிய புகைவண்டி நிலையத் தலைவரின் செயலுக்குப் பொறுப்பாளியாகாது என்று தீர்ப்பு அளிக்கப்பட்டது. இந்தத் தீர்ப்பு அளிக்கப்பட்டபோது பகரப் பொறுப்பு முழுவளர்ச்சி பெறவில்லை; உட்கிடையான அதிகாரம் (implied authority) கொண்ட செயல்களுக்கு ஏற்படும் பொறுப்புகள் பற்றித் தெளிவான விளக்கம் தோன்றவில்லை.

அதிகார வரம்பு மீறிய செயல் என்பதற்காகப் பணியாட்களின் செயலுக்குக் கூட்டுருக்களுக்குப் பொறுப்பு கிடையாது என்ற கொள்கையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. பல வழக்குகளில் குற்றங்கள் புரிந்ததாகவும். தீங்கு இழைத்ததாகவும், கூட்டுகள் மீது பொறுப்பு சுமத்தப்பட்டுள்ளது.

தீங்கான செயல் கூட்டுருவின் அதிகார வரம்பினை மீறியதாக இருந்தாலும் அதைச்செய்யுமாறு கூட்டுரு வெளிப்படையாக அதிகாரம் வழங்கியிருந்தால் கூட்டுருவிற்குப் பொறுப்புண்டு என்

பதில் ஐயமில்லை. கூட்டுரு தனது ஆட்சிக் குழுவின் மூலமே செயல்பட முடியும். அதன் ஆட்சிக்கு ஒரு தீங்கான செயலைச் செய்ய தமது பணியாட்களுக்கு உத்தரவு இட்டிருக்கலாம்; அல்லது தீங்கான செயலை அவர் செய்த பின்னர் அதையேற்று உறுதிப்படுத்தி யிருக்கலாம். இவ்வாறு கூட்டுரு நடந்து கொண்டிருந்தால் அச்செயலைக் கூட்டுருவின் செயலாகவே கொள்ள வேண்டும். இந்த முறையிலேயே கேம்ப்பெல் *v.* பேடிங்டன் மாநகராட்சி (Campbell *v.* Paddington Corporation) வழக்கில் தீர்வு காணப்பட்டது. இவ்வழக்கில், எதிர்வாதிகளாகிய மாநகராட்சி மன்றம் தான் இயற்றிய தீர்மானத்தின்படி எட்டாம் எட்வர்டு மன்னரின் இறுதி ஊர்வலத்தைத் தனது உறுப்பினர்களும், அவர்களது நண்பர்களும் வசதியாகக் காணும்பொருட்டு நெடுஞ்சாலையில் ஒரு கட்டுமானம் கட்டியது. நெடுசாலையில் அமைந்த இந்தக் கட்டுமானம் ஒரு பொதுவான தொல்லையாக அமைந்துவிட்டது. இந்தக் கட்டுமானம் வாதி தனது வீட்டுச் சன்னல் வழியாக நெடுஞ்சாலையில் நடப்பதைக் காண முடியாமல் மறைத்து விட்டது. வாதி தனது வீட்டில் இருக்கைகள் போட்டு அங்கிருந்து மன்னரின் இறுதி ஊர்வலத்தைக் காண்பதற்காக வருபவரிடம் கட்டணம் வசூலிக்கக் கருதியிருந்தார். மாநகராட்சி அமைத்த கட்டுமானத்தின் விளைவாக தனக்கு வருவாய் தரக் கூடிய ஒப்பந்தங்களை மற்றவர்களுடன் செய்து கொள்ளக்கூடிய வாய்ப்புகளை அவர் இழந்தார். எனவே, மாநகராட்சி போட்டிருந்த கட்டுமானம் பொதுத் தொல்லையாயினும் தனிப்பட்ட முறையில் தனக்குத் தொல்லையாகவும் அமைந்து, தனக்கு தனிப்பட இழப்பு ஏற்பட்டுவிட்டதால் அதற்காகத் தீங்கீடு வேண்டி மாநகராட்சி மேல் வாதி வழக்கிட்டார். மாநகராட்சி தனக்கு அவ்வாறு கட்டுமானம் வைக்கவோ அல்லது அதை வைக்க அனுமதிக்கவோ அதிகாரம் இல்லையென்பதால், கட்டுமானம் வைத்தது அதிகார வரம்பு மீறிய செயல் ஆகும் என்று கூறி, அதிகார வரம்பு மீறிய செயலுக்குத் தனக்குப் பொறுப்பு விதிக்க முடியாது என்று எதிர்வாதம் செய்தது. இந்த எதிர்வாதத்தை ஏற்க மறுத்த நீதிமன்றம், எதிர்வாதி பொறுப்பாளியெனத் தீர்ப்பளித்தது. எனவே, தீங்காகக் கருதப்படும் செயல் தனது அதிகார வரம்பு மீறியது என்ற ஒரே காரணத்தைக்காட்டி கூட்டுருக்கள் பொறுப்பிலிருந்து தப்ப முடியாது.

கூட்டுருவாக்கம் பெறுத அமைப்புக்கள் (Unincorporated Associations)

கூட்டுருவாக்கம் பெறுத அமைப்பு சட்டபடி நபராகக் கருதப்படுவதில்லை. எனவே, அதன் பெயரில் அதன்மேல் வழக்கிட முடி

யாது; அதுவும் பிறர்மேல் வழக்கிட முடியாது. எனவே அதன் அதிகாரிகளோ அல்லது உறுப்பினர்களோ ஏதேனும் தீங்கு புரிந் திருந்தால் அவர்கள் மேல் தனிப்பட்ட முறையில் வழக்கிட வேண்டும். அவ்வாறு தீங்கிழைத்தவர் மிகப் பலராக இருந்தால் அவர்களின் சார்பாளர்களான சிலர்மேல் மட்டும் வழக்கிட நீதி மன்றத்தில் அனுமதியை நாடலாம். இதற்கு உரிமையியல் நடை முறைச்சட்டத்தில் (Civil Procedure Code) வழி செய்யப்பட டிருக்கிறது. அவ்வாறு வழக்கிடப்படும் நபர்களுக்கும், மற்ற உறுப்பினர்களுக்கும் வழக்கில் பொதுவான நலன் இருக்க வேண்டும்.

டாஃப்வேல் ரெயில்வே கம்பெனி (Taffvale Railway Co.) வழக்கில் தொழிற்சங்கம் கூட்டுருவாக்கம் பெருமல் இருந்தாலும் அதன் பதிவான பெயரில் அதன்மேல் வழக்கிட்டு, அதன் அதிகாரி கள் புரிந்த தீங்கிற்காக அதைப் பொறுப்பாளியாக்கலாம் என்று தீர்ப்பு அளிக்கப்பட்டது. இத்தீர்ப்பு பெரிய கருத்து வேறுபாடுகளுக் கும், போராட்டங்களுக்கும் வழிகோலவே, இறுதியாக 1906-ல் தொழிற்தகராறுகள் சட்டம் இயற்றப்பட்டு மாற்றம் செய்யப் பட்டது. இந்தியாவில் 1926-ல் இயற்றப்பட்ட தொழிற்சங்கங்கள் சட்டத்தின்படி (Trade Union Act, 1926) பதிவு செய்யப்பட்ட தொழிற்சங்கங்கள் அது பதிவு செய்யப்பட்டுள்ள பெயரிலேயே கூட்டுருவாகும் என்றும், அப்பெயரிலேயே அது வழக்கிடவும், வழக்கிடப் படவும் இயலும் என்னும் நிலை ஏற்பட்டது. ஆனால், தொழில் தகராறு ஏற்பட்டதன் தொடர்பாகவோ அல்லது அதைக் கருதியோ அதன் அதிகாரிகள் செய்கின்ற அச் செயலுக்காகவும். அதன்மீது வழக்கிடமுடியாது. அதன் சொத்தையும் தீங்கீடாகப் பெறமுடியாது.

ஆனால், தொழிற்சங்கம் அதன் உறுப்பினர்கள் ஈடுபட்டுள்ள தொழில் சம்மந்தப்படாத தகராறுகளுக்கும், அரசாங்கத்தை அச் சுறுத்தி கட்டாயப்படுத்துவதற்கும், மக்களுக்கு இன்னல் விளை விக்கவும், வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்தால் மேலே சொன்ன உரிமையையிழந்து பொறுப்பாளியாகக் கருதப்படும்.

15. தாயின் கருப்பையில் உள்ள சேய் (Child in the Mothers Womb)

தாய் வயிற்றில் வளரும் சேய்க்கு ஊறு விளைவித்தால் குற்ற வியலில் பொறுப்புண்டு. இந்து சட்டப்படி தாய் வயிற்றிலுள்ள சேய்க்கும் சொத்தில் பங்குண்டு. ஆயினும் தீங்கியற் சட்டப்படி தாய் வயிற்றில் உள்ள கருவுக்குக் காயம் விளைவிப்பதற்குப் பொறுப் புண்டெனத் தெளிவாகக் கூற முடியவில்லை. தாய் வயிற்றில் வளரும் சேய்க்கு (en ventre sa mere) ஊறு விளைவிக்கப்பட்டால் அதற்குத் தீங்கியலில் பொறுப்பு இல்லையென ஒரு அயர்லாந்து வழக்கில் தீர்ப்பளிக்கப்பட்டது. வாக்கர் v. ஜி. என். ரெயில்வே ஆஃப் அயர்லாந்து (Walker v. G. N. Railway of Ireland) எனும் இவ்வழக்கில் வாதியின் தாய் எதிர்வாதிக்குச் சொந்தமான புகை வண்டியில் பயணம் செய்தபோது எதிர்வாதியின் பணியாளின் கவனமின்மையால் ஏற்பட்ட விபத்தின் காரணமாக வாதி உடல் ஊனத்துடனும், வேறு குறைகளுடனும் பிறந்தார். இதற்காக எதிர்வாதியின்மேல் வாதியின் சார்பாக இடப்பட்ட வழக்கில் எதிர்வாதி குழந்தைக்கேற்பட்ட காயத்திற்குப் பொறுப்பாளியாக மாட்டார் என்று தீர்ப்பளிக்கப்பட்டது. இதற்கு இரண்டு காரணங் கள் தீர்ப்பில் சொல்லப்பட்டது. முதற்காரணம், எதிர்வாதி, வாதியின்பால் கவனத்தோடு இருக்க வேண்டிய கடமை எதுவும் கொண்டிருக்கவில்லை என்று இவ் வழக்கில் கூறப்பட்டது. குழந்தையைப் பொறுத்தமட்டில் எதிர்வாதி எந்த ஒப்பந்தமும் செய்து கொண்டிருக்கவில்லை. அக் குழந்தை இருப்பதைப் பற்றி எதிர்வாதிக்குத் தெரியாது. ஆகையால் தீங்கியலில் பொறுப்பேற் படாது.

இரண்டாவதாக, வாதிக்கு ஏற்பட்ட காயத்திற்கு எதிர் வாதியின் செயலே காரணம் என்று மருத்துவச் சான்று மூலம் தீர்மானமாகச் சொல்ல முடியவில்லை. இரண்டாவதாக சொல்லப்

படும் காரணமும் இன்று மருத்துவ இயல் அடைந்துள்ள வளர்ச்சியைக் கொண்டு பார்க்கும்பொழுது ஏற்கக் கூடியதாக இல்லை.

ஆனால் மாண்டிலியால் டிராம்வேஸ் லிமிடெட் *v.* லெவெய்ல் (Montreal Tramways Ltd. *v.* Leveille) வழக்கில் கனடா உச்ச நீதி மன்றம் எதிர்வாதியின் கவனமின்மையால் தாய்வயிற்றில் வளரும் சேய்க்கு ஏற்பட்ட காயத்திற்கு எதிர்வாதி பொறுப்பேற்க வேண்டு மெனத் தீர்ப்பளித்தது. இவ் வழக்கில், எதிர்வாதியின் கவன மின்மையால் வாதியின் தாய் டிராம் வண்டியிலிருந்து இறங்கும் போது தவறி விழுந்து காயமுற்றதன் விளைவாக இரண்டு மாதங் கழித்து கோணற் கால்களையுடைய வாதியைப் பெற்றெடுத்தாள்.

அமெரிக்க நீதிமன்றங்களும், இங்கிலாந்தைப் போலவே இதைப் போன்ற வழக்குகளில் எதிர்வாதிக்குப் பொறுப்பு இல்லை யெனத் தீர்ப்பளித்துள்ளன. எடுத்துக்காட்டாக ஸ்மித் *v.* லக் ஹார்ட் (Smith *v.* Luckhardt) வழக்கில் ஒருபெண்ணின் வயிற்றி லுள்ளகருவை வெறும் சதை வளர்ச்சியென நினைத்து அதையழிக்க எதிர்வாதி X– கதிர்களைப் பாய்ச்சியதன் விளைவாக அவளுக்கு உடல் ஊனத்துடனும், பிறவி மந்தத்துடனும் முழு வளர்ச்சியற்ற நிலையில் குழந்தை பிறந்தது. இதற்கு எதிர்வாதி பொறுப்பேற்க வேண்டியதில்லையெனத் தீர்ப்பளிக்கப்பட்டது. அண்மையில் தாலிடமைட் எனும் மருந்தை உட்கொண்ட சூலுற்ற பெண் மணிகள் பார்வையின்றியும் உடல் ஊனத்துனுடம், பிறவி மந்தத் துடனும் உள்ள குழந்தைகளைப் பெற்றெடுத்தனர். "தாலிமைட் சேய்கள்" சார்பாக மருந்து உற்பத்தியாளர்மேல் இங்கிலாந்தில் வழக்கிடப்பட்டது. இவ் வழக்கு நடைபெறும்போது எதிர்வாதி களுடன் நீதிமன்றத்துக்கு வெளியே உடன்பாடு செய்துகொண்டு விட்டபடியால், இத் துறையில் புதிய சட்டத்தை உருவாக்க நீதி மன்றத்திற்கு வாய்ப்பில்லாமல் போய் விட்டது.

வாழ்ந்து கொண்டிருக்கும் வாதிக்கு அவன் பிறக்குமுன் எதிர் வாதியின் செயல் ஒன்றினால் காயமுறுமல் இருக்க உரிமை உண் டென நாம் ஏற்றுக் கொண்டால், இவ்வாறு காயம் விளைவிப்பதைத் தீங்காக சட்டத்தில் ஏற்றுக் கொள்ளாமல் இருக்க எந்த நியாயமும் இல்லை. வாதி பிறக்குமுன் ஏற்பட்ட காயத்திற்கும், பிறக்கும் போது காணும் உடல் ஊனத்திற்கும் உள்ள காரண—காரியத் தொடர்பை மருத்துவச் சான்று மூலம் தக்க முறையில் நிரூபிக்க முடிந்தால் அவனுக்குத் தீங்கீடு தருவதற்குத் எந்த தடையும் இருக்கக் கூடாது. அரசு *v.* சீனியர் (R *v.* Senior) வழக்கில்

மருத்துவர் கவனமின்றித் தம் பணியைச் செய்ததன் காரணமாக குழந்தை பிறக்கும்போது காயமுற்றது. இதற்குக் குற்றவியலில் பொறுப்புண்டென கூறப்பட்டது. இதைப் போன்ற சூழ்நிலையில் தீங்கியலிலுய பொறுப்பு சுமத்துவதில் எந்த ஐயமும் இருக்க முடியாது. ஆயினும் பிறப்பதற்குச் சிறிது காலத்திற்கு முன்னர் காயம் ஏற்பட்டிருந்தால் காரண – காரியத் தொடர்பை நிலைநாட்டுவது எளிதல்ல. ஆயினும் தீங்கின நிலைநாட்டத் தேவையான உட்கூறுகள் அனைத்தும் உளவாயின் பொறுப்புண்டெனக் கருதலாம். இதைத் தவிர சேயின் சொத்திற்கு ஊறு அல்லது சேதம் விளைவிக்கப் பட்டால் தீங்கியலில் பொறுப்பு ஏற்படும் (ஹெல் v. ஹெல்). மற்றும் எதிர்வாதி சேயின் புகழுக்கு இழுக்கு விளைவிக்கலாம். இதற்கு தீங்கியலில் வழக்கிட சேய் அனுமதிக்கப் பட வேண்டும். எடுத்துக்காட்டாக குழந்தைப் பிறப்பதற்கு முன் அதன் தாய் முறைதவறி நடந்து தகாத உடல் உறவு மூலம் சூலுற்றாள் என்று அவதூறாக எதிர்வாதி மொழிந்திருப்பின், அக் குழந்தைக்கு அவதூறு இழைக்கப்பட்டதாகவே கருத வேண்டும். பிறவாத குழந்தைக்கு புகழ், மானம் ஆகியவை இல்லையென மறுப்பு தெரிவிக்கப்படலாம். ஆனால், புகழ் என்பது ஒருவரைப் பற்றி மற்றவர் என்ன நினைக்கிறார் என்பதேயன்றி அவர் தங்களைப் பற்றி என்ன நினைக்கிறார் என்பதல்ல. எனவே, இப்படிப்பட்ட குற்றச்சாட்டு பிறவாத குழந்தைக்கு அவதூறாக அமைவதாகவே கருத வேண்டும்.

சால்மண்டு, வின்ஃபீல்டு போன்ற தீங்கியற் சட்ட அறிஞர்கள் தாய் வயிற்றில் வளரும் சேய்க்கு விளைவிக்கப்படும் ஊறினைத் தீங்காகக் கொள்வதே முறையாகும் எனக் கருதுகின்றனர்.

16. இளவர் அல்லது உரிமை வயது வராதோர் (Minor)

வயது வந்தவர்களைப் போலவே, வயது வராதவர்களாகிய இளவர்களும் தங்களுக்குத் தீங்கு இழைத்தவர்களுக்கு எதிராக வழக்கிட முடியும். வழக்கிடும் தகுதியைப் பொறுத்தவரை வயது வந்த தந்தை போன்ற மற்றொருவரை வழக்குத் துணைவராகக் (next friend) கொண்டு அவர் மூலமே வழக்கிட முடியும் என்ற நிபந்தனையைத் தவிர வயது வந்தவருக்கும், இளவருக்கும் எந்த வேறுபாடும் இல்லை. இதற்கு முன்னர் தாய் வயிற்றில் வளரும் சேய்களும் தங்களுக்கு ஊறு இழைக்கப் பட்டிருந்தால் வழக்கிட முடியும் என்று கண்டோம்.

இனி இளவர் அல்லது வயது வராதவர் மீது தீங்கிழைத்ததாக ஒருவர் வழக்கிட முடியுமா என்று காண்போம். தீங்கியலைப் பொறுத்தவரை வயது வந்தவர்களைப் போலவே இளவர்களுக்கும் பொறுப்புண்டு. இப் பொறுப்பின் அளவிலும், தன்மையிலும் இருவருக்கும் எந்த வேறுபாடும் இல்லை. தீங்கியலில் இளவர் தாக்க முனைந்ததற்காகவும், முறையின்றிச் சிறைப் படுத்தியதற்காகவும், அத்துமீறியதற்காகவும், மோசடிக்காகவும், தங்கள் சொத்தைக் கவனமின்றிப் பயன் படுத்தியதால் அடுத்துள்ளவருக்குத் தொல்லை ஏற்படுத்தியதற்காகவும், அவதூறு புரிந்ததற்காகவும் பொறுப்பாளியாகக் கருதப்பட்டுள்ளனர். வேறு சில சட்டத்துறைகளில் குறிப்பிட்ட வயது வராதவர்கள் என்று சொல்லி அவர்கள் செய்யும் செயலுக்குப் பொறுப்பேற்படுவதில்லை. எடுத்துக் காட்டாக, குற்றவியலை எடுத்துக் கொள்வோம். இந்தியக் குற்றவியல் சட்டத்தில் 82வது பிரிவின்படி ஏழு வயதுக்குட்பட்ட குழந்தை குற்றமாகும் செயலைச் செய்யும் ஆற்றல் அற்றவன் என்ற காரணத்தால் அவன் புரியும் குற்றம் எதுவாயினும் பொறுப்பே

கிடையாது. இச் சட்டப் பிரிவு 83-ல் குற்றம் புரிந்துள்ளவர் ஏழு ஆண்டுகளுக்கு மேற்பட்டு 12 ஆண்டுகளுக்கு உட்பட்டவராகவும், தனது செயலின் தன்மையையும், விளைவையும் அறியப் போதுமான மனப்பக்குவம் அடைந்திராதவராகவும் இருப்பின் அக்குற்றத்திற்குப் பொறுப்பாளியாக மாட்டார் என்று சொல்லப் பட்டிருக்கிறது. எனவே ஏழு வயது முதல் 12 வயதுள்ள இளவருக்குக் குற்றமிழைக்கும் கருத்து இல்லையெனும் ஊகம் இருக்கிறது. இந்த ஊகம் தவறென மாறுபட்ட சான்றுகளைக் கொண்டு மறுக்கலாம். ஒப்பந்தவியலிலோ 18 வயது கழியாதவர்கள் தாங்கள் செய்து கொண்ட ஒப்பந்தத்தை, மீறியிருந்தாலும் அவர்கள் மேல் வழக்கிட முடியாது. தீங்கியல் சட்டத்தில் இதுபோன்று இளவர் அல்லது வயது வராதவர்களுக்கு விதிவிலக்கில்லை.

ஓ'பிரையன் v. மெக்நாமி (O'Brain v. McName) வழக்கில் வாதிக்குச் சொந்தமான வைக்கோற்போரை எரித்ததற்காக 7 வயதுக் குழந்தையொன்று அத்துமீறல் தீங்குக்குப் பொறுப்பாகக் கருதப்பட்டது. அத்துமீறியதாகவோ, பொருளைக் கையாடியதாகவோ, ஒருவர் இளவர் மீது வழக்கிடலாம். அச் செயல்களை செய்யத் தேவையான நோக்கம் அல்லது கருத்து இளவருக்கு இருந்தால் போதும். அச்செயலைச் செய்ததற்காக, வயது வந்தவர்களுக்குத் தீங்கியலில் ஏற்படும் பொறுப்பு இளவருக்கும் ஏற்படும். தீங்கியலில் ஒருவனின் வயதைப் பொறுத்து பொறுப்பு உண்டாவதில்லை.

ஆயினும், தீங்கிழைத்த எதிர்வாதியின் வயதை எப்போதும் கருதிப் பார்க்கவே தேவையில்லையென்று சொல்ல முடியாது. எடுத்துக் காட்டாக, ஒரு குறிப்பிட்ட தீங்குக்கு ஒருவனைப் பொறுப்பாக்க வேண்டுமானால் குறிப்பிட்ட கருத்தோடு அவன் அதைச் செய்ததாக நிரூபிக்க வேண்டியிருக்கலாம். அதாவது தீங்கிழைத்தவனுக்கு ஒரு குறிப்பிட்ட மனநிலை இருந்தது என்று நிரூபிக்க வேண்டியிருக்கும். இங்கு வயதைக் கருதிப் பார்க்கும்போது தீங்கினை இழைக்கத் தேவையான மனநிலை அவனுக்கு இல்லை யென்று காட்டலாம்.

எதிர்வாதிக்குத் தீங்கெண்ணம் அல்லது குறிப்பிட்ட நோக்கம் இருந்தால்தான் சில தீங்குகளுக்குப் பொறுப்பேற்படும். இந்நிலையில் எதிர்வாதி மிகவும் இளம் வயது கொண்டவர் என்பதால் அத்தகைய தீங்கெண்ணமோ, நோக்கமோ, அவன் கொண்டிருக்க முடியாது என்று நிரூபிக்கலாம். எடுத்துக் காட்டாக, டில்லாண்டர் v. கோசலின் (Tillander v. Gosselin) வழக்கில் மூன்று வயது

குழந்தைக்குத் தீங்கியலில் பொறுப்பில்லையெனத் தீர்ப்பளிக்கப் பட்டது. ஆனால், இளவர் ஒருவர் குற்றமற்ற நிரபராதி ஒருவரை பலமாகத் தாக்கியிருந்ததால் அச் செயலே அவரைப் பொறுப்பாளி யாக்கும். அவர் தம்மை இளவர் என்று சொல்லித் தப்பிக்க முடியாது.

கவனமின்மைக்காக ஒரு குழந்தையைப் பொறுப்பாளியாக்க வேண்டுமானால், அதே வயதுடைய குழந்தையிடம் எதிர்பார்க்கத் தக்க கவனத்தை அது காட்டத் தவறியது என்று நிரூபிக்க வேண்டும். வயது வந்தவன் ஒருவன் இதே சூழ்நிலையில் செயல் பட்டிருந்தால் அவன் கவனமில்லாதவனாகக் கருதப்பட்டிருப்பான் என்று கூறினால் மட்டும் போதாது. வாம்ஸ்லி v. ஹ்யூமனிக் (Walmsley v. Humenick) வழக்கில் 5 வயதே நிரம்பிய எதிர்வாதி கவனமின்மை என்னும் தீங்குக்குப் பொறுப்பாக மாட்டான் என்று பிரிட்டிஷ் கொலம்பியாவின் உச்ச நீதிமன்றம் (Supreme Court o British Columbia) தீர்ப்பளித்தது.

இவ்வழக்கில் 5½ வயதான வாதியும், 5 வயதான எதிர்வாதி யும் விளையாடிக் கொண்டிருக்கும்போது எதிர்வாதி வில்லிலிருந்து எய்த அம்பு கண்ணில் தைத்து வாதி காயமுற்றான். வாதியைக் குறி வைத்து எதிர்வாதி அம்பினை எய்யவில்லை இதே சூழ்நிலையில் எதிர்வாதி வயது வந்தவனாக இருந்திருந்தால் கவனமின்றி இருந் தாக கருதப்பட்டிருப்பான் என்று வைத்துக் கொண்டாலும், எதிர் வாதி பொறுப்பாளியல்லவெனத் தீர்ப்பளிக்கப்பட்டது. எதிர்வாதி கவனமில்லாச் செயலுக்காக சட்டப்படி பொறுப்பாவான் என்று சொல்லக் கூடிய மனவளர்ச்சி எய்தவில்லையென்று நீதிமன்றம் கருதியது இளவர் குற்றம் புரியும் நோக்கம் கொள்ள முடியாத வராக இருக்கலாம் அல்லது தமது செயலின் விளைவு என்னவாக இருக்கும் எனக் கருதிப் பார்க்கும் மனப்பக்குவம் இல்லாதவராக இருக்கலாம் எனவே குற்றம் அல்லது தவறு புரிந்திருந்தால்தான் பொறுப்புண்டு என்றால், இளவரைப் பொறுப்பாக்க முடியாது. ஆனால் அவர் தவறு அல்லது குற்றம் இழைத்திருந்தாலும், இல்லாவிட்டாலும் பொறுப்புண்டெனக் கருதப்படும் தீங்குகளைப் பொறுத்தவரை அவன் வயது வந்தவனைப் போலவே பொறுப்பாளி யாகக் கருதப் படுவான்.

தீங்கும் ஒப்பந்தமும்

தீங்கு புரிந்திருப்பின் இளவருக்கு வயது வந்தவரைப் போலவே பொறுப்புண்டெனக் கண்டோம். சில விதி விலக்குகளுக்குட் பட்டு இளவர் தாம் செய்து கொள்ளும் ஒப்பந்தங்களுக்குப்

பொறுப்பாளியாக மாட்டார். தான் வயது வந்துவன் எனப் பொய் புகன்று ஒப்பந்தம் செய்து கொண்டிருந்தாலும் இளவருக்கு எந்தப் பொறுப்பும் கிடையாது என்று ஒப்பந்தச் சட்டம் கூறுகிறது. எனவே தான் வயது வந்தவன் எனப் பொய் புகன்று இளவர் ஒருவர் ஒப்பந்தம் செய்து கொண்டு, பின்னர் அந்த ஒப்பந்தத்தை மீறியிருந்தாலும், தான் இளவர் என்பதால் அந்த ஒப்பந்தம் தன்னைக் கட்டுப்படுத்தாது என்று வாதிடலாம். இதைச் சட்டம் அனுமதிக்கும். ஆனால் சில சமயங்களில் ஒரே செயல் தீங்காவும் ஒப்பந்த மீறலாகவும் அமைந்து விடுவதுண்டு. அப்போது ஒப்பந்தப்படி இளவரை பொறுப்பாளியாக்க முடியாத வாதி, தீங்கியலில் வழக்கிட்டு அவரை பொறுப்பாளியாக்கி இழப்பீடு பெறக் கருதலாம். அதாவது ஒப்பந்தப்படி பெற முடியாத நிவாரணத்தைக் குறுக்கு வழியில் தீங்கியலில் வழக்கிடுவதின் மூலம் அவர் பெற அனுமதிக்கப்படுவாரா என்ற கேள்வி எழுகிறது. இதற்கு விடை யாதெனின், இளவரின் செயல் உண்மையில் ஒப்பந்தத்தை மீறிய செயலாகவே இருந்தால், வாதி அவர் மேல் தீங்கியலில் வழக்கிட முடியாது. எடுத்துக் காட்டாக ஜென்னிங்ஸ் v. ரண்டால் (Jennings v Rundall) வழக்கில் இளவர் தாம் வாதியிடம் ஒப்பந்தம் செய்து கொண்டு, வாடகைக்குப் பெற்ற குதிரையை ஒய்வின்றி அளவுக்கு மீறி ஓட வைத்ததால் அது காயமுற்றது. இந்த வழக்கு மூலம் அவர் செய்து கொண்ட ஒப்பந்தத்தை மீறியதாலேயே ஏற்பட்டது. இவ்வழக்கின் சாரம் ஒப்பந்த மீறலேயாகும். இதற்காகத் தீங்கியலில் கவனமின்மைக்காக வழக்கிட முடியாது. எதிர்வாதி தான் செய்து கொண்டிருந்த ஒப்பந்தத்தைத் தவருன முறையில் நிறைவேற்றினான் என்றுதான் கூற முடியுமே தவிர, ஒப்பந்தத் தோடு தொடர்பே இல்லாத செயலைச் செய்தான் என்று கூற முடியாது.

ஜான்சன் v. பை (Johnson v. Pie) வழக்கில் ஒரு இளவர் தமது வயதைப் பற்றிப் பொய்யான தகவலைச் சொல்லி எதிர்வாதியிடம் £ 300 கடனுகப் பெற்றார். இது வெறும் ஒப்பந்த மீறலே யாகும். இதற்காக இவர் தன்னை ஏமாற்றி விட்டார் என்று கூறி அவர் மேல் வாதி வழக்கிட முடியாது. இதைப் போலவே லெஸ்லி v. ஷைல் (R. Leslie Ltd v Sheil) வழக் கில் வாதி இளவர் தனக்கு வயது வந்து விட்டது என்று பொய் புகன்று கடன் கொடுப்பவர்களை ஏமாற்றி £ 400 கடனுகப் பெற்றார். ஆனால் வாதி வயது வந்தவரைப் போல தோற்றமளித்திருக்கலாம். ஒப்பந்த மீறலுக்காக இவர் மீது வழக்கிட முடியாமற் போனதால்

கடன் கொடுத்தவர்கள் தீங்கியலில் தாங்கள் ஏமாற்றப்பட்டதாகக் கூறி வழக்கிட்டனர். இதை நீதிமன்றம் அனுமதிக்க வில்லை. ஆனால் இவ்வாறு பொறுப்பிலிருந்து இளவர் தப்பித் தாலும் அவன் ஒப்பந்தத்தால் அடைந்துள்ள ஆதாயத்தையும், வாங்கியுள்ள சொத்தையும் நேர்மை நெறியின்படி திருப்பித் தர வேண்டும். இதைப்போலவே கடனுக்கு ஒருவரிடமிருந்து ஒரு பொருளை வாங்கும் இளவரிடமிருந்து அதன் விலையைப் பெற தீங்கியலில் கையாடலுக்காக வழக்கிட முடியாது. எனவே, வழக்கு மூலம் ஒப்பந்த மீறலில் தோன்றியிருந்தால், அதைத் தீங்கியலுக்கு மாற்ற முடியாது.

ஆயினும் சில சமயங்களில் ஒப்பந்தத்தின் அடிப்படையாக சில தீங்குகள் தோன்றியிருந்தாலும், இளவர் புரிந்த தீங்கான செயல்கள் ஒப்பந்தத்தோடு சம்மந்தப்படாதவையாக இருக்கும். இச் சூழ்நிலையில் இளவலுக்குத் தீங்கு புரிந்ததற்காகப் பொறுப்பு ஏற்படும். பர்னட் v. ஹாக்கிஸ் (Burnard v. Haggis) வழக்கில் இள வரான பர்னட் ஒரு கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக மாணவர். அவர் ஹேக்கிஸ் என்பவரிடமிருந்து குதிரை ஒன்றைச் சவாரிக்கு மட்டுமே பயன்படுத்துவதாக ஒப்புக்கொண்டு வாடகைக்குப் பெற்றார். அவர் தனது நண்பர் ஒருவரிடம் அக்குதிரையைக் கொடுத்தார். அவர் ஒப்பந்தத்திற்கு முரணாகக் குதிரையை வேலி யொன்றைத் தாண்டுமாறு செய்த முயற்சியில் குதிரை விழுந்து படுகாயமுற்று இறந்தது. எதிர்வாதி கவனமின்மைக்குப் பொறுப் பாளியாவார் என்று தீர்ப்பு அளிக்கப்பட்டது. இளவரின் செயல் குதிரையை வாடகைக்குப் பெறுமல் அது அடிபட்ட இடத்திற்கு அத்துமீறி ஓட்டிச் சென்று அதைக் கொல்வதற்கு ஒப்பானதாகும்; இது அத்துமீறிய செயலேயாகும். இது வாடகைக்கு அவர் குதிரையைப் பெற்ற செயலோடு தொடர்பற்றதாகும். இது குதிரை யின் சொந்தக்காரர் சற்றும் அனுமதிக்காத செயலாகும். ஒப்படை யாகப் பெற்ற பொருளை இளவர் ஒப்படைவு ஒப்பந்தத்தை மீறித் திருப்பித்தர மறுத்து விட்டாலும் அவர் மீது கையாடலுக்காக வழக் கிடலாம். பேலட் v. மின்கே (Ballett v. Mingay) வழக்கில் இளவர் ஒருவர் ஒலிபெருக்கிச் சாதனங்களை வாடகைக்கு எடுத்து அதை முறையின்றித் தனது நண்பரிடம் தந்துவிட்டார். அவருக்குத் தீங் கியலில் பொறுப்புண்டென நீதிமன்றம் தீர்ப்பளித்தது. அவரது உடைமையிலிருந்து பொருட்கள் கைமாறி, பின்னர் ஏற்பட்ட சூழ் நிலைகள் ஒப்படைவுஒப்பந்தத்திற்குப் புறம்பானவையாகும். அத னுடன் எந்தச் சம்மந்தமும் இல்லாதவையாகும். எனவே, இள வருக்குத் தீங்கியலில் பொறுப்புண்டு.

பெற்றோர் தங்கள் மக்கள் இழைத்த தீங்கிற்குப் பொறுப்பாளியாக மாட்டார். பெற்றோர்களுக்கு அவர்களது குழந்தைகள் இழைக்கும் தீங்கிற்குப் பொறுப்பில்லை. ஆயினும், பெற்றோர் குழந்தையைத் தமது பணியாளாகப் பயன்படுத்தியிருப்பின் அவர் புரியும் தீங்குக்குப் பணித்தலைவர் என்ற முறையில் பொறுப்பேற்க வேண்டி வரும். எடுத்துக்காட்டாக, ஒரு தந்தை தனது மகனைத் தன்னுடைய வேலையாகக் காரை எடுத்துச் செல்ல அனுமதித்திருந்தார். அவன் காரை கவனமின்றி ஓட்டிச்சென்று விபத்து ஏற்படுத்தினான். அதற்கு தந்தை பொறுப்பாளியானார். ஆனால் அவருக்குப் பொறுப்பு ஏற்படுவது மகனின் பணித்தலைவர் என்ற முறையில்தானே தவிர, தந்தையென்ற முறையில் அல்ல.

இரண்டாவதாக தன் மகன் குறும்பு செய்வதற்குத் தந்தை வாய்ப்பளித்து இருக்கலாம்; அல்லது அவர் குறும்பு செய்ய அனுமதித்து இருக்கலாம். இது தந்தையின் கவனமின்மையைக் காட்டும். இதற்குத் தந்தைக்கு பொறுப்பு ஏற்படும். நியூடன் v. எட்கர்லி (Newton v. Edgerley) வழக்கில் ஒருவர் தன்னுடைய 12 வயது மகனிடம் ஒரு 410 சுழல் துப்பாக்கியைக் கொடுத்தார். அவனுக்கு அதை எவ்வாறு சுடுவது என்று போதுமான அளவு முறையாக அவர் விளக்கிச் சொல்லவில்லை. அவன் அத் துப்பாக்கியால் கவனமின்றி சுட்டதால் ஒரு விபத்து ஏற்பட்டது. இதற்குத் தந்தை பொறுப்பாளியாவார் என்று தீர்ப்பளிக்கப்பட்டது. ஆனால் கார்லி v. காட் (Gorley v. Codd) வழக்கில் ஒருவர் துப்பாக்கி எவ்வாறு கையாளுவது என்று நல்லமுறையில் போதிய அளவு விளக்கிச் சொல்லி தன்னுடைய 15 வயது மகனிடம் 22 துப்பாக்கியைக் கொடுத்தார். எனவே, அவர் கவனமின்றி இருக்கவில்லை என்பதால் மகன் தற்செயலாக வாதியைச் சுட்டதற்குப் பொறுப்பாளியல்ல என்று தீர்ப்பளிக்கப்பட்டது. இவ்வழக்கில் சொல்லப்பட்ட சான்றின்படி 'ஏட்டுக் கல்வியில் மகன் பின்தங்கியிருந்தானே தவிர துப்பாக்கியைக் கையாளுவதில் அல்ல.'

டொனல்சன் v. மெக்னிவன் (Donaldson v. Mc.Niven) வழக்கில் 13 வயது நிரம்பிய தனது மகனிடம் ஒரு துப்பாக்கியை (Air Rifle) தந்தை கொடுத்து அதை அவன் வீட்டுக்கு வெளியே பயன்படுத்தக்கூடாது என்று எச்சரித்திருந்தார். அதை வெளியே கொண்டு சென்று பயன்படுத்தியதற்காக ஒருமுறை அவனை அடித்தும் இருந்தார். ஒரு நாள் அவருக்குத் தெரியாமல் அவன் அதை வெளியே எடுத்துச் சென்று சுட்டதில் அருகில் நின்று கொண்டிருந்த வாதியின் கண்ணில் காயம் ஏற்பட்டது. தந்தை உரிய முறையில் மேற்பார்வையிட்டார் என்றும், கவனமின்றி இருக்கவில்லை என்று கூறி அவர் பொறுப்பாளியல்லர் என்று

நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இங்கு அவரது கவனமின்மை எதுவும் இல்லை; மகனே கவனமின்றி இருந்திருக்கிறான். நாள்முழுதும் மகனைக் கண்காணித்துக் கொண்டிருக்க தந்தையால் இயலாது.

நார்த் v. வுட் (North v. Wood) வழக்கில் பெண்ணொருத்தி ஒரு நாய் வளர்த்தாள். அவளுக்கு வயது 17. எனவே, அந்நாயை அடக்கி வைத்திருக்கக் கூடிய வயது வந்தவள் அவள். அந்த நாய் ஒருவரைக் கடித்துவிட்டது. அதற்கு அவள் தந்தை பொறுப்பாளியாக மாட்டார் என்று தீர்ப்பளிக்கப்பட்டது. அந்த நாயின் மூர்க்கத்தனம் அவருக்குத் தெரிந்திருந்தாலும் அவர் பொறுப்பாளியாக மாட்டார்.

வெடி ஆயுதங்கள் சட்டப்படி (Fire Arms Act, 1968) இங்கிலாந்தில் 14 வயதுக்குட்பட்டவருக்குத் துப்பாக்கி போன்ற ஆயுதங்களைக் கொடுப்பதும், அதை அவர் ஏற்பதும் குற்றமாகக் கருதப்படுகிறது. தகுந்த மேற்பார்வையின்றி இளம் வயதினர் அவற்றைக் கையாள்வதற்குப் பல தடைகளையும் இச்சட்டம் விதிக்கிறது. இச்சட்டத்தை மீறியிருந்தால் அவர் கவனமின்றி இருந்ததாக வாதிடலாம். இது எவ்வாறு இருப்பினும், குழந்தையைக் கவனத்தோடு இருக்கும்படி தான் எச்சரித்திருந்ததாக மட்டும் கூறிப் பெற்றோர் தப்பிக்க முடியாது. ஒழுக்கத்தோடு, கீழ்ப்படியும் பண்புள்ள குழந்தைகளும் சில சமயங்களில் பெற்றோரின் எச்சரிக்கையைப் புறக்கணித்து விடலாம். பெபீ v. சேல்ஸ் (Bebee v. Sales) வழக்கில், ஒருவர் தனது 15 வயதான மகனுக்கு ஒரு துப்பாக்கியை (Air Gun) கிறிஸ்துமஸ் பரிசாகத் தந்திருந்தார். அவன் அண்டை வீட்டுச் சன்னலைத் துப்பாக்கியால் சுட்டு நொறுக்கிய பின்னரும் அவன் அத்துப்பாக்கியை வைத்திருக்க அவர் அனுமதித்தார். அவன் பின்னர் கவனமின்றி ஒரு பையனின் கண்ணில் சுட்டுக் காயப்படுத்தியபோது, தந்தை கவனமின்மைக்குப் பொறுப்பாளியாக்கப்பட்டார்.

17. மணமான பெண்கள்
(Married Women)

இங்கிலாந்தின் இயற்றுச் சட்டப்படி திருமணம் நிகழ்ந்தபின் மனைவி கணவனுடனே இரண்டற கலந்துவிடுகிறாள் என்றும் அவர்கள் இருவரும் ஒருவரே (எந்த ஒருவர் ?) என்றும் கருதப்பட்டது. திருமணம் ஆனது அவள் தன் கணவனின் "குருதியின் குருதியாய், சதையில் சதையாய்" மாறிவிடுகிறாள் என்று கருதப்பட்டது. எனவே, இருவரில் யார் தீங்கிழைத்திருந்தாலும்அவர்மேல் மற்றவர் வழக்கிட முடியாத நிலையிருந்தது. எனவே, இந்த நிலை கணவனுக்கு நல்லாதொரு வாய்ப்பாக அமைந்தது. பரந்த மனப்பான்மையுள்ள கணவர்கள் தங்கள் மனைவியர் கொண்டுவந்த சீதனச் சொத்தை தாராளமாகச் செலவழித்தனர். ஏனெனில், இதை எதிர்த்து மனைவியர் வழக்கிடமுடியாத நிலையிருந்தது. இந்த அவலநிலையை மாற்ற இங்கிலாந்தில்1882-ம் ஆண்டில் மணமான பெண்களின் சொத்துச்சட்டம் (Married Women's Property Act)இயற்றப் பெற்றது. இதன்படி மனைவி தனது சொத்தைப் பாதுகாக்கவும் அதை அழிவிலிருந்து காப்பாற்றவும் கணவனுக்கு எதிராக வழக்கிடலாம்.

ஆயினும், இந்தச் சட்டம் மனைவியின் தனிப்பட்ட, சொந்த சொத்திற்குக் கணவனுல் பாதகம் எதுவும் ஏற்படாமல் இருக்க வழி செய்ததே தவிர, மனைவியை அடித்துக்காயப்படுத்தும் கணவனின் கொடுமைக்கு எதிராக எந்தப் பாதுகாப்பும் அளிக்கவில்லை எனவே, ஒருவன் தன் மனைவியின் கடிகாரத்தை உடைத்தால் இந்தச் சட்டத்தின்படி அவன்மேல் அவள் வழக்கிடலாம். ஆனால் அவன் அவளது காலை உடைத்து விட்டால், அவள் வழக்கிட முடியாது.

கணவன் வேறொருவரிடம் பணியாற்றும்போது, அவளுக்குக் காயம் ஏற்படுத்தியிருந்தால், அவள் தன் கணவனின் பணித் தலைவர் மீது வழக்கிடலாம். அவளுக்கு ஏற்பட்ட காயத்திற்கு கண்வனே நேரடியாகப் பொறுப்பாக்க முடியாமல் போய்விட்டாலும் அவள் கணவனின் பணித்தலைவர் மேல் வழக்கிட்டு, தீங்கீடு பெறத் தடையில்லை என்று கருதப்பட்டது (புரூம் v. மார்கன்).

கணவனும் மனைவியும் ஒருவர்மீதுமற்றவர் வழக்கிட முடியாத இருந்த நிலை 1962-ல் இங்கிலாந்தில் இயற்றப்பட்ட சட்டத் திருத்தச் (கணவன், மனைவி) சட்டம் (Law Reform—Husband and Wife Act, 1962) மூலம் மாற்றப்பட்டு விட்டது. இப்போது கணவனும் மனைவியும் திருமணத்திற்கு முன் பெற்றிருந்த வழக் கிடும் உரிமையைத் தொடர்ந்து பெற்றுள்ளனர். இதன்படி கணவனை மனைவியோ ஒருவர்மீது மற்றவர் வழக்கிடமுடியும். ஆனால், அற்பமான குடும்பச் சச்சரவுகளுக்காக நீதிமன்றத்தை நாடிச்செல்வதைத் தடுக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இதன் படி வழக்குத் தொடர்வதால் எத்தரப்பினருக்கும் கணிசமான பயன் எதுவும் விளையப்போவதில்லை என்று நீதிமன்றம் கருதும் போது வழக்கின் விசாரணையை நிறுத்திவைக்க நீதிமன்றத்திற்கு அதிகாரம் உண்டு.

இதைத் தவிர இயற்றுச் சட்டத்தில் இன்னொரு பெரிய குறை இருந்தது. அதாவது ஒரு மணமான பெண் யாருக்காவது தீங் கிழைத்திருந்தால், அவள்மேல் மட்டும் தனித்து வழக்கிட முடி யாது. அவள் புரிந்த தீங்கிற்கு அவள் கணவனையும் பொறுப்பாக்கி வழக்கில் அவனையும் ஓர் எதிர்வாதியாகச் சேர்த்துக் கொள்ள வேண்டியிருந்தது. (அவளது தனிச் சொத்தின் அளவுக்கும் பொறுப்புண்டு). ஏனெனில், இயற்றுச் சட்டப்படி கணவனின்றி அவள் தனித்து இயங்க முடியாது. இதன் விளைவாக திருமண மானவன் மனைவி புரிந்த தீங்கிற்கு அப்பாவியான கணவனும் பொறுப்பாளியானான் (Edwards v. Porter). "1882-ல் இயற்றப் பட்ட சட்டம் மணமான பெண்களின் சொத்து பற்றிய சட்டம் தானே தவிர, மணமான ஆண்களின் நிவாரண சட்டமன்று" என்று கருதப்பட்டது. இந்த விதியின் அவலத்தையும் கொடுமையையும் நியூட்டன் v. ஹார்டி (Newton v. Hardy) வழக்கில் முழுமையாக உணரலாம். இவ்வழக்கில் 'அ' என்பவரின் மனைவி 'ஆ' என்பவ ரின் கணவனைக் கவர்ந்து சென்று விட்டாள். இதற்காக 'ஆ' என்பவள் 'அ' என்பவரின் மனைவியின் மேல் வழக்கிட்டார். இவ வழக்கில் தன் மனைவியைப் பறி கொடுத்துள்ளத் துயரத்தில் ஆழ்ந்திருந்த 'அ' என்பவரையும் எதிர்வாதியாகச் சேர்த்திருந்தாள்.

'அ' என்பவரை விட்டு ஓடிப்போன மனைவி தன் பண்பிழந்து, அவருக்கு மாபெரும் துரோகம் புரிந்திருந்தாள். அவளது செயலுக்கு அவர் எவ்வாறு உடன்பட முடியும்? ஆயினும் மனைவி செய்யும் தீங்கிற்குக் கணவனும் பொறுப்பாளியாவான் என்ற கொடுமையான விதியிலிருந்து 'அ' தப்ப முடியவில்லை. 1935-ம் ஆண்டு இங்கிலாந்தில் இயற்றப்பட்ட சட்டத் திருத்த (மணமான பெண்கள், தீங்கு புரிவோர்) சட்டத்தில் (Law Reform (Married Women and Tortfeasors) Act, 1935) இக்கொடுமை களைந்தெறியப் பட்டு விட்டது. இச் சட்டத்தின்படி ஒருவன் கணவன் என்ற ஒரே காரணத்திற்காகவே, மனைவி திருமணத்திற்கு முன்னரும், பின்பும் புரிந்த தீங்குகளுக்குப் பொறுப்பாளியாக மாட்டான். இருவரும் சேர்ந்து ஒரு தீங்கினைப் புரிந்திருந்தால் மட்டுமே கூட்டாகத் தீங்கு இழைத்தவர்கள் என்ற முறையில் இருவரும் பொறுப்பாளியாவார்.

இந்து, இஸ்லாமிய சட்டங்களின்படி மணமான பெண்கள்மேல் அவர்கள் இழைத்தத் தீங்கிற்காக வழக்கிடத் தடையேதும் இல்லை. இந்தியாவிலும் 1874-ல் இயற்றப்பட்ட மணமான பெண்கள் சொத்துரிமைச் சட்டத்தின்படி (Married Woman's Property Act of 1874) தீங்கியலில், மணம் புரியாத பெண்களைப் போலவே மணமான பெண்கள் வழக்கிடவும் அவர்கள் மீது வழக்கிடப்படவும் வகை செய்யப்பட்டுள்ளது. வழக்கில் அவள் பெறும் தீங்கீடு அவளது தனிச் சொத்தாகக் கருதப்படும். அவள் தரவேண்டிய தீங்கீடு அவள் தனிச் சொத்திலிருந்து கொடுக்கப்பட வேண்டும். இச் சட்டம் இந்துக்கள், புத்த மதத்தினர், சீக்கியர், ஜைனர். இஸ்லாமியர் ஆகிய மதத்தினர்களுக்குப் பொருந்தாது. இவர்கள் தத்தம் மதங்களுக்குரிய சட்டங்களால் ஆளப்படுவர். இந்து இஸ்லாமியச் சட்டங்களின்படி மணமான பெண்கள்மேல் அவர்களுடைய தனிப்பட்ட சொத்தினைப் பொறுத்தவரை வழக்கிடத் தடையில்லை; அவர்கள் மீதும் வழக்கிடத் தடையில்லை. இவ்வாறு இடப்படும் வழக்கில் கணவனை ஒரு தரப்பினராய் சேர்க்க வேண்டியது இல்லை. இந்தியச் சட்டத்தில் மனைவியின் தீங்குகளுக்குக் கணவன் பொறுப்பாளியாக மாட்டான். மனைவியின் தனிச் சொத்திற்கு கணவன் தீங்கிழைத்திருப்பின் அவள் அவன் மேல் வழக்கிடலாம். இதைப் போலவே கணவனும் தன் தனிச் சொத்திற்குத் தீங்கிழைக்கும் மனைவியின்மேல் வழக்கிடலாம்; ஆனால் தாக்க முனைதல், உடற் காயம் ஏற்படுத்துதல், அவதூறு ஆகிய தீங்குகளுக்காக கணவனும் மனைவியும் ஒருவர்மீது மற்றொருவர் வழக்கிட முடியாது.

18. பெற்ரோர், மற்றும் பெற்ரோர் நிலையில் உள்ளவர்களின் அதிகாரங்கள் (Parental and Quasi parental authority)

பெற்ரோருக்குத் தமது குழந்தையைக் கண்டிக்கவும், அடித்துத் திருத்தவும் அதிகாரம் உண்டு. குழந்தைகளுக்கு 18 வயது பூர்த்தியாகும் வரை இந்த அதிகாரம் உண்டு. அவர்களுக்கு 18 வயது ஆனதும் பெற்ரோருக்குள்ள இந்த அதிகாரம் போய் விடும். பெற்ரோர் நிலையிலிருந்து அவர்களைப் பேணி நல்லொழுக்க மும், நற்பண்பும் உடையவராக ஆக்கும் கடமையும், பொறுப்பும் கொண்டுள்ள ஆசிரியர்களுக்கும் இந்த அதிகாரம் உண்டு. ஆசிரியர் பெற்றுள்ள இந்த அதிகாரம் அவர்களிடம் பயிலும் பிள்ளைகளின் பெற்ரோர்களால் அவர்களுக்கு வழங்கப் பெற்றதாக வின்ஃபீல்டு கருதுகிரூர். ஆனுல் தற்போது நிலவும் கருத்தின்படி குழந்தைகளின் நலனைக் கருதிச் செயலாற்றும் அதிகாரம் ஆசிரியர் களுக்குத் தனிப்பட்ட முறையிலேயே உண்டு (ராம்சே ν.லார்சன்).

நெறியல்லா நெறிச் செல்லும் குழந்தைகளைத் திருத்துவதற்காக அவர்களை அடித்தும், ஓரிடத்தில் அடைத்து வைத்தும் தண்டிக் கும் உரிமை பெற்ரோர்க்கு உண்டு. ஆனுல், இவ்வாறு வழங்கப் படும் தண்டனை நியாயமானதாகவும், முறையானதாகவும், அள வுக்கு மீருமலும் இருக்க வேண்டும். பெற்ரோர்க்குள்ள இந்த உரிமையை 1933ஆம் ஆண்டு குழந்தைகள் மற்றும் இளைஞர் சட்டப்படி (Children and Young Persons Act, 1933) இங்கிலாந்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஆயினும், வயது வராத இளைஞர்களை இருட்டறையில் அடைத்து வைத்தல், வன்மையாக உதைத்தல் போன்ற கடுமையான தண்டனைகள் தருவதைச் சட்டம் அனுமதிக்காது.

இளைஞர்களைப் பள்ளிக்கு அனுப்பும் பெற்றோர் அவர்களை தகுந்த முறையில் அடித்துத் திருத்தவும், தக்க காரணத்திற்காக பள்ளியிலிருந்து விலக்கவும் ஆசிரியர்க்கு அதிகாரம் உள்ளதென்று ஏற்றுக் கொள்வதாகவே கருதவேண்டும். எனவே, பள்ளிப் பிள்ளைகளின் ஒழுக்கத்தை வளர்க்க பள்ளிக்கூடம் கடைப் பிடிக்கும் நியாயமான விதிகளுக்கும் அவர்கள் உட்கிடையாக இசைவு தந்து விட்டதாகவே கருத வேண்டும். பள்ளிக்கூட ஒழுக்க விதிகளை பெற்றோர் உண்மையில் அறிந்திராவிட்டாலும் அவ்விதிகளுக்கு இசைந்தே அவர்கள் தம் பிள்ளைகளை பள்ளிப் கூடத்திற்கு அனுப்பியதாகக் கருதப்படும். ஆனால், பள்ளிக்கூடத் தின் குறிப்பிட்ட விதியோ அல்லது வழக்கமோ தமது பிள்ளையைக் கட்டுப்படுத்தக்கூடாது என்ற நிபந்தனையின் பேரில் ஒருவர் பள்ளிக்கூடத்தில் தமது மகனைச் சேர்த்திருந்தால், ஆசிரியர் அவனை அந்த விதியையோ வழக்கத்தையோ பின்பற்ற வேண்டு மென்று வற்புறுத்தமுடியாது.

பள்ளி ஆசிரியரின் அதிகாரம் பள்ளிக்கூடத்தின் நான்கு சுவர்களுக்குள்ளே மட்டும் செலுத்தப்பட வேண்டும் என்று கூற முடியாது. அரசு v. நியூபோர்ட் ஜஸ்டிஸ் (R v. Newport Justice) வழக்கில் சிறுவன், பள்ளி விதிகளுக்கு முரணுகப் பள்ளிக்கூடம் வேலை செய்யும் காலத்தில், வீட்டுக்குத் திரும்பிய பின்னர், தெருவில் புகை பிடித்தான் என்பதற்காக அவனை ஆசிரியர் பிரம்பால் ஐந்தடி கொடுத்தார். அவரது செயல் நியாயமானது என்று நீதிமன்றம் கருதியது. பள்ளியில் ஆசிரியர் கவனித்துக் கொண்டிருக்கும்போது பிள்ளைகள் ஒழுக்கத்தைக் காட்ட அதிக வாய்ப்பில்லை, இந்த வாய்ப்பு பள்ளிக்கூடத்திற்கு வெளியிலேயும் விளையாடும்போதும் அதிகமாக இருக்கும். எனவே, பள்ளிக்கூடத் திற்கு வெளியே புகைத்துக் கொண்டோ, சண்டை போட்டுக் கொண்டோ திரியும் பிள்ளைகளை ஆசிரியர் அடித்தால் அது அவர் களுடைய உடலைத் தாக்குவதாகாது.

மனைவியை அடிக்கவோ, உதைக்கவோ கணவனுக்கு உரிமை இல்லை. மனைவியைத் திருத்தும் நோக்கத்தோடு மிதமான தண்டனை வழங்க அதிகார முண்டென முன்பு கருதப்பட்டது. ஆயினும், சமுதாயத்தில் கீழ் மட்டத்தில் உள்ளவர்கள் தங்களுக்கு இன்னும் இந்த உரிமை இருப்பதாகவே கருதிச் செயல்படுகின்றனர். இந்த உரிமை இன்று ஏற்கப்படுவதில்லை. தன்னை விட்டு ஓடிப் போன மனைவியை உதைத்து பலவந்தமாக இழுத்துக் கொண்டு வரும் உரிமையும் கணவனுக்கு இல்லை. ஆனால், கணவனை விட்டு நீங்கி தன் கள்ளக்காதலனோடு ஓடுவதற்காக தப்பிச் செல்ல முய

லும் மனைவியைத் தடுத்து நிறுத்தி அவளது மண ஒழுக்கத்தைக் காக்கும் உரிமை கணவனுக்கு உண்டென அரசு v. ஜேக்சன் (R v. Jackson) வழக்கில் சொல்லப்பட்டது.

இதைப் போலவே கடலில் செல்லும் கப்பலின் தலைவருக்கும் அதிகாரம் உண்டு. கப்பலில் பயணம் செய்பவருக்குப் பாதுகாப்பு அளிக்கவும், கப்பலில் ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் நிலை நாட்டவும் அவர் ஒரு மாலுமியையோ அல்லது கப்பலில் உள்ள பிறரையோ கைது செய்து சிறைப் படுத்த வேண்டிய தேவை ஏற் பட்டுள்ள தென்று அவர் தக்க காரணத்தோடு உண்மையில் நம்பு கிறார் என்று வைத்துக் கொள்வோம். அப்போது அவர்கள் நியாயமான முறையில் கைது செய்யவும், நியாயமான காலத் திற்குச் சிறைபடுத்தவும் அவருக்கு அதிகாரமுண்டு. இதைப் போலவே விமானத் தலைவருக்கும் அதிகாரமுண்டு.

19. பைத்தியக்காரர் (Lunatics)

பைத்தியக்காரர்கள் என்பவர்கள் நல்லது, கெட்டது அறியாதவர்கள். மன அமைதி குலைந்தவர்கள். இவர்களுக்குக் குற்ற மிழைக்கும் கருத்து இல்லை. எனவே, இவர்கள் குற்றம் எனப்படும் செயலைச் செய்யும்போது அவர்களுக்குக் குற்றவியல் சட்டத்தில் பொறுப்பு கிடையாது.

ஆனால், தீங்கியற் சட்டத்திலோ பைத்தியக்காரர்கள் புரியும் தீங்கான செயலுக்குப் பொறுப்பில்லையெனச் சொல்ல முடியாது. தீங்கியல் சட்டத்தின் நோக்கம் இழப்பு அல்லது ஊறு அடைந்த வாதிக்குத் தீங்கீடு பெற்றுத் தருவதேயல்லாமல் தீங்கினைப் புரிந்த எதிர்வாதியைத் தண்டிப்பதல்ல. எனவே, மனநோய் அல்லது மனக்கோளாறு உள்ளவனது சொத்திலிருந்தே தீங்கீடு தரப்படுவதால், அவனுக்குத் தீங்கியலில் பொறுப்பிலிருந்து விலக்களிக்கத் தேவையில்லை. குறற்வியலில் மனநோய் உள்ளவர்களைப் பொறுத்து பயன்படுத்தப்படும் மெக்நாட்டன் விதிகளை (McNaughton's Rules) உரிமையியலாகிய தீங்கியலில் பயன்படுத்த முடியாது. தவிர பைத்தியம் பிடித்தவர் செய்யும் தீமைகளுக்கும் பொறுப்புண்டு என்ற நிலை இருப்பின் அவரது உற்றாரும், உறவினரும் அவர் தீங்கு புரியாதவாறு பார்த்துக் கொள்வர். தவிர, மனநோய் உள்ளவர்கள் வாழ்வில் அனுபவிக்கின்ற துன்பங்களில் அவர்கள் புரியும் தீமைக்காகத் தீங்கீடு தருவதையும் ஒன்றாகக் கருதுவதில் தவறில்லை. ஆகவே, தீங்கியலில் மனக்கோளாறு உடையவன் அல்லது பைத்தியக்காரன் தீமை புரிந்தான் என்று சொல்வதை எதிர்வாதமாக ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை.

மாரிஸ் v. மார்ஸ்டன் (Morriss v. Marsden) வழக்கில் வாதி ஒரு உணவு விடுதி மேலாளர். அவரை உணவு விடுதியில் தங்கியிருந்தவர்களில் ஒருவராகிய எதிர்வாதி கடுமையாகத் தாக்கி

னர். பின்னர் எதிர்வாதியைக் காவலர்கள் அணுகியபோது அவர் பொய்யான பெயரையும், முகவரியையும் விவரங்களையும் சொன்னர். அவர்மேல் தாக்க முனைந்ததாகக் குற்ற வழக்கு இடப்பட்டபோது அவர் வழக்காட முடியாத நிலையில் இருந்தார். பின்னர் எதிர்வாதி தன்னைத் தாக்கி உடற்காயம் ஏற்படுத்தியதற்காக அவரிடமிருந்து தீங்கீடு கோரி வாதி வழக்கிட்டார். எதிர்வாதி தாக்கியபோது அவர் தன்னுடைய செயல் முறையற்றதென்று அறிய முடியாதபடி மனம் குழம்பியிருந்தார். எனினும், அவர் வாதியைத் தாக்க முனைந்தது தன்னிச்சையான செயல் என்றும், அவர் தனது செயலின் இயல்பையும் தன்மையையும் அறிந்திருந்தார் என்றும், நீதிமன்றம் கருதி அவர் பொறுப்பாளியாவார் என்று தீர்ப்பளித்தது.

எனவே, ஒருவன் தன்னுடைய செயலின் இயல்பை அறிந்து கொள்ளக் கூடிய நிலையில் இருக்கும்போது தன்னிச்சையாக ஒரு தீங்கான செயலைச் செய்தால், அவன் பொறுப்பாளியாகக் கருதப் படுவான். ஆனால் அவனுக்கிருந்த மனநோய் மிக கடுமையான தாக இருந்து. அவனது செயல் தன்னிச்சையான செயல் என்று சொல்ல முடியாத நிலையிருப்பின், அவனைப் பொறுப்பாளியென்று சொல்ல முடியாது. ரங்கநாகுலு *v.* முல்லக்கல் தேவஸ்வம் (Ranganagulu *v.* Mullackal Devaswom) வழக்கில் ராமநாதபுர மாவட்டத்தைச் சேர்ந்த எதிர்வாதி, வாதியினுல் நிர்வகிக்கப்பட்ட கேரளாவில் உள்ள ஒரு கோவிலுக்குள் சட்டையும், செருப்பும் அணிந்து நுழைந்து, சாமி சிலையை உடைத்து விட்டான். அவனைப் பரிசோதித்த டாக்டர் அவன் சூழ்நிலையைப் பற்றி அக்கறைக் காட்டவில்லையென்றும், இரவில் தூங்குவதில்லை என்றும், சம்பந்தம் இல்லாமல் உளறுகிறன் என்றும், காரண மின்றிச் சிரிக்கிறன் என்றும் கூறி அவன் பைத்தியக்காரன் என்று சான்று வழங்கியிருந்தார். அவன் மேல் இடப்பட்ட குற்றவழக்கு தோல்வியுற்ற பின்னர், இந்து தேவாலய வாரியம் ஆகிய வாதி, சிலையை உடைத்ததற்காகவும், தூய்மையாக்கும் சடங்கிற்காக ஏற்பட்ட செலவிற்காகவும் எதிர்வாதியிடம் தீங்கீடு கோரி வழக் கிட்டார். இவ்வழக்கில் எதிர்வாதி யார் துணையையும் நாடவில்லை. வழக்கை விசாரித்த கேரள உயர்நீதி மன்றம், எதிர்வாதி தனது செயலின் இயல்பையும் பண்பையும் தரத்தையும் அறிவானுயின் அவன் தான் செய்த செயல் தீங்கானது என்று தனக்குத் தெரியாது என்று வாதிட முடியாது என்று கூறியது.

ஆனால் தீங்கியலில் பொறுப்பேற்படத் தேவையான மனநிலை எதிர்வாதிக்கில்லை யென்பதை அவன் பைத்தியக்காரன் என்பதன்

மூலம் நிரூபிக்கலாம். தீங்கெண்ணத்துடன் குற்ற வழக்கிடல், (Malicious Prosecution), சிறப்புரிமை பெற்ற வேளையில் தீங்கெண்ணத்துடன் வெளிடயிட்ட அவதூறு, ஏமாற்றுதல் போன்ற தீங்குகளில் எதிர்வாதி தீங்கெண்ணத்துடனே அல்லது கருதியோ தீங்கிழைத்தார் என நிரூபிக்க வேண்டும். இவ் வேளைகளில் அத்தகைய மனநிலை அவனுக்கில்லையென்பதை அவனொரு பித்தன் என்பதன் மூலம் நிரூபிக்கலாம். குறிப்பிட்ட தீங்கிற்கு எதிர்வாதி பொறுப்பாளியாக அவனுக்குக் குறித்த மனநிலை இருந்தது என நிரூபிக்க வேண்டியிருக்கலாம். அப்போது அவனுக்கு அத்தகைய மனநிலை இல்லை என்பதைக் காட்ட அவன் தெளிவற்ற சிந்தை அல்லது மனநோய் உள்ளவன் என்பதை நிரூபிக்கலாம். ஆனால் உடலுக்கு இழைக்கப்படும் அத்துமீறலில் வாதியை எதிர்வாதி தாக்கக் கருதினார் என்று நிரூபித்தால் போதும். எனவே, மாரிஸ் v. மார்ஸ்டன் வழக்கில் எதிர்வாதி பொறுப்பாளி யென்று கருதப்பட்டது. அவதூறு தீங்கில் வாதியைக் குறித்த அவதூறு என்று கருதப்படும் அறிக்கையை எதிர்வாதி வெளியிட்டிருந்தாலே போதும். அவன் வாதிக்குப் பொறுப்பாளியாவான். எதிர்வாதி அவனது அறிக்கையை வெளியிடும்போது, அவனுடைய மனம் குழம்பி இருந்ததால் அதை உண்மையெனத் தவருக நினைத்து வெளியிட்டதாகச் சொல்ல முடியாது. பைத்தியக்காரன் ஒருவன் மற்றொருவருடைய சொத்தைத் தன்னுடையதென்று தவருகக் கற்பனை செய்து கொண்டோ அல்லது அதை சொத்தென்றே நினைக்காமலோ எடுத்துக் கொண்டு விட்டதாகச் சொன்னால் அதை நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளாது.

இவ்வாறு அத்துமீறல், தாக்குதல், கையாடல், அவதூறு போன்ற தீங்குகளைச் செய்யும் எதிர்வாதி, தனது சிந்தை பேதலித்திருந்ததால் தீங்காகும். அச்செயல்களைச் செய்ய சட்டப்படி காரணங்கள் இருந்ததாகத் தான் கருதியதாக எதிர்வாதம் செய்ய முடியாது எதிர்வாதி தனது செயலின் இயல்பையும் பண்பையும் அறிவானுயின், தான் செய்வது முறையற்ற செயல் என அவனுக்குத் தெரியாது என்பது எதிர்வாதமாகாது. ஆனால், அவனுடைய மனம், அளவு கடந்து குழம்பியிருந்தாலோ அல்லது அவனது செயல் தன்னிச்சையானதாக இல்லாவிட்டாலோ அவனுக்குப் பொறுப்பு இல்லை. எனவே, வலிப்பு நோய் உள்ளவன் வலிப்பு வந்த போது செய்யும் செயல் தீங்காகாது; கடும் காய்ச்சல் கண்டுள்ள ஒருவன் உளறுவது அவதூருகாது; தூக்கத்தில் நடந்து செல்லும் நோய் உள்ள ஒருவன் (Somnambulist) அவ்வாறு தூக்கத்தில் நடந்து செல்லும்போது அவன் செய்யும் செயல் தன்னிச்சையானது என்று சொல்ல முடியாது. எனவே, அதற்கு அவன் பொறுப்பாளியாக மாட்டான்.

கடும் பொறுப்பு ஏற்படும் தீங்குகளில் மனத் தெளிவின் மையை எதிர்வாதமாக நீதிமன்றங்கள் ஏற்றுக் கொள்வதில்லை ஆனால், அவனது மனம் மிகவும் குழம்பியிருந்ததால் அவனது செயல் தன்னிச்சையான செயல் அல்லவாயின் அவனுக்குப் பொறுப்பு ஏற்படாது.

கவனமின்மை இருந்தால்தான் பொறுப்பேற்படக் கூடிய தீங்குகளில் எதிர்வாதியின் நடத்தையை அவனுக்கு அறிவு அல்லது அவன் அறிந்து கொள்ளக் கூடிய வழி இருந்ததா என்பதைக் கொண்டுதான் தீர்மானிக்க வேண்டும். எதிர்வாதிக்கு இவை இல்லையென்பதைக் காட்ட அவனது மனத் தெளிவின் மையை நிரூபிக்கலாம். ஆடம்ஸன் *v.* மோட்டார் வெகிக்கில்ஸ் டிரஸ்ட் (Adamson *v.* Motor Vehicles Trust) வழக்கில், ஒருவன் கவனமின்றி மோட்டார் காரை ஓட்டி விபத்தேற்படுத்தியிருப்பின் அவன் மனத் தெளிவற்றவன் என்று எதிர்வாதம் செய்யமுடியாதென்று சொல்லப்பட்டது. எனவே, தகுந்த கவனமும் திறமையும் உள்ள ஒரு காரோட்டியிடம் எதிர்பார்க்கக் கூடிய கவனத்தையும், திறமையையும் காரோட்டுவதில் காட்டத் தவறியவன் தான் மனக் கோளாறு உடையவன் என்று கூறி பொறுப்பிலிருந்து தப்ப முடியாது.

20. பகரப்பொறுப்பு (Vicarious Liability): பணித்தலைவரும் பணியாளரும் (Master and Servent)

பொதுவாக ஒருவர் இழைக்கும் தீங்குக்கு அவரே பொறுப்பாவார் என்று கருதப்படுகிறது. ஆயினும், சில சமயங்களில் பிறர் புரியும் தீங்குகளுக்கும் ஒருவர் பொறுப்பேற்க வேண்டிய நிலை ஏற்லாம். இங்கு தீங்கு புரிந்தவர்க்குப் பதிலாக அவர் பொறுப்பேற்றுக் கொள்வதையே பகரப்பொறுப்பு என்று குறிப்பிடுகின்றோம். அதாவது 'அ' என்பவர் கவனமின்றியோ அல்லது வேறு வகையிலோ புரிந்த தீங்கினால் 'இ' என்பவருக்கு ஏற்பட்ட இழப்புக்கு 'ஆ' என்பவர் பொறுப்பாளியாகக் கருதப்படுகிறார். 'ஆ' என்பவர் 'அ' என்பவர் இழைத்த தீங்கில் எவ்வகையிலும் பங்கெடுத்துக் கொள்ளாதவராக இருக்கலாம். அவர் 'இ' என்பவருக்கு எவ்வகையிலும் கடமைப் பட்டவராக இருக்க வேண்டியதில்லை. இங்கு 'ஆ' என்பவருக்குத் தீங்கியலில் பொறுப்பேற்பட அவர் 'அ' என்பவருடன் குறிப்பிட்ட உறவு கொண்டவராக இருக்க வேண்டும். 'அ' என்பவர் இழைக்கும் தீங்கு அந்த உறவோடு குறிப்பிட்டத் தக்கவகையில் சம்பந்தப்பட்டிருக்க வேண்டும். இவ்வாறு பணியாள் — பணித்தலைவர் (servant - master), முகவர் - முதல்வர் (agent - principal), வாணிபக் கூட்டாளிகள் (partners) என்ற முறையில் ஏற்படும் உறவுகளைச் சொல்லாம். இத்தகைய உறவு உள்ளபோது பகரப் பொறுப்பு ஏற்படும்.

தீங்கினை இழைக்க ஒருவனுக்கு அதிகாரமோ, அனுமதியோ மற்றொருவர் தந்திருக்கலாம். அப்போது தீங்கிழைத்தவன் மட்டுமன்றி தீங்கிழைக்க அதிகாரம் தந்தவனும் பொறுப்பாளியாவான். முகவரின் செயலை முதல்வரின் செயலாகவே சட்டம் கருதுகிறது.

முதல்வர், முகவர் ஆகிய இருவரும் கூட்டாகவும், தனித்தனியாகவும் தீங்குக்குப் பொறுப்பாளிகளாகக் கருதப்படுவார்கள். முதல்வர் வெளிப்படையாகவோ அல்லது உட்கிடையாகவோ தீங்கான செயலைச் செய்ய முகவருக்கு அதிகாரம் வழங்கியிருக்கலாம். பொதுவாக தீங்கான செயலைச் செய்யுமாறு முகவருக்கு வெளிப்படையாக முதல்வர் அதிகாரமளிக்க மாட்டார். ஆயினும், முகவர் என்ற முறையில் தமக்குரிய கடமையைச் செய்யும்போது அவர் தீங்கு புரிந்திருந்தால், முதல்வர் பொறுப்பாளியாகக் கருதப்படுவார். சில சமயங்களில் அவர் முதல்வரின் அனுமதியோ அதிகாரமோ இல்லாமல் தீங்கான செயலைச் செய்திருக்கலாம். முகவரின் செயலை முதல்வர் ஏற்று உறுதிப் படுத்தியிருக்கலாம் (ratification). அப்போது முகவர் அத்தீங்கினை இழைக்க முதல்வரிடமிருந்து முன்னரே அதிகாரம் பெற்றுள்ளதாகவே கருதப்படுவார். ஆயினும், இவ்வாறு முதல்வர் ஏற்றுக்கொண்டு உறுதிப்படுத்தியுள்ள தீங்கான செயல் அவர் பொருட்டு முகவரால் செய்யப்பட்ட செயலாக இருக்க வேண்டும். முகவர் தமது சொந்த நலனுக்காக மட்டும் செய்துள்ள செயல்களை முதல்வர் ஏற்று உறுதி செய்ய முடியாது. இவ்வாறு தீங்குபுரியும் முகவர் ஒருவர் முதல்வருக்காகத் தாம் செயல் படுவதாகக் கூறியிருக்கலாம்; அல்லது அவரது நடத்தையிலிருந்து இது புலனுகலாம்; அல்லது அச்செயல் புரியப்பட்ட சூழ்நிலைகளிலிருந்து இதை நாம் ஊகித்துக் கொள்ளலாம். இவ்வாறு தம் முகவரின் செயலைக் ஏற்றுக் கொண்டு உறுதி செய்யும் முதல்வர், தனது சார்பாக முகவர் செய்த செயலின் இயல்பை முழுவதும் அறிந்தவராக இருக்க வேண்டும்.

வாணிபக் கூட்டாளிகள் (Partners)

வாணிபக் கூட்டாளிகள் இடையே உள்ள உறவு, முதல்வருக்கும் முகவருக்கும் இடையே உள்ள உறவினைப் போன்றதே யாகும். சாதாரணமாக வர்ணிபம் செய்யும்போது ஒரு கூட்டாளி தீங்கு செய்திருந்தால், அதனால் ஏற்படும் பொறுப்பினை மற்ற கூட்டாளிகளும் அவருடன் சேர்ந்து சமமாகப் பகிர்ந்து கொள்ள வேண்டும். ஹாம்லின் v. ஹூய்ட்டன் அண்டு கம்பெனி (Hamlyn v. Houiton & Co) வழக்கில் எதிர்வாதி வாணிப நிறுவனத்தின் இரு கூட்டாளிகளில் ஒருவர். அவர் கூட்டாளி என்ற முறையில் தமக்குள்ள பொதுவான அதிகாரத்தின்படி நடந்து கொண்டு வாதியின் எழுத்தருக்கு லஞ்சம் கொடுத்து அவரிடமிருந்து வாதியின் வாணிபம் சம்பந்தப்பட்ட சில ரகசியங்களை அறிந்துக் கொண்டார். இது வாதியும் அவரது எழுத்தரும் தம்மிடையே செய்து கொண்ட ஒப்பந்தத்தை மீறும்படி வாதியின்

எழுத்தரைத் தூண்டி விடுவதாகும். இது சட்டப்படி தீங்காகக் கருதப்படுகிறது. தீங்கான செயலைக் கூட்டாளிகள் ஒருவரே செய்திருந்தாலும், கூட்டாளிகள் இருவருமே பொறுப்பாளியாவார் என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

பணித்தலைவர் — பணியாள் (Masters - Servants)

மேலே கூறியுள்ளதைப் போலவே பணித்தலைவர் - பணியாள் உறவு இருக்கும் போதும் பதில் பொறுப்பு அல்லது பகரப் பொறுப்பு ஏற்படலாம். பணியாள் தமக்குரிய பணியைப் புரியும்போது இழைக்கும் தீங்குக்குப் பணித்தலைவர் பொறுப்பாளியாவார்.

பகரப் பொறுப்பின் தேவையையும், நியாயத்தையும் விளக்குவது எளிதன்று. இக்கொள்கை நெடுங்காலமாக இருந்து வருகிறது. இது தேவையானதென்றும் பயனளிக்குமென்றும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. முதலில் பணியாள் இழைக்கின்ற தீங்குகள் அனைத்துக்கும் பணித்தலைவரே பொறுப்பாளியாவார் என்று கருதப்பட்டது. பின்னர், பணித்தலைவரின் ஆணைக்குக்கீழ்ப் படிந்தோ அல்லது அவரது இசைவுடனோ ஒரு செயலைப் பணியாள் புரியும்போது தீங்கிழைத்திருந்தால்தான் பணித்தலைவர் பொறுப்பாளியாவார் என்று கருதப்பட்டது. கி பி. 16-ம் நூற்றாண்டின் துவக்கம் முதல் குறிப்பிட்ட செயலைச் செய்யுமாறு பணியாளுக்கு உத்தரவிட்டிருந்தால்தான் பணித்தலைவர் பொறுப்பாளியாவார் என்று கருதப்பட்டது. ஆயினும் இதையே பகரப் பொறுப்பு என்று நாம் சொல்ல முடியாது. சட்டத்திற்கு முரணான செயலைச் செய்யுமாறு உத்திரவிடுபவனும் அத்தீங்கான செயல் நேரடியாகப் புரிந்தவனுகவே கருதப்படுகிறான். குறுகியதாக அமைந்திருந்த பகரப்பொறுப்பு நாளடைவில் விரிவடைந்து, தற்கால சமுதாய, பொருளாதார வளர்ச்சிகளுக்கிசையப் புதிய உருவெடுத்தது. இதில் பெரும் பங்கு நீதிபதி சர். ஜான் ஹோல்ட் அவர்களுக்குண்டு. ஒரு பணியாளைக் குறிப்பிட்ட செயலொன்றினைச் செய்யுமாறு பணித்தலைவர் வெளிப்படையாகவே உத்தரவிட்டிருக்கலாம். இதற்குப் பணித்தலைவர் பொறுப்பாளியாவார். தவிர, பணித்தலைவரின் உட்கிடையான உத்தரவின்படியும் பணியாள் ஒரு செயலை செய்திருக்கலாம். இதற்கும் பணித்தலைவருக்குப் பொறுப்பு உண்டு. பணியாள் தமது பணியைச் செய்வதற்காக அவருக்குத் தரப்பட்டுள்ள பொதுவான அதிகாரத்தைக் கொண்டு இந்த உட்கிடையான அதிகாரம் இருப்பதை உய்துணரலாம். ஒரு செயலைச் செய்யப் பணியாளுக்கு வெளிப்படையான அதிகாரமிருப்பதை நேரடியான சான்று மூலமாகத்தான் நிரூபிக்க வேண்டும், உட்கிடையான அதிகாரமோ பணி

யாளுக்குத் தரப்பட்ட வேலையின் பொதுவான இயல்பைக் கொண்டு அறியலாம். எனவே, பணித்தலைவருக்கு ஏற்படும் பொறுப்பு புணியாளுக்குத் தரப்பட்ட பணியின் இயல்பையும் அமைப்பையும் பொறுத்து அமையும். அவர்களிடையே பணித் தலைவர் – பணியாள் உறவு இருந்ததாக முதற்கண் நிரூபிக்க வேண்டும். 1849-க்குப் பின்னர் உட்கிடையான அதிகாரம் வழங்கியிருந்தால் பணித்தலைவருக்குப் பொறுப்பு ஏற்படும் என்பதற்குப் பதிலாக பணியாள் தமக்குரிய பணியைப் புரியும் போது இழைக்கும் தீங்கிற்கும் பணித்தலைவருக்குப் பொறுப்பு உண்டு என்ற கருத்து ஏற்றுக் கொள்ளப்பட்டது.

பணியாளின் தீங்குக்குப் பணித்தலைவரை ஏன் பொறுப் பாளியாக்க வேண்டும் என்பதற்குப் பல காரணங்கள் பல்வேறு சமயங்களில் கூறப்பட்டன. முதல்வரே தீங்குக்குப் பதில் சொல்ல வேண்டும் (respondeat superior) என்று சொல்லப் பட்டது. இது பொறுப்பு யார் தலையில் விழுகிறது என்ற வெறும் முடிவைச் சொல்கிறதேயல்லாமல் அவரை ஏன் பொறுப்பாளி யாக்க வேண்டும் என்பதற்கான காரணத்தைச் சொல்வதாகாது. தம் வேலையைப் பிறரைக் கொண்டு செய்கின்றவர் தாமே அவ்வேலையைச் செய்ததாகக் கருத வேண்டும் (qui facit per alium facit per se) என்று ஒரு விளக்கம் தரப்பட்டது. இது பாராட்டத்தக்கதாயினும், முழுமையான விளக்கமாகாது. சட்டக் கொள்கையாகக் கருதப்பட்ட இந்த விதி, மாறிவரும் அரசியல், சமுதாய சூழ்நிலைக் கிசைந்ததாக உருவெடுத்தது. பகரப் பொறுப்புக்கு வேறு ஒரு காரணமும் கூறப்படுகிறது. ஒரு வேன நான் வேலைக்கு வைத்ததால்தானே அவன் தீங்கிழைக்கும் வாய்ப்பு ஏற்பட்டது! எனவே, அவன் செய்வது என் உத்தரவுக் குக் கீழ்ப்படிந்தது, என் நன்மைக்காக அல்லவா! எனவே, அவன் செய்கின்ற செயலின் விளைவுகளுக்கும் நானே பொறுப்பேற்க வேண்டியதுதானே நியாயம்? இக்காரணம் ஏற்றுக் கொள்ளக் கூடியதே யாயினும் சில சமயங்களில் பணியாளின் செயல் பணித் தலைவரின் நன்மைக்காக இல்லாததோடு அச்செயலைச் செய்யக் கூடாதென்று பணித்தலைவர் வெளிப்படையாக தடுத்திருந்தாலும், பணித்தலைவர் பொறுப்பாளியாகலாம். தவிர பணித்தலைவருக்குப் பணியாளை ஒரு செயலைச் செய்யுமாறு உத்தரவிடும் உரிமை யிருப்பதைக் கொண்டு பகரப் பொறுப்பு ஏற்படுத்தும் உறவு அவர்களுக்கிடையே யிருப்பதை அறியலாம். அதுவே இப் பொறுப்புக்கு நியாயம் என்றுகாது. பொதுவாக பணியாள் தீங்கீடு தரும் நிலையில் இல்லை. எனவே, பணவசதியுள்ளவராகிய பணித்தலைவரைப் பொறுப்பாளியாக்கப் படுகிறது என்று கூறு

வாருமுளர். இது பகர பொறுப்பின் காரணமாகாது. இது உண்மையாயினும் தற்கால பொருளாதார சூழ்நிலையில் பணித்தலைவர் தீங்கீடு தந்த பின்னர் காப்பீட்டு கழகத்திடமிருந்து அத்தொகையை நிவாரணமாகப் பெற்று விடுகிறார். இன்று தனி நபர்களைவிட பெரிய தொழில் நிறுவனங்களே பெரும்பான்மையாக பணித்தலைவர்களாக இருப்பதைக் காண்கிறோம். அந்த நிறுவனங்களின் மீது தீங்குக்காகப் பொறுப்பு சுமத்தப்பட்டால், அவை தாம் தர நேர்ந்த தீங்கீட்டுத் தொகையை தாம் விற்கும் பொருள்களின் மீது விலையையேற்றித் தமது வாடிக்கையாளர்களிடமிருந்து வசூலித்து விடுகின்றன. ஒவ்வொரு வாடிக்கையாளரும் இதற்காகத் தர நேரும் தொகை சிறியதாக இருப்பதால் அவர் இதை உணர்வதில்லை. எனவே, பணியாளின் தீங்குக்கு இறுதியில் பொறுப்பேற்பது பொது மக்களேயாகும்! இதுவே இன்றைய நிலையெனலாம்.

பகரப் பொறுப்பு ஏற்பட இரண்டு நிபந்தனைகள் உண்டு.

1. தீங்கு 'பணியாளால்' செய்யப்பட்டிருக்க வேண்டும்

2. பணியாள் தமக்குரிய பணியைப் புரியும்போது தீங்கு இழைத்திருக்க வேண்டும்.

பணியாள் என்பவர் யார்?

பணியாள் என்பவர் வேறு ஒருவருக்காக பணி புரிவதாக ஒப்பந்தம் செய்து கொண்டு அவரிடம் பணிபுரிபவர்; அவர் பணித்தலைவர் இட்ட வேலையை அவர் சொல்லியவாறு செய்ய வேண்டும். அவர் பணித்தலைவரின் உத்தரவுக்கும், கட்டளைகளுக்கும், கட்டுப்பாடுகளுக்கும் கீழ்ப்படிந்து நடப்பதாக ஒப்புக் கொண்டே வேலையில் சேர்ந்தவராவார். அதாவது, பணித்தலைவரின் கட்டளைகளின்படி பணிபுரிபவர். இதன் பொருள் என்ன வென்றால், பணித் தலைவருக்கு இன்ன வேலையைச் செய்ய வேண்டும் என்று உத்தரவிடும் உரிமையோடு, அந்த வேலையை எவ்வாறு செய்ய வேண்டும் என்று உத்தரவிடும் உரிமையும் உண்டு என்பதாகும். ஆனால் கட்டுப்பாடின்றிப் பணிபுரியும் ஒப்பந்தக்காரரோ (Independent Contractor) ஒரு குறிப்பிட்ட வேலையை முடித்துத் தருவதாக ஒப்பந்தம் செய்து கொண்டு பணி புரிபவர். அந்த ஒப்பந்தக்காரர் என்ன வேலையைச் செய்ய வேண்டுமென்று பணித்தலைவர் உத்தரவிடலாமே தவிர, அவ்

வேலையை எவ்வாறு செய்ய வேண்டுமென்று உத்தரவிட முடியாது. குறித்த வேலையை எப்படிச் செய்ய வேண்டுமென் பதையும், எவ்வளவு காலத்திற்குள் செய்து முடிக்க வேண்டுமென் பதையும் ஒப்பந்தக்காரர் தமது விருப்பத்திற்கிசையத் தாமே முடிவு செய்து கொள்ளலாம். அவர் பணித்தலைவரோடு பணி முடித்துத் தருவதாகச் செய்து கொண்ட ஒப்பந்தத்துக் கட்டுப் பட்டவரேயல்லாமல், பணித்தலைவரின் உத்தரவுகளுக்கல்ல. என்னிடம் மாதச் சம்பளம் வாங்கிக் கொண்டு எனது காரை ஓட்டுபவர் எனது பணியாள். அவர் எனது மேற்பார்வை, உத்தரவு கட்டளை ஆகியவற்றிற்கடங்கி வேலை செய்பவர். அவர் கவன மின்றி காரை ஓட்டியதால் விபத்தேற்பட்டு யாருக்காவது காயம் பட்டால் நான் பொறுப்பாளியாவேன். ஆனால் குறிப்பிட்ட இடத் திற்குச் செல்வதற்காக வாடகைக் காரை, ஏற்பாடு செய்திருந்தால், அதை ஓட்டுபவர் எனது பணியாள் அல்ல. நான் செல்லுகின்ற இடத்துக்கு அவர் என்னைக் கொண்டு செல்ல வேண்டும் என்ப தோடு ஒப்பந்தம் நின்று விடுகிறது. அவர் இன்ன வேகத்தில்தான் காரை ஓட்ட வேண்டும் என்று அவரை நான் கட்டாயப் படுத்த முடியாது. அவரது கவனமின்மையால் விபத்தேற்பட்டு யாருக் காவது காயம் ஏற்பட்டால் அதற்கு நான் பொறுப்பாளியாக மாட்டேன். அவருக்குக் கட்டளையிடவோ, கட்டுப்பாடு விதிக் கவோ எனக்கு உரிமை இல்லை. ஒரு வேலையைப் பணியாள் எவ்வாறு செய்ய வேண்டும் என்று கட்டுப்பாடு விதிக்கும் அதிகாரம் பணித்தலைவருக்குப் பொதுவாக இருப்பினும், சில தொழில்களில் பணித்தலைவர் இவ்வாறு கட்டுப்பாடு செய்யும் ஆற்றலோ, அதிகாரமோ அற்றவராக இருக்கிறார். எடுத்துக் காட்டாக, கப்பல் தலைவர், விமானம் ஓட்டுநர், மருத்துவமனையில் உள்ள மருத்துவர் ஆகியோரின் தீர்க்குப் பணித்தலைவர் பகரப் பொறுப்பேற்க வேண்டியுள்ளது என்றாலும், அவர்கள் எவ்வாறு தங்கள் பணியை செய்ய வேண்டுமென்று பணித் தலைவர் உத்தர விட இயலாது. அதற்கான தகுதி பணித்தலைவருக்கு இல்லை. அவ்வாறு கட்டுப்பாடு செய்யுந் திறமை அவருக்கிருந்தாலும், அதைச் செய்வதற்கான காலம் இல்லாதிருக்கலாம். எடுத்துக் காட்டாக, விரைவாகச் செல்ல வேண்டிய சாலையில் விரைந்து காரினைப் பணியாள் ஓட்டிச் செல்லும்போது, அவர் அருகிலேயே அமர்ந்துள்ள பணித்தலைவர் காரோட்டுவதில் வல்லவராக இருந் தாலும் அதற்குரிய நேரம் இருக்காது. பணியாள் தன் வழியிலேயே சென்று பணியை முடிக்கட்டும் என்று பணித்தலைவர் நினைக்க லாம். அதனால் பொறுப்பில்லாமல் போகாது. எனவே, தொழில் நுட்பம் அறிந்த பணித் தலைவருக்கு உத்தரவிட இயலாமலோ,

அல்லது விருப்பம் இல்லாமலோ இருக்கலாம். எனவே, அதிகாரத்தைப் பயன்படுத்தாமல் தேவையில்லை என்று அவர் இருந்து விடுவதால், அவருக்கு அதிகாரம் இல்லாமல் போகாது. மெர்சி டாக்ஸ் அண்ட் ஹார்பர் போர்டு v. காகின்ஸ் அண்டு கிரிப்பித்ஸ் லிமிடெட் (Mersey Docks and Harbour Board v. Coggins & Griffiths (Liverpool) Ltd., வழக்கில் சொல்லப்பட்டது போல, நாம் கவனிக்க வேண்டியது பணியாளுக்கு ஏதேனும் உத்தரவு இடப்பட்டிருந்ததா என்பதல்ல; வேலையை எவ்வாறு செய்தல் வேண்டும் என்று உத்தரவிட யாருக்கு உரிமையுண்டென்பதையே பார்க்க வேண்டும். இவ் வழக்கில் தீங்கிழைத்த பணியாள் சான்று கூறும்போது, 'நான் என் வேலையைச் செய்வதில் எவருடைய உத்தரவுக்கும் கட்டுப்பட்டவனல்ல' என்று கூறினாலும், அவரது கூற்றின் பொருள், 'நான் ஒரு திறமை வாய்ந்த தொழிலாளி என்பதால் தன் வேலையை யாரும் தனக்குச் சொல்லித் தர வேண்டியதில்லையென்றும், தனது வழியிலேயே சென்று அவ் வேலையைச் செய்து முடிப்பவர்' என்பது தான். ஆயினும், அவர் பணித்தலைவர் சொல்லும் வழியில் வேலையைச் செய்ய மறுத்தால், அவரது வேலையை இழக்க நேரும். பணியாளின் வேலை நேரத்தைக் கட்டுப் படுத்தும் அதிகாரம் பணித்தலைவருக்கு உண்டா என்னும் சோதனையை நாம் மேற்கூறிய சோதனைக்குப் பதிலாக எடுத்துக் கொள்ளலாம். எனவே ஒருவரது பணியைக் கட்டுப் படுத்தும் அதிகாரம் மற்றவருக்கு இருப்பதைக் கொண்டு பணியாள்-பணித்தலைவர் உறவு இருப்பதை உணர முடியுமாயினும் அவ்வாறு கட்டுப்படுத்தும் அதிகாரமில்லாதிருப்பதாலேயே பணித்தலைவர்-பணியாள் உறவு இல்லை யென்றுகிவிடாது. ஆகவே இருவருக்கிடையே பணித்தலைவர்-பணியாள் ஒப்பந்த உறவு உள்ளதா என்று அறியக், கட்டுப்பாடு செய்யும் உரிமை (Right of Control) உள்ளதா என்பது மட்டுமல்லாமல், வேறு சோதனைகளையும் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

பணித்தலைவர் பணியாள் ஒப்பந்த உறவு உள்ளதா என்றறிய வேறு சில அறிகுறிகளும் உள்ளன. அவையாவன :

1. பணியாளைத் தேர்ந்தெடுக்கப் பணித்தலைவருக்கு உள்ள அதிகாரம்.

2. பணியாளுக்கு கூலி அல்லது சம்பளம் அல்லது ஊதியம் தரும் அதிகாரம்.

3. பணியாளை வேலையை விட்டுநீக்கவும், விலக்கி வைக்கவும் பணித்தலைவருக்குள்ள அதிகாரம்.

4. தொழிற்கருவிகள், சாதனங்கள் ஆகியவை யாருக்குச் சொந்தமாவை.

5. தொழிலில் ஏற்படும் நட்டத்திற்கு யார் பொறுப்பேற்கிறார் ?

மேற் கூறிய கேள்விகளும், அறிகுறிகளும் யார் பணித்தலைவர் என்றறிய உதவும்.

பணியாளைப் பொறுத்தவரை, அவர் ஒப்புக் கொண்ட காலம் வரை பணியைச் செய்து வரவேண்டிய கடமை, பணித்தலைவர் பிறப்பிக்கும் நியாயமான உத்தரவுகளுக்கும், கட்டளைகளுக்கும் கீழ்ப்படிதல், தான் மூன்றாவது நபர்களுக்கிழைத்த தீங்கிற்காகப் பணிதலைவர் பகரப் பொறுப்பேற்பதால் அவருக்கு ஏற்படும் இழப்பீன ஈடு செய்தல் ஆகிய கடமைகள் உண்டு. மேற்கூறியன அனைத்தும் ஒருங்கே யிருக்கத் தேவையில்லை. எடுத்துக்காட்டாக, பணியாள் வேலையைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் இல்லாவிட்டாலும், பணி புரிவதற்கான ஒப்பந்தம் இருக்கலாம் என்று கண்டோம், ஒப்பந்த வாசகங்கள் அனைத்தையும் ஆராய்ந்து பார்க்கும்போது, பணி புரிவதற்கான ஒப்பந்தமாக அமையாமல் போகக் கூடும். கட்டுப்பாடு செய்யும் உரிமை மட்டும் இருப்பதைக் கொண்டு பணி ஒப்பந்தம் இருக்கிறதென்று சொல்லலா மென்றால், தனது குழந்தையின் தீங்குக்காகத் தந்தையும், கீழ்நிலை ஊழியர் புரியும் தீங்குக்காக மேல்நிலை ஊழியரும் பொறுப்பேற்க வேண்டியிருக்கும். எனவே, ஒருவன் செய்யும் வேலையின் தன்மையும், பணித்தலைவரின் தொழிலில் அவ்வேலையின் இடத்தையும் ஆய்ந்தே அவன் பணியாளர் என்று முடிவு செய்யவேண்டும்.

மருத்துவமனை வழக்குகள் (Hospitel Cases)

மருத்துவ மனையை நிர்வகிக்கும் அதிகாரிகள் மருத்துவமனையில் பணிபுரியும் சிப்பந்திகளின் கவனமின்மைக்குப் பொறுப்பாளியாவாரா ? 1942-க்கு முன்பு பணியாட்கள் தொழிலில் திறமை காட்டவேண்டிய பணிகளில் கவனமின்றி இருப்பதால் ஏற்படும் காயம், விபத்துக்கள் ஆகியவற்றிற்கு மருத்துவ மனை நிர்வாகிகள் பொறுப்பாளியாக மாட்டார் என்று கருதப்பட்டது. இவ்வாறு ஹில்லேயர் v. செயின்ட் பார்த்தலோமி யூஸ் ஹாஸ்பிடல் (Hilleyer v. St. Bartholomews Hospital) வழக்கில் கூறப்பட்டது. இவ்வழக்கில், எதிர்வாதிகளாகிய மருத்துவமனை நிர்வாகிகளின் கீழ் பணிபாற்றிய அறுவை மருத்துவரும், செவிலிகளும் கவனமின்றித் தத்தம் பணிகளைச் செய்ததன் விளைவாக வாதிக்குக்

கடுமையான உடற்காயங்கள் ஏற்பட்டன. வாதி அறுவை சிகிச்சைக்காகப் போடப்பட்டிருந்த மேசையின்மேல் அழுத்தப்பட்டிருந்தால் ஒரு கையில் சிராய்ப்புக் காயங்கள் ஏற்பட்டன. தவிர மற்ற உள்ளங்கை மேசைக்குக் கீழே வைக்கப்பட்டிருந்த கொதி நீர்க்கலத்திற்குள் விடப்பட்டிருந்ததால் வெந்துபோயிருந்தது. வாதிக்கு மயக்கம் தெளிந்ததும், தமக்குக் கடுமையான காயங்களேற்பட்டிருந்ததை உணர்ந்தார். இதற்காக அவர் எதிர்வாதிக்குப் பகரப் பொறுப்பு உண்டென வழக்கிட்டார். இவ்வழக்கில், எதிர்வாதிகள் பொறுப்பாளிகளாக மாட்டார்களென்று தீப்பளிக்கப் பட்டது. ஏனெனில், அறுவை சிகிச்சை செய்யும் மருத்துவர் போன்ரேரின் பணிகளில் மருத்துவமனை நிர்வாகிகள் தலையிட்டுக் கட்டுப்பாடு எதுவும் விதிக்கமுடியாது. செவிலியர்களையும், மற்ற சிப்பந்திகளையும் பொறுத்தவரை, திறமைகாட்ட வேண்டிய பணிகளில் ஈடுபடாதவராயினும், மருத்துவமனையில் அறுமை சிகிச்சை நடைபெறும் அறையினில் அவர்கள் பணிபுரியும் போது அறுவை மருத்துவரின் கட்டளைக்குச் கீழ்ப்படிந்தே நடக்கும் நிலையில் உள்ளனர். அறுவைக்காக அந்த அறையின் கதவு உட்புறம் தாளிடப்பட்ட பின், மருத்துவ மனை நிர்வாகிகள் அவர்கள் மேல் எந்த அதிகாரமும் செலுத்துவது இயலாது. அப்போது செவிலியர் மருத்துவரின் ஆணைகளில் குறுக்கிடவோ, அவற்றை மீறவோ இயலாது. எனவே, மருத்துவமனை அதிகாரிகள் பொறுப்பாக மாட்டார் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. அவர்கள் வெறும் நிர்வாக சம்பந்தமான அலுவல்களில் காட்டும் கவனமின்மைக்கே மருத்துவ மனை நிர்வாகிகளுக்குப் பொறுப்புண்டெனச் சொல்லப் பட்டது.

இந்தத் தீர்ப்பின் விளைவாக நிச்சயமற்ற தன்மை நிலவியது, ஆயினும், இக்கருத்து 1942-ம் ஆண்டுக்குப் பின்னர் ஏற்கப்பட வில்லை. அதற்குப்பின், மருத்துவ மனைகளில் பணி புரியும் X-கதிர் புகைப்பட நிபுணர்கள், மருத்துவமனையில் தங்கிப் பணி புரியும் மருத்துவர், முழுநேரத்துணை மருத்துவ அதிகாரி, மயக்க நிலை கொணரும் சிப்பந்திகள் ஆகியோரது கவனமின்மைக்காக மருத்துவமனை நிர்வாகிக்குப் பகரப் பொறுப்புண்டென்று ஏற்றுக் கொள்ளப்பட்டது. மருத்துவமனை நிர்வாகிகளின் பொறுப்பை பெறும் பகரப் பொறுப்பாக மட்டும் கருதாமல், சிகிச்சையை நாடி வரும் நோயாளிகள்பால் மருத்துவ மனை நிர் வாகிகளுக்குத் தக்க சிகிச்சை யளிக்க வேண்டிய முதற்கடமையும், பொறுப்பும் உண்டெனக் கருதப்படுகிறது. இது இங்கிலாந்தில் தேசிய உடல்நலப் பணிச் சட்டத்தின் (National Health Service Act, 1946) படியும்

தெளிவாக்கப்பட்டுள்ளது. தங்கள் பொறுப்பை மருத்துவமனை நிர்வாகிகள் மற்றவர்களிடம் தள்ளிவிட்டுத் தப்பித்துக் கொள்ள முடியாது.

கோல்ட் v. செக்ஸ் கவுன்ட்டி கவுன்சில் (Gold v. Essex County Council) வழக்கில், அப்பீல் நீதி மன்றம் பணி ஒப்பந்தத்தின் கீழ் முழுநேர வேலைக்கு அமர்த்தப்பட்டிருந்த ரேடியோ கிராபரின் கவனமின்மைக்கு மருத்துவமனை நிர்வாகிகள் பொறுப்பாளியாவார் என்று தீர்ப்பளித்தது. காலின்ஸ் v. ஹெர்ட் போர்ட்ஷைர் கவுன்ட்டி கவுன்சில் (Collins v. Hertfordshire County Council) வழக்கில், நிலையான பணியில் அமர்த்தப்பட்டுள்ள மருத்துவமனை சிப்பந்திகளின் கவனமின்மைக்கு மருத்துவமனை நிர்வாகிகளின் பொறுப்பு பற்றி முடிவு கூறப்பட்டது. இவ்வழக்கில், எதிர்வாதி— மருத்துவமனை நிர்வாகிகள் தங்களிடம் பணியாற்ற ஒப்பந்தம் செய்து கொண்டு மருத்துவமனையில் தங்கி வேலைபார்த்த மருத்துவ அதிகாரி அபாயமற்ற 'புரோகேய்ன்' ஊசி மருந்துக்குப் பதிலாக உயிரைப்பறிக்கும் 'கோகெய்ன்' ஊசி மருந்தைக் கவனமின்றிச் செலுத்தியதற்குப் பொறுப்பேற்க வேண்டும் என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

பின்னர் 1951-ம் ஆண்டு கேசிடி v. உடல் நலத்துறை அமைச்சகம் (Cassidy v. Ministry of Health) வழக்கில், வாதிக்கு அறுவை சிகிச்சை முடிந்தபின்னர், மருத்துவமனையின் முழு நேரப் பணியாளர்களாகிய துணைமருத்துவ அதிகாரி, இல்ல மருத்துவர், செயலாளர் ஆகியோர் அளித்த சிகிச்சையின் விளைவாக அவரது கை செயலிழந்து போயிற்று. இவர்கள் பணியாற்ற ஒப்பந்தம் செய்து கொண்டிருந்த மருத்துவமனை ஊழியர்கள். இவர்கள் திறமையும், கவனமும் காட்டவேண்டிய தொழில்களைச் செய்பவர்கள் என்ற எதிர்வாதமும் ஏற்கப்படவில்லை. இவ்வழக்கில் மருத்துவமனை நிர்வாகிகள் வாதிக்கு ஏற்பட்ட காயத்திற்குப் பகரப் பொறுப்பு ஏற்கவேண்டுமென அப்பீல் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

இரண்டு பணித்தலைவர்களையுடைய பணியாள் (Servant with two masters)

பணித் தலைவர் ஒரு குறிப்பிட்ட வேலையைச் செய்வதற்காகத் தமது பணியாளை மற்றொருவருக்குக் கடனுகத் தரலாம். அதாவது, 'அ' என்பவர் 'ஆ' என்பவரிடம் நிரந்தரமாகப் பணி புரிபவர். 'ஆ' என்பவர் 'இ' என்பவருடன் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டு தமது பணியாள் 'அ' வை தற்காலிகமாக ஒரு பணிபுரிய 'இ' யிடம் அனுப்புகிறார், 'இ' யிடம் பணி புரியும்போது 'அ' என்ப

வர் 'ஈ' என்பவருக்குத் தீங்கிழைக்கிறார். 'ஈ' என்பவருக்கு ஏற்பட்ட காயத்திற்குப் பகரப் பொறுப்பு ஏற்க வேண்டியவர் யார்? 'ஆ' என்பவரா அல்லது 'இ' என்பவரா? 'அ' என்பவர் தாம் செய்கின்ற அந்தப் புதிய வேலையைப் பொறுத்தவரை 'இ'க்குப் பணியாள் ஆவார். ஆனால் மற்ற காரியங்களைப் பொறுத்தவரை அவர் பணியைக் கடனாக வழங்கிய நிரந்தரப் பணித்தலைவருக்கே பணியாளாகத் தொடர்ந்து இருப்பார். இவ்வாறு வேறு ஒரு நபரிடம் ஒருவர் பணிபுரியக் கடனாக அனுப்பப் பட்டுள்ளாரா என்பதை இதற்கெனச் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தைக் கொண்டு அறிய வேண்டும். ஒப்பந்தம் எதுவும் எழுதிக் கொள்ளாமல் பணியாள் அனுப்பப்பட்டிருந்தால், அவர்களிடையே உள்ள உடன்பாட்டின் தன்மையையும், பணியாள் மீது எத்தகைய கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளதென்பதையும் கொண்டு இதைத் தீர்மானிக்க வேண்டும். அவ்வாறு வேலை செய்யும் பணியாள் புரியும் தீங்குக்கு எந்தப் பணித்தலைவர் பொறுப்பாளி யாவார் என்பதைத் தீர்மானிக்க வேண்டிய தேவை ஏற்படலாம். இரு பணித்தலைவர்களுமே பொறுப்பாளிகளாக முடியாது. இவ்வாறு இரு பணித்தலைவர்கள் உள்ளபோது, தீங்குச் செயலைச் செய்தபோது பணியாள் எந்தப் பணித்தலைவருக்காக அந்தப் பணியைச் செய்து கொண்டிருந்தாரோ அவரே பொறுப்பாளி, தற்காலத் தொழிலமைப்பு முறையில் இதைத் தீர்மானிக்க வேண்டிய தேவை தோன்றியுள்ளது. எடுத்துக் காட்டாக, ஒரு கட்டிட வேலை நடைபெறும்போது அங்கு பணித்தலைவரின் பணியாட்களும், ஒப்பந்தக்காரரின் பணியாட்களும், துணை ஒப்பந்தக் காரரின் பணியாட்களும் வேலை செய்வதைக் காண்கிறோம். இவ் வேலைகளில் தீங்கிழைக்கும் பணியாட்களின் பணித்தலைவர் யார் எனும் கேள்விக்கு விடை காண வேண்டியுள்ளது.

இக் கேள்விக்கு விடை, முக்கியமாக இரு பணித்தலைவர் களில் யாருக்குப் பணியாளை அவர் என்ன வேலை செய்ய வேண்டும் என்று மட்டுமல்லாமல், எந்த முறையில் அதைச் செய்ய வேண்டுமென்று உத்தரவிடும் அதிகாரம் இருக்கிறது என்பதைப் பொறுத்ததாகும். மெர்சி டாக்ஸ் & ஹார்பர் போர்டு v. காக்கின்ஸ் & கிரிப்பித்ஸ் (லிவர்பூல்) லிமிடெட் (Mersey Docks & Harbour Board v. Coggins & Griffiths (Liverpool) Ltd.) வழக்கில், நகர்த்திச் செல்லக் கூடிய பாரந்தூக்கிப் பொறியை (Mobile Crane) இயக்க 'ஆ'என்பவரை 'அ' என்பவர் வேலைக்கு அமர்த்தியிருந்தார். அவர் அந்தப் பாரந்தூக்கிப் பொறியையும் 'ஆ' வையும் கப்பலில் சரக்கேற்றும் வேலையில் (Stevldore) ஈடுபட்டிருந்த 'இ' என்பவருக்குக் கடனாகத் தந்திருந்தார். 'அ'வும்

'ஆ' வும் செய்து கொண்ட ஒப்பந்தத்தில் 'ஆ' என்பவர் 'இ' என் பவரின் பணியாளராக இருக்க வேண்டும் என்றும், ஆனால் அவருக்கு ஊதியம் 'அ' தான் தருவார் என்றும், அவரை வேலையில் இருந்து நீக்க 'அ' வுக்கு மட்டுமே அதிகாரம் உண்டென்றும் கூறப்பட்டிருந்தது. கப்பலில் சரக்கேற்றும்போது, 'ஆ' கவன மின்றிப் பாரந்தூக்கும் பொறியை இயக்கியதால் 'ஈ' என்பவருக் குக் காயம் ஏற்பட்டது. இந்த விபத்தேற்பட்டபோது 'ஆ' செய்ய வேண்டிய வேலைகளை உடனடியாக மேற்பார்வையிடுவதற்கும், கட்டுப்பாடு விதிப்பதற்கும் 'இ' என்பவருக்கு அதிகாரம் இருந்தது. எடுத்துக்காட்டாக, எந்தப் பொருளை நகர்த்திச் செல்ல வேண்டும் என்பது போன்ற உத்தரவுகளை அவர் இடலாம்; ஆனால் 'ஆ' தமது பாரந்தூக்கிப் பொறியை எவ்வாறு கையாள வேண்டும், எந்த விசையில் எவ்வாறு இயக்கி ஓட்ட வேண்டும் என்பது போன்ற உத்தரவுகளையிட அவருக்கு அதிகாரம் இல்லை. இவ்வழக்கில் பொதுவான அல்லது நிலையான பணித்தலைவர் (General of Permanent Master) ஆகிய 'அ' என்பவர் (துறைமுக வாரியம்) 'ஆ' வின் கவனமின்மைக்குப் பொறுப்பாளியாவார் எனப் பிரபுக் கள் சபை தீர்ப்பளித்தது. கொள்கையளவில் பார்த்தாலும் வாரியம் போன்ற நிரந்தரப் பணித்தலைவர்கள் தங்கள் பொறுப்புக் களை வேறு ஒருவருக்குத் தள்ளிவிட அனுமதித்தல் சமுதாய நன்மைக்கு உகந்ததல்ல. அந்த நபர் பொருளாதாரத்தில் நொடித்துப் போனவராக (insolvent) இருந்துவிட்டால், காய முற்றவருக்கு நிவாரணம் கிடைக்காது போய் விடலாம். ஆயினும் எல்லாச் சூழ்நிலைகளுக்கும் பொருந்தக் கூடிய வகையில் பொது வான விதியொன்றினைச் செய்வது எளிதல்ல. போர்ட்டர் பிரபுவின் கருத்துப்படி, யார் சம்பளம் தருபவர் ? பணியாளை வேலையிலிருந்து விலக்கக் கூடிய அதிகாரம் யாருக்கு இருக்கிறது ? மாற்றுவேலை எவ்வளவு காலத்துக்கு நீடிக்கும் ? எப்படிப்பட்ட யந்திரங்கள் பயன்படுத்தப் படுன்றன ? போன். றவற்றையெல்லாம் கருதிப் பார்த்தே முடிவு செய்ய வேண்டும். நுட்பமான விலையுயர்ந்த பொறியையும், அதை இயக்குபவரையும் வாடகைக்கு விட்டிருந் தால் நிரந்தரப் பணித்தலைவர் அந்தப் பொறியை எவ்வாறு இயக்குவதென்று உத்திரவிட அதை வாடகைக்குப் பெற்றுள்ள வரை அனுமதிக்கக் கருதியிருக்க மாட்டாரென்றும், அதை இயக்கும் முறையைக் கட்டுபடுத்தும் அதிகாரத்தைத் தொடர்ந்து தம்மிடமே வைத்துக் கொண்டிருப்பார் என்றும் எளிதாக ஊகிக்கலாம். ஏனெனில், அந்தப் பொறி அவருக்குச் சொந்த மானது. அதைப் பத்திரமாக, பழுதடையாமல் வைத்திருப்பதில் பணியாள் அவருக்குப் பொறுப்பாளியாவார். ஆனால் இயக்கு

பவரின் பணிமட்டும் வாடகைக்குத் தரப்பட்டிருந்தால் வாடகைக்குப் பெற்றவர் தான் செய்ய விரும்பும் வேலையைப் பணியாளுக்குச் சொல்வது மட்டுமல்லாமல் அதை எவ்வாறு செய்ய வேண்டும் என்று சொல்லும் அதிகாரமும் கொண்டிருப்பார். இம்முறையில் அவர் பணியாள் மீது கட்டுப்பாடு விதிக்கலாம். பொதுவான பணித்தகுவர் திறமையையும், நுட்பமும் தேவைப்படும் தொழில் (skilled labour) செய்பவரை வேறு ஒருவரிடம் வேலை செய்ய அனுப்பியிருந்தால், அவர் பொதுவான பணித்தகுவருக்கே தொடர்ந்து பணியாளாக இருந்து வருகிறார் என்பதே பொது விதியாகும். எனவே, இங்கு முடிவான கேள்வி, குறிப்பிட்ட உத்தரவு இட்டவர் யார்? அல்லது, குறிப்பிட்ட உத்தரவு ஏதேனும் இடப்பட்டதா என்பதல்ல; வேலை எவ்வாறு செய்யப்பட வேண்டும் என்று உத்தரவிட யாருக்கு அதிகாரம் இருந்தது என்பதேயாகும்.

மெர்சி டாக்ஸ் வழக்கில், கட்டுப்பாடு விதிக்கும் அதிகாரம் பொதுவான அல்லது நிலையான பணித்தகுவருக்கே இருக்கிறது என்று சட்டம் ஊகித்துக் கொள்ளும் என்றும், வாடகைக்குப் பெற்றவரிடமே கட்டுபாடு விதிக்கும் அதிகாரம் இருந்ததென்று நிரூபிக்க வேண்டியது பொதுவான பணித்தகுவரின் பொறுப்பாகும் என்று கூறப்பட்டது. இதை நிரூபித்தல் எளிதல்ல.

ஸ்ரீமதி குண்டன் கௌர் v. சங்கர் சிங் (Smt. Kundan Kaur) Shanker Singh) இதைப் போன்றதொரு வழக்காகும். பஞ்சாப் உயர்நீதி மன்றம் தீர்ப்பளித்த இவ்வழக்கில் சங்கர் சிங் என்பவரும் தார்லோக் சிங் என்பவரும் ஒரு கம்பெனியின் கூட்டாளிகள். அவர்கள் தங்களுக்குச் சொந்தமான லாரியையும், அதை ஓட்டும் பணியாளையும் ஜவஹர் டிரான்ஸ்போர்ட் கம்பெனிக்கு வாடகைக்கு விட்டிருந்தனர். ஜவஹர் டிரான்ஸ் போர்ட் கம்பெனியில் பணியாற்றும் போது ஒரு நாள் அவர் சரக்கினை ஓரிடத்திலிருந்து வேறு ஓர் இடத்திற்குக் கொண்டு செல்லும்போது ஜவஹர் டிரான்ஸ்போர்ட் கம்பெனியின் வேறு ஒரு பணியாளகிய குண்டன்லால் என்பவர் அவர் அருகில் அமர்ந்திருந்தார். கவனமின்றி வேகமாக லாரியை அவர் ஓட்டியதால் ஏற்பட்ட விபத்தில் குண்டன்லால் மாண்டார். இதற்காக தீங்கினை கோரி குண்டன்லாலின் மனைவி இட்ட வழக்கில் பொதுவான பணித்தகுவராகிய சங்கர் சிங், தார்லோக் சிங் பொறுப்பாளிகளா அல்லரா என்ற கேள்வி எழுந்தது. லாரி ஓட்டுபவரின் பணி மட்டும் பொதுவான பணித்தகுவரிடமிருந்து, தற்காலிகப் பணித்தகுவருக்கு மாற்றப்பட்டிருந்தது என்றும், அவரைக் கட்டுப்படுத்தும் அதிகாரம்

பொதுவான பணித்தலைவருக்கே இருந்தது என்றும் உயர்நீதி மன்றம் கூறியது. எனவே, சங்கர் சிங்கும், தார்லோக் சிங்கும் குண்டன்லாலின் மனைவிக்குத் தீங்கிடு தரவேண்டும் என்று தீர்ப்பளிக்கப் பட்டது. ஒப்பந்தப்படி, பணியாளின் பணியே வேறு ஒருவருக்கு மாற்றம் செய்யப்பட்டு விட்டது என்ற எதிர்வாதம் ஏற்றுக் கொள்ளப் பட்டால் ஒவ்வொரு முறையும் புதிய வாடகை ஒப்பந்தம் செய்து கொள்ளும் போதும் பணியாள் புதிய வேலைக்குப் போய் விடுவதாகக் கருத நேரும். இவ்வாறு தாள்தோறும் ஒருவர் பணியை மாற்றிக் கொள்வதாக ஆகும். இதன் விளைவாக குழப்பமும், வசதியின்மையுமே ஏற்படும்.

ஹல் *v.* லீஸ் (Hull *v.* Lees) வழக்கில் நோயாளிக்குத் தகுதி யுள்ள செவிலியர்களை (Nurse) தருகின்ற வேலையை எதிர்வாதி செவிலியர் சங்கம் செய்து வந்தது. வாதியிடம் அவர்கள் இரு செவிலியர்களை அனுப்பினர். ஒப்பந்தப்படி வாதியே அவர்களது பணிக்கான ஊதியத்தைத் தரவேண்டியிருந்தது. அவர்கள் கவனமின்மையின் காரணமாக மிகச் சூடாக இருந்த சுடுநீர்ப் புட்டி வாதியின் உடலில் பட்டு அவருக்குக் கடுமையான காயம் ஏற்பட்டது. செவிலியர் சங்கத்தின் மீது வாதி வழக்கிட்டதில், வாதிக்குத் தொண்டு புரிந்த செவிலியர் இருவரும் அப்போது வாதின் பணியாட்களாகவே செயல் பட்டனர் என்றும், அவர்களது கவனமின்மைக்கு செவிலியர் சங்கம் பொறுப்பாளியாகாது என்றும் தீர்ப்பளிக்கப் பட்டது.

முறைமையாக இல்லாமல், ஒரேவொரு சமயம் மட்டும் ஒரு பொருளை ஒப்படைத்தலால் ஏற்படும் பொறுப்பு (Liability for casual delegation)

'அ' என்பவருக்கு ஒரு பொருள் சொந்தமானது என்று வைத்துக் கொள்வோம். அவர் அப்பொருளை தம் கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டே, தனக்குச் சம்பந்தமும், அக்கறையும், நலனும் உள்ள காரியத்துக்காக அதைப் பயன்படுத்த 'ஆ' என்பவரை அனுமதிக்கிறார். அவ்வாறு அப்பொருளை 'ஆ' பயன் படுத்தும்போது கவனமின்றி 'இ' என்பபருக்குக் காயம் ஏற் படுத்தினால்.'அ' என்பவர் 'இ' என்பவருக்குப் பொறுப்பாளி யாவார்.

ஆர்ம்ராட் *v.* கிராஸ்வில் மோட்டார் சர்வீஸஸ் லிமிடெட் (Ormrod *v.* Crosville Motor Service Ltd) வழக்கில், ஒரு காரின் சொந்தக்காரராகிய 'அ' என்பவர் அக்காரை பிரிக்கென்ஹெட் என்னும் ஊரிலிருந்து மான்டிகார்லோ என்னும் ஊர்வரை ஓட்டி

வர 'ஆ' என்பவரைக் கேட்டுக் கொண்டார். அந்தக் காரில் இருவரும் அங்கிருந்து பொதுவான மகிழ்வுப் பயணம் ஒன்றைத் துவக்க எண்ணியிருந்தனர். பிரிக்கென்ஹெட் நகரை விட்டுப் புறப்பட்ட சிறிது நேரத்தில் 'ஆ' கவனமின்றிக் காரினை ஓட்டியதன் விளைவாக விபத்தேற்பட்டது. அதற்கு 'அ' பொறுப்பாளியாவார் என்று தீர்ப்பளிக்கப்பட்டது. இங்கு காரின் சொந்தக் காரருக்கு அதைக் கட்டுப்படுத்தும் உரிமையோடு அதைக் கடனுகப் பெற்றவர் பயன்படுத்திய காரியத்தில் ஒரு நலனும் (interest) இருந்தது. எனவே அவர் பொறுப்பாளியானர். ஆனல் இவ்விரண்டில் ஏதேனும் ஒன்று இல்லாவிட்டால் அப்பொருளின் சொந்தக்காரர் பொறுப்பாளியாகக் கருதப்பட மாட்டார்.

ஹீவிட் v. பான்வின் (Hewitt v. Bonvin) வழக்கில், இளைஞன் ஒருவன் தன் தோழியர் இருவரையும் அவர்கள் இல்லத்திற்குக் கொண்டு போய் விடத் தன் தந்தையின் காரை எடுத்துச் சென்றான். அவனது பயணத்தில் தந்தைக்கு எந்த நலனே அக்கறையோ, ஆதாயமோ இல்லை. எனவே, அவன் கவனமின்றிக் காரோட்டியதால் ஏற்பட்ட விபத்திற்கு அவர் பொறுப்பாளியாக மாட்டார் என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

சௌதிரி v. கில்லட் (Chowdhary v. Gillot) வழக்கில், வாதி தனது காரைப் பழுது பார்க்கப் பட்டறைக்குக் கொண்டு சென்றார். அதை அவர் பட்டறையில் ஒப்படைத்த பின்னர், அருகிலிருந்த புகை வண்டி நிலையத்திற்குச் செல்ல விரும்பினர். எனவே, பட்டறையின் பணியாள் வாதியின் காரை ஓட்டி வர, அக்காரிலேயே வாதி சென்றார். அத்தொழிலாளியின் கவனமின்மையால் ஏற்பட்ட விபத்தில் வாதி காயமுற்றார். இவ்வழக்கில், அக்காரினை ஓட்டுவதைக் கட்டுப்படுத்தும் உரிமை பட்டறைக்காரிடமே இருந்தது. ஏனெனில் வாதி தமது காரை ஏற்கெனவே ஒப்படைத்து விட்டபடியால், வாதியிடம் கட்டுபடுத்தும் உரிமையில்லை. எனவே, பட்டறைக்காரரின் பணியாள் கவனமின்மைக்காக வாதி அவர் மேல் வழக்கிடலாமெனத் தீர்ப்பளிக்கப்பட்டது. காயமுற்றவர் வாதியாக இல்லாமல் சாலையில் சென்று கொண்டிருக்கும் மூன்றாவது நபராக இருந்திருப்பினும், வாதி அதற்குப் பொறுப்பாளியாக மாட்டார்.

பிரிட் v. கால்மோய் (Britt v. Galmoye) வழக்கில், பணியாள் ஒரு நாள் தமது வேலையைச் செய்து முடித்ததும், நாடகம் ஒன்றைப் பார்க்கத் தமது நண்பர்களை அழைத்துச் செல்லத் தமது பணித்தலைவரின் காரைத் தந்துதவுமாறு கேட்டார். பணித்

தலைவரும் காரைக் கொடுத்தார். பணியாள் காரைக் கவனமின்றி ஓட்டியதால் ஏற்பட்ட விபத்திற்குக் கார் சொந்தக்காராகிய பணித்தலைவர் பொறுப்பாளியாக மாட்டார் என்று தீர்ப்பளிக்கப் பட்டது. இங்கு பணியாள் சென்ற பயணத்தில் பணித்தலைவருக்கு எந்த நலனும் இல்லையென்பது தெளிவாகும். உயர்நிலை ஊழியர் தமக்குக் கீழ் பணியாற்றுவோர் புரியும் தீங்குக்குப் பொறுப்பாளி யாக மாட்டார்.

ஒரு உயர்நிலை ஊழியர் தமக்குக் கீழ் வேலை செய்பவர்களின் பணித்தலைவர் ஆக மாட்டார். எனவே, அவர்கள் புரியும் தீங்குக் கும் அவர் பொறுப்பாளியாக மாட்டார். அவர்கள் அனைவரும் ஒன்றுகவே பணிபுரியும் பணியாட்களாகவே கருதப்படுவர். வேலை நிறுத்த மறியலில் தொழிற் சங்கத்தால் ஈடுபடுத்தப் பட்டிருக்கும் தொழிலாளர் அத் தொழிற்சங்கத்தின் பொது செயலாளர் அல்லது நிர்வாகக் குழுவின் பணியாட்களாக மாட்டார்.

பணியாள் தமக்குரிய பணியைப் புரியும்போது விளைந்த தீங்காக இருக்க வேண்டும்

பணித்தலைவர் பணியாளின் தீங்குக்குப் பொறுப்பாளியாக வேண்டுமானால், முதற்கண் அவர்களிடையே பணித்தலைவர்— பணியாள் உறவுமுறை இருக்கவேண்டும் என்று கண்டோம். இரண்டாவதாக, பணியாள் இழைத்த தீங்கு அவரது வேலையைச் செய்யும்போது ஏற்பட்டதாக இருக்க வேண்டும். தீங்கு எவ்வாறு பணியாளுக்குரிய பணியைச் சார்ந்ததாக இருக்க முடியும் ? சட்டத்தை மதிக்கின்ற பண்புள்ள எந்தப் பணித் தலைவரும் ஒருவனைப் பொய் சொல்வதற்காகவோ, மற்றவர்களை உதைப்பதற்காகவோ அல்லது கவனமின்றி நடக்கவோ வேலைக்கு வைத்துக் கொள்ள மாட்டார். ஆனால், பணியாளுக்குரிய பணி என்று நாம் குறிப்பிடுவது இதையல்ல. ஒரு தீங்கான செயல் பணியாளுக்குரிய பணியைச் செய்யும் போது புரியப்பட்டதாகக் கருதப்பட வேண்டுமானால், அது—

1. பணித்தலைவரால் நேரிடையாகவோ, அல்லது உட்கிடை யாகவோ அதிகாரமளிக்கப்பட்ட தீங்கான செயலாக இருக்க வேண்டும் அல்லது,

2. பணித்தலைவரால் அனுமதிக்கப்பட்ட செயலை முறையற்ற தும், அனுமதியற்றதுமாகிய வழியில் செய்வதாகவே இருக்க வேண்டும் .அதாவது அனுமதிக்கப்பட்ட காரியத்தை அனுமதிக்கப் படாத முறையில் செய்வதாகவோ, அல்லது பணியாள்

அமர்த்தப் பட்டுள்ள வேலையைச் செய்யும்போது ஏற்படக்கூடிய தொன்முக இருக்க வேண்டும். எனவே, பணித்தலைவர் தாம் அதிகாரம் வழங்கியுள்ள செயல்களுக்கு மட்டுமன்றி, அதிகாரம் வழங்கியிராத செயல்களுக்கும் பொறுப்பாளியாகலாம்; ஆகவே, ஒரு பணித்தலைவர் தமது பணியாளைச் செய்யுமாறு அதிகாரம் வழங்கியுள்ள செயல்களுக்கு மட்டுமல்லாமல் அவற்றைச் செய்கின்ற வழிமுறைகளுக்கும் பொறுப்பாளியாவார். ஒரு பணியாள் கவனத்தோடு செய்யுமாறு அனுமதிக்கப் பட்டுள்ள செயலைக் கவனமின்றிச் செய்தாலும், நேர்மையாகச் செய்யுமாறு அனுமதிக்கப்பட்டுள்ள செயலை மோசடியாகச் செய்தாலும், சரியாகச் செய்யுமாறு அனுமதிக்கப் பட்டுள்ள செயலைத் தவருகப் புரிந்தாலும், பணித்தலைவர் அவரது கவனமின்மைக்கும், மோசடிக்கும், தவறுக்கும் பொறுப்பாளியாவார். குறிப்பிட்ட செயல் பணியாள் தமக்குரிய பணியைப் புரியும்போது செய்யப்பட்டதா என்பதை அவ்வழக்கின் சூழ்நிலைகளை வைத்தே தீர்மானிக்க வேண்டும். இங்கு பணியாள் செய்ய அதிகாரம் தரப்பட்ட செயல்களையே செய்தாலும், அவற்றை நெறி பிறழ்ந்து முறை தவறிச் செய்கின்றார், இச்செயல்கள் யாவும் அவருக்குரிய பணியைச் செய்வதன் பாற்பட்டவையாகும். எனவே, இவற்றிற்கும் பணித்தலைவருக்குப் பொறுப்புண்டு. இச்செயலைச் செய்யுமாறு பணித்தலைவர் அதிகாரம் தரவில்லை என்பது உண்மையே. ஆயினும் அச்செயல்களைச் செய்ய அவர் முகவர்களை தன்னுடைய இடத்தில் நியமித்தாகவே கருத வேண்டும். ஒரு குறிப்பிட்ட வேலையைச் செய்யத் தனது முகவராகப் பணியாளை நியமிக்கும் செயலைச் செய்த பணித்தலைவர் அந்த வேலையைச் செய்ய அவர் கையாண்ட முறைகளுக்கும் பொறுப்பேற்க வேண்டும். இதுவே நியாயமாகும்.

பணியாள் செய்த செயல் பணித்தலைவரால் அனுமதிக்கப் படாததும், முறையற்றதுமாகிய செயலாக இருப்பினும் அனுமதிக்கப்பட்ட செயலினைச் செய்யக் கூடிய ஒரு வழியெனச் சொல்லத் தக்க விதத்தில் அச்செயலோடு தொடர்புடையதாக இருக்க வேண்டும். அவ்வழி முறையற்றதாக இருக்கலாம். ஆனால் அனுமதிக்கப்பட்ட செயலோடு தொடர்பற்றதாக, பணியாளின் சொந்த நலன் கருதிச் செய்யப்பட்டதாக அது அமையக் கூடாது. அப்போது அவர் எதைச் செய்ய அனுமதிக்கப்பட்டாரோ அதை முறையற்றதும் அனுமதிக்கப் படாததுமான முறையில் செய்ததாகக் கருதப்பட மாட்டார். அவர் அனுமதிக்கப்படாத செயலையே செய்வதாகக் கருதப்படுவார் எடுத்துக்காட்டாக, நான் எனது பணியாளை ஒரு பொருளை வாங்கி வருமாறு கடைவீதிக்கு அனுப்பு

கிறேன். அங்கு அவன் ஒரு கடையிலிருந்து ஒரு பொருளை எடுத்துக் கொண்டு ஓடி விடுகிறான். என் பணியாள் புரிந்த களவு அவனுக்குரிய பணிக்குப் புறம்பானது. எனவே, அவன் புரிந்த கையாடலுக்கு நான் பொறுப்பாளியாக மாட்டேன். மற்ற தீங்குகளில் உள்ளது போல, இங்கு கொள்கையைச் சொல்வது எளிது பயன்படுத்துவது கடினம்.

பணியாளின் கவனமின்மை (Negligence)

பணியாள் கவனத்தோடு செய்ய வேண்டிய செயலைக் கவனமின்றிச் செய்ததால் மூன்றாவது நபர் ஒருவருக்குக் காயம் அல்லது இழப்பு ஏற்பட்டிருந்தால், பணித்தலைவர் பொறுப்பாளியாவார். சில சமயங்களில் பணித்தலைவர் கொடுத்துள்ள வேலையைச் செய்யும்போது, பணியாள் தனது சொந்த வசதிக்காகவும் மகிழ்ச்சிக்காகவும் ஒரு செயலைச் செய்யலாம். அப்போது அவர் தனது சொந்தக் 'களியாட்டத்தில் ஈடுபட்டிருத்ததாக' (on a frolic of his own) நாம் கருத வேண்டும். இச் செயலுக்கும் பணித்தலைவர் பொறுப்பாளியாவாரா என்னும் கேள்வி எழுகிறது. சில வழக்குகளில் கூறப்பட்ட தீர்ப்புகளைக் கொண்டு இதற்கு நாம் விடை காணலாம்.

ஸ்டேடன் *v.* நேஷனல் கோல் போர்டு (Staton *v.* National Coal Board) வழக்கில் பணியாள் நிலக்கரிச் சுரங்கமொன்றில் முதலுதவிப் பணியாளராக வேலை பார்த்தார். அவர் ஒரு நாள் தனது கூலியைப் பெற்றுக் கொள்ள அலுவலகத்திற்குப் போக வேண்டியிருந்தது. அதற்காக அவர் குறுக்கு வழியில் தமது மிதிவண்டியில் கவனமின்றி விரைவாகக் கார்களினூடே புகுந்து செல்லும்போது வாதியை இடித்ததால் வாதிக்குப் படுகாயம் ஏற்பட்டு, மாண்டு போனார். பணியாளின் செயல் கவனமின்றியமைந்திருப்பினும், பணியோடு தொடர்பற்றதென்று கூற முடியாது. இது அவருக்குரிய பணியைப் புரியும் வகையில் செய்யப்பட்ட செயலாகவே நீதிமன்றம் கருதியது. எனவே, அவரது கவனமில்லாச் செயலுக்குப் பணித்தலைவர் பொறுப்பாளியெனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

சில சமயங்களில் பணியாளின் செயல் அவரது பணியைச் செய்யும் வகையில் ஏற்பட்டதென அறுதியிட்டுச் சொல்ல முடியாமல் இருப்பினும், அவரது பணியோடு தொடர்புடையதாகவே கருதப்படலாம். எடுத்துக் காட்டாக, தமது பணித்தலைவரின் பணிமனைக்கு வெளியேயுள்ள ஓரிடத்திற்குப் பணிபுரிய அனுப்பப்

பட்ட பணியாள் தமது நண்பகல் உணவுக்காக அந்த இடத்திலி ருந்து வேறு ஓர் இடத்திற்கு கவனமின்றி காரினை ஓட்டிச் சென்ற தால் ஏற்பட்ட விபத்திற்குப் பணித்தலைவர் பொறுப்பாளியெனக் கருதப்பட்டார். அவர் இச்செயலைத் தமக்குரிய பணியைச் செய்யும்போது புரிந்ததாகவே கருதப்பட்டது. ஹார்வி v. ஆர். ஜி. ஓ' டெல் லிமிடெட் (Harvey v. R. G. O' Dell Ltd) வழக்கு இதை யொத்ததாகும்.

ஆனால், காரினை ஓட்டிச் செல்லும் பணியாள் தமது முறையான பாதையை விட்டுச் சென்று முற்றிலும் புதிய பயணத்தை மேற் கொண்டுள்ளதாகச் சொல்லத்தக்க வகையில் மிகவும் விலகிச் சென்றிருக்கக் கூடும். அப்போது அவர் புரியும் தீங்கு பணியின் பாற் பட்டதாகாது. இதைப் போலவே பணியாள் தமக்குக் காரினை பயன்படுத்தத் தரப்பட்ட அதிகாரத்தை முறையின்றிப் பயன்படுத்தி சிற்றுண்டி அருந்தச் செல்லும்போது கவனமின்றி காரோட்டி விபத்தேற்படுத்தியிருக்கலாம். இதற்குப் பணித் தலைவர் பொறுப்பாளியாக மாட்டார். ஹில்டன் v. தாமஸ் பர்டன் (ரோட்ஸ்) லிமிடெட் (Hilton v. Thomas Burton (Rhodes) Ltd). வழக்கில் நாட்டுப்புற மொன்றில் கட்டிடம் ஒன்றை இடிக்கும் வேலைக்குச் செல்லத் தனது காரினைப் பயன்படுத்தப் பணித்தலைவர் பணியாட்களுக்கு அனுமதி தந்திருந்தார். அரை நாள் மட்டும் வேலை செய்த அவர்கள் ஓய்வு எடுத்துக் கொள்ளவும், ஏழு மைல் தொலைவில் உள்ள ஓர் உணவு விடுதிக்குத் தேநீர் அருந்தச் செல்லவும் முடிவு செய்தனர். அவர்கள் பணித்தலைவர் காரில் அந்த உணவு விடுதிக்குப் புறப்பட்டனர். அவர்கள் அந்த உணவு விடுதியை நெருங்கியதும், தங்கள் எண்ணத்தை மாற்றிக் கொண்டு திரும்பினர். அவ்வாறு திரும்பி வரும்போது, ஒரு பணி யாள் கவனமின்றிக் காரினை ஓட்டியதன் விளைவாக விபத்தேற்பட்டு காரிலிருந்த மற்றொரு பணியாள் மாண்டார். அந்தப் பணியாட் கள் 'தங்கள் சொந்தக் களியாட்டத்தில்' ஈடுபட்டிருந்தால் பணித் தலைவர் பொறுப்பாளியாக மாட்டார் என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

வில்லியம்ஸ் v. ஜோன்ஸ் (Williams v. Jones) வழக்கில் எதிர்வாதியின் பணியாளான தச்சர் வாதியின் கொட்டகையில் தமது பணியைச் செய்து வந்தார். இவர் தச்சு வேலையில் ஈடுபட் டிருந்தபோது கவனமின்றித் தமது புகைக் குழாயைப் பற்ற வைத்த தால் ஏற்பட்ட தீ விபத்தில் வாதியின் கொட்டகை எரிந்து சாம்ப லாகியது. இதை விசாரித்த நீதிமன்றத்தின் பெரும்பான்மையான நீதிபதிகள் தச்சர் கவனமின்றிச் செய்த செயலுக்கும். அவரது பணிக்கும் எந்த சம்பந்தவுமில்லையென்று கூறி பணித்தலைவருக்குப்

பொறுப்பில்லை யென்று தீர்ப்பளித்தனர். நீதிபதிகள் மெல்லர், பிளாக்பர்ன் பெரும்பான்மையினரின் கருத்திலிருந்து மாறுபட்டு பணியாள் புகைக்கும் குழாயில் கவனமின்றித் தீப்பற்ற வைத்த செயல் அவரது கடமைகளை முறையற்றதாகிய வழியினில் செய்வதேயாகும் என்று கூறினர்.

சென்ச்சுரி இன்ஸ்யூரன்ஸ் கம்பெனி *v* நார்த்தர்ன் அயர்லந்து ரோட் டிரான்ஸ்போர்ட் போர்டு (Century Insurance Co. *v.* Northern Ireland Road Transport Board) வழக்கில் மேற் கூறிய வில்லியம்ஸ் *v.* ஜோன்ஸ் வழக்கில், சிறுபான்மையாக அமைந்த நீதிபதிகளின் கருத்து ஏற்றுக் கொள்ளப்பட்டது. இவ் வழக்கில், ஒரு லாரி ஓட்டுநர் அந்த லாரியிலிருந்து ஒரு நிலத்தினடியிலுள்ள தொட்டியொன்றில் பெட்ரோலை நிரப்பிக் கொண்டிருந்தார். அப்போது அவர் சிகரெட் புகைக்க விரும்பி, அதைப் பற்ற வைப்பதற்காகத் தீக்குச்சியை உரசிக் கவனமின்றித் தரையில் எறிந்தார். அதன் விளைவாகப் பெரும் தீ விபத்தும், வெடியும் ஏற்பட்டு வாதியின் சொத்துக்குப் பெரும் சேதம் விளைந்தது. இவ் வழக்கில் லாரி ஓட்டுநரின் பணித்தலைவர் சேதத்திற்குப் பொறுப்பாளியாவார் என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

பணியாள் சிகரெட் பற்ற வைத்த செயல், அவரது வசதிக்கும் இன்பத்திற்கும்தான் என்பது உண்மையே. ஆயினும் சிகரெட் பற்ற வைக்கப்பட்ட சூழ்நிலையைப் புறக்கணித்து, அதைத் தனிப்பட்ட செயலாகக் கருத முடியாது. அச்செயல் அவரது வேலையைக் கவனமின்றிச் செய்யும் ஒரு வழிமுறையாகவே கருத வேண்டும். எனவே, சிகரெட் புகைத்துக் கொண்டே பெட்ரோலைக் கொட்டும் செயல், பெட்ரோலைக் கவனமின்றிச் செய்யும் ஒரு வழியாகவே கருத வேண்டும். தொழிலாளரின் தற்கால பழக்க வழக்கங்களையும் நாம் கருதிப் பார்த்தே முடிவு செய்ய வேண்டும்.

கே. *v.* ஐ. டி. டபுள்யூ. லிமிடெட் (Kay *v.* I. T. W. Ltd.) வழக்கில், எதிர்வாதியின் கிடங்கில் பொது உதவி மேலாளராகப் பணியாற்றுபவர் வேறு ஒரு நிறுவனத்துக்குச் சொந்தமான டீசல் பேருந்து வண்டியைப் பின்னோக்கி ஓட்டியபோது ஏற்பட்ட விபத்தில் வாதி காயமடைந்தார். அக் கட்டிடத்தில் உள்ள கார்களை ஓட்டுவதும் அவரது பணிகளில் ஒன்றாகும். தவிர, அந்தக் கிடங்கிற்குள் ஒரு காரினைக் கொண்டு செல்ல வழியேற்படுத்துவதற்காகவே அவர் அந்த டீசல் பேருந்தினை அவ்வாறு பின்னோக்கி ஓட்ட நேர்ந்தது இது அவருக்குரிய பணியை கவனமின்றிப் புரியும் வகையாகவே கருதப்பட்டது.

பணியாள் தனக்கிட்ட பணியைப் புரியும்போது இழைக்கும் தீங்குக்குப் பணித்தலைவர் பொறுப்பாளியாவார் என்றும், அவரது செயல் அவரது கடமைக்குப் புறம்பானதாயின் பணித்தலைவர் பொறுப்பாக மாட்டார் என்றும் கண்டோம். ஓ' ரெய்லி v. நேஷனல் ரெயில் அண்ட் ட்ராம்வே அப்ளையன்சஸ் லிமிடெட் (O' Reilly v. National Rail and Tramway Appliances Ltd.) வழக்கில் எதிர்வாதியின் பட்டறையில் பணியாட்கள் இரும்பு உடைத்துக் கொண்டிருந்தபோது, அக்குவியலில் வெடிக்காத குண்டு ஒன்று இருந்தது. வாதியுடன் பணிபுரியும் ஒரு தொழிலாளி அவனை நோக்கி, 'நீ எதற்காகப் பயப்படுகிறாய். அதை அடி' என்று தூண்டிவிடவே, வாதி சம்மட்டிபால் அதை அடிக்கவே குண்டு வெடித்தது. இதனால் ஏற்பட்ட இழப்புக்கு எதிர் வாதி பொறுப்பாளியல்லவெனத் தீர்ப்பளிக்கப்பட்டது. வாதியின் நண்பர் அவரைத் தூண்டிய இக்குறும்புச் செயல் பணியோடு தொடர்பற்ற செயல். எனவே, எதிர்வாதி பொறுப்பாளியாக மாட்டார்.

பணியாளின் தவறுதல் (Mistake of Servant)

சில சமயங்களில் தன் பணித்தலைவருக்கு நன்மை செய்வதாக எண்ணிக் கொண்டு தவறுதலாகச் செயலாற்றும் பணியாளும் உண்டு. பணியாள் தமது பணித்தலைவருக்காக ஒரு குறிப்பிட்ட செயலைச் செய்யப் பெற்றுள்ள அதிகாரத்தைத் தவறுதலாகவோ அல்லது மிகையாகவோ பயன்படுத்தலாம். அதன் விளைவாக, ஒருவருக்கு ஊறு அல்லது இழப்பு ஏற்படலாம். இதற்குப் பணித் தலைவர் பொறுப்பாளியாவார்.

பேய்லி v. மான்செஸ்டர், ஷெஃப்பீல்ட் & லிங்கன்ஷைர் ரெயில்வே கம்பெனி (Bayley v. Manchester, Sheffield & Lincolnshire Railway Co.) வழக்கில், பணியாள் எதிர்வாதி ரயில்வே கம்பெனியில் சுமையாளாக வேலை செய்து வந்தவர். ஒரு நாள் வாதி மெக்கில்ஸ்பீல்ட் என்ற ஊருக்குச் செல்வதற்காக, மெக்கில்ஸ்பீல்ட் செல்லும் புகைவண்டியில் அமர்ந்திருந்தார். எதிர்வாதியின் பணியாளிடம் வாதி தாம் மெக்கில்ஸ்பீல்ட் போவ தாகச் சொல்லியும், அவர் அதைக் கேளாது பலவந்தமாக வாதியை வண்டியிலிருந்து இறக்கிவிட்டார். அவர் அவ்வண்டி போகா தெனத் தவருகக் கருதியே வாதியை வண்டியிலிருந்து இறக்கி விட்டார். எதிர்வாதிகள் அவர்களது பணியாளின் தவறுதலான செயலுக்குப் பொறுப்பாளியாவார் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. எதிர்வாதியின் பணியாளுக்குப் பயணிகள் சரியான புகைவண்டி யில் ஏறுவதற்கும், அவர்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்

வதற்கும், தக்க உதவிகளைச் செய்வதற்கும் அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது. எனவே, இங்கு எதிர்வாதியின் பணியாள் செய்தது அவர் செய்ய அதிகாரம் அளிக்கப்பட்டிருந்த செயலைத் தவறுன முறையில் செய்ததேயாகும்.

பணியாளுக்குத் தனது பணித்தலைவரின் சொத்தைப் பாதுகாக்கும் அதிகாரம் உண்டு. பணியாள் தனது பணித்தலைவரின் சொத்துக்கு ஆபத்தேற்படும்போது அதைக் காப்பாற்றத் தகுந்த நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளலாம். இவ்வாறு செய்ய அவருக்கு உட்கிடையான அதிகாரம் உண்டு. இவ்வாறு அவர் காப்பாற்றக் கடமைப்பட்டுள்ள பணித்தலைவரின் சொத்துக்கு உண்மையிலேயே ஆபத்தேற்பட்டிருக்கலாம்; அல்லது அச் சொத்திற்கு ஆபத்தேற்பட்டிருப்பதாக அவர் கருதியதற்குத் தகுந்த காரணங்கள் இருக்கலாம். அப்போது அவர் அதைக் காப்பாற்றச் செய்த செயல் அனுமதிக்கப்படாத செயல்களில் ஒன்றாகவே இருக்கலாம். எனினும், அச்செயலைச் செய்ய அவருக்கு உட்கிடையான அதிகாரம் தரப்பட்டதாகவே கருதவேண்டும். போலண்டு v. பார் & சன்ஸ் (Poland v. Parr & Sons) வழக்கில், எதிர்வாதிகளிடம் பணிபுரிந்த வண்டியோட்டுபவர் (வேலை நேரம் முடிந்த பின்னர்) தமது பணித்தலைவரின் சரக்குவண்டியிலிந்து சில சிறுவர்கள் சர்க்கரை திருடுவதாக ஐயங்கொண்டார். அவ்வாறு அவர் கருதத்தகுந்த காரணங்களிருந்தன. அவர் அச் சிறுவர்களில் ஒருவன் கழுத்தில் ஓங்கிக் கையால் அடித்தார். அச் சிறுவன் கீழேவிழ, வண்டியின் சக்கரம் ஒன்று அவன் காலின்மேல் ஏறிச்சென்றது. அதனால் சிறுவன் தன் காலை இழந்தான். இதற்குப் பணித்தலைவர் பொறுப்பாளியாகக் கருதப்பட்டார். இங்கு வண்டியோட்டுபவர் கொடுத்த அடி மிகையாக இருந்தாலும், அவருக்குரிய பணிக்குப் புறம்பானதென்று சொல்லும்படியாக மிகையான செயலாக இருக்கவில்லை.

ஆபிரஹாம்ஸ் v. டீகின் (Abrahams v. Deakin) வழகில் ஹோல்பர்ன் நகரில் இருந்த ஒரு மதுக்கடையில் வேலைசெய்த பணியாள் ஒரு நாள் மது விற்பனை செய்யும்போது, வழக்கறிஞராகிய வாதி செல்லாத நாணயத்தைக் கொடுத்து ஏமாற்ற முயற்சிப்பதாகத் தவருகக் குற்றஞ்சாட்டி அவரைக் காவலரிடம் ஒப்படைத்து விட்டார். பணித்தலைவரின் வாணிபத்தில் பணியாள் ஈடுபட்டிருந்தபோது அவர் செய்த செயல் முறையற்றது அல்லது கவனமில்லாதது என்பதாலேயே பணித்தலைவர் பொறுப்பாளியாக மாட்டார். இங்கு எதிர்வாதியின் பணியால் அச்செயலைச் செய்த

போது, எதிர்வாதியின் சொத்திற்கு ஆபத்திருக்கவில்லை ; கைது செய்த செயல் சட்டத்தை நிலை நாட்டுவற்கேயாகும். எனவே இவ்வழக்கில் எதிர்வாதி பொறுப்பாளியல்லவெனத் தீர்ப்பளிக்கப் பட்டது. அவரது செயல் அவரது பணியின் ஒரு பகுதியெனக் கருதத்தக்க விதத்தில் செய்யப்பட்டிருக்க வேண்டும். அவர் தமக் குரிய பணியைச் செய்கின்ற அதே நேரத்தில்தான் அச்செயல் செய்யப்பட்டது என்று கூறினால் மட்டும் போதாது. எனவே, பணியாள் தமது பணித்தலைவரின் சொத்தை ஒருவர் களவாட முயற்சிப்பதாகக் கருதி, அக் களவு முயற்சி முடிவுற்ற பின்னர், அவரைக் கைது செய்ய உட்கிடையான அதிகாரம் கிடையாது. ஏனெனில் அவ்வாறு கைது செய்தல் பணித்தலைவரின் சொத்தைக் காப்பாற்றுவதற்காகச் செய்யப்படுவதல்ல ; நீதியை நிலை நாட்டக் கருதிச் செய்யப்படுவதேயாகும். முன்பே செய்யப்பட்டுவிட்ட செயல் ஒன்றுக்காகக் குற்றம் இழைப்பவரைத் தண்டிக்கும் வேலை பணித்தலைவரின் சொத்தைப் பாதுகாக்கும் செயல் ஆகாது (ரேட்லி v. எல். சி. சி.). ஆபத்திருக்கிறது என்பதாலேயே பணி யாள் வேறு மூன்றாவது நபர் ஒருவரிடம் தமக்குள்ள அதிகாரத்தை ஒப்படைத்து, அவரது தீங்கான செயலுக்குப் பணித்தலைவரைப் பொறுப்பாளியாக்க முடியாது. இதைப்போன்ற சமயங்களில் பணியாள் புரிந்த செயல் அவர் செய்ய அதிகாரம் அளிக்கப் பட்டுள்ள செயல்களின் இனத்தைச் சேர்ந்த தொன்றாக இருக்க வேண்டும். இல்லையேல், அவர் எவ்வாறு நடந்து கொண்டிருந் தாலும் அச்செயல் அவருக்குரிய பணியைச் செய்யும்போது புரிந்த தாகாது. பியர்ட் v. லண்டன் ஜெனரல் ஆம்னிபஸ் கம்பெனி (Beard v. London General Omnibus Co) வழக்கில், பயணம் முடிந்ததும் பேருந்து ஓட்டுநர் உணவு உட்கொள்ளச் சென்று விட்டார். அவர் இல்லாதபோது, நடத்துநர் அடுத்த பயணத் திற்குத் தயார் செய்ய அந்த வண்டியைத் திருப்பிக் கொண்டுவர ஓட்டியதால் விபத்தேற்பட்டு வாதிக்குக் காயமேற்பட்டது. பேருந்தை ஓட்டுதல் நடத்துநரின் பணியல்ல. அவர் பேருந்தை ஓட்டிய செயலை அவர் தனது பணியைச் சரியாகவோ அல்லது முறையின்றியோ செய்யும் வகையாகக் கருத முடியாது. இவ் விபத்தை நடத்துநர் தமக்குரிய பணியைச் செய்யத் தவறியதால் ஏற்பட்டதாகச் சொல்ல முடியாது. அவர் அதிகாரமில்லாமல் பேருந்து ஓட்டுநரின் கடமையைச் செய்ய முற்பட்டதாலேயே விபத்தேற்பட்டது. இவ் வழக்கில், ஓட்டுநர் இல்லாதபோது நடத்துநருக்கு அதை ஓட்ட அதிகாரம் இருந்ததென்பதற்குச் சாட்சியம் இல்லை. எனவே, எதிர்வாதி பொறுப்பாளியாக மாட்டார் என்று தீர்ப்பளிக்கப்பட்டது. ஆனால் பேருந்தை

மூன்றாவது நபர் ஒருவர் ஓட்டுவதற்கு ஓட்டுநரே அனுமதித்திருக்கலாம் இச்செயல் ஓட்டுநருக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ள தொன்றைச் செய்யக் கையாளப்படும் முறையற்ற வழியாக இருக்கலாம். அவ்வாறாயின், பணித்தலைவர் பொறுப்பாளியாவார். எடுத்துக்காட்டாக, இல்கீவ் v. சாமுவேல்ஸ் (Ilkiw v. Samuels) வழக்கில், எதிர்வாதிகளிடம் பணிபுரிந்த ஒரு சரக்குந்து (Lorry) ஓட்டுநர் வேறு ஒரு நபரை உந்தினை ஓட்ட அனுமதித்தார். அந்நபர் கவனமின்றி உந்தினை ஓட்டியதன் விளைவாக விபத்தேற்பட்டது. எதிர்வாதிகள் பொறுப்பாளிகள் ஆவார் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. மூன்றாவது நபரின் கவனமின்மைக்காக அவர்கள் பொறுப்பாளிகளாகவில்லை; ஏனெனில், அந்த நபர் எதிர்வாதிகளின் பணியாளல்லர்; ஆனால் அந்த மூன்றாவது நபருக்கு உந்தினை ஓட்டத் தகுதியுள்ளதா என்றுகூட விசாரிக்காமல் அவரை ஓட்டுநர் அனுமதித்ததால் அவர் தமக்குரிய பணியைச் செய்வதில் கவனமின்றி இருந்திருக்கிறார் என்றாகும். தமது பணியாளாகிய சரக்குந்து ஓட்டுநரின் கவனமின்மைக்குப் பணித்தலைவர் பொறுப்பாளியாவார் எனக் கருதப்பட்டார்.

சீதாராம் v. சந்தனுபிரசாத் (Sitaram v. Santanu Prasad) வழக்கு இந்திய உச்ச நீதிமன்றத்துக்கு (Supreme Court of India) வந்தபோது, ஒரு வாடகைக்காரை ஓட்டும் பணியாள் தனது பணித்தலைவரின் அனுமதியில்லாமல் மூன்றாவது நபர் ஒருவருக்கு அவரது சொந்த வேலைக்காகத் தந்திருந்தால், பணித்தலைவர் பொறுப்பாளியாவரா எனும் கேள்வி எழுந்தது. சீதாராம் எனும் கார் சொந்தக்காரர் அகமதாபாத் நகரில் தமது காரை வாடகைக் காராக ஓட்ட மகமது யாகூப் என்ற ஓட்டுநரை அமர்த்தியிருந்தார். யாகூப்பின் முழுப்பொறுப்பில் அந்தக் கார் விடப்பட்டிருந்தது. யாகூப் அக்காருக்கு ஒரு கிளீனரை நியமித்து அவருக்குக் காரினை ஓட்டவும் கற்றுக்கொடுத்தார். அந்தக் கிளீனர் ஓட்டுநர் உரிமம் (Licence) பெற சோதனைக்குப் பயன்படுத்த காரை எடுத்துக் செல்ல அவர் அனுமதித்தார். கிளீனர் சோதனையை எடுத்துக் கொள்ளும்போது, எந்த சைகையும் தராமல் காரைத் திடீரென்று திருப்பவே, கார் வாதியின் காலில் ஏறி அவளுக்குக் காயம் ஏற்பட்டது. கிளீனர் காரை ஓட்டவோ; ஓட்டும் சோதனையில் ஈடுபடவோ கார் சொந்தக்காரர் சீதாராம் அனுமதி வழங்கியிருந்தாரென்றோ, அல்லது யாகூப் மூன்றாவது நபர்களை காரினை ஓட்ட அனுமதிக்க அவர் அதிகாரம் வழங்கியிருந்தாரென்றோ நிரூபிக்கப்படவில்லை. தவிர, விபத்தேற்பட்டபோது கிளீனர் பணித்தலைவரின் வேலையைச் செய்யவில்லை. அவ்வாறு காரை மற்றவரிடம் அவர் தந்தபோது, பணித்தலைவரின் பணியில் அவர் ஈடுபட்டிருந்தாகச்

சொல்லமுடியாது. எனவே, பணித்தலைவர் பொறுப்பாளியல்லர் என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

ரிக்கெட்ஸ் v. தாமஸ் டிலிவிஸ் லிமிடெட் (Rickets v. Thomas Tilling Ltd.) வழக்கில், பேருந்து ஓட்டுநர், நடத்துநரின் அருகிலேயே அமர்ந்து கொண்டு, அடுத்த பயணத்திற்குப் பேருந்தைச் சரியான திசைக்குத் திருப்புவதற்காக அதை ஓட்ட நடத்துநரை அனுமதித்தார். நடத்துநர் கவனமின்றிப் பேருந்தை ஓட்டியதால் அது நடைபாதை மீதேறி அதில் சென்றுகொண்டிருந்த வாதியை இடித்துக் கீழே தள்ளியதில் அவருக்குக் கடுமையான காயம் ஏற்பட்டது. நடத்துநர் கவனமின்றி பேருந்தினை ஓட்ட அனுமதித்த ஓட்டுநரின் கவனமில்லாச் செயலுக்காகப் பணித்தலைவர் பொறுப்பாளியாகக் கருதப்பட்டார். பேருந்து ஓட்டுநர் வேறு ஒருவரைப் பேருந்தினை ஓட்ட அனுமதித்த செயல் அவர் தம் பணித்தலைவர் பால் கொண்டுள்ள கடமையை (அதாவது அவர் கவனத்தோடு பேருந்தினை ஓட்ட வேண்டிய செயலை) நிறைவேற்றியதாகாது. சீதாராம் வழக்கில் பணித்தலைவர் பணித்த வேலையைச் செய்வதற்காக கார் ஓட்டப்படவில்லை. ஏனெனில் காரினை ஓட்ட அதிகாரமற்ற நபர் ஒருவர் தன் சொந்த வேலைக்காக அதைப் பயன்படுத்தினர். உண்மையில் காரினை ஓட்டியவர் பணித்தலைவரின் பணியாளாகிய ஓட்டுநரோ அல்லது முகவரோ அல்ல. அவர் தனது சொந்தக் காரியத்திற்காக அந்தக் காரைப் பணித்தலைவரிடமிருந்து பெறவில்லை; அவர் காரை பணித்தலைவரின் வேலையாளிடமிருந்தே பெற்றார். ரிக்கெட்ஸ் வழக்கிலோ, பணித்தலைவரின் வேலையைச் செய்வதில் ஓட்டுநர் கவனமின்றி இருந்தார். பேருந்து திருப்பப்பட்ட போது, நடத்துநர் அருகிலேயே ஓட்டுநர் அமர்ந்திருந்தார். வேறு விதமாகச் சொன்னால், பேருந்தினைத் திருப்பும் செயல் வேலைக்கு அமர்த்திய தலைவரின் பணியில் அடங்கியதாகும்; அதற்கு சம்பந்தமில்லாத ஒன்றல்ல. பணித்தலைவரின் வேலையில் ஈடுபட்டு நடத்துநரை பேருந்தினை திருப்புமாறு ஓட்டுநர் கேட்டுக் கொண்டபோது, ஓட்டுநர் தமது பணித்தலைவரின் காரியத்தைக் கவனமின்றிச் செய்ததாகக் கருத வேண்டும். எனவே 1. கார் சொந்தக்காரர் தனது பணியாள் தனக்குரிய பணியைச் செய்யும்போது விபத்தேற்படுத்தினால், அதற்குத் தீங்கீடு தரவேண்டிய பொறுப்பு அவருக்குண்டு. 2. ஓட்டுநர் தமக்குரிய பணியைச் செய்யும்போது, வேறு ஒருவர் அந்தக் காரை ஓட்டாமல் தடுக்க வேண்டிய கடமையிலிருந்து தவறியிருந்தாலோ, அல்லது அவ்வாறு காரை ஓட்டுபவர் சரியாக ஓட்டும்படி பார்த்துக் கொள்வதில் கவனமின்றி இருந்ததாலோ விபத்தேற்பட்டிருந்தால் பணித்தலைவர் பொறுப்பாளியாவார்.

சிக்கெட்ஸ் வழக்கைப் போன்றதாகிய ராசிபுரம் யூனியன் மோட்டார் சர்வீஸ் லிமிடெட் v. ராமசாமி கவுண்டர் (Rasipuram Union Motor Service Ltd, v. Ramaswamy Gounder) வழக்கில் இதே போன்ற தீர்ப்பு வழங்கப்பட்டது. நடத்துநரைப் பேருந்தினை ஓட்டுமாறு விட்டு அவர் அருகில் ஓட்டுநர் அமர்ந்திருந்தார். நடத்துநர் கவனமின்றி ஓட்டியதன் விளைவாக வாதிக்குக் காயம் ஏற்பட்டது. இதற்கு எதிர்வாதி —பேருந்து கம்பெனி பொறுப்பாளியாகுமெனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

எனவே, பணியாளின் முறையற்ற செயல் அவருக்குரிய பணியைச் செய்யுங்கால் நிகழ்ந்ததாயின், பணித்தலைவர் பொறுப்பாளியாவார். தகுதி வாய்ந்த ஆளையே பணியில் அமர்த்த பணித்தலைவர் உரிய கவனம் காட்டியிருந்தார் என்பதோ, பணியாளைப் பொறுப்பாளியாக்க முடியாத சூழ்நிலையில் விபத்தேற்பட்டது (எடுத்துக்காட்டாக, காயமடைந்தவர் பணியாளரின் மனைவி என்பதால்) என்பதோ சரியான எதிர்வாதமாகாது. எனவே, தனது பணியாளின் பொறுப்பில் தனது பேருந்தினை அனுப்பியவன் 'நான் தகுதி வாய்ந்த ஓட்டுநரின் பொறுப்பிலேயே பேருந்தினை விட்டிருக்கிறேன் 'என்றோ, 'காயமுற்றவர் வேறுயாருமல்ல, ஓட்டுநரின் மனைவிதான்' என்றோ கூறிப் பொறுப்பிலிருந்து தப்ப முடியாது. அது அவருடைய பேருந்து. அவரது காரியமாக அது செல்கிறது. அந்த வேலையைக் கவனமாகச் செய்வதால் பயன் அடையப் போகிறவரும் அவரே; அது கவனமின்றிச் செய்யப்பட்டால் பொறுப்பை ஏற்க வேண்டியவரும் அவரேயாவார்.

பணியாள் வேண்டுமென்றே கருதிச் செய்யும் தீங்குகள் (Wilful Wrongs)

குறிப்பிட்ட சில செயல்களை அறவே செய்யக் கூடாதெனப் பணித்தலைவர் வெளிப்படையாகவே பணியாளுக்கு உத்தரவிட்டிருக்கலாம். இந்தத் தடை உத்தரவை மீறி வேண்டுமென்றே பணியாள் தீங்கிழைத்திருந்தால் அதற்குப் பணித்தலைவர் பொறுப்பாளியாக மாட்டார் என்று சொல்ல முடியாது. லிம்பஸ் v. லண்டன் ஜெனரல் ஆம்னிபஸ் கம்பெனி (Lympus v. London General Omnibus Company) வழக்கில் எதிர்வாதிகளிடம் பணியாற்றிய பேருந்து ஓட்டுநருக்குச் சாலையில் வேறு பேருந்துகளுடன் போட்டி போட்டுக் கொண்டு ஓட்டக்கூடாது என்றும், அவற்றிற்குத் தடையாக சாலையின் குறுக்கே பேருந்தை நிறுத்தக் கூடாதென்றும் எழுத்து மூலமாக உத்தரவிடப்பட்டிருந்தது. அந்த உத்தரவுக்குக் கீழ்படியாமல் அவர் வாதியின் பேருந்தை வழி மறித்தது மல்லாமல், அதன்மீது பேருந்தை மோதிச் சேதப்

படுத்தினர். அவர் பேருந்தை ஓட்டும் பணிக்கு அமர்த்தப் பட்டவர். அவர்செயல் தனது பணியைக் கவனமின்றிச் செய்ததே யாகும். அவருக்கு அதிகாரம் அளிக்கப்பட்ட வேலை என்ன ? மற்ற கம்பெனிகளோடு போட்டியிட்டுப் பயணிகளை ஏற்றிச் செல்லும் வேலையில் ஈடுபட்டிருந்த அவரது பணித்தலைவரின் தொழிலை வளர்ப்பது. இதைத்தான் முறையற்றதும், தீங்கானதும், அனுமதிக்கப்படாததும் ஆகிய வழியில் அவர் செய்தார். எனவே, எதிர்வாதி பொறுப்பாளியெனக் கருதப்பட்டார். கனடியன் பசிபிக் ரெயில்வே கம்பெனி *v.* லாக்கார்ட் (Canadian Pacific Railway Co. *v.* Lockhardt) வழக்கில், காப்பீடு (insurance) செய்யப்படாத மோட்டார் கார்களைப் பயன்படுத்தக் கூடாது என்ற உத்தரவை மீறி, எதிர்வாதியின் பணியாள் தான் பணிபுரிய வேண்டிய இடத் திற்குச் செல்லக் காப்பீடு செய்யப்படாத தனது சொந்தக் காரைப் பயன்படுத்தினர். அவர் கவனமின்மையால் ஏற்பட்ட விபத்திற்கு எதிர்வாதிகள் பொறுப்பாளிகளானர்கள்.

ஆனால், ட்வைன் *v.* பீன்ஸ் எக்ஸ்பிரஸ் லிமிடெட் (Twine *v.* Bean's Express Ltd) வழக்கில், பணித்தலைவர் தங்கள் ஓட்டு நருக்கு காரில் அனுமதியில்லாமல் யாரையும் ஏற்றிச் செல்லக் கூடாது என்று வெளிப்படையாக உத்தரவிட்டிருந்தனர். அந்த உத்தரவை ஓட்டுநர் அமரும் பகுதியில் அறிவிப்பாக ஒட்டியிருந் தனர். இந்த உத்தரவை மீறி ஓட்டுநர் அனுமதியில்லாமல் காரில் பயணம் செய்ய ஒருவருக்கு இடம் அளித்தார். ஓட்டுநர் கவனமின்றிக் காரை ஓட்டியதால் அந்த நபர் கொல்லப்பட்டார். இங்கு ஓட்டுநர் தமக்குரிய பணிக்குப் புறம்பான செயலைச் செய் தார். இச்செயல் ஓட்டுநர் செய்ய அனுமதிக்கப்படாத செயல் களில் ஒன்றாகும். பிறர்மாட்டு அன்பும், பரிவும் கொண்டு அவர் இச்செயலைச் செய்திருந்தாலும், அவரது கடமைகளில் ஒன் றெனவோ அல்லது அவற்றைச் செய்யும் வழிகளில் ஒன்றெனவோ இச்செயலைச் சொல்ல முடியாது. உண்மையில் பணியாள் இங்கு இரு வேலைகளை ஒரே சமயத்தில் செய்தவராகிறார். அவர் காரைச் சரியான பாதையிலேயே ஓரிடத்திலிருந்து வேறோர் இடத்திற்கு ஓட்டிச் செல்கிறார். அவர் அந்த காரை ஓட்டிக் கொண்டிருக்கும் போது அவருக்குரிய பணியையே செய்து கொண்டிருக்கிறார். அதே சமயத்தில், அவர் செய்யும் மற்றொரு செயல் அவருக்குரிய வேலைக்குப் புறம்பானதாகும். அதாவது காரில் ஏறிக் கொள்ள எவ்வித உரிமையில்லாத ஒருவருக்கு அதில் இடம் தருவதாகும். ஆயினும், அயலாரைக் காரில் ஏற்றிச் செல்லக் கூடாதென்ற உத்தரவு எதுவும் இல்லையெனில், யாரேனும் ஒருவருக்கு காரில் இடம் கொடுத்திருந்தாலோ அல்லது இதுபோன்ற உத்தரவுகளை

ஓட்டுநர் முன்பு மீறிய போதெல்லாம் பணித்தலைவர் அதை பொருட்படுத்தாமல் இருந்துள்ளார் என்று காட்ட முடிந்தாலோ, எதிர்வாதி பொறுப்பாளியாவார்.

ஓட்டுநர் குறிப்பிட்ட வழியில் பயணம் செய்ய வேண்டும் என்று பணித்தலைவர் உத்தரவிட்டிருக்கலாம். அதை மீறி வேறு வழியில் சென்றபோது விபத்தேற்படலாம். அவர் விலகிச் சென்றது முற்றிலும் புதிய பயணமாகக் கருதத்தக்க விதத்தில் அமைந்திருக்குமானால், பணியாள் 'தமது சொந்தக் களியாட்டத் திற்காகவே' (on a frolic of his own) பயணம் செய்வதாகக் கருதப்படும். பணியாள் தனது சொந்த நலனுக்காக அனுமதிக்கப் பட்ட செயலைச் செய்யும்போது ஏற்படும் கவனமின்மைக்குப் பணித்தலைவர் பொறுப்பாளியாக மாட்டார். நான் எதற்காக என் பணியாளை வேலைக்கு அமர்த்தியிருக்கிறேனே அதற்கு மட்டுமே பொறுப்பாளியாவேன். அவனே செய்து கொள்ள எதை அனுமதித் திருக்கிறேனோ, அதற்குப் பொறுப்பாளியாக மாட்டேன். அவனது சொந்தக் காரியத்திற்காக எனது காரை ஓட்ட அவனை நான் அனுமதித்திருந்தால், அவன் கவனமின்றி ஓட்டியதற்கு நான் பொறுப்பாளியாக மாட்டேன். இங்கு அவர் என் பணியா ளாகச் செயல்படுவதில்லை. என்னிடமிருந்து ஒரு பொருளைக் கடனாகப் பெற்றுள்ள ஒப்படைவு பெறுபவரைப் போலவே அவரைக் கருத வேண்டும். எனவே, அவரது நடத்தைக்கு நான் பொறுப்பேற்க வேண்டியதில்லை.

நெடுந்தொலை செல்லும் லாரியை ஓட்டுநர் வழியில் நிறுத்தி, சிற்றுண்டி அருந்த வெளியே செல்ல பணித்தலைவரால் அனுமதிக் கப்பட்டிருப்பினும், அவர் அவ்வாறு செய்வது அவருக்குரிய பணி யைச் செய்யும் செயலாகாது. எனவே, அவர் லாரியை சாலையின் ஓரத்தில் நிறுத்தி, சாலையின் மறுபுறமுள்ள சிற்றுண்டிச் சாலைக்குச் செல்ல, கவனமின்றி நடந்ததால் ஏற்படும் விபத்திற்குப் பணித் தலைவர் பொறுப்பாளியாக மாட்டார். ஆனால் லாரியை ஓரிடத்தில் நிறுத்தித் தாம் செல்ல வேண்டிய இடம் எங்குள்ளதென்று சாலை யின் மறுபுறம் நிற்கும் ஒருவரிடம் விசாரித்தறியச் சாலையைக் கடக்கும்போது கவனமின்மையால் விபத்தேற்பட்டிருந்தால் பணித்தலைவர் பொறுப்பாளியாவார். ஏனெனில் ஓட்டுநர் தமது பணித்தலைவரின் அலுவல் காரணமாகத்தான் சாலையைக் கடக் கிறார். அது அவர் செய்ய வேண்டிய பணியின் பாற்பட்டது. அவ்வாறு அவர் சாலையின் மறுபுறம் சென்று வழி கேட்டுக் கொண்டிருக்கும்போது, கள்ளர் ஒருவர் லாரியை ஓட்டிச் செல்ல முயற்சி செய்வதைக் காண்கிறார். அதைத் தடுக்க ஓடிவரும்போது

அவரது கவனமின்மையால் விபத்தேற்பட்டிருந்தாலும் எதிர்வாதி பொறுப்பாளியாவார். ஏனெனில் ஓட்டுநருக்குத் தம் பணித் தலைவரின் சொத்தைப் பாதுகாக்கும் கடமை உண்டு.

பணியாளனின் மோசடி (fraud) யால் விளையும் தீங்குகள்

பணியாளின் கவனமின்மைக்கும், தவறுக்கும் பணித்தலைவ பொறுப்பாளியாவது போலவே, பணியாள் இழைக்கும் மோசடி, வாணிபப்போலி (Parsing off), பதிப்புரிமை மீறல் Violation of Copyright) போன்று வேண்டுமென்றே இழைக்கும் தீங்குகளுக்கும் அவர் பொறுப்பாளியாவார். நேர்மையோடு ஒன்றைச் செய்வதற்காக வேலையில் அமர்த்தப்பட்ட பணியாள் மோசடியாக அதைச் செய்தால், பணித்தலைவர் அதற்குப் பொறுப்பாளியாவார்.

பார்விக் *v.* இங்கிலிஷ் ஜாயின்ட் ஸ்டாக் பேங்க் (Barwick *v.* English Joint Stock Bank) வழக்கில், பணியாளின் செயலுக்குப் பணித்தலைவரைப் பொறுப்பாளியாக்கவேண்டுமானால் அச் செயல் பணித்தலைவரின் நன்மையைக் கருதிச் செய்யப்பட்டதாக இருக்க வேண்டும் என்று சொல்லப்பட்டது. ஆனால் லாயிட்ஸ் *v.* கிரேஸ் ஸ்மித் & கம்பெனி (Lloyds *v.* Grace Smith & Co.) வழக்கில் பணியாள் தமக்குரிய பணியைச் செய்யுபோது தமது பணித்தலைவரின் நன்மைக்காக இல்லாமல், தனது சொந்த நன்மையைக் கருதி ஒரு செயலைச் செய்திருந்தாலும், பணித்தலைவர் பொறுப்பாளியாவார் என்று கூறப்பட்டது. லாயிட்ஸ் வழக்கில் புகழ் பெற்ற வழக்கறிஞர் நிறுவனமாகிய கிரேஸ், ஸ்மித் கம்பெனிதான் எதிர்வாதிகள். அங்கு ஆவணங்கள் எழுதும் அலுவலை ஒரு மேலாளராகிய எழுத்தர் செய்து வந்தார். அவரது வேலையை யாரும் மேற்பார்வையிடுவதில்லை. கைம்பெண்ணாகிய வாதிக்குச் சொந்தமாக சில வீடுகள் இருந்தன. அவற்றால் கிடைக்கும் வருமானம் அவளுக்குப் போதுமானதாக இல்லாததால் அவள் எதிர்வாதிகளின் அலுவலகம் சென்று அந்த எழுத்தரைக் கண்டு பேசினாள். அவர் அவளுடைய வீடுகளை விற்கத் தனக்கு அதிகாரமளிக்கும்படி அவளைத் தூண்டி, இரு ஆவணங்களை (Documents) எழுதினார். அந்த ஆவணங்கள் அவளது சொத்தை விற்பதற்குத் தேவையானவை என்று பொய் புகன்றார். உண்மையில் அந்த ஆவணங்களில் அவள் தன் சொத்தை அந்த எழுத்தருக்கு விற்பதாக எழுதப்பட்டிருந்தது. இந்த மோசடியறியாத அந்தப் பெண் அவற்றில் கையெழுத்திட்டார். பின்னர் அவர் அச் சொத்தை வேறு ஒருவருக்கு விற்றுப் பணத்தைத் தாமே வைத்துக் கொண்டார். இவ்வழக்கில் மோசடிக்காரராகிய பணியாள் தமது சொந்த நலனுக்காக இம்மோசடியைச் செய்திருந்தாலும், தமது கட்சிக்

காரிக்கு எதிர்வாதி-வழக்கறிஞர்கள் பொறுப்பாளிகளாவார் என்று தீர்ப்பளிக்கப்பட்டது. தமக்குரிய பணியைப் பணியாள் செய்து வரும்வரை, பணியாள் தமது பணித்தலைவருடைய நன்மைக் காகவோ அல்லது தமது சொந்த நலனுக்காகவோ புரியும் மோசடிக்குப் பணித்தலைவர் பொறுப்பாளியாவார் என்று தீர்ப் பளிக்கப்பட்டது. பொய்யாவணம் புரிந்து மோசடி செய்யப்பட் டிருந்தாலும், மோசடிக்காரனானவர் கட்சிக்காரராக இல்லாமல் எழுத்தரின் வெளிப்படையான அல்லது வெளித்தோற்றமான அதிகாரத்தை நம்பி ஏமாந்தவராயினும் பணித்தலைவர் பொறுப் பாளியாவார். இவ்வாறு வஞ்சிப்பதால் யாராவது ஒருவருக்கு இழப்பு ஏற்படுகிறது. ஏமாற்றுபவரை யார் நம்பி வேலைக்கு வைத்திருக்கிறாரோ அவரே இழப்பை ஏற்கவேண்டும் இதுவே நியாயமாகும். ஆனால் உண்மையான அதிகாரமோ, வெளியே தெரியும்படியான அதிகாரமோ வழங்கப்படாமலிருந்தால், பணித் தலைவர் பணியாள் வேண்டுமென்றே இழைக்கும் தீங்குகளுக்குப் பொறுப்பாளியாகமாட்டார். அப்போது மூன்றாவது நபர் ஒருவர் நம்பி ஏமாறக்கூடிய அளவில் வெளிப்படையாக அதிகாரம் அவருக்குத் தரப்பட்டிருந்ததா என்று பார்க்கவேண்டும்.

லாயிட்ஸ் வழக்கில் சொல்லப்பட்ட தீர்ப்பினால் யார் பல னடைகிறார்கள் என்று பார்க்கத் தேவையில்லை என்ற நிலை, சட்டத் தில் ஏற்றுக்கொள்ளப்பட்டு விட்டதாகக் கூறமுடியாது. பல வழக்கு களில், பணியாள் தமக்கு மட்டுமே பயன் ஏற்படவேண்டும் என்ற நோக்கத்தோடு செயல்பட்டிருக்கிறார் என்பதைக் கொண்டு அத் தீங்கை அவருக்குரிய பணியைப் புரியும்போது செய்யப்படாத தாகக் கருதப்பட்டிருக்கிறது. எடுத்துக்காட்டாக, பணித்தலைவரின் காரினை 'தன் சொந்தக் களியாட்டத்திற்கு' எடுத்துப் பயன்படுத்து கிற பணியாளைச் சொல்லலாம். இங்கு கார் ஓட்டுநரின் சொந்த நலனுக்காக மட்டும் பயணம் மேற்கொள்ளப்பட்டதாகையால் பணித்தலைவர் பணியாளின் கவனமின்மையால் காயமடைந்த வருக்குப் பொறுப்பாளியாவதில்லை.

இதேபோல, வாதியை எதிர்வாதியின் பணியாள் தாக்க முனைந்ததன் நோக்கம் பணித்தலைவரின் அலுவல் அல்லது தொழிலை வளர்க்கவோ, காப்பதற்கோ ஆயின் பணித்தலைவர் பொறுப்பாளியாவார். ஆனால், இதற்கு மாறுகத் தனிப்பட்ட முறையில் பழிக்குப் பழி வாங்க அவரைத் தாக்க முனைந்திருந்தால், பணித்தலைவர் பொறுப்பாளியாக மாட்டார். பணியாள் வாதியிடம் தமது சொந்த முறையில் பழி வாங்கும் உணர்ச்சியுடனே, தீங் கெண்ணத்துடனே அல்லது சினத்தோடோ நடந்து கொண்டிருந்

தாலும், அவரது செயல் அவருக்குரிய பணியைப் புரியும் வகையில் எழுந்ததாயின் பணித்தலைவர் பொறுப்பாளியாவார். எனவே, டேனியல்ஸ் v. வெட்ஸ்டோன் என்டெர்டெய்னர்ஸ் லிமிடெட் (Daniels v. Whetstone Entertainers Ltd.) வழக்கில், நாட்டிய அரங்கில் நாட்டியம் காண வந்தவராகிய வாதி முறையின்றி நடந்து கொண்டதால் எதிர்வாதியின் பணியாளால் நாட்டிய மன்றத்துக்கு உள்ளே ஒருமுறையும், நாட்டிய மன்றத்திற்கு வெளியே ஒரு முறையும் தாக்கப்பட்டார். முதல் முறை அவரை நாட்டிய அரங்கிலிருந்து வெளியேற்றத் தாக்கியது பணியாளுக்குரிய பணியைச் செய்யும் வகையில், அமைந்த செயலாயினும், இரண்டாவது முறை அவரைத் தாக்கியது பணியாள் தமது சொந்த முறையில் பழிவாங்கும் நோக்கத்துடன் நடந்து கொண்ட செயலாகும். எனவே, இரண்டாவது முறை தாக்கியதற்குப் பணித்தலைவர் பொறுப்பாளியாக மாட்டார் என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

ஒப்படைவு: பணியாள் களவாடல்

பணித்தலைவரிடம் ஒப்படைவு செய்யப்பட்டிருக்கும் ஒரு பொருளைப் பத்திரமாகப் பார்த்துக் கொள்ளுமாறு அவர் பணியாளிடம் கொடுத்து, அப்பொருளை அந்தப் பணியாள் திருடிச் சென்றுவிட்டால் பணித்தலைவர் ஒப்படைவு செய்தவருக்குப் பொறுப்பாளியாவார். ஏனென்னில் இங்கு பொருளைக் களவு செய்யும் பணியாள் தனக்குரிய பணியைப் புரியும் வகையிலேயே அதைச் செய்கிறான். அதாவது, நேர்மையாகச் செய்ய வேண்டிய பணியை மோசடியாகச் செய்கிறான். எனவே, பணித்தலைவர் பொறுப்பாளியாகிறார். பொருளைக் களவு செய்தவர் அதனைப் பத்திரமாக வைத்திருக்க வேண்டிய பொறுப்பினைக் கொண்ட பணியாளின், ஒப்படை பெற்றவராகிய பணித்தலைவர் பொறுப்பாளியாவார். அப்படிப்பட்ட பணியாள் தன் பொறுப்பில் ஒப்புவிக்கப்பட்ட பொருளைத் திருடும்போது அவன் தனக்குரிய பணியை செய்பவனாகவே கருத வேண்டும். அதாவது அவன் நேர்மையாகச் செய்வதற்காக அமர்த்தப்பட்டுள்ள வேலையை மோசடியாகச் செய்கின்றான். எனவே, பணித்தலைவர் பொறுப்பாளியாவார். மாரிஸ் v. மார்டின் & சன்ஸ் லிமிடெட் (Morris v. Martin (C. W.) & Sons Ltd.) வழக்கில் வாதி தனது தோலங்கியை சலவை செய்ய 'அ' என்பவருக்கு அனுப்பினாள். அவளுடைய அனுமதியுடன் 'அ' என்பவர் ஆடைகளைச் சலவை செய்வதில் வல்லுநராகிய எதிர்வாதிகளிடம் அதை அனுப்பினார். எதிர்வாதிகள் தங்கள் பணியாளாகிய 'ஆ' என்பவரிடம் அதை சலவை செய்யும்படி தந்தனர். 'ஆ' என்பவர் அதைக் களவு

செய்தார். இதனடிப்படையில் எதிர்வாதிகள் பொறுப்பாளியாவார் என்று அப்பீல் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. ஆனால் அப்பொருளுக்குப் பொறுப்பேற்றிராத ஒரு தொழிலாளி களவு செய்திருந்தால் அவரது செயல் அவருக்குரிய பணியைப் புரியும் செயலாகாது. இதைப் போலவே பணியாள் தம்முடைய பணித்தலைவரிடம் ஒப்படைக்கப்பட்ட பொருளை அதிகாரமற்ற முறையில் பயன்படுத்தி சேதம் ஏற்பட்டிருந்தால் பணித்தலைவர் பொறுப்பாளியாவார். எடுத்துக்காட்டாக, பழுது பார்க்க விடப்பட்டிருந்த ஒரு காரை பட்டறையிலிருந்து ஒரு பணியாள் தமது சொந்தக் காரியத்திற்காக எடுத்துச் சென்று சேதம் ஏற்படுத்தியிருந்தாலும் பணித்தலைவர் பொறுப்பாளியாவார். ஒரு பணியாள் தனது சொந்தக் காரியத்திற்காக அல்லது நலனுக்காக பணித்தலைவரால் அனுமதியளிக்கப்பட்ட ஒரு செயலைச் செய்யும்போது கவனமின்றிப் பிறருக்கு ஊறு விளைவித்திருந்தால் பணித்தலைவர் பொறுப்பாளியாக மாட்டார். பணியாள் எதற்காகப் பணியில் அமர்த்தப்பட்டிருக்கிறாரோ அதைச் செய்யும்போது கவனமின்றி இருந்தால் தான் பணித்தலைவருக்குப் பொறுப்பு ஏற்படும்.

பணித்தலைவர் தனது பணியாள்பால் கொண்டுள்ள கடமை

அவர் தகுந்த தொழிற்கருவிகளையும், சாதனங்களையும் பணியாளுக்குத் தரவேண்டும். அவற்றைச் சரியான முறையில் வைத்திருக்கவும், தேவையற்ற ஆபத்திற்கு பணியாட்கள் ஆளாகாமல் தொழிலைச் செய்யவும் பணித்தலைவர் உரிய கவனம் காட்ட வேண்டும. இதைத் தவிர அவர் பணியாட்கள் வேலை செய்யும் கட்டடம் பத்திரமானதாக இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும். இதற்கு அவர் தகுந்த கவனமும், திறமையும் காட்ட வேண்டும். பணியாட்கள் வேலை செய்யும் இடமும், அவ்விடத்திற்கு போகும் வழியும் பத்திரமானதாக இருக்க வேண்டும். இதைத் தவிர போதிய அனுபவமும், தகுதியும் உள்ள பணியாட்களை நியமிக்க வேண்டும். மற்றும் அவர் பணியாட்களுக்கு பத்திரமான ஒரு வேலை முறையை உருவாக்க வேண்டும். நாள் தோறும் பணியாட்கள் செய்கின்ற வேலைமுறையை ஒழுங்குபடுத்துவதையே இது குறிக்கும். அவர்கள் பாதுகாப்புக்காக அவர் தாம் ஈடுபட்டுள்ள தொழிலில் பின்பற்றப்படும் வழக்கங்களையும், சட்டவிதிகளையும், ஒழுங்கு முறைகளையும் அவர் பின்பற்றினால் போதும். ஆனால் சில சமயங்களில் ஒரு குறிப்பிட்ட வேலையில் உள்ள ஆபத்தைப்பற்றி பணித்தலைவர் எச்சரித்திருந்தால் அதைப் பணியாள் தவிர்ப்பான் என்று அவர் எதிர்பார்க்க உரிமை உண்டு

பணியாள் பணித்தலைவர்பால் காட்ட வேண்டிய கடமைகள்

பணியாள் தன்னுடைய வசம் ஒப்புவிக்கப்பட்டுள்ள பணித் தலைவருடைய சொத்தைப் பார்த்துக் கொள்வதில் தகுந்த கவனம் காட்ட வேண்டும். இதுமட்டுமல்லாமல், அவன்தன்னுடைய கடமைகளைச் செய்வதில் பொதுவாகவே உரிய கவனம் காட்ட வேண்டும். இது பணியாள் தன்னுடைய பணித்தலைவரோடு செய்து கொண்டுள்ள ஒப்பந்தத்தில் உள்ள உட்கிடையான வாசக மாகும். இந்த கடமையைப் பணியாள் மீறினால் ஒப்பந்த மீறலுக் காகப் பணித்தலைவர் வழக்கிடலாம். இவ்வாறு டிக்பி *v.* ஜெனரல் ஆக்ஸிடென்ட், பயர்& லைப் இன்சூரன்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட் (Digby *v.* General Accident, Fire & Life Insurance Corporation Ltd) வழக்கில், திரைப்பட நடிகை செல்வி மெர்லி ஓபரானின் காரை ஓட்டுநர் கவனமின்றிக் காரினை ஓட்டியதன் விளைவாக அவளுக்கு ஏற்பட்ட காயங்களுக்கு £ 5000 தீங்கீடாகப் பெற்றுள். ஆகவே பணியாள் தன்வேலையைக் கவனமின்றிச் செய்து பணித் தலைவருக்கு உடற்காயமோ, பொருள் நட்டமோ ஏற்படுத்தினால் பணித்தலைவருக்குப் பொறுப்பாளியாவார். பணியாள் ஒப்பந் தத்தை மீறியதன் விளைவாக மூன்றாவது நபர்களுக்கு காயம் ஏற்பட்டு அவர்களுக்குப் பணித்தலைவர் பகரப் பொறுப்பு ஏற்று தீங்கீடு கொடுத்திருந்தால் அவர் அதைப் பணியாளிடமிருந்து திரும்பப் பெறலாம். பணியாளின் கவனமின்மைக்காக தீங்கீடு கொடுக்க நேர்ந்த பணித்தலைவர் அவரிடமிருந்து ஈட்டுறுதி பெறலாம்.

பணியாள் வேலையிலிருந்து விலகிய பின்னரும் பணித்தலைவர் பால் நல்லெண்ணத்துடன் நடந்து கொள்ள வேண்டும். எனவே, அவர் வேலையிலிருந்தபோது ரகசியமாகத் தெரிந்து கொண்ட தகவலை வெளியிட்டுப் பணித்தலைவருக்கு இழப்பு அல்லது ஊறு நேருமாறு செய்யக்கூடாது.

பணித்தலைவரும் ஒப்பந்தக்காரரும்

ஒப்பந்தக்காரருக்கும் பணியாளுக்கும் உள்ள வேறுபாட்டைப் பற்றி முன்னரே கண்டோம். பணித்தலைவர் தன்னுடைய பணி யாளின் கவனமின்மைக்கும், மற்ற தீங்குகளுக்கும் பொறுப்பாளி யாவார் என்றும், தன்னுடைய பணியாள் அல்லாத ஒப்பந்தக் காரர் புரியும் தீங்குகளுக்குப் பொறுப்பாளியாக மாட்டார் என்றும் கண்டோம். ஆயினும் சில சூழ்நிலைகளில் கட்டுப்பாடு இல்லாமல் சுதந்திரமாகச் செயலாற்றும் ஒப்பந்தக்காரரின் செயல்களுக்கும் அவர் பொறுப்பாளியாவார். பணித்தலைவர் ஒரு தீங்கினைப் புரிய ஒப்பந்தக்காரருக்குத் தானே அதிகாரம் அளித்திருக்கலாம். அவர்

ஒப்பந்தக்காரர் புரிந்த தீங்கை ஏற்று உறுதி செய்திருக்கலாம். அல்லது ஒப்பந்தக்காரரைச் சட்ட முரணான செயலைச் செய்யப் பணியில் அமர்த்தியிருக்கலாம். இவ்வாறு பணித்தலைவர் செய்திருந்தால் அவர் பொறுப்பாளியாவார். எல்லிஸ் v. ஷெப்பீல்டு கேஸ் கன்சூமர்ஸ் கம்பெனி (Ellis v. Sheffield Gas Consumer's Co.) வழக்கில் எதிர்வாதிகள் அதிகாரம் இல்லாமல் ஒரு தெருவில் குழாய் போடுவதற்காக குழிதோண்ட ஒரு ஒப்பந்தக்காரரை நியமித்தனர். ஒப்பந்தக்காரரின் பணியாட்கள் கவனமின்றி நடைபாதையில் கற்களைக் குவித்து வைத்தனர். அதில் இடறி விழுந்து வாதி காயமுற்றார். இங்கு பொதுத்தொல்லையாக அமைந்த சட்ட முரணான செயல் ஒன்றைச் செய்ய ஒப்பந்தம் செய்யப்பட்டது. எதிர்வாதிகள் பொறுப்பாளிகள் என்று தீர்ப்பளிக்கப்பட்டது. இப்போது பணித்தலைவர் ஒப்பந்தக்காரர் ஆகிய இருவரும் கூட்டாகத் தீங்கிழைப்பவர்களாகக் கருதப்பட்டு பொறுப்பாளியாவர்.

இதைத் தவிர ஒப்பந்தக்காரரை நியமித்தது முறையற்ற செயலாகவோ அல்லது கவனமில்லாத செயலாகவோ இருந்தாலும் பணித்தலைவர் பொறுப்பாளியாவார். ஒரு வேலையைத் தகுதியும், திறமையும் அற்ற ஒப்பந்தக்காரரிடம் ஒப்படைத்திருந்தால் அவர் பொறுப்பாளியாவார். ஒப்பந்தக்காரரைப் பணியில் அமர்த்தும் பணித்தலைவருடைய பொறுப்பு பகரப் பொறுப்பாகும் என்று கூறுவது சரியல்ல. கட்டுப்பாடு இல்லாமல், சுதந்திரமாகப் பணியாற்றும் ஒப்பந்தக்காரரால் ஏற்பட்ட இழப்பிற்காகப் பணித்தலைவரின்மேல் வழக்கிடும்போது பணித்தலைவர் வாதியின்பால் கொண்டுள்ள கடமையிலிருந்து தவறி இருக்கிறாரா? என்றே பார்க்க வேண்டும். எனவே ஒப்பந்தக்காரர் தனது கடமையை மீறியதற்காகப் பணித்தலைவர் பொறுப்பாளியாவதில்லை. பணித்தலைவரே தனது சொந்தக் கடமையை மீறி இருந்தால்தான் வாதிக்கு பொறுப்பாளியாகிறார். அவர் பொறுப்பு தலையாய பொறுப்பாகும் அது அவருக்கே உரிய பொறுப்பு; சார்புநிலையான பொறுப்பல்ல எனவே வாதி பணித்தலைவர் தமது கடமையில் தவறிவிட்டார் என்று சொல்லும்போது பணித்தலைவர் அந்தப் பணியைத் தாம் செய்யவில்லையென்றும், அதைச் செய்ய வேறு ஒருவரை அமர்த்தியதாகவும் கூறுவது எதிர்வாதமாகாது. பணித்தலைவர் தமது பணியைச் செய்ய வேறு ஒருவரை தமக்குப் பதிலாக அமர்த்திக் கொள்ளலாம். ஆனால், அதனால் விளையக் கூடிய பொறுப்பை மற்றொருவர்மேல் சுமத்த முடியாது. எனவே, ஒருவருக்குக் கவனத்தோடு இருக்க வேண்டிய கடமை இருந்தால் அக்கடமையைச் செய்ய வேறு ஒருவரை நியமித்து தமது பொறுப்பைத் தட்டிக்

கழிக்க முடியாது. அந்த நபர் பணி செய்யும் ஒப்பந்தப்படி அமர்த்தப்பட்ட பணியாளராக இருக்கலாம்; அல்லது பணியை முடித்துக் கொடுக்கும் ஒப்பந்தப்படி நியமிக்கப்பட்ட ஒப்பந்தக் காரராக இருக்கலாம்; எவ்வாருயினும் அவர் பொறுப்பாளியாவார். இதுவே சட்டமாகும்.

பணித்தலைவர் தகுதிவாய்ந்த ஒப்பந்தக்காரர்களை நியமிக்காமல் போகலாம். அல்லது குறிப்பிட்ட பணியை முடிக்க போதிய ஆட்களை வேலைக்கு அமர்த்தாமல் இருக்கலாம். இது வாதியின் பால் கொண்டுள்ள பொறுப்பிலிருந்து மீறுவதாகும். பணித்தலைவர் தாமே செய்தாக வேண்டிய கடமையை ஒப்பந்தக்காரரிடம் ஒப்புவித்திருக்கலாம். அதைச் செய்யும்போது ஒப்பந்தக்காரர் தீங்கிழைத்திருக்கலாம். இந்நிலையில் தாமே செய்தாக வேண்டிய கடமையை ஒப்பந்தக்காரரிடம் ஒப்புவித்த பணித்தலைவர் பொறுப்பேற்க வேண்டியநிலை ஏற்படும். உண்மையில் ஒரு கடமையைச் செய்யவேண்டியவர் மற்றவரிடம் அதை ஒப்புவிக்க முடியாது. ஆனால், தகுந்த கவனம் காட்டுவதுமட்டுமே ஒருவரதுகடமையாக இருந்தால், அந்த வேலையைச் செய்ய அவர் தகுதி வாய்ந்த ஒப்பந்தக்காரரைத் தேர்ந்தெடுத்திருப்பின் அவர் தாம் செய்ய வேண்டியதைச் செய்தவராவார். ஆனால், அவரது கடமை உரிய கவனம் காட்டுமாறு பார்த்துக் கொள்வதாயின், உரிய கவனம் காட்டப்படும்வரை அவர் அக்கடமையைச் செய்ததாக கூறமுடியாது. எடுத்துக் காட்டாக, ஒரு தொழிற்சாலையில் உள்ள இயந்திரத்தின் ஆபத்தான பாகங்களை வேலியிட்டோ அல்லது மூடியோ வைக்க வேண்டுமென்ற கடமை இருந்தால் அத்தகைய பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படும்வரை அவர் கடமையைச் செய்ததாக கூறமுடியாது. இவ்வாறு கடமையைச் செய்யத் தவறிய பணித்தலைவர் தன்னுடைய வேலையை ஒரு ஒப்பந்தக்காரரிடம் ஒப்படைத்திருந்ததாகவும், அவர் தமது கடமைகளைச் செய்யத் தவறினர் என்றும் கூறுவது முறையான எதிர்வாதமாகாது. ஒரு கடமை, பிறரிடம் ஒப்படைக்க முடியாத கடமையா? என்பது ஒரு சட்டப் பிரச்னையாகும். இங்கு எடுத்துக்காட்டாகச் சில கடமைகளைக் காண்போம்.

இயற்றுச் சட்டத்தின்படி தோன்றும் கடும் பொறுப்பு

'அ' என்பவர் தன்னுடைய நிலத்தில் செய்யும் வேலையால் அடுத்துள்ள 'ஆ' என்பவரின் நிலத்தில் சரிவு ஏற்படலாம். 'ஆ' என்பவர் நிலத்திற்கு 'அ' என்பவர் நிலத்தால் ஆதரவாகத் தாங்கப்படவேண்டிய உரிமை இருக்குமானால் 'ஆ' என்பவருக்கு 'அ' பொறுப்பாளியாவார். 'அ' என்பவர் தான் இந்த வேலையை

செய்யவில்லையென்றும், அதை ஒரு ஒப்பந்தக்காரரிடம் ஒப்புவித்து இருந்ததாகவும் கூறுவது எதிர்வாதமாக ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. இது இயற்றுச் சட்டத்தின்கீழ் மற்றவர்களிடம் ஒப்பு விக்கமுடியாத கடமையாகும்.

நெடுஞ்சாலை அல்லது அதை அடுத்துள்ள இடங்களில் செய்யும் வேலைகளால் ஆபத்து ஏற்படுத்துதல்

டேரி *v.* ஆஷ்டன் (Tarry *v.* Ashton) வழக்கில் எதிர்வாதி தனது வீட்டோடு இணைக்கப்பட்டு, நடைபாதைக்கு மேல் நீட்டிக் கொண்டிருந்த ஒரு விளக்கினைப் பழுதுபார்க்கும் வேலையை ஒரு ஒப்பந்தக்காரரிடம் ஒப்புவித்திருந்தார். அது சரிவர இறுக்கமாகப் பொருத்தப்படாததால் விளக்கு அவ்வழியில் சென்றுகொண் டிருந்த வாதியின்மேல் விழுந்தது. அதற்கு எதிர்வாதி பொறுப்பாளி யெனத் தீர்ப்பளிக்கப்பட்டது. விளக்கு தக்கமுறையில் பத்திர மானதாக இருக்கும்படி பார்த்துக் கொள்ளவேண்டியது எதிர் வாதியின் கடமையாகும். ஒப்பந்தக்காரர் அதைச் செய்யத் தவறி விட்டார். எனவே எதிர்வாதி தமது கடமையைச் செய்யவில்லை என்றே கருத வேண்டும். அவர் விளைவுகளுக்காக வாதிக்குப் பொறுப்பாளியாவார்.

கிரே *v.* புல்லன் (Gray *v.* Pullen) வழக்கில், நெடுஞ்சாலையை யொட்டி எதிர்வாதியின் வீடு அமைந்திருந்தது. சாலையின் குறுக்கே பள்ளம் தோண்டி தன்னுடைய கட்டடத்திலிருந்து சாக்கடைக்கு ஒரு வடிகால் அமைக்க எதிர்வாதிக்கு சட்டப்படி உரிமை இருந்தது. இவ்வேலையைச் செய்ய அவர் நியமித்திருந்த ஒப்பந்தக்காரர் கவனமின்றிப் பள்ளம் தோண்டி, அதைச் சரிவர மூடாமல் இருந்துவிட்டார். இதன் விளைவாக நெடுஞ்சாலையில் சென்று கொண்டிருந்த வாதி இடறிவிழுந்து காயமுற்றார். எதிர் வாதி கவனமின்றி இருக்காவிட்டாலும், அவர் நியமித்திருந்த ஒப் பந்தக்காரர் கவனமின்றி இருந்தார். எனவே எதிர்வாதி பொறுப் பாளியென்று தீர்ப்பளிக்கப்பட்டது. நெடுஞ்சாலைகளில் செய்யப் படுகின்ற இதைப்போன்ற வேலைகளில் ஆபத்து இருக்கிறது. தவிர இதன் விளைவாக வழிப்போக்கருக்கு ஆபத்து ஏற்படலாம். இதன் காரணமாகவே கவனத்தோடு இருக்கவேண்டிய கடமை ஏற்படு கிறது. அக்கடமையைச் செய்யத் தவறினால் பொறுப்பு ஏற் படுகிறது.

இதைத் தவிர ரைலண்ட்ஸ் *v.* பிளட்சர் வழக்கில் சொல்லப் பட்ட விதியின்படி நிலத்திலிருந்து ஆபத்தான பொருட்கள் வெளி யேறிச் செல்வதால் இழப்பு ஏற்படும்போதும், தீயினால் சேதம் ஏற்

படும்போதும் பணித்தலைவர் அதற்குக் காரணம் தானல்ல வென்றும், தான் நியமித்த ஒப்பந்தக்காரரே என்றும் கூறிப்பொறுப்பி லிருந்து தப்பமுடியாது. மற்றும் தீவிபத்து, வெடிவிபத்து போன்ற அசாதாரணமான ஆபத்துகள் சில செயல்களால் இயல்பாகவே ஏற்படும். அச்செயல்களைச் செய்ய ஒப்பந்தக்காரர்களை நியமித்து பணித்தலைவர் பொறுப்பிலிருந்து தப்பமுடியாது. இதைப்போன்ற சமயங்களில் பணித்தலைவருடைய கடமை கவனத்தோடு இருக்கும் படி பார்த்துக்கொள்ளவேண்டியதாகும்.

பணித்தலைவர் நியமித்த ஒப்பந்தக்காரருடைய செயலால் நெடுஞ்சாலையில் தொல்லைகள் ஏற்படலாம். அதற்குப் பணித் தலைவர் பொறுப்பாளியாவார். மட்டானியா *v.* நேஷனல் & புரவின் ஷியல் பேங்க் (Matania *v.* National & Provincial Bank) வழக் கில் மிகப் பரவலான முறையில் கட்டட வேலைகள் இடையருது நிகழ்ந்ததால் கிளம்பிய புழுதியும், பேரிரைச்சலும் தொல்லையாக அமைந்திருந்தன. இது அசாதாரணமான முறையில் கட்டட வேலை நடைபெற்றதால் ஏற்பட்டது. பணித்தலைவர் ஒப்பந்தக் காரரின் செயலுக்குப் பொறுப்பாளியானார்.

ஒப்படைவு செய்யப்பட்ட பொருளைப் பத்திரமாகக் காவல் காப்ப தற்காக அமர்த்தப்பட்ட ஒப்பந்தக்காரரின் கவனமின்மையால் அப் பொருளுக்குச் சேதம் ஏற்பட்டால் பணித்தலைவர் பொறுப்பாளி யாவார்.

பணித்தலைவர் தகுதிவாய்ந்த பணியாட்களையும், போதுமான வேலைச் சாதனங்கள் முறையான வேலையமைப்பு போன்ற ஏற்பாடு களையும் அளிப்பதன்மூலம் பணியாளரின் பாதுகாப்புக்கு வழிசெய்ய வேண்டும் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. பணித்தலைவரின் இந்தக் கடமையை அவர் ஒப்பந்தக்காரரிடம் ஒப்புவித்து அவர் பொறுப்பிலிருந்து தப்பமுடியாது.

சட்ட மன்றம் இயற்றிய சட்டப்படி ஒரு தனிநபரோ அல்லது ஒரு குழுவோ கவனத்தோடு இருக்கவேண்டிய கடமையோ அல்லது பாதுகாப்புக்கு ஏற்பாடு செய்யவேண்டிய பொறுப்போ கொண்டிருப்பின் அக்கடமையை ஒப்பந்தக்காரரிடம் ஒப்புவித்துப் பொறுப்பிலிருந்து தப்பமுடியாது. எடுத்துக்காட்டாக, தொழிற் சாலைகள் சட்டத்தில் விதித்துள்ள பொறுப்புகளை ஒப்பந்தக்கார ரிடம் ஒப்புவித்துப் பணித்தலைவர் தம்முடைய பொறுப்பிலிருந்து தப்பமுடியாது.

ஒப்பந்தக்காரரின் சார்பு கவனமின்மை

பணித்தலைவரால் ஒப்புவிக்கப்பட்ட குறிப்பிட்ட வேலையைச் செய்வதில் ஒப்பந்தக்காரர் பொறுப்பின்றி இருந்தால் பணித் தலைவருக்குப் பொறுப்பு ஏற்படுவதைக் கண்டோம். இதற்கு ஒரு விதிவிலக்குண்டு. ஒப்பந்தக்காரர் தம்மிடம் ஒப்புவிக்கப்பட்ட வேலையில் அல்லாமல் அதன் சார்பாகவோ அல்லது உடன் நிகழ்ச்சியாகவோ அமைந்துள்ள ஒன்றில் கவனமின்றி இருந்தால் அதற்குப் பணித்தலைவர் பொறுப்பாளியாக மாட்டார். இவ்விருவகை கவனமின்மைக்கும் உள்ள வேறுபாடு என்னவென்று காட்டுவது எளிதன்று. ஆயினும்ஒப்பந்தக்காரரிடம் ஒப்புவிக்கப்பட்ட பணியோடு தொடர்பற்று உடன் நிகழ்ச்சியாக, சார்பாக, இடைவரவாக ஏற்படும் கவனமின்மைக்குப் பணித்தலைவர் பொறுப்பாளி அல்லர் என்று வழக்குகள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளன.

பேட்பரி *v.* ஹாலிடே & கிரீன்வுட் லிமிடெட் (Padbury *v.* Holiday & Greenwood Ltd.) வழக்கில், எதிர்வாதிகள் தாங்கள் கட்டிவந்த ஒரு வீட்டின் சன்னல்களுக்கு உலோகக் காப்புப் போட ஒரு துணை ஒப்பந்தக்காரரை வேலைக்கு அமர்த்தினர். துணை ஒப்பந்தக்காரரின் பணியாள் ஓர் உலோகக் காப்பினைப் பொருத்தும் போது, ஓர் இரும்புக் கருவியைக் கண்ணுடிச் சட்டத்தின்மேல் வைத்தார். காற்றினால் கவசம் தூக்கியெறியப்பட, அந்த இரும்புக் கருவி கீழே சாலையில் சென்று கொண்டிருந்த வாதியின்மேல் விழுந்து அவருக்குக் காயம் ஏற்பட்டது. இங்கு துணை ஒப்பந்தக்காரர் தாம் செய்ய அமர்த்தப்பட்டுள்ள வேலையைச்சாதாரணமாகச் செய்யும் முறையில் அந்தக்கருவியைக்கண்ணுடிச்சட்டத்தின்மேல் வைக்கப் படவில்லை. வாதிக்கு ஏற்பட்ட காயங்கள் சார்பு கவனமின்மையான செயலால் ஏற்பட்டவை. எனவே, எதிர்வாதிகள் பொறுப்பாளிகளாக மாட்டார்கள் என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

ஆனால், ஹாலிடே *v.* நேஷனல் டெலிபோன் கம்பெனி (Holliday *v.* National Telephone Co.) வழக்கில், தெருவின் அடியில் எதிர்வாதிகள் தொலைபேசிக் கம்பிகள் பொருத்திக் கொண்டிருந்தனர். ஓர் ஒப்பந்தக்காரரைச் சில இணைப்புகளை ஏற்படுத்த அவர்கள் நியமித்தனர். அந்த ஒப்பந்தக்காரரின் பணியாள் ஒருவரின் கவனமின்மையால் ஒரு பென்சோலின் விளக்கு வெடித்து,உருகிய உலோகக்கலவை தெறித்து வாதியின் மேல்பட்டு அவருக்குக் காயம் ஏற்பட்டது. கீழ்நிலை நீதிமன்றத்தில் இச்செயல் வெறும் சார்பு கவனமின்மையாகவே கருதப்பட்டது. ஆயினும் அப்பீல் நீதிமன்றம் இத்தீர்ப்பைத்தள்ளி எதிர்வாதிகளைப் பொறுப்பாளிகள் என்று தீர்ப்பளித்தது. நெடுஞ்சாலையில் நீட்டிக் கொண்

டிருக்கும் ஒரு விளக்கு ஒரு பணித்தலைவரிடம் இருந்தால் சாலையில் செல்பவருக்கு அதனால் ஆபத்து ஏற்படாமல் இருக்க உரிய கவனம் காட்டவேண்டிய கடமை அவருக்குண்டு. அதைப் பழுது பார்க்க அவர் நியமித்த ஒப்பந்தக்காரர் நல்லறிவுள்ள மனிதன் ஒருவன் கண்டுபிடிக்கக் கூடிய ஒரு குறைபாட்டைக் கண்டுபிடிக்கத் தவறியதன் விளைவாகச் சாலையில் செல்பவனுக்குக் காயம் ஏற்பட்டால் பணித்தலைவர் பொறுப்பாளியாவார். ஆனால், அந்த ஒப்பந்தக் காரர் சாலையில் செல்பவர்மேல் ஒரு சம்மட்டியைப் போட்டால் பணித்தலைவர் பொறுப்பாளியாகமாட்டார். அது சார்பு கவன மின்மையாகும் அது பணித்தலைவருக்காகச் செய்யும் பணியின் பாற்பட்டதன்று. இதைப்போலவே ஒப்பந்தக்காரர் தான் வேலை செய்யும் இடத்திற்குப் போகும்போதோ அல்லது அங்கிருந்து திரும்பி வரும்போதோ கவனமின்றிக் காரை ஓட்டி யாருக்காவது விபத்து ஏற்படுத்தினால் அதற்குப் பணித்தலைவர் பொறுப்பாளியாக மாட்டார்.

21. அரசின் பகரப் பொறுப்பு
(Vicarious liability of the State)

மன்னர் எந்தத் தீமையும் புரியமுடியாது (The King can do no wrong). எனவே இங்கிலாந்து நாட்டின் இயற்றுச் சட்டப்படி மன்னர் தீங்கிழைத்தார் என அவரது நீதிமன்றத்தில் அவர் மேலேயே வழக்கிட முடியாது. அவர் தீங்கிழைக்க முடியாதது போலவே, அவர் தீங்கிழைக்குமாறு வேறு ஒருவருக்கு அதிகாரம் வழங்கவும் முடியாது. எனவே, அரசின் பணியாட்கள் தங்களுக்குரிய பணியைப் புரியும்போது இழைக்கும் தீங்குக்காக அரசின் மேல் வழக்கிட முடியாது. இதுவே இயற்றுச்சட்டத்தின் (Common Law) கீழ் நிலவிய விதியாகும். ஆனால், அவ்வாறு தீங்கிழைத்த பணியாளின் மேல் தனிப்பட்டமுறையில் தீங்குக்காக வழக்கிட முடியும்; அவர் அரசு அதிகாரத்தோடோ அல்லது அரசின் அனுமதியோடோ அத்தீங்கினைப் புரிந்ததாக எதிர்வாதம் செய்ய முடியாது. அத்தீங்கு அரசினால் தவிர்க்கமுடியாத செயல் (State Necessity) என்றும் அவர் வாதிட முடியாது.

இயற்றுச் சட்டத்தின் கீழ் நிலவிய இந்நிலை 1947-ல் இயற்றப்பட்ட அரசுமுறை நடவடிக்கைச் சட்டத்தால் (Crown Proceeding Act, 1947) மாற்றப்பட்டுள்ளது. இப்போது தனி மனிதர்களைப் போலவே அரசும் அதன் பணியாட்கள் இழைக்கும் தீங்கிற்குப் பொறுப்பாளியாகும். ஆனால், மன்னர்மேல் தனிப்பட்ட முறையில் வழக்கிடமுடியாது. இச்சட்டம் மன்னருக்கே உரியதெனச் சட்டம் அளித்துள்ள அதிகாரங்களையும், தனியுரிமைகளையும் பாதிக்க வில்லை. இவை நீங்கலாக, இச்சட்டம் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. இச்சட்டத்தின் 2 (1) பிரிவு முழு வயதும், தகுதியும் உள்ள தனிமனிதன் தன் பணியாட்களும், முகவர்களும் இழைக்கும் தீங்கிற்குப் பொறுப்பாளி ஆவது போன்று அரசுக்குப் பொறுப்பு ஏற்படுகிறது என்று கூறுகிறது. தனிமனிதன் பணித்

தலைவர் என்ற முறையில் தன் பணியாட்கள், முகவர் ஆகியோர்பால் இயற்றுச் சட்டத்தின்படி கொண்டுள்ள கடமைகளை மீறினால் பொறுப்பாளியாவார். இதைப் போன்றே அரசுக்கும் பொறுப்புண்டு. மற்றும் இயற்றுச் சட்டத்தின் கீழ் ஒரு சொத்தின் உரிமையாளர், உடைமையாளர், அதை நிர்வகிப்பவர் என்ற முறையில் தனிமனிதனுக்குள்ள கடமைகளைப்போன்று அரசுக்கும் கடமையுண்டு. நாடாளு மன்றம் இயற்றியுள்ள சட்டங்களின்படி ஏற்பட்டுள்ள கடமையை அரசு மீறி இருந்தாலும் தீங்கியலில் பொறுப்பேற்படும்.

இந்திய அரசியல் சட்டப்பிரிவு 361 (1)ன் கீழ் குடியரசு தலைவர், மாநில ஆளுநர் தங்கள் அரசு அதிகாரங்களையும் கடமைகளையும் நிறைவேற்றும் வகையில் புரிந்த அல்லது புரிந்ததாகக் கூறவல்ல செயல்களுக்கு எந்தப் பொறுப்பும் கிடையாது. இப் பிரிவில் எவ்வாறு கூறியிருப்பினும், பாதிக்கப்பட்ட நபர் இந்திய அரசாங்கத்தின் (Government of India) மீதோ அல்லது மாநில அரசாங்கத்தின் (Government of a State) மீதோ உரிய நடவடிக்கை எடுக்க எந்தத் தடையும் இல்லையென்று அரசியல் சட்டம் கூறுகிறது.

இங்கிலாந்திலுள்ள அரசுமுறை நடவடிக்கைச் சட்டம் போன்று அரசின் பொறுப்பை வரையறை செய்யும் சட்டம் நம் நாட்டில் இயற்றப்படவில்லை. இந்திய அரசியல் சட்டத்தில் 300ஆவது பிரிவில் மைய அரசும், மாநில அரசும் வழக்கிடலாம் என்றும் அதேபோல அவற்றின் மீதும் வழக்கிடலாம் என்றும் கூறியிருந்தாலும், எந்தச் சூழ்நிலைகளில் இவ்வாறு செய்யமுடியும் என்று குறிப்பிடப்படவில்லை. சட்டப் பிரிவு 300-ன்கீழ் முன்பிருந்த இந்திய மேலாட்சியும் (Dominion of India), இந்திய அரசுகளும் (Indian States) அரசியல் சட்டம் இயற்றப் பெற்றிராவிட்டால் எவ்வெச் சூழ்நிலைகளில் வழக்கிடவும், வழக்கிடப்படவும் இயலுமோ, அவ்வாறே இந்திய ஒன்றியமும் (Union of India), மாநில அரசுகளும் (States) வழக்கிடவும், வழக்கிடப்படவும் இயலும் என்று கூறப்பட்டுள்ளது. இந்நிலையினை மாற்ற நாடாளுமன்றத்திற்கும், மாநிலச் சட்டமன்றங்களுக்கும் அதிகாரமும் வழங்கப்பட்டிருக்கிறது. இருப்பினும் இந்திய அரசியல் சட்டம் துவங்குமுன் இருந்த நிலையில் மாற்றம் ஏற்படவில்லை.

எனவே, அரசியல் சட்டம் வருவதற்கு முன்பிருந்த நிலையை நாம் ஆராயவேண்டியுள்ளது. 1935-ல் இயற்றப்பட்ட இந்திய அரசாங்கச் சட்டம், 1858-ல் இயற்றப்பட்ட இந்திய அரசாங்க

சட்டத்தில் சொல்லப்பட்ட பொறுப்பையே ஏற்றுள்ளது. இதன் படி கிழக்கிந்தியக் கம்பெனியின் மேல் எடுக்கக்கூடிய சட்ட நடவடிக்கைகளையும், அதனிடமிருந்து பெறக்கூடிய நிவாரணங்களையும் அரசிடமிருந்து பெறமுடியும். எனவே, 1858-க்கு முன் கிழக்கிந்தியக் கம்பெனியின் நிலையை நாம் அறிய வேண்டியுள்ளது.

பெனின்சுலர் & ஓரியண்டல் ஸ்டீம் நேவிகேஷன் கம்பெனி v.செகரட்ரி ஆஃப் ஸ்டேட் ஃபார் இந்தியா (Peninsular and Oriental Steam Navigation Company v. Secretary of State for India) வழக்கில், வாதியின் பணியாள் கல்கத்தாவில் அரசாங்கத்துக்குச் சொந்தமாகிய கப்பல் பழுது பார்க்கவும், சாதனங்கள் வைக்கவும், கட்டப்பட்டிருந்த கப்பல் துறையகத்தின் (Dockyard) அருகே குதிரைவண்டியில் சென்று கொண்டிருந்தார். அப்போது எதிர் வாதியின் பணியாட்களின் கவனமின்மையால் இரும்புச்சட்டம் ஒன்று கீழே விழுந்து பேரொலி ஏற்பட்டது. அதனால் குதிரை மிரண்டு ஓடி இரும்புச் சட்டத்தில் மோதிக் காயம் அடைந்தது. இந்திய அரசாங்கத்தின் பணியாட்களின் கவனமின்மைக்காக வாதி எதிர் வாதியின் மேல் வழக்கிட்டார். நீதிமன்றம் கிழக்கிந்தியக் கம்பெனியின் பொறுப்புப் பற்றி ஆய்ந்தது. கிழக்கிந்தியக் கம்பெனி வாணிபத்தில் ஈடுபட்டு இருந்ததோடு, இறைமை அல்லது அரசு அதிகாரமும் (Sovereign Power) செலுத்தி வந்தது. தனது இறைமை அதிகாரத்தைப் பயன்படுத்திச் செய்யும் செயல்களுக்கு அதன்மேல் பொறுப்பு விதிக்க முடியாது. அரசு அதிகாரம் அல்லாத வாணிபம், தொழில் போன்ற செயல்களைப் புரியும்போது தீங்கிழைத்திருந்தால் கிழக்கிந்தியக் கம்பெனிக்குப் பொறுப்பு ஏற்படும். அரசு அதிகாரம் அற்ற செயல் என்பது இந்திய அரசாங்கத்தினிடம்அதிகாரம் பெறுமல் ஒரு தனி நபர் செய்யக்கூடிய செயல்களைக் குறிக்கும். இங்குக் கப்பல் துறைமுகத்தைப் பராமரிப்பது அரசுமுறைப் பணியாகாது. எனவே, அரசாங்கம் வாதிக்குப் பொறுப்பாளியாகும் என்று தீர்ப்பளிக்கப் பட்டது.

நோபின் சந்தர் டே v. செக்ரட்ரி ஆஃப் ஸ்டேட் ஃபார் இந்தியா (Nobin Chander Dey v. Secretary of State for India) வழக்கில் எதிர்வாதியிடமிருந்து கஞ்சா விற்பனை செய்ய உரிமம் (licence) பெறத் தாம் செய்த ஒப்பந்தத்தை எதிர்வாதி மீறினார் என்று வாதி வழக்கிட்டதில், ஒப்பந்தம் எதுவும் இல்லையென்று கூறப்பட்டதோடு, அவ்வாறு ஒப்பந்தம் செய்து கொண்டிருந்தாலும், எதிர் வாதியின் செயல் இறைமை அதிகாரத்தோடு செய்யப்பட்டு இருந்தால் எதிர்வாதியின் மேல் வழக்கிட முடியாது என்றும் கூறப் பட்டது.

ஆயினும், சில வழக்குகளில் அரசு தனது பணியாட்கள்புரியும் தீங்குக்குப் பொறுப்பாளியாகும் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. ரூப்ராம் v. பஞ்சாப் மாநிலம் (Rup Ram v. The Punjab State) வழக்கில் எதிர்வாதியின் பணியாள் கவனமின்றிச் சுமையூர்தியை ஓட்டியதால் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த வாதி படுகாய முற்றார். அப்பணியாள் அரசாங்கத்தின் பொதுப்பணித் துறையில் பணியாற்றினர். எனவே, பணியாளின் கவன மின்மைக்குப் பணித்தலைவராகிய அரசாங்கம் பொறுப்பாளியாகும் என்று வாதி கூறினர். அரசாங்கம் தன் பணியாள் பாலம் கட்டு வதற்குத் தேவையான பொருட்களைப் பாரவண்டியில் ஏற்றிச் செல்லும்போது விபத்து ஏற்பட்டதால் தனக்குப் பொறுப்பு இல்லையென்று வாதிட்டது. பாலத்தை அரசாங்கம் மட்டுமே கட்டமுடியும். அது இறைமை அல்லது அரசுமுறைப் பணியாகும். எனவே, இறைமைச் செயலைப் புரியும்போது ஏற்பட்ட இழப்புக்குத் தான் பொறுப்பாளியல்லவென அரசாங்கம் எதிர் வாதம் செய்தது. இதை பஞ்சாப் உயர்நீதி மன்றம் ஏற்காது ஒரு சாதாரணப் பணித்தலைவரைப் போலவே அரசுக்கும் பொறுப்பு உண்டு என்று கூறிவிட்டது.

வித்தியாவதி v. ராஜஸ்தான் மாநிலம் (Vidyavadhi v. State of Rajastan) வழக்கில் அரசுக்குச் சொந்தமான ஜீப் காரைப் பட்டரையிலிருந்து மாவட்ட ஆட்சித்தலைவர் இல்லத்திற்கு அரசு ஊழியராகிய ஓட்டுநர் கொண்டு செல்லும்போது கவனமின்றிக் கண்மூடித்தனமாக ஓட்டியதால் ஏற்பட்ட விபத்தில் சாலையின் ஓரத்தில் சென்று கொண்டிருந்த ஒருவர் காயமடைந்தார். அக் காயங்களின் விளைவாக அவர் மருத்துவ மனையில் மாண்டார். அரசின் பணியாளாகிய அவர் தமக்குரிய பணியைப் புரியும்போது ஏற்பட்ட விபத்தாகையால் அரசு இதற்குப் பகரப் பொறுப்பேற்க வேண்டும் என்று மாண்டவரின் மனைவியும் மக்களும் வழக் கிட்டனர்.

அரசு ஊழியர் இறைமைப்பணி ஆற்றும்போது இவ்விபத்து ஏற்பட்டதால் மாநில அரசு பொறுப்பாளி ஆகாது என்ற எதிர் வாதத்தை இந்திய உச்ச நீதிமன்றம் ஏற்கவில்லை. பெனின்சுலர் வழக்குக்குப்பின் நாடு மிகவும் முன்னேறிவிட்டது. சமதர்மச் சமுதாயத்தை உருவாக்கும் பணியில் ஈடுபட்டுள்ள அரசு நலந் திகழ் நாடாக இந்தியாவை ஆக்கத் தனிமனிதர்களைப் போலவே பல்வேறு தொழில்களையும் வாணிபத்தையும் மேற்கொண்டுள்ளது. இச்சூழ்நிலையில் தனிமனிதன் ஈடுபடக்கூடிய செயல்களில் அரசும் ஈடுபட்டிருக்கும்போது அரசுக்கும் தனிமனிதனுக்கும் வேறுபாடு காட்ட இயலாது என்று கூறப்பட்டது. இதை இந்திய

உச்ச நீதிமன்றமும் ஏற்றுக் கொண்டது. எனவே, இறைமைநிலை அதிகாரம் செலுத்துவதோடு மட்டுமல்லாமல் பல்வேறு தொழில் துறைகளில் பணித்தலைவராக அரசு இருக்கும் நிலையில் அரசின் பணியாட்கள் தமக்குரிய பணியைப் புரியும்போது செய்யும் தீங்கு களுக்குப் பணித்தலைவர் என்ற முறையில் அரசுக்குப் பொறுப்பில்லை என்று கூறுவதை ஏற்றுக் கொள்ள முடியாது என்று உச்ச நீதி மன்றம் கருதியது.

பிரேம்லால் *v.* உத்தரப் பிரதேச அரசு (Premlal *v.* U. P. Government) வழக்கில், அலகாபாத் உயர்நீதிமன்றம், மாநில அரசு அதிகாரியாகிய மாவட்ட ஆட்சித்தலைவர் வாதியின் மோட் டார் காரை வேண்டுமென்றே சட்டத்திற்கு முரணாக எடுத்துக் கொண்டதற்கு மாநில அரசுக்குப் பகரப் பொறுப்புண்டு எனத் தீர்ப்பளித்தது. இது இறைமைப் பணியின்பாற்பட்ட செயல் என்று கூறப்பட்ட எதிர்வாதத்தை நீதிமன்றம் ஏற்கவில்லை.

இறுதியாக அரசின் பொறுப்பு என்ன என்பதைப் பற்றி தெளிவாகக் கூறமுடியவில்லை. கிழக்கிந்தியக் கம்பெனியின்மீது வழக்கிடப்பட்டு இருந்தால் நிலைமை எவ்வாறு இருந்திருக்கும் என்று நீதிமன்றம் இன்னும் கேட்பது பெருத்தமாக இல்லை. பிரிட்டிஷ் அரசின் முகவர் அல்லது சார்பாளர் என்ற முறையில் கிழக்கிந்தியக் கம்பெனி செய்யும் பல காரியங்களுக்குப் பொறுப் பில்லாமல் இருக்கலாம். அரசின் பணியாட்கள் புரியும் தீங்கு களுக்கு இங்கிலாந்தில் அரசுக்குப் பொறுப்பில்லாமல் இருந்தது. ஆனால், இங்கிலாந்தில் அரசுமுறை நடவடிக்கைச் சட்டம் 1947-ல் நிறைவேற்றப்பட்டபின் அரசும் ஒரு பணித்தலைவராகவே கருதப்பட்டுப் பணியாட்கள் புரியும் தீங்குகளுக்குப் பொறுப்பாளி யாகும் என்ற நிலை ஏற்பட்டு விட்டது. எனவே, இங்கிலாந் திலேயே நிலைமாறிவிட்டது. ஆனால், நாம் ஆங்கிலேயர்களால் கைவிடப்பட்ட விதியையே இன்னும் பின்பற்றி வருவது சரியன்று.

அரசாங்க (தீங்குக்கான பொறுப்பு) மசோதா நாடாளுமன் றத்தில் 1967-ல் கொணரப்பட்டது. அது அரசு தன்பணியாட்கள் முகவர், ஒப்பந்தக்காரர் புரியும் தீங்கான பொறுப்பைப் பற்றிக் கூறுகிறது. இந்த மசோதா இன்னும் நிறைவேற்றப்படவில்லை.

இங்கிலாந்தில் அரசுமுறை நடவடிக்கைச் சட்டம் 1947-ல் இயற்றப்பட்டபின் சட்டம் விதித்துள்ள கடமையைச் செய்யும் போது பணியாள் இழைத்த தீங்கென்று சொல்லி அரசு பொறுப்பி லிருந்து தப்பமுடியாது. இந்தியாவில், சட்டம் விதித்துள்ள

கடமையைச் செய்யும்போது அரசு ஊழியர் தீங்கிழைத்தார் என்று சொல்லப்படும் எதிர்வாதம் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாறு சட்டம் சுமத்தியுள்ள கடமைகளை அரசு ஊழியர் புரியும் போதும், அவற்றைப் புரியும்வகையில் செயலாற்றும்போதும், சட்டவாசகத்தின்படி அமைந்துள்ள கடமைகளையே செய்வதால் அவர் சட்டத்திற்குக் கட்டுப்படுகிறேயன்றி அரசாங்கத்துக்கன்று. எனவே, அவரது செயலுக்கு அரசாங்கத்தைப் பொறுப்பாளியாக்குவது முறையன்று என்று நீதிபதிகள் கருதுகின்றனர்.

கஸ்தூரிலால் & ராலியாராம் ஜெயின் v. உத்தரப் பிரதேச மாநிலம் (Kasturilal & Raliaram Jain v. State of U. P.) வழக்கில், அரசு ஊழியர் புரிந்த தீங்கிற்கு அரசுக்குப் பகரப் பொறுப்பு ஏற்படும் என்ற வாதத்தை உச்சநீதிமன்றம் நிராகரித்து இறைமைவழியில் செய்யப்படும் செயல்களுக்கு (Sovereign Functions) அரசுக்குப் பொறுப்பில்லை எனத் தீர்ப்பளித்தது. இவ்வழக்கில் தலைமைக் காவலர் ஒருவர் காவல் நிலையத்தில் அவர் பொறுப்பில் ஒப்புவிக்கப்பட்டிருந்த தங்கத்தைக் கையாடினார். இந்தத் தங்கம் களவு செய்ததாக ஐயத்திற்குள்ளான நபர் ஒருவரிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்டதாகும். பின்னர் இதற்கு ஆதாரம் இல்லையென்று கருதப்பட்டுக் கைதான நபர் விடுதலை செய்யப்பட்டார். அதற்குள் தலைமைக்காவலர் தான் கையாடிய தங்கத்தோடு பாகிஸ்தானுக்கு ஓடிவிட்டார். அவர் இருப்பிடத்தை அறிய முடியவில்லை. எனவே, மாநில அரசு ஊழியர் புரிந்த தீங்குக்கு மாநில அரசைப் பகரப் பொறுப்பாளியாக்க முடியுமா என்ற கேள்வி எழுந்தது. இந்திய உச்சநீதிமன்றம் மாநில அரசின் மேல் இடப்பட்ட வழக்கைத் தள்ளுபடி செய்தது. இவ்வழக்கிற்கும், வித்யாவதி வழக்கிற்கும் நீதிமன்றம் வேறுபாடு உண்டெனக் கூறியது. இறைமைநிலையின்படி அரசு ஊழியர் பணியாற்றுதபோதுதான் அவர்களுடைய தீங்கான செயல்களுக்குப் பணித்தலைவர் என்ற முறையில் அரசு பொறுப்பாளியாகமுடியும் என்று நீதிபதிகள் விளக்கம் தந்தனர். எனவே, வித்யாவதி வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பு குறுகிய அளவில்தான் பின்பற்றப்படவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. நிலவரி வசூலித்தல் இறைமை நிலையின்கீழ் செய்யப்படும் பணியாகும். எனவே, அதை வசூலிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளபோது அரசு அலுவலர்கள் புரியும் சட்ட முரணானதும், தீங்கெண்ணமுடையதுமாகிய செயல்களுக்கு அரசு பொறுப்பாளியாகாது (ஆந்திரப்பிரதேச அரசு v. அங்கண்ணு). இதைப்போலவே விற்பனவரி வசூலிக்கும் அரசு அதிகாரிகள் சட்டமுரணான செயலைச் செய்தால் அதற்கு அரசு

பொறுப்பாளியாகாது என்று மற்றொரு வழக்கில் தீர்ப்பளிக்கப் பட்டுள்ளது. தபால் கட்டுகளை ஓர் அஞ்சல் நிலையத்திலிருந்து வேறு ஒரு நிலையத்திற்கும், புகைவண்டி நிலையத்திலிருந்து அஞ்சல் நிலையத்திற்கும் எடுத்துச் செல்ல நியமிக்கப்பட்ட ஒப்பந் தக்காரரின் பணியாளாகிய ஓட்டுநர், ஒருவர்மீது வண்டியை ஏற்றி விட்டால் இந்திய அரசு அதற்குப் பொறுப்பாளியாகாது (யூனியன் ஆஃப் இந்தியா v. ஜீவராஜ் ஆல்வா). அஞ்சல்துறை பொது மக்கள் நலனுக்காகச் செயலாற்றும் அரசுக்குச் சொந்தமான ஒரு வாணிப அமைப்பாகும். அது அரசின் இறைமையின்பாற் பட்டதன்று.

அரசு ஊழியர் ஒருவர் நாடாளுமன்றமோ அல்லது மாநில சட்டமன்றங்களோ இயற்றிய சட்டங்களை நிறைவேற்றுவதாகச் சொல்லிக் கொண்டு சட்டமுரணான செயலொன்றைச் செய்ததன் விளைவாகக் குடிமகன் ஒருவனுக்கு இழப்பு ஏற்பட்டிருந்தால் அதற்கு அரசு பொறுப்பாளியாகும் என்று கருதப்படுகிறது.

அரசு ஊழியர் ஒருவர் தமது ஊதிய பாக்கியை மீட்க அரசின் மீது வழக்கிடமுடியாது என்ற ஆங்கிலச் சட்டவிதியை இந்தி யாவில் ஏற்பதற்கில்லையென்று இந்திய உச்சநீதிமன்றம் தீர்ப் பளித்துள்ளது.

இங்கிலாந்தில் உள்ள அரசுமுறை நடவடிக்கைச் சட்டம் போன்றதொரு சட்டத்தை நமது நாட்டிலும் இயற்ற வேண்டும் என்ற கருத்தை உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ளது.

22. கூட்டாகத் தீங்கிழைப்பவர்கள் (Joint Tort feasors)

வாதிக்கு எதிராக இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள் தனித்தனியாகவோ, அல்லது ஒன்றுகச் சேர்ந்தோ ஒரே தீங்கினை இழைத்திருக்கலாம். இருவரோ அல்லது அதற்கு மேற் பட்டவரோ ஒரே நோக்கத்துடன் ஒன்றுக இணைந்து செயல்பட்டு வாதிக்குத் தீங்கு புரிந்திருந்தால்தான் அவர்கள் கூட்டாகத் தீங் கிழைத்தவர்களாகக் கருதப்படுவர். முதற்கண், அவர்கள் அனை வரும் ஒரே தீங்கான செயலைப் புரிந்தவர்களாக இருக்கவேண்டும். அவர்கள் ஒன்றுகூடிச் செய்த செயல்களின் விளைவாக வாதிக்கு ஊறு அல்லது இழப்பு ஏற்பட்டிருக்கவேண்டும். ஆனால் அவர்கள் ஒருவரோடு ஒருவர் தொடர்பற்று, தனித்தனியே செயல்பட்டு அவற்றின் மொத்த விளைவாக வாதிக்கு இழப்பு ஏற்பட்டிருந்தால் அவர்கள் தனித்த தீங்கிழைப்பவர்கள் என்றே கருதப்படுவார்கள். இருவரைக் கூட்டாகத் தீங்கிழைப்பவர் என்று கூற வேண்டு மானால், தீங்கும் ஏற்படும் இழப்பும் இணையவேண்டும். எனவே, குறிப்பிட்ட மனக்கருத்து அல்லது உள்நோக்கம் இருந்தால்தான் ஒரு தீங்குக்குப் பொறுப்பு ஏற்படும் என்றால், அப்படிப்பட்ட மனக் கருத்து அல்லது உள்நோக்கம் தீங்கிழைப்பதில் பங்குபெற்ற ஒவ் வொருவருக்கும் இருந்ததாக நிரூபிக்கவேண்டும். பொதுவான மனக்கருத்து அவர்களுக்கில்லையெனில் அவர்கள் தனித்துத் தீங் கிழைப்பவர்களே (several tort feasors)யன்றி, கூட்டாகத் தீங்கிழைப்பவர்கள் ஆக மாட்டார்கள். இவ்வாறு ஒருவரோடு மற்றவர் தொடர்பு கொள்ளாமல், பொதுவான எண்ணமின்றி, சுதந்திரமாகத் தனித்துச் செயல்படுவதன் விளைவாக வாதிக்கு ஊறோ, இழப்போ ஏற்படுவதும் உண்டு. எடுத்துக்காட்டாக, சாலையில் காரினை ஓட்டிச் செல்லும் இருவர் ஒருவரையொருவர் முந்திச்செல்லப் போட்டி போட்டுக்கொண்டு கவனமின்றிக் கார்

ஓட்டியதன் விளைவாக விபத்து ஏற்பட்டு வாதிக்குக் காயமேற்பட லாம். ஆனால், இங்குக் கார்களை ஓட்டிச் சென்ற இருவருக்கும் வாதிக்குக் காயம் ஏற்படுத்த வேண்டும் என்ற பொதுவான நோக்கம் இல்லை. எனவே, அவர்கள் இருவரும் தனித்த தீங்கிழைப் பவர்களே ஆவர்; கூட்டாகத் தீங்கிழைப்பவர்கள் அல்லர். எனவே இருவர் கூடி இழைத்ததாகச் சொல்லப்படும் தீங்கில் ஒவ்வொரு வரது செயலும் அவர்களது பொதுவான நோக்கத்தை நிறைவேற் றும் வகையில் செய்யப்படுவதாகும்.

புரூக் v. பூல் (Brooke v. Bool) வழக்கில் எதிர்வாதி மாரிஸ் என்பவர் உடன்வர வாதியின் கடையில் உள்ள வாயுக்குழாயில் வாயு எப்பகுதியில் வெளியேறுகிறது என்று கண்டறியச் சென் றிருந்தார். எதிர்வாதி மூடி பொருத்தப்படாத விளக்கை வைத்துக் கொண்டு ஒரு வாயுக்குழாயைச் சோதனையிட்டார். அவரைப் பின்பற்றி மாரிஸ் என்பவரும் சோதனையிட்டார். இதன்விளைவாக ஏற்பட்ட வெடிவிபத்தில் வாதியின் கடை மிகுந்த சேதமுற்றது. இதற்காகத் தீங்கீடு கோரி எதிர்வாதி பூவின்மேல், வாதி வழக் கிட்டார். மாரிஸின் செயல்களுக்கு எதிர்வாதி பொறுப்பாகக் கருதப்பட்டார். இவர்கள் இருவரும் செய்த முறையற்ற செயல் ஒன்றுகும். இவர்கள் இருவரும் தனித்து ஒருவரோடு மற்றவர் தொடர்பற்று செயல்பட்டதாகச் சொல்ல முடியாது. இவர்கள் இருவரும் கூட்டாகத் தீங்கிழைத்தவர்களே ஆவர்.

ஒரு பணியாள் தமக்குரிய பணியைச் செய்யும்போது தீங் கிழைத்தால், அதற்கு அவரது பணித்தலைவரும் அவருடன் கூட் டாகத் தீங்கிழைத்தவராகக் கருதப்பட்டுப் பொறுப்பேற்கவேண்டி வரலாம். இதைப்போலவே ஒரு முதல்வருக்காகச் (Principal) செயலாற்ற அமர்த்தப்பட்டுள்ள முகவர் தமது அதிகார எல்லைக்குட் பட்டுச் செயலாற்றும்போது தீங்கிழைத்திருந்தால் அவருடைய முதல்வரும் கூட்டாகத் தீங்கிழைத்தவராகக் கருதப்பட்டுப் பொறுப் பாளியாகலாம்.

கூட்டாகத் தீங்கிழைப்பவரின் பொறுப்பு

பலர் ஒன்றுகச் சேர்ந்து ஒரு தீங்கினை இழைத்திருந்தால் அவர் கள் ஒவ்வொருவரும் தனியாகவும், கூட்டாகவும் அத்தீங்கினால் விளைந்த சேதம் அனைத்திற்கும் பொறுப்பாளியாவர். அதாவது தீங்கிழைக்கப்பட்டவர் தனக்கேற்பட்ட இழப்பு முழுவதற்கும் அவர்களில் யாரேனும் ஒருவர் மீதுமட்டும் தனியே வழக்கிடலாம், அல்லது அவர்கள் அனைவர்மீதும் ஒரே வழக்கிடலாம்; அவர்கள்

ஆனவருக்கும் எதிராகத் தீர்ப்பான தீங்கீட்டுத் தொகையை யாராவது ஒருவரிடமிருந்துமட்டும் வசூலிக்கமுடியும். எனவே, கூட்டாகத் தீங்கிழைத்தவர்களுக்குக் கூட்டாகவும் தனித்தும் பொறுப்பேற்படுகிறது. அவர்கள் அனைவருக்கும் எதிராக அமைந்துள்ள வழக்குமூலம் ஒன்றேயாகும் ; அதைப் பிரிக்க முடியாது. எனவே, தீங்கிழைக்கப்பட்டவர், தனக்குத் தீங்கிழைத்தவர்களில் யாரேனும் ஒருவரைப் பொறுப்பிலிருந்து விடுவித்தால் மற்றவர்களுக்கும் பொறுப்பு நீங்கிவிடும். ஆனால் அவர்களில் ஒருவர்மீது வழக்கிடப்போவதில்லை என்று வெறும் உடன்பாடு மட்டும் செய்துகொண்டிருந்தால், மற்றவர்களுக்கு எதிரான வழக்கு மூலம் தொடர்ந்து இருக்கும். இந்த உடன்பாடு, வழக்கு மூலத்தை அழிப்பதில்லை. இதன் விளைவாக அவ்வாறு உடன்பாடு செய்துகொண்ட தீங்கு புரிந்தவர்மீதுமட்டும் வழக்கிடமுடியாமல் போகிறது. இந்தியச் சட்டத்திலும் இதேநிலை ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கிறது. ஷிவ்சாகர் லால் *v.* மாத தின் (Shivsagar Lal *v.* Mata Din) வழக்கில் கூட்டாகத் தீங்கிழைத்தவர்களில் ஒருவரிடம் அவர்மீது வழக்கிடப்போவதில்லை என்று செய்துகொண்டுள்ள வெறும் ஒப்பந்தத்தின் விளைவாக அவருடன் கூட்டாகத் தீங்கிழைத்தவர்கள் பொறுப்பிலிருந்து விடுவிக்கப்பட மாட்டார்கள் என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

சில வழக்குகளில் கூட்டாகத் தீங்கிழைத்தவர்களில் ஒருவருக்குப் பொறுப்பிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டிருந்தால், மற்றவர்களும் தங்களுடைய பொறுப்பிலிருந்து விடுவிக்கப் படவேண்டுமாயின், தீங்கினை அடைந்தவருக்கு முழு நிவாரணமும் அளிக்கப் பட்டிருக்கவேண்டும் என்று கூறப்பட்டது. குஷ்ரு *v.* கஸ்டார் (Khushro *v.* Guzdar) வழக்கில், எதிர்வாதிகள் அவதூறு இழைத்ததாக அவர்கள்மேல் வாதி வழக்கிட்டார். வாதி தமது முறையீடான வழக்குரையை (Plaint) நீதிமன்றத்தில் கொடுத்த பின்னர் எதிர்வாதிகள் தங்கள் எதிர்வழக்குரையை (Written statement) நீதிமன்றத்தில் தரும் முன்னர் எதிர்வாதிகளில் ஒருவர் நிபந்தனை அற்றமுறையில் மன்னிப்புக் கேட்டுக்கொண்டார். அதை வாதியும் ஏற்றுக்கொண்டு தனக்கும், அந்த எதிர்வாதிக்கும் இடையே ஏற்பட்ட இணக்கத்தின் அடிப்படையில் அவர்மேல் தனக்குள்ள தீங்கீடு கேட்கும் உரிமைக்கு உரிய தீர்ப்பாணை (Decree) உத்தரவிட நீதிமன்றத்தை வேண்டினர். அவ்வாறு தீர்ப்பாணை உத்திரவிடப்பட்டது. எதிர்வாதிகள் தங்களில் ஒருவருக்கு மன்னிப்பு அளிக்கப்பட்டுப் பொறுப்பிலிருந்து விடுவிக்கப் பட்டதால் அவருடன் கூட்டாகத் தீங்கு புரிந்த தங்கள்மேல் வழக்

கிடும் உரிமையை வாதி இழந்துவிட்டார் என்று வாதிட்டனர். வாதி எதிர்வாதிகளில் ஒருவருடன் செய்துகொண்ட சமாதான ஒப்பந்தத்தால் அவருக்கு ஏற்பட்ட இழப்புக்கு முழு ஈடும் பெற்று விட்டதாகக் கருதமுடியாது என்று இந்திய உச்ச நீதிமன்றம் தீர்ப் பளித்தது. தீங்கிழைத்தவர்களில் ஒருவருக்கெதிராகத் தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தால், அது அவருடன் கூட்டாகத் தீங்கிழைத்த மற்றவர்களையும் விடுவிக்கும் என்று இயற்றுச் சட்டப்படி இங் கிலாந்தில் கருதப்பட்டது. பிரின்ஸ்மீட் v. ஹாரிசன் (Brinsmead v. Harrison) வழக்கில் 'அ' என்பவர் ஒரு பியானோ இசைக் கருவியை மீட்டுப்பெற 'ஆ' என்பவர்மேல் வழக்கிட்டார். இவ் வழக்கில் 'ஆ' என்பவர் தானும் 'இ' என்பவரும் கூட்டாக இத்தீங்கை இழைத்ததாகவும் 'இ' என்பவர்மேல் வழக்கிடப் பட்டுத் தீர்ப்பும் வழங்கப்பட்டு விட்டது என்று வாதிட்டார். 'ஆ' என்பவர் 'இ' என்பவரிடமிருந்து எந்தத் தொகையும் நிவாரண மாகப் பெறமுடியவில்லை. எனவே, அவர் பின்னர் 'ஆ' வின்மீது வழக்கிட்டார். இதை நீதிமன்றம் அனுமதிக்கவில்லை. ஆனால் இவ்விதி 1935-ல் இயற்றப்பட்ட சட்டத்திருத்த (மணமான பெண்கள், தீங்கிழைப்பவர்) சட்டத்தின்படி மாற்றப்பட்டு, தீங் கிழைத்தவர்கள்மேல், அவர்கள், தீங்கினைக் கூட்டாகச்செய்திருந் தாலும், இல்லாவிட்டாலும், தொடர்ச்சியாக ஒரே தீங்குக்காக வழக்கிட அனுமதிக்கப்பட்டது. ஆனால், பின்னர் இடப்பட்ட வழக்கில், முதல்வழக்கில் தீர்ப்பான இழப்பீட்டுத் தொகையைவிட அதிகமான இழப்பீட்டுத் தொகைக்குத் தீர்ப்பளிக்கப்படமாட்டாது என்றும், தக்க காரணமில்லாமல் வாதி வழக்கிட்டு இருப்பதாக நீதி மன்றம் கருதினால் அவருக்கான செலவுத் தொகையை அளிக்கு மாறு உத்தரவிடாது என்றும் இச்சட்டம் சொல்லுகிறது. இச் சட்டம் வேறு நாட்டுச்சட்டம் என்பதோடு நீதி, நேர்மை, நெறி, நன்மனச்சான்று (Justice, Equity and Good Conscience) ஆகிய நெறிகளுக்குப் பொருந்தவில்லை என்பதாலும் நம் நாட்டில் ஏற்றுக் கொள்ளப்பட முடியாது என்று நாவல் கிஷோர் v. ராமேஷ்வர் (Nawal Kishore v. Rameshwar) வழக்கில் சொல்லப்பட்டது. ஒருவருக்கு எதிராகத் தீர்ப்பான தீங்கீட்டுத் தொகையைவிட அதிகமாக மற்றவர் செலுத்த வேண்டிய தீங்கீட்டுத் தொகை இருக் கக் கூடாது என்ற வாதம் ஏற்கப்படவில்லை.

கூட்டாகத் தீங்கிழைத்தவர்கள் தீங்குக்காகக் கூட்டாகவும் தனித்தனியாகவும் பொறுப்பாவர் என்று கண்டோம். ஆனால், அவர்களில் ஒருவர் தீங்கெண்ணத்துடன் நடந்து கொண்டிருந் தால் மற்றவர் தரவேண்டிய தீங்கீடு அதிகமாகாது. அவர்கள்

இருவரும் சேர்ந்து வாதிக்கு உண்மையில் ஏற்பட்ட இழப்புக்கு மட்டுமே பொறுப்பாவர். வாதி அதற்காக அதிகத் தொகையை எச்சரிக்கை இழப்பீடாகப் பெற விரும்பினால், தீங்கெண்ணத்துடன் செயல்பட்டவர் மீது தனியே வழக்கிடவேண்டும்.

கூட்டாகத் தீங்கிழைத்தவர்கள், கூட்டாகவும், தனித்தும் ஏற்பட்ட இழப்பு அனைத்துக்கும் பொறுப்பாவர் என்பதால் வாதி தனக்குத் தீங்கிழைத்தவர்களில் ஒருவர்மேல் மட்டும் வழக்கிட்டு இழப்பீடு முழுதும் பெறலாம். அவ்வாறு வாதிக்கு முழுத்தீங்கீடு கொடுத்தவர், தம்முடன் கூட்டாகத் தீங்கு புரிந்தவர்கள் மேல் வழக்கிட்டுத் தீங்கீட்டில் அவர்கள் பங்குக்குரிய தொகையை மீட்க முடியுமா என்ற கேள்வி எழுகிறது. ஏன் எனில் வாதிக்கு ஏற்பட்ட ஊறுக்கு அவர்மட்டுமல்லாமல் அவருடன் கூட்டாகத் தீங்குபுரிந்தவர்களும் காரணமாவர். எடுத்துக்காட்டாக, 'அ' வும் 'ஆ' வும் சேர்ந்து 'இ' என்பவருக்கு எதிராக இழைக்கப்பட்ட தீங்குக்குச் சமமான அளவு பொறுப்புடையவர் என்று வைத்துக் கொள்வோம். இத்தீங்கினால் 'இ' என்பவருக்கு ரூ. 1000 இழப்பு ஏற்படுகிறது. அவர் 'அ' வின் மேல் மட்டும் வழக்கிட்டு ரூ. 1000 இழப்பீடாகப் பெறுகிறார். இந்தத் தொகையை அவருக்கு அளிக்க நேர்ந்த 'அ' பின்னர் 'ஆ' வின் மேல் வழக்கிட்டு நியாயமாக அவர் தர வேண்டிய பங்கான ரூ. 500 ஐ அவரிடமிருந்து மீட்கமுடியுமா? இவ்வாறு 'ஆ' வின் மேல் 'அ' வழக்கிட முடியாதென மெர்ரி வெதர் v. நிக்ஸன் (Merry Weather v. Nixon) வழக்கில் கூறப்பட்டது.

இவ்வழக்கில், வாதியும் எதிர்வாதியும் சேர்ந்து மூன்றாவது நபர் ஒருவரின் ஆலைக்கும் இயந்திரங்களுக்கும் வேண்டுமென்றே சேதம் விளைவித்தனர். அவர்கள் இருவரும் புரிந்த தீங்குச் செயலுக்காக அந்த மூன்றாவது நபருக்குத் தரவேண்டிய தீங்கீட்டை வாதி செலுத்திய பின்னர் எதிர்வாதியிடமிருந்து தனக்குரிய பங்கை மீட்க எதிர்வாதியின்மேல் வழக்கிட்டார். வாதி அவ்வாறு பங்கு பெற முடியாது என இவ்வழக்கில் தீர்ப்பளிக்கப்பட்டது. தீங்கு இழைப்பதனால் ஏற்படும் விளைவுகள் அனைத்தையும் தீங்கிழைத்தவரே ஏற்கவேண்டும் என்றும், இவ்வாறு சட்ட முரணான செயல்களினால் ஏற்படும் ஆதாயம் அல்லது இழப்பு ஆகியவற்றைப் பகிர்ந்து கொள்ளத் தீங்கிழைப்பவர்கள் தங்களுக்கிடையே வெளிப்படையாகவோ அல்லது உட்கிடையாகவோ செய்து கொள்ளும் எந்த ஒப்பந்தத்தையும் நிறைவேற்ற நீதிமன்றம் துணைக்கு வராது என்றும் கூறப்பட்டது. எனவே, கூட்டாகத் தீங்கிழைத்த ஒருவர் விகிதாசாரமோ அல்லது தமக்கு ஏற்பட்ட இழப்புக்கு ஈட்டுறுதியோ (indemnity) கேட்டு மற்றவர்மேல்

வழக்கிடமுடியாது. ஆயினும், இவ்விதி சட்டத்திற்கு முரணுக அமைந்துள்ள செயல்களோ, வேண்டுமென்றே கருதிச் செய்யப்படும் தீங்குகளோ அவர்கள் செய்திருந்தால்தான் பொருந்தும்; வேறு வகைகளில் தீங்கு இழைத்திருந்தால் இது பொருந்தாது. எடுத்துக்காட்டாக, கவனமின்றியோ அல்லது தவறுதலாகவோ உண்மையை அறியாமலோ செய்யப்படும் தீங்கான செயல்களுக்கு இவ்விதி பொருந்தாது. கூட்டாகத் தீங்கிழைத்தவர்களில் ஒருவர் எக்குற்றமும் செய்யாதவராக இருக்கலாம். அவர் வாதிக்கு முழு இழப்பீடும் தர நேர்ந்துவிட்டால், தீங்கு புரிந்த மற்றவர்களிடமிருந்து தமக்கேற்பட்ட இழப்புக்கு ஈட்டுறுதி பெறத் தடையில்லை. ஆடம்சன் *v.* ஜார்விஸ் (Adamson *v.* Jarvis) வழக்கில், கூட்டாகத் தீங்கு இழைத்தவர்களில் ஒருவர் மற்றவரிடமிருந்து ஈட்டுறுதி பெறலாம் என்று சொல்லப்பட்டது. இவ்வழக்கில் ஏல விற்பனை செய்பவராகிய (Auctioneer) வாதி சில பொருட்களை எதிர்வாதியின் சார்பாக ஏலத்தில் விற்றார். அவர் அப்பொருட்கள் எதிர்வாதியினுடையவை என்று உண்மையாகவே நம்பிவிட்டார். பின்னர் எதிர்வாதிக்கு அப்பொருட்கள் மேல் எந்த உரிமையும் இல்லையென்று தெரியவந்தது. அப்பொருட்களுக்கு உரியவர் தமது பொருட்களை கையாடல் செய்ததாக வழக்கிட்டு ஏல விற்பனை செய்பவரிடம் இழப்பீடு பெற்றார். இவ்வாறு தீங்கீடு தந்த பின்னர் ஏல விற்பனை செய்பவராகிய வாதி, எதிர்வாதியின் மேல் வழக்கிட்டு தமக்கு ஏற்பட்ட இழப்பு முழுவதுக்கும் அவரிடமிருந்து ஈட்டுறுதி பெற்றார். இதேபோல குற்றமற்ற பணித் தலைவர் ஒருவர் தமது பணியாள் உரிய பணியைப் புரியுங்கால் இழைத்தத் தீங்கிற்காக பகரப் பொறுப்பு ஏற்று இழப்பீடு தந்த பின்னர் தமது பணியாள்மீது வழக்கிட்டு தமது இழப்புக்கு ஈட்டுறுதி பெறலாம். ஈட்டுறுதி பெற வேண்டுமாயின் அதை வேண்டுபவர் ஆடம்சன் *v.* ஜார்விஸ் வழக்கில் உள்ள ஏல விற்பனை செய்பவரைப் போலக் குற்றமற்றவராக இருத்தல் வேண்டும்.

தவிர இந்தியக் கூட்டாண்மைச் சட்டத்தில்(Indian Partnership Act) இதைப் போன்றதொரு விதியுண்டு. நிறுவனத்தை கூட்டாளி ஒருவர் நடத்துவதில் வேண்டுமென்றே கவனமின்றி இருப்பதால் நிறுவனத்திற்கு ஏற்படும் இழப்பினுக்காக அவர் ஈட்டுறுதி செய்ய வேண்டுமென இச்சட்டம் சொல்கிறது. தவிர, கம்பெனி திட்டவிளக்க அறிக்கைகளில் (Prospectus) தரப்படும் பொய்யான தகவலால் ஏற்படும் இழப்பிற்குப் பொறுப்பேற்படும் போது அக்கம்பெனி இயக்குநர்கள், உறுவாக்கியவர் ஆகியவரில் இழப்பீடு தந்தவர் மற்றவர்களிடமிருந்து தமக்குரிய பங்கை மீட்கலாம். இதைப் போலவே இரு கப்பல்களின் கவனமின்மை

யால் அவற்றில் ஒன்றில் உள்ள நபருக்குச் சாவோச் அல்லது உடற் காயமோ ஏற்பட்டிருந்தால், அவற்றில் ஒன்றிடமிருந்து மற்றது தனக்குரிய பங்கைப் பெற முடியும். இதைப் போலவே ஈட்டுறுதியும் பங்கீடும் அனுமதிக்கும் வேறு சட்டங்களும் உள்ளன.

மெர்ரி வெதர் v. நிக்சனில் சொல்லப்பட்ட விதி சட்டத் திருத்த (மணமான பெண்கள், தீங்குபுரிபவர்) சட்டம், 1935-ன்படி மாற்றப்பட்டு விட்டது. இதன் விளைவாகக தீங்கு புரிந்தவர் ஒருவர் தான் தரவேண்டிய தீங்கீட்டுத் தொகையைவிட அதிக மாகத் தர நேர்ந்து விட்டால், அத்தீங்குக்குக் காரணமாக இருந்த மற்றவர்கள் மீது வழக்கிட்டு அத்தீங்கில் அவர்கள் பங்குக்கு உரிய தீங்கீட்டுத் தொகையைக் கோரலாம். ஆயினும் அவர் பொறுப் பாளியாக்க விரும்புபவர் அத்தீங்குக்குப் பொறுப்பாளியாகக்கூடிய நிலையில் இருக்கவேண்டும். டிரிங்க்வாட்டர் v. கிம்பர் (Drink-water v. Kimber) வழக்கில் ஒரு மனைவி தனது கணவனுடைய கவனமின்மையாலும், மூன்றுவது நபர் ஒருவரின் கவனமின்மை யாலும் ஏற்பட்ட விபத்தில் காயமுற்றாள். அவளுக்கு ஏற்பட்ட காயத்திற்காக அவள் மூன்றுவது நபரின் மீது வழக்கிட்டு முழுத் தீங்கீடும் பெற்றாள். அவ்வாறு தீங்கீடு அளித்த அந்த மூன்றுவது நபர் அவள் கணவனிடமிருந்து, தீங்குக்கு அவன் தரவேண்டிய பங்கைப்பெற முடியவில்லை. ஏன் எனில் இவ்வழக்கு நடந்தபோது இருந்த சட்டப்படி மனைவிக்கு ஏற்படுத்திய உடற்காயங்களுக்கு கணவனைப் பொறுப்பாளியாக்க முடியாது. எனவே, மூன்றுவது நபர் கணவனிடமிருந்து அவனது பங்கைப் பெறமுடியவில்லை.

மேலே கூறிய சட்டத் திருத்தச் சட்டத்தின்படி, இழப்புக்கு வாதி எந்த அளவுக்குப் பொறுப்பாவார் என்பதைக் கருதிப்பார்த்து நீதி, நேர்மையைப் பின்பற்றி எவ்வளவு பங்கு தரப்பட வேண்டும் என்று தீர்மானிக்கப்படும். எடுத்துக்காட்டாக ஒரு தீங்கினை இழைப்பதில் இருவர் சமமாகப் பொறுப்பாளிகளாக இருந்து, ஒருவர் மட்டும் இழப்புக்கு முழுவதும் ஈடுசெய்யவேண்டி வந்தால், அவர் மற்றவரிடமிருந்து சம பங்கு அதாவது 50% கோர முடியும். ஆனால், இழைக்கப்பட்ட தீங்குக்கு ஒருவர் 60% மற்றவர் 40% பொறுப்பாளிகளாக இருந்தால் அவர் மற்றவரிடமிருந்து அவரது பங்காக 40% மட்டுமே கோர முடியும். ஒரே வழக்கிலேயே நீதி மன்றம் கூட்டாகத் தீங்கு புரிந்தவர் ஒவ்வொருவரும் தரவேண்டிய பங்குத் தொகையைக் குறிப்பிட்டுத் தீர்ப்பளிக்கலாம், ஆனால், வேண்டுமென்றே எதிர்வாதிகள் தீங்கு இழைத்திருந்தால் இந்த நிவாரணத்தை அளிக்க நீதி மன்றம் மறுத்துவிடலாம்.

நமது நாட்டில் இங்கிலாந்தில் 1935-ல் இயற்யப்பட்ட சட்டத் திருத்தச் சட்டம் போன்றதொரு சட்டம் இல்லை. சில வழக்குகளில் இந்திய நீதிமன்றங்கள் மெர்ரி வெதர் v. நிக்சன் தீர்ப்பினைப் பின் பற்றியுள்ளன; சில வழக்குகளில் பின் பற்றவில்லை. நாக்பூர், கல்கத்தா, அலகாபாத் உயர்நீதி மன்றங்கள் மெர்ரி வெதர் v. நிக்சன் வழக்கில் சொல்லப்பட்ட விதி நம் நாட்டுக்குப் பொருந்தாது என்று தீர்ப்பு அளித்துள்ளன.

23. நீதிமுறை அதிகாரங்கள் (Judicial Authority)

நீதிபதி தனது நீதிவழங்கும் பணியை ஆற்றும்போது செய்கின்ற செயலுக்கு எதிராகவும், உத்திரவுகளுக்கு எதிராகவும் அவர் மேல் வழக்கிடமுடியாது. அவர்கள் சொல்லும், செயலும் தீங் கெண்ணம் கொண்டவையாய் முறையற்று இருப்பினும் அவர்மேல் பொறுப்பைச் சுமத்த முடியாது. நீதிபதிகள் சுதந்திரமாய்ப் பணி யாற்றவேண்டும். அதற்கு அவர்கள் அச்சமின்றிச் செயல்பட வேண்டும். எனவே, தங்களுடைய அதிகார வரம்புக்குட்பட்டு அச்சமின்றிச் செயல்பட அவர்களுக்குச் சட்டம் பாதுகாப்பளிக் கிறது. தாங்கள் வெளியிடும் கருத்துகளுக்கும், செய்யும் செயல் களுக்கும் எதிராகத் தங்கள்மேல் பின்னர் வழக்குகள் போடப் படலாம் என்ற பயம் எப்போதும் தொடர்ந்து இருந்துவந்தால் நீதிபதிகள் பயமில்லாமலும், யாருடைய தயவையும் எதிர்பார்க் காமலும் தங்கள் கடமையைச் செய்யமுடியாது. நீதிபதிகள் யாருக்கும் பயப்படாமல், எந்தப் பயனையும் எதிர்பார்க்காமல் தீர்ப்பு வழங்குவதற்கு மாறாக, விளைவுகளைக் கண்டு, அஞ்சியொடுங்கும் நிலை ஏற்படக்கூடாது. இதற்காகவே அவர்களுக்குச் சுதந்திரம் அளிக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறு சுதந்திரம் அளிக்கப்படுவதால் நீதிபதி நிதானமோ, தகுதியோ, பொருத்தமோ இல்லாமல் நடந்து கொள்ளக்கூடும். இது சில சமயங்களில் தவிர்க்கமுடியாது என்று கருதி நாம் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். ஏனெனில் சுதந் திரமாகச் செயல்படும் நீதித்துறையே நமக்கு இன்றியமையாத தாகையால் அதில் உள்ள குறைகளை நாம் சகித்துக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை.

நீதிபதிகளின் சுதந்திரம் இருவகைகளில் நிலைநாட்டப்பட் டுள்ளது. முதலாவது, அவ்வப்போது இருக்கும் அரசின் தயவைப் பொறுத்து அவர்கள் பதவிக்காலம் அமைவதில்லை. அவர்களது

தீர்ப்புகளை அமைச்சர்கள் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் அவர்களைப் பதவியிலிருந்து விலக்க முடியாது. இந்தியாவில் உச்சநீதிமன்ற நீதிபதிகள் (Supreme Court Judges) 65 வயதாகும் வரை தொடர்ந்து பதவி வகிக்கலாம் என அரசியல் சட்டமே விதிக்கிறது. இதைப்போலவே உயர்நீதி மன்ற நீதிபதிகள் (High Court Judges) 62 வயதாகும்வரை தொடர்ந்து பதவி வகிக்கலாம் என அரசியல் சட்டமே விதிக்கிறது. அவர்களது ஊதியமும் நிலையானதாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. உயர்நீதிமன்ற, உச்ச நீதிமன்ற நீதிபதிகள் பெறும் ஊதியத்தைக் குறைக்க முடியாது. அவர்களின் சம்பளம் நாடாளுமன்ற விவாதத்திற்கு உட்படுத்தப் படாமல் நாட்டின் தொகுப்புத்தொகை நிதியிலிருந்து (Consolidated Fund of India) அளிக்கப்படுகிறது. அவர்களை விலக்கும் அதிகாரமும் பிரதம அமைச்சருக்கும், குடியரசுத் தலைவருக்கும் கிடையாது. நாடாளுமன்றமே அரசியல் சட்டத்தில் கூறப்பட் டுள்ள முறையினைப் பின்பற்றி நீதிபதிகளை விலக்க முடியும்.

நீதிவழங்கும் அலுவலர் சட்டம், 1850 (Judicial Officer's Protection Act, 1850) தனது நீதிவழங்கும் கடமையை ஆற்றுங் கால் நீதிபதி செய்கின்ற எச்செயலுக்கும், அல்லது பிறரைச் செய்யுமாறு ஆணையிடுகிற எச்செயலுக்கும் பாதுகாப்பு அளிக் கின்றது. இந்தப் பாதுகாப்பு நீதிபதிக்கு மட்டுமல்லாமல், குற்றத் துறை நீதிபதி (Magistrate), அமைதி நடுவர் (Justice of Peace) மாவட்ட ஆட்சித்தலைவர் (Collector) மற்றும் நீதிவழங்கும் செயலைப் புரிபவர் அனைவருக்கும் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு நீதிவழங்கும் பணியில் ஈடுபட்டுள்ள அலுவலர்கள் தங்கள் அதிகார வரம்பினை மீறிச் செய்யப்பட்டிருந்தாலும் அவர்கள் பொறுப்பாளிகளாக மாட்டார்கள். ஆனால் அவ்வாறு அவர்கள் அதிகார வரம்பினை மீறி ஒரு செயலைச் செய்யும் சமயத்தில் தங்களுக்கு அச்செயலைச் செய்யவோ, அல்லது ஒரு செயலைச் செய்யுமாறு பிறருக்கு உத்தரவிடவோ அதிகாரமிருந்ததென நேர்மையாக, மனப்பூர்வமாக நம்பியிருக்க வேண்டும். தவிர மேற்கூறிய, உரிமையில் நீதிபதி, குற்றத்துறை நீதிபதி, அமைதி நடுவர், மாவட்ட ஆட்சித்தலைவர் இவர்களைத் தவிர மற்ற நீதி வழங்கும் பணியாற்றுகின்றவர் ஆகியோருடைய உத்தரவுகளையும், பிடி ஆணைகளையும் (Warrant) நிறைவேற்றும் கடமையுள்ள நீதி மன்ற அலுவலர் (Officers of Court) அந்த உத்தரவுகளையும் பிடி ஆணைகளையும் நிறைவேற்றியதற்காக உரிமையியல் (Civil) நீதி மன்றத்தில் வழக்கிடமுடியாது. ஆனால், அவர்கள் நிறைவேற்றிய பிடிஆணையும், உத்தரவும் அவற்றைப் பிறப்பித்தவருடைய அதிகார வரம்புக்குட்பட்டவையாக இருக்க வேண்டும். இவ்வாறு

நீதித்துறை அலுவலர் காப்புச்சட்டத்தின் முதல்பிரிவில், சொல்லப் பட்டிருக்கிறது.

இவ்வாறு நீதிபதிகளுக்கு அளிக்கப்பட்டுள்ள சிறப்புரிமை, பாதுகாப்பு ஆகியவற்றின் நோக்கம் தீங்கெண்ணத்துடனும், நேர்மையற்றும், பணிபுரியும் நீதிபதிகளுக்குப் பாதுகாப்புத் தர வேண்டும் என்பதன்று. தீங்கெண்ணத்துடன் நடந்து கொண் டார்கள் என்று நீதிபதிகள்மேல் விசாரணை நடத்துவதாலும், அவர்கள் தீர்ப்பினால்பாதிக்கப்பட்டவர்கள் அவர்கள்மேல் வழக்குத் தொடர அனுமதிப்பதாலும், நீதிமுறை நிர்வாகத்துக்கு ஆபத்து ஏற்படும். இது மக்கள் நலனுக்கு உகந்ததல்ல என்ற காரணத் தால்தான் அவர்களுக்கு, இத்தகைய பாதுகாப்பு சட்டத்தின்மூலம் அளிக்கப்பட்டிருக்கிறது. நீதிபதி அதிகார வரம்புக்குட்பட்டுக் கடமையாற்றும்போது அவருக்குத் தரப்படும் பாதுகாப்பு முழுமை யானது. அவர் கடமை ஆற்றும்போது தமது வரம்புக்குட் படாமல் (வரம்பிகந்து) நடந்து கொண்டிருந்தாலும், தமக்கு ஒரு செயலைச் செய்யவோ அல்லது ஒரு செயலைச் செய்யுமாறு பிறருக்கு உத்திரவு இடவோ அதிகாரம் இருப்பதாக நேர்மை யாகவும, நல்லெண்ணத்துடனும் நம்பியிருக்க வேண்டும். எனவே, நீதிமுறை அதிகாரங்களுக்கு முழுபாதுகாப்பு வழங்கப்பட்டுள்ள தால், நீதிபதி தீங்கெண்ணத்துடனே, வேண்டுமென்றே அல்லது நேர்மையின்றியோ, தக்க நியாயமான காரணம் எதுவுமின்றியோ ஒரு செயலைச் செய்தாரென்றே அல்லது சொற்களைக் கூறினார் என்றே அவர்மீது வழக்கிடமுடியாது. ஆனால், தமது அதிகார வரம்புக்குப் புறம்பாக (Outside Jurisdiction) குற்றத்துறை நீதிபதி தீங்கெண்ணத்துடன் நேர்மையற்று நடந்து கொண்டி ருந்தால் அவருக்குச் சட்டம் பாதுகாப்பு அளிக்காது. அதாவது நீதிபதி தமக்கு அதிகாரம் இருப்பதாக நேர்மையாக, உண்மை யாகவே நம்பியிருக்க வேண்டும். அவர் உரிய கவனத்தோடும் எச்சரிக்கையோடும் கருதிப் பார்த்து செயல்பட்டிருக்க வேண்டும். அனைவரும் அறிந்த சட்டவிதிகளையும், நடைமுறைகளையும் மீறியோ அல்லது பொறுப்பற்ற முறையில் அக்கறை இன்றி கண் மூடித்தனமாகவோ நடந்து கொண்டிருந்தால் அவர் நேர்மையாக நம்பிச் செயலாற்றியதாகக் கருதமுடியாது. இங்லாந்தில் இதே போன்ற பாதுகாப்பு நீதிபதிகளுக்கு வழங்கப்பட்டிருப்பினும், அங்கு உயர்நீதிமன்றம் போன்ற உயர்நிலை நீதிமன்றம் (Superior Court like High Court), கௌண்ட்டி நீதிமன்றம் போன்ற கீழ்நிலை நீதிமன்றம் (Inferior Court like County Court) ஆகிய வற்றிற்கிடையே அதிகாரத்தில் வேறுபாடு உண்டு. அதிகா

மின்றிப் பணியாற்றினர் என்ற காரணம் காட்டி ஒரு உயர்நிலை நீதிமன்ற நீதிபதிமேல் வழக்கிடமுடியாது. ஆனால், இதே காரணத்திற்காக கீழ்நிலை நீதிமன்ற நீதிபதிமேல் வழக்கிட் முடியும் ஆனால், அவர் தமது அதிகார வரம்புக்குட்பட்டுச் செயலாற்றும் போது அவர் தீங்கெண்ணத்துடனே, நேர்மையற்றே நடந்து கொண்டிருந்தாலும் பொறுப்பாளியாக மாட்டார்.

ஒருவனுடைய வீட்டில் துப்பாக்கி போன்ற ஆயுதங்கள் உள்ளனவா என்று சோதனையிட பிடியாணை பிறப்பித்த மாவட்ட குற்றத்துறை நீதிபதியின் செயல் நீதிமுறைச் செயலின்பாற்பட்ட தாகவே ஒரு வழக்கில் தீர்ப்பளிக்கப்பட்டது.

லா *v.* லெவலின் (**Law** *v.* Llewelyn) வழக்கில், குற்றத்துறை நீதிபதி குற்றவழக்கு நடத்தியவரைத் தமது குற்றச்சாட்டைத் திரும்பப் பெற்றுக்கொள்ள அனுமதிக்கையில் அவரது குற்றச் சாட்டு எதிராளியை மிரட்டிப் பணம் பறிக்கும் பெருமுயற்சி என்று வர்ணித்து இவ்வாறு செய்ததற்காக அவரைப் பன்னிரண்டு திங்கள் சிறையில் தள்ளியிருந்தால் நன்றாக இருந்திருக்கும் என்று கூறினர். நீதிபதி தன்னைப்பற்றி அவதூறு மொழிந்ததாக அவர் வழக்கிட்டார். நீதிபதி குற்றச்சாட்டை திரும்பப்பெற அனுமதித்த பின்னர் கூறிய சொற்கள் அவரது நீதிமுறை அதிகார வரம்புக்குட் பட்டுக் கடமையாற்றும்போது சொல்லப்பட்டவை அல்ல என்றும் அவை அதிகார வரம்பு இகந்தவை எனவும் அவர் வாதிட்டார். ஆனால், இச்சூழ்நிலையில் அந்தச் சமயத்தில் தமது உள்ளத்தில் பட்டதைச் சொல்ல நீதிபதிக்கு முழுச் சுதந்திரம் உள்ளதென்று நீதிமன்றம் கருதி வழக்கைத் தள்ளிவிட்டது. ஒரு குற்றச்சாட்டைச் சுமத்தி இருக்கக் கூடாது என்று நீதிபதியின் உள்ளத்தில் பட்டால் அதைச் சொல்லக்கூட அவருக்கு உரிமையில்லை என்பதை ஏற்றுக் கொள்ளமுடியாது.

சைலஜானந்த் பாண்டே *v.* சுரேஷ் சந்திரகுப்தா (**Saila Janand Pande** *v.* **Suresh Chandra gupta**) வழக்கில், குற்றத்துறை நீதிபதி ஒருவர்தமது அதிகார வரம்புக்குப் புறம்பாகவும், சட்டத்தை மீறியும், தீங்கெண்ணத்துடனும் நடந்து கொண்டு வாதியைக் கைது செய்ய உத்தரவு இட்டார். அவர்மீது இடப்பட்ட வழக்கை விசாரித்த பாட்னா உயர்நீதிமன்றம் நீதித்துறை அலுவலர் பாதுகாப்புச்சட்டம் 1850-ன்படி அவருக்குப் பாதுகாப்பு கிடையாது என்றுகூறி, முறையின்றிச் சிறைப்படுத்திய தீங்குக்காக அவர் பொறுப்பாளியாவார் என்று தீர்ப்பளித்தது. இவ்வாறு நீதிபதிகள்

பெற்றுள்ள பாதுகாப்பு அவர்கள் நீதிமுறை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளபோதுதான் கிடைக்கும். அவர்கள் நிர்வாக நடவடிக்கைகளிலோ அல்லது அலுவலகப்பணி நடவடிக்கைகளிலோ ஈடுபற்டுள்ளபோது இந்தப் பாதுகாப்பு அளிக்கப்பட மாட்டாது.

அண்மையில் அலகாபாத் உயர்நீதிமன்றம் உத்தரப் பிரதேசம் v. துளசிராம் (Uttar Pradesh v. Tulsiram) வழக்கில் இந்த நிலையைத் தெளிவாக்கியுள்ளது. இவ்வழக்கில், ஒரு நீதிபதி கவனமின்றி ஒருவரை முறையின்றிக் கைது செய்ய உத்திரவு இட்டார். சில குறிப்பிட்ட குற்றங்கள் புரிந்ததாக 5 நபர்கள்மீது வழக்கிருந்தது. இதில் ஒருவரை செஷன்ஸ் நீதிமன்றம் விடுதலை செய்து விட்டது. மேலும் ஒருவர் உயர்நீதி மன்றத்தால் விடுதலை செய்யப்பட்டு விட்டார். ஆகவே, 5 பேரில் குற்றம்இழைத்ததாக நிருபிக்கப்பட்ட மூவர்மீது மட்டும் அளிக்கப்பட்ட தண்டனையை உயர் நீதிமன்றம் உறுதி செய்து, அவ்வாறு தண்டிக்கப்பட்ட மூவர்மீதும் பிடி ஆணை பிறப்பிக்க அதிகாரம் அளித்தது. ஆனால் குற்றத் துறை நீதிபதி கவனமின்றி வழக்கில் குற்றம் சாட்டப்பட்டிருந்த ஐவரையுமே கைது செய்ய உத்திரவு இட்டு விட்டார். இந்த உத்தரவின் காரணமாக, உயர்நீதி மன்றத்தால் விடுதலை செய்யப் பட்ட வாதிகளும் காவலர் காலை 10 மணிக்குக் கைது செய்து அவர்களது சொந்த கிராமத்திலிருந்து கைவிலங்கிட்டு ஆறுமைல் தொலைவிலுள்ள காவல் நிலையம்வரை இழுத்துச் சென்றனர். பின்னர் காவல் நிலையத்தில் பிற்பகல் இரண்டு மணிவரை அவர்களை அடைத்து வைத்திருந்தனர். அதன்பின்னரே அவர்கள் விடுவிக்கப்பட்டனர். எனவே, வாதிகள் தங்கள் உறவினர், நண்பர்கள் முன்னிலையில் தங்களைத் திருவிழாக் காலத்தில் கைது செய்ததன் காரணமாக மனவேதனையும், அவமானமும், தொந்தரவும் வசதிக் குறைவும் தங்களுக்கு ஏற்பட்டதெனக் கூறி, அதற்கு இழப்பீடாக நீதிபதியும், அவரது பணித்தலைவராகிய உத்தரப்பிரதேச மாநில அரசும் ரூ. 2000 அளிக்க வேண்டும் என்று கூறி வழக்கிட்டனர். இதை விசாரித்த கீழ்முறையீட்டு நீதிமன்றம் (Lower Appellate Court) நீதி அலுவலர் பாதுகாப்புச் சட்டம் 1850-ன்படி நீதிபதிக்குப் பாதுகாப்பு உண்டென்று கூறி மாநில அரசுக்கு மட்டும் பகரப் பொறுப்புள்ளதால் அது ரூ. 500 வாதிக்குத் தரவேண்டும் என்று தீர்ப்பளித்தது. இதை எதிர்த்து உத்தரப்பிரதேச மாநில அரசு அலகாபாத் உயர்நீதி மன்றத்தில் அப்பீல் செய்து கொண்டது. சட்டப்படி விதிக்கப்பட்டுள்ள கடமைகளை ஒரு பணியாள் செய்யும் போது செய்யப்பட்ட செயல் ஆனதால், பணித்தலைவராகிய மாநிலத்திற்குப் பொறுப்பில்லை என்று உயர்நீதிமன்றம் தீர்ப்

பளித்தது. ஆனால் வாதிகளை முறையின்றிக் கைது செய்ததற்காக நீதிபதி பொறுப்பாளியாவார் என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தது. பிடியாணைகளைப்பிறப்பித்த அந்த நீதிபதி நீதிமுறைப்பணி எதுவும் செய்யவில்லை. அவர் செய்தது வெறும் நிர்வாகப்பணியேயாகும். அவர் செய்திருக்க வேண்டிய வேலையெல்லாம் உயர்நீதி மன்ற தீர்ப்பைப் பார்த்துக் குற்றம் சாட்டப்பட்டவர்களில் யாருடைய அப்பீலை நீதிமன்றம் தள்ளிவிட்டது என்பதையும் எவர் இன்னும் சரணடையவில்லை என்பதையும் அறிவதுதான். இதைச் செய்யாமல், உயர்நீதிமன்றத்தின் உத்திரவைப் பார்க்காமல், அவர் பிடியாணையில் கையெழுத்திட்டுள்ளார். கவனமின்றி உத்திரவு என்ன என்று கூடப் பாராமல் பணியாற்றிய அவர் நீதி அலுவலர் பாதுகாப்புச் சட்டத்தின் துணையை நாடமுடியாது எனத்தீர்ப்பளிக்கப்பட்டது.

அன்வர் ஹுசேன் v அஜாய் குமார் முகர்ஜியும் மற்றவர்களும் (Anwer Hussein v. Ajoy Kumar Mukherje and Others)வழக்கில் ஒரு கீழ்நிலை குற்ற நீதிபதி (Sub-Magistrate) முறையான குற்றச் சாட்டோ (Formal Complaint) அல்லது காவலர் அறிக்கையோ (Police Report) இல்லாமல் குடிமகன் ஒருவனைக் கைது செய்து சிறையில்வைக்க உத்திரவு இட்டார். இவர்மேல் முறையின்றிச் சிறைப்படுத்தியதாக வழக்கிடப்பட்டது. இவ்வழக்கில் நீதிபதி தமது நீதித்துறைப் பணியை ஆற்றும்வகையில் கைது செய்ய உத்திரவிடவில்லை. அவர் தமக்கு மேலுள்ள நீதிபதியின் உத்தரவுக்குப் பணிந்து இச்செயலைச் செய்ததாக வாதிட்டார். இதை உச்சநீதி மன்றம் ஏற்காமல் அவருக்கு நீதி அலுவலர் பாதுகாப்புச் சட்டத்தின்படி உரிமையில்லை என்று கூறி ஒரு குடிமகனை முறையின்றிச் சிறைப்படுத்தியதற்காக 5000 ரூபாய் இழப்பீடு தருமாறு உத்திரவு இட்டது.

நீதிபதிகளின் உத்திரவை நிறைவேற்றும் பணியை மேற்கொண்டுள்ள அதிகாரிகளுக்குப் (Executive Officers) பாதுகாப்பு உண்டென்று கண்டோம். எடுத்துக்காட்டாக காவல் அதிகாரி பிடியாணை பிறப்பிக்கும் அதிகாரம் கொண்ட ஒருவரால் பிறப்பிக்கப்பட்டு முறையானதாகத் தோன்றுகின்ற ஒரு பிடியாணையை நிறைவேற்றுகின்றபோது, அவருக்கு இந்தப் பாதுகப்பு உண்டு. தம்மிடம் நிறைவேற்றுவதற்காக தரப்பட்டுள்ள பிடியாணை முறையானதா, முறையற்றதா என்று அவர் ஆராயத் தேவையில்லை. பிடியாணையில் சொல்லப்படாத நபரைக் காவலர் கைது செய்தாலும், அதில் சொல்லப்படாத சொத்தொன்றைப் பற்றுகை செய்தாலும், தாம் நேர்மையோடே இத்தவறினை இழைத்ததாகச்

சொன்னலும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. ஹோய் v. புஷ் (Hoye v. Bush) வழக்கில் குதிரை ஒன்றைத் திருடியதாக ரிச்சர்ட் ஹோய் என்பவர் மீது ஐயம் எழுந்தது. எனவே, அவரைக் கைது செய்யப் பிறப்பிக்கப்பட்ட பிடியாணையில் ரிச்சர்ட் ஹோய் என்று குறிப்பிடுவதற்குப் பதிலாக அவர் தந்தையின் பெயராகிய ஜான் ஹோய் என்பவரது பெயர் எழுதப்பட்டிருந்தது. இப்பிடியாணையின்படி ஜான் ஹோய்தான் கைது செய்யப்பட வேண்டும். ஆனால் அவர் மகன் ரிச்சர்ட் ஹோய் கைது செய்யப்பட்டார். ஜான் என்ற பெயரில் அவர் அழைக்கப்பட்டது கிடையாது. எனவே ரிச்சர்டை இந்தப் பிடியாணையின் கீழ் கைது செய்தது முறையற்ற செயலாகும். எனவே, காவல்துறை அதிகாரி புஷ் மீது வழக்கிடப்பட்டது. நீதிமன்றம் அவர் பொறுப்பாளியாவார் என்று தீர்ப்பளித்தது. உண்மையில் கைது செய்யப்பட வேண்டிய நபர் ரிச்சர்டாக இருப்பினும் பிடியாணை அவரைக் குறிப்பிடாமல் வேறு ஒருவரைக் குறிப்பிட்டது. ஜான் ஹோய் உண்மையில் கைது செய்யப்படவேண்டிய நபர் அல்ல என்று காவலர் புஷ் கூறுவது அவரது கட்சிக்குப் பயன்படாத வாதம் ஆகும். ஆனால் ஒருவர் தான் கைது ஆகவேண்டுமென்ற கருத்துடன் இதைப்போன்ற தவறைக் காவலர் புரியுமாறு விளையாட்டாகவோ அல்லது வேறு விதமாகவோ தூண்டிவிட்டிருந்தால் காவலர் மேல் எந்தத் தவறும் இல்லை; காவலர், இசைந்தேற்பது தீங்காவதில்லை என்ற எதிர் வாதத்தை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளலாம். அதிகாரமே இல்லாத ஒரு நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை காவலர் நிறைவேற்றினால் அவருக்குப் பாதுகாப்பு கிடையாது காவலர் வேண்டுமென்றே ஒருவருக்குத் தீமைசெய்யும் நோக்கத்துடன் ஒரு செயலைச் செய்தாலும் அவருக்குப் பாதுகாப்பு கிடையாது.

24. நீதிமுறை நிவாரணங்கள் (Judicial Remdies)

எதிர்வாதி இழைத்த தீங்குக்காக வாதிக்குக் கிடைக்கக்கூடிய நிவாரணங்கள் இருவகைப்படும். அவற்றில் முதலாவது. வாதி நீதிமன்றத்தில் எதிர்வாதியின் மேல் வழக்கிட்டுப் பெறுவது. இதை நீதிமுறை நிவாரணம் என்றழைக்கலாம். இரண்டாவது வாதி நீதிமன்றத்துக்குச் செல்லாமலேயே தனக்குத்தானே தேடிக் கொள்ளக்கூடிய நிவாரணம். இதை நீதிமன்றுத்துக்கு வெளியே பெறக்கூடிய நிவாரணம் என்கிறோம். இவற்றில் முதலாவதாக சொன்ன நீதிமுறை நிவாரணங்களைப்பற்றி இங்கு அறிவோம்.

சட்டப்படி எதிர்வாதியின் மேல் வழக்கிட்டு வாதி பெறக் கூடிய நிவாரணங்கள் முக்கியமாக மூன்று வகைப்படும். அவை 1. தீங்கீடு (Damages), 2. உறுத்துக் கட்டளை (Injunction), 3. குறிப்பிட்ட சொத்தை மீட்டு ஒப்படைத்தல் (Specific Restitution of Property) என்பவையாகும்.

தீங்கீடு பலவகைப்படும். இவையாவன :

பெயரளவு தீங்கீடும் உண்மையான தீங்கீடும் (Nominal damages and Real damages)

சாதாரணமாக வாதிக்கு ஏற்பட்ட இழப்பு அல்லது ஊறு ஆகியவற்றை ஈடுகட்டச் சரிநிகரான தொகையே தீங்கீடாக அளிக்கப்படுகிறது. ஆனால் வாதிக்கு உண்மையில் எந்த ஊறோ அல்லது இழப்போ ஏற்படாமல் அவனது உரிமைக்கு மட்டும் ஊறு விளைந்திருக்குமாயின் அவனுக்குள்ள உரிமையை ஏற்றுக் கொள்ளும் வகையில் சட்டம் அவனுக்குச் சிறிய தொகை ஒன்றைப் பெயரளவு தீங்கீடாக (Nominal damages) வழங்கு கிறது. எடுத்துக்காட்டாக, ஒரு ரூபாய் அவனுக்குத் தீங்கீடாக வழங்கப்படலாம். எனவே, அவனுக்கு இழப்பு எதுவும்உண்மையில் ஏற்படவில்லை யென்றாலும், இழப்பேற்பட்டதென நிரூபிக்கா

மலேயே வழக்கிடத் தக்க தீங்காக இருக்குமானால் அவனுக்குப் பெயரளவு தீங்கீட்டுத்தொகையே கிடைக்கும், எடுத்துக்காட்டாக, வாதியின் நிலத்தில் எதிர்வாதி அத்துமீறி நுழைகிறான். இதனால் வாதிக்கு இழப்பு ஏற்பட்டதாகச் சட்டம் ஊகித்து அவனுக்கு உண்மையில் எந்த இழப்பும் ஏற்படாவிட்டாலும் தீங்கீடு அளிக்கிறது. இதேபோல உண்மையில் இழப்பு எதுவும் ஏற்படாவிட்டாலும் அவதூறுக்காக வழக்கிடலாம். ஏஷ்பி v. ஒயிட் (Ashby v. White) வழக்கில் வாதி வாக்களிக்க விரும்பிய வேட்பாளர் அவரது வாக்கின்றியே தேர்தலில் வெற்றி பெற்றிருந்ததால், வாதிக்கு உண்பையில் எந்த இழப்பும் ஏற்படவில்லையெனினும், அவனது வாக்களிக்கும் உரிமை மறுக்கப் பட்டதற்காக, அவனுக்குப் பெயரளவில் ஒரு தீங்கீட்டுத் தொகை அளிக்கப்பட்டது. இதைப்போலவே கான்ஸ்டன்டைன் v. இம்பீரியல் லண்டன் ஓட்டல்ஸ் (Constantine v. Imperial London Hotels) வழக்கில் வாதி விரும்பிய விடுதியில் அவருக்கு இடம்தர எதிர்வாதிகள் மறுத்தாலும் வாதிக்கு வேறு விடுதியொன்றில் எதிர்வாதிகள் இடமளித்திருந்ததால் வாதிக்கு உண்மையில் இழப்பெதுவும் ஏற்படவில்லையெனினும் பெயரளவு இழப்பீடாக 5 கினி தீங்கீட்டுத் தொகையாகத் தீர்ப்பளிக்கப்பட்டது. வாதியின் நிலத்தில் எதிர்வாதி தனது குதிரையை ஓட்டிச் செல்லும் போது வாதிக்கு எந்த இழப்பும் ஏற்படாவிட்டாலும், எதிர்வாதியின் மேல் அவன் வழக்கிடலாம். அவனது நிலத்தில் நுழைய எதிர்வாதிக்கு எந்த உரிமையும் இல்லை. அது அத்துமீறிய செயலாகும். இதனால் அவன் எதிர்வாதியிடமிருந்து தீங்கீடு பெறலாம். ஆனால், வாதிக்கு உண்மையில் ஏற்பட்ட நட்டம் அல்லது இழப்பு சிறியதாக இருக்கலாம். அதற்காக அளிக்கப்படும் சிறிய ஈட்டுத்தொகை உண்மையான தீங்கீட்டுத் தொகையாகுமல்லாது பெயரளவு இழப்பீட்டுத் தொகையாது.

இனி உண்மையான இழப்பீடு அல்லது தீங்கீடு என்றால் என்னவென்று காண்போம். பொதுவாக பெரும்பான்மையான வழக்குகளில் எதிர்வாதியின் செயலால் தனக்கு நட்டமோ அல்லது ஊறோ ஏற்பட்டதென வாதி நிரூபிக்கவேண்டும். அவ்வாறு அவனுக்கு இழப்போ, அல்லது ஊறோ ஏற்பட்டிராவிட்டால் அவன் வழக்கிட முடியாது. எடுத்துக்காட்டாக, எதிர்வாதியின் மேல் கவனமின்மைக்காக வழக்கிடும்போது வாதி தனக்கு ஊறு அல்லது இழப்பு ஏற்பட்டதென நிரூபிக்கவேண்டும். எதிர்வாதியால் வாதிக்கு நட்டம் அல்லது ஊறு ஏற்படாமல் இருக்க வாதிக்கு உரிமையுண்டு. எனவே, அவன் வழக்கில் வெற்றிபெற வேண்டுமானால் தனக்கு எதிர்வாதியின் செயலால் ஊறு அல்லது

நட்டம் ஏற்பட்டதென்று அவன்தான் நிரூபிக்க வேண்டும். வாதிக்கு ஏற்பட்ட இழப்பு அல்லது ஊறு எதிர்வாதி புரிந்த தீங்கோடு தொடர்பற்றதாயின் அதற்குத் தீங்கீடு கிடைக்காது. இதை முதலில் முடிவு செய்த பின்னரே வாதிக்குக் கிடைக்கக் கூடிய தீங்கிட்டினை முடிவு செய்ய வேண்டும். வாதிக்கு ஏற்பட்ட இழப்பினைக் கணக்கிடப் பொதுவாகக் கடைப்பிடிக்கப்படும் வழி மீட்டொப்படைவிப்பு (Restitutionin in tegrum) ஆகும். ஆனால் எல்லாச் சூழ்நிலைகளிலும் மீட்டொப்படைவிப்பு இயலக் கூடிய தல்ல. எடுத்துக்காட்டாக, எதிர்வாதியின் கவனமின்மையால் வாதி தனது காலை இழந்துவிடுகிறான் என்று வைத்துக் கொள்வோம், வாதிக்கேற்பட்ட இந்த இழப்புக்காக எவ்வளவு பணம் தந்தாலும் ஈடாகாது. அதன் விளைவாக அவன் வசதிகளை இழந்ததற்கும், அவனுக்கு ஏற்பட்ட வலி, துன்பம் ஆகியவற்றிற்கும் இழப்பீடாகச் சரிநிகரான தொகை ஒன்றை கணக்கிட்டு அளித்தல் இயலாது. ஆயினும், இயன்றவரை நீதிமன்றங்கள் இவற்றிற்கேற்ற நிவாரணங்களை அளிக்கக் கடமைப்பட்டுள்ளன. மேற்கூறிய வற்றிற்கு முழுமையான இழப்பீடு தரமுடியாமல் போய்விட்டாலும் நீதிமன்றங்கள் முந்திய வழக்குகளில் இதைப்போன்ற சூழ்நிலைகளில் இவ்வகை இழப்புகளுக்குத் தரப்பட்ட தீர்ப்பினை வழிகாட்டியாக ஏற்றுக்கொண்டு நியாயமான தீங்கீடு அளிக்க வேண்டும் ஆயினும், வெவ்வேறான காயங்களை எவ்வாறு ஒப்பு நோக்கி அளவிட இயலும் ? எடுத்துக்காட்டாக முந்திய வழக்கொன்றில் ஒருவன் தன் கால்களை இழந்ததற்காக அவனுக்கு ரூ. 5000 இழப்பீடாகத் தரப்பட்டு இருந்தால் வேறு ஒரு வழக்கில் ஒருவன் தன் கைகளை இழந்ததற்காக இழப்பீட்டுத் தொகையைத் தீர்மானிக்க இதை எவ்வாறு ஒப்பு நோக்க முடியும் ? எனவே, ஒரு வழக்கோடு மற்றொரு வழக்கை ஒப்பிட ஏதாவது ஒரு அடிப்படை அமைந் திருக்க வேண்டும். வைஸ் *v.* கே (Wish *v.* Kay) வழக்கில், விபத்தில் அடிபட்டவன் அடிபட்ட வினாடி முதல் நினைவின்றிக் கிடந்தான். எனவே, அவன் வாழ்வினைத் தவிர வாழ்வின் பயன்கள் அனைத்தையும் இழந்து விட்டான். இவ்வழக்கை விசாரித்த நீதிபதியின் கருத்துப்படி இதைப் போன்ற சூழ்நிலைகளில் வாதி தனது இன்பத்தையும், மகிழ்ச்சியையும் எந்த அளவுக்கு விபத்தினால் இழக்கிறான் என்பதையே அடிப்படையான அளவுகோலாகக் கொள்ளவேண்டும். எடுத்துக்காட்டாக, ஒருவன் கால்களை இழப்பதால் இழக்கும் மகிழ்வும், வாழ்வில் பெறும் நலமும் நிறை இன்பமும், அவன் கைகளை இழப்பதால் ஏற்படக் கூடியதை விட அதிகமே. எனவே, கால்களை இழந்தவனுக்கு அதிக இழப்பீடு தரலாம். வாதிக்கு ஏற்பட்ட இழப்புக்குத் தகுந்ததும் போதுமானதுமாகிய தீங்கீடு தரமுடியாதென்பதால் எந்த

இழப்பீடும் தரமுடியாதென்று நீதிமன்றம் கூறினால் அது பொருத்தமற்றதாகும்.

பொதுமுறைத் தீங்கீடும் (General Damages) தனிமுறைத் தீங்கீடும் (Special Damages)

பொதுமுறைத் தீங்கீடு என்பது எதிர்வாதியின் செயலால் ஏற்படக்கூடிய இழப்பினுக்குச் செய்யப்படும் ஈடாகும். இவ்வகையான இழப்பு நேரக்கூடியதென நீதிமன்றம் உட்கிடையாகக் கருதுகிறது. எனவே, வாதி தனது வாதுரையில் தனக்கு நேர்ந்துள்ள கேட்டினை விளக்கமாகச் சொல்ல வேண்டியது இல்லை. எடுத்துக்காட்டாக. வாதியைப்பற்றி அவதூறான அறிக்கை ஒன்றை எதிர்வாதி வெளியிடுகிறான் என்று வைத்துக் கொள்வோம். அவதூறே தீங்காகக் கருதப்படுவதால் அதன் விளைவாகப் பொதுவான இழப்பு ஏற்பட்டது என்று சட்டம் ஊகித்துக் கொள்ளும். வாதியை முறையின்றி எதிர்வாதி சிறைப்படுத்தினால் வாதிக்கு ஏற்படக்கூடிய வசதிக் குறைவு, அவமதிப்பு, இன்னல், தொந்தரவு முதலியன பொதுவான கேடுகள் எனலாம். எதிர்வாதி அப்படிப்பட்ட தீங்கு ஒன்றினைப் புரிந்ததன் விளைவாகப் பொதுவான இழப்பு வாதிக்கு ஏற்பட்டதென நிரூபிக்கப்படும் என்பதை எதிர்பார்த்தேயுள்ளான். பொதுமுறை இழப்புக்காக ஒட்டுமொத்தமாக ஒரு தொகை தீங்கீடாக அளிக்கப்படும், இத்தொகை இனவாரியாகப் பிரித்தும் வழங்கப்படலாம். இது நீதிபதியின் உசிதத்தைப் பொறுத்தது. எடுத்துக்காட்டாக. 1. எதிர்வாதியின் செயலால் வாதிக்குக் கடந்த காலத்தில் ஏற்பட்ட வலிக்கும், துன்பத்திற்கும், எதிர்காலத்தில் அவனுக்கு ஏற்படக்கூடிய வலிக்கும், துயருக்கும் தீங்கீடாக ஒரு தொகை வழங்கப்படலாம். இத்தொகையில், எதிர்வாதியின் செயலால், தன் வாழ்நாள் அறுகிவிட்டது என்று வாதி உணர்வதால் அவனுக்கு ஏற்படக்கூடிய மனத்துயருக்கும் கணிசமான தொகையும் அடங்கும், ஆயினும் இதை வாதி பெறவேண்டுமானால். தனது துன்பம் நெடுங்காலத்திற்குத் தொடர்ந்து இருந்துகொண்டேயிருக்கக் கூடியது என்று தெள்ளத் தெளிவாக அவன் சான்று மூலம் நிரூபிக்கவேண்டும். வாதிக்கு ஏற்பட்ட வலி, வேதனை ஆகியவற்றின் கடுமையையும், அவை எவ்வளவு காலம்வரை நீடித்திருந்தன என்பதையெல்லாம் கருதிப் பார்க்க வேண்டும். ஆனால் வாதிக்குக் கடுமையான காயம் ஏற்பட்டிருந்தாலும். அவனுக்கு மயக்கம் ஏற்பட்டதன் காரணமாக வலியோ. அல்லது துன்பமோ அறிய முடியாமல் போயிருந்தால் அவன் தனக்கு வலியும் துன்பமும் ஏற்பட்டதற்குத் தீங்கீடு கேட்க முடியாது. ஆனால், வழக்கிடும் முன்பு வாதி மாண்டு விட்டால்

அவனது சட்டமுறையான சார்பாளர் (Legal Representative) இதற்காகத் தீங்கீடு பெறமுடியும். எதிர்வாதியின் கவனமின்மையால் காயமடைந்த வாதி தனக்கு அதனுல் ஏற்பட்ட வலி, துன்பம் மருத்துவச் செலவு ஆகியவற்றிற்கு மட்டுமல்லாமல் தன் எதிர்கால வாழ்க்கையில் சுமை அதிகரிப்பதால் அவ்வாறு அதிகரிக்கும் வாழ்க்கைச் செலவுக்கும் தீங்கீடு பெறமுடிம். தன் உடல் தேற அதிக ஊட்டம் அளிக்கும் உணவுக்காகவோ, தன் இருப்பிடத்திலிருந்து மருத்துவமனைக்குப் போய்வரவோ, செவிலியர் தன்னைக் கவனித்துக்கொள்ளவோ செலவழித்த தொகையும் அவன் எதிர்வாதியிடமிருந்து பெறமுடியும். இதைத் தவிர, விபத்தேற்பட்டதால் வாதியைக் கவனித்துக் கொள்ள வேண்டியிருந்த நபருக்காகும் செலவையும் கூட நிவாரணமாகப் பெறலாம். வீரன் v. கிருஷ்ணமூர்த்தி வழக்கில் எதிர்வாதி பேருந்தினைக் கவனமின்றி ஓட்டிய தன் விளைவாக ஆறு வயதுச் சிறுவன் விழுந்து காயமுற்றான். அப்பையனின் தாய்க்கு இதனுல் ஏற்பட்ட உடல்நலக் குறைவிற்காக அவளுக்கு சுமார் ரூ. 2 மதிப்புள்ள மருந்து தரப்பட்டது. மருத்துவமனையில் அப்பையனின் தாயின் பராமரிப்பு பையனுக்குத் தேவைப்பட்டதால் எதிர்வாதி இவ்வாறு செலவான ரூ 2-ம் தரவேண்டுமெனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

இதைத் தவிர, வாதிக்கு ஏற்பட்டகாயத்தால் சில வசதி வாய்ப்புகளை அனுபவிக்க முடியாமல் போகலாம். எடுத்துக்காட்டாக, கால்பந்தாட்ட வீரன், காலை இழத்தலைச் சொல்லலாம். இதற்காக அவன் பெறும்தொகை, அவனுக்கு ஏற்படும் மனத்துயர், உடல் வலி ஆகியவற்றிலிருந்து வேறுபட்டது. விபத்துக்குப்பின் அவன் நினைவு திரும்பாவிட்டாலும், தனக்கு ஏற்பட்ட அவலநிலையை உணர முடியாமற் போய்விட்டாலும் தன் வசதி, வாய்ப்பு, இழந்துவிட்டதற்காக அவன் கணிசமான தொகையைத் தீங்கீடாகப்பெறலாம். H. வெஸ்ட் & சன்ஸ் v. ஷெப்பர்ட் (H. West & Sons v. Shepherd) வழக்கில் மணமாகியிருந்த 41 வயதுப பெண்ணொருத்திவிபத்தில்பலமானஅடிபட்டதால் மூளையில் மரத்துப்போய், கைகால்கள் செயலிழந்துவிட்டாள். அவள் உடல்நிலையில் முன்னேற்றம் ஏற்பட எந்த வாய்ப்பும் இல்லாத நிலை இருந்தது. அவள் எதிர் நோக்கியிருந்த ஆயுட்காலம் சுமார் 5 ஆண்டுகள் ஆகக் குறைந்துவிட்டதாகக் கருதப்பட்டது. பிரபுக்கள் சபை அவளது வாழ்நாள் அருக்கத்திற்காக £ 500 தவிர £ 17,500 தீங்கிடாகத் தந்தது, அவள் நினைவிழந்துவிட்டதாலேயே வாழ்வில் ஒருவருக்கு ஏற்படக் கூடிய சாதாரண அனுபவங்களையும். வசதிகளையும் காயத்தின் விளைவாக அவள் இழந்துவிட்டாள் என்பதை மறுக்க முடியாது. ஆனல், இறந்துபோனவளுக்குத் தீங்கீடு செய்ய

முடியாதது போல நினைவின்றிக் கிடப்பவளுக்குத் தீங்கீடு செய்ய இயலாதெனக் கூறுவாருமுளர். இறந்தவளுக்காக ஆயுட்கால அருக்கத்திற்கு தரப்படும் தொகை சிறிய தொகையாகவே இருக்கும், ஆனால், அவள் உணர்விழந்திருந்தாலும். உயிரோடு இருந்தால் இத்தொகை பெரியதாக இருக்கும். இதற்குக் காரணம் உயிரோடு இருப்பவளை இறந்தவளைப்போலக் கருத நீதிபதிகள் மறுப்பதாகும். தவிர அதன் விளைவான ஆயுட்கால அருக்கத்தையும், வசதிகள் இழப்பையும் ஒன்றுகக் கருதமுடியாது. ஆனால் சிந்தித்துப் பார்த்தால் விபத்தில் சிக்கிக் காயமுற்றவள் சில மாதங்கள் அல்லது ஆண்டுகள் உணர்வற்றுக் கிடந்து மடிகிறாளா, அல்லது விபத்தேற்பட்ட உடனேயே மடிகிறாளா என்பதில் என்ன வேறுபாடு இருக்கமுடியும் ? பின் சொல்லப்பட்டதில் உறவினர்கள் உடனே பணத்தை எடுத்துக்கொள்கின்றனர். முந்தியதில் அவர்களுக்குக் கிடைக்கும் தொகை சிறிது காலம் கழித்துக் கிடைக்கிறது. இதைத் தவிர வேறுபாடு இல்லை, இதற்கு இடைப்பட்ட காலத்தில் விபத்திற்குள்ளானவளுக்கு அந்தப் பணத்தால் யாதொரு பயனும் இல்லை.

வாழ்க்கையில் கிடைக்கக்கூடிய வசதி வாய்ப்புகளையோ அல்லது விளைத்திறத்தையோ இழந்தற்காக ஒரு தொகையை வாதிக்குத் தீங்கீடாக தரப்படும். ஆனால் இந்த இனத்தில் தரப்படும் தீங்கீட்டுத் தொகை நியாயமானதாகவும், போதுமானதாகவுந்தான் இருக்க முடியும். எதிர்வாதியின் கவனமின்மையால் வாதிக்குக் கடுமையான உடற்காயம் ஏற்பட்டுவிட்டால் அதற்குப் பெருந் தொகை அளித்தாலும் அவனுக்கு முழுமையான ஈடு செய்ய முடியாது. எனவே, வாதிக்கு அளிக்கப்படும் தீங்கீடு அவனுக்கேற்பட்ட காயத்தின் தன்மையையும், அவனது சூழ்நிலையையும் பொருத்ததாகும். ரோஸ் v. போர்டு (Rose v. Ford) வழக்கில் இறந்த மனிதனது சொத்து பயன்பெறும்வகையில் பாத்தியதை நிலைத் நிற்கும் என்று கூறப்பட்டது. காயமடைந்தவன் மனதில் அவன் ஆயுட்காலம் குறுகிவிட்டதே என்று ஏற்படும் உணர்ச்சியைப் பொறுத்தே இத்தீங்கீடு அமையவேண்டும் என்ற வாதத்தை நீதிமன்றம் இவ்வழக்கில் ஏற்கவில்லை. எடுத்துக்காட்டாக, சுறு சுறுப்போடு இயங்கும் இளைஞன் ஒருவன், எதிர்வாதியின் செயலால் பார்வை இழந்துவிட்டானோ அல்லது உடல் ஊனமுற்று இருந்தாலோ எதிர்வாதியிடமிருந்து கணிசமான பெருந்தொகை ஒன்றை அவன் நிவாரணமாகப் பெறமுடியும்.

பொது முறை தீங்கீட்டுத் தொகையில் எதிர்வாதியின் செயலால் வாதி தான் எதிர்பார்க்கக் கூடிய தனது ஆயுட்காலம்

அருகிவிட்டதற்காக (Shortened Expectation of Life) ஒரு தொகையும் தீங்கீடாகப் பெறலாம். இயங்கையாக 80 வயது வரை வாழ்வேன் என்று எதிர்பார்க்கும் ஒருவர் எதிர்வாதியின் செயலின் விளைவாக வாழ்நாள் குறைந்து முன்னரே இறக்கலாம். இவ்வாறு வாழ்நாள் குறுகி உரிய காலம் வருமுன்னரே மடியக் கூடிய வாய்ப்பைக் கருதி நீதிமன்றம் தீங்கீடாக ஒரு தொகை அளிக்கிறது. ஃபிளிண்ட் v. லவல் (Flint v. Lovell) வழக்கில் நன்கு சுறுசுறுப்போடு இயங்கிவந்த லவல் என்னும் 69 வயது உடையவர் எதிர்வாதியின் கவனமின்மையால் ஏற்பட்ட கார் விபத்தில் ஏற்பட்ட காயங்களின் விளைவாக அவர் எதிர்நோக்கியிருந்த வாழ்நாள் அருகிவிட்டதால் அவர் தீங்கீடு பெறமுடியும் என்று தீர்மானிக்கப்பட்டது. தீங்கீட்டைத் தீர்மானிக்கும்போது கடைப்பிடிக்க வேண்டிய கொள்கைகளை பிரபுக்கள்சபை 1941-ல் பென்ஹாம் v. கேம்ப்ளிங் (Benham v. Gambling) வழக்கில் கூறியது. இவ்வழக்கில் நல்ல வசதியான சூழ்நிலையில் உடல் நலத்தோடு வாழ்ந்து கொண்டிருந்த 21 வயதே நிறைந்த குழந்தையின் சாவுக்கு £ 200 நிவாரணம் தரப்பட்டது. இவ்வழக்கில் ஆயுட்காலத்தின் பொருள்மதிப்பு என்னவென்று ஆய்ந்து தீங்கீட்டை நிர்ணயிக்க பின்வரும் விதிகள் சொல்லப்பட்டன.

(1) இங்கு கணக்கிடப்பட வேண்டியது இன்னும் எவ்வளவு காலம் காயமுற்றவன் உயிரோடு வாழக்கூடுமென்பதல்ல, அவன் மகிழ்ச்சி மிகப்பெற்று வாழக்கூடிய ஆயுள் எவ்வளவு காலம்வரை இருக்குமென்பதே. எனவே, வெறும் ஆயுட்கால அளவினை மட்டும் அறிவதால் பயனில்லை.

(2) தனது எதிர்கால வாழ்வு தனக்கு மகிழ்ச்சியைத் தருமா என்று உணரும் தகுதி மாண்டவனுக்கு இருந்ததா என்று அறியத் தேவையில்லை. இந்தச் சோதனை பொதுவானதேயன்றி தனிநபர் கருத்தல்ல.

(3) ஆயுட்கால அருக்கத்திற்குத் தரப்படும் தீங்கீடு குறைந்ததாக, அதாவது சுமாரான தொகையாகவே இருக்க வேண்டும். இறந்துபோன நபர் குழந்தையாக இருந்ததால் இவ்வகையில் கொடுக்கப்படும் தீங்கீடு இன்னும் குறைவாகவே அமைந்திருக்கும். ஏன் எனில் அவனது எதிர்கால வாழ்க்கையும், மகிழ்ச்சியும் நிலையற்றதாகும்.

(4) ஆயுட்கால அருக்கத்திற்கு தீங்கீடு தரும்போது ஒருவனின் பொருளாதார நிலையையோ, சமுதாயத்தில் அவனுக்

களிக்கப்பட்ட தகுதியை கருதிப்பார்க்க வேண்டியதில்லை. ஏனெனில் ஒருவனின் மகிழ்ச்சி இவற்றைப் பொறுத்து அமைவ தில்லை.

(5) ஒருவன் தன் வாழ்வினை இழந்ததற்காகத் தீங்கீடு தரப் படுகிறதேயல்லாமல், எதிர்காலத்தில் அவன் இழக்கக்கூடிய ஊதியம் அல்லது வருவாய்க்காக அல்ல. யார்க்ஷயர் மின்சார வாரியம் v. நாய்லர் (Yorkshire Electricity Board v. Naylor) வழக்கில் எதிர்வாதியிடம் பணிபுரிந்த ஒரு இளைஞன் மின்சார அதிர்ச்சிக்குள்ளாகி உடனே மாண்டான். அவன் தாய் அவனது சொத்தின் நிறைவேற்றுனர் (executor) என்ற முறையில் வழக் கிட்டு அவன் ஆயுட்கால அநுக்கத்திற்காகவும். சவ அடக்கத்திற் கான செலவுக்காகவும் தீங்கீடு கோரினாள். ஆயுட்கால அநுக்கத் திற்காக, வழக்கை விசாரித்த கீழ்நீதிமன்றம் £ 500 தீங்கீடு அளித்தது. இத்தொகையை முறையீட்டு நீதிமன்றம் £ 1000 ஆக அதிகரித்தது. ஆனால் இறுதியாக இத்தொகை மீண்டும் £ 500 ஆக பிரபுக்கள் சபையால் குறைக்கப்பட்டது. இத்தொகை 1941-ல் பென்ஹாம் v. கேம்ப்ளிங் வழக்கில் கொடுக்கப்பட்ட £ 200-க்குச் சமம் என்று கருதப்பட்டது. 1941-க்குப்பின் நாண யத்தின் மதிப்பு 2½ மடங்கு குறைந்து விட்டதால் £ 500 அளிக் கப்பட்டால் போதும் என்று கருதப்பட்டது. இது நீதிமன்றமே இவ்வளவு தொகைதான்தர வேண்டுமென்று சட்டம் இயற்றுவ தற்கு ஒப்பாகும். தீங்கீட்டுத் தொகையைத் தீர்மானிக்க பென்ஹாம் v. கேம்ப்ளிங் தீர்ப்பை மாறுத அளவுகோலாகவும், கட்டளையாகவும் கொள்வது ஏற்புடையதல்ல என்று கருதப் படுகிறது.

கோபால்ட் மோட்டார் சர்வீஸ் v. வேலுசாமி (Gobald Motor Service v. Velusamy) வழக்கில் வசதியாக, நல்லமுறையில் தொழில் புரிந்துவந்த மருத்துவர் ஒருவர் எதிர்வாதியின் கவன மின்மையால் விபத்துக்குள்ளாகி மூன்று நாட்களில் மாண்டு போனார். அவரது மனத் துன்பத்திற்காகவும், ஆயுட்கால அருக் கத்திற்காகவும் ரூ. 5000 தீங்கீடாக எதிர்வாதி தரவேண்டுமென்று இந்திய உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது.

மரணம் ஏற்படுத்தும் விபத்துக்கள் சட்டத்தின்படி இந்தற வரை அண்டியிருப்பவர்கள் தீங்கீடு பெறலாம். டேவிஸ் v. பவல் டஃப்ரின் அசோசியேடெட் காலியரிஸ் லிமிடெட் வழக்கில் (Davis v. Powell Duffrijn Associated Collieries Ltd.)இதைக் கணக்கிடும் வழிவகை கூறப்பட்டுள்ளது. இதை நம்நாட்டிலும் பின்பற்றலாம்

என்று இந்திய உச்சநீதிமன்றமும் முனிசிபல் கார்பரேஷன் ஆஃப் டெல்லி v. சுபாக்வதி வழக்கில் கூறியுள்ளது. இறந்தவரின் வருமானம், அவர் தனக்காகவும், தன்னை அண்டியிருந்தவர் (dependants) ஒவ்வொருவருக்கும் தனது வருமானத்தில் எவ்வளவு விகிதாச்சாரம் செலவு செய்து வந்தார்? இறந்தவர் பார்த்துவந்த வேலை தொடர்ந்து நிரந்தரமானதாக அமைந்திருந்ததா? அவருடைய ஆதரவை எதிர்நோக்கியுள்ளவர்களுக்கு அவருடைய துணை அல்லது ஆதரவு தேவையாக இல்லாமல் போகக்கூடிய வாய்ப்பு ஏதேனும் உண்டா? (எடுத்துக்காட்டாக அவரது மனைவி மறுமணம் செய்து கொள்ளல்) என்பவற்றை எல்லாம் கருதிப் பார்க்க வேண்டும்.

தனிமுறை தீங்கீடுகோரும் வாதி தனக்கு தனிப்பட்ட முறையில் எவ்வாறு இழப்பு நேர்ந்துள்ளதென்று வாதுரையில் எதிர்வாதிக்குத் தெரிவிக்கவேண்டும். எடுத்துக்காட்டாக, எதிர்வாதி வெளியிட்ட அவதூறான அறிக்கையின் காரணமாக வாதி தான் நல்ல ஊதியம் பெற்றுவந்த வேலையில் இருந்து நீக்கப்படுகிறான். இது அவனுக்கு ஏற்பட்ட தனிமுறை இழப்பாகும். இதை அவன் சொல்லாமல் நீதிமன்றம் ஊகிக்கமுடியாது. அவன் வாதுரையில் (Pleading) அதைச் சொல்லாமல் விசாரணையின் போது அந்த இழப்புக்காகச் சான்று கொண்டுவர முடியாது. இத் தனிமுறை தீங்கீட்டினை இரு வகையாகப் பிரிக்கலாம். முதலாவதாக விசாரணைக்கு முன்பு விபத்தின் காரணமாக வாதிக்கு ஏற்பட்ட நியாயமான செலவினங்கள். எடுத்துக்காட்டாக அவன் ஆடைகளை இழந்திருக்கலாம்; அல்லது அவை கிழிந்திருக்கலாம்; அவனுக்கு மருத்துவச் செலவு ஏற்பட்டிருக்கலாம். உண்மையில் அவனுக்கு ஏற்பட்ட செவிலியர்களுக்கான செலவும் இதில் அடங்கும். முந்தி ஏற்பட்ட மருத்துவச் செலவுமட்டுமல்லாமல் இனிமேல் அதற்காக ஆகக்கூடிய செலவையும் தீங்கீடாகப் பெறலாம். இதைத் தவிர அதிகப்படியான வாழ்க்கைச் செலவுக்கும் அவன் ஈடு பெறலாம். எடுத்துக்காட்டாக, காயமுற்றதால் தனிப்பட்ட மருத்துவமனையில் தங்கியிருக்க நேர்ந்ததற்கும், தனியாக ஏற்பட்ட அதிக உணவுச் செலவிற்கும் மருத்துவமனைக்குப் போய்வர ஏற்படும் செலவிற்கும் அவன் ஈடு பெறலாம். வாதியைக் கவனித்துக் கொள்ள வந்தவர் தனது வேலையைப் புறக்கணித்துவிட்டு வந்திருந்தால் அதற்கும் நிவாரணம் தரப்படும். ரோச் v. ஹேட்ஸ் (Roach v. Yates) வழக்கில், வாதிக்கு காயங்கள் ஏற்பட்டதால் அவருக்கு எஞ்சியுள்ள வாழ்நாள் முழுவதும் அவரைக் கவனித்துக் கொள்ள பிறர் உதவி தேவைப்

பட்டது. அதற்காக அவரது மனைவியும், மைத்துனியும் தாங்கள் பார்த்து வந்த வேலையைக் கைவிட நேர்ந்தது. £ 3 ஊதியத்தை அவர்கள் இழக்க நேர்ந்தது. இதற்கு ஈடு செய்யப்பட்டது. ஷ்நைடர் v.ஐசோவிச்(Schneider v Eisovitch)வழக்கில் ஃபிரான்ஸ் தேசத்தில் நடந்த விபத்தொன்றில் வாதி காயமுற்றார். அவரது கணவரும் அதே விபத்தில் மாண்டார். அவரது மைத்துனனும், மனைவியும் அவருக்கு உதவிபுரிய விமானத்தில் சென்றனர். இதனால் அவருக்கேற்பட்ட செலவுக்குத் தீங்கீடு தரவேண்டு மெனத் தீர்ப்பளிக்கப்பட்டது. காயமுற்ற குழந்தையின் சார்பாகத் தந்தையும், காயமுற்ற மனைவியின் சார்பாகக் கணவனும் செய்த செலவினத் தீங்கீடாக எதிர்வாதி தரவேண்டும். தன் மனைவி மக்களைக் காக்க வேண்டிய கடமை ஒருவனுக்குண்டு. தவிர, மனைவியின் இயலாமை காரணமாக வீட்டுவேலைகளைச் செய்யப் பணியாளை அவன் அமர்த்தியிருந்தால் அதற்கும் எதிர்வாதிதான் ஈடுசெய்ய வேண்டும். தன் மனைவியைக் கவனித்துக் கொள்ள கணவன் வேலையைக் கைவிட வேண்டி வந்தாலும் அவனுக்கு இதனால் ஏற்படும் இழப்பு மருத்துவச் செலவில் ஒன்றுகக் கருத வேண்டும். ஏன் எனில் அவன் மனைவியை அருகிலிருந்து பார்த்துக் கொள்வதால் அவள் உடல்நலம் தேறக்கூடும். இரண்டாவதாக அவன் இழந்துவிட்ட ஊதியம், இங்கு அவன் ஊதியத்தை இழந்து விட்ட தற்காரத்தான் தீங்கீடு தரப்படுமேயல்லாமல் அவன் ஊதியத்தை பெறும் திறனை இழந்ததற்காகவல்ல. எனவே, அவன் கட்ட வேண்டிய வருமானவரி, அவனது காப்பீட்டிற்கு அவன்தரும் தொகை, (Insurance Contribution), வேலையின்மைக் காலத்தில் தரப்படும் உதவித் தொகைக்காக பிடித்தம் ஆகியவற்றை அவனது ஊதியத்திலிருந்து கழித்து வரும் தொகையே அவனது ஊதியமாகும். ஏன் எனில் அவனுக்கு ஊதியம் என்ற முறையில் சட்டைப்பையில் தங்குவது மேற்கூறிய பிடித்தங்கள் போக எஞ்சியுள்ள தொகைதான். இதைத் தவிர வாதியின் பணித்தலைவர் அவனுடன் செய்து கொண்ட ஒப்பந்தப்படியோ, சட்டப்படியோ வாதிக்குக் குறிப்பிட்ட காலத்திற்கு முழு ஊதியமோ அல்லது அதிலொரு பகுதியோ தொடர்ந்து தரவேண்டியிருந்தால் அப்போது வாதிக்கு ஊதிய இழப்புக்காக ஈடு செய்யப்படும் தொகையிலிருந்து அதைக் கழித்துக் கொள்ள வேண்டும். ஆனால் கட்டாயம் எதுவும் இல்லாமல் பணித்தலைவர் தாமே மனம் விரும்பி ஒரு தொகையை நன்கொடையாகத் தந்திருந்தால் அதைக் கழித்துக் கொள்ள வேண்டியதில்லை. தவிர, பணித்தலைவரிடம் காயத்திற்குபின் ஓய்வு ஊதியம்பெற வாதிக்குத் தகுதி இருப்பின் அதையும் கணக்கில் எடுத்துக்கொண்டு பிடித்தம் செய்யப்பட

வேண்டும். அவன் உடல்நலம் தேறும்நாள் அல்லது இறக்கும் நாள்வரையிலுள்ள காலத்திற்கு அவன் ஈட்டக்கூடிய ஊதிய இழப்புக்காகவும் அவன் ஈடு பெறலாம். வாதியின் பொருள் ஒன்றுக்கு எதிர்வாதியால் சேதம் ஏற்பட்டால் எதிர்வாதி அதற்குத் தீங்கீடு தரவேண்டும். அப்பொருளை வாதி எவ்வாறு பயன்படுத்தினான் என்பது எதிர்வாதிக்குச் சம்மந்தமில்லாதது ஆகும். எடுத்துக்காட்டாக, வாதியின் நாற்காலியை எதிர்வாதி முறையின்றிக் கையாடிவிட்டு அந்த நாற்காலியில் வாதி வழக்கமாக அமர்வதேயில்லை என்றோ, அல்லது அவன் வீட்டில் அந்த நாற்காலியைத் தவிர இன்னும் ஏராளமான நாற்காலிகள் உள்ளதென்றோ எதிர்வாதி கூறுவதை நீதிமன்றம் ஏற்காது. பணித்தகுவர் ஊதியத்தோடு இருக்க இடமும், உணவும், தனியே தந்தால் ஒருவனுக்கு உண்மையாக ஏற்பட்ட ஊதிய இழப்போடு இவற்றின் மதிப்பையும் சேர்த்துக் கொள்ளவேண்டும். இவற்றிற்கும் ஈடு தரவேண்டும். ஓய்வு ஊதியம் பெறத்தக்க பணியாக இருந்தால் அவன் இழந்துவிட்ட ஓய்வு ஊதிய உரிமைகளையும் கணக்கில் எடுத்துக் கொள்ளவேண்டும். தவிர, காயமுற்றதின் விளைவாக ஒருவன் நிலையாக ஊனமடைந்து விட்டால், அதன் விளைவாக அவன் எதிர்காலத்தில் வேலை தேடுவதால் அதனால் அவனுக்குக் குறைந்துபோகும் வாய்ப்புகளைக் கருதிப் பார்த்து ஈடு தரப்படவேண்டும். தவிர, மணமாகாத பெண் ஒருத்திக்கு உருச் சிதைவு ஏற்படுவதால் அவளுக்கு மணப்பேறு வாய்ப்புக் குறைந்து போய் விடுவதற்கும் தீங்கீடு தரவேண்டும். இதற்கும் மேலாக ஒருவன் வருவாய் தரக்கூடிய பொழுதுபோக்கு ஒன்று வைத்துக்கொண்டிருக்கலாம். எடுத்துக்காட்டாக, தோட்டக் கலையைப் பொழுதுபோக்காகக் கொண்டிருப்பவனுக்குக் காயம் ஏற்பட்டு அவன் தோட்டத்தைத் தானே கவனித்துக் கொள்ள முடியாத நிலை ஏற்பட்டு வேலையாளை அமர்த்தவேண்டி ஏற்பட்டால் அவனுக்கு இழப்பு ஏற்பட்டதாகவே கருதி ஈடு செய்யப்பட வேண்டும்.

வாதிக்கு காயமேற்படுவதால் அவன் வேலைசெய்து சம்பாதிக்கக்கூடிய சக்தியை இழந்து விட்டால், அவ்வாறு அவன் இழந்து விட்ட வருவாய்க்கும், அவன் எதிர்காலத்தில் ஈட்டக்கூடிய வருவாய்க்கும் ஈடு செய்யப்படும். அதன் விபத்தேற்படுவதற்கு முன்பாக என்ன சம்பாதித்தான் என்பதைக் கொண்டு, இயலாமை ஏற்பட்ட கால அளவைப் பொறுத்து உண்மையில் அவன் இழந்து விட்ட வருவாயைத் தீர்மானிக்கலாம். எதிர்காலத்தைப் பொறுத்த வரை, அவனது இயலாமை எவ்வளவு காலத்திற்கு தொடர்ந்து நீடிக்கும் என்பதை அவன் எதிர்காலத்தில் அவன்

ஈட்டக்கூடிய வருவாயின் விகிதத்தையும் கருதிப்பார்த்து, முழுமையான தொகையொன்றை தீர்மானிக்க வேண்டும். இத் தொகை பல தவணைகளாய் அவனுக்குத் தரப்பட வேண்டும் என்பதையும், வாழ்வில் ஏற்படக்கூடிய ஏற்றத் தாழ்வுகளையும் நினைத்துப்பார்த்து இத்தொகையைக் கணக்கிடவேண்டும். மேலும் வாதி காயமுற்றபோது சம்பாதிக்கக்கூடிய நிலையில் இல்லாது போகலாம். எடுத்துக்காட்டாக, அவன் சிறு குழந்தையாக இருக்கலாம். இருந்தாலும் அவனுக்கேற்படும் காயத்தின் விளைவாக அவனுடைய பொருள் ஈட்டும் சக்தி குறைந்து போகுமாயின் அவன் தீங்கீடு பெறும் தகுதியை இழந்து விடமாட்டான்.

அற்ப தீங்கீடு (Contemptuous Damages)

வாதிக்கு இழப்பு ஏற்பட்டிருந்தாலும் அவன் நடத்தையைப் பற்றி நீதிமன்றம் தாழ்வாகக் கருதி, அவன் வழக்கினைக் கொண்டு வந்திருக்கக்கூடாது என்று வேண்டா வெறுப்புடன் ஓர் அற்பமான தொகையை தீங்கீடாகத் தரலாம். எடுத்துக்காட்டாக வாதியின் மூறைகேடான சொற்களால் சினங் கொண்டு எதிர்வாதி அவனை அடித்திருக்கலாம். இதற்கும் பெயரளவு தீங்கீட்டுக்கும் உள்ள வேறுபாடு என்னவென்றால், பெயரளவு தீங்கீட்டில் வாதிக்கு எந்த நட்டமோ, ஊறோ ஏற்படாதபோதும் நீதிமன்றம் பெயரளவு இழப்பீடாக சிறு தொகை அளிக்கிறது. அற்ப தீங்கீட்டில், வாதிக்கு இழப்பு அல்லது ஊறு ஏற்பட்டிருந்தாலும் அதற்கு அவன் ஈடுபெறும் அருகதையற்றவன் என்று நீதிமன்றம் கருது வதால் ஒரு அற்பமான சிறு தொகை ஒன்றை அளிக்கிறது. இதன் விளைவாக, வாதி தனது நீதி மன்றச் செலவுத் தொகையை பெற முடியாமல் போகலாம்.

எச்சரிக்கைத் தீங்கீடு (Exemplary Damages)

வாதிக்கு உண்மையில் ஏற்பட்ட பொருள் இழப்புக்கு ஈடாக ஒரு தொகையுடன் சேர்த்து எதிர்வாதி புரிந்த தீங்கின் விளைவாக வாதிக்கு ஏற்பட்ட அவமரியாதைக்கும், உணர்ச்சிகள் புண் படுத்தப்பட்டதற்கும், ஆறுதல் அளிக்கும் நோக்கத்தோடு தரப்படும் தொகையினை எச்சரிக்கைத் தீங்கீடு குறிக்கும். இப்படிப் பட்ட தீங்கீடு, வேண்டுமென்றே, திமிராகவோ எதிர்வாதி இழைக்கும் தீங்குகளுக்குத்தான் தரப்படும். எதிர்வாதி தொடர்ந்து எதிர்காலத்திலும் இவ்வாறான தீங்கிழைக்காமல் அவனைத் தடுப் பதற்காக இது தரப்படுகிறது எனலாம். தீங்கியலின் நோக்கம் இழப்புக்கு ஈடு செய்வதேயல்லாமல், எதிர்வாதியைத் தண்டிப் தல்ல என்னும் கொள்கைக்கு முரணாக இது அமைந்துள்ளது.

அரசியல் சட்டத்திற்கு விரோதமாகவும், கொடுந்திமிரோடும், எதேச்சதிகாரத்துடனும் அரசு அலுவலர் செயல்படும்போதும், வாதிக்கு கிடைக்கக்கூடிய தீங்கீட்டிற்கு மேலாக தான் லாபம் பெறவேண்டுமென்ற கருத்துடன் எதிர்வாதி செயல்படும் போதும், சட்டமன்றம் அதிகாரம் வழங்கியுள்ளபோதும் எச்சரிக்கை தீங்கீடு அளிக்கலாம். வேறு எந்தச் சூழ்நிலைகளிலும் இந்தவகை இழப்பீட்டினை அளிக்கக்கூடாது என்று கருதப்படுகிறது. எடுத்துக் காட்டாக வாதி, தனது மகளை எதிர்வாதி கெடுத்துவிட்டான் என்று வழக்கிடும்போது தன் மகளின் பணியிழப்புக்காக (loss of service) தீங்கீடாகப் பெறக்கூடிய தொகையைவிட அவனுக்கு ஏற்பட்ட அவமானத்திற்கும், தந்தை என்ற முறையில் அவனுடைய உணர்ச்சி புண்பட்டதற்கும் ஆறுதல் அளிக்கும் வகையில் அதிக மான தொகையைத் தீங்கிடாகப் பெறமுடியும்.

சரிநிகர் தீங்கீடு (Compensatory damages)

வாதிக்கு ஏற்பட்ட பொருள் இழப்புக்குச் சமமான தொகை யொன்றை ஈடாகத் தருவதை சரிநிகர் தீங்கீடு என்கிறோம்.

கடுமையான தீங்கீடு (Aggravated Damages)

சில சமயங்களில் உண்மையில் வாதிக்கு ஏற்பட்ட இழப்பினை பணத்தால் நீதிமன்றம் அளவிடமுடியாமல் இருக்கலாம். எடுத்துக்காட்டாக அவன் அவமரியாதைக்குள்ளாகியும், உணர்ச்சிகள் புண்படுத்தப்பட்டும் இருக்காலம். அப்போது அவற்றிற்கு ஈடுசெய்யவேண்டியுள்ளது. நீதிமன்றம் எதிர் வாதியின் நடத்தையையும், நோக்கத்தையும் கருதிப்பார்த்து அதிகப்படியான தொகையை வாதிக்குத் தீங்கீடாகத் தருகிறது.

குறிப்பிட்ட சொத்தை மீட்டொப்படைத்தல் (Specifi Restitution of Property)

வாதியின் அசைவியல் சொத்தையோ (movable property) அல்லது நிலையியல் சொத்தையோ (immovable property) எதிர் வாதி முறையின்றி எடுத்துக் கொண்டிருந்தால் அதை அவன் வாதிக்குத் திருப்பித்தர வேண்டும் என்று நீதிமன்றம் உத்தர விடலாம். வாதி தன் நிலத்தை மீட்டுப்பெற எதிர்வாதியை நிலத்திலிருந்து வெளியேற்றும் உத்தரவை நீதி மன்றத்தில் கேட்கலாம். அவன் இழந்துவிட்டது அசைவியல் சொத்தாயின், நீதிமன்றத்தின் மூலமாக அந்தப் பொருளை மீட்டுப்பெற விண்ணப் பிக்கலாம். அந்தப்பொருள் சாதாரணமாகச் சந்தையில் விலைக்குக் கிடைக்கக் கூடிய பொருளாகவும், சிறப்பான தனித்தன்மை

எதுவும் இல்லாததாகவும் இருப்பின் அப்பொருளை மீட்டெடுப்புவிக்கும் உத்தரவு பிறப்பிக்கப்பட மாட்டாது; வாதி தனது பொருளின் விலை மதிப்பையே நிவாரணமாகப் பெறமுடியும். வாதியின் சொத்தைக் கவர்ந்த எதிர்வாதி தனது உழைப்பையும், பொருளையும் செலவிட்டு அதன் பொருள் மதிப்பை அதிகமாக்கியிருந்தால் வாதி தீங்கீடாக அதற்கு முன்பிருந்த பொருள் மதிப்பையே பெறமுடியும்; சொத்தின் தற்போதைய பொருள் மதிப்பை ஈடாகப் பெற இயலாது. எனவே தீங்கீட்டுக்குப் பதிலாக அச்சொத்தைத் தனக்கு மீட்டளிக்க வேண்டும் என்று வாதி கோரினால், அச்சொத்திற்கு எதிர்வாதியின் செயலால் கூறியுள்ள விலைமதிப்பினைக் கணக்கிட்டு அவனுக்குக் கொடுத்த பின்னரே, அவனிடமிருந்து வாதி அதை மீட்டுப்பெறமுடியும் என்று நீதி மன்றம் கூறிவிடலாம்.

உறுத்துக்கட்டளைகள் (Injunctions)

எதிர்வாதி தீங்கான செயலொன்றைச் செய்யாமல் தடுப்பதற்காகவோ, அல்லது செய்துவருகின்ற தீங்கான செயலைத் தொடர்ந்து செய்யாமல் இருப்பதற்கோ, அல்லது அவன் செய்யக் கடமைப்பட்டுள்ள செயலொன்றை முறையின்றித் தொடர்ந்து செய்யாமல் இருப்பதைத் தடுப்பதற்கோ நீதிமன்றம் பிறப்பிக்கும் உத்தரவு அல்லது தீர்ப்பினைத்தான் உறுத்துக்கட்டளை என்கின்றோம். இவ்வாறு உறுத்துக் கட்டளை பிறப்பித்தலும், பிறப்பிக்க மறுத்தலும் நீதிபதியின் விருப்பம். அல்லது உளத்தேர்வினைப் பொறுத்தது. உறுத்துக்கட்டளையைக் கட்டாயமாக பிறப்பித்தே யாகவேண்டுமென்று நீதிபதியை வற்புறுத்தமுடியாது. தீங்கீடு அளிப்பதன் மூலமே வாதிக்குப் போதிய நிவாரணம் அளிக்க முடியும் என்று நீதிபதி கருதினால் அவர் உறுத்துக்கட்டளை பிறப்பிக்கமாட்டார்.

எனவே தீங்குகள் நிகழும்வரை காத்திருந்து பின்னரே நீதி மன்றம் சென்று வாதி நிவாரணம் பெறமுடியும் என்பதில்லை., தீங்குகள் இழைக்கப்படுமுன்னர் அவற்றைத் தடுத்து நிறுத்த உறுத்துக்கட்டளைகளை அவர் நீதிமன்றத்தில் பெறலாம்.

உறுத்துக்கட்டளைகளைப் பலவகையாகப் பிரிக்கலாம்

இடைக்கால உறுத்துக்கட்டளையும் (Interlocutory Injunction) நிலைக்கால உறுத்துக்கட்டளையும் (Perpetual Injunction)

இடைக்கால உறுத்துக்கட்டளை என்பது வழக்கு விசாரிக்கப்பட்டு, அதன் தகுதியின் அடிப்படைல்தீர்ப்பு வழங்கு முன்னயிரோ

அல்லது மறு உத்திரவுவரையிலோ தற்காலிகமாகப் பிறப்பிக்கப் படுவதாகும். இடைக்கால உறுத்துக்கட்டளை இறுதியாக அளிக் கப்படப்போகும் தீர்ப்பு எவ்வாறு அமையும் என்று முன்கூட்டியே உணர்த்துவதல்ல; அது இறுதித் தீர்ப்பின் முன்னோடி அல்ல. இதன்மூலம் வழக்கு வாதிக்குச் சாதகமாக முடிவு செய்யப்படு மென்று சொல்லமுடியாது. இடைக்கால உறுத்துக்கட்டளை நீதி மன்றத்தால் கவனிக்கப்பட வேண்டிய முக்கியமான பிரச்சினை உள்ளதென்பதையே காட்டுகிறது. எடுத்துக்காட்டாக, முடிவாக தீர்ப்புவழங்கப்படும் முன்பாக ஒரு சொத்து அழிக்கப்படாமலும், முறையின்றி விற்கப்படாமலும் அது தற்போதுள்ள நிலையிலேயே தொடர்ந்து இருக்கவேண்டுமென்று நீதிமன்றம் கருதினால் இடைக் கால உறுத்துக்கட்டளை பிறப்பிக்கப்படும். எனவே தன்னுடைய உரிமைபற்றி இறுதியாக முடிவு செய்யப்படும்வரை அதற்கு பங்கமோ, ஊறோ நேராவண்ணம் காப்பாற்ற வேண்டுமென்று வாதி நீதிமன்றத்தை வேண்டுகின்றான். பின்னர் வழக்கினை தான் விசாரித்த பின்னர் வாதிக்கு நிவாரணம் அளிக்கப்பட வேண்டும் என்று நீதிமன்றம் கருதினால் இடைக்கால உறுத்துக் கட்டளை நிலைக்கால உறுத்துக்கட்டளையாக மாற்றப்படும். வாதி அநியாயமாக வழக்கிட்டிருப்பதாக நீதிமன்றம் கருதினால் முதலில் பிறப்பித்த இடைக்கால உறுத்துக்கட்டளை விளக்கிக் கொள்ளப் படும். அதனால் எதிர்வாதிக்கு ஏற்பட்டுள்ள இழப்புக்கு ஈடாக வாதியை ஒரு தொகை தருமாறும் நீதிமன்றம் உத்திரவிடும்.

தடையுறுத்துக்கட்டளையும் (Prohibitory Injunction) செயலுறுத்துக் கட்டளையும் (Mandatory Injunction)

வாதியின் உரிமையில் குறுக்கிடும் வகையில் அமைந்துள்ள செயலை எதிர்வாதி செய்யாமல் தடுக்கப் பிறப்பிக்கப் படுவதே தடையுறுத்துக் கட்டளையாகும். வாதிக்கு ஊறு விளைவிக்கக் கூடிய செயலை எதிர்வாதி செய்யாமலிருக்கும்படியோ, அல்லது தொடர்ந்து மேலும் செய்யாமலிக்கும்படியோ நீதிமன்றம் பிறப்பிக் கும் கட்டளையையே தடையுறுத்துக்கட்டளை என்கின்றோம். எடுத்துக்காட்டாக, வாதியின் நிலத்தில் எதிர்வாதி அத்துமீறி நுழையாமல் தடுக்கவும், வாதியின் கட்டிடத்திற்குக் கிடைத்து வந்த ஒளியைத் தடுக்கக் கூடிய விதத்தில் எதிர்வாதி கட்டிடம் ஒன்றைக் கட்டுவதைத் தடுப்பதற்கும் தடையுறுத்துக்கட்டளை பிறப்பிக்கப்படலாம்.

செயலுறுத்துக் கட்டளை என்பது எதிர்வாதியால் ஏற்பட்ட தீங்கான நிலைமையொன்றை முடிவுக்குக் கொண்டுவர அவரைக்

குறுப்பிட்ட செயல் ஒன்றைச் செய்யுமாறு பிறப்பிக்கப்படும் கட்டளையாகும். அதாவது அவர் ஏற்கெனவே இழைத்துவிட்ட தீங்கினைக் களையும் வகையில் ஒரு செயலைச் செய்யுமாறு அவருக்குக் கட்டளை இடப்படுகிறது. எடுத்துக்காட்டாக, வாதியின் கட்டிடத்திற்குக் கிடைத்துவந்த வெளிச்சத்தை மறைக்கும் விதத்தில் எதிர்வாதி கட்டிடம் ஒன்றைக் கட்டி முடித்துவிட்டார் என்று வைத்துக்கொள்வோம், அக்கட்டிடத்தை இடித்துத் தள்ளுமாறு அவருக்கு நீதிமன்றம் கட்டளையிடும். எனவே சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ள தனது உரிமைக்கு ஆபத்து சூழ்ந்துள்ளது என்று வாதி நிரூபித்தால்தான் அவர் உறுத்துக்கட்டளை பெற முடியும். உறுத்துக்கட்டளைக்குக் கீழ்ப்படிதல் இயலாதாயின் அது பிறப்பிக்கப்பட மாட்டாது. சில சமயங்களில் தீங்கு தொடர்ந்து நிலவுவதற்கு எதிர்வாதி சட்டப்படி பொறுப்பாளியாக இருந்தாலும் அத்தீங்கினை உடனே அகற்றும் சக்தி அவருக்கு இல்லாமல் இருக்கலாம். எனவே இந்தச் சூழ்நிலையில் பிறப்பிக்கப்பட்டுள்ள உறுத்துக்கட்டளையை எதிர்வாதி நிறைவேற்றத் தேவைப்படும் காலம் வரை அதைச் செயலுக்கு வராமல் நிறுத்தி வைக்க வேண்டியிருக்கும்.

இடர்முன் வழக்கு (Quia Timet Action)

தீங்கான செயலைத் தடுத்து நிறுத்துவதற்கே வழக்கமாக உறுத்துக்கட்டளை கோரப்படுகிறது. ஆனால் தீங்கு இதுவரை செய்யப்படாமல் இருந்து, எதிர்காலத்தில் அது செய்யப்படும் என்று வாதி அஞ்சினால், அதை வருமுன்னர் தடுப்பதற்காக வழக்கிடலாம். இதையே இடர்முன் வழக்கு என்கிறோம். வாதிதான் அஞ்சுகின்ற தீங்கு நிச்சயம் ஏற்பட்டே தீரும் என்று சொல்லக் கூடிய சூழ்நிலை உள்ளதென நிரூபிக்க வேண்டும். இங்கு வாதிக்கு உண்மையில் தீங்கு ஏற்படவில்லை. எனவே அவனுக்கு வழக்கு மூலம் இல்லை. இருப்பினும் எதிர்காலத்தில் நிச்சயம் தவறாமல் ஏற்படக்கூடிய தீங்கினை எதிர்நோக்கி அவன் நிவாரணம் தேடுகிறான். எடுத்துக்காட்டாக, வாதியின் கட்டிடத்திற்குக் கிடைத்து வந்த வெளிச்சத்தை முழுவதும் தடுக்கும்வகையில் எதிர்வாதி கட்டிடம் ஒன்றைக் கட்ட எண்ணியிருந்தாலோ அல்லது கட்டப் போவதாக அச்சுறுத்தினாலோ வாதி வழக்கிட்டுத் தனக்கு ஏற்படக்கூடி தீங்கு அற்பமானதல்ல என்று நிரூபிக்கலாம். அட்டர்னி ஜெனரல் v. நாட்டிங்ஹேம் மாநகராட்சி (Attorney General v. Nottingham Corporation) வழக்கில் குடியிருப்பு மனைகளிலிருந்து 50 அடி தொலைவுக்குள்ளாக ஒரு அம்மைநோய் மருத்துவமனை கட்ட எதிர்வாதிகள் தீர்மானித்தனர். இதை எதிர்த்து வழக்கிட்ட

வாதியால் அவ்வாறு மருத்துவமனை கட்டப்பட்டால் மக்களுக்குச் சட்டப்படி தொல்லையாக அது அமையும் என்று உறுதியாகக் கூறடியவில்லை. இதனால் அவரிட்ட வழக்கு தோற்றது.

வாதிக்கு ஏற்பட்டுள்ள இழப்பு அல்லது ஊறு மிகவும் அற்பமானதாயின், அவர் உறுத்துக்கட்டளை பெறமுடியாதது. எடுத்துக் காட்டாக யாருக்கும் இடையூறு இல்லாமல் மதபோதகர் ஒருவர் கடற்கரையில் மதச் சொற்பொழி நிகழ்த்தியதற்கு எதிராக உறுத்துக்கட்டளை பிறப்பிக்கப்படவில்லை.

தவிர எதிர்வாதி திமிரோடு நடந்து கொண்டிருந்தால் வாதிக்கு உறுத்துக்கட்டளை கிடைக்கும் வாய்ப்பு அதிகமாகும். எடுத்துக் காட்டாக, வாதியின் கட்டிடத்திற்கு வரும் வெளிச்சத்தை மறைக்கும்வகையில் எதிர்வாதி கட்டிடம் கட்டுவதைத் தடுக்க நீதிமன்றத்தின் துணையை வாதி நாடியுள்ளார் என்று எதிர் வாதிக்கு அறிவிக்கப்பட்ட பின்னரும் அவர் அக்கட்டிடத்தை விரைவாகக் கட்டிமுடிக்கும் வேலையில் ஈடுபட்டால், அக்கட்டிடத்தை இடித்துத்தள்ளுமாறு நீதிமன்றம் நிச்சயம் உத்தரவினைப் பிறப்பிக்கும். ஆனால் வாதி தன்னுடைய கட்டிடத்திற்கு வரும் வெளிச்சத்தை மறைக்கும் வண்ணம் எதிர்வாதி கட்டிடம் கட்டுவதைப் பார்த்துக்கொண்டு அக்கட்டிடம் கட்டிமுடியும் வரை எந்தவித எதிர்ப்பும் காட்டாமல் வாளாவிருந்து விட்டு இறுதியில் நீதிமன்றத்தின் துணையை நாடமுடியாது.

கேன் பிரபுவின் சட்டம் 1854-ன்படி இங்கிலாந்தில் சான்சரி நீதிமன்றம் (Chancery Court)உறுத்துக்கட்டளையுடன் சேர்த்தோ அல்லது அதற்குப் பதிலாகவோ தீங்கீடு தரலாம். பின்னர் நாடாளுமன்றம் இயற்றிய சட்டம் உயர்நீதிமன்றத்துக்கு இந்த உரிமையை வழங்கியது. இதன்மூலமாக, கடந்த காலத்தில் நிகழ்ந்த தீங்கிற்கும், தொடர்ந்து நிகழும் கேடுகளால் எதிர் காலத்தில் ஏற்படக்கூடிய தீங்கிற்கும் ஈடு செய்யப்படும்.

வாதியின் உரிமைக்கு ஏற்பட்ட தீங்கு மிகவும் அற்பமானதாகவும், அல்லது பணத்தால் அளவிடக்கூடியதாகவும், அல்லது சிறுதொகையொன்றை இழப்பீடாகத் தந்து நிவாரணம் அளிக்கக் கூடியதாகவும் இருக்கலாம். சில சமயங்களில் எதிர்வாதிக்கு உறுத்துக்கட்டளையால் பேரிடர் விளையலாம். இச்சூழ்நிலைகளில் உறுத்துக்கட்டளைக்குப் பதிலாகத் தீங்கீடு தருமாறு நீதிமன்றம் எதிர்வாதிக்கு உத்தரவு இடும், உறுத்துக்கட்டளைக்கு மாறுகத் தீங்கீடு தருமாறு உத்திரவிட வேண்டிய சூழ்நிலை உள்ளதென

எதிர்வாதியே நிரூபிக்கவேண்டும். வாதிக்கு ஏற்பட்டுள்ள தீங்கு தற்காலிகமானதாகவோ. அல்லது தொடர்ந்து நிகழாமல் இடை வெளிவிட்டு நிகழ்வதாகவோ இருப்பின் நீதிமன்றம் உறுத்துக் கட்டளை பிறப்பிக்காமல் இருக்கலாம். தவிர எதிர்வாதி தனக்குப் பாத்தியதை உண்டென உரிமை கொண்டாடி நிலத்தில் அத்து மீறல் செய்திருக்கலாம்; அல்லது அச்சொத்தில் வாதிக்கு உள்ள உரிமை அற்றுப்போகும் நிலையில் இருக்கலாம். இச்சூழ் நிலையில் வாதிக்குச் சாதகமாக உறுத்துக்கட்டளை பிறப்பிக்கப்படாமல் போகலாம்.

எதிர்வாதியின் செயலால் விளையும் தீங்கு கணிசமானதாக உள்ளதென்றும், வாதியின் நடத்தையைப் பார்க்கும்போது அவன் நிவாரணம் பெற தகுதியற்றவன் என்று கூறமுடியாத நிலை இருக்கிறதென்றும் வைத்துக்கொள்வோம். இந்நிலையில் உறுத்துக் கட்டளையைப் பிறப்பிப்பதால் வாதிக்கு ஏற்படக்கூடிய பயனைவிட, எதிர்வாதிக்கோ அல்லது பொதுமக்களுக்கோ அதிகமான கேடு அல்லது இழப்பு நேரும் என்றாலும், உறுத்துக்கட்டளை பிறப்பிக்கப் படும். மாரிஸ் v. ரெட்லேண்டு பிரிக்ஸ் (Morris v. Redland Bricks Ltd) வழக்கில் வாதியின் நிலத்திற்கருகில் எதிர்வாதி நிலத்தில் பள்ளம் தோண்டியதால் வாதியின் நிலத்தில் சரிவு ஏற்பட்டது. இதனைச் சரிசெய்ய சுமார் £ 30,000 முதல் £ 35,000 வரை செலவு செய்யநேரும் என்று கணக்கிடப்பட்டது. இருந்தாலும், £ 12,000 மதிப்பேயுள்ள நிலத்துக்காக இச்செல வினைச் செய்யத்தான் வேண்டுமென்று தீர்ப்பளிக்கப்பட்டது. தனிமனிதனின் உரிமைகளில் மற்றவர்களோ அல்லது சமூதாயமோ தலையிடுவதை நீதிமன்றம் அனுமதிக்காது.

25. நீதிமன்றத்திற்கு வெளியே பெறக் கூடிய நிவாரணங்கள்
(Extra Judicial Remedies)

நீதிமன்றத்தின் துணையோடு வாதி தேடிக்கொள்ளக்கூடிய நிவாரணங்களைப்பற்றி இதுவரை அறிந்தோம். சில சமயங்களில் ஒருவனுக்கு மற்றவர்கள் தீங்கிழைக்கும்போதும், அல்லது தீங்கிழைப்பதாக அச்சுறுத்தும்போதும் அவன் நீதிமன்றம் செல்லாமலேயே தன் சொந்த பலத்தாலும், செயலாலும் தன் உரிமையைக் காத்துக் கொள்ள தனக்கே உதவி செய்து கொள்ளலாம். இதைச் சட்டம் அனுமதிக்கும் எனவே ஒருவன் தன்னுடைய உரிமைக்கு ஊறு நேருகின்றபோதெல்லாம் நீதிமன்றத்தை நாடிச் செல்லத் தான் வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. தற்காப்புக்காகவும், நிலத்தில் அத்துமீறலைத் தடுக்கவும் வாதி தனக்கே உதவிக் கொள்ளலாம் என்று முன்னரேயறிந்தோம். இங்கு ஒருவன் தன் சொந்த முயற்சியால் நிவாரணம் தேடும் வழிகளைப்பற்றிக் காண்போம்.

1. நிலத்தில் மீண்டும் நுழைதல் (Re-entry on land)

ஒருவன் தனது நிலத்தில் அத்துமீறி நுழைபவரைக் கட்டாயமாக-வல்லந்தமாக வெளியேற்றலாம். இதற்காக அவன் நியாயமான முறையில பலத்தைப் பயன்படுத்தலாம். ஆனால் நிலத்தில் அத்துமீறி நுழைந்தவரைத் தண்டிக்கும் நோக்கத்தோடு கண்ணிவைப்பதோ, விசைத் துப்பாக்கி வைப்பதோ கூடாது என்று கண்டோம். (பார்ட் v ஹால்புரூக்) வல்லந்தமாக துரத்தும் முன்னர் நிலத்திலிருந்து அவர் தாமாக வெளியேற நியாயமான வசய்ப்பும், காலமும் தரப்படவேண்டும். தேவைப்பட்டால் தற்காப்புக்காக அத்துமீறி நுழைந்தவருக்குக் காயமும் ஏற்படுத்தலாம்.

ஒருவன் தனக்குச் சொந்தமான நிலத்திலிருந்து முறையின்றி தூரத்தப்பட்டால் அவன் தன் நிலத்தை மீட்க நீதிமன்றம் செல்ல வேண்டிய கட்டாயம் இல்லை. அவன் சமாதான வழியில், வன் முறையைத் தவிர்த்து நிலத்தை மீட்க முடியுமானால், தன் சொந்த முயற்சியாலும், செயலாலும் நிலத்தின் உடைமையைப் பெறலாம். ஆனால் நிலத்தை மீட்க பலாத்காரமுறையைப் பயன்படுத்தக் கூடாது. ஆனால் அவ்வாறு பலாத்காரமுறையில் நிலத்திலிருந்து தீங்கிழைத்தவரை விலக்குதல் குற்றமாகுமேயன்றி தீங்காகாது; தேவைக்கு அதிகமானதும், அநியாயமானதுமாகிய பலத்தைப் பயன்படுத்தாமல், அத்துமீறி நுழைந்தவரையும் அவரது பொருட்களையும் நிலத்திலிருந்து அகற்றினால் அது தீங்காகாது. ஹெம் மிங்ஸ் v. ஸ்டோக் போஜஸ் கால்ஃப் கிளப் லிமிடெட் (Hemmings v. Stoke Poges Golt Club Ltd) வழக்கில் கணவனும் மனைவியுமாகிய வாதிகள் எதிர்வாதி கால்ஃப் விளையாட்டுச் சங்கத்தின் பணியாட்களாக வேலை பார்த்தனர். அவர்கள் தங்கள் கடமைகளைச் செவ்வனே செய்வதற்காக எதிர்வாதிகளுக்குச் சொந்தமான குடிசை அவர்களுக்கு அளிக்கப்பட்டு இருந்தது. வாதிகள் எதிர் வாதிகளிடம் செய்துவந்த வேலையைவிட்டு விலகினர். எனவே அவர்களுக்கு அளிக்கப்பட்ட குடிசையைக் காலிசெய்யுமாறு அவர்களுக்கு எதிர்வாதிகள் அறிவிப்புக் கொடுத்தனர். வாதிகள் காலிசெய்ய மறுத்தனர். எனவே எதிர்வாதிகள் குடிசைக்குள் நுழைந்து அவர்களைக் கட்டாயமாக வெளியேற்றினர். அவர்கள் மேல் அத்துமீறலுக்காகவும், தாக்கமுனைந்ததற்காகவும், தாக்கியதற்காகவும் வாதிகள் வழக்கிட்டனர். சட்ட பூர்வமான அறிவிப்புக்குப் பின்னர் மனையைக் காலிசெய்ய மறுத்தவரை இடத்தின் சொந்தக்காரராகிய எதிர்வாதிகள் வெளியேற்ற முயற்சித்தபோது, அவர் அதைத் தடுக்கவே, நியாயமான முறையில் பலத்தைப் பயன்படுத்தி அவர்களை வெளியேற்றியது தீங்காகாது என்று நீதி மன்றம் கூறிவிட்டது.

2. பொருட்களை மீட்டல் (Re-Caption of Chattels)

ஒருவர் தனக்குச் சொந்தமான பொருட்களை முறையின்றி எடுத்துக் கொண்டிருப்பவனிடமிருந்தோ, அல்லது வைத்துக் கொண்டிருப்பவனிடமிருந்தோ சமாதானமுறையிலோ, அல்லது நியாயமான பலத்தைப் பயன்படுத்தியோ அவற்றை மீட்கலாம். அவ்வாறு பொருளை மீட்டல் குற்றமோ, தீங்கோ ஆகாது. ஒரு நிலத்தில் வசிப்பவர் பிறரது பொருளை முறையின்றி எடுத்துச் சென்றுவிட்டால் அந்தப் பொருளுக்குரியவர் அவரது நிலத்தில் நுழைந்து பொருளை மீட்கலாம். அதைப்போலவே மற்றொருவர்

தன் நிலத்தில் முறையின்றி ஒருபொருளை விட்டுச் செல்ல ஒருவர் அனுமதித்திருந்தாலும், பொருளுக்குரியவர் நிலத்தில் நுழைந்து அதை மீட்கலாம்.

3. தொல்லையை அகற்றுதல் (Abatement of Nuisance)

நிலத்தில் வாழ்பவரோ, அல்லது அவரிடமிருந்து அதிகாரம் பெற்றவரோ நிலத்திற்குச் சேதம் விளைவித்துக் கொண்டிருக்கிற தொல்லையை அகற்ற ஒரு செயலைச் செய்தால் அது சட்டப்படி தீங்காகாது. இவ்வாறு ஒருவரது அண்டை நிலத்திலுள்ள மரத்திலிருந்து கிளைகள் பரவி அவரது நிலத்திற்குள் நீட்டிக் கொண்டிருந்தால் அவற்றை முன்னறிவிப்பின்றி வெட்டலாம்; இதைப் போலவே ஒருவனது நிலத்தில் அடுத்துள்ள நிலத்தில் இருக்கும் மரத்தின் வேர்கள் பரவிப் படர்ந்திருந்தால் அந்த வேர்களை வெட்டலாம். இச்செயல்களை அண்டையிலுள்ள நிலத்திற்குச் செல்லாமலேயே செய்யலாம். ஆனால் சில சூழ்நிலைகளில் அறிவிப்புக் கொடுத்துவிட்டு அண்டை நிலத்திலிருந்துவரும் தொல்லைகளை அங்கேயே சென்று அகற்றவும் சட்டம் அனுமதிக்கும். ஆயினும் தொல்லையினை அகற்றும்போது தேவையற்ற நட்டம் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளவேண்டும்; கூடியவரை குறைவான இழப்பு ஏற்படும் வழிகளையே மேற்கொண்டு தொல்லைகளைக் களைய வேண்டும். மற்றவர்களது நிலத்திற்குச் செல்லாமலேயே தொல்லையை அகற்ற முடியுமானால் அவர்களுக்கு முன்னதாக அறிவிப்புக் கொடுக்க வேண்டியதில்லை. எடுத்துக்காட்டாக ஒருவன் தனது நில எல்லைக்குள் நீட்டிக் கொண்டிருக்கும் கிளைகளையும், பரவியுள்ள வேர்களையும் வெட்டிவிடலாம். இதைத் தவிர, உயிருக்கும் உடைமைக்கும் பேராபத்து விளைவிக்கும் தொல்லைகளை அகற்ற முன்னறிவிப்பைத் தரத் தேவையில்லை. ஏனெனில் காத்திருக்கமுடியாத சூழ்நிலை அமைந்திருக்கலாம்.

ஆனால், அகற்றப்பட வேண்டிய தொல்லையை அண்டை நிலத்தில் தற்போது உள்ளவருக்கு முன்பிருந்தவர் உருவாக்கியிருக்கலாம். அப்போது அந்தத் தொல்லையை அகற்ற வேண்டுமாயின் தற்போது அந்த நிலத்தில் உள்ளவருக்கு முன்னறிவிப்புத் தந்தாக வேண்டும். இது நியாயமானதாகும். தவிர, தொல்லையை ஏற்படுத்தியதோ அல்லது தொடர்ந்து வைத்திருப்பதோ தற்போது நிலத்தில் உள்ளவராக இல்லாமல் இருக்கலாம். மேலும், தொல்லையாகக் கருதப்படும் ஒரு வீட்டினை இடித்துத்தள்ள வேண்டியிருக்கலாம். அதில் மக்கள் குடியிருக்கலாம். இந்தச் சூழ்நிலைகளில் அதில் உள்ளவருக்கு முன்னறிவிப்பைத் தரவேண்டுமென்று எதிர்பார்ப்பது நியாயமாகும். இதைத் தவிர, பொதுத் தொல்லையையும்

அகற்ற உரிமையுண்டு. நெடுஞ்சாலையின் குறுக்கே யாராவது வேண்டுமென்றே வேலியிட்டுப் பாதையைத் தடுத்திருக்கலாம், அல்லது அங்குள்ள கடப்பு வாயிலை முறையின்றிப் பூட்டி வைத்திருக்கலாம். பொதுமக்கள் பாதையைக் கடக்கும் தங்கள் உரிமையை நிலைநாட்டவும், நெடுஞ்சாலைக்குச் செல்லும் வழியுரிமையை நிலைநாட்டவும், அந்த வேலியை அகற்றலாம்; வாயிலை உடைத்துத் திறக்கலாம். ஆனால் முறையின்றி இவ்வாறு செய்யப்படும் செயல்களுக்கெதிராகவே இந்த உரிமையைப் பயன்படுத்த முடியும். ஒருவர் செய்யாமல் விடுத்த பணியினால் ஏற்படக்கூடிய தொல்லைகளை அகற்ற மக்களுக்கு உரிமையில்லை. எடுத்துக் காட்டாக, அரசினரால் சாலை போடாமல் விடப்பட்டது என்று கூறித் தனிமனிதர்கள் தாங்களாகவே சாலைபோட்டுக் கொள்ளவோ, அல்லது தங்களுக்கு வசதியாக இருக்கும் என்று சொல்லி பாலம்போன்ற நிலையான அமைப்புகளை ஏற்படுத்தவோ முடியாது. இவற்றைச் செய்யவேண்டிய கடமையுள்ள அதிகாரிகள்தான் இவற்றைச் செய்ய வேண்டும்.

அத்து மீறியவற்றைக் கைப்பற்றுதல் (Distress Damage feasant)

தனது நிலத்தில் புகுந்து அழிவைச் செய்த, அல்லது செய்து கொண்டிருக்கும் கால்நடைகளையோ அல்லது வேறு பொருட்களையோ நிலத்தின் உடைமை கொண்டவர் கைப்பற்றி வைத்துக்கொண்டு, அவை விளைவித்த சேதத்திற்கு இழப்பீடு தரும்வரை அவற்றை விடுவிக்க மறுப்பது சட்டப்படி தீங்காகாது. கால்நடைகளை மட்டுமல்லாமல் வேறு உயிருள்ளனவற்றையும், உயிரில்லாதவற்றையும் இவ்வாறு பிடித்து வைத்துக் கொள்ளலாம். எடுத்துக்காட்டாக ஒரு ரெயில்வே கம்பெனி தனக்குச் சொந்தமான தண்டவாளத்தில் எதிர்வாதிக்குச் சொந்தமான நீராவி என்ஜின் முறையின்றி நிறுத்தப்பட்டிருந்ததால் அதைக் கைப்பற்றி நிறுத்தி வைத்துக் கொண்டது (ஆம்பர்கேட் ரெயில்வே v. மிட்லண்ட் ரெயில்வே). ஒரு வீட்டின் கண்ணாடிச் சன்னல்களை உடைத்துக் கொண்டு உள்ளே விழும் கால்பந்தையோ, கிரிக்கெட் பந்தையோ அந்த வீட்டில் வாழ்பவர் திருப்பித்தர வேண்டியதில்லை. முதலில் அவற்றால் ஏற்பட்ட இழப்புக்கு ஈடு செய்தால்தான் திருப்பித் தருவேன் என்று கூறி விடலாம். இவ்வாறு கைப்பற்றி வைத்துக் கொள்ளும் செயலை இரவுபகல் எந்த நேரத்திலும் செய்யலாம். நிலத்தில் வசிப்பவர் மட்டுந்தான் இந்த உரிமையைப் பயன்படுத்த முடியும்.

இந்த உரிமையின் வரம்புகள்

(1) பிடித்து வைக்கப்பட்டுள்ள பொருள் சட்டத்திற்கு முரணான வகையில் நிலத்தில் இருக்க வேண்டும். நிலத்திற்குள்ளேதான் அதைப் பிடிக்கவேண்டுமே தவிர, நிலத்திற்கு வெளியே பிடிக்கமுடியாது. அதாவது, அது அங்கிருப்பதால் அதன் உரிமையாளரிடமிருந்து இழப்பீடு கோரும் உரிமை அமைந்திருக்க வேண்டும். அப்படி உரிமை இல்லாவிட்டால் அதைப் பிடித்துவைக்கமுடியாது. எடுத்துக்காட்டாக, ஒருவர் கால்நடைகளை சட்டத்திற்கு இசைந்த வகையில் சாலையில் ஓட்டிச் செல்லும்போது அவை சாலையை ஒட்டி உள்ள நிலத்தில் புகுந்துவிடுமானால், அவை மீண்டும் சாலைக்குக் கொண்டு செல்லப் போதுமான காலமும், வாய்ப்பும் தரப்படவேண்டும். அவற்றை நிலத்திலிருந்து அகற்றத் தேவைப்படும் நேரத்திற்கு மேல் அவை நிலத்தில் இருந்தால் மட்டுமே அவற்றைப் பிடிக்காலம். (பில்லெட் v. வார்ட்) கால்நடைகளை உரிமையில்லாதார் சாலையில் ஓட்டிச் செல்லும்போது அவை அருகிலுள்ள நிலத்தில் நுழைந்தாலும் அவை பிடிக்கப் படலாம் கால்நடை உரிமையாளரே கால் நடையை ஓட்டிச் செல்ல வேண்டுமென்பதில்லை. அவை விளைவித்த சேதத்திற்கான ஈடு தரப்படும் வரை அவற்றை விடுதலை செய்ய நிலத்தையுடையவர் மறுக்கலாம்.

(2) பிடித்து வைக்கப்பட்ட பொருள் உண்மையில் சேதம் விளைவித்திருக்கவேண்டும். ஏனெனில், பிடித்து வைப்பதன் நோக்கம் அவற்றால் விளையும் இழப்புக்கு ஈடுகேட்பதாகையால் உண்மையில் இழப்பு எதுவும் ஏற்படாதபோது பிடித்துவைக்க முடியாது. ஊறு அல்லது இழப்பு நிலத்திற்கோ, பயிருக்கோ அல்லது நிலச்சொந்தக் காரருக்குக்கோ ஏற்பட்டிருக்க வேண்டும்.

(3) நிலத்தில் இருக்கும்போதே அது பிடித்து வைக்கப்பட்டிருக்கவேண்டும். அது தப்பிச் சென்ற பின்னர் அதைத் தொடர்ந்து துரத்திச் சென்று பிடிக்கக்கூடாது. ஆனால் சிறைப்படுத்திய பின்னர் தப்பிவிட்டால் துரத்திச் சென்று அதைப் பிடிக்கலாம். இன்று விளைத்த சேதத்திற்காக அதைப் பிடித்துவைத்துக் கொண்டு, அது நேற்று விளைவித்த சேதத்திற்கும் சேர்த்து இழப்பீடு கோர முடியாது. ஒருவருக்கே சொந்தமான பல விலங்குகள் சேதம் விளைவிக்கும்போது ஒவ்வொரு விலங்கும் அது விளைவித்த சேதத்திற்கு மட்டுந்தான் பொறுப்பாகும். எனவே, மற்ற விலங்குகள் விளைவித்த சேதத்திற்கும் சேர்த்து மொத்தமாக இழப்பீடு கோருவதற்காக ஒரு விலங்கை மட்டும் பிடித்துவைத்துக்

கொள்ளமுடியாது. ஒரு மனிதன் நேரடியாகத் தனது சொந்தக் கட்டுப்பாட்டில் வைத்துகொண்டுள்ள பொருளையோ அல்லது பயன்படுத்தும் பொருளையோ அவனுடமிருந்து அதைச் சிறைப்பிடிக்கும் நோக்கத்துடன் எடுத்துக் கொள்ள முடியாது. எடுத்துக்காட்டாக ஒருவனது நிலத்தில் அனுமதியின்றி குதிரையில் ஏறிச் செல்பவனைக் கட்டாயமாக இறக்கிவிட்டு, அக்குதிரையைச் சிறைப்பிடிக்க முடியாது (பீல்ட் v. ஆடம்ஸ். பொது அமைதியைக் கருதி இந்த விதிவிலக்கு ஏற்பட்டுள்ளது. ஆயினும் நிலச்சொந்தக்காரர் அத்து மீறி நுழைபவர் கொணரும் பொருளை நிலத்திலிருந்து வல்லந்தமாகத் துரத்தமுடியும்.

(4) இவ்வாறு ஒரு பொருளைச் சிறைப்பிடித்தவருக்கு அதை விற்கும் உரிமையில்லை. அப்பொருள் விளைவித்த சேதத்திற்குத் தகுந்த ஈடு தரப்படும்வரை அதைப் பிடித்துவைத்துக்கொள்ளும் உரிமை உண்டே தவிர, அதை விற்கும் உரிமையில்லை. இவ்வாறு பிடித்த பொருளை ஒருவர் தன்னுடைய கட்டிடத்திலோ அல்லது பொதுப் பட்டியிலோ வைத்திருக்கலாம். ஆயினும் பிடித்து வைக்கப்பட்டிருக்கும் விலங்கிற்கு நீரும், தீவனமும் ஒழுங்காகத் தரவேண்டும்.

(5) இவ்வாறு தனக்கேற்பட்ட சேதத்திற்கு ஈடுதரும்வரை அதைச் சிறைப்பிடித்து வைத்திருக்கும் உரிமையைக் கையாள்பவர் அதே சமயத்தில் அப்பொருள் அத்துமீறி நுழைந்ததற்காக இழப்பீடு கேட்டு வழக்குத் தொடரமுடியாது. இரண்டில் ஏதாவதொரு உரிமையை அவர் தேர்ந்தெடுத்துக் கொள்ளவேண்டும். ஆனால் அவ்வாறு சிறைப்பிடித்து வைப்பவருடைய தவறுகையின்றி அவை அழிந்தோ, அல்லது மடிந்தோ அல்லது தொலைந்தோ போனால் அவர் நீதிமன்றத்தில் தீங்கீடு கோரி வழக்கிடலாம். இதேபோல சிறைப்பிடித்த பொருளை அதன் உரிமையாளரிடம் திருப்பி தந்துவிட்டு, அவரிடம் தீங்கீடு கோரி நீதிமன்றத்தில் வழக்கிட எந்தத் தடையும் இல்லை.

26. தீங்கீடு பெறமுடியாத வழக்கினங்கள்
(Classes of cases where damages are irrecoverable)

எதிர்வாதி வேண்டுமென்றே, அல்லது கவனமின்றியோ ஒரு செயலைச் செய்ததன் விளைவாக வாதிக்கு ஊறு அல்லது இழப்பு ஏற்பட்டிருக்கலாம். ஆனால் வாதிக்கு இழப்பு ஏற்படும்போ தெல்லாம் அதற்குக் காரணமான எதிர்வாதிக்குப் பொறுப்பு ஏற்பட்டே தீரும் என்று சொல்ல முடியாது. பின்வரும் சூழ்நிலை களில் எதிர்வாதிக்குப் பொறுப்பேற்படுவதில்லை:-

(1) வாதிக்கு இழப்பு ஏற்பட்டிருந்தாலும் அதற்குக் காரண மான செயல் தீங்கானதாகச் சட்டத்தால் கருதப்படாமல் இருக் கலாம். இதைத் 'தீங்கில்லாச் சேதம்' என்று முன்பே கண்டோம். எதிர்வாதியின் வாணிபப் போட்டியால் வாதிக்கு இழப்பு ஏற்பட்டால், அதற்காக அவன் எதிர்வாதியின் மேல் வழக்கிட முடியாதென்று கண்டோம் (மொகல் வழக்கு). வீட்டு விலங்குகள் நெடுஞ்சாலைக்குத் தப்பியோடி சேதம் விளைவித்தாலும் (சியேர்ல் v. வால் டேங்க்), நிலத்துக்கடியில் சுரக்கும் நீரை இழுத்துக் கொள்ளுவதால் சேதம் ஏற்பட்டாலும் (மேயர் ஆஃப் பிராட் ஃபோர்ட் v. பிக்கில்ஸ்) தீங்காகக் கருதப்பட மாட்டா என்று முன்பே கண்டோம்.

(2) மற்றும் எதிர்வாதியின் செயலால் வாதிக்கு இழப்பு ஏற்பட்டிருந்தாலும், வாதியின்பால் எதிர்வாதிக்கு எந்தக் கடமை யும் இல்லாமலிருக்கலாம். எனவே எனக்கு ஒரு உரிமை இருந் தால் தான் அது பறிக்கப்பட்டதாக நான் புகார் செய்யமுடியும். எடுத்துக் காட்டாக, கேட்டில் v. ஸ்டாக்டன் வாட்டர் ஒர்க்ஸ்

கம்பெனி (Cattle v. Stockton Water Works Co) வழக்கில், வாதி மற்றொருவர் நிலத்தில் சுரங்கப் பாதை கட்டித் தர ஒப்பந்தம் செய்து கொண்டிருந்தார். அதை அடுத்திருந்த நீர் நிலைய உரிமையாளர் களாகிய எதிர்வாதிகளின் கவனமில்லாச் செயலால் அவர்கள் நிலத்திலிருந்து நீர் வெளியேறிச் சென்று வாதியின் நிலத்தில் புகுந்தது; இதன் விலைவாக வாதி தன் ஒப்பந்தத்தை நிறைவேற்று வதால் அதிகச் செலவும், சிரமமும் ஏற்பட்டது. இவ்வாறு நீர் புகுந்திராவிட்டால் வாதி தனது வேலையை எளிதாகச் செய்திருப் பார். எனவே தமக்கேற்பட்ட இழப்புக்கு ஈடுகேட்டு எதிர்வாதி யின்மேல் அவர் வழக்கிட்டார். இவ்வழக்கில் வாதி அடைந்த இழப்புக்கு வழக்கு மூலம் எதுவும் இல்லை. வாதிக்கு இழப்பு நேராமல் கவனத்தோடு இருக்க வேண்டிய கடமை எதிர்வாதிக் கில்லை. எதிர்வாதி யாருடைய உரிமைகளை மீறியிருக்கிறாரோ அவருக்கே பொறுப்பாளியாவார். அவரது செயலால் இறுதியாக நட்டம் அடைகிற அனைவருக்கும் அவர் இழப்பீடு தரவேண்டிய தில்லை.

(3) எதிர்வாதி வாதியிடம் கடமை கொண்டவராக இருந் தாலும், அவரது செயலால் வாதிக்கு இழப்பு ஏற்பட்டிருந்தாலும், சட்டப்படி அதற்கு நிவாரணமோ இழப்பீடோ இல்லையென்றால் எதிர்வாதி பொறுப்பாளியாக மாட்டார். இங்கிலாந்தின் இயற்றச் சட்டப்படி ஒரு மனிதனின் சாவுக்கு இழப்பீடு பெறமுடியாது. இந்நிலை மரணத்தையேற்படுத்தும் விபத்துகள் சட்டங்களால் (Fatal accidents acts 1846-1959) மாற்றப்பட்டது. உயிரைக் காக்கும் வேலை குற்றவியலில் சேர்ந்ததெனவே கருதப்பட்டது. தவிர, குறிப்பிட்ட சட்டமொன்றின்படி நிவாரணம் கேட்கும் வாதி தனக்கு இழப்பு ஏற்பட்டதென்று நிரூபிப்பதோடு, தனக்கேற்பட்ட இழப்பு அச்சட்டத்தின்படி ஈடுசெய்யப்பட வேண்டிய இழப்பு வகைகளில் ஒன்றாகும் என்றும் நிரூபிக்க வேண்டும்.

ஊறு அல்லது இழப்பின் சேய்மை (Remoteness of damage)

இதுவே தீங்கீடு பெறமுடியாத சூழ்நிலைகளில் நாம் இறுதி யாகக் காணப்போவது. வாதிக்கு ஏற்பட்ட இழப்பு எதிர்வாதியின் நடத்தையின் மிகச் சேய்மையான விளைவாக இருந்தால் வாதி அவனிடமிருந்து தீங்கீடு பெறமுடியாது. இது வாதிக்கேற்பட்ட குறிப்பிட்ட இழப்புகளுக்கு எதிர்வாதி பொறுப்பாளியாவானா என்று முடிவு செய்ய எதிர்வாதியின் தீங்கான செயலுக்கும் வாதிக்கு ஏற்பட்ட இழப்புக்கும் உள்ள காரண காரியத் தொடர்பைப் பற்றி நாம் தெரிந்து கொள்ள வேண்டும். வாதிக்கு உண்மையில் இழப்பு அல்லது ஊறு ஏற்பட்டிருந்தாலும், எதிர்

வாதியின் செயலால் அது ஏற்பட்டதென்று சொல்ல முடியாதபடி அமைந்திருந்தால் வாதி அவனிடமிருந்து நிவாரணம் பெற முடியாது; அப்போது, அவனது இழப்பு மிகவும் தொடர்பற்றது, சேய்மையானதென்று கூறுகின்றோம். எதிர்வாதியின் செயலும், அதனுடைய விளைவாகத் தோன்றும் இழப்புக்கும் போதுமான காரண காரியத் தொடர்பு இல்லையேல் வாதி அவனிடமிருந்து தீங்கீடு பெறமுடியாது. பார்னெட் v. செல்சீ ஹாஸ்பிடல் மேனேஜ்மெண்ட் கமிட்டி (Barnett v. Chelsee Hospital Management Committee) வழக்கில், மூன்று இரவு காவற்காரர்கள் ஒரு நாள் காலை எதிர்வாதியின் மருத்துவமனைக்குச் சென்று தேநீர் அருந்தியதாகவும், தங்களுக்கு வாந்தி வருகின்றதென்றும் கூறினர். அவர்கள் தங்களைச் சோதனை செய்யுமாறும் தகுந்த சிகிச்சை அளிக்குமாறும் வேண்டிக் கொண்டனர். அவர்களில் வாதியின் கணவரும் ஒருவர். அங்கு பணிபுரிந்த செவிலி மருத்துவரிடம் தொலைபேசியில் விவரம் கூறவும், மருத்துவர் அவர்களை வீட்டுக்குப்போய்ப் பின்னர் காலையில் அவர்களது மருத்துவர்களிடம் சென்று சிகிச்சை பெறுமாறும் பதில் கூறினர். இவ்வாறு அந்த மருத்துவர் நோயாளியைக் கவனிக்கத் தவறிவிட்டார். எனவே அவர் கவனமின்றியிருந்ததாகச் சொல்லப்பட்டது. கவனமின்மைத் தீங்கில் எதிர்வாதிக்குக் கடமையிருந்தது என்றும், அதில் தவறியதால் தான் வாதிக்கு இழப்பு ஏற்பட்டதென்றும் நிரூபிக்கவேண்டும். இவ்வழக்கில் நோயாளி ஆர்சனிக் நஞ்சினால் மாண்டார். ஆனால் அந்த நோயாளியின் சாவுக்குக் காரணம் ஆர்சனிக் நஞ்சானதால் அதைத் தக்க காலத்தில் கண்டுபிடித்து எப்படியும் மருத்துவர் அவரைக் குணப்படுத்தியிருக்கமுடியாது என்று நிரூபிக்கப் பட்டது. எனவே மருத்துவர் தமது கடமையிலிருந்து தவறியதால் நோயாளி மாண்டார் என்று கூறமுடியவில்லை. எனவே மருத்துவரின் கவனமின்மையே நோயாளியின் சாவுக்குக் காரணமாக இருந்தது என்று கூறமுன்னர் எதிர்வாதி தமது கடமையிலிருந்து தவறியதால்தான் அது ஏற்பட்டதென்று நிரூபிக்க வேண்டும். இதை நிரூபிக்கவேண்டிய பொறுப்பு வாதியையே சேரும். வாதிக்குப் பல காரணங்களால் இழப்பு ஏற்பட்டிருக்கலாம். எனவே எதிர்வாதியின் மேல் வழக்கிட்டு வெற்றிபெற எதிர்வாதியின் தீங்கான செயலே இழப்பினை ஏற்படுத்திய உண்மையான காரணம் என்று நிருக்கப்பட வேண்டும். எடுத்துக் காட்டாக, லாம்பெர்ட் v. ஈஸ்டர்ன் நேஷனல் ஆம்னி பஸ் கம்பெனி (Lampert v. Eastern National Omnibus Company) வழக்கில், எதிர்வாதிகளின் கவனமின்மையால் திருமணமான பெண்ணை வாதிக்குக் காயமேற்பட்டு கடுமையான உருக்குலைவு

ஏற்பட்டு அவள் அழகு கெட்டுவிட்டது. அவ்வாறு அவளுக்கு உருக்குலைவு ஏற்பட்டதால் அவளது கணவன் அவளை விட்டு நீங்கியதாக அவள் கூறி அதற்குத் தீங்கீடு கேட்டாள். இந்த விபத்து நேர்வதற்கு முன்னமே அவளுக்கும் அவள் கணவனுக்கும் பெருமளவுக்கு மனவேற்றுமை இருந்ததென்றும், அவள் கணவன் அவளை விட்டுச் சென்றதற்கு உண்மையான காரணம் அவளுக் கேற்பட்ட உருச்சிதைவல்ல என்றும், விபத்தேற்படுவதற்கு முன்பிருந்தே அவர்களுக்குள் மனக்கசப்பும் மனத்தாங்கலும் இருந்த தென்றும் இவ்வழக்கில் தெரியவந்தது. எனவே அவளால் தீங்கீடு பெறமுடியவில்லை.

எனவே, எதிர்வாதி தீங்கெனக் கருதத்தக்க செயலைச் செய்த பின் அவனுக்கேற்படும் பொறுப்பு தீர்மானிக்க வேண்டியுள்ளது. எடுத்துக்காட்டாக, ஒருவன் கவனமின்றிக் கண்மூடித்தனமாக காரை ஓட்டி மிதிவண்டியில் சென்றுகொண்டிருந்த ஒருவனை இடித்துத் தள்ளுகிறான். மிதிவண்டி கீழே சாய்ந்து எதிர்ப்புறம் நின்று கொண்டிருந்த ஒரு குழந்தைக்குக் காய மேற்படுத்துகிறது. மிதிவண்டியில் சென்று கொண்டிருந்தவன் கீழே விழுந்து உடலில் ஏற்பட்ட காயங்களினாலும், அதிர்ச்சியினாலும் இறக்கின்றான். அவனது மிதிவண்டியும் நசுங்கிப் போய்விடுகிறது. இறந்து கிடந்தவனைச் சுற்றிக் கூட்டம் கூடுகின்றது. அந்த வழியே சென்ற பெண் கூட்டத்தைக் கண்டதும் ஆவலோடு எட்டிப் பார்க்கிறாள். அங்கு வெள்ளமாக ஓடும் குருதியைக் கண்டதும் மன அதிர்ச்சி ஏற்பட்டு, அவளுக்குக் கருச்சிதைவு ஏற்படுகிறது. தவிர, அங்கு கூடி நிற்கும் மக்களின் கவனம் வேறு இடத்தில் இருப்பதைப் பயன்படுத்தி ஒரு கள்ளன் கூட்டத்திலிருந்த ஒருவரது சட்டைப் பையிலிருந்து பணத்தை எடுத்து விடுகிறான். எதிர் வாதியின் தீங்கான செயலைத் தொடர்ந்து இத்தனை விளைவுகள் ஏற்பட்டிருந்தாலும், எதிர்வாதி எல்லா விளைவுகளுக்கும் பொறுப் பாளியாவான் என்று சொல்ல முடியாது. இங்கு கூறப்பட்டுள்ள சில விளைவுகள் எதிர்வாதியின் நடத்தையைத் தொடர்ந்து ஏற்பட்டி ருந்தாலும் அவற்றில் சில விளைவுகளே அவன் நடத்தையின் விளைவாகத் தோன்றியவை. மற்ற விளைவுகள் தோன்ற அவன் நடத்தை வாய்ப்பளித்திருந்தாலும், அதன் காரணமாக அவை ஏற்பட்டவை என்று கூறமுடியாது. அவனது நடத்தையின் சேய்மையான (Remote) விளைவுகளுக்கு அவன் பொறுப்பாளியாக மாட்டான். ஒரு தீங்கான செயலைத் தொடர்ந்து ஏற்படுகின்ற அத்தனை விளைவுகளுக்கும் நிவாரணம் தேடமுடியாது. எதன் விளைவாக எது ஏற்பட்டதென்றும், எந்த விளைவின் விளைவாக, காரணத்தின் காரணமாக எது ஏற்பட்டதென்பதும் முடிவுகாண

முடியாத ஒன்றாகும். ஒரு செயலின் விளைவுகள் முடிவற்றுச் செல்லக்கூடும். ஆனால் எதிர்வாதியின் தீங்கான செயலால் ஏற்பட்ட விளைவு எவ்வளவு காலம் கழித்த பின்னர் ஏற்பட்டதாயினும், எவ்வித நேரடித் தொடர்பற்றதாயினும் அதற்கு எதிர்வாதி பொறுப்பாளியாவான் என்று கூறமுடியாது. எனவே, சில விளைவுகளை மட்டுமே எடுத்துக் கொண்டு அதற்கு எதிர்வாதியைப் பொறுப்பாளியாக்குகிறோம். சில விளைவுகள் அவனது நடத்தையோடு தொடர்பற்றவை என்று கூறித் தள்ளிவிடுகிறோம். இதற்கு சட்டத்தில் ஒரு நியதியோ, பொதுவான அளவுகோலோ இல்லை. சூழ்நிலையை ஒட்டி, பகுத்தறிவின் துணைகொண்டு இவற்றைத் தீர்மானிக்க வேண்டும்.

இந்தக் காரண காரியத் தொடர்பினை குறிப்பிட்ட வழக்கிலுள்ள சூழ்நிலைகளையும், வாதிக்கேற்பட்ட இழப்பு எதிர்வாதியின் செயலால் நிகழ்ந்தக்கவையா என்பதையும் கொண்டு நிலைநாட்ட வேண்டும். பொதுவான சட்டக்கொள்கையாக, எல்லா வழக்குகளுக்கும் பொருந்தக் கூடியதாக எதுவும் இல்லை; ஆயினும் பொதுவாகச் சொல்வதாயின், எதிர்வாதியின் செயலால் தனக்கேற்பட்ட இழப்பு நிகழக்கூடியது என்று வாதி நிலைநாட்ட வேண்டும். இந்தக் காரண காரியத் தொடர்பினைச் சாதாரண மனிதன் எவ்வாறு புரிந்து கொள்வானோ அப்படியே நாம் புரிந்து கொள்ள வேண்டும். எனவே பொது அறிவினையே அளவுகோலாகக் கொண்டு வாதிக்கு ஏற்பட்ட இழப்புக்கு உண்மையான காரணம் எதுவென்று அறிய வேண்டும். ஒரு நிகழ்ச்சிக்குப் பலகாரணங்கள் நிலைமைக்கேற்றவாறு கூறப்படலாம். எடுத்துக்காட்டாக, ஒரு மோட்டார்காரை அதன் ஓட்டுநர் விரைவாகக் கவனமின்றி ஓட்டி, திருப்பம் ஒன்றைக் கடக்கும்போது கார் கவிழ்ந்து விழுந்து விபத்து நேரலாம். இந்த விபத்திற்குக் காரணம் என்னவென்று ஓட்டுநரைக் கேட்டால், மிக வேகமாகத் திருப்பத்தைக் கடக்க முயற்சித்ததால் விபத்தேற்பட்டதென்றும், எனவே காரினைக் கவனமாக ஓட்ட வேண்டுமென்றும் கூறுவான். நில அளவையரைக் (Surveyor) கேட்டால், சாலையின் மேற்பரப்பில் குறையிருக்கிறதென்றும், அது வழுக்காத முறையில் அமைக்கப்படவேண்டுமென்றும் கூறுவார். காரினை உற்பத்தி செய்பவரைக் கேட்டாலோ, காரின் அமைப்பிலுள்ள குறைபாட்டால்தான் இந்த விபத்து ஏற்பட்டதென்றும், எனவே புவிஈர்ப்பின் மையம் இன்னும் தாழ்வாக இருக்கும்படி செய்ய வேண்டும் என்றும் கூறலாம். இங்கு ஏற்பட்ட விபத்து ஒன்றே; ஆனால் அதற்குக் கூறப்பட்ட காரணங்களோ பல. இவையனைத்துமே விபத்து ஏற்படுத்தக்கூடிய காரணங்கள்தான். இங்கு சாலையின் மேற்பரப்பு குறைபாடுடையதாக இருந்தாலும்,

மற்ற சூழ்நிலைகளாகிய நிபந்தனைகள் இன்றேல் விபத்தேற்பட்டிருக்காது. அந்தக் கார் குறிப்பிட்ட எடையுடையதாக இருக்க வேண்டும்; குறிப்பிட்ட முறையில் செய்யப்பட்டிருக்க வேண்டும். தவிர, குறிப்பிட்ட குறைந்த அளவு வேகத்தில் அது ஓடிக் கொண்டிருக்க வேண்டும். அப்போதுதான் அந்த விபத்தேற்பட வாய்ப்புண்டு. இவற்றிலிருந்து விபத்தேற்படுத்திய காரணத்தைக் கண்டு பிடிக்க நாம் பொது அறிவைப் பயன்படுத்துகிறோம். இந்த நிலைமைகள் அனைத்தும் சேர்ந்தே விபத்தினை ஏற்படுத்தப் போதுமானவை. இவற்றிலுள்ள வெறும் நிலைமைகளிலிருந்து காரணம் வேறுபட்டது. தன்னிச்சையாக, யார் தூண்டுதலுமில்லாமல் நிகழும் மனிதச் செயல்களுக்கும் மற்ற நிலைமைகளுக்கும் வேறுபாடு உண்டு. இதைப்போலவே தெய்வச்செயல் அல்லது தற்செயலாக இணைகின்ற நிகழ்ச்சிகளுக்கும், மற்ற நிலைமைகளுக்கும் வேறுபாடு உண்டு. இந்த வேறுபாடுகள் மூலமே காரணத்திற்கும், வெறும் நிலைமைகளுக்கும் உள்ள வேறுபாட்டை விளக்க முடியும். இதன் அடிப்படையிலேயே இடையில் நிகழும் புதுச் செயல்கள் நெருங்கிய காரணம் போன்ற வற்றிற்கிடையே வேறுபாட்டை அறிகிறோம். தன்னிச்சையான மனிதச் செயலினாலோ, அல்லது நெறி பிறழ்ந்த தற்செயல் நிகழ்வினாலோ காரணத் தொடர்பு அறுபட்டுப் போனாலும், இவற்றிற்கிடையே வேறுபாடு உண்டு. நெறிபிறழ்ந்த தற்செயல் நிகழ்வு தீங்கான செயலின் விளைவு ஏற்படும் முன்பாக ஏற்பட்டிருந்தால்தான் காரணத் தொடர்பு இல்லாமற் போகும். ஆனால் தன்னிச்சையான செயலாயின், அது தீங்கான செயலுக்கும், அதனால் ஏற்படும் ஊறுக்கும் முன்னரே நிகழ்ந்திருந்தாலும் காரணத் தொடர்பு இல்லாமற் செய்யக்கூடும்.

ஒரு நிகழ்ச்சி எவ்வாறு ஏற்பட்டது, எதனால் ஏற்பட்டது என்று நாம் அறிய முற்படும்போதுதான், அந்த நிகழ்ச்சி நிகழக் காரணம் என்ன என்ற கேள்வி தேவைப்படுகிறது. நமது வேலை ஒரு நிகழ்ச்சி எவ்வாறு நிகழ்ந்தது என்பதை அறிந்து கொள்வதல்ல; அதற்கான பொறுப்பாளி யார் என்றறிவதுதான் எனவே நமக்கு நிகழ்ச்சிக்கான விளக்கம் பெறுவதைவிட, அதற்கான பொறுப்பாளியைக் கண்டுபிடிப்பதே இன்றியமையாதது. எனவே குறிப்பிட்ட தீங்கான செயலும், ஏற்பட்டுள்ள இழப்பு அல்லது ஊறையும் பார்க்கும்போது, அந்த இழப்பு அல்லது ஊறு அந்த தீங்கான செயலின் விளைவாகத் தோன்றியதாகுமா என்ற கேள்வியையே நாம் கேட்க வேண்டிய நிலையில் உள்ளோம். இவ்வாறு கேள்வியை நாம் தேர்ந்தெடுத்தால்தான் இடையில் நிகழும்

புதுச்செயல்களால் விளைவில் ஏற்படும் மாற்றங்களுக்குப் பொறுப்பு உண்டா இல்லையா என்பதையறிய முடியும்.

இனி அளவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள சில முடிவுகளை முதற்கண் காண்போம். முதலாவதாக, ஒரு நிகழ்ச்சி பல காரணங்களின் விளைவாக ஏற்பட்டதாக இருக்கலாம், சட்டத்திருத்த (தற்கவனமின்மை) சட்டம் 1945-க்கு (Law Reform (Contributory Negligence) Act, 1945) முன்பாக இங்கிலாந்தில் ஒரு தனிநிகழ்ச்சிக்கு வலிய காரணம் Effective Cause ஒன்றுக்கு மேல் இருக்க முடியாதெனக் கருதப்பட்டது. இது பிழையான கருத்தாகும். இரண்டாவதாக, இழப்பின் சேய்மை எனும் தத்துவம் கவனமின்மையாகிய தீங்குகளுக்கு மட்டுமல்லாமல், மற்ற தீங்குகளுக்கும் பொருந்தும், அவை எதிர்வாதியால் வேண்டுமென்றே இழைக்கப்பட்டிருக்கலாம்; அல்லது அவன் கவனமின்றிச் செய்த செயலால் தீங்கினைத் தோற்றுவித்திருக்கலாம்; அல்லது அவனுக்குக் கடும்பொறுப்பு உள்ள தீங்காக அவன் செயல் அமைந்திருக்கலாம். அவன் செயல் எத்தன்மையதாயினும் இத்தத்துவம் பொருந்தும். ஆயினும் அவன் கருதியே தீங்கு புரிந்தானேயானால் அந்த தீங்கான செயலினைத் தொடர்ந்து உண்மையில் எத்தனை விளைவுகள் ஏற்பட்டாலும் அவன் பொறுப்பாளியாவான் என்று சொல்லமுடியாது. அவனது பொறுப்புக்கும் ஒரு எல்லையுண்டு மூன்றாவதாக, தீங்கிழைக்கும் எதிர்வாதி ஒரு குறிப்பிட்ட விளைவு ஏற்பட வேண்டுமென்று கருதியே ஒரு செயலைச் செய்திருந்தால், அதனால் ஏற்படும் விளைவுகள் அவனது செயலோடு தொடர்பற்றவை அல்லது சேய்மையானவை ஆகமாட்டா. தவிர, எதிர்வாதி முறையின்றி ஒரு சொத்தைத் தன்னுடைய உடைமையாக தன் வசமாக்கிக் கொண்டிருந்தால் அச்சொத்தினைப் பத்திரமாக வைத்திருக்க வேண்டியது அவனது பொறுப்பாகும். எனவே சேய்மையான விளைவாக அச்சொத்திற்கு அழிவோ, சேதமோ ஏற்பட்டிருந்தாலும் அவன் பொறுப்பாளியாவான். அச்சொத்து அவனது பொறுப்பாகிவிடுவதால் அவன் அதன் உரிமையாளருக்கு அதைத் திருப்பித் தரவோ, அல்லது அதற்குரிய விலையைத் தரவோ வேண்டும். தவிர, தீங்கான செயலினை எதிர்வாதி புரிந்திருந்தால் தான் அவனுக்குப் பொறுப்புண்டா இல்லையா என்ற கேள்வியே எழும். ஆயினும், காரிய காரணத் தொடர்பு இல்லாமலேயே பொறுப்பு ஏற்படலாம். எடுத்துக்காட்டாக, பணித்தலைவர் எந்தத் தீங்கும் செய்திராவிட்டாலும், பணியாளன் தனக்குரிய பணியைப் புரியும்போது இழைத்த தீங்கிற்கும் அவர் பொறுப்பேற்கவேண்டும்.

காரண—காரியத் தொடர்பு உள்ளதா என்றறியப் பல சோதனைகள் கூறப்பட்டுள்ளன. இவற்றில் சிலவற்றை இங்குக் காண்போம்.

பல்வகைக் காரணங்கள்

எதிர்வாதியின் செயல் உண்மையான காரணமாக (Real Cause) இருந்தால்தான் அவனுக்குத் தீங்குக்கான பொறுப்பு ஏற்படும் என்று சிலர் கூறுகின்றனர். ஆனால் ஒரு காரணம் உண்மையான காரணமில்லையென்றால் அது காரணமேயல்ல. வேறுசிலர் எதிர்வாதியின் செயல் ஆற்றல் வாய்ந்த அல்லது பயனுறுதியுடைய காரணமாக (Effective Cause) இல்லாவிட்டால், அதனால் ஏற்படும் இழப்பு சேய்மையானதெனக் கூறுகின்றனர். இன்னும் சிலர் வலிய திறமுள்ள காரணம் (Efficient Cause), முதன்மையான அல்லது மேம்பட்ட காரணம் (Dominent Cause) இன்னும் சிலர் உடனடிக் காரணத்துக்கும் (Causa Causans), தவிர்க்க முடியாத காரணத்துக்கும் (Causa eine qua non) ஆகியவற்றிற்கு இடையே வேறுபாடு காட்டுகின்றனர். இன்னும் சிலர் அடுத்துள்ள காரணம் (Immediate Gause) என்றும் சொல்கின்றனர். இத் தொடர்கள் அனைத்தும் உண்மையான வேறுபாட்டைப் புலப்படுத்தவில்லை. தவிர இவற்றைப் புரிந்துகொள்வதும் எளிதல்ல. தவிர, ஒரே சொற்றொடரை சில வழக்குகளில் ஒரே பொருளில் நீதிபதிகள் பயன்படுத்தியுள்ளதாலேயே, அச்சொற்றொடருக்கு வேறு பொருள் எதுவும் இல்லையென்றும் கூறிவிட முடியாது. எல்லாக் காரணங்களும் ஆற்றல் வாய்ந்த, பயனுறுதியுள்ள காரணங்களே. இல்லையேல் அவை குறிப்பிட்ட விளைவை உண்டாக்கியிருக்கமுடியாது. வேறு சிலர்.-முதலில் யார் தீங்கான செயலைச் செய்கிறாரோ, அவர்களே அதன் விளைவாக ஏற்படும் இழப்புக்கும் பொறுப்பாளியாவார் என்று கூறுகிறார்கள். இன்னும் சிலர் தீங்கினால் ஏற்படும் இழப்பு சட்டபூர்வமானதும், இயல்பானதும் ஆகிய (Legal and Natural) விளைவாக அமைந்திருக்க வேண்டும் என்று குறிப்பிட்டு உள்ளனர்.

காரண-காரியத் தொடர்பினை ஏற்படுத்தும் சங்கிலி (Chain of Causation)

வேறுசிலர், காரண—காரிய சங்கிலித்தொடர் தனிப்பட்ட காரணம் ஒன்று குறுக்கிட்டதால் தடைப்பட்டோ அறுபட்டோ போனதா என்பதே இழப்பு சேய்மையானதா என்றறியும் சோதனையாகும் என்கின்றனர். எனவே புதிய நிகழ்ச்சி ஒன்று இடையிலே குறுக்கிடும்வரை எதிர்வாதி அவனது செயலுக்கு

பொறுப்பாளியாகத் தொடர்ந்து இருப்பான். அவ்வாறு புதுச் செயல் ஒன்று குறுக்கிட்டுவிட்டால். அவனது பொறுப்பு நீங்கி விடும். ஆயினும் இது வெறும் உவமை மொழி. ஏனெனில் இடையில் புகுந்து ஒரு செயல் குறுக்கிடுகிறதென்ருல் வாதிக்கு ஏற்பட்ட இழப்பு எதிர்வாதியின் செயலின் விளைவாக ஏற்பட்ட தென்றே சொல்லமுடியாது. எனவே காரண-காரியத் தொடர் சங்கிலி உண்மையில் தடைப்பட்டிராவிட்டாலும், சட்டப்படி அது தடைப்பட்டதாகவே ஊகிக்கப்பட்டு, எதிர்வாதிக்குப் பொறுப்பு ஏற்படாது என்ற பொருளிலேயே இது பயன்படுத்தப்படுகிறது.

நெருங்கிய காரணம் (Proximate Cause)

வேறு சிலர் எதிர்வாதியின் செயல் இழப்பு ஏற்பட நெருங்கிய காரணமாக இருந்ததா என்ற கேள்வியைக் கேட்கின்றனர். வாதிக்கு இழப்பு ஏற்படுவதற்கு முன்பாக அடுத்து ஏற்படும் செயலையே அந்த ஊறினைத் தீர்மானமாக ஏற்படுத்திய காரண மாகக் கருதுகின்றனர். அதாவது காலத்தால் கடைசியாக நிகழும் காரணச் செயலையே அவர்கள் ஏற்கின்றனர். ஆயினும் கடைசி யாக ஏற்படும் காரணமே தீங்கான விளைவுகளை ஏற்படுத்தும் நெருங்கிய காரணமாக (Proximate Cause) இருக்கத் தேவை யில்லை. எடுத்துக்காட்டாக 'அ' என்பவர் ஒரு கூட்டத்தில் சிறிய வெடியொன்றைக் கொளுத்தி எறிந்தார். அது 'ஆ' என்பவர்மேல் விழ, பயந்து அதைத் தூர எறிய, அது. 'இ' என்பவர் அருகில் விழ, அவர் அதை எடுத்தெறிய, அது 'ஈ'என்பவர்மேல் விழுந்து அவரது கண்களை அவித்து விடுகிறது. இங்கு 'ஈ' என்பவருக்கு ஏற்பட்ட விளைவுக்கு நெருங்கிய காரணமாக (Proximate Cause) இருந்தது 'அ' என்பவர் செயலே. ஆனல் அது 'ஈ'க்கு ஏற்பட்ட இழப்புக்கு மிகவும் அண்மையானதாக இல்லாமல் விலகியிருக் கிறது (ஸ்காட் v. ஷெப்பர்ட் வழக்கு).

இயல்பானதும், நிகழக்கூடியதுமான விளைவுகள் அல்லது முன்னறியத் தக்க விளைவுகள் சோதனை (The Test of Natural and Proboble Consequence of Reasonable Foreseaebility)

1850ஆம் ஆண்டுக்குப்பின் இழப்பின் சேய்மையைக் கண்டுபிடிக்க இரு மாறுபட்ட முறைகள் கூறப்பட்டுள்ளன. இவற்றுள் முதலாவது கருத்தின்படி, நல்லறிவு அல்லது சமநிலை யறிவுள்ள மனிதனல் முன்னறிய முடியாத விளைவுகளாயின், அவை மிகச் சேய்மையான விளைவுகளாகவே கருதப்பட வேண்டும் என்று கூறப்படுகிறது. இரண்டாவது கருத்தின்படி ஒரு சமநிலை யறிவுள்ள மனிதன் தனது செயலால் வாதிக்கு ஏதாவது இழப்பு

ஏற்படக் கூடும் என்று முன்னறிய முடியுமாயின் வாதிக்கு அதனால் ஏற்படும் நேரடியான விளைவுகள் அனைத்துக்கும் பொறுப்பாளி யாவான் ; அவற்றை சமநிலையறிவுள்ள மனிதன் முன்னறிய முடிந் தாலும், முடியாவிட்டாலும் அதன் நேரடி விளைவுகள் அனைத்துக்கும் எதிர்வாதி பொறுப்பாளி யாவான். எனவே, இரண்டாவது கருத் தின்படி ஒன்று முன்னறியத்தக்கதா இல்லையா என்னும் கேள்வி வாதியின்பால் கவனம் காட்டவேண்டிய கடமை எதிர்வாதிக்குச் சட்டப்படி இருந்தா என்பதையறியவே தேவைப்படுகிறது. வாதியின் பால் எதிர்வாதி சட்டப்படி காட்டவேண்டிய கடமையை மீறியிருந்தால், அவ்வாறு மீறியதால் ஏற்படும் விளைவுகள் சேய்மை யானவையா என்றறிய இக்கேள்வி தேவைப்படாது. எனவே ஒருவன் தீங்கான செயலைப் புரிந்தவனு இல்லையா என்பதைத் தீர்மானிக்கவே அதன் விளைவுகள் அவன் கருதிப் பார்க்கத் தக்கவையாஎன்ற கேள்வியைக் கேட்கின்றோமேயல்லாது, அவன் தர வேண்டிய தீங்கீட்டுத் தொகை எவ்வளவு என்பதை அறிவ தற்கல்ல,

இனி முதற்சோதனையாகிய இயல்பானதும், நிகழத்தக்கதுமான விளைவுகள் (Natural and probable Consequences) அல்லது முன்னறியத் தகுந்த விளைவுகள் (Reasonable forseeability) என்பதன் இயல்பைப்பற்றிச் சுருக்கமாக இங்குக் காண்போம். இந்தச் சோதனையின்படி, தீங்கு புரிந்தவன் வேண்டுமென்றே அல்லது கருதியோ ஏற்படுத்திய இழப்பு அல்லது ஊறுக்கு மட்டுமே பொறுப்பாளியாவான். மற்றும். அவ்வாறு அவன் கருதாதபோதும் அவனுடைய தீங்கான செயலின் இயல்பானதும் நிகழத்தக்கது மான விளைவுக்கும் பொறுப்பாளியாவான் : இவையல்லாத வேறு விளைவுகளுக்கு அவன் பொறுப்பாளியல்ல ; இக்கொள்கையின்படி ஒருவன் கருதியிரா விளைவுகளுக்கும், அவன் செயலால் நிகழத் தக்கதல்லாத விளைவுகளுக்கும் பொறுப்பாளியாக மாட்டான். அவனது இடத்தில் ஒரு சமநிலையறிவுள்ள மனிதன் இருந்தால் அச்செயலால் அவ்விளைவுகள் ஏற்படக்கூடும் என்று முன் னுணர்ந்து அவற்றைத் தவிர்த்திருக்க முடியுமானால், அவ் விளைவினை இயல்பானதும், நிகழக்கூடியதுமான விளைவு என்று சொல்கிறோம். இங்கு எதிர்வாதியின் சூழ்நிலையில் ஒரு சமநிலை யறிவுள்ள மனிதன் எதிர்வாதி அறிந்தவற்றை அறிந்தும், அறியக் கூடிய வழிகளை அறிந்துள்ள சூழ்நிலையிலும் செயல்படுவானையின் எவ்வாறு நடந்து கொள்கிறான் என்று பார்க்கிறோம்.

1921 ஆம் ஆண்டு ரி பாலமிஸ் (Re polemis) என்று கூறப் படும் வழக்கில் நீதிமன்றம் மேற்கூறிய விதியைப் புறக்கணித்து

இரண்டாவதாகச் சொன்ன விதியைச் சட்டமாக ஏற்றுக் கொண்டது. ஆயினும் 1961ஆம் ஆண்டில் நியூசௌத் வேல்ஸிலிருந்து அப்பீல் செய்யப்பட்ட வேகன் மவுண்ட் (The Wagon Mound) எனும் வழக்கில், பிரிவிக்கவுன்சிலின் நீதிக்குழு ரிபாலமிஸ் தவறான தீர்ப்பெனக் கூறி, முதலில் சொன்ன விதியின் அடிப்படையில் தீர்ப்பு வழங்கியது. வேகன் மவுண்ட் தீர்ப்பை இங்கிலாந்தின் நீதிமன்றங்கள் பின்பற்றியே ஆகவேண்டிய நிலையில்லையெனினும், அதுவே சட்டமாகுமெனப் பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்டது. இருப்பினும் நாம் ரிபாலமிஸ் வழக்கிலிருந்து துவங்குவோம்.

ரி பாலமிஸ் (Re Polemis)

இவ்வழக்கில் சொல்லப்பட்ட தீர்ப்பின்படி, ஒருவன் தன் தீங்கான செயலின் விளைவுகளை முன்னறிய முடிந்தாலும், முடியாவிட்டாலும், அதனால் நேரடியாக ஏற்படக்கூடிய விளைவுகள் அனைத்துக்கும் பொறுப்பாளியாவான். ரி பாலமிஸ் வழக்கில் பாலமிஸ் போயாசிடஸ் & கம்பெனியார் (Polemis, Boyazides & Co) தங்களுடைய திரேசி வோலூஸ் எனும் கிரேக்க நீராவிக் கப்பலை பர்னஸ், வித்தி & கம்பெனியாருக்கு (Furness, Withy & Co) வாடகைக்கு விட்டிருந்தனர். அவர்களிடையே ஏற்பட்ட வாடகை ஒப்பந்தப்படி (Charter Party) தீயினால் கப்பலுக்குச் சேதம் ஏற்பட்டால் கப்பல் உரிமையாளரும், அதை வாடகைக்கு எடுத்துக் கொண்டவரும் (Charterers) பொறுப்பாளியாக மாட்டார்கள். அக்கப்பலில் பல்வேறு சரக்குகள் ஏற்றப்பட்டன. அவற்றுள் தகரப் பீப்பாய்களில் நிரப்பப்பட்ட பெட்ரோலும் இருந்தது. இந்த டின்கள் கப்பலில் உள்ள சரக்கறையில் வைக்கப்பட்டிருந்தன. பயணத்தின்போது பெட்ரோல் ஒழுகி ஆவியாகி சரக்கறை முழுவதும் நிறைந்திருந்தது. வழியில் ஒரு துறைமுகமான கசாபிளான்காவில் கப்பலிலிருந்து சில பெட்டிகளை இடம் மாற்ற வேண்டிய தேவை ஏற்பட்டது. அவ்வேலையைச் செய்ய கப்பலை வாடகைக்கு எடுத்திருந்த கம்பெனியார் அராபிய பணியாட்களை நியமித்தனர். அவர்கள் அப்பெட்டிகளைத் தூக்கும் போது, கவனமின்றி தம் பணியைச் செய்ததால் பலகையொன்று சரக்கறையில் விழுந்தது. உடனே பெட்ரோல் ஆவி தீப்பிடித்து, கப்பல் முழுவதும் எரிந்து போயிற்று. கப்பலை வாடகைக்கு எடுத்தவர் இந்த நட்டம் முழுவதுக்கும் பொறுப்பாளியாவார் என்று தீர்ப்பளிக்கப்பட்டது. தீயினால் ஏற்படும் சேதத்திற்கு விதிவிலக்கு உண்டென ஒப்பந்தத்தில் சொல்லப்பட்டிருந்தாலும், பணியாட்களின் கவனமின்மையால் ஏற்படும் சேதத்திற்கு அதில் விதி

விலக்கு உண்டெனச் சொல்லப்படவில்லை. பலகை சரக்கறையில் விழ நேர்ந்ததற்குப் பணியாட்களின் கவனமின்மையே காரணம். அப்பணியாட்களின் கவனமின்மைக்கு அவர்களின் பணித்தலைவர் என்ற முறையில் கப்பலை வாடகைக்கு எடுத்திருந்தவர் பொறுப்பாவார். அவர்களது கவனமின்மையால் ஏற்படக்கூடிய விளைவுகள் நியாயமாக எதிர்பார்க்கக் கூடியதாக இருந்தாலும், இருக்காவிட்டாலும் அவர்களின் கவனமில்லாச் செயலின் நேரடி விளைவுகளுக்கெல்லாம் பணித்தலைவர் என்ற முறையில் கப்பலை வாடகைக்கு எடுத்தவர் பொறுப்பாளியாவார் என்று அப்பீல் நீதி மன்றம் தீர்ப்பளித்தது. சரக்கறையில் ஒரு பலகை விழுவதால் கப்பலுக்கு ஏதாவது ஒரு நட்டம் ஏற்படக்கூடும் என்று எதிர் பார்க்கமுடிந்தாலும், கப்பல் முழுவதும் எரிந்துபோகும் என்று எதிர்பார்க்க முடியாது. சரக்கறையில் பலகை விழுமாறு செய்ததே கவனமில்லாச் செயல். ஏன்னெனில் இதன் விளைவாக கப்பலுக்கோ சரக்குகளுக்கோ சேதம் விளையலாம். எனவே கப்பலை வாடகைக்கு எடுத்திருந்த கம்பெனியார் கவனமின்றியிருந்ததால் அதன் நேரடி விளைவுகள் அனைத்துக்கும் (அவற்றின் இயல்பையும், அளவையும் சமநிலையறிவுள்ள மனிதனால் எதிர்பார்க்க முடியாவிட்டாலும்) பொறுப்பாளியாவார் என்று சொல்லப்பட்டது. எனவே இதைப் போன்ற வழக்குகளில் நாம் கேட்கவேண்டிய ஒரே கேள்வி எதிர்வாதியின் செயல் தீங்கானதா இல்லையா அதாவது அச்செயலால் ஏதாவது ஒரு இழப்பு ஏற்படுமென்று அவன் முன்னறிய முடியுமா என்பதேயாகும். இவ்வாறு அவனால் முன்னறிய முடியுமானால் அவனால் முன்னறிவக்கூடிய விளைவுகளுக்குமட்டுமல்லாமல், அவனது தீங்கான செயலின் நேரடியான விளைவுகள் அனைத்துக்கும் அவன் பொறுப்பாளியாவான். இவ்வழக்கிற்கு முன்னோடியாக விளங்கிய ஸ்மித் v. லண்டன் & சவுத் வெஸ்டர்ன் ரெயில்வே கம்பெனி (Smith v London & South Western Railway Co.) வழக்கிலும் எதிர்வாதியின் கவனமின்மையால் யாராவது ஒருவருக்கு இழப்பு அல்லது ஊறு ஏற்படக்கூடும் என முன்னறிய முடியுமானால், குறிப்பிட்ட முறையில் ஒருவருக்கு இழப்பு அல்லது ஊறு ஏற்படுமென முன்னறியப்படத் தேவையில்லை எனக் கருதப்பட்டது. இவ்வழக்கில் எதிர்வாதிகளாகிய ரெயில்வே கம்பெனி வெட்டிய புதர்களை ரெயில்வே தண்டவாளத்தின் அருகில் கொட்டிக் குவித்து வைத்திருந்தனர். புகை வண்டி ஒன்றிலிருந்து வந்த தீப்பொறி பட்டு இவை தீப்பற்றிக் காற்றினால் தீ பரவி வாதியின் குடிசை எரிந்தது. குடிசைக்கு இவ்வாறு சேதம் ஏற்படக் கூடுமென எதிர்வாதிகள் முன்னறிய

முடிந்திராவிட்டாலும், அவர்கள் பொறுப்பாளிகளெனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

லீஸ் பாஷ் (The Lies Bosch)

இவ்வழக்கில், 'நேரடி விளைவுகள்' என்ற தொடருக்குப் புதிய விளக்கமும் வரையறையும் கொடுக்கப்பட்டது. லீஸ் பாஷ் டிரெட்ஜர் v. எடிசன் S. S. (Lies Bosch Dredger v. Edison S. S.) எனும் இவ்வழக்கில், எடிசன் எனும் கப்பல் கவனமின்றிச் செலுத்தப் பட்டதால், கடலில் தூர் எடுக்கும் கப்பலான லீஸ் பாஷ் முழுகியது. லீஸ்பாஷ் உரிமையாளர் குறிப்பிட்ட பணியொன்றைக் குறிப்பிட்ட காலத்தில் செப்து முடித்துத் தருவதாக மூன்றாவது நபர்ஒருவரிடம் ஒப்பந்தம் செய்து கொண்டிருந்தார். அந்த ஒப்பந்தத்தை நிறை வேற்ற அவர்களுக்கு லீஸ் பாஷ் தேவைப்பட்டது. ஆனால் லீஸ் பாஷ் முழுகி விட்டதால், தங்கள் ஒப்பந்தத்தை நிறைவேற்றப் புதிய கப்பல் ஒன்றை விலைக்கு வாங்க அவர்களுக்குப் பணவசதி யில்லை. எனவே அதிகத்தொகை கொடுத்து அவர்கள் வேறு கப்பல் ஒன்றை வாடகைக்கு எடுக்க வேண்டியதாயிற்று. எனவே அவர்கள் எடிசன் கப்பல் சொந்தக்காரர்கள்மேல் சுவனமின்மைக் காக வழக்கிட்டதில், (1) லீஸ் பாஷ் கப்பலையொத்த கப்பல் ஒன்றின் சந்தை விலையையும், 2) லீஸ் பாஷ் மூழ்கிய நாள்முதல் அதற்கு மாற்றாக வேறு ஒரு கப்பல் ஒப்பந்தப்படியான வேலைக்குப் பயன்படுத்தத்தக்க முறையில் வந்து சேரும்நாள்வரை ஏற்படும் இழப்பீட்டையும், நட்ட ஈடாகத் தரப்படவேண்டுமென நீதிமன்றம் தீர்ப்பளித்தது. எனவே லீஸ் பாஷ்க்குப் பதிலாக வேறு ஒரு புதிய தூர்வாரிக் கப்பல் வாங்கப்பட்டு, அதைப் பயன்படுத்த முடியக் கூடிய நாளுக்குப் பின்னர் எந்த இழப்பீடும் கேட்கமுடியாது. வாதிகள் ஏழ்மையினால் புதிய தூர்வாரிக் கப்பல் வாங்கமுடியாமல் போனதால் அவர்களுக்கு ஏற்பட்ட அதிகப்படியான இழப்பு எதிர் வாதியின் செயலோடு தொடர்புடையதல்ல; அது சேய்மையான தெனக் கருதப்பட்டது.

தரோகுட் வழக்கு (Thurogood v. Van Den Berges and Jurgen Ltd.)

ரி பாலமிஸில் சொல்லப்பட்ட விதியை அப்பீல் நீதிமன்றம் தரோகுட் v. வான் டென் பெர்க்ஸ் & ஜர்கன்ஸ் லிமிடெட் வழக்கில் ஒருமுகமாக ஏற்றுக் கொண்டது. இவ்வழக்கில் எதிர்வாதிகளின் பணியாளாகிய வாதி ஒரு மின்விசிறியைப் பழுது பார்ப்பதற்காகச் சோதனையிடும்போது, காயமுற்றான். அவ்விசிறியின் எஞ்ஜின் ஓடும்போது உராய்தலைத் தாங்கும் உறுப்பு சூடாகிறதா என்றறியச் சோதனையிட அது வழக்கமாக வைக்கப்படும் இடத்திலிருந்து

அகற்றப்பட்டுத் தரையில் வைக்கப்பட்டது. வாதி விசிறிக்கருகே குனியும்போது, எவ்வாறோ அவரது கைவிரல்கள் சுழலும் மின் விசிறித்தட்டுகளில் சிக்கி, அவரது விரல்களில் சிலவற்றில் காய மேற்பட்டது. இதன் அடிப்படையில், தொழிற்சாலைகள் சட்டத்தை மீறியதாகவும், இயற்றுச் சட்டத்தின்படி எழும் கடமைகளை மீறியதாகவும் தமது பணித்தலைவர்மீது வாதி வழக் கிட்டார். அப்பீல் நீதிமன்றம் அப்பீலை ஏற்றுத் தீர்ப்பளித்தது. இவ்வழக்கை விசாரித்த நீதிபதி மின்விசிறியைத் தரையில் வைத்த எதிர்வாதி-பணித்தலைவர் பயிற்சி பெற்ற நிபுணராக வாதி தமது கையை விசிறியினுள் விடுவாரா என்று முன்னறிந்திருக்க முடியாது என்பதால் அவர் பொறுப்பாளியாகமாட்டார் என்று குறிப்பிட்டி ருந்தார். ஆயினும் மின்விசிறியைத் தரையில் வைத்தது கவன மின்றிய செயலென அவர் ஏற்றுக் கொண்டார். எடுத்துக் காட்டாக, யாராவது மின்விசிறியின் அருகே குனிந்தால், அவர் அணிந்திருக்கும் கழுத்துக்குட்டை சுழலும் தட்டுகளில் சிக்கி இழுக்கப்பட்டு அதனால் விபத்தேற்படும் வாய்ப்புண்டு என்று அவர் கூறினார். ஆனால் இங்கு ஏற்பட்ட காயமோ அவ்வாறு ஒருவர் குனிந்ததால் ஏற்பட்டதல்ல என்று கூறி வாதிக்கு ஏற்பட்ட காயத்தை எதிர்வாதி முன்னறிந்திருக்க வேண்டுமென்று கூறமுடி யாது என்று கூறியிருந்தார். இக்கூற்றின் அடிப்படையிலேயே விசாரணை நீதிபதியின் கருத்து மறுக்கப்பட்டு, எதிர்வாதி பொறுப் பாளியென அப்பீல் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. எதிர்வாதியின் செயலால் ஏதாவது ஒருவகையில் காயம் ஏற்படக்கூடும் என்று முன்னறிய முடிந்தால் போதும்; இதைக் கொண்டே அவரது செயல் கவனமில்லாச் செயல் என்று கூறிவிடலாம். வாதிக்கு உண்மையில் ஏற்பட்ட காயத்தை முன்னறியத் தேவையில்லை. அக்காயம் இயல்பிலும், அளவிலும், எதிர்பார்க்க முடியாததாக இருந்தாலும், எதிர்வாதி பொறுப்பாளியே என்று தீர்மானிக்கப் பட்டது.

கிபாலமிஸ் விதிக்கு ஆதரவும், எதிர்ப்பும் தொடர்ந்து இருந்து வந்திருக்கிறது. தரோகுட் வழக்குக்குப் பின்னும் இது பின் பற்றப்பட்டுள்ளது. எனினும் 1960 ஆம் ஆண்டு இப்பிரச்சனை பிரிவி கவுன்சிலின் நீதிக்குழுமுன் நியூ சௌத் வேல்ஸிலிருந்து வந்த அப்பீலாகிய வேகன் மவுண்ட் வழக்கில் மீண்டும் எழுந்தது.

வேகன் மவுண்ட்: முன்னறியத்தக்க விளைவு

இவ்வழக்கில் அப்பீல்தாரர்களான ஓவர்சீஸ் டேங்க் ஷிப் லிமிடெட் எனும் (Over Seas Tank Ship Ltd) கம்பெனியால் எரி எண்ணெயைப் பயன்படுத்தி ஓட்டப்படும் வேகன் மவுண்ட் எனும்

கப்பலை வாடகைக்கு எடுத்திருந்தனர். அவர்கள் சிட்னி துறை முகத்தில் எரி எண்ணெயைக் கப்பலில் ஏற்றிக்கொண்டிருந்தனர். வாகன் மவுண்ட் நின்ற இடத்திலிருந்து 600 அடி தொலைவில் எதிர் மனுதார்களாகிய மார்ட்ஸ் டாக் கம்பெனியாருக்குச் (Morts Dock Company) சொந்தமான கப்பல் பழுது பார்க்கும் மேடை இருந்தது. அதில் அப்போது நிறுத்தப்பட்டிருந்த கப்பல் ஒன்றை எதிர் மனுதாரரின் பணியாட்கள் பழுது பார்த்துக் கொண்டி ருந்தனர். அவர்கள் வேலை செய்வதற்கு, மின்சார, ஆக்ஸி அசிட்டிலின் சாதனத்தின் மூலம் உலோகத்தைப் பற்றவைத்துக் கொண்டிருந்தனர். அப்பீல்தாரர்களின் பணியாட்களின் கவன மின்மையால் கப்பலுக்குப் பயன்படுத்தப்படும் எரி எண்ணெய் கடலில் மிகுதியாகச் சிந்தப்பட்டது. இது நீரின் மேற்பரப்பில் தங்கி காற்றினால் எதிர்மனுதாரரின் தளமேடைக்குப் பரவியது. எதிர்மனுதாரரின் தளமேடைக்குக் கீழே காற்றினால் ஒதுக்கீடு தள்ளப்பட்ட பருத்தி, மற்றும் கந்தல் போன்ற தீப்பற்றக் கூடிய பொருட்கள் மிதந்தன. எதிர்மனுதாரரின் தளமேடையிலிருந்து உருகிய உலோகம் இவற்றின் மீது விழுந்து பற்றியது. அந்தத் தீ நீரில் மிதந்த எரி எண்ணெயில் படவே அது எரியத் தொடங்கி, எதிர்மனுதாரரின் மேடைக்கும் சாதனங்களுக்கும் பெருஞ்சேதம் ஏற்பட்டது. இவ்வழக்கை இறுதியாக விசாரித்த பிரிவி கவுன் சிலின் நீதி மன்றக்குழு கீழ் நீதி மன்றத் தீர்ப்பினை மாற்றி, தீ விபத் திற்கு எதிர்வாதிகள் பொறுப்பாளியாக மாட்டார் என்று கூறியது. நீரில் இவ்வாறு கொட்டப்பட்ட எரி எண்ணெய் தீப்பற்றக்கூடும் என்பதை அப்பீல்தாரர்கள் முன்னறிந்திருக்க முடியாது என்று கண்டுபிடிக்கப்பட்டது. வழக்கை விசாரித்த கீழ் நீதிமன்றம் நேரடி விளைவுகள் விதியைப் பயன்படுத்தி ஓவர்சீஸ் டேங்க் ஷிப் கம்பெனியார் பொறுப்பாளியென்று தீர்ப்பளித்திருந்தது, நியூ சௌத் வேல்ஸ் உச்ச நீதிமன்றமும் பாலிமிஸ் விதியையே பின் பற்றி, தீயினால் ஏற்பட்ட இந்த விளைவு முன்னறியத்தக்கதல்ல என்ற எதிர்வாதத்தை ஏற்க மறுத்து, ஓவர்சீஸ் டேங்க் ஷிப் கம்பெனி பொறுப்பாளியென்றே தீர்ப்பளித்தது. சாலையில் செல்லும் சாதாரண மனிதனிடம் சென்று மார்ட்ஸ் மேடையில் ஏற்பட்ட தீவிபத்திற்குக் காரணமென்னவென்று கேட்டால், அவன் தயக்கமேதுமின்றி அப்பீல்தாரரின் பணியாட்கள் எரி எண் ணெயைக் கடலில் சிந்தியது தான் தீவிபத்திற்குக் காரணம் என்று கூறிவிடுவான் என்று நீதிபதி கூறினர். இத்தீர்ப்பிற்கெதிராக பிரிவு கவுன்சிலுக்குச் செய்யப்பட்ட அப்பீலில், ரி பாலிமிஸ் விதி சட்டமாகாது என்று கூறப்பட்டு, நியூ சவுத் வேல்ஸின் உச்ச நீதி மன்றத் தீர்ப்பு தள்ளுபடி செய்யப்பட்டது. அப்பீல்தாரரின் பணி யாட்களின் கவனமின்மையின் நேரடி விளைவாகவே இழப்பு

ஏற்பட்டிருந்தாலும், சமநிலையறிவுள்ள மனிதனால் இது முன்னறியக் கூடியதல்ல என்று தீர்ப்பளிக்கப்பட்டது. இவ்வழக்கில் ரி பாலிமிஸ் விதி முரண்பட்டதென்றும், முறையற்றதென்றும் கூறப்பட்டது. ஒன்று நடந்து முடிந்த பின்னர், தெளிவு பிறந்து மடையனும் அறிவாளியாவான்; ஆனால் சமநிலையறிவு அல்லது நல்லறிவு உள்ள மனிதனின் முன்னறிவையே பொறுப்பைத் தீர்மானிக்கும் அளவு கோலாகப் பயன்படுத்தவேண்டுமேயல்லாது, நிகழ்ச்சிக்குப்பின் தெளிவு பெறும் அறிவிலியின் பின்னறிவையல்ல, பெரும்பான்மையான நூலாசிரியர்கள் வேகன் மவுண்ட் தீர்ப்பையே சரியான தென்று கருதுகின்றனர்.

இரண்டாம் வேகன் மவுண்ட் (The Wagon Mound No. 2) வழக்கில், இழப்பு முன்னறியத் தக்கதா எனும் சோதனை கவனமின்மைத் தீங்குக்கு மட்டுமல்லாமல், தொல்லைத் தீங்குக்கும் பொருந்துமென்று கூறப்பட்டது. இவ்வழக்கில், ஏற்பட்ட இழப்பு முன்னறியத்தக்கதென்பதால் எதிர்வாதிகள் பொறுப்பாளியாவார் என்று கூறப்பட்டது. வேகன் மவுண்ட் கப்பலை வாடகைக்குப் பெற்றிருந்த எதிர் வாதி–அப்பீல்தாரர் எரி எண்ணெயை கால் டெக்ஸ் தளமேடையிலிருந்து கப்பலில் ஏற்றிக் கொண்டிருக்கும் போது, எதிர்வாதியின் பொறியாளரின் கவனமின்மையால் எரி எண்ணெய் மிகுந்த அளவில் கடலில் சிந்தப்பட்டு ஷீர்லெக்ஸ் தளமேடைக்குப் பரவிச் சென்று எதிர் மனுதாரரின் கப்பல்களுக்குப் பெருஞ்சேதம் ஏற்பட்டது. இவ்வழக்கில் வேறு முறையில் சான்று தரப்பட்டது. இங்கு விழிப்புணர்ச்சியும் உரிய தகுதியும் வாய்ந்த தலைமைப் பொறியாளர் ஒருவரால் உணரக் கூடிய வகையில் தீவிபத்தினால் ஏற்படக் கூடிய அபாயம் உண்மையிலேயே இருந்தது. மற்றும் சிட்னி துறைமுகத்தில் எண்ணெயைக் கொட்ட எந்த நியாயமும் இல்லை. எனவே எதிர்வாதிகள் பொறுப்பாளியாவார் என்று தீர்ப்பளிக்கப்பட்டது. வேகன் மவுண்ட் கப்பல் அதிகாரிகள் எரி எண்ணெய் கடல் நீரில் தீப்பற்றிக் கொள்வது மிகவும் கடினமானதென்று கருதுவார்களாயினும், தீப்பற்ற முடியாது என்று நினைக்கமாட்டார்கள். இது மிகவும் அரிதாக ஏற்படக் கூடியதாயினும், அவ்வாறு நிகழக்கூடியதே என்பதையும் அவர்கள் ஏற்றுக் கொள்வார்கள். எனவே விபத்து ஏற்படக் கூடியதல்ல என்பதால் மட்டும் எதிர்வாதிக்கு பொறுப்பில்லை என்று சொல்லமுடியாது. அவன் நடத்தை முறையற்றதாயின் அவன் பொறுப்பாளியாவான் என்றுகிறது. இது ரி பாலிமிஸ் நிலையிலிருந்து வேறுபட்டதாகச் சொல்லமுடியவில்லை. ஆயினும் ரி பாலிமிஸ் வழக்கில், வெடிவிபத்து ஏற்படுத்திய தீப்பொறியை முன்னறிய முடியாவிட்டாலும் சரக்கறையிலுள்ள பெட்ரோல் ஆவி

தீப்பற்றக்கூடிய ஆபத்து இருந்தது. எனவே பலகையை சரக் கறையில் போட்டதற்கு எந்த நியாயமும் கிடையாது. ஆயினும் வேகன் மவுண்ட் தீர்ப்பின் விளைவாக நமக்கு கவனமின்மை தீங்கின் கூறுகள் என்று சொல்லப்படும் கடமை, கடமையிலிருந்து தவறுதல், அதன் விளைவாக ஏற்படும் இழப்பு ஆகிய மூன்றுக்குமே பொருந்தும் ஒரே சோதனை முறை கிடைத்திருக் கிறது.

ஹ்யூக்ஸ் v. லார்ட் அட்வேகேட் வழக்கில் (Hughes v. Lord Advocate), நிலத்துக்கடியில் தொலைபேசிச் சாதனம் வைப்ப தற்காக தெரு ஒன்றில் அஞ்சல் துறையின் பணியாட்கள் ஆள் இறங்கக்கூடிய குழி ஒன்றைத் திறந்தார்கள். மாலை 5 மணி அளவில் அக்குழியின்மேல் கான்வாஸ்துணி கூடாரம் போட்டு விட்டு அவர்கள் தேநீர் அருந்தச் சென்று விட்டார்கள். அக் குழியிருந்த இடத்தில் அவர்கள் காவலுக்கு ஏற்பாடுசெய்ய வில்லை. அதைச் சுற்றி எச்சரிக்கையாக சிவப்பு பாரபின் மெழுகு விளக்குகள் மட்டும் வைத்திருந்தனர். எட்டு வயது நிரம்பிய சிறுவனுகிய வாதி ஒரு மெழுகுவத்தியை எடுத்துக் கொண்டு கூடாரத்தில் நுழைந்து விளையாடும்போது அது குழியில் தவறி விழுந்துவிட்டது. அதைத் தொடர்ந்து வெடிவிபத்தேற்பட்டு, சிறுவனும் குழியில் விழுந்து அவனுக்கு உடலில் கடுமையான தீக் காயங்கள் ஏற்பட்டன. ஒரு விளக்கு இவ்வாறு வெடிக்கக் கூடு மென்று யாரும் எதிர்பார்க்க முடியாது. ஆனால் அப்பகுதியில் குழந்தைகள் இருக்கக் கூடுமென்பதை பணியாட்கள் எதிர்பார்த் திருக்க வேண்டும்; அந்தக் குழியின் அருகில் காவல் போடாமல் அஞ்சல் துறையினர் வைத்திருந்தது அவர்கள் கடமையிலிருந்து தவறிய செயலாகும். அவர்கள் சிறுவர்கள் விளக்குடன் அக் குழியில் இறங்கக் கூடுமென்றும், அந்த விளக்கு உடைந்து அவர்கள் உடலில் தீக்காயம் ஏற்படுமென்பதையும் நினைத்துப் பார்த்திருக்கவேண்டும். இவ்வாறு ஆபத்தொன்று ஏற்படுமென்பது முன்னறியத்தக்கதே. இவ்வழக்கில் இந்த ஆபத்து ஏற்பட்ட வகைதான் முன்னறிய முடியாததாக இருந்தது. எனவே, எதிர் வாதிகள் பொறுப்பாளிகளாகக் கருதப்பட்டார்கள்.

இழப்பு முன்னறியத்தக்கதா என்று கேட்கும் சோதனை முறையை டப்டி v. டர்னர் மேனுபேக்சரிங் கம்பெனி (Doughty v. Turner Manufacturing Co) வழக்கில் பயன்படுத்தப்பட்டது. இவ் வழக்கில் வாதியும் வேறு சிலரும் எதிர்வாதிகளின் தொழிற் சாலையில் பணிபுரிந்தனர். ஒரு பணியாள் மிகச் சூடாக, உருகிய திரவம் இருந்த கலனுக்குள் ஆஸ்பெஸ்டாஸ் சிமெண்ட் மூடியை

கவனமின்றிப் போட்டதால் வெடிவிபத்தேற்பட்டது. ஆஸ்பெஸ்டாஸில் ஏற்பட்ட வேதியியல் மாறுதல்களால் அதிலிருந்த நீர் வெளியேறி, ஆவியாகி கலனிலிருந்து உருகிய திரவத்தைப் பெருங்கி எழச்செய்தது. இத்திரவம் தெரித்து அருகில் நின்று கொண்டிருந்த வாதியின் மேல் பட்டு அவனுக்குக் காயமேற் பட்டது. இந்த மூடியைப் புகழ் பெற்ற உற்பத்தியாளர்களிட மிருந்துஎதிர்வாதிகள் வாங்கியிருந்தார்கள். இந்த மூடி கொதிக்கும் கலத்தில் விழுந்தால் ஆஸ்பெஸ்டாஸ் சிமெண்டில் இத்தகைய மாற்றங்கள் ஏற்படுமென்று யாரும் முன்னறிந்திருக்க முடியாது. எனவே எதிர்வாதிகள் பொறுப்பாளிகளல்லரெனத் தீர்ப்பு அளிக்கப்பட்டது.

மால்கமும் வேறு ஒருவரும் *v.* பிரர்ட்ஹர்ஸ்ட். (Malcolm and another *v.* Broadhurst) வழக்கில், கணவனும் மனைவியும் எதிர் வாதி கவனமின்றி கார் ஓட்டியதால் காயமடைந்தனர். கணவ னுக்குத் தலையில் பலமான காயமேற்பட்டதால் அறிவு மழுங்கி, கற்றுணரும் சக்தியும் குறைந்து, அவன் நடத்தையிலும் இயல் பிலும் முழுமையான மாற்றம் ஏற்பட்டது. அதன் விளைவாக அவன் முன்கோபியாக மாறி மனைவியைச் சிலவேளைகளில் கொடு மையாகவும் நடத்தினான். இந்தச் சூழ்நிலைகளில், கணவனின் மாறிய பண்பினால் மனைவிக்கு ஏற்பட்ட மன அதிர்ச்சிக்கு அவள் தீங்கீடு பெறமுடியும் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

ட்ரெமெய்ன் *v.* பைக் (Tremain *v.* Pike) வழக்கில், எதிர்வாதியின் பண்ணையில் பணியாற்றிய கால்நடைகளைப் பராமரிப்பவருக்கு 'வெய்ல்ஸ் நோய்' எனும் நோய் வந்தது. இந்த நோய் எலிகளிடம் தொற்றிக் கொள்ளும் நோய், மனிதர்களிடம் இது சாதாரணமாகத் தொற்றுவதில்லை. இந்த நோயின் இயல்புபற்றிச் சரிவர யாருக்கும் தெரியாமல் இருந்தது. வாதியின்பால் காட்டவேண்டிய கடமையிலிருந்து எதிர்வாதி தவறினாரா என்ற கேள்வி எழுந்தபோது, முன்னறியத் தக்கதாக உள்ள ஊறு பணியாளுக்கு ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டியதே பணித்தலைவரின் கடமை என்றும், இக்கடமையை மீறியதால்தான் வாதிக்கு ஊறு ஏற்பட்டதென்று கூறமுடியா தென்றும் தீர்ப்பளிக்கப்பட்டது. வெய்ல்ஸ் நோய் ஏற்படக்கூடிய விளைவு மிகவும் அரிதானது; சேய்மையானது; அது எதிர்வாதி யால் முன்னறியத் தக்கதல்ல. எனவே எதிர்வாதி பொறுப்பாளி யாகமாட்டார் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

விளைவுகள் முன்னறியத்தக்கனவா என்று ஆய்ந்து உணரும் விதியைப் பின்வரும் சூழ்நிலைகளில் பயன்படுத்தமுடியாது:

(1) ரைலண்ட்ஸ் *v.* பிலெட்சர் (Rylands *v.* Fletcher) விதியின்படி ஆபத்தான விளைவிக்கும் பொருட்கள் வெளியேறிச்

செல்வதால் ஏற்படும் இழப்பினுக்குக் கடும்பொறுப்புண்டு. இதைப் போலவே இடர்விளைவிக்கும் ஆபத்தான விலங்குகளுக்கும், கால் நடைகளின் அத்துமீறலுக்கும் கடும் பொறுப்பினை ஒத்ததொரு பொறுப்புண்டு, இங்கு நாம் இவற்றுல் ஏற்படும் விளைவுகள் நேரடி விளைவுகளா என்றுதான் பார்க்க வேண்டுமேயல்லாது, முன்னறியத் தக்கவையா என்று பார்க்கக் கூடாது.

(2) வாதி மரணத்தை ஏற்படுத்தும் விபத்துகள் சட்டத்தின் படியும் (Fatal Accidents Act) பணியிழப்புக்காகவும் (Loss of Service) வழக்கிடும்போது, நாம் அவனுக்கேற்பட்ட விளைவுகள் முன்னறியத்தக்கவையாக இருந்தனவா என்று கேட்கக்கூடாது. சட்டம் இழப்பீடுதரவல்ல ஊறு ஒன்றை எதிர்வாதிவிளைவித்தானு என்றே பார்க்கவேண்டும். எதிர்வாதி கவனமின்றிச் செய்த செயலால் ஒரு பெண் படுகாயமுற்றிருக்கலாம். அதன் விளைவாக அவளது கணவன் அவளோடு கூடிவாழும் வாழ்வை இழக்கின்ருன். இதற்காக அவளது கணவன் தீங்கீடு கோரி வழக்கிடும் போது எதிர்வாதிதான் ஒரு கன்னிப்பெண்ணுக்குக் காயம் ஏற்படுத்தியதாகவே கருதியிருந்ததாகச் சொல்லமுடியாது.

(3) இதைத் தவிர சில இயற்றிய சட்டங்களின்படி கடும் பொறுப்பு ஏற்படலாம். எடுத்துக்காட்டாக, தொழிற்சாலைகள் சட்டத்தின்படி, (Factories Act) ஆபத்தான இயந்திரங்களைச் சுற்றி வேலியிட்டு மறைத்து வைத்திருக்க வேண்டும். இது தொழிலாளரின் பாதுகாப்புக்குத் தேவையானது. இதைச் செய்யாமற் போன எதிர்வாதி விளைவுகள் முன்னறியத் தக்கவையல்ல என்று வாதிடமுடியாது.

(4) வாதிக்கு ஏற்பட்ட இழப்பு சட்டப்படி எதிர்வாதியால் நிகழாமல் தடுக்கப்படவேண்டிய வகையைச் சேர்ந்ததல்ல வென்ருல்,முன்னறியத்தக்க விளைவாக இருப்பினும் எதிர்வாதிக்குப் பொறுப்பு ஏற்படாது. எடுத்துக்காட்டாக, காரிஸ் v. ஸ்காட் வழக்கைச் சொல்லலாம். சட்டப்படி கால்நடைகளிடையே தொற்றுநோய் பரவாமல் தடுக்க எதிர்வாதி தமது கப்பலில் அவற்றைப் பட்டிகளில் உரியமுறையில் அடைத்து வைத்திருக்க வேண்டும். அதை அவர் செய்யத் தவறினுல். புயலின் காரணமாக கப்பலில் இருந்த கால்நடைகள் அடித்துச்செல்லப்பட்டுக் கடலில் விழுந்து மாண்டன. இங்கு வாதிக்கு ஏற்பட்ட இழப்பு சட்டப்படி எதிர்வாதி செய்யவேண்டிய கடமையை மீறியதால் ஏற்பட்டதல்ல; இயற்கையின் சீற்றத்தினுல் ஏற்பட்டது. எனவே எதிர்வாதி பொறுப்பாளியாக மாட்டார் என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

(5) வாதிக்கு ஏற்பட்ட இழப்பு எப்படிப்பட்டது, எவ்வகையானது என்பதை முன்னறிய முடிந்தால் போதும்; அதன் அளவு எதிர்பார்த்ததைவிட அதிகமாக இருக்கலாம். எனவே வாதிக்கு ஏற்பட்ட ஊறு அல்லது இழப்பின் தன்மை எதிர்வாதி முன்னறியக் கூடியதாக இருந்தால், வாதிக்கு ஏற்பட்ட இழப்பின் அளவு எதிர்வாதி முன்னறியக்கூடியதைவிட அதிகமாக இருந்தாலும் அவன் பொறுப்பாளியாவான். எதிர்வாதி இழைத்த தீங்கால் வாதிக்குச் சிறிய உடற்காயமே ஏற்பட்டிருந்தாலும், வாதியின் உடல்நிலை காரணமாக அதன் விளைவுகள் எதிர்பார்த்ததைவிட அதிகமாக இருக்கலாம்; இருப்பினும் அவற்றிற்கு எதிர்வாதி பொறுப்பாளியாவார். எடுத்துக்காட்டாக, எதிர்வாதி கவனமின்றி காரை ஓட்டியதன் விளைவாக வாதி இறக்கலாம் அல்லது படுகாயமடையலாம். அப்போது எதிர்வாதியின்மேல் வழக்கிடப்படும் போது அவன் வாதியின் இதயம் நலிவுற்று இருந்ததென்றும், அல்லது வாதியின் மண்டையோடு மிகவும் மென்மையானதாக பலமற்று இருந்ததென்றும் காட்டி இது மிகவும் அபூர்வமான நிலைமை என்று சொல்லக்கூடும். இவ்வாறு வாதியின் உடல்நிலை இருந்திராவிட்டால் வாதிக்கேற்பட்ட காயம் கடுமையற்றதாக இருந்திருக்குமென்றும் அவன் வாதிடலாம். ஆனால் இதை நீதிமன்றம் ஏற்காது. வாதியின் உடல்நிலைபற்றி எதிர்வாதி அறிந்திராவிட்டாலும், அவன் பொறுப்பாளியாவான். இக்கருத்து பாலிமிஸ் விதிக்கு ஏற்றதாக இருக்கிறது. வேகன் மவுண்ட் விதிக்கு இக்கருத்து இசைந்ததாகத் தெரியவில்லை.

27. இடையில் குறுக்கிடும் புதிய செயல் (Novus actus interveniens)

எதிர்வாதியின் செயலுக்கும் அதனால் ஏற்படும் விளைவுக்கும் உள்ள காரண காரியத் தொடர்பை இதற்குமுன் ஆய்ந்தோம். ஆயினும் சில சமயங்களில் எதிர்வாதியல்லாத வேறு ஒரு நபர் இடையிலே குறுக்கிட்டு ஒரு செயலைச் செய்ததன் விளைவாக வாதிக்கு இழப்பு ஏற்படுவதுண்டு. இது எதிர்வாதி முதலில் செய்த செயலுக்கும் இறுதியாக ஏற்படும் விளைவுக்கும் உள்ள காரண காரிய சங்கிலித் தொடர்பை எவ்வாறு முறிக்கிறது என்று இங்கு காண்போம்.

இதையறிய இரு சோதனைமுறைகள் கையாளப்படுகின்றன. முதலாவது சோதனையின்படி 'அ' என்பவன் தீங்கு புரிந்திருந்தாலும், அவன் அறிந்திராத 'ஆ' என்பவர் தெரிந்தே, அல்லது வேண்டுமென்றே 'இ' என்பவருக்கு இழைக்கும் ஊறுக்கு பொறுப்பாளியாக மாட்டார். 'ஆ' வின் முறையற்ற செயலுக்கு 'அ' வாய்ப்பினை அளித்திருந்தாலும் 'ஆ' என்பவரின் தனித்த செயலே விளைவுக்குக் காரணமாகிவிடுகிறது. அதாவது 'அ' என்பவர் முதலில் செய்த ஒரு செயல் 'ஆ' வின் தீங்கான செயலுக்கு வாய்ப்பும் இடமும் மட்டுமே தந்திருக்கிறது. எனவே 'அ' அவர் இழைத்த தீங்குக்குப் பொறுப்பாளி ஆக மாட்டார். இரண்டாவது சோதனை முறையின்படி, எதிர்வாதி புரிந்த தீங்கினால் உண்மையில் ஏற்பட்டுள்ள விளைவு முன்னறியத் தக்கதாகவும், நிகழக் கூடியதாகவும் இருந்தால் அவனே பொறுப்பாளி. இதில் ஐயம் எதுவும் இல்லை. எதிர்வாதியின் தீங்கான செயலினால் உண்மையில் ஏற்பட்டுள்ள விளைவு முன்னறியத்தக்கதல்லவாகவும் நிகழமுடியாததாகவும் இருந்தால் எதிர்வாதி பொறுப்பாளியாக மாட்டான். எதிர்வாதியின் செயலுக்கும் இறுதியாக வாதிக்கு ஏற்பட்ட விளைவுக்கும் இடையில் நிகழ்ந்த புதிய செயல் முன்னறியத் தக்கதல்லவாயின்

அதுவே தனித்து நின்று விளைவுகளை ஏற்படுத்தியதாகச் சொல்ல லாம். இதனால் எதிர்வாதி முதலில் செய்த செயலின் விளைவாக வாதிக்கு இழப்பு ஏற்பட்டதென்று சொல்லமுடியாமல் போய்விடு கிறது. இடையில் நிகழும் புதிய செயல் முன்னறியத்தக்கதாகவோ அல்லது முன்னறியமுடியாததாகவோ அமைந்திருக்கலாம் என்று கண்டோம். இனி இந்த இரு நிலைகளிலும் எதிர்வாதிக்கு ஏற்படக் கூடிய பொறுப்பு அல்லது பொறுப்பின்மைபற்றி நாம் காண்போம்.

முதலாவதாக, குறுக்கிடும் செயல் முன்னறியத் தகுந்ததாக இருக்கும்போது ஏற்படும் பொறுப்பினைக் காண்போம். எதிர்வாதி இடையில் குறுக்கிடும் செயலையோ, அல்லது செயல் தவிர்ப் பையோ உண்மையில் தூண்டிவிட்டிருக்கலாம்; அல்லது அச் செயலைச் செய்யுமாறு அதிகாரம் வழங்கியிருக்கலாம். அவ்வாறு அவன் செய்திருந்தால் அவன் பொறுப்பாளியாவான் என்பதில் ஐயமில்லை. இதைத் தவிர இடையில் குறுக்கிடுபவன் செய்யும் செயலுக்குத் தேவையான வசதியும், வாய்ப்பும் அவன் அளித் திருக்கலாம். அப்போது வாதிக்கு இழப்பு ஏற்படக் காரணம் மூன்றுவது நபரின் செயலே என்று கூறி எதிர்வாதி பொறுப்பி லிருந்து தப்பமுடியாது.

இன்னும் சில சமயங்களில் மூன்றுவது நபர் ஒருவரால் ஊறு நேராமல் இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டிய கடமை எதிர்வாதிக்குச் சட்டப்படி அமைந்திருக்கலாம். அப்போது அவர் அக் கடமையை மீறியதன் விளைவாக வாதிக்கு ஊறு ஏற்பட்டிருந் தால் அவர் பொறுப்பேற்க நேரும். ஹேட்லி *v.* பேக்சன்டேல் (Hadley *v.* Baxendale) வழக்கில் கடமையிலிருந்து மீறியதன் இயல்பானதும் நிகழக்கூடியதுமாகிய விளைவென்று விபத்தினைக் கருதமுடியுமா? என்று கேட்கப்பட்டது. ஸ்டான்ஸ்பி *v.* ட்ரோமன் (Stansbie *v.* Troman) வழக்கில் ஒரு வீட்டுச் சொந்தக்காரர் வெளியே செல்லவேண்டியிருந்தது. அப்போது ஒரு வண்ணம் பூசுபவர் வீட்டில் தனியே வேலை செய்து கொண்டிருந்தார். வேறு எவரும் வீட்டில் இல்லை. எனவே வீட்டுச் சொந்தக்காரர் வண்ணம் பூசுபவரிடம் அவர் வெளியே செல்ல வேண்டியிருந் தால் முன்கதவைத் தாளிட்டுச் செல்லுமாறு எச்சரித்திருந்தார். வண்ணம் பூசுபவர் சுவரில் ஒட்டும் தாளினை வாங்க வெளியே சென்றார். ஆனால் அவர் வீட்டுச் சொந்தக்காரனின் எச்சரிக் கைக்கு முரணாகக் கதவைத் தாளிடாமல் சென்று விட்டார். அவர் இல்லாதபோது கள்ளன் ஒருவன் வீட்டினுள் புகுந்து நகைகளைத் திருடிச் சென்றுவிட்டான். கள்ளனின் செயல் இங்கு இடையில் நிகழ்ந்த புதிய செயலாகும். எதிர்வாதியாகிய வண்ணம் பூசுபவர்

கவனமின்றிக் கதவைப் பூட்டாமல் சென்றதால்தான் இது ஏற்பட்டது. எனவே, நகை களவாடப்பட்டதால் ஏற்பட்ட இழப்புக்கு அவர் பொறுப்பாளியென்று தீர்ப்பளிக்கப்பட்டது. அண்மையில் உள்ளவருக்குத் தொல்லை எனக் கருதத் தகுந்த விதத்தில் கூட்டத்தைச் சேர்ப்பவர் தொல்லைக்குப் பொறுப்பாளியாவார். தொல்லையை ஏற்படுத்துவது தன்னுடைய நோக்கமல்லவென்றும், தன்னுடைய வித்தை அல்லது நிகழ்ச்சியைக் காணவந்தவர்களே தொல்லை ஏற்படுத்தியதாகவும் ஒருவர் கூறிப் பொறுப்பிலிருந்து தப்பமுடியாது. அவர் காட்டும் வித்தையைக் காண அச்சூழ்நிலையில் மக்கள் கூட்டம் சேருவது எதிர்பார்க்கக் கூடியதாயின் அதனால் ஏற்பட்ட தொல்லைக்கு அவரைப் பொறுப்பாளியென்றே சட்டம் கருதும். இதைப்போலவே நஞ்சாக உள்ள ஒரு திரவத்தை ஒரு புட்டியில் அடைத்து, அதன்மேல் ஒட்டப்படும் தாளில் ஒரு ஆபத்தில்லாத மருந்தின் பெயரை எழுதி விற்பனைக்கு ஒரு மருந்து உற்பத்தியாளர் அனுப்புகிறார் என்று வைத்துக் கொள்வோம். அதை அறியாத ஒருவர் அதைக் குடித்து மாண்டுபோனால், மருந்து உற்பத்தியாளர் அதற்குத் தான் காரணமல்லவென்றும், அதைக் குடித்தவனின் தன்னிச்சையான செயலே அவனுடைய மரணத்திற்குக் காரணமென்றும் சொல்ல முடியாது. அந்த சூழ்நிலையில் நஞ்சினைக் குடித்தவனின் செயல் எதிர்பார்க்கக் கூடியதேயாகும். இளம்பிள்ளைகளிடம் துப்பாக்கி போன்ற ஆபத்தான ஆயுதங்களைத் தருபவர்க்கும் இது பொருந்தும். அவர்கள் கை சும்மாயிருக்காது என்றும், குறும்பு செய்வார்கள் என்றும் அவர்கள் கையில் துப்பாக்கியைத் தந்தால் அதன் விசையை இழுத்துப் பார்க்கக் கூடுமென்றும் எதிர்வாதி எதிர்பார்க்க வேண்டும்.

சில சமயங்களில் ஒருவன் தன்னுடைய செயல்களுக்கு முழுவதும் பொறுப்பாளியாக இருக்கமாட்டான். அவனது பொறுப்பின்மையை முன்னறிய வேண்டியிருக்கும். எடுத்துக்காட்டாக, ஒரு குழந்தை தன்னுடைய செயலுக்குப் பொறுப்பாளியாகாது. இதைப்போலவே எதிர்வாதியின் தீங்கான செயலால் ஏற்பட்ட ஆபத்தின் காரணமாக ஒருவன் கலவரமடைந்து ஒரு செயலைச் செய்திருக்கலாம். அல்லது மாறுதலற்ற ஒரே வேலையைத் தொடர்ந்து செய்துவருவதால் உணர்வுகள் மழுங்கிப்போன ஒரு தொழிலாளி ஒரு செயலைச் செய்திருக்கலாம். இதனால் ஏற்படக் கூடிய ஆபத்தை எதிர்வாதி முன்னறிய வேண்டியிருக்கலாம். இவர்களது செயல் எதிர்வாதியின் முதல் கவனமின்மைக்கும், பின்னர் ஏற்பட்ட ஊறுக்கும் இடையில் உள்ள தொடர்பை முறிப்பதில்லை. இதற்கு எதிர்வாதியின் முறையற்ற செயலினால்

யத்துபோய் இடையில் ஒருவன் குறுக்கிட்டுச் செய்யும் செயலை எடுத்துக்காட்டாகச் சொல்லலாம். இவ்வாறு குறுக்கிடுபவன் காரண காரிய சங்கிலித் தொடர்பை அறுப்பதில்லை. இதற்கு எடுத்துக் காட்டாக, நாம் முன்னர் பார்த்த ஸ்காட் v. ஷெப்பர்டு வழக்கைச் சொல்லலாம்.

எதிர்வாதி ஒரு புதிய செயல் குறுக்கிடக் கூடுமென்று முன்னறிய முடிந்தால், அச்செயல் புதிய காரணமாகாது. பில்கோ ரேடியோ அண்டு டெலிவிஷன் கார்ப்பரேஷன் ஆஃப் கிரேட் பிரிட்டன் லிமிடெட் v. ஜே. ஸ்பர்லிங் லிமிடெட் (Philco Radio and Television Corporation of Great Britain Ltd. v. J. Spuring Ltd.) வழக்கில் எதிர்மனுதாரரின் வண்டியை ஓட்டுநர் அப்பீல்தாரரின் கட்டிடத்தில் விரைவாகத் தீப்பற்றிக் கொள்ளக் கூடிய செலுலாய்டை சேர்ப்பித்தார். அப்பீல்தாரரின் தட்டெழுத்தர் ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்து அதன் அருகில் கொண்டு சென்றதால் வெடி விபத்தேற்பட்டு அப்பீல்தாரரின் கட்டிடத்திற்கு மிகுந்த சேதம் ஏற்பட்டது. இங்கு தட்டெழுத்தர் வேண்டுமென்றே இச்செயலைச் செய்ததாகச் சொல்லப்படவில்லை. எனவே எதிர்மனுதாரர் பொறுப்பாளி என்று கருதப்பட்டது. அவ்வாறு செலுலாய்டை அங்கு விட்டுச் சென்றுல் யாராவது அறிவிலி ஒருவன் செயலால் இழப்பு நேரலாம் என்று வண்டி ஓட்டுநர் முன்னறிந்திருக்க வேண்டும்.

இதே கொள்கையின் அடிப்படையில் ஒருவன் சட்டப்படியோ அல்லது ஒழுக்க நெறியின்படியோ குறுக்கிட்டு ஒரு கடமையைச் செய்திருந்தால், விளைவுகள் நேரடியானதாகவே கருதப்படும். இதற்கு எடுத்துக்காட்டாக நாம் முன்பறிந்த மீட்சி வழக்குகளைச் சொல்லலாம். இங்கே எதிர்வாதியின் முறையற்ற செயல் இயல்பாகத் தொடர்ந்துவரும் நிகழ்ச்சிகளில் மீட்சி புரிபவன் செயலையும் இயல்பானதாகவும், முறையானதாகவும் அமைவதாகக் கருதலாம். இதற்கு எடுத்துக்காட்டாக முன் விவாதிக்கப்பட்ட ஹேய்ன்ஸ் v. ஹார்வுட் வழக்கைச் சொல்லலாம்.

அடுத்து, ஒருவன் தனது உரிமையைக் காக்கவும் மற்றவருக்கு ஊறு விளைவிக்க வேண்டும் என்ற கருத்தின்றியும் செய்யும் இடைநிலைச் செயல்களால் காரண காரியச் சங்கிலி அறுபடுவதில்லை. கிளார்க் v. சேம்பர்ஸ் (Clark v. Chambers) வழக்கில் எதிர்வாதி கூரான இரும்புமுனைகொண்ட ஒரு நீண்ட கழியை நெடுஞ் சாலையில் தடங்கலாக வைத்திருந்தார். மற்றொருவன் அதை அங்கிருந்து அகற்றிக் கவனமின்றி நடைபாதையில் நிறுத்தி

வைத்துச் சென்றுவிட்டான். ஒரு நாள் இரவு நேரத்தில் அவ்வழியாக வாதி போய்க் கொண்டிருந்தபோது, அக் கழியின் கூரான பகுதி கண்ணில் பாய்ந்து காயமுற்றான். வாதிக்கு ஏற்பட்ட காயத்திற்கு எதிர்வாதி பொறுப்பாளியாவான் என்று தீர்ப்பளிக்கப் பட்டது. இங்கு வாதிக்கு ஏற்பட்ட விளைவுகள் சேய்மையானவை என்று சொல்லமுடியாது. ஒரு சாலையில் தொல்லையாக ஒரு தடங்கலை வைப்பவர் அதை யாராவது அகற்ற முயற்சிப்பார் என்றும், அவ்வாறு செய்யும்போது மற்றவர்களுக்கு ஆபத்து ஏற்படலாம் என்றும் முன்னறிய வேண்டும்.

வாதி தனக்கு ஏற்படும் இழப்பினை குறைத்துக் கொள்ள வேண்டும். இது அவனது கடமையாகும். எனவே இந்த நோக்கத்தோடு அவன் தகுந்த செயல் ஒன்றைச் செய்தால் அது காரண காரியச் சங்கிலித் தொடர்பை முறிக்காது. வாதி கவனமின்றியோ, அல்லது வேண்டுமென்றே ஒரு செயலைச் செய்யாமல் இருந்தோ தன்னுடைய காயங்களை அதிகமாக்கியிருந்தால் அவன் தீங்கீடு பெறமுடியாது. எடுத்துக்காட்டாக கால் சுளுக்கிக் கொண்ட ஒருவன் உயரத் தாண்டும் பந்தயத்தில் கலந்து கொண்டு பரிசுபெற எண்ணிப் பயிற்சி செய்யும்போது அவனது கால்களில் முறிவு ஏற்படலாம். இதனால் அவன் கால்கள் சரியாக மேலும் ஆறு மாதங்கள் ஆகலாம். இது அவனே தேடிக்கொண்டது, எனவே எதிர்வாதியின் செயலால் தனக்கு ஏற்பட்ட இழப்புக்கு அல்லது ஊறுக்குத் தீங்கீடு கேட்கும்போது அவன் தன்னுடைய பொறுப்பில்லாத–அக்கறையில்லாத நடத்தையால் ஏற்பட்டுள்ள காயத்திற்குத் தீங்கீடு பெறமுடியாது.

இனி இடையில் குறுக்கிட்ட செயல் முன்னறிய முடியாததாக இருக்கும்போது ஏற்படும் பொறுப்பு பற்றி காண்போம். முன்னறிய முடியாத நிலையில் இடையில் குறிப்பிடும் செயல் வேண்டுமென்றே இழைக்கப்பட்ட தீங்காகவோ, அல்லது கவனமில்லாததாகவோ, அல்லது சட்டப்படியானதாகவோ இருக்கலாம். அது எவ்வாறு இருந்தாலும் காரண காரிய சங்கிலித்தொடரை அறுப்பதில்லை, அதனால் ஏற்படும் விளைவுகள் எதிர்வாதியின் செயலின் நேரடி விளைவுகளாகவே கருதப்படும். காப் v. கிரேட் வெஸ்ட்டர்ன் ரெயில்வே கம்பெனி (Cobb v. Great Western Rly Co.) வழக்கில் எதிர்வாதியின் புகைவண்டியில் அளவுக்கு மீறிய கூட்டம் இருந்ததால் அந்தக் கூட்ட நெரிசலைப் பயன்படுத்தி வாதியை இடித்து அவர் சட்டைப் பையில் இருந்த பணத்தை ஒருவன் களவு செய்ய வாய்ப்பு ஏற்பட்டது. இதற்கு எதிர்வாதிகள் பொறுப்பாளியல்லர் என்று கூறப்பட்டது. செக்ரட்ரி ஆஃப் ஸ்டேட் v. கோகுல்சந்த்

Secretary of State *v.* Gokulchand) வழக்கில், இரு புகை வண்டிகள் மோதிக் கொண்டதில் ஒருவர் மாண்டார். அவர் சாவினுல் ஏற்பட்ட பொருள் இழப்பிற்குத் தீங்கீடு கோரி வழக்கிடப் பட்டது. இத்துடன், இறந்தவர் தம்முடன் வைத்திருந்த 13,000 ரூபாயை ஒருவர் திருடிவிட்டார். இக் களவினுல் ஏற்பட்ட இழப் புக்குப் புகைவண்டிக் கம்பெனி பொறுப்பாளியல்லவென்று தீர்ப் பளிக்கப்பட்டது. ஏனெனில் மூன்றுவது நபர் திருடிய செயல் எதிர்வாதியின் கவனமில்லாச் செயலால் இயல்பாகத் தோன்றக் கூடியதல்ல.

S. S. சிங்கில்டன் அபே *v.* S. S. பாலுடினு (S. S. Singleton Abbey *v.* S. S. Paludina) வழக்கில், சிங்கில்டன் அபே பாலுடினு, சாரா ஆகிய மூன்று கப்பல்கள் துறைமுகத்தில் இருந்தபோது பலமாக காற்று வீசியது. அதைத் தொடர்ந்து பின்வரும் நிகழ்ச்சிகள் நடந்தன. பாலுடினு என்ற கப்பல் கவனமின்றி செலுத்தப்பட்டதால் அது சிங்கில்டன் அபே எனும் கப்பலின் மீது மோதியது. அதன் விளைவாக சிங்கில்டன் கப்பல் சாரா எனும் கப்பலின் மீது மோதியது. சிங்கில்டன் அபே சாராவும் பின்னர் விலகிச் சென்றன. பின்னர் 20 நிமிடங்கள் கழித்து சாராவும் சிங் கில்டன் அபேயும் கரையை விட்டு விலகிச் செல்லும் முயற்சியில் ஈடுபட்ட போது சாரா கடலில் மூழ்கியது. சிங்கில்டன் அபேக்குச் சேதம் ஏற்பட்டது. சிங்கில்டன் உரிமையாளர் தமது கப்பலுக்கு ஏற்பட்ட இழப்புக்காக பாலுடினுவின் உரிமையாளரிடமிருந்து தீங்கீடு கோரி வழக்கிட்டார். இது எதிர்வாதியின் செயலோடு தொடர்பற்ற விளைவு என்று தீர்ப்பளிக்கப்பட்டது. பாலுடினுவின் கவனமின்மை இவ்விபத்திற்கு வாய்ப்பு ஏற்படுத்தியிருந்தாலும், சாராவும் கவனமின்றியிருந்ததாலேயே இது ஏற்பட்டது. எனவே இது பாலுடினுவின் கவனமின்மையால் ஏற்பட்ட விளைவு ஆகாது என்று கூறப்பட்டது.

மூன்றுவது நபர் சட்டப்படி ஒரு செயலை செய்யும்போது விளைவுகள் சேய்மையானதாக ஆகலாம். இது சூழ்நிலையைப் பொறுத்தது. ஹார்னட் *v.* பாண்ட் (Harnett *v.* Bond) வழக்கில், மனநோய் மருத்துவ இல்லத்தின் சொந்தக்காரரான ஆடம் என்ப வரின் காவலில் வைக்கப்பட்டிருந்த மன நோயாளியாகிய வாதி விசாரணைக்குப்பின் 28 நாட்களுக்கு விடுமுறை அளிக்கப்பட்டி ருந்தார். வாதி மனநோய் ஆணையாளராகிய பாண்ட் என்பவரைப் போய் பார்த்தார். அவர் வாதிக்கு மனநோய் நீங்கவில்லையென்று தவருக முடிவு செய்து ஆடம் என்பவரைத் தொலைபேசியில் அழைத்து தனது கருத்தைச் சொல்லவும், அவர் வாதியைப்

பிடித்துச் செல்ல ஆட்களை அனுப்பினர். வாதியின் பைத்தியம் தெளிந்திராவிட்டால் அவரை மீண்டும் மனநோய் மருத்துவர் இல்லத்தில் வைத்திருக்கும் உரிமை, அவன் உரிமையாளராகிய ஆடம் என்பவருக்கு இருந்தது. வாதியை அழைத்துச்செல்ல கார் வரும் வரை இரண்டு அல்லது மூன்று மணி நேரம் அவரை மனநோய் ஆணையர் பிடித்து வைத்திருந்தார். வாதி மேலும் ஒன்பது ஆண்டுகளுக்கு பல்வேறு மனநோய் இல்லங்களிலும் ஆடம் என்பவரின் மருத்துவமனையிலும் அடைத்து வைக்கப்பட்டிருந்தார். பின்னர் அவர் தப்பிச்சென்று, மனநோய் ஆணையர் தம்மை முறையின்றிச் சிறைப்படுத்தியதாக வழக்கிட்டார். இவ்வழக்கை விசாரித்த நீதிமன்றம் மனநோய் ஆணையர் அலுவலகத்தில் வாதி அடைத்துவைக்கப்பட்டிருந்த 2 அல்லது 3 மணி காலத்திற்கு மட்டுந்தான் முறையின்றி சிறைப்படுத்தியதற்காக ஆணையர் பொறுப்பாளியாவார் என்றும், மனநோய் மருத்துவமனையின் உரிமையாளர் ஆடம் அவரை சிறையில் அடைத்து வைத்திருந்ததற்கு ஆணையர் பொறுப்பாளியாக மாட்டார் என்று தீர்ப்பளித்தது. இங்கு மனநோய் மருத்துவர் இல்ல உரிமையாளராகிய ஆடம் என்பவரின் செயல் சட்டப்படியான, சுதந்திரமான, இடையில் நிகழ்ந்த செயலாகும். சான் ஒனோபர் (The san onofre case) வழக்கில், சான் ஒனோபர் என்னும் கப்பல் கவனமின்றி பெலானி என்னும் கப்பல்மீது மோதியது. அதன் விளைவாக சான் ஒனோபருக்கு சிறிய சேதமும் மெலானிக்கு பெரிய சேதமும் ஏற்பட்டன. சான் ஒனோபர் மெலானியை தன்னுடன் இணைத்து அதைக் காப்பாற்றக் கரைக்கு கொண்டு செல்லும்போது பனி மூட்டத்தால் இரண்டும் தரைதட்டி புதிய சேதம் ஏற்பட்டது. தரைதட்டியதால் சான் ஒனோபருக்கு ஏற்பட்ட பெருஞ்சேதம் பெலானியின் முதற்கவனமின்மையோடு தொடர்புடையதாகாது. எடுத்துக்காட்டாக இரண்டு வழிப்போக்கர் தெருவில் ஒருவர்மீது மற்றவர் மோதிக் கொள்கிறார் என்று வைத்துக் கொள்வோம். மோதலுக்குக் காரணமாக கவனமின்றி இருந்தவரை மற்றவர் மருத்துவமனைக்கு நடத்திச் செல்கிறார். அப்போது அவ்வாறு உதவி செய்பவர் இடறிவிழுந்து காலை முறித்துக்கொள்கிறார். இந்தக் கடைசி விபத்து சட்டப்படி முதலில் ஏற்பட்ட விபத்தோடு தொடர்பு கொண்டதல்ல.

வெல்டு பிளண்டல் *v.* ஸ்டீபன்சன் (Weld Blundell *v.* Stephenson) வழக்கில் வாதி ஒரு கம்பெனியின் விவகாரத்தைப் பற்றித் துப்பறிய எதிர்வாதிகளை நியமித்தார். அவர் எதிர்வாதிகளிடம் கொடுத்த கடிதமொன்றில் அக்கம்பெனியின் இரு அலுவலர்களைப் பற்றி அவதூறுகக் குறிப்பிட்டிருந்தார். எதிர்வாதி தமது கூட்

டாளியிடம் அந்த கடிதத்தைக் கொடுத்தார். அவர் அதை அந்தக் கம்பெனி அலுவலகத்தில் கவனமின்றி வைத்துவிட்டார். அக்கடிதத்தைக் கம்பெனி மேலாளர் எடுத்துப் படித்து அதில் எழுதியிருந்த கருத்தை அந்த இரு அலுவலர்களிடமே கூறிவிட்டார். அவர்கள் வாதியின் மீது தனித்தனியே வழக்கிட்டுத் தீங்கீடு பெற்றனர். பின்னர் வாதி தான் தீங்கீடாகக் கொடுக்க நேர்ந்த தொகையை மீட்டுப் பெற எதிர் வாதியின் மேல் வழக்கிட்டார். அவர் தமது கடிதத்தை மறைவாக வைத்திருக்கவேண்டிய கடமையை எதிர் வாதி மீறியதாக வாதிட்டார். இங்கு வாதிக்கு ஏற்பட்ட முடிவான காரணம் அவரது செயலேயாகும், எனவே அவருக்குப் பெயரளவு இழப்பீடு அளிக்கப்பட்டது.

வாதி செய்த செயல் ஒன்றினால் அவனுக்குக் காயம் அல்லது இழப்பு ஏற்பட்டிருக்கலாம். அப்போது அவனது செயலே இடையில் குறுக்கிடும் புதிய செயல். எனவே எதிர்வாதி அதற்குப் பொறுப்பாளியாக மாட்டார். கம்மிங்ஸ் *v.* சர் வில்லியம் ஏரல் &, கம்பெனி லிமிடெட் (Cummings *v.* Sir William Arrol & Co. Ltd.) வழக்கில், எதிர்வாதிகள் எஃகுக் கோபுரம் கட்ட ஒருவேலைக்கு அமர்த்தியிருந்தனர். அவன் அதிலிருந்து தவறி விழுந்து மாண்டான். அவனுக்குப் பாதுகாப்புக் கச்சை தரப்படவில்லை. அவன் தற்காப்புக்காக இடுப்பில் கச்சை கட்டிக் கொண்டிராத காரணத்தினாலேயே தவறி விழுந்தான். அவன் அனுபவமிக்க தொழிலாளி. தற்காப்புக் கச்சை கொடுத்திருந்தாலும் அவன் அதை அணிந்திருக்க மாட்டான் என்று சான்று மூலம் நிரூபிக்கப் பட்டது. எனவே அவனுக்குக் காப்புக்கச்சை தரத் தவறியதாலேயே இவ்விபத்து ஏற்பட்டது என்று சொல்லமுடியாது என தீர்ப்பளிக்கப்பட்டது. இங்கு காரண காரிய தொடர்பில் 4 படிகள் உள்ளன. (1) பாதுகாப்புக் கச்சை தரவேண்டிய கடமை (2) அக் கடமையிலிருந்து தவறுதல், (3) பாதுகாப்புக் கச்சை இருந்திருந்தால் அதை இறந்தவன் அணிந்திருப்பான்,(4) பாதுகாப்புக் கச்சை இருந்திருப்பின் அவன் இறந்திருக்கமாட்டான். இவ்வழக்கில் பாதுகாப்புக் கச்சை தரப்பட்டு இருந்தாலும் அவன் அணிந்திருக்க மாட்டான் என்று முடிவு செய்யப்பட்டது. எனவே காரண காரிய தொடர்பில் முதலிரண்டு படிகள் இயங்குவதில்லை. இவ்வழக்கில் எதிர்வாதி பொறுப்பாளியல்ல வென்று தீர்ப்பளிக்கப்பட்டது.

மெக்யூ *v.* ஹாலண்ட் & ஹேன்னன் & கியூபிட்ஸ் (Mc Kew *v.* Holland and Hannen and cubitts (Scotland)) வழக்கில், எதிர்வாதி பொறுப்பாளி என்று கருதப்பட்ட விபத்தில் வாதிக்கு ஏற்பட்ட காயத்தின் விளைவாக அவனுடைய இடது காலில்

கோளாறு ஏற்பட்டு, அவரால் சில சமயங்களில் நிற்க முடியாத போயிற்று. விபத்து ஏற்பட்ட சில நாட்கள் கழித்து ஓ கட்டிடத்தின் மாடிப்பகுதியைப் பார்வையிட அவர் சென்றார். இரண்டு சுவர்களுக்கிடையே கைப்பிடி இல்லாமல் இ ந்த உயரமான மாடிப்படிகளில் ஏறி அங்கு செல்லவேண்டியிருந்தது. அங்கிருந்து அவர் திரும்பும்போது தன்னுடைய இளவயது மகளின் கையைப் பிடித்தவாறு அவர் படிகளில் இறங்கினர். அவருடன் வந்த அவரது மனைவியும், மைத்துனனும் அவருக்குப் பின்னால் வந்து கொண்டிருந்தார்கள். தீடீரென்று அவரது இடது கால் வலுவிழந்து போகவே தன் மகளை அவர் காப்பாற்ற அவளைப் பின்னால் தள்ளி விட்டு, மாடிப்படிகளில் உருண்டு விழாமல் செங்குத்தாகத் தரையில் இறங்க எண்ணிக் குதிக்க முற்பட்டார். இதனால் அவர் கால்முட்டியில் கடுமையான எலும்பு முறிவு ஏற்பட்டது. இந்த ஆபத்தான சூழ்நிலையில் அவர் குதித்த செயல் காரண காரியச் சங்கிலித் தொடரை முறிக்காது என்றாலும், இத்தகைய ஆபத்தான சூழ்நிலையை அவர் தன்னுடைய நடத்தையால் தனக்கே தேவையின்றி ஏற்படுத்திக்கொண்டார் என்று தீர்ப்பளிக்கப் பட்டது. அவர் படிகளில் தானே மெதுவாகவும் கவனத்துடனும் இறங்கியிருக்கலாம். அல்லது தன் மனைவி அல்லது மைத்துனனின் உதவியை நாடியிருக்கலாம். இங்கு அவரது செயலையே இடையில் நிகழ்ந்த புதிய செயலாகக் கருதவேண்டும். அது முன்னறியத்தக்கதாயினும், அச்சூழ்நிலையில் முறையற்ற தாகவே கருதவேண்டும். அவ்வாறு குதிப்பதைத்தவிர அவருக்கு வேறு வழிஇல்லையாயின் அவரது செயல் காரண காரியச்சங்கிலித் தொடரை முறித்திருக்காது. வாதி தன்னிச்சையாகப் புரிந்த செயலால் தனக்கே இழப்பினைத் தேடிக் கொள்கிறார். இப்போது அவருக்கு ஏற்படும் விளைவு மிகச் சேய்மையானதாகக் கருதப்பட்டு எதிர்வாதி பொறுப்பிலிருந்து விடுவிக்கப்படுவார். S. S. அமெரிக்கா (S.S. Amerika) வழக்கில் எதிர்வாதி தம் நீராவிக்கப்பலை கவனமின்றிச் செலுத்தியதால் அரசுக்குச் சொந்தமான நீர்மூழ்கிக்கப்பல் ஒன்று மூழ்கடிக்கப்பட்டது. நீர் மூழ்கிக்கப்பலில் மூழ்கி மாண்ட மாலுமிகளின் உறவினருக்கு மாலுமிகளின் ஓய்வூதியத் தொகையைப் பணமாக்கி அரசு அளித்த பின்னர், அதற்கு ஈடுகேட்டு எதிர்வாதியின் மேல் வழக்கிட்டது. இவ்வழக்கில் இயற்றுச் சட்டத்தின்கீழ் ஒருவர் சாவுக்கு உரிமை இயலில் வழக்கிட முடியாது என்பதோடு, ஏற்பட்ட தீங்கு சேய்மையானதாகும் என்றும் தீர்ப்பு அளிக்கப்பட்டது. ஏன் என்றால் அரசு கருணை உணர்வுடன் இவ்வாறு அவர்களின் உறவினருக்கு ஓய்வூதியத்தை முழுத்தொகையாக்கித் தந்துள்ளது. இவ்வாறு தருமாறு சட்டப்படி அரசைக் கட்டாயப் படுத்தமுடியாது. மாலுமிகளின் உறவினர்

களுக்கு அதைக் கேட்க சட்டப்படி உரிமையில்லை. எனவே இச் செயல் அரசின் தன்னிச்சையான செயலாகும். இந்த இழப்பை அரசே ஏற்க வேண்டும். இதற்கு எதிர்வாதிகள் பொறுப்பாளியாக மாட்டார்கள் என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

28. மன அதிர்ச்சி அல்லது நரம்பு மண்டலத்தைப் பாதிக்கும் அதிர்ச்சி (Nervous Shock)

எதிர்வாதி கத்தி, தடி துப்பாக்கி போன்ற ஆயுதங்களைக் கொண்டு வாதியைத் தாக்கி அவருடைய உடலுக்கு ஊறு ஏற்படுத்தலாம். இதைத் தவிர வாதிக்கு அவன் காணும் காட்சியாலும், கேட்கும் செய்தியாலும் உடலுக்கு ஊறு ஏற்படலாம். வாதிக்கு அவமானம், வெட்கம், அச்சம், கவலை, சினம், மன எரிச்சல், ஏமாற்றம், மட்டற்ற திகில், பெருந்துன்பம் போன்ற உணர்ச்சிகளை ஏற்படுத்தி அதன் விளைவாக அவனது உள்ளத்தில் நெகிழ்ச்சியும், தடுமாற்றமும் ஏற்படும் முறையில் எதிர்வாதி நடந்து கொண்டதன் விளைவாக அவனுக்கு மன அதிர்ச்சியும், அதைத் தொடர்ந்து உடல்நோயும் பிறகோளாறுகளும் ஏற்படலாம். இதற்காக அவன் எதிர்வாதியின்மேல் வழக்கிடலாம். வாதியின் உடலை எதிர்வாதி தாக்கியிராவிட்டாலும் கண், காது ஆகிய புலன்களின் மூலமாக அவனுக்கு மன அதிர்ச்சி ஏற்பட்டு உடலுக்கு ஊறு ஏற்பட்டிருந்தால் அவன் தீங்கீடு பெறமுடியும் என்பதை நீதிமன்றங்கள் ஏற்றுக் கொண்டுள்ளன. இத்தகைய தீங்கினைக் குறிக்க மன அதிர்ச்சி 'நரம்பு மண்டலத்தைப் பாதிக்கும் மனஅதிர்ச்சி' 'உணர்ச்சிகளை பாதிக்கும் அதிர்ச்சி' என்ற தொடர்கள் பயன் படுத்தப்பட்டுள்ளன. தனக்கு மனஅதிர்ச்சி ஏற்பட்டுள்ளதாகச் சொல்லும் வாதி மருத்துவச் சான்று மூலமோ அல்லது அறிவியல் சான்று மூலமோ அதன் விளைவாகத் தனக்கு உடல் நலம் கெட்டுள்ளதாக நிரூபிக்க வேண்டும்.

இனி மனஅதிர்ச்சி ஏற்படும் வகைகளைப் பற்றிக் காண்போம்:

(1) வேண்டுமென்றே எதிர்வாதி கருதிச்செய்த தீமையினால் ஏற்படும் மன அதிர்ச்சி

வில்கின்சன் *v.* டௌன்டன் (Wilkinson *v.* Downton) வழக்கில் எதிர்வாதி வாதியிடம் சென்று அவனுடைய கணவர் ஒரு பயங்கர

மான விபத்தில் சிக்கி இரு கால்களும் முறிந்து, ஒரு மதுக்கடையில் கிடப்பதாகவும் அவள் உடனே அங்கு சென்று அவரை அழைத்து வரவேண்டுமென்றும், விளையாட்டாகப் பொய்த் தகவல் சொன்னான். இந்தப் பொய்யான தகவலை வாதி உண்மை என்று நம்பியதன் விளைவாக அவளுக்குக் கடுமையான மன அதிர்ச்சி ஏற்பட்டது. அவள் உடல்நலம் குன்றியது; அவள் தலைமயிர் வெளுத்தது;. சில காலம் அவள் உயிருக்கே ஆபத்து ஏற்பட்டிருந்தது. அவளது மருத்துவ சிகிச்சைக்காக அவள் கணவன் பெரும்தொகை செலவழிக்க நேர்ந்தது. இவ்வழக்கில் எதிர்வாதி வேண்டுமென்றே செய்த செயலால் அவளது உடல்நலம் குன்றியது. அவனது செயலுக்கு எந்த நியாயமும் இல்லை. எனவே அவன் தீங்கிடு தரவேண்டுமென்று தீர்ப்பளிக்கப்பட்டது. ஆயினும் வாதிக்கு ஏற்பட்ட ஊறு மனஅதிர்ச்சியாக இருந்தால்தான் இவ்வழக்கில் சொல்லப்பட்ட முடிவு பொருந்தும் என்று சொல்லமுடியாது. எடுத்துக்காட்டாக, இந்தப் பொய்யான செய்தியைக் கேட்டதன் விளைவாக வாதி மயங்கி விழுந்து தன்னுடைய காலை முறித்துக் கொண்டிருந்தாலும் எதிர்வாதி பொறுப்பாளியாகத்தான் கருதப்பட்டிருப்பான். இதைப்போலவே, எடுத்துக்காட்டாக ஒரு சிற்றோடையின் குறுக்கே போடப்பட்டிருக்கும் ஒரு பலகையின்மேல் நடந்து சென்று கொண்டிருக்கும் ஒரு குழந்தையைப் பார்த்து ஒருவன் உரக்கக் கத்தியதைக் கேட்டு அக்குழந்தை திரும்பிப் பார்க்கும் போது நிலைதடுமாறித் தண்ணீரில் விழுந்து ஊறு ஏற்பட்டிருந்தாலும் அவன் பொறுப்பாளியாவான். வாதிக்கு ஏற்படும் மன அதிர்ச்சி எதிர்வாதி சொல்லும் தகவலால்தான் ஏற்பட்டிருக்க வேண்டும் என்பதில்லை. அது அவன் நடத்தையாலும் செயலாலும் ஏற்படலாம். எடுத்துக்காட்டாக, வாதி பேயினைப்போல ஆடை அணிந்து கொண்டு சென்று வாதியைப் பயன்படுத்துவதால்கூட அவனுக்கு மன அதிர்ச்சி ஏற்படலாம். வில்கின்சன் வழக்கில் ஊறு செய்ய வேண்டுமென்ற நோக்கம் எதிர்வாதிக்கு இருந்ததாக ஊகிக்கப்பட்டது. அவன் தன் செயலுக்கு எந்த நியாயமோ, காரணமோ இருந்ததாக நிரூபிக்கவில்லை. வாதிக்கு ஏற்பட்ட ஊறு தான் செய்ய வேண்டுமென்று கருதியதையும், தான் எதிர்பார்த்ததையும்விட அதிகமாகவே இருக்கிறது என்று எதிர்வாதி கூறினால் அதை நீதிமன்றம் ஏற்காது. வாதியின் கணவர் உண்மையிலேயே விபத்துக்குள்ளாகியிருந்தால் எதிர்வாதி சொல்லிய தகவல் நியாயமானதாகக் கருதப்பட்டிருக்கும்; அவன் பொறுப்பாளியாகியிருக்க மாட்டான். சில சமயங்களில் உடல் நலம் மிகவும் குன்றிப் படுத்தபடுக்கையில் கிடப்பவரிடம் அவருடைய நெருங்கிய உறவினர் ஒருவர் இறந்த செய்தியைச் சொல்ல

வேண்டியநிலை ஏற்படலாம். அதைக் கேட்டதன் விளைவாக அவரது உடல்நிலை மிகவும் மோசமாகலாம். ஆயினும் அச்செய்தியைச் சொன்னவர் பொறுப்பாளியாக மாட்டார். எதிர்வாதி கருதிச் செய்யும் செயல் மூன்றாவது மனிதருக்கு எதிரானதாயினும் அதன் விளைவாக வாதிக்கு மனஅதிர்ச்சி ஏற்பட்டால் எதிர்வாதி பொறுப்பாளியாவார். எடுத்துக்காட்டாக 'அ' என்பவன் 'ஆ' என்பவனைக் கடுமையாகத் தாக்குகிறான். அப்போது அவன் அருகில் நின்று கொண்டிருந்த எட்டுமாதக் கருவுற்றவளாகிய 'ஆ' வின் மனைவி மனஅதிர்ச்சி அடைகிறார். அதன் விளைவாக அவளுக்குக் குறை மகப்பேறு ஏற்பட்டு, குழந்தை இறந்தே பிறக்கிறது. அவளுக்கு ஏற்பட்ட தீங்குக்கு 'அ' பொறுப்பாளியாவான்.

'அ' என்பவன் மருத்துவமனையொன்றில் நுழைந்து அங்கிருந்த அவனுடைய எதிரியாகிய 'ஆ' என்பவனை வாய்க்கு வந்தபடி ஏசி கொலை செய்வதாக மிரட்டுகிறான். அப்போது அங்கு நோயாளியாக மோசமான உடல்நிலையுடன் கிடக்கும் 'இ' என்னும் நோயாளி மனஅதிர்ச்சியடைகிறான். 'இ' யின் உடல்நிலைபற்றி 'அ' வுக்கு எதுவும் தெரியாவிட்டாலும் அவன் 'இ'க்குப் பொறுப்பாளியாவான். அவன் நடந்து கொண்டவிதம் நியாயமற்றதாக இருப்பதால் அவன் நடத்தையால் ஏற்படும் விளைவுகளுக்குப் பொறுப்பாளியாகின்றான். வெறும் பய உணர்ச்சி அல்லது மனத்துயர் மட்டும் வாதிக்கு ஏற்பட்டிருந்தால் அவனுக்குத் தீங்கீடு கிடைக்காது. ஆனால் பயம் அல்லது வேறு உணர்ச்சிகள் ஏற்பட்டதன் விளைவாக வாதிக்குக் குறிப்பிட்ட உடல்நலக் குறைவு ஏற்பட்டிருந்தால் எதிர்வாதி பொறுப்பாளியாவான்.

கவனமின்மையால் ஏற்படும் மன அதிர்ச்சி

இங்கு வாதி தனக்கு ஊறு ஏற்படுத்தாமல் இருக்கவேண்டிய கடமை எதிர்வாதிக்கு இருந்தது என்றும், அக் கடமையிலிருந்து அவன் தவறினான் என்றும், அதன் விளைவாகத் தனக்கு மன அதிர்ச்சியும், அதைத் தொடர்ந்து உடல்நலக் குறைவு ஏற்பட்டதென்றும் நிரூபிக்கவேண்டும்.

டுலியூ v. வைட் (Dulieu v.White) வழக்கில் கருவுற்றவளான வாதி அவளுடைய கணவன் நடத்திவந்த மதுக்கடையில் நின்று கொண்டிருந்தாள். அப்போது எதிர்வாதியின் பணியாட்கள் கவனமின்றி அவருடைய இரட்டைக் குதிரைகள் பூட்டிய வண்டியைக் கடைக்குள்ளேயே ஓட்டினர். அதைப் பார்த்ததன்

விளைவாக வாதிக்கு எதுவும் ஏற்படவில்லையென்றாலும், அவளுக்கு மன அதிர்ச்சி ஏற்பட்டு, அதன் விளைவாக அவளுக்குப் பிறவி மந்தம் கொண்ட குழந்தை பிறந்தது. இவ்வழக்கில் எதிர்வாதி பொறுப்பாளியாவார் என்று தீர்ப்பளிக்கப்பட்டது; அவளுக்கு ஏற்பட்ட அதிர்ச்சி அவளது உடலுக்கு உடனடியாகக் காயம் ஏற்படும் என்ற பயத்தினால் ஏற்பட்டதாக இருக்கவேண்டும் என்ற நிபந்தனை இவ்வழக்கில் சொல்லப்பட்டது.

இக் கருத்தை – நிபந்தனையை — ஹாம்புரூக் v. ஸ்டோக்ஸ் பிரதர்ஸ் (Hambrook v. Stokes Bros.) வழக்கில் நீதிமன்றம் ஏற்கவில்லை. இவ்வழக்கில் ஒரு குறுகலான சாலையின் உச்சியில் தனது குழந்தைகளை ஒரு பெண் விட்டுக் கீழிறங்கி வந்தாள். சிறிது நேரம் கழிந்த பின்னர், அச் சாலையின் உச்சியிலிருந்து எதிர்வாதியின் லாரி மிக வேகமாக ஓட்டுநர் இன்றி இறங்கி வந்து கொண்டிருந்தது. எதிர்வாதி கவனமின்றித் தனது லாரியை சாலையின் உச்சியில், அதன் என்ஜின் ஓடிக் கொண்டிருக்க, விட்டுச் சென்றிருந்தார். அவள் அந்த லாரி தான் இருக்கும் இடத்தை நோக்கி வந்து கொண்டிருப்பதைக் கண்டதும் தன்னுடைய குழந்தைகளுக்கு என்ன ஆபத்து நேர்ந்திருக்குமோ என்று பயப்பட்டாள். அவள் தெருவின் திருப்பம் ஒன்றைக் கடந்து சென்றிருந்தபடியால் அவளது குழந்தைகளைக் காண அவளால் இயலவில்லை. சிறிது நேரங்கழித்து அவ்வழியே சென்ற சிலர் அவளிடம் சாலையில் ஒரு லாரி மோதி ஒரு குழந்தையொன்று காயமுற்று இறந்து விட்டதாகக் கூறினர். அவர்கள் அக் குழந்தையைப் பற்றிக் கூறிய அங்க அடையாளங்கள் அவளது குழந்தையினுடையவற்றை ஒத்திருந்தன. இதனால் அவள் மன அதிர்ச்சியுற்றுப் பின்னர் அதன் விளைவாக மாண்டு போனாள். இங்கு அவளுக்கு உடற்காயம் ஏற்படக்கூடிய சூழ்நிலை இல்லையெனினும் கவனமின்றி, லாரியைப் பார்த்துக் கொள்ளக் காவலாக யாரையும் நிறுத்தாமல் சென்ற எதிர்வாதிகள் அவளுக்கு ஏற்பட்ட மன அதிர்ச்சிக்குப் பொறுப்பாளியாவார் என்று தீர்ப்பளிக்கப்பட்டது. மற்றவர்க்கு ஆபத்து ஏற்படுமோ என்ற பயத்தினாலும், மற்றவர்க்கு விபத்து ஏற்பட்டதைக் கண்ணுற்றதாலும் ஒரு வழிப்போக்கருக்கு அதிர்ச்சியும், ஊறும் ஏற்படலாம். அவருக்குத் தீங்கீடு தர மறுப்பதற்கு எந்த நியாயமும் இல்லை. ஹாம்புரூக் வழக்கில் அவள் லாரி கீழ்நோக்கி வருவதைத் தானே கண்டாள். தவிர மற்றவர்களும் குழந்தையொன்று விபத்துக்குள்ளானதாகச் சொன்னார்கள். இவ்விரண்டு காரணங்களும் சேர்ந்து அவளுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கலாம். இவ்வழக்கில் அவளுக்கேற்பட்ட அதிர்ச்சி எந்தத்

தூண்டுதலுமின்றி அவள் தனது புலன்களால் உணர்ந்தவற்றாலும், பார்த்தவையாலும் ஏற்பட்டிருந்தால்தான் எதிர்வாதி பொறுப்பாளி யென்றும், மற்றவர்கள் அவளிடம் சொன்னதால் ஏற்படக் கூடிய அதிர்ச்சிக்கும் அவன் பொறுப்பாளியல்ல வென்றும் வாதிடப் பட்டது. ஆனால் ஒரு விபத்து பற்றிய செய்தி கேட்டு ஏற்படும் அதிர்ச்சி முன்னறியத்தக்கது. ஆகவே இந்த வாதம் ஏற்றுக் கொள்ள முடியாதது. ஹாம்புரூக் வழக்கில் எதிர்வாதி தனது வாதுரையில் தன்னுடைய கவனமின்மையை ஒப்புக் கொண்டார். இதனால் அவர் வாதியின் பால் காட்டவேண்டிய கடமையிலிருந்து வழுவியதாக ஒப்புக் கொண்டதாகக் கருதலாம். எனவே இவ் வழக்கில் எவ்வெச் சூழ்நிலைகளில் பிறருக்கு மன அதிர்ச்சி ஏற் படாவண்ணம் எதிர்வாதி கவனத்தோடு நடந்து கொள்ள வேண்டும் என்று தீர்மானிக்கவேண்டிய தேவை ஏற்படவில்லை. ஆயினும் இதில் இன்னொரு கேள்வி எழுந்தது. ஒருவனது உடலுக்கு எந்த ஆபத்தும் ஏற்படாவிட்டாலும் ஒரு விபத்தைப் பார்ப்பதால் மட்டுமே அதிர்ச்சி ஏற்பட்டால் அவனுக்குத் தீங்கீடு கிடைக்குமா? டூலி v. கேம்மல்லெய்ர்டு & கம்பெனி (Dooley v. Cammell Laird & Co.,) வழக்கில் எதிர்வாதிகளின் கவனம் இன்மையால் பாரந்தூக்கி இயந்திரத்தின் கயிறு அறுந்து, அதிலி ருந்த சுமை மனிதர்கள் வேலை செய்து கொண்டிருந்த கப்பலின் சரக்கறையொன்றில் விழுந்தது. பாரந்தூக்கியை இயக்கிய வாதி கப்பலில் வேலை செய்து கொண்டிருந்த ஆட்களுக்கு ஏற்பட்டிருந்த ஆபத்தைக் கண்டதால் அதிர்ச்சி அடைந்தான். ஆனால் அவனுக்கு எந்த ஆபத்தும் ஏற்பட்டிருக்கவில்லை. வாதிக்கு ஏற் பட்ட மன அதிர்ச்சிக்கு எதிர்வாதி பொறுப்பாளி என்று தீர்ப்பளிக் கப்பட்டது. வாதிக்கு ஏதாவது ஆபத்து ஏற்பட்டு இருந்தால் தான் அவன் தீங்கீடு பெறமுடியும் என்ற வாதம் நிராகரிக்கப் பட்டது. கயிறு அறுந்து விழுந்தால் பாதிக்கப்படக்கூடிய அதாவது அதிர்ச்சி அடையக்கூடிய—நபர்களில் வாதியும் ஒருவன் என்பதை எதிர்வாதி கருதி இருக்க வேண்டும். எனவே அவர் கவனம் காட்டவேண்டிய கடமையிலிருந்து தவறினார் என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

போர்டுமென் v. சாண்டர்சன் (Boardman v. Sanderson) வழக்கில் ஒரு காரில் 'அ' என்பவரும், அவர் நண்பர் 'ஆ' வும் 'ஆ' வின் மகனும் ஒன்றுகப் பயணம் செய்தனர். அக்காரினை 'அ' ஓட்டிச் சென்றார். காரில் பெட்ரோல் நிரப்ப அவர்கள் காரை ஓரிடத்தில் நிறுத்தினர். பெட்ரோலுக்குப் பணம் கொடுப்பதற்காக 'ஆ' வை அலுவலகத்திற்கு செல்லுமாறு 'அ' சொன்னார். 'ஆ'வும் அவர் மகனும் காரை விட்டு இறங்கினர். 'ஆ' அலுவகத்திற்குச்

சென்ற பின்னர், 'அ' காரைப் பின்னேக்கி ஓட்ட, கார் 'ஆ' வின் மகன் கால்மேல் ஏறியது. 'ஆ' தன்மகனின் அலறலைக் கேட்டு அவனுக்குதவ ஓடிவந்தார். இதனால் அவருக்கு ஏற்பட்ட மன அதிர்ச்சிக்காக 'அ' பொறுப்பாளி என்று தீர்மானிக்கப்பட்டது. அக் கட்டிடத்தில் அக்குழந்தையின் அலறலைக் கேட்டு உதவிக்கு ஓடி வரக்கூடிய அதன் உறவினர் இருக்கக்கூடும். அப்படிப் பட்டவர்கள் இருக்கக் கூடும் என்பது எதிர்வாதி அறியத்தக்க தாயின் அவர்களுக்கு ஏற்படும் மன அதிர்ச்சிக்குப் பொறுப்பாளி யாவார். எனவே அவர்களிடத்தும் கவனத்தோடு இருக்க வேண்டிய கடமை எதிர்வாதிக்குண்டு. ஆனால் அத்தகைய உறவினர் அங்கிருப்பதை அவர் அறியாமல் இருக்கலாம். ஆனால் அவர் அவர்கள் இருப்பதை அறிந்திருக்கவேண்டிய நிலையில் இருக்கலாம். அவர்கள் அக்குழந்தையின் உறவினர்கள் என்று அவருக்குத் தெரியாமல் இருக்கலாம். இந்நிலையில் அவர்கள் பால் கவனம் காட்டவேண்டிய பொறுப்பு எதிர்வாதிக்குண்டா என்று இவ்வழக்குத் தெளிவாக்கவில்லை.

மற்றவருக்கு ஏற்பட்ட காயத்தாலோ அல்லது காயமேற்படக்கூடும் என்ற பயத்தாலோ ஏற்படும் மனஅதிர்ச்சி

'அ' என்பவன் தனது கவனமின்மையால் 'ஆ' என்பவருக்கு உடற்காயமோ அல்லது காயமேற்படக்கூடிய ஆபத்தையோ ஏற்படுத்துகிறான். இதைப் பார்த்ததாலோ அல்லது கேட்டதாலோ 'இ' என்பவன் மன அதிர்ச்சியும், உடல் நலக்குறைவும் அடை கிறான். இதற்காக 'இ' என்பவன் 'அ' வின் மேல் வழக்கிடலாம். இங்கு அவன் வழக்கிட, தனக்கு ஊறு ஏற்படுத்தாமலிருக்க 'அ' என்பவன் உரிய கவனம் காட்ட வேண்டிய கடமை கொண்டவன் என்றும், 'அ' கடமையிலிருந்து தவறினான் என்றும் நிரூபிக்க வேண்டும். அத்துடன் அக்கடமையிலிருந்து தவறியதற்கும், அதன் விளைவாக ஏற்பட்ட ஊறுக்கும் உள்ள காரண காரியத் தொடர்பினை அவன் நிலை நாட்டவேண்டும். நல்லறிவுள்ள மனிதனுக்கு இருக்கவேண்டிய கடமையும் கவனமும் எதிர்வாதிக்கு இருந்தால் போதுமானது. வாதிக்கு உண்மையில் ஏற்பட்ட காயம் சமநிலை அறிவு அல்லது நல்லறிவுள்ள மனிதனால் முன்னறியக் கூடியதே என்று வாதி நிரூபிக்கவேண்டும்.

போர்ஹில் *v.* யங் (Bourhill *v.* Young) வழக்கில் மீன் விற்கும் பெண்ணாகிய வாதி டிராம் வண்டியிலிருந்து இறங்கி தனது மீன் கூடையை ஓட்டுநர் மேடையிலிருந்து பின்புறவழியாக இறக்கிக் கொண்டிருந்தாள். அப்போது டிராமில் மறுபுறத்தில் கவன

மின்றித் தனது மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த ஒருவன் மோட்டார் கார் ஒன்றின் மேல் மோதிப் படுகாயமடைந்து மாண்டு போனான். இவ்விபத்து நடந்த இடத்திலிருந்து வாதி சுமார் 50 அடி தொலைவில் இருந்தார். அவை மோதிய ஓசையைத்தான் அவள் கேட்டாள். மோட்டார் சைக்கிள் ஓட்டியின் உடல் அங்கிருந்து அகற்றப்பட்டபின் அவள் சென்று அந்த இடத்தில் படிந்திருந்த குருதிக்கறைகளைப் பார்த்தாள். இந்த மோதலின்போது ஏற்பட்ட ஓசையைக் கேட்டதன் விளைவாக அவள் தனக்கு மன அதிர்ச்சி ஏற்பட்டதாகக் கூறினாள். அப்போது அவள் எட்டு மாதக் கருவுற்றவளாக இருந்தாள். சுமார் ஒரு மாதங்கழித்து அவளுக்கு ஒரு குழந்தை இறந்தே பிறந்தது. தவிர அவளுக்கு வேறுபல உடற்கோளாறுகளும் ஏற்பட்டன. மோட்டார் சைக்கிள் ஓட்டியவரின் கவனமின்மையாலேயே இந்த விபத்து ஏற்பட்டது என வாதிடப்பட்டது. இவ்வழக்கில், பிரபுக்கள் சபை மோட்டார் சைக்கிள் ஓட்டியவர் வாதியின்பால் கவனத்தோடு இருக்க வேண்டிய கடமை கொண்டவர் அல்லா என்றும், அவர் தனது கவனமின்மையால் வாதி இருந்த இடத்தில் உள்ள எவரும் மன அதிர்ச்சியால் பாதிக்கப்படக்கூடும் என்று முன்னறிந்திருக்க முடியாது என்று கருத்துத் தெரிவித்தது. இவ்வழக்கில் உள்ள சூழ்நிலைகளை ஆராய்ந்து பார்த்து பிரபுக்கள் சபை இம்முடிவுக்கு வந்தது. இங்கு மோட்டார் சைக்கிள் ஓட்டியவரின் கவனமின்மையால் உடற்காயமோ அல்லது அதிர்ச்சியோ அடையக்கூடிய நபர்கள் இருக்கக்கூடிய இடத்தில் வாதியில்லை. எனவே வாதிக்கு ஏற்பட்ட மன அதிர்ச்சி அவரால் முன்னறியத் தக்கதல்ல. வாதிக்கு ஏற்பட்ட அதிர்ச்சியின் விளைவாக ஏற்பட்ட ஊறு முன்னறியத்தக்கதா என்று நாம் அறிய வேண்டும். அது முன்னறியத்தக்கதாயின் எதிர்வாதி பொறுப்பாளியாகிறார். வாதி தன்னுடைய உடலுக்கு ஊறு விளையும் ஆபத்து இருந்தது என்று நிரூபிக்கத் தேவையில்லை. அவன் தன்னுடைய மனைவி, மக்களல்லாத உறவினர்க்கோ அல்லது நண்பர்க்கோ, அல்லது மூன்றாவது நபருக்கோ ஏற்படக்கூடிய ஆபத்தைக் கண்டதாலோ அல்லது கேட்டதாலோ ஊறு அடைந்திருக்கலாம். இதற்கும் எதிர்வாதி பொறுப்பாளியாவார். காயமடைந்த நபருக்கும் வாதிக்குமுள்ள உறவை எதிர்வாதி தெரிந்திருக்க வேண்டுமென்றோ அல்லது முன்னறிந்திருக்க வேண்டுமென்றோ எந்த வழக்கும் சொல்லவில்லை. வாதி அங்கிருப்பது எதிர்வாதிக்குத் தெரியுமென்றோ அல்லது தெரிந்து கொண்டிருக்க வேண்டுமென்றோ நிரூபித்தால் போதும்.

கிங் v. பிலிப்ஸ் (King v. Phillips) வழக்கில் எதிர்வாதியின் பணியாளால் ஓட்டப்பட்ட வாடகைக் கார் கவனமின்றிப் பின்னோக்கி ஓட்டப்பட்டபோது, காரின் பின்புறம் தனது மூன்று சக்கர சைக்கிளில் அமர்ந்திருந்த ஒரு சிறுவன் மேல் மோதி அவனுக்குச் சிறுகாயம் ஏற்பட்டது. அவனது அலறலை 70 அல்லது 80 கெஜ தொலைவிலுள்ள வீட்டிலிருந்து கேட்ட அவனுடைய தாய் சன்னலின் வழியே எட்டிப் பார்த்தாள். அவள் அந்த வாடகைக் கார் சிறுவன் இருந்த மூன்று சக்கர சைக்கிளின் மீது பின்னோக்கிச் செலுத்தப்படுவதைக் கண்டாளே தவிர குழந்தையைக் காண முடியவில்லை. அதாவது அவள் வாடகைக்காரின் அடியில் மூன்று சக்கர சைக்கிளைத் தான் பார்த்தாள். அதன் விளைவாக அவளுக்கு அதிர்ச்சி ஏற்பட்டது. அதற்காக அவள் அந்த வாடகைக் கார் ஓட்டுநர் மேல் தீங்கீடு கோரி வழக்கிட்டாள். வாடகைக் கார் ஓட்டுநர் அவள் அந்த இடத்தில் இருக்கக்கூடும் என்று முன்னறிந்திருக்க முடியாதென்பதால் அவர் பொறுப்பாளியல்லர் என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

1967ஆம் ஆண்டில், சாட்விக் v. பிரிட்டிஷ் டிரான்ஸ்போர்ட் கமிஷன் (Chadwick v. British Transport Commission) வழக்கில் எதிர்வாதியின் கவனமின்மையின் காரணமாக ஒரு பெரிய புகைவண்டி விபத்து ஏற்பட்டது. அப்போது தன்னிச்சையாக மீட்சி வேலைகளில் ஈடுபட்டிருந்த ஒருவருக்கேற்பட்ட பயங்கரமான அனுபவத்தின் விளைவாக அவருக்கு சித்தப்பிரமை ஏற்பட்டது. இதற்கு எதிர்வாதி பொறுப்பாளி என்று தீர்ப்பளிக்கப்பட்டது. இதைப்போன்ற சூழ்நிலைகளில் எதிர்வாதி தன் கவனமின்மையால் யாரேனும் மனஅதிர்ச்சி அடையக்கூடும் என அவன் முன்னறிய முடியும். தவிர இவ்வழக்கில் நிகழ்ந்ததுபோல மீட்சி வேலைகளில் ஈடுபட்டுள்ளவர்பாலும், கவனத்தோடு இருக்க வேண்டிய கடமை எதிர்வாதிக்குண்டு. மற்றவர்களுடைய பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு பயத்தினால் ஏற்படக்கூடிய அதிர்ச்சிக்கும் ஒருவரைப் பொறுப்பாளியாக்க வேண்டும். இக்காரணங்களால் எதிர்வாதியைப் பொறுப்பாளியாவார் என்று நீதிமன்றம் கருதியது.

மனஅதிர்ச்சி ஏற்படுத்துவதற்காகத் தீங்கீடு தருவதை முடிவு செய்யும்போது பல்வேறு சமுதாய நலன்களை கருத்தில் கொண்டு ஒவ்வொரு நாட்டின் சட்ட அமைப்பும் தீர்மானிக்க வேண்டும். எனவே இது ஒரு கொள்கைப் பிரச்னையாகவும் இருக்கிறது. எனவே பகுத்தறிவின் துணையைமட்டும் கொண்டு பொதுவான நெறிமுறைகளை வகுப்பது எளிதல்ல.

29. ஒரே தீங்கிற்காகத் தொடர்ந்து பல முறை வழக்கிடல்
(Successive actions for the same injury)

எதிர்வாதி தனக்குத் தீங்கிழைத்தான் என்று கூறும் வாதி தனக்கு ஏற்பட்ட இழப்புகள், காயங்கள் அனைத்துக்கும் ஒரே வழக்கிலேயே நிவாரணம் கேட்க வேண்டும். எனவே எதிர்வாதி தரக் கடமைப்பட்டுள்ள தீங்கீட்டின் ஒருபகுதியை மட்டும் கேட்டு வாதி வழக்கிடமுடியாது. உரிமையியல் நடவடிக்கைச் சட்டத்தின் உத்திரவு 2, விதி 2 (Civil Procedure Code Order 2, Rule 2) இவ்வாறு கூறுகிறது. எந்த வழக்குக்கும் ஒரு முடிவு இருப்பதே நாட்டு நலனுக்கு உகந்தது. எனவே வழக்குக்கு மூலமாக அமைந்துள்ள தீங்கினால் வாதிக்கு ஏற்பட்டுள்ள இழப்புகள் அனைத்துக்கும் ஆக தீங்கீட்டினை ஒரே வழக்கிலேயே அவன் தேடிக் கொள்ளவேண்டும். இதுவே நடைமுறை விதி. வாதி தனது இழப்பினை வெவ்வேறு பகுதிகளாகப் பிரித்துக் கொண்டு வழக்கிட அனுமதிக்கப்பட்டால் அவன் எல்லையின்றித் தொடர்ந்து எதிர் வாதியின்மேல் வழக்கிட்டுக் கொண்டேயிருப்பான். இதன் விளைவாக எதிர்வாதிக்குக் கொடுமையும் சிரமமும் இன்னலும் நேரும். எனவே எதிர்வாதியின் கவனமின்மையால் தனக்கு உடற்காயம் ஏற்பட்டதெனக் கூறும் வாதி தனக்கேற்பட்ட காயத்திற்கும் இனிமேல் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய காயத்திற்குமாக மொத்தமாக இழப்பீடு கேட்டு வழக்கிட வேண்டும். எனவே அதே காயத்தினால் ஏற்படும் புதிய ஊறு அல்லது காயத்திற்காக மீண்டுமொரு வழக்கிட முடியாது. ஃபெட்டர் v. பீல் (Fetter v. Beale) வழக்கில் எதிர்வாதி தன்னுடலைத் தாக்கியதற்காகவும், தாக்கமுனைந்ததற்காகவும் அவனிடமிருந்து வாதி £ 11 இழப்பீடு பெற்றார். ஆனால் அவருக்கேற்பட்ட காயம் அவர் முன்பு எண்ணியிருந்ததைவிடக் கடுமையாக இருந்தது. அவர் எதிர்வாதியிட

மிருந்து இழப்பீடு பெற்றபின்னர், எதிர்வாதி தாக்கியதனால் அவர் தலையிலிருந்து மண்டையோட்டில் ஒரு பகுதி வெளியே வந்து விட்டது. அதற்காக அவர் ஒரு அறுவை சிகிச்சை செய்து கொள்ள நேர்ந்தது. எனவே தனக்கு ஏற்பட்ட அதிகமான ஊறுக்கு நிவாரணம் கேட்டு எட்டு ஆண்டுகள் கழித்து இரண்டாவது வழக்கிட்டார். ஆனால் நீதிமன்றம் அவருக்கு ஒரு வழக்கு மூலம்தான் உண்டென்றும், அது முதல் வழக்கில் தரப்பட்ட தீர்ப்பின்மூலம் தீர்ந்து போய்விட்டது என்றும் கூறிவிட்டது. ஆனால் எதிர்வாதி தனது நிலத்தில் பள்ளம் தோண்டுவதால் அண்டையிலுள்ள வாதியின் நிலம் சரிகிறது என்று வைத்துக் கொள்வோம். இங்கு வழக்குமூலமே இழப்பு அல்லது ஊறு ஏற்படும்போதுதான் தோன்றுகிறது. எனவே எதிர்வாதியின்மேல் தீங்குக்காக வழக்கிடும்போது எதிர்காலத்தில் ஏற்படக்கூடும் இழப்பினைக் கணித்துக் வழக்கிடல் இயலாது. எனவே இழப்பு ஏற்படும்போது அவர் வழக்கிடலாம்.

ஆனால் சில சமயங்களில் ஒரே தீங்குச் செயலின் விளைவாக வெவ்வேறு வழக்குமூலங்கள் உண்டாகலாம். அப்போது வாதி தொடர்ந்து ஒன்றுக்கு மேற்பட்ட வழக்கிட எந்தத் தடையும் இல்லை. எடுத்துக்காட்டாக, (1) எதிர்வாதி புரிந்த ஒரே தீங்கான செயலின் விளைவாக இரு வேறு உரிமைகளுக்கு ஊறு விளைவிக்கப் படலாம். (2) ஒரே உரிமையை மீறும்வகையில் எதிர்வாதிஇரண்டு தனித்தனியான செயல்களைச் செய்திருக்கலாம். (3) வழக்குமூலம் தொடர்ந்து நிகழ்வதாக இருக்கலாம்.

1. இருவகை உரிமைகளுக்கு ஊறுவிளைவித்தல்

எதிர்வாதி புரிந்த தீங்கான செயலின் விளைவாக வாதியின்இரு வேறு உரிமைகள்மீறப்பட்டிருந்தால்,ஒவ்வொரு உரிமைமீறப்பட்ட தற்கும் வாதி தனி வழக்கிடலாம். எடுத்துக்காட்டாக, - பிரன்ஸ்டன் v. ஹம்ப்ரி (Brunsden v. Humphrey) வழக்கில், எதிர்வாதி கவனமின்றித் தனது வண்டியை ஓட்டியதால் வாதியின் வண்டிக்குச் சேதமும் வாதிக்கு உடற்காயமும் ஏற்பட்டது. வாதியின் வண்டிக்கு ஏற்பட்ட சேதத்திற்காக வழக்கிட்டு எதிர்வாதியிடமிருந்து இழப்பீடு பெற்றபின்னர், தனக்கு அதே விபத்தில் ஏற்பட்ட உடற்காயத்திற்காக எதிர்வாதியின்மேல் இரண்டாவது முறை வழக்கிட்டு வாதி தீங்கீடு பெற்றார். இவ்வாறு வழக்கிடும் உரிமையைப்பெற வெவ்வேறான உரிமைகளுக்கு ஊறு விளைவிக்கப் பட்டிருக்க வேண்டும். அதே செயலின் விளைவாக ஒரே உரிமையை இருமுறை மீறியிருந்தால் இரு வழக்கிட முடியாது. எடுத்துக் காட்டாக, எதிர்வாதி கவனமின்றிக் காரை ஓட்டியதால் ஏற்பட்ட

விபத்தில் வாதிக்கு கையும் காலும் ஒடிந்துவிடுகிறது என்று வைத்துக் கொள்வோம். அப்போது அவர் எதிர்வாதியின்மேல் கையொடிந்ததற்காக ஒருவழக்கும், கால் ஒடிந்ததற்காக ஒரு வழக்கும் இடமுடியாது.

ஒரே உரிமையை மீறும்வகையில் இருப்பினும், ஒருவனுக் கெதிராக இரண்டு வெவ்வேருன தீங்குச் செயல்களைச் செய்திருந் தால் இருமுறை வழக்கிடலாம். எடுத்துக்காட்டாக வாதியின் நிலத்தில் எதிர்வாதி இருமுறை அத்துமீறி நுழைந்திருந்தால் வாதி இந்த இருமுறை அத்துமீறல் செயல்களுக்காக ஒரே சமயத்தில் வழக்கிட வேண்டியதில்லை. அவன் எதிர்வாதியின்மேல் ஒவ்வொரு அத்துமீறலுக்காகவும் தனித்தனியே வழக்கிடலாம்.

தொடர்ந்து நிகழும் தீங்கிற்கு தொடர்ச்சியாக வழக்கிடல் :

எதிர்வாதியின் தீங்கான செயல் தொடர்ந்து நிகழ்ந்து கொண் டிருப்பதாயின், வாதி தனக்கு நேர்ந்த தீங்குக்காக எதிர்வாதியின் மேல் வழக்கிட்ட நாளுக்குப் பின்னும் அத்தீங்கு தொடர்ந்து இருந்துவந்தால், அதற்காக இரண்டாவது வழக்கு இடலாம். இவ்வாறு அத்தீங்கு நிற்கும்வரையோ அல்லது அத்தீங்குஅகற்றப் படும்வரையோ அவன் வழக்கிட்டுக் கொண்டிருக்கலாம். எனவே வாதி முறையின்றிச் சிறைப்படுத்தப்பட்டிருந்தால் அவன் சிறையில் வைக்கப்பட்டுள்ள காலம்வரை தீங்கு தொடர்ந்து நிகழ் வதாகவே கருதப்படும். இதைப்போலவே வாதியின் நிலத்தில் அத்து மீறி நுழைந்த எதிர்வாதியின் நிலத்தில் இருக்கும் காலம்வரை அத்துமீறல் தொடர்ந்து நிகழ்வதாகவே கருதப் படும். எனவே தீங்கு இருந்துவரும் ஒவ்வொரு நாளுக்கும் அவன் வழக்கிடலாம். எதிர்வாதி புரிந்த தீங்கின் விளைவாக வாதிக்கு வழக்கிட்ட காலம்வரை ஏற்பட்ட இழப்புக்கு ஈடுசெய்யப் படும். எதிர்காலத்தில் தீங்கு தொடர்ந்து இருக்கக்கூடிய வாய்ப் பினைக் கருதி அதற்கு ஈடு தரப்படமாட்டாது. எதிர்காலத்தில் எதிர்வாதி தனது தீங்கான செயலை நிறுத்திக் கொள்ளமாட்டார் என்று உறுதியாகச் சொல்ல முடியாது. எதிர்காலத்தில் இழப்பு ஏற்படும் நிலையிருந்தால் அவ்வாறு இழப்பு ஏற்படும்வரை வாதி காத்திருந்து பின்னரே வழக்கிடமுடியும். எதிர்காலத்தில் இழப்பு நேரும் என்று உறுதியாய்ச் சொல்லமுடிந்தாலும், அதுநேரும் முன்பே இழப்பீடு பெறமுடியாது. இந்தச் சூழ்நிலையில் தொடர்ந்து நிகழும் தீங்கால் எதிர்காலத்தில் ஊறு அல்லது இழப்பு ஏற்பட் டாமல் தடுக்க வாதி நீதிமன்றத்தின் உறுத்துக்கட்டளை கோருவதே சரியான வழியாகும்.

குற்றமாகும் தீங்குச் செயல்கள் (Felonious torts)

அவதூறு, அத்துமீறல், உடலுக்குத் தாக்குதல் முதலிய தீங்குகள் தண்டிக்கத்தக்க குற்றங்களாகவும் இருக்கின்றன. இயற்றுச் சட்டத்தின்படி, ஒரு தீங்கு குற்றமாகவும் இருந்தால், முதலில் அதைச் செய்த எதிர்வாதியின்மேல் குற்றத்திற்காக வழக்கிட வேண்டும். அவ்வாறு குற்ற வழக்கிடப்படாமலோ அல்லது குற்ற வழக்கு இடப்படாததற்குப் போதுமான காரணங்களைக் காட்டாமலோ அவன் மேல் தீங்குக்காக வழக்கிடமுடியாது. இந்த விதி தற்போது குற்ற நீதிச்சட்டம், 1967 (Criminal Justice Act. 1967) பிரிவு 1-ன் படி இங்கிலாந்தில் மாற்றப்பட்டு விட்டது. எனவே களவு புரிந்த ஒருவன்மேல் குற்ற வழக்கிடு முன்னர் கையாடல் தீங்குக்காக அவன் மீது வழக்கிட முடியும். இதே நிலை இந்தியாவிலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. ஒருவர் தொடுத்த குற்றச்சாட்டு தள்ளுபடி செய்யப்பட்டிருந்தாலும், அவர் பின்னர் உரிமையியல் நீதிமன்றத்தில் தீங்கிழைத்தவர் மீது வழக்கிடத் தடையில்லை.

30. வெளிநாட்டில் இழைக்கப்பட்ட தீங்குகள் (Foreign Torts)

ஒருவன் வெளிநாட்டில் உள்ள நிலத்தில் அத்துமீறி நுழைந்ததற்காகவும் அல்லது அங்குள்ள நிலத்தில் வேறு ஏதேனும் ஊறு இழைத்ததற்காகவும் அவன்மீது நம் நாட்டில் வழக்கிடமுடியாது. ஆனால் இதைத் தவிர மற்ற தீங்குகளை வெளிநாட்டில் புரிந்ததற்காக அவன்மேல் நம் நாட்டில் வழக்கிடலாம். ஆனால் அவன் நம் நாட்டில் சாதாரணமாக வசிப்பவனாக இருக்கவேண்டும். எனவே இந்தியன் ஒருவன் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் அவதூறு அறிக்கை ஒன்றை வெளியிட்டதற்காகவோ அல்லது ஜப்பான் நாட்டில் ஒருவனைத் தாக்க முயன்றதாகவோ அவன்மேல் வழக்கிடத் தடையெதுவுமில்லை.

ஆனால், இவ்வாறு அயல் நாட்டில் இழைத்த தீங்கிற்காக ஒருவன் மேல் வழக்கிட இரு நிபந்தனைகள் உண்டு, அவை:

(1) எதிர்வாதி தீங்கெனக் கருதப்படும் செயலைப் புரிந்த நாட்டில் அச்செயல் நியாயமற்றதாகக் கருதப்பட வேண்டும். பிலிப்ஸ் *v.* அயர் (Phillips *v.* Eyre) வழக்கில், வாதியை முறையின்றிச் சிறைப்படுத்தியதாக ஜமெய்க்கா ஆளுநர் (Governor) மேல் வழக்கிடப்பட்டது. அவர் அங்கு ஏற்பட்ட கலகம் ஒன்றை ஒடுக்குவதற்காகத்தான் வாதியைக் கைது செய்ததாக எதிர்வாதம் செய்தார். அங்குள்ள சட்டமன்றம் சட்டம் ஒன்று இயற்றி அவரது செயலைச் சட்டபூர்வமானதென அறிவித்து, அவர் மேல் வழக்கிட முடியாதவாறு பாதுகாப்பளித்தது. எனவே எதிர்வாதி

ஆளுநர் மேல் வழக்கிட முடியாது என நீதிமன்றம் தீர்ப்பளித்து விட்டது. ஆயினும் பின்னர் முடிவு செய்யப்பட்ட மக்காடோ v. ஃபான்டெஸ் (Machado v. Fontes) வழக்கில், ஒருவர் தீங்கு புரிந்த அயல் நாட்டில் அது வழக்கிடக் கூடியதாக இருந்தால் தான், உள் நாட்டில் வழக்கிடமுடியும் என்ற கருத்தை நீதிமன்றம் ஏற்கவில்லை. எதிர்வாதியின் செயல் நிகழ்ந்த அயல் நாட்டில் அது சட்டப்படி நியாயமற்றதாகவும், தண்டிக்கக்கூடியதாகவும் இருந்தால் போதும், தீங்கியலில் வழக்கிடக் கூடியதாக இருக்கத் தேவையில்லை. இவ்வழக்கில் பிரேசில் நாட்டில் தன்னைப்பற்றி வெளியிட்ட அவதூறு அறிக்கைக்காக வாதி இங்கிலாந்தில் வழக்கிட்டுத் தீங்கீடு பெற்றான். பிரேசில் நாட்டில் அவதூறுக்காகத் தீங்கீடு கோரி வழக்கிட முடியாது. அங்கு அவதூறு வெறும் குற்றமாக மட்டுமே கருதப்படுகிறது. எனவே தீங்கு புரியப்பட்ட அயல் நாட்டில் எதிர்வாதியின் செயல் நியாயமற்றதாகவோ, சட்ட முரணானதாகவோ இருந்தால் போதும்; உரிமையியலில் வழக்கிடக் கூடியதாக இருக்கத் தேவையில்லை.

(2) அயல் நாட்டில் தீங்கிழைத்ததற்காக ஒருவன்மீது வழக்கிடப்படுமுன்னர் அச்செயல் நம் நாட்டுச் சட்டப்படி தீங்கியலில் வழக்கிடக் கூடியதாக அமைந்திருக்க வேண்டும். எனவே "எதிர்வாதிக்குப் பொறுப்புண்டா? எப்படிப்பட்ட பொறுப்பு அவனுக்குண்டு? அவன் எந்த அளவுக்கு பொறுப்பாளியாவான்?' என்பனவற்றைத் தீர்மானிக்க நாம் இந்தியச் சட்டத்தையே (Lex Fori) தான் பயன்படுத்த வேண்டுமேயல்லாது தீங்கு இழைக்கப்பட்ட நாட்டின் சட்டத்தை (Lex Loci Delicti) யல்ல. தீங்கிழைக்கப்பட்ட நாட்டின் சட்டப்படி எதிர்வாதியின் செயல் நியாயமானதாகக் கருதப்பட்டு இந்தியாவில் வழக்கிடமுடியாமல் போகலாம். ஆனால் அயல் நாட்டில் நிலவும் சட்டம் இந்தியாவில் வழக்கிடும் உரிமையை வழங்குவதில்லை. இந்த உரிமையை இந்தியச் சட்டத்திலேயே தேடிப்பெறவேண்டும். நாடுகளிடையே நிலவும் இந்த முரண்பாடான சட்ட நிலையைப் (Conflict of Laws) பற்றி நாடுகளிடையே கருத்து வேறுபாடு உண்டு. மேற்கூறிய விதியை இந்தியா, இங்கிலாந்து, ஜப்பான் போன்ற சில நாடுகளே ஏற்றுக்கொண்டுள்ளன.

இந்த இரட்டை விதிகளை ஏற்பதால் நீதி தவறும் வாய்ப்பு உண்டு. எடுத்துக்காட்டாக மெக்எல்ராய் v. மெக் அல்லிஸ்டர் (M'Elroy v. M'Allister) வழக்கில், கிளாஸ்கோ நகரில் வசித்த வாதியின் கணவர் எதிர்வாதியின் கவனமின்மையால் ஏற்பட்ட

சோக விபத்தொன்றில் சிக்கி மாண்டார். எதிர்வாதியும் கிளாஸ்கே நகரில் வசிப்பவரே. இவ்விபத்து ஸ்காட்லாந்தில் ஏற்பட்டிருந்தால் வாதி தந்தைமுறை இழப்பு (Patrimonial Loss), இழப்புக்கான ஆறுதல்தொகை (Solatium) ஆகியவற்றிற்குத் தீங்கீடாகப் பெருந்தொகை ஒன்றைப் பெற்றிருப்பார். இங்கிலாந்தில் வழக்கிடப்பட்டிருந்தால், மரணத்தை ஏற்படுத்தும் விபத்துச் சட்டத்தின்படி (Fatal Accidents Act. 1846-1908) விபத்தில் மாண்டவரையே வாழ்வில் ஆதரவாகக் கொண்டிருந்தவர் (Dependant) என்ற முறையிலும், சட்டத்திருத்த (பல்பொருள் வழிவகைச்) சட்டத்தின்படியும் (Law Reform Miscellaneous Provisions) Act, 1934) கணிசமான தொகையைத் தீங்கீடாகப் பெற்றிருப்பார் ஆனால் அவள் தன் கணவரின் ஈமச்சடங்கிற்காக 40 பவன் மட்டுமே நிவாரணமாகப் பெறமுடிந்தது. இந்த ஒன்றில் மட்டும்தான் ஸ்காட்லாந்து சட்டமும் ஆங்கிலச் சட்டமும் மாறுபட்டிருக்கவில்லை. அவள் இழப்புக்கு ஆற்றலவாக (Solatium) ஆங்கிலச் சட்டத்தின்படி தீங்கீடு பெறமுடியாது. ஏனெனில் அச்சட்டம் முறையின்றி ஏற்படும் சாவுக்காக அதை அளிப்பதில்லை. மரணமேற்படுத்தும் விபத்துகள் சட்டத்தின் கீழும் அவள் தோல்வியுற்றாள். ஏனெனில் அவள் அச்சட்டத்திற்கு முரணாக அந்தவிபத்து நடந்த 12 திங்கள் கழித்தே வழக்குத் துவங்கியிருந்தாள், சட்டத் திருத்தச் சட்டத்தின் (1934) கீழ் இட்டிருந்த வழக்கு தோல்வியடைந்தது. இதற்குக் காரணம் ஸ்காட்லாந்து சட்டப்படி பிறரது கவனமின்மையால் உடற்காயமுற்ற ஒருவன் வழக்கிட பெற்றுள்ள உரிமைகள் யாவும் அவன் சாவோடு மடிந்து போகின்றன. அவன் சாவதற்கு முன்பே வழக்கிட்டிருந்தால் மட்டுமே வழக்குப் பிழைக்கும்.

இந்தச் சிக்கலைத் தவிர்ப்பதற்காக, நாடுகளிடைச் சட்டமுரண்நிலை (Conflict of Law) ஏற்படும் சூழ்நிலையில், வாதி-எதிர்வாதி ஆகிய இரு தரப்பினரும் எந்த நாட்டோடு மிகவும் குறிப்பிடத்தக்கதான தொடர்பு (Most Significant Connection) கொண்டிருந்தார்களோ அந்த நாட்டின் தீங்கியல் சட்டத்தையே வழக்கிற்குப் பயன்படுத்தவேண்டும். எனவே தீங்கிழைக்கப்பட்ட நாட்டின் சட்டத்தின்படி பொறுப்புண்டா என்பதை மட்டும் கருதித் தீர்மானிக்கக் கூடாது. இந்நிலையை அமெரிக்காவில் சில மாநிலங்கள் ஏற்றுக் கொண்டுள்ளன.

ஆழ்கடலில் (High Seas) செல்லும் கப்பல் ஒன்றில் இழைக்கப்படும் செயல்களைப் பொறுத்தவரை, அக் கப்பல் எந்த நாட்டின்

கொடியைப் பறக்க விட்டுள்ளதோ அந்த நாட்டுத் தீங்கியற் சட்டப்படி அது தீங்காகுமா என்று பார்த்து முடிவு செய்ய வேண்டும். ஆனால் கப்பலுக்கு வெளியே நிகழும் செயலைப் பொறுத்தவரை, எடுத்துக்காட்டாக, இரு மீன்பிடி கப்பல்களுக்குள் எழுந்துள்ள தகராறு போன்றவற்றில் நாம் இதற்குமுன் கூறிய விதிகளைக் கடைப் பிடிக்க வேண்டும். அதாவது, அச்செயல் நம் நாட்டில் வழக்கிடத்தக்கதாகவும், அக் கப்பல் பறக்கவிட்டுள்ள கொடியின் நாட்டுச் சட்டப்படி நியாயமற்றதாகவும் அமைந்திருக்க வேண்டும். கடலில் இரு கப்பல்களுக்கிடையே ஏற்படும் மோதல்களைப் பொறுத்தவரை அவற்றிற்கெனத் தனிப்பட்ட கடலாண்மை வழக்கு விதிகள் (Admirality Rules) உள்ளன.

31. தீங்கு தீரும் வகைகள் (Discharge of Torts)

எதிர்வாதி ஒருவருக்கு வேண்டுமென்றே செய்த செயலினுலோ அல்லது செய்ய வேண்டிய செயலைச் செய்யாமல் விட்டதினுலோ அல்லது கவனமின்மையாலோ வாதிக்கு ஊறு அல்லது இழப்பு ஏற்படலாம். இதற்காக அவர் எதிர்வாதியின் மீது வழக்கிடும் உரிமையைப் பெறுகிறார். இதனுல் எதிர்வாதிக்கு ஏற்படும் பொறுப்பு பின்வரும் முறைகளில் தீர்க்கப்படலாம் :

1. வாதி, எதிர்வாதி ஆகிய இருவரில் ஒருவர் மடிதல் (Death of one of the parties)
2. விட்டுக் கொடுத்தல் (Waiver)
3. விடுதலை செய்தல் (Release)
4. முன்தீர்ப்பின் தடை (Resjudicata)
5. வழக்கிடும் கால வரையறைச் சட்டம் (Statute of Limitation)
6. ஒத்திசைவும் நிறைவு பெறுதலும் (Accord and Satisfaction)

மேற்கூறிய தீங்கு தீரும் முறைகளைப் பற்றி இங்கு சுருக்கமாகக் காண்போம். முதலில் தரப்பினர் ஒருவரின் சாவிற்கும், தீங்கியலில் ஏற்படும் பொறுப்பிற்கும் உள்ள தொடர்பினைப் பற்றித் தெரிந்து கொள்வோம்.

1. இறப்பும் தீங்கும்

ஒருவரது இறப்பு தீங்கியலில் எழக்கூடிய பொறுப்பினை இரு வகைகளில் பாதிக்கும். முதலாவதாக தரப்பினர் ஒருவரின் இறப்பால் தீங்கியலில் ஏற்படும் பொறுப்பு அற்றுப்போகும் நிலை

ஏற்படலாம். 'அ' என்பவர் 'ஆ' என்பவருக்குத் தீங்கிழைத்த பின்னர், அவ்விருவரில் யாராவது ஒருவர் இறந்து விட்டால் தீங்கிணை எய்திய 'ஆ' வழக்கிடமுடியுமா என்ற கேள்வி எழுகின்றது. அதாவது 'அ' இறந்துவிட்டால் 'ஆ' என்பவர் 'அ' என்பவரது வாரிசுகள் அல்லது சார்பாளர் மேல் வழக்கிடமுடியுமா? இரண்டாவதாக ஒருவரது இறப்பு தீங்கியலில் புதிய பொறுப்பினைத் தோற்றுவிக்கலாம். அதாவது 'அ' என்பவரது இறப்பு 'ஆ' என்பவரால் ஏற்பட்டிருந்தால் 'அ' என்பவரது சார்பாளர்களோ அல்லது அவர் உயிரோடு இருப்பதால் பயன்பெறும் மனைவி மக்களோ 'ஆ' என்பவர்மேல் வழக்கிடக்கூடிய வகையில் அது தீங்கான செயலாகுமா? இவற்றில் முதலாவதாகச் சொன்ன இறப்பினால் பொறுப்புத் தீரும் நிலைபற்றி முதலில் காண்போம். இயற்றுச் சட்டத்தின்படி தரப்பினரில் ஒருவர் மற்றவர்மேல் கொண்டுள்ள வழக்குமூலம் (cause of action) அவர்களில் ஒருவரின் சாவினால் அழிந்துவிடும். எடுத்துக் காட்டாக 'ஆ' என்பவர் 'அ' என்பவர் தன்னை அடித்தார் என்று தீங்கீடு கோரி அவர்மேல் வழக்கு தொடரலாம். ஆயினும் வழக்கு இடப்படுவதற்கு முன்பாக 'அ' என்பவர் இறந்து விட்டிருந்தால் வழக்கினைத் தொடரமுடியாது. இதைப்போலவே ஒருவர், மற்றவர் தமக்கு அவதூறு இழைத்தார் என்று வழக்கிடு முன்பாக இறந்துவிட்டிருந்தால் அவரது வாரிசுதாரர் அவதூறு புரிந்தவர்மீது வழக்கிடமுடியாது. ஒருவர் தனிப்பட்டமுறையில் பெற்றுள்ள வழக்குமூலம் அவரது மரணத்தோடு முடிந்துபோகும். எனவே வாதியோ, எதிர்வாதியோ மடிந்து விடடால் வழக்கு மூலமும் முடிந்துவிடும். இதையே லத்தீன் மொழியில் (Actio Personalis Moritur cum Persona) என்று குறிப்பிடப்பட்டு உள்ளது. இதன் பொருள் ஆளைப்பொறுத்த வழக்கு ஆளுடன் முடியும் என்பதாகும்.

இவ்விதிக்குச் சில விலக்குகள் உண்டு. முதலாவது, ஒப்பந்த இயலில் வழக்கிடுவதற்கு இவ்விதி தடையாக இருக்காது. எனவே ஒருவர் மற்றவரிடமிருந்து கடனாக ஒரு தொகையை வாங்கிய பின்னர் மடிந்து போனால் அவரது சொத்தின்மேல் வழக்கிட்டு கடனை மீட்கலாம். ஆயினும் ஓவியம் வரைதல் போன்ற பணி புரிவதாக ஒப்பந்தம் செய்துகொண்டவர் அந்த ஓவியத்தை வரைந்து முடிக்கு முன்னர் மாண்டுபோனால், அவரது உறவினரின் மேல் வழக்கிடமுடியாது.

இரண்டாவது, ஒருவர் தாம் இறப்பதற்குமுன் முறையின்றி அடுத்தவர் சொத்தை எடுத்துக்கொண்டு தனது சொத்துக்களோடு சேர்த்துக் கொண்டிருந்தால், அச்சொத்தின் பயனை அவனது

குடும்பத்தினர் அல்லது வாரிசுகள் துய்ப்பதைச் சட்டம் அனுமதிக் காது. எனவே சொத்திற்கு உரியவர் இறந்தவரது வாரிசுதாரரின் மேல் வழக்கிட்டு அச்சொத்தையோ, அல்லது அதன் மதிப்பையோ மீட்டுக் கொள்ளலாம். ஷெரிங்டன் வழக்கில் (Sherington's Case) வாதியின் நிலத்திலிருந்து 100 ஓக் மரங்களையும் 20 எருது களையும் முறையின்றிக் கைப்பற்றித் தன் சொத்துடன் சேர்த்துக் கொண்டவர் இறந்தபின்னர் அவரது சொத்தின் நிறைவேற்றுளர் (Executors) அதற்குப் பொறுப்பாளியாவார் என்று சொல்லப் பட்டது.

இயற்றுச் சட்டத்தின் விதியிலுள்ள குறைகளைக் களைய இங்கிலாந்தின் பாராளுமன்றம் 1934-ல் ஒரு சட்டம் இயற்றியது. ஒருவர் கவனமின்றிக் காரை ஓட்டிச்சென்றதால் ஏற்பட்ட விபத்தில் மற்றவருக்குக் காயம் ஏற்பட்டிருக்கலாம்; அந்த விபத்தில் கவனமின்றிக் காரை ஓட்டியவர் மாண்டுபோய் இருக்க லாம். இயற்றுச் சட்ட விதியின்படி, கவனமின்றி காரை ஓட்டி யவர் சொத்திலிருந்தோ அல்லது அவரது காப்பீட்டாளரிட மிருந்தோ (Insurer) தீங்கீடு பெறமுடியாது என்ற நிலை இருந்தது. இக்குறையை 1934-ல் இங்கிலாந்தில் இயற்றப்பட்ட சட்டத் திருத்த (பொருள் வழிவகை) சட்டம் நீக்கிவிட்டது. இச்சட்டத் தின்படி, ஒருவர் இறந்துபோனால் அவர் பெற்றுள்ள அல்லது அவருக்கு எதிராக உள்ள வழக்கு மூலங்கள் அவரது சொத்துப் பயனுறும் வகையிலோ அல்லது பொறுப்பாகும் முறையிலோ தொடர்ந்து இருக்கும். ஆனால் அவதூறினால் எழும் வழக்குமூலம் இதற்கு விதிவிலக்காகும் என ஏற்றுக் கொள்ளப்பட்டது. 1934-ல் இயற்றப்பட்ட இச்சட்டத்தின் விளைவாக தரப்பினரின் ஆயுள் காலத்திலேயே ஒரு வழக்குமூலம் உருவானபின்னர், வாதியோ அல்லது எதிர்வாதியோ இறந்துவிட்டால் வழக்குமூலம் பாதிக்கப் படாது. இதன்பொருள் என்னவென்றால் வழக்கின் தரப்பினரில் ஒருவர் இறந்துவிட்டால் அவர்களுக்கிடையே தோன்றியிருக்கிற வழக்குமூலம் தொடர்ந்து இருக்கும் என்பதாகும். எடுத்துக்காட் டாக ஒரு விபத்தில் காயமடைந்தவர் சிகிச்சைக்காகப் பணம் செலவிட்டிருக்கலாம்; காயமுற்றதின் விளைவாக விபத்திற்குப் பின்னர் அவர் வேலை எதுவும் செய்ய முடியாமல் சில காலம் படுக்கையிலேயே இருக்க நேரலாம். இதன் விளைவாக அக்காலத் தில் அவர் பெற்றிருக்கக்கூடிய ஊதியத்தை இழந்திருக்கலாம்; அவரது வாழ்நாள் அருகியிருக்கலாம். இவற்றிற்காக அவர் தீங்கீடு கேட்டு வழக்கிடலாம். எனவே ஒரு விபத்தில் காயமுற் றவர் வழக்கிடுமுன்போ அல்லது அவரிட்ட வழக்கு முடிவெய்து

முன்னரோ மாண்டுவிட்டால், அவரது வாரிசுதாரர் அவ்வழக்கைத் தொடர்ந்து நடத்தலாம். இவ்வழக்குமூலம் அவரது மரணத்திற் காகவென்று அவரது வாரிசுகள் இழப்பீடு கேட்பதாகாது. காயமுற்று மாண்டவர் தாம் காயமுற்றபோது பெற்றிருந்த இழப்பினுக்கு அவர்கள் ஈடு கேட்கிறார்கள். எனவே அவர்கள் புதியதாக ஒரு வழக்குமூலம் பெற்றுள்ளதாகச் சொல்ல முடியாது. காயமுற்றவர் உயிரோடு இருந்தவேளையில் பெற்றுவிட்ட வழக்கு மூலத்தின் பயனையே இவர்கள் பெற்றுள்ளனர்.

ஆயுட்கால அருக்கத்தை ஏற்படுத்துதல் (Shortening the expectation of life)

ஒருவனுக்கு காயமேற்பட்டதன் விளைவாக, அவன் எதிர் பார்க்கக்கூடிய-அவனுக்கு எஞ்சியுள்ள-ஆயுட்காலம் குறைந்து விடலாம். இதற்காகத் தீங்கீடு பெறலாம் என பிலிண்ட் v. லவல் (Flint v. Lovell) வழக்கில் சொல்லப்பட்டது. இவ்வழக்கில் நல்ல ஊக்கத்தோடும், தெம்போடும் இருந்த 69 வயதாகிய வாதி, எதிர்வாதியின் கவனமின்மையால் ஏற்பட்ட விபத்தில் காயமுற்றார். அவரது ஆயுட்கால அருக்கத்திற்காக ஒரு தொகை நிவாரணமாகத் தரப்பட்டது. ஒரு விபத்தில் ஒருவன் உடனடியாகக் கொல்லப்பட்டிருந்தாலும் அவன் சாகும்போது ஒரு வழக்கிடும் உரிமையோடு அல்லது வழக்கு மூலத்தோடு சாகிறான். எனவே அவனது வாரிசுகள் அவன் இறந்து விட்டதற்காக அன்று, அவன் எதிர்பார்க்கக்கூடிய ஆயுட்கால இழப்பிற்காக (loss of expectation of life) வழக்கிடலாம்.

ரோஸ் v. போர்டு (Rose v. Ford) வழக்கில் 28 வயதான ஒரு பெண் எதிர்வாதியின் கவனமின்மையால் ஏற்பட்ட விபத்தில் படுகாயமுற்றாள். இரண்டுநாள் கழித்து தசையழுகலுடன் கூடிய உடலின் உட்கூற்றழிவு ஏற்படவே அவளது கால்கள் வெட்டி எடுக்கப்பட்டன. விபத்தேற்பட்ட 4 நாட்கள் கழித்து அவள் இறந்துவிட்டாள். அவளது தந்தை அவளது சொத்தின் நலனுக்காக வழக்கிட்டதில், விபத்தின் காரணமாக அவளுக்கேற்பட்ட வலி, துன்பம் ஆகியவற்றிற்காகவும், அவள் கால்களை இழந்ததற்காகவும் அவள் எதிர்பார்த்திருக்கக் கூடிய ஆயுட்காலம் குறைந்து விட்டதற்காகவும் தீங்கீடு பெறலாம் என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

ஒருவனது ஆயுட்கால அருக்கத்திற்காக எவ்வளவு தீங்கீடு தரப்படவேண்டும் என்ற கேள்விக்கு விடையை பென்ஹாம் v. கேம்ப்ளிங் (Benham v. Gambling) வழக்கில் பிரபுக்கள் சபை

கூறியது. இவ்வழக்கில் 2½ வயதே நிரம்பிய குழந்தை ஒரு விபத்தில் இறந்தது. அக்குழந்தை நல்ல உடல்நலத்தோடு வசதி யாக வாழ்ந்து வந்தது. அக்குழந்தைக்காக 200 பவுன் மட்டுமே தீங்கீடாகத் தரப்பட்டது. இங்கு இழப்பீட்டுத்தொகையை அள விட அடிப்படையாக எடுத்துக் கொள்ளப்பட்டது, விபத்தினால் ஆயுட்காலத்தின் எஞ்சியுள்ள எத்தனை ஆண்டுகளை அந்த குழந்தை இழந்துவிட்டது என்பதையல்ல; இன்பம் மிகுதியாக நிறைந்த வாழ்க்கையில் எத்தனை ஆண்டுகளை அக்குழந்தை இழந்துவிட்டது என்பதையே அடிப்படையாகக் கொண்டு ஆயுட் கால அருக்கத்தைத் தீர்மானிக்க வேண்டும் என்று நீதிமன்றம் கூறி, ஒரு குழந்தையின் எதிர்காலத்தையும், மகிழ்ச்சியையும்பற்றி உறுதியாகச் சொல்வதற்கில்லை என்பதால் குறைந்த அளவே தீங்கீடு தந்தது. யார்க்ஷயர் எலக்ட்ரிசிடி போர்டு v. நாய்லர் (Yorkshire Electricity Board v. Naylor) வழக்கில் ஒரு நல்ல நிலையான வேலையிலிருந்த 20 வயது இளைஞன் ஒருவன் விபத்தில் மாண்டான். அவனது சார்பாளர் வழக்கிட்டு, கேம்ப்ளிங் வழக்கில் தரப்பட்ட தீங்கீட்டுத் தொகையைவிட அதிகமான தொகையைக் கோரினர். அவர் அவனுக்கு விபத்தேற்பட்ட காலத்தில் அவன் நல்ல வேலையிலிருந்தான் என்பதையும் அவனுக்கு ஒளிமயமான எதிர்காலத்தைப் பெறும் வாய்ப்புகள் அதிகமாக இருந்ததையும் கூறினர். இவ்வழக்கில் 500 பவுன் மட்டுமே தீங்கீடாகத் தரப்பட்டது. கேம்ப்ளிங் வழக்கில் தீர்ப் பளிக்கப் பட்டபோது இருந்த பணத்தின் மதிப்பு நாய்லர் வழக்குக் காலத்தில் 2½ மடங்கு குறைந்து விட்டிருந்தபடியால், கேம்ப்ளிங் வழக்குக்காலத்தில் 200 பவுன் மதிப்பு நாய்லர் வழக்குக் காலத்தில் 500 பவுனுக்குச் சமமாகும் என்று கருதியே நீதிமன்றம் நாய்லர் வழக்கில் 500 பவுன் தீங்கீடாக அளித்தது. இங்கு தீங்கீடு அளிப் பதில் நிலையான வரையளவினைப் பின்பற்ற வேண்டுமென்றும் வயது அல்லது இதர காரணங்களால் வேறுபாடு காட்டக்கூடா தென்றும் நீதிமன்றம் கருதியது.

இந்தியாவிலும் சில விதிவிலக்குகளுக்குட்பட்டு, தரப்பினரில் ஒருவர் இறந்துவிட்டாலும் வழக்குமூலம் தொடர்ந்து இருக்கும் என்ற நிலை ஏற்றுக் கொள்ளப்பட்டது. அவதூறு, தாக்கமுனைதல் மற்றும் ஆளுக்கு ஊறு விளைவித்தல் ஆகிய தீங்குகளை பொறுத்த வரையில் தரப்பினரில் யாரேனும் ஒருவர் இறந்துவிட்டால் வழக்கு முடிவெய்திவிடும். கல்கத்தா உயர்நீதிமன்றம் ஒரு ஆளுக்கு ஊறு அல்லது காயம் (Personal injuries) என்பது அவனுக்கு ஏற்படுத்தப்படும் உடற்காயத்தையே (Physical injuries) குறிப் பிடுமென்றும், தீங்கெண்ணத்துடன் குற்றவழக்கிட்டதால் எழும்

வழக்குமூலம் உடற்காயத்தைப் பற்றியதல்ல என்பதால் இறந்த வரது வாரிசுகள் வழக்கினைத் தொடரவோ தொடர்ந்து நடத்தவோ தடையில்லை என்று கூறியது. சென்னை, பாட்னா, அலகாபாத், பம்பாய் உயர்நீதிமன்றங்கள் ஆளுக்கு ஏற்படும் ஊறு என்று சொல்லும்போது அது வெறும் உடற்காயம் மட்டும் ஆகாது என்று சொல்லிவிட்டன. எனவே தரப்பினரில் யாரேனும் ஒருவர் மடிந்து விட்டால், தீங்கெண்ணத்துடன் குற்றவழக்கிட்டதாகத் தீங்கியலில் இடப்பட்ட வழக்கு முடிந்துவிடும்.

மரணத்தால் பொறுப்புத் தோன்றுதல் (Death as creating liabitity)

இயற்றுச் சட்டத்தின்படி ஒரு மனிதனுக்கு மரணத்தை ஏற் படுத்துதல் உரிமையியலில் தீங்காகாது. ஒருவர் இறந்தபின், அவர் வாழ்நாளிலேயே பெற்றுவிட்ட உரிமைகளுக்காக அவரது சட்ட வாரிசுகள் வழக்கிடலாம் என்றும் இதற்குச்சட்டத்திருத்தச் சட்டம் (1934) வழி செய்தது என்றும் கண்டோம். ஆனால் ஒருவர் இறந்துவிட்டால் அவரை நம்பி அவரைச் சார்ந்துள்ள அவரது மனைவிகளுக்கு இழப்பு ஏற்படும். எனவே அவர் வாழ்வில் அவர்களது நலன் அமைந்திருக்கிறது. இயற்றுச் சட்டத்தின்படி, உரிமையியல் அல்லது சிவில் நீதிமன்றத்தில் ஒருவரது மரணத்தை ஊறு என்று புகார் செய்ய முடியாது. அதாவது ஒருவரது மரணத் தைத் தீங்கு என்று கருதமுடியாது. இவ்விதியை 1806ஆம் ஆண்டு தலைமை நீதிபதி எல்லன் பரோ பிரபு, பேக்கர் v. போல்டன் (Baker v. Bolton) என்று வழக்கில் நிறுவினர். இவ்வழக்கில் வாதியும் அவரது மனைவியும் எதிர்வாதிகளின் வண்டியின் மேற் பகுதியில் அமர்ந்து பயணம் செய்தனர். எதிர்வாதிகளின் கவன மின்மையால் வண்டி குடைசாய்ந்து கவிழ்ந்து அதனால் வாதிக்கு உடலில் நிறைய கன்றிப்போன காயங்கள் ஏற்பட்டன, வாதியின் மனைவிக்கோ கடுமையான காயங்கள் ஏற்பட்டு. அதன் விளைவாக ஒரு திங்கள் சென்றபின் அவள் மாண்டாள். வாதிக்கு ஏற்பட்ட காயங்களுக்காக 100 பவுன் தீங்கீடு தரப்பட்டது. அவரது மனைவி சாகும் காலம் வரை அவளுடன் கூடிவாழும் வாழ்க்கையை இழந்த தற்காக அவருக்கு 100பவுன்தீங்கீடுதரப்பட்டது. ஆனால்அவளது மரணத்திற்குப் பின்னர் அதற்காக எந்தத் தொகையும் பெறமுடி யாது என்று கூறப்பட்டது, எனவே எதிர்வாதி வேண்டுமென்றே, அல்லது கவனமின்றியோ வாதியின் மனைவிக்கு ஊறு இழைத்ததன் காரணமாக அவன் தற்காலிகமாக அவளோடு கூடிவாழும் வாழ்க் கையையோ அல்லது பணிகளையோ இழந்ததற்காக இயற்றுச் சட்டப்படி வழக்கிடலாம். ஆனால் அவள் இறப்பின் காரணமாக அவனுக்கேற்படும் நிலையான இழப்புக்காக வழக்கிடமுடியாது.

இதைப்போலவே தனது மக்களைப் பொறுத்துத் தந்தைக்குள்ள உரிமைகளும் கருதப்பட்டன. எனவே ஆஸ்பார்ன் v. கில்லெட் (Osborn v. Gillett) வழக்கில், எதிர்வாதியின் கவனமின்மையால் மகனை இழந்த தந்தை இயற்றுச் சட்டத்தின்கீழ் வழக்கிட்டார். அடிபட்ட இடத்திலேயே அப்பெண் மாண்டாள் என்றும், அவளது தந்தைக்கு ஏற்பட்ட பணியிழப்பு (Loss of Service) அவளது மரணத்தினால் ஏற்பட்டதேயன்றி வேறுவழியிலல்ல என்றும் எதிர்வாதி வாதிட்டார். இதை நீதிமன்றம் ஏற்றுக்கொண்டது. எனவே அவள் உடனே இறக்காமல் சிறிது காலம் கழித்தே இறந்திருந்தால், அந்தக் காலத்திற்குமட்டும் அவளது பணியினை இழந்ததற்காக அவளது தந்தை வழக்கிடலாம். ஆனால் அவள் இறந்ததற்காக எந்தத் தீங்கீடும் பெறமுடியாது. ஆனால் இந்த விதி தீங்கியலில் வழக்கிடுவதற்குமட்டுமே பொருந்தும்; ஒப்பந்த மீறலுக்கு பேக்கர் v. போல்டன் வழக்கில் சொல்லப்பட்ட இந்த விதி பொருந்தாது. வாதியோடு செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தை மீறியதன் விளைவாக ஒருவர் மாண்டு போகலாம். அவர் உயிரோடு இருப்பதில் நலனே, அக்கறையோ கொண்டுள்ள வாதி அதனால் தமக்கு ஏற்பட்ட சேய்மையல்லாத பணநட்டத்தை இழப்பீடாகப் பெறலாம். ஜாக்சன் v. வாட்சன் & சன்ஸ் லிமிடெட் (Jackson v. Watson & Sons Ltd.,) வழக்கில், எதிர்வாதிகளிடமிருந்து வாதி விலைக்கு வாங்கிய உணவுப் பண்டத்தில் நஞ்சு கலந்திருந்தது அதை வாதி தன் மனைவிக்கு உண்ணக் கொடுத்தார். அதை உண்ட வாதியின் மனைவி மாண்டாள். விற்பனை ஒப்பந்தத்தின்படி எதிர்வாதிகள் தாம் விற்ற பொருள் மனிதர்கள் உண்ணத் தகுதியானது என்று நம்புறுதி (Warranty) கொடுத்திருந்தனர். அவர்கள் இந்த உறுதிமொழியை மீறியதாகக் கருதப்பட்டு. ஒப்பந்த மீறலுக்காக வாதிக்கு இழப்பீடு தரவேண்டுமென்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது. எனவே ஒருவரது மரணத்தை ஏற்படுத்துவதால் மட்டும் வழக்குமூலம் ஏற்படாது என்றாலும், தனியே ஒருவர் ஒப்பந்தத்தின்படி வழக்கிட்டுப் பெறக் கூடிய இழப்பீட்டுத் தொகையைக் கணிக்கும்போது அதுவும் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும். இந்த முடிவினால் ஒருமுரண்பாடானநிலை ஏற்படும். எடுத்துக்காட்டாக ஒரு பெண் பேருந்தில் பயணம் செய்யும்போது ஓட்டுநரின் கவனமின்மையால் மடிகிறாள் என்று வைத்துக்கொள்வோம். அவளே தன் பயணச்சீட்டை வாங்கியிருந்தால் அவளது கணவனுக்குத் தீங்கீடு நிவாரணம் கிட்டாது ஆனால் அவளது பயணச்சீட்டை அவள் கணவன் வாங்கியிருந்தால் அவளுக்காக ஏற்பட்ட மருத்துவச் செலவை மீட்டுப்பெறவும், அவளது பணியிழப்புக்காகவும், அவன் ஒப்பந்த இயலில் எதிர்வாதியிடம் நிவாரணம் கேட்கமுடியும்.

மரணத்தை ஏற்படுத்தும் விபத்துகள் சட்டம் (Fatal Accidents Act 1846—1959)

புகைவண்டிகளின் வளர்ச்சியின் விளைவால் மரணத்தை ஏற்படுந்தும் விபத்துகளும், மற்ற விபத்துகளும் அதிகமாயின; இந்த விபத்துகளில் சாகாமல் பிழைத்தவர்கள் கணிசமான தொகையைத் தீங்கீடாகப் பெற முடிந்தாலும், விபத்தில் மடிந்தவர்களை நம்பி வாழ்கிற அவரது குடும்பத்தினர், எந்தத் தொகையும் பெற முடியாத நிலையிருந்தது. ஆகவே கேம்ப்பெல் பிரபுவின் (Lord Campbell) சட்டமெனப்படும் மரணத்தை ஏற்படுத்தும், விபத்துகள் சட்டம் 1846-ல் நிறைவேற்றப்பட்டது. இதன் விளைவாகவும். பின்னர் இயற்றப்பட்ட சட்டங்களின் விளைவாகவும், இறந்தவரைச் சார்ந்து வாழும் வாரிசுகளையும் மற்ற நெருங்கிய உறவினர்களையும் பொறுத்த வரை சட்டத்தில் மாறுதல் ஏற்பட்டது. இதன் விளைவாக இறந்த வரது கணவன், மனைவி, மக்கள், பெற்றோர், பேரக்குழந்தைகள், தாத்தா, பாட்டி, தத்தெடுக்கப்பட்ட குழந்தைகள் முதலானோர் வழக்கிடலாம். இவர்களைத் தவிர இறந்தவரின் அத்தை, மாமி, உடன் பிறந்தார் ஆகியோரின் குழந்தைகளும் இவர்களில் அடங்கும். ஒருவரது மனைவி அல்லது கணவருக்குப் பிறந்த மாற்றும் குழந்தைகளும் இதில் சேர்க்கப்படும். இவர்கள் சார்பாக இறந்தவரின் உயில் வாசகங்களை நிறைவேற்றும் கடமை கொண்டவர் (excutor) வழக்கிடுவார். இந்தச் சட்டத்தின்படி வழக்கிட, விபத்தில் மரணமுற்றவர் இறக்காமல் இருந்திருந்தால் அவரே வழக்கிடும் உரிமை பெற்றவராக இருந்திருக்க வேண்டும். இறந்த வரே வழக்கிட்டு இருந்தால் என்னென்ன எதிர்வாதங்களை எதிர் வாதி சொல்லக் கூடுமோ அவற்றை இறந்தவரைச் சார்ந்துள்ள உறவினர் இடும் வழக்கிலும் சொல்லலாம். எனவே, இறந்தவர் தீங்கினை இசைந்து ஏற்றுக்கொண்டார் என்று எதிர்வாதி வாதிடலாம். இறந்து போனவர் தானும் கவனமின்றி இருந்தார் (Contributory Negligence) என்று மெய்ப்பிக்கப் பட்டால் வழக்கில் அளிக்கப்படும் தீங்கீட்டுத் தொகையின் அளவு 1945-ல் இயற்றப்பட்ட சட்டத் திருத்த (தற்கவனமின்மை) சட்டத்தில் சொல்லியுள்ளவாறு குறைக்கப்படும். தவிர, வாதியின்பால் கவனம் காட்ட வேண்டிய கடமை எதிர்வாதிக்கு இல்லாமல் இருக்கலாம். இந்தச் சூழ்நிலையில் எதிர்வாதி பொறுப்பாளியாகமாட்டார். இறந்து போனவர் தாம் உயிரோடு இருந்தபோதே எதிர்வாதியிடமிருந்து இழப்பீட்டுத் தொகை முழுவதும் பெற்றிருந்தால், அவரைச் சார்ந்துள்ளவர் எதிர்வாதியின் மேல் வழக்கிட்டு எந்தத் தொகையையும் நிவரணமாகப் பெறமுடியாது.

இழப்பீடாகத் தரப்படும் தொகை இறந்தவரைச் சார்ந்துள்ள குடும்பத்தினர், அவரது குறிப்பிட்டுள்ள உறவினர் ஆகியோர்க்கு ஏற்பட்ட பண நட்டத்திற்கு ஈடுசெய்வதே யல்லாமல், அவர்களுக்கு ஏற்படும் மனத்துயருக்கும், கவலைக்கும், ஆற்றலவாக அளிக்கப்படும் தொகை ஆகாது. ஒருவருடைய மரணத்தின் விளைவாக எந்தப் பொருள் நட்டமும் ஏற்படவில்லையென்றால் அவரைச் சார்ந்துள்ளவர் தீங்கீடாக எந்தத் தொகையும் பெற முடியாது. ஒருவனுக்கு பணவசதி எதுவும் இல்லையென்றும், அவன் வேலையற்றவன் என்றும் வைத்துக்கொண்டால் அவன் சாவினால் அவனது மனைவி மக்களுக்கு எந்தப் பண இழப்பும் ஏற்படுவதில்லை. எனவே அவனைச் சார்ந்துள்ளவர் அவனது மரணத்திற்காகத் தீங்கீடு பெறமுடியாது. தவிர, ஒருவருக்குத் தரப்படும் இழப்பீட்டுத் தொகையைத் தீர்மானிக்கும்போது வருங்காலத்தில் ஏற்பட்கூடிய இழப்பினையும் கவனத்தில் கொள்ளவேண்டும். எனவே இறந்தவர் உயிரோடு இருந்திருப்பின் அவரைச் சார்ந்துள்ளவருக்கு என்ன பயன் விளைந்திருக்கக் கூடும் என்பதை அறிய வேண்டும். டாஃப்வேல் ரெயில்வே கம்பெனி v. ஜென்கின்ஸ் (Taffvale Railway Co. v. Jenkins) வழக்கில் 16 வயது பெண்ணொருத்தி மாண்டதற்கு அவளது பெற்றோர் இழப்பீடு கோரியிருந்தனர். அவள் சாகும் காலத்தில் ஒரு ஆடை தயாரிப்பவரிடம் பயிற்சி பெற்றுவந்தாள்; ஆனால் அவளுக்கு ஊதியம் கிடையாது. ஆயினும் அவள் அப் பயிற்சியைத் தொடர்ந்து, எதிர்காலத்தில் ஈட்டியிருக்கக்கூடிய கணிசமான வருமானத்திற்கு ஈடாக ஒரு தொகையை அவளது பெற்றோர் கோர முடியும் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது. ஆயினும் இவ்வாறு ஈட்டக் கூடிய வருவாய் மிகச் சேய்மையானதாகவோ அல்லது நிச்சயமற்றதாகவோ இருந்தால் தீங்கீடு பெறமுடியாது. எடுத்துக் காட்டாக, ஒரு நான்கு வயதுக்குழந்தை எதிர்காலத்தில் எவ்வளவு பொருள் ஈட்டும் வாய்ப்புப் பெற்றுள்ளது என்று உறுதியாகச் சொல்லமுடியாது. இதைப் போலவே எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய இழப்பினைக் கணிக்கும்போது இறந்தவரைச் சார்ந்துள்ளவர்களின் வாய்ப்புகளையும் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். எனவே குழந்தைகள் உள்ள ஒரு விதவை மறுமணம் செய்துகொண்டால் அவளது குழந்தைகளை அவள் கணவன் தனது குடும்பத்தினராக ஏற்றுக்கொண்டால், அவர்களைக் காப்பாற்ற வேண்டிய கடமை சட்டப்படி அவருக்குண்டு. எனவே அக்குழந்தைகளுக்கு ஏற்பட்ட இழப்பின் அளவு அதற்கேற்றவாறு குறையும். கார்வென் v. ஜேம்ஸ் (Carwen v. James) வழக்கில் விசாரணை நடத்திய நீதிமன்றம் ஒரு விதவைக்குத் தரப்பட

வேண்டிய தீங்கீட்டிஙீனக் கணிக்கும் போது, அவள் பார்வைக்கு அழகாயிருந்த ஒரு இளம்பெண் என்பதால் அவளுக்கு மறுமணம் ஆக நல்ல வாய்ப்பிருந்ததாகக் கருதியது. ஆனால் அப்படி மறுமணம் புரியும் வாய்ப்பு இருப்பதாக அந்த நீதிமன்றத்தின் முன்பு எந்தச் சான்றும் கொண்டு வரப்படவில்லை. ஆயினும் அப்பீல் செய்யும் காலம் முடிவுறும் முன்னரே அவள் உண்மையில் மறுமணம் செய்து கொண்டாள்! இதைப்பற்றிய சான்றை அப்பீல் நீதிமன்றம் ஏற்றுக் கொண்டு அவளுக்குத் தரவேண்டிய தீங்கீட்டுத் தொகையைத் தகுந்தவாறு குறைத்தது.

நிலக்கரிச் சுரங்கங்கள் (சரிவு) சட்டம் 1957

இதன்படி தேசிய நிலக்கரி வாரியம் தீங்கான செயலோ, கவனமின்மையோ, இல்லாதபோதும் நிலக்கரிச் சுரங்கத்தில் ஏற்படும் சரிவினால் விளையும் மரணத்திற்கு மரணத்தை ஏற்படுத்தும்விபத்துகள் சட்டப்படி பொறுப்பேற்க வேண்டும். இதைப் போலவே விமானத்தில் ஏறும்போதும், இறங்கும்போதும், அதில் இருக்கும் போதும், ஏற்படும் விபத்தினால் உண்டாகும் இழப்புக்குப் பயணியைச் சார்ந்துள்ளவர்கள் தீங்கீடு பெறச் சட்ட முண்டு. இதைப்போலவே தொழிலாளர்கள் தமக்குரிய பணியைச் செய்யுங்கால் ஏற்படும் விபத்திற்கு அவரைச் சார்ந்துள்ளவர்கள் இழப்பீடு பெறத்தொழிலாளர் இழப்பீட்டுச் சட்டம் (Workmens' Compensation Act, 1923) வழிசெய்கிறது.

2. விட்டுக் கொடுத்தல் (Waiver)

எதிர்வாதியின்மேல் தீங்கியலில் வழக்கிடத் தனக்குள்ள உரிமையை வாதி விட்டுக் கொடுத்து, அதே வழக்கு மூலத்தின் பேரில் ஒப்பந்தம் அல்லது ஒப்பந்தப்போல்பு போன்ற சட்டங்களில் ஒன்றில் நிவாரணம் தேடி வழக்கிடலாம். அவன் இரண்டு சட்டங்களிலும் ஒருசேர நிவாரணம் பெறமுடியாது. தீங்கியலில்நிவாரணம் பெற விழைந்தால் ஒப்பந்தச் சட்டத்தில் நிவாரணத்தைத் தேடிக் கொள்ளமுடியாது. எடுத்துக் காட்டாக, வாதிக்குச் சொந்தமான பொருள் ஒன்றை எதிர்வாதி முறையின்றித் தனதாக்கிக் கொண்டிருந்தால், கையாடல் புரிந்தார் என்று அவர்மேல் தீங்கியலில் வழக்கிடுவதற்குப் பதிலாக அப்பொருளின் விலைமதிப்பைக் கேட்டு ஒப்பந்தச் சட்டத்தின்படியோ அல்லது அதைப்போன்றதொரு பொறுப்பைத்தோற்றுவிக்கும் ஒப்பந்தப்போல்வின்படி பணத்தைப் பெற்றுக்கொண்டதாகவோ/ வழக்கிடலாம். யுனெடெட் ஆஸ்திரேலியா லிமிடெட் *v.* பார்கிளேய்ஸ் வங்கி (United Australia Ltd *v.* Barclays Bank) வழக்கில் ஒப்பந்தச்சட்டப்படி தீங்கியற்சட்டம் ஆகிய இரு சட்டங்களில் ஏதேனும் ஒன்றின்கீழ் வழக்கிடு

பவன், முந்திய வழக்கில் பெற்ற தீர்ப்பின் பயனை பெற்றுக் கொண்டிருந்தால் ஒழிய மீண்டும் நிவாரணம் கோரி வழக்கிடும் உரிமையை இழக்கமாட்டான் என்று பிரபுக்கள் சபை தீர்ப் பளித்தது.

3. விடுதலை செய்தல் (Release)

எதிர்வாதியைப் பொறுப்பிலிருந்து விடுதலை செய்ய வாதிக்கு உரிமையுண்டு. ஆங்கிலச் சட்டப்படி வாதி மறுபயன் பெற்றுக் கொண்டு எதிர்வாதியைப் பொறுப்பிலிருந்து விடுவிக்கலாம் ஆனால் எதிர்வாதியிடமிருந்து மறுபயன் எதுவும் பெறாமல் விடுவிக்க விரும்பினால், அதை முறையாக ஆவணத்தில் பதிவுசெய்து, கையெழுத்தும், முத்திரையும் இட்டுத் தந்திருக்கவேண்டும். இந்திய ஒப்பந்தச் சட்டத்தில் 63-வது பிரிவின்படி எதிர்வாதி பொறுப்பிலிருந்து விடுதலை பெற மறுபயன்தரத் தேவையில்லை. எதிர்வாதியைப் பொறுப்பிலிருந்து விடுதலை செய்ததற்கு முறையான ஆவணம் எதுவும் எழுதப்படா விட்டாலும் அது செல்லுபடியாகும்.

4. முன் தீர்ப்பின் தடை (Resjudicata)

எதிர்வாதியிடம் தீங்கீடுகோரி முறையான அதிகாரவரம்புடைய நீதிமன்றம் ஒன்றில் வாதி வழக்கிட்டு, அந்த நீதிமன்றம் வழக்கினை விசாரித்து முடிவானதொரு தீர்ப்பு வழங்கிவிட்டால், வாதிக்கு முன்னிருந்த வழக்கு மூலம் முடிவெய்தி விடுகிறது. எனவே அவ் வழக்கில் வாதி தோற்றுவிட்டால், அதே வழக்கு மூலத்தின் அடிப்படையில் எதிர்வாதியின் மேல் மீண்டும் வழக்கிட முடியாது. எந்த வழக்காயினும் அதற்கொரு முடிவிருக்க வேண்டும். இதுவே நாட்டு நலனுக்கு உகந்தது (interest reipublical at sit finis litium) ஒரே வழக்கு மூலத்தை அடிப்படையாகக் கொண்டு மீண்டும் வழக்கிடுவதை உரிமையியல் நடைமுறைச் சட்டம் 11வது சட்டப்பிரிவு தடை செய்கிறது.

5. வழக்கிடும் காலவரையறைச் சட்டம் (Stature of limitation)

எதிர்வாதியின்மேல் வழக்கிடும் காலவரையறைச் சட்டத்தில் சொல்லப்பட்ட கால எல்லைக்குள் வழக்கிட வேண்டும். வாதி தனக்குள்ள உரிமையை நீதிமன்றம் சென்று நிலைநாட்டாமல் தூங்கிக் கொண்டிருந்துவிட்டு, வழக்கிடும் காலம் முடிவெய்திய பின்னர் அவன் நீதிமன்றத்தில் நிவாரணம் கேட்டு வழக்கிட முடியாது. ஒவ்வொரு சட்டத்தின் கீழும் வழக்கிடும் காலவரையறைச் சட்டத்தின்கீழ் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்தக் காலவரையறை வழக்குமூலம் வாதிக்குக் கிடைக்கும் காலத்திலிருந்து துவங்குகிறது. இந்தக் கால அளவைக் கணக்

கிடும் போது, விபத்து ஏற்பட்ட நாளை வாதி கழித்துக் கொண்டு கணக்கிடலாம். இந்தக் கால வரையறைச் சட்டம் 1963-ல் (Indian Limitation Act, 1963) இறுதியில் சேர்க்கப்பட்டுள்ள பின் இணைப்புப் பட்டியலில் வெவ்வேறு தீங்குகளுக்கு வெவ்வேறு வழக்கிடும் கால எல்லை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதன்படி தாக்கமுனைதல் போன்ற உடற்காயம் ஏற்படுத்துவதற்கும், முறையின்றிச் சிறைப்படுத்துதல் போன்றவற்றிற்கும், அவதூறு, தீங்கெண்ணத்துடன் குற்றவழக்கிடல் போன்றவற்றிற்கும் ஒரு ஆண்டு காலமும், அசைவியல் பொருள், நிலையியல் சொத்து ஆகியவற்றிற்கு இழைக்கப்படும் அத்து மீறல், கையாடல், ஏமாற்றுதல், பதிப்புரிமை மீறல் (Infringement of copyright) ஆகியவற்றிற்கு மூன்றாண்டுக் காலமும் வரையறையாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

6. ஒத்திசைவும் நிறைவுபெறுதலும் (Aecord and Satisfation)

தீங்கினைப் புரிந்த எதிர்வாதியும், தீங்கின எய்தியவாதியும் ஒத்திசைவுக்கும், நிறைவு பெறுவதற்கும் தங்களிடையே ஏற்பாடு செய்து கொள்வதன்மூலம் எதிர்வாதியின் பொறுப்பைத் தீர்க்கலாம். நீதிமன்றத் தீர்ப்பினைப்போலவே இதுவும் வழக்கினை முடிவுக்குக் கொண்டுவருகிறது. வாதியும் எதிர்வாதியும் செய்துகொள்ளும் உடன்பாடே ஒத்திசைவு ஆகும். இவ்வாறு உடன்பாட்டின் மூலம் எதிர்வாதியிடமிருந்து வாதி மதிப்புள்ள மறுபயன் (Valuable Consideration) ஒன்றைத் தனக்குச் சட்டப்படி கிடைக்கக் கூடிய நிவாரணத்திற்குப் பதிலாக ஏற்றுக் கொள்கிறான். இவ்வாறு அவன் பெறும் மறுபயனே இங்கு அவன் பெறும் நிறைவு (Satisfaction) என்கின்றோம். இவ்வாறு அவன் ஏற்கும் நிறைவு உடன்பாடு செய்து கொள்ளும்போதே பெற்றதாக இருக்கலாம். எடுத்துக்காட்டாக "நீ எனக்கு முன்பு தந்துள்ள கடனுக்குப் பதிலாக உன்னைத் தீங்கு புரிந்ததற்கான பொறுப்பிலிருந்து விடுவிக்கிறேன்" என்று அவர் கூறலாம்; அல்லது நிறைவு எதிர்காலத்தில் நிறைவேற்றப்படவேண்டிய ஒப்பந்தமாக இருக்கலாம். எடுத்துக்காட்டாக, "நீ எனக்கு அடுத்த மாதம் 100 ரூபாய் தருவதாக வாக்கு அளித்துள்ளபடியால் உனக்கு ஏற்பட்ட பொறுப்பிலிருந்து விலக்களிக்கிறேன்" என்று அவர் கூறலாம். அவ்வாறு எதிர்வாதி வாக்களித்த தேதியில் குறிப்பிட்ட தொகையைத் தராமல் போய்விட்டால் வாதி முன்னர் இருந்த வழக்குமூலத்தின் அடிப்படையில் (அதாவது அத்துமீறல், தாக்கமுனைதல் ஆகியவற்றிற்காக) எதிர்வாதியின்மேல் வழக்கிடமுடியுமா என்பது அவர்கள் செய்துகொண்ட ஒப்பந்தத்தின் தன்மையைப் பொறுத்தது. எடுத்துக்காட்டாக, "நீ குறிப்பிட்ட காலக் கெடுவில்

பணம் தருவதாக இருந்தால், நீ தரும் கடனுறுதிச் சீட்டை (Pronote) உனது பொறுப்புக்கு மாற்றுக எடுத்துக் கொள்கிறேன்" என்ற பொருளில் எதிர்வாதியுடன் வாதி ஒப்பந்தம் செய்திருந்தால் உரிய காலத்தில் பணம் தரத் தவறினுல் முன்னர் இழைக்கப்பட்ட தீங்கிற்காக வழக்கிடும் உரிமையை வாதி மீண்டும் பெறுவார். ஆனுல் "உன்னுடைய பொறுப்பிற்கு மாற்றுக இந்தக் கடனுறுதிச் சீட்டை ஏற்கிறேன்" என்று வாதி எதிர்வாதியுடன் ஒப்பந்தம் செய்து கொண்டிருந்தால் அவர் கடனுறுதிச் சீட்டின்மேல்தான் வழக்கிடமுடியும்; முன்பு பெற்றிருந்த வழக்குமூலத்தை அவர் இழந்து விடுவார்.

வாதிக்கு எதிர்வாதியால் ஏற்பட்ட காயத்தின் தன்மை அவன் கருதியிருந்ததைவிட உண்மையில் கடுமையானதாக இருந்தால், எதிர்காலத்தில் அவனுக்கு ஏற்படக்கூடிய காலம் அல்லது ஊறுக்காக மீண்டும் தீங்கீடு கோரும் உரிமையை ஒரு நிபந்தனையாக விதித்து எதிர்வாதியுடன் ஒத்திசைவு செய்து கொள்ளலாம்.

வழக்கிடும் அறிக்கை (Notice of Action)

அரசுக்கு எதிராகவோ, அல்லது அரசு அலுவலகர், அல்லது குடியரசுத் தலைவர், அல்லது மாநில ஆளுநர், அரசு அலுவல் சம்பந்தமாக செய்த செயலுக்கெதிராகவோ வாதி வழக்கிட விரும்பினுல் அவருக்கு வழக்கிடுவதற்கு இரண்டு மாதங்களுக்குமுன் எழுத்தின்மூலம் அறுவிக்கை கொடுத்தபின்னரே வழக்கிடமுடியும். இது உரிமையியல் நடைமுறைச் சட்டத்திலும், இந்திய அரசிய லமைப்புச் சட்டத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது. 1935ஆம் ஆண்டு இந்திய அரசாங்கச் சட்டத்தில் (Government of India Act, 1935) ஒரு அரசு அலுவலர் தன் கடமையாற்றும் வகையில் செய்த செயலுக்கெதிராகக் குற்றவழக்கிடவோ அல்லது அவர்மீது உரிமை வழக்கிடவோ வேண்டுமானுல் அரசாங்கத்தின் அனுமதி பெற்றுக வேண்டும் என்று சொல்லப்பட்டது. நமது இந்திய அரசியல் சட்டத்தில் இவ்வாறு கூறப்படவில்லை.

வழக்கிடும் இடம்

இந்தியாவில் இழைக்கப்பட்ட தீங்காயின், அத்தீங்கு இழைக்கப்பட்ட இடத்திலோ, அல்லது எதிர்வாதி வசிக்குமிடம் அல்லது தொழில் செய்யும்இடம் ஆகியவற்றிலோ வழக்கிடவேண்டும். உரிமையியல் நடைமுறைச் சட்டத்தில் (பிரிவுகள் 19, 20) இது கூறப்பட்டுள்ளது. நிலையியல் சொத்திற்குத் தீங்கு இழைக்கப் பட்டிருந்தால் அந்தச் சொத்து எந்த நீதிமன்றத்தின் அதிகார

எல்லைக்குள் (Jurisdiction) உள்ளதோ அந்த நீதிமன்றத்தில்தான் வழக்கிடவேண்டும் (உரிமையியல் நடைமுறைச்சட்டம் 16ஆம் பிரிவு).

வழக்கிடும் உரிமையை மாற்றுதல் (Assignment of right of action)

ஒருவர் தமது சொத்தைப் பிறருக்கு மாற்றிக் கொடுக்கலாம். இதைச் சட்டம் அனுமதிக்கிறது. ஆனால் தீங்கீடு கோரி ஒருவர் மற்றவர்மேல் வழக்கிட அவருக்குள்ள வெறும் உரிமையை மட்டும் மாற்றம் செய்ய சட்டம் அனுமதிக்காது. இவ்வாறு செய்வது சட்டத்தை மீறிய செயலாகக் கருதப்படும். தீங்கீடு கோரி வழக்கிடும் உரிமை வாணிபச் சந்தையில் விலைக்கு வாங்கத் தகுந்த பொருளாகக் கருதப்படுமாயின், ஒருவருக்கு இன்னல் விளைவிக்க வேண்டுமென்றே அவர்மீது மற்றவர் வழக்கிடும்நிலை உருவாகி, வேண்டத்தகாத விளைவுகள் ஏற்படும். இது பொதுநலனுக்கு உகந்ததல்ல. ஆனால் நீமதின்றம் தீங்கீடு தருமாறு தீர்ப்பாணை பிறப்பிக்குமுன்போ அல்லது பின்னரோ அந்தத் தீர்ப்பாணையை மாற்றிக் கொடுக்கலாம். இது செல்லுபடியாகும். ஆனால் ஒருவர் தீங்கிழைத்ததற்காக அவர்மேல் வழக்கிடும் வெறும் உரிமையை வேறு ஒருவருக்கு மாற்றிக் கொடுக்க முடியாது.

இந்த விதிக்குச் சில விலக்குகள் உண்டு

1. **ஒருவர் இறந்தபின் ஏற்படும் உரிமை அல்லது பாத்தியதை மாற்றங்கள்**

இதைப்பற்றி முன்பே அறிந்தோம்.

2. **நொடிப்புநிலை (Bankruptcy)**

நொடிப்புநிலைச் சட்டத்தில் உள்ள விதியின்படி, ஒப்பந்தம் அல்லது நம்பிக்கை மோசடி நீங்கலாக வேறுமுறைகளில் ஏற்படுகின்ற அறுதியிடப்படாத இழப்புக்கு ஈடுகோரி வழக்கிடமுடியாது. பொதுவாகத் தீங்கியலில் அறுதியிடப்படாத தீங்கீடு கோரி வழக்கிடப்படுகிறது என்று அறிவோம். எனவே தீங்கியலில் தீங்கிழைத்தவர்க்கு உள்ள பொறுப்போ அல்லது தீங்கு உற்றவரின் வழக்கிடும் உரிமையோ நொடிப்பு நிலை எய்தியவரின் சொத்தை நிர்வகிக்கும் பொறுப்புரிமையருக்கு (Trustee in Bankruptcy) போய்ச் சேராது. எனவே தீங்கிழைத்தவர் பொருளிழந்து நொடித்துப்போய்விட்டாலும் அவரே தொடர்ந்து பொறுப்பாளியாவார். எனவே வழக்கிடுவதாயின் தீங்கெய்தியவர் அவர்மேல் தான் வழக்கிடவேண்டும்; பொறுப்புரிமையரின்மேல் வழக்கிட முடியாது. ஆனால் நொடிப்புநிலை எய்துமுன்னர் உடன்பாட்டின்

மூலமோ, அல்லது தீர்ப்பின் மூலமோ ஒருவருக்குள்ள பாத்தியதை அறுதியிடப்பட்டுவிட்டால், தீங்கிழை எய்தியவர் தமக்குள்ள பாத்தியதையை நிரூபித்து நொடித்தவர் சொத்திலிருந்து தமக்குரிய பங்கைப் பெறலாம். மம்போர்டு வழக்கில் (Ex P. Mumford) 'அ' என்பவன் 'ஆ' என்பவர் மகளைக் கெடுத்துவிட்டான். இதற்காக 'ஆ' என்பவர் 'அ'வின்மேல் வழக்கிட்டார். 'அ' என்பவன் 'ஆ' வுக்கு 223 பவுன் கடனுறுதிச் சீட்டு எழுதிக்கொடுத்து அவருடன் சமாதானம் செய்துகொண்டான். இதற்குப் பின்னர் 'ஆ' நொடித்துவிட்டான். 'அ' வின் சொத்திற்குப் பொறுப்புரிமை கொண்டவர்மீது இந்தக் கடனுறுதிச் சீட்டை நிரூபித்து 'ஆ' என்பவர் தமது பங்கைப் பெறலாம் என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

3. ஒரு சொத்தின்மீதுள்ள உரிமை மாற்றம் செய்யப்படும் போது, அத்துடன் அதன்மீது வழக்கிடும் உரிமையும் மாற்றம் செய்யப்படுகின்றது. எனவே அச்சொத்தின்மீது உரிமையைப் பெறுபவர், அது சம்பந்தமாக வழக்கிடும் உரிமையையும் பெறுகிறார். ஒரு பொருளை வழக்கிட்டுத்தான் மீட்கமுடியும் என்றாலும் அதை விலைக்கு விற்பது செல்லுபடியாகும். 'அ' என்பவர் 'ஆ' என்பவருக்குரிய சொத்தை முறையின்றித் தம் வசத்தில் வைத்துக்கொண்டிருந்தால், அச்சொத்தை 'ஆ' என்பவர் 'இ' என்பவருக்கு விற்கலாம். இது செல்லுபடியாகும். இதன் விளைவாக 'ஆ' என்பவர் 'அ'வின் மேல் வழக்கிடத் தமக்குள்ள உரிமையை 'இ'க்கு வழங்கிவிடுகிறார்.

4. காப்பீட்டுக் கம்பெனி ஒருவருக்கு ஏற்பட்ட இழப்புக்காக காப்பீட்டுத் தொகையைத் தந்த பின்னர், காப்பீட்டுத்தொகையைப் பெற்றவரின் உரிமையைத் தானே பெற்றுக்கொள்கிறது. காப்பீடு பெறுபவருக்கு இழப்பினை ஏற்படுத்திய மூன்றாவது நபர் மேல் காப்பீட்டுக் கம்பெனி வழக்கிட்டு ஈட்டுறுதி பெறலாம். எடுத்துக்காட்டாக 'அ' என்பவர் கவனமின்றி காரை ஓட்டி 'ஆ' வின் காருக்குச் சேதம் விளைவிக்கிறார். 'ஆ' என்பவர் 'இ' என்னும் காப்பீட்டுக் கம்பெனியிடம் காப்பீட்டு ஒப்பந்தம் செய்துகொண்டிருக்கிறார். எனவே 'ஆ'வுக்கு ஏற்பட்ட இழப்புக்குக் காப்பீட்டுத் தொகையை ஈட்டுறுதியாகத் தந்த பின்னர் 'இ' கம்பெனி 'அ' கவனமின்றி காரை ஓட்டிச் சேதம் விளைவித்ததற்காக 'ஆ'வின் சார்பில் 'அ'வின் மேல் வழக்கிட்டு நிவாரணம் பெறலாம்.

32. உடலைத் தாக்குதலும் (Battery) தாக்க முனைதலும் (Assautt)

அத்துமீறல் என்ற சொல்லுக்குத் துவக்கத்தில் தீங்கு என்றே சட்டப்படி பொருள் கொள்ளப்பட்டது. உடலுக்கு விளையும் "அத்துமீறல்" கவனமின்றியோ, அல்லது கருதியோ இழைக்கப் படலாம். இவற்றில் உடலுரிமைக்குக் கருதி இழைக்கப்படும் தீங்கே முக்கியமானதால் அவற்றைப் பற்றி இங்கு நாம் அறிவோம் இவறறில் முதன்மையாக மூன்று வகைகளைச் சொல்லலாம்.

1. உடலைத் தாக்குதல், 2. உடலைத் தாக்க மூனைதல் 3. முறையின்றிச் சிறைப்படுத்தல்.

உடலைத் தாக்குதல்

சட்டம் ஒப்புக்கொள்ளக் கூடிய நியாயம் எதுவும் இல்லாமல், வேண்டுமென்றே மற்றவர்மீது பலாத்காரத்தை பயன்படுத்தித் தாக்குவதை உடலைத் தாக்குதல் என்று கூறலாம். எனவே இத் தீங்குக்குத் தேவையானவை :

(1) பலாத்காரம் பயன்படுத்தப் பட்டிருக்கவேண்டும்.

(2) சட்டம் அதை நியாயமற்றதாகக் கருதவேண்டும்.

1. பலாத்காரத்தைப் பயன்படுத்தல்

பலாத்காரம் பயன்படுத்தப்பட்டதால் உடலில் பெரிய காயம் ஏற்பட்டிருக்க வேண்டியதில்லை. ஒருவன் பிறர்மீது பயன் படுத்திய பலாத்காரத்தின் அளவும், தன்மையும் மிகவும் அற்ப மானதாக இருக்கலாம்; அதனால் எவ்விதக் காயமும் ஏற்படாமலும் போகலாம். அல்லது அவன் காயம் உண்டாக்க வேண்டும் என்ற

நோக்கம் இல்லாவனுகவும் இருக்கலாம். இருப்பினும் அவன் மற்றவரது உடலைத் தாக்கியதாகவே கருதப்படுவான்.

சினங்கொண்டு ஒருவர் மற்றவரைச் சற்றே தொடுவதுகூட உடலைத் தாக்கியதாகவே கருதப்படலாம் என்று நீதிபதி ஹோல்ட் கருதினர். (கோல் v. டர்னர்). எனவே ஒருவரது இசைவு இல்லாமலோ அல்லது நியாயமான காரணம் எதுவும் இல்லா மலோ அவரைத் தொடுவதுகூடத் தீங்காகும். அவர் சினமோ, வெறுப்போகூட கொண்டிருக்கத் தேவையில்லை. ஒரு பெண் ணுக்கு அவள் வேண்டாதபோது முத்தம் கொடுப்பதுகூட உடலைத் தாக்குவதாகவே கருதப்படும். ஒருவரது உடலைத் தாக்கு வதால் அவருக்கு ஏற்படக்கூடிய அவமரியாதையைத் தடுப்பதும் தீங்கியலின் நோக்கமாகும். ஒருவரது விரல் அடையாளங்களைச் சட்டவிதிமுறைகளுக்கு முரணுகப் பதிவு செய்வதால் அவருடைய உடலுக்கு எந்த ஊறும் ஏற்படாவிட்டாலும், அவர் தன்னுடைய உடலைத் தாக்கியதாக வழக்கிட்டுக் கணிசமான தீங்கீட்டுத் தொகை பெறமுடியும்.

எப்போது உடலைத் தாக்குதல் நிகழ்வதாகச் சட்டம் கருதுகிறது? வேண்டுமென்று ஒரு பொருளை மற்றவர் உடல்மீது படுமாறு செய் தலே போதுமான தாக்குதல் அல்லது பலாத்காரம் எனச் சட்டம் கருதும். எடுத்துக்காட்டாக ஒருவர்மீது நீரைக் கொட்டுதல் அல்லது ஒருவர் அமரப்போகும் சமயத்தில் அவர் அறியா வண்ணம் நாற்காலியைப் பின்னல் இழுத்து அவரைத் தரையில் விழுமாறு செய்தல் அல்லது அவர் முகத்தில் எச்சிலைத் துப்புதல், தடி அல்லது ஆயுதம் கொண்டு ஒருவரை அடித்தல், துப்பாக்கி யால் ஒருவரைச் சுடுதல், ஒருவனின் சட்டையைப்பற்றி இழுத்தல் ஒருவனது விருப்பத்துக்கு எதிராக, கட்டாயமாக மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்துதல் ஆகியவற்றைக் கூறலாம். ஒருவன் தன் கையில் வைத்திருக்கும் பொருளை அவனிடமிருந்து பறித் தலும், அணிந்துள்ள துண்டு போன்ற பொருளைப் பறித்தலும்கூட உடலைத் தாக்குதலாகும்.

தவிர ஒருவரது உடலுக்கு ஊறு அல்லது நலக்குறைவு ஏற்படும்படியான செயல்களைச் செய்வதன்மூலமும் தாக்குதல் புரியலாம். எடுத்துக்காட்டாக அதிக வெப்பக் காற்றினை வீசி ஒருவனுடைய உடலைத் தாக்கச் செய்யலாம்; அல்லது கண்ணைக் கூசச் செய்யும் ஒளியையோ, மின்சாரத்தையோ அவர்மீது பாய்ச்சலாம். அல்லது செவிப்பறைக்கு ஊறு நேரத்தக்க பேரி ரைச்சல், மூச்சுத் திணறவைக்கும் புகை, சகிக்க முடியாத நாற்றம்,

ஆகியவற்றின்மூலம் ஒருவருக்கு உடல் நலக்குறைவை உண்டாக்கலாம். இவை யாவும் உடலைத் தாக்குவதாகவே கருதப்படும.

இரண்டாவதாக, சட்டம் எதிர்வாதியின் தாக்குதலை நியாயமற்றதாகக் கருத வேண்டும். அவன் வேண்டுமென்றே வாதியைத் தாக்கியிருக்க வேண்டும்; இல்லையேல் அது தாக்குதல் ஆகாது. உரையாடிக் கொண்டிருக்கும் ஒருவர் மற்றவரைத் தொடுவதும், ஏதாவதொன்றினைக் காணுமாறு அவனது கவனத்தை ஈர்க்கத் தொடுவதும் தாக்குதல் ஆகாது. மக்கள் கும்பலாகச் செல்லும் சாலையில் ஒருவர்மேல் மற்றவர் தற்செயலாக உரசிக் கொண்டு செல்வதும், பேருந்தில் ஒருவரை ஒருவர் இடித்துக் கொண்டு ஏறுவதும் நாள்தோறும் நிகழ்கின்றன. குறுகலான பாதையில் இருவர் சந்திக்கும்போது, காயம் ஏற்படுத்தும் நோக்கமோ, கருத்தோ இல்லாமல் ஒருவர் மற்றவர்மேல் மோதலாம். மனித சமுதாய வாழ்வில் இதைப்போன்ற செயல்களைத் தவிர்க்கமுடியாதாகையால் இவற்றிற்கு நாம் இணங்குவதாகவே கருத வேண்டும். ஆயினும் ஒரு கூட்டத்தில் முன்னேறிச் செல்வதற்காக வேண்டுமென்றே தள்ளிக் கொண்டு சென்று பிறருக்குக் காயம் ஏற்படுத்துவதற்குத் தீங்கியலில் பொறுப்புண்டு. சில சமயங்களில் நட்புறவைக் காட்டுவதற்காக ஒருவர் மற்றவரது கையை வன்மையாக குலுக்கியோ, அவரது முதுகில் பலமாகத் தட்டிக் கொடுத்தோ அவரது கண்களில் நீரை வரவழைக்கக்கூடும். மனித இயல்பைக் கருதி இச் செயல்களுக்கெல்லாம் இசைவு உட்கிடையாகத் தரப்பட்டதாகவே கருத வேண்டும். தவிர சட்டப்படி பலாத்காரத்தைப் பயன்படுத்த அதிகாரம் இருக்கலாம். எடுத்துக்காட்டாக தன் பிள்ளையை அடித்துத் திருத்தும் தந்தையும், பிடியாணையை நிறைவேற்ற வேண்டி காவலர் ஒருவரைக் கைது செய்ய அவரைத் தொடுவதும் சட்டப்படி உடலைத் தாக்குதல் ஆகாது. இதைப்போலவே, நீரில் மூழ்கிக் கொண்டிருக்கும் ஒருவனைக் காப்பாற்றுவதற்காக பலாத்காரத்தைப் பயன்படுத்துவது தாக்குதல் ஆகாது. உண்ணு நோன்பு இருக்கும் சிறைவாசிக்கு வலுக்கட்டாயமாக உணவு ஊட்டுதலும் தாக்குதல் ஆகாது. சாலையில் நிகழ்ந்த விபத்தில் சிக்கி மயங்கிக் கிடக்கும் ஒருவனுடைய உயிரைக் காப்பாற்ற அறுவை சிகிச்சை செய்தலும் உடலைத் தாக்குதல் ஆகாது. பயணச் சீட்டின்றி புகைவண்டியில் பயணம் செய்பவனை வண்டியிலிருந்து கீழிறங்குமாறு சொல்லியும் அவன் இறங்க மறுத்தால். பலாத்காரமாக அவனை வண்டியில் இருந்து இறக்கிவிடுதலும் தாக்குதல் ஆகாது. ஏன் எனில் அவன் பயணச்சீட்டு வாங்காமல் பயணம் செய்வதால் அத்துமீறி வண்டியில் இருப்பவனைக் கருதி

அவனை வெளியேற்றத் தேவையான பலாத்காரத்தைப் பயன் படுத்தலாம். இது முறையான செயலேயாகும். ஆனால் விசாரணை யில் இருக்கும் சிறைவாசி ஒருவனின் கரங்களுக்கு விலங்கிட்டுப் பின்னர் அவன் மருத்துவமனையில் சிகிச்சை பெறும்போது சன்னல் ஒன்றில் சங்கிலி கொண்டு ஆபத்தான விலங்கினைப் போலப் பிணைக்கும் செயல் அநியாயமானது என்று கருதப்பட்டு அதைச் செய்த காவல் அலுவலர் தமது அதிகார வரம்பை மீறியதால் பொறுப்பாளியாவார் என சென்னை உயர்நீதிமன்றம் கதர் v. அழகர்சாமி வழக்கில் தெரிவித்தது.

எதிர்வாதியின் செயல் தன்னிச்சையான செயலாக அமைந் திருக்க வேண்டும். அப்போதுதான் அது உடலைத் தாக்குதல் ஆகும். எடுத்துக்காட்டாக 'அ' என்பவர் 'ஆ' வின் கையினைப் பற்றி இழுத்து, அதை ஆயுதமாகப் பயன்படுத்தி 'இ' என்பவனை அடித்தால் 'ஆ' என்பவன் 'இ' என்பவனைத் தாக்கியதாகச் சட்டம் கருதாது. இச்செயலுக்கு 'அ' என்பவரே பொறுப்பாவார்.

இந்தியக் குற்றச் சட்டம் 350வது பிரிவில் உடலைத் தாக்குதல் குற்றமாகும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

உடலைத் தாக்க முனைதல் (Assault)

எதிர்வாதி தன்னை உடனடியாகத் தாக்கப் போகிறான் என்ற பயத்தை வாதியின் மனதில் தோற்றுவிக்கும் எதிர்வாதியின் செயலைத் தாக்க முனைதல் என்று கூறுகிறோம். வாதியின் உடலைத் தாக்க எதிர்வாதி முற்படலாம். அல்லது அவனைத்தாக்கப்போவதாக அச்சுறுத்தலாம், இதன்விளைவாக வாதியின் மனதில் தான் உடனடி யாகத் தாக்கப்படலாம் என்ற நியாயமான அச்சம் தோன்றுகிறது. இதற்குக் காரணமாக அமைந்த எதிர்வாதியின் செயலையே தாக்க முனைதல் என்றுசொல்லுகிறோம். எனவே இதை உடலைத் தாக்குதல் என்னும் தீங்கின் முற்றுப் பெருவடிவமாகக் கருதலாம். உடலைத் தாக்குதலுக்கும் தாக்க முனைதலுக்கும் உள்ள வேறுபாட்டை பேராசிரியர் வின்ஃபீல்டு பின்வரும் எடுத்துக்காட்டுகளால் விளக்கு கிறார். ஒருவன்மேல் நீரை வீசுதல் உடலைத் தாக்கமுனைதல் ஆகும்; அவன் மேல் நீர்த் திவலைகள் பட்டால் அது உடலைத் தாக்குதல் ஆகும். ஒருவனை நோக்கிக் குதிரையை ஓட்டுதல் உடலைத் தாக்க முனைதல்; அவன் மேல் குதிரையை ஓட்டுதல் உடலைத் தாக்குதல் ஆகும். ஒருவன் அமரப் போகும் போது பின்புறம் இருந்து நாற் காலியை அவனறியா வண்ணம் குறும்புத்தனமாக இழுத்தால், அதன் விளைவாக அவன் கீழே நிலத்தில் விழும்வரை தாக்க முனைதல் ஆகும். ஏன் எனில் அவன் கீழே விழுந்து கொண்டி

ருக்கும்போது நாற்காலி இழுக்கப்பட்டதால் தனக்குக் காயம் ஏற்படப்போகிறது என்று எதிர்பார்க்கிறான். அவன் நிலத்தைத் தொட்டதும் அது உடலைத் தாக்குதல் ஆகும். இந்தியக் குற்றச் சட்டம் 351ஆம் பிரிவில் தாக்க முனைதலின் இலக்கணம் சொல்லப் பட்டிருக்கிறது. தீங்கியலுக்கும் இது பொருந்தும் என்று கொள்ளலாம்.

ஆயினும் வெறும் வாய்ச் சொற்கள் உடலைத்தாக்க முனைதல் ஆகாது; சொற்களோடு சேர்ந்து ஏதாவது ஒரு வகை உடல் இயக்கம் இருக்க வேண்டும். அதைக் கண்ணுறும் வாதி தனக்கு எதிர்வாதியால் உடற்காயம் ஏற்படப் போகிறது என்று அச்சமுற வேண்டும். அப்போதுதான் தாக்க முனைதலாகிய தீங்கு நிகழ்கிறது. வெறும் சொற்களோ, பாட்டோ தாக்க முனைதல் ஆகா, எதிர்வாதி வன்முறையைக் கையாளப் போவதாகத் தனது கருத்தை வெறும் மிரட்டுச் சொற்களால் வெளியிட்டால் போதாது; அது மிரட்டும் செயல்களால் புலனாகவேண்டும். எதிர்வாதியின் செயல் அச்சுறுத்தும் இயல்புடையதாக அமைந்திருப்பினும் அதையடுத்து வரும் சொற்கள் வாதியின் மனதிலிருந்து எதிர்வாதி தன்னை தாக்கக்கூடும் என்ற அச்சத்தையே அகற்றக்கூடும். எடுத்துக் காட்டாக, டியூபெர்வல் *v.* சேவேஜ் (Tubervell *v.* Savage) வழக்கில், எதிர்வாதி தனது உடைவாளின் மீது கையை வைத்து, "இப்போது நீதிமன்றம் இயங்கும் வேளையாக இல்லாமல் இருந்தால் உன் பேச்சைக் கேட்டுக் கொண்டு சும்மா இருந்திருக்க மாட்டேன்" என்று வாதியிடம் சொன்னார். அப்போது நீதிமன்றம் இயங்கிக் கொண்டிருந்ததால் வாதியை உடனடியாகத் தாக்கும் எண்ணம் எதிர்வாதிக்கு இல்லை என்பது தெளிவாகிறது. எனவே வாதியின் மனதில் தான் தாக்கப்படக்கூடும் என்ற அச்சம் தோன்றக் காரணம் இல்லை. எனவே எதிர்வாதி தாக்க முனைந்ததாக நீதிமன்றம் கருதவில்லை. எதிர்வாதியின் வன்செயலுக்குத் தான் உடனே இலக்காகக்கூடும் என்ற பயமோ, அச்சமோ வாதிக்கு ஏற்படாதவரை வெறும் மிரட்டுச் சொற்கள் தாக்க முனைதல் ஆகாது. ஒருவனைத் தாக்குவேன் என்று சொல்லி அவனருகே முகத்துக்கு எதிராகத் தன் கைவிரல்களை மடக்கிக் கொண்டு ஆட்டுதல் தாக்கமுனைதல் ஆகும். ஆனால் வன் செயலைப் புரிய முடியாத தொலைவில் உள்ள ஒருவனை நோக்கி அவ்வாறு செய்தல் தாக்க முனைதல் ஆகாது. ஏன் எனில் இச் செயல் மனதில் அச்சத்தைத் தோற்றுவிக்காது.

இங்கு பலாத்காரத்தைப் பயன்படுத்தும் கருத்தோ, சக்தியோ எதிர்வாதிக்கு உண்மையில் இல்லாமல் இருந்தாலும் பொறுப்பு

உண்டு. வாதிதான் வன்முறைக்கு இலக்காகக் கூடும் என்று நியாயமான காரணத்தோடு நம்பினாலே போதும். எடுத்துக்காட்டாக, எதிர்வாதி குண்டு பொருத்தப்படாத துப்பாக்கியை வாதியை நோக்கி நீட்டுகிறான். அதில் குண்டு இல்லையென்பது எதிர்வாதிக்கு மட்டுமே தெரியும்; அதை வாதி அறியான். இங்கு வாதி அச்சமுறப் போதுமான காரணம் இருக்கிறது. எனவே எதிர்வாதி பொறுப்பாளியாவான். ஆனால் வாதியின் மனதில் அச்சம் ஏற்பட வழியில்லையென்றால் எதிர்வாதிக்குப் பொறுப்பு ஏற்படாது. எடுத்துக் காட்டாக வாதிக்குத் தெரியாமல், அவன் பின்புறம் இருந்து கொண்டு எதிர்வாதி துப்பாக்கியை நீட்டுகிறான். இதனால் வாதியின் மனதில் அச்சம் ஏற்படுவதில்லை. எனவே எதிர்வாதி உடலைத் தாக்க முனைந்த தீங்குக்கு இலக்காக மாட்டான். தவிர எதிர்வாதி ஒன்றும் செய்யாமல் சும்மா கதவைப் போலவோ, சுவரைப் போலவே பேசாமல் நின்று கொண்டு வாதியை வழி மறித்தல் தாக்கமுனைதல் ஆகாது என்று இன்ஸ் v. வைலி (Innes v. Wylie) வழக்கில் கூறப்பட்டது.

உடலைத்தாக்குதல் என்னும் தீங்கில் தாக்கமுனைதல் இல்லாமலும் இருக்கலாம். எடுத்துக்காட்டாக வாதிக்குத் தெரியாமல் எதிர்வாதி அவன் பின்புறம் இருந்து கொண்டு அறைந்தால் அது உடலைத் தாக்குதல் ஆகும். இங்கு வாதியின் மனதில் தன்னை எதிர்வாதி தாக்கப்போகிறான் என்று அச்சம் தோன்றவில்லை.

ஒருவன் மற்றவனைத் தாக்கப்போவதாக அச்சுறுத்திக் கொண்டே அவனை நோக்கிச் செல்லும்போது மூன்றாவது நபர் ஒருவர் குறுக்கிட்டு அவனைத் தடுத்து நிறுத்தியிருந்தாலும் உடலைத் தாக்க முனைந்ததற்காக அவனுக்குப் பொறுப்பு உண்டு. ஸ்டீபன்ஸ் v. மையர்ஸ் (Stephens v. Myers) வழக்கில் ஒரு சமயக் கூட்டத் திற்கு வாதி தலைமை வகித்தார். அப்போது வாதி அமர்ந்திருந்த இடத்திலிருந்து 6 அல்லது 7 நாற்காலிகள் தள்ளி எதிர்வாதி அமர்ந்திருந்தார். அப்போது இருவருக்குமிடையே வாக்கு வாதம் ஏற்பட்டது. இதன் விளைவாக எதிர்வாதி தமது நிதானத்தை இழந்து கூட்ட நடவடிக்கையில் குறுக்கிட்டார். எனவே கூட்டத் திற்கு வந்திருந்த பெரும்பான்மையினர் அவரை அவையிலிருந்து வெளியேற்றத் தீர்மானம் நிறைவேற்றினர். அவர் தாம் வெளியேற்றப்படுவதற்கு முன்னர் வாதியை நாற்காலியிலிருந்து தூக்கி எறியப்போவதாகக் கூறிக்கொண்டு மடக்கிய கையுடன் வாதியை நோக்கி முன்னேறினார். ஆனால் வாதியின் அருகில் அமர்ந்திருந்த மாதாகோவில் காப்பாளர் எதிர்வாதியைத் தடுத்து நிறுத்தி விட்டார். இவ்வழக்கில் எதிர்வாதி வாதியின் உடலைத் தாக்க

முடிந்ததற்குப்பொறுப்பாளியாவார் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. ஆனால் எதிர்வாதி தமது நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்ள வாய்ப்பற்ற நிலையில் இருப்பின் வாதிக்குப் பொறுப்பாளியாக மாட்டார். எடுத்துக்காட்டாக, புகைவண்டி நிலையத்தைவிட்டுப் புகைவண்டி நகர்ந்த பின்னர் அதன் உள்ளிருக்கும் எதிர்வாதி புகைவண்டி நிலையத்திலிருக்கும் வாதியை நோக்கி அடிக்கப் போவதாகத் தமது கைகளை அசைத்தால் அது தாக்க முடியாதல் ஆகாது.

இதைத் தவிர எதிர்வாதியால் வேண்டுமென்றே கருதி செய்யப் படும் சில செயல்களாலும் வாதியின் உடலுக்கு அத்துமீறல் என்று சொல்லமுடியாத வகையில் உடலுக்கு ஊறு ஏற்படலாம். எடுத்துக்காட்டாக, வில்கின்சன் *v.* டௌன்டன் (Wilkinson *v.* Downton) வழக்கில் எதிர்வாதியின் குறும்புத்தனமான செயலால், வாதிக்கு ஏற்பட்ட மன அதிர்ச்சியையும் உடல் ஊறுகளையும் சொல்லலாம். இதைப்பற்றி விரிவாக 'மன அதிர்ச்சி' எனும் பகுதியில் சொல்லப்பட்டுள்ளது.

33. முறையின்றிச் சிறைப்படுத்தல் (False imprisonment)

ஒரு மனிதனின் சுதந்திரத்தைச் சட்டம் ஒப்புக் கொள்ள கூடிய நியாயமான காரணம் எதுவுமில்லாமல், ஒரு குறிக் பிட்ட காலத்திற்கு முழுமையாகக் கட்டுப்படுத்துவதையே முறையின்றிச் சிறைப்படுத்தல் என்கிறோம். அத்தீங்கு பலவகை களில் இழைக்கப்படலாம். எடுத்துக்காட்டாக, அநியாயமான முறையில் ஒருவன் கைது செய்யப்படலாம்; அல்லது சிறையி லடைக்கப் படலாம்; அல்லது ஒருவன் ஒரு இடத்திலிருந்து வெளி யேறிச் செல்ல அவனுக்குள்ள உரிமை மறுக்கப்படலாம். தவிர, சட்டப்படி சிறையில் அடைக்கப்பட்டுள்ள ஒருவனின் தண்டனைக் காலம் முடிவடைந்த பின்னரும் அவன் தொடர்ந்து சிறையில் வைத்திருக்கப் படலாம்; அல்லது ஒருவனைக் கைது செய்ய அனு மதியும், அதிகாரமும் இல்லாத இடம் ஒன்றில் அவன் கைது செய்யப்படலாம்; அல்லது அவனைச் சிறைச்சாலையில் தவருன வகுப்பில் வைத்திருக்கலாம். இவையனைத்தும் முறையின்றிச் சிறைப்படுத்தும் செயலாகவே சட்டம் கருதும். ஒரு மனிதனுக்குத் தன் விருப்பம் போல் எங்கு வேண்டுமானாலும் போக உரிமை உண்டு. இதைத் தடுக்கும் செயல் இந்தியக் குற்றச் சட்டத்தின் 340ஆம் பிரிவின்படி குற்றமாகவும் கருதப்படுகிறது.

இத்தீங்கு இழைக்கப்பட ஒருவன் உண்மையில் சிறையில் அடைக்கப்பட்டிருக்க வேண்டியதில்லை. தனி மனிதனின் சுதந் திரம் எந்த வகையிலேனும் முழுமையாக - மிகச் சிறிய காலத்திற் கேனும்-கட்டுப்படுத்தப் பட்டிருந்தால் போதுமானது. சட்டத் திற்கு முரணான வகையில் ஒருவனைக் கைது செய்வதையே முறை யின்றிச் சிறைப்படுத்தலாகக் கருதுகிறோம். அதைப் போலவே, ஒருவன அவன் இருக்குமிடத்திலிருந்து வெளியே செல்லாமல் சட்டத்திற்கு முரணான வகையில் தடுப்பதையும் முறையின்றிச்

சிறைப் படுத்தலாகவே கருத வேண்டும். எடுத்துக்காட்டாக, ஒருவனை அவன் வீட்டிலிருந்தோ அல்லது அவன் அமர்ந்துள்ள வண்டியிலிருந்தோ, வெளியே வரமுடியாதவாறு தடுக்கும் செயலைச் சொல்லலாம், கைது செய்யப்படுபவன் உடலைத் தொடாமலே அவனைச் சிறைப்படுத்தலாம். எடுத்துக்காட்டாக, குதிரையின்மேல் அமர்ந்துள்ள ஒருவனைக் கைது செய்திருப்ப தாகக் காவலர் கூறவும், குதிரை மேலிருப்பவர் அவரோடு "காவல் நிலையத்திற்குச் செல்கிறார். இங்கு அவர் தனது சுதந்திரத்தை முழுவதும் இழந்து விட்டதாகவே கருத வேண்டும். இங்கு அவர் குற்றம் சாட்டப்பட்ட பின்னரே, தாமாக போலீஸ் நிலையம் செல் கிறார். ஆனால் குற்றம் எதுவும் அவர்மீது சுமத்தப்படாதபோது தம்மீது ஏற்பட்ட ஐயத்தைப் போக்கவேண்டி போலீஸ் அதிகாரி யைக் கண்டுபேச போலீஸ் நிலையத்திற்கு யார் வற்புறுத்தலு மின்றித் தாமே செல்பவர் வழக்கிட முடியாது. கிரெய்ங்கர் v. ஹில் (Grainger v. Hill) வழக்கில் நோயினால் படுக்கையிலிருந்து எழவே முடியாமல் கிடந்த வாதியிடம் அவர் குறிப்பிட்ட சில ஆவணங்களைத் தர மறுத்தாலோ அல்லது அதற்குப் பிணை காட்டத் தவறினாலோ கைது செய்யப்படுவார் என்று எதிர்வாதி சொல்லவே, அவர் பிணை கொடுக்க முடியாததால், ஆவணங் களைக் கொடுத்துவிட்டார். வாதி தன்னை முறையின்றிச் சிறைப் படுத்தியதாக வழக்கிடலாம் என்று தீர்ப்பளிக்கப்பட்டது. ஒருவனைச் சிறைச்சாலைக்குள் அடைத்திருக்கத் தேவையில்லை. கல்லூரி வகுப்பு நடைபெறும் நேரம் முடிவடைந்த பின்னரும், விரிவுரையாளர் தமது மாணவர் வெளியேற முடியாதவாறு வகுப் பறைக்குள் பூட்டி வைத்தால் அது முறையின்றிச் சிறைப் படுத்தலாகும்.

ஒருவனை அவன் அறியாமலே சிறைப் படுத்தலாம். தனது சுதந்திரம் கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது என்று அவன் அறிந்திராவிட்டாலும், அவன் வழக்கிடத் தடையில்லை. ஆனால், ஹெர்ரிங் v. பாயில் (Herring v. Boyle) வழக்கில், ஒருவனுக்குத் தெரியாமல் அவனைச் சிறைப்படுத்தியிருந்தால் அதை முறை யின்றிச் சிறைப் படுத்தல் என்று கொள்ள முடியாது என்று கூறப் பட்டது, இவ்வழக்கில் 10 வயதான வாதியை அவனது தாய் எதிர் வாதியின் பள்ளியில் சேர்த்திருந்தாள். அவள் எதிர்வாதியிடம் சென்று வாதியைச் சில நாட்களுக்கு வீட்டிற்கு அழைத்துக் கொண்டு செல்ல அனுமதி கேட்டார். ஆனால் பள்ளி ஆசிரியர் வாதி செலுத்த வேண்டிய பள்ளிக் கட்டணத்தை அவன் தாய் செலுத்தாமல் அவனை அழைத்துச் செல்ல முறையின்றி அனுமதிக்க மறுத்துவிட்டார். பள்ளி ஆசிரியருக்கும் வாதியின்

தாய்க்கும் நடந்த உரையாடலை வாதி கேட்கவில்லை. எனவே, அவன் தன்மீது விதிக்கப்பட்ட தடையை அறிந்திருக்கவில்லை. ஆனால் வாதியின் சுதந்திரத்திற்கு எந்தவிதக் கட்டுப்பாடும் விதிக்கப்படவில்லை. எனவே இது முறையின்றிச் சிறைப்படுத்தலாகாது என்று தீர்ப்பளிக்கப்பட்டது. மற்றொரு வழக்கில் பள்ளி நேரம் முடிவெய்திய பின்னர் ஒரு குழந்தையை ஆசிரியர் வீட்டுப் பாடத்தை படித்து வராத காரணத்திற்காக அரைமணி நேரத்திற்கு அதைப் பள்ளியிலேயே வைத்திருந்தது குற்றமெனக் கருதப்பட்டுத் தண்டிக்கப்பட்டது.

பின்னர் எழுந்த மீரிங்.v. கிரகாம் ஒயிட் ஏவியேஷன் கப்பெனி லிமிடெட் (Meering v. Graham-White Aviation Co. Ltd) வழக்கில், எந்தத் தடையுமில்லாத போதும் நகர முடியாதவாறு நோயுற்றுப் படுக்கையில் கிடப்பவனையும் சிறைப்படுத்தமுடியும் என்று கூறப்பட்டது. இவ்வழக்கில் வாதி தனது பணித்தலைவர்களாகிய எதிர்வாதியின் சொத்தைத் திருடியதாக ஐயத்திற் குள்ளானார். எனவே எதிர்வாதியின் பணியாட்கள் இருவரால் கம்பெனியின் அலுவலகத்திற்கு வருமாறு வாதி கேட்டுக் கொள்ளப்பட்டார். அதற்கு அவரும் இணங்கி உடன் சென்றார். அலுவலகம் வந்தடைந்ததும், அங்குள்ள தங்கும் அறைக்கு அவர் அழைத்தோ அல்லது கொண்டோ செல்லப்பட்டார். அங்கு அவர் அமர்ந்திருந்தபோது வெளியே பணியாட்கள் காத்திருந்தனர். இதற்கிடையில், அங்கு வரவழைக்கப்பட்ட காவலர் வாதியைக் களவு செய்த குற்றத்திற்காகக் கைது செய்தனர். இவ்வழக்கில் வாதி விடுதலை செய்யப்பட்டார். பின்னர் வாதி தன்னை முறையின்றிச் சிறைப்படுத்தியதாக எதிர்வாதிகளின்மேல் வழக்கிட்டார். வாதி களவு செய்ததாக ஐயங் கொள்ளத்தக்க காரணம் இருந்ததாக நம்பி காவலர் அவரைக் கைது செய்தனர். அவர்கள் எதிர்வாதிகளின் பணியாட்கள் அல்லர். எனவே முறையின்றிச் சிறைப்படுத்தியதற்குக் காவலர் பொறுப்பாக மாட்டார். ஆயினும், காவலர் வரும்வரை வாதியைச் சிறைப்படுத்தி வைத்திருந்ததற்காக எதிர்வாதிகள் பொறுப்பாளியாவார் என்று தீர்ப்பளிக்கப்பட்டது. இவ்வழக்கில் வாதி தான் விரும்பியிருந்தால் வெளியே சென்றிருக்கலாம் என்றும், அவர் யாராலும் தடுக்கப்படவில்லையென்றும், அவராகவே வெளியேற விரும்பவில்லையென்றும் எதிர்வாதம் செய்யப்பட்டது. இந்த எதிர்வாதம் ஏற்கப்படவில்லை. நீதிபதி ஆட்கின், ஒரு மனிதனை அவன் அறியாமலேயே சிறைப்படுத்த முடியும் என்று கருதினார். ஒருவன் தூங்கிக் கொண்டிருக்கும் போதும், குடிவெறியில் இருக்கும்போதும், மயங்கிக் கிடக்கும் போதும், பைத்தியமாக இருக்கும்போதும், சிறைப்படுத்த முடியும்.

ஒருவன் ஒரு அறையில் அமர்ந்திருக்கும்போது அவனுக்குத் தெரியாமல் அந்த அறையின் கதவினை மூடி வெளியே தாளிட்டு வைத்தாலும், அவனைச் சிறைப்படுத்தியதாகவே கருத வேண்டும். ஒருவன் தான் சிறைப்படுத்தப் பட்டதை அறியாமல் இருக்கலாம். ஆனால் அவனைச் சிறைப்படுத்தியவர்கள் அவன் சிறைப்படுத்தப் பட்டதாக வெளியே தற்பெருமையாகப் பேசிக் கொள்ளலாம். இக்காரணத்தினால்தான் ஒருவனை அவன் அறியாமலேயே முறையின்றிச் சிறைப்படுத்த முடியும் என்று தான் கருதுவதாக நீதிபதி குறிப்பிட்டார். ஆனால் இது அவதூறாகாதா? இந்த வாதம் முறையின்றிச் சிறைப்படுத்தலைவிட அவதூறுக்கே பொருத்தமாகத் தோன்றுகிறது. ஒரு மனிதனின் சுதந்திரத்தை இன்றியமையாததாகக் கருதிக் காக்க வேண்டும். இவ்வழக்கின் தீர்ப்பை இதனால் நியாயமானதாக கருதவேண்டும். இத்தீர்ப்பிற்கு முரண்பட்ட ஹெர்ரிங் v. பாயில் வழக்குப்பற்றி மீரிங் வழக்கில் கருதப்படவே இல்லை. ஸ்ட்ரீட் (Street) போன்ற தீங்கியல் ஆசிரியர்கள் தான் சிறைப்படுத்தப்பட்டதாக ஒருவன் அறிந்திருந்தால்தான் இத்தீங்கு இழைக்கப்பட்டதாகக் கருதவேண்டும் என்று கூறுகின்றனர். ஏனெனில் தாக்கமுனைதல் போன்ற தீங்குகளில் உள்ளவாறு இங்கு பாதுகாக்கப்படும் நலன் மனநிலையோடு தொடர் கொண்டது. எனவே ஹெர்ரிங் தீர்ப்பையே சரியென இவர்கள் ஏற்கின்றனர். பேராசிரியர் குட்ஹார்ட் (Goodhart) தனது தீங்கியல் சட்டம் மறு அறிக்கையில் (Restatement of the law of Torts) மீரிங் தீர்ப்பைக் கண்டனம் செய்துள்ளார். ஆனால் புரோசர் (Prosser) மீரிங் தீர்ப்பினை ஆதரிக்கிறார்.

இத் தீங்கிற்குத் தேவையானவை :

(1) கட்டுப்பாடு அல்லது தடை முழுமையானதாக இருக்க வேண்டும்.

(2) அது சட்டம் ஒப்புக்கொள்ளக் கூடிய நியாயமான காரணம் எதுவும் அற்றதாக இருக்க வேண்டும்.

முழுமையான தடை

வாதி எந்தத் திசையிலும் வெளியேறிச் செல்ல முடியாதவாறு தடுக்கப்பட்டிருக்க வேண்டும். அவன் சுதந்திரத்தை முழுமையாக இழந்திருக்கவேண்டும், அதாவது அவனைச் சுற்றி ஒவ்வொரு திசையிலும் எல்லை வரைந்து அதற்கு வெளியே அவன் செல்ல முடியாதென்று தடுக்கப்படவேண்டும். இந்த எல்லை குறுகியதாகவோ அல்லது விரிந்ததாகவோ இருக்கலாம். ஆனால் இவ்வாறு ஏற்படுத்தப்பட்டுள்ள எல்லை முழுமையானதாகவும், தெளிவானதாகவும் இருக்கவேண்டும். சில திசைகளில் மட்டும்

வாதி போகத் தடை விதித்து, வேறு திசைகளில் அவனைப் போக அனுமதித்தால் அது சிறைப்படுத்துதல் ஆகாது. பேர்ட் v. ஜோன்ஸ் (Bird v. Jons) வழக்கில் எதிர்வாதிகள் ஹாமர்ஸ்மித் பாலத்தின் மேல் உள்ள பொது நடைபாதையின் ஒரு பகுதியில் முறையின்றி அடைப்பு வைத்து, அதில் நாற்காலிகள் போட்டு அங்கிருந்தபடியே ஆற்றில் நடக்கும் படகுத் திரு விழாவைக் (Regatta) காணக் கட்டணம் வசூலித்தனர். நடை பாதையில் இந்த வழியாகச் செல்லத் தனக்குரிமை உண்டென நிலை நாட்டுவதற்காக வாதி கட்டணம் தராமல் அடைப்பு வேலி யினைத் தாண்டிச் சென்றார். எதிர்வாதிகள் அவரைத் தடுத்து நிறுத்தி அவர் தொடர்ந்து மேலும் செல்ல அனுமதிக்கவில்லை. ஆனால் அவர் விரும்பினால் வண்டிகள் செல்லும் பாதை வழியே திரும்பிச் சென்று பாலத்தின் மறுபுறம் செல்லலாம் என்று எதிர் வாதிகள் கூறினர். வாதி அவ்வாறு செய்ய மறுத்து பாலத்தில் இருந்த அடைப்புக்குள் ஒரு மணி நேரம் இருந்தார். இவ்வழக்கில் எதிர்வாதிகள் முறையின்றிச் சிறைப்படுத்தியதாகக் கருதப்பட வில்லை.

ஆனால் ஒருவன் சிறைப்படுத்தப்பட்டுள்ள காலம் மிகச் சிறிய தாயினும், தீங்கு இழைக்கப்பட்டதாகவே கருதப்படும். மீ v. குரூக் ஷேங்க்(Mee. v. Cruik sehank)வழக்கில், சிறைப்படுத்தப்பட்டவன் ஒருவன் அவனை விடுதலை செய்யப்பட்ட பின்னர் சிறைச் சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுச் சில நிமிடங்கள் வைக்கப் பட்டிருந்தான். அப்போது அவனை சிறையதிகாரிகள் கேள்விகள் கேட்டனர். இவ்வாறு சில நிமிடங்கள் அவனது சுதந்திரம் பறிக் கப்பட்டிருந்ததால் அவன் முறையின்றிச் சிறைப்படுத்தப் பட்ட தாகவே கருதப்பட்டது.

வெளியேறிச் செல்லும் வழி

வாதி குறிப்பிட்ட திசையில் மட்டும் வெளியேற உரிமை மறுக் கப்பட்டிருந்தால் வழக்கிட முடியாது என்று கண்டோம். ஆனால் அவன் தப்பி வெளியேறிச் செல்ல உள்ள வழி அந்தச் சூழ்நிலையில் முறையானதாகவோ, நியாயமானதாகவோ இருக்க வேண்டும். எடுத்துக்காட்டாக, வாதி ஒரு குளத்தில் குளித்துக் கொண்டிருக் கும்போது, எதிர்வாதி அவனது ஆடைகளை எடுத்துக் கொண்டு விட்டால், வாதி நிர்வாண நிலையில் வெளியேற முடியாது. வாதி யின் செயல் இச்சூழ்நிலையில் நியாயமற்றதாகும். இதைப்போலவே அவனது உடலுக்கோ, ஆடைக்கோ ஊறு விளைவித்தும் வெளி யேற முடியாமல் செய்வதும் தீங்காகும்.

ஆனால் தப்பிச் செல்ல வழியிருப்பது வாதிக்குத் தெரியாமல் போகலாம். இருப்பினும் அவன் முறையின்றிச் சிறைப்படுத்தப் பட்டதாகவே கருத வேண்டும். ஆனால் குறிப்பிட்ட சூழ்நிலையில் தகுந்த அறிவின் துணைகொண்டு வெளியேறிச் செல்லும் வழியுள்ள தென ஒருவன் உணர்ந்து கொள்ள முடியுமானால் அவன் வழக்கிட முடியாது. எடுத்துக்காட்டாக, வாதி இருக்கும் அறையில் கதவைத் தாளிட்டுச் சாவியை எடுத்துக் கொண்டு சென்று விடு வதைப் போல எதிர்வாதி பாசாங்கு செய்கிறான். இச்சூழ்நிலையில் வாதி எழுந்து வந்து கதவு, உண்மையில் தாளிடப்பட்டு விட்டதா என்பதை அறிய எந்த முயற்சியும் செய்யாமல் இருப்பான் என்று நியாயமாக எதிர்பார்க்க முடியாது. அவ்வாறு உண்மையில் தான் அறையில் அடைத்து வைக்கப்பட்டுள்ளானா என்பதையறிந்து கொள்ள வாதி எந்த முயற்சியும் செய்யாமல் எதிர்வாதியை அவன் பொறுப்பாளியாக்க முடியாது. ஆனால் வாதியின் சட்டைப் பையில் கதவுக்கு மறுசாவி இருந்ததென்றும், ஆனால் சாவி இருப் பதை அவன் மறந்து விட்டான் என்றும் வைத்துக் கொள்வோம். இப்போது எதிர்வாதி பொறுப்பாளியாவானா என்று தீர்மானிப்பது எளிதானதல்ல. மனிதனுக்கு மறதி ஏற்படுவது இயற்கை. நாம் வரையளவாகக் கொள்ளும் நல்லறிவுள்ள மனிதனுக்கு ஞாபக மறதி எப்போதும் ஏற்படாது என்று சொல்ல முடியாது.

இரண்டாவதாக, ஒருவனைச் சட்டம் ஒப்புக் கொள்ளக் கூடிய தகுந்த காரணம் இல்லாமல் சிறைப்படுத்தி இருந்தால்தான் அவன் முறையின்றித் தன்னைச் சிறைப்படுத்தியதாக வழக்கிட முடியும் என்று கண்டோம். எனவே ஒருவனைத் தடுத்து நிறுத்தி ஓரிடத் தில் வைத்திருந்ததற்கு ஏதாவது தகுந்த காரணம் இருப்பின் அவன் தன்னை முறையின்றிச் சிறைப்படுத்தியதாக வழக்கிட முடியாது. எனவே சில நியாயமான நிபந்தனைகளுக்குக் கட்டுப் பட்டு ஒரு கட்டிடத்தில் நுழைபவனை அந்த நிபந்தனைகளை அவன் அனுசரிக்காமல் கட்டிடத்தில் இருந்து வெளியேற அனுமதிக்க மறுத்தல் முறையின்றிச் சிறைப்படுத்தும் செயல் ஆகாது. ராபின்சன் v. பால்மெய்ன் பெர்ரி கம்பெனி லிமிடெட் (Robinson v. Balmaln Ferry Co.) வழக்கில் எதிர்வாதியின் படகிலேறி ஆற்றைக் கடக்க அவரது தளத்திற்கு வாதி வந்தார். 20 நிமிடங்கள் வரை காத்திருந்தும் படகு கிடைக்காதபடியால் வாதி அந்தத் தளத்திலிருந்து வெளியே செல்ல விரும்பினர். அங்கு வர வாதி ஒரு பென்னி கட்டணம் செலுத்தியிருந்தார். எதிர்வாதியின் அறிவிப்புப் பலகையில் வெளியே செல்ல ஒரு பென்னி கட்டணம் செலுத்த வேண்டும் என்ற விதி இருந்தது. வாதி கட்டணத்தைச்

செலுத்த மறுத்தார், எனவே தளத்திலிருந்து வெளியேறச் செலுத்த வேண்டிய கட்டணத்தைத் தராமல் வாதி அங்கிருந்து வெளியேற அனுமதிக்கப் படவில்லை. தன்னை முறையின்றி எதிர்வாதி சிறைப் படுத்தியதாக வாதியிட்ட வழக்கு தள்ளப்பட்டது. எனவே ஒரு குடுப்பிட்ட கதவு அல்லது வாயில் வழியாக ஒரு கட்டிடத்தில் நுழைபவனை வேறு கதவு அல்லது வாயில் ஒன்றின் வழியாகத்தான் வெளியேற வேண்டும் என்று நிபந்தனை விதிக்க அக்கட்டிடத்தை உடையவருக்கு உரிமையுண்டு.

ஒருவனைக் கைது செய்பவன் அவ்வாறு செய்ய வேண்டிய சூழ்நிலையிருந்ததாகத் தான் நியாயமாகவும், நேர்மையாகவும் நம்பியதாக எதிர்வாதம் செய்யலாம். இவ்வாருன சூழ்நிலையி ருந்ததா என்று முடிவு செய்யும் பொறுப்பு நீதிபதிகளுடைதாகும். ஒரு சட்டம் தெரிந்த, நியாய உணர்வுள்ள மனிதன் எதிர்வாதிக்குக் கிடைத்திருந்த தகவலின் அடிப்படையில் வாதியைக் கைது செய்வதற்குத் தகுந்த காரணமுள்ளதாகக் கருதுவானு என்று நீதிபதி கருதிப் பார்த்து முடிவு செய்வார். டேலிசன் v. கேஃபரி (Dallison v. Caffery) வழக்கில், களவு உண்மையில் நிகழ்ந்தி ருந்தது. அதற்குப் பொறுப்பாளி வாதியே என்று நம்பத் தகுந்த தகவல் எதிர்வாதியாகிய காவல் அதிகாரிக்குக் கிடைத்தது. எனவே அதன் அடிப்படையில் அவர் கைது செய்தது நியாயமான செயல் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

ஆனால், ஹாக் v. வார்ட் (Hogg v. Ward) வழக்கில் ஒருவர் தனது சேணத்தைத் திருடியதாக வாதியின்மேல் கொடுத்த தவருன குற்றச்சாட்டின் பேரில் வாதியைக் காவலர் கைது செய்தார். வாதி அப்பொருளை ஒளிவு மறைவின்றித் தம்மிடம் வைத்திருந்ததோடு, தாம் அப்பொருளை நேர்மையாகவே பெற்றார் என்று நம்பும்படியாக மறுமொழி தந்தார். இருப்பினும் காவலர் அவரைக் கைது செய்தார். வாதி களவு செய்தார் என்று நம்பத் தக்க காரணம் இல்லை. எனவே காவலர் பொறுப்பாளி எனக் கருதப்பட்டார்.

ஒரு கட்டிடத்தில் உள்ளவரையோ அல்லது வண்டியில் உள்ளவரையோ அதற்குரியவர் நியாயமான காலமோ, உரிய காலமோ, முடியும் வரை அங்கிருந்து வெளியே போகக் கூடாது என்று தடை விதிக்கவும் உரிமையுண்டு. எனவே விரைவுப் புகைவண்டியில் பயணம் செய்பவர், பயண வழியில் அது நிற்காமல் செல்லக் கூடிய இடங்களில் இறங்குவதற்கு உரிமை கோர முடியாது.

இதைப்போலவே, வாதி தானே இசைந்து ஏற்றுக் கொண்டதைத் தீங்கெனச் சொல்ல முடியாது. எனது கட்டிடத்தில் தாமே விரும்பி வந்தவர்கள், நான் நேரடியாக நடவடிக்கை எடுத்தாலொழியக் கட்டிடத்தை விட்டுப்போக முடியாத நிலை ஏற்படுமாயின், நான் அந்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய தேவை இல்லை. என் அண்டை வீட்டுக்காரர் என் நிலத்திலிருக்கும் குழியில் விழுந்து விட்டால், அவரை வெளியே இழுத்துவிட வேண்டிய கடமை எதுவும் எனக்கில்லை, ஷெர்ட் v. வேர்டேல் ஸ்டீல், கோல் & கோக் கம்பெனி லிமிடெட் (Herd v. Weardale Steel, Coal & Coke Co. Ltd) வழக்கில் எதிர்வாதியின் நிலக்கரிச் சுரங்கத்தில் வாதிகள் பணியாற்றினர். அவர்கள் காலை 9-30 மணிக்கு தங்கள் வேலை நேரம் துவங்கியபோது சுரங்கத் திற்குள், கூண்டு வழியாக இறக்கப்பட்டனர். சாதாரணமாக பிற்பகல் 4 மணிக்கு அவர்கள் வேலை நேரம் முடிவடைந்த பின்னர் சுரங்க வாயிலுக்குக் கூண்டில் ஏற்றப்பட்டு மேலே கொண்டுவரப் படுவர். வாதிகள் சுரங்கத்தில் கீழே போன பின்னர் காலை சுமார் 11 மணிக்கு அதாவது அவர்கள் சுரங்கவாயிலுக்கு மேலேற்றப் படும் நேரம் வருமுன்பு தங்களுக்குக் கொடுக்கப்பட்ட, குறிப்பிட்ட வேலையொன்று ஆபத்தானதென்று கூறி, முறையின்றி அதைச் செய்ய மறுத்து, தாங்கள் சுரங்கத்திலிருந்து வெளியே செல்ல விரும்புவதாகவும், அதற்காக கூண்டை இயக்கித் தங்களைச் சுரங்க வாயிலுக்கு உடனே கொண்டு செல்லுமாறும் சுரங்க மேலாளரைக் கேட்டுக் கொண்டனர். எதிர்வாதிகள் அவ்வாறு செய்ய மறுத்து கூண்டை இயக்குவதை நிறுத்தி விட்டனர். இதன் விளைவாக வாதிகள் சிறிது நேரம் அவர்கள் விருப்பத்திற்கு மாறுக சுரங்கத்திலேயே இருக்க நேர்ந்தது. பிற்பகல் 1-30 மணிக்குத் தான் அவர்கள் கூண்டில் ஏற்றப்பட்டு சுரங்க வாயிலுக்குக் கொண்டு வரப்பட்டனர். வாதிகள் சுரங்கத்தில் பணியாற்ற நுழைந்தபோது தங்கள் வேலை நேரம் முடிவடையும் முன்னர் மேலே கொண்டு செல்லும்படி எதிர்வாதிகளைக் கேட்கும் உரிமை இல்லை. இந்த நிபந்தனையை இசைந்து ஏற்றே அவர்கள் சுரங்கத்தினுள் நுழைந்தபடியால் தங்களை முறையின்றிச் சிறைப் படுத்தியதாக அவர்கள் சொல்ல முடியாது என்று பிரபுக்கள் சபை தீர்ப்பளித்துவிட்டது. வாதிகளைத் தண்டிக்கும் நோக்கத்துடன் இவ்வாறு செய்யப்பட்டிருந்தாலும் அவர்கள் வழக்கிடமுடியாது. ஆனால் அவர்கள் சுரங்கத்தில் வேலை செய்யும்போது திடீரென்று நோயுற்றிருப்பின் தங்களைச் சுரங்க வாயிலுக்குக் கொண்டு செல்லுமாறு கேட்க உரிமையுண்டு. ஆயினும் இவ்வழக்கில் உள்ளவாறு வாதிகள் முறையின்றித் தாங்கள் விரும்பியபோது கூண்டில்

சுரங்க வாயிலுக்குக் கொண்டு வரும்படி கேட்க முடியாது. விரைவுப் புகைவண்டியில் ஒருவன் ஏறுகிறான் என்று வைத்துக் கொள்வோம், அவன் ஏறியதும் புகைவண்டியின் கதவுகள் தாளிடப்பட்டு அது போய்ச் சேரும் இடம் வரும்வரை திறக்கப் படுவதில்லை. பயணத்தின் இடையில் ஏதோ காரணத்திற்காக வண்டியை நிறுத்தும் சைகை காட்டப்பட்டுப் புகை வண்டி நிறுத்தப்படுகிறது. அப்போது அவன் வண்டியிலிருந்து இறங்கு வதற்காகக் கதவினைத் திறந்து விடுமாறு கேட்க முடியாது. ஏனெனில் அவன் புகைவண்டியில் ஏறுமுன்பாக தான் செல்ல வேண்டிய ஊர் வருமுன்னர் தான் இறங்கிக்கொள்ள அளிமதிக்கப் படமாட்டான் என்ற நிபந்தனையை ஏற்றுக் கொண்டுள்ளான். எனவே இந்த நிபந்தனைக்கு அவன் கட்டுப்பட்டாக வேண்டும். இவனையொத்த நிலையிலேயே சுரங்கத்தில் இறங்கிய வாதிகளும் இருந்தனர். இதைப்போலவே தொழிற்சாலையில் பணிபுரியும் தொழிலாளர்கள் தங்கள் வேலை நேரம் முடியும் முன்பாகத் தொழிற் சாலையின் கதவுகளைத் திறந்து தங்களை வெளியே விட மறுத்ததாக தொழிற்சாலை உரிமையாளர் மீது வழக்கிடமுடியாது.

எதிர்வாதியால் வாதி சிறைப்படுத்தப்பட்டதாக மெய்ப்பிக்க வேண்டும். எதிர்வாதி தானே அல்லது தனது முகவர், அல்லது பணியாட்கள் ஆகியோர் மூலமோ வாதியைச் சிறைப்படுத்தி யிருக்கவேண்டும். எடுத்துக் காட்டாக, ஒருவன் குற்றமிழைத்த தாக மற்றொருவன் குற்றத்துறை நீதிபதி முன்பாகக் குறையீடு (Complaint) செய்கிறான் என்று வைத்துக் கொள்வோம். அதன் பேரில் அவர் அவனைக் காவலில் வைக்க உத்தரவிடுகிறார். அது நீதிபதி தன் உளத்தேர்வு அல்லது விருப்பத்திற்கிசையச் செய்த செயலாகுமேயல்லாது, அவர் முன் குறையீடு செய்தவரின் செயலாகாது. குறையீடு பொய்யானதெனக் கருதப்பட்டுக் குற்றஞ் சாட்டப்பட்டவர் விடுவிக்கப்பட்டார். அவர் தான் முறையின்றிச் சிறைப்படுத்தப்பட்டதாக வழக்கிடமுடியாது. அவர் தீங் கெண்ணத்துடன் தம்மீது குற்ற வழக்கிடப்பட்டதாகவே வழக்கிட வேண்டும். ஏனெனில் சட்டப்படி நீதிபதி குறையீடு செய்தவரின் முகவரல்லர்; அவரது விருப்பப்படி ஒருவரைக் கைது செய்ய நீதிபதி உத்தரவிடவேண்டிய நிலையில் இல்லை.

குற்றம் புரிந்தவனைக் கைது செய்யச் சட்டம் அனுமதிக் கின்றது. அதனைக் குற்ற இயல் நடை முறைச் சட்டத்தில் 5வது அத்தியாயத்தில் சொல்லியிருக்கிற சூழ்நிலைகளின்படி நீதிபதியோ, அல்லது காவல் அதிகாரியோ, அல்லது தனி நபர்களோ கைது செய்யலாம். ஒரு தனி நபர் (1) காவல்

அலுவலரால் பிடியாணையின்றிக் கைது செய்யத்தக்கதாகவும், பிணையில் விடத்தக்கதாகவும் உள்ள குற்றத்தை (Cognigable and bailable offence) ஒருவன் செய்திருப்பதாகக் கருதினாலும், அல்லது (2) ஒருவன் அறிவிக்கப்பட்ட குற்றவாளியாக (proclaimed offender) இருந்தாலும், அவனைக் கைது செய்யலாம். அவ்வாறு அவர் கைது செய்ததும், தேவையற்ற காலத்தாமதம் இன்றி அவனை மிக அருகில் உள்ள காவல் நிலையத்தின் காவல் அலுவலரிடம் ஒப்படைத்து விடவேண்டும். (குற்ற இயல் நடைச்சட்டப் 59ஆம் பிரிவு) ஒருவனைக் கைது செய்யும் காவல் அதிகாரி அவனைக் கைது செய்வதற்கான காரணத்தைக் கூற வேண்டும். இல்லையேல் அவர் முறையின்றிச் சிறைப்படுத்தியதாகக் கருதப்படும். கிறிஸ்ட்டியும் மற்றொருவரும் v. லீச்சின்ஸ்கி (Christic & another v. Leachinsky) வழக்கில் கள்ள வாணிகக் குற்றம் இழைத்தான் என்ற ஐயத்தின் பேரில் 'அ' என்பவனைக் காவலதிகாரி பிடியாணையின்றிக் கைது செய்து காவலில் வைத்தார். அவனை அவ்வாறு கைது செய்யத் தனக்குச் சட்டப்படி அதிகாரம் இருக்கிறது என்று தவருகக் காவலதிகாரி கருதிவிட்டார். 'அ' என்பவர் காவலதிகாரி மேல் முறையின்றிச் சிறைப்படுத்தியதற்காக வழக்கிட்டார். இவ் வழக்கில் 'அ' என்பவன் களவுக்குற்றம் புரிந்ததாக நம்புவதற்குத் தங்களுக்குக் காரணம் இருந்ததாகவும் வாதிட்டனர். இதை நீதிமன்றம் ஏற்கவில்லை. ஏன் எனில் அவனைக் கைது செய்வதற்கான காரணத்தை அவனிடம் காவலதிகாரி தெரிவிக்கவில்லை. அவன்மேல் சாட்டப்பட்ட குற்றத்தின் சாரத்தைமட்டும் சொல்லியிருந்தால் போதும். சில வேளைகளில் எக்குற்றத்திற்காகக் கைது செய்வதாகக் காவல் அதிகாரியால் சொல்ல முடியாமற் போகலாம். எடுத்துக்காட்டாக, ஒருவன் காவல் அதிகாரி எதுவும் சொல்லு முன்பாகவே அவரைத் திருப்பித் தாக்கியிருக்கலாம்; அல்லது ஓடி விடலாம். இவ்வேளையில் அவன் தன்மேல் உள்ள குற்றசாட்டைத் தெரிந்து கொள்ளமுடியாமல் போனதற்கு அவனே காரணமாவான். மேலே சொன்ன வழக்கில் நீதிபதி சைமண்ட்ஸ் பிரபு "கண்மூடித் தனமாக எக்கேள்வியும் கேட்காமல் பணிந்து கிடப்பது கொடுங் கோலர்-அடிமை நாடுகளின் சட்டம், அது ஆங்கில மண்ணில் தழைக்காது" என்று கூறினர். கைது செய்யப்பட்ட ஒருவனைக் குற்றத்துறை நீதிபதி முன் உடனே கொண்டு போக முடியாவிட்டாலும், எவ்வளவு விரைவில் அவரிடம் கொண்டு செல்ல முடியுமோ அவ்வளவு விரைவில் அவனை அழைத்துச் செல்ல வேண்டும். குற்ற இயல் நடைமுறைச் சட்டம் சொல்லியுள்ளவாறே, அல்லது நியாயமானதென்று சொல்லத்தக்க வகையிலோ அல்லாமல் ஒருவனைக் கைது செய்திருந்தால் அவன் தன்னை முறை

யின்றிச் சிறைப்படுத்தியதாக வழக்கிடலாம். தன்னைக் கைது செய்ததற்கு எந்த நியாயமான காரணமும் இல்லையென்று வாதி நிரூபிக்கத் தேவையில்லை: தன்னை எதிர்வாதியோ அல்லது அவனது முகவரோ, அல்லது பணியாளோ சிறைப்படுத்தி விட்டதாக நிரூபித்தால் போதும். எதிர்வாதி பொறுப்பிலிருந்து தப்ப வேண்டுமானால் அவன் வாதியைச் சிறைப்படுத்தியதற்குத் தகுந்த நியாயமான காரணம் இருந்ததென நிரூபிக்க வேண்டும்.

நிவாரணங்கள் (Remedies)

இந்திய அரசியல் சட்டம் 3வது பகுதியில் குடிமகனது அடிப்படை உரிமைகள் விரிவாக எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. இதன்படி குடிமகனது உரிமைகளைச் சட்ட முரணான வகையில் அரசும், மற்றவர்களும் பறிக்கமுடியாது. இந்த உரிமைகளுக்கு மாறாக நாடாளுமன்றமோ, மாநிலச் சட்ட மன்றங்களோ சட்டம் ஏதேனும் இயற்றியிருந்தால், அதைப் புறக்கணித்து அரசியல் சட்டத்தில் விளம்பியுள்ள உரிமைகளையே நீதி மன்றங்கள் நிலை நாட்டக் கடமைப்பட்டுள்ளன. இவ்வுரிமைகளில் ஒன்றாகத் தனி மனிதனின் சுதந்திரமும் சொல்லப்பட்டிருக்கிறது. இதில் உயிருக்குப் பாதுகாப்பும், சுதந்திரமாய் இருக்கும் உரிமையும் அடங்கும். அரசியல் சட்டம் 21 ஆவது பிரிவில் சட்டம் நிறுவியுள்ள நடைமுறையின்படி அல்லாது ஒருவன் உயிரையோ, அல்லது சுதந்திரத்தையோ பறிக்கக் கூடாது. இங்கு சட்டம் நிறுவியுள்ள நடைமுறை என்று சொல்லும்போது இந்தியாவில் சட்டமன்றங்களால் இயற்றப்பட்ட சட்டங்கள் சொல்லும் நடைமுறை என்று பொருள்படும். 22வது பிரிவு மேலும் சில பாதுகாப்புகளைத் தருகிறது. முதற்கண் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளவனிடம் தாமதம் எதுவும் இல்லாமல், கூடிய விரைவில் அவனைக் கைது செய்வதற்கான காரணங்களைச் சொல்வதுடன் அவன் தனது விருப்பப்படி வழக்கறிஞரின் துணை நாடி தனக்காக வாதிட அமர்த்திக் கொள்ளும் உரிமையை அளிக்க வேண்டும். அவனைக் கைது செய்த 24 மணி நேரத்திற்குள் மிக அருகில் உள்ள குற்றத்துறை நீதிபதியிடம் அவனைக் கொண்டு செல்ல வேண்டும். அவரது அனுமதி இல்லாமல் அதிக காலத்திற்கு அவனைக் காவலில் வைத்திருக்கக் கூடாது. ஆயினும் இது தடுப்புக்காவல் சட்டத்தின்கீழ் காவலில் வைக்கப்பட்டவர்க்கும், அயல் நாட்டுப் பகைவர்களுக்கும் பொருந்தாது. அரசியல் சட்டம் மூன்றாவது பகுதியில் சொல்லப்பட்ட உரிமைகளை விரைவாகப் பெறும் நிவாரணமும் அரசியல் சட்டத்திலேயே சொல்லப்பட்டுள்ளது. அரசியல் சட்டப்பிரிவு 32-ன் கீழ் உச்ச நீதி மன்றமும் 226வது

பிரிவின்கீழ் உயர்நீதிமன்றமும் முறையின்றிச் சிறைப்படுத்தப் பட்டவனை நீதிமன்றத்தின் முன்பாகக் கொண்டுவந்து நிறுத்தி சிறைப்படுத்தியதற்கான காரணத்தை விளக்கும்படி சிறைப்படுத் தியவருக்கு நீதிப்பேராணை பிறப்பிக்கலாம். அவனைச் சிறைப் படுத்தியதற்கு நியாயமான காரணம் எதுவும் இல்லையென நீதி மன்றம் கருதுமேயானால், அவனை உடனே விடுவிக்குமாறு நீதி மன்றம் உத்தரவிடும். இதைத் தவிர அது தடையுறுத்தும் நீதிப் பேராணை, நெறிமுறை உணர்த்தும் நீதிப்பேராணை மூலமாக நிர்வாகமோ, அல்லது ஒரு தீர்ப்பாயமோ ஒருவனைக் கைது செய்யவும், சிறையில் வைக்கவும் இட்ட உத்தரவு, நடவடிக் கைகளை நிறுத்தி வைக்கவோ, அல்லது விலக்கவோ முடியும். இதைத் தவிர, அரசியல் சட்டப்பிரிவு 20-ல் ஒருவன் குற்றம்என்று சாட்டப்பட்ட செயலைச் செய்யும்போது நடைமுறையில் உள்ள சட்டத்திற்கு மாறுக அவனை ஒரு குற்றத்திற்காகத் தண்டிக்கக் கூடாது என்றும், ஒருவன்மேல் ஒரு குற்றத்திற்காக ஒரு முறைக்கு மேல் வழக்கிடவும், தண்டிக்கவும் கூடாது என்றும் சொல்லப் பட்டிருக்கிறது. இவையனைத்தும் தனி மனிதனுடைய சுதந்திரத் தைப் பாதுகாக்கும் முறையிலேயே அமைந்துள்ளன.

தீங்கீடு கோரி வழக்கிடல்

வாதி தன்னை முறையின்றிச் சிறைப்படுத்தியதற்காக எதிர் வாதியிடமிருந்து தீங்கீடு கோரலாம். பொதுவாக, ஒருவனைச் சிறைப்படுத்துவதால் அவனுக்குப் பொருள் இழப்பு ஏற்படுவ தில்லை. ஆனால் அவனுடைய சுதந்திரம் பறிக்கப்படுகிறது. தவிர அவனுக்கேற்படும் மனத்துயர், இகழ்ச்சி, அவமதிப்பு, கேவலம் ஆகியவற்றால் அவனது உணர்வுகளுக்கு ஊறு விளைகின்றது. மற்றும் சமுதாயத்தில் அவன் பெற்றுள்ள தகுதியையும் இழக்க நேரிடும். அவனுக்கு அளிக்கப்படும் பொதுவான தீங்கீட்டுத் தொகையில் இவையனைத்தும் கணக்கில் எடுத்துக் கொள்ளப் படுகின்றன. இவற்றிற்காக எவ்வளவு இழப்பீடு தரப்படவேண்டு மென்று தீர்மானிக்கப் பொதுவான அளவுகோல் எதுவும் இல்லை. இது நீதிபதியின் விருப்பம் அல்லது உளத் தேர்வினைப் பொறுத்து அமையும்.

அடுத்து தற்காப்பான முறையில் தனக்கே உதவிக் கொள்ளுதல்

முறையின்றிக் காவலில் வைக்கப்பட்டுள்ள ஒருவன் காவலில் இருந்து தப்பிக்கத் தகுந்த முறையில் பலாத்காரத்தைப் பயன் படுத்தித் தாக்கலாம். அவன் நீதி மன்றம் சென்று தனது விடுதலை யைப் பெறும்வரை பொறுத்திருக்கத் தேவையில்லை.

இந்த நிவாரணங்களைத் தவிர ஒருவன் தன்னை முறையின்றி அடைத்து வைத்ததற்காக இந்தியக் குற்றச் சட்டம் 342-ன் பிரிவின் கீழ் குற்ற வழக்கிடலாம். அவன் தீங்கியலிலும், இந்தியக் குற்றச்சட்டத்தின் கீழும் ஒரே சமயத்திலோ அல்லது அடுத்தடுத்தோ வழக்கிடலாம். அவன் தீங்கியலில் வழக்கிட்டு இருந்தாலும், இந்தியக் குற்றச் சட்டத்தின்கீழ் வழக்கிட எவ்விதத் தடையும் இல்லை. இந்தியக் குற்றச் சட்டத்தின்கீழ் இடப் பட்ட வழக்கில் தண்டனை அளிக்கப்பட்டாலும், அல்லது விடுதலையளிக்கப்பட்டாலும் அது உரிமையியல் வழக்கிற்குத் தடையாகாது.

34. அவதூறு (Defamation)

ஒருவனது மதிப்பையும், புகழையும் பாதிக்கும் வண்ணம் அவனைப்பற்றிப் பொய்யான தகவல் ஒன்றைச் சட்டத்திற்கு இசைந்த நியாயமான காரணம் எதுவும் இல்லாமல் வெளியிடுதையே அவதூறு என்று சொல்கின்றோம். உலகில் வாழும் ஒவ்வொருவரும், தான் செய்யும் தொழிலாலும், சமுதாயத்தில் வகிக்கும் இடத்தாலும், பண்புகளாலும், மதிப்பினைப் பெறுகின்றனர். இத்தகைய மதிப்பு அல்லது புகழினைப் பெறுவதையே தமது குறிக்கோளாகக் கருதுகின்றனர். ''மன்னுலகில் மன்னுதல் குறித்தோர் தம்புகழ் நிறீஇத் தாம் மாய்ந்தனரே'' என்று தமிழர் நிலையில்லா உலக வாழ்வில், நிலையானதென்று புகழ் ஒன்றினையே கருதினர். அவர்கள் உயிரினும் பெரிதாய் புகழை மதித்து, மானம் வரின் உயிர் நீக்கவும் தயங்கினரல்லர்; ஒருவனைப்பற்றி வெளியிடப்பட்ட அவதூறு, அவனது மதிப்பு அல்லது புகழினுக்கு ஊறு செய்கின்றது; அந்த அவதூறின் காரணமாக நல்லெண்ணம் கொண்ட சமுதாயத்தில் வாழும் உயர்ந்தோர் அவனைப்பற்றிப் பொதுவாகத் தாழ்வாகக் கருதச் செய்கிறது. ஒருவன் தன்னைப் பற்றித் தானே கொண்டுள்ள கருத்து அவனது மதிப்பு அல்லது புகழ் ஆகாது; அவனைப்பற்றி நல்லோர் என்ன சொல்கிறார் என்பதைக் கொண்டே அவனது மதிப்பை எடைபோட வேண்டும். இவ்வாறு ஒருவனைப் பற்றிய அவதூறு அறிக்கை வெளியிடப்பட்ட காரணத்தால் அவனைப் பற்றிய நல்லோர் மதிப்பீட்டில் அவன் தாழ்ந்து போகிறான். அவன், அவர்களது வெறுப்பு, இகழ்ச்சி, ஏளனம், அச்சம், கேவலம் ஆகிய உணர்ச்சிகளுக்கு இலக்காகி அவர்களால் ஒதுக்கப்படுகின்றான். இங்கு நாம் வரையளவாகக் கொள்வது, சமுதாயத்தில் சாதாரணமாக ஒரு நல்ல வண்ணம் சிந்திக்கத் தெரிந்தவன் அவதூறு அறிக்கையைப் பார்த்தபின் என்ன நினைப்பான் என்பதேயாகும். எனவே இத்தகைய அவதூறும் அறிக்கையை வெளியிடும் எதிர்வாதி அவதூறு

இழைக்கும் எண்ணத்தோடு அதை வெளியிடவில்லையென்றே, வெறும் விளையாட்டாக அதைச் செய்ததாகவோ கூறினுல் நீதி மன்றம் அதை ஏற்றுக் கொள்ளாது. அவன் அந்த அவதூறை தம்பி வெளியிட்டானு என்பதல்ல கேள்வி; அதைக் கண்ணுறும் சமுதாயத்தில் உள்ள சாதாரண மனிதன் என்ன கருதினுன் என்பதையே நாம் பார்க்கவேண்டும். எதிர்வாதி வெளியிட்ட அவதூறு அறிக்கையின் காரணமாக மற்றவர்கள் வாதியைப் பற்றித் தாழ்ந்த எண்ணவோ, உணர்வோ கொள்ள நேர்கின்றது. அவதூறு ஒருவரது ஒழுக்க நெறியைத் தாக்கும் வகையில் அமைந்திருக்கலாம். எடுத்துக்காட்டாக அவன் ஒரு குற்றம் புரிந்துள்ளான் என்றே, நாணயமற்றவன் என்றே, பொய்யன் என்றே, செய்நன்றிகொன்றவன் என்றே, கொடியவன் என்றே கூறலாம்; இது அவனது நடத்தையைக் கேவலமானதென்று சொல்வதாகும்.இதைத் தவிர ஒருவனது ஒழுக்கத்தைச் சாடாமலே அவன் மற்றவர்களது கேலிக்கும், வெறுப்புக்கும் இலக்காக்க முடியும். எடுத்துக் காட்டாக, ஒருவனது உடற்தோற்றத்தை விகாரமாக வரைந்து ஒரு கேலிச் சித்திரமாக வெளியிடலாம். ஒருவன் குறிப்பிட்ட தொழில் அல்லது பணியை வெற்றிகரமாகச் செய்யத் தேவையான தகுதியும், திறமையும் அற்றவன் எனக் காட்டும் முறையில் அவதூறு அறிக்கை வெளியிடப்படலாம். ஒருவர் எழுதாத நூலை அவர் எழுதியதாக வெளியிடுவது அவருக்கு அவதூருக இருக்கலாம். ஏனெனில் அந்நூலைப் படிப்பவர் அந்த ஆசிரியரின் எழுத்தாற்றலைப் பற்றித் தாழ்வான கருத்துக் கொள்ளலாம். ஒருவர் மன நோயாளி என்று கூறுவது கூட அவதூருகும். மன நோய் ஒருவருக்கு ஏற்படுவது அவரது குற்றமல்ல; மாருக அவரைக் கண்டு இரக்கப்படுகிறேம். எனினும் அதன் விளைவாக அவரது உறவினை மற்றவர்கள் தவிர்க்கலாம்; அவரைக் கண்டால் மற்றவர்கள் விலகிச் செல்லலாம். எனவே ஒருவனை மன நோயாளி என்று பொய்யாகத் தகவல் வெளியிடுவதும் அவதூருகும். ஒரு வணிகர் நொடித்துப்போய் விட்டார் என்று கூறுவது அவர் மேல் இரக்கம் கொள்ளவே செய்யுமெனினும், அவரைச் சமூகம் எதுக்கக் கூடும். எனவே அதுவும் அவதூருகும். இதைப்போலவே ஒரு பெண் கற்பழிக்கப் பட்டாள் எனச் சொல்வதைக் கேட்போர், அவள் மேல் இரக்கமே கொள்வர்; ஆயினும் அவள் மதிப்புத் தாழ்ந்துவிடும். அவளை மணக்கக் காத்திருக்கும் இளைஞர் எண்ணிக்கை குறையக்கூடும். இன்று அவதூறு அல்லவெனக் கருதப்படுவது நாளை அவதூருகக் கருதப்படலாம். நல்லறிவுள்ள மனிதரது சமுதாய அரசியல் கருத்துகள் காலத்துக்கேற்ப மாறும் தன்மையுடையன. ஒரு

சமயத்தில் ஜெர்மன்காரர், பொதுவுடைமையாளர் என்று ஒருவனை வர்ணிப்பது கூட அவதூருகக் கருதப்பட்டிருக்கிறது.

வாதியைப்பற்றி எதிர்வாதி வெளியிட்ட அறிக்கையின் காரணமாக சமுதாயத்திலுள்ள ஒரு குறிப்பிட்ட வகுப்பினர் அவனைப்பற்றி வெறுப்பு, காழ்ப்பு, கேலி போன்ற தாழ்வான உணர்ச்சி கொள்ள நேரலாம். ஆனால் சட்டம் அந்தக் குறிப்பிட்ட வகுப்பினரின் கருத்தை ஏற்றுக் கொள்ளவோ, கருதிப்பார்க்கவோ தகுதியற்றதாக—மட்டமானதாகக் கருதுமாயின் அந்த அறிக்கை அவதூறு காது.

பர்ன் v. டீன் (Byrne v. Deane) வழக்கில் வாதி ஒரு கால்ஃப் (Golf) ஆட்டச் சங்கத்தில் சேர்ந்திருந்தார். அவர் அந்த சங்கக் கட்டிடத்தில் சூதாட்ட இயந்திரம் வைத்திருந்தரகக் காவல் துறையினருக்குத் தகவல் கொடுத்து சங்கத்தில் மற்ற உறுப்பினரைக் காட்டிக் கொடுத்து விட்டதாகப் பொருள் கொள்ளும் முறையில் ஒரு சிறு கவிதை சங்க அறிப்புப் பலகையில் எழுதி வைக்கப்பட்டிருந்தது. அதை எழுதியவர் அவர் பெயரை சிலேடை மொழியில் குறிப்பிட்டு வசைபாடியிருந்தார். அதில் எழுதப்பட்டிருந்த வரிகள் இவைதான்:

'But he who gave the game away
May be byrnn in hell and rue the day'

அவர் தமக்கு அவதூறு இழைக்கப்பட்டதாக வழக்கிட்டதில் குற்றத்தை ஒடுக்கும் நோக்கத்தோடு காவல் துறையினருக்குத் தகவல் கொடுப்பதால் ஒருவர் புகழுக்கு இழுக்கு நேராது; அச் செயல் ஒருவர் தமது கடமையைச் செய்வதாகவே கருதிப் பாராட்டத் தக்கதாகும். சமுதாயத்தில் ஒரு குறிப்பிட்ட சாரார் வாதியைப் பற்றிக் கேவலமாகக் கருதும்படியாக ஒரு அறிக்கை அமைந்திருந்தது என்று மட்டும் அவன் நிரூபித்தால் போதாது. அந்த அறிக்கையை கழிமிகையற்ற, நல்லறிவுள்ள பொதுமக்கள் காணின்அவதூருகவே கருதுவர் என்று அவன் நிரூபிக்கவேண்டும்.

பிறரைப் பேச்சாலும், எழுத்தாலும் அவமதித்தலும் (insult), கேவலமாகத் திட்டுவதும், பழித்துச் சொல்வதும் அவதூருகாது. பேசும்போது சொல்லப்படும் சொற்கள் நிகியா வடிவ அவதூருக் கருதக் கூடிய முறையில் அமைந்திருந்தாலும், பொதுவாக ஒருவரை மற்றவர் ஏசும்போது பயன்படுத்தும் சொற்களாகவும் அவற்றைக் கேட்பவர்களும் அவற்றை அவ்வாறே

புரிந்து கொள்ளும் வகையில் அவை அமைந்திருப்பின், வழக்கிட முடியாது. எனவே சொற்கள் பேசப்பட்ட முறையை வைத்துத் தான் அவை வெறும் பழிமொழியா அல்லது நிலையா வடிவ அவதூறு என்று கூறமுடியும். வாதிக்கும் எதிர்வாதிக்கும் இடையில் நடந்த கடுமையான சண்டை உச்ச கட்டமாகவோ, அல்லது வேண்டுமென்றே கூறப்பட்டவையாகவே அவை அமைந்திருக்கலாம், பீல்ட் v. டேவிஸ்(Fied v. Davies)வழக்கில் திருமணமான பெண்ணுகிய வாதியை எதிர்வாதி "ஊர்சுற்றி" என்று சொன்னர்; இது அவதூறுப் பொருள் கொண்ட மொழி யாயின், எதிர்வாதி உணர்ச்சி வசப்பட்ட சூழ்நிலையில் அவசரத் திட்டியதாகவே அதைக் கேட்டவர்கள் கருதினர். எனவே, அது வழக்கிடத் தக்கதாகாது. ஒருவரை மற்றவர் ஏசிய மொழி பொது அமைதியைக் குலைக்கக் காரணமாக அமைந்திருக்குமானால், அது குற்றமாகுமென இந்தியக் குற்றவியல் சட்டத்தின் பிரிவு 504-ல் கூறப்பட்டுள்ளது. ஆயினும் ஒருவர் மற்றவரை ஏசியதன் காரணமாக அவர் பிறரின் கேலிக்கும் அவமரியாதைக்கும் ஆளாகி யிருத்தால் வழக்கிடலாம். ஒரு வழக்கில் வாதியின் மருமகனின் தாய் மாமனோடு வர்த்தகள்ள நட்பு கொண்டிருப்பதாக எதிர்வாதி சொன்ன சொற்கள் வெறும் கீழ்த்தரமான ஏச்சு மொழி மட்டு மல்லாமல், அவன் ஒழுக்கம் கெட்டவன் என்று குற்றஞ்சாட்டு வதாக அமைந்திருப்பதால் அது அவதூருகும் என்று சொல்லப் பட்டது. ஒரு மனிதனின் புகழுக்கு ஊறு நேரும்படியாக மற்றவர் அறியுமாறு ஒரு தகவலை அல்லது குறிப்பை வெளியிடுவது அவதூருகும்.

நிலை வடிவ அவதூறு (Libel), நிலையா வடிவ அல்லது வாய்ச் சொல் அவதூறு (Slander) என அவதூறு இருவகைப்படும். ழுதலாவாது, எழுத்து, அச்சு, படம், உருவச்சிலை, கொடும்பாவி போன்ற நிலையான வடிவத்தில் அமைந்திருக்கும் அவதூறை நிலை வடிவ அவதூறு என்று சொல்கின்றோம். எனவே அவதூருன தகவல், எழுதப்பட்ட சொல்லாகவோ அல்லது வாய்மொழி யாகவோ இருக்கத் தேவையில்லை. ஒருவரை அவமதிக்கும் வகையில் கேலிச் சித்திரம் வரைந்தோ அல்லது நகைப்புக்கும் கேலிக்கும் இலக்காகும்படி அவரைப்போல ஒருபொம்மை செய்தோ அவதூறு புரியலாம். நிலைவடிவ அவதூறில், அவதூருகக் கருதப் படும் தகவல் கண்ணுக்குப் புலனாகும் வண்ணம் நிலையான வடிவத்தில் அமைந்திருக்கும்.

நிலையா வடிவ அவதூறு என்பது பேச்சு, சைகை தவிர சொல்லாக அமையா விட்டாலும், பொருள் பொதிந்த ஒலி வடிவம்

போன்றவற்றின் மூலம் வெளியிடப்படுவதாகும். இவை நிகழ்வானவையன்று; தோன்றியதும் மறையக் கூடியவை. ஆயினும் சில சமயங்களில் வெளிப்படுத்தப்படும் அவதூறை நிகழ்வடிவ அவதூறு, நிகழ்வடிவ அவதூறு என்று கூறுவது எளிதல்ல. நிகழ்வடிவ அவதூறு கண்ணுக்குப் புலனாகக் கூடியதென்றும், நிகழ்வடிவ அவதூறு காதால் கேட்கப்படக் கூடியதென்றும் சொல்வது சிலசமயங்களில் சரியாக அமையாது.

ஒருவரைப் பற்றி 'வில்லன்' என்றும் நய வஞ்சகன் என்றும் எழுதுவது அவதூறாகும்; ஒருவனது நடத்தை மோசமானதென்றும், அவனை நம்பிப் பணம் தரமுடியாதென்றும் சொல்வது அவதூறாகும். இதைப்போலவே, உயிரோடு இருக்கும் ஒருவன் இறந்து விட்டதாகச் செய்தித்தாளில் அறிவிப்புக் கொடுப்பதும், ஒருவன் உருவம் போலவே கொடும்பாவி செய்து அவன் பெயரைக் குறிப்பிட்டு மிதியடி கொண்டு அதை அடிக்கும் செயலும் அவதூறாகும். ஒருவன் 'அ! என்பவளது கணவனுக்கு எழுதிய கடிதத்தில் அவளைச் சூனியக்காரி என்றும், அவன் சூனியம் வைத்துத் தனது உறவினர் ஒருவரைச்சாகடித்து விட்டாளென்றும் எழுதியிருந்தார். இதற்கு அவர் பொறுப்பாளியாவார் என்று தீர்ப்பளிக்கப்பட்டது. ஒரு குறிப்பிட்ட சாதியில் உறுப்பினராக இருக்கத் தகுதியற்றவர் என்று ஒருவரைக் குறிப்பிடுவது அவருக்கு அவதூறு இழைப்பதாகும். 'பேசும் படத்தில்' வரும் அவதூறு நிகழ்வடிவ அவதூறாகும் என யூசுபாப் v. எம். ஜி எம். பிக்சர்ஸ் லிமிடெட் (Youssoupoff v. M. G. M. Pictures Limited) வழக்கில் சொல்லப்பட்டது. திரைப்படத்தில் புகைப்படமாக வரும் பகுதி நிகழ்வடிவ அவதூறுவதைப் போலவே, அதனுடன் இணைந்து வரும் பேச்சும் நிகழ்வடிவ அவதூறாகும் என்றே இவ்வழக்கில் கருதப்பட்டது. இவ்வழக்கில் எம். ஜி. எம். திரைப்பட நிறுவனத்தினர் எடுத்த பேசும் படத்தில் ரஷ்ய இளவரசி நடாஷாவை, ரஸ்புதீன் என்ற கொடியவன் கற்பழித்ததாகக் காட்டப்பட்டது. இந்தப் படத்தில் வரும் பாத்திரம் தன்னைக் குறிப்பதாகப் பலர் கருதியதாக ஒரு ரஷ்ய இளவரசி வழக்கிட்டு வெற்றியடைந்தாள். இசைத்தட்டில் பதிவான அவதூறான பாடல் அல்லது உரையாடல் நிகழ்வடிவ அவதூறு அல்லவா என்று தெளிவாகத் தெரியவில்லை. இங்கு இசைத்தட்டில் பதிவு செய்யப்பட்டது காதால் கேட்கப்படக் கூடியதாயினும், நிகழ்யான வடிவத்தில் இருக்கிறது. இதற்குச் சரியான விடையை சால்மண்ட் கூறியுள்ளார். இசைத்தட்டில் பதிவு செய்யவேண்டும் என்ற நோக்கோடு அவதூறான சொற்களைச் சொல்வது நிகழ்யா

வடிவ அவதூருகும். ஆனல் அவை இசைத்தட்டில் பதவு செய்யப்பட்டபின் அது வெளியிடப்படுமாயின் இசைத்தட்டு உற்பத்தியாளர் நிலை வடிவ அவதூறு இழைத்தவராகச் கருதப்படுவார். இப்போது இசைத்தட்டில் யாருடைய குரல் பதிவு செய்யப்பட்டதோ அவர் பகரப் பொறுப்பின்படி, உற்பத்தி யாளர் அந்த இசைத்தட்டை வெளியிட்டதற்காக நிலைவடிவ அவதூறு இழைத்ததற்காகப் பொறுப்பாவார். இதைப் போலவே அந்த இசைத்தட்டை விற்பவரும், வைத்துக் கேட்பவர்களும் நிலை வடிவ அவதூறுக்குப் பொறுப்பு ஏற்கவேண்டியவர் ஆவார். இங்கிலாந்தில் 1952-ல் இயற்றப்பட்ட அவதூறுச் சட்டத்தில் (Defamation Act, 1952) கம்பியில்லாத் தந்தி மூலம் ஒலிபரப்பப் படும் சொற்கள் நிலைவடிவ அவதூருகும் என்று சொல்லப்பட்டது. இதைப் போலவே கலையரங்குகள் சட்டத்தில் (The Theatres Act, 1968) சொல்லப்பட்டிருக்கிறது. இங்கிலாந்தில் நிலைவடிவ அவ தூறுக்கும், நிலையாவடிவ அவதூறுக்கும் உள்ள வேறுபாடு முக்கிய மானதாகும். முதலாவதாக அந்த நாட்டில் நிலைவடிவ அவதூறு தீங்காகமட்டுமல்லாமல் குற்றமாகவும் கருதப்படுகிறது; நிலையா வடிவ அவதூரே வெறும் உரிமைத் தீங்காக மட்டும் கருதப்படு கிறது. இரண்டாவதாக, நிலைவடிவ அவதூருயின் ஒருவர் தனக்கு உண்மையில் இழப்பு ஏற்பட்டதென நிரூபிக்கத் தேவையில்லை. ஆனல் நிலையாவடிவ அவதூருயின் வாதிக்கு உண்மையில் இழப்பு ஏற்பட்டிருந்தால்தான் அவன் தீங்கியலில் வழக்கிட முடியும். எதிர்வாதி கூறிய அவதூறுச் சொற்களில் இயல்பான விளைவாக வாதிக்கு தனித்த இழப்பு ஏற்பட்டிருக்க வேண்டும். எடுத்துக்காட்டாக, அதனல் வாதி தனது வாடிக்கையாளரை இழந்திக்கலாம்; வேலை போயிருக்கலாம்; அவதூறுக்கு வேண்டிய அன்பளிப்புகளை அவன் இழந்திருக்கலாம்; ஒருத்தியின் கணவன் அவளோடு வாழமறுத்து விடலாம். நிலைவடிவ அவதூறு இழைக் கப்பட்டவரின் உடல்நலம் கெட்டபின் அவருக்கு ஏற்படும் மனத் துயரினைத் தனிப்பட்ட இழப்பாகக் கருதமுடியாது. ஆனல் இதற்குச் சில விதிவிலக்குகள் உண்டு. (1) வாதி குற்றச்செயல் ஒன்றைப் புரிந்துள்ளதாக எதிர்வாதி கூறுதல் (2) வாதிக்கு ஒரு தொற்றுநோய் இருப்பதாகக் கூறுதல். (3) வாதி ஏற்றுள்ள தொழில், வேலை, வாணிபம், பதவி ஆகியவற்றிற்கு அவன் தகுதி யற்றவன் என்றே, நாணயமற்றவன் என்றே, ஆற்றல் அற்றவன் என்றே கூறல். (4) ஒரு பெண் ஒழுக்கங்கெட்டவள் என்றே, கணவனைத் தவிரப் பிறரிடம் உடலுறவு வைத்துக் கொண்டிருப் பவள் என்றே கூறல். மேற்கூறிய சூழ்நிலைகளில் கூறப்படும் அவதூறு நிலையாவடிவமுடையதாயினும், வாதி தனக்கு உண்மை யில் இழப்பு ஏற்பட்டதாக நிரூபிக்கத் தேவையில்லை.

இங்கிலாந்து நாட்டில் குற்றவியல் சட்டப்படி நிலைவடிவ அவதூறுக்கும் நிலையாவடிவ அவதூறுக்கும் வேறுபாடு உண்டெனக் கண்டோம். அங்கு நிலைவடிவ அவதூறு குற்றமாகக் கருதப்படுவதில்லை. நிலையாவடிவ அவதூருயின் அதற்கு நிவாரணம் உரிமையியல் சட்டத்தில்தான் பெற முடியும். நிலைவடிவ அவதூறைப் பற்றிய விதிகள் எதிர்வாதிக்கு கடுமையானதாக உள்ளன. ஏனென்றால் நிலைவடிவ அவதூறில் நிலையாவடிவ அவதூறைவிட ஊறு ஏற்படக்கூடிய வாய்ப்பு அதிகம் உள்ளது. தவிர, அச்சில் வருவதெல்லாம் உண்மையென்று பெரும்பான்மையான மக்கள் நம்பிவிடுகின்றனர். இந்தியக் குற்றவியல் சட்டத்தில் நிலைவடிவ அவதூறுக்கும் நிலையாவடிவ அவதூறுக்கும் வேறுபாடு இல்லை. இரண்டும் இந்தியக் குற்றவியல் சட்டம் 499ஆம் பிரிவின்படி குற்றங்களாகவே கருதப்படுகிறது. இங்கிலாந்தில் நிலையாவடிவ அவதூறைப் பொறுத்தவரை, வாதிக்கு உண்மையில் இழப்பு ஏதேனும் ஏற்பட்டதாக அவன் மெய்ப்பித்தாக வேண்டும் என்று கண்டோம். இந்தியாவில் பல நீதிமன்றங்கள் இதற்கு அறிவுக்குப் பொருந்தக்கூடிய நியாயமான காரணம் எதுவுமில்லையென்று கூறி அவ்வாறு மெய்ப்பிக்கத் தேவையில்லையென்று கூறியுள்ளன.

அவதூறு வழக்கில் வாதி மெய்ப்பிக்க வேண்டிய கூறுகள்

முதலாவதாக எதிர்வாதி வெளியிட்ட அவதூருன வாசகம் தன்னைப் பற்றியதென்று வாதி மெய்ப்பிக்க வேண்டும். அந்த அவதூருன மொழி வாதியைக் குறிப்பிடுவதாக நல்லறிவுள்ள மனிதன் எவரும் கருதமுடியாதாயின், நீதிமன்றம் வாதியின் வழக்கைத் தள்ளிவிடும். அதில் வாதியைப்பற்றி நேரடியாகக் குறிப்பிட்டிருக்கத் தேவையில்லை. அதை வெளிப்படையாகச் சொல்லாமல், மறைமுகமாகக் குறிப்பிட்டிருந்தாலும் போதும். அது வாதியைத்தான் குறிப்பிடுகின்றது என்று ஒருவர்மட்டும் புரிந்து கொண்டிருந்தால் போதுமானது. லெ-பானு *v.* மால்கம்சன் (Le-Fanu *v.* Malcolmson) வழக்கில் எதிர்வாதிகள் தங்களுடைய செய்தித்தாளில் சில ஐரிஷ் தொழிற்சாலைகளில் தொழிலாளிகள் கொடுமைக்கு உள்ளாக்கப்படுவதாகக் குற்றம் சாட்டியிருந்தனர். இவ்வளவுக்கும் அது வாதி போர்ட்லாவில் வைத்திருந்த தொழிற்சாலையையே குறிப்பிட்டதென பொருள் கொள்ளப்பட்டது.

ஆனால், எதிர்வாதியால் அந்த அவதூருன வாசகம் வெளியிடப்பட்டிருக்க வேண்டும். எனவே பிறர் அந்த அவதூருன செய்தியை எதிர்வாதியின் உத்தரவோ, அனுமதியோ இன்றி வெளியிட்டிருப்பின் எதிர்வாதி பொறுப்பாளியாக மாட்டார். ஆனால் பிறரால் வெளியிடப்பட்டுள்ள அவதூருகும் மொழியை

தன்னுடையதாக எதிர்வாதி ஏற்றுக் கொண்டிருந்தால், எதிர்வாதி பொறுப்பாளியாவார்.

எதிர்வாதி வாதிக்கு அவமானம் ஏற்படுத்த வேண்டும் என்ற கருத்துடன் அந்த அவதூறினை வெளியிட்டிருக்கிறாரா என்று பார்க்கத் தேவையில்லை. அவதூறு அடங்கிய அந்த வாசகம் அல்லது குறிப்பின்மூலம் எதிர்வாதி வாதிக்கு அவதூறு செய்யக் கருதினானா என்பதல்ல கேள்வி; அந்த அவதூறு யாரறிய வெளியிடப்பட்டதோ அவர்கள் அதில் குறிப்பிட்டது வாதிதான் என்று அறிந்து கொள்ளத்தக்க வகையில் அது அமைந்திருந்தால் எதிர்வாதி பொறுப்பாளியாவான். எனவே வாதியைப்பற்றிக் குறிப்பிடும் நோக்கோடு எதிர்வாதி அதை வெளியிட்டிருக்கத் தேவையில்லை. அவதூறு என்று சொல்லப்படும் தனது சொற்கள் வாதியைக் குறிப்பிடக்கூடும் என்று தான் நினைத்திருக்க நியாயமோ, முகாந்திரமோ இல்லையென்றே, வாதியைப் போன்ற ஒரு நபர் இருப்பதைத் தமக்குத் தெரியாது என்றே, எதிர்வாதி கூறினால் நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளாது. அவதூறான அறிக்கையை வெளியிடுபவனுக்குக் கடும்பொறுப்பு உண்டு. ஹல்டன் அண்டு கம்பெனி *v.* ஜோன்ஸ் (Hulton & Co. *v.* Jones) வழக்குப் பிரான்ஸ் நாட்டில் டியெப்பில் நடந்த மோட்டார் விளையாட்டைப் பற்றிய நகைச்சுவையான கட்டுரை ஒன்றைச் செய்தித்தாள் உரிமையாளராகிய எதிர்வாதிகள் 'சண்டே கிரானிக்கிள்' ('Sunday Chronicle') என்ற செய்தித்தாளில் வெளியிட்டிருந்தனர். அந்தக் கட்டுரையில் பெக்ஹாம் என்னும் ஊரில் உள்ள மாதாக்கோயில் காப்பாளர் ஆர்ட்டிமஸ் ஜோன்ஸ் டியெப்பில் ஒரு பரத்தையை வைத்திருந்ததாகவும், அங்கு இரவு விடுதிகளின் 'பெண் வண்ணத்துப்பூச்சிகளுடன்' இன்பக் களியாட்டங்களில் ஈடுபட்டு இரவைப் பகலாக்கிக் கொண்டிருந்ததாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்தக் கட்டுரையை எழுதியவருக்கு ஆர்ட்டிமஸ் ஜோன்ஸ் என்ற பெயர் கொண்ட நபர் ஒருவர் இருப்பதே தெரியாது. அது தமது கட்டுரைக்கென அவர் கண்டுபிடித்த கற்பனைப் பெயராகும். ஆனால் ஆர்ட்டிமஸ் ஜோன்ஸ் என்ற அதே பெயர் கொண்ட ஒரு உண்மை நபர் இருந்தார். அவர் வழக்கறிஞராகவும், எழுத்தாளராகவும் விளங்கியவர். அவர் நிலைவடிவ அவதூறு இழைக்கப்பட்டதாக ஹல்டன் & கம்பெனி மீது வழக்கிட்டார். அவர் மாதாகோயில் காப்பாளர் அல்லர்; பெக்ஹாம் என்னும் ஊரிலும் வசிக்கவில்லை; டியெப் திருவிழாவில் கலந்து கொள்ளவில்லை கட்டுரை எழுதியவரோ பத்திரிகை ஆசிரியரோ, வெளியிட்டவரோ தமக்கு அவதூறு இழைக்கக் கருதியிருக்கவில்லை என்பதை

வாதி ஏற்றுக் கொண்டார். ஆனால் அவரது நண்பர்கள் அந்தக் கட்டுரை அவரையே குறிப்பிடுவதாக நம்பியதாக அவர் நிரூபித்தார். வழக்கறிஞரான ஆர்ட்டிமஸ் ஜோன்ஸ் எதிர்வாதியின் செய்தித்தாளுக்கு 12 ஆண்டு காலமாக கட்டுரை எழுதி வந்தவர். அவதூருகக் கருதப்பட்ட கட்டுரை எழுதியவருக்கு ஆர்ட்டிமஸ் ஜோன்ஸ் என்ற பெயர்கொண்ட வழக்கறிஞர் ஒருவர் இருப்பது தெரியாவிட்டாலும், எதிர்வாதியின் அலுவலகத்தில் உள்ளவர்கள் அவரை நன்கு அறிந்திருந்தனர். குறுக்கு விசாரணையில் அச் செய்தித்தாள் நிர்வாக இயக்குநர் அந்தக் கட்டுரை வெளியாகும் முன்னர் அச்சில் தாம் அதைப் பார்த்ததாகவும், அதை முதலில் படிக்கும்போது அது வாதியைக் குறிப்பிட்டதாகக் கருதியதாகவும் ஒப்புக் கொண்டார். அக்கறையும், கவனமும் இன்றி வன்மத்தோடு எதிர்வாதிகள் அவதூறுக் கட்டுரையை வெளியிட்டிருந்தனர். எனவே அவர்கள் பொறுப்பாளிகள் எனத் தீர்ப்பளிக்கப் பட்டிருக்கலாம். இந்த வழக்கைக் கேட்ட ஜூரி வாதிக்குச் சாதகமாக முடிவு கூறியது. இம்முடிவை மாற்ற பிரபுக்கள் சபை விரும்பவில்லை. நல்லறிவுள்ள மக்கள் இந்த அறிக்கையின் மொழி வாதியைக் குறிப்பிடுவதாக கருதுவார்களேயானால் எதிர்வாதி வாதியைப் பற்றி அவதூறு இழைக்கக் கருதியிருந்தாரா என்று பார்க்கத் தேயில்லை என்று நீதிமன்றம் கூறிவிட்டது. இந்தக் கட்டுரை யாரைக் குறிப்பிடுகிறது என்று அதைப் படிக்கும் ஒவ்வொருவரும் அறிந்திருக்கத் தேவையில்லை. பல வழக்குகளில் இதை நிரூபிக்கவும் முடியாது. வாதியைப்பற்றி அறிந்துள்ள நபர்கள் அதைப் படித்தபின் அது வாதியைக் குறிப்பிடுவதாக நம்பினார்கள் என்று ஜூரிகள் கருதினால் அதை வெளியிட்ட எதிர் வாதி பொறுப்பாளியாவார். கட்டுரையை எழுதியவர் கற்பனையில் எதிர்பாராமல் உதித்த பெயரென்றே, அந்த பெயர் கொண்ட நபர் ஒருவர் உண்மையிலேயே உலகில் உள்ளார் என்பது கட்டுரை எழுதியவருக்குத் தெரியாதென்பதோ, எதிர்வாதமாகாது. எனவே வழக்கில் உள்ள சான்றுகளைக் கொண்டு பார்க்கும்போது வாதியை அறிந்துள்ள சாதாரண அறிவுள்ள மக்கள் அந்த அவதூறும் குறிப்பு வாதியைப் பற்றிக் குறிப்பிடுவதாக நம்பினார்கள் என்று கூற இடமிருந்தால் வாதி தமது வழக்கில் வெற்றியடைவார். எதிர்வாதி நல்லெண்ணத்துடன், வாதிக்கு அவதூறு இழைக்கும் நோக்கு எதுவுமின்றி நடந்துக் கொண்டதாகச் சொல்வதை நீதிமன்றம் ஏற்காது. அந்தக் கட்டுரை அல்லது தகவல் அவதூருனதா அல்லவா என்பதையறியவோ அல்லது வாதியைப்பற்றி அவதூருக அது அமைந்துள்ளதா என்றறியவோ அதை எழுதியவரின் நோக்கு அல்லது கருத்தை நாம் பார்க்கத்

தேவையில்லை. அவதூறு இழைத்ததாகச் சொல்லப்பட்டவர் தமது உள்ளத்தில் அவதூறு இழைக்கும் எண்ணமே இல்லையென்றே, அதுவும் வாதியைக் குறித்து அவதூறு மொழிய வேண்டும் என்று கருதவேயில்லையென்றே கூறித் தப்பமுடியாது. அந்தக் கட்டுரை அவதூருகவும், வாதியைக் குறிப்பிடுவதாகவும் கருதப்படக் கூடுமாயின் மேற்கூறிய எதிர்வாதம் செல்லாது.

நியூஸ் டெட் *v.* லண்டன் எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர் லிமிடெட் (News tead *v.* London Express Newspaper Limited) வழக்கில் ஹல்டன் *v* ஜோன்ஸ் கொள்கை மேலும் விரிவாக்கப்பட்டது. இவ்வழக்கில், அவதூறு எனக் கருதப்பட்ட குறிப்பில் காம்பர் வெல்லில் இருக்கும் 30 வயதான நபர் ஒருவர் மனைவியிருக்கையில் இன்னொருத்தியை மணந்த குற்றத்திற்காக தண்டிக்கப்பட்டார் என்று சொல்லப்பட்டிருந்தது. இந்தச் செய்தி உண்மையான செய்தியே கேம்பர் வெல்லில் ஒரு மதுக்கடையில் பணியாளாக இருந்த ஹெரால்ட் என்பவர் இந்தக் குற்றம் இழைத்ததாகத் தண்டிக்கப்பட்டிருந்தார். அந்த வழக்கு விசாரணையின் உண்மையான விபரந்தான் செய்தித்தாளில் வெளியிடப் பட்டிருந்தது. சுமார் 30 வயது கொண்ட வாதி தமது தந்தையின் முடிதிருத்தகத்தில் உதவி புரிந்து வந்தார். அவர் எதிர்வாதியின் மேல் வழக்கிட்டதில் வாதியைப் பற்றி அறிந்துள்ளவர்கள் அந்தச் செய்தி வாதியைக் குறிப்பிடுவதாகப் புரிந்து கொண்டதாகக் கருதி எதிர்வாதி பொறுப்பாளியாவார் என்று தீர்ப்பளிக்கப்பட்டது. எனவே அவதூருகக் கருதப்படும் சொற்கள் வேறொருவரைப் பற்றி உண்மையாக எழுதப்பட்டிருந்தால், வாதியைப் பற்றி அவதூருக அமைந்திருக்க வழி இல்லை என்று சொல்லமுடியாது. ஏனெனில் வாதியை அறிந்துள்ள மக்கள் அவரையே அந்தச் சொற்கள் குறிப்பிடுவதாகக் கருத இடமிருக்கலாம். எனவே இதைப் போன்ற குறிப்பு அல்லது செய்திகளை வெளியிடும் ஆசிரியர்கள் அது வேறு யாரையும் குறிப்பிடத்தக்கவையாக இல்லாதவாறு எச்சரிக்கையோடு விளக்கமாக எழுத வேண்டும்.

ஒரு வகுப்பினரைப் பற்றிய அவதூறு

சில சமயங்களில் அவதூருகக் கொள்ளத்தக்க சொற்கள் ஒரு குறிப்பிட்ட வகுப்பினரைப் பற்றிப் பொதுவாகச் சொல்லப் பட்டிருக்கும். அதில் வாதியின் பெயர் குறிப்பிடப்பட்டிருக்காது. அந்த வகுப்பினரில் ஒருவரான வாதி வழக்கிட விரும்பினால் அந்தச் சொற்கள் தம்மை குறிப்பிடத்தக்க வகையில் உள்ளதாக நிரூபிக்க வேண்டும். ஒரு வகுப்பினரைப் பற்றிப் பொதுவாகச் சொல்லப்பட்ட ஒன்றில் வாதியும் சேர்க்கப்பட்டுள்ளார் என்று

நிரூபிப்பது எளிதல்ல; பொறுப்பின்றிப் பொதுவான முறையில் இவ்வாறு வசைப்பாடுவதும் பலரது இயல்பாக இருக்கிறது. எனவே அனைவரும் கெட்டவர்கள் என்று ஒருவர் எழுதலாம். இதை எழுதியவர் மேல் யாரும் வழக்கிட முடியாது. பொதுவாக மனித இனத்தின் மேல் சொல்லப்பட்ட அவதூறு தம்மைக் குறித்த அவதூறு என்று யாரும் சொல்ல முடியாது. ஒருவன் எல்லா வழக்கறிஞர்களும் திருடர்கள் என்று எழுதினால் குறிப்பிட்ட வழக்கறிஞர் எவரும் அந்த வாசகம் அவரைக் குறிப்பிடத்தக்க வகையில் இருந்தாலன்றி வழக்கிடமுடியாது. ஆனால் ஒரு வகுப்பினரைப் பற்றிப் பொதுவாகச் சொல்லப்பட்ட அறிக்கையில் உள்ள சொற்களிலிருந்தோ அல்லது அவை வெளியிடப்பட்டச் சூழ்நிலைகளிலிருந்தோ அது வாதியைக் குறிப்பிடுவதாகக் காட்ட முடிந்தால் வாதி வழக்கிடலாம். குறிப்பிட்ட சில நபர்களை மட்டும் கொண்ட குழுவைப் (எடுத்துக் காட்டாக ஒரு குறிப்பிட்ட கட்டிடத்தில் குடியிருப்பவர்கள், ஒரு நிறுவனத்தில் உறுப்பினராக உள்ளவர்கள்) பற்றிய அவதூறு சொல்லப்பட்டது என்றால் அந்தக் குழுவைச் சேர்ந்த ஒவ்வொரு வரும் வழக்கிட முடியும். அவ்வாறு அவதூறாக கருதத்தக்கச் சொற்கள் வாதியைக் குறிப்பிட வல்லவையா என்பது நீதிபதி தீர்மானிக்க வேண்டிய சட்டப் பிரச்சினையாகும். இதைத் தீர்மானிக்கும்போது அந்த வகுப்பு அல்லது குழுவில் எத்தனை பேர் உள்ளனர். குற்றச்சாட்டின் பொதுவான இயல்பு, ஆகியவற்றையெல்லாம் கருதிப் பார்க்க வேண்டும்.

நஃபர் *v.* லண்டன் எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர் லிமிடெட் (Knuffer *v.* London Express Newspaper Limited) வழக்கில் வாதி உறுப்பினராக இருந்த ஒரு கட்சியில் மொத்தம் சுமார் 2000 பேர் இருந்தனர். அவர்களில் வாதி உட்பட 74 பேர் இங்கிலாந்தில் வாழ்ந்தனர். அந்தக் கட்சியைப்பற்றிப் பொதுவாக எதிர்வாதிகள் ஒரு கட்டுரை வெளியிட்டிருந்தனர். வாதியின் நண்பர்களில் சிலர் இந்தக் கட்டுரை வாதியைக் குறிப்பிடுவதாகக் கருதினர். ஒரு பெரிய கூட்டமாக அமைந்திருந்த ஒரு கட்சியைப்பற்றி அந்தக் கட்டுரை அமைந்திருந்தது; தவிர, அக்கட்சியின் பெரும் பான்மையான உறுப்பினர்கள் அயல் நாடுகளில் வசிப்பவர்கள். எனவே இக் கட்டுரை வாதியைக் குறிப்பிடவல்லது என்று கருத இடமில்லையென்று தீர்ப்பளிக்கப்பட்டது.

சில சமயங்களில் எதிர்வாதி ஒரு வகுப்பைச் சார்ந்தவர்கள் சிலரைக் குறிப்பிட்டுச் சொல்லாமல் அவதூறு வெளியிட்டிருக்கலாம். வாதியைத் தனிப்பட்ட முறையில் குறிப்பிடும்

நோக்கம் எதிர்வாதிக்கு இருந்ததென வாதியால் நிரூபிக்க முடியாமல் போனலும் அவனைப் பற்றி அவதூருக அது அமைந்து அவன் வழக்கிடக் கூடியதாக இருக்கலாம். எடுத்துக்காட்டாக, எதிர்வாதி தனது குதிரையை 'அ' அல்லது 'ஆ' ஆகிய இருவரில் ஒருவர் திருடியுள்ளதாகவும், அவர்களில் யார் திருடியது என்று தனக்குத் தெரியாது என்று எழுதினால், அவர் மேல் 'அ' 'ஆ' ஆகிய இருவரும் வழக்கிடலாம். ஏனெனில் இந்தி அவதூறின் விளைவாக இருவர் மேலும் ஐயம் எழுவதால் இருவருக்கும் அவதூறு நேர்ந்துள்ளது. ஆனால் இங்கு குறிப்பிட்ட அந்த வகுப்பு மிகப் பலர் அடங்கியதாயின், அதைச் சார்ந்த எவரும் தம்மீதே குற்றம் சுமத்தப்பட்டதாகக் கருதமுடியாது.

இரண்டாவதாக, எதிர்வாதியின் சொற்கள் அவதூருனவை என்று வாதி மெய்ப்பிக்க வேண்டும். எதிர்வாதி வெளியிட்ட அவதூருன குறிப்பு அல்லது வாசகத்தின் காரணமாக வாதியின் மதிப்பு அல்லது புகழுக்கு இழுக்கு ஏற்பட்டிருக்க வேண்டும். வாதியை நன்மதியாளரின் வெறுப்புக்கோ, இகழ்ச்சி அல்லது கேலிக்கோ இலக்காகுமாறு செய்வது தன் நோக்கமல்ல என்று எதிர்வாதி கூறித் தப்பமுடியாது. அவதூருன சொற்களின் விளைவாக வாதியின் புகழுக்கு இழுக்கு அல்லது ஊறுநேரக் கூடுமாயின், வாதிக்கு அவதூறு இழைக்கும் நோக்கம் தனக்கு இல்லையென எதிர்வாதி வாதிட முடியாது. எதிர்வாதி வெளியிட்ட அவதூறுச் சொற்களின் காரணமாக ஏற்பட்ட விளைவு என்ன வென்று தான் நாம் அறிய வேண்டுமே தவிர, என்ன நோக்கத் தோடு, கருத்தோடு அவற்றை எதிர்வாதி வெளியிட்டார் என்று பார்க்கத் தேவையில்லை. வாதிக்கு அவதூறு இழைக்கப்பட்டதா என்றறிய, அவதூறென அவன் புகார் செய்ய அடிப்படைக் காரணமாக அமைந்த சொற்களின் தன்மையை ஆராயவேண்டும். வாதி தான் பார்த்திராத கடிதத்தில் அவதூருன சொற்கள் இருப் பதாக ஐயமுறுவதாகக் கூறி வழக்கிட முடியாது. நல்லறிவுள்ள ஒருவனால் எதிர்வாதி வெளியிட்ட சொற்கள் அவதூருனவை யென்று பொதுவாகக் கருத முடியாதெனில், அவதூறு இழைக்கப் பட்டதாக சொல்லமுடியாது. எதிர்வாதி கூறிய சொற்களுக்கு அவதூருகக் கருதத்தக்க பொருள் கொள்ளமுடியுமா என்று பார்க்க வேண்டியிருக்கும். லூயிஸ் v. டெய்லி டெலிகிராப் லிமிடெட் (Lewis v. Daily Telegraph Ltd) வழக்கில் எதிர்வாதி தமது சொற்களை அவதூருனவை என்று ஏற்றுக்கொண்டார். ஆயினும் அவை வாதி கூறும் குறிப்பிட்ட பொருளில் அவதூருனவையல்ல

என்று அவர் வாதிட்டார். எதிர்வாதிகள் தமது செய்தித்தாளில் லண்டன் மாநகர் மோசடி கண்டுபிடிப்புப் படையினர் (City of London Frand Squad) வாதி – கம்பெனியில் நடவடிக்கைகளைப் பற்றி விசாரித்து வருவதாகச் செய்தி வெளியிட்டிருந்தனர். இச் செய்தி தங்கள் கம்பெனியில் ஏமாற்று வேலைகளும், மோசடியும் நடப்பதாகப் பொருள் தருகிறது என்று வாதி வாதிட்டனர். எதிர் வாதி வெளியிட்ட இச்செய்தி இத்தகைய பொருள் தரத்தக்கதல்ல வென பிரபுக்கள் சபையின் பெரும்பான்மையான நீதிபதிகள் கருதினர் ஒரு கம்பெனி நடவடிக்கைகளைப் பற்றி போலீஸ் விசாரிக்கிறது என்பதாலாயே, அக் கம்பெனி மோசடி வேலைகளில் ஈடுபட்டிருப்பதாக ஒரு சாதாரண அறிவுள்ள மனிதன் கருதக் கூடும் என்று சொல்லமுடியாது.

எதிர்வாதியின் சொற்களின் பொருள் தெளிவாகவும், வெளிப் படையாகவும் இயல்பாகவே அவதூறுனவையாக அமைந்திருப்பின் நீதிபதியின் வேலை எளிதாகிறது. அச்சொற்களின் விளைவாக வாதி மற்றவர்களது வெறுப்புக்கோ, நகைப்புக்கோ இலக்காகியுள்ளார் என்பது தெளிவாகத் தெரியும்போது எதிர்வாதி பொறுப்பாளி யாவார் என்பதில் ஐயமில்லை. ஆயினும், எதிர்வாதியின் சொற் களின் பொருள் தெளிவற்றதாகவோ, ஒன்றுக்கு மேற்பட்ட பொருள் கொண்டதாகவோ இருக்கலாம். சில சமயங்களில் வலிந்து, முறையற்ற விளக்கம் கொடுத்தால் தான் அவதூறுன பொருள் தரத்தக்கதாக எதிர்வாதியின் சொற்கள் இருக்கலாம். அந்தச் சொற்களுக்குத் தரப்படும் விளக்கம் எதிர்வாதி அவற்றைச் சொன்ன சூழ்நிலையில், நியாயமானதாக இருப்பின் அவற்றை அவதூறெனச் சொல்லமுடியாது. நன்மதியாளர் எதிர்வாதியின் சொற்களை அவதூறுனவை எனக் கருத முடியாதாயின் வாதி வெற்றியடைய முடியாது.

கேப்பிடல் & கவிண்டீஸ் வங்கி *v.* ஹென்டி (Capital and Counties Bank *v.* Henty) வழக்கில் மது உற்பத்தியாளராகிய ஹென்டி & சன்ஸ் நிறுவனம் தங்கள் வாடிக்கையாளரிடமிருந்து கேப்பிடல் & கவுண்டீஸ் வங்கியின் கிளையின் மேல் வரையப் பட்ட காசோலையைப் (Cheque) பெற்று வந்தனர். ஹென்டி கம்பெனியின் வசதியைக் கருதிக் கொண்டு இந்த வங்கி தன் குதிப்பிட்ட கிளையொன்றில் அக்காசோலைக்குப் பணம் தந்தது. இக் கிளையின் மேலாளராக 'அ' என்பவர் இருந்தார். ஹெஸ்ட்லி கம்பெனியிலிருக்கும் 'அ' என்பவருக்கும் தகராறு ஏற்படவே, தங்கள் வாடிக்கையாளருக்கு கம்பெனியினர் கேப்பிடல் & கவுண்டீஸ் வங்கியின் எந்தக் கிளையின் மேலும் காசோலை தந்

தாலும் தாங்கள் ஏற்றுக் கொள்ள மாட்டோம் என்று சுற்றறிக்கை அனுப்பினர். இந்த வாடிக்கையாளருக்கு ஹெஸ்ட்லி கம்பெனி யாருக்கும் 'அ' என்பவருக்கும் இருந்த தகராறு பற்றி எதுவும் தெரியாது. இந்த அறிக்கை மற்றவர்களுக்கும் தெரியவே அவர்கள் வங்கி பொருளாதார நிலையில் நொடித்து விட்டதாகக் கருதி, அதன் பேரில் நம்பிக்கை இழந்து, தாங்கள் அதில் போட் டிருந்த பணத்தை எடுத்தனர். இந்த அறிக்கை வெளியிடப்பட்டதன் விளைவாக சுமார் 2½ லட்சம் பவுன் வைப்புத்தொகை எடுக்கப்பட்டு விட்டது. எதிர்வாதிகள் வெளியிட்ட சுற்றறிக்கை தங்களை நொடித்து விட்டதாகக் கூறும் பொருள் தரத்தக்கது என்று என வாதி கூறினர். இதைப் பற்றி கீழ் நீதிமன்றங்கள் கருத்து வேறு பாடு கொண்டிருந்தன.

பிரபுக்கள் சபையின் முன் இவ்வழக்கு இரண்டு முறை வாதிடப்பட்ட பின்னர் 4-க்கு 1 என்ற பெரும்பான்மை விகிதத்தில் பிரப்புக்கள் சபை இந்த சுற்றறிக்கை வெளியிடப்பட்ட சூழ்நிலை யைக் காணும்போது, அதிலிருந்து நல்லறிவுள்ள மனிதன். வங்கி திவாலாகி விட்டதாகக் கருத இடமில்லை என்று தீர்ப்பளித்து விட்டது. எதிர்வாதிகள் பொறுப்பாளிகள் ஆகமாட்டார் என்று தீர்ப்பளித்து விட்டது. இந்தச் சுற்றறிக்கையை வாடிக்கையாளர்கள் மற்றவர்களுக்குக் காட்டி இருப்பின் அது ஹெண்டி கம்பெனியின் குற்றமாகாது. அதை மற்றவர்களுக்குக் காட்டுமாறு அவர்கள் அதிகாரமளிக்கவில்லை. அந்த அறிக்கையில் வரும் சொற்களின் இயல்பான பொருள் அவதூறாக இல்லாதபோது அந்த அறிக்கையைக் கண்ணுறும் நல்லறிவுள்ளவன் அதற்கு அவதூறான பொருளே கொள்ளக் கூடும் என்று எதிர்வாதி சான்று மூலம் நிறுவ வேண்டும். குறிப் பிட்ட வங்கியின்மேல் வரையப்பட்ட காசோலையை ஒருவர் வாங்க மறுக்க எத்தனையோ காரணமிருக்கலாம். ஆயினும், நல்லறிவுள்ள மனிதன் அதற்கு முதற் காரணமாக அந்த வங்கியின் பொருளாதாரம் சரியாக இல்லையென்றே கருதலாம். எனவே இந்தத் தீர்ப்பில் சொல்லப்பட்ட கொள்கை சரியானதாக இருப்பினும், இவ்வழக்கில் சூழ்நிலையைக் கொண்டு பார்க்கும் போது இக்கொள்கை சரியானபடி பயன்படுத்தப் பட்டதாகச் சொல்வதற்கில்லை.

மறைமுக அவதூறு (Innuendo)

எதிர்வாதியின் சொற்கள் முதல நோக்கிலேயே அவதூறாக அமைந்து விடலாம். அப்போது அதன் இயல்பானதும், வெளிப் படையானதும் ஆக அமைந்துள்ள முதற்பொருள் அவதூறாக

இருக்கும். இவ்வாறு அவை அமைந்திருந்தால், எதிர்வாதி அவை அவதூறுகாது என்பதற்கு சரியான விளக்கமோ அல்லது முகாந்திரமோ தரவில்லை யெனில் அவன் பொறுப்பாளியாவான். இங்கு அவ்வாறு விளக்கம் தரவேண்டிய பொறுப்பு எதிர்வாதியையே சேர்ந்தது. அச்சொற்களில் சாதாரண—இயல்பான பொருள்—அவதூறுகுமா என்று அறிய அவை எந்த வேளையில், எந்த முறையில் வெளியிடப்பட்டதென்று பார்க்க வேண்டும். எடுத்துக்காட்டாக, அனைவரும் விரும்பிப் படிக்கும் ஒரு செய்தித் தாளில் முதற் பக்கத்தில் கொட்டை எழுத்துக்களில் வெளியிடப் பட்டிருக்கலாம். எதிர்வாதியின் சொற்கள் இயல்பாகவே அவதூறான பொருள் கொண்டதாக இருக்கும்போது அச்சொற்களின் பொருள் விளக்கத்தை வாதி தரத் தேவையில்லை.

சில சமயங்களில் எதிர்வாதியின் சொற்கள் முதலுக்கில் குற்றமற்றவையாகத் தோன்றலாம். ஆயினும் அதற்கு அவதூறுக உட்பொருள் இருக்கக்கூடும். வாதி தனது வாதுரையில் எதிர் வாதியின் சொற்களுக்குத் தான் காணும் பொருள் என்னவென் பதைத் தெளிவாகவும், விளக்கமாகவும் சொல்ல வேண்டும். இவ்வாறு எதிர்வாதியின் சொற்களின் உள்ளுறை பொருளாக, மறைமுகமாக அமைந்திருக்கும் அவதூறை எடுத்துச் சொல்லி நிரூபிக்க வேண்டியது வாதியின் பொறுப்பாகும். சில சமயங்களில் எதிர்வாதி கூறியது வாதியைப் புகழ்வதுபோலத் தோன்றினாலும், அது சொல்லப்பட்ட சூழ்நிலையில் அவதூறாக இருக்கலாம். வஞ்சப் புகழ்ச்சியாக ஒருவரை "கொடையில் இவர் ஒரு பாரி வள்ளல்" என்று மற்றவர் குறிப்பிடலாம். திருமணமாகாத பெண் ஒருத்தியைப் பற்றியோ அல்லது ஓரிரு மாதங்களுக்கு முன்னர் தான் திருமணம் புரிந்து கொண்ட ஒரு பெண்ணைப் பற்றியோ வெளியிடப்பட்ட செய்தியில் அவள் குழந்தை பெற்றாள் என்று குறிப்பிட்டால் அது அவதூறாகும். (மாரிசன் v ரிட்சீ & சன்ஸ்) எதிர்வாதியின் சொற்களில் மறைமுக அவதூறு இருப்பின் வாதி அதற்கான பொருள் விளக்கமும், தேவையான புற ஆதாரங்களையும், உண்மைகளையும் சான்று மூலம் நிறுவ வேண்டும். அப்படிப்பட்ட ஆதாரங்களை அவனால் காட்டமுடியாமல் போய் விட்டால் மறைமுக அவதூறு இருப்பதை அவன் நிரூபிக்க முடியாது. அவ்வாறு அவன் மறைமுக அவதூறை நிரூபிக்க முடியாமல் போய்விட்டாலும் எதிர்வாதியின் சொற்கள் இயல் பாகவே அவதூறான பொருள் கொண்டவை என்று நிரூபிக்க முயற்சி செய்யலாம். ஒருவரது வாணிப விவகாரங்களை அரசின் மோசடிக் கண்டுபிடிப்பு போலீஸ் கண்காணித்து வருகிறது என்று எழுதுவது அவதூறாகக்கூடும் என்று கண்டோம். (லூபிஸ்

v. டெய்லி டெலிகிராப் லிமிடெட்). ஆனால் அந்தச் சொற்களி லிருந்து அவர் தமது வாணிபத்தை மோசடியாகச் செய்கிறார் என்று மறைமுக அவதூறு இருப்பதாகச் சொல்வதற்கில்லை. மறுதலையாக, ஒரு குறிப்பிட்ட நபர் 'விளம்பரம் செய்வதில் கெட்டிக்காரர்' என்று ஒருவர் சொன்னால் அந்தச் சொற்களில் குற்றமேதும் இருப்பதாகக் கருத இடமில்லை. ஆனால் அந்தக் குறிப்பிட்ட நபர் ஒரு வழக்கறிஞர் என்று விபரம் அறிந்தவரிடம் அவை வெளியிட்டிருப்பின், அவற்றில் மறைமுக அவதூறு அடங்கியிருக்கிறது.

மறைமுக அவதூறு இருப்பதாக வெற்றிகரமாக நிரூபிக்கப் பட்டால், சாதாரணமாக அவதூறுப் பொருள் இல்லாத சொற்களும் அவதூருனவையாகக் கருதப்படும். மறைமுக அவதூறு உள்ள தென்று வெற்றிகரமாக நிரூபிக்கப்பட்ட வழக்குகளில் முக்கியமாக டாலி v. பிரை & சன்ஸ் லிமிடெட் (Tolly v. Fray & Sons Limited) வழக்கைக் குறிப்பிடலாம். இவ்வழக்கில், வாதி ஒரு புகழ்பெற்ற கால்ஃப் (Golf) விளையாட்டு வீரர். இவர் அந்த விளையாட்டைத் தொழிலாகக் கொள்ளாத (amateur) விளையாட்டுக் காரர். சாக்கலேட் இனிப்புப் பண்ட உற்பத்தியாளராகிய எதிர் வாதிகள் வெளியிட்டிருந்த ஒரு விளம்பரத்தில் வாதியின் பெயரை வெளியிட்டிருந்தனர். அப்படத்தில் வாதியின் கோட்டுப்பையி லிருந்து ஒரு சாக்லேட் பொட்டலம் ஒன்று நன்கு தெரியும்படியாக நீட்டிக் கொண்டிருந்தது. மற்றும், அப் படத்தில் அவர் அருகில் கால்ப் ஆட்ட உதவியாளர் தன் கையில் சாக்கலேட் பொட்டல மொன்றுடன் நின்று கொண்டு, அவரது ஆட்டத்தின் சிறப்பையும், எதிர்வாதிகளின் தயாரிப்பான சாக்கலேட்டின் சிறப்பையும் ஒப்பிட்டுப் பாராட்டி ஒரு பாடல் பாடிக்கொண்டு இருந்தான். இந்தப் படத்தை மட்டும் கருத்தில் கொண்டு பார்த்தால் அதில் அவதூறு எதுவுமில்லை. எதிர்வாதியின் சாக்லேட்டை வாதி தின்பவரல்ல. தவிர, அந்த விளம்பரப்படம் வெளியிடுவதற்கு வாதியின் இசைவு பெறப்படவில்லை. வாதி தாம் எதிர்வாதியிடம் பணம் வாங்கிக் கொண்டு விளம்பரத்திற்குத் தமது படத்தை பயன்படுத்த அனுமதியோ, இசைவோ தந்துள்ளதாகவும், இதனால் ஊதியமின்றி விளையாட்டை விளையாட்டுக்காகவே ஆடும் தமது தகுதியில் (amateur status) அவர் 'சோரம்' போய் விட்டதாகவும் கருதக்கூடிய மறைமுக அவதூறு இருப்பதாக வாதிட்டார். இவ் வழக்கில் இவ்வாறு தமது பெயரை விளம்பரப்படுத்த இணங்கிய ஆட்டக்காரர்களை அவர்கள் சார்ந்துள்ள விளையாட்டுச்சங்கம் உறுப்பினர் பதவியிலிருந்து விலகுமாறு வற்புறுத்தும் என்று மற்ற கால்ஃப் ஆட்டக்காரர்கள் சான்று கூறினர். எதிர்வாதிகளும்

அவரது விளம்பர முகவர்களும் ஒருவருக்கொருவர் எழுதிய கடிதங்களைப் பார்க்கும்போது இந்த விளம்பரத்தின் விளைவாக வாதியின் அமெச்சூர் ஆட்டத் தகுதி பாதிக்கப்படலாம் என்று எதிர்வாதிகள் உணர்ந்திருந்தது தெளிவாகியிருந்தது. எனவே மறைமுக அவதூறு இருப்பதாக நீதிமன்றம் கருதி எதிர்வாதிகளைப் பொறுப்பாளியாக்கத் தீர்மானித்தது.

மாரிசன் v. ரிட்சீ & சன்ஸ் (Morrison v. Ritchie & Sons) வழக்கும், வாதி இரட்டைக் குழந்தைகளைப் பெற்றதாக எதிர்வாதி ஒரு தவருன செய்தியை வெளியிட்டிருந்தார். அவர்கள் வேண்டுமென்றே அவ்வாறு செய்யவில்லை; தங்களுக்குக் கிடைத்த தவருன தகவலை உண்மையென்றே நம்பி வெளியிட்டிருந்தனர். ஆயினும் பொறுப்பாளிகளாவார் என்று தீர்ப்பளிக்கப்பட்டது. வாதிக்கு திருமணமே இரண்டு மாதங்களுக்கு முன்னர்தான் நடைபெற்றிருந்தது. ஆனால் இது எதிர்வாதிக்குத் தெரியாது.

தீமையென வெறுத்தொதுக்கத்தக்க பொருள்களின் இடையே தவறுதலாக கெட்ட நோக்கம் எதுவும் இல்லாமல், ஒரு பொருளை வைத்து விடுவதும் அவதூறுகவேக் கருதப்படலாம். மான்சன் v. டஸ்ஸாட்ஸ் லிமிடெட் (Monson v Tussauds Ltd) வழக்கில் எதிர்வாதி லண்டன் மாநகரில் மெழுகு பொம்மை கண்காட்சி நடத்தி வந்தார். அங்கு "பயங்கர வாதிகளின் அறையை" அடுத்துள்ள அறையில் கைத்துப்பாக்கி ஏந்தியவாறு நின்றுக் கொண்டிருக்கும்படி வாதியைப் போன்ற உருவத்தை பொம்மை உருவில் வைத்திருந்தார்கள். வாதி ஒரு கொலை செய்ததாக, ஸ்கார்ட்லாந்தில் விசாரிக்கப்பட்டு குற்றம் நிருபிக்கப்படவில்லை என்பதால் விடுதலை செய்யப்பட்டார். அவர் செய்ததாகச் சொல்லப்பட்ட அந்தக் கொலைக்காட்சியை, 'பயங்கரமான செயல்கள் அறையில்' மெழுகு பொம்மையின் மூலமாகக் காட்டியிருந்தனர். இது அவதூறுகக் கொள்ளத்தக்கதாக நீதிமன்றம் கருதியது. இரண்டு பொருட்களையும் ஒன்றுகக் காணும் நல்லறிவுள்ள ஒருவர் அதிலிருந்து வாதிக்கு அவதூறு இழைக்கப்பட்டதாக ஊகிக்க இடமிருக்க வேண்டும்.

காசிடியின் வழக்கு (Cassidy's Case) எதிர்வாதி உண்மையென்று நம்பி வெளியிட்ட செய்தி அல்லது தகவல் அவனுக்குத் தெரிந்திராத சில உண்மைகளின் காரணமாக அவதூறுக அமைந்து விடக் கூடும். ஆனால் அவன் யாரறிய வேண்டுமென்று அந்தச் செய்தியை வெளியிட்டானோ அவர்களுக்கு அந்த உண்மை தெரிந்திருக்கலாம். இதனால் வாதியின் புகழுக்கு ஏற்படும்

ஊறுக்கு எதிர்வாதி பொறுப்பேற்க வேண்டியிருக்கும். அவனது சொற்கள் அவதூருகக் கருதும்படி பொருள் கொள்ளத் தக்கவையாயின், அவன் பொறுப்பாளியாவான். காசிடி v. டெய்லி மிரர் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் (Cassidy v. Daily Mirror News Papers Ltd) வழக்கினை இதற்கு எடுத்துக் காட்டாகச் சொல்லலாம். இவ்வழக்கில் காசிடி என்பவர் தன் பெயர் காரிகன் என்றும், தான் மெக்சிகன் ராணுவத்தில் ஒரு தளபதி என்றும் சொல்லிக் கொண்டான். அவன் மணந்திருந்த பெண்ணும் தான் காசிடி அல்லது திருமதி காரிகன் என்றும் கூறிவந்தாள். அவனை அவள் குடியிருந்த இல்லப் பகுதியில் அவள் கணவன் எப்போதாவது சென்று அவனை சந்தித்து வந்தான்; அவனை அறிந்திருந்தவர்களுக்கு இது தெரியும்; காசிடி குதிரைப் பந்தயத்தில் ஈடுபட்டுள்ளவர்களிடம் ஓரளவு பிரபலமானவன்; அத்துடன் பல பெண்களுடன் கூடா நட்பு வைத்திருந்ததையும் பலர் அறிந்திருந்தனர். ஒருநாள் குதிரைப் பந்தயம் நடக்கும்போது அவன் ஒரு பெண்ணோடு காணப்பட்டான். அவன் குதிரைப் பந்தயப் புகைப் படக்காரர் ஒருவரிடம் தான் அப்பெண்ணை மணக்க நிச்சயம் செய்துள்ளதாகவும், அச்செய்தியை புகைப்படத்துடன் அவர் வெளியிடலாம் என்று கூறி, புகைப் படம் எடுத்துக் கொண்டான். அதற்கிணங்க எதிர்வாதிகளும் தங்கள் டெய்லி மிரர் (Daily Mirror) செய்தித் தாளில் 'இன்றைய வதந்தி' (to day's gossip) தலைப்பில் அப் புகைப் படத்தை வெளியிட்டு அதன் கீழ் "பந்தயக் குதிரை உரிமையாளராகிய திரு. M. காரிகன் அவர்களுக்கும் செல்வி "X" என்ற பெண்மணிக்கும் திருமணம் நிச்சயமாகியுள்ளது" என்ற செய்தியை வெளியிட்டிருந்தனர். திருமதி காரிகனும், திரு காரிகனும் ஒன்றுக வாழ்ந்து கொண்டிராவிடினும் அவள் சட்டப்படி அவரைத் திருமணம் செய்து கொண்டிருந்ததாக அவனை அறிந்திருந்தவர்கள் நம்பியிருந்தார்கள். எதிர்வாதிகள் வெளியிட்ட செய்திக்கு ஆதாரமாக அமைந்தது காரிகனின் கூற்றுமட்டுமே. இது உண்மையா என்று அறிய அவர்கள் முயற்சி செய்யவேயில்லை. எதிர்வாதிகள் மேல் நிலவடிவ அவதூறுக்காக வழக்கிட்ட திருமதி காரிகன் அவர்கள் செய்தியில் திரு காரிகன் அவனது கணவன் அல்லவென்றும், அவள் காரிகனோடு தகாத உறவு வைத்துக் கொண்டிருப்பதாகவும் மறைமுக அவதூறிருப்பதாக வாதிட்டாள். அவனை அறிந்திருந்த பெண்மணிகள் இச் செய்தியைப் படித்ததும் அவள் தாழ்ந்தவள் என்று தாங்கள் கருதியாகச் சான்று கூறினர்கள். இவ்வழக்கை விசாரித்த அப்பீல் நீதிமன்றம் இச்செய்தியில் மறைமுக அவதூறிருப்பதாக நிரூபிக்கப்பட்டதாகத் தீர்ப்பளித்தது. இச்செய்தியைக் கண்ணுறும் நல்லறிவுள்ள

மனிதர் வாதியின் ஒழுக்கத்தையும் நடத்தையையும் மோச மானவை என்றே கருதுவர் என்று இவ்வழக்கைக் கேட்ட ஜூரி களும் கருதினர்.

ஒரு செய்தித்தாளின் ஆசிரியர் அதில் வரும் செய்திகள் உண்மையானவையா, சரியானவையா என்று தீர விசாரித்தே அதை வெளியிட வேண்டும். இவ்வாறு செய்யத் தவறி, கவன மின்றி ஒரு அவதூருன அறிக்கையை அவர் வெளியிட்டால் அதன் விளைவுகளுக்கும் பொறுப்பேற்க வேண்டும். ஹல்டன் v. ஜோன்ஸ் தீர்ப்பைக் கண்டு எழுத்தாளர்கள் ஆஞ்சினர்கள். இந்த அச்சம் காசிடி வழக்கு நியூஸ் ஸ்டெட் வழக்கு ஆகியவற்றில் கூறப்பட்ட தீர்ப்புகளின் விளைவாக அதிகமாகியது. அவதூறுக்குப் பொறுப்பு அவதூறு இழைத்தவர் என்ன நோக்கோடு அதைச் சொன்னர் என்பதைப் பொறுத்ததல்ல; அவர் சொற்களால் வாதிக்கு அவதூறு இழைக்கப் பட்டதா என்பதையே பொறுத்ததாகும். எனவே அதை எழுதியுள்ள எழுத்தாளர்களும், அச்சிடுவோரும், வெளியிடுவோர்களும் மேற்கூறிய தீர்ப்புகளினுல் அல்லலுற்றுப் புகார் செய்தனர். அவர்கள் வெளியிட்ட கற்பனைக் கதைகளில் வரும் நபர்களுக்கு வைக்கப்பட்டுள்ள பெயரைக் கொண்டவர்கள் இதையே வாய்ப்பாகக் கருதி வழக்கிட்டு தீங்கிடு கோரக் கூடிய நிலையை இத்தீர்ப்புகள் தோற்றுவித்திருந்தன. எனவே 1952-ல் இயற்றப்பட்ட அவதூறுச் சட்டம் குற்றமற்ற முறையில் அவதூருன செய்தியை வெளிபிட்டவர்கள் பொறுப்பிலிருந்து தப்ப வழிமுறை செய்தது. இச்சட்டத்தின் 4-ம் பிரிவின்படி உரிய திருத்தமும், தவறுக்காக மன்னிப்பும், வருத்தமும் வெளியிட எதிர்வாதி விருப்பம் தெரிவித்து அந்த அவதூறை வெளியிட்டதன் விளைவாக வாதி செலவிட நேர்ந்த நியாயமான தொகையை அவருக்குத் தர முன்வந்தால் தீங்கிடு தர வேண்டிய பொறுப்பி லிருந்து தப்பலாம். போர்ட்டர் குழுவின் சிபாரிசின்படி சட்டத்தில் உரிய திருத்தம் செய்யப்பட்டது. அவதூறு சட்டம் 1952-ல் அவதூருன செய்தியை வெளியிட்டி ருந்தவர் தாம் குற்றமற்றவர் என்றும், வேண்டுமென்றே அவ்வாறு செய்யவில்லை என்றும் கூறினர். அவர் அதற்கு உரிய பரிகாரம் செய்ய முன் வரவேண்டும். இதற்காக தாம் உண்மை தெரியாமல் அதை வெளியிட்டதாகவும், அதற்காக வருந்துவதாக வும் கூறி தமது செய்திக்குத் தகுந்த முறையில் திருத்தத்தை வெளியிடுவதோடு அவதூறு இழைக்கப்பட்டவனின் மன்னிப் பையும் நாடவேண்டும். அந்த அவ்தூறு அடங்கிய செய்தி பிறருக்கு ஏற்கெனவே வெளியிடப்பட்டிருந்தால், அவர்களுக்கு

அச்செய்தி அவதூருன முறையில் அமைந்து விட்ட விபரத்தை தெளிவு படுத்தித் தகவல் தரவேண்டும்.

அவதூறு புரிந்தவர் இவ்வாறு மன்னிப்பை நாடிவரும்போது, அவதூறுக்கு ஆளானவர் அதை ஏற்றுக் கொண்ட பின்னர், செய்திக்குத் திருத்தமும் மன்னிப்பும் வெளியானால், அவதூறு புரிந்தவர் மேல் நடவடிக்கையை எடுக்கவோ, தொடர்ந்து நடத்தவோ முடியாது. அவதூறு இழைக்கப்பட்டவர் மன்னிப்பை ஏற்க மறுத்து விட்டால், அவதூறு புரிந்தவர் மேல் வழக்கிடப் படும்போது, அவர் தாம் அதை வேண்டுமென்றே வெளியிட வில்லையென்றும், அவை அவதூருனவையென்று தமக்கு அறிவிக் கப்பட்டவுடன் உரிய பரிகாரம் அல்லது மன்னிப்பு நாட முன் வந்ததாகவும், இன்றும் தாம் மன்னிப்புக் கேட்கத் தயாராகவே யுள்ளதாகவும் கூறலாம்.

மூன்றுவதாக, எதிர்வாதி அவதூறை பிறர் அறியும்படியாக வெளியிட்டிருக்க வேண்டும். அவ்வாறு வெளியிடப்படாதிருந் தால், அவதூறுக்காக வாதி வழக்கிட முடியாது. நிலை வடிவ அவதூறினால் ஒருவருக்கு ஏற்படும் ஊறு அல்லது இழப்பு அதைப் படிப்பவர் மனத்தில் வாதியைப்பற்றிக் கொள்ளும் வெறுப்பு இழி வுணர்ச்சி போன்றவற்றால் ஏற்படுவதாகும். வாதி தன்னைப் பற்றி என்ன நினைத்துக் கொண்டிருக்கிறான் என்பது அவன் புகழ் அல்லது மதிப்பு ஆகாது. எனவே அவனிடமே அவதூறு கூறப் பட்டிருந்தால் அவனுக்கு அவதூறு இழைக்கப் பட்டதாகாது. இங்கு அவதூறு வெளியிடப்படுவது என்றால் வாதியல்லாத ஒரு வருக்கோ அல்லது பலருக்கு அது தெரியும்படியாகச் செய்வ தென்பதே பொருளாகும். எனவே அது பலர் அறிய வெளியிடப் பட்டிருக்கத் தேவையில்லை; ஒரே ஒரு நபருக்குத் தனிப்பட்ட முறையில் ரகசியமாகத் தெரிவிக்கப்பட்டிருந்தால் கூடப் போதும். அது வாய்மொழியாகவும் இருக்காலம்; அது எழுதப்பட்டோ அச்சடிக்கப்பட்டோ இருக்கத் தேவையில்லை. எதிர்வாதி தனது அவதூறுச் சொற்களை வாதியிடமே கூறியிருந்தால் அது வாதிக்கு அவதூறாகாது. ஏனெனில் அவதூறு என்பதை வாதியைப் பற்றி நல்லறிவு கொண்டோர் தாழ்வாகக் கருதும்படிச் செய்வதாய் அமைவது என்று கண்டோம். ஒருவன் தனது தட்டெழுத்தாளரிடம் ஒரு அவதூறுக் குறிப்பைச் சொல்வதும், தனது எழுத்தர் எழுதுவதற்காகப் படிப்பதும் அவதூறினை வெளி யிட்டதாகவே கருதப்படும். வாதிக்கு அவனைப் பற்றி அவதூறு அடங்கிய கடிதத்தை அனுப்புவது அவதூறாகாது. வாதிக்கு

அனுப்பப்பட்ட கடிதத்தை மூன்றுவது நபர் ஒருவர் முறையின்றிப் பிரித்துப் படிந்தால் எதிர்வாதி அவதூறைப் பிறர் அறிய வெளியிட்டதாகக் கூறமுடியாது. இதைப் போலவே மகனுக்கு வந்த கடிதத்தைத் தந்தை பிரித்துப் படிக்கும்போது, அவதூறு வெளியிடபபட்டதாகக் கொள்வதற்கில்லை.

எதிர்வாதியின் சொற்களில் அடங்கியுள்ள அவதூறையும், அது வாதியைத்தான் குறிப்பிடுகிறது என்பதையும் புரிந்துக் கொள்ளக் கூடியவர்களுக்கு தெரிவிக்கப்பட்டால் தான் அவதூறு வெளியிடப் பட்டதாகக் கருதமுடியும். அவதூறுன தகவல் அதைப் பெற்றவர் புரிந்து கொள்ளாத மொழியில் இருந்தாலும், அதைக் கேட்க இயலாதபடி செவிடராகவோ, அல்லது அதைப் படிக்க முடியாத குருடராகவோ, அல்லது அது வாதியைத்தான் குறிப்பிடுகிறது என்று உணர்ந்து கொள்ளமுடியாதாகவோ இருப்பின் அவதூறு வெளியிடப்பட்டதாகாது. ஹ்யூத் v. ஹ்யூத் (Huth v Huth) வழக்கில் தனது பணித்தலைவருக்குத் தபாலில் வந்த சீல் வைக்கப்படாத கவரை ஆவலால் உந்தப்பட்ட வீட்டு வேலைக்காரன் பிரித்துப் படித்து விட்டான். இங்கு அவதூறு வெளியிடப்பட்டதாகக் கருத முடியாது என்று தீர்ப்பளிக்கப் பட்டது. வீட்டுக்கு வரும் கடிதங்களைப் பிரித்துப் பார்ப்பது அவன் பணியல்ல; அவன் அவ்வாறு பிரித்துப் படிக்கக் கூடும் என்பது முன்னறியக் கூடியது அல்ல. கவரை ஒட்டாமல் அனுப்பியது எதிர்வாதியின் மடத்தனம். ஆனால் அவ்வாறு அவன் அக் கடிதத்தை அனுப்பியதன் நேரடி விளைவாக அதைப் படித்த வேலைக்காரனின் நடத்தையைக் கருதமுடியாது.

ஆனால் அக் கடிதம் 'அந்தரங்கமானது' அல்லது 'பிரைவேட்' என்று குறிப்பிடப்படாமல், அதை ஒட்டியோ, ஒட்டாமலோ எதிர் வாதி அனுப்பியதாக வைத்துக் கொள்வோம். அதை வாதியின் தபாலைப் பிரித்துப் படித்துப் பதில் எழுத வேண்டிய பணியைச் செய்யும் செயலாளரோ அல்லது எழுத்தரோ, மனைவியோ படித்துப் பார்த்திருந்தால், அவதூறு வெளியிடப்பட்டதாகவே கருதப்படும். சேட் குரோவ v. ஹோல் (Sadgrare v. Hole) வழக்கில் வாதியைப் பற்றி அவதூருன குறிப்பு அடங்கிய ஒரு அஞ்சலட்டையை எதிர் வாதி மூன்றுவது நபர் ஒருவருக்கு அனுப்பினர். அந்த அஞ்ச லட்டையில் அவர் வாதியின் பெயரைக் குறிப்பிடவில்லை அந்தச் சூழ்நிலையை அறியாத அயலார் எவரும் அது யாரைக் குறிப்பிடு கிறது என்று சொல்ல முடியாதிருந்தது. தபால்காரர் உட்பட அந்த அஞ்சலட்டை பலர் கைக்கு மாறியிருந்தாலும் அவதூறு வெளியிடப்படவில்லை என்று கருதப்பட்டு எதிர்வாதி பொறுப்பாளி

யல்லரெனத் தீர்ப்பளிக்கப்பட்டது. அஞ்சல் நிலையத்தின் மூலம் ஒரு கடிதம் அனுப்பப்படும் போது, அது வெளியிடப்பட்டதாகவோ சட்டம் ஊகித்துக் கொள்ளும். மற்றவர்களால் படிக்கப்படுவதற்கு வாய்ப்பிருக்கும் வகையில் ஒரு கடிதம் வாதிக்கு அனுப்பப்படு மானால், அது வெளியிடப்பட்டதாகவே கருத வேண்டும். அவதூறு அடங்கிய ஒரு தந்தியை ஒருவர் அனுப்புகிறார் என்று வைத்துக் கொள்ளுவோம். அதை வாங்கி சங்கேத மொழியில் அனுப்பும் தந்தி அலுவலகப் பணியாளருக்கும் அதைப் பெறும் ஊழியருக்கும் அது வெளியிடப்படுவதால், வாதி தந்தி அலுவலகத்தில் உள்ளவர்கள் அதைப் படித்தார்கள் என்று நிரூபிக்கத் தேவையில்லை. அவதூறுக் குறிப்பை எதிர்வாதி அஞ்சலட்டையில் அனுப்பினால், அதை யாராவது ஒருவர் படிக்கக்கூடிய வாய்ப்புகள் அதிகம். ஆனால் அஞ்சலட்டையில் உள்ள அவதூறு அதைக் காண்பவர் அறிந்திரா மொழியில் இருப்பின், அவதூறு வெளியிடப்பட்டதாகச் சொல்ல முடியாது. எதிர்வாதி தான் வாதிக்கு அனுப்பும் கடிதத்தை மூன்றாவது நபர் ஒருவர் படிப்பார் என்று அறிந்திருக்கலாம்; அல்லது அறிந்திருக்க வேண்டும் என்று சட்டத்தால் கருதப்படலாம். அப்போது அவ தூறு வெளியிடப்பட்டதாகவே கருத வேண்டும். எடுத்துக் காட்டாக, வாதிக்குத் தெரியாத மொழியில் எதிர்வாதி ஒரு கடிதம் எழுதும்போது வேறு நபர்கள் அந்தக் கடிதத்தைப் படிக்க வேண்டிய தேவையேற்படும் என எதிர்பார்க்க வேண்டும். மஹேந்தர் ராம் v. ஹரிநந்தன் பிரசாத் (Mahandar Ram v. Harinandan Prasad) வழக்கில் வாதியைப் பற்றி அவதூறு அடங்கிய அறிவிக்கையை எதிர்வாதி வாதியின் வீட்டு முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பினான்; அந்த அறிக்கை உருது மொழியில் எழுதப்பட்டிருந்தது. வாதிக்கு உருது எழுத்துகள் தெரியாது; எனவே வாதி அதை ஒருவரிடம், வேறு சிலர் முன்னிலையில், படித்துச் சொல்லக் கொடுத்தான். வாதி தனக்கு உருது எழுத்து தெரியாதென்று எதிர்வாதி தெரிந்தே அந்த அறிவிக்கை அல்லது நோட்டீசை அனுப்பினான் என்றும், அதனால் பிறரை அந்த நோட்டீசைப் படித்துச் சொல்லுமாறு கேட்க வேண்டிய தேவை தனக்கு ஏற்படும் என்றும் வாதி தனது வாதுரையில் சொல்ல வில்லை. எதிர்வாதி அவதூறுக் குறிப்பை வெளியிட்டதற்குப் பொறுப்பாளியல்ல என்று தீர்ப்பளிக்கப்பட்டது. அவதூறுச் சொற்கள் கொண்ட கடிதத்தை எதிர்வாதி எழுதுபோது அம்மொழி வாதிக்குத் தெரியாது என்பதை அறிந்திருந்தான் என்பதை நிரூபிக்க வேண்டும் ஆறுமுக முதலியார் v. அண்ணா மலை முதலியார் வழக்கில் இருவர் ஒன்றாகச் சேர்ந்து அவதூறு

அடங்கிய ஒரு கடிதத்தை வாதிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பி யிருந்தனர். இங்கு கூட்டாகத் தீங்கிழைப்பவர் தமக்கிடையே அவதூறை வெளியிட முடியாது என்று நீதிமன்றம் கருதியது. வாதியின் பெயருக்கு வந்த பதிவுத் தபால் மூன்றாவது நபர் ஒருவர் கைக்குப் போய்ச் சேரும் என்பதும், அதை அவர் மற்றவர்கள் முன்பாகப் படிப்பார் என்பதும் முன்னறியத் தக்கவையல்ல.

சில சமயங்களில் எதிர்வாதியின் உடைமையில் உள்ள ஒரு கட்டிடத்தில் அவதூறான சொற்கள் எழுதப்பட்டிருக்கலாம். அவற்றை எதிர்வாதி வேண்டுமென்றே அழித்தகற்றாமல் இருந்தால் அவதூறினைத் தொடர்ந்து வைத்திருப்பதற்காக அவன் பொறுப் பாளியாவான். அவற்றை அழிப்பதோ, அகற்றுவதோ எளிதாக இருந்தும், எதிர்வாதி பேசாதிருந்துவிட்டால், அவன் அவதூறினை வெளியிட்டதாகவே கருதப்படுவான். ஆனால் யாரோ ஒருவர் எதிர்வாதியின் கட்டிடத்தில் அவதூறான சொற்களை ஆழமாக உளி கொண்டு செதுக்கியிருக்கலாம். அதை அகற்றுவது எதிர் வாதிக்குக் கடினமாகவோ, இயலாததாகவோ இருப்பின், எதிர் வாதி அவதூறுக்குப் பொறுப்பாளியாக மாட்டான்.

கணவனும் மனைவியும்

அவதூறான சொற்களைக் கணவன் மனைவிக்கோ, அல்லது மனைவி கணவனுக்கோ சொல்லியிருப்பின் அது வெளியிட்ட தாகாது. சட்டம் இவ்வாறு இல்லையெனில் அதனால் சமுதாய வாழ்வு சீர்குலையும். ஆனால் கணவனைப் பற்றி அவதூறான தகவலை மனைவியிடமோ, மனைவியைப் பற்றிய அவதூறான தகவலைக் கணவனிடமோ மூன்றாவது நபர் ஒருவர் கூறினால் அவதூறு வெளியிடப்பட்டதாகவே கருதப்படும். தீக்கர் *v.* ரிட் சர்ட்சன் (Theaker *v.* Richerdson) வழக்கில், வாதிக்கு எழுதியக் கடிதத்தில் எதிர்வாதி அவனை விபசாரி என்றும், அவள் ஒரு விபச்சார விடுதி நடத்தியவள் என்றும் குற்றஞ் சாட்டியிருந்தான். இக் கடிதம் அவளது கணவனால் படிக்கப்படக்கூடிய வகையில் அனுப்பப்பட்டிருந்தது. இச் சூழ்நிலையில் அவளது கணவன் அக் கடிதத்தைப் பிரித்துப் படித்து விட்டார். எதிர்வாதி பொறுப் பாளியாவான் என்று தீர்ப்பளிக்கப்பட்டது. இந்தியச் சான்றியல் சட்டத்தில் 122-வது பிரிவில் (Indian Evidence Act), ஒருவன் தனது மனைவி தன்னிடம் கூறியவற்றை அவள் இசைவின்றி வெளியிட அனுமதியில்லை; அதைப் போலவே அவளும் தன் கணவன் தன்னிடம் கூறியவற்றை அவனது அனுமதியின்றி வெளியிட முடியாது. பொன்னன் *v.* வர்க்கீஸ் வழக்கில் (Ponnan

v. Varghese)வழக்கில், கணவன் தன் மனைவிக்குச் சில கடிதங்கள் எழுதினர்; அவற்றை அவள் தனது தந்தையிடம் கொடுத்தாள், அக் கடிதங்களில் அவன் தனது மாமனாரைப் பற்றி அவதூருகச் சில சொற்களை எழுதியிருந்தான். மாமனார் தனது மருமகன், மேல் வழக்கிட்டார். இவ்வழக்கை விசாரித்த கேரள நீதிமன்றம் மனைவிக்குக் கணவனால் எழுதப்பட்ட கடிதங்களை அவளோ அல்லது அவளது உறவினர்களோ அவனுக்கு எதிராக நீதிமன்றத்தில் பயன்படுத்த முடியாதெனத் தீர்ப்பளித்தது. சட்டப்படி கணவன் மனைவிக்கு எழுதிய கடிதங்களை வெளியிட இயலாது, சட்டத்தால் நிரூபிக்க முடியாத ஒன்றை இல்லாததாகவே சட்டம் கருதும். இங்கு அவதூறு வெளியிடப்பட்டதாகக் கருத முடியாதாகையால், மருமகன் பொறுப்பாளியாக மாட்டான்.

அவதூறினை வெளியிட்டதற்குப் பொறுப்பாளிகளாகக் கூடியவர்கள்

வாதியைப் பற்றி அவதூருகக் கருதப்படும் சொற்கள் ஒரு நூலில் மட்டுமல்லாமல், செய்தித்தாளிலும், பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்டிருக்கலாம். அவற்றில் சொல்லப்பட்ட அவதூறு ஒன்றாகவே இருந்தாலும் அவற்றில் வரும் அவதூறினை வரிசையாக வெளியிடப்பட்டதாகவே கருதப்படும். அவை ஒவ்வொன்றும் தனியான தீங்காகவே கருத வேண்டும். அவதூறினை எழுதிய ஆசிரியர், முதலில் அதை நூல் வெளியிடுபவருக்கு வெளியிடுகிறார். இதற்கு ஆசிரியர் பொறுப்பாகிறார்; இரண்டாவதாக ஆசிரியரும் நூல் வெளியிடுபவரும் ஒன்றுசேர்ந்து அந்த நூலை அச்சிடுபவருக்கு அவதூறை வெளியிடுகிறார்; இதற்கு அந்நூல் ஆசிரியரும், வெளியிடுபவரும் கூட்டாகப் பொறுப்பாளியாகின்றனர்; மூன்றுவதாக, அச்சிட்ட நூலை விற்பனையாளருக்கும் பொதுமக்களுக்கும் வெளியிடப்படுகின்றது. இதற்கு ஆசிரியர், வெளியிடுகின்றவர், அச்சிடுபவர் ஆகிய மூவரும் கூட்டாகப் பொறுப்பாளியாகின்றனர். மேலே கூறிய வகையில் அவதூறு மூன்று முறை வெளியிடப்பட்டுள்ளது; இதில் எதற்காக வேண்டுமென்றாலும், வாதி வழக்கிடலாம். அவதூருன குறிப்பு அல்லது தகவலை ஒருவர் வெளியிட அனுமதி வழங்கியவரும் அவதூறுக்கு பொறுப்பாளியாவார். ஒருவர் தனது சொற்பொழிவு செய்தித்தாளில் வெளியிடப்படுகிறது என்றறிந்ததும், அதை வெளியிட வெளிப்படையாகவோ உட்படையாகவோ இசைவு தந்தால், அவர் நிலை வடிவ அவதூறுக்கும் பொறுப்பாளியாவார். வாதியைப்பற்றி அவதூறு எழுதப்பட்ட கடிதத்தைத் தவறுதலாக வேறு ஒருவருக்கு வெளியிட்டு விட்டதாகக் கூறுவதை நீதிமன்றம் ஏற்காது.

வாதியிடம் அவர்மேல் குற்றஞ் சுமத்தி எதிர்வாதி உரையாடிக் கொண்டிருக்கலாம்; மூன்றுவது நபர் ஒருவர் காதில் விழும்படியாக அவர் கவனமின்றிப் பேசிக் கொண்டு இருக்கலாம். இதனால் அவருக்கு அவதூறுக்கான பொறுப்பேற்படும்.

அவதூருன தகவலே கேட்டவர் அதை மற்றவருக்கு மீண்டும் எடுத்துச் சொன்னால், முதலில் அவதூறு சொன்னவரைப்போலவே இவரும் பொறுப்பாளியாவார். எனவே எதிர்வாதி தான் அவதூறிலை முதலில் சொல்லவில்லையென்றும், தம் காதால் கேட்டதையே வெளியிட்டதாகவும், சொன்னதாகவும் கூறினால் அதை நீதிமன்றம் ஏற்காது. 'கதை கட்டி விடுபவர்களைப்போலவே, 'கதையைப் பரப்புபவர்களும்' மோசமானவர்களே. எனவே அவ்வாறு கதையைப் பரப்புவர்களும் பொறுப்பாளியாவார்கள். ஒவ்வொரு முறையும் அவதூறு சொல்லப்படும்போது, அது வெளியிடப்படுவதாகவே கருதப்படுவதால், புதிய வழக்குமூலத்தை உருவாக்கும் என்று முன்பே கண்டோம். ஒரு நூலின் ஆசிரியர், வெளியிடுபவர், அச்சிடுபவர் ஆகியவர்களைத் தவிர அவதூறிலை வெளியிடுவதில், செய்தித்தாள் விற்பனையாளர், நூல்விற்பனையாளர், நூல் நிலையத்தினர் ஆகியோருக்கும் பங்குண்டு என்றாலும், பொதுவாகத் தாங்கள் விற்கும் செய்தித்தாளிலோ, நூலிலோ அவதூறு உள்ளதென அறியார். எனவே இவர்களைப் பொறுத்தவரை சட்டம் கடுமையானதாக இல்லை. இவர்களுக்கு அப்பிரசுரத்தில் அவதூறு இருப்பது தெரிந்திராவிட்டாலோ அல்லது அவர்கள் படிக்கக் கொடுத்த, அல்லது விற்ற நூல்களில் அவதூறிருப்பதை உரிய கவனமும் அக்கறையும் காட்டியிருந்தாலும் கண்டுபிடித்திருக்க முடியாவிட்டாலோ பொறுப்பாளிகளல்லர். இவர்கள் (1) தாங்கள் விற்ற பிரசுரத்தில் அவதூறுச் சொற்கள் இருப்பதையறியாமல் அவற்றை விற்றதாகவும், (2) தாங்கள் விற்ற பிரசுரத்திலோ, அது வந்தடைந்த சூழ்நிலையிலோ, அல்லது தரப்பட்ட சூழ்நிலையிலோ, அதில் நிலைவடிவ அவதூறு இருப்பதாக தாங்கள் முடிவுக்கு வருமாறு எதுவும் அமைந்திருக்கவில்லை என்றும், (3)அந்தப் பிரசுரத்தைத் தாங்கள் பிறருக்குத் தந்தபோது அதில் நிலைவடிவ அவதூறு இருப்பதாகத் தாங்கள் அறியாமற் போனது தங்கள் கவனமின்மையால் அல்லவென்றும் நிரூபிக்க வேண்டும். இதில் இரண்டாவதாகவும், மூன்றுவதாகவும் சொல்லப்பட்டவற்றில் உள்ள வேறுபாடு எளிதாகப் புலப்படவில்லை. இதில் உள்ள குழப்பத்தைத் தவிர்க்க வேண்டுமானால் நாம் பின்பற்றவேண்டியது நீதிபதி போவன் அவர்கள் கூறும் முறையையே. (1) அந்தக் குறிப்பில் அவதூறுக் குறிப்பு இருப்பது எதிர்

வாதிக்குத் தெரியுமா? (2) எதிர்வாதி தனது தொழில் முறையாகச் செய்திருந்தால், அந்தப் பிரசுரத்தில் அவதூறு இருந்ததை அறிந்திருப்பானு? இக் கேள்விகளுக்கு 'ஆம்' என்று விடைகூற முடியுமாயின் எதிர்வாதி அவதூறினை வெளியிட்டதாகவே நாம் கருத வேண்டும். விசட்ல்லி v. முடீஸ் செலக்ட் லைப்ரரி (Vizetelly v. Mudies' Select Library) வழக்கில் நூல்நிலைய உரிமையாளர்கள் தங்கள் உறுப்பினர்களுக்குப் படிக்க வழங்கிய நூல்களில் அவதூறுச் சொற்கள் உள்ளனவா என்றறிய எந்த முயற்சிகளும் மேற்கொள்ளவில்லை. குறிப்பிட்ட நூல் ஒன்றில் அவதூறு அடங்கியிருப்பதாகவும், அந்நூலின் பிரதிகளை திருப்பி அனுப்பி விடுமாறும் அதன் வெளியீட்டாளர்கள் கடிதம் எழுதியிருந்தும், அதைகவனிக்காதிருந்து விட்டனர். எனவே நூல்நிலைய உரிமையாளர்கள் அவதூறுக்குப் பொறுப்பாளியாவார்கள் எனக் கருதப்பட்டார்கள்.

மார்ட்டின் v. டிரஸ்டீஸ் ஆஃப் பிரிட்டிஷ் மியூசியம் (Martin v. Trustees of British Museum) வழக்கில், தங்கள் நூல் நிலையத்தில் அவதூறுச் சொற்களடங்கியநூல்களை மக்கள் படிக்கஅனுமதித்ததற்கு நூல் நிலையத்தினர் பொறுப்பாளியாகமாட்டார்கள் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. இவ்வழக்கில் அவர்களுக்கு அவற்றில் அவதூறு இருந்தது தெரியாது: அவர்கள் கவனமின்றி நடந்து கொள்ளவில்லை. மேலே குறிப்பிட்ட நிபந்தனைகளை நிறைவேற்றியிருப்பின் பெய்த்தாள், நூல்கள் விற்பனை செய்பவர்கள் பொறுப்பாளியாகமாட்டார்கள். சட்டம் வேறுவிதமாக இருப்பின், அவதூறு அடங்கிய செய்த்தாள்களை ஏற்றிச் செல்லும் புகைவண்டிக் கம்பெனியும் பொறுப்பாளியாகக் கருத வேண்டியநிலை ஏற்படும். செய்த்தாள் தீயைப் போன்றதன்று; அதனால் ஊறு விளையக் கூடும் என்று எண்ண வேண்டிய அவசியமின்றி ஒருவன் அதை எடுத்துச் செல்லலாம். அவதூறுகக் கருதப்படும் ஒரு பிரசுரத்திற்கு இருவகை விளக்கம் தரக்கூடுமாயின், அவதூறுக அமையாத விளக்கத்தினையே எடுத்துக் கொள்ள வேண்டுமேயல்லாது, அவதூறுகப் பொருள்தரும் விளக்கத்தை ஏற்கக்கூடாது.

எதிர்வாதங்கள்

அவதூறு வழக்கில் எதிர்வாதி பின்வரும் எதிர்வாதங்களை பயன்படுத்தலாம் (1) உண்மை (Justification of Truth), (2) நேர்மையான விமர்சனம் அல்லது கருத்துரை (Fair Comment), (3) வரம்பில்லாச் சிறப்புரிமை (Absolute Previlege), (4) வரம்புக்குட்பட்ட சிறப்புரிமை (Qualified Privilege), (5) இசைவு (Consent), (6) மன்னிப்புக்கோரல் (Apology).

உண்மை (Justification or Truth)

எதிர்வாதி தான் சொல்லியது உண்மையென்று வாதிட்டு சான்றுடன் நிரூபித்தால், அவன் அவதூறுக்குப் பொறுப்பாளியாக மாட்டான். அவதூறு ஒருவனது புகழ் அல்லது மதிப்பிற்கு ஏற்படும் இழுக்கு அல்லது ஊறு என்று கண்டோம். ஒரு மனிதனைப் பற்றிய உண்மையான தகவல் தெரிந்தால் அவனைப்பற்றி மக்கள் தாழ்வாகக் கருதலாம். ஆனால் இதனால் அவனது புகழுக்குக்கேடு ஒன்றும் நேர்வதில்லை. அவன் உண்மையில் பெற்றிராத, அல்லது பெறத் தகுதியற்ற பண்புக்கு ஊறு நேர்ந்ததாகச் சொல்லி அவன் தீங்கீடு பெறுவதைச் சட்டம் அனுமதிக்காது. ஒருவனைப் பற்றிய உண்மையைக் கேட்க மக்கள் அவனைப் பற்றி மட்டமாக நினைத்தால் அவனது புகழ் அல்லது மதிப்பு உண்மையில் இருக்க வேண்டிய அளவுக்கு இறங்கியிருக்கிறது என்றுதான் கொள்ளவேண்டும். வாதியைப் பற்றிய உண்மையை எதிர்வாதி தீங்கெண்ணத்துடன் கூறியிருந்தாலும் இந்த எதிர் வாதத்தைப் பயன்படுத்தலாம்.

எதிர்வாதி தான் வெளியிட்டது உண்மையென்று நிலைநாட்ட வேண்டும். இங்கு இதை நிரூபிக்க வேண்டியது அவனது பொறுப்பேயாகும். எதிர்வாதியின் சொற்கள் பொய்யென்று வாதி நிரூபிக்க வேண்டியதில்லை. குற்றவியல் சட்டத்தின்கீழ் எதிர் வாதியின் சொற்கள் உண்மையானவை என்று மட்டும் கூறுவது எதிர்வாதமாகாது. இந்தியக் குற்றவியல் சட்டத்தில் 499-வது பிரிவின் கீழ் வரும் முதல் விதிவிலக்கில், எதிர்வாதி தனது சொற்கள் உண்மை என்று காட்டுவதோடு, அவை பொது நன்மைக்காக வெளியிடப்பட்டதென்றும் நிரூபிக்க வேண்டும். இங்கிலாந்தில் 1843-ல் இயற்றப்பட்ட நிலைவடிவ அவதூறு சட்டத்தின் (Libel Act, 1843) படி குற்றமாகும் நிலைவடிவ அவதூறுக்கு உண்மையை எதிர்வாதமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஆனால் அது பொதுநலனுக்கு உகந்ததாக அமைந்திருக்க வேண்டும். எதிர்வாதி தான் கூறும் குற்றச்சாட்டையே நிரூபிக்க வேண்டும். ஏற்கெனவே சொல்லப்பட்ட அவதூறுச் சொற்களை திருப்பிச் சொல்லும் எதிர்வாதி, அந்த அவதூறினை உண்மையிலே சொல்லப் பட்டதுதான் என்று மட்டும் நிரூபித்தால் போதாது; அந்த அவதூறும் உண்மையே என்று நிரூபிக்க வேண்டும். கந்தன் தனக்குப் பணம் கொடுத்தவர்களை ஏமாற்றி விட்டான் என்று ஆறுமுகம் சொன்னான் என்று நான் உங்களிடம் சொன்னால் எனக்கு இந்தத் தகவலை ஆறுமுகம் தந்தது உண்மையே என்று நிரூபித்தால் போதாது. கந்தன் தனக்குக் கடன்கொடுத்தவர்களை

ஏமாற்றினான் என்பதும் உண்மையென நிரூபிக்க வேண்டும்; இல்லையேல் வதந்தி பரவி அதற்கு ஆதாரம் இருக்கிறதென மக்கள் நம்பக்கூடும். எதிர்வாதியின் சொற்களில் மறைமுக அவதூறு இருப்பதாக வாதி கூறும்போது அது உண்மையென்று நிலைநாட்ட எதிர்வாதி விழைந்தால் மறைமுக அவதூறில் தோன்றும் பொருள் உண்மை என்றே நிலைநாட்ட வேண்டும்.

எதிர்வாதியின் சொற்களில் ஒரு சிறிதும் பிசகோ, தவறோ இல்லை என்று அவன் நிரூபிக்க வேண்டியதில்லை. அவனது சொற்கள் அடிப்படையில் பெரும்பாலும் உண்மையாக இருந்தால் போதும். எடுத்துக்காட்டாக எனது வீட்டில் படிப்பறையிலிருந்து 'அ' என்பவர் ஒரு வெள்ளிப்பாத்திரத்தை புதன்கிழமையன்று திருடி வியாழக்கிழமை மூர் அங்காடியில் விற்றுவிட்டார் என்று நான் கூறுவதாக வைத்துக் கொள்ளுங்கள். உண்மையிலேயே அந்தப் பாத்திரத்தை 'அ' திருடியிருந்தார். ஆனால் அவர் அப் பாத்திரத்தை எனது இல்லத்தின் படிப்பறையிலிருந்து திருடாமல், சமயலறையிலிருந்துதான் திருடியுள்ளார்; அதை அவர் விற்றது வெள்ளியன்றுதான்; வியாழனன்று அல்ல; விற்ற இடமும் மூர் அங்காடியல்ல; பாரிமுனைதான். இங்கு அவர் திருடியது உண்மை, எனவே எனது குற்றச்சாட்டின் சாரம் உண்மையாகும். திருட்டைப் பற்றிய மற்ற விவரங்களில்தான் பிழைகள் உள்ளன; அவை முக்கியமானவையல்ல; அவை தவறுக அமைந்துவிட்ட படியால் 'அ' நிரபராதியென்று ஆகிவிடுவதில்லை. எனவே அப் பிழைகள் எனது கூற்றின் இயல்பை மாற்றவில்லை. அலெக்சாண்டர் v. வடகிழக்கு இரயில்வே (Alexander v N E Railway) வழக்கில், அவதூறெனச் சொல்லப்பட்ட செய்தியில், வாதி பயணச்சீட்டு இல்லாமல் புகைவண்டியில் பயணம் செய்ததற்காக ஒரு பவுண்ட் அபராதம் விதிக்கப்பட்டதாகவும், அந்த அபராதத் தொகையைச் செலுத்தத்தவறினால் மூன்று வாரம் சிறை தண்டனை அளிக்கப்பட்டதாகவும் சொல்லப்பட்டிருந்தது. இவ்வழக்கில் அவருக்கு ஒரு பவுண்ட் அபராதமும் அதைக் கட்டத் தவறினால் 14 நாட்கள் சிறை தண்டனையும் விதிக்கப்பட்டதாக நிரூபிக்கப் பட்டது. இங்கு உண்மை பாதிக்கப்படவில்லை என்று கருதப்பட்டு எதிர்வாதியின் சொற்கள் அவதூறுனவையல்ல என்று கருதப் பட்டன.

இங்கிலாந்தில், 1952-ல் இயற்றப்பட்ட அவதூறு சட்டத்தின் படி வாதியைப் பற்றிய பல குற்றச்சாட்டுகளில் சிலவற்றை மட்டும் உண்மையென நிரூபித்து இருப்பின், அவன் நிரூபிக்காத குற்றச்சாட்டுகள் வாதியின் மதிப்பை பாதிக்கத் தக்கவையாக

அமையாவிட்டால், தான் கூறியது உண்மையென எதிர்வாதி கூறத் தடையில்லை. இவ்வாறு குறிப்பிடும் சட்டம் நமக்கு இல்லை யெனினும் நம் நாட்டிலும் இக் கருத்து ஏற்றுக் கொள்ளப்படலாம்.

நேர்மையான கருத்துரை (Fair Comment):

பொது மக்கள் நலனுக்கு எந்தக் காரியங்களைப் பற்றியோ பொதுமக்களின் திறனுய்வுக்காக அவர்கள் முன் வைக்கப்பட்டவை பற்றியோ நேர்மையான முறையில் கருத்துரை தெரிவித்திருந்தால் அது அவதூறாகாது. எனவே எதிர்வாதி தான் கூறியது, அல்லது எழுதியது நேர்மையான கருத்துரை என்று வாதிடலாம். இது பேச்சுரிமை என்னும் அடிப்படைக் கொள்கையின் பாற்பட்டது. இந்த உரிமைக்குப் பங்கம் நேராமால் நீதிமன்றம் பார்த்துக்கொள் கிறது. அரசாங்கப்பணி அல்லது பொதுப்பணிகளை ஆற்றுவோர் களைப் பற்றி நேர்மையான கருத்துரை வெளியிடல் அவதூறாகாது.

இந்த எதிர்வாதத்தைப் பயன்படுத்த விழையும் எதிர்வாதி பின்வருவனவற்றை நிரூபிக்கவேண்டும்.

(1) அவனது கூற்று, அவனது கருத்தாக அமைந்திருக்க வேண்டுமேயல்லாது, நிகழ்ச்சியைப்பற்றிய தகவலாக இருக்கக் கூடாது.

(2) அந்தக் கருத்துரை நேர்மையானதாக இருக்கவேண்டும்.

(3) அவனது கருத்துரை பொது நலனுக்குகந்ததாக இருக்க வேண்டும்.

கருத்துரை

சில குறிப்பிட்ட நிகழ்ச்சிகளை உரைத்து, அவற்றைப் பற்றித் தான் என்ன கருதுகிறான் என்று எதிர்வாதி கூறுவதே கருத்துரை ஆகும். அவனது கூற்று நேர்மையானதாயின், அது ஏற்றுக் கொள்ளக்கூடிய எதிர்வாதமாகும்; அவன் ஒரு நிகழ்ச்சியைப் பற்றித் தகவல் கொடுப்பதாக அமைந்திருப் பின், அது உண்மையான தென்றே அல்லது சிறப்புரிமை பெற்ற தன்றே நிரூபிக்கவேண்டும். எதிர்வாதி சொல்வது கருத்துரையா அல்லது நிகழ்ச்சியுரையா என்பதை அவன் அதைப்பற்றிச் சொல்லப் பயன்படுத்தும் மொழியிலிருந்தும், அதைச் சொல்லும் சூழ்நிலை, இடம் ஆகியவற்றிலிருந்தும் அறிந்து கொள்ளலாம். எடுத்துக்காட்டாக 'அ' என்பவன், 'ஆ' என்பவன் வெளியிட்ட நூலைப்பற்றி 'ஆ' என்பவன் எழுதிய நூல் ஆபாசமானது, 'ஆ' மனத்தூய்மையற்றவனாக இருக்கவேண்டும் என்று சொன்னால், அது 'ஆ' என்பவனைப்பற்றி நூலின் அடிப்படையில் கொள்ளப் படும் கருத்தாகும் (இந்தியக் குற்றவியல் சட்டத்தின் 499ஆம் பிரி

வில் 6-வது விதிவிலக்கில் தரப்பட்டுள்ள நான்காவது எடுத்துக் காட்டு) இதை நல்லெண்ணத்தோடு கூறுயிருந்தால் 'அ' என் பவனுக்குச்சட்டப் பாதுகாப்புண்டு; ஏனெனில் இது அவனது கருத் துரையேயாகும்; ஆனால், 'அ' என்பவன் "ஆ' எழுதிய நூல் ஆபாசமானதாக இருப்பதைக் கண்டு நான் ஆச்சரியப்படவில்லை; ஏனெனில் அவன் ஒழுக்கங் கெட்டவன்" என்றுசொல்லியிருப்பின் அது எழுதிய நூலைப்பற்றிய கருத்துரையாகாது; அதற்குச் சம்பந் தம் எதுவுமில்லாத வகையில் சொல்லப்பட்ட ஒரு கூற்று ஆகும். எனவே இங்கு நேர்மையான கருத்துரை என்ற எதிர்வாதம் ஏற்றுக்கொள்ளப்படாது. 'அ' என்பவன் மனித இயல்புக்கே ஓர் அவமானம்—சாபக்கேடு என்று சொல்வது கருத்துரையன்று; ஆனால், ' 'ஆ' என்பவன் அவனது தந்தையைச் சுட்டுக் கொன்று விட்டான்; எனவே 'ஆ' என்பவன் மனிதப் பண்புக்கே ஓர் இழுக்காவான் " என்று கூறுவது முந்திக் கூறப்பட்ட நிகழ்ச்சியின் அடிப்படையில் சொல்லப்பட்ட ஒரு கருத்துரையாக இருப்பது தெளிவாகும். 'அ' என்பவன் நம்பிக்கை மோசடி செய்ததற்காகத் தண்டிக்கப்பட்டான்; எனவே அவன் நேர்மையற்றவன் என்று சொல்லும்போது, பின்னர் சொல்லப்பட்ட சொற்கள் முந்திச் சொல்லப்பட்டவை பற்றிய கருத்தாக அமைந்திருக்கின்றன. ஆயினும் முந்திச் சொல்லப்பட்டவை படிப்பவர்க்குத் தெரியாம லிருக்கும்போது, " 'அ' என்பவன் நேர்மையற்றவன் " என்று எழுதுவது கருத்துரையாகாது; அது ஒரு தகவல் அல்லது செய்தியை உரைப்பதாகவே கொள்ளவேண்டும். எனவே, இது நேர்மையான கருத்துரையென்று எதிர்வாதி வாதிடமுடியாது. எனவே விமர்சனம் எழுதுபவர் தாம் கருத்துரை கூற எடுத்துக் கொண்ட பொருளையும், கருத்துரையையும் பிரித்துக் காட்ட வேண் டும். நிகழ்ச்சி உரையை முதலில் சொல்லி, அதன் அடிப்படையில் தாம் கருதுவது என்ன என்பதைப் பின்னர் தனியாகச் சொல்ல வேண்டும். அப்போது தான் படிப்பவர் மனத்தில் குழப்பமின்றிக் கருத்துரையை உணர முடியும். எனவேதான் எதைப்பற்றிக் கருத்தினைச் சொல்லக் கருதுகின்றானே அதை எதிர்வாதி சொல்லவோ அல்லது குறிப்பிடவோ வேண்டும்; அவற்றின் அடிப்படையில் அவன் என்ன கருதுகிறான் என்பது கருத்துரை யாக அமைந்திருக்க வேண்டும்.

இரண்டாவதாக, எதிர்வாதியின் கருத்துரை நேர்மையான தாக இருக்கவேண்டும். எதிர்வாதி கருத்துரையில் சொல்லுகிற நிகழ்ச்சிகள் உண்மையில் நடைபெற்றவைகளாக இருக்க வேண்டும். ஒரு மனிதனைப் பற்றி ஒரு நிகழ்ச்சியைக் கற்பனை செய்து அதனடிப்படையில் கருத்தினைச் சொல்வது நேர்மையான

கருத்துரையாகாது. மெர்ரிவேல் v. கார்சன் (Merivale v. Carson) வழக்கில், ஒரு நாடகக்கதைப் பற்றி விமரிசனம் செய்யும்போது, எதிர்வாதி அதில் பிறன்மனை புணர்தல் (adultery) காட்சி வருவதாகப் பொய்யாக எழுதினர். இவ்வாறு அவர் எழுதியது நேர்மையான கருத்துரையாகாது என்று தீர்ப்பளிக்கப்பட்டது. ஆயினும் இதற்கு ஒரு விதி விலக்குண்டு. சிறப்புரிமை பெற்ற வேளையில் ஒருவன் சொல்லிய உண்மையல்லாத நிகழ்ச்சியைப் பற்றி கருத்துரை வழங்கியிருப்பினும், அதற்கு வழக்கிட முடியாது. சில சமயங்களில் சிறப்புரிமையற்ற வேளையில், ஒருவன் சொல்லிய பொய்த் தகவலின் அடிப்படையில் கருத்துரிமை வழங்கப்பட்டிருக்கலாம். அப்போது அத் தகவலை உண்மையென்று நிரூபிப்பது இயலாததாக இருக்கலாம். எடுத்துக்காட்டாக, 'அ' என்பவர் செவ்வாய்க் கிரகத்தில் மனிதர் இருக்கின்றார் என்று சொல்வதாக வைத்துக் கொள்வோம். இக் கூற்று ஆதாரமற்றது என்று 'ஆ' கூறுகின்றார் என்று சொன்னால், இது நேர்மையான கருத்தாக இருக்கலாம். இது 'அ' என்பவர் உண்மையாகவே சொல்லியிருக்கும் ஒரு தகவலைப் பற்றி 'ஆ' என்பவரின் கருத்தாகும். எனவே 'ஆ' தன் கருத்துரையில் கூறியபடி செவ்வாய் கிரகத்தில் மனிதர் இருக்கிறார் என்று நிரூபிக்கத் தேவையில்லை. அவன் கருத்தே அங்கு மனிதர்களே இல்லை என்பது தானே !

பெரும்பாலும் உண்மையாகவே அமைந்துள்ள நிகழ்ச்சிகளை உண்மையாகச் சொல்லி அவற்றைப் பற்றி எதிர்வாதி தனது கருத்துரையைச் சொல்லியிருப்பின், சில நிகழ்ச்சிகள் பொய்யான வையாக அமைந்திருந்தாலும், நேர்மையான கருத்துரை என்ற எதிர்வாதம் ஏற்றுக் கொள்ளப்படும். அவன் அவதூறென்று சொல்லப்படும் தகவலில் அடிப்படியாக அமைந்த நிகழ்ச்சிகளில் சிலவற்றைச் சொல்லாமல் விட்டிருந்தாலும், அவன் போதுமான அளவுக்கு நிகழ்ச்சிகளைக் குறிப்பிட்டு அவற்றின் அடிப்படையில் கருத்துரை எழுதுமாறு தெளிவுபடுத்தியிருந்தால் போதுமானது. கெம்ஸ்லி v. பூட் (Kemsley v. Foot) வழக்கில், 'கெம்ஸ்லியை விட மட்டமானது' என்று தலைப்புக் கொடுத்துச் செய்தித்தாளில் கட்டுரையொன்றை எதிர்வாதி வெளியிட்டிருந்தார். வாதிக்குச் சொந்தமல்லாத செய்தித்தாள் ஒன்று நடத்தப்படும் முறையை அக் கட்டுரை சாடியிருந்தது. அதில் தலைப்பில் உள்ளதைத் தவிர, வேறு எங்கும் எதிர்வாதியைப் பற்றிக் குறிப்பிடப்படவேயில்லை; கெம்ஸ்லி அச்சக வெளியீட்டாளரின் நடவடிக்கையையே பின்னணியாகக் கொண்டு இக் கருத்துரை வெளியிடப்பட்டது என்பது இச் சூழ்நிலையில் தெளிவாகத் தோன்றுகிறபடியால் அது நேர்மையான கருத்துரையெனக் கொள்ளலாம் என்று தீர்ப்பளிக்கப் பட்டது.

எதிர்வாதியின் கருத்துரை நேர்மையான்தா அல்லவா என்பது அவர் நேர்மையாகவே அந்தக் கருத்தினைக் கொண்டிருந்தாரா அல்லவா என்பதைப் பொறுத்ததாகும். நீதிமன்றம் அக்கருத்துரையை நேர்மையானதென்று கருதுகிறதா என்பதல்ல நாம் கவனிக்கவேண்டியது; அக் கருத்துரையாளரின் எண்ணத்தைத் தான், நாம் இங்குக் கருதிப் பார்க்கிறோம். கருத்துரை நேர்மையானதா அல்லவா என்பதை நீதிமன்றம் முடிவு செய்ய விட்டு விட்டால் பேச்சு - சுதந்திரம் இல்லாமல் போகும். ஆட்கர் v. மார்ட்டிமர் (Odger v. Mortimer) வழக்கில் வாதி நாடாளு மன்றத்தில் இருந்த மசோதாவை எதிர்த்து மக்கள் போராட்டம் ஒன்றை நடத்தினர். இதைக் கண்டித்து அவரை ஏமாற்றுக்காரர், மக்களது உணர்ச்சிகளைத் தூண்டிவிடும் மட்டரகப் பேச்சாளர் என்று எதிர்வாதியின் செய்தித்தாள் மிக மோசமாகத் தாக்கியிருந்தது. இது நேர்மையான விமரிசனமாகவே கருதப்பட்டது.

ஆயினும், எதிர்வாதி தீங்கெண்ணத்துடன் கருத்துரையை வழங்கும்போது, திரித்துரைத்திருந்தால், அது நேர்மையற்றதாகவே கருதப்படும்: இங்குத் தீங்கெண்ணம் என்பது எதிர்வாதியின் கெட்ட உள்நோக்கத்தைக் குறிப்பிடும். கிரிகரி v. ட்யூக் ஆஃப் பிரன்ஸ்விக்(Gregory v. Duke of Brunswick) வழக்கில் நடிகரான வாதி நாடக அரங்கின் மேடையில் தோன்றியதும், தீங்கெண்ணம் கொண்ட எதிர்வாதியும் மற்றவர்களுக்கும் பல்வகையான இரைச்சல் ஒலிகளை எழுப்பி அவரை நடிக்க விடாமல் செய்தனர். இதனால் அவர் தம் வாய்ப்பினை இழந்தார். எதிர்வாதியும் பிறரும் சதிசெய்து இந்த இடையூறுகளைச் செய்ததால் அவர்கள் செயல் வாதியின் நடிப்பைப் பற்றி நேர்மையான கருத்துரை வழங்குவது ஆகாது என்று தீர்ப்பளிக்கப்பட்டது. எதிர்வாதி பொறுப்பாளியாவார் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. ஒரு மனிதனை நமக்குப் பிடிக்காவிட்டாலும் அவனது இலக்கியப் படிப்பினைப்பற்றி நேர்மையாகத் தீர்ப்பு வழங்க முடியும். ஆனால் இதை நடைமுறையில் பின்பற்றுவது எளிதல்ல. தீங்கெண்ணம் இருப்பின் கருத்துரை நேர்மையற்றதாகலாம். தாமஸ் v. பராட்பரி, அக்னியூ & கம்பெனி லிமிடெட் (Thomas v. Bradbury, Agnew & Co Ltd.) வழக்கில், புகழ்வாய்ந்த 'பஞ்ச்' (Punch) பத்திரிகையில் நூலைத் திறனாய்வு செய்தவர் தமது திறனாய்விலும் சாட்சிக் கூண்டில் சான்று கூறும் போது நடந்து கொண்டமுறையிலும் வாதியின் பேரில் தனிப்பட்ட காழ்ப்பு உணர்ச்சி கொண்டிருந்ததாகக் காட்டிக்கொண்டார். 'பஞ்ச்' பத்திரிகை உரிமையாளர்மேல் வழக்கிடப்பட்டது. இதில் வாதிக்கு 300 பவுண்டு தீங்கீடாக அளிக்கப்பட்டது.

லயான் v. டெய்லி டெலிகிராப் லிமிடெட் (Lyon v. Daily Telegraph Ltd.) வழக்கில், வாதி நடத்திய பொது கேளிக்கை நிகழ்ச்சியைத் தாக்கி எதிர்வாதிகள் தங்கள் செய்தித்தாளில் ஒரு கடிதத்தை வெளியிட்டிருந்தனர். அக்கடிதத்தின் அடியில் A. வின்ஸ்லோ என்று கையொப்பமிட்டிருந்தது. அதில் முகவரி 'தி விகாரேஜ், வாலிங்டன்சாலை, வின்சென்டர்' என்று தரப்பட்டிருந்தது. உண்மையில் அப்படிப்பட்ட இடமோ, வின்ஸ்லோ என்ற பெயர் கொண்டவரோ இல்லையென்பது மாதாகோயில் பதிவேட்டிலிருந்து தெரியவந்தது. ஆயினும் அக்கடிதத்தில் எழுதப்பட்டிருந்த திறனுய்வு நேர்மையானதாக இருந்தது. கற்பனைப் பெயரிலோ, முகவரியிலோ எழுதப்பட்டிருந்ததால் அது நேர்மையற்றதென்று கருதும் வகையில் தீங்கெண்ணமாகாது. எதிர்வாதி நேர்மையான முறையில் தமது உண்மைக் கருத்தைச் சொல்ல வேண்டும். இவ்வாறு அவர் செய்வாராயின் அவர் பயப்படுவதற்கு ஏதுமில்லை. ஆயினும் கருத்துரை அல்லது விமர்சனம் என்ற போர்வையின்கீழ் மட்டரகமாகத் திட்டுவதையோ, சொல்ல வந்த நிகழ்ச்சிகளோடு தொடர்பற்ற முறையில் ஆளைத்தாக்கும் மொழிகளையோ ஏற்றுக்கொள்ள முடியாது. ஆனால் எதிர்வாதி கடுமையான முறையில் தாக்கியிருப்பதாலேயே அது நேர்மையான கருத்துரையல்ல என்று சொல்லமுடியாது. எதிர்வாதி தனது கருத்துரையை முறையின்றித் தீங்கெண்ணத்துடன் சொல்லியிருப்பின் அது நேர்மையற்றதாகவே கருதப்படும். ஒரு மனிதனுடைய ஒழுக்கத்தைப்பற்றிக் கருத்துரை வழங்குதல் அனுமதிக்கப்படுவதில்லை. ஒருவன் மற்றொருவனைப் பொய்யன் என்றோ, நேர்மையற்றவன் என்றோ, கீழ்த்தரமான, மட்டரக நோக்கங்கள் கொண்டவன் என்றோ, லஞ்சப் பேய் என்றோ, ஒழுக்கங்கெட்டவர் என்றோ குற்றஞ்சாட்டினால், அது உண்மையென்று நிரூபிக்கத் தயாராக இருக்கவேண்டும்; அல்லது தான் சொல்லியுள்ள செய்திகளினடிப்படையில் அவ்வாறு நியாயமாகக் கருத இடமுண்டு என்று காட்ட வேண்டும். ஒரு நூல் எழுதியவரை தப்புந்தவறுமாக எழுதியிருக்கிறார் என்று சொல்லலாம்; அவர் தீயபழக்கங்கள் உடையர் என்று குற்றஞ் சாட்டமுடியாது; அவர் தகுதியற்றவர் என்று சொல்லலாம்; ஆனால் லஞ்சம் வாங்கியவர் என்று சொல்ல முடியாது. கேம்பெல் v. ஸ்பாட்டிஸ்வுட்(Campbell v. Spottis Wood)வழக்கில் கேம்பெல் என்ற மதப்போதகர் 'பிரிட்டிஷ் என்சைன்' (British Ensign) என்ற தமது செய்தித்தாளில் சீனர்களைக் கிருத்துவர்களாக மதம் மாற்றம் செய்வது பற்றிய கடிதங்களைத் தொடர்ந்து வெளியிடவும், அந்தச் செய்தித்தாளின் விற்பனையை அதிகமாக்கவும் திட்டம் ஒன்று சொல்லியிருந்தார். சீனாவில் கிருத்துவ மதத்தைப்

பரப்ப முன்வந்துள்ளதாகச் சொல்லும் டாக்டர் கேம்பெல்லின் உண்மையான உள்நோக்கம் தமது ஆதரவற்ற செய்தித்தாள் விற்பனையை அதிகமாக்கிப் பொருள் ஈட்டுவதேயாகும் என்று எதிர்வாதி வேறு ஒரு செய்தித்தாளில் குற்றஞ் சாட்டியிருந்தார். இதை எதிர்வாதி உண்மையாக நம்பிச் சொல்லியிருந்தாலும், அவரது நம்பிக்கைக்கு எந்தவித அடிப்படையுமில்லாததால், அவரது எதிர்வாதம் ஏற்கப்படவில்லை. விமர்சனத்தின் உண்மையான நோக்கம் ஆளைத் தாக்குவதாக இருக்கக்கூடாது; அவரது செயலை, நூலைத் தாக்குவதாக இருக்கவேண்டும்.

எதிர்வாதி பொதுமக்கள் ஆர்வம் காட்டும் பொது நலனுடன் சம்பந்தப்பட்ட எதைப்பற்றியும், தனது கருத்தினை அஞ்சாது வெளியிடலாம். இவ்வாறு கருத்துரை வழங்க அனைவருக்கும் முழுச் சுதந்திரமுண்டு. நீதி, நிர்வாகம், நாடாளுமன்ற நடவடிக்கைகள், அரசு நடவடிக்கைகள், அரசு அலுவலர் அலுவல்கள், ஊராட்சி, நகராட்சி மன்றங்கள், வாரியங்கள் போன்றவற்றின் நிர்வாகம் ஆகியனபற்றி அச்சமின்றித் தமது நேர்மையான கருத்தினைச் சொல்லலாம். இவை பொது நலனுடன் சம்பந்தப்பட்டவை. இவற்றைத் தவிர, பொது நலன் பற்றியதல்லவாயினும், சம்பந்தப்பட்ட நபர்கள், மற்றவர்களால் திறனாய்வு அல்லது விமர்சனம் செய்யப்படுவதற்காக வைக்கும் பொருள்களும் உண்டு. இவற்றைப் பொறுத்தவரை தன்னையோ தன் செயல்களையோ பொது மக்கள் ஆய்ந்து தீர்ப்பளிக்குமாறு ஒருவன் தன்னிச்சையாக முன் வருகிறான். எடுத்துக்காட்டாக, நூல்கள், மற்ற இலக்கியப் படைப்புகள், கலை, ஓவியம், நாடக நிகழ்ச்சிகள் ஆகியவற்றைச் சொல்லலாம். ஆனால் இவற்றை எழுதுபவர்கள், நடிப்பவர்கள் ஆகியோரது சொந்த வாழ்க்கை, பொது நலனோடு சம்பந்தப்பட்டவையல்ல. இவர்களது சொந்த வாழ்க்கையைப்பற்றி அறிய மக்கள் ஆர்வம் காட்டுவதனால், அவை பொதுநலனோடு சம்பந்தப்பட்டவையாகாது.

இவ்வாறு நேர்மையான கருத்துரை என்று வாதிடும் எதிர்வாதி தான் கூறிய சொற்கள் (1) கருத்துரை என்றும், (2) நேர்மையான கருத்துரை என்றும், (3) பொது நலன் சம்பந்தப்பட்ட ஒன்றைப் பற்றிய கருத்துரையென்றும் நிரூபிக்கவேண்டும்.

சிறப்புரிமை (Privilege)

சில சமயங்களில் எதிர்வாதி மற்றவரது புகழுக்கு ஊறு நேரும் வண்ணம் அவதூறுச் சொற்களை வெளியிடலாம். இந்த வேளைகள் சிறப்புரிமை பெற்ற வேளைகள் என்று சொல்லலாம். இவ்

வேளைகளில் தனி மனிதனுடைய புகழைவிட, பேச்சுச் சுதந்திரம் பெரியதாகக் கருதப்படுகிறது. அவதூறுச் சொற்களை வெளியிடுதல் பொது நலனுக்குத் தக்கதாக இருக்கலாம்; அல்லது தனி மனிதர்களின் உரிமைகளையும் சட்டபூர்வமான நலன்களையும் காப்பாற்ற அவதூறை வெளியிட வேண்டியிருக்கலாம். அந்த வேளைகளில் தனிமனிதனது மதிப்பு அல்லது புகழைத் தாக்க வேண்டிய சூழ்நிலை அமைந்திருக்கும். அவதூறுச் சொற்கள் உண்மை என்று வாதிடும்போது, சிறப்புரிமையை ஒருவன் நாடவேண்டியதில்லை. ஏனெனில் உண்மையான தகவலை எப்போதும் வெளியிடலாம். இதற்குத் தடையேதுமில்லை. அவதூறு உள்ள சொற்கள் பொய்யாக இருக்கும்போதோ அல்லது உண்மையாகநிரூபிக்க முடியாத போதோதான் சிறப்புரிமை என்ற எதிர்வாதத்தின் துணையை நாடி அது சொல்லப்பட்ட சமயம் அல்லது வேளை சிறப்புரிமை பெற்றிருக்கிறபடியால், தவருக இருந்தாலும் பொறுப்பு இல்லை என்று கூறலாம். தான் சொன்னது உண்மையே என்று வாதிடும் எதிர்வாதி, சிறப்புரிமையிருப்பின் அதையும் ஓர் எதிர்வாதமாகச் சேர்த்து வாதிடுவது வழக்கம். இந்த வேளையில் சொல்லப்படும் அவதூறுச் சொற்களுக்குச் சட்டப்படி எவ்விதப் பொறுப்பும் இல்லாமல் இருக்கலாம். அப்போது நாம் எதிர்வாதிக்கு வரம்பில்லாச் சிறப்புரிமை (absolute privilege) இருப்பதாகச் சொல்கிறோம். இன்னும் சில வேளைகளில் தீங்கெண்ணத்துடன் அவற்றைச் சொல்லியிருந்தால்தான் பொறுப்பேற்புடும். அப்படிப்பட்ட வேளைகளை வரம்புக்குட்பட்ட சிறப்புரிமை (qualified privilege) என்கிறோம்.

வரம்பில்லாத சிறப்புரிமை (Absolute Privilege)

வரம்பில்லாச் சிறப்புரிமையமைந்துள்ள சமயத்தில் அவதூறு சொல்லப்பட்டிருந்தால், அது எவ்வளவுதான் பொய்யாகவும் அவதூருகவும் இருந்தாலும், தீங்கெண்ணத்தோடு அதாவது, கெட்ட உள்நோக்கோடு சொல்லப்பட்டிருந்தாலும், வழக்கிட முடியாது, இந்தச் சமயத்தில் தனி மனிதனது புகழைவிடப் பேச்சுரிமை முக்கியமாகக் கருதப்படுகிறது. சிறப்புரிமை இல்லாத வேளைகளில் சொல்லப்பட்ட அவதூருன சொற்கள் நேர்மையானதாக இருப்பினும் வழக்கிடத் தக்கவையாகும். ஆனல் இதற்கு நேர்மாருக, சிறப்புரிமை பெற்ற வேளையில் சொல்லப்படும் அவதூருன சொற்கள், நேர்மையற்ற முறையில் வெளியிடப்பட்டிருந்தாலும் வழக்கிடமுடியாது.

பின்வரும் நிலைகளில் வரம்பில்லாச் சிறப்புரிமை ஏற்கப்பட்டுள்ளது.

(1) நாடாளுமன்ற நடவடிக்கைகள்

நமது அரசியல்சட்டம் 105 (2) பிரிவில், நாடாளுமன்றத்தின் இரு அவைகளின் உறுப்பினர்கள் பேசும் பேச்சுகளோ, நாடாளுமன்றத்தின் அவைகளிலுலோ அல்லது அவற்றின் அதிகாரம்பெற்று வெளியிடப்படும் அறிக்கைகள், தாள், வாக்கு, நடவடிக்கை ஆகியவற்றிற்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கிட முடியாது. இது போலவே மாநிலச்சட்டமன்றங்களுக்குச் சிறப்புரிமையை அரசியல் சட்டப்பிரிவு 194 (2) நல்குகிறது. நாடாளுமன்ற, மாநிலச் சட்ட மன்ற உறுப்பினர்கள் சட்டமன்றம் நடைபெறும்போது நிகழ்த்தும் சொற்பொழிவுகள் அவர்களறிய உண்மையல்லவாயினும், வழக்கிடத் தக்கவையல்ல. ஆயினும் சட்டமன்றக் கட்டடத்தில் புகை பிடிக்கும் அறை 'லாபி' போன்ற பகுதிகளில் பேசப்படும் சொற்களுக்கு இந்தச் சிறப்புரிமை கிடையாது.

(2) நீதிமுறை நடவடிக்கைகள்

சட்டத்தின்படி நடைபெறும் நீதிமன்ற நடவடிக்கைகளின் போது நீதிபதிகள், வழக்கறிஞர்கள், வழக்குத் தரப்பினர், சாட்சிகள் ஆகியவர்கள் தீங்கெண்ணத்தோடோ அல்லது எந்தவித நியாயமோ, முகாந்திரமோ இல்லாமலோ ஒருவர்பற்றி அவதூறுச் சொற்களோ எழுதியோ, பேசியோ இருக்கலாம். அவதூறுக்கு ஆளானவர்கள் மேல் அவர்களுக்குத் தனிப்பட்ட முறையில் காழ்ப்புணர்ச்சி அல்லது சினம் இருந்திருக்கலாம். எனினும், இவ்வாறு அவதூறுச் சொற்களோ வெளியிட்டதற்காக எந்தப் பொறுப்பும் கிடையாது. நீதிமன்ற நடவடிக்கையின்போது வழக்குச் சம்பந்தமாக இவற்றை வெளியிடச் சிறப்புரிமையிருப்பதாகச் சட்டம் கருதுகிறது. ஆனால் வழக்கறிஞர் ஒரு சாட்சியைக் கேட்ட கேள்விக்கு எந்த சம்பந்தமுமில்லாமல் அவர், அவதூறான சொற்களைக் கூறினால், அதற்குச் சிறப்புரிமை கிடையாது. எடுத்துக்காட்டாக ஒருவழக்கறிஞர் சாட்சியை 'நீர் குறிப்பிட்ட நாளில் கோவையில் இருந்தீரா?' என்று கேட்கிறார். அதற்குச் சாட்சி ''ஆம் அங்குதான் என் பணத்தை 'அ' என்பவர் களவு செய்தார்'' என்று பதில் சொன்னால், அது கேள்வியோடு சம்பந்தப்படாதது: எனவே, அவதூறுக்காக அவர்மேல் 'அ' வழக்கிடலாம். நீதிமன்றங்களின் இயல்புகளைக் கொண்ட தீர்ப்பாயங்களுக்கும் (Tribunal) இந்த வரம்பில்லாச் சிறப்புரிமையுண்டு. இவ்வேளைகளில் சொல்லப்படும் சொற்களுக்குக் குற்றவியலிலோ, உரிமையியலிலோ பொறுப்புக் கிடையாது. நீதிமன்ற நடவடிக்கைகளின்போது பேச்சுரிமை இருப்பது தேவை, தவிர உயர்ந்த பண்புள்ளவர்களே நீதிபதிகளாக நியமிக்கப்படுவதால் அவர்கள் இந்தச் சிறப்புரிமையை முறை

யின்றிப் பயன்படுத்த மாட்டார்கள். தவிர, நீதிபதிகள் தங்கள் முன்உள்ள சாட்சிகள், தரப்பினர் முதலியோர் இந்தச் சிறப்புரிமையை முறையின்றிப் பயன்படுத்தாமல் பார்த்துக் கொள்வர். இந்தச் சிறப்புரிமை எல்லா நீதிமன்றங்களுக்கும் உண்டு. ஆனால் நீதிவழங்கும் அதிகாரம் எதுவும் இல்லாமல் வெறும் நிர்வாக அதிகாரம் மட்டும் பெற்றுள்ள அலுவலர்களுக்கு இந்தச் சிறப்புரிமை கிடையாது. இசை, நடன உரிமங்களுக்கான விண்ணப்பங்களைப் பற்றி விசாரிக்கும் ஊராட்சி மன்றத்தை நீதி மன்றமாகக் கருதமுடியாது. எனவே அந்த மன்றத்தின் உறுப்பினர் அவதூறாகக் கருதத்தக்க சொற்களைச் சொல்ல வரம்பில்லாச் சிறப்புரிமையில்லை. நீதிமன்றத்தில் சாட்சிப் பெட்டியில் ஏறி ஒருவர் சொல்லும் சான்றுரைக்கு மட்டுமல்லாமல், அவர்தரப்பினரிடமோ அல்லது தரப்பினர் வழக்கறிஞரிடமோ, விசாரணைக்குத் தயார் செய்யப்படும்போது, சொல்லும் தகவல்களும் வரம்பில்லாச் சிறப்புரிமை கொண்டவை. ஒருவர் தமது வழக்கை வழக்கறிஞரிடம் சொல்கிறார். அந்த வழக்கை ஏற்று நடத்த வழக்கறிஞர் மறுத்துவிட்டாலும், அவர் வழக்கறிஞரிடம் சொன்னவை வரம்பில்லாச் சிறப்புரிமை பெற்ற வேளையில் சொன்னதாகவே கருதப்படும். ஆனால் வழக்கோடு எந்தத் தொடர்பும் இல்லாமல் ஒருவர் வழக்குரைஞரிடம் சொல்லும் அவதூறுக்குப் பாதுகாப்பில்லை. எடுத்துக்காட்டாக, தன் நிலத்தைப் பதிவு செய்வது சம்பந்தமாக வழக்குரைஞரின் அறிவுரை பெறும் ஒருவர் பேச்சுவாக்கில் 'அ' என்பவர் 'ஆ' என்பவரின் மனைவியோடு ஓடிப் போய்விட்ட சங்கதி உங்களுக்குத் தெரியுமா?" என்று கூறினால், அது வழக்கிடத்தக்கதாகும். இதைப் போன்ற கூற்றுக்குச் சிறப்புரிமை இல்லை.

(3) ஓர் அரசு அலுவலகர் மற்றோர் அரசு அலுவலர்க்கு தன் கடமையை ஆற்றும் வகையில் வெளியிடும் அவதூறுச் சொற்களுக்கு வரம்பில்லாச் சிறப்புரிமையுண்டு. அரசு அலுவல், ராணுவம், கடற்படை ஆகியவை சம்பந்தமாக நடைபெறும் கடிதப் போக்குவரத்துக்கு இந்தச் சிறப்புரிமையுண்டு. அரசு அலுவல்கள் சம்பந்தமாக ஓர் அமைச்சர் மற்றோர் அமைச்சருக்கோ, தன்கீழ் பணிபுரிபவரிடமோ சொல்லும் சொற்கள் வரம்பில்லாச் சிறப்புரிமை பெற்றவையாகும்.

(4) இதைப்போலவே, கணவன் மனைவியிடமோ அல்லது மனைவி, கணவனிடமோ சொல்லும் சொற்கள் அவதூறுனவையாக இருப்பினும் வழக்கிட முடியாது. அவர்களிடையே நிலவும் நெருங்கிய, நம்பிக்கையான உறவின் தன்மையைக் கருத்தில்

கொண்டு அவற்றை வரம்பில்லாச் சிறப்புரிமை அமைந்த சூழ் நிலையில் வெளியிடப்பட்டவையாகச் சட்டம் கருதுகிறது.

வரம்புக்குட்பட்ட சிறப்புரிமை (Qualified Privilege)

சில வேளைகளில் எதிர்வாதி பிறரைப்பற்றி அவதூறு சொல்லச் சிறப்புரிமையுண்டு. ஆனால் அவர் வன்மம், காழ்ப்புணர்ச்சி யில் லாமல் அவற்றைச் சொல்லியிருந்தால்தான் இந்த உரிமையுண்டு. எனவே அவர் சிறப்புரிமையுள்ள வேளையில் வன்மத்தோடு அவற்றைச் சொல்லியிருந்தால் இந்த எதிர்வாதத்தைப் பயன் படுத்த முடியாது. இவ்வேளைகளில் எதிர்வாதி நேர்மையாகவும் முறையற்ற நோக்கமின்றியும் அவதூறினைச் சொல்லியிருக்க வேண்டும். சட்டமோ, ஒழுக்கநெறியோ விதித்துள்ள பொதுக் கடமைகளையும் தனிப்பட்ட கடமைகளையும் ஆற்றும்போது, சமுதாய நலனுக்காகவும், பொது வசதிகளுக்காகவும், அவதூறுச் சொற்களைச் சொல்ல வேண்டிய சூழ்நிலை தோன்றலாம். இந்த வேளைகளையே வரம்புக்குட்பட்ட சிறப்புரிமை அமைந்துள்ளன வாகக் கருதுகிறோம். குறிப்பிட்ட காரணம் ஒன்றினால் அந்த வேளை சிறப்புரிமை பெற்றதாகும். எனவே குறிப்பிட்ட அந்தக் காரணத் துக்காக மட்டும் அந்த வேளையைப் பயன்படுத்தினால்தான் எதிர் வாதிக்குப் பாதுகாப்புண்டு. எனவே எதிர்வாதி தனது சினம், காழ்ப்புணர்ச்சி ஆகியவற்றைக் காட்டிக் கொள்ள அந்த வேளை யைப் பயன்படுத்தினால் அவனுக்கு அவதூறு வெளியிடச் சிறப் புரிமை கிடையாது. வரம்புக்குட்பட்ட சிறப்புரிமையுள்ள வேளை களில், பேச்சுரிமை ஓரளவுக்குக் கட்டுப்படுத்தப்படுகிறது. எனவே வரம்புக்குட்பட்ட சிறப்புரிமை என்பது சிறப்புரிமையே முழுவதும் அற்றநிலைக்கும், வரம்பில்லாச்சிறப்புரிமையமைந்துள்ள நிலைக்கும் இடைப்பட்ட நிலையைக் குறிக்கும்.

பின்வரும் சமயங்களில் வரம்புக்குட்பட்ட சிறப்புரிமை இருப்ப தாகக் கருதுகிறோம்.

ஒருவர் தனது நலனைப் பேணுவதற்காகவோ அல்லது தமது கடமையைச் செய்வதற்காகவோ கூறுபவை :

ஒருவர் சட்டமோ அல்லது ஒழுக்கநெறியோ விதித்துள்ள கடமையைச் செய்யும்போது மற்றவருக்கு அத் தகவலைச் சொல்லி யிருக்கவேண்டும். அதற்கேற்ப, அத் தகவலைப் பெறுபவர்க்கு அதைப்பெற ஒரு நலனோ அல்லது கடமையோ இருக்கவேண்டும். இத்தகைய கடமையிருந்ததா என்பதை நீதிபதியே தீர்மானிக்க வேண்டும்.

இந்தியக் குற்றவியல் சட்டத்தில் 499-வது பிரிவில் ஒன்பதாவது விதிவிலக்கில் இதைப்போன்ற சிறப்புரிமை சொல்லப் பட்டிருக்கிறது.

ஒருவர் நல்லெண்ணத்துடன் தமது நலனையோ பிறரது நலனைப் பாதுகாக்கவோ அல்லது பொது நன்மையைக் கருத்தில் கொண்டோ ஒருவருடைய பண்பினைப் பற்றித் தாழ்வாகச் சொல்லியிருப்பின் அது அவதூறாகாது.

எடுத்துக்காட்டாக—

(a) 'அ' என்னும் ஒரு கடைக்காரர் தனது வாணிகத்தை நிர்வாகம் செய்யும் 'ஆ' என்பவரிடம், "'இ' என்பவர் ரொக்கம் கொடுத்தாலொழிய அவருக்கு எந்தப் பொருளையும் விற்பனை செய்யாதே; ஏனெனில் அவர் நாணயமானவர் என்று நான் நினைக்கவில்லை" என்று கூறுகிறார். இங்கு 'அ' என்பவர் தனது நலன்களைப்பேணவே 'இ' என்பவரது பண்பைப் பற்றிக் குறை சொல்கிறார். எனவே இங்கு 'அ' என்பவர் அவதூறு புரிந்தவராக மாட்டார்.

(b) 'அ' என்ற ஒரு குற்றத்துறை நீதிபதி தனக்கு மேல் உள்ள அலுவலர்க்கு அனுப்பும் அறிக்கையில் 'ஆ' என்பவரது நடத்தை, அவரது பண்பைப் பற்றித் தாழ்வாகக் குறிப்பிடுகிறார். இங்கு இந்தக் குற்றச்சாட்டு நல்லெண்ணத்துடனும் பொது நன்மைக்காகவும் சொல்லப்பட்டிருக்குமாயின், 'அ' பொறுப்பாளியாக மாட்டார்.

ஒருவர் ஒரு பணியாளை வேலைக்கு அமர்த்த விரும்புகிறார். எனவே அந்த நபர் ஒழுக்கமுடையவரா, நாணயமானவரா, நம்புதற்குரியவரா என்றறிய அந்த நபரை முன்பு வேலைக்கு வைத்திருந்தவரிடம் அப்பணியாள் எப்படிப்பட்டவர் என்று வினவுகிறார். இப்போது முந்திய பணித்தலைவருக்குப் பணியாளரின் பண்புகளைப் பற்றிச் சொல்ல ஒழுக்க நெறியின்படி, சமுதாய உறவினையொட்டிய கடமையுண்டு. இங்குப் பணியாளைப் பற்றிய உண்மையைத் தெரிவிக்க வேண்டிய கடமை, சமூக, ஒழுக்க நெறியின்படி யமைந்த கடமையாகும். இந்தத் தகவலைப் பெறுபவருக்கும் அதைப் பெறுவதில் நலன் அமைந்திருக்கிறது. எனவே இது சிறப்புரிமை பெற்ற தறுவாயாகும்; ஆனால் முந்திய பணித்தலைவர், யாரும் விசாரிக்காமலிருக்கும்போது, பணியாளுக்கு ஊறு செய்ய வேண்டும் என்றுகருதி 'அவர் கெட்டவர்' என்று தகவல் வெளியிடுகிறார். இங்குச் சிறப்புரிமை கிடையாது. இதைப்

போலவே ஒரு கடனுளியைப்பற்றி, அவருக்கு முன்பு பணம் தந்தவர் அவரது நிதி நிலைமையைப்பற்றி அவருக்குப் பணம் தரக் கருதியுள்ள ஒருவருக்குத் தகவல் தரலாம்.

சட்டபூர்வமான நலன் உள்ளவர் ஒருவரால் விசாரிக்கப் படாமலேயே அவருக்குத் தகவலைச் சொல்பவருக்குச் சிறப்புரிமை கிடையாது என்று சொன்னேம். ஆனல் சில சமயங்களில் ஒருவர் கேள்வி எதுவும் கேட்காமலிருப்பினும் அவரிடம் பேசவேண்டிய கடமையிருக்கலாம். இக்கடமையிருப்பதைத் தரப்பினரிடையே உள்ள உறவு முறையால் அறியலாம். இத்தகைய உறவு தந்தை-மகன், கணவன்-மனைவி, பணித்தலைவர்-பணியாள் ஆகியவர்களிடம் உண்டு. எடுத்துக்காட்டாக ஒரு பெண் மணந்து கொள்ள எண்ணியுள்ள ஆடவன் ஒழுக்கங்கெட்டவன் என்ற உண்மையை அவனது தந்தையோ, அல்லது மற்ற நெருங்கிய உறவினரோ, அவள் விசாரிக்கா விட்டாலும், அவளிடம் சொல்லலாம். ஒரு பணியாள் தன்னிடம் ஒப்புவிக்கப்பட்ட பொருள்களைப் பொறுத்து, பணித்தலைவர் நலன் சம்பந்தப்பட்ட தகவல்களை அவர் கேட்காமலேயே சொல்லலாம். கணவன்-மனைவி இருவரில் ஒருவருடைய நடத்தையைப் பற்றி மற்றவரிடம் மூன்றும் நபர் ஒருவர் சொல்ல வேண்டிய கடமை சில சூழ்நிலைகளில் இருக்கலாம். ஆயினும் பிற ரது மண வாழ்வில் மாமியார் குறுக்கிடுவது கூட வரவேற்கத்தகுந் தது அல்ல. இதைப் போலவே ஒருவரது வீட்டுக்கு வந்துள்ள விருந்தாளியிடம் அவ்வீட்டில் உள்ள பணியாள் நேர்மையற்றவர் என்று கூறி அவரை எச்சரிக்கலாம். வாணிபம் செய்யும் கம்பெனி களின் அலுவலர்கள், ஊராட்சி மன்றங்களின் உறுப்பினர்கள் தங்கள் பணியை நேர்மையாகப் புரியும்போது தங்களிடையே பரிமாறிக் கொள்ளும் தகவல்கள் ஆகியவற்றிற்குச் சிறப்புரிமையுண்டு. இதைப்போலவே வணிகர் தங்கள் நலனைப் பாதுகாக்கச் சங்கம் அமைத்துக் கொண்டிருக்கலாம். இந்தச் சங்கத்தின் உறுப்பினர், ஒருவரிடம் வாணிப உறவு கொள்ளுமுன்னர் அவரது நிதிநிலைமை, பொருளாதார நாணயம் ஆகியவற்றைப் பற்றி அறிய விரும்பி, சங்கத்திற்கு எழுதி அந்த நபரைப் பற்றி விசாரித்துச் சொல்லு மாறு கேட்கலாம். அந்த உறுப்பினர் சார்பாகச் சங்கம் விசாரணை நடத்திச் சொல்லும் தகவல்கள் சிறப்புரிமை கொண்டவை.

தகவல் சொல்ல வேண்டிய கடமை எதுவும் இல்லாதபோதும், அதைச் சொல்பவர் தமக்குச் சட்டப்படி உள்ள நலன் ஒன்றைப் பாதுகாக்கத் தகவலைச் சொல்லியிருப்பின் சிறப்புரிமை உண்டு. எடுத்துக் காட்டாக ஒருவர் தமது சொத்தையோ புகழையோ பாதுகாத்துக் கொள்ள அச்சொற்களைச் சொல்லியிருக்கலாம். ஒரு

பணித்தலைவர் தமது சொத்தைப் பாதுகாத்துக் கொள்ளும் நோக்கத்தோடு, முந்தி அவரிடம் பணிபுரிந்து நேர்மையற்றவர் என்ற காரணத்தால் வெளியேற்றப்பட்ட பணியாளோடு உறவு வைத்துக் கொள்ளக் கூடாது என்று பணியாட்களை எச்சரிக்கலாம். ஆஸ்பார்ன் v. போல்டர் (Osborn v. Boulter) வழக்கில் ஒரு மதுக் கடைக்காரர் மதுத் தயாரிப்பாளரிடம் அவர்களுடைய மது மோசமான தரங்கொண்டது என்று புகார் செய்தார். அவர்கள் அதற்குப் பதிலாக மதுக் கடைக்காரர் மதுவில் தண்ணீர் கலந்து விற்பதால் தான் அதன் தரம் மோசமாக இருக்கிறது என்ற வதந்தியைத் தாங்கள் கேள்விப் பட்டதாகச் சொன்னார்கள். இந்த அறிக்கையை அவர்கள் மூன்றாவது நபர் ஒருவருக்கு வெளியிட்டனர். இது சிறப்புரிமை பெற்றது எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. தனது நலனைக் காக்க 'அ' என்பவர் 'ஆ' என்பவருக்கு ஒரு தகவல் தருகிறார். அந்த நலனைக் காக்க 'ஆ' வுக்கு அதற்கேற்ப ஒரு கடமை இருந்தது. இங்கும் ஒருபுறம் பாதுகாப்புப் பெற்ற நலனும் மறுபுறம் அதைப் பாதுகாக்கும் கடமையும் இருக்கவேண்டும். ஆடம் v. வார்டு (Adam v. Ward) வழக்கில், இங்கிலாந்தில் நாடாளுமன்றத்தில் வாதி, ஸ்கோபல் என்ற படைத்தளபதியைப் பற்றி அவர் மனம் புண்படும்படியாகக் கடுமையாகத் தாக்கியிருந்தார். அரசு விதிமுறையின்படி ஸ்கோபல் இராணுவக் குழு (Army Council) விடம் புகார் செய்தார். அக்குழு குற்றசாட்டினை விசாரித்து, அதற்கு ஆதாரமில்லையென்று கூறி ஸ்கோபலைத் தாக்கியது நியாயமற்ற செயல் என்று கூறியது. அதன் செயலாளராகிய எதிர்வாதியைத் தளபதி ஸ்கோபலுக்கு அவர் குற்றமற்றவர் என்று எழுதிய கடிதத்தை செய்தித்தாள்களில் வெளியிட உத்தரவிட்டது. அதில் வாதியைப் பற்றிச் சில அவதூறான சொற்களையும் கூறியிருந்தது. இவ்வழக்கை விசாரித்த பிரபுக்கள் சபை இக் கடிதம் வெளியிடப்பட்ட தறுவாய் சிறப்புரிமை பெற்றதென்று கூறியது. இதில் வாதியைப் பற்றி அவதூறு இருந்தாலும், அதைப் பலர் படிக்கும் வாய்ப்பு இருந்தாலும், சிறப்புரிமையை எதிர்வாதி இழக்கமாட்டார். எதிர்வாதியின் பண்புகளைப்பற்றி வாதி பிறரறிய கடுமையாகத் தாக்கியிருந்தால், எதிர்வாதி தன்னைக் காப்பாற்றிக் கொள்ள கையாளும் மொழி கடுமையானதாயினும் நீதிமன்றம் அதைப் பெரிதாகக் கருதாது.

ஆனல், லண்டன் ஆர்ட்டிஸ்ட்ஸ் லிமிடெட் v. லிட்லர் (London Artists Ltd. v. Littler) வழக்கில் ஒரு நாடக அரங்கின் மேலாளர் ஒரு லண்டன் அரங்கொன்றில் நாடகத்தில் நடித்த தான்கு நடிகர்கள் ஒரே சமயத்தில் தங்கள் ஒப்பந்தத்தை

முரித்துக் கொண்டதைக் கண்டித்து தேசிய பத்திரிகையொன்றில் கடிதம் வெளியிட்டிருந்தார். இதைப்பற்றி அறிய பொதுமக்களுக்கு முறையான நலன் எதுவும் இல்லை என்பதால் இக்கடிதம் சிறப் புரிமை உள்ள தறுவாய் கொண்டதன்று என்று தீர்ப்பளிக்கப் பட்டது.

சில சமயங்களில் பரிமாறிக்கொள்ளப்படும் பொதுவான தகவல்களைப் பொறுத்து நலனும், ஒருவருக்கொருவர் காட்ட வேண்டிய கடமையும் அமைந்திருக்கலாம். எடுத்துக்காட்டாக ஒரு பணியாளிடம் அவனுடன் பணிபுரியும் மற்றவர்களுடைய நடத்தையைப் பற்றிப் பணித்தலைவர் எச்சரிக்கலாம். பணியாட் களின் நேர்மையில் பணித்தலைவருக்கு நலனுண்டு. எனவே இது சிறப்புரிமைபெற்ற தறுவாயாகும். ஒரு கட்டடத்தில் பழுது பார்க்க வீட்டுச் சொந்தக்காரரால் அனுப்பப்பட்டவருடைய நடத்தையைப் பற்றிக் குடியிருப்பவர் வீட்டுச்சொந்தக்காரரிடம் புகார் செய்யலாம். இதைப் போலவே ஒரு கம்பெனியின் பங்குதாரர்கள் தங்கள் பொதுவான நலன்களைப் பாதுகாக்க ஒருவருக்கொருவர் சிறப் புரிமை கொண்ட தகவல்களைப் பரிமாறிக் கொள்ளலாம்.

இதைப்போலவே பொது அலுவலர்கள் தங்கள் கடமைகளை நேர்மையாகவும், செவ்வனே செய்வதற்கும் எதிர்வாதி மற்றவர் களோடு சேர்ந்து பொது நலன் பெற்றிருக்கலாம். எனவே பொது மக்களில் யார் வேண்டுமானாலும் ஓர் அரசு அதிகாரியின் முறை யற்ற நடத்தையைப் பற்றிக் குற்றஞ் சாட்டிக் கடிதம் எழுதினால் அதற்குச் சிறப்புரிமை உண்டு. ஆனால் அந்தக் கடிதம் முறையான படி அனுப்பப்பட்டிருக்க வேண்டும். அதாவது அக் கடிதத்தைப் பெற நலன் கொண்டவருக்கே அனுப்பப்பட வேண்டும். எனவே ஓர் அரசு அதிகாரி முறைதவறி நடந்து கொண்ட தகவலை அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டுவருமாறு ஒரு பாராளு மன்ற உறுப்பினரை வேண்டி ஒருவர் கடிதம் எழுதலாம். ஆனால் நலன் இல்லாத ஒருவருக்குக் கடிதம் எழுதுவதும், செய்தித்தாட் களில் வெளியிடுவதும் சிறப்புரிமையை வரம்பு மீறிப் பயன் படுத்துவது ஆகும். இவ்வாறு செய்பவர் சிறப்புரிமையை இழந்து விடுவார்.

அவதூறு அடங்கிய ஒரு கடிதத்தை செய்தித்தாளில் வெளியிட விரும்பினால், அதை வெளியிடப் பொதுவான கடமை ஒன்று இருந்ததாக நிரூபிக்கவேண்டும். இத்தகைய கடமை இல்லை யெனின், வரம்புக்குட்பட்ட சிறப்புரிமை இருந்ததென வாதிட முடி யாது. பம்பாய் உயர்நீதிமன்றம் R. K. கரஞ்சியா *v.* தாக்கர்சி

(R. K. Karanjia v. Thakersey) வழக்கில் இதைத் தெளிவாக்கி யிருக்கிறது. ஆங்கில வார இதழான 'பிளிட்ஸ்' எனும் இதழில் 'தாக்கர்சி இல்லம்' எனப்படும் வாணிப நிறுவனத்தைத் தாக்கி ஒரு கட்டுரை எழுதப்பட்டிருந்தது. இந்த வாணிப நிறுவனத்தின் குடும்பத்தலைவராகிய வாதியும், அவரது உடன் பிறந்தாரும், அவருடைய மனைவி மக்களும், வாதியின் நெருங்கிய உறவினர் களும், நண்பர்களும் இருந்தனர். துணிக் கட்டுப்பாட்டு வாரியத் தலைவராகிய வாதி முறையற்றதும், சட்டமுரணானதுமான வழிகளைப் பயன்படுத்தித் தனது பதவியைத் தவருகப் பயன்படுத்திப் பெருஞ் செல்வம் ஈட்டினார் என்று அதில் குறிப்பிட்டிருந்தது. பெரு மளவில் அவரது வருமான வரி ஏய்ப்பு, பொருளாதாரப் புரட்டு, 'தில்லு முல்லு', கற்பனை நிறுவனங்கள், தொழிற்சாலைகளின் பேரால் உரிமங்கள் பெற்று ஏற்றுமதி, இறக்குமதி மோசடிகள், அந்நியச் செலாவணி ஏய்ப்பு முதலியற்றைச் செய்ததாகக் குற்றங்கள் சாட்டியதோடு, அரசாங்கம் வரி ஏய்ப்புபற்றி வாளா இருந்ததால் தான் அந்த நிறுவனம் பெருஞ் செல்வம் சேர்க்க முடிந்தது என்றும் அதில் எழுதப்பட்டிருந்தது. வாதி பிளிட்ஸ் பத்திரிகை ஆசிரியரான R. K. கரஞ்சியா மேலும், அதனை அச்சிடுவோர், அந்தக் கட்டுரைக்குச் செய்திகொடுத்தோர் மேலும் வழக்கிட்டார். அச்சிட்டவர் மன்னிப்புக்கேட்டுக் கொண்டதால் அவர் மேலுள்ள வழக்கை வாதி விலக்கிக் கொண்டார். விசாரணை நீதிமன்றம் முன்பாக உண்மை, பொது நலன் உள்ள ஒன்றைப்பற்றி நேர்மை யான கருத்துரை, வரம்புக்குட்பட்ட சிறப்புரிமை ஆகிய எதிர் வாதங்கள் சொல்லப்பட்டன. அவை அனைத்தும் ஏறகப்படவில்லை. வாதிக்கு மிகவும் அவதூறு இழைக்கப்பட்டதாகச் சொல்லி அவர் கோரிய 3 லட்ச ரூபாயும், செலவுத் தொகையும் தருமாறு தீர்ப் பாணை பிறப்பிக்கப்பட்டது. இதைப் போன்று வெளியிடக் கருதி யிருந்த மற்றக் கட்டுரைகளையும் வெளியிடாமலிருக்க உறுத்துக் கட்டளையும் பிறப்பிக்கப்பட்டது.

இத்தீர்ப்பினை எதிர்த்து எதிர்வாதிகள் பம்பாய் உயர்நீதி மன்றத்தில் அப்பீல் செய்தனர். இங்கு வரம்புக்குட்பட்ட சிறப் புரிமை என்ற எதிர்வாதம் மட்டும் சொல்லப்பட்டது. இந்த எதிர் வாதத்தை இரு காரணங்களால் உயர்நீதி மன்றம் ஏற்கவில்லை. முதலாவதாக, இந்தச் செய்தியை வெளியிட அவர்களுக்குக் 'கடமை' இருக்கவில்லை. பொதுமக்களுக்கு இத்தகவலைச் சொல்ல விரும்பும் நபரோ அல்லது பெய்தித்தாளோ அதை வெளி யிட ஒரு கடமை இருக்கவேண்டும். இது பொதுமக்கள் நலனைப் பற்றியதாக மட்டும் இருந்ததென்று நிரூபித்தால் போதாது; அதை வெளியிடக் கடமை பொதுமக்கள் நலனுக்குகந்ததாகும்

ஏன்றும் நிரூபிக்க வேண்டும். இங்கு அப்படிப்பட்ட கடமை இல்லை என்பது தெளிவாகும். இரண்டாவதாக, அந்தக் கட்டுரை பொதுமக்களின் நலனைப் பேணுவதற்காக வெளியிடப்படவில்லை; தீங்கெண்ணத்துடன்-காழ்ப்புணர்ச்சியுடன் வெளியிடப்பட்டிருந்தது. இதற்குக் காரணம் முன்பொரு சமயம் ஓர் அவதூறுக் கட்டுரை வெளியிட்டதற்காக எதிர்வாதி செய்தித்தாள் ஆசிரியரை வாதி மன்னிப்பு கேட்க வைத்தார். இதனால் தீங்கெண்ணத்துடன் வாதியின் பெயருக்கு நாட்டில் களங்கம் ஏற்படுத்தவே எதிர்வாதி இவ்வாறு எழுதினார். ஆயினும் உயர் நீதிமன்றம் அப்பீலில் ஒரு பகுதியை ஏற்றுக்கொண்டு இழப்பீட்டுத் தொகையை 3 லட்ச ரூபாயிலிருந்து $1\frac{1}{2}$ லட்ச ரூபாயாகக் குறைத்தது.

பொதுமக்கள் அனைவரும் காணக்கூடிய வகையில் நடைபெறும் நீதிமன்ற நடவடிக்கைகளைப் பற்றிய அறிக்கைகளை செய்தித்தாளிலும் மற்றவைகளிலும் வெளியிடலாம். இதற்கு வரம்புக்குட்பட்ட சிறப்புரிமையுண்டு. இந்தச் சிறப்புரிமை கீழ்நிலை நீதிமன்றங்கள், உயர்நீதிமன்றங்கள் ஆகிய எல்லா நீதிமன்றங்களின் நடவடிக்கைகளுக்கும் பொருந்தும். ஆனால் பொதுமக்கள் பார்வையிட அனுமதிக்கப்படாத நீதிமன்ற நடவடிக்கைகளைப் பற்றிய அறிக்கைகளை வெளியிட இத்தகைய சிறப்புரிமை கிடையாது. தவிர, சட்டப்படியோ அல்லது நீதிமன்ற உத்தரவின் படியோ வெளியிடக் கூடாது என்று தடை செய்யப்பட்டிருப்பின் அவற்றை வெளியிடச் சிறப்புரிமை கிடையாது. மற்றும் வெளி நாட்டு நீதிமன்ற நடவடிக்கைகளை உள்நாட்டு நீதிமுறை நிர்வாகத்தோடு தொடர்பு கொண்டதாகவோ, வாணிபச் சட்டம் போன்றவற்றின் முக்கியமான தீர்ப்பாகவோ அமைந்திருந்தால் அவை நாட்டின் பொது நலனுக்குகந்தவை என்ற காரணத்தால் அவற்றை வெளியிட சிறப்புரிமை உண்டு. இல்லையேல் சிறப்புரிமை இருந்தாக வேண்டிய கட்டாயமில்லை. இதைப்போலவே விற்பனையைப் பெருக்கிக்கொள்ள செய்தித்தாள் கீழ்த்தரமானதும், ஆபாசமானதுமாகிய அவதூறுச் செய்திகளை வெளியிட இச்சிறப்புரிமையைப் பயன்படுத்த முடியாது. இதைப்போலவே நாடாளுமன்ற விவாதங்களைப்பற்றி நேர்மையாகவும், சரியாகவும் செய்தித்தாளில் வெளியிடப்படும் அறிக்கைகளுக்கும் இந்த வரம்புக்குட்பட்ட சிறப்புரிமை உண்டு. இயற்றுச் சட்டத்தின்கீழ் பொதுக் கூட்டங்களின் நடவடிக்கைகளைப்பற்றி செய்தித்தாள்களிலும், பிறவற்றிலும் வெளியிடப்படும் அறிக்கைகளுக்குச் சிறப்புரிமை இல்லாமல் இருந்தது. 1888-ல் இயற்றப்பட்ட நீலவடிவு அவதூறுச் சட்ட திருத்தச் சட்டத்தின்படி குறிப்பிட்ட சில

கூட்டங்களின் நடவடிக்கைகளைப் பற்றிய அறிக்கைகளைச் சரியாகவும், நேர்மையாகவும் வெளியிடும் செய்தித்தாள்களுக்கு ஓரளவு பாதுகாப்பு வழங்கப்பட்டது. செய்தித்தாள்களோடு திங்களிதழ்களுக்கும், வார இதழ்களுக்கும், மற்றும் அவற்றைப் போன்றவற்றிற்கும் இந்தப் பாதுகாப்பை அளிக்க வேண்டுமென போட்டர்குழு பரிந்துரை செய்தது. இங்கிலாந்தில் அவதூறுச் சட்டத்தின்கீழ் இந்தப் பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது. பொதுவான பிரச்சினைகளைப்பற்றி விவாதிப்பதற்காக, சட்டத்திற்கு இசைந்த நோக்கத்தோடும், நல்லெண்ணத்தோடும் கூட்டப்படும் பொதுக்கூட்டங்களின் நடவடிக்கைகளைப்பற்றி வெளியிடப் பட்டுள்ள நேர்மையான, சரியான அறிக்கைகளுக்கு வரம்புக்குட் பட்ட சிறப்புரிமை உண்டு.

இசைவு (Consent)

அவதூறினை வெளியிட வாதி வெளிப்படையாகவோ, அல்லது உட்கிடையாகவோ இசைவு தந்திருக்கலாம். எடுத்துக்காட்டாக, அவதூருகப் பேசும் எதிர்வாதியைப் பார்த்து வாதி சாட்சிகள் முன்னிலையில் அதைச் சொல்லுமாறு கேட்கலாம்.

மன்னிப்பு கோரல் (Apology)

நிலைவடிவு அவதூறுக்காக எதிர்வாதியின்மேல் வழக்கிடப் பட்டிருப்பின், அவன் அதற்காக மன்னிப்பை வாதியிடம் கேருவது பொதுவாக எதிர்வாதமல்லவாயினும், அவன் தர வேண்டிய தீங்கீட்டுத் தொகையைக் குறைக்கப் பயன்படும். மன்னிப்புக் கேட்க மறுப்பது அவன் தரவேண்டிய தீங்கிட்டுத் தொகையை அதிகமாக்கலாம். ஆனால் அவனது பொறுப்பை அது பாதிக்காது. நிலைவடிவு அவதூறுச் சட்டத்தின்படி செய்தித்தாள் அல்லது பத்திரிகைகளில் வெளியிடப்படும் அவதூறுக்கான வழக்கில் எதிர்வாதி அதைத் தான் தீங்கெண்ணத்துடனே அல்லது கவனமின்றியோ வெளியிடவில்லையென்றும், வழக்கு தொடரப்படுமுன்போ, அல்லது வழக்கிடப்பட்டுள்ளதென்று தனக்குத் தெரிந்த உடனே, பத்திரிகையில் முழுமன்னிப்புக் கோரி அறிவிப்பை வெளியிட்டதாகவும் வாதிடலாம். இதற்குப் பரிகார மாக ஒரு தொகையையும் சேர்த்து நீதிமன்றத்தில் அவன் கட்ட வேண்டும். அவதூறுச் சட்டத்திலும் இதற்கு வகை செய்யப் பட்டுள்ளது. முழுமையாக மன்னிப்புகோரி எதிர்வாதி தான் சொல்லியிருந்த குற்றச்சாட்டுகள் அனைத்தையும் விலக்கிக் கொள் வதுடன் அவற்றைச் சொன்னதற்காக வருத்தமும் தெரிவிக்க வேண்டும்.

35. நிலத்தில் அத்துமீறல்
(Trespass to Land)

நிலத்தில் அத்துமீறல் என்பது ஒருவர் நிலத்தின்மேல் கொண்டுள்ள உடைமையில் சட்டமுரணான வகையில் எவ்வித நியாயமுமின்றி மற்றவர் குறுக்கிடுவதாகும். இத்தீங்கினை மூன்று வகையில் புரியலாம். சட்டத்திற்கிசைந்த காரணமோ, நியாயமோ இல்லாமல் வாதியின் உடைமையில் உள்ள நிலத்தில் எதிர்வாதி (1) நுழைந்தோ, (2) தங்கியிருந்தோ, (3) அல்லது ஒரு பொருளை வைத்தோ, அல்லது அங்கு நீட்டிக் கொண்டிருக்குமாறு செய்தோ இத்தீங்கினைப் புரியலாம். எனவே, தகுந்த காரணமோ, நியாயமோ இல்லாமல் வாதியின் உடைமையில் உள்ள நிலத்தில் அத்துமீறி நுழையும் எதிர்வாதி தனக்கு அந்நிலத்தில் இருக்க உரிமையில்லையெனத் தெரியாது என்று கூறினால் அதை நீதிமன்றம் ஏற்காது. அந்த நிலம் தன்னுடையது என்று தவருகக் கருதி நுழைந்து விட்டதாகக் கூறுவது சமாதானமாகாது. ஆனால் வழிதவறி அந்நிலத்தில் தெரியாமல் நுழைந்து விட்டதாக அவன் கூறினால் அதை நீதிமன்றம் நியாயமானதென்று கருதலாம். உங்களுடைய நிலத்தை என்னுடையதென்று நினைத்து நான் நுழைந்தாலும் அங்கு கருதியே செய்யப்படுவதாகும். சில சமயங்களில் ஒருவன் மற்றவர்கள் நிலத்தில் நுழையவேண்டுமென்ற கருத்து இல்லாமலே நுழையக்கூடும். எடுத்துக்காட்டாக ஒரு கார் விபத்து ஏற்பட்டு ஒருவன் அடுத்தவன் நிலத்தில் நுழைந்திருக்கக்கூடும். இதைப்போன்ற சூழ்நிலைகளில் அவன் கவனமின்றி இருந்ததாக நிரூபிக்கப்படவேண்டும். இதைப்போலவே ஒருவன் கருத்தின்றி நுழைவதற்கு எடுத்துக்காட்டாக, தன்னுடைய வீட்டுச் சுவரின்மேல் அமர்ந்திருக்கும் மாணவன் தவறி அடுத்த வீட்டில் விழுந்து விடுவதைச் சொல்லலாம். இதை அவனது செயலாகக் கருதமுடியாது. இதைப்போன்ற சூழ்நிலைகளில் அத்துமீறல் நிகழ்ந்ததாகக் கூறமுடியாது.

இனி அத்துமீறலின் வகைகளைப் பற்றிக் காண்போம்.

(1) முறையின்றி நுழைதல் (Wrongful entry):

வாதியின் உடைமையில் உள்ள நிலம் அல்லது கட்டிடத்தில் எதிர்வாதி தானே நுழைந்திருக்கலாம் அல்லது மற்றவர்களை நுழையுமாறு செய்திருக்கலாம். இவ்வாறு வாதியின் நிலத்தில் முறையின்றிப் புகும் எதிர்வாதி அந்நிலத்தில் நெடுந்தொலை ஊடுருவிச் சென்றிருக்க வேண்டியதில்லை. வாதியின் நிலத்தின் எல்லையைச் சிறிது தூரம் கடந்திருந்தால்கூடப் போதும். அதில் அவன் நுழைந்திருக்கக் கூடத் தேவையில்லை. எடுத்துக்காட்டாக சன்னல், கதவு வழியாக வாதியின் வீட்டுக்குள் கையை நீட்டுவதும், வாதியின் நிலத்திலுள்ள வேலியின்மேல் அமர்வதும் அத்துமீறவேயாகும். வாதியின் வீட்டுச் சுவரின்மீது எதிர்வாதி ஒரு கல் வைத்தால்கூட அது அத்துமீறலாகவே கருதப்படும். வாதிக்கு எதிர்வாதியின் அத்துமீறலால் எந்த ஊறும் நட்டமும் ஏற்பட்டிராவிட்டாலும் அவன் வழக்கிடமுடியும். சட்டம் கடுமையானதாகத் தோன்றினாலும், பழங்காலத்தில் இவற்றைப் போன்ற அத்துமீறும் செயல்களால் பொது அமைதி குலைவதைத் தடுப்பதற்காகவே சட்டம் இவ்வாறு அமைந்ததெனலாம். ஆயினும் இன்று சட்டத்திற்கு மதிப்பு அதிகமாக இருக்கிறது. சட்டம் தரும் பாதுகாப்பை அனைவரும் நன்கு உணர்ந்துள்ளனர். ஆகவே ஒருவனுடைய நிலத்திற்கு எந்தச் சேதமும் ஏற்படுத்தாமல் அந்த நிலத்தின் வழியாகச் செல்பவனை நிலச்சொந்தக்காரர் நீதிமன்றத்திற்கு இழுப்பார் என்று கருத முடியாது.

அலைகள், காற்றுபோன்ற இயற்கைச் சக்திகளில் வாதியின் நிலத்திற்கு அடித்துச் செல்லும்படியாக வேண்டுமென்றே ஒரு பொருளை ஓரிடத்தில் வைத்தலும் அத்துமீறலேயாகும். அத்துமீறலாக அமைந்துள்ள பொருள் தொட்டறியக்கூடிய பொருளாக இருக்கத் தேவையில்லை. நீதிமன்றம் அறிவியல் வளர்ச்சியையும் கவனத்தில் கொள்கிறது. அத்துமீறல் செய்யப் பயன்படுத்தப்பட்ட பொருள் வாயு, அல்லது கண்ணுக்குத் தெரியாத அணுவாகக் கூட இருக்கலாம். ஆனால் ஒருவருடைய உடைமையில் குறுக்கிடாமல் அவர் அனுபவிக்கும் வாயு, மின்சாரம் போன்றவற்றை அவரிடமிருந்து எடுத்துக் கொள்வது அத்துமீறல் ஆகாது.

வரவேற்பறையில் உட்கார அனுமதிக்கப்பட்ட நபர் படுக்கையறையில் நுழைந்து பார்ப்பது முறையற்ற அத்துமீறல் செயல் ஆகும். ஆனால் அவர் இருப்பதற்கு அனுமதிக்கப்பட்டிருந்த பகுதியும், நுழையக் கூடாதென்று தடுக்கப்பட்டிருந்த பகுதியும்

சரியாகக் குறிப்பிடப்படாவிட்டால் அவர் அனுமதிக்கப்பட்ட பகுதியைத் தாண்டிச் செல்வது அத்துமீறல் ஆகாது. அதாவது ஒரு குறிப்பிட்ட காரியத்தைச் செய்வதற்காக மற்றொருவர் நிலத்தில் நுழைய உரிமை பெற்றவர் அங்கு அனுமதியில்லாமல் வேறு ஒரு காரியம் செய்ய நுழைவதும், அவர் சட்டத்திற்கிசைந்த முறையில் நுழையப் பெற்றுள்ள உரிமையைத் தவிர வேறு உரிமையைக் கொண்டாட நுழைவதும் அத்துமீறல் செயலாகும்.

வாதியின் நிலத்தின் எல்லளவு பகுதியையும் எதிர்வாதி ஆக்கிரமித்துக் கொண்டிருந்தாலும் அது அத்து மீறலேயாகும். சட்டத்தின் கண்களில் ஒவ்வொரு மனிதனின் நிலமும் மற்றவர் நிலங்களிலிருந்து தனியே பிரித்து வைக்கப்பட்டுள்ளது. இரு நிலங்களுக்கிடையில் வேலியோ, தடுப்போ வைக்கப்பட்டிருக்கலாம். அவை வைக்கப்பட்டிராவிட்டாலும், அந்நிலங்களுக்கிடையே கண்ணுக்குப் புலனுகாத ஒரு எல்லை குறிக்கப்பட்டிருப்பதாகச் சட்டம் கருதும்.

நெடுஞ்சாலையை நடந்து செல்லும் காரியத்திற்குப் பயன்படுத்தாமல் சட்ட முரணான வகையில் வேறு காரியத்திற்காகப் பயன் படுத்துவதும் அத்துமீறிய செயல்களேயாகும். எடுத்துக்காட்டாக, நெடுஞ்சாலையில் கால்நடைகளை மேய விடுவதும், நெடுஞ்சாலையில் அமர்ந்துகொள்வதும், சாலையை அடுத்துள்ள நிலத்தை உடையவர்களின் உரிமையில் குறுக்கிடுவதற்காகச் சாலையில் அங்குமிங்கும் செல்வதும், சாலையை அடுத்துள்ள நிலத்தில் என்ன நடக்கிறது என்று சாலையில் இடையருது இருந்து கொண்டு பார்ப்பதும், ஒரு கட்டிடத்தில் மறியல் செய்வதும் அத்துமீறும் செயல்களே.

2, நிலத்தில் தங்கியிருந்து கொண்டு அத்துமீறல் (Trespass by remaining on land)

சட்டப்படி நிலத்தில் ஒருவர் நுழைந்திருப்பினும், அவன் நுழையும் உரிமை முடிவெய்திய பின்னரும் தொடர்ந்து அங்கேயே தங்கியிருந்தால் அவன் அத்துமீறியதாகக் கருதப்படுவான். வாதியின் நிலத்திலிருந்தோ, அல்லது காரிலிருந்தோ எதிர்வாதி வெளியேருமல் இருப்பதும், வெளியேற மறுப்பதும் அவன் முதலிலேயே உரிமையின்றி நுழைவதுபோன்ற செயலாகக் கருதப்படும். ஏனவே பொதுவாக நிலத்தின் உடைமையாளரின் இசைவும், அனுமதியும் பெற்று நிலம் அல்லது கட்டிடத்தில் உள்ளவர் அவருக்கு அளிக்கப்பட்ட அனுமதி அல்லது உரிமம் முறையாக முடிவெய்தியதும் அந்நிலம் அல்லது கட்டிடத்தைவிட்டு வெளி

யேறுமாறு கேட்டுக் கொள்ளப்படலாம். ஆனால் அவர் வெளி யேறத்தக்க காலம் கழிந்த பின்னரும் அங்கிருந்து வெளியேருமல் இருத்தல் அத்துமீறல் செயலாகவே கருதப்படும்.

3. பொருட்களை நிலத்தில் வைத்து அத்துமீறல் செய்தல் (Trespass by placing things on land)

வாதியின் நிலத்தில் அசைவியல் பொருட்களை (Chattel) எதிர்வாதி முறையின்றி வைத்திருக்கலாம். அல்லது முறையின்றி ஏதாவது ஒரு பொருளையோ அல்லது நச்சுப் பொருளையோ வாதி யின் நில எல்லையைக் கடந்து செல்ல வைக்கலாம். தவிர கால் நடைகளை வாதியின் நிலத்திற்குள் விரட்டியும் அத்துமீறல் செய்யலாம். வாதியின் நிலத்தில் கல்லெறிந்தும் அவனது வீட்டுச் சுவரில் ஆணி அடித்தும் செடி கொடிகளை அதில் படருமாறு செய்தும், அதில் மரக்கட்டை, ஏணி ஆகியவற்றைச் சாய்த்து வைத்தும், அதனையொட்டிக் குப்பைக் குவியலைக் கொட்டி வைத்தும் அத்துமீறல் புரியலாம். இவற்றிற்காக எதிர்வாதி பொறுப்பாளியாவார்.

அத்துமீறலுக்காக வாதி வழக்கிட வேண்டுமாயின், வாதிக் கேற்பட்ட இழுப்பு நேரடியானதாக இருக்க வேண்டும். ஒரு பொருளை அடுத்தவர் நிலத்தில் நேரில் கொண்டுபோய் வைத்தல் அத்துமீறலாகும். ஆனால் ஒரு செயலைச் செய்து அதன் விளைவாக அப்பொருள் நிலத்தில் நுழைய நேரிட்டால், அது தொல்லை யாகவோ அல்லது வேறு தீங்காகவோ கருதப்படும். இங்கு எதிர் வாதியின் குறுக்கீடு நேரடியாக இல்லாமல், வேருென்றின் விளை வாக அமைந்து விடுகிறது. ஒருவர் மற்றவர் கட்டிடத்தின் மீது கல்லையெறிந்தால் அது அத்துமீறல் ஆகும்; ஆனால் பாழடைந்த நிலையிலுள்ள புகைக் கூண்டிலிருந்து கற்கள் மற்ருெருவர் கட்டி டத்தில் விழுதல் தொல்லையாகும்.

நெடுஞ்சாலையில் நிகழும் அத்துமீறல்

நெடுஞ்சாலையை ஓரிடத்திலிருந்து வேருெரு இடத்திற்குச் செல்வதற்காக ஒருவர் பயன்படுத்துவது அத்துமீறல் ஆகாது. இதனால் நெடுஞ்சாலையில் ஒருவர் தாம் விரும்பியதெல்லாம் செய்ய லாம் என்று பொருள் அல்ல. எனவே நெடுஞ்சாலையில் ஒருவர் முறையான பயணத்திற்காக அல்லாமல் வேறு காரியத்திற்காகப் பயன்படுத்தினால் நெடுஞ்சாலை அமைந்துள்ள நிலத்தின்மீது உடைமை கொண்டவர் வழக்கிடலாம். நெடுஞ்சாலையின் மேற் பரப்பு நெடுஞ்சாலை பராமரிப்புத் துறையின் பொறுப்பிலிருந்தாலும் அம்மண்ணில தனிப்பட்ட நபர்களுக்கும் உடைமை இருக்கலாம்.

சாலையையொட்டி ஒருவருக்கு நிலமிருப்பின் நெடுஞ்சாலை அமைந்துள்ள நிலத்துக்கும் உரிமையுண்டு. எனவே நெடுஞ்சாலையை ஒருவர் முறையின்றிப் பயன்படுத்தியதன் காரணமாக-அவருக்கு ஊறு ஏற்பட்டால் அவர் வழக்கிடலாம். ஹேர்ரிசன் v. டியூக் ஆஃப் ரட்லண்ட் (Harrison v. Duke of Rutland) வழக்கில் சாலை குறுக்கே சென்ற நிலங்கள் ரட்லண்ட் பிரபுவுக்குச் சொந்தமாக இருந்தன. அவரோடு மனத்தாங்கல் கொண்ட ஹேர்ரிசன் என்பவர் ரட்லண்ட் பிரபு அங்கு துப்பாக்கியால் சுடும் பயிற்சி செய்தபோது அந்த இடத்திற்கருகே நின்று கொண்டு, இலக்குக்கு வரும்பறவைகளை விரட்டிக் கொண்டிருந்தார். அவர் நிலத்தில் அத்துமீறியவராகக் கருதப்பட்டார். ஹிக்மன் v. மெய்சி (Hickman v. Maisey) வழக்கில் வாதிக்குச் சொந்தமான நிலத்தின் குறுக்கே நெடுஞ்சாலை சென்றது. எனவே,அந்த நெடுஞ்சாலையின் அடியில் இருந்த மண்ணில் அவருக்கு உடைமை இருந்தது. அந்த நெடுஞ்சாலையில் சுமார் 15 கெஜம் தூரத்திற்கு எதிர்வாதி இப்படியும் அப்படியும் நடந்த வண்ணம் இருந்தார். அவரது நோக்கம் வாதியின் நிலத்தில் நடைபெற்ற பந்தயக்குதிரைகளின் வெள்ளோட்டத்தை இடையருது கண்காணித்துக் குறிப்பெடுப்பதாகும். அவர் அத்துமீறியதாகக் கருதப்பட்டார். ஆனால் சாலையில் இருந்து கொண்டு ஓவியம் வரைதல், சட்டத்திற்கிசைந்த செயலா என்பது காலம், இடம், சூழ்நிலையைப் பொறுத்தது. ஒரு கடையின் முன்னால் வைக்கப்பட்டுள்ள ஒரு அழகான படம் அல்லது பொம்மை தொடர்ந்து பார்க்கும்படி நியாயமாக ஒருவரைத் தூண்டக்கூடும். ஆனால் காலவரையறையின்றி அங்கேயே அதைப் பார்த்துக் கொண்டிருப்பது முறையாகாது. நெடுஞ்சாலையில் அத்துமீறல்களுக்காக அதில் உடைமை கொண்டவர்களே வழக்கிட முடியும்.

நிலப்பரப்பிற்கு கீழும் மேலும் அத்துமீறல் (Trespass beneath and above the Surface)

ஒரு நிலப்பரப்பு யாருக்கு உடமையாகவோ, அல்லது உரிமையாகவோ இருக்கிறதோ அவருக்கே அதன் கீழுள்ள அடித்தளமும் உடமையாகவோ அல்லது உரிமையாகவோ இருக்கும். எனவே நிலப்பரப்பிற்கு கீழே ஊடுருவி நுழைவதற்கெதிராக அவர் அத்து மீறல் வழக்கிடலாம். நிலப்பரப்பின்கீழ் உள்ள மண்ணுக்கடியில் ஆக்கிரமிப்புச் செய்தல் நிலத்தின் தரைப்பரப்பில்அத்து மீறல் செய்தல் போன்றதேயாகும். நிலத்தின் மேற்பரப்பும், அடிக் பகுதியும் வெவ்வேறு நபர்களுக்கு உடைமையானவையாக இருக்கலாம். எடுத்துக்காட்டாக 'அ' என்பவருக்கு நிலப்பரப்பு உடைமையாகவும் 'ஆ' என்பவருக்கு நிலத்தின் அடிப்பரப்பு உடைமை

யாகவும் இருப்பதாக வைத்துக் கொள்வோம். ஒருவன் அந்த நிலத்தின்மேல் நடந்து சென்றால் அது 'அ' வுக்கு இழைக்கப்பட்ட அத்துமீறலாகும். 'ஆ' வுக்கு இழைக்கப்பட்ட அத்துமீறல் ஆகாது. ஆனால் அவர் அந்நிலத்தில் செங்குத்தாக ஒரு துளை போட்டால் அது 'அ', 'ஆ' ஆகிய இருவருக்கும் இழைக்கப்பட்ட அத்துமீறலாகும் ஆனால் ஒருவன் தன்னுடைய நிலத்தின் அடியிலிருந்து நேராக 'ஆ' வின் உடைமையிலுள்ள அடிநிலத்திற்குச் சுரங்கப்பாதை போட்டால் அது 'ஆ' விற்கு எதிராக மட்டும் இழைக்கப்படும் அத்துமீறலேயாகும்.

இதைப்போலவே ஒரு நிலத்தின் தரைப்பரப்பின் உடைமையும், உரிமையும் கொண்டவர்க்கு அதற்கு மேலுள்ள வெளியில் உரிமையும் உடைமையும் உண்டு என்று கருதப்படுகிறது. இது ஓரளவுக்கு உண்மையாகும். ஒரு நிலத்தின் உடைமையாளர் தன்னுடைய சொந்தக் காரியங்களுக்காக நிலத்தின் மேலுள்ள வான் வெளியையும் தானே பயன்படுத்தவும் மற்றவர் அதைப் பயன் படுத்துவதைத் தடுக்கவும் உரிமையுண்டு. அங்கு அவர் ஒரு கோட்டை கட்டிக் கொள்ளலாம். அவர் தன்னுடைய நிலப் பரப்பிற்கு மேல் மற்றவர்கள் வைத்துள்ள பொருளை அகற்றலாம். அதனால் அவருக்கு உண்மையில் ஊறு ஏற்பட்டிராவிட்டாலும் அவர் வழக்கிடலாம். அதை அகற்றவும் அவருக்குரிமையுண்டு. கெல்சன் v. இம்பீரியல் டுபாகோ கம்பெனி (Kelsen v. Imperial Tobacco Co.,) வழக்கில் எதிர்வாதி தமது சொத்தில் நிறுத்தி வைத்திருந்த அறிவிப்புப் பலகை வாதியின் கடைக்கு மேலேயுள்ள காற்று வெளியில் நீட்டிக் கொண்டிருந்தது. இவ் வழக்கில் எதிர்வாதி அத்து மீறியதாகக் கருதப்பட்டார்.

இதிலிருந்து ஒருவன் தனது நிலப்பரப்பின் மேலுள்ள காற்று வெளியில் நுழைவதெல்லாம் அத்துமீறல் செய்வதாகச் சொல்ல முடியாது. நிலத்திற்கு ஏதாவது ஒரு வகையில் தொடர்பில்லாமல் அத்துமீறல் இருக்கமுடியாது. பல்லாயிரம் அடிஉயரத்தில் பறக்கும் விமானம் ஒருவர் நிலத்தில் அத்து மீறியதாகக் கருத முடியாது. இவ்வாறே பட்டம் பறக்கவிடுதலும், புரு மூலம் செய்தி அனுப்புவதும், ஒருவர் நிலத்தின் குறுக்காகச் சுடுவதும் அத்து மீறலாக இருக்கமுடியாது. நிலத்தின் மேலுள்ள காற்று வெளியைப் பயன் படுத்தப் பொதுமக்களுக்குள்ள உரிமையை நியாயமின்றிக் கட்டுப் படுத்த முடியாது. காற்று வெளியில் ஊடுருவியதால் அத்துமீறல் நிகழ்ந்ததாகச் சொல்லும் வாதி தனக்கு ஊரே, ஆபத்தே, இழப்போ அல்லது வசதிக்குறைவோ ஏற்பட்டதென்று நிரூபிக்க வேண்டும்.

தொடர்ந்து நிகழும் அத்துமீறல் (Contiuning trespass)

ஒருவர் நிலத்தில் அத்துமீறி நுழைபவர் தொடர்ந்து அங்கிருக்கும் வரை அவர் தொடர்ந்து அத்துமீறிக் கொண்டிருப்பராகவே கருதப்படுவார். இதைப்போலவே வாதியின் நிலத்தில் ஒரு பொருளை வைக்கும் செயல் அத்துமீறல் ஆகும். அவ்வாறு அத்துமீறி அங்கு வைக்கப்பட்ட பொருள் அங்கிருந்து எடுத்துச் செல்லப்படும்வரை தொடர்ந்து அத்துமீறல் செய்வதாகவே கருதப்படும். அப்பொருள் அகற்றப்படும் வரை, அது அங்குள்ள ஒவ்வொரு நாளுக்கும் தொடர்ந்து வழக்கிடலாம். ஒவ்வொரு வழக்கிலும் வழக்கிட்ட நாள்வரை தீங்கீடு கணக்கிடப்படும். எனவே அத்துமீறல் தொடர்ந்திருப்பின் அது புதிய அத்துமீறலாகவே கருதப்படும். அத்துமீறல் செய்த பொருள் அங்குள்ள வரை ஒவ்வொரு நாளும் தனியாக அத்து மீறல் நிகழ்த்தியதாகவே சட்டம் கருதும். எனவே ஒருவர் நிலத்தில் கல்லைக்குவித்து வைத்திருந்தாலும், அங்கு ஒரு சுவரைக் கட்டியிருந்தாலும், இரும்புக் கம்பிகளை வைத்திருந்தாலும் அத்துமீறலுக்காக வழக்கிடலாம். அவை அங்கிருந்து அகற்றப்படும் வரை ஒவ்வொரு நாளும் வழக்கிடும் உரிமை அவருக்கிருக்கிறது. நிலத்தில் அப்பொருளைக் கொண்டுவந்து போட்டதற்காக ஒரு வழக்கும், அதை அங்கு வைத்திருப்பதற்காக மற்றொரு வழக்கும் இடலாம். முதல் வழக்கில் தீங்கீடு கொடுத்ததால், ஊறு இழைக்கும் அப்பொருளை அங்கு வைத்தவர் அதைத் தொடர்ந்து வைத்திருக்கும் உரிமையைப் பெற்றுவிட்டாதாகச் சொல்ல முடியாது.

கால்நடைகளின் அத்துமீறல் (Cattle Trespass)

ஒருவரது கால்நடை அடுத்தவர் நிலத்தில் புகுந்தால் அவர் அத்துமீறலுக்காகப் பொறுப்பாளியாவார். அவற்றுல் நட்டம் ஏற்பட்டதென்று நிலத்தையுடையவர் நிரூபிக்க வேண்டியதில்லை. அவை நுழைந்ததற்காகவே தீங்கியலில் பொறுப்புண்டு, கால்நடைகளின் அத்துமீறல்களைப் பற்றி விலங்குகளுக்கான பொறுப்பு என்னும் பகுதியில் விரிவாகச் சொல்லப்பட்டுள்ளது.

வாதியின் உரிமை

அத்துமீறல் உடைமைக்கெதிரானதீங்கே யாகும்; உரிமைக்கெதிரானதல்ல. நிலத்தில் உடைமையுள்ளவன் அந்த நிலத்தின் உண்மையான சொந்தக் காரனாக இல்லாமல் இருக்கலாம்; அந்த நிலத்தின் உண்மையான உரிமையாளருக்கெதிராக முறையின்றி அந்த நிலத்தில் உடைமை கொண்டவராக இருக்கலாம். இருந்தாலும் அந்த நிலத்திற்கு உரிமையற்ற பிறர் குறுக்கிடும்போது

அவன் அத்துமீறலுக்காக வழக்கிடலாம். ஒருவருக்கு நிலத்தில் நேரடியான தனித்த உடைமையிருந்தால் தான் அவர் வழக்கிட முடியும். நிலத்தின் உடைமைக்காகப் பலர் பாத்தியதை கொண்டாடினால், அவர்களில் யாருக்கு உடனடியாக, தனித்த உடைமை பெற உரிமையுள்ளதோ அவரே உடைமை உள்ளவராகக் கருதப்படுவார் ஒரு நிலச் சொந்தக்காரர் தம்முடைய நிலத்தைக் குத்தகைக்குவிட்டிருந்தால் அத்துமீறலுக்கு வழக்கிடமுடியாது; குத்தகைக்கு நிலத்தை எடுத்திருப்பவரே அத்துமீறலுக்காக வழக்கிட முடியும்.

தொடர்பு வழி அத்துமீறல் (Trespass by relation)

நிலத்தின் உடைமையை உடனடியாகப் பெறும் உரிமையுள்ள ஒருவர் அந்த உரிமையை நிலைநாட்ட நிலத்தில் நுழைந்தால் அவனுக்கு அந்த நிலத்தில் நுழையும் உரிமை வந்து சேர்ந்த போதிலிருந்தே அவன் உடைமையிலிருந்ததாகச் சட்டம் கருதும், அவன் அந்த உரிமையைப் பெற்றதற்குப் பின்னர் நிகழ்ந்த அத்துமீறலுக்காக வழக்கிடலாம். இதுவே தொடர்பு வழி அத்துமீறல்என்பதாகும். அதாவது அவனுக்கு நிலத்தின் உடைமையைப் பெற உரிமைவந்த நேரத்திலிருந்து அவனுக்கு நிலத்தில் உடைமை இருந்ததாகக் கணக்கிடப்படுகிறது. எனவே, அவன் தன்னுடைய நிலத்தில் உடைமையிலிருந்து முறையின்றி விலக்கப்பட்டிருந்த காலத்தின் நிகழ்ந்த அத்து மீறலுக்காக வழக்கிடலாம். ஒரு நிலத்தைக் குத்தகைக்கு எடுத்துள்ளவர் தமக்குக் குத்தகைக்கு அந்த நிலம் அளிக்கப்பட்ட காலத்திலிருந்து குத்தகை ஒப்பந்தப்படி அந்த நிலத்தில் நுழையும் காலம்வரை நிகழ்ந்துள்ள அத்து மீறலுக்காக வழக்கிடலாம். இதைப் போலவே குத்தகை முடிவெய்தியதும் நிலத்தில் மீண்டும் நுழைய உரிமையுள்ள நிலச் சொந்தக் காரர் குத்தகை முடிவுற்ற பின்னர் அவர் நிலத்தில் நுழையும் வரையுள்ள இடைக்காலத்தில் நிகழ்ந்த அத்து மீறலுக்காக, நிலத்தில் மீண்டும் நுழைந்தபின் வழக்கிடலாம். அவருக்குடைமை இல்லாதபோது அவருடைய நிலத்தில் நிலையான தன்மையுடைய தீமைகளாகி மரத்தை வெட்டுதல், கட்டிடங்கள் இடித்தல் போன்ற நலன்களைப் பாதிக்கும் செயல் நிகழ்ந்திருந்தால் அவர் வழக்கிடமுடியும்.

எதிர்வாதங்கள்

(1) அனுமதி: வாதியின் நில உடைமையில் எதிர்வாதி குறுக்கிட்ட செயல் நியாயமானதாகவும். முறையாதாகவும் இருப்பின் அது அத்துமீறல் ஆகாது, எனவே, ஒரு நிலத்தின் உடைமை கொண்டவரின் அனுமதியை வெளிப்படையாகவோ, உட்கிடையாகவோ பெற்று அந்த நிலத்தில் நுழைவது அத்துமீறல்

ஆகாது. அனுமதி என்பது அது வழங்கப்பட்ட சொத்தின்மேல் எந்த நலன் உரிமையும் வழங்காமல் இசைவு அளிக்கப்பட்ட செயல்கள் தீங்கானவையாகாது என்று அறிவிக்கின்றது. ஒருவனுக்கு ஒரு சொத்தில் ஒரு செயலைச் செய்ய வெறும் அனுமதி மட்டும் வழங்கப்பட்டிருந்தால் அவர் அந்தச் சொத்தில் அந்த உரிமையும், நலனும் பாராட்ட முடியாது. அனுமதி பெற்றவர் அத்துமீறியவர் அல்லர் என்பதைமட்டுமே அனுமதி குறிக்கின்றது. இவ்வாறு அனுமதி பணம் பெருமலோ, அல்லது மறுபயன் பெற்றோ வழங்கப்படலாம். எவ்வாறு இது வழங்கப்பட்டிருந்தாலும், அனுமதி வழங்குபவர் தமது விருப்பப்படி அனுமதியை விலக்கிக் கொள்ளலாம். இவ்வாறு அனுமதி விலக்கிக் கொள்ளப்பட்டபின் அனுமதியின் அடிப்படையில் எந்தச் செயல் செய்வதும் நியாயமாகாது. இதைப் பற்றியச் சட்டம் இங்கிலாந்தில் பல தீர்ப்புகளில் உருவாகியுள்ளது. இதையொட்டியே நம் நாட்டிலும் இந்திய வசதி உரிமைச் சட்டத்திலும்' (Indian Easements Act, 1882) அனுமதியின் இயல்பு 52-வது பிரிவில் விளக்கப்பட்டுள்ளது.

ஒருவரது நிலத்திலுள்ள மரத்தை வெட்ட மற்றவருக்கு உரிமையளிக்கப்பட்டிருக்காலம். அல்லது திரைப்பட அரங்கில் காட்சியைக் காண ஒருவர் அனுமதிக்கப்பட்டிருக்கலாம். இவை அனுமதிக்கு எடுத்துக்காட்டுக்களாகும். நம் வீட்டிலுள்ள விருந்தினர் நம் அனுமதியுடன் இருப்பவர் ஆவார். இவற்றில் அனுமதி வெளிப்படையாகவே தரப்பட்டிருக்கிறது. இதைத் தவிர அனுமதி உட்கிடையாகவும் அளிக்கப்பட்டிருக்கலாம். இதை நாம் அனுமதி வழங்குவோரின் நடத்தையிலிருந்து உட்கிடையாகத் தெரிந்து கொள்ளலாம். எடுத்துக்காட்டாக ஒருவர், தமது நிலத்தில் மற்றொருவர் ஒரு செயல் செய்வதையோ அல்லது கால்நடை மேய்ப்பதையோ பார்த்துக் கொண்டு வாளாவிருந்தால் அச்செயல் களை அவர் அனுமதித்துள்ளதாக உட்கிடையாகக் கொள்ளலாம். அனுமதி என்பது அதை வழங்கியவர், அதைப் பெறுபவர் ஆகியவர் சம்பந்தப்பட்டது. இதை உரிமைமாற்றம் செய்ய இயலாது. அனுமதி என்பது தனிப்பட்ட முறையில் ஒரு நபருக்கு மட்டும் உரிமையாதலால் அனுமதி பெற்றவர் அச்சொத்தைப்பயன் படுத்துவதற்கு இடையூருக இருக்கும் வேறு நபர் மீது வழக்கிட முடியாது. ஆனால் ஒப்பந்த மீறலுக்காக மட்டும் அனுமதி தந்தவர் மீது வழக்கிடலாம்.

அனுமதியை விலக்கக்கூடாது என்று அவர் அனுமதி தந்தவரோடு ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கலாம். ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு ஒரு குறிப்பிட்ட காரியம் நிறைவேறு முன்னர் வழத்

கப்பட்ட அனுமதியை விலக்கிக் கொள்ளக் கூடாது என்ற ஒப்பந்தமிருப்பின் அக்காலம் முடிவெய்து முன்னர் அனுமதியை அனுமதியை விலக்கிக் கொள்ள முடியாது. அனுமதி பெற்றவர் அச்செயலைச் செய்யத் துவங்கிவிட்ட பின்னர் ஒப்பந்தத்தை மீறி அனுமதியை வழங்கியவர் அனுமதியை விலக்கிக் கொள்ள முனைந்தால் அவரை உறுத்துக்கட்டளை மூலம் தடுக்கலாம். வாதி அனுமதிச்சீட்டு பெற்று எதிர்வாதிகளின் திரைப்பட அரங்கிற்கு திரைப்படக் காட்சியைக் காணச்சென்றார். அவர் அனுமதிச் சீட்டுப் பெறக் கட்டணம் தரவில்லையென்று அரங்கின் மேலாளர் தவருகக் கருதி அவரை அரங்கிலிருந்து கட்டாயமாக வெளியேற்றினர். இதற்கு எதிர்வாதிகள் வாதிக்குக் கணிசமான தீங்கீட்டுத் தொகை தரவேண்டுமென்று ஹர்ஸ்ட் v. பிக்சர் தியேட்டர்ஸ் லிமிடெட் (Hurst v. Picture Theatres Ltd) வழக்கில் தீர்ப்பளிக்கப்பட்டது. இவ்வழக்கில் எதிர்வாதிகள் தன்னை முறையின்றிச் சிறைப்படுத்தியதாகவும், தாக்க முனைந்ததாகவும் வாழ வழக்கிட்டார். இங்கு அவருக்கு ஒரு நலனுடன் உரிமை வழங்கப்பட்டிருந்தது. எனவே அது விலக்கப்பட்டது செல்லத்தக்கதல்ல. குறிப்பிட்ட ஒரு காட்சியைக் காணக் கட்டணம் செலுத்தி எதிர் வாதிகளின் அரங்கினுள் வாதி சென்றிருந்தார். இங்கு அவருக்கு வழங்கப்பட்ட அனுமதி ஒருமணி நேரமோ அல்லது இரண்டுமணி நேரமோ காட்டப்படும் காட்சியைக் காணும் உரிமையாகும் அக்கட்டிடத்தினுள் செல்ல அவருக்குத் தரப்பட்ட அனுமதி அக் காட்சியைக் காணவேயன்றி வேறல்ல. அக்கட்டிடத்திற்குள் போகாமல் அவர் காட்சியைக் காணமுடியாது. அக்காட்சியைப் பார்க்கும் பொருட்டே அக்கட்டிடத்தினுள் செல்ல அவருக்கு அனுமதி அளிக்கப்பட்டது; எனவே இது நலன் இணைந்த அனுமதியாகும். எனவே, துவக்கத்திலிருந்து இறுதிவரைக் காட்டப்படும் திரைப்பட நிகழ்ச்சியை வாதி காண்பதற்காகவே மறுபயன் பெற்று எதிர்வாதிகள் அவருடன் ஒப்பந்தம் செய்து கொண்டிருந்தார்கள். அந்த ஒப்பந்தத்தை எதிர்வாதிகள் மீறியுள்ளார்கள். வாதியை இங்கிருந்து வெளியேற்றியது தீங்காகும். நலன் அல்லது பயன்கூடிய அனுமதியை விலக்க முடியாது. எனவே முறையாகவும், திரைப்பட அரங்கின் நிர்வாகத்தின் விதி கட்குட்பட்டும்நடந்துகொள்ளும் வாதிக்குக் காட்சியை இறுதிவரை காண உரிமையுண்டு. வெறும் அனுமதி மட்டும் வழங்கப்பட்டிருந்தால் அதை எப்போது வேண்டுமானலும் விலக்கிக் கொள்ளலாம். ஆனல் அனுமதியோடு ஒரு நலன் இணைந்திருப்பின் (Licence Coupled With interest) அதை விலக்கிக் கொள்ள முடியாது. எடுத்துக்காட்டாக ஒரு காட்டிலுள்ள மானை வேட்டை

யாடுவதற்கு ஒருவருக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கலாம் இங்கு மாணச்சுடும் செயலைப் பொறுத்தவரை அது வெறும் அனுமதியேயாகும். ஆனால் கொல்லப்பட்ட மாணா அவர் எடுத்துச் செல்லும்வரை அனுமதியை விலக்கிக் கொள்ளமுடியாது. எனவே அதை எடுத்துச்செல்ல அவருக்குப் போதிய காலம் தரப் படவேண்டும். அந்தக்காலம் முடியுமுன்னர் அவரை அத்து மீறியவராகக் கருதக்கூடாது. சில சமயங்களில் அனுமதி விலக்கிக் கொள்ளப்படுமுன்னர் அறிவிக்கையும் (Notice), அனுமதி பெற்றவர் வெளியேறிச் செல்ல போதிய காலமும் தரப்பட வேண்டும்.

உரியகாலம் வருமுன்னே அனுமதி விலக்கிக் கொள்ளப்பட் டிருந்தால். அனுமதி பெற்றவர் அது விலக்கப்படுமுன்னர் சட்டப் படி செய்த செயலின் விளைவுகள் அந்நிலத்தில் தொடர்ந்து ஏற்படுவதைத் தடுக்குமாறு எச் செயலையும் செய்தாகவேண்டும் என்று வற்புறுத்த முடியாது. அதாவது, அனுமதி வழங்கப்பட்ட செயல் செய்யப்பட்டிருந்தால் அனுமதி பெற்றவரை அச்செயலை மாற்றிச் செய்யுமாறு வற்புறுத்த முடியாது. ஓர் இடத்தில் அறிவிப் பினை ஒட்ட ஒருவனுக்கு அனுமதி வழங்கப்பட்டபின் அது விலக்கிக் கொள்ளப் படலாம். ஆனால் முன்பே ஒட்டப்பட்ட அறிவிப்புகளை எடுத்துவிடுமாறு அவரைக் கட்டாயப்படுத்த முடியாது.

2. சட்டம் அளிக்கும் அதிகாரத்தின்படி செய்யப்படும் செயல்கள் அத்துமீறல் ஆகாது. சட்டத்தை நிறைவேற்றும் அதிகாரிகள் ஒருவருடைய நிலத்தில் நுழையவும், அங்குள்ள பொருளை எடுக்கவும், ஆட்களைக் கைது செய்யவும் அதிகாரம் பெற்றுள்ளனர். ஒரு பொதுக்கட்டிடத்தில் சண்டை நடப்பதை யறிந்து அதை விசாரிப்பதற்காகத் திறந்துள்ள கதவின் வழியாக இரவு நேரத்தில் ஒரு காவல் அதிகாரி நுழைந்தால் அது அத்துமீறல் ஆகாது. ஒரு நீதித்துறை அதிகாரி நீதிமுறைக் கட்டளையை நிறைவேற்ற ஒரு தனியார் கட்டிடத்தில் நுழையலாம். எடுத்துக் காட்டாக நீதிமன்றத்தின் பிடியாணையின்படி ஒரு கடனாளியைக் கைது செய்ய அவர் வீட்டினுள் நுழையலாம். அது அத்துமீறல் ஆகாது. ஆனால் அவர் ஒரு நபரைக் கைதுசெய்ய வேறொருவரின் இல்லத்தில் நுழைந்தால் அவருக்கு கடும் பொறுப்பு ஏற்படலாம் கைது செய்யப்படவேண்டிய நபர் அங்கிருந்தால் அவர் அங்கு சென்றது முறையானதாகும். இல்லையேல் அது அத்துமீறல் ஆகும். சில சமயங்களில் அதிகாரிகளைத் தவிர தனிப்பட்ட நபர் களும் ஒரு குற்றவாளியைக் கைது செய்யலாம். ஒருவன் தன்

மனைவியைக் கொலை செய்வதைத் தடுக்க அவனுடைய வீட்டில் மற்றொருவன் நுழைந்தால் அது அத்துமீறலாகாது.

அடிமுதலே அத்துமீறல் (Trespass ab initio)

ஒருவன் ஒரு கட்டிடத்தில் சட்டப்படி அதிகாரத்துடன் நுழைந்த பின்னர் தீங்கான செயல் செய்து அதிகாரத்தை முறையின்றிப் பயன்படுத்தினால் அவன் அச்சொத்தில் அடிமுதல் அத்துமீறியவனாகக் கருதப்படுவான். அவன் தன்னுடைய உரிமையைத் தவருகப் பயன்படுத்திய வினாடிவரை எவ்வளவுதான் அவனுடைய நடத்தை முறையானதாக அமைந்திருப்பினும் அவன் செயல் முதலிலிருந்தே சட்டத்திற்கு முரணானதாகக் கருதப்படும். எனவே தின்பண்டங்களை உண்பதற்காக ஒரு உணவு விடுதியில் நுழையவும், அத்துமீறிய விலங்குகளை அடைத்து வைக்கவும், ஒருவன் காவல் அதிகாரியாக இருந்தால் களவு செய்ததாக ஐயம் ஏற்பட்டுள்ள ஒரு நபரைச் சோதனையிடவும் சட்டம் அனுமதிக்கிறது. ஆனால் அவன் உணவு விடுதியிலுள்ள பொருளைக் களவாடினாலோ, அல்லது அடைத்து வைக்கப்பட்டுள்ள அத்துமீறிய விலங்கைக் கொன்றாலோ, அல்லது காவலர் சோதனையிடும்போது தேவையற்ற வன்முறையைப் பயன்படுத்தினாலே அச் செயல் அதிகாரம் அளிக்கப்படாததாகவே கருதப்படும்.

ஆறு தச்சர்கள் வழக்கில் (The Six Carpenters Case) ஆறு தச்சர்கள் ஒரு உணவு விடுதியில் நுழைந்து எட்டு பென்ஸ் மதிப்புள்ள ரொட்டியும் மதுவும் கேட்டு வாங்கினர். அவர்கள் அந்த ரொட்டியைத் தின்று மதுவைக் குடித்து, பின்னர் அவற்றிற்குப் பணம் தரவில்லை. இங்கு அவர்கள் பணம்தர மறுத்த செயலால் அவர்கள் உணவு விடுதியில் முதலில் நுழைந்த செயல் தீங்காகுமா? என்ற கேள்வி எழுந்தது. இவ்வழக்கில் அவர்கள் அடிமுதல் அத்துமீறல் இழைத்தவர்கள் ஆகமாட்டார்கள் என்று தீர்மானிக்கப்பட்டது. இங்கு அவர்கள் தீங்கான செயலைச்செய்யவில்லை. இங்கு வெறும் செயல் தவிர்ப்பே இருந்தது. அது அடிமுதல் அத்துமீறல் ஆகாது. இவ்விதி சட்டப்படி ஒருவருக்குக் கொடுக்கப்பட்டுள்ள அனுமதி, அதிகாரம், நுழைவு ஆகியவற்றின்படி செய்யப்படும் செயல்களுக்கு மட்டுமே பொருந்தும். சட்டப்படி எதிர்வாதிக்கு வழங்கப்பட்டுள்ள அனுமதி அல்லது அதிகாரத்தை அடுத்து அவனால் செய்யப்படும் செயல்களைக் கொண்டு அவன் எந்தக் கருத்தோடு நுழைந்தான் என்று முடிவு செய்யப்படுகிறது. ஒருவனது புறச்செயல் அவனது மறைவான உட்கரும்

தைப் புலப்படுத்துகிறது. (Acta exteriora indicant interioar secreta) அவன் தீங்கான முறையில் செய்யும் செயல்கள் மூலமாகவே அதிகாரத்தை முறையின்றிப் பயன்படுத்தியிருக்கவேண்டும். அப்போதுதான் இவ்விதி பொருந்தும். செயல் தவிர்ப்புக்கு இவ்விதி பொருந்தாது. அதாவது செல்லத்தக்க செய்யாமைக்கு இவ்விதி பொருந்தாது. எனவே ஆறு தச்சர்கள் வழக்கில் அவர்கள் வாதியின் உணவு விடுதியில் வாங்கி அருந்திய ஒயினுக்கும் ரொட்டிக்கும் விலைகொடுக்க மறுத்தது வெறும் செய்தக்க செய்யாமையேயாகும். எனவே, அவர்கள் அடிமுதலே அத்துமீறியவர் அல்லர் என்று முடிவு செய்யப்பட்டது.

சட்டப்படி நுழைந்தவர் முறையின்றி நடந்துகொண்டது அவர் அங்கு நுழையவே காரணமோ, நியாயமோ எள்ளளவும் கிடையாது என்று சொல்லத்தக்க விதத்தில் இருக்கவேண்டும். அவ்வாறு அவர் வரம்பு மீறி நடந்துகொண்ட முறையற்ற செயலைத் தவிர அங்கு நுழைய அவருக்குத் தனிப்பட்ட வேறொரு காரணமோ நியாயமோ இருப்பின் அவர் அடிமுதல் அத்துமீறல் செய்தவர் ஆகமாட்டார். எலியாஸ் v. பாஸ்மோர் (Elias v. Pasmore) வழக்கில் காவல் அதிகாரிகள் சட்டப்படி வாதிகளில் ஒருவரைக் கைது செய்ய ஒரு கட்டிடத்தில் நுழைந்தார்கள் அவர்கள் அங்கிருந்த ஆவணங்களை அவர்கள் எடுத்துக்கொண்டது முறையானதாகவும், சில ஆவணங்களை எடுத்துக்கொண்டது முறையற்றதாகவும். கருதப்பட்டது, எனவே, முறையில்லாமல் எடுக்கப்பட்ட ஆவணங்களைப் பொறுத்தவரை அவர்கள் அத்துமீறியவர்கள் ஆவார்கள் என்று தீர்ப்பளிக்கப்பட்டது. கைது செய்வதற்காகச் சட்டத்திற்குகந்த முறையில் அவர்கள் கட்டிடத்தில் நுழைந்தபடியால் அவர்கள் அக்கட்டிடத்தைப் பொறுத்தவரை அடிமுதலே அத்துமீறியவர்கள் ஆகமாட்டார்கள் என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

நிவாரணங்கள்

அத்துமீறலுக்காக தீங்கீடு, நிலச்சொத்தை மீட்டுப்பெறல், உரிமைபற்றி விளம்பல் (declaration), உறுத்துக்கட்டளை ஆகிய நிவாரணங்களை நாடி ஒருவர் உரிமை வழக்கிடலாம். இதைத் தவிர குற்றமாகும் அத்துமீறலுக்காக குற்றவழக்கிடலாம், மற்றும் குற்ற இயல் நடைமுறைச் சட்டத்தில் 145-ன் பிரிவின் கீழும் வழக்கிடலாம்.

மீண்டும் நிலத்தில் நுழைதல் : ஒருவர் அத்துமீறி நிலத்தில் நுழைந்திருந்தால் உரிமை இழந்தவர் அதை மீண்டும் பெற அத்துமீறி நுழைந்தவரைத் தகுந்த முறையில் பலவந்தமாக வெளியேற்ற

லாம். ஆயினும் அவர் அளவு கடந்து வன்முறையைப் பயன் படுத்தக்கூடாது.

குறித்த நிவாரணச்சட்டம் 1963-ன்படி நிலத்தில் ஆக்கிர மித்தவரை வெளியேற்ற நீதிமன்றத்தில் வழக்கிடலாம். இதில் சொல்லப்பட்டுள்ள நிவாரணத்தின்மூலம் ஒருவன் நிலத்தில் தனக்குள்ள உரிமையை நிலைநாட்டாமலேயே தான் இழந்து விட்ட உடைமையை மீட்டுப்பெறமுடியும். எதிர்வாதி அத்து மீறியபோது உடைமை தன்னிடம் மட்டுமே உண்மையில் இருந்த தாக வாதி நிரூபித்தால் போதும். இந்த வழக்கின் தீர்ப்புக்கெதி ராக அப்பீல் செய்யமுடியாது. சட்டப்படியில்லாமல் ஒருவரை அவருடைய உடைமையில் இருக்கும் நிலத்திலிருந்து வெளி யேற்றினால் அவரோ அல்லது அவர் மூலம் பாத்தியதை கொண்ட வர்களோ நீதிமன்றத்தில் வழக்கிட்டுத் தமது உடைமையை மீட்டு பெறலாம், அவர் நிலத்தின் உடைமையிலிருந்து அகற்றப்பட்ட ஆறு மாதங்களுக்குள் வழக்கிடவேண்டும். ஒருவனுக்கு ஒரு நிலத்தில், மேலான உரிமை இருப்பினும், நீதிமன்றத்தின் துணை யின்றி அந்நிலத்திற்கு உடைமை கொண்டவரிடமிருந்து உடை மையைப் பறிக்க முடியாது. அவ்வாறு செய்தால் அவர்மேல் வழக்கிட்டு உடைமையை இழந்தவர் தமது உடைமையை மீட்டுப் பெறமுடியும், வாதி குறிப்பிட்ட நிலம் தனது உடைமையிலிருந்த தாகவும், சட்டத்திற்கு முரணான வகையில் எதிர்வாதி அதிலிருந்து தன்னை வெளியேற்றியதாகவும், தான் வெளியேற்றப் பட்ட வேளையிலிருந்து ஆறு மாதங்களுக்குள் வழக்கிட்டுள்ள தாகவும், வழக்கில் நிரூபிக்க வேண்டும். அத்துமீறி நுழைபவர் இச்சட்டத்தின் துணையை நாடமுடியாது. ஒருவருடைய உடை மையில் உள்ள கட்டிடத்தில் அவர் ஊரில் இல்லாதபோது மற்றவர் நுழைந்து ஆக்கிரமித்துக்கொண்டிருந்தால், அத்துமீறிக் கட் டிடத்தில் உள்ள அவரை உடைமை கொண்டவராகக் கருத முடியாது.

குற்ற இயல் நடைமுறைச்சட்டத்தின் 145 ஆவது பிரிவின்படி அமைதியைக் குலைக்கக் கூடிய முறையில் நிலம் அல்லது நீரைப் பற்றி ஒரு தகராறு இருப்பதாக குற்றத்துறை நீதிபதி தகவல் அறிந்தால் அந்நிலம் யாருடைய உடைமையில் உள்ளது என்று தீர்மானிக்க விசாரணை நடத்தலாம். உடைமையைப் பறிகொடுத் தவர் அதிலிருந்து இரண்டு மாதங்களுக்குள் குற்றவியல் நீதி மன்றம் மூலம் தம் உடைமையை மீட்டுப் பெறலாம். இதில் தோல்வியுற்றால் குறித்த நிவாரணச் சட்டத்தின் கீழ் தமது உரிமையை நிலைநாட்ட வழக்கிடலாம்.

இடைக்கால வருமானம் (Mesne Profits) அத்துமீறி நிலத்தில் நுழைந்தவரை வெளியேற்றுவதோடு, நிலத்தின் உடைமையை முறையின்றி இழந்தவர் தாம் அவ்வாறு உடைமையை இழந்திருந்த காலத்தில் தமக்கேற்பட்ட இழப்புக்கு ஈடு பெறலாம். இந்த இடைக்காலத்தில் அத்துமீறி நுழைந்தவர் பெற்றுள்ள முறையற்ற வருமானத்தை அவரிடமிருந்து பெற வழக்கிடலாம். இங்கு அத்துமீறி நிலத்தில் இருந்தவர் உண்மையில் பெற்ற வருமானத்தையோ, அல்லது அவர் சாதாரண அக்கறை காட்டியிருந்தால் அந்தக் காலத்தில் பெற்றிருக்கக் கூடிய ஆதாயத்தையோ தான் இந்த வருமானம் குறிப்பிடுகிறது. எதிர்வாதிதான் நிலத்தில் பயிர்செய்யவில்லை யென்றும், அதனால் தனக்கு வருமானம் எதுவும் கிடைக்கவில்லையென்றும் வாதிட முடியாது.

36. அசைவியல் சொத்து குறித்த தீங்குகள் (wrongs to movable property)

வாதியின் உடைமையில் உள்ள அசைவியல் அல்லது சங்கமச் சொத்தில் முறையின்றி எதிர்வாதி நேரடியாகக் குறிக்கிடும் செயலையே அத்துமீறல் என்கிறோம். வாதி அத்துமீறலுக்காக வழக்கிடும்போது (1) தான் ஒரு சொத்திற்கு உடைமை கொண்டிருந்ததாகவும், (2) சட்டத்திற்குகந்த நியாயமின்றி எதிர்வாதி, இந்த உடைமையில் குறுக்கிட்டதாகவும் நிரூபிக்க வேண்டும்.

சங்கமச் சொத்து அல்லது அசைவியல் சொத்தில் நிலம், நிலத்தோடு இணைந்த பொருள்கள், அவற்றுடன் நிலையாக இணைக்கப்பட்ட பொருள்கள் ஆகியவை நீங்கலாக எல்லா வகைப் பருப் பொருள்களும் அடங்கும். எடுத்துக்காட்டாக கால்நடை, வீட்டில் வளர்க்கப்படும் விலங்குகள், ஆடை நாற்காலி, நாணயம், காசோலை, ஆவணம் முதலியன. இவை தவிர காற்று, வாயு, மின்சாரம் ஆகியவையும் இதில் அடங்கும்.

இவற்றிற்குச் செய்யப்படும் அத்துமீறல் பல வகைப்படும் அத்துமீறலுக்காக வழக்கிடும் வாதி அதனால் தனக்கு இழப்பு அல்லது ஊறு ஏற்பட்டதென நிரூபிக்கத் தேவையில்லை. வாதியின் உடைமையிலுள்ள பொருளை எதிர்வாதி தொட்டாலும், நகர்த்தினாலும் அது அத்துமீறலே யாகும். ஒருவருடைய காரிலிருந்து சச்கரத்தை அகற்றுதல், அது வைக்கப்பட்ட இடத்திலிருந்து அதை அகற்றுதல், வாணிகச் சரக்கிற்கு ஊறு விளைவித்தல், அவற்றை அழித்தல், விலங்குகளை அடித்தல், அவற்றைக் கொல்லுதல், அவற்றிற்கு நோய் தொற்றச் செய்தல், சிற்பங்களைச் சிதைத்தல், ஓவியங்களில் கிறுக்குதல் முதலியன அத்துமீறலாகும். வாதிக்கு இவ்வாறு ஏற்படும் ஊறு நேரடியானதாக

இருக்கவேண்டும். வேறு ஏதாவது ஒரு செயலின் விளைவாக ஊறு ஏற்பட்டிருந்தால், அது அத்துமீறலாகாது. கவனமின்றி ஒரு பொருளுக்கு ஊறு விளைவிக்கப்பட்டிருந்தாலும், அது நேரடியான செயலாயின் அத்துமீறலேயாகும். அத்துமீறல் செய்பவர் பொருள்களை உடலால் தொட்டிருக்கத் தேவையில்லை. கால்நடைகளை மிரட்டி, விரட்டி அடித்தலும் அத்துமீறலேயாகும். ஒரு நாயின் தொண்டை வழியாக நஞ்சைத் திணிப்பதற்குப் பதிலாக அதை நாய் எடுத்துக்கொள்ளக்கூடிய இடத்தில் வைத்து, அதை நாய் உட்கொள்ளச் செய்தலும் அத்துமீறலேயாகும். வேண்டுமென்றே ஒருவர் கருதியே ஒரு பொருளைத் தொடுவாராயின் அது அத்துமீறல் ஆகும். எடுத்துக்காட்டாக, ஓவியக் கண்காட்சி, பொருட் கண் காட்சி ஆகியவற்றிலுள்ள பொருள்களையும், ஈரமான பெயிண்ட், அரக்கு வேலைப்பாடு ஆகியவற்றையும் தொடுவது அத்துமீறலாகக் கருதப்படாவிட்டால் அவற்றை உடையவருக்கு நிவாரணம் இல்லாது போய்விடும். ஆனால் வாதிக்குஎதிர்வாதியின் அத்துமீறலால் எந்த ஊறு அல்லது நட்டமும் ஏற்படவில்லையென்றால் அவருக்குப் பெயரளவு இழப்பீடுதான் கிடைக்கும். பொருட் காட்சி சாலையிலுள்ள அரிய கலைப் பொருட்களைக் காக்க சட்டம் இவ்வாறு இருத்தல் தேவையாகும். அதிகாரம் இன்றி ஒருவர் ஒரு பொருளைத் தொடுவதும், நகர்த்துவதும் அத்துமீறலே. எனவே, நாடாவில் ஒலிப்பதிவு செய்யப்பட்ட ஓசையை அதிலிருந்து அழித்தலும், அதிகாரம் பெறுத ஒருவருக்கு ஒரு வருடைய தனிப்பட்ட கடிதங்களைக் காட்டுதலும் அத்துமீறலேயாகும். ஒருவர் தனக்கு உரிமை இருக்கிறது என்று தவருக நம்பி மற்றவருடைய பொருளை எடுத்துக் கொண்டால் அவர்மேல் அத்துமீறலுக்காக வழக்கிடலாம். வில்சன் v.லாம்பேங்க் லிமிடெட் (wilson v. Lombank Ltd.) வழக்கில் வாதி ஒரு காரை அதற்கு உரிமையில்லாத ஒருவரிடமிருந்து விலைக்கு வாங்கினார். அதைப் பழுதுபார்க்க ஒரு பட்டறைக்கு அனுப்பினர். எதிர்வாதி தவருக அக் காரைத் தன்னுடையது என்று நம்பி அங்கிருந்து எடுத்துச் சென்றுவிட்டார். இவ்வழக்கில் வாதிக்கு உடைமை இருந்தது என்றும், எதிர்வாதி அத்துமீறலுக்குப் பொறுப்பாவார் என்றும் தீர்ப்பளிக்கப்பட்டது.

அத்துமீறல் என்பது ஒருவருடைய உடைமையில் குறுக்கிடும் செயல் ஆகையால், எதிர்வாதி குறுக்கிட்டபோது வாதிக்கு உடைமை இருந்ததென நிரூபிக்கவேண்டும். வாதிகையாடலுக்கும் எதிர்வாதிமேல் வழக்கிடலாம் என்றாலும் இரண்டும் வெவ்

வேருனவை. அத்துமீறல் உடைமையை அடிப்படையாகக் கொண்டது. கையாடல் சொத்தின்மீது உள்ள உரிமையை அடிப்படையாகக் கொண்டது. ஒரு பொருளுக்கு உரியவர் அதைத் தொலைத்துவிட்டால் அதைக் கண்டெடுப்பவர் அப் பொருளுக்கு உடைமை பெறுகிறார். எனவே, அப்பொருளுக்கு உரியவர் தவிர மற்றவர் அதை அவரிடமிருந்து எடுத்துக் கொண் டால் அவர் அத்துமீறலுக்காக வழக்கிடலாம்.

ஒருவருக்கு ஒரு பொருளின்மீது உடைமை இருந்தால்தான் அதில் குறுக்கீடு ஏற்பட்டதாக வழக்கிட முடியும். ஆகவே, ஒருவர் தன்னுடைய உடைமையில் இல்லாத பொருளின் உரிமை யாளராக இருப்பினும் அத்துமீறலுக்காக வழக்கிட முடியாது. ஒரு பொருளுக்கு உரியவராக ஒருவர் இல்லாவிட்டாலும் அவர் அப் பொருளை ஒப்படைவாகப் பெறுபவராகவோ, அல்லது முறையின்றி அப்பொருளுக்கு உடைமை பெற்றவராகவோ இருந்தாலும் வழக் கிடலாம். அத்துமீறியவர் வாதிக்கு உரிமை உண்டென்பதை மறுத்தோ அல்லது மூன்றாமவருக்கு உரிமை உண்டென்று வாதிட்டோ பொறுப்பிலிருந்து தப்பமுடியாது. எனவே, வாதி குறுக்கீடு இருந்ததாக சொல்லும் காலத்தில் அப்பொருளுக்கு உண்மையில் உடைமை பெற்றிருக்கவேண்டும். ஆயினும் இதற்கு சில விதிவிலக்குகள் உண்டு. உடைமை இல்லாத பொறுப்புரிமை யர் (Trustee) தனக்கு உடனே உடைமை பெறும் உரிமை இருப் பதைக் கொண்டு மூன்றாவது நபர்களுக்கு எதிராக அத்துமீறல் வழக்கிடலாம். உயிலின் வாசகங்களையும் நிபந்தனைகளையும் நிறை வேற்றுபவர் சொத்துக்குரியவர் இறந்த பின்னர், விருப்புறுதி மெய்ப்பிதழோ, நிர்வாகப் பத்திரமோ நீதி மன்றம் வழங்கும் முன்னர் அவரது சொத்துகளில் அத்துமீறியதற்காக வழக்கிட லாம். ஒரு பொருளை எடுத்துக் கொள்ளச் சிறப்புரிமை கொண் டவர் அப்பொருளை அவர் கைப்பற்று முன்னர் நிகழ்ந்த அத்து மீறலுக்காக வழக்கிடலாம். விருப்பமுடிவு ஒப்படைவில் ஒப்படை செய்தவர் உடைமையை இழப்பதில்லை. எனவே, மூன்றாவது நபர் மீது அத்துமீறியதற்காக வழக்கிடலாம். ஆனால் ஒப்படைவு பெறுபவர்மேல் வழக்கிடமுடியாது. எதிர்வாதி மூன்றாமவர்உரிமை யின் கீழ் செயல்பட்டிருந்தால்தான் மூன்றாமவர் உரிமை எனும் எதிர்வாதத்தைச் சொல்ல முடியும். முறையின்றி ஒரு பொருளின் மீது உடைமை கொண்டவர், உரிமை இல்லாதவர் அத்துமீறல் செய்தால் வழக்கிடலம்.; ஆனால் பொருளின் சொந்தக்காரர் மீதோ அல்லது அவர் அதிகாரத்தின் கீழ் நடந்து கொள்பவர் மீதோ வழக்கிட முடியாது. எனவே, பொருட்களை ஒருவர் தமது

நேரடியான உடைமையில் வைத்திருக்கலாம், அல்லது தனது பணியாள், முகவர், ஒப்படைவு பெறுவர் மூலமாக உடைமை கொண்டிருக்கலாம். ஒரு பொருளின் உடைமையை இழந்தவர் அத்துமீறலுக்காக வழக்கிட முடியாது. அத்துமீறல் உடைமைக் கெதிரான தீங்காகையால், பொருளில் உடைமையுள்ளவரே வழக்கிட முடியும்.

ஒருவர் சட்டப்படி உள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி வாதியின் பொருட்களைப் பற்றுகை செய்திருந்தாலும், அத்துமீறிய பொருட்களை அடைத்து வைத்திருந்தாலும் அத்துமீறல் ஆகாது. ஒருவர் தன்னையோ அல்லது தன்னுடைய சொத்தையோ காப் பாற்ற மற்றவருக்குரிய சொத்திற்கு ஊறு விளைவித்திருந்தாலும்அது அத்துமீறல் ஆகாது. தவிர்க்கமுடியாத விபத்து அசை பொருளின் மீது அத்துமீறலுக்கான வழக்கில் எதிர்வாதமாக ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கிறது. இதற்கு எடுத்துக்காட்டாக நேனஷல் கோல் போர்டு v. ஈவான்ஸ் வழக்கைச் சொல்லலாம்

இதைத் தவிர வாதி தனக்குரிய பொருளை எதிர்வாதி முறை யின்றி எடுத்துக் கொண்டிருந்தால் அதற்கர்க வழக்கிடலாம். வழக்கிடும்போது வாதியின் உடைமையில் அப்பொருள் இருக்க வேண்டும். வாதியின் பொருளை எதிர்வாதி திரும்பத் தர வேண்டும் அல்லது அதற்காக சரியீடு தரவேண்டும். இந்தி யாவில் குறித்த நிவாரணச் சட்டத்தின் கீழ், குறித்த அசைவியல் சொத்தை மீட்டுப் பெற வழக்கிட வகை செய்யப்பட்டுள்ளது.

அத்துமீறல் செய்யப்பட்ட பொருளை வாதி பலவந்தமாக எதிர்வாதியிடமிருந்து எடுத்துக் கொள்ளலாம். இது நீதிமன்றத் திற்கு செல்லாமல் பெறக்கூடிய நிவாரணம் ஆகும். மற்றும் அவன் நீதிமன்றத்தில் வழக்கிட்டு எதிர்வாதியிடமிருந்து அத்து மீறலுக்காகத் தீங்கிடு பெறலாம்; தொடர்ந்து நிகழும் அல்லது நிகழக் கூடிய அத்துமீறலைத் தடுக்க உறுத்துக்கட்டளை பெறலாம், அத்துமீறலால் பொருள் முழுவதும் அழிக்கப்பட்டிருந்தால் அதன் மொத்த மதிப்பையும் அவன் தீங்கீடாகப் பெறலாம். இழப்பு எதுவும் ஏற்படாமல் உரிமை மட்டும் மீறப்பட்டிருந்தால் அவனுக்குப் பெயரளவு இழப்பீடே கிடைக்கும். எதிர்வாதியால் வேண்டுமென்றே திமிராக அத்துமீறல் செய்யப்பட்டிருந்தால் எச்சரிக்கையாக சரியீட்டுத் தொகையைவிட அதிகமான தொகையை வாதிக்கு இழப்பீடாக நீதி மன்றம் அளிக்கும்.

கையாடல் (Conversion)

ஒருவருக்குச் சொந்தமான பொருட்களில் அவரது உரிமை களுக்கு எதிராக மற்றவர் சட்டமுரணான வகையில் குறுக்கிட்டு

உடைமையையும் பயனையும் இழக்கச் செய்யும் செயலையே கையாடல் என்கிறோம். இதில் இரு கூறுகள் இணைந்துள்ளன. (1) ஒரு பொருளுக்குச் சொந்தமானவரின் உரிமைக்கு மூரணான வகையில் அப்பொருளைக் கையாளுதல், (2) அவ்வாறு செய்வதன் மூலம் அவரது உரிமையை மறுத்தல் அல்லது அவரது உரிமைக்கு முரணானதோர் உரிமையைக் கூறுதல் ஆகிய நோக்கம் கொண்டிருத்தல். அதாவது அப்பொருள்மீது வாதிக்குள்ள உரிமையை மறுக்கும் கருத்தோடு எதிர்வாதி அதைக் கையாண்டு இருக்க வேண்டும். வாதியின் பொருளை அவரிடம் கொடுக்க மறுத்தல், அவரது பொருளை எதிர்வாதி தானே பயன்படுத்துதல், அதை உண்ணுதல், அப்பொருளை மூன்றாவது நபருக்குக் கொடுத்தல், அதைஅழித்தல்,அதை அடையாளம் கண்டுபிடிக்கமுடியாதவாறு நாசம் செய்தல் அல்லது வாதி அவற்றை உடைமை கொள்ளவும் பயன்படுத்தவும் இயலாதவாறு செய்தல் ஆகியவற்றைக் கையாடலுக்கு எடுத்துக்காட்டுகளாகக் கூறலாம். கையாடலாக அமைந்த செயல்முறையற்ற குறுக்கீடாக அமைந்திருக்க வேண்டும், அதன் விளைவாக வாதி ஒரு பொருளை இழக்க நேர்ந்தால், எதிர்வாதிக்கு உண்மையிலேயே கையாடும் நோக்கம் இல்லையெனினும் பொறுப்பாளியாவார். ஆனால் அவர் வேண்டுமென்றே அல்லது முறையின்றியோ குறுக்கிட்டிராவிட்டால் கையாடலாகாது.

ஒரு பொருளை முறையின்றி எடுத்தலும், கொடுத்தலும் விற்றலும், அழித்தலும், வைத்துக்கொள்ளுதலும், உரியவர் உரிமையை மறுத்தலும் கையாடல் செயல்கள் என்று சொன்னோம். இனி அவற்றைப் பற்றி விரிவாகக் காண்போம்.

1. முறையின்றி எடுத்துக் கொள்ளுதல்

சட்டப்படியான காரணம் ஏதும் இல்லாமல் மற்றவர் உடைமையில் உள்ள பொருளை ஒருவர் நிலையாகவோ, அல்லது தற்காலிகமாகவோ தமதாக்கிக் கொள்ளும் கருத்துடன் எடுத்துக் கொள்வதை இது குறிக்கும். ஒருபொருளுக்குச் சொந்தமுடையவர் அதை எப்போதும் பயன்படுத்தும் உரிமையுடையவர். அவரிடமிருந்து அப்பொருளை எடுத்துக்கொள்ளும் செயல்மட்டும் கையாடல் ஆகாது. ஒருவர் தலையிலுள்ள தொப்பியைப் பறித்து அதைமற்றவர் மீது எரிந்தால் அது கையாடல்அல்ல;அத்துமீறலே,ஏனெனில் தொப்பியின் மீதுள்ள உரிமை மறுக்கப்படவில்லை. ஆனால் அவரிடமிருந்து தொப்பியைக் களவு செய்யும் நோக்கத்துடன் எடுத்திருந்தால் அது அத்துமீறலும்,கையாடலும் ஆகும். ∴போல்டஸ் v. வில்லபி

(Fouldes *v.* Willoughby) வழக்கில், எதிர்வாதி சரக்கேற்றிச் செல்லும் படகொன்றின் மேலாளர். அப்படகில் வாதி தம் குதிரைகளை ஏற்றினர். வாதிக்கும் எதிர்வாதிக்கும் தகராறு ஏற்பட்டது. படகில் இறங்கச் செய்வதற்காக அவரது குதிரைகளை எதிர்வாதி முறையின்றி இறக்கிச் சாலைக்கு விரட்டிவிட்டார். வாதி படகிலேயே இருந்து கொண்டார். அப்படகிலேயே அவர் ஆற்றின் மறுகரைக்குச் சென்றார். பின்னர் அவர் எதிர்வாதியின் செயல் கையாடல் ஆகும் என வழக்கிட்டார். இவ்வழக்கில் எதிர்வாதி அத்துமீறலுக்குப் பொறுப்பாளியாகலாமே தவிர, கையாடல் செய்தவராக ஆக மாட்டார் என்று தீர்ப்பளிக்கப்பட்டது. வாதியின் உரிமையை எதிர்வாதி இறுதிவரை மறுக்கவில்லை; அதை அவர் ஏற்றுக் கொண்டார். ஒரு பொருளை ஓரிடத்திலிருந்து வேறோர் இடத்திற்கு அகற்றியதைத் தவிர அதை மேலும் பயன்படுத்தும் நோக்கம் அவருக்கில்லாததால் அவர் கையாடல் செய்தவர் ஆக மாட்டார்.

ஒரு பொருளை எடுத்துக் கொண்டவர் அதைத் திருப்பித் தர முடியாத சூழ்நிலை ஏற்பட்டதென்று சொன்னால் நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளாது. எதிர்வாதி தற்காலிகமாக முறையின்றி ஒரு பொருளை எடுத்துக் கொண்டார் என்று வைத்துக் கொள்வோம். அதை நிலையாக வைத்துக் கொள்ளும் நோக்கம் தனக்கில்லை என்றும், மூன்றாவது நபர் ஒருவரின் முறையற்ற செயலால் அப் பொருள் அழிந்து போய்விட்டதாகவும், அதனால் அப்பொருளைத் தம்மால் திருப்பித் தர இயலாமல் போயிற்று என்றும் கூறினால் நீதி மன்றம் ஏற்காது. முறையின்றி ஒருவருடைய உடைமையில் உள்ள பொருள் ஒன்றைப் பறிப்பவர் தம்முடைய பொறுப்பிலேயே அப்பொருளை வைத்திருக்க வேண்டும். மெக்கோம்பி *v.* டேவிஸ் (M'combie *v.* Davies) வழக்கில் ஒருவருக்குரிமையான பொருளை அவருடைய முகவரிடமிருந்து இன்னொருவர் உரிமைமாற்றம் பெற்றார். ஆனால் அந்த முகவருக்கு அவ்வாறு மாற்றித்தரும் அதிகாரம் இல்லாதிருந்தது. அப்பொருளை முகவரிடமிருந்து பெற்றவர் அப்பொருளுக்குரிய முதல்வர் திருப்பித் தருமாறு கேட்டு அறிவிக்கை கொடுத்தும் தர மறுத்தார்; அவர் கையாடல் செய்ததாகக் கருதப்பட்டது.

1. முறையின்றி எடுத்துக் கொள்ளுதல்

ஒரு பொருளின் உரிமையாளருக்கோ அல்லது அதன் உடைமையைப் பெற உரிமையுள்ளவருக்கோ எதிராக ஒருவர் அதைத் தம்மிடமே வைத்துக்கொள்ளுதல் கையாடல் ஆகும். அதாவது வாதியின் விருப்பத்திற்கு முரணாக எதிர்வாதி அப்பொருளைத் தம்மிடமே

வைத்துக்கொள்ளும் நோக்கம் பெற்றிருக்க வேண்டும். எவ்வித உரிமை இல்லாவிடினும் ஒரு பொருளைத் தம் வசத்தில் வைத்திருப்பதுமட்டுமே கையாடல் ஆகாது. தன்னிடம் ஒப்படைவில் உள்ள பொருளை அதன் காலக்கெடு முடிந்தும் ஒப்படைவு பெறுபவர் வைத்திருந்தால் ஒப்பந்தத்தை மீறியதற்கு வேண்டுமானால் பொறுப்பாவார்; தீங்கியலில் பொறுப்பாளியாக மாட்டார். அவருக்கு அப்பொருளைத் தானே வைத்துக் கொள்ளும் நோக்கம் இருக்கவில்லை; தொலைந்துபோன பொருள் ஒன்றைக் கண்டெடுத்தவர் அதை எவ்வளவு காலம் தம்மிடமே வைத்துக் கொண்டிருந்தாலும், உரிமையாளருக்கெதிராகத் தானே வைத்துக் கொள்ளும் நோக்கம் இல்லாதவரை, பொறுப்பாளியாக மாட்டார். எதிர்வாதியிடம் அப்பொருளைத் திருப்பித் தருமாறு அவர் கேட்டதாகவும், எதிர்வாதி மறுத்துவிட்டதாகவும், நிரூபிக்கப்பட வேண்டும். வழக்கிடு முன்னர் வாதி இவற்றைச் செய்திருக்க வேண்டும். வாதி அப்பொருளை "நான் தர மறுக்கிறேன்" என்று சொல்லியிருக்க வேண்டியதில்லை. அப்பொருளின் உரிமையாளர் அறியும்படியாக அவரது உரிமைக்கெதிரான உரிமை இருப்பதாகக் கூறியிருக்கலாம் அல்லது தமது நடத்தையின் மூலமாகத் தமது மறுப்பினை காட்டியிருக்கலாம். எடுத்துக்காட்டாக, ஒரு கிடங்குச் சொந்தக்காரர் அப்பொருளுக்குரியவர் திருப்பித் தருமாறு கேட்ட பின்னரும் தனது கிடங்கைப் பூட்டிக்கொண்டு போய் விடுதலைச் சொல்லலாம். கேட்டலும், மறுத்தலும் கையாடலுக்குச் சான்றாகும். ஆனால் கிடங்குச் சொந்தக்காரர் தமது கிடங்கில் அப்பொருளை வைத்திருந்ததற்கு கூலியோ, அல்லது சரக்கேற்றிச் சென்றதற்குக் கட்டணமோ தருமுன்னர் அப்பொருளைத் தர முடியாது என்று மறுத்தாலும், அப்பொருளின் சொந்தக்காரர் தமது உரிமையை நிலைநாட்ட ஆவணங்களைக் காட்டுமாறு கேட்டாலும், பொருளுக்குரியவரின் உரிமையை மறுத்தல் ஆகாது. அவர் தெளிவாகவும், எந்த நிபந்தனையுமின்றி அந்த பொருளைத் திருப்பித்தர மறுத்திருந்தால் அது கையாடலுக்கு முடிவான சான்றாகும்.

2. முறையின்றி வைத்துக் கொள்ளுதல்

ஒரு பொருளைக் கண்டெடுத்தவர் அதை வைத்துக் கொள்ளலாம் என்ற கூற்றில் பாதி உண்மையே இருக்கிறது, ஒரு பொருளைக் கண்டெடுத்தவர் அதன்மீது உரிமைப் போராட்டச் சட்டம் எத்தனையோ நிபந்தனைகளை விதிக்கிறது. ஒரு பொருளின் உண்மையான உரிமையாளனைக் கண்டுபிடிக்க முடியுமாயின் அவரே அப்பொருளைக் கண்டெடுத்தவரையும், அது கண்டெடுக்கப்பட்ட நிலத்திற்கு உடைமை உரியவரையும்விட அதிக உரிமை

உடையவராவார். அப்பொருளைக் கண்டெடுத்தவர் தமக்கென அப்பொருளை வைத்துக் கொண்டால் அவர் கையாடல் தீங்கு புரிந்தவரர்வார். அவர் அப்பொருளின் உண்மையான உரிமையாளரைக் கண்டுபிடிக்க முடியாவிட்டால் மற்ற எவரையும்விட அவருக்கே அப்பொருளின்மீது உரிமையுண்டு. ஆர்மரி *v.* டிலாமிரீ (Armory *v.* Delamirie) வழக்கில், ஒரு நகையைக் கண்டெடுத்த சிறுவன் அதன் விலை மதிப்பறிய ஒரு நகைக் கடைக்காரரிடம் தந்தபோது அவர் அதைத் திருப்பித்தர மறுத்ததற்காக அவர்மேல் வழக்கிட்டு அதன் முழு மதிப்பையும் நிவாரணமாகப் பெற்றார். இவ்வழக்கில் நகை கண்டெடுக்கப்பட்டதாக ஊகிக்கப்பட்டது. புகை போக்கி இருந்த வீட்டின் சொந்தக்காரர் அந்த நகை தமக்கே சொந்தமென்று கோரவில்லை. அவர் அந்த நகைக்கு உண்மையில் உரியவர் அல்லராயின் அதன் உண்மையான சொந்தக்காரருக்கெதிராக வழக்கில் வெற்றிபெற முடியாது. ஆனால் அதைக் கண்டுபிடித்தவருக்கு கெதிராக வெற்றிபெறக் கூடும். ஒரு பொருளைக் கண்டெடுத்தவர் அது கண்டெடுக்கப்பட்ட நிலத்திற்கு உடைமைப் பாத்தியம் உள்ளவருக்கெதிராக உரிமை பாராட்டமுடியாது. ஒரு பொருளைக் கண்டெடுத்தவர் வாதிக்கு அதன்மீது உரிமையிருப்பதை அறியாமல் ஏதேனும் காரியம் செய்தால் அது கையாடல் ஆகாது. அப்பொருளின் உண்மையான உரிமையாளரைக் கண்டுபிடிக்கவும், அதைப் பத்திரமாக வைத்திருக்கவும் பாதுகாக்கவும் அவர் நடவடிக்கை எடுக்கலாம். அவை கையாடல் ஆகாது.

3. முறையின்றி உரிமை மாற்றுதல்

நியாயமான காரணம் எதுவுமில்லாமல் ஒருவருக்குச் சொந்தமான பொருளை வேறொருவருக்குத் தந்து உடைமை மாற்றம் செய்தாலும் கையாடல் ஆகும்: ஹானின்ஸ் *v.* பௌலர் (Hollins *v.* Fowler) வழக்கில் பருத்தி வாணிகத் தரகராகிய எதிர்வாதி 'ஆ' என்பரிடமிருந்து வாதிக்குச் சொத்தமான 18 மூட்டை பருத்தியின் உடைமையைப் பெற்று அதை வேறொருவருக்கு தமக்குச் சேரவேண்டிய தரகுக்கட்டணம் மட்டும் பெற்றுக் கொண்டு விற்றார். 'ஆ' என்பவர் வாதியிடம் மோசடி செய்து பருத்தியைப் பெற்றிருந்தார். இந்த மோசடியைப் பற்றி எதிர் வாதிக்குத் தெரியவே தெரியாது. கையாடலுக்காக எதிர்வாதி பொறுப்பாளியாவார் என்று தீர்ப்பளிக்கப்பட்டது. ஒரு பொருளுக்குரியவரின் அதிகாரமின்றி அப்பொருளை விற்பவர் கையாடல் செய்தவராகக் கருதப்படுவார். அப்பொருளை வாங்கியவரிடமிருந்து அதற்குரியவர் மீட்டுப் பெறலாம். ஒருவன் தன்னிடம்

இல்லாத ஒன்றைத் தரமுடியாது என்று சட்டம் சொல்கிறது (nemo dat quod non habet) எனவே, தனக்குரிமை மாற்றம் செய்தவர் பெற்றிருந்த உரிமையைவிட மேலான உரிமையினை அப்பொருளை வாங்குபவர் பெற முடியாதென்று வாணிபச் சரக்குகள் விற்பனைச் சட்டம் (Sale of Goods Act. 1930) சொல் கிறது. எனவே, அப்பொருளின் உண்மையான உரிமையாளருக்கு அதை வாங்கியவர் திருப்பித் தர நேரும். ஆயினும் சில விதி விலக்கான சூழ்நிலைகளில் ஒருவர் தனக்கு விற்பனை செய்தவருக்கு உரிமை இல்லாத பொருள் என்று உண்மையிலேயே தெரியாமல் வாங்கியிருந்தால் அப்பொருளின்மீது உரிமை கேட்கலாம் என்று இந்திய வாணிபச் சரக்கு விற்பனைச் சட்டத்திலும், ஒப்பந்தச் சட்டத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது. ஒருவர் ஒரு பொருளை வாங்கும் ஒவ்வொரு முறையும் அதை அவருக்கு விற்பவருக்கு உள்ள உரிமையை நிரூபிக்குமாறு கேட்டுக் கொண்டிருந்தால் வாணிபம் நடைபெறுது. எனவே, பணம் கொடுத்து ஒரு பொருளை ஒருவர் நேர்மையான முறையில் வாங்கியிருந்தால், அது அவருக்கு விற்றவருக்குச் சொந்தமல்லவாயினும். அப்பொருளின் சொந்தக்காரருக்கு விற்கும் எண்ணம் இல்லையென்றாலும், கையாடல் செய்ததாகக் கருதக் கூடாது. இதைத் தவிர நேர்மையான முறையில் ஒரு பொருளை பெற்றவர் தாமாகவோ, அல்லது எந்த உரிமையும் இல்லாமல ஒரு பொருளைத் தந்தவர் உத்தரவின் பேரிலோ அதை வைத்திருத்தலும், எடுத்துச் செல்லுதலும் கையாடல் ஆகாது.

சட்டப்படி எந்த நியாயமும் இல்லாமல் ஒரு பொருளின்மீது ஒருவர் கொண்டுள்ள உரிமையை வேறு ஒருவருக்கு அதை மாற்றிக் கொடுத்தலும் கையாடலேயாகும். இதைத் தவிர 'இ' என்பவரின் வாணிகச் சரக்கை 'அ' என்பவரிடம் ஒப்படைத்து 'ஆ'வுக்கு அதில் பற்றுரிமை (lien) ஏற்படுத்துதல் கையாடல் ஆகும். எடுத்துக்காட்டாக என்னுடைய குதிரையை ஓட்டுவதற் காகக் கொண்டு செல்பவர் அதை ஒரு தங்கும் விடுதியில் விட்டு வந்தால் அது கையாடல் ஆகலாம். குதிரையை வைத்திருந்த தற்கு உரிய வாடகையைத் தந்து நான் குதிரையை மீட்டுக் கொள்ளலாம் என்றாலும், நான் ஒரு கட்டணம் தர வேண்டிய நிலையை அவர் செயல் ஏற்படுத்தியுள்ளது.

முறையின்றி மற்றவர் பொருளை அழித்தல் ஒருவர் மற்ற வருக்குச் சொந்தமான பொருளைச் சட்டத்திற்கு முரணான வகை யில், முறையின்றி வேண்டுமென்றே நுகர்தலும், அழித்தலும், கையாடலாகும். ஒருவர் ஒரு பொருளை எரித்து அழித்திருந்தால்

அப்பொருளுக்குரியவரிடமிருந்து அதைப் பறித்து எடுத்துக் கொள்ளும் செயலாகவே அதைக் கருதவேண்டும். அவர் ஒரு பொருளை அழிக்காமல் வெறும் சேதம் மட்டும் ஏற்படுத்தியிருக்கலாம். அப்பொருளை சேதத்திற்குப் பின்னும் தொடர்ந்து அதே உருவத்துடன் அடையாளம் கண்டுகொள்ளும் நிலையில் இருந்தால் அது அத்துமீறலேயாகும், கையாடல்ல. சேதத்துடன் அழிவும் ஏற்பட்டுள்ளது என்பதை அப்பொருள் அதன் தன்மை அல்லது இயல்பு கெட்டு அடையாளம் தெரியாமல் உருமாறிப் போய் இருக்கிறதா என்பதைக் கொண்டறியலாம். எடுத்துக் காட்டாக, நூலாக மாற்றப்படும்போது பருத்தி அழிந்துவிடுகிறது; மதுவாக மாற்றப்பட்டால் திராட்சை அழிந்து விடுகிறது. மாவாக அரைக்கப்பட்ட தானியம் அழிந்து விடுகிறது. ஒருவர் முட்டையை எடுத்து அதில் மற்றவர் ஆம்லெட் செய்தலும், ஒருவருக்குச் சொந்தமான சலவைக் கல்லில் மற்றவர் சிலை வடித்து விட்டாலும் கையாடல் என்றே கருதப்படும். ஒருவர் தமது பொறுப்பில் பீப்பாயில் வைக்கப்பட்டுள்ள மற்றவருடைய மதுவை அனுமதியின்றிப் புட்டிகளில் நிரப்பி இருந்தாலும் கையாடலே ஆகும். ஆனால் எந்தச் சூழ்நிலையில் புட்டிகளில் அவர் மதுவை நிரப்பினார் என்பதையும் கருதிப் பார்க்க வேண்டும். மது கெடாமல் இருக்கப் புட்டிகளில் அடைக்கப்பட்டிருந்தால் கையாடலாகாது. முன்சொன்ன எடுத்துக்காட்டுகளில் ஆம்லெட் அல்லது சிலை யாருக்குச் சொந்தமாகும் என்பதைத் தீர்மானிக்கும்போது, (1) புதியதாக உருவாகியுள்ள பொருள் யாருக்குரிமையாகும் என்றும், (2) அதன் உடைமை யாருக்குச் சேரும் என்றும் கண்டறிய வேண்டும். ஒரு பொருளை மாற்றிவிடுவதால் அதன் உரிமை மாறுவதில்லை. குறிப்பிட்ட பொருளை மீட்டுத்தருவது நீதிமன்றங்களின் விருப்பம் அல்லது உளத்தேர்வினைப் பொறுத்தாகும். ஒரு பொருளில் யாருடைய நலன் கணிசமான அளவில் இருக்கிறதோ அவருக்கே அது தரப்படவேண்டும். அவர் மற்றவர்க்கு அப்பொருளில் அவர் கொண்டுள்ள மதிப்பின் நலனைத் தரவேண்டும். எனவே சிற்பிக்குச் சிலை சேரும். அழியக்கூடிய ஆம்லெட் போன்ற பொருளாயின் அதன் மதிப்பை திருப்பிப் பெறுதல் ஒன்றே நிவாரணமாகும்.

ஆவணங்களை (documents) கையாடல்

இதற்கு எடுத்துக்காட்டாக, காசோலையைக் கையாளுவதைச் சொல்லலாம். கையாடல் என்பது பொருட்களைக் கையாடல் என்று கண்டோம்: வங்கிக்கும் அதன் வாடிக்கையாளருக்கும் உள்ள உறவு கடன் பெறுபவர் கடன் தருபவர் உறவாக இருப்பதால்

காசோலையைக் கையாட முடியுமா? என்ற ஐயம் எழுகிறது. வங்கியிலுள்ள எந்தக் குறிப்பிட்ட நாணயமும் வாடிக்கையாளருக்குச் சொந்தமல்ல. தனது வாடிக்கையாளர் ஒருவருக்குத் தரவேண்டியதை அதைப் பெற அதிகாரம் அற்ற வேறு நபருக்குத் தருவது பொருளாக் கையாடல் செய்வதாகாது என்று முதல் நோக்கில் தோன்றுகிறது. காசோலையை வசூலிக்கும் வங்கி அது வசூலானதும் அதன் மதிப்பைத் தனது வாடிக்கையாளரிடம் கடனுகப் பெறுகிறது. இவ்வாறு வசூலிக்கப்பட்டதும் காசோலையின் பணி முடிவெய்துகிறது. பணம் வசூலிக்கப்படும்காசோலையை ஒரு பொருளாகப் பாவித்து அதைக் கையாடல் செய்தாகக் கருதலாம். கையாடிய இப்பொருளின் மதிப்பை அதன்படி வசூலிக்கப்படும் தொகையாகக் கருதலாம். மாற்றுமுறை ஆவணம் (Negotiable instrument) மட்டுமின்றி வழக்குரிமைப் பொருள்களுக்குச் (choose in action) சான்றாகும் வாணிக முத்திரைத் தாள்கள் (Trading stamps) போன்ற ஆவணங்களையும் கையாடல் செய்ய முடியும். காசோலை கையாடல் செய்யப்பட்டிருப்பினும், வசூலித்த வங்கி கவனமின்றி நடக்காதிருந்தால் சட்டத்தில் அதற்குப் பாதுகாப்பு உண்டு. கவனத்தோடு தொழில் செய்யும் சாதாரண வங்கி பின்பற்றும் நடைமுறையையே தானும் பின்பற்றியதாக வழக்கிடப்பட்டுள்ள வங்கி நிரூபிக்க வேண்டும்,

வேறு வகைகளில் கையாடல்

மேலே சொல்லியுள்ள வழிகளைத் தவிர வேறு முறைகளில் சட்டப்படி நியாயமின்றி வேண்டுமென்றே குறுக்கிடும் செயலால் ஒருவருக்கு இழப்பினை ஏற்படுத்தினால் கையாடலாகவே கருதப்படும். எடுத்துக்காட்டாக, வாதியிடைய காரை முறையின்றி எதிர்வாதி கள்ளக்கடத்தலுக்குப் பயன்படுத்துகிறான். அரசினரால் கள்ளக்கடத்தல் கண்டுபிடிக்கப்பட்டு அந்தக் கார் பறிமுதல் செய்யப்படுகிறது. இது காரின் உரிமையாளராகிய வாதிக்கெதிராக எதிர்வாதி கையாடல் செய்ததாகக் கருதப்படும். ஒருவர் முறையின்றிச் சட்டமுரணான வகையில் மற்றவருடைய நாயைப் பிணைத்துள்ள சங்கிலியை அவிழ்த்து விடுதலும், மற்றவர்க்குச் சொந்தமான பறவையை அதன் கூண்டிலிருந்து திறந்துவிடுதலும், மற்றவர்களுடைய கால்நடைக்கு ஏதாவது ஒரு செயலைச் செய்து அவை மிரண்டு போய் அங்கிருந்து தப்பியோடச் செய்வதும் தீங்காகவே கருதப்படும். அதன் விளைவாக ஏற்படும் பொருள் இழப்புக்கு அவர் பொறுப்பாளியாவார். எதிர்வாதிக்குப் பொருள்களின் பேரில்

உடைமை இல்லாதபோது வாதியின் உரிமையை முழுவதும் மறுக்கும் விதத்தில் அப்பொருளைக் கையாண்டிருந்தால் பொறுப்பாளியாவார்.

சில சமயங்களில் எதிர்வாதியின் செயல் வாதிக்கு ஒரு பொருளில் உள்ள சொத்துரிமையைப் பாதிப்பதாக அமைந் திருக்கும் 'அப்போது கையாடல்'.செய்ததாகக் கருதப்படும். வான் ஒப்பன் அண்டு கம்பெனி லிமிடெட் v. டிரெட்கர்ஸ் லிமிடெட் (Van Oppen & co Ltd v. Tredegars Ltd) வழக்கில், சரக்குந்து உரிமையாளராகிய வாதி தவறுதலாக வாணிபச் சரக்கினைப் பெற உரிமையற்ற ஒரு நிறுவனத்திடம் அதைச் சேர்ப்பித்தார். எதிர்வாதி நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் அந்த வாணிபச் சரக்குச் சேர்ப்பிக்கப்பட்ட இடத்திற்குச் சென்று பார்த்து அதை தமது நிறுவனத்திற்குச் சொந்தமானவை என்று உரிமை பாராட்டி, அதை அந்த நிறுவனத்திற்கு விற்றார். வாதி கையாடலுக்காக எதிர்வாதியின் மேலிட்ட வழக்கில் எதிர்வாதி பொறுப்பாளியாவார் என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

பொருள் கையாடப்பட்டபோது வாதிக்கு அப்பொருளின்மீது உரிமையும், உடைமையும் இருக்கலாம்; அல்லது உடைமை மட்டும் இருக்கலாம்; அல்லது, உரிமையும் உடைமையும் இல்லா விட்டாலும் அப்பொருளை உடனடியாகப் பெறும் உரிமை இருக்க லாம். இவற்றில் ஏதாவது ஒன்று இருந்தால்தான் வாதி வழக்கிட முடியும். வாதி அப்பொருள் தனக்குச் சொந்தமானது என்று காட்டத் தேவையில்லை. அவர் அப்பொருளின் சொந்தக்காரராக இல்லாவிட்டாலும் கையாடல் நேர்ந்தபோது தன்னிடம் உண்மையில் உடைமை இருந்ததென்றோ அல்லது உடைமையை உடனடியாகப் பெறக்கூடிய உரிமை இருந்ததென்றோ நிரூபித்தால் போதும்.

ஒரு பொருளின்மீது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களுக்குப் பொதுவான பாத்தியம் இருந்தால் அவர்களின் உடைமை ஒன்றேயாகும். அவர்களில் ஒவ்வொருவருக்கும் அப்பொருளைப் பயன்படுத்தும் உரிமையும், உடைமைப் பாத்திய தையும் உண்டு. எனவே அதை ஒருவர் எவ்வழியில் பயன்படுத்தி யிருந்தாலும் மற்றவரது உடைமைக்கு இழைத்த தீங்காகாது. எனவே ஒரு பொருள் சிலருக்குப் பொதுவான சொத்தாக இருந்தால், அவர்களில் ஒருவரது செயல் அப்பொருளை அழிப்பதாகவோ

அல்லது மற்றவருக்குள்ள உடைமையை நிலையாக விலக்கிவிடும் செயலாகவோ இல்லாவிட்டால் அவர்மீது வழக்கிடமுடியாது.

எதிர்வாதங்கள்

கையாடல் வழக்குகளில் பின்வரும் தனிப்பட்ட எதிர் வாதங்கள் உள்ளன.

1. தரப்பினரால் வழங்கப்பட்ட அதிகாரத்தின்படி (எடுத்துக் காட்டாக ஒருவருக்கு ஒப்படைவினால்) ஒரு பொருளின்மீது பற்றுரிமை இருக்கலாம். அப்போது திருப்பித்தருமாறு கேட்டதாகவும், மறுக்கப்பட்டதாகவும் சொல்லப்படுவது கையாடலுக்குச் சான்றாகாது.

2. சட்டம் வழங்கும் அதிகாரம்

(i) ஒரு வீட்டுச் சொந்தக்காரர் வாடகைப் பாக்கிக்காக குடியிருப்பவரின் சாமான்களைக் கைப்பற்றிக் கொள்ளுதல் கையாடல் ஆகாது. (ii) நீதிமுறை நடவடிக்கை உத்தரவை நிறைவேற்றுதல், தீர்ப்பின்படி கொடுக்கப்பட வேண்டிய கடனைத் தீர்க்காதவரின் பொருட்களைப் பிடியாணையின்படி பற்றுகை செய்தல், (iii) பிறர் பொருட்களைப் பிடித்து வைத்துக் கொண்டு அவற்றால் விளைந்த தீங்குக்கு நட்ட ஈடு பெற பிணையாக வைத்திருத்தல். (iv) தமக்கு வரவேண்டிய கடனை மற்றவர் சொத்தின் மூலமாகப்பெற அதைப்பற்றும் உரிமை. வழக்கறிஞர், விற்பனையாளர், பொருட்களை விற்பனை செய்பவர் ஆகியோருடைய பற்றுரிமையை இதற்கு எடுத்துக்காட்டுகளாகச் சொல்லலாம். (v) வாணிகச் சரக்கினைக் கொண்டு செல்லும் வழியில் அதைத் தடுத்து நிறுத்த வாணிகச் சரக்கு விற்பனைச் சட்டத்தின் கீழ் சரக்கை விற்றவருக்கு உள்ள உரிமை மேற்கூறிய வகைகளில் செய்யப்படும் செயல்களைக் கையாடலாகக் கருதமுடியாது. (vi) ஒருவர் தம்முடைய கட்டிடத்திற்குள் அல்லது நிலத்திற்குள் நீட்டிக் கொண்டிருக்கும் அடுத்தவரின் மரக்கிளைகளை வெட்டி விடலாம். இது கையாடல் ஆகாது. ஆனால் அந்தக் கிளைகளிலுள்ள பழங்களை எடுத்துக் கொள்வது நியாயமாகாது. (vii) உடல் அல்லது சொத்தினைப் பாதுகாக்க செய்யப்படும் செயல்கள் கையாடல் ஆகாது.

3. ஒருவருக்குச் சொந்தமான பொருளை அடுத்தவர் முறையின்றித் தனது உடைமையிலோ அல்லது கட்டுப்பாட்டிலோ வைத்திருந்தால் அதை மீட்டுப் பெற வழக்கிட்டுச் செலவு செய்ய

வேண்டியதில்லை. அவர் முடிந்தால் அமைதியான முறையில் மற்றவரிடமிருந்து மீட்டுப் பெறலாம், மற்றவர் அப்பொருளைத் தர மறுத்து வன்முறையில் எதிர்ப்புக் காட்டினால் அதற்கேற்றவாறு வன்முறையைப் பயன்படுத்தி தமது பொருளைப் பெறலாம்.

நீதிமன்றத்தில் நட்ட ஈடு கோரியும், பொருளைத் தனக்கு மீட்டு ஒப்படைக்குமாறு கோரியும் வாதி வழக்கிடலாம். எதிர்வாதி பெற்றுக் கொண்டிருந்த பணத்திற்கு அவரிடமிருந்து கணக்கும் கேட்கலாம். வாதிக்குக் கையாடல் செய்யப்பட்ட பொருளின் விலை மதிப்பு தீங்கீடாக அளிக்கப்படும். எதிர்வாதி அப்பொருளையோ அல்லது அதற்கீடானதொன்றையோ தரலாம். அதன் மதிப்பைத் தருவதாயின், கையாடல் செய்தபோது அதற்கிருந்த விலை மதிப்பைத் தரவேண்டும், இதைத் தவிர வாதிக்கு தனிப்பட்ட நட்டம் ஏற்பட்டிருக்கலாம். அது எதிர்வாதியின் தீங்கான செயலால் இயல்பான, நிகழத்தக்க விளைவாக இருந்தால் வாதி அதையும் பெறலாம் பாட்லே v. ரைனுல்ட்ஸ்(Bodley v Roynolds) வழக்கில் ஒரு தச்சரின் தொழிற்கருவிகள் கையாடப்பட்டது. அதன்விளைவால் அவரால் வேலை செய்ய இயலாது போயிற்று. எனவே, அவருக்கு அவரது கருவிகளின் மதிப்பிற்கு மேல் 10 பவுன் தனிப்பட்ட இழப்புக்காகத் தீங்கிடாகத் தரப்பட்டது. ஒரு பொருளைப் பழுதுபார்க்கும் காலத்தில் ஏற்படும் இழப்புக்கும் தீங்கீடு பெறலாம். எதிர்வாதி பொருளைக் கையாடியதால், அப் பொருளை மூன்றுவது நபருக்கு விற்றிருந்த வாதி அவருக்கு அப் பொருளைத் தரமுடியாமல் போனதால் ஏற்படும் இழப்பிற்குத் தீங் கிடு பெறலாம். அவர் இழந்துவிட்ட பணத்திற்கு உரிய வட்டியும் கோரலாம். வாதிக்கு உண்மையில் இழப்பு ஏற்பட்டிராவிட்டால். அவருக்குப் பெயரவு இழப்பீடே தரப்படும். எதிர்வாதியின் செயலால் கையாடப்பட்ட பொருளின் மதிப்புக்கூடியிருந்தால் அதை வாதி கோர முடியாது. எடுத்துக்காட்டாக: பாதி கட்டப் பட்டிருந்த வாதியின் கப்பலைக் கையாடிய எதிர்வாதி அதை முழு வதுமாகக் கட்டியிருந்தால் அதன் பதிப்பிற்கேற்பட்ட கூடுதலை வாதி கோரமுடியாது. ஏனெனில் எதிர்வாதி கையாடியதால் அதைக் கட்டி முடிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டு விட்ட தாகச் சொல்லமுடியாது.

ஒரு குறிப்பிட்ட பொருளை எதிர்வாதியிடமிருந்து மீட்டுப் பெற நீதிமன்றத்தின் ஆணையை வாதி பெறலாம். குறித்த நிவாரணங்கள் சட்டத்தில் எப்போது இந்த நிவாரணம் அளிக்கப் படுமென்று விரிவாகக் கூறப்பட்டுள்ளது. கோரப்பட்ட பொரு

ளுக்குப் பதிலாக பணத்தால் ஈடுசெய்வது போதிய நிவாரணம் வழங்காதாயின் பொருளை மீட்டு ஒப்படைக்கும்படி உத்தரவு இடப்படும். சங்க கால நகைகள், உரிமை மூலம் கூறும் ஆவணங்கள் போன்றவை பணத்தால் ஈடுசெய்ய முடியாதவை. வாணிபப் பொருள்களாயின் அவற்றை மீண்டும் ஒப்படைக்க உத்திரவிடப்படாது இந்த நிவாரணத்தை வழங்குவது நியாயமாகாது என்று தோன்றினாலும் மீட்டு ஒப்படைவிப்பு நிவாரணம் மறுக்கப்படும். எடுத்துக்காட்டாக, வாதியின் பொருளை எதிர் வாதி மதிப்பு வாய்ந்ததாக மாற்றியிருந்தால் வாதிக்கு அவன் பொருளை இழந்ததற்காக இழப்பீடே கிட்டும்.

37. தொல்லை (Nuisance)

ஒவ்வொருவனுக்கும் அவனுடைய நிலத்தையும் அதிலுள்ள உருமைகளையும் பயன்படுத்தவும், அனுபவிக்கவும் உரிமை உண்டு. இந்த உரிமைகளை சட்ட முரணானவகையில் முறையின்றிக் குறுக்கிடும் செயலையே தொல்லை என்கிறோம். 'மற்றவர் சொத்துக்கு ஊறு நேராவண்ணம் உன்னுடைய சொத்தைப் பயன் படுத்துவாயாக' என்பதே சட்டத்தின் கொள்கை (Sicutere two ut alienum non laedas) ஒருவர் தம்முடைய சொத்தை முறையற்ற வகையில் பயன்படுத்துவதால் அடுத்தவர் தம்முடைய சொத்தை இடர்ப்பாடும், இடைஞ்சலும் இன்றி அனுபவிக்க முடியாமல் போய்விடும். ஆயினும் சட்டப்படி உள்ள உரிமைக்கு ஊறு ஏற்படும்படியாகச் சொத்தைப் பயன்படுத்தியிருந்தால்தான் தீங்காகும். எனவே, சேதத்தோடு சட்டப்படி தீங்கு ஏற்பட்டிருந்தால்தான் வழக்கிடமுடியும். ஒருவர் தன் நிலத்தில் பள்ளம் தோண்டுவதால் அடுத்துள்ள நிலத்தில் சரிவு ஏற்படல் தொல்லையாகும். ஆனால் அடுத்துள்ளவர் கட்டிய புதிய வீடு இடிந்து விழுந்ததால் ஏற்படும் சேதத்திற்கு வழக்கிடமுடியாது.

தொல்லை என்பது இடையருமல் தொடர்ந்தோ அல்லது இடைவெளிவிட்டு ஏற்படுகின்ற நிலை அல்லது செயலாகும் எடுத்துக்காட்டாக, ஒருவரது பாதுகாப்பு, வசதி, உடல் ஆகியவற்றைப் பாதிக்கும் செயலைச் சொல்லலாம். இவ்வாறு பாதிக்கும் செயல் எந்த வழியிலும் தோன்றலாம், எடுத்துக்காட்டாக இரைச்சல், அதிர்வு, புகை, நாற்றம், ஆவி, வாயு, நீர், மின் சாரம் நிலத்தில் பள்ளம் தோண்டுதல், நோய் பரப்பும் கிருமிகள் ஆகியவற்றின் மூலம் தொல்லை உருவாகலாம்.

தொல்லை அத்துமீறலிலிருந்து மாறுபட்டது. உடைமையை ஒட்டி எழும் உரிமைக்கு ஏற்படும் ஊறே தொல்லை; அது உடைமைக்கே ஏற்படும் ஊறு அல்ல. தனித்த தொல்லை அத்துமீறல் ஆகிய இரண்டிலும் வாதிக்கு நிலத்தில் உடைமை இருக்க வேண்டும். அத்துமீறலில் ஏதாவது ஒரு பொருளின் மூலம் வாதியின் உடைமையில் நேரடியாகக் குறுக்கீடு செய்யப்படுகிறது. ஆனால்

குறுக்கீடு வேரொன்றின் விளைவாக ஏற்பட்டிருப்பின் அது தொல்லை யாகும் என்று முன்பே கண்டோம். தற்காலிகமாக அமைந்தாலும் தொல்லையாகக் கருதப்படும் நிலை அல்லது செயல் இடையருது தொடர்ந்து நிலவ வேண்டும். எனவே, ஒரு தனிப்பட்ட நிகழ்ச்சி தொல்லையாகாது. ஆனால் அது அத்துமீறலாக இருக்கலாம்.

தொல்லை பொதுவான தொல்லை (Public Nuisance); தனித்த தொல்லை, (Private Nuisance) என இருவகைப்படும்.

பொதுவான தொல்லை குற்றமாகக் கருதப்படுகிறது. பொது வான தொல்லை என்பது பொது மக்களுக்கோ, அல்லது குறிப்பிட்ட பகுதியில் வசிக்கும் மக்களுக்கு உள்ள உரிமைகளைப் பொதுவான முறையில் பாதிக்கும் செயலாகும். இதன் விளைவாக அவர்களுக்கு வசதிக் குறைவோ, இடர்ப்பாடோ, ஆபத்தோ, காயமோ ஏற்பட லாம். இதற்கு எடுத்துக் காட்டாக நெடுஞ்சாலையில் பள்ளம் தோண்டுதல், சாலையில் போக்குவரத்துக்கு இடையூருக ஒரு தடையை அங்கு வைத்திருத்தல், வெடிக்கக்கூடிய பொருட்களை சாலையில் எறிதல் ஆகியனவற்றைச் சொல்லலாம், இதைப் போலவே விளம்பரங்களை வைத்து விடுதி நடத்துதல், மனிதர் உட்கொள்ளத் தகுதியற்ற உணவுப் பண்டங்களை விற்பனை செய்தல் ஆகியனவும் பொதுத் தொல்லையே. பொதுத் தொல்லை இந்தியக் குற்றவியல் சட்டத்தில் 268ஆம் பிரிவில் குற்றமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. பொதுத் தொல்லை மிகப் பரவலாகவும், அதன் விளைவுகள் எவ்வித வேறுபாடும் இன்றி பொதுவாக அமைந்திருந்ததால் அதைத் தடுப்பதற்கு சமுதாயமேநடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கு எதிராக தனி மனிதன் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று எதிர்ப்பார்த்தால் நியாயமாகாது. ஒரு குறிப்பிட்ட வகுப்பினரை மட்டும் பாதிக்கக்கூடிய பொதுத் தொல்லையாயின் அந்தக் குறிப்பிட்ட வகுப்பினரின் சார்பாளர் களாகக் கருதத்தக்கவர் பாதிக்கப்பட்டதாக நிரூபித்தால் போதும். இந்தியாவில் பொதுத் தொல்லைக்காக மாநில அரசின் தலைமை வழக்கறிஞரோ (Advocate-General) அல்லது அவரது இசைவை எழுத்து வடிவில் பெற்றுள்ள இருவர் அல்லது அதற்கு மேற்பட்ட வரோ தனித்த இழப்பு ஏற்படவில்லை என்றாலும் வழக்கிடலா மென்று உரிமையியல் நடைமுறைச் சட்டத்தில் 91ஆம் பிரிவில் சொல்லப்பட்டுள்ளது. சூழ்நிலைக்கேற்றவாறு நீதிமன்றம் விளம்பு வதைத் தீர்ப்போ (declaration) அல்லது உறுத்துக் கட்டளையோ அல்லது தேவையான வேறு நிவாரணங்களோ அளிக்கலாம்.

பொதுவான தொல்லைக்காக எவர் வேண்டுமானாலும் தனிப் பட்ட முறையில் வழக்கிட அனுமதித்தால் தொல்லையை ஏற் படுத்தியவர் மேல் பல்லாயிரக்கணக்கான வழக்குகள் இடப் படலாம். இது நியாயமன்று. எனவே, ஒரு பொதுத்தொல்லைக்காக ஒரு தனி நபர் வழக்கிட விரும்பினால் அவர் மற்றவர்களுக்கேற் பட்ட இழப்பு அல்லது ஊறுக்கும் மேலாகத் தமக்கு ஒரு குறிப் பிட்ட இழப்பு அல்லது ஊறு நிகழ்ந்ததாக நிரூபிக்க வேண்டும். எடுத்துக்காட்டாக, சாலையில் போக்குவரத்துக்கு இடைஞ்சலாக ஒரு கல், வைக்கப்பட்டிருந்தால் பொதுமக்களுக்கு வசதிக்குறைவு ஏற்படும். மற்றவர்களுக்கேற்படும் வசதிக் குறைவே தமக்கும் ஏற்பட்டதென வாதி சொன்னால் போதாது. அதற்கும் மேலாகத் தமக்கு ஒரு தனிப்பட்ட இழப்பு அல்லது வசதிக்குறைவு ஏற் பட்டதென அவர் நிரூபிக்க வேண்டும். எடுத்துக்காட்டாக, சாலையில் போக்குவரத்துக்கு வைக்கப்பட்ட தடையினால் அவரது தொழில் அல்லது வாணிகத்திற்கு ஊறு ஏற்பட்டதென்றோ அல்லது அத் தடையை அகற்றப் பணம் செலவழிக்க வேண்டி யிருந்ததென்றோ நிரூபிக்கவேண்டும். இவ்வாறு அவருக்கு ஏற் படும் ஊறு அல்லது இழப்பு நேரடியானதாக இருக்க வேண்டும்; வேறொன்றின் விளைவாக அது ஏற்பட்டிருக்கக்கூடாது. எடுத்துக் காட்டாக, சாலையின் ஒரு வழி அடைக்கப்பட்டு வேறு வழி திறந்து வைக்கப்பட்டிருந்தால் வாதிக்கு ஏற்பட்ட ஊறு அல்லது இழப்பு நேரடியானதாகாது. மற்றும், அவருக்கு ஏற்பட்டுள்ள இழப்பு கணிசமானதாக இருக்க வேண்டும்; இல்லையேல் அவர் பொதுத் தொல்லைக்காக வழக்கிடமுடியாது.

தனித்த தொல்லையை இருவகைகளாகப் பிரிக்கலாம்: (1) அண்டைநிலச் சொத்தின் வசதி உரிமைகளுக்குத் தீங்கான முறையில் ஊறு விளைவித்தல். எடுத்துக்காட்டாக, ஒளியை மறைத்தல், காற்றைத் தடுத்தல் முதலியனவற்றைச் சொல்லலாம். (2) கேடு பயக்கும் பொருள்களை முறையின்றி மற்றவர் நிலத்தில் புகுமாறு செய்தல். இவற்றிற்கு எடுத்துக்காட்டாக நீர், புகை, முடைநாற்றம், ஆவி, வாயு, பேரிரைச்சல், வெப்பம், அதிர்ச்சி, மின்சாரம், நோய் பரப்பும் கிருமிகள், கழிவுநீர், விலங்குகள், மரம் செடி கொடிகள் ஆகியன அடுத்தவர் நிலத்தில் புகுமாறு செய் தலைச் சொல்லலாம். இவற்றின் விளைவாக அண்டை நிலத்திற்கு உரிமையோ அல்லது உடைமையோ கொண்டவர் உடல்நிலை, வசதி முதலியன பாதிக்கப்படுவதோடு நிலத்திற்குச் சேதமும் ஏற்படலாம். தனித்த தொல்லை என்பது குறிப்பிட்ட நபர் அல்லது நபர்களை மட்டும் பாதிக்கும் செயலாகும். அவர் தீங்கீடு அல்லது

உறுத்துக்கட்டளை கோரி நீதிமன்றத்தில் வழக்கிடலாம். தொல்லை அண்டை நிலத்தை உடைமை கொண்டவர் தமது கடமையிலிருந்து தவறியதால் ஏற்படும் தீங்காதலால், புகார் செய்யப்படும் செயல் அல்லது செயல் தவிர்ப்பு வாதியின் வசத்திலுள்ள கட்டடத்தில் தோன்றி இருந்தால் வாதி வழக்கிடமுடியாது. அத் தொல்லை வேறு எங்காவது தோன்றியிருக்கவேண்டும். பொதுவாக, வாதியின் நிலத்தையடுத்தோ அல்லது அதன் அருகிலோஉள்ள எதிர்வாதியின் உடைமையிலுள்ள நிலத்தில் செய்யப்படும் செயல்களால் தொல்லை உண்டாகிறது. ஆயினும், எதிர்வாதியின் நிலமல்லாத வேறு இடங்களிலும் தொல்லை உண்டாகலாம். எடுத்துக்காட்டாக வாதியின் நிலத்தை அடுத்துள்ள நெடுஞ்சாலையிலும், அல்லது போக்குவரத்துக்குப் பயன்படும் ஆற்று வழிகளிலும் அல்லது பொதுமக்கள் கூடும் இடங்களிலும் தொல்லை உருவாகலாம். தனிப்பட்டவருக்குச் சொந்தமான அண்டை நிலத்திலும் தொல்லை செய்யப்படலாம். எதிர்வாதி அந்த நிலத்திற்கு உரிமையுள்ளவராக இருக்கத் தேவையில்லை. அவர் அங்கு வேலை செய்யும் ஒப்பந்தக்காரராக இருக்கலாம், அல்லது நிலத்தைக் குத்தகைக்கு எடுத்தவராக இருக்கலாம்.

தொல்லையின் கூறுகள்

(1) இடையீடு. நிலத்தைப் பயன்படுத்துவதிலோ, அல்லது அதனோடு தொடர்பான உரிமைக்கோ இடையீடு ஏற்பட்டிருக்க வேண்டும். இது வாதிக்கு ஊறு அல்லது இழப்பினை ஏற்படுத்துவதாக இருக்கவேண்டும். எடுத்துக்காட்டாக, நீர் அல்லது காற்றினைக் களங்கப்படுத்துதல், முடைநாற்றம், பேரிரைச்சல் ஆகியவற்றைச் சொல்லலாம். நச்சு ஆவியை நுழையவிட்டு அடுத்தவர் நிலத்திலுள்ள கால்நடைகளையும் பயிரையும் அழிக்கும் செயல் தொல்லையாகும். சோல்டா v. டிஹெல்டு (Soltau v. De Held) வழக்கில் வாதி ஒரு ரோமன் கத்தோலிக்கத் தேவாலயத்தை அடுத்துள்ள வீட்டில் குடியிருந்தார். எதிர்வாதி அந்தத் தேவாலயப் பாதிரியார் ஆவார். அந்தத் தேவாலயத்தின் மணி இரவு பகல் எல்லா மணி நேரங்களிலும் அடிக்கப்பட்டது. இவ்வாறு அளவுக்கு மீறி மணி அடிப்பது தொல்லையாகக் கருதப்பட்டு அதை நிறுத்த உறுத்துக்கட்டளை பிறப்பிக்கப்பட்டது. தற்காலத்தில் பெரிய நகரங்களில் வாழும் மனிதர்கள் சில நாற்றங்களையும் ஓசைகளையும், அதிர்ச்சிகளையும் சகித்துக் கொள்ளத்தான் வேண்டும். இன்றேல் நகரில் வாழ்வது இயலாது. நகரில் பல தொழில்களும், வாணிபமும் இருப்பதால் ஏற்படும் விளைவுகளைச் சகித்துக் கொள்ளவேண்டும் இவை பொதுமக்கள் நலனுக்காக ஏற்

பட்டவை. சாலையை அடுத்து ஒருவனுக்கு வீடு இருந்தால் சாலையில் மக்கள் போக்குவரத்து, வண்டிகளின் போக்குவரத்து ஆகியவற்றின் இரைச்சலால் ஏற்படும் தொந்தரவையும், வசதிக் குறைவையும் சகித்துக்கொள்ளவேண்டும். ஒருவனது அண்டை வீட்டுக்காரர் வானொலியில் கர்நாடக இசையை விரும்பிக் கேட்பது என்னுடைய படிப்புக்கு இடையூறாக இருக்கலாம். இதற்காக நான் அவர்மேல் வழக்கிடமுடியாது. இத்தகைய இடையூறுகள் முறையின்றி நிகழாதவரை தொல்லைக்காக வழக்கிட முடியாது. எனவே, ஒரு கட்டடம் அல்லது நிலத்தில் உரிமை கொண்டவர் தம்முடைய சொத்தில் தாம் விரும்பியதைச் செய்யப் பெற்றுள்ள உரிமையையும், அவரது நிலம் அல்லது கட்டடத்தை அடுத்துள்ளவர் தமக்கு இடையூறு ஏதும் ஏற்படாமல் இருக்கப் பெற்றுள்ள உரிமையையும் சீர்தூக்கிப் பார்த்து, இடையீடு முறையானதா என்று அறிய வேண்டும். அது இடையீடு ஏற்படும் இடத்தையும் பொறுத்ததாகும். சின்னஞ்சிறிய தொல்லையாகக் கருதக்கூடிய செயல் சென்னையில் தொல்லையாகும் என்று சொல்லமுடியாது. சட்டம் இங்கு ஒருவர் தாமும் வாழ வேண்டும்; மற்றவரையும் வாழவிடவேண்டும்; விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை வேண்டும் என்ற அடிப்படையைக் கருத்தில் கொண்டு முரண்பட்ட பொருளாதாரச் சமுதாய நலன்களைச் சீர் தூக்கிப் பார்க்கின்றது. எதிர்வாதியின் நடத்தையால் சமுதாயத் திற்கு ஏற்படும் பயனையும், சுற்றுப்புறத்தின் இயல்புக்கு அது ஏற்புடையதா என்பதையும், மற்றவர்களுக்கு ஏற்படும் இழப்பின் அளவையும், இடையீட்டை நடைமுறையில் தவிர்க்கமுடியுமா என்பதையும் நீதிமன்றங்கள் கருதிப் பார்க்கின்றன. ஆனால், எதிர் வாதியின் செயலால் பொதுமக்களுக்குப் பயன் ஏற்படும் என்ப தாலேயே வாதிக்குத் தொடர்ந்து தீங்கினை ஏற்படுத்துவது முறை யாகாது. எனவே, எதிர்வாதியின் இடையீட்டினால் வாதிக்குப் பொருள் இழப்போ வசதிக்குறைவோ, தொந்தரவோ ஏற்பட்டிருக்க வேண்டும். இவ்வாறு எதிர்வாதி செய்யும் இடையீடு அல்லது இடைஞ்சல் முறையற்றதாக இருக்கவேண்டும். எதிர்வாதியின் செயல் முறையானதா இல்லையா என்பது அச் செயலின் தன் மையையும், அது செய்யப்பட்ட இடத்தையும், நேரத்தையும், செய்யப்பட்ட விதத்தையும் பொறுத்தது; தவிர, அதை அவன் வேண்டுமென்றே செய்தானா அல்லது அவன் தன் உரிமைகளைப் பயன்படுத்தியதன் விளைவாக ஏற்பட்டதா என்பதையும், அவன் செயலின்விளைவு தற்காலிகமானதா, எப்போதாவது தோன்றுவதா அல்லது அது தொடர்ந்து நிலவக்கூடியதா என்பதையும் கருதிப் பார்க்கவேண்டும். இதை அவனது செயலைப் பொறுத்தே தீர்

மானிக்கவேண்டும். எதிர்வாதியின் செயல் தவிர்க்க முடியாத தாயினும், வாதிக்குக் குறிப்பிடத்தக்கதோர் இழப்பு ஏற்பட்டிருந் தால் எதிர்வாதி பொறுப்பாளியாவான். தவிர, முன்னரே தொல்லை யாக இருந்த ஒரு சொத்தினை மற்றொருவரிடமிருந்து எதிர்வாதி வாங்கியிருந்தாலும் அவனுக்குப் பொறுப்புண்டு. ஆனால், எதிர் வாதிக்குத் தெரியாமல் அத்துமீறி நுழைபவர் செய்யும் தொல்லைக்கு அவன் பொறுப்பாளியாகமாட்டான்.

எதிர்வாதியின் செயல் முறையானதா இல்லையா என்று ஆராயும்போது வழக்கத்திற்கு மாறுக, மட்டுமீறிய நுட்ப உணர்வுகளைப் பொருட்படுத்த வேண்டியதில்லை. முறையானதாக உள்ள செயல் வாதிக்குக் கணிசமான அளவில் இழப்பினை உண்டாக்கியிருக்கலாம். ஆனால், அவனுக்கு இழப்பேற்பட்டதற்கு அவன் அசாதாரணமான அல்லது மட்டற்ற உணர்ச்சி மென்மை கொண்டவனாக இருப்பதோ அவன் சொத்தைக் குறிப் பிட்ட முறையில் பயன்படுத்தியதோ காரணமாக இருக்கலாம். நல்ல உடல்நலம் கொண்டவனுக்குச் சாலையில் செல்லும் போக்கு வரத்தினால் தோன்றும் ஓசையும், அதிர்ச்சியும் தொல்லையாக இரா. ஆனால், உடல் நலம் குன்றியவனுக்கு அது தொல்லையாக இருக்கும். அதனால் அவனுடைய உடல்நலம் மிகவும் கெடலாம். ஆயினும் இதற்காக அந்த நோயாளி வழக்கிடமுடியாது. சாதாரண மனிதர்களுக்குச் சிலவகை ஓசையும் அதிர்ச்சியும் தொல்லையாக இருப்பதில்லை. ஆனால், வாதி மிகச் சிறிய ஒலி கேட்டாலும் தூக்கத்திலிருந்து விழித்துக்கொள்ளக் கூடியவனாக இருக்கலாம்; அல்லது ஓசையிருந்தால் எந்த வேலையையும் செய்யமுடியாத வனாக இருக்கலாம். இவன் தொட்டாற்சிணுங்கிச் செடியினைப் போன்றவன். இப்படிப்பட்ட மனிதர்களின் நுட்ப உணர்வுகளுக்கு இடையீடும், இடைஞ்சலும் நேராவண்ணம் பாதுகாப்புத் தரச் சட்டத்தால் இயலாது.

ஹீத் v. பிரைட்டன் நகர் மேயர் (Heath v. Mayor of Brighton) வழக்கில், எதிர்வாதியின் மின்சக்தி நிலையத்திலிருந்து தோன்றிய ஓசையை நிறுத்த வாதி – மாதா கோயில் நிர்வாகி உறுத்துக்கட்டளை கோரினர். இவ் வழக்கில் மின்சக்தி நிலையத்தி லிருந்து வந்த ஓசையின் விளைவாக மாதா கோயிலுக்கு வரும் மக்களின் கூட்டம் குறைந்ததென்றோ, பாதிரியார் தவிர மற்ற வர்கள் யாருக்கும் தொந்தரவேற்பட்டதென்றோ நிரூபிக்கப்பட வில்லை. தவிர, அந்த ஓசை பாதிரியார் தொடர்ந்து மத உரை நிகழ்த்தவும், வழிபாடு செய்யவும் தடையாக இருக்கவில்லை; அது மாதா கோயிலுக்கு வரும் சாதாரண உடல்நலமுள்ள மக்களின்

கவனத்தைச் சிதற வைக்கும் தன்மையும் கொண்டிருக்கவில்லை. எனவே, இவ் வழக்கில் உறுத்துக்கட்டளை மறுக்கப்பட்டது.

ராபின்சன் v. கில்வெர்ட் (Robinson v. Kilvert) வழக்கில் ஒரு வீட்டின் சரக்கறையில் எதிர்வாதி காகித அட்டைப் பெட்டி செய்யத் தொடங்கினர். அவ் வீட்டின் மேல்மாடியில் வாதி குடியிருந்தார். எதிர்வாதியின் தொழிலுக்குச் சூடான, உலர்ந்த காற்றுத் தேவைப்பட்டதால் அவர் சரக்கறையைச் சூடேற்றினர். இதனால் வாதியின் இல்லத்திற்குச் சூடு பரவி, அவர் அங்கு அடுக்கிவைத் திருந்த சூடு பொருத, எளிதில் ஊறுபாடு கொள்ளத்தக்க பழுப்புத் தாள்கள் கெட்டு அவற்றின் விலைமதிப்பு மிகவும் குறைந்துவிட்டது. ஆனால், அங்கு வேலை செய்துகொண்டிருந்த வாதியின் பணியாள் களுக்கு எந்த வசதிக்குறைவும், தொந்தரவும் ஏற்படவில்லை. சாதாரணத் தாளுக்கு எதிர்வாதியின் செயலால் எந்தச் சேதமும் ஏற்பட்டிராது. நுட்பமானதும் அசாதாரணமானதுமாகிய தொழிலைச் செய்பவன் அண்டையிலுள்ளவர் தமது சொத்தில் சட்டப் படி செய்யும் ஒரு வேலையால் இழப்பு ஏற்பட்டதாகப் புகார் செய்ய முடியாது.

வாதிக்கு ஏற்பட்ட ஊறு அல்லது இழப்பு தாற்காலிகமான தாகவும், எப்போதாவது அரிதாக ஏற்படுவதுமாக இருப்பின், அதைத் தடுக்க உறுத்துக்கட்டளை பிறப்பிக்கப்படாது. எடுத்துக் காட்டாக, ஸ்வெய்ன் v. ஜி. என். ரெயில்வே (Swaine v. G. N. Railway) வழக்கில், எதிர்வாதி கொட்டிவைத்திருந்த உரக் குவியலிலிருந்து சாதாரணமாக எந்தக் கெட்ட நாற்றமும் அடிக்க வில்லை. ஆனால், எப்போதாவது சில சமயங்களில் மட்டும் அதை அகற்றுவதில் ஏற்பட்ட கால தாமதத்தாலும், அதில் கிடந்த செத்த பூனை, நாய் ஆகியவற்றாலும் முடைநாற்றம் எழுந்தது. இதற்காக வாதிக்கு உறுத்துக்கட்டளை வழங்கப்படவில்லை; அவர் தீங்கீடு கோரி வேறு வழக்கிட நேர்ந்தது.

ஆனால், எல்லாச் சூழ்நிலைகளையும் கருத்தில் கொண்டு பார்க் கும்போது, தாற்காலிகமானதொந்தரவும் தொல்லையாகஇருக்கலாம். நெடுஞ்சாலையில் குறுகிய காலத்திற்குமட்டும் வைக்கப்பட்டுள்ள இடையூறு அல்லது தடை தொல்லையாகக் கருதப்படலாம். ஆனால், ஒருவர் தம்முடைய பழைய வீட்டை இடித்துப் புதிய கட்டடம் கட்டுவதால் அண்டையிலுள்ளவர்களுக்குப் பல மாதங்கள் தொந்தரவும், வசதிக் குறைவும் ஏற்படலாம். வீட்டைக் கட்டு பவர் தகுந்த திறமையும் கவனமும் காட்டியிருப்பின், அவர் செயலைத் தொல்லையெனக் கருத முடியாது. இதைத் தொல்லை

யென்று கருதினால் மனித வாழ்வுக்கு இன்றியமையாத செயல்கள் ஒடுங்கிவிடும். ஆனால், வாதிக்கு ஏற்பட்ட இழப்பு அல்லது ஊறு மிகக் கடுமையானதாயின், அது திடீரென்று ஏற்பட்டதென எதிர் வாதி கூறமுடியாது.

பொதுவாகத் தொல்லை என்பது தொடர்ந்து இழைக்கப்படும் தீங்காகும். பெரும்பான்மையான வழக்குகளில் தனிப்பட்ட தொல்லை அண்டையிலுள்ள சொத்தை அனுபவிப்பதில் குறிப் பிடத்தக்க காலத்திற்கு இடையூறு அல்லது இடைஞ்சலாக உள்ள செயலாக அமைந்துள்ளது. விடியற்காலையில் ஒருமுறை சேவல்கள் சேர்ந்து கூவுதல் தொல்லையாகாது. ஆனால், மக்கள் குடியிருப்புப் பகுதியில் அவை வாரக் கணக்கில் தொடர்ந்து கூவியபோது, அதைத் தடுக்க உறுத்துக்கட்டளையும், தீங்கிடும் ஒரு வழக்கில் அளிக்கப்பட்டது. தொல்லையாகும் செயல் தொடர்ந்து நிகழ்வதாக இல்லாமல், ஒரு தனிச் செயலாக இருந்தாலும், தாற்காலிக மானதாக இருந்தாலும், அது ஒரு நிலைமையென்று சொல்லும் வண்ணம் அமைந்திருக்கவேண்டும், எனவே, தொல்லை ஒரே ஒரு முறை ஏற்பட்ட செயலாலும் அமைந்திருக்கலாம். போல்டன் v. ஸ்டோன் (Bolton v. Stone) வழக்கில் முதலில் நீதிபதி ஆலிவர் சாலையில் ஒருமுறை பந்து சென்று விழுமாறு அடிப்பது தொல்லை யாகாது என்று கூறினார். ஆயினும் இப் பிரச்சினையை அப்பீல் நீதிமன்றம் வேறுமுறையில் அணுகி, சாலையில் போய்விழுமாறு ஒரு முறை பந்து அடிக்கப்பட்டதற்காக வழக்கிடப்பட்டதா என்று கேட்காமல், சாலையை அடுத்துள்ள நிலத்தில் கிரிக்கெட் விளை யாடுவதால் சாலையில் செல்லும் மக்களுக்கு ஆபத்தான நிலையேற் பட்டுள்ளதா என்றே வினவியது. விளையாடும் இடத்திலிருந்து மிகவும் அரிதாகவே சாலையில் பந்துபோய் விழுந்தது என்பதால் ஆபத்தேற்படுத்தும் சூழ்நிலை ஏற்பட்டிருக்கவில்லை என்று நீதி மன்றம் கருதியது. சில சமயங்களில் குறிப்பிட்ட இடைவெளி விட்டுச் சீராகத் தொடர்ந்து வரக்கூடிய தொல்லையைவிட எப்போது வேண்டுமானாலும் ஏற்படக்கூடிய தொல்லை அதிகத் தொந்தரவாக இருக்கும்.

இரைச்சல் உள்ள பகுதியில்கூடச் சராசரி இரைச்சலைவிட அதிகமான இரைச்சல் அல்லது ஓசை ஏற்படும் தொழிலைச் செய்வது தொல்லையாகக் கருதப்படலாம். போல்சூ & அல்பியரி லிமிடெட் v. ரஷ்மர் (Polsue & Alfieri Ltd v. Rushmer) வழக்கில் வாதி லண்டன் மாநகரில் பிளீட் தெருவில் கோக் சதுக்கத்தில் வாழ்ந்தார். அடுத்த வீட்டில் இருந்த எதிர்வாதி-கம்பெனி சில அச்சு யந்திரங்களை வைத்து வேலை செய்ததால் வாதியும்

அவரது குடும்பத்தினரும் இரவு முழுவதும் விழித்திருக்கவேண்டிய நிலையேற்பட்டது. எதிர்வாதி தமது தொழிலைச் செய்வதைத் தடுக்க வாதி உறுத்துக்கட்டளை கோரி வழக்கிட்டார். இவ் வழக்கில் வாதி வாழ்ந்த இடம் இரைச்சல் உள்ள பகுதியாக இருந்தாலும், எதிர்வாதிகள் தங்கள் தொழிலால் அந்த இரைச்சலை அதிகமாகச் செய்துவிட்டார்கள் என்று நீதிமன்றம் கூறி வாதி கேட்ட உறுத்துக் கட்டளையைப் பிறப்பித்தது.

தீங்கெண்ணம் (Malice)

எதிர்வாதி சட்டப்படியான ஒரு செயலைச் செய்திருந்தாலும், வாதிக்குத் தொந்தரவும், இடையூறும் செய்ய வேண்டும் என்ற கெட்ட நோக்கத்துடன் அதைச் செய்திருந்தால் தொல்லைக்குப் பொறுப்பாளியாவார். கிரிஸ்டீ v. டேவி(Christie v. Davey)வழக்கில் வாதி ஓர் இசை ஆசிரியர். அவர் வாழ்ந்த இல்லம் எதிர்வாதியின் இல்லப்பகுதியை அடுத்திருந்தது. இருவருடைய இல்லப்பகுதிகளையும் ஒரு தடுப்புச் சுவர் பிரித்தது. வாதி ஓயாமல் இரவு பகல் எந்நேரமும் பாட்டுச் சொல்லித் தந்தது எதிர்வாதிக்குச் சகிக்க முடியாத தொந்தரவாக இருந்தது. எனவே, வாதி பாட்டுச் சொல்லிக் கொடுப்பதை நிறுத்துவதற்காகத் தீங்கெண்ணத்துடன் எதிர்வாதி தடுப்புச் சுவரில் ஓங்கி உதைத்தும் பாத்திரங்களைத் தட்டியும், சீழ்க்கை ஒலி செய்தும், கத்தியும் இடையூறு செய்தார். இதனால் வாதி தமது தொழிலைச் செய்வதில் வசதிக் குறைவும், தொந்தரவும் ஏற்பட்டது. இங்கு எதிர்வாதியின் செயல் முறைப்பற்றதாக அமைந்திருந்தது. இங்கு நடந்த செயல்கள் நிரபராதிகளான இருவர் இடையே நடைபெற்றிருப்பின், எதிர்வாதி பொறுப்பாளியாகக் கருதப்பட்டிருக்க மாட்டார். ஆனால், இவ் வழக்கில் எதிர்வாதியின் செயல்கள் தீங்கெண்ணத்துடன் வாதிக்குத் தொந்தரவு தரவே செய்யப்பட்டன. எனவே, அவரது செயல்களைத் தடுக்க உறுத்துக்கட்டளை பிறப்பிக்கப்பட்டது. இவ் வழக்கிற்குப் பின்னர் எழுந்த மேயர் ஆஃப் பிராட் போர்ட் v. பிக்கில்ஸ் வழக்கிலும், ஆலன் v. பிளட் வழக்கிலும் சட்டப்படியமைந்த செயல் கெட்ட நோக்கத்துடன் செய்யப்பட்டாலும் தீங்காகாது என்று சொல்லப்பட்டிருப்பினும், இவற்றில் கிரிஸ்டி v. டேவி வழக்கினைப் பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை. கிரிஸ்டி v. டேவி வழக்கில் சொல்லப்பட்ட தீர்ப்பு ஹாலிவுட் சில்வர் பாக்ஸ் பார்ம் லிமிடெட் v. எம்மெட் (Hollywood Silver Fox Farm Ltd v. Emmett) வழக்கில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இவ் வழக்கில் வாதியின் நிலத்தின் எல்லைக்கருகில் தம்முடைய நிலத்தில் எதிர்வாதி இருந்துகொண்டு வேண்டுமென்றே, தீங்கெண்ணத்துடன் துப்பாக்கியால் இடையருது சுட்டு,

வரதியின் வெண்முனைக் கருவால் நரிகள் (Silver-fox) இனப் பெருக்குச் செய்யும் காலத்தில் அவற்றைத் துரத்தியடித்தார். இவ் விலங்குகள் அந்த நேரத்தில் மிகவும் பயப்படக்கூடியவை. எனவே, துப்பாக்கி வெடித்ததால் அவை சேரா என்பதோடு, தாய் நரிகள் அவற்றின் குட்டிகளைக் கொன்று விழுங்கக்கூடிய ஆபத்தும் இருந்தது. எதிர்வாதிக்கும் வாதிக்கும் ஏற்பட்ட ஒரு தகராறின் காரணமாகவே, எதிர்வாதி தீங்கெண்ணத்துடன் இச் செயலைச் செய்தார். அவர் வாதிக்குத் தீங்கீடு தர நேர்ந்தது. தவிர, இச் செயல்களை அவர் செய்யாமல் தடுக்க உறுத்துக் கட்டளையும் பிறப்பிக்கப்பட்டது. தொல்லைக்கு எதிர்வாதி பொறுப் பாளியாவாரா என்பதைத் தீர்மானிக்க அவர் என்ன நோக்கு அல்லது கருத்துடன் ஒரு செயலைச் செய்தார் என்று பார்க்கவேண்டும். எனவே, நியாயமாகக் கருதக்கூடிய செயல்களை வேண்டுமென்றே அண்டையிலுள்ளவருக்கு ஊறு அல்லது இழப்பு ஏற்படுத்தவேண்டும் என்று தீங்கெண்ணத்துடன் செய்திருந்தால் அவற்றை முறையானவையாகக் கருதமுடியாது. எதிர்வாதியின் செயல் முறையற்றதாயின்-நியாயமற்றதாயின் தொல்லைக்குப் பொறுப்பாளியாவார்.

தீங்கெண்ணம் எதுவும் இல்லையெனினும், எதிர்வாதி தொல்லைக்குப் பொறுப்பாளியாகும் சூழ்நிலைகளும் உண்டு. மேலே சொன்ன தீர்ப்புகள் கூறுவதெல்லாம் குற்றமற்றதாகக் கருதப் படவேண்டிய நடத்தையும் தீய நோக்கத்தால் தொல்லையாகக் கருதப்படலாம் என்பதேயாகும்.

2. நிலத்தைப் பயன்படுத்துவதற்கும், அனுபவிப்பதற்கும் இடையீடு அல்லது இடைஞ்சல் ஏற்பட்டிருக்கவேண்டும். எதிர்வாதி இடைஞ்சல் விளைவித்ததால் (1) சொத்திற்குச் சேதம் ஏற்பட்டிருக்கலாம் அல்லது (2) குறிப்பிட்ட சொத்தினை யுடையவர்களது உடல்நலத்துக்கு ஊறே அல்லது தொந்தரவோ ஏற்பட்டிருக்கிலாம்.

சொத்திற்கு விளைவிக்கப்படும் ஊறு, ஏதாவதொரு பொருள் மூலமாக மற்றவர்களது சொத்திற்குச் சேதம் அல்லது ஊறு விளைவித்தால் அதற்காக வழக்கிடலாம். எடுத்துக்காட்டாக, ஒருவருக்குச் சொந்தமான மரத்தின் கிளைகள் அடுத்தவர் நிலத்தில் நீண்டிருத்தல்; ஒருவர் நிலத்தில் உள்ள மரத்தின் வேர்கள் அடுத்த நிலத்தில் ஊடுருவி இருத்தல்; புகை, வாயு, நீர் முதலியன அடுத்தவர் நிலத்தில் புகுமாறு செய்தல் ஆகியவற்றைச் சொல்லலாம். செயின்ட் ஹெலன்ஸ் ஸ்மெல்டிங் கம்பெனி

v. டிப்பிங் (St. Helen's Smelting Co. *v.* Tipping) வழக்கில் எதிர் வாதியின் தொழிற்சாலைகளிலிருந்து வந்த புகையினால் வாதியின் மரங்களுக்கும் செடிகளுக்கும் சேதம் ஏற்பட்டது. அந்தப் பகுதி அத்தகைய தொழிற்சாலைகளுக்காகப் பயன்படுத்தப் பட்டது என்ற எதிர்வாதம் ஏற்கப்படவில்லை. எதிர்வாதிகள் வாதிக்கு ஏற்பட்ட சேதத்திற்குப் பொறுப்பாளிகளென்று தீர்ப்பளிக்கப்பட்டது.

பருப்பொருள் அல்லாத சொத்திற்கு விளைவிக்கப்படும் ஊறு

ஒரு சொத்திற்கு உரிமையோ அல்லது உடைமையோ கொண்டவர் அதை அனுபவிப்பதற்கு வசதியாகத் தமக்குச் சொந்தமில்லாத மற்றொரு சொத்தில் ஒரு செயலைச் செய்வதற்கும் அல்லது தொடர்ந்து ஒரு குறிப்பிட்ட செயலைச் செய்வதற்கும் அல்லது ஏதேனும் ஒரு செயல் செய்யப்படாமல் தவிர்ப்ப தற்கும் பெற்றுள்ள உரிமையையே வசதியுரிமை (Servitude) என்கிறோம். நமது சொத்தை நாம் நுகர இவை இன்றியமையாத வையாக இருக்கலாம். எடுத்துக்காட்டாக, அடுத்தவர் நிலத்தின் மீது நம்முடைய நிலத்திற்குச் செல்லும் வழியமைந்திருக்கலாம். எனவே, அடுத்தவர் நிலத்தைக் கடந்து செல்லாமல் நம் நிலத் திற்குப் போய்ச் சேரமுடியாது. அடுத்தவர் நம் நிலத்திற்குச் செல்லும் வழியுரிமையைத் தடுத்துவிட்டால், அதற்காக நாம் வழக் கிடலாம். அண்டை நிலத்தார் நம் வீட்டையொட்டி உயரமான கட்டடம் கட்டி நமக்குக் கிடைக்கின்ற காற்றையும் வெளிச்சத் தையும் தடுத்து, நமது கட்டடத்தை இருட்குகையாக்கி, குடி யிருக்கத் தகுதியற்றதாக்கிவிடலாம். இதைச் சட்டம் தடுக்கிறது. இந்திய வசதியுரிமைச் சட்டத்தில் (Indian Eacements Act) இவை இயற்கையிலமைந்த உரிமைகளுக்கு ஏற்பட்ட தடை என விளக்கப்பட்டுள்ளது. வசதியுரிமை பெறும் சொத்தை ஓங்கு சொத்து (Dominent heritage)என்றும், வசதியுரிமைக்கு உட்பட்டு ஒடுங்கும் சொத்தை ஒடுங்கு சொத்து (Servient heritage) என்றும் குறிப்பிடுகிறோம். வசதியுரிமைகள் இயல்பாகவே நிலத்தோடு இணைந்தவையாக இருக்கலாம். அவற்றை ஏதாவது ஒரு வழியில் அடைந்திருக்க வேண்டியதில்லை. எடுத்துக்காட்டாக, அண்டையி லுள்ள கட்டடத்தால் ஒரு கட்டடம் தாங்கப்படுவதற்கான உரிமை யைச் சொல்லலாம். ஆனால், அடுத்துள்ள நிலத்தின் தாங்கு வசதி உரிமையைப் பெற ஒரு கட்டடம் அதை அடைந்திருக்கவேண்டும்; சட்டத்திற்கிசைந்த காரணம் எதுவுமில்லாமல், ஒடுங்கு சொத்தின் உரிமையாளரோ, அல்லது மூன்றாவது நபரோ வசதியுரிமையை நிறைவேற்றுவதற்கும், அனுபவிப்பதற்கும் இடையூறான செயலைச்

செய்தால் ஒங்கு சொத்திற்கு உடைமை கொண்டவர் தீங்கியலில் வழக்கிடலாம். இனிச் சில வசதியுரிமைகளுக்கு இழைக்கப்படும் ஊறுகளைப் பற்றிக் காண்போம்.

நீர் வசதியுரிமை இயற்கையாக ஓடும் ஆறு, ஓடை ஆகிய வற்றின் கரைகளோடு தொடர்புடைய நிலச் சொந்தக்காரர் களுக்குச் சில உரிமைகள் உண்டு. கரை சார்ந்த நிலச் சொந்தக் காரர்களாக இருப்பதால் அவர்களுக்கு இந்த உரிமைகள் இயற்கையிலேயே அமைந்துள்ளன. அவர்கள் அந்த நீரோட்டங் களிலிருந்து இல்லத் தேவைகளுக்கும், பயிர்த்தொழில் செய்வ தற்கும், கால்நடைகளின் தேவைக்கும் நீரை எடுத்துக்கொள்ள லாம். ஆனால் அவர்கள் அளவுக்கு மீறியோ, அல்லது முறை யின்றியோ நீரை எடுத்துக்கொண்டிருந்தால் பொறுப்பாளியாவார். ஏறுகரையில் நிலத்தையுடையவர்கள் இறங்குகரை நிலத்தை யுடையவர்களின் உரிமையைப் பாதிக்காதவாறு நீரை எடுத்துக் கொள்ளவேண்டும். இது ஆற்றின் அளவு, எடுத்துக்கொள்ளப் பட்ட நீரின் அளவு, மீதமுள்ள நீரின் அளவு ஆகியவற்றைப் பொறுத்ததாகும். கரை சார்ந்த நிலத்தையுடையவர்கள் தமது நிலத்திலும் அதைத் தாண்டியும் செல்லும் இயற்கையான நீரோட்டம் எவ்விதத் தடையுமின்றி அளவிலும், திசையிலும், வேகத்திலும், வெப்பநிலையிலும் பாதிக்கப்படாமல் பாய்ந்துவரும் நீரைப் பெற்றுப் பயனடைய உரிமையுண்டு. இது மற்றவர்களால் அனுமதிக்கப்படவேண்டிய உரிமையாகும். எனவே, நீரோடையின் படுகையில் தடையாகக் கட்டமைப்பு ஒன்றைக் கட்டினால் அதற் காக வழக்கிடலாம்; இதனால்உண்மையில் இழப்பு ஏற்பட்டதென்று நிரூபிக்க வேண்டியதில்லை. ஆனால், அந்தத் தடை அற்பமானதாக இருக்கக் கூடாது. ஒருவன் ஆற்றுப் படுகையில் ஒரு படகு வீடு கட்டுதலும், வழக்கத்திற்கு முரணுகவரும் பெரு வெள்ளத்தினால் தன் நிலம் சேதமடையாமல் காக்க அங்குத் தடைச் சுவர் எழுப்பு வதும் முறையான செயல்களாகும். நீரின் தூய்மை கெடுக்கப்பட் டிருந்தால், அது கரைநிலச் சொந்தக்காரர்களுக்கு மட்டும் ஊறு ஏற்படுத்திய செயலாகக் கருதமுடியாது. கரை சார்ந்த நிலத் தினருக்கு மட்டுமல்லாமல் மற்றவர்களுக்கும் உடல்நலத்திற்கும் சொத்துக்கும் வசதிக்கும் ஊறு செய்வதால் அவர்களுக்கும் அது தொல்லையாகும்.

நீரைப் பயன்படுத்தத் தகுதியற்றதாக ஆக்குவதும், மென்மை யான நீரைக் கடினமானதாக ஆக்குவதும். நீரின் வெப்பநிலையை அதிகமாக்குவதும், ஊறு விளைவிக்கும் பொருளை நீரில் கலப்பதும்

அதன் தன்மையைக் கெடுப்பதாகும். இச் செயல்களுக்குத் தீங்கியலில் பொறுப்புண்டு. இதனால் வாதிக்கு உண்மையில் இழப்பு ஏதேனும் ஏற்பட்டிருப்பின் அதற்காகத் தீங்கீடு பெறலாம். நீரின் தன்மையைக் கெடுப்பதற்கு எதிராக உறுத்துக்கட்டளையும் பெறலாம். இதனால் தொழிற்சாலைகளிலும், நிறுவனங்களிலும் மாற்றம் செய்ய வேண்டியதாகலாம்; அல்லது ஒரு குறிப்பிட்ட இடத்திலிருந்து அகற்றப்படவேண்டியதாகலாம். இதற்காக நிறையப் பொருட்செலவு ஆயினும் உறுத்துக்கட்டளை பிறப்பிக்கப்படத் தடையில்லை. எதிர்வாதி நீரோடையின் தன்மையைத் தனக்கு முன்பே பிறர் கெடுத்துள்ளனர் என்று கூறுவது எதிர்வாதமாகாது. மேற்கூறிய உரிமைகளைத் தடுக்க வசதியுரிமைகளைப் பெறலாம்; நீடனுபோகத்தால் பெறப்படுவதாயின், ஒரு வசதியுரிமை எவ்வித இடையூறும் எதிர்ப்பும் இன்றி 20 ஆண்டுக் காலமாக அனுபவிக்கப்பட்டிருக்கவேண்டும். பொதுவான தொல்லை விளைவிக்கும் உரிமையை நீடனுபோகத்தால் பெறமுடியாது.

செயற்கையான கால்வாய்களைப் பொறுத்தவரை அவற்றின் கரைகளை அடுத்து நிலங்களை உடையவர்களுக்கு அதைப் பயன்படுத்தவோ அல்லது அதன் தடையற்ற ஓட்டத்திலோ இயற்கையான உரிமைகள் இல்லாவிட்டாலும் அவற்றை நீடனுபோகத்தாலும் மானியத்தாலும் பெறமுடியும்.

வரையறை உள்ள வழியே செல்லாத நீரோட்டத்திலிருந்து நீரை எடுத்துக்கொள்ளவோ அல்லது தேக்கி வைக்கவோ நிலச் சொந்தக்காரர்களுக்கு உரிமையுண்டு. அவர்கள் ஏறுகரை நிலத்திலிருந்து இறங்குகரை நிலத்திற்கு, நீர் இயல்பாக ஓடுவதைத் தடுக்கவேண்டியதில்லை. ஆனால், இறங்குகரை நிலத்திலுள்ளவர்கள் தங்கள் நிலத்திற்குள் நீர் இயல்பாகப் பாயாமல் தடுக்கும் உரிமையை நீடனுபோகத்தால் வசதியுரிமையாகப் பெறலாம்.

வரையறை உள்ள வழியாக நன்கு தெரியும்படி நிலத்தின் அடியில் நீரோட்டங்கள் அமைந்திருக்கலாம். அந்த நீரைப் பயன்படுத்தவும் தடையின்றி அதன் ஓட்டத்தைப் பெறவும் ஒருவர் பெற்றுள்ள உரிமைகள் நிலத்தின் மேற்பரப்பிலுள்ள நீரோட்டங்களைப் பொறுத்துள்ள உரிமைகளைப் போன்றவையே. ஆனால், இவ்வாறு வரையறையுள்ள வழியே நிலத்தினடியில் செல்லாத நீரோட்டங்களைப் பொறுத்து இவ் வுரிமைகள் கிடையாதென்றும் இவற்றை நீடனுபோகத்தால் பெறமுடியாதென்றும் ஆக்டன் v. பிளண்டல் (Acton v. Blundell) வழக்கில் சொல்லப்பட்டுள்ளது. இவ் வழக்கில் வாதியின் நிலத்தில் 20 ஆண்டுகள்

கழியாத ஒரு கிணறு இருந்தது. அதிலுள்ள நீரை அவர் ஆலைக்குப் பயன்படுத்தியிருந்தார். எதிர்வாதி ஒரு மைலுக்கு அப்பாலிருந்த தம்முடைய நிலத்தில் நிலக்கரி எடுக்கக் குழி தோண்டியதால், வாதி தம்முடைய கிணற்றிற்கு ஊறி வரும் நீர் தடுக்கப்பட்டது என்று புகார் செய்தார். அவர் தீங்கீடு பெற முடியாதென்று தீர்ப்பு அளிக்கப்பட்டது. இதே முறையில் வழங்கப்பட்ட இன்னொரு தீர்ப்பு சேஸ்மோர் v. ரிச்சர்ட்ஸ் (Chasmore v. Richards) ஆகும். இவ் வழக்கில் மழைநீர் நிலத்திற்கடியில் கசிந்து வரையறைக்கு அடங்காத வழிகளில் ஓடி ஆற்றில் கலந்தது. இந் நீரைப் பயன்படுத்தி இடச் சொந்தக்காரராகிய வாதி தமது பழமையான ஆலையை இயக்கிவந்தார். எதிர்வாதிகள் அப் பகுதியில் உள்ள மக்களுக்கு நீர் வழங்குவதற்காக ஒரு பெரிய கிணறு வெட்டினர்கள். அக் கிணற்றிலிருந்து பெருமளவு குழாய் மூலம் நீரை எடுத்தார்கள். அவ்வாறு அந்த நீரைப் பயன்படுத்தியவர்களில் பெரும்பாலோர்க்கு அங்கு நிலம் இல்லை. எதிர்வாதி நீரை எடுக்காமல் இருந்தால் அது ஆற்றினைச் சென்றடைந்திருக்கும். ஆயினும் ஆற்றில் வந்து சேர்ந்த கசிவு நீர் எந்த வரையறைக்குட்பட்ட வழியிலும் வரவில்லை. அது செல்லும் திசையையும், அமைப்பையும் எதிர்வாதி முன்னரே அறிந்திருக்க முடியாது. அவர் பொறுப்பாளியாகமாட்டார் என்று தீர்ப்பளிக்கப் பட்டது. இது இந்திய வசதியுரிமைச் சட்டத்திலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

வழிவசதியுரிமை

இது அடுத்தவர் நிலத்தின் வழியாகத் தடையின்றி ஒருவர் தம்முடைய நிலத்திற்குச் செல்லப் பெற்றுள்ள உரிமையாகும். இது இருவகைப்படும் : (1) பொதுவழி. இது பொது மக்கள் நலனுக்காக அமைந்துள்ளது. இதைப் பொதுமக்கள் அனைவரும் போக்குவரத்துக்குப் பயன்படுத்தலாம். (2) தனித்த வழியுரிமை. இது ஒரு தனி நபர் அல்லது பொதுமக்களில் சிலர் குறிப்பிட்ட பகுதியினருக்கு ஏற்பட்டுள்ள உரிமையாகும். நடைவழி உரிமையை மானியத்தாலும் (grant), இன்றியமையாத தேவையாலும் (Necessity) நீடனுபோகத்தாலும், சட்டத்தாலும் ஒருவர் பெறலாம். இந்த நடைவழி உரிமைகள் எல்லாக் காலங்களிலும் எல்லாக் காரியங்களுக்கும் பெறக்கூடியனவாக இருக்கலாம். அல்லது நடைவழியுரிமை உழவுத்தொழில் போன்ற சில குறிப்பிட்ட காரியங்களுக்காக மட்டும் தரப்பட்டிருக்கலாம். இந்த நடைவழி உரிமையை நிலையாகவோ, அல்லது தாற்காலிகமாகவோ தடுத்தாலும் அவை தொல்லையாகக் கருதப்படும்.

தாங்கு வசதியுரிமை (Right of Support)

ஒரு நிலம் அடுத்துள்ள நிலத்தால் பக்கவாட்டில்தாங்கப்படலாம்.

1. நிலத்தின் மேற்பரப்பு ஒருவருக்கும், அதன் அடிநிலம் வேறு ஒருவருக்கும் உரிமையானதாக அமைந்திருக்கும்போது அடிநிலத்தால் மேல்நிலம் தாங்கப்பட வேண்டியதிருக்கலாம். இவ்வாறு அடுத்துள்ள நிலத்திலிருந்து பக்கவாட்டில் தாங்கப்பட ஒவ்வொரு நிலச்சொந்தக்காரருக்கும் உரிமையுண்டு. எனவே,நிலத்தை உடையவர்கள் சுவர்எழுப்புதல் கட்டடம் கட்டுதல் போன்ற செயல்களால் தமது நிலத்திற்கு அருகிலுள்ள நிலமோ அல்லது அதன்மேலுள்ள நிலமோ சரிந்துவிழாத வகையில் பார்த்துக் கொள்ளவேண்டும். இந்த நிபந்தனைக்குட்பட்டு அவர்கள் தமது நிலத்தில் பள்ளம் தோண்டுதல், சுரங்கம் வெட்டுதல், அதிலுள்ள மண்ணை அப்புறப்படுத்துதல் போன்ற செயல்களைத் தாம் விரும்பியவாறு செய்யலாம். எதிர்வாதியின் செயலால்தான் தன்னுடைய நிலத்தில் சரிவு ஏற்பட்டதென வாதி நிரூபிக்கவேண்டும். எதிர்வாதி கவனமின்றி இருந்ததால்தான் நிலச்சரிவு ஏற்பட்டதென வாதி நிரூபிக்க வேண்டியதில்லை. எதிர்வாதி தான் கவனமின்றி இருக்கவில்லை என்று கூறுவது சரியான எதிர்வாதம் ஆகாது. எதிர்வாதி தான் நியமித்த ஒப்பந்தக்காரரின் செயலால் தான் சரிவு ஏற்பட்டதெனக் கூற முடியாது. ஆனால்,தெய்வச்செயலால் சரிவு ஏற்பட்டதென்றோ, மூன்றாவது நபர் செய்கையால் ஏற்பட்டதென்றோ எதிர்வாதி நிரூபிக்கலாம். எதிர்வாதி செய்யும் செயலால் ஈடுசெய்ய முடியாத வகையில் சரிவு ஏற்படுவதைத் தடுக்க நீதிமன்றம் உறுத்துக்கட்டளை பிறப்பிக்கலாம்.

நிலத்திற்கே இவ்வாறு தாங்குவசதி உரிமை உண்டு; கட்டடங்களுக்குக் கிடையாது. ஆனால், ஒரு கட்டடம் அண்டையில் உள்ள நிலத்தாலும், அக் கட்டடத்திற்குக் கீழுள்ள நிலத்தாலும் தாங்கு வசதியுரிமையைப் பெறமுடியும். எடுத்துக்காட்டாக, ஒருவன் தன்னுடைய நிலத்தின் ஒரு பகுதியைக் கட்டடம் கட்டக்கொடுத்துவிட்டால் இவ்வாறு தாங்குவசதி உரிமை வெளிப்படையாகவோ அல்லது உட்கிடையாகவோ கொடுத்ததாகக் கருதலாம். இந்த உரிமையை 20 வருடகால நீடனுபோகத்தால் பெறமுடியும். டால்டன் v. ஏங்கஸ் (Dalton v. Angus) வழக்கில் வாதிக்கும் எதிர்வாதிக்கும் அண்டைநிலங்களில் வீடு இருந்தது. வாதி தன்னுடைய வீட்டை ஒரு தொழிற்சாலையாக மாற்றியதால் அதற்குப் பக்கவாட்டில் அழுத்தமாகத் தாங்கப்பட வேண்டிய தேவை ஏற்பட்டது. அதற்குப்பின் 20 ஆண்டுகள் கழித்து எதிர்வாதி தம்முடைய வீட்டை இடித்துத் தள்ளிப் புதிய வீடு கட்டுவதற்காகத் தம்முடைய நிலத்தில் பள்ளம் தோண்டினார். அதன்

விளைவாக வாதியின் தொழிற்சாலைக்குச் சரிவு ஏற்பட்டுச் சேதம் விளைந்தது. வாதி தன்னுடைய தொழிற்சாலையைக் கட்டி 20 ஆண்டுகளுக்கு மேலானபடியால் அது அடுத்துள்ள நிலத்தால் தாங்கப்படும் உரிமையை நீடனுபோகத்தால் பெற்றுவிட்டதாகவும், எனவே அவருக்கு ஏற்பட்ட இழப்புக்கு எதிர்வாதி இழப்பீடு தரவேண்டும் என்றும் தீர்ப்பளிக்கப்பட்டது. மானியமோ அல்லது நீடனுபோகமோ இல்லாவிட்டால் ஒரு கட்டடத்திற்கு அடுத்த நிலத்தால் தாங்கப்படும் வசதிஉரிமை சட்டப்படி இல்லையெனினும் ஒரு நிலத்திற்கு அடுத்துள்ள நிலத்தால் இயல்பாகத் தாங்கப்படும் வசதியை அகற்றப்பட்டதன் விளைவாக ஒரு கட்டடத்திற்குச் சேதம் ஏற்பட்டிருந்தால் வழக்கிடமுடியும். ஸ்ட்ரோயன் v. நோல்ஸ் (Stroyan v. Knowles) வழக்கில் வாதியின் தொழிற்சாலை கட்டப்பட்டிருந்த நிலத்திற்குத் தாங்குவசதி விலக்கிக் கொள்ளப்பட்டது, இதன் விளைவாகத் தொழிற்சாலைக்குச் சேதம் ஏற்பட்டது. எதிர்வாதி நிலக்கரி எடுப்பதற்காகச் சுரங்கம் தோண்டியதால் தொழிற்சாலை அமைந்திருந்த நிலத்தில் சரிவு ஏற்பட்டது. அந்தத் தொழிற்சாலையின் பளு, சரிவு ஏற்படக் காரணமாக அமைந்திருக்கவில்லை, அந்தத் தொழிற்சாலைக்குத் தாங்குவசதி உரிமை நீடனுபோகத்தால் பெறப்பட்டிராவிடினும் அது கட்டப்பட்டிருந்த நிலம் சரிந்து விழுந்ததாலேயே சேதம் ஏற்பட்டது. எனவே, வாதிக்கு ஏற்பட்ட இழப்புக்கு எதிர்வாதி இழப்பீடு தரவேண்டும் என்று தீர்ப்பளிக்கப் பட்டது. இவ்வாறு தாங்குவசதி உரிமை விலக்கப்பட்டதற்காக மட்டும் வழக்கிடமுடியாது. அதன் விளைவாகத் தனக்குக் கணிசமான இழப்பு ஏற்பட்டதாக வாதி நிரூபிக்க வேண்டும் என்று இந்திய வசதி உரிமைகள் சட்டத்தில் 34ஆம் பிரிவில் சொல்லப்பட்டிருக்கிறது.

ஒளிவசதி உரிமை

நிலம் அல்லது கட்டடத்திற்கு உரிமை உள்ளவர்களுக்கு அக்கட்டடத்திற்கு நேரடியாகச் செங்குத்தாக மேலிருந்து வரும் ஒளியைப் பெற இயல்பாகவே உரிமையுண்டு. ஆனால், நான்கு புறங்களிலிருந்து பக்கவாட்டில் வரும் ஒளியைப் பெற இயல்பான உரிமை இல்லை. ஏனெனில், அடுத்தவர் தமது நிலத்தில் அவர் விரும்பியவாறு கட்டடம் கட்டும் உரிமையுள்ளது. ஒளியைத் தடுக்கவேண்டும் என்ற நோக்கத்தோடு அடுத்துள்ளவர் கட்டடம் கட்டினாலும் அவர் புகார் செய்யமுடியாது. ஆனால், ஒளிவசதி உரிமையை மானியமாகவும், நீடனுபோகத்தாலும் பெற முடியும். இவ்வாறு நீடனுபோகத்தால் ஒரு கட்டடத்திற்குக் குறிப்பிட்ட சன்னல்கள், அல்லது துளை அல்லது இடைவெளிகள் வழியாக ஊடுருவி வரும் ஒளியைத்தான் உரிமையாகப் பெற

முடியும். இந்த உரிமையை அடைந்திருந்தால் இந்த இடைவெளி கள் வழியே வரும் ஒளியைத் தொன்மையான ஒளி என்கிறோம். திறந்தவெளியாக உள்ள நிலத்தின்வழியே வரும் ஒளியையோ குறிப்பிட்ட சன்னல்போன்ற ஓட்டைகள் வழியாக வராத ஒளியையோ உரிமையாகப் பெறமுடியாது. ஒப்பந்தம் மூலமாக வழங்கப்பட்ட உரிமையாயின் ஒப்பந்த வாசகங்களின்படி எவ்வளவு ஒளிபெற உரிமை வழங்கப்பட்டிருந்தது என்பதைப் பார்க்க வேண்டும். நீடனுபோகத்தால் பெற்ற உரிமையாயின் துவாரங்கள் வழியாக வந்த முழுவெளிச்சத்திற்கும் உரிமையைப் பெறமுடியாது. எனவே, வழக்கிடும் வாதி தன்னுடைய கட்டடத்திற்கு முன்பு கிடைத்துவந்த வெளிச்சம் எதிர்வாதி கட்டடம் கட்டியதால் குறைந்துவிட்டது என்று மட்டும் சொன்னால் போதாது. அக்கட்ட டத்தை வசதியாகப் பயன்படுத்துவதற்குத் தேவையான ஒளியை மட்டுமே நீடனுபோகத்தால் பெறமுடியும். அதற்கு இடையூறு ஏற்பட்டால் மட்டுமே தொல்லைக்காக வழக்கிடமுடியும். எதிர்வாதி கட்டடம் கட்டியதால் வாதி தன்னுடைய கட்டடத்திற்குக் கிடைத்துவந்த ஒளி கணிசமான அளவில் குறைந்துவிட்டது என்று நிரூபிக்கவேண்டும். காள்ஸ் v. ஹோம் அண்டு கலோனியல் ஸ்டோர்ஸ் லிமிடெட் (Colls v. Home and ColonialStores Ltd.) வழக்கில் எதிர்வாதி ஒரு கட்டடம் கட்டியதன் விளைவாக வாதி தன்னுடைய கட்டடத்தில் கீழ்ப்பகுதியில் அலுவலகமாகப் பயன் படுத்திய ஓர் அறைக்கு வந்துகொண்டிருந்த வெளிச்சம் குறைந்து விட்டது. அங்கு, மின்விளக்கு எப்போதும் பயன்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டிருந்தது. இவ் வழக்கில் எதிர்வாதி பொறுப்பாளி அல்லரென்று தீர்ப்பளிக்கப்பட்டது. கணிசமான அளவில் ஒளி தடுக்கப்பட்டிருந்தால்தான் வழக்கிடமுடியும்.

வளியுரிமை

ஒவ்வொருவருக்கும் தனது நிலத்திற்கு நேர்மேலாகச் செங்குத் தாக வரும் காற்றோட்டத்தைப் பெற இயல்பான உரிமையுண்டு. ஆனால், அடுத்துள்ள திறந்தவெளியாக இருக்கும் நிலத்தின்வழியே வரும் காற்றோட்டத்தைப் பெறும் உரிமை கிடையாது. ஆனால் மானியம் மூலமாகவும், நீடனுபோகத்தாலும் இப்படிப்பட்ட உரிமையைப் பெறமுடியும். இந்த உரிமைக்கு இடையூறு விளை விக்கப்பட்டால் தொல்லைக்காக வழக்கிடலாம். சாளரங்கள் சன்னல்கள் போன்ற இடைவெளிகளின் வழியாக இல்லாமல் வேறுவழிகளில் ஒரு கட்டடத்திற்கோ அல்லது திறந்தவெளிக்கோ வரும் காற்றினை நீடனுபோகத்தால் உரிமையாகப் பெறமுடியாது. ஒரு கட்டடத்திற்குக் காற்றினைப் பெறவும், துய்க்கவும் உள்ள

உரிமையை 20 ஆண்டுக் காலம் இடையருது எதிர்ப்பின்றி அனுப விப்பதால் பெறமுடியும் என்று இந்திய வசதியுரிமைகள் சட்டத் தில் சொல்லப்பட்டுள்ளது. வளியுரிமை ஒளியுரிமையை யொட்டி அமையும். துப்புரவிற்கும் உடல் நலத்திற்கும் போதுமான காற்றைப் பெறவே ஒரு வீட்டுச் சொந்தக்காரருக்கு உரிமை யுண்டு. தென்றல் தடையின்றி வீசுதலைத் தடுக்கக்கூடாது என்று அவர் கேட்கமுடியாது. தூய்மையான காற்றை ஒருவன் அனுப விந்து வந்தால் அதைப் பிறர் தடுக்காதவாறு சட்டத்தால் பாது காப்புப் பெறமுடியும்.

2. உடல்நலத்திற்கும் வசதிக்கும் இழைக்கப்படும் ஊறு

ஒருவர் தமது கட்டடத்தை வசதியாகவும், தொந்தரவின்றியும் பயன்படுத்தமுடியாதவாறு கணிசமான அளவில் மற்றவர் குறுக் கிட்டிருந்தால் அவர்மேல் தொல்லைக்காக வழக்கிடமுடியும். அவருக்கு ஏற்பட்ட வசதிக்குறைவு மிகவும் அற்பமானதாகவோ, அல்லது கற்பனையில் தோன்றியதாகவோ இருந்தால் அவர் வழக் கிடமுடியாது. வாதிக்கு ஏற்பட்டுள்ள வசதிக்குறைவையும் தொந்தரவையும் தீர்மானிக்கும்போது நாம் வரையளவாகக் கொள்ளவேண்டியது வாதி வாழ்கின்ற பகுதியில் உள்ள ஒரு சாதாரண மனிதனுக்கு அது வசதிக்குறைவாகவோ தொந்தர வாகவோ இருக்குமா என்பதாகும். இதைத் தொல்லை யெனக் கருதப்படும் செயல் நிகழ்ந்த காலம், இடம் முதலிய சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு தீர்மானிக்க வேண்டும். வாணவேடிக்கைகளும், இசைநிகழ்ச்சிகளும் நடைபெறும் ஒரு விடுதியின் வெளியே இரவு நீண்டநேரம்வரை கூச்சலிட்டுக் கொண்டிருக்கும் கும்பலைச் சேர்ப்பது தொல்லையாகக் கருதப்படும். புகை, இரைச்சல் முதலியன உடல்நலத்திற்கு ஊறு விளைவிக்க வில்லையாயினும், தொல்லையாகக் கருதப்படலாம். ஒருவன் சட்டப் படி அவனுக்கு உரிமையுள்ள ஒரு தொழிலைச் செய்வதால் அடுத்த வீட்டில் உள்ளவருக்குத் தொந்தரவு ஏற்பட்டாலும், தொல்லைக்குப் பொறுப்பாளியாக மாட்டான். எனவே, ஒருவர் கறிக்கடை அல்லது சாராயக்கடை வைத்திருப்பதால் அடுத்த வீட்டில் உள்ளவர் களுக்கு வசதிக்குறைவும், தொந்தரவும் ஏற்பட்டாலும் அவர்மீது தொல்லைக்காக வழக்கிடமுடியாது.

3. இழப்பு அல்லது ஊறு

பொதுவான தொல்லைக்காக வழக்கிடும் வாதி தனக்குத் தனித்த இழப்பு அல்லது ஊறு ஏற்பட்டது என்று நிரூபிக்க வேண்டும். இல்லையேல் அவன் வழக்கிடமுடியாது. தனித்த

தொல்லைக்காக அவர் வழக்கிடும்போது அவருக்கு இழப்பு ஏற் பட்டதாகப் பொதுவாக ஊகித்துக் கொள்ளப்படும். ஃபே v. பிரன்ட்டிஸ் (Fay v. Prentice) வழக்கில் எதிர்வாதியின் வீட்டின் உச்சியிலிருந்த பிதுக்கம் வாதியின் தோட்டத்திற்கும் நீட்டிக்கொண்டிருந்தது. அதனால் மழைநீர் அதிலிருந்து வாதியின் தோட்டத்தில் துளிகளாக வடிந்தது. இவ் வழக்கில் வாதி தமக்குச் சேதம் அல்லது இழப்பு ஏற்பட்டதென்று நிரூபிக்கத் தேவையில்லை யென்றும், சட்டம் அதை ஊகித்துக்கொள்ளும் என்றும் சொல்லப் பட்டது. எதிர்வாதி இவ்வாறு வாதியின் தோட்டத்தில்..நீட்டிக் கொண்டிருக்குமாறு கட்டட உச்சியில் சிற்பவேலைப்பாடு அமைந்த பிதுக்கத்தை வைத்தால் அதில் சேரும் மழைநீர் வாதியின் தோட் டத்தில் போய்விழுந்து சேதம் ஏற்படுத்தும் என்பது எதிர்பார்க்க கூடியதே. எனவே, சேதம் ஏற்பட்டதென நிரூபிக்குமாறு வாதி யைக் கேட்கத் தேவையில்லை.

நெடுஞ்சாலைகள்

நெடுஞ்சாலைகளில் ஏற்படும் தொல்லை என்பது நெடுஞ் சாலையின்மீதோ அதற்கருகிலோ செய்யப்படும் முறையற்ற செயல்களாலோ நெடுஞ்சாலைகளைப் பராமரிக்கச் செய்ய வேண் டிய செயல்களைத் தவிர்ப்பதாலோ மக்கள் வசதியாகவும், ஆபத் தின்றியும் நெடுஞ்சாலையில் செல்ல முடியாமல் தடுப்பதாகும். எடுத்துக்காட்டாக நெடுஞ்சாலையில் வேலி, பலகை, சாரக்கட்டு போன்றவை நீட்டிக் கொண்டிருக்குமாறு வைத்திருத்தல், வண்டி, மாடு, கார் முதலியவற்றை முறையற்ற காலத்திற்கோ முறையற்ற எண்ணிக்கையிலோ அங்கு நிறுத்திவைத்தல், கடை அல்லது காட்சி அரங்கம் முன்பாகக் கும்பல் சேர்த்தல், சட்டத் திற்கு முரணான வகையில் பள்ளம் தோண்டுதல் முதலியன வற்றைச் சொல்லலாம். ஆனால், நெடுஞ்சாலையில் வைக்கப் பட்டுள்ள தடைகள் அனைத்தையும் தொல்லையாகக் கருத முடியாது. அவ்வாறு கருதினால் நெடுஞ்சாலையைப் பயன் படுத்துவது இயலாததாகும். சாலைக்கடியில் செல்லும் நீர்க்குழாய், வாயுக்குழாய், மின்சாரக் கம்பி ஆகியவற்றை வைக்கவும், சாலை போடவும், சாலையை ஒட்டியுள்ள வீடுகளைப் பழுதுபார்க்கவும் தாற்காலிகமாக நெடுஞ்சாலையில் செய்யப்படும் செயல்களைத் தொல்லையாகக் கருதமுடியாது. தாற்காலிகமான தடையாக இருந்தால் அதன் அளவும், வைக்கப்பட்டுள்ள காலமும் முறையானதாக இருக்கவேண்டும். நெடுஞ்சாலையில் விளக்கில் லாமல் நிறுத்தப்பட்டுள்ள ஒரு காரைத் தொல்லையாகக் கருத வேண்டுமானால், அந்தக் கார் அங்குத் தடையாக இருப்பதோடு,

ஆபத்தானதாகவும் அமைந்திருக்கவேண்டும். தவிர, காருக்குப் பொறுப்பானவர் அங்கு விளக்கு வைத்து எச்சரிக்காமல் போய்விட்டார் என்று நிரூபிக்கவேண்டும். விளக்கு அணைந்து போனதற்கு அவர் காரணமாக இல்லையென்றாலும், பின்னர் அவர் ஏதாவதொரு தவறிழைத்தார் என்று நிரூபிக்கவேண்டும். அவர் தமது வண்டியில் விளக்குகள் அணைந்துவிட்டதை அறிந்ததும் வண்டியை நிறுத்திய செயலைமட்டும் வைத்துக்கொண்டு தொல்லை இழைத்ததாகக் கருதமுடியாது. ஆனால், முறையில்லாமல் அவர் மிதமிஞ்சிய நேரத்திற்கு அதை அங்கிருந்து அகற்றாமல் விட்டு வைப்பதும், கார் சாலையில் ஆபத்தான முறையில் இருப்பதைத் தகுந்த எச்சரிக்கை மூலம் தெரிவிக்காமல் இருப்பதும் தொல்லையாகும். நெடுஞ்சாலையில் தடையாக ஒரு சரக்குந்தை அதன் ஓட்டுநர் நிறுத்திச் சென்றுவிட்டதன் விளைவாக வழிப் போக்கர் ஒருவருக்கு ஏற்படும் விபத்திற்குத் தொல்லைக்காக வழக்கிடலாம். சாலையைஒட்டியுள்ள வீடுகளுக்கும் கடைகளுக்கும் சரக்குகளை வழங்குவதற்காகச்சாலையில் உந்துகள் தாற்காலிகமாக, நியாயமான காலத்திற்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்தால் அதைத் தொல்லையாகக் கருதமுடியாது. சாலையில் செல்பவர்கள் அவ்வாறு செல்வதால் சாதாரணமாக ஏற்படக்கூடிய ஆபத்தையும் வசதிக் குறைவையும் ஏற்றுக்கொள்கிறார்கள் என்றே கருத வேண்டும். அவர்களுக்கு முறையின்றி ஆபத்து ஏற்பட்டிருந் தால்தான் தீங்காகக் கருதவேண்டும். நெடுஞ்சாலையில் வழுக்கி விழ வைக்கும் பொருள்களை எறிவதும் அபாயகரமான இருப்புப் பாதைகளை அகற்றாமல் வைத்திருப்பதும் பொதுவானதொல்லை களுக்கு வேறு எடுத்துக்காட்டுகளாகும்.

நெடுஞ்சாலையிலுள்ள தடையால் தமக்கு ஊறு அல்லது இழப்பு ஏற்பட்டதெனச்சொல்லும் வாதி,சாலையைப் பயன்படுத்தும் பிறருக்கு ஏற்பட்ட இழப்பு அல்லது ஊறினைவிடத் தமக்கு அதிகமான இழப்பு அல்லது ஊறு ஏற்பட்டதாக நிரூபிக்க வேண்டும். சட்டமுரணான வகையில் நெஞ்சாலையிலுள்ள தடையால் வாதியின் வாணிகம் பாதிக்கப்பட்டிருந்தால் அவர் வழக்கிடலாம். வில்ஸ் v. ஹங்கர் ஃபோர்டு மார்க்கெட் கம்பெனி (Wilkes v. Hungerford Market Co.) வழக்கில் ஒரு புத்தக வியாபாரி இவ்வாறு நெடுஞ்சாலையில் சட்டமுரணானவகையில் வைக்கப்பட்டுள்ள தடையால் தம்முடைய வாடிக்கையாளர்கள் தம்மைவிட்டுச்சென்றதாக நிரூபித்துத் தீங்கீடுபெற்றார். ஃபிரிட்ஸ் v. ஹாப்சன் (Fritz v. Hobson) வழக்கில் ஒரு புராதனக் கலைப் பொருள்கள் விற்பனை செய்பவரது கடைக்கும், இல்லத்திற்கும்

செல்வதற்காக நெடுஞ்சாலையிலிருந்து போடப்பட்டிருந்த சொந்தப் பாதையில் முறையின்றி ஒரு தடை வைக்கப் பட்டிருந்ததால் அவரது கடைக்கு வாடிக்கையாளர்கள் வரமுடிய வில்லை. இதனால் அவருக்கேற்பட்ட இழப்புக்காக அவர் வழக்கிடலாம் என்று சொல்லப்பட்டது. ஒரு வழக்கில் வாதியின் கட்டடம் எதிர்வாதியின் அரங்கை அடுத்திருந்தது. சில சமயங்களில் அந்த நாடக அரங்கிற்கு வரும் பார்வையாளர்கள் 5 வரிசைகளில் நின்று வாதியின் கட்டடத்தை மறைத்தனர். இது முறையற்றதாகக் கருதப்பட்டு எதிர்வாதி பொறுப்பாளியாவார் என்று தீர்ப்பளிக்கப்பட்டது ஒருவர் தம் கடைமுன் கும்பல் சேரக் காரணமாக இல்லாமல் இருக்கலாம். எடுத்துக்காட்டாக, பற்றுக்குறை ஏற்பட்டுள்ள சரக்கைப் பெற ஒருநியாயவிலைக் கடை முன்பு மக்கள் கூட்டம் சேருவதற்கு கடைக்காரர் பொறுப்பாளி யல்லர். தவிர, இதன் விளைவாக வாதிக்கு இழப்பு ஏற்பட்டிருந் தால்தான் அவர் பொறுப்பாளியாவார்.

நெடுஞ்சாலையை ஒட்டிச் சொத்தினை வைத்திருப்பவர்களுக்குச் சாலைக்குச் சென்றுவர உரிமையுண்டு. இதற்குத் தடை வைக்கப்பட்டு அவருக்கு இழப்பு ஏற்பட்டால்அவர் வழக்கிடலாம். இந்தத் தனியுரிமை நெடுஞ்சாலையில் போக்குவரத்து உரிமைக்குக் கட்டுப்பட்டது. இவ்விரண்டு உரிமைகளும் முறையாகப் பயன் படுத்தப்படவேண்டும். மரம், பெயர்ப்பலகை, கடிகாரம் முதலியன சாலையை அடுத்துள்ள நிலம் அல்லது கட்டடத்திலிருந்து சாலையில் நீட்டிக்கொண்டிருப்பதால் மட்டுமே அவற்றைத் தொல்லை என்று கருதமுடியாது. இதனால் யாருக்கும் ஊறு ஏற்படுவதில்லை. ஆனால், இவை தனிப்பட்ட ஒருவருடைய கட்டடம் அல்லது நிலத்திற்குமேல் நீட்டிக் கொண்டிருந்தால் அதற்காக வழக்கிடலாம். அந்தச் சொத்துக்குரியவருடைய உரிமைகள் நெடுஞ்சாலையைப் பயன்படுத்துவோருடைய உரிமை களைவிட அதிகமானவை. சாலையில் நீட்டிக்கொண்டிருக்கும் பொருள்கள் சாலையில் செல்பவர்கள்மேல் விழுந்து அவர்களுக்குக் காயம் ஏற்படலாம். அவை வைக்கப்பட்டுள்ள கட்டடத்தை யுடையவருக்கு அவற்றில் உள்ள குறைபாடு தெரிந்திருந்தது என்றும், அவர் பரிசோதித்துப் பார்த்திருந்தால் அவை பழுதாகியிருப்பதை அறிந்திருக்க முடியும் என்றும் நிரூபித்தால் அவர் பொறுப்பாளியாவார். நோபிள் v. ஹாரிசன் (Noble v. Harrison) வழக்கில், 'அ' என்பவருடைய நிலத்தில் இருந்த ஒரு மரத்தின் கிளை சாலையில் நீட்டிக் கொண்டிருந்தது. அது திடீரென முறிந்து நெடுஞ்சாலையில் சென்றுகொண்டிருந்த 'ஆ' என்பவரின் மோட்டார் வண்டியின்மேல் விழுந்ததால் அதற்குச்

சேதம் ஏற்பட்டது. 'அ' என்பவருக்கோ, அவரது பணியாள் களுக்கோ அந்தக் கிணறு ஆபத்தானது என்று தெரியாது. அதை உரிய கவனத்தோடு பரிசோதித்திருந்தாலும் அந்தக் குறைபாட் டைக் கண்டுபிடித்திருக்கமுடியாது. அது வெளியே தெரிய வில்லை. எனவே 'அ'-வுக்கு எதிராகத் தொல்லைக்காக 'ஆ' இட்ட வழக்குத் தோல்வியுற்றது. கேமினர் *v.* நார்த்தர்ன் & லண்டன் இன்வெஸ்ட்மென்ட் டிரஸ்ட் லிமிடெட் (Caminer *v.* Northern & London Investment Trust Ltd.) வழக்கில், எதிர்வாதிகள் குத்தகைக்கு எடுத்திருந்த நிலத்தில் ஒரு மரம் இருந்தது. அந்த மரம் வாதி'கே' நெடுஞ்சாலையில் ஓட்டிய காரின்மேல் விழுந்தது. அதன் விளைவாக வாதி காயமுற்றார். அவர் எதிர்வாதிகளின்மேல் தொல்லைக்காகவும் கவனமின்மைக்காகவும் வழக்கிட்டார். அந்த மரம் சுமார் 130 வயதானது. அதன் வேர்களில் நோய் பரவி யிருந்தது. அந்த மரத்தின் மேற்பகுதி வெட்டப்பட்டிருந்தால் அது விழுந்திருக்காது என்று சான்று சொல்லப்பட்டது. ஆனால், அந்த மரம் ஆபத்தான நிலையில் இருந்ததாகச் சாட்சிகளில் எவருக்கும் தோன்றவில்லை. எனவே, எதிர்வாதிகள் உரிய கவனம் காட்டத் தவறியதாக வாதியால் நிரூபிக்கப்படாததால் அவர் வழக்குத் தோற்றது.

சட்டப்படி நெடுஞ்சாலையைச் சரிவரப் பராமரிக்கவேண்டிய நெடுஞ்சாலை அதிகாரிகள் தங்கள் கடமையைச் செய்யத் தவறியதால் ஏற்படும் தொல்லைக்குப் பொறுப்பாளியாவார் என்று நெடுஞ்சாலைகள் (பல்கூட்டு விதிகள்) சட்டம், 1961 (Highways (Miscellaneous Provisions Act, 1961) கூறுகிறது. எனவே, நெடுஞ்சாலை அதிகாரிகள் சட்டமுரணான வகையில் ஏதாவது ஒரு செயலைச் செய்தாலும், அல்லது அவர்கள் சட்டப்படி செய்யவேண்டிய ஒரு செயலைச் செய்யாது விட்டாலும் ஏற்படும் ஊறுக்குப் பொறுப்பாளியாவர். நெடுஞ்சாலை, போக்குவரத்துக்கு ஆபத்தாக இருப்பதாகச் சான்று மூலம் முதல் நோக்கில் நிறுவ முடியாமலும், நெடுஞ்சாலை அதிகாரிகள் நெஞ்சாலையின் பகுதியாகிய நடைபாதையைச் சரிவரப் பராமரிக்கும் கடமையில் தவருமலும் உள்ள சூழ்நிலையில், நெடுஞ்சாலையில் நடப்பவர்கள் நடைபாதையில் மேடு, பள்ளங்கள் இருக்கக்கூடும் என்பதைக் கருதிப்பார்த்துக் கவனத்துடன் செல்லவேண்டும்.

நிலத்தில் தொல்லைக்காக யார் வழக்கிடமுடியும் என்பதைப் பற்றி இனிக் காண்போம். தாற்காலிகமான தொல்லையாயின் கூட்டடம் யாருடைய உடைமையில் உண்மையில் இருக்கிறதே

அவரே வழக்கிடமுடியும். கட்டிடம் வாடகைக்கு விடப்பட்டிருந் தால் தொல்கீலக்காக் குடியிருப்பவரே வழக்கிடமுடியும். கட்டடச் சொந்தக்காரரோ, அக் கட்டடத்தின் பின்னடைவுரிமைக் குப் பாத்தியம் உடையவரோ (Reversioner) வழக்கிட முடி யாது. ஆனல், கட்டடத்திற்கு ஏற்பட்ட ஊறு அல்லது சேதம் நிகீயானதாயின் அவர்கள் வழக்கிடலாம். எடுத்துக்காட்டாக, கட்டடத்திற்கு வரும் ஒளி தடுக்கப்பட்டால் அவர்கள் வழக் கிடலாம். ஆனல், அண்டையிலுள்ள கட்டடத்தில் உள்ள இயந்திரங்களின் இரைச்சகீத் தொல்கீயென்று கூறி அவர்கள் வழக்கிடமுடியாது. ஒருவருக்கு நிலத்தில் உள்ள சொத்துரி மையோ வேறு ஏதாவது நலனே பாதிக்கப்பட்டிருந்தால்தான் வழக்கிட முடியும். உறுத்துக் கட்டகீ பிறப்பிக்கப்படுமுன் குத்தகையின் தன்மையையும், இடைஞ்சல் அல்லது இடையூறு எந்த அளவுக்கு இருந்தது என்று நீதிமன்றம் கருதிப்பார்க்கும். ஒருவருக்கு நிலத்தில் உரிமையோ உடைமையோ இல்லாமல் அதைப் பயன்படுத்தமட்டும் அனுமதிக்கப்பட்டிருந் தால் அவர் தொல்கீலக்காக வழக்கிடமுடியாது. எடுத்துக் காட்டாக, ஒரு விடுதியில் தங்கியிருப்பவரும், ஒரு வீட்டுக்கு விருந் தாளிகளாக வந்திருப்பவர்களும் தொல்கீலக்காக வழக்கிடமுடியாது. இதே காரணத்திற்காக ஒரு நிலத்தை உடையவரின் குடும்பத் தினரும் தொல்கீலக்காக வழக்கிட முடியாது. ஆனல், அவர்களுக்கு உடற்காயங்கள் ஏற்பட்டிருந்தால் கவனமின்மைக்காக வழக்கிட லாம். ஒரு சொத்தைக் குறித்த காலம் கழிந்தபின்னர்ப் பெறும் உரிமைக்குப் பாத்தியதை கொண்டவர் அதற்கு நிகீயான சேதம் ஏற்பட்டிருந்தால் தொல்கீலக்காக வழக்கிடலாம். நிகீயான சேதம் என்பது அதை அகற்ற ஏதாவது ஒரு செயல் செய்யாவிட்டால் காலவரையறையின்றித் தொடர்ந்திருப்பதாகும். எடுத்துக் காட்டாக, பின்னடை உரிமை கொண்டவருக்கு நடைவழி உரிமை யுள்ள ஒரு பாதையின் குறுக்கே உள்ள ஒரு வாயிகீப் பூட்டி வைத்தல், கட்டட அமைப்பிற்குச் சேதத்தை ஏற்படுத்தும் அதிர்ச்சி, ஒரு கட்டடத்திற்கு வரும் வெளிச்சத்தைத் தடுத்தல் ஆகியவற்றைச் சொல்லலாம். ஆனல், அடுத்துள்ள கட்டடத்தி லிருந்து தாற்காலிகமாக வரும் பேரிரைச்சல் அல்லது புகையினல் குடியிருப்பவர் காலிசெய்ய நேர்ந்தாலும், கட்டடத்தின் வாடகை மதிப்புக் குறைந்தாலும் கட்டடச் சொந்தக்காரர் வழக்கிட முடி யாது. பொதுத் தொல்கீலக்காக ஒருவர் வழக்கிட வேண்டுமானல் அவருக்குத் தனித்த இழப்பு அல்லது ஊறு ஏற்பட்டிருக்க வேண்டு மென்று கண்டோம். இவ்வாறு தனித்த நட்டம் ஏற்பட்டிருந்தால் நெடுஞ்சாகீயைப் பயன்படுத்துபவரும், அதையடுத்து நிலம்

அல்லது கட்டடத்தை உடையவர்களும் பொதுத்தொல்லைக்காக வழக்கிடலாம்.

இனித் தொல்லைக்காக யார்மேல் வழக்கிடலாம் என்பதைப் பற்றிக் காண்போம். பொதுவாக, ஏதாவதொரு செயலைச் செய்து தொல்லையை ஏற்படுத்தியவர்களே பொறுப்பாளியாவார்கள். தொல்லை தோன்றுகின்ற நிலம் அவர்கள் வசத்தில் இருக்கத் தேவையில்லை. ஒருவர் ஒரு தொல்லையாகக் கருதப்படும் பொருளைத் தம்முடைய நிலத்தில் தொடர்ந்து வைத்திருந்தாலும் அல்லது அங்கு அது ஏற்பட அதிகாரமோ அனுமதியோ அளித்திருந்தாலும் பொறுப்பாளியாவார். ஒருவர் தொல்லையாகக் கருதப்படும் ஒரு பொருள் உள்ள சொத்தினை வாடகைக்கு விட்டிருந்தாலும் அல்லது விற்பனை செய்திருந்தாலும் பொறுப்பாளியாவார். சில சமயங்களில் ஒருவர் தமது கடமையைச் செய்யாமல் கவனமின்றியிருப்பதால் தொல்லை தோன்றியிருக்கலாம்; அல்லது தொல்லை ஏற்பட்டதும், அவருக்கு அது தொல்லையென்று தெரிந்த பின்னர்த் தக்க காலவளவிற்குள் அதை அகற்றுமல் இருக்கலாம்; அல்லது அவர் நிலத்திலிருந்து ஒரு பொருள் வெளியேறிச் சென்று ஊறு அல்லது சேதம் ஏற்படுத்தாமல் தடுக்க அவர் கவனம் காட்டத் தவறியதால் தொல்லை ஏற்பட்டிருக்கலாம். மேற்கூறிய சூழ்நிலைகளில் ஒருவர் தொல்லைக்காகப் பொறுப்பாளியாகக் கருதப்படுவார்.

சில சமயங்களில் அத்துமீறி ஒருவர் நுழைந்து நிலத்தை உடையவரின் அதிகாரமோ அனுமதியோ இல்லாமல் தொல்லையை ஏற்படுத்தியிருக்கலாம். அவ்வாறு ஏற்பட்ட தொல்லையை அகற்றுமல் தொடர்ந்து வைத்திருந்தாலோ ஏற்றுக் கொண்டிருந்தாலோ நிலத்தை உடையவர் பொறுப்பாளியாவார். பிறரால் தமது வசத்திலுள்ள நிலத்தில் தொல்லை ஏற்பட்டுள்ளது என்று தெரித்திருந்தும் அதை உரிய காலத்திற்குள் அகற்றுமல் இருப்பது முறையாகாது. நிலத்தையுடையவர் அத்துமீறி நுழைந்தவர் ஏற்படுத்திய தொல்லையைப் பயன்படுத்திக் கொண்டால் அதை அவர் ஏற்றுக்கொண்டதாகக் கருதவேண்டும்.

ஒரு கட்டடம் பழுதுபார்க்கப்படாமல் மோசமான நிலையில் இருப்பதால் அடுத்துள்ள சாலையில் இடிந்து விழுந்து அங்குச்செல்பவருக்கோ பக்கத்துக் கட்டடத்துக்கோ ஊறு விளைவிக்கலாம். கட்டடச் சொந்தக்காரரோ அதன்மீது உடைமைக்

கொண்டவரோ அதைப் பழுது பார்க்கும் கடமை உள்ளவராயின் பொறுப்பாளியாவார். அவர் பொறுப்பாளியாக்கக் கருதப்பட அக் கட்டடம் ஆபத்தான நிலையில் இருந்ததென்பதை அவர் அறிந் திருக்கத் தேவை இல்லை. ஆனால், ஓர் அத்துமீறியவரின் செயலாலோ கண்டுபிடிக்கமுடியாத இயற்கைக் காரணங் களாலோ கட்டடம் இடிந்து விழுந்தால்அவர் பொறுப்பாளியல்லர்.

ஒரு கட்டடத்தை ஒருவர் வாடகைக்கு விட்டிருந்தால் அக் கட்டடத்தில் உள்ள தொல்லைக்குப் பொறுப்பாளியாகமாட்டார். ஒரு கட்டடத்தில் உள்ள தொல்லைக்காக அதில் குடியிருப்பவர் மீதே வழக்கிடமுடியும். ஆனால், ஒரு கட்டடம் மிக மோசமாக பாழடைந்த நிலையில் உள்ளது என்று தெரிந்தே ஒருவர் அதை வாடகைக்கு விட்டிருந்தால் தொல்லைக்குப் பொறுப்பாளியாவார். தவிர வாடகைக்கு அக் கட்டடத்தை விடுமுன்பே அங்குத் தொல்லை உருவாக்கப்பட்டிருந்தாலும் கட்டடச் சொந்தக்காரர் பொறுப்பாளியாவார். எடுத்துக்காட்டாக, அடுத்துள்ள கட்டடத் திற்கு வரும் வெளிச்சத்தை வாடகைக்கு விடப்படும் கட்டடம் தடுத்திருக்கலாம். இதற்குக் கட்டடச் சொந்தக்காரர் பொறுப் பாளியாவர்ர். இதைத்தவிர ஒரு தொல்லையை ஏற்படுத்தவோ, தொடர்ந்து வைத்திருக்கவோ கட்டடச் சொந்தக்காரர் குடியிருப்பவருக்கு அதிகாரமோ அனுமதியோ வழங்கியிருந்தால் பொறுப்பாளியாவார். இதைத்தவிர, கட்டடச் சொந்தக்காரர் குடி யிருப்பவருடன் செய்துகொண்ட வாடகை ஒப்பந்தத்தில் கட்டி டத்தைப் பழுதுபார்க்கும் கடமையை ஏற்றுக்கொண்டிருக்கலாம். அதன்படி அவர் கட்டடத்தைப் பழுதுபார்க்கத் தவறியதால் தொல்லை ஏற்பட்டிருந்தால் பொறுப்பாளியாவார். ஆனால், இவ் வாறு கடமையை அவர் ஏற்றுக்கொண்டிராவிட்டால் கட்ட டத்தில் உள்ள குறைபாட்டால் அதைப் பயன்படுத்துபவருக்கு ஊறு நேர்ந்தால் பொறுப்பாளியாக மாட்டார். கட்டடத்தில் கண்ணுக்குப் புலனாகாத முறையில் மறைவாக உள்ள ஆபத்தினா லும், பொறியாலும் குடியிருப்பவர்களின் விருந்தினருக்கோ, வாடிக் கையாளருக்கோ ஊறு ஏற்பட்டால் கட்டடச் சொந்தக்காரர் பொறுப்பாளியாவார். கட்டடச் சொந்தக்காரருக்கும் குடியிருப் வருக்கும் அதில் ஊறு ஏற்படுத்தக்கூடிய குறைபாடு இருப்பது தெரியுமாயின் குடியிருப்பவரு அதனால் ஏற்படும் ஊறுக்குக் கட்டடச் சொந்தக்காரர் பொறுப்பாளியாகமாட்டார்.

எதிர்வாதங்கள்

இத் தீங்கிற்குச் சில தனிப்பட்ட எதிர்வாதங்கள் கூறப்படுகின்றன. அவற்றில் சில எதிர்வாதங்களை நீதிமன்றங்கள் ஏற்றுக் கொள்வதில்லை. சிலவற்றை நிபந்தனைகளோடு நீதிமன்றங்கள் ஏற்றுக்கொள்கின்றன. அவற்றைப்பற்றி இங்குச் சுருக்கமாகக் காண்போம்.

தொல்லை இருக்குமிடத்தை வாதி நாடிவந்தார் என்பது சரியான எதிர்வாதம் அன்று. தொல்லை ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படும் இடம் தொல்லையாகக் கருதப்படும் தொழிலைச் செய்ய ஏற்ற இடம் என்பதோ, அதைவிடக் குறைவான ஊறு விளைவிக்குமிடம் கிடைக்கவில்லை என்பதோ எதிர்வாதமாக ஏற்றுக்கொள்ளப் படாது. அண்டையில் உள்ளவர்களின் இசைவோ சட்டத்தின் அனுமதியோ இல்லாமல், தொல்லை ஏற்படாத முறையில் அத் தொழிலைச் செய்யக்கூடிய இடம் கிடைக்கவில்லையானால் அத் தொழிலைச் செய்யவே முடியாது. ஒரு குறிப்பிட்ட பகுதியில் மற்றவருக்குத் தொந்தரவாக உள்ள ஒரு தொழில் முறையற்றதாக அமைந்திருந்தால் வாதி அங்குப் போவதற்கு நெடுங் காலத்திற்கு முன்பிருந்தே அது நிலவி வந்திருக்கிறது என்றாலும் வாதி நிவாரணம் பெறலாம். எனவே, ஒரு தொல்லை ஏற்கெனவே உள்ள நிலத்தை வாதி வாங்காமல் இருக்கவேண்டுமென்று சொல்ல முடியாது. அவன் அங்குச் செல்வதற்கு முன்பே நெடுங் காலமாக அந்தத் தொல்லை நிலவி வந்திருக்கலாம். இங்கு இசைந்தேற்பது தீங்காவதில்லை என்ற வாதத்தைச் சொல்லமுடியாது. பிளிஸ் v. ஹால் (Bliss v. Hall) வழக்கில் எதிர்வாதி வைத்திருந்த ஒரு மெழுகுதிரி தொழிற்சாலையிலிருந்து இரைச்சலும், கேடு பயக்கும் புகை, ஆவி, நாற்றங்கள் ஆகியனவும் வந்ததால் வாதிக்குத் தொந்தரவு ஏற்பட்டது. வாதி அந்த இடத்திற்கு வருவதற்கு முன்பே மூன்று ஆண்டுகளாக அந்தத் தொழில் தொடர்ந்து நடைபெற்று வந்தது என்பது சரியான எதிர்வாதமன்று என்று தீர்ப்பளிக்கப்பட்டது. வாதி அந்த வீட்டிற்கு வரும்போதே நல்ல தூய காற்றை நுகரும் உரிமை உள்ளிட்ட சட்டமளிக்கும் எல்லா உரிமைகளோடும் வந்தார் என்று சொல்லப்பட்டது. ஆனால், தொழிற்சாலைகள் மிகுதியாக உள்ள பகுதியிலும், நிலக்கரி சுரங்கப் பகுதியிலும் வீடு கட்டிக்கொள்பவர் அப் பகுதியில் இயல்பாக உள்ள வசதிக்குறைவையும் தொந்தரவையும் மற்றவர்களைப் போலச் சகித்துக் கொள்ளத்தான் வேண்டும்.

குறிப்பிட்ட வாதிக்குத் தொல்லையாக அமைந்துள்ள செயல் பொதுமக்களுக்குப் பயனுள்ளதாக அமைந்துள்ளது என்பது

எதிர்வாதமாக ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. பன்றி வளர்ப்பதும் இரும்புத் தொழிற்சாலை, சுண்ணும்புச் சூளை வைத்திருப்பதும் நல்ல தொழில்களே. அவை மக்களுக்கு மிகவும் பயனுள்ளவையே என்றாலும் அதை எதிர்வாதமாக ஏற்றுக்கொள்வதற்கில்லை. மக்கள் குடியிருப்புப் பகுதியில் ஒருவர் ஒரு கருவாட்டுக்கடையை வைத்திருப்பது தொல்லையாகும் என்று தீர்ப்பளிக்கப்பட்டது. அங்கிருந்து கருவாட்டுக் கடையை அகற்றினால் அப் பகுதியில் உள்ள ஏழைகளுக்கு மிகுந்த சிரமம் ஏற்படும் என்று எதிர்வாதி கூறியதை நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளவில்லை. ஷெல்ஃபர் v. சிட்டி ஆஃப் லண்டன் எலக்ட்ரிக் லைட்டிங் கம்பெனி (Shelfer v. City of London Electric Lighting Co.) வழக்கில் எதிர்வாதிகள் ஒரு மின்சக்தி நிலையம் கட்டும்போது ஏற்பட்ட கடுமையான அதிர்வுகளால் வாதியின் வீட்டிற்குச் சேதம் ஏற்பட்டது. அதை நிறுத்த வாதி உறுத்துக்கட்டளை கோரி வழக்கிட்டார். அந்த மின்சக்தி நிலையம் கட்டாமல் போனால் லண்டன் மாநகருக்கு மின் விளக்கு வசதி அளிக்கப்படுவது பாதிக்கப்படும் என்று எதிர் வாதிகள் கூறியதை நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளாமல் உறுத்துக் கட்டளை பிறப்பித்தது.

சில சமயங்களில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள் தனித்தனியே செய்யும் செயல்களின் மொத்த விளைவாகத் தொல்லைஏற்பட்டிருக்கலாம். அவர்களில் தனிப்பட்டஒருவருடைய செயல்மட்டும் தொல்லையாக இல்லாமல் இருக்கலாம். அப்போது எதிர்வாதி தம்முடைய செயலால் மட்டும் தொல்லை ஏற்பட வில்லையென்றும், தம்மைப்போலவே மற்றவர்களும் அச் செயலைச் செய்திராவிட்டால் தொல்லை ஏற்பட்டிராது என்றும் வாதிட முடியாது. எடுத்துக்காட்டாக, ஒரு சாலையில் 100 பேர் மிதி வண்டிகளை நிறுத்தியதால் தொல்லை ஏற்பட்டிருக்கலாம். அப்போது அவ்வாறு மிதிவண்டிகளை நிறுத்தியவர்களுள் எவர் மேலும் வழக்கிடலாம். அப்போது அவர் தாம் ஒருவர் மட்டும் அங்கு வண்டியை நிறுத்தியதால் தொல்லை ஏற்பட்டிருக்கவில்லை என்று வாதிடமுடியாது.

தொல்லையாகக் கருதக்கூடிய செயலை ஒருவர் செய்யும் உரிமையை நீடனுபோகத்தால் பெறலாம். இவ்வாறு ஒருவர் தனித்த தொல்லையை இழைக்கும் உரிமையை மட்டும் பெற முடியும். பொதுத் தொல்லையை இழைக்கும் உரிமையை நீடனு போகத்தால் பெற முடியாது. அதாவது தொல்லை என்று சொல்லப்படும் செயலை மறுப்பின்றிப் பிறர் அறியத் தொடர்ந்து, தடையின்றி 20 ஆண்டு காலமாக ஒருவர் செய்துவந்தால்,

அதைத் தொல்லையென்று கூறமுடியாது. இதன் விளைவாக 20 ஆண்டு காலம் முடிவெய்தியதும் அத் தொல்லை சட்டத்திற் கிசைந்த செயலாகவும் தொடக்கத்திலிருந்தே அனுமதிக்கப்பட்ட செயலாகவும் கருதப்படும். வாதிக்கு அந்தத் தொல்லையிருப்பது தெரிந்த வேளையிலிருந்துதான் இந்த 20 ஆண்டு காலத்தைக் கணக்கிடவேண்டும். வாதி ஒரு கட்டடத்திற்கு வருவதற்கு முன்பிருந்தே ஒருதொல்லையிருந்தாலும் அவருக்குத் அது தொல்லை யெனத் தெரிந்த பொழுதிலிருந்தே அந்தக் காலக் கெடுவை க் கணக்கிடவேண்டும். ஸ்டர்ஜஸ் v. பிரிட்ஜ்மன் (Sturges v. Bridgman) வழக்கில் எதிர்வாதி மிட்டாய்க் கடைக்காரரின் வீட்டின் பின்புறத்தில் ஒரு சமையலறை இருந்தது. அங்கு அவர் மிட்டாய் செய்யும்போது பெரிய உலக்கை, கலுவக் குழவி போன்றவற்றைக்கொண்டு இடித்தது வாதிக்குத் தொல்லையாக இருக்கவில்லை. இவ்வாறு 20 ஆண்டு காலத்திற்கு மேலாக இம் முறையில் தம்முடைய தொழிலைச் செய்துவந்தார். அதனால் மருத்துவராகிய வாதி தமது சொத்தை அனுபவிக்க எந்த இடையூறும் ஏற்படவில்லை. பின்னர் வாதி தம்முடைய வீட்டின் பின்புறம் உள்ள தோட்டத்தின் கோடியில் தமது ஆலோசனை அறையைக் கட்டினார். அப்போதுதான் எதிர்வாதியின் கட்டடத் திலிருந்து வரும் இரைச்சலும், அதிர்ச்சியும் அவருக்குத் தொல்லை யாக அமைந்து, அவருடைய தொழிலைச் செய்வதில் இடையூறாக இருந்தன. வாதி மருத்துவர் தம்முடைய வீட்டின் கோடியில் ஆலோசனை அறை கட்டியபின்னர்தான் அவருக்குத் தொல்லை ஏற்பட்டது. எனவே, அவர் அதைக் கட்டியதிலிருந்து 20 ஆண்டு களுக்கு முன் உள்ள காலம்வரை எதிர்வாதி எதிர்ப்பின்றி அத்தொழிலைச் செய்து வந்திருந்தால்தான் அது தொல்லையாகக் கருதப்படாது. இவ் வழக்கில் அவர் ஆலோசனை அறை கட்டும் வரை வழக்கிடத்தக்க தொல்லை எதுவும் இல்லை. எனவே, எதிர் வாதி நீடனுபோக உரிமை கொண்டாட முடியாது. இவ வழக்கில் எதிர்வாதி தமது தொழிலை வாதிக்கு இடையூறாகச் செய்வதைத் தடுக்க உறுத்துக்கட்டளை பிறப்பிக்கப்பட்டது.

சட்டமன்றங்கள் இயற்றியுள்ள சட்டத்தின்படி ஒரு செயலைச் செய்ததால் தொல்லை ஏற்பட்டிருந்தால் அதற்காக வழக்கிட முடியாது. சட்டம் அதிகாரம் அளித்துள்ள செயலைச் செய்யு போது தொல்லை ஏற்படுவது தவிர்க்க முடியாமல் போகலாம். எடுத்துக்காட்டாக, ஒரு புகைவண்டிக் கம்பெனி புகைவண்டிகளை ஓட்டச் சட்டம் அதிகாரம் அளித்திருக்கலாம். புகைவண்டி இருப்புப்பாதையில் ஓடும்போது அதன் இயந்திரத்திலிருந்து கிளப்பும் தீப்பொறிகளால் இருப்புப் பாதையை அடுத்துள்ள நிலங்

களில் தீப்பற்றிச் சேதம் ஏற்படலாம். அதைத் தொல்லையென்று கூறி வழக்கிடமுடியாது. ஏனெனில், தகுந்த கவனத்தோடு இயந்திரத்தை ஓட்டினாலும் அதிலிருந்து தீப்பொறி கிளம்புவதைத் தவிர்க்கமுடியாது. மேற்கூறிய எதிர்வாதங்களைத் தவிர வேறு சில எதிர்வாதங்களும் உண்டு. எதிர்வாதி கவனமின்றி இராத போது, வாதியே தொல்லைக்கு இசைந்தார் என்று கூறலாம். அல்லது ஒரு கட்டடத்தை உடையவருக்குத் தெரியாமல் யாரோ ஒருவர் செய்யும் செயலால் தொல்லை ஏற்பட்டிருக்கலாம். அல்லது தெய்வச் செயலால் தொல்லை ஏற்பட்டிருக்கலாம். இவை அனைத்தும் எதிர்வாதங்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. வாதியும் தற்கவனமின்றி இருந்ததால் தொல்லை ஏற்பட்டதென்று எதிர்வாதி வாதிடலாம்.

தொல்லைக்கு மூன்று முக்கிய நிவாரணங்கள் உண்டு. அவை :

(1)தொல்லையை அகற்றுதல், (2)தீங்கீடு, (3)உறுத்துக்கட்டளை ஆகியன. தொல்லையை அகற்றுதல் நீதிமன்றத்துக்கு வெளியே பெறக்கூடிய நிவாரணம். இதைப்பற்றி முன்பே விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது. தீங்கீடு கோரி வாதி வழக்கிடும்போது எதிர் வாதி தம்முடைய சொத்தை முறையாகப் பயன்படுத்தினாரா இல்லையா என்று பார்க்காமல் அது வாதிக்கு ஊறு விளைவித்ததா என்றே பார்க்கவேண்டும். தொல்லையின் விளைவாக வாதியினுடைய சொத்தின் மதிப்பு எந்த அளவுக்குக் குறைந்துள்ளது என்று பார்த்து அதையே தீங்கீடாகத் தரவேண்டும். வாதி தமக்கு தனித்த இழப்பு ஏற்பட்டதாக நிரூபிக்கவேண்டும். தொடர்ந்து நிகழும் தொல்லைகளைப் பொறுத்தவரை வழக்குத் தொடங்கியபின் ஏற்படும் ஊறுக்காக நீதிமன்றங்கள் தீங்கீடு தரமாட்டா. தொல்லை தொடர்ந்திருக்கும் ஒவ்வொரு நாளுக்கும் புதிய வழக்கிடலாம். ஒருமுறை தொல்லைக்காக ஒரு கணிசமான தொகையைத் தீங்கீடாகத் தந்தபின் அத் தொல்லை தொடர்ந்து நிகழ்ந்தால் அதை அகற்றும்படி கட்டாயப்படுத்தும் நோக்கத் துடன் நீதிமன்றங்கள் அடுத்த வழக்கில் எச்சரிக்கை இழப்பீடு தர வற்புறுத்தலாம்.

வாதியின் உரிமைக்கு ஏற்பட்ட ஊறு அற்பமானதாகவும் சிறிய பணத்தொகையால் மதிப்பிட்டு இழப்பீடு செய்யக்கூடிய தாகவும் இருக்கலாம். உறுத்துக்கட்டளை பிறப்பிக்கப்பட்டால் எதிர்வாதிக்கு இன்னல் ஏற்படலாம். அப்போது நீதிமன்றங்கள் உறுத்துக்கட்டளைக்குப் பதிலாக தீங்கீடே அளிக்கும். வாதிக்கு ஏற்பட்ட ஊறு கடுமையானதாகவோ நிலையானதாகவோ இருந்து பணத்தால் ஈடுசெய்யமுடியாதாயின் நீதிமன்றங்கள் உறுத்துக்கட்டளை பிறப்பிக்கும்.

38. கவனமின்மை
(Negligence)

தீங்கியலில் கவனமின்மைக்கு இரண்டு பொருள்கள் உண்டு. முதலாவதாக, சில தீங்குகளில் எதிர்வாதிக்குப் பொறுப்புண்டா இல்லையா என்று அறிய 'அவன் கவனமின்றி இருந்தானா? அக்கறை காட்டாமல் இருந்தானா?' என்று அறிய வேண்டி இருக்கிறது. இந்த இடத்தில் நாம் கவனமின்மை என்று குறிப்பிடுவது ஒருவனுடைய மனநிலையைத்தான். அதாவது, இங்குக் கவனமின்மை ஒரு குறிப்பிட்ட தீங்கைச் செய்யும் முறையினைக் குறிப்பிடுகிறது. எடுத்துக்காட்டாக, அத்துமீறல், தொல்லை, அவதூறு போன்ற தீங்குகளைக் கவனமின்றிச் செய்தலைச் சொல்லலாம். இங்குத் தீங்கினைப்புரியும் எதிர்வாதிஅதனால் ஏற்படக்கூடிய விளைவுகளைப்பற்றிக் கொண்டுள்ள மனநிலையையே கவனமின்மை குறிப்பிடுகிறது. சில சமயங்களில் எதிர்வாதி ஒரு செயலை வேண்டுமென்றே கருதிச் செய்திருந்தாலோ, கவனமின்றிச் செய்திருந்தாலோதான் பொறுப்பாளியாவான் என்று சட்டம் கருதுகிறது. வேண்டுமென்றே, கருதியோ ஒரு செயலைச் செய்கிறவன் அதனால் ஏற்படும் விளைவுகளை முன்னறிந்திருப்பதோடு, அவை ஏற்படவேண்டுமென்றும் விரும்புகிறவன் ஆவான். ஆனால், கவனமின்றி ஒரு செயலைச் செய்பவன் அதனால் ஏற்படும் விளைவுகளை விரும்புவதில்லை; அவை ஏற்படவேண்டும் என்பதற்காகச் செயல் புரிவதில்லை. ஆயினும், 'அவை ஏற்பட்டால் என்ன? ஏற்படாமல் போனால் என்ன?'' என்று அக்கறையின்றி இருப்பன் ஆவான். எனவே, அவன் அச் செயலால் ஆபத்தான விளைவு ஏற்படலாம் எனினும், அதைச் செய்யாமல் இருப்பதில்லை. எனவே, கருதிச் செய்பவன் மற்றவருக்குக் கேடு செய்ய விரும்புகிறான்; கவனமின்றிச் செய்பவனோ அதைச் செய்யாமல் தவிர்ப்பதற்குப் போதுமான அக்கறை காட்டாதவன். எனவே, இவ்விரு மனநிலைகள் மாறுபட்ட மனநிலைகள்; இரண்டும் ஒன்றுகச் சேர்ந்திருக்க முடியாது.

ஆயினும் இங்கு நாம் அறிய இருப்பது கவனமின்மை என்னும் தனித்தீங்கு பற்றியதாகும். தீங்கியலில் கவனமின்மை அத்து மீறல், அவதூறு போன்று ஒரு தனித்தீங்காகவும் கருதப்படுகிறது. இங்குச் சட்டம் வலியுறுத்தும் கவனத்தை ஒருவர் காட்டத் தவறியதன் விளைவாக மற்றவருக்குக் காயம் அல்லது இழப்பு உண்டாகலாம். அதாவது, ஒருவர் தமது நடத்தையால் காயம் அல்லது இழப்பு ஏற்படக்கூடிய ஆபத்தினை மற்றவருக்குத் தோற்றுவிக்கலாம். இந்த நடத்தையே கவனமின்மை ஆகிறது. எனவே, இங்கு நாம் காணப்போவது ஒருவரது நடத்தையைப் பற்றியே; மனநிலையைப் பற்றியதன்று. டானகு v. ஸ்டீவன்சன் (Donoghue v. Stevenson) வழக்கில் கவனத்தோடு இருக்க வேண்டிய கடமையிருக்கும் சூழ்நிலையில், கவனமின்மை ஒரு தனிப்பட்ட தீங்காகச் சொல்லப்பட்டது. இதனை இத் துறையில் ஒரு வழிகாட்டும் தீர்ப்பாகவும் கொள்ளலாம்.

கவனமின்மைக்காக எதிர்வாதிமேல் வழக்கிடும் வாதி.

(1) தமக்குக் கவனம் காட்ட வேண்டிய கடமை எதிர் வாதிக்கு இருந்ததென்றும்,

(2) அக் கடமையிலிருந்து எதிர்வாதி தவறிவிட்டாரென்றும்,

(3) அதன் விளைவாக தமக்கு இழப்பு அல்லது காயம் ஏற்பட்ட தென்றும் நிரூபிக்க வேண்டும்.

கடமையும் கடமையிலிருந்து தவறுதலும்

இங்குக் கடமை என்று நாம் குறிப்பிடுவது, சட்டப்படி எதிர் வாதிக்குள்ள கடமையேதவிர, வெறும் ஒழுக்க நெறியின்படியான கடமையோ, மதக்கோட்பாடுகளின்படி அமைந்த கடமையோ, சமுதாயக் கடமையோ அல்ல. எடுத்துக்காட்டாக, தம் கட்டடத்திற்குள் சட்டப்படி நுழைபவர்களுக்கு அக்கட்டடத்தில் புலப்படாத அல்லது மறைந்து கிடக்கும் ஆபத்துகளைப்பற்றி எச்சரிக்க வேண்டிய கடமை ஒருவருக்கு உண்டு. ஆனால், அத்து மீறி நுழைபவருக்கு அத்தகைய ஆபத்துகளால் காயம் ஏற்பட்டால் அவருக்குப் பொறுப்புக் கிடையாது. எனவே, எதிர்வாதி கவனமின்றி நடந்துகொண்டான் என்று மட்டும் வாதி நிரூபித்தால் போதாது; எதிர்வாதிக்கு கவனத்தோடு இருக்கவேண்டிய கடமை யைச் சட்டம் விதித்திருந்தது என்றும், அக்கடமையிலிருந்து அவர் தவறியதால்தான் தமக்கு காயமோ, இழப்போ ஏற்பட்ட தென்றும் அவர் நிரூபிக்க வேண்டும். இவ்விதமான கடமை

ஏற்பட வாதி, எதிர்வாதி ஆகியோரிடையே எப்படிப்பட்ட உறவு இருக்கவேண்டும் என்று விளக்கிக்கூறும் பொதுக்கருத்து ஒன்றைக் காண்பது எளிதன்று. நீதிமன்றங்கள் தங்கள்முன்பாக விசாரணைக்கு வரும் வழக்குகளில் உள்ள தரப்பினர்களிடையே உண்மையில் அமைந்துள்ள உறவினை மட்டும் கருதிப்பார்த்து, அந்தச் சூழ் நிலையில் இத்தகைய கடமை தோன்றுமா? என்றே ஆய்கின்றன. இதன் விளைவாகச் சொத்தினைப்பொறுத்தவரை எழக்கூடிய கடமைகளைத் தரம்பிரித்தும், அதாவது சொத்துரிமை, உடைமை, கட்டுப்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் தோன்றும் கடமைகளை ஆராய்ந்தும், உற்பத்தியாளர், விற்பனையாளர், வாடிக்கையாளர், குடியிருப்பவர், இடச்சொந்தக்காரர் முதலிய பாகுபாடுகளில் எழும் கடமைகளைக் கருத்தில் கொண்டும், பல்வேறு கடமை இனங்களை நீதிமன்றங்கள் கூறியுள்ளன. எனவே, இதைக்கொண்டு குறிப்பிட்ட சூழ்நிலையில் எதிர்வாதிக்குக் கடமை இருந்ததா? என்று அறியலாம்; ஆனால், நீதிமன்றத்தில் எழுந்துள்ள வழக்கு ஒன்றில் எதிர்வாதிக்குக் கடமையுள்ளதா? என்றறிய முன்பே இதைப் போன்றதொரு கடமையினைச் சுட்டிக்காட்டும் தீர்ப்பு ஒன்று வழி காட்டியாக அமைந்திருக்க வேண்டும். முந்திய வழக்குகளில் இப்படிக் கடமை உண்டென நிறுவப்பட்டிருந்தால் நீதிபதியின் பணி எளிதாகும். நெடுங்காலமாகவே நெடுஞ்சாலையில் வண்டியை ஓட்டிச் செல்பவர்கள் கவனத்தோடு ஓட்டிச் செல்லவேண்டும் என்று கருதப்பட்டு வந்துள்ளது. இதைப்போலவே உயிருக்கு ஆபத்தை விளைவிக்கும் பொருள்களையும், கருவிகளையும் வைத்திருப்பவர் அடுத்துள்ளவருக்கு ஆபத்து ஏற்படாமல் அதைக் கவனத்தோடு கையாள வேண்டும் என்பதும் ஏற்றுக்கொள்ளப் பட்டது. ஆனால் பொருளாதார, சமுதாய அமைப்பில் புதிய உறவுகள் தோன்றக்கூடும். எனவே, புதிய உறவுகள் தோன்றும் போது, புதிய கடமைகளை நீதிமன்றங்கள் சொல்லவேண்டும். குறிப்பிட்ட சூழ்நிலையில் வழிகாட்டும் தீர்ப்பு எதுவும் இல்லாதபோது, புதிய கடமைகளை நீதிமன்றம் உருவாக்கவேண்டும். கவனமின்மையின் வகைகள் அனைத்தும் முற்றுப்பெறவில்லை. புதுவகையான கவனமின்மை தோன்றும்போது அதை நீதிமன்றம் ஆய்ந்து, கடமையினை உருவாக்கும் உறவு உண்டா? என்று தீர்மானிக்க வேண்டும்.

ஹோம் ஆபிஸ் v. டார்செட் யாக்ட் கம்பெனி (Home Office v. Dorset Yacht Co.) வழக்கில் பல்வேறு நிலைமைகளில் தரப்பினரிடையே அமைந்துள்ள குறிப்பிட்ட உறவுகளின் காரணமாகக் கவனத்தோடு இருக்கவேண்டிய கடமை தோன்றும் என்றும்,

குறிப்பிட்ட சூழ்நிலையில் முடிவுசெய்ய வழிகாட்டும் தீர்ப்பு இல்லாதபோது நீதிபதி தம்முன் உள்ள வழக்கு விவரத்தை ஆய்ந்து, அதன்படி கவனத்தோடு இருக்கவேண்டிய கடமை தோன்றுமா? என்று முடிவு செய்யவேண்டும் என்றும் கூறப் பட்டது. இதைத் தீர்மானிக்கும்போது தரப்பினரின் முரண்பட்ட நலன்களைச் சீர்தூக்கிப் பார்க்கவேண்டும் என்றும் கூறப்பட்டது. இவ் வழக்கில், இளங்குற்றவாளிகள் பள்ளி அதிகாரிகளின் கவன மின்மைக்காக உள்நாட்டு அமைச்சகத்தின் மீது வழக்கிடப் பட்டது. அப் பள்ளிப் பிள்ளைகள் பூல் துறைமுகத்தில் இருந்த ஒரு தீவில் வேலை செய்து கொண்டிருந்தனர்; அவர்களில் சிலர் இரவில் தப்பிச்சென்றனர். அதற்குப் பள்ளி அதிகாரிகளின் கவனமின் மையே காரணம் என்று சொல்லப்பட்டது. பிள்ளைகள் அத் துறை யில் நிறுத்தப்பட்டிருந்த படகில் ஏறி அதை ஓட்டிச்சென்று வாதி யின் படகின் மீது மோதியதன் விளைவாக அவருடைய படகுக்குக் கடுமையான சேதம் ஏற்பட்டது. வாதியின்பால் கவனத்தோடு இருக்கவேண்டிய கடமை தங்கள் அதிகாரிகளுக்கு இல்லையென்று அமைச்சகம் வாதிட்டது. இங்குச் சொத்துக்கு ஏற்பட்ட சேதம் பிள்ளைகள் தப்பிச் சென்று புரிந்த தீங்கின் முன்னறியத்தக்க விளைவே. மற்றவர்கள் ஊறு விளைவிக்காமல் தடுக்கவேண்டிய பொதுவான கடமைஎதுவும் இல்லை. அந்தப் பிள்ளைகளைக் காவலில் வைக்கவும் கட்டுப்படுத்தவும் எதிர்வாதிகள் பெற்றிருந்த அதிகாரம் சட்டப்படி அளிக்கப்பட்டது. எனவே, இந்த அதிகாரிகள்மாணவர் களைக் கட்டுப்படுத்த வேண்டிய கடமையை அரசுக்கே காட்ட வேண்டியவர்கள். சட்டப்படி அமைந்துள்ள கடமையை மீறிய தற்காகத் தனிப்பட்ட நிவாரணம் யாரும் பெறமுடியாது. இதற்கு மாறுக, இந்தச் சூழ்நிலையில் கவனத்தோடு இருக்கவேண்டிய கடமை இருக்கிறது என்று கருதினால், தேவைக்கு மேலான எச் சரிக்கையுடன் அதிகாரிகள் பிள்ளைகளைக் கண்காணிக்க நேரும் இதனால் அவர்கள் பயிற்சி பாதிக்கப்படும், பள்ளிக்கட்டடத்திற்கு வெளியேதான் அவர்களுக்குச் சிறப்பான பயனுள்ள பயிற்சி தரப்படமுடியும் என்றுகூறி, அமைச்சகத்தையும் அதிகாரிகளையும் இதற்குப் பொறுப்பாளிகள் ஆக்குவது பொதுநலனுக்கு உகந்த தன்று என்று எதிர்வாதம் செய்யப்பட்டது. மற்றவர்களால் ஊறு விளைவிக்கப்படாமல் தடுக்கவேண்டிய கடமை அமைந்துள்ள வழக்குகளை நீதிபதிகள் சுட்டிக்காட்டினர். இங்குக் காட்டப்பட வேண்டிய கடமை, கவனத்தோடு இருக்கவேண்டிய கடமை மட்டுமே, எந்த அளவு கவனம் காட்டவேண்டும் என்பது வழக்கின் சூழ்நிலையைப் பொறுத்ததே. பார்ஸ்டட்டல் அல்லது இளங்குற்ற

வாளிகள் பயிற்சிப் பள்ளி நிர்வாகி ஒருவர் செய்யும் செயலினால் ஒருவர் தப்பிச்செல்ல வழியும், அதனால் சேதமும் ஏற்படும் என்று முன்னறிய முடிவதனாலேயே அவர் பொறுப்பாளியாவார் என்று சொல்லமுடியாது. பார்ஸ்ட்டல் பள்ளிக்கூடம் வைத்திருப்பதோ, அங்குள்ள பிள்ளைகளுக்கு அதிக அளவில் சுதந்திரம் தருவதோ கவனமின்மை ஆகாது. அவர்கள் தங்கள் உளத்தேர்வு அல்லது உசிதத்தை முறையாகப் பயன்படுத்துவதே அவர்கள் காட்டவேண்டிய கடமையாகும். அவர்கள் பார்ஸ்ட்டல் திட்டத்தை முறையாக நிறைவேற்றுவதற்கு இடையூறாக இல்லாதமுறையில் அடுத்துள்ளவர்க்கும், அவர்களது சொத்துக்கும் ஊறு அல்லது இழப்பு நேராமல் பார்த்துக்கொள்வதில் கவனம் காட்டவேண்டும். இவ் வழக்கில் அமைச்சகமும் அவரது பணியாள்களும் பொறுப்பாளிகளாகக் கருதப்பட்டனர். இத் தீர்ப்புச் சரியானதென்று பிரபுக்கள் சபை ஏற்றுக்கொண்டது.

டானகு v. ஸ்டீவன்சன் (Donoghue v. Stevenson) வழக்கில் ஒருவர் தம் செயலினால் அடுத்துள்ளவருக்கு ஊறு நேரக் கூடும் என்று முன்னறிய முடியுமானால் அதைச் செய்யாமல் இருப்பதில் கவனம் செலுத்த வேண்டும் என்று கூறப்பட்டது.

இங்கு அடுத்துள்ளவர் என்று குறிப்பிடப்படுவர் யாரெனின், ஒருவரது செயலால் நேரடியாகவும், நெருக்கமான முறையிலும் பாதிக்கப்பட்டு ஊறு அடைபவர்களே. எனவே ஒருவர் ஊறு விளைவிக்கும் செயலை எண்ணும்போதே இவ்வாறு அதனால் பாதிக்கப்படப்போகிறவர்களைச் சிந்தையில் இருத்தியே அச்செயலைத் தொடங்கவேண்டும். இவ்வாறு கருதத் தக்கவர்களையே அடுத்துள்ளவர் என்று கூறுகிறோம். டானகு v. ஸ்டீவன்சன் வழக்கில் வழக்கிட்ட பெண்மணி எதிர் மனுதாரரால் உற்பத்தி செய்யப்பட்ட ஜிஞ்சர்பீர் மதுவை அருந்தினாள். அம் மது அடங்கிய புட்டியை இப் பெண்மணிக்கு அவரது நண்பர் ஒருவர் ஓர் உணவு விடுதியில் இருந்து வாங்கிக் கொடுத்தார். அந்த உணவு விடுதிக்காரர் உற்பத்தியாளரிடமிருந்து அம் மதுப்புட்டியை வாங்கியிருந்தார். இம்மதுப்புட்டியிலிருந்து மதுவை அப் பெண்மணிக்கு அவரது நண்பர் ஒரு கண்ணாடித் தம்ளரில் ஊற்றிக் கொடுத்தார். அதை அவள் குடித்ததும், புட்டியில் மீதமிருந்த மதுவைக் கண்ணாடி தம்ளரில் அந்த நண்பர் ஊற்றி, நிரப்பும் போது அப்புட்டியின் அடியிலிருந்து இறந்து அழுகிக்கிடந்த நத்தையின் உடற்பகுதிகள் மதுவோடு மிதந்து வெளியே வந்தன. இதைக் கண்ணுற்றதாலும், கெட்டுப்

போன அம் மதுவை அருந்தியதாலும், அப் பெண்மணிக்கு உடல் நலம் மோசமாகப் பாதிக்கப்பட்டு, அவளுக்கு அதிர்ச்சியும், இரைப்பை, குடல் அழற்சி நோயும் (gastro enteritis) ஏற்பட்டன. அப் புட்டி இருண்ட கண்ணுடியால் செய்யப்பட்டிருந்தது; அது உலோக மூடியால் மூடப்பட்டு இருந்தது. எனவே, அப் புட்டியினுள் என்ன உள்ளதென்பதைச் சோதிக்க வழியிருக்கவில்லை; அப்பெண்மணி தீங்கீடு கோரி எதிர்மனுதாரர்மேல் வழக்கிட்டாள். இவ் வழக்கில் கவனமின்மை தனித்தீங்காக ஏற்கப்பட்டது. வாதியின்பால் கவனத்தோடு இருக்கவேண்டிய கடமை தமக்கு இல்லையென எதிர்வாதி வாதிட்டார்; பொருளை உற்பத்தி செய்பவருக்கு அதில் நச்சுப்பொருள் அல்லது ஊறு விளைவிக்கும் பொருள் எதுவும் இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டிய கடமை உண்டென்று பிரபுக்கள் சபை தீர்ப்பளித்தது. எனவே, இக் கடமையிலிருந்து எதிர்வாதி தவறினால் அவர் பொறுப்பாளியாவார் என்று தீர்ப்பளித்தது.

உற்பத்தி செய்பவர் அப் பொருள் எந்த மாற்றமும் அடையாமல் தாம் உற்பத்தி செய்தவாறே, அதே வடிவத்தில் நுகர்பவருக்கு இறுதியாகப் போய்ச் சேரவேண்டும் என்று கருதுகிறார். தவிர, அப் பொருள் நுகர்பவரைச் சென்றடையும் முன்பாக அப்பொருளை இடைவழியில் சோதிக்கும் வாய்ப்பு இல்லையென்றும் அவர் அறிவார். அதனுடன், அப் பொருளைச் செய்வதில் தக்க கவனம் காட்டத் தவறினால் அப் பொருளை நுகர்பவருடைய உயிருக்கோ, சொத்துக்கோ ஊறு நேரும் என்பதையும் அவர் அறிந்துள்ளார். எனவே, இறுதியாக அப்பொருளை நுகர்பவர்பால் கவனத்தோடு இருக்க வேண்டிய கடமை அவருக்கு உண்டெனப் பிரபுக்கள் சபை கூறியது. மற்றும், எதிர்மனுதாரர் அப்பெண்மணியோடு தாம் எந்த ஒப்பந்தமும் செய்துகொண்டிருக்கவில்லையென்று வாதிட்டார். தீங்கியலில் பொறுப்பு ஏற்பட வாதி, எதிர்வாதி ஆகிய இருவர்களுக்கிடையே ஒப்பந்த உறவு இருக்கத் தேவையில்லை என்று நீதிமன்றம் கூறிவிட்டது.

வாதியின்பால் கவனத்தோடு இருக்கவேண்டிய கடமை எதிர்வாதிக்கு உண்டா இல்லையா என்பது வாதிக்கு ஏற்பட்ட ஊறு முன்னறியத்தக்கதா இல்லையா என்பதைப் பொறுத்ததாகும். இங்கு நாம் சமநிலை அறிவு அல்லது நல்லறிவு உள்ள மனிதன் அந்தச் சூழ்நிலையில் எவ்வாறு நடந்து கொண்டிருப்பான் என்பதையே அளவுகோலாகக் கொள்கின்றோம். எதிர்வாதி தன்னால் இயன்றஅளவு கவனம் காட்டியதாகக் கூறலாம்; ஆனால், அவன் காட்டிய கவனம் சமநிலை அறிவுள்ள மனிதன் ஒருவன்

காட்டக் கூடிய கவனத்தைவிடக் குறைந்ததாயின், அவன் பொறுப்பாளியாவான். வாகன் v. மென்லவ் (Vaughan v. Menlove) வழக்கில் எதிர்வாதி வைத்திருந்த வைக்கோல் போரை அடுத்திருந்த நிலத்தில் வாதியின் குடிசைகள் இருந்தன. எதிர் வாதியின் வைக்கோற்போர் சரியானபடி காற்றோட்டமாக வைக்கப் படாமல் இருந்தது. அதை அவன் காப்பீடு செய்திருந்தான். எதிர்வாதியின் வைக்கோற் போரில் தீப்பற்றியது. அதிலிருந்து பரவிய தீயினால் வாதியின் குடிசைகள் எரிந்து சேதமுற்றன. எதிர்வாதியின் வைக்கோற் போர் இருந்த நிலையும், அதனால் ஏற்படக் கூடிய விளைவுகளையும் அவனிடம் எடுத்துச் சொல்லியும் அவன் உரிய பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கத் தவறியதோடு, தீப்பற்றினால் பார்த்துக் கொள்ளலாம் என்று அலட்சியமாக இருந்துவிட்டான். அவன் நேர்மையாகவும், தன்னால் இயன்ற வரையும் கவனம் காட்டியதாக வாதிட்டதை நீதிமன்றம் ஏற்க வில்லை. இங்குச் சமநிலை அறிவுள்ள மனிதன் அச்சூழ்நிலையில் காட்டியிருக்கக் கூடிய கவனத்தை அவன் காட்டாததால் பொறுப் பாளியெனக் கருதப்பட்டான்.

எதிர்வாதி ஒரு செயலைச் செய்யும்போது வாதிக்கு ஊறு ஏற்படக்கூடும் என முன்னறிய முடியுமாயின், அவன் அந்த ஊறு ஏற்படாமல் தடுக்கக் கடமைப்பட்டிருக்கிறான்; அவ்வாறு செய்யத் தவறினால் சட்டப்படி பொறுப்பாளியாவான். இங்குக் கவனத்தோடு இருக்கவேண்டிய கடமை என்பது மற்றவருக்கு இயல்பாகவும், நிகழத்தக்க விளைவாகவும் அமைந்துள்ள ஊறினை ஏற்படுத்தாமல் இருக்கும் செயலாகும். இங்குச் சமநிலை அறிவுள்ள மனிதனது முன்னறிவே பொதுவான வரையளவாகும். சில மனிதர்கள் இயல்பாகவே நெஞ்சுர மற்றவர்களாய், எதைக்கண்டாலும் அஞ்சி ஒடுங்கும் இயல்புடையவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் தாங்கள் செல்லும் பாதைகளில் சிங்கங்கள் எதிர்ப்படும் என்று கற்பனை செய்து நடுங்குவார்கள். மற்றவர்களோ மிகுந்த நெஞ்சுரம் கொண்டவர்களாய் மிகச் சாதாரணமாக, வெளிப் படையாகத் தெரிகின்ற ஆபத்தினையே முன்னறிய மாட்டார்கள். சமநிலை அறிவுள்ள மனிதனை கழிமிகை அற்றவன், அளவுக்கு மீறிய அச்சமோ, தன்னம்பிக்கையோ இல்லாதவன். வழக்கினை விசாரிக்கும் நீதிபதி சமநிலையறிவுள்ள மனிதன் அச் சூழ்நிலையில் எதை எதிர்பார்க்கக் கூடும் என்று முடிவு செய்யவேண்டும். இதில் நீதிபதிகளிடையே கருத்து வேறுபாடுகள் எழுதல் இயற்கையாகும். ஒரு நீதிபதிக்கு இயல்பானதாகவும், நிகழக்கூடியதாகவும் தோன்றக்கூடியது வேறு ஒரு நீதிபதிக்கு இயலாததாகத் தோன்ற

லாம். சமநிலை அறிவுள்ள மனிதனை நாம் சாலையில் காணும் மனிதன் என்றும், பேருந்தில் பயணம் செய்யும் மனிதன் என்றும் தீங்கியல் ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். தீங்கியல் சட்டத்தில் கவனமின்மையைத் தீர்மானிக்க வரையளவாகப் பயன்படுத்துவது சமநிலை அறிவுள்ள மனிதனது நடத்தையையே.

கிளாஸ்கோ மாநகராட்சி *v.* மூர் (Glasgow Corporation *v.* Muir) வழக்கில் எதிர்வாதி மாநகராட்சியில் மேலாளராகப் பணியாற்றிய பெண், தேநீர் அறைகளில் ஒரு சுற்றுலாக் குழுவினரை உணவு உட்கொள்ள அனுமதித்தாள். அவர்களுள் இருவர் ஆறுமுதல் ஒன்பது காலன் தேநீர் ஊற்றப்பட்டிருந்த ஒரு பெரிய பாத்திரத்தைத் தேநீர் அறைக்குத் தூக்கிச் சென்றனர். அவர்கள் அதைத் தூக்கிச்சென்ற வழியில் குழந்தைகள் தின்பண்டங்களும், ஐஸ்கிரீமும் வாங்கிக் கொண்டிருந்தன. திடீரென்று அவர்களுள் ஒருவர் அப் பாத்திரத்தின் கைப்பிடியை நழுவவிட்டார். இதனால் அப் பாத்திரம் கீழே விழுந்து வாதி மூருக்கும் மற்றக் குழந்தைகளுக்கும் காயம் ஏற்பட்டது, தேநீர்ப் பாத்திரத்தை அவ் வழியே எடுத்துச் செல்வதன் விளைவாக இந்த விபத்து ஏற்படும் என்பது மேலாளர் எதிர்பார்த்திருக்கமாட்டாள். எனவே, அந் நிகழ்ச்சி நிகழாமல் இருக்க முன்னெச்சரிக்கையாக நடவடிக்கை எடுக்க வேண்டிய கடமை அவளுக்கு இல்லை. எனவே, அவளோ மாநகராட்சியோ பொறுப்பாளியாகமாட்டார்கள் என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

புக்கர் *v.* வென்பார்ன் (Booker *v.* Wenborn) வழக்கில் எதிர்வாதி புகைவண்டி நிலையத்திலிருந்து நகரத்தொடங்கிய புகைவண்டியொன்றில் தாவி ஏறினார். ஆனால், அவர் பெட்டியின் கதவைக் கவனமின்றி மூடாமல் இருந்துவிட்டார். சுமையாளாகப் பணி புரிந்த வாதி புகைவண்டி நிலைய மேடையின் முனையில் நின்றுகொண்டிருந்தார். அவர்மேல் கதவு மோதியதால் அவருக்குக் காயம் ஏற்பட்டது. ஓடிக்கொண்டிருக்கும் புகைவண்டியில் ஏறுபவனுக்குத் தங்கும் மேடையின் ஓரமாக நின்றுகொண்டிருப்பவன்பால் கவனத்தோடு இருக்கவேண்டிய கடமை உண்டு. எனவே, இவ்வழக்கில்எதிர்வாதி பொறுப்பாளியாகக்கருதப்பட்டார். ஒரு செயலைச் செய்யும்போது அதனால் குறிப்பிட்ட விளைவுகள் ஏற்படும் என்ற நிலையிருந்தால் அந்த விளைவுகளைச் சமநிலை அறிவுள்ள மனிதன் முன்னறிந்திருப்பான் என்றே, முன்னறிந்திருக்க வேண்டும் என்றே கருதப்படும்.

கங்கா சுகர் கார்ப்பரேஷன் லிமிடெட்டும் மற்றவர்களும் *v.* சுக்பிர் சிங்கும் மற்றொருவரும் (Ganga Sugar Corporation &

others v. Sukhbir Singh & another) வழக்கில், எதிர்வாதிகளின் பணியாளாகிய ஜீப் ஓட்டுநர் மக்கள் கூட்டமாகச் சென்றுகொண் டிருந்த சாலையொன்றில் ஜீப்பை நிறுத்திச் சென்றுவிட்டார். அவர் ஜீப் வண்டியின் சாவியை ஜீப்பிலேயே விட்டுச் சென்றுவிட்டார். அவர் சென்றபின் மூன்றுவது நபர் ஒருவர் ஜீப்பினைக் கவனமின்றி ஓட்டி ஒரு மின்சாரக் கம்பத்தின் அருகில் நின்றுகொண்டு ஒரு திருமண ஊர்வலத்தைப் பார்த்துக்கொண்டிருந்த வாதியின்மேல் மோதியதால், வாதியின் கை துண்டாகியது. இந்த விபத்தேற்பட உண்மையில் நெருங்கிய, ஆற்றல்வாய்ந்த காரணமாக அமைந் திருந்தது ஓட்டுநர் கவனமின்றி ஜீப்பினை அங்கு விட்டுச்சென்றதே யன்றி மூன்றுவது நபர் அதை ஓட்டியதன்று. ஓட்டுநர் நல்லறி வுள்ள மனிதராயின் தாம் இல்லாதபோது மூன்றுவது நபர் ஒருவர் ஜீப்பில் ஏறி அதை ஓட்ட முயற்சி செய்யக்கூடும் என்று எதிர் பார்த்திருக்க முடியும்; எனவே, அவரது கவனமின்மை நிரூபிக்கப் பட்டதாக நீதிமன்றம் கருதி வாதிக்கு ஏற்பட்ட காயத்திற்கு ஜீப் ஓட்டுநரின் பணித்தலைவருக்குப் பகரப் பொறுப்பு உண்டெனத் தீர்ப்பளித்தது.

ஒருவன் குறிப்பிட்ட சூழ்நிலையில் எந்த அளவு கவனம் காட்ட வேண்டும் என்பது அவன் செயலால் ஏற்படக்கூடிய ஆபத்தைப் பொறுத்தது. ஒருவன் குறிப்பிட்ட செயலைச் செய்வ தால் மற்றவரது உடலுக்கோ, சொத்துக்கோ அதிக ஆபத்து ஏற்படுமென்றால். அவன் முன்னறியத்தக்க ஊறு விளையாமல் தடுக்க அதிகக் கவனத்தோடு இருக்க வேண்டும். ஆனால், அவன் நடத்தையால் ஏற்படக்கூடிய ஆபத்து அற்பமானதாகவும், குறை வானதாகவும் இருப்பின் சிறிதளவு கவனம் காட்டினால் போதும். சாதாரணக் கவனம் உடைய மனிதன் ஒரு சூழ்நிலையில் காட்டக் கூடிய கவனத்தை அவன் காட்டினால் போதும். ஆனால் இதற் கொரு விதிவிலக்கு உண்டு. ஒரு குறிப்பிட்ட தொழிலைச் செய் பவன் மிகவும் திறமைசாலி என்றும், அவன் தான் செய்கின்ற தொழில் ஆபத்தானதென்பதை அறிவான் என்றும் வைத்துக் கொள்வோம். மற்றொருவன் அதே தொழிலைச் செய்கிறான். ஆனால், அவனுக்கு அந்த அளவு திறமையில்லை. மற்றும் அது ஆபத்தான தென்று அவனுக்குத் தெரியாது. இப்படிப்பட்டவன் தொழிலில் திறமையின்றிச் செய்யும் செயலால் ஏற்படும் ஊறு அல்லது இழப்பைக் கவனமின்மையால் ஏற்பட்டதென்று சட்டம் கருதும். சிறந்த திறமையோடு செய்யப்படவேண்டிய தொழில்கள் உண்டு. இவற்றை அத்தொழிலில் வல்லுநர்களாக உள்ளவர்களே மேற் கொள்ள வேண்டும். தனிப்பட்ட திறமையுடையவர்களே பத்திர மாகச் செய்யக்கூடிய தொழில்களை, தகுதியற்றவர்கள் தாங்களா

கவே முன்வந்து செய்வது கவனமில்லாத செயலாகும். வாதியின் பால் எதிர்வாதி காட்டவேண்டியது கவனம் தானே தவிரத் திறமை யன்று. இங்கு எதிர்வாதியின் கவனமின்மை அவன் செய்கின்ற வேலையைத் திறமையின்றிச் செய்வதன்று; அவன் தனக்குத்திறமை யில்லை என்று தெரிந்தும் அவ்வேலையைச் செய்ய முன்வந்ததே கவனமின்மையாகும். எனவே, அறுவைச் சிகிச்சை செய்யும் மருத்துவர் அத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் மற்ற அறுவை மருத்துவர் காட்டக்கூடிய கவனத்தைக் காட்டவேண்டும்; குழந் தைக்குக் காதணி மாட்டுவதற்காகக் காதில் துளைபோடும் பொற் கொல்லர் சாதாரணமாக மற்றப் பொற்கொல்லர்கள் காட்டக்கூடிய எச்சரிக்கையும் கவனமும் காட்டினால் போதும் காரை ஓட்டுபவர். களிடமிருந்து அதிகக் கவனம் எதிர்பார்க்கப்படுகிறது. ஏன் எனில் கார் ஓர் அபாயகரமான ஆயுதமாக ஆகிவிட்டது. அறுவை மருத்துவரைப்போலவே காரை ஓட்டுபவரும் மிகவும் கடினமான பணியைச் செய்கிறார். அதில் மற்றவர்களுக்கு மிகவும் ஆபத்தான விளைவுகள் ஏற்பட வாய்ப்பிருக்கிறது. எனவே, குறிப் பிட்ட தொழிலைச் செய்பவர் அத் தொழிலைச் செய்வதில் தகுந்த அளவு திறமையும், அறிவும் உள்ளவராக இருப்பதோடு, தகுந்த கவனமும் காட்டவேண்டும். டாக்டர் லக்ஷ்மண் பால்கிருஷ்ண ஜோஷி *v.* டாக்டர் திரிம்பக் பாபு காட்போலே (Dr. Laxman Balkrishna Joshi *v.* Dr. Trimbak Babu Godbole) வழக்கில் ஒரு நோயாளிக்கு மயக்கத்தை ஏற்படுத்தி வலியை உணராமல் செய்யும் மருந்தினைத் தராமல், அறுவை மருத்துவர் அந் நோயா ளிக்கு எலும்பு முறிவு ஏற்பட்டதைக் கண்டுபிடிக்கும் சோதனையை மேற்கொண்டார். இதன் விளைவாக நோயாளிக்கு அதிர்ச்சி ஏற்பட்டு அவர் இறந்துவிட்டார். இவ் வேலையைச் செய்யும் போது மயக்க நிலையை ஏற்படுத்த வேண்டும்; இது தொடக்கத்தி லேயே மேற்கொள்ளவேண்டிய எச்சரிக்கையாகும். இதைச் செய்யத் தவறிய மருத்துவர் கவனமின்மைக்குப் பொறுப்பாளி எனக் கருதப்பட்டார். மருத்துவ ஆலோசனையும், சிகிச்சையும் தர முனையும் ஒருவன் அதற்குத் தேவையான திறமையும், அறிவும் தனக்கு இருப்பதாகச் சொல்கிறன் என்றே கருதவேண்டும். எனவே, அவனிடம் ஆலோசனை பெற ஒரு நோயாளி செல்லும் போது, அவனுக்குச் சிகிச்சை அளிப்பதா?.வேண்டாமா? என்று முடிவு செய்வதிலும், எப்படிப்பட்ட சிகிச்சை அளிப்பது என்று தீர்மானிப்பதிலும், அந்தச் சிகிச்சை அளிக்கும்போதும், கவனத் தோடு இருக்கவேண்டிய கடமையை அவன் காட்ட வேண்டும். இக் கடமைகளில் அவன் தவறினால் கவனமின்மைக்காக அவன் மேல் வழக்கிடலாம். ஒரு தொழிலைச் செய்யும்படி ஒருவனை

வற்புறுத்தமுடியாது. ஆனால், தகுதியும் திறமையும் தேவைப் படும் ஒரு தொழிலைச் செய்ய முன்வருபவன் அத் தொழிலில் தேவைப்படும் தகுந்த கவனத்தைக் காட்டியாக வேண்டும். ஒரு நோயாளிக்கு எப்படிப்பட்ட சிகிச்சை அளிக்க வேண்டு மென்று தம் உசிதப்படி முடிவு செய்யும் உரிமை மருத்துவருக்கு உண்டு; மிகவும் ஆபத்தான சூழ்நிலைகளில் இந்த உரிமை அவருக்கு அதிகமாகவே உண்டு.

கார்மார்த்தன்ஷைர் கவுன்ட்டி கவுன்சில் *v.* லூயிஸ் (Carmarthanshire County Council *v.* Lewis) வழக்கில் எதிர் வாதிகள் நடத்திய குழந்தைகள் பள்ளியை நிர்வகித்த ஆசிரியை சுமார் 3¼ வயது நிரம்பிய டேவிட் என்ற பாலகனையும், ஒரு சிறிய பெண்ணையும் வெளியே உலாவ அழைத்துச் செல்லவிருந் தாள். ஆனால், அவள் வகுப்பறையை விட்டுச் சென்றாள். அவ்வாறு அவள் வெளியே இருந்தபோது சிறுநீர் கழிக்கும் இடத் திற்குச் சென்றதோடு கீழே விழுந்து காயமடைந்த குழந்தை ஒன்றுக்கு முதலுதவியும் செய்தாள். அவள் திரும்பி வந்து பார்த்தபோது வகுப்பில் டேவிட் இல்லை. அவன் திறந்திருந்த பள்ளிக்கூட வாயில் வழியாகப் பள்ளி விளையாட்டுத் திடலைக் கடந்து ஒரு சந்து வழியாகப் போக்குவரத்து நெரிசல் மிகுந்த நெடுஞ்சாலைக்கேசென்றுவிட்டான். வாதியின் கணவன் அப்போது ஒரு லாரியை ஓட்டிக்கொண்டு அவ்வழியே சென்றான். சாலையின் குறுக்கே வந்த அக் குழந்தையின்மேல் ஏற்றாமல் தவிர்க்க வண்டி யைத் திருப்பினான்; அது மரத்தில் மோதியதால் ஏற்பட்ட விபத் தில் லாரியை ஓட்டிச் சென்ற வாதியின் கணவன் இறந்தான். பள்ளி நிர்வாகிகளாகிய ஊராட்சி மன்றத்தின்மீது தீங்கீடு கோரி வாதி வழக்கிட்டாள். அவர்களது கவனமின்மையாலோ, குழந்தையைச் சரியாக கவனித்துக்கொள்ள ஆசிரியர் தவறிய தாலோ தனது கணவன் மடிய நேரிட்டது என்று அவள் வாதிட் டாள். பிரபுக்கள் சபையின் பெரும்பான்மையான நீதிபதிகள் அப்பீல்தாராகிய ஊராட்சி மன்றம் பொறுப்பாளியாகும் எனத் தீர்ப்பளித்தனர். வழக்கில் உள்ள சான்றின்படி ஆசிரியர் கவன மின்றி இருந்ததாகக் கூற முடியவில்லை. அவள் பள்ளியைவிட்டுச் சிறிது நேரம் வெளியே சென்றிருந்ததால் அச் சிறு குழந்தை பள் ளிக் கட்டடத்தை விட்டு நெடுஞ்சாலைக்குச் செல்ல வாய்ப்புண்டு. ஏனெனில், பள்ளிக்கட்டடத்தின் வாயிற்கதவு திறந்தோ, அக்குழந்தை எளிதாகத் திறந்துகொள்ளுமாறே வைக்கப்பட்டிருந் தது. இது கவனமின்மையாகும். நெடுஞ்சாலையை ஓட்டியுள்ள நிலங்களிலிருந்து விலங்கு தப்பிச் சென்று சாலையில் செல்பவருக்கு

விபத்தேற்படுத்தினால் பொறுப்பேற்படுவதில்லை என்னும் சட்டம் இங்குப் பொருந்தாது. சாலையில் சட்டப்படியான முறையில் செல்பவருக்கு ஆபத்தேற்படும் வண்ணம் சிறுகுழந்தைகள் சாலைக்குத் தப்பிச் செல்லாதவாறு பார்த்துக் கொள்ளவேண்டிய கடமை சாலையை ஒட்டி அமைந்துள்ள கட்டடங்களை உடையவருக்குண்டு. அக் குழந்தையின் பாதுகாப்புக்காகக் கவனம் காட்ட வேண்டிய கடமை பள்ளி நிர்வாகிகளுக்குண்டு. அதனுடன் அக் குழந்தையைக் காப்பாற்றச் சென்று விபத்துக்குள்ளாகிறவர்களுக்கும் ஆபத்து ஏற்படாமல் இருக்கக்கவனத்தோடு இருக்க வேண்டிய கடமை பள்ளி நிர்வாகிகளுக்கு உண்டு. நாள்தோறும் பிறரைக் கார் விபத்திலிருந்து காப்பாற்றப்போய் பலர் ஆபத்துக்குள்ளாகின்றனர். ஒரு குழந்தை தெருவில் ஓடும்போது அக் குழந்தைக்கு ஆபத்து ஏற்படுவதைப்போலவே அக் குழந்தையினால் மற்றவர்களுக்கும் ஆபத்து ஏற்படும். இதைப் போன்றதொரு விபத்து ஏற்படும் என்பதை நல்லறிவுள்ள மனிதன் சிந்தித்துப் பார்க்க முடிந்தால் போதும்; குறிப்பிட்ட விபத்தை முன்னறியத் தேவையில்லை.

எதிர்வாதி கவனமின்றி இருந்தான் என்பதை நிரூபிக்க வாதிக்கு ஏற்பட்ட ஊறு முன்றினயத்தக்கது என்று மட்டும் நிரூபித்தால் போதாது. அது நிகழத்தக்கது என்றும் நிரூபிக்க வேண்டும். வாதிக்கு ஏற்படக்கூடிய ஊறு மிகச் சேய்மையான தாயின், அது ஏற்படாமல் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கத் தேவையில்லை. பார்டன் *v.* ஹார்கோர்ட் ரிவிங்டன் (Fardon *v.* Harcourt Rivington) வழக்கில் எதிர்வாதி தன்னுடையத் காரைதெரு ஓரத்தில் நிறுத்திவிட்டுச் சென்றுவிட்டான். அந்தக் காரில் அவனது நாய் இருந்தது. அது உள்ளே குதித்துக் காரின் கண்ணாடியை உடைத்தது. அப்போது அக் காரின் ஓரமாகச் சென்றுகொண்டிருந்த வாதியின்மேல் அக் காரின் கண்ணாடியின் உடைந்த தூள் ஒன்று குத்தியதால் காயமுற்றான். இங்கு ஏற்பட்ட விபத்து சாதாரணமாக நிகழக்கூடியதன்று. எனவே, இதை நிகழாமல் தடுக்க நடவடிக்கை எடுக்காமல் இருந்த எதிர்வாதியைக் கவனமின்றியிருந்தான் என்று சொல்லமுடியாது. எனவே, வாதிக்கு ஏற்பட்ட காயத்திற்கு எதிர்வாதி பொறுப்பாளியாக மாட்டான் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இதைப்போன்ற விபத்தேற்பட வாய்ப்பிருக்கலாம்; ஆனால், அவ்வாறு ஏற்படலாம் என்று சமநிலை அறிவுள்ள மனிதனுக்குத் தோன்றுது. எனவே, இதைப்போன்ற விபத்துகள் நேராமல் தடுக்க எச்சரிக்கையான நடவடிக்கைகள் எடுக்க வேண்டியதில்லை.

ஒருவன் விரைவாகச் சென்றுகொண்டிருக்கும் ஒரு காரின் குறுக்கே திடீரென்று ஓடினால், அதைக் காரினை ஓட்டியவர் எதிர் பார்க்கமுடியாது. எனவே, இவ்வாறு ஏற்படும் விபத்திற்கு அவர் பொறுப்பாளியாகமாட்டார். ஆனால், வழிப்போக்கர் ஓரிடத்தில் சாலையைக் கடக்கக்கூடும் என்று அறிந்திருந்தால், காரை ஓட்டு பவர் மிகுந்த கவனத்துடன் காரை ஓட்டவேண்டும். அதிலும் சாலையைக் கடக்க முயற்சி செய்பவர்கள் பள்ளிப் பிள்ளைகளாயின் அவர் அதிகக் கவனம் காட்டவேண்டும்.

கவனம் காட்டவேண்டிய சூழ்நிலை அமைந்துள்ள வழக்கு களில் நீதிமன்றம் எதிர்வாதி உண்மையில் காட்டிய கவனத்தை விட அதிகமாகக் காட்டியிருக்க வேண்டுமா என்று பார்க்க வேண்டும். எத்தகைய கவனத்தை எதிர்வாதி காட்டவேண்டும் என்பதை அறிய ஏற்பட்டுள்ள ஆபத்தின் அளவைத் தீர்மானிக்க வேண்டும். ஊறு நிகழக்கூடிய வாய்ப்புள்ளதா என்பதையும், விபத்தினால் ஏற்பட்ட காயம் கடுமையானதா என்பதையும் அறிய வேண்டும். போல்டன் v. ஸ்டோன் (Bolton v. Stone) வழக்கில் எதிர்வாதிகள் ஒரு கிரிக்கெட் சங்கத்தின் நிர்வாகிகள், அவர்கள் கிரிக்கெட் விளையாடிய நிலம் நெடுஞ்சாலையை அடுத் திருந்தது. ஒரு முறை ஆட்டக்காரர் ஒருவர் கிரிக்கெட் பந்தை அடித்தபோது அது சாலையில் சென்றுகொண்டிருந்த வாதியின் மேல் பட்டதால் அவள் காயமுற்றாள். இவ் வழக்கின்படி பந்தை யடித்தவர் சரியானபடி வீசப்பட்ட பந்தைச் சரியான முறையிலே அடித்தார். வாதி பந்தை அடித்தவர் நின்ற இடத்திலிருந்து 100 கெஜ தூரத்திலிருந்தாள். அப் பந்து பந்தை அடித்தவர் நின்ற இடத்திலிருந்து 78கெச தொலைவிலிருந்த 7 அடி உயர வேலியைத் தாண்டிச் சென்றது. கணிசமான அளவு ஆபத்தினை ஏற்படுத்தா மல் கிரிக்கெட் விளையாடமுடியா தென்றால் கிரிக்கெட் அங்கு ஆடவே கூடாது. ஆனால், இவ் வழக்கில் கணிசமான அளவு ஆபத்து ஏற்பட்டிருக்கவில்லை. அந்த இடம் விளையாடுமிடமாக 90 ஆண்டுகளாகப் பயன்பட்டு வந்தது. இந்த விபத்து நடந்ததற்கு முந்திய 30 ஆண்டுகளில் சுமார் ஆறுமுறைகள்தாம் பந்து விளையாடுமிடத்தைக் கடந்து சாலைக்கு வந்திருக்கிறது. யாருக்கும் காயமும் ஏற்பட்டதில்லை, அதாவது, பந்து எப்போதாவது ஒரு முறைதான் சாலைக்கு வந்திருக்கிறது; எனவே, ஒருவன் அப் பந்தி னால் அடிபடும் வாய்ப்பு மிகவும் குறைவே. எனவே, எதிர்வாதிகள் கிரிக்கெட் விளையாடி ஓர் ஆபத்தான நிலையை உருவாக்கியிருப்ப தாகச் சொல்லமுடியாது. தவிர, இவ்வாறு ஏற்படும் விபத்து கணிசமானதன்று. இந் நிகழ்ச்சி முன்னறியத் தக்கதே ஆயினும்

பந்து அடிக்கப்படும் இடத்தில் இருந்து விளையாடும் நிலத்தின் எல்லை வரையுள்ள தூரம், அங்கிருந்த ஏழு அடி உயர வேலி, பந்தடிக்கப்பட்ட திசை நோக்கி நிலம் மேடாக அமைந்திருந்தது ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு பார்த்தால் வாதியின் நிலையிலுள்ள ஒருவருக்குக் காயம் ஏற்படும் வாய்ப்பு மிகவும் அரிதானதேயாகும். எனவே, எதிர்வாதி கிரிக்கெட் சங்கத்தின் வேலியை உயரமாக்குவது போன்ற பாதுகாப்பு நடவடிக்கை எடுக்காமல் இருந்தது கவனமின்மையாகாது என்று வழக்கை விசாரித்த பிரபுக்கள் சபை கூறிவிட்டது. தவிர, இவ்வாறு அடிபடக்கூடிய மனிதனுக்கு ஏற்படக்கூடிய விளைவுகள் கடுமையானவையாக இரா என்றும் நீதிமன்றம் கூறியது. ஆனால், ஹில்டர் v. அசோசியேட்ட் போர்ட்லண்டு சிமெண்ட் மேன்யுபேக்சரர்ஸ் லிமிடெட் (Hilder v. Associated Portland Cement Manufacturers Ltd.) வழக்கில் எதிர்வாதிகளின் உடைமையிலிருந்த நிலத்தையடுத்துச் சாலை இருந்தது. அந்த நிலத்திற்கு வேலியிட்டிருக்கவில்லை. அதில் சிறுவர்களைக் கால்பந்து விளையாட அவர்கள் அனுமதித்திருந்தனர். வாதியின் கணவன் தனது மோட்டார் சைக்கிளில் சாலையில் சென்றுகொண்டிருந்தபோது எதிர்வாதிகளின் நிலத்தில் பந்து விளையாடிய சிறுவர்களில் ஒருவன் உதைத்த பந்து சாலையில் வந்து விழுந்து, அவன் விபத்துக்குள்ளானான். இங்கு வழிப்போக்கர்களுக்குக் காயம் ஏற்படக்கூடிய வாய்ப்பு போல்டன் v. ஸ்டோன் வழக்கில் இருந்த வாய்ப்பைவிட மிகஅதிகமாகும். எனவே, அதிகப்படியாகப் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் சிறுவர்களைத் தங்கள் நிலத்தில் பந்து விளையாட அனுமதித்ததற்காக எதிர்வாதிகள் பொறுப்பாளியாயினர்.

எதிர்வாதி காட்டவேண்டிய கவனம் சூழ்நிலைக்குத் தக்கவாறு மாறுபடும். ஒரு சூழ்நிலையில் கவனத்தோடு கூடியதாகக் கருதப்படும் செயல் வேறொரு சூழ்நிலையில் கவனமின்மையாகலாம். ஆபத்து அதிகமானதாக இருந்தால், அதிகப்படியான கவனம் காட்டவேண்டும். மழை தூறிக்கொண்டிருக்கும்போது ஒருவன் அதிகக் கவனத்தோடு காரை ஓட்டிச்செல்லவேண்டும். சாதாரணப் பொருள்களை எடுத்துச்செல்பவனைவிட வெடிமருந்து கொண்டு செல்பவன் அதிகக் கவனத்தோடு இருக்கவேண்டும். சம்பாலால் ஜெயின் v. வெங்கடராமன் (Champalal Jain v. Venkataraman) வழக்கில் ஒரு வாடகைக் கார் மணிக்கு 20 மைல் வேகத்தில் ஓட்டிச் செல்லப்படும்போது சாலையைக் கடந்து கொண்டிருந்த வாதியின்மேல் மோதியதால் அவர் காயமுற்றார். இங்கு அச் சாலையில் சென்ற வேகம் அதிகமானதாகவே கருதப்பட்டது. எனவே,

எதிர்வாதி பொறுப்பாளியாகக் கருதப்பட்டார். ஒரு நெடுஞ்சாலையில் மணிக்கு 40 மைல் வேகத்தில் செல்லலாம்; அதில் ஆபத்திராது; ஆனால், மக்கள் கூட்டம் நிறைந்துள்ள கடைவீதிப் பகுதியில் மணிக்கு 10 மைல் வேகத்தில் செல்வதுகூடக் கவனமின்மையாகக் கருதப்படலாம்.

மக்கள் கும்பலாகச் செல்லும் சாலைகளில் கூரான தொழிற் கருவிகளை எடுத்துச் செல்பவன் அவற்றால் மற்றவர்களுக்கு வெட்டுக் காயங்களோ, சிராய்ப்புகளோ ஏற்படாமல் இருக்கத் தனிப்பட்ட கவனம் காட்ட வேண்டும். கையில் குடையைப் பிடித்துக்கொண்டு சாலையில் செல்பவனைவிட இவன் அதிகக் கவனத்தோடு நடந்துகொள்ள வேண்டும். இதைப்போலவே சாலையில் வெறுங்கையோடு செல்பவனைவிடக் குடையைப் பிடித்துக்கொண்டு செல்பவன் அதிகக் கவனத்தோடு இருக்க வேண்டும்.

சில சமயங்களில் அசாதாரணச் சூழ்நிலைகள் அமைந்துவிடுவதால், ஒருவன் அதிகக் கவனம் காட்ட வேண்டி நேரலாம். எடுத்துக் காட்டாக, சாலையில் காரை ஓட்டிச் செல்பவன், எதிரில் ஒரு குருடன், சிறு குழந்தை, முடவர் ஆகியோர் சாலையின் குறுக்கே செல்வதைக் கண்டால் அவர்களுக்கு விபத்தேற்படாமல் இருக்கக் கவனமாகக் காரை ஓட்டிச் செல்ல வேண்டும். ஆனால், விபத்து ஏற்படக்கூடிய சூழ்நிலை வெளிப்படையாகத் தெரியவில்லையானால் கவனம் காட்ட வேண்டியதில்லை; எடுத்துக்காட்டாக, ஒரு செவிடன் சாலையைக் கடக்கும்போது உரிய கவனத்தோடு ஒரு காரோட்டி அவனுக்கு ஒலி கொடுத்தும், அவன் காது கேளாமல் சென்றதால் அவன்மேல் கார் ஏறும் நிலை ஏற்பட்டால் அதற்குப் பொறுப்பு ஏற்படாது. ஏனெனில், அவன் செவிடன் என்பதைக் காரோட்டியால் முன்னறிய முடியாது.

கிளாஸ்கோ கார்ப்பரேஷன் v. டாய்லர் (Glasgow Corporation v. Taylor) வழக்கில் எதிர்வாதி மாநகராட்சிக்குச் சொந்தமான ஒரு பூங்காவில் ஒரு புதரில் வளர்ந்திருந்த நச்சுப்பழங்களைத் தின்ற ஓர் ஏழு வயதுச் சிறுவன் மாண்டான். அப் பழங்கள் பார்வைக்குச் செர்ரிப் பழங்களைப்போல் இருந்தன. நகராட்சி அந்த நச்சுப் பழச்செடி இருந்த புதரை வேலியிட்டு மூடத் தவறியது. அங்குள்ள பழம் நஞ்சானது என்ற உரிய அறிவிப்பைக் கூட அங்கு வைக்கத் தவறிவிட்டது. எனவே, கவனமின்மைக்கு எதிர்வாதிகள் பொறுப்பாளியாவர் என்று கருதப்பட்டது. தங்கள் செயலால் சிந்தனை வளர்ச்சியுறுதவர்களுக்கும், அறிவு முதிர்ச்சி

அற்ற இளஞ்சிறார்களுக்கும் ஆபத்தேற்படும் என்பதை அவர்கள் அறிந்திருக்க வேண்டும். அதற்கேற்ப அவர்கள் முன்னெச்சரிக்கை யாகத் தக்க நடவடிக்கைகளை எடுத்திருக்க வேண்டும்.

வயது முதிர்ச்சியுள்ளவன்பால் காட்டும் கவனத்தைவிடக் குழந்தைகள்பால் அதிகக் கவனம் காட்ட வேண்டும். இங்கு ஒருவன் காட்டவேண்டிய கடமை அக் குழந்தையின் வயது, மன வளர்ச்சி ஆகியவற்றைப் பொறுத்து அமையும். வீரன் v. கிருஷ்ண மூர்த்தி (Veeran v. Krishnamoorthy) வழக்கில், 6 வயது நிரம்பிய வாதி சாலையைக் கடக்கும்போது ஒரு பேருந்தினுல் மீழே தள்ளப் பட்டு விபத்துக்குள்ளானுன். அப்போது 20 முதல் 25 பையன்கள் சாலையைக் கடப்பதற்காகக் காத்துக்கொண்டிருந்தனர். அவர் களில் சிலர் விபத்தேற்பட்டபோது ஏற்கெனவே சாலையைக் கடந்து விட்டனர். அங்குச் சாலையில் பார்வையை மறைக்க எதுவும் இல்லையாதலால், 75 முதல் 100 கெஜத் தொலைவிலேயே குழந்தை கள் சாலையைக் கடக்க முனைந்ததை எதிர்வாதி பார்க்கமுடியும். எனவே, எதிர்வாதி விபத்தினை முன்னறிந்து, பையன்கள் சாலையைக் கடக்க நின்றுகொண்டிருந்த இடத்தை அடையு முன்பே பேருந்தை நிறுத்துவதற்கேற்ற வேகத்திலே அதை ஓட்டிச் சென்றிருக்க வேண்டும். அவ்வாறு செய்யத் தவறியதாலேயே விபத்து ஏற்பட்டது. எனவே, அவர் பொறுப்பாளி எனக் கருதப் பட்டார்.

ஹேலி v. இலண்டன் மின்சார வாரியம் (Haley v. London Electricity Board) வழக்கில் குருடர்கள்பால் காட்டவேண்டிய கவனத்தின் தன்மையைப்பற்றிப் பிரபுக்கள் சபை விளக்கியுள்ளது, சாலையில் உள்ள நடைபாதையில் குழிதோண்டுதல் போன்ற பணிகளில் ஈடுபட்டுள்ளவர்கள் அந்த நடைபாதையில் நடந்து செல்லக்கூடியவர்களுக்கு அதனுல் ஆபத்து நேராதவாறு இருக்க உரிய கவனத்தோடு பணியாற்ற வேண்டும். அந்த நடைபாதை யில் கண்பார்வையற்றவர் செல்லக்கூடும் என்று அவர்கள் முன்னறிந்திருந்தாலோ, முன்னறிய வேண்டியதாகக் கருதப் பட்டாலோ அவர்களுக்கு எந்த ஆபத்தும் நேராதவாறு தகுந்த முறையில் எச்சரிக்க வேண்டும். கண்பார்வை உள்ளவர்க்குத் தரப்படும் சாதாரண எச்சரிக்கை குருடர்களுக்குப் போதாது. குருடர்களுக்கு ஆபத்து ஏற்படாமல் காக்க அவர்கள் உணர்ந்து கொள்ளக் கூடிய முறையில் அதிகப்படியான எச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இவ் வழக்கில் கண்பார்வையற்ற வாதி கையில் ஊன்றுகோலுடன் இலண் டன் புறநகர்ப் பகுதியில் அவன் வேலை செய்யும் இடத்திற்குச்

செல்வதற்காகச் சாலையின் நடைபாதையில் சென்றுகொண்டிருந்தான். எதிர்வாதி மின்சார வாரியத்தின் பணியாள்கள், அவர்களுக்குச் சட்டத்தின்படி அளிக்கப்பட்டிருந்த அதிகாரத்தின்படி அதில் குழி தோண்டியிருந்தனர். அதன் முன்பாக நீண்ட கைப்பிடி கொண்ட சுத்தியினை வைத்திருந்தனர். சுத்தியின் தலைப்பகுதி நடைபாதையின் குறுக்கே கிடத்தப்பட்டிருந்தது. கைப்பிடியோ நிலமட்டத்திற்குமேல் இரண்டடி உயரத்தில் அங்கு இருந்த இரும்புக் கிராதிமேல் வைக்கப்பட்டிருந்தது. அது தடுக்கியதால் வாதி குழியில் விழுந்து காயமடைய நேரிட்டது. அப் பகுதியில் 258 குருடர்கள் பதிவு செய்துகொண்டிருந்தனர். எனவே, அப் பள்ளத்தின் அருகில் குருடர்கள் செல்லக்கூடும் என்பதை எதிர்வாதி அறிந்திருக்க வேண்டும். அந்த இடத்தில் குருடர்கள் வரமாட்டார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. எனவே, வாதிக்குத் தகுந்த பாதுகாப்புத் தராதது கவனமின்மையாகும் என்று தீர்ப்பளிக்கப்பட்டது. பீப்பாய் போன்ற நகர்த்திச் செல்லக்கூடிய சாதனங்களைப் பள்ளத்தைச் சுற்றி நடைபாதையின் குறுக்கே வைத்திருந்தால் அது சுமார் 2 அடி உயரமுள்ள வேலியாக அமைந்திருக்கும். ஆனால், எதிர்வாதி வைத்திருந்த சுத்தியோ தரையிலிருந்து ஒரு சில அங்குல உயரத்தில்தான் இருந்தது. குருடர்களுக்கு அது போதிய பாதுகாப்பு ஆகாது. எதிர்வாதியின் செயலால் வாதிக்கு ஏற்படக்கூடிய ஊறு கடுமையானதா என்பதையும் நீதிமன்றம் கருதிப் பார்க்கவேண்டும் என்று பாரீஸ் v. ஸ்டெப்னி பரோ கவுன்சில் (Paris v. Stepney Borough Council) வழக்கில் சொல்லப்பட்டது. இவ் வழக்கில் எதிர்வாதியிடம் பணியாற்றிய வாதிக்கு ஒரு கண்ணில் மட்டும் பார்வை இருந்தது. வாதிக்குக் கொடுக்கப்பட்ட வேலையின் காரணமாகக் கண்ணுக்கு ஆபத்து ஏற்பட வாய்ப்பு இருந்தாலும் இரு கண்ணிலும் பார்வையுள்ள ஒரு தொழிலாளிக்குக் கண் பாதுகாப்புக் கவசம் தரவேண்டிய அளவுக்கு அது ஆபத்தான பணியன்று. ஒரு கண்ணில் மட்டும் பார்வை இருந்த வாதிக்குக் கண் பாதுகாப்புக் கவசம் வழங்கப்படவில்லை. வேலை செய்யும் போது வாதிக்கு விபத்தேற்பட்டுக் கண்ணில் கடுமையான காயம் ஏற்பட்டதால் அவர் பார்வையை இழந்தார். வாதிக்கு ஒரு கண்ணில் பார்வை இல்லை என்பதை அறிந்திருந்த எதிர்வாதி அவனுக்குக் கண் பாதுகாப்புக் கவசம் வழங்கியிருக்க வேண்டும். அவ்வாறு அவர்கள் செய்யத் தவறியதால் வாதிக்கு ஏற்பட்ட விபத்தில் அவர் முழுக் குருடரானார். இரண்டு கண்ணும் கொண்டவனுக்கு இந்த விபத்தினால் ஒரு கண்தான் போயிருக்கும், ஆனால், வாதிக்கு அதைவிடப் பெரிய ஆபத்து இருந்தது. அதாவது, விபத்தின் விளைவாக அவர் முழுக்குருடரானார்.

ஆபத்து ஏற்படாமல் தடுக்கத் தகுந்த கவனத்தோடு இருக்க வேண்டிய கடமையை ஒவ்வொரு தொழிலாளியின்பாலும் பணித் தலைவர் காட்டவேண்டும். நல்லறிவும் முன்யோசனையும் உள்ள பணித்தலைவர் ஒரு குறிப்பிட்ட தொழிலாளிக்கு விபத்து நிகழத்தக்கதுதானு என்பதைக் கருதிப் பார்ப்பதோடு, அவ்வாறு விபத்து ஏற்பட்டால் அதன் விளைவுகள் எந்த அளவு கடுமையான தாக இருக்கக்கூடும் என்பதையும் கருதிப் பார்க்க வேண்டும். அதிக ஆபத்துள்ள பணியாக இருந்தால், ஒரு கண் உள்ளவருக்கு மட்டுமன்றி, இரு கண் உள்ளவருக்கும் கவசம் வழங்கப்பட வேண்டும்.

ஆபத்தின் அளவு எவ்வளவு என்பதைத் தீர்மானிக்கும்போது கவனம் காட்டப்பட வேண்டிய வாதியின் நிலையை முக்கியமாகக் கருத வேண்டும். வாதி நுண்ணறிவற்றவனாகவோ உடல் ஊன முற்றவனாகவோ இருக்கலாம். இந்த இயலாமையின் காரணமாக அவனுக்கு ஏற்படக்கூடிய ஆபத்தின் அளவு அதிகமாக இருக்கும். எனவே, ஆபத்தின் அளவை நிர்ணயிக்கும்போது அவனது இயலாமையை எதிர்வாதி அறிந்திருந்தாரா என்பதைக் கருத்தில் கொள்ளவேண்டும். ஆனால், வாதியின் இயலாமை எதிர்வாதிக்குத் தெரிந்திருக்க வழியில்லை என்றால் அவ்வாறு செய்யத் தேவை இல்லை.

ஆயினும், சில சூழ்நிலைகளில் பணியாளின் தனிப்பட்ட மென்னய உணர்ச்சி அல்லது எளிதில் பாதிக்கப்படக்கூடிய தன்மையின் காரணமாக அவனுக்கு ஊறு ஏற்படலாம். ஆயினும், இதை அவனது பணித்தலைவன் அறிந்திருந்தும், அவனுக்குத் தரக்கூடிய ஒரே வேலையை அவன் தொடர்ந்து செய்ய அனுமதிப்ப தால் மட்டும் அவன் கவனமின்மைக்குப் பொறுப்பாளியாக மாட் டான். விதர்ஸ் v. பெர்ரி செயின் கம்பெனி (Withers v. Perry Chain Co.)வழக்கில் வாதி வேலை செய்யும்போது ஈரப்பசை உள்ள மெழுகு பொருளைக் கையாள நேர்ந்ததால் அவருக்குத் தோல் அழற்சி ஏற்பட்டது. எனவே, அதைக் கருதி அவர்களது தொழிற் சாலையிலுள்ள மிகவும் ஈரம் குறைந்த வேலையொன்றினை அவளுக் குத் தந்திருந்தனர். அவ் வேலையை அவள் மறுப்பெதுவும் கூறாமல் ஏற்றுக்கொண்டாள். ஆயினும், அவளுக்கு மீண்டும் தோல் அழற்சி ஏற்பட்டது. தோல்நோய் வரக்கூடிய தனிப்பட்ட உடல் இயல்பு அவளுக்கு இருந்ததை அறிந்திருந்த எதிர்வாதிகள் அவளுக்கு அந்த நோய் ஏற்படக்கூடிய ஆபத்துள்ள வேலையைச் செய்ய அனுமதித்திருக்கக்கூடாது என்று அவள் வாதிட்டாள்.

அவரை வேலையைவிட்டு விலக்குவது நீங்கலாக, அவளுக்குப் பாதுகாப்புத் தரத் தங்களால் இயன்றதனைத்தும் பணித்தலைவர்கள் செய்துவிட்டனர். எனவே; அவர்கள் பொறுப்பாளிகள் ஆகமாட்டார்கள் என்று தீர்ப்பளிக்கப்பட்டது. அவள் சிறிய ஆபத்தொன்றுக்கு உள்ளாக அனுமதிப்பதைவிட அவரை வேலையை விட்டு விலக்கப் பணித்தலைவர்கள் கடமைப்பட்டவர்கள் என்று கூறுவதை ஏற்கமுடியாது. ஒரு பணியாள் தாமே விரும்பி ஏற்றுச் செய்யும் பணியைச் செய்யாமல் தடுக்க வேண்டிய கடமை பணித்தலைவருக்கு இல்லை. எனவே, பணியாள்தான் அவ் வேலையைச் செய்வது தேவைதானா? விரும்பத்தக்கதுதானா? என்பதை முடிவு செய்துகொள்ள வேண்டும்.

எதிர்வாதி எந்த அளவுக்குக் கவனம் காட்டவேண்டும் என்பதைத் தீர்மானிக்க அவர் நோக்கம் என்ன என்பதையும் அவர் அடைய விரும்பும் பொருளின் முக்கியத்தையும் அறிய வேண்டும். ஒருவனால் இயலக்கூடிய கவனம் அனைத்தும் அவன் காட்டத் தேவை இல்லை. குறிப்பிட்ட சில சூழ்நிலைகளில் நல்லறிவுள்ள மனிதன் காட்டக்கூடிய கவனத்தை ஒருவன் காட்டினால் போதும். பொதுநலனைக் கருதிச் சில ஆபத்துகளை நாம் ஏற்றுக்கொண்டே ஆகவேண்டும்; இது தவிர்க்கமுடியாதது. இல்லையேல் பல்வேறு தொழில்களும், செயல்களும் நடைபெறமுடியாது. மணிக்கு 50 மைல் வேகத்தில் புகைவண்டியை ஓட்டுவதால் பல மரண விபத்துகள் ஏற்படுகின்றன. அதை மணிக்கு 10 மைல் வேகத்தில் ஓட்டினால் இத்தகைய விபத்துகள் ஏற்படாது என்பது உண்மையே. ஆயினும்; இவ்வாறு புகைவண்டியை ஓட்டுவதால் பாதுகாப்பு அதிகரித்தாலும், பொதுமக்களுக்கு மிகுந்த வசதிக்குறைவு ஏற்படும். மனிதவாழ்வு சகிக்க முடியாத அளவுக்கு முடங்கிவிடும். எனவே, நமது நோக்கங்களை—காரியங்களை நிறைவேற்றிக் கொள்ள சில அசாதாரணமான ஆபத்துகளையும் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். எனவே, புகைவண்டியின் வேகத்தை மணிக்கு 10 மைலாகக் குறைக்காததால் புகைவண்டிக் கம்பெனியினர் உரிய கவனம் காட்டத் தவறியதாகக் கொள்ளமுடியாது. ஆனால் இரவில் தன் வீட்டில் ஒரு நூலைப்படித்துக் கொண்டிருப்பவர் எரிச்சலோடு அந்த நூலைச் சன்னல் வழியாக வெளியே எறிந்து, அது சாலையில் சென்றுகொண்டிருப்பவன் மீது விழுந்து அவன் காயமுற்றால் அது நிகழக்கூடியதன்றென்று அவன் எதிர்வாதம் செய்ய முடியாது. தவிர, எதிர்வாதியின் நோக்கம் பொதுமக்கள் நலனுக்காக இல்லாமல் அவனுக்கு மட்டுமே முக்கியமானதாக இருந்தால் முதலில் சொன்ன கூற்றுப் பொருந்தாது. ஒரு குறிப்பிட்ட வேகத்தில் தீயணைக்கும் படையின் உந்து செல்வது கவனமின்மையாக இல்

லாமல் இருக்கலாம். ஆனால், அதே வேகத்தில் ஒரு தனிப்பட்டவர் காரில் செல்வது கவனமின்மையாகக் கருதப்படலாம்.

லேட்டிமர் v. ஏ. ஈ. சி. லிமிடெட் (Latimer v. A. E. C. Ltd.) வழக்கில், வழக்கத்துக்கு மாருனமுறையில் வீசிய புயலாலும், மழையாலும் எதிர்வாதியின் தொழிற்சாலையில் வெள்ளம் புகுந்தது. அங்கிருந்த ஓர் எண்ணெய்ப் பொருளோடு நீர் கலந்துவிட்டது. நீர் வடிந்த பின்னரும் தரையின் மேற்பரப்பில் எண்ணெய் படல மாகப் பரவி இருந்தது. அதனால் தரை வழுக்கியது. எதிர்வாதி அந்த எண்ணெய்ப் பசையைப் போக்க மரத்தூளைத் தரையில் கொட்டினார். ஆயினும் போதிய அளவு மரத்தூள் இல்லாததால்சில பகுதிகளில் எண்ணெய்ப்பசை அப்படியே இருந்தது. எதிர்வாதி யின் தொழிற்சாலையில் பணியாற்றிய வாதி அதில் வழுக்கி விழுந்து காயமுற்றார். அவர் எதிர்வாதியின்மேல் வழக்கிட்டு இந்த ஆபத்து முழுவதுமாக நீங்கும் வரையில் முன்னெச்சரிக்கையாக எதிர்வாதி அந்தத் தொழிற்சாலையை மூடிவைத்திருக்க வேண்டும் என்று கூறினார். ஆனால், இவ்வாறு வழுக்கும் தரையால் ஏற்பட்ட ஆபத்து 4000 தொழிலாளர்களுக்குமேல் வேலை செய்யும் அந்தத் தொழிற்சாலையை மூடிவைக்கவேண்டிய அளவுக்குப் பெரியதன்று என்று பிரபுக்கள் சபை கருதியது. எதிர்வாதிகள் கவனத்தோடு நடந்துகொண்டதாகவே நீதிமன்றம் கூறியது.

எதிர்வாதி கவனமின்றி இருந்தாரென நிரூபித்தால் மட்டும் போதாது. அவருக்கு வாதியின்பால் கவனம் காட்டவேண்டிய கடமை இருந்தது என்றும் நிரூபிக்கவேண்டும். எனவே, எதிர் வாதி வாதியல்லாத வேறு நபர்களுக்குக் கவனம் காட்டக் கடமைப் பட்டிருந்தால், எதிர்வாதியின் செயலால் வாதிக்கு ஊறு நேர்ந் தாலும் அவன் வழக்கிடமுடியாது. வெல்லர் அண்டு கம்பெனி v. ஃபூட் அண்டு மவுத் டிசீஸ் ரிசர்ச் இன்ஸ்டிடியூட் (Weller & Co. v. Foot and Mouth Disease Research Institute) வழக்கில், கோமாரி நோய்பற்றி ஆராய்ச்சி செய்வதற்காக, தொற்று நச்சுக் கிருமியை ஆராய்ச்சிக் கழகம் இறக்குமதி செய்தது. அக் கிருமிகள் வெளியேறிச் சென்று கழகத்தின் அருகில் இருந்த கால் நடைகளுக்கு நோய் ஏற்படுத்தியது. சட்டப்படியான அதிகாரத் தின்படி அப்பகுதியிலிருந்த கால்நடைச் சந்தைகளை மூட உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இதன் விளைவாகக் கால்நடை ஏல விற்பனை செய்பவர்களாகிய வாதிகள் தாற்காலிகமாகத் தொழில் செய்ய முடியாமல் போயிற்று. இதனால் அவர்களுக்குப் பொருள் நட்டம் ஏற்பட்டது. இங்குக் கிருமிகள் வெளியேறிச் செல்வதன் மூலமாகக்

கால்நடைகளுக்கு ஆபத்து ஏற்படக்கூடுமென முன்னறிய வேண்டிய கடமை எதிர்வாதிக்குண்டு. ஆனால், வாதிக்குக் கால் நடைகளிலோ அவை ஏல விற்பனை செய்யப்படும் இடத் திலோ சொத்துரிமை நலன் எதுவும் இல்லாததால், எதிர்வாதி-கழகம் கவனமின்றி இருந்தாலும் வாதிக்குப் பொறுப்பாளியாக மாட்டார்கள் என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

பால்ஸ்கிராப் v. லாங் ஐலண்ட ரெயில்ரோட் கம்பெனி (Palsgraf v. Long Island Railroad Co.) வழக்கில் ஒரு பயணி கையில் ஒரு சிறு பெட்டியுடன் ஓடும் புகைவண்டியில் ஏற முயன் ருர். அவர் கீழே விழுந்துவிடும் நிலையில் இருந்ததால் எதிர்வாதி யின் பணியாள்களில் இருவர் அவருக்குதவ ஓடி வந்தனர்; அவர்களில் ஒருவர், பயணி வண்டிக்குள் போகப் பின்னலிருந்து தள்ளிவிடும்போது அப் பயணி கையில் வைத்திருந்த பெட்டியைக் கவனமின்றித் தட்டிவிட்டார். அது தவறி, இருப்புப் பாதையில் விழுந்தது. அப் பெட்டியில் வெடிமருந்து இருந்தது. பெட்டி சிறிய தாகவும் அதனுள் இருப்பது என்னவென்று அறிய முடியாமலும் இருந்தது. அப்பெட்டியினுள் வெடிமருந்து இருந்தது எதிர்வாதி யின் பணியாள்களுக்குத் தெரியாது. அதிலிருந்த வெடிமருந்து வெடித்ததால் ஏற்பட்ட அதிர்ச்சியில் புகைவண்டி நிலையத்தின் மறுமுனையில் அதாவது சுமார் 25 அடி தொலைவில் இருந்த எடையளக்கும் கருவிகள் சாய்ந்து அங்கிருந்த வாதியின்மேல் விழுந்தது. அதனால் வாதி காயமுற்றார். எதிர்வாதிகளின் பணி யாள்களின் கவனமின்மைக்காக எதிர்வாதிகளின்மேல் வழக்கிடப் பட்டது. இதை விசாரித்த அப்பீல் நீதிமன்றம் எதிர்வாதிகள் பொறுப்பாளிகளல்லர் எனத் தீர்ப்பளித்தது. எதிர்வாதிகளின் பணியாளின் நடத்தை பெட்டியை வைத்திருந்தவருக்குத் தீங் கிழைத்ததாகுமேயல்லாது தொலைவில் நின்றுகொண்டிருந்த வாதிக்கன்று. இந்தச் சூழ்நிலையில் வாதி நின்றுகொண்டிருந்த தொலைவில் உள்ளவருக்கு ஆபத்து ஏற்படுத்தும் அளவுக்கு அப்பெட்டி அமைந்திருந்தது என்று சொல்ல முடியாது. எதிர்வாதி யின் நடத்தை கவனமின்மையதாயினும் வாதிக்கேற்பட்ட ஆபத்தி லிருந்து அவனைக் காப்பாற்ற எதிர்வாதிக்குக் கடமை இல்லை. இது பெரும்பான்மையான நீதிபதிகளின் கருத்தாக அமைந்திருந்தது. உலகப் புகழ்வாய்ந்த நீதிபதி கார்டோஸோவின் தீர்ப்பில் அடங்கி யுள்ள பெரும்பான்மையினரின் கருத்துப்படி ஊறு நேரும் என்று எதிர்பார்க்க முடியாத வாதிக்கு எதிர்வாதி எவ்விதக் கடமையும் காட்டவேண்டியதில்லை.

இனி, எதிர்வாதி தமது கடமையிலிருந்து தவறியதால் வாதிக்கு ஊறு ஏற்பட்டிருக்க வேண்டும். அதாவது, வாதி தனக் கேற்பட்ட ஊறு எதிர்வாதியின் கவனமின்மையால் ஏற்பட்ட சேய்மையான விளைவன்று என்று நிரூபிக்கவேண்டும்.

39. செயலே புலப்படுத்துகின்றது
(Res ipsa loquitur)

எதிர்வாதியின் கவனமின்மையின் காரணமாகவே தனக்குக் காயம் ஏற்பட்டதென்று வாதியே மெய்ப்பிக்க வேண்டும். எதிர் வாதி தன்பால் காட்டவேண்டிய கடமையிலிருந்து வழுவியதன் விளைவாக ஏற்பட்டதே தனது காயம் என்று வாதியே காட்ட வேண்டும். இதுவே பொதுவான விதியாகும். எதிர்வாதி தான் கவனமின்றிச் செயல்படவில்லை யென்று நிரூபிக்கத் தேவையில்லை. ஆயினும், சில சூழ்நிலைகளில் எதிர்வாதி எந்தச்செயல் புரிந்ததால் தனக்குக் காயம் ஏற்பட்டதென வாதி அறிந்துகொள்ள முடியாமல் போகும். அப்போது மேற்கூறிய பொது விதியால் வாதிக்கு அல்லல் ஏற்படும். சில சமயங்களில் விபத்து ஏற்படக் காரணமாக இருந்த எதிர்வாதிக்கு மட்டுமே விபத்து உண்மையில் எப்படி ஏற்பட்ட தெனத் தெரிந்திருக்கும். அப்போது எதிர்வாதியின் கவனமின்மை யாலேயே விபத்தேற்பட்டதென வாதி நிரூபித்தல் எளிதன்று. இதைப்போன்ற சூழ்நிலைகளில் செயலே புலப்படுத்துகிறது என்னும் சான்றியல் விதி வாதிக்குத் துணைநிற்கும். விபத்தேற் பட்ட சூழ்நிலையை மட்டும் கருத்தில் கொண்டு பார்த்து, வேறு சான்று எதுவும் இன்றி, எதிர்வாதி கவனமின்றிச் செயல்பட்டான் என்று நாம் மேலோட்டமாக முடிவு செய்யலாம். இங்கு விபத்தே எதிர்வாதியின் கவனமின்மைக்குச் சான்றுகக் கருதப்படுகிறது. எனவே, வாதி விபத்து ஏற்பட்டதை மட்டும் நிரூபித்தால் போதும்; வேறெதுவும் நிரூபிக்கத்தேவை இல்லை.

ஸ்காட் *v.* லண்டன் மற்றும் செயின்ட் காதரின் டாக்ஸ் கம்பெனி (Scott *v.* London & St. Catherine Docks Co.) வழக்கில் சுங்க அலுவலர் ஆகிய வாதி தமது பணியாற்ற எதிர் வாதிக்குச் சொந்தமான சேமிப்புக் கிடங்குக்குச் சென்றார். அங்கு அவர் ஒரு கதவு வழியே வேறு ஒரு கதவுக்குச் செல்லும்போது

ஒரு சங்கிலியில் தொங்கவிடப்பட்டிருந்த ஆறு சர்க்கரை மூட்டைகள் அவர்மேல் விழுந்தன. எதிர்வாதி தன் சார்பாகச் சான்று கொணரவில்லை. இதன் அடிப்படையில் எதிர்வாதிகளின் பணியாள்களின் கவனமின்மை ஊகித்தறியப்பட்டது. இவ் வழக்கை விசாரித்த நீதிமன்றம் செயலே புலப்படுத்துகிறதென்னும் இவ் விதியைப் பயன்படுத்தும் நெறிமுறையைக் கூறியது.

(1) விபத்திற்குக் காரணமாக அமைந்திருந்த பொருள் எதிர்வாதி அல்லது அவருடைய பணியாளின் நிர்வாகத்திலோ கட்டுப்பாட்டிலோ இருக்க வேண்டும்.

(2) அப் பொருளைத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தவர் உரிய கவனத்தோடு இருந்திருந்தால் அந்த விபத்துச் சாதாரணமாக ஏற்படக் கூடியதன்று.

பிர்ன் v. போடில் (Byrne v. Boadle) வழக்கில் நெடுஞ்சாலையில் சென்றுகொண்டிருந்த ஒருவர்மீது எதிர்வாதியின் சேமிப்புக் கிடங்கின் சன்னல் வழியாக மாவுப்பீப்பாய் விழுந்து அவர் காயமுற்றார். இதனடிப்படையில் எதிர்வாதி கவனமின்றி இருந்தார் என்று ஊகிக்கப்பட்டது. இதைப்போலவே ரொட்டிக்குள் கல் கிடந்தபோதும் (சாப்பரோனியர் v. மேசன்), எதிர்வாதியின் இருப்புப்பாதை பாலத்திலிருந்து செங்கல் விழுந்தபோதும் (கீர்னி v. லண்டன் பிரைட்டன் ரெயில்வே கம்பெனி) காயமுற்ற வாதிகள் இவ் விதியைப் பயன்படுத்த முடிந்தது. மற்றும் பழுதுபட்ட கருவிகளாலும், வண்டிகளாலும், இயந்திரங்களாலும் ஏற்படும் விபத்துகளுக்கும், மோட்டார் கார் நடைபாதையில் ஏறியதால் ஏற்படும் விபத்திற்கும், புறப்படும்போது விமானம் மோதியதால் ஏற்படும் விபத்திற்கும் இவ் விதி பயன்படுத்தப்பட்டுள்ளது.

எதிர்வாதி விபத்தேற்படக் காரணமாக இருந்த பொருளைக் கட்டுப்படுத்தும் உரிமையும் வாய்ப்பும் உள்ளவராக இருந்தார் என்று மட்டும் வாதி நிரூபித்தால் போதுமானது. எதிர்வாதி உண்மையிலேயே அப்பொருளின்மேல் கட்டுப்பாடு செலுத்தினார் என்றோ அதை நிர்வகித்தார் என்றோ வாதி நிரூபிக்கத் தேவையில்லை. பார்க்கர் v. மில்லர் (Parker v. Miller) வழக்கில், 'அ' என்பவர் கடன் கொடுத்திருந்த காரை 'ஆ' என்பவர் தம் வீட்டுக்கு வெளியே விட்டிருந்தபோது, அது மேட்டிலிருந்து கீழிறங்கி ஓடி, 'இ' என்பவரின் வீட்டுக்குச் சேதம் ஏற்படுத்தியது. 'இ' என்பவர் 'அ' என்பவர்மேல் கவனமின்மைக்காக வழக்கிட்டதில் செயலே புலப்படுத்துகிறது என்னும் இவ்விதியைப் பயன்படுத்தலாம் என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

கீ v. மெட்ரோபாலிடன் ரெயில்வே கம்பெனி (Gee v. Metropolitan Rly., Co.,) வழக்கில், ஒரு நிலத்தடியிற் செல்லும் வண்டி, புகைவண்டி நிலையத்தை விட்டுச் சென்ற சிறிது நேரங்கழித்து, வாதி பின்புறக் கதவின்மேல் மெல்லச் சாயவே, கதவு படீரென்று திறந்துகொண்டதால் அவர் கீழே விழ நேரிட்டது. இதைக் கொண்டு எதிர்வாதிகள் கவனமின்றியிருந்தனர் என்பதற்குப் போதிய சான்று இருந்ததாகக் கருதப்பட்டது. ஆனால், ஈசன் v. எல். & என். ஈ. ரெயில்வே (Easson v. L. & N. E. Rly.) வழக்கில் நான்கு வயதுச் சிறுவனுகிய வாதி புகைவண்டி இறுதியாகப் போய்ச் சேரும் இடத்திலிருந்து ஏழு மைல் தொலைவில் வந்து கொண்டிருக்கும்போது, புகைவண்டியின் கதவு வழியே வெளியே விழுந்தான். அப்போது புகைவண்டி எதிர்வாதிகளின் முழுமை யான கட்டுப்பாட்டில் இருந்ததென்று சொல்ல முடியாது. எனவே, எதிர்வாதிகள் பொறுப்பாளிகளாகக் கருதப்படவில்லை. எடின்பரோ விலிருந்து லண்டன்வரை செல்லும் விரைவுப் புகைவண்டியின் கதவுகள் பயணகால முழுவதும் எதிர்வாதிகளின் தனிக்கட்டுப் பாட்டின்கீழ்த் தொடர்ந்து இருந்ததென்று சொல்ல முடியாது. புகைவண்டி நிலையத்தைவிட்டுப் புகைவண்டி புறப்படுமுன்னர்ப் புகைவண்டிப் பெட்டியின் கதவுகள் சரியாகத் தாளிடப்பட்டு விட்டனவா என்று பார்க்க வேண்டியது எதிர்வாதிகளின் கடமை யாகும். ஆயினும் வண்டி சென்றுகொண்டிருக்கும்போது, பயணி கள் குறுக்கும் நெடுக்குமாக நடந்துகொண்டும், வண்டி நிற்கும் இடங்கள் தோறும் கதவுகளைத் திறந்து பெட்டியில் ஏறிக்கொண்டும் இறங்கிக்கொண்டும் இருப்பார்கள். எனவே, புகைவண்டியின் கதவுகள் திறந்துகொள்ளக் காரணமாயிருந்தது எதிர்வாதிகளாகிய புகைவண்டி கம்பெனியின் பணியாள்களது கவனமின்மைதான் என்று அறுதியிட்டுக் கூற முடியாது.

நடந்த நிகழ்ச்சியைக் கொண்டு பார்க்கும்போது, எதிர்வாதி யின் கவனமின்மையால்தான் விபத்து ஏற்பட்டதென உறுதியாகச் சொல்லமுடியாத நிலை இருப்பின் எதிர்வாதி பொறுப்பாளியாக மாட்டார். எனவே, ஒரு விபத்திற்கு இரண்டு முரண்பாடான விளக்கங்கள் தரமுடியுமானால் எதிர்வாதிக் கெதிராக இந்த ஊகம் எழாது. வேக்லின் v. லண்டன் & சவுத் வெஸ்டர்ன் ரெயில்வே கம்பெனி (Wakelin v. London & South Western Rly. Co.) வழக்கில், எதிர்வாதி புகைவண்டி கம்பெனியின் கடப்பு வாயில் அருகே ஒருவருடைய உடல் கிடந்தது. இரவு நேரத்தில் சென்ற புகைவண்டி மோதியதால் அவர் மாண்டார். அவ்வண்டியின் முன் விளக்குகள் சரிவர இயங்கின. ஆனால், கடப்பு வாயிலருகே வண்டி வரும்போது ஓட்டுநர் எச்சரிக்கை ஒலியைக் கொடுக்கத்

தவறிவிட்டார். இறந்துபோனவரின் மனைவி வழக்கிட்டதில் இந்தச் சூழ்நிலைகளைக்கொண்டு எதிர்வாதியின்கவனமின்மையால் தான் விபத்து ஏற்பட்டது என்று ஊகிக்க முடியாது என்று நீதி மன்றம் தீர்ப்பளித்தது. இருப்புப்பாதையில் இருக்கும்போது அவன் புகைவண்டியில் அடிபட்டிருக்கலாம். இது நிரூபிக்கப்பட்டதாக வைத்துக்கொண்டாலும், புகைவண்டிதான் அவன்மேல் மோதி யது என்றும் அவன் புகைவண்டியில் போய்விழவில்லை என்ப தற்கும் என்ன சான்று இருக்கிறது ?

இந்திய உச்ச நீதிமன்றம் ஸ்டேட் ஆஃப் பஞ்சாப் v. மாடர்ன் கல்டிவேட்டர்ஸ் (State of Punjab v. Modern Cultivators) வழக்கில் பஞ்சாப் மாநில அரசுக்குச் சொந்தமான கால்வாய் உடைப்பு எடுத்ததன் விளைவாக வாதியின் பயிர்களுக்கு ஏற்பட்ட சேதத்திற்கு பஞ்சாப் மாநில அரசு தீங்கீடு தரவேண்டும் என்று தீர்ப்பளித்தது. இவ் வழக்கில் செயலே புலப்படுத்துகிறது என்னும் கொள்கை பயன்படுத்தப்பட்டது. எதிர்வாதியின் நிர்வாகத்தில் கால்வாய்இருந்தது என்பதுஒப்புக்கொள்ளப்பட்டது கால்வாயைக் கவனிக்க வேண்டிய நிர்வாகத்தினர் உரிய கவனம் காட்டியிருப் பின் கால்வாயின் கரைகளில் உடைப்பு ஏற்பட்டிராது. எனவே, மேற்கூறிய செயலே புலப்படுத்துகின்றது என்னும் விதி பொருந் தும் என்றும், கால்வாயின் கரைகள் உடைப்பெடுத்ததைக் கொண்டு பார்க்கும்போது எதிர்வாதி கவனமின்றி இருந்தார் என முதல் நோக்கில் ஊகிக்கலாம் என்று நீதிபதிகள் கருதினர்.

மகீந்திரநாத் முகர்ஜி v. மாதுர்தாஸ் சதுர்புஜ் (Mahendranath Mukkerjee v. Mathurdas Chathurpuj) வழக்கில், நெடுஞ் சாலையை ஒட்டி அமைந்திருந்த திரைப்பட அரங்கில் உரிமையாள ராகிய எதிர்வாதி அவருடைய வீட்டின் கூரையின்மேல் பலகை யில் ஒரு விளம்பர அறிவிப்பை மாட்டியிருந்தார். அது சாலையில் தீட்டிக்கொண்டிருந்தது. அது சாலையில் சென்றுகொண்டிருந்த வாதியின்மேல் விழுந்து அவர் காயமுற்றார். இவ் வழக்கை விசாரித்த கல்கத்தா நீதிமன்றம் இவ் விதியைப் பயன்படுத்தி எதி வாதி பொறுப்பாளியாவார் என்று தீர்ப்பளித்தது.

டில்லி முனிசிபல் மாநகராட்சி v சுபக்வந்தி (Municipal Corporation of Delhi v. Subhagwanthi) வழக்கில், டில்லியில் சாந்தினி சவுக் என்ற இடத்தில் உள்ள கடைவீதியில் நகர்மன்றக் கட்டடத்திற்கு எதிரில் அமைந்திருந்த மணிக்கூண்டு இடிந்து விழுந்ததால் பலர் மாண்டனர். மணிக்கூண்டு மாநகராட்சிக்குச் சொந்தமானது. அது அவர்கள் நிர்வாகத்தில் இருந்தது. அது 80 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டது. கீழே விழுந்த மணிக் கூண்டுக் கட்டடத்தின் மேல்மாடிப் பகுதியைக் கட்டப் பயன்

படுத்திய காரையைக்கொண்டு பார்க்கும்போது, அது 40 முதல் 45 ஆண்டுகள் வரைதான் நிலைக்கக்கூடியது என்று தெரிய வந்தது. இந்தச் சூழ்நிலைகளைக் கருத்தில்கொண்டு பார்க்கும் போது எதிர்வாதிகள் கவனமின்றி இருந்ததாகவே ஊகிக்கலாம் என உச்ச நீதிமன்றம் கருதியது. எதிர்வாதிகள் தாங்கள் கவன மின்றியிருக்கவில்லை என்று நிரூபிக்கத் தவறியதால் பொறுப்பாளி களாகக் கருதப்பட்டனர்.

எதிர்வாதியின் கட்டுப்பாட்டில் உள்ள மோட்டார்க்கார் சாலை யில் ஓடும்போது, காரணமின்றிப் பாதையைவிட்டு ஓடினாலோ, தலைகீழாகக் கவிழ்ந்தாலோ வாதிக்குக் காயம் ஏற்படலாம். இந்த முறையில் விபத்து ஏற்பட்டதே எதிர்வாதியின் கவனமின் மைக்குச் சான்றாகக் கருதப்படும். கோபால்டு மோட்டார் சர்வீஸ் லிமிடெட் v. வேலுசாமி (Gobald Motor Service Ltd. v. Velusamy) வழக்கில், அப்பீல்தாரருக்குச் சொந்தமான பேருந்து சாலையைவிட்டு விலகி ஓடி, அருகில் இருந்த வடிகாலுக்குப் போடப் பட்டிருந்த கல்லைப் பெயர்த்தெடுத்து, பின்னர் 25 அடி தொலைவி லிருந்த ஒரு புளிய மரத்தின்மீது மோதி, அதன் பட்டைகளை உரித் தெடுத்துவிட்டது. அம் மரத்தைத் தாண்டிச் சிறிது தூரம் ஓடித் தான் பேருந்து நின்றது. இவ் வழக்கில் பலருக்குக் காயம் ஏற் பட்டது. ஒருவர் மாண்டு போனார். இந்த வழக்கில் அமைந்த சூழ்நிலைகளிலிருந்து ஓட்டுநரின் கவனமின்மையால்தான் விபத் தேற்பட்டதென ஊகம் எழுந்துள்ளதாக இந்திய உச்சநீதி மன்றம் கருத்துத் தெரிவித்தது. இவ் வழக்கில் அப்பீல்தாரர்கள் பேருந்தின் பின்பகுதியில் உள்ள மையத்தாழ் திடீரென்று உடைந்ததால்தான் இவ் விபத்து ஏற்பட்டதென்று வாதிட்டனர். நீதிமன்றம் இதை விபத்தேற்பட்ட காரணமாக ஏற்றுக்கொள்ளாமல் அவர் பொறுப்பாளிகளாவர் என்று தீர்ப்பளித்தது.

செயலே புலப்படுத்துகின்றது என்ற இவ் விதி நிரூபிக்க வேண்டிய பொறுப்பு அல்லது சுமையை மட்டுந்தான் வாதியிட மிருந்து எதிர்வாதிக்கு மாற்றுகிறது. அதாவது, வாதி கவனமின் மையை நிரூபிப்பதற்குப் பதிலாக எதிர்வாதி தான் கவனமின்றி இருக்கவில்லை என்று நிரூபிக்க வேண்டும் என்று கூறுகிறது. கவனமின்மையாகத் தோன்றும் நிகழ்ச்சி எதிர்வாதி தன் சக்திக்கு அப்பாற்பட்ட காரணங்களால் ஏற்பட்டதென்று நிரூபித்தால் அவன் பொறுப்பிலிருந்து தப்பலாம். நாகமணி v. சென்னை மாநகராட்சி (Nagamani v. Corporation of Madras) வழக்கில், மாநகராட்சியால் நடைபாதையில் வைக்கப்பட்டிருந்த ஒரு

இரும்புத்தூண் அறிய முடியாத் ஏதோ ஒரு காரணத்தால் சாய்ந்து கீழே விழுந்ததால் சாலையில் சென்றுகொண்டிருந்த ஒருவருக்குத் தலையில் காயம் ஏற்பட்டு இறந்துவிட்டார். இவ் வழக்கில் மாநகராட்சி கவனமின்றி இருந்ததாக ஊகிக்க வேண்டும் என்று வாதிடப்பட்டது. ஆயினும் மாநகராட்சி, இந்த இரும்புத்தூண் 30 ஆண்டுகளுக்கு முன்பாக வைக்கப்பட்டதென்றும், அதன் ஆயுட்காலம் 50 ஆண்டுகள் என்றும், அது நிலத்துக்கடியில் மூன்றடி ஆழத்திற்கு இறக்கப்பட்டது என்றும், அது சாயாமல் இருக்கச் சிமென்ட் சுவர் கட்டி நன்கு இறுக்கமாகப் பொருத்தப் பட்டதென்றும், விபத்து ஏற்பட்டதற்கு ஒரு மாதத்திற்கு முன்னர் அது சோதிக்கப்பட்டபோது ஆபத்து எதுவும் இருப்பதாகத் தெரிய வில்லை என்றும் வாதிட்டது. இதை நீதிமன்றம் ஏற்றுக்கொண்டு மாநகராட்சி கவனமின்றி இருந்திருக்கவில்லை என்று தீர்ப் பளித்தது.

40. தற்கவனமின்மை
(Contributory Negligence)

எதிர்வாதி கவனமின்றி நடந்துகொண்டதால் வாதிக்குக் காயம் ஏற்பட்டதால் அதற்கு எதிர்வாதி பொறுப்பாளியாவார் என்று கண்டோம். ஆனால் சில சமயங்களில் வாதிக்கு ஏற்பட்ட காயம் எதிர்வாதியின் கவனமின்மையால் மட்டும் ஏற்பட்டதென்று சொல்லமுடியாது. வாதியின் கவனமின்மையும் சேர்ந்து வாதிக்குக் காயம் ஏற்படுத்தியிருக்கலாம். அதாவது எதிர்வாதி கவனமின்றி நடந்துகொண்டிருந்தாலும், வாதியும் கவனம் காட்டத் தவறி இருக்கலாம். வாதி உரிய கவனம் காட்டித் தம்மைக் காத்துக் கொள்ளத் தவறிவிட்டார் என்று நிரூபித்தால் இயற்றுச் சட்டப்படி அவர் தீங்கீடு பெறமுடியாது. வாதியின் கவனமின்மையை நாம் தற்கவனமின்மை என்கின்றோம். வாதியின் தற்கவனமின்மையை நல்ல எதிர்வாதமாக நீதிமன்றம் கருதியது. எனவே, கவனமின்றி நடந்துகொண்ட வாதி. கவனமின்றி நடந்துகொண்ட எதிர்வாதி யிடம் தீங்கீடு பெறமுடியாது.

பட்டர்ஃபீல்டு v. ஃபாரஸ்டர் (Butterfield v. Forrester)வழக்கில் எதிர்வாதி முறையின்றி டெர்பியிலுள்ள ஒரு நெடுஞ்சாலையின் குறுக்கே போக்குவரத்துக்கிடையூருக ஒரு கழியை வைத்திருந்தார். ஓர் ஆகஸ்ட் மாதத்தில் மாலை நேரத்தில் மெழுகுவர்த்தி விளக் கேற்றத் தொடங்கும் வேளையில், அந்தச் சாலையில் குதிரைமீது ஏறி விரைவாகச் சவாரி செய்துகொண்டிருந்த வாதி கழி தடுக்கி, குதிரையிலிருந்து தூக்கியெறியப்பட்டுக் கீழே விழுந்து காய மடைந்தார். அப்போது நல்ல வெளிச்சம் இருந்தது. நூறு கெஜ தூரத்தில் ஒளியிருப்பது புலப்படும்படியாகப் போதிய வெளிச்சம் அப்போது இருந்தது. எதிர்வாதி கவனமின்றி நடந்துகொண் டிருந்தாலும் வாதி உரிய கவனத்தோடு நடந்துகொண்டிருந்தால் விபத்தைத் தவிர்த்திருக்க முடியும். எனவே, வாதியின் வழக்கிற்கு ஆதாரம் இல்லையென்று தீர்ப்பளிக்கப்பட்டது. வழக்கில் வாதி

வெற்றியடைய வேண்டுமானால் எதிர்வாதியின் கவனமின்மையால் சாலையில் கழி கிடந்ததென்றும், வாதி தமக்கு ஆபத்து ஏற்படாமல் இருக்க உரிய கவனத்தோடு நடந்துகொண்டார் என்றும் நிரூபிக்க வேண்டும்.

இந்த விதியினால் வாதிக்கு மிகுந்த இன்னல் ஏற்பட்டது. விபத்து ஏற்படும்போது வாதி, எதிர்வாதி ஆகிய இருவர் நிலையிலும் வேறுபாடு இருக்கலாம். வாதிக்கு விபத்தேற்பட எதிர்வாதியின் கவனமின்மையே முதன்மையான காரணமாக இருக்கலாம். ஆனால், வாதி ஒருசிறிது கவனமின்றி இருந்திருப்பினும், வழக்கில் அவன் தோல்வியுறும் நிலை இருந்தது. எனவே, நீதிமன்றங்கள் தற்கவனமின்மை என்னும் எதிர்வாதத்திற்கு இறுதி வாய்ப்பு விதி (Last opportunity rule) என்னும் மாற்றத்தைக் கொண்டுவந்தன. இறுதி வாய்ப்புவிதி என்ற இச் சொற்றொடரை முதலில் பயன் படுத்தியவர் சால்மண்ட் ஆவார். இனி இந்த விதியின் தன்மையைப்பற்றிச் சுருக்கமாகக் காண்போம். வாதி, எதிர்வாதி ஆகிய இருவருமே கவனமின்றிஇருந்ததாக வைத்துக்கொள்வோம். ஆயினும் சாதாரணக் கவனத்தோடு நடந்துகொண்டிருந்தால் அந்த விபத்து ஏற்படாமல் தடுக்கக் கூடிய வாய்ப்பு யாருக்குப் பின்னர் அல்லது இறுதியாக இருந்ததோ அவரே விபத்திற்குப் பொறுப்பாளியாவார். அதாவது எதிர்வாதி கவனமின்றி இருந் திருக்கலாம். ஆனால், அந்தக் கவனமின்மையால் ஏற்படும் விளைவுகளைத் தடுப்பதற்கு ஒரு வாய்ப்புப் பின்னர் வாதிக்குக் கிடைத்திருந்து, அவர் சாதாரணக் கவனம் காட்டாமல் இருப்பின் எதிர்வாதியை அதற்குப் பொறுப்பாளியாக்க முடியாது. இதைப் போலவே விபத்தைத் தடுப்பதற்கான இறுதிவாய்ப்பு எதிர்வாதிக்கு இருந்திருப்பின் வாதிக்கு ஏற்பட்ட ஊறு அனைத்துக்கும் எதிர் வாதியே பொறுப்பாளியாவார்.

இவ் விதிக்கு விளக்கமாக அமைந்துள்ள வழக்கு, டேவிஸ் v. மேன் (Davies v. Mann) ஆகும். இவ் வழக்கில் வாதி தம்முடைய கழுதையின் முன்கால்களைக் கட்டி அதை நெடுஞ் சாலையில் கவனமின்றி விட்டுச் சென்றுவிட்டார். அப்போது அதிக வேகத்தில் தம்முடைய குதிரை வண்டியை ஓட்டிச் சென்று கொண்டிருந்த எதிர்வாதி அந்தக் கழுதையின்மீது மோதி அதைக் கொன்றுவிட்டார். வாதி கவனமின்றித் தம்முடைய கழுதையைச் சாலையில் நிறுத்திச் செல்லாமல் இருந்தால் இந்த விபத்து ஏற்பட்டிராது என்பது உண்மையே. ஆனால்; வாதி யின் கவனமின்மையால் உருவான இந்த விபத்தை உரிய கவனத் தோடு நடந்துகொள்வதன் மூலமாகத் தடுப்பதற்குப் போதிய

வாய்ப்பு எதிர்வாதிக்கு இருந்தது. கழுதை முறையின்றி நிறுத்தப் பட்டிருக்கலாம். ஆனால், ஆபத்து ஏற்படுத்தாத வேகத்தில் சாலையில் எதிர்வாதி தமது குதிரை வண்டியை ஓட்டியிருக்க வேண்டும். இது அவரது கடமையாகும். இத்தகைய கடமை இல்லையெனில், நெடுஞ்சாலையில் வைக்கப்பட்டுள்ள பொருள்கள் மீதும், சாலை ஓரங்களில் உறங்கிக்கொண்டிருப்பவர் மீதும் வண்டியை ஏற்றுவது நியாயமென்றாகிவிடும். இவ் வழக்கில் எதிர் வாதி கழுதையைப் பார்த்தாரா இல்லையா என்பது தெளிவாகக் கூறப்படவில்லை. அவர் சாலையில் நின்றுகொண்டிருந்த கழுதையைக் காலங்கடந்தே பார்த்திருக்கக் கூடும்.

இவ் வழகில் சொல்லப்பட்ட தீர்ப்புச் சரியென்று பிரபுக்கள் சபையினால் ரேட்லி *v.* எல். & என். டபிள்யூ ரெயில்வே (Radley *v.* L & N. W. Rly.) வழக்கில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இவ் வழக்கில் வாதி ஒரு சுரங்க உரிமையாளர். அவருக்குச் சொந்த மாக ஓர் எட்டடி உயரப் பாலமும் இருந்தது. அதன் உட்புற வழியாக எதிர்வாதிகள் நிலக்கரி ஏற்றிய வண்டிகளைச் செலுத்தினர். ஒரு நாள் ஒரு வண்டியில் மிக உயரமாக (சுமார் 11 அடி உயரம்) நிலக்கரியை ஏற்றியிருந்ததால் அது பாலத்தின் உள்ளே நுழைய முடியாமல் நின்றுவிட்டது. வண்டி நின்றுவிட்ட காரணத்தையறிய முற்படாமல் இயந்திரத்தை எதிர்வாதிகள் இயக்கிவிட்டு, மற்ற வண்டிகளைக் கொண்டு அதை முன்னுக்குத் தள்ளிப் பாலத்தின் அடியில் செலுத்த முற்பட்டனர். இதன் விளை வாகப் பாலம் இடிந்து விழுந்தது. வாதி அளவுக்கு மீறி வண்டியில் சுமையேற்றியிருந்தார். அந்த வண்டி சிறிது நேரம் அங்கு நின்று கொண்டிருந்தது. எனவே, என்ன நடக்கும் என்பதைச் சுரங்க உரிமையாளராகிய வாதி முன்னறிந்திருக்க முடியும். ஆனால் எதிர்வாதி சாதாரணக் கவனத்தோடு நடந்துகொண்டிருந்தால் இந்த விபத்தைத் தடுத்திருக்க முடியும். எனவே, வாதி கவன மின்றி இருந்திருப்பினும், அவர் எதிர்வாதியிடமிருந்து தீங்கீடு பெறமுடியும் என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

மேலே கூறிய இறுதி வாய்ப்பு விதியிலும் மாற்றம் செய்யப்பட வேண்டிய தேவை ஒரு வழக்கில் எழுந்தது. அந்த வழக்கு பிரிட்டிஷ் கொலம்பியா எலக்ட்ரிக் ரெயில்வே *v.* லோச் (British Columbia Electric Rly. *v.* Loach) ஆகும். இவ் வழக்கில், விபத்தில் இறந்தவர் குதிரை வண்டியில் பயணம் செய்தார். அந்த வண்டி கவனமின்றி மின்சார வண்டியோடும் இருப்புப்பாதையின் கடப்பு வாயிலைக் கடக்க ஓட்டப்படும்போது அவர் மின்சார வண்டி மோதி மாண்டார். இருப்புப் பாதையை வண்டி கடக்கும்

முன்னர், விபத்தில் மாண்டவர் மின்சார வண்டி ஏதேனும் அவ் வழியே வருகிறதா என்று பாராதது அவரது கவனமின்மை யாகும். ஆயினும், எதிர்வாதி இரயில்வண்டி நிறுவனமும் அளவு கடந்த வேகத்துடனும், பழுதடைந்திருந்த நிறுத்தும் கருவியுட னும் மின்சார வண்டியை ஓட அனுமதித்தது கவனமின்மை யாகும். மின்சார இரயில் வண்டியை ஓட்டுநர் ஒரு சாலை யின் மறைவிலிருந்து அந்த வண்டியின் குதிரைகள் வெளியே வரும்போது அவற்றை முதல் முறையாகப் பார்த்தார். அப்போது அவை இருப்புப்பாதையிலிருந்து 10 அல்லது 12 அடி தொலைவில் நெருங்கியிருந்தன. அவர் உடனே மின்சார இரயிலை நிறுத்தும் விசையை இயக்கினர். அப்போது அவர் கடப்பிலிருந்து 400 அடி தொலைவிலிருந்தார். நிறுத்தும் விசை நல்ல முறையில் இயங்கி யிருந்தால் மின்சார இரயில் வண்டியை 300 அடிக்குள்ளாகவே நிறுத்தியிருக்கலாம். ஆனால், உண்மையில் நிறுத்தும் விசை பழுதுபட்டிருந்ததால் வண்டி நில்லாமல் கடப்பு வாயிலைத் தாண்டித் தொடர்ந்து ஓடிக் குதிரை வண்டியை இடித்துத் தள்ளியது. இவ்வழக்கில் விபத்தில் இறந்தவர் கவனமின்றி நடந்துகொண்டிருந்தாலும் இரயில் வண்டி நிறுவனம் கவன மின்றி நடந்து கொண்டதாகக் கருதப்பட்டுப் பொறுப்பாளிகள் என்று தீர்ப்பளிக்கப்பட்டது. இவ்வழக்கில் வாதி கவனமின்றி இருந்ததாக எதிர்வாதி இரயில்வண்டி நிறுவனம் வாதிட்டது. ஆனால், நீதிமன்றம் இதை ஏற்கவில்லை. அவர்கள் கவனமின்மை யாலேயே அந்த விபத்தைத் தடுக்கும் இறுதி வாய்ப்பு அவர்களுக் கில்லாது போயிற்று. அவர்களது இயலாமைக்குக் காரணம் அவர் களே. அந்த மின்சார இரயில்வண்டி புறப்படும்போதே ஒழுங் காகவும், சீராகவும் இயங்கும் நிறுத்தும் விசையோடு புறப்பட் டிருந்தால் அவர்களுக்கு இறுதி வாய்ப்பு இருந்திருக்கும். இவ் வழக்கின் தீர்ப்பின்படி எதிர்வாதி கவனமின்றி இருந்திராவிட்டால் விபத்தைத் தடுக்கக்கூடிய இறுதி வாய்ப்பு அவனுக்கு இருந் திருக்குமெனின், அவனுக்கு இறுதி வாய்ப்பு உண்மையில் இருந்ததாகவே வைத்துக்கொண்டு வாதிக்கு இழப்பீடு தர வேண்டியிருக்கும்.

இனி தற்கவனமின்மை பற்றி எழுந்த வேறு சில வழக்குகளைக் காண்போம். டஃப் v. வார்மன் (Tuff v. Warman) வழக்கில் ஒரு நீராவிக்கப்பலின் ஓட்டுநர் தேம்ஸ் நதியில் வாதியின் படகில் மோதி அதை நீரில் மூழ்கடித்தார். அவர் அங்கு வாதியின் படகு இருப்பதைப் பார்க்கத் தவறிவிட்டார். இது அவரது கவனமின்மை யாகும். எனவே, அவர் பொறுப்பாளி என்று தீர்ப்பளிக்கப் பட்டது.

மதுரநாயகம்பிள்ளை v. மதுரை நகராட்சிக்குழு (Madura Nayagam Pillai v. Municipal Council, Madurai) வழக்கில் எதிர்வாதியின் நிலத்தில் ஆபத்தான நிலையிலிருந்த ஒரு தென்னை மரத்தின் அருகில் மதுரை நகராட்சி ஒரு மின்சாரக்கம்பத்தை நட்டிருந்தது. நகராட்சிக்கு அந்த மரத்தின் நிலையைப்பற்றித் தெரியும். ஆனால், அதை அகற்றுமாறு அறிவிக்கை கொடுக்கத் தவறிவிட்டனர். அந்த மரம் விழுந்து மின்சாரக் கம்பத்திற்குச் சேதம் ஏற்பட்டது. இவ் வழக்கில் சேதத்திற்குக் காரணம் அந்த மரத்தை அங்கிருந்து அப்புறப்படுத்தத் தேவையான நடவடிக்கையை நகராட்சி எடுக்காததேயாகும். இது அவர்களுடைய தற்கவனமின்மையாகும். எனவே, எதிர்வாதி பொறுப்பாளியல்ல ரென்று தீர்ப்பளிக்கப்பட்டது.

யூனியன் ஆஃப் இந்தியா v. சுப்ரியா கோஷ் (Union of India v. Supriya Ghosh) வழக்கில் பர்மாஷெல் எண்ணெய் நிறுவனத்தில் பணிபுரிந்த எஸ். கோஷ் என்பவர் ஒரு நாள் இரவு 8-45 மணிக்குத் தமது காரில் எதிர்வாதிக்குச் சொந்தமான இருப்புப் பாதைக் கடப்பு வாயிலைக் கடக்கும்போது, புகைவண்டி மோதியதால் படுகாயமுற்று மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும் வழியில் மாண்டார். அவரது காரும் சேதமடைந்தது. விபத்து நடந்தபோது கடப்பு வாயிலின் கதவு திறந்து வைக்கப்பட்டிருந்ததென்பதும், அதைப் பார்த்துக்கொள்ளக் காவலாளி யாரும் நியமிக்கப்படவில்லை என்பதும் எதிர்வாதியால் மறுக்கப்படவில்லை. மக்கள் கூட்டமாக இருக்கும் பகுதியில் அமைந்துள்ள கடப்பு வாயிலைப் புகைவண்டி வரும் முன்பாகத் தக்க நேரத்தில் மூடி வைக்க வேண்டிய கடமை எதிர்வாதிக்குண்டு. அதைத் திறந்து வைத்திருந்தவர் இருப்புப்பாதையைக் கடந்துசெல்ல மக்களை வரவேற்பதாகவே கருதவேண்டும். இவ்வாறு புகைவண்டி கடக்கும் இடங்களில் கதவு வைக்கப்பட்டிருந்து, அதைப் பார்த்துக்கொள்ளக் காவலாள் நியமிக்கப்படாமல் இருந்து, கதவு திறந்து வைக்கப்பட்டிருந்தால் வழிப்போக்கரும், வண்டிகளை ஓட்டுபவர்களும் புகைவண்டி வந்தாலும் அது கடப்பு வாயிலை வந்து அடைவதற்கு நேரம்பிடிக்கும் என்று கருதி விடுவர். எனவே கதவுகளைத் திறந்து வைத்திருந்து, அந்தச் சூழ்நிலையில் அவருக்கு விபத்து ஏற்பட்டால் அவர் தற்கவனமின்றியிருந்ததாகச் சொல்ல முடியாது. இந்த வழக்கில் புகைவண்டிக் கம்பெனி அந்தக் கடப்பு வாயில் தரைமட்டத்திற்குமேல் 14அடி உயரத்தில் இருந்தது ஆன்றும், புகைவண்டி தூரத்தில் வரும்போதே நன்கு தெரியும் என்றும், வானம் மேகங்கள் இல்லாமல் நிர்மலமாக இருந்தது என்றும், போதிய வெளிச்சம் இருந்ததென்றும், புகை

வண்டி இயந்திரத்தின் முகப்பு விளக்கு எரிந்துகொண்டிருந்தது என்றும், புகைவண்டியின் ஓசை நன்கு தெளிவாகக் கேட்டது என்றும் வாதிட்டு, மாண்டுபோனவர் தற்கவனமின்றியிருந்ததாலேயே விபத்து ஏற்பட்டது என்றும், எனவே தாங்கள் பொறுப்பாளியல்லர் என்றும் கூறினர்.

மாண்டவர் தமது காரினை ஓட்டுவதிலேயே முழுக்கவனமும் செலுத்தியிருப்பார். எனவே, அவர் புகைவண்டியின் விளக்கைப் பார்த்திருக்க முடியாது. அதன் ஓசையைக் கேட்டிருக்க முடியாது. அவற்றை அவர் கவனித்திருந்தால் அவர் தன்னுடைய உயிருக்கு ஆபத்தைத் தேடிக் கொண்டிருக்க மாட்டார். அவர் புகைவண்டி இயந்திரத்தின் முகப்பு விளக்கைக் கவனித்து இருந்தாலும் அவர் புகைவண்டியிருக்கும் தூரத்தைச் சரியாகக் கணக்கிட்டிருக்க முடியாது. தவிர, கடப்பு வாயிலின் கதவுகள் திறந்திருந்தபடியால் அவர் புகைவண்டி தொலைவில் இருந்ததாகவே எண்ணியிருக்க வேண்டும். எனவே அவர் தற்கவனமின்றி இருந்தார் என்று சொல்ல முடியாது. விபத்தேற்பட உண்மையான காரணம் புகைவண்டி வரும்போது கடப்பு வாயிலை மூடிவைக்கக் காவலாளியை எதிர்வாதிகள் நியமிக்காதது ஆகும். இதுவே அவர்கள் கவனமின்மையாகும். எனவே, இவ் வழக்கில் எதிர்வாதிகள் கவனமின்மைக்குப் பொறுப்பாளிகள் ஆவர் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

இறுதி வாய்ப்பு விதியிலும் குறைகள் இருந்தன. எடுத்துக் காட்டாக, முதலில் கவனமின்றி இருந்தவனுக்கு எந்தப் பொறுப்பும் இல்லை. பின்னர்க் கவனமின்றி இருந்தவரே இருவரும் கவனமின்றியிருந்ததன் விளைவாக ஏற்பட்ட இழப்பு அல்லது ஊறு அனைத்துக்கும் பொறுப்பாளியாகிறார். இது எப்படி நியாயமாகும்? கடலாண்மைச் சட்டம், 1911-ன்படி (Maritime Convention Act, 1911) இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட கப்பல்களின் தவறினால் ஒரு விபத்து ஏற்பட்டிருந்தால், அதனால் ஏற்படும் இழப்புக்கு ஒவ்வொரு கப்பலும் தான் எந்த அளவுக்குக் காரணமாய் இருந்ததோ அந்த அளவுக்குப் பொறுப்பேற்கவேண்டும். இச் சட்டத்தையொட்டி நிலத்தில் ஏற்படும் கவனமின்மைக்குப் பொறுப்பினை வரையறுக்கச் சட்டத்திருத்த (தற்கவனமின்மை) சட்டம், 1945-ல் [Law Reform (Contributory Negligence), Act, 1945] இங்கிலாந்தில் இயற்றப்பட்டது. இதன்படி வாதி, எதிர்வாதி ஆகிய இரு தரப்பினரும் கவனமின்றி இருந்திருப்பின், இழப்பீடு அவரவர் கவனமின்மையின் விகிதத்திற்கேற்றவாறு பகிர்ந்தளிக்கப்படும்.

அட்மிரால்டி கமிஷனர் v. எஸ்.எஸ். வொல்யூட் (Admiralty Commissioner v. S. S. Volute) வழக்கில், எதிர்வாதியின் கவன மின்மை வாதியின் கவனமின்மைக்குப் பின் ஏற்பட்டதாயினும், எதிர்வாதியின் கவனமின்மையே மோதலுக்குத் தனிப்பெருங் காரணம் என்று சொல்லத் தக்கவகையில் வாதியின் கவன மின்மையும் எதிர்வாதியின் கவனமின்மையும் காலத்தாலும், இடத்தாலும், சூழ்நிலைகளாலும் போதுமான அளவுக்குத் தனித் திருக்கவில்லை. எனவே, வாதியின் கவனமின்மையும் மோதல் ஏற்படக் காரணமாக அமைந்திருந்தது என்று பிரபுக்கள் சபை கூறியது. இவ் வழக்கில் 1911ஆம் ஆண்டுச் சட்டப்படி இழப்பீடு பகிர்ந்தளிக்கப்பட்டது.

சட்டத்திருத்தச் (தற்கவனமின்மை) சட்டத்தின்படி ஒருவனுக்கு ஓரளவு அவன் தவற்றின் விளைவாகவும், ஓரளவு மற்றொருவனின் தவற்றின் விளைவாகவும் இழப்பு ஏற்பட்டிருந்தால், அவன் தான் தவறு புரிந்துள்ளதன் காரணமாகவே மற்றவரிடமிருந்து தீங்கீடு பெறமுடியாத நிலை ஏற்படாது. ஆனால், அந்த இழப்பு ஏற்படக் காரணமாக இருந்த அவனது பங்கின் அளவுக்கு அவன் பெறக் கூடிய தீங்கீட்டுத் தொகை நியாயமான அளவுக்குக் குறைக் கப்படும். எனவே, வாதியும் எதிர்வாதியும் சம அளவில் தவறு புரிந்திருந்தால், அவன் பெறக்கூடிய தீங்கீட்டுத் தொகை 50% ஆகக் குறைக்கப்படும்.

வாதியின்பால் தற்கவனமின்மையிருந்ததா என்றறிய இயற்றுச் சட்ட விதிகளையே பின்பற்ற வேண்டும். வாதி தனக்குத் தீங்கு விளைவதைத் தடுக்கக் கவனம் காட்டவேண்டிய கடமை எதுவும் கொண்டுள்ளவன் என்று சொல்ல முடியாது. இவ்வாறு தன்னைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டிய கடமையை அவன் பிறரிடத்துக் கொண்டிருக்கவில்லை. இங்கு ஒருவர் நிறுவிப்பதெல்லாம் காய முற்றவன் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள உரிய கவனம் காட்டத் தவறினான் என்பதேயாகும், அதன் விளைவாகக் காயம் ஏற்பட அவனுடைய கவனமின்மையும் காரணமாக அமைந்துவிட்டது என்றே அவன் கூறுகிறான். மற்றும் வாதி தன்னைக் காத்துக் கொள்ள உரிய கவனம் காட்டத் தவறினான் என்றுமட்டும் நிறுவித் தால் போதாது. அவ்வாறு அவன் கவனமின்றி இருந்ததும் விபத் தேற்படக் காரணமாக இருந்தது என்றும் நிறுவிக்க வேண்டும். வாதி கவனத்தோடு இருந்திருந்தாலும் எதிர்வாதியின் கவன மின்மை விபத்தினை ஏற்படுத்தியிருக்கும் என்றும், வாதியின் கவன மின்மை விபத்தேற்படும்படியான காரணமாகச் செயல்படவில்லை யென்றும் நிறுவிக்க முடிந்தாலும், தற்கவனமின்மை என்ற எதிர்

வாதம் செய்யமுடியாது. எடுத்துக்காட்டாக, பழுதடைந்த நிறுத்துவிசை கொண்ட ஒரு மோட்டார் சைக்கிளில் வாதி சாலையில் செல்கிறான். அப்போது எதிர்வாதி ஒரு பறவையைக் குறி வைத்துச் சுடும்போது கவனமின்றி வாதியைச் சுட்டுக் காயத்தை ஏற்படுத்துகிறான். இங்கு வாதியின் கவனமின்மை விபத்தை ஏற்படுத்திய காரணமாகாது. எனவே, எதிர்வாதி தன்னுடைய கவனமின்மையால் ஏற்பட்ட காயத்திற்கு வாதியின் கவனமின்மையும் காரணமாக அமைந்திருந்தது என்று சொல்ல முடியாது.

புகைவண்டி ஓட்டுநர் எச்சரிக்கை ஒலி கொடுக்கத் தவறிய தன் காரணமாக ஒருவருக்கு விபத்தேற்பட்டது என்று வைத்துக் கொள்வோம். அந்த விபத்திற்குள்ளானவர் அந்த எச்சரிக்கை யொலி கொடுக்கப்பட்டிருந்தாலும், அதைக் கேட்க இயலாத முழுச் செவிடராக இருந்தால் எதிர்வாதி கவனமின்றி இருந்திருப்பினும் பொறுப்பாளியாக மாட்டார். இதற்கு மறுதலையாக வாதி மது விஞ்சக் குடித்துவிட்டுச் சாலையில் செல்கிறான் என்று வைத்துக் கொள்வோம். அது அவனுடைய கவனமின்மையாகும். ஆனால், அவனுடைய கவனமின்மை விபத்தேற்படுத்திய காரணமாக அமையாமல் போகலாம். அதாவது, வாதி குடித்திருந்தாலும், இல்லாவிட்டாலும் அவர்மேல் எதிர்வாதி காரை ஏற்றியிருப்பார் என்றால், தற்கவனமின்மை என்னும் பிரச்சினையே எழவில்லை. அப்போது எதிர்வாதியின் கவனமின்மை இயங்கிய இடத்தில் வாதி இருந்ததற்கு அவரது கவனமின்மை காரணமாக இருந்தது என்பதைத் தவிர வேறெதுவும் சொல்ல முடியாது. வாதிக்கேற்பட்ட இழப்பைப் பொறுத்தவரை அவன் தன்னைக் காத்துக் கொள்ள உரிய கவனத்தைக் காட்டத் தவறினான் என்பதை எதிர்வாதியே நிரூபிக்க வேண்டும். நாம் முன்பு குறப்பிட்டதுபோல ஒருவர் தம்மைப் பாதுகாத்துக் கொள்ளக் கவனத்தோடு இருக்க வேண்டும் என்று சட்டம் சொல்லவில்லை. ஒருவன் மலையேறுவது போன்ற ஆபத்து நிறைந்த எந்த வேலையையும் மேற்கொள்ளலாம். இது அவன் விருப்பத்தைப் பொறுத்தது. ஆனால், சட்டம் சொல்வ தெல்லாம், தன்னுடைய கவனம் இன்மையால் உருவான ஆபத் தொன்றினால் மற்றொருவனுக்குக் காயத்தை ஏற்படுத்தியவன், காயமுற்றவன் கவனமின்றியிருந்து அந்த ஆபத்தேற்பட வழி செய்தான் என்று வாதிடலாம் என்பதே.

ஜோன்ஸ் *v.* லிவாக்ஸ் க்வாரிஸ் லிமிடெட் (Jones *v.* Livox Quarris Ltd.) வழக்கில் வாதி எதிர்வாதியின் பணியாள். அவர் தமக்கிடப்பட்ட உத்தரவைமீறி ஒரு ட்ராக்ஸ்கவேட்டர் (Traxcavator) உந்தின் பின்புறம் இணைக்கப்பட்ட பெட்டியின்மேல் ஏறி

நின்றுகொண்டு பயணம் செய்தார். அவர் தாம் வேலை செய்யும் இடத்திலிருந்து சிற்றுண்டிச் சாலைக்குச் சென்றுகொண்டிருந்தார். அப்போது மற்றொரு பணியாள் கவனமின்றி ஓர் உந்திலை ஓட்டிச் சென்று வாதி நின்று கொண்டிருந்த ட்ராக்ஸ்கவேட்டர் இயந்திரத்தின் பின்புறம் மோதினார். இதனால் வாதிக்குக் காயம் ஏற்பட்டது. இவ் வழக்கில் வாதி அவர் நின்றுகொண்டிருந்த உந்திலிருந்து தூக்கியெறியப்பட்டுக் காயம் அடையக்கூடிய ஆபத்து இருந்ததே யன்றி அந்த உந்திற்கும், வேறோர் உந்திற்கும் இடையில் சிக்கி நசுக்கப்படும் ஆபத்திருக்கவில்லையென்று வாதிடப்பட்டது. இதை நீதிமன்றம் ஏற்கவில்லை. அந்த விபத்திற்கு வாதி $\frac{1}{5}$ பங்கு பொறுப் பாளியாவார் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது. வாதியும் இந்த விபத்திற்குக் காரணமாக இருந்ததால் அவர் பெறக்கூடிய தீங்கீடு குறைக்கப்பட்டது. ஆனால், அவர் ட்ராக்ஸ்கவேட்டரில் இருக்கும் போது ஒரு விளையாட்டு வீரர் கவனமின்றித் துப்பாக்கியால் சுட்டு அவர் கண்ணில் குண்டு பாய்ந்திருந்தால் அவர் ட்ராக்ஸ்கவேட் டரில் பயணம் செய்ததால் அந்த விபத்து ஏற்பட்டதாகச் சொல்ல முடியாது.

வாதி குறிப்பிட்ட விபத்திற்கெதிராகத் தற்காப்பு நடவடிக்கை எடுக்கத் தவறினார் என்று நிரூபிக்க வேண்டும் என்று சொல்லும் போது அந்த விபத்து சாதாரணமாக ஒருவர் எதிர்பார்க்கக் கூடிய தாகவும், அதற்கெதிராக உரிய பாதுகாப்புச்செய்யத்தகுந்ததாகவும் அமைந்திருக்க வேண்டும். எடுத்துக்காட்டாக, சாலையில் செல்லும் வழிப்போக்கர் அங்குப் பேருந்து, குதிரைவண்டி, மிதிவண்டி ஆகி யனவும் மற்ற வழிப்போக்கரும் செல்வதை எதிர்பார்க்கவேண்டும். வாதி சாலையில் செல்லும்போது அங்கு நடத்திச் செல்லப்படும் சர்க்கஸ் யானையினால் மிதிபடலாம். அப்போது வாதி சாலையில் யானையும் செல்லக்கூடும் என்பது தான் எதிர்பார்க்கத் தக்கதன்று என்றும், எனவே யானை வருவதைத் தான் பார்க்கவில்லையென்றும் கூறுவதை ஏற்க முடியாது. சாலையைப் பயன்படுத்தும் உரிமை யுள்ள விலங்குகளில் யானையும் ஒன்றாகும். ஆனால், சாலையில் ஒரு ஹெலிகாப்டர் கட்டாயமாக இறக்கப்படவேண்டிய சூழ்நிலை ஏற்படலாம். இதை அவன் எதிர்பார்க்க முடியாது. எனவே, சாலையில் செல்பவன் ஒரு ஹெலிகாப்டர் வானிலிருந்து சாலையில் கீழே இறங்கக் கூடும் என்று மேலே பார்த்துக்கொண்டே நடக்க வேண்டியதில்லை.

பொதுவாக, ஆபத்தான நிலை எதுவுமில்லையென்று வாதி கரு துவது தவறாகாது. எதிர்வாதி கவனமின்றியிருப்பான் என்று எதிர் பார்த்துத் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள வாதி எச்சரிக்கையோடு இருக்கத் தேவையில்லை. எதிர்வாதி எல்லாவற்றையும் சரிவரக்

கவனத்தோடு செய்வான் என்று அவன் எதிர்பார்க்கலாம். எதிர் வாதியின் தவறுகையால் விபத்து ஏற்படும்போது, வாதி கவனத் தோடு இருந்தால் விபத்தைத் தவிர்த்திருக்கலாம் என்று எதிர் வாதி வாதிடமுடியாது. சாலையில் காரை ஓட்டுபவர் மற்றக் கார் ஓட்டுநர்களும் தங்கள் கடமையை ஒழுங்காகச் செய்வர் என்றும், சாலை விதிகளை முறையாகப் பின்பற்றுவர் என்றும் எதிர்பார்த்துச் செல்ல முடியாவிட்டால், சாலையில் காரை ஓட்டுவது இயலாத தாகிவிடும்.

சாதாரணமாக, மக்கள் கவனமின்றி இருக்கக்கூடிய சூழ்நிலை கள் எவை என்று அனுபவம் கோடிட்டுக் காட்டுகின்றது. இதை நல்லறிவும், கவனமும் உள்ள மனிதர் உய்த்துணர்ந்து எச்சரிக்கை யாய் இருப்பர். ஆனால், அசாதாரணமான முறையில் ஒருவர் நடந்துகொள்ளக்கூடும் என்று எதிர்பார்த்து எச்சரிக்கையாய் இருக்க வேண்டியதில்லை. எடுத்துக்காட்டாக, இருவர் சாலையில் காரினை ஓட்டிச் செல்வதாக வைத்துக் கொள்வோம். ஒருவருக்குச் சாதகமாக சாலையில் உள்ள வழிதரும் விளக்கு (Traffic light) எரிந்ததும் அவன் குறுக்குச் சாலையில் நுழையும் போது மற்றக் காரினை ஓட்டுபவர் சாலை விளக்குக் கெதிராக, சட்டத்திற்கு முரணான வகையில் குறுக்கே வரக்கூடும் என்று எதிர்பார்க்கத் தேவை இல்லை எனவே, அவர் அந்தக் காரினால் தமக்கு விபத்து ஏற்படாமல் இருக்கக் கவனத்தோடு இருக்க வேண்டியதில்லை.

இரண்டக நிலை அல்லது வேண்டாத இரு வழிகளில் ஒன்றே தேரப்படவேண்டிய நிலை எனும் கோட்பாடு அல்லது இரண்டில் ஒன்று உறுதியான ஆபத்து எனும் தத்துவம் (The Dilemma Principle or the Doctrine of alternative danger).

எதிர்வாதி கவனமின்றியிருந்தாலும், வாதியும் எச்சரிக்கை யோடு இருக்கவேண்டும், ஆனால் சில சமயங்களில் எதிர்வாதி யால் விபத்து உருவாகியிருக்கலாம். அப்போது வாதி அங்கிருந்து தன்னையும், மற்றவர்களையும், தன்னுடைய சொத்தையும் காப்பாற்ற ஓர் ஆபத்தான செயலைச் செய்ய நேரலாம். இதைச் சட்டம் அனுமதிக்கும். வாதி செய்த செயலால் அவனுக்கு ஆபத்து ஏற்பட்டிருந்தாலும், எதிர்வாதியின்மேல் அவன் இடும் வழக்குத் தோல்வியடையாது. எதிர்வாதியின் தீங்கான செயலால் ஏற்பட்ட ஆபத்துக்குள்ளாகிச் செய்வதறியாது, மனங்குழம்பி ஆபத்தான செயல் ஒன்றைச் செய்து வாதி ஊறு அடையலாம். எதிர்வாதி யால் விளைந்த ஆபத்தான சூழ்நிலைக்கேற்றவாறு அவன் நடந்து

லொண்டால் போதும். நல்லறிவுள்ள மனிதன் ஆபத்தேற்படு கின்ற சூழ்நிலையில் நிதானமாகச் சிந்தித்து, மனந்தளராது, தன்னு டைய பாதுகாப்புக்குரிய நடவடிக்கையை எடுக்கக்கூடியவன். ஆனால், ஆபத்தேற்பட்டுள்ள அந்தத் துயர்சூழ்ந்த வினாடியில் தெய்வீக ஆற்றலுள்ள மனிதன் செய்யக்கூடியதை அவன் செய்யத் தவறினால் அது கவனமின்மையாகாது. எனவே, அவன் அந்தச் சூழ்நிலையில் ஒரு சாதாரண நெஞ்சுரமும், மனோதிடமும், சமயோசித உணர்வும் கொண்ட மனிதன் காட்டக்கூடிய கவனத் தைக் காட்டினால் போதும். எடுத்துக்காட்டாக, ஜோன்ஸ் v. பாய்ஸ் (Jones v. Boyce) வழக்கில் வாதி எதிர்வாதியின் வண்டியில் பயணம் செய்தார். எதிர்வாதியின் கவனமின்மையால் வண்டி கவிழக் கூடிய ஆபத்தேற்பட்டது. இதனால் மிகவும் கலவரம் அடைந்த வாதி ஆபத்திலிருந்து தம்மைக் காப்பாற்றிக்கொள்ள வண்டியில் இருந்து குதித்தார். அவர் குதிப்பதா, வேண்டாவா என்று சில வினாடிகளில் முடிவு செய்ய வேண்டியிருந்தது. இரண் டிலுமே ஆபத்திருந்தது. அவர் குதித்துக் காயமடைந்தார். அவர் குதிக்காமல் இருந்திருந்தால் அவர் தப்பியிருப்பார். ஏன் என்றால் வண்டி ஆபத்தின்றி நிறுத்தப்பட்டுவிட்டது. ஆயினும், அச் சூழ்நிலையில் அவர் நடந்துகொண்டது முறையானதாகவே இருந்தது. அவர் அச் சூழ்நிலையில் கலவரமுற்றுக் குதித்திருக்கத் தேவையில்லை என்று எதிர்வாதி சொல்ல முடியாது. எனவே, கவனமின்மைக்கு எதிர்வாதி பொறுப்பாளியாகக் கருதப்பட்டார். வாதி வண்டியிலிருந்து தூக்கியெறியப்பட்டிருந்தால்தான் அவர் எதிர்வாதியின்மேல் வழக்கிட முடியும் என்று சொல்ல முடியாது. எதிர்வாதியின் முறையற்ற நடத்தையால், கவனமின்மையால் வாதிக்கு ஆபத்தான நிலை ஏற்பட்டு, அவர் வேறு வழியின்றி உயிர் தப்ப வெளியே எட்டிக் குதிக்கவோ, ஆபத்தை எதிர்நோக்கி வண்டிக்குள்ளேயே இருக்கவோ நேரலாம். இந்த நிலை எதிர் வாதியின் கவனமின்மையால் உருவானதாயின், எதிர்வாதி பொறுப்பாளியாவார். குதிப்பதா, வேண்டாவா என்று ஒரு சில வினாடிகளில் முடிவு செய்ய வேண்டிய அவசர நிலையில், அவர் ஆர அமர, நின்று நிதானித்து முடிவு செய்வார் என்று எதிர் பார்க்க முடியாது.

சேயர்ஸ் v. ஹார்லோ அர்பன் டிஸ்ட்ரிக்ட் கவுன்சில் (Sayers v. Harlow U. D. C) வழக்கில் எதிர்வாதிகளால் வைத்துப் பராமரிக்கப்பட்ட பொதுவான சிறுநீர் கழிப்பிடத்தில் உரிய கட்டணம் செலுத்தி வாதி நுழைந்தார். அவர் உள்ளே சென்றதும் கதவு தானாகவே மூடிக்கொண்டது. கதவை உள்ளிருந்தவாறு திறக்க வசதியாகக் கைப்பிடி பொறுத்தப்படாமல் மூட்டிஸ் குறை

பாடு இருந்தது. 10 முதல் 15 நிமிடங்கள்வரை கதவினைத் தட்டியும், கூச்சலிட்டும் யாரும் வந்து கதவைத் திறக்காததால் வாதி வெளியே வருவதற்காக நீர்க்குழாயின்மேல் ஒரு காலியும், கழிவிடத்தின்மேல் மற்றொரு காலியும் வைத்து ஏறும்போது வழுக்கி விழுந்து காயமுற்றார். பூட்டில் குறைபாடு உள்ளது என்று எதிர்வாதிகள் எச்சரிக்கை எதுவும் கொடுக்கவில்லை. தவிர, கழிவிடத்திற்கு வெளியே பணியாள் ஒருவரையும் நிறுத்தி வைக்க வில்லை. அவர்கள் தங்கள் கடமையிலிருந்து தவறியதன் இயல் பான விளைவாகவே வாதிக்குக் காயம் ஏற்பட்டதாக நீதிமன்றம் கருதியது. இதைப் போலவே புகைவண்டி நிறுத்தப்படவேண்டிய மேடையைத் தாண்டிச் சென்றபின் நிறுத்தப்பட்டு, பயணி ஒருவர் அங்கு இறங்க முயன்று காயம் அடையலாம். இதற்கு இரயில்வேக் கம்பெனி பொறுப்பாளியாகும். அந்த இடத்தில் பயணி இறங் காமல் தொடர்ந்து பயணம் செய்திருக்க வேண்டும் என்று இரயில்வேக் கம்பெனி கூறமுடியாது.

எதிர்வாதி முறையின்றி ஏற்படுத்திய ஆபத்தை அறிந் திருந்தும், அதிலிருந்து தப்பவேண்டிய முயற்சியை மேற்கொள் ளாமல் வாதி ஆபத்திற்குள்ளானான் என்பதால் மட்டுமே அவன் கவனம் காட்டத் தவறினான் என்று சொல்ல முடியாது. அதைப் போலவே, எதிர்வாதி வாதியை ஓர் ஆபத்தான செயலைச் செய்யு மாறு வேண்டியோ, உத்தரவிட்டோ இருக்கலாம். அச் செயலை வாதி செய்திருப்பின் அவன் தற்கவனமின்றி இருந் தான் என்று சொல்ல முடியாது (யார்மவுத் v. பிரான்ஸ்). இதைப் போலவே, வாதி சட்டப்படியோ ஒழுக்கநெறிப்படியோ ஒரு கடமையைச் செய்யும்போது ஆபத்துக்குள்ளாகியிருந்தாலும், தற்கவனமின்றியிருந்தார் என்று சொல்லமுடியாது (ஹேய்ன்ஸ் v. ஹார்வுட்). தவிர, உடலுக்கு மட்டுமல்லாமல், வாதி அல்லது பிறருடைய சொத்துக்கு ஆபத்தேற்பட்டிருந்தாலும் மேற்கூறிய கொள்கை பொருந்தும். வாதி தன்னைப் பாதுகாப்பதற்காக மட்டு மல்லாமல் மூன்றாவது நபர்களுக்கு விபத்தேற்படாமல் தடுக்கும் போதும் ஆபத்திற்குள்ளாகியிருக்கலாம். அப்போது அவனது செயல் தற்கவனமின்மையாகாது, இதற்கு எடுத்துக்காட்டாக, ஏற்கெனவே சொல்லப்பட்டுள்ள மார்கன் v. ஏலன் (Morgan v. Aylen) வழக்கைச் சொல்லலாம். ஆனால், யாருக்கும் ஆபத்து இல்லாதபோது வாதி குறுக்கிட்டு இருப்பின் தீங்கீடு பெற முடியாது.

குழந்தைகளின் தற்கவனமின்மை

குழந்தைகளைப் பொறுத்தவரை, குறிப்பிட்ட ஒரு வயதுவரை அவர்கள் தற்கவனமின்றி இருந்தார்கள் என்று சொல்லமுடியாது.

அதாவது, குறிப்பிட்ட வயது வரும்வரை குழந்தை தன்னுடைய பாதுகாப்புக்குரிய நடவடிக்கை எடுக்குமென்று எதிர்பார்க்க முடியாது. வயதுவந்த பெரியோர்களைப்போலவே குழந்தைகளும் கவனத்தோடு இருப்பர் என்று எதிர்பார்க்க முடியாது. எனவே, ஒருவர் தம்பால் கவனமின்றியிருந்தாரா என்றறிய அவரது வயதையும் கருதிப்பார்க்க வேண்டியிருக்கிறது. ஒரு குழந்தை தற்கவனமின்றி இருந்ததாகச் சொல்லப்படும் வழக்கில் அக் குழந்தையின் வயதையும் மனவளர்ச்சியையும் கருதி; அது தனது பாதுகாப்புக்கு நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளக்கூடிய மனப் பக்குவத்தைப் பெற்றுள்ளதா என்பதைக் கொண்டே அது தன்பால் கவனமின்றி இருந்ததா என்று கூறமுடியும். எடுத்துக் காட்டாக, யாசக் v. ஆலிவர் பிளெய்ஸ் கம்பெனி லிமிடெட் (Yachuk v. Oliver Blais Co. Ltd.) வழக்கில், எதிர்வாதியின் பணியாள் எளிதில் தீப்பற்றிக் கொள்ளக்கூடிய பெட்ரோலை ஏழு வயதும், ஒன்பது வயதும் நிரம்பிய இரு சிறுவர்களுக்கு விற்றார். அவர்கள் தங்கள் தாயின் காருக்காகப் பெட்ரோல் வாங்குவதாகச் சொன்னார்கள். அவர்கள் தாங்கள் நடித்த நாடகத்திற்கு அதைப் பயன்படுத்தியபோது விபத்தேற்பட்டு, அதன் விளைவாக ஒரு சிறுவனுக்குக் கடுமையான தீக்காயங்கள் ஏற்பட்டன. காயமுற்ற சிறுவன் சார்பாக இடப்பட்ட வழக்கில் தற்கவனமின்மை என்ற எதிர்வாதம் செய்யப்பட்டது. குழந்தையாகிய வாதி பெட்ரோல் ஆபத்தானது என்று உணர்ந்திருப்பான் என்று சொல்லமுடியாது. வயதுவந்தவர்களைப் பொறுத்தவரை நல்லறிவுள்ள மனிதனை வரையளவாகக் கொள்ளலாம். குழந்தையாயின், அதன் வயதையும், மன வளர்ச்சியையும், மற்றச் சூழ்நிலையையும் கருதிப் பார்க்கும்போது அக் குழந்தையிடம் எதிர்ப்பார்க்கத் தகுந்ததையே வரையளவாகக் கொள்ளவேண்டும். சென்னை உயர்நீதிமன்றம் ஒரு குழந்தை ஆபத்தினையும் அதன் செயலால் ஏற்படக்கூடிய தீங்கின் தன்மையையும் உணரக்கூடிய மனப்பக்குவம் பெற்றிருந்தால் தன்பால் கவனமின்றி இருந்ததாகச் சொல்லமுடியும் என்று எம். & எஸ். எம். ரெயில்வே கம்பெனி லிமிடெட் v. ஜெயம்மாள் (M & S. Railway Co. Ltd. v. Jayammal) வழக்கில் கூறியுள்ளது. இவ் வழக்கில் ஓர் ஏழு வயது பெண் புழைவாயிலில் நுழைந்து இருப்புப்பாதையைக் கடக்கும்போது புகைவண்டி இயந்திரம் மோதியதால் படுகாயமுற்றாள். இந்த விபத்தேற்படக் காரணம் அவள் இருப்புப் பாதையைக் கடக்கும்போது புகை வண்டியின் இயந்திரம் வருவதைப் பார்க்காததுதான். அவள் ஆபத்தை உணரக் கூடிய வயதையும் மனவளர்ச்சியையும் பெற்றிருந்ததால் தற்கவனமின்றி இருந்ததாகக் கருதப்பட்டாள்.

இந்தியாவில் 1945-ல் இங்கிலாந்தில் இயற்றப்பட்ட தற்கவன மின்மைபற்றிய ஆங்கிலச் சட்டம்போல் எதுவும் இயற்றப்பட வில்லையெனினும் நீதிமன்றம் நீதி, நேர்மை, நன்மனச்சான்று ஆகியவற்றின்படி முடிவுசெய்ய உரிமையுண்டு. வயது வந்தவர் களின் கண்காணிப்புடனும், பாதுகாப்புடனும் சாலையில் செல்லும் குழந்தை அந்த வயது வந்தவரின் கவனமின்மையாலும் மூன்ரு வது நபரின் கவனமின்மையாலும் காயமுற்ருல், அந்த மூன்ருவது நபரிடமிருந்து தீர்வீடு பெறலாம். அவ்வாறு குழந்தையை அழைத்துச் செல்பவரின் கவனமின்மையைக் குழந்தையின் கவன மின்மையாகக் கருதமுடியாது. ஆலிவர் v. பர்மிங்ஹாம் & மிட்லாண்ட் ஆம்னி பஸ் கம்பெனி லிமிடெட் (Oliver v. Birmingham & Midland Omini Bus Co. Ltd.) வழக்கில் நான்கு வயதே நிரம்பிய சிறுவன் தனது தாத்தாவின் கையைப் பற்றியவாறு சாலையைக் கடந்துகொண்டிருந்தான். அவன் சாலையின் நடுப் பகுதிக்கு வந்ததும் எந்த எச்சரிக்கையுமின்றி எதிர்வாதியின் பேருந்து திடீரென்று வரவே, அச்சமுற்ற தாத்தா பேரனைப் பற்றி யிருந்த கையை உதறி, அவனைச் சாலையின் நடுவிலேயே விட்டுத் தம்முயிரைக் காத்துக்கொள்ளத் தாண்டிக் குதித்தார். எதிர்வாதி யின் பேருந்து மோதிச் சிறுவன் காயமுற்ருன். இங்கு வாதி சிறு வனுக்கு ஏற்பட்ட காயம் அவனுடைய தாத்தா, எதிர்வாதி ஆகிய இருவருடைய கவனமின்மையாலும் ஏற்பட்டது, இங்கு அவனையும் அவனுடைய தாத்தாவையும் ஒன்ருகக் கருதும் கொள்கையை நீதிமன்றம் ஏற்கவில்லை. தாத்தா தற்கவனமின்றி இருந்தாலும், பேரன் எதிர்வாதியிடமிருந்து தீங்கீடு பெறத் தடையில்லை என்று தீர்ப்பளிக்கப்பட்டது. பெற்ருரின் 'பாவங்கள்' குழந்தைகளையும் தொடரும் என்ற கொள்கைக்கு இவ் வழக்குச் சாவுமணி அடித்து விட்டது.

41. கடும்பொறுப்பு

(Strict Liability)

ரைலண்ட்ஸ் v. ஃபிளட்சர் (Rylands v. Fletcher) வழக்கில் சொல்லப் பட்ட விதி

ஒவ்வொருவரும் பிறருக்கு ஊறு நேராவண்ணம் தமது சொத்தைப் பயன்படுத்தவேண்டும் என்பதைச் சட்டம் கொள்கை யாகக் கொண்டுள்ளது. எனவே, ஒருவன் தன்னுடைய நிலத்தை முறையின்றி, அதாவது தனக்குள்ள உரிமையை வரம்பு கடந்து பயன்படுத்தினால், மற்றவர் தமது சொத்தை அனுபவிப்பதற்கும் பயன்படுத்துவதற்கும் இடையூறும், வசதிக் குறைவும் நேரலாம். தவிர, அவருடைய சொத்திற்கு ஆபத்தும் நிகழலாம். எனவே, எதிர்வாதி தன்னுடைய நிலத்தை இயல்பல்லாத முறையில் பயன் படுத்தி வாதிக்கு இழப்பினை ஏற்படுத்தியிருந்தால் வாதி அதற்காக வழக்கிடலாம். சில சூழ்நிலைகளில் எதிர்வாதிக்குக் கடும்பொறுப்பு உண்டென்று சட்டம் சொல்கிறது. இத்தகைய கடும்பொறுப்புள்ள நிலைமைகளில் எதிர்வாதி, வாதிக்கு ஏற்பட்ட ஊறினைக் கருதியோ கவனமின்றியோ செய்திராவிட்டாலும் பொறுப்பாளியாவார். இத்தகைய பொறுப்பு ரைலண்ட்ஸ் v. ஃபிளெட்சர் வழக்கில் முதலில் சொல்லப்பட்டது. இத்தகைய பொறுப்பு ஏற்படும்போது எதிர்வாதி தவிர்க்க முடியாதவாறு வாதிக்கு ஏற்படும் ஊறுக்கும் பொறுப்பாளியாவார். அப்போது எதிர்வாதி கவனமின்றி இருந்த தாக வாதி நிரூபிக்கத் தேவையில்லை. எதிர்வாதியின் தவறுகை, அதாவது கருதிச் செய்தல் அல்லது கவனமின்மை இல்லாவிட் டாலும் பொறுப்புண்டென்னும் பொருளிலேயே கடும்பொறுப்பு என்னும் இத் தொடர் தீங்கியலில் வழங்குகிறது. கால்நடையை வைத்திருப்பவர் உரிய கவனத்தோடு இருந்தாலும், அவை வெளி யேறி அவ்வப்போது அடுத்துள்ளவர் பயிரை அழிப்பதைத் தடுக்க முடியாது. ஆயினும், பயிர்த்தொழிலின் நலன் கருதி அவை விளைத்த சேதத்திற்குத் தீங்கீடு தருவதே முறையானது. இப்படிப் பட்ட தீங்கிற்கு ஒருவன் அத்துமீறலுக்கு வழக்கிட்டு, அத்துமீறலை

மட்டும் நிரூபித்தால் போதும். எதிர்வாதி தனது கடமையிலிருந்து தவறினன் என்று நிரூபிக்கத் தேவையில்லை. பழைய நடைமுறை விதியாகிய கால்நடை அத்துமீறல் விதியே தற்காலத்தில் ரைலண்ட்ஸ் v. ஃபிளெட்சர் வழக்கில் நிலத்தில் அபாயகரமான பொருளை வைத்திருப்பதற்கும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

ரைலண்ட்ஸ் v. ஃபிளெட்சர் வழக்கில் எதிர்வாதி தமது ஆலைக்கு நீர் வழங்குவதற்காகத் தம் நிலத்தில் ஒரு நீர்த்தேக்கத் தொட்டியைக் கட்ட விரும்பினர். அப் பணியைச் செய்ய அவர் தகுதி வாய்ந்த ஒப்பந்தக்காரர்களை அமர்த்தினர். அப் பணியைச் செய்யும்போது, ஒப்பந்தக்காரர்கள் அந் நிலத்தில் சில பழைய சுரங்க வாயிற் சாய்குழிகளும், செல்லும் வழிகளும் இருக்கக் கண்டனர். அவ் வழிகள் அருகிலிருந்த வாதியின் நிலக்கரிச் சுரங்கத்திற்குச் சென்றன. அவை மண்ணால் மூடப்பட்டுவிட்டன வாகத் தோன்றியதால், யாரும் ஐயுறவில்லை. நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்பட்ட இடத்திற்குக் கீழேயுள்ள மண் நெடுங் காலத்திற்கு முன் நிலக்கரிக்காகத் தோண்டப்பட்டிருந்தது; ஒப்பந்தக்காரர்களின் கவனமின்மையால் அச் சுரங்கப்பாதை களிருப்பது கண்டுபிடிக்கப்படவில்லை. இதனால் ஏற்படக் கூடிய ஆபத்தைத் தடுக்கத் தற்காப்பு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. நீர்த்தொட்டி நீரால் நிரப்பப்பட்டபோது அதிலிருந்து நீர், சுரங்க வழியாக வாதியின் சுரங்கத்தில் புகுந்து அதை வெள்ளக்காடாக் கியது. இதன் விளைவாக வாதிக்கு £ 1937 பொருட்சேதம் விளைந்ததாகக் கணக்கிடப்பட்டது. நிலத்துக்கடியில் சுரங்கவழி இருப்பது எதிர்வாதிக்குத் தெரியாது; அவர் கவனமின்றி இருந்திருக்க வில்லை. ஆனால், அவர் நியமித்த ஒப்பந்தக்காரர்கள் கவனமின்றி யிருந்திருக்கிறார்கள். இவ் வழக்கில் எதிர்வாதி கவனமின்றி இருந்திராவிட்டாலும் வாதிக்கு விளைந்த சேதத்திற்குப் பொறுப்பாளி யாவார் என்று தீர்ப்பளிக்கப்பட்டது. இந்த வழக்கில் கடும் பொறுப்பு என்னும் விதியை நீதிபதி பிளாக்பர்ன் நிறுவினர். 'சட்டம் கூறும் உண்மையான விதி, ஒருவன் தனது சொந்தக் காரியங்களுக்காகத் தன்னுடைய நிலத்திலிருந்து வெளியேறிச் சென்றால் இடர்விளைவிக்கத் தக்க எந்தப் பொருளையாவது, அங்குத் கொண்டுவந்து சேகரித்து வைத்திருந்தால், அதைத் தன்னுடைய பொறுப்பிலேயே வைத்திருக்க வேண்டும். அவ்வாறு அவன் செய்யத்தவறினால் அப் பொருள் அந்த நிலத்திலிருந்து வெளி யேறிச் செல்வதால் ஏற்படும் இயல்பான விளைவுகள் அனைத்துக் கும் பொறுப்பாளியாவான். எனவே, வெளியேறிச் சென்று இடர் விளைவிக்கக் கூடிய பொருள் எதையும் ஒருவன் தன்னுடைய நிலத்தில் கொண்டுவந்து வைத்திருந்தால் அது வெளியேறிச்

செல்வதால் ஏற்படும் சேதம் அகனத்திற்கும் பொறுப்பாளியாவான். அவன் அங்கு அதைக் கொண்டுவந்ததில் கவனமின்றி இருந்திராவிட்டாலும் பொறுப்பாளியேயாவான்'. ரைலண்ட்ஸ் v. ஃபிளெட்சர் வழக்கில் இவ்வாறு கொண்டுவந்து வைக்கப்பட்டிருந்த பொருள் தண்ணீராகும். ஆயினும், இந்த வழக்கில் சொல்லப்பட்ட விதி தீ, வாயு, மின்சாரம், வெடி, எண்ணெய், நச்சுப்புகை, இற்றுப் போன வேலியிலிருந்து வந்த துருப்பிடித்த கம்பி போன்றவற்றிற்கும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஒருவர் உடைமையிலுள்ள நிலத்திலிருந்து இடர் விளைவிக்கும் அப்பொருள் வெளியேறிச் சென்றிராவிட்டால் எந்தப் பொறுப்பும் ஏற்படாது. ரீட் v. லயான்ஸ் & கம்பெனி (Read v. Lyons & Co. Ltd) வழக்கில் எதிர்வாதியின் வெடிமருந்துத் தொழிற்சாலையில் ஆய்வாளராக வாதி அமர்த்தப்பட்டிருந்தார். வாதி அரசு ஊழியர். வாதி அங்கு வேலை செய்யும்போது அங்கு உற்பத்தியாகிக் கொண்டிருந்த ஒரு குண்டு வெடித்துக் காயமுற்றார். அது அபாயகரமானது என்று ஏற்றுக்கொள்ளப்பட்டது. இவ் வழக்கில் எதிர்வாதிகள் பொறுப்பாளிகளல்லர் என்று தீர்ப்பளிக்கப்பட்டது. எதிர்வாதிகள் கவனமின்றி இருந்ததாக இவ் வழக்கில் சொல்லப்படவில்லை. அந்த வெடித்த குண்டு அபாயகரமானதாயினும் அது எதிர்வாதியின் கட்டடத்திலிருந்து வெளியேறிச் சென்றிருக்கவில்லை. வெளியேறுதல் என்பது எதிர்வாதியின் உடைமை அல்லது கட்டுப்பாட்டிலுள்ள நிலத்திலிருந்து அவரது உடைமை அல்லது கட்டுப்பாட்டுக்கு வெளியேயுள்ள நிலத்திற்கு வெளியேறுவதாகும். ஆபத்தான பொருள் எதிர்வாதியால் வைக்கப்பட்டுள்ள நிலத்திலிருந்து அவரது கட்டுப்பாட்டில் இல்லாத இடத்திற்குத் தப்பிச் சென்றிருக்க வேண்டும்.

குரோஹர்ஸ்ட் v. ஆமர்ஷாம் பரெய்ல் போர்டு (Crowhurst v. Amarsham Burail Board) வழக்கில் எதிர்வாதியின் நிலத்தின் எல்லையிலிருந்த நச்சுமரத்தின் கிளைகள் அந்த நிலத்தின் எல்லையைத் தாண்டி அடுத்திருந்த வாதியின் நிலத்தின் எல்லைக்குள் நீண்டு வளர்ந்திருந்தன. அங்குப் புல் மேய்ந்து கொண்டிருந்த வாதியின் குதிரை அந்தக் கிளைகளின் இலைகளைப் பறித்துத் தின்று மாண்டது. இதற்கு எதிர்வாதி பொறுப்பாளியாவார் என்று தீர்ப்பளிக்கப்பட்டது. ஆனால், பான்டிங் v. நோக்ஸ் (Ponting v. Noakes) வழக்கில், வாதியின் குதிரை எதிர்வாதியின் நில எல்லைக்குள் அத்துமீறிச் சென்று அங்கிருந்த ஒரு நச்சுமரத்தின் இலையைப் பறித்துத் தின்று மாண்டதற்கு எதிர்வாதி பொறுப்பாளியல்லரென்று தீர்ப்பளிக்கப்பட்டது. இங்கு இடர் விளைவிக்கக்

கூடிய ஆபத்தான தாவரம் எதுவும் வெளியேறிச் சென்றிருக்க வில்லை. எதிர்வாதி தமது நிலத்தில் தாம் விரும்பிய எந்தத் தாவரத்தையும் வளர்க்கலாம். அவருடைய நிலத்தின் எல்லையைத் தாண்டி அது செல்லாதவரை அவர் பொறுப்பாளியாகமாட்டார்.

ரைலண்ட்ஸ் v. ஃபிளெட்சர் வழக்கில் சொல்லப்பட்ட விதியின் கீழ் ஒரு நிலத்தையுடையவர் தமக்கு ஏற்பட்ட உடற்காயங் களுக்கும் தீங்கீடு பெறமுடியும். ஹேல் v. ஜென்னிங்ஸ் பிரதர்ஸ் (Hale v. Jennings Brothers) வழக்கில் எதிர்வாதிகளுக்குச் சொந்தமான கண்காட்சியில் வாதி ஒரு கடையை வாடகைக்கு எடுத்திருந்தார். அதே கண்காட்சியில் எதிர்வாதிகள் நாற்காலி இராட்டினம் வைத்திருந்தனர். அதிலிருந்து ஒரு நாற்காலி பிரிந்து வாதி கடையில் இருந்தபோது அவள்மேல் விழுந்து காயப்படுத் தியது. இவ் வழக்கில் எதிர்வாதிகள் கவனமின்றியிருந்தார்கள் என்று நிரூபிக்கப்படாவிட்டாலும், அவர்கள் வாதிக்கேற்பட்ட காயத்திற்குப் பொறுப்பாளிகளாவார்கள் என்று தீர்ப்பளிக்கப் பட்டது. இவ் விதியின்படி எதிர்வாதி தமது சொந்தக் காரியங் களுக்காக இடர் விளைக்கும் பொருள்களைத் தம்முடைய நிலத்தில் சேகரித்து வைத்திருக்க வேண்டும் என்று சொல்லும் போது, அதனால் அவருக்குப் பொருள் வருவாய் அல்லது வேறு பயன் ஏற்பட்டிருக்கவேண்டும் என்று சொல்வதாக ஆகாது. எடுத்துக் காட்டாக, நகராட்சிக்குக் கழிவுநீரைச் சட்டப்படி சாய்க்கடை களில் ஏற்கவேண்டிய கடமை இருந்தால், அதனைச் சேர்த்து வைத்திருந்தால் பொறுப்பாளியாகலாம்.

இரண்டாவதாக நிலம், இயல்பல்லாத முறையில் பயன் படுத்தப்பட்டிருக்க வேண்டும். மிகவும் அதிகமான அளவில் நீரைக் கொண்டுவந்த செயல் நிலத்தை இயல்பல்லாத முறையில் பயன்படுத்துவதாகும் என்று ரைலண்ட்ஸ் v. ஃபிளெட்சர் வழக்கில் கருதப்பட்டது. சாதாரணமாக, வீட்டில் பயன்படுத்த நீரைச் சேர்த்து வைத்திருப்பது இயல்பான முறையில் பயன்படுத்துவ தாகக் கருதப்படும். இயல்பல்லாத முறையில் நிலத்தைப் பயன் படுத்துவது என்று சொல்லும்போது நிலத்தை ஒரு தனிப்பட்ட காரியத்திற்காகப் பயன்படுத்தி மற்றவர்களுக்கும், அவர்களுடைய சொத்துக்கும் அதிகமான ஆபத்தை ஏற்படுத்துவதைக் குறிக்கும். இது சாதாரணமுறையில் நிலத்தை பயன்படுத்துவதோ, சமுதாயத்தின் பொதுநலனுக்காகப் பயன்படுத்துவதோ அன்று எனவே, ஒருவர் தம்முடைய வீட்டில் சாதாரண, இயல்பான, முறையான வழியில் அடுப்பில் வைத்திருக்கும் தீ அடுத்துள்ள ஒரு கட்டடத்திற்குப் பரவினால் ரைலண்ட்ஸ் v. ஃபிளெட்சர்

வழக்கின் சொல்லப்பட்ட விதி பொருந்தாது. இதைப்போலவே ஒரு வீடு அல்லது கடையில் மின்சாரக் கம்பி போடுவது, அல்லது குடியிருக்கும் வீட்டில் வாயுக்குழாயின் மூலம் வாயு வழங்குதல், நிலத்தை இயல்பான முறையில் பயன்படுத்துவதாகும்.

ஓ' கார்மன் v. ஓ'கார்மன் (O'Gorman v. O'Gorman) வழக்கில் வாதியும் எதிர்வாதியும் அடுத்துள்ள தோட்டங்களில் வாழ்ந்தனர். எதிர்வாதி பல தேனீப்பெட்டிகளை வைத்திருந்தார். அவற்றிலிருந்து கிளம்பும் தேனீக்கள் அடுத்துள்ள பண்ணையில் இருந்தவர்களுக்கு மிகுந்த தொந்தரவைத் தந்தன. ஒரு நாள் எதிர்வாதி தேனெடுக்க விரும்பித் தேனீப்பெட்டியில் புகை மூட்டினர். அப்போது வாதி தம் குதிரையை அடக்கிக் கொண்டிருந்தார். வாதியை எதிர்வாதி எச்சரிக்கத் தவறினர். புகை மூட்டப்பட்டதால் தேனீக்கள் சீறிக் கிளம்பி வாதியின் குதிரையின் மீது மொய்த்து, அதைக் கொட்டவே, குதிரை வாதியை இழுத்துக் கொண்டு ஓடி அங்கிருந்த ஒரு சுவரின்மீது வாதியைத் தூக்கி யெறிந்தது. அதன் விளைவாக வாதிக்குக் கடுமையான உடற் காயங்கள் ஏற்பட்டன. எதிர்வாதி பொறுப்பாளியாவார் என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

ஃபர்த் v. பௌலிங் அயர்ன் கம்பெனி (Firth v. Bowling Iron Co.) வழக்கில் வாதியின் நிலத்தை அடுத்திருந்த எதிர்வாதியின் நிலத்தில் ஒரு கம்பிவட வேலி இருந்தது. நாளடைவில் அது துருப்பிடித்து, தேய்ந்துபோய்ச் சில துண்டுகள் வாதியின் நிலத்திலிருந்த புல்லின்மேல் விழுந்தன. அங்குப் புல் மேய்ந்து கொண்டிருந்த வாதியின் மாடு ஒரு கம்பித்துண்டை விழுங்கியதன் காரணமாக மடிந்தது. வாதிக்கு அவரது மாடு மாண்டதால் ஏற்பட்ட இழப்புக்கு எதிர்வாதி பொறுப்பாளியாவார் என்று தீர்ப்பளிக்கப் பட்டது.

இடர்விளைக்கும் பொருளைத் தம்முடைய நிலத்தில் சேகரித்து வைத்துள்ள எதிர்வாதி, இழப்பினை ஏற்படுத்திய செயல் ஒரு ஒப்பந்தக்காரரால் செய்யப்பட்டதென்று வாதிடமுடியாது. இவ்வாறு ரைலண்ட்ஸ் v. ஃபிளெட்சர் வழக்கில் எதிர்வாதி அவர் நியமித்திருந்த ஒப்பந்தக்காரரின் கவனமின்மைக்காகப் பொறுப் பாளியாகக் கருதப்பட்டார்.

ஸ்டீர்ன் v. பிரென்ட்டீஸ் பிரதர்ஸ் லிமிடெட் (Stearn v. Prentice Brothers Ltd.) வழக்கில், எதிர்வாதிகள் வாதியின் பண்ணைக்கு அருகில் இருந்த தங்கள் கட்டடத்தில் எலும்பு உரம்

உற்பத்தி செய்து வந்தனர். தங்கள் தொழிலுக்குத் தேவையான எலும்புக்குவியலை அவர்கள் அக் கட்டடத்தில் வைத்திருந்தார்கள், அவற்றைத் தின்ன ஏராளமான எலிகள் அங்குக் கூடின. அவை எதிர்வாதியின் கட்டடத்திலிருந்து வாதியின் நிலத்திற்குச் சென்று அவருடைய பயிர்களை நாசம் செய்தன, இதனால் வாதிக்குப் பேரிழப்பு ஏற்பட்டது. இதற்காக அவர் எதிர்வாதியிடம் தீங்கீடு கோரி வழக்கிட்டார். இங்கு எதிர்வாதி தம்முடைய நிலத்தை இயல்பல்லாத முறையில் பயன்படுத்தவில்லை. தவிர, அவருடைய கட்டடத்திலிருந்து தப்பிச் சென்று இடர் விளைவித்த எலிகள் அவருடைய நிலத்தில் அவரால் வைக்கப்பட்டிருந்ததாகவோ, அவரது கட்டுப்பாட்டில் இருந்ததாகவோ சொல்லமுடியாது. எனவே, எதிர்வாதிகள் பொறுப்பாளிகள் ஆகமாட்டார்கள் என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

ரைலண்ட்ஸ் v. ஃபிளெட்சர் கொள்கைப்படி அபாயகரமான பொருள்களைத் தம்முடைய கட்டடத்தில் கொண்டுவந்து, அவற்றைக் கொண்டு ஒரு தொழிலைச் செய்கிறவர் கவனமின்றி இராவிட்டாலும், அடுத்துள்ளவர் உடலுக்கும் சொத்துக்கும் அப் பொருள்கள் விளைக்கும் ஊறுக்குப் பொறுப்பாளியாவார். அப் பொருள்களைக் கொண்டுவந்து அவற்றைப் பயன்படுத்தும்போது அவற்றால் ஏற்படக்கூடிய ஆபத்தை அவர் அறிந்திருந்தாரா இல்லையா என்று நாம் பார்க்கத் தேவையில்லை. ஒரு நிலத்தில் அபாயகரமான பொருள்களைக் கொண்டுவந்து பயன்படுத்துபவர் அந்த நிலத்தின் உரிமையாளராக இருந்தாலும், இல்லாவிட்டாலும் பொறுப்பாளியாவார். ரைலண்ட்ஸ் v. ஃபிளெட்சரில் சொல்லப்பட்ட கொள்கை நமது நாட்டிலும் பல வழக்குகளில் பின்பற்றப்பட்டுள்ளது.

ரைலண்ட்ஸ் v. ஃபிளெட்சர் வழக்கில் சொல்லப்பட்ட விதிக்குப் பல விலக்குகள் உள்ளன. இவ் வழக்கின்படி ஏற்படும் பொறுப்புக் கடும்பொறுப்பாக இருந்தாலும் அது முழுமையான பொறுப்பாகாது. இவ் வழக்கில் சொல்லப்பட்ட விதிக்குத் தெய்வச்செயல் போன்ற எதிர்வாதங்களைச் சொல்லலாம். இதை ரைலண்ஸ் v. ஃபிளெட்சர் வழக்கில் நீதிபதியே சுட்டிக்காட்டியுள்ளார். இனி, இவ் விதிக்கு அமைந்துள்ள பலவகையான விலக்குகளைக் காண்போம். தவிர, அண்மைக்காலத்தில் நீதிமன்றங்களும் தவறுகை இன்றேல் பொறுப்பில்லை என்னும் கொள்கையை ஏற்றுச் செயல்பட்டு வருவதால், இவ் விதி படிப்படியாக அழிந்துவருகிறது.

(1) வாதியின் இசைவு : ஆபத்தைத் தோற்றுவித்துள்ள பொருளை நிலத்தில் சேகரித்து வைத்திருப்பதற்கு வாதி வெளிப்

படையாகவோ, உட்கிடையாகவோ இசைவு தந்திருந்தால் எதிர்வாதி பொறுப்பாளியாகமாட்டார். அதாவது, வாதியின் இசைவுடன் எதிர்வாதியால் கொண்டுவந்து வைக்கப்பட்டுள்ள பொருள் வெளியேறிச் சென்று வாதிக்கு ஊறு அல்லது இழப்பு விளைவித்தால் ரைலண்ட்ஸ் v. ஃபிளெட்சரில் சொல்லப்பட்ட விதி பொருந்தாது. அப்போது கவனமின்மையின்றேல் எதிர்வாதி பொறுப்பாளியாகமாட்டார். இசைந்தேற்பது தீங்காகாது என்னும் பொதுவான எதிர்வாதத்தையே இவ் விதிவிலக்கு விளக்குகிறது. ஒரு கட்டடத்தில் உள்ள பல மாடிகளில் வெவ்வேறு நபர்கள் குடியிருக்கும்போது, கீழ்ப்பகுதியில் குடியிருப்பவர் மேல்மாடியிலிருந்து நீர் வெளியேறி ஊறு விளைவித்ததாக முறைபீடு செய்யும் போது இவ் விதிவிலக்குப் பொருந்தும். ஆபத்தினை ஏற்படுத்திய பொருள் கூரையிலிருந்து வந்து விழும் மழை நீராயினும், குழாய் வழியாக அளிக்கப்படும் நீராயினும் மேல்மாடியில் குடியிருப்பவர் கவனமின்றியிருந்தார் என்று நிரூபிக்கப்படாவிட்டால் எதிர் வாதிக்குப் பொறுப்பேற்படாது. ஏனெனில், இருவருடைய நன்மைக் கர்கவும் அது அங்குச் சேகரிக்கப்பட்டோ, கொண்டு செல்லப் பட்டோ உள்ளது. இருவரும் அதற்கு வெளிப்படையாகவோ உட்கிடையாகவோ இசைவு தந்ததாகவே கொள்ளவேண்டும். ஆனால், ஒரு கட்டடத்தில் வைக்கப்பட்டுள்ள நீர் வழக்கத்திற்கு மாறுன தன்மையில், அபாயகரமான முறையில் வழங்கப்படுவதா யின் வாதி இசைவு தெரிவித்ததாகச் சொல்லமுடியாது. ஆனால், நீர் வெளியேறிச் சென்று ஆபத்தினை ஏற்படுத்தியதற்குக் காரணம் எதிர்வாதியின் கவனமின்மையாயின் அவர் பொறுப்பாளியாவார்.

(2) பொதுவான பயன் : ஆபத்து ஏற்படக் காரணமாக இருந்த பொருள் வாதி, எதிர்வாதி ஆகிய இருவருடைய பொது நன்மைக் காக வைக்கப்பட்டிருந்தால் அது வெளியேறிச் சென்று விளைக்கும் சேதத்திற்கு எதிர்வாதி பொறுப்பாளியாகமாட்டார். இது மேலே சொன்ன வாதியின் இசைவு போன்றது. கார்ஸ்டேர்ஸ் v. டாய்லர் (Carstairs v. Taylor) வழக்கில் ஒரு கிடங்கின் கீழ்ப்பகுதிக் கட்டடத்தை 'ஆ'-விடமிருந்து 'அ' என்பவர் வாடகைக்கு எடுத் திருந்தார். அதன் மேற்பகுதியை 'ஆ' தம் வசமே வைத்திருந்தார். கூரையிலிருந்து நீர் வடிகால் குழாய் வழியாக ஒரு பெட்டிக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து குழாய் மூலமாகச் சாய்க் கடைகளில் விடப்பட்டது. ஓர் எலி அப்பெட்டியைக் கடித்து ஓட்டை போட்டுவிட்டது. அதன் விளைவாக அதிலிருந்து நீர் ஒழுகி 'அ'-வின் வர்ணிகச் சரக்குகளுக்குச் சேதம் ஏற்பட்டது. 'ஆ' கவனமின்றி இருக்கவில்லை. இங்குத் தண்ணீர் வாதி, எதிர் வாதி ஆகிய இருவருடைய பொதுவான பயனுக்காக வைக்கப்பட்

டிருந்தது. எனவே, இங்கு 'ஆ' பொறுப்பாளியல்லரென்று தீர்ப் பளிக்கப்பட்டது.

(3) வாதியின் தவறுகை : சேதம் வாதியின் செயலாலோ, தவறுகையாலோ ஏற்பட்டிருந்தால் அவருக்கு நிவாரணம் கிடைக்காது. இது ஓர் எதிர்வாதமாக ரைலண்ட்ஸ் v. ஃபிளெட்சர் வழக்கிலேயே சொல்லப்பட்டுள்ளது. எனவே, ஆபத்தான பொருள் வெளியேறிச் சென்றதற்கு வாதியே காரணமாக இருந்தார் என்று எதிர்வாதி வாதிடலாம். வாதி ஒரு நிலத்தில் அத்துமீறிச் சென்றிருந்தால் அங்குள்ள பொருள்களைப்பற்றி அவர் முறையீடு செய்ய முடியாது. ஒருவர் தம் நிலத்தை அடுத்துள்ள நிலத்தில் செய்யப்படும் தொழில்களால் தமது நிலத்திலுள்ள சுரங்கத்தில் வெள்ளம் புகுந்துவிடக் கூடிய ஆபத்து இருப்பதை அறிந்திருந்தும், அவ்வாறு வெள்ளம் வரத்தக்க விதத்தில் ஏதாவது ஒரு காரியத்தைச் செய்து ஆபத்தை நிகழக்கூடியதாக்கி இருந்தால் அவர் முறையிட முடியாது. பான்டிங் v. நோக்ஸ் (Ponting v. Noakes) வழக்கில் வாதியின் குதிரை எதிர்வாதியின் நிலத்தின் எல்லைக்குள் தலையை நீட்டி அங்குள்ள நச்சுமரத்தின் இலைகளைத் தின்றதால் மாண்டது. இங்கு வாதியின் குதிரை தானே அந் நிலத்தில் நுழைந்ததால் ஊறு ஏற்பட்டது. எனவே, இவ் வழக்கில் வாதிக்கு நிவாரணம் கிடைக்கவில்லை. அத்துமீறி நுழையும் விலங்குகளுக்கு ஆபத்து நேராமல் பார்த்துக் கொள்ளவேண்டிய கடமை எதிர்வாதிக்கு இல்லை. மற்றும் வாதி தம்முடைய சொத்தை ஒரு தனித்த, அல்லது இயல்பல்லாத வகையில் பயன்படுத்தியிருந்தால் எதிர்வாதி பொறுப்பாளியாக மாட்டார். ஈஸ்ட்டர்ன் & சௌத் ஆஃப்ரிக்கன் டெலிகிராப் கம்பெனி லிமிடெட் v கேப்டவுன் டிராம்வேஸ் கம்பெனிஸ் லிமிடெட் (Eastern and South African Telegraph Co. Ltd. v. Cape Town Tramways Companies Ltd.) வழக்கில் எதிர்வாதிகளால் சேகரிக்கப்பட்டு, அவர்களுடைய டிராம் வண்டிகளோடப் பயன்பட்ட மின்சார ஓட்டம் வெளியேறிச் சென்று வாதிகள் தங்கள் நீர்மூழ்கிக் கப்பல்களுக்குக் கம்பி வழியாகச் செய்தியனுப்ப வைக்கப்பட்டிருந்த நுண்ணிய பதிவுக்கருவிகளுக்கு இடையூறு ஏற்படுத்தியது. இது வாதிகள் வைத்திருந்த கருவியின் நுட்பமான தன்மையினால் ஏற்பட்டது. சாதாரணத் தொழிலைச் செய்பவனுக்கு இதனால் ஊறு ஏற்பட்டிராது. எனவே, மின்சார ஓட்டம் வெளியேறியதால் ஏற்பட்ட தீங்கான விளைவுக்கு எதிர்வாதி பொறுப்பாளியாகமாட்டார் என்று தீர்ப்பளிக்கப்பட்டது. ஒருவன் தன்னுடைய சொத்தைத் தன்னுடைய தொழிலுக்காகவோ, மகிழ்ச்சிக்காகவோ தனித்த முறையில் பயன்படுத்து

வதன்மூலம் மற்றவர்களுடைய பொறுப்பினை அதிகரிக்க முடியாது.

(4) தெய்வச் செயல்: ஒரு விபத்துத் தெய்வச் செயலாகக் கருதப்பட வேண்டுமானால் மனிதரின் இடையீடு இல்லாமல், நேரடியான இயற்கைக் காரணங்களால் ஏற்பட்டதாக இருக்க வேண்டும். இது ரைலண்ட்ஸ் v. ஃபிளெட்சர் வழக்கில் சொல்லப் பட்ட விதிக்கு விலக்காக அந்தத் தீர்ப்பிலேயே சொல்லப்பட் டிருக்கிறது. இதற்கு எடுத்துக்காட்டாக நிக்கல்ஸ் v. மார்ஸ்லண்ட் (Nichols v. Marsland) வழக்கைச் சொல்லலாம். இவ் வழக்கின் விவரம் பொதுவான எதிர்வாதங்கள் என்னும் பகுதியில் சொல்லப் பட்டிருக்கிறது. பெரும்பான்மையான சூழ்நிலைகளில் மனிதனும் இயற்கையும் சேர்ந்து ஒரு முடிவை உருவாக்கியிருந்தாலும், ஒரு செயல் மனிதனின் செயலா? தெய்வச் செயலா ? என்பதையறிய, அது நிகழ உடனடியான, நேரடிக் காரணம் என்ன என்பதைப் பார்க்க வேண்டும்.

(5) சட்டப்படி உள்ள அதிகாரம்: சட்டம் அளித்துள்ள அதிகாரத்தின்படி ஒருவர் ஒரு செயலைச் செய்திருந்தால் அதை எதிர்வாதமாகச் சொல்லலாம். இங்குச் சட்டமே ரைலண்ட்ஸ் v. ஃபிளெட்சர் வழக்கில் சொல்லப்பட்டவிதிக்கு விலக்களிக்கிறது. சட்டம் அதிகாரம் அளித்துள்ள செயல்களை ஒருவர் கவனத்துடன் செய்திருந்தால், அதன் விளைவாக மற்றவருக்கு ஊறு ஏற்பட்டிருந் தாலும் வழக்கிட முடியாது. ஆபத்தான பொருள்களைப் பயன் படுத்த உட்கிடையாகவோ, வெளிப்படையாகவோ சட்டம் அதிகாரம் அளித்திருக்க வேண்டும். கிரீன் v. செல்சீ வாட்டர் ஒர்க்ஸ் கம்பெனி (Green v. Chelsea Water Works Co.) வழக்கில் எதிர்வாதியின் கம்பெனிக்குச் சொந்தமான அடித்தலப் பெரிய நீர்க்குழாய் வெடித்ததனால் வாதியின் கட்டடத்திற்குள் வெள்ளம் புகுந்து. அது வெடித்தது எதிர்வாதியின் கவன மின்மையாலன்று. எதிர்வாதி கம்பெனிக்கு நீர் வழங்கு திட்டத்தின் அடித்தலப் பெருங்குழாய் வைக்கச் சட்டப்படி அதிகாரம் அளிக்கப்பட்டிருந்தது. அதற்குத் தொடர்ந்து நீர் வழங்க வேண்டிய கடமையும் இருந்தது. இவ் வழக்கில் வாதிக்கு எதிர்வாதி தீங்கீடு தரவேண்டியதில்லை என்று தீர்ப்பளிக் கப்பட்டது. இங்கு எதிர்வாதி தனது சொந்தக் காரியங்களுக்காக நீரைத் தேக்கவில்லை. சட்டப்படி கடமையைச் செய்யும்போது அவ்வப்போது தவிர்க்க முடியாத வகையில் ஊறு நேரலாம். இதைச் சட்டம் உட்கிடையாக ஊகித்து, அவர்களுக்குப் பொறுப் பிலிருந்து விலக்கு அளிக்கிறது.

(6) **மூன்றாவது நபரின் செயல்:** ஆபத்தான பொருள் வெளியேறிச் சென்றதற்கு ஒரு மூன்றாவது நபரின் முன்னறிய முடியாத செயல் காரணமாக இருந்தால் இந்த விதி பொருந்தாது. எனவே, இந்த மூன்றாவது நபர் வாதியின் கட்டுப்பாட்டிலுள்ள பணியாளோ முகவரோ அல்லராயின், அவர் இழைக்கும் ஊறுக்கு எதிர்வாதி பொறுப்பாளியாகமாட்டார். பாக்ஸ் v. ஜப் (Box v. Jubb) வழக்கில், எதிர்வாதியின் நீர்த்தொட்டி வழிந்தோடுவதற்கு அடுத்திருந்த நீர்த்தொட்டியின் சொந்தக்காரரின் செயல்களும் காரணமாக அமைந்திருந்தன. இவ் வழக்கில், எதிர்வாதியின் நீர்த்தொட்டியிலிருந்து நீர் வழிந்துசென்று சேதம் விளைவித்தது. மூன்றாவது நபர் ஒருவர் தமது நீர்த்தொட்டியிலிருந்து நீர் முழுவதையும் ஓர் ஓடையில் செலுத்தினர். எதிர்வாதி தமது நீர்த்தொட்டிக்கு அந்த ஓடையிலிருந்துதான் நீரைப் பெற்றார். எதிர்வாதியின் நீர்த் தேக்கத்தில் நீர் நிரம்பி வழிந்ததற்கு அடுத்திருந்த நீர்த்தேக்க உரிமையாளரின் செயலும் ஓரளவுக்குக் காரணமாக இருந்ததால் எதிர்வாதி பொறுப்பாளியல்லர். என்று தீர்ப்பளிக்கப்பட்டது. இதைப்போலவே ரிக்கர்ட்ஸ் v. லோதியன் (Rickards v. Lothian வழக்கில் எதிர்வாதியின் கட்டடத்திலிருந்த கழிவுத் தொட்டியின் குழாயைச் சில மூன்றாவது நபர்கள் அடைத்து, நீர்வரும் குழாயைத் திறந்துவிட்டார்கள். அந்த நீர் வழிந்தோடி வாதியின் வாணிகச் சரக்கிற்குச் சேதம் ஏற்படுத்தியது. இதற்கு எதிர்வாதி பொறுப்பாளி அல்லரென்று தீர்ப்பளிக்கப்பட்டது. ஆனால், மூன்றாம் நபரின் செயலை முன்னறிந்திருந்தாலும், அல்லது முன்னறிய முடிந்தாலும், எதிர்வாதி உரிய கவனம் காட்டி அச் செயலால் வாதிக்கு ஊறு நேராவண்ணம் தடுக்க வேண்டும்.

ஸ்டீவன்ஸ் v. உட்வர்ட் (Stevens v. Woodward) வழக்கில் எதிர்வாதிகளில் ஒருவராகிய வழக்குரைஞர் தம்முடைய பணியாள் கூடத் தமது சிறுநீர் கழிப்பிடத்தைப் பயன்படுத்துவதைத் தடை செய்திருந்தார். அவர் சென்றபின் ஒரு பணியாள் அந்தத் தடை செய்யப்பட்ட இடத்தில் கைகளைக் கழுவி நீர்க்குழாயைத் திறந்து விட்டுச் சென்றுவிட்டார். அதன் விளைவாக எதிர்வாதிகளின் கட்டடத்திற்குக் கீழேயுள்ள கட்டடப் பகுதியில் வெள்ளம் புகுந்து, வாதியின் சொத்திற்குச் சேதம் ஏற்பட்டது. இங்கு எதிர்வாதி கவனமின்றி இருக்கவில்லை. அக் குழாயைப் பயன்படுத்தக் கூடாதென்று பணியாளுக்கு வெளிப்படையாகத் தடை விதித்திருந்தார். எனவே, பணியாளை இங்கு ஒரு மூன்றாம் நபராகக் கருதலாம்.

(7) ரைலண்ட்ஸ் v. ஃபிளெட்சர் வழக்கில் சொல்லப்பட்ட விதியின்படி பொறுப்பேற்பட வேண்டுமானால் நிலத்தை அதன் இயல்பல்லாத முறையில் பயன்படுத்தியதால் இழப்பு ஏற்பட்டிருக்க வேண்டும். எனவே, நிலத்தை அதன் இயல்பான முறையில் பயன்படுத்தியிருந்தால் வழக்கிட முடியாது. நிலம் இயல்பான முறையில் பயன்படுத்தப்பட்டுள்ளதா என்பதை மாறிவரும் சமுதாய நிலைகளுக்கும், தேவைகளுக்கும் ஏற்பத் தீர்மானிக்க வேண்டும். எதிர்வாதியின் நடத்தையையும், அதனால் சமுதாயத்திற்கு ஏற்படும் பயனையும், அது எந்த அளவு கவனத்தோடு அமைந்திருக்கிறது என்பதையும் நீதிமன்றம் மதிப்பிட வேண்டும். நிலம் இயல்பல்லாத முறையில் பயன்படுத்தப்பட்டதா என்பதை ஒரு குறிப்பிட்ட வழக்கின் சூழ்நிலைகளிலிருந்தே அறியமுடியும். எதிர்வாதியின் செயலால் விளையக்கூடிய ஆபத்தின் அளவையும், அவனது செயல் சமுதாயத்துக்கும் எதிர்வாதிக்கும் எந்த அளவுக்குத் தேவையானது என்பதையும் நீதிமன்றம் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும்.

42. விலங்குகளை வைத்திருப்பதால் உண்டாகும் பொறுப்பு
(Liability for Animals)

விலங்குகளை வைத்திருப்பவர்கள் அவற்றைக் கவனத்தோடு வளர்க்க வேண்டும். ஒருவன் தன்னுடைய கட்டுப்பாட்டில் உள்ள விலங்கின் மூலம் மற்றவர்க்குத் தீங்கு இழைக்கக் கூடும். இவ்வாறு விலங்குகளினால் மற்றவர்களுக்குக் காயம் ஏற்படும்போது அவற்றை வைத்திருந்தவருக்கும், உரிமையாளருக்கும் ஏற்படக் கூடிய பொறுப்பு மூன்று வகையாகும்.

1. தீங்கியலில் சாதாரணமாக ஏற்படும் பொறுப்பு

எதிர்வாதி ஒரு தடி கொண்டோ, வேறு ஏதாவது ஒரு பொருளைக் கொண்டோ வாதியைத் தாக்கியிருந்தால் வாதி அவன் மேல் உடலைத் தாக்குதல் எனும் தீங்கிற்காக வழக்கிடலாம். எதிர் வாதி இவ்வாறு கல்லியெறிந்து தாக்குவதற்குப் பதிலாக அவனுடைய நாயைத் தூண்டிவிட்டு வாதியைக் கடிக்கச் செய்திருக்கலாம். இதுவும் சட்டப்படி தாக்குதலாகவே கருதப்படும். இதைப் போலவே எதிர்வாதி தன்னுடைய வாயினால் வாதியைப் பற்றி அவதூறு மொழிவதற்குப் பதிலாகத் தன்னுடைய கிளிக்குக் கற்றுக் கொடுத்து வாதியைப்பற்றி அவதூறைச்சொல்ல வைத்திருக்கலாம். இவ்வாறு செய்தல் எதிர்வாதி தானே அவதூறு இழைப்பதற்குச் சமமாகும். இதைத் தவிர விலங்குகளின் துணைகொண்டு பல தீங்குகளைப் புரியமுடியும். அடுத்த வீட்டில் குடியிருப்பவர் தம்முடைய சொத்தினை அமைதியான முறையில் அனுபவிக்க முடியாதவாறு ஒருவருடைய நாய் இடையூறாக இருக்கலாம். இது தொல்லையாகக் கருதப்படும். இதைப் போலவே மக்கள் குடியிருப்புப் பகுதியில் ஒருவர் வீட்டிற்குப் பக்கத்திலேயே பன்றிகளை அடைத்து

வைத்திருந்தால், அதிலிருந்துவரும் சகிக்கமுடியாத நாற்றத்தால் அடுத்த வீட்டுக்காரருக்குத் தொல்லை ஏற்படலாம். இதைப் போலவே சாலையில் கால்நடைகள் அல்லது வேறு விலங்குகள் கூட்டமாக ஓட்டிச் செல்லப்படும்போது அவை போக்குவரத்துக்கு இடையூறாக இருக்கக்கூடும். இதற்காக அந்தக் கால்நடைகளையோ, விலங்குகளையோ வைத்திருப்பவர்மீது கவனமின்மைக்காக வழக்கிடலாம். இதைப்போலவே சாலையில் விலங்குகள் ஓட்டிச் செல்லப்படும்போது அவற்றைச் சரியாக அடக்கி வைக்காததால் வழிப்போக்கருக்கு ஊறு நேரலாம். அதற்காக அவர் தீங்கியலில் வழக்கிடலாம். சியர்ட் v. வால்பேங்க் (Searte v. Wallbank) வழக்கில், வாதி தமது மிதிவண்டியில் நள்ளிரவு 1-30 மணிக்கு நெடுஞ்சாலையில் சென்றுகொண்டிருந்தார். அப்போது எதிர்வாதியின் குதிரை சாலையை அடுத்திருந்த அவருடைய நிலத்தில் வேலியிலிருந்த ஓர் ஓட்டையின் வழியாகத் தப்பிச் சாலைக்கு வந்து, வாதியின்மேல் மோதிக் கீழே தள்ளிக் காயப்படுத்தியது. இவ் வழக்கில் எதிர்வாதி கவனமின்றி இருக்கவில்லை என்பது சான்றுகள் மூலம் தெளிவாகியது. இதைத் தவிர வாதியின்பால் கவனம் காட்டவேண்டிய கடமையும் எதிர்வாதிக்கில்லை என்று சொல்லப்பட்டது. ஒரு சாலையை அடுத்துள்ள நிலத்தின் உரிமையாளருக்குச் சொந்தமான விலங்குகள் அந்த நிலத்திலிருந்து தப்பிச் சாலைக்கு ஓடி யாருக்காவது விபத்து ஏற்படுத்தினால் அவற்றின் உரிமையாளர் பொறுப்பாளியாகமாட்டார். சாலையை அடுத்துள்ள நிலத்தை உடையவர்கள் தமது விலங்குகள் சாலைக்குத் தப்பியோடாமல் தடுக்கத் தமது நிலத்தையொட்டிச் சாலை நெடுகிலும் வேலி அல்லது அடைப்பு வைக்கவேண்டிய கடமையில்லை. தவிர, மூர்க்கத்தனமானவை அல்லது ஆபத்தானவை என்று அவர் அறிந்திராத விலங்குகள் நெடுஞ்சாலைக்குச் சென்று அங்குச் செல்கின்றவர்களுக்குக் காயம் ஏற்படுத்தாமல் தடுக்க உரிய கவனம் காட்டவேண்டிய கடமையும் அவருக்கில்லை.

எனவே, இவ் வழக்கில் எதிர்வாதி பொறுப்பாளியல்லரென்று தீர்ப்பளிக்கப்பட்டது. இவ் வழக்கில் சொல்லப்பட்ட விதிக்குச் சில விலக்குகள் உண்டு. முதலாவதாக, எதிர்வாதியின் விலங்கு கொடியதாகவும், மூர்க்கத்தனமாகத் தாக்கும் இயல்புடையதாகவும் இருப்பது எதிர்வாதிக்குத் தெரிந்திருந்தால் அதனால் ஏற்படும் விளைவுகளுக்குப் பொறுப்பாளியாவார். இரண்டாவதாக, தப்பிச் செல்லும் விலங்குகள் போக்குவரத்துக்கு இடையூறாக இருப்பினும் பொறுப்பு ஏற்படலாம். எடுத்துக்காட்டாக, கன்னிங்ஹாம் v. வெலன் (Cunningham v. Whelen) வழக்கில் எதிர்வாதியின் ஆட்களும், பசுக்களும் நெடுஞ்சாலையில் அடைத்துக்கொண்டு

நின்று வாதியின் வண்டியை நெருக்கிச் சாய்த்துவிட்டன. எதிர் வாதி கவனமின்மைக்குப் பொறுப்பாளியானார். விலங்குகள் நெடுஞ்சாலைக்குத் தப்பியோடாமல் தடுக்கவேண்டிய கடமை ஒருவருக்கில்லையென்று கண்டோம். ஆனால், அவற்றை நெடுஞ் சாலைக்குக் கொண்டுவந்திருந்தால் தகுந்த முறையில் அடக்கி வைத்திருக்க வேண்டும். அவ்வாறு அவற்றைக் கட்டுப்படுத்தி யிராவிட்டால் அவை விளைவிக்கும் ஊறுக்குப் பொறுப்பு ஏற்படும். டீன் v. டேவிஸ் (Deen v. Davies) வழக்கில் எதிர்வாதி பொதுவாகச் சாதுவான தனது மட்டக்குதிரையை ஒரு பெரிய நகருக்கு ஓட்டிச் சென்று, சாலையை நோக்கி அமைந்திருந்த தொழுவத்தில் சரி யாகக் கட்டாமல் விட்டுச் சென்றார். அது அங்கிருந்து தப்பி வீட்டை நோக்கியோடும்போது வாதியை இடித்துத் தள்ளியது. இதனால் வாதிக்கு ஏற்பட்ட காயத்திற்கு எதிர்வாதி பொறுப்பாளி யாவார் என்று தீர்ப்பளிக்கப்பட்டது. காம்பர்க் v. ஸ்மித் (Gomberg v. Smith) வழக்கில் எதிர்வாதியின் பெரிய நாய் வாதி யின் வண்டியின்மேல் மோதிச் சேதம் ஏற்படுத்தியது. வாதிக்கும் சிறு காயங்கள் ஏற்பட்டன. எதிர்வாதி தம்முடைய நாயைத் தகுந்த முறையில் கட்டுப்படுத்தி வைக்காத காரணத்தால் பொறுப் பாளியாகக் கருதப்பட்டார். ஆனால், எதிர்வாதி விலங்கினை அடக்குவதில் மிகச் சிறந்த முறையில் கவனம் காட்டியிருந்தும் அவரையும் மீறிச்சென்று அது விபத்து ஏற்படுத்தியிருந்தால் அவர் பொறுப்பாளியாகமாட்டார் என்று டில்லட் v. வார்ட் (Tillet v. Ward) வழக்கில் சொல்லப்பட்டது. இதைப் போலவே ஹோம்ஸ் v. மாதர் (Holmes v. Mather) வழக்கிலும் தீர்ப்பு வழங்கப்பட்டது. மனிதர்கள் தங்களது தொழில்களைத் தங்கு தடையின்றிச் செய்வதற்கு வசதியாக, சாலையில் செல்லும் மனிதர்கள் மற்றவர் களால் உரிய கவனம் காட்டப்பட்டும் தவிர்க்க முடியாத முறையில் விலங்குகளால் ஏற்படும் இடர்களை எதிர்பார்த்து அவற்றைப் பொறுத்துக்கொள்ளத்தான் வேண்டும் என்று இவ் வழக்கில் சொல்லப்பட்டது.

விலங்குகளால் ஏற்படும் சாதாரணப் பொறுப்பில் 1971-ல் இங்கிலாந்தில் இயற்றப்பட்ட விலங்குகள் சட்டத்தால் (Animals Act, 1971) மாறுதல் செய்யப்படவில்லை. ஆயினும், சாலையை அடுத்துள்ள நிலங்களிலிருந்து வேலிகளைத் தாண்டிச் சாலைக்குச் சென்று அங்குச் செல்பவர்களுக்கு ஊறு விளைவித்தால் அந்த நிலங்களை உடையவருக்குப் பொறுப்பில்லையெனும் விதி இச்சட்டத் தால் ஒழிக்கப்பட்டுவிட்டது. எனவே, சாலைக்குச் சென்று ஒரு விலங்கு அங்குச் செல்பவருக்குக் காயம் ஏற்படுத்தினால் தீங்கியலில்

இனிப் பொறுப்புண்டு. ஆனால், சில பகுதிகளில் நிலத்திற்கு வேலி யிடும் வழக்கம் இல்லாமல் இருக்கலாம். எனவே, அப்படிப்பட்ட பகுதியில் ஒருவர் தம்முடைய வேலியிடப்படாத நிலத்தில் விலங் கினை வைத்திருப்பதாலேயே அவர் கவனம் காட்டவேண்டிய கடமையிலிருந்து தவறினர் என்று சொல்ல முடியாது. தீங்கியலில் விலங்குகளுக்கான பொறுப்பு எத்தகையதாயினும், தரப்பினர் தங்களிடையே செய்யும் ஒப்பந்தத்தின் மூலம் பொறுப்பிலிருந்து விலக்கினை அளிக்கலாம்.

2. கால்நடைகளின் அத்துமீறல்

ஒருவருடைய கால்நடை மற்றவருடைய நிலத்தில் அத்து மீறிப் புகுந்து இருந்தால் தீங்கியலில் பொறுப்புண்டு. இது ஒரு வகையான கடும் பொறுப்பாகும். இவ்வாறு ஒருவருடைய கால்நடை அத்துமீறி மற்றவருடைய நிலத்தில் புகுந்தால் அவற் றின் உரிமையாளர் கவனமின்றி இருந்தார் என்று நிரூபிக்கத் தேவையில்லை. எல்லீஸ் v. லாப்ட்ஸ் அயர்ன் கம்பெனி (Ellis v. Loftus Iron Co.) வழக்கில் எதிர்வாதியின் நிலத்திற்கும் வாதி யின் நிலத்திற்கும் இடையில் போடப்பட்டிருந்த கம்பிவேலியின் வழியாக எதிர்வாதியின் குதிரை, வாதியின் குதிரையை உதைத் துக் கடித்துவிட்டது. குதிரையின் உடல் நிலத்தின் எல்லையைக் கடக்காமல் இச் செயலைச் செய்திருக்க முடியாது. எனவே, கால்நடை அத்துமீறல் இருந்ததாக இவ் வழக்கில் தீர்ப்பளிக்கப் பட்டது. எதிர்வாதியின் குதிரையின் மூர்க்கத்தனம் அவருக்குத் தெரியும் என்றே, அவர் கவனமின்றி இருந்தார் என்றே வாதி நிரூபிக்கத் தேவையில்லை.

கால்நடை என்று நாம் குறிப்பிடுவது ஆடு, மாடு, பன்றி, குதிரை, கோழி, வாத்து, பழக்கப்பட்ட மான் போன்றவை. ஆனால், நாய்களும் பூனைகளும் அத்துமீறிப் புரியும் சேதத்தைக் கால்நடை களின் அத்துமீறலாகக் கருதமுடியாது. பக்கில் v. ஹோம்ஸ் (Buckle v. Holmes) வழக்கில் எதிர்வாதியின் பூனை வாதியின் நிலத்திற்குச் சென்று, அங்கிருந்த 13 புருக்களையும், இரு கோழி களையும் கொன்றுவிட்டது; பறவைகளைக் கொல்வது பூனையின் பொதுவான இயல்பு. இது எதிர்வாதியின் பூனைக்கு மட்டும் உள்ள தனிப்பட்ட பண்பன்று நாய்களைப்போலவே பூனைகளும் சுற்றித் திரியும் இயல்புடையவை. தவிர, பூனை கால்நடைகளில் ஒன்றாகக் கருதப்படுவதில்லை. எனவே, எதிர்வாதி பொறுப்பாளியாகமாட்டார் எனச் சொல்லப்பட்டது. இது நாய்களில் விலையும் இடருக்கும் பொருந்தும். ஆனால், எதிர்வாதியின் பூனை பலமுறை வாதியின்

கோழிக்குஞ்சுகளைக் கொன்றிருந்து, அவரை வாதி எச்சரித்திருந்து அந்தப் பூனை நிலத்தில் நுழைந்த வழியை (வேலியில் உள்ள ஓட்டை) அடைக்குமாறு கேட்டுக்கொண்டிருந்தும் எதிர்வாதி கவனமின்றி இருந்திருப்பின், அந்தப் பூனையின் செயலுக்குக் கவனமின்மைக்காகவும் தொல்லைக்காகவும் பொறுப்பாளியாகி யிருப்பார். ஆனால், அவருக்கு அத்துமீறலுக்குப் பொறுப்பு ஏற்படாது. இவ் வழக்கில் சொல்லப்பட்டதெல்லாம் பூனை கால் நடையின் இனத்தைச் சேர்ந்ததன்மையால் பூனையின் மூலம் கால்நடை அத்துமீறல் தீங்கிழைக்க முடியாது.

கால்நடைகளின் அத்துமீறலால் நேரடியாக ஏற்படும் விளைவு கள் அனைத்துக்கும் அவற்றின் சொந்தக்காரார் பொறுப்பாளி யாவார். தேயர் v. பர்னல் (Theyar v Purnell) வழக்கில் வாதியின் நிலத்தில் அத்துமீறி நுழைந்த எதிர்வாதியின் ஆடுகளுக்குச்சொறி பிடித்திருந்தது. அரசாங்க அதிகாரிகளால் அவை அங்கேயே காவலில் அடைத்து வைக்கப்பட்டன. அவை வாதியின் ஆடு களுக்குச் சொறியைப் பரப்பின. எதிர்வாதிக்கு அவருடைய ஆடுகளுக்குச் சொறிநோய் பற்றியிருந்தது தெரியாதாயினும், வாதியின் ஆடுகளுக்கு அவற்றின்மூலம் சொறி பரவியதால் ஏற் பட்ட இழப்புக்குப்பொறுப்பாளியாகக் கருதப்பட்டார். இங்கு வாதிக்கு ஏற்படட இழப்பு எதிர்வாதியின் கால்நடையின் அத்து மீறலால் நேர்ந்த இயல்பான விளைவாகும். ஒவ்வோர் ஆட்டுச் சொந்தக்காரரும் தமது ஆட்டுக்குச் சொறி பிடிக்கக்கூடும் என்று அறிந்திருக்க வேண்டும். ஓர்மால்ட் v. கோல் (Wormald v. Cole) வழக்கில் எதிர்வாதியின் மாடு அத்துமீறிச் சென்று வாதியை முட் டித் தள்ளிக் காயப்படுத்தியது. மாடு முட்டுவது அதன் இயல்பான பண்பாயினும் அது அத்துமீறிச் சென்றதன் நேரடி விளைவாகவே வாதிக்கு உடற்காயம் ஏற்பட்டதாகையால் எதிர்வாதி பொறுப்பாளி யாகக் கருதப்பட்டார்.

கால்நடை நிலத்தில் அத்துமீறுவதால் ஏற்படும் சேதத்திற்குத் தீங்கீடு கோரி அந்த நிலத்தை உடையவரே வழக்கிடமுடியும் என்றும், அவரது குடும்பத்தினரோ உறவினரோ வழக்கிட முடியாது என்றும் சொல்லப்பட்டது. எனவே, அத்துமீறல் நிகழும்போது வாதிக்கு நிலத்தில் உடைமை இருந்திருக்க வேண்டும். எனவே, ஒரு நிலத்தை உடை யவருடைய விருந்தாளி களோ, மற்றவர்களோ வழக்கிடமுடியாது. காக்ஸ் v. பர்பிட்ஜ் (Cox v. Burbidge) வழக்கில் நெடுஞ்சாலையில் சென்றுகொண் டிருந்த வாதி-குழந்தையைச் சாலையில் அத்துமீறிச் சென்ற எதிர் வாதியின் குதிரை மோதித் தள்ளிக் காயப்படுத்தியது

அந்த நெடுஞ்சாலை அமைந்துள்ள நிலத்தின் உரிமையாளரே அத்துமீறலுக்காக வழக்கிடமுடியும். குழந்தை சாலையைப் பயன் படுத்தியதே தவிர, அதன் உரிமையாளரன்று. தவிர, எதிர்வாதி கவனமின்றி இருக்கவில்லை. அதன் மூர்க்கக் குணம் அவருக்குத் தெரிந்திருக்கவில்லை. எனவே, அவர் பொறுப்பாளியல்லரென்று தீர்ப்பளிக்கப்பட்டது.

மான்டன் v. பிராக்கில் பேங்க் (Manton v. Brockle Bank) வழக்கில் அத்துமீறல் இல்லாவிட்டால், ஒரு விலங்கு நிலத்தில் உள்ளவருக்கோ அங்குள்ள பொருள்களுக்கோ இழைக்கும் ஊறுக்குப் பொறுப்பில்லை என்று சொல்லப்பட்டது. 'அ' என்ப வருக்குச் சொந்தமான நிலத்தில் அவரது இசைவுடன் வாதி தம் முடைய குதிரையை அங்கு வைத்திருந்தார். பின்னர் 'அ'-வின் இசைவுடன் எதிர்வாதியும் தமது குதிரையை அங்கு விட்டிருந்தார். ஆனால், இதைப்பற்றி அவர் வாதிக்குச் சொல்லவில்லை. எதிர் வாதியின் குதிரை வாதியின் குதிரையை உதைத்துவிட்டது. எதிர்வாதியின் குதிரை அத்துமீறி அந்த நிலத்தில் இல்லாததால் கால்நடை அத்துமீறலுக்கு எதிர்வாதி பொறுப்பாளி அல்லரென்று தீர்ப்பளிக்கப்பட்டது.

கால்நடை அத்துமீறலுக்கான வழக்கில் எதிர்வாதி பின்வரும் எதிர்வாதங்களைச் சொல்லலாம்.

(1) கால்நடை நுழைந்து வந்த வேலியை நல்ல நிலையில் வைத்துக்கொள்ள வேண்டிய கடமை சட்டப்படியோ நீடனுபோக உரிமைப்படியோ (Prescription) வாதிக்கு இருந்த தென்றும், அவர் அதிலிருந்து தவறியதால்தான் கால்நடை அத்து மீறி நுழைய வாய்ப்பேற்பட்டதென்றும் எதிர்வாதி சொல்லலாம்.

(2) நெடுஞ்சாலையை யொட்டியுள்ள நிலத்தில் இருப்பவர்கள் நெடுஞ்சாலை வழியே செல்லும் போக்குவரத்தினால் ஏற்படக்கூடிய ஆபத்துகளை ஏற்க இசைந்திருப்பதாகவே ஊகித்துக் கொள்ளப் படுவர். எடுத்துக்காட்டாக, ஏற்கெனவே சொல்லப்பட்ட டில்லட் v. வார்டு (Tillett v. Ward) வழக்கைச் சொல்லலாம். இவ் வழக்கில் வாதி தம்முடைய இரும்புக் கடைக்கு எதிர்வாதி நெடுஞ்சாலை வழியே ஓட்டிச் சென்ற எருது தப்பிச்சென்று சேதம் விளைவித்ததற்குத் தீங்கீடு பெறமுடியவில்லை. ஏனெனில், எருது தப்பிச் சென்றது எதிர்வாதியின் கவனமின்மையாலன்று.

(3) கால்நடையின் அத்துமீறல் தெய்வச் செயலால் ஏற் பட்டதென்று எதிர்வாதி சொல்வது ஏற்றுக்கொள்ளக்கூடிய

எதிர்வாதமாகும். இதைத் தவிர, எதிர்வாதி கால்நடையைக் கட்டுப்படுத்த முடியாமல் போய்விடலாம். இச் சூழ்நிலையில் அதன் அத்துமீறல் அவர் எண்ணுமல் நிகழ்வது; விரும்பிச் செய்யாதது. எனவே, எதிர்வாதிக்குப் பொறுப்பேற்படாமல் போகலாம். ஆயினும், வேறு வகையில் ஏற்படும் தவிர்க்க முடியாத விபத்தினை எதிர்வாதமாக ஏற்றுக்கொள்ளமுடியாது.

1971 ஆம் ஆண்டில் இங்கிலாந்தில் இயற்றப்பட்ட விலங்குகள் சட்டம் வீட்டு விலங்குகளின் அத்துமீறலுக்கான பொறுப்பினைப் பற்றிப் பின்வருமாறு சொல்கிறது. ஒருவருக்குச் சொந்தமான வீட்டு விலங்கு மற்றவருக்கு உரிமையோ உடைமையோ உள்ள நிலத்தில் நுழைந்து, அவருக்கு உரிமையோ உடைமையோ உள்ள சொத்திற்குச் சேதம் விளைவித்திருந்தால், அதற்காக அவர் தீங்கீடு தரவேண்டும். இதைத் தவிர அந்த விலங்கின் உரிமையாளரைக் கண்டுபிடிக்கும்வரை அதை வைத்திருப்பதற்காகவோ அவர் யாரென்று கண்டுபிடிப்பதற்காகவோ நிலத்தில் உடைமை அல்லது உரிமை கொண்டவர் முறையாகச் செலவு செய்த தொகையை அத்துமீறி நுழைந்த விலங்கின் உரிமையாளரிடமிருந்து இழப்பீடாகப் பெறலாம். இங்கு வீட்டு விலங்கு யாருடைய உடைமையில் உள்ளதோ அவருக்கே அது உரியதாகக் கருதப்படும்.

3. தெரிவுறுநிலை விதியின் கீழ் ஏற்படும் பொறுப்பு (Liabitity under the scienter rule)

இயற்றுச் சட்டத்தின்படி ஒரு விலங்கை வைத்திருப்பவர் கவனமின்றியிருந்திராவிட்டாலும் அதன் குறும்புத் தன்மையை அறிந்திருந்தாலோ அறிந்திருக்க வேண்டுமென்று கருதப் பட்டாலோ, அது விளைக்கும் காயம் அல்லது இழப்புக்குக் கடும் பொறுப்பினை ஏற்கவேண்டும் என்று சொல்லப்பட்டது. தெரிவுறு நிலை விதியின்படி பொறுப்பினை முடிவுசெய்ய விலங்குகள் இரு வகையாகப் பிரிக்கப்பட்டிருந்தன:

(1) கொரில்லா, யானை, கரடி, புலி, குரங்கு, சிங்கம், வரிக் குதிரை போன்ற காட்டு விலங்குகள். இவைகள் தங்கள் இனத் திற்கே உள்ள அபாயகரமான தன்மையைக் கொண்டவை. இவற்றுல் பொதுவாக மனித இனத்திற்கு ஆபத்து உண்டு. இவற்றில் சில குறிப்பிட்ட விலங்குகள் பயிற்சி அளிக்கப்பட்டன வாக இருக்கலாம். எடுத்துக்காட்டாக, சர்க்கஸில் வித்தையைக் காட்டும் யானையைச் சொல்லலாம். இந்த ஆபத்தான தன்மை யுடைய காட்டு விலங்குகள் (Ferae Naturae) எனப்படும். இந்த

இனத்தைச் சேர்ந்த விலங்குகள் ஒருவருக்கு ஊறு விளைவித்திருந்தால் அவற்றை வைத்திருப்பவர் பொறுப்பாளியாகக் கருதப்படுவார். அவை ஆபத்தான தன்மை அல்லது மூர்க்கத்தனம் கொண்டவை என்று நிரூபிக்கவோ, அவற்றை வைத்திருப்பவர்க்கு அது தெரியும் என்றோ நிரூபிக்கத் தேவை இல்லை. அவற்றின் ஆபத்தான தன்மை அறுதியாக ஊகித்துக்கொள்ளப்படும். எனவே, அவற்றை வைத்திருப்பவர் அவை தப்பிச் சென்று விளைவிக்கும் ஊறுக்குப் பொறுப்பாளியாவார்; அவர் கவனமின்றி இருந்ததாக நிரூபிக்கத் தேவையில்லை.

இரண்டாவதாக, சாதுவான வீட்டு விலங்குகள் (Mansuetae Naturae). இவை தம் பழக்கத்தாலும் பயிற்சியாலும் மனிதனோடு சேர்ந்து உறைபவை. இவை இயல்பாகவே மனித இனத்திற்கு ஆபத்தானவை அல்ல. இவற்றிற்கு எடுத்துக்காட்டாக நாய், மாடு, குதிரை, ஆடு, பூனை, ஒட்டகம் முதலியவற்றைச் சொல்லலாம். இவை மூர்க்கத்தனமான, குறும்பான, அல்லது இடர் விளைக்கும் இயல்பினைக் காட்டாதவரை அவை ஊறு விளைவிக்கா தவையென்று அறுதியாக ஊகிக்கப்படும். இந்த இனத்தைச் சேர்ந்த சில குறிப்பிட்ட விலங்குகள் ஆபத்தானவையாகச் மாறிவிட்டிருக்கக் கூடும்.

ஒரு குறிப்பிட்ட விலங்கினம் மூர்க்கத்தனமுடைய, இடர் விளைக்கும் காட்டு விலங்கா, சாதுவான வீட்டு விலங்கா என்பது சட்டப்படி முடிவுசெய்யப்படவேண்டிய பிரச்சினையாகும். ஏனெனில், இது நீதிமன்றமே தீர்மானிக்க வேண்டிய ஒன்றாகும். எடுத்துக்காட்டாக, மனிதனைக் கடிப்பது நாயின் இயல்பன்று என்பது சட்டமே கூறும் விதியாகும். சட்டம் நாயை வீட்டு விலங்கு என்று கருதுகிறது. அது காட்டு விலங்கன்று என்றும் முடிவு செய்துள்ளது. இது ஒரு தனிப்பட்ட நாயின் இயல்பைப் பார்த்துச் செய்யப்பட்ட முடிவன்று. இதே முறையில், மனிதனைத் தாக்குதல் யானையின் இயல்பு என்றும், எருது, ஒட்டகம் ஆகியவற்றின் இயல்பல்லவென்றும் சட்டமே முடிவு செய்துள்ளது. எந்த விலங்கு மூர்க்கத்தனமானது? எந்த விலங்கு சாதுவானது? என்பது யாவருக்கும் தெரிந்துள்ள ஒன்றாகக் கருதப்பட்டது. எனவே, இந்த அடிப்படையில் விலங்குகளை இனம் பிரிப்பது அனுபவத்தின் துணைகொண்டு செய்யப்படும்.

ஒரு குறிப்பிட்ட விலங்கின் மூர்க்கத்தனத்தைப்பற்றி அறிந்திருப்பதையே தெரிவுறுநிலை என்று சொல்லுகின்றோம். ஆபத்தான காட்டு விலங்கை வைத்திருப்பவருக்குக் கடுமையான

பொறுப்புண்டு. அவை தப்பிச் சென்று இடர் விளைவித்தால் கடும் பொறுப்பு ஏற்படும். அப்போது அவர் கவனமின்றியிருந்தார் என்று நிரூபிக்கத் தேவையில்லை. எனவே, அவர் அந்த விலங்குகள் அவர் வசம் இருந்து தப்பிச் செல்லாதவாறும், இடர் விளைவிக்காமலும் பார்த்துக் கொள்ளவேண்டும். இது நடைமுறைக்குகந்த நல்லதொரு விதியாகும். மே v. பர்டட் (May v. Burdett) வழக்கில் எதிர்வாதி தம்முடைய கட்டடத்தில் வைத்திருந்த குரங்கு ஒன்று வாதியைக் கடித்துவிட்டது. அக் குரங்கு குறும்பு செய்யும் இயல்புடையதென்றும், மனிதர்களைத் தாக்கிக் கடிக்கும் பழக்கம் கொண்டதென்றும் எதிர்வாதி அறிந்திருந்தார். இவ் வழக்கில் எதிர்வாதி அக் குரங்கினால் பிறருக்கு இடர் ஏற்படாதவாறு முன்னெச்சரிக்கையான ஏற்பாடுகளைச் செய்வதில் கவனமின்றி இருந்திருந்தால்தான் தாம் பொறுப்பாளியாவார் என்று வாதிட்டார். அதன் அபாயகரமான இயல்பினை அவர் அறிந்தும் அதை வளர்த்தார் என்றும், எனவே அதைக் கயிறு அல்லது சங்கிலி கொண்டு நன்கு கட்டிவைத்திருக்க வேண்டிய கடும்பொறுப்பு அவருக்குண்டென்றும் நீதிமன்றம் கருதியது. அந்தக் குரங்கு கடித்ததன் விளைவாக வாதிக்குக் காயம் ஏற்பட்டதோடு, அவர் நெடுங்காலம் உடல் நலங்குன்றியவராக இருக்க நேர்ந்தது. இவ் வழக்கில் எதிர் வாதி கவனமின்றியிருந்தார் என்று வாதி நிரூபிக்கத் தேவையில்லை யென்றும், நீதிமன்றமே எதிர்வாதி கவனமின்றி இருந்தாரென உட்கிடையாக ஊகித்துக்கொள்ளும் என்றும் சொல்லப்பட்டது. இங்குக் கவனமின்மை என்பது அக் கொடிய விலங்கின் மூர்க்கத் தனத்தை அறிந்திருந்தும் அதை வைத்திருப்பதாகும். கொடிய காட்டு விலங்குகளின் மூர்க்கத்தனத்தைப் பற்றிய தெரிவுறு நிலையை நிரூபிக்க வேண்டியதில்லை.

வனவிலங்குகளை வைத்துக்கொண்டு காட்சி நடத்துவது குற்றமன்று. அது சட்டப்படி ஒருவர் செய்யக்கூடிய தொழில் ஆகும். எனவே, ஆபத்தான விலங்கினை வைத்திருப்பதே குற்ற மாகாது. ஆடு மாடுகளை வளர்ப்பது எப்படிச் சட்டப்படி குற்றமா காதோ அதைப் போலவே சிங்கம், புலி ஆகியவற்றை வைத்து வளர்ப்பதும் குற்றமாகாது. சட்டம் இவ்வாறில்லையெனின் மிருகக் காட்சிசாலை வைத்து நடத்துபவர் சட்டத்தை நிரந்தரமாக மீறும் நிலையில் இருப்பவர்களாகிவிடுவார். சிங்கமாயினும், மாடாயினும் வாய்ப்புக் கிடைத்தால் தங்கள் இனத்துக்குரிய குறும்பினைச் செய்யும். எனவே, காட்டு விலங்கை வைத்திருப்பது சட்டப்படி யான செயலாயினும், அதனால் தவிர்க்கமுடியாதபடி இடர் ஏற்பட்டாலும் அதை வைத்திருப்பவர் பொறுப்பாளியாகக் கருதப் படுவார்.

இதற்கு எடுத்துக்காட்டாக, பெஹ்ரன்ஸ் v. பெர்ட்ராம் மில்ஸ் சர்க்கஸ் லிமிடெட்(Behrens v. Bertram Mills Circus Ltd.)வழக் கைச் சொல்லலாம். இவ் வழக்கில் எதிர்வாதிகள் ஒலிம்பியாவில் உள்ள 'கிரேண்ட் ஹால்' என்னும் ஓர் அரங்கில் ஆண்டுதோறும் வட்டரங்கு (Circus) நடத்தி வந்தார்கள். அந்த அரங்கில் காட்சிக் கொட்டகை அமைந்திராத பகுதி கேளிக்கை அரங்காகப் பயன் படுத்தப்பட்டது. அந்தக் கேளிக்கை யரங்கும் எதிர்வாதியின் கட்டுப்பாட்டிலேயே இருந்தது. அங்குக் கேளிக்கை நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு அவர்கள் உரிமங்கள் வழங்கினர்கள். இந்த முறையில் கணவனும் மனைவியுமாகிய குறளர்கள் (வாதிகள்) தங்கள் வேடிக்கை நிகழ்ச்சிகளை நடத்த ஒரு சாவடியை எதிர்வாதி களிடமிருந்து பெற்றிருந்தனர். எதிர்வாதிகளின் காட்சிக் கொட்ட கைக்குச்செல்லும் நடைவழியில் இந்தச் சாவடி அமைந்திருந்தது. நாள்தோறும் அந்த வழியில் எதிர்வாதிக்குச் சொந்தமான பர்மா யானைகள் காட்சி அரங்கிற்கு நடத்திச் செல்லப்பட்டன. ஒரு நாள் அந்த யானைகள் அவ் வழியாகக் கொண்டு செல்லப்படும் போது எதிர்வாதியின் மகள் வைத்திருந்த ஒரு நாய்க்குட்டி கூடாரத்தைவிட்டு வெளியே வந்து, யானைகளைப் பார்த்துக் குரைத்தது. எதிர்வாதியின் உத்தரவுக்கெதிராக அவள் அந்த நாய்க்குட்டியை வைத்திருந்தாள். நாய்களைக் கண்டு யானைகள் எளிதாகப் பயப்படும் இயல்புடையவை. அந்த நாய் குரைக்கவே ஒரு யானை அச்சமுற்று அந்த நாயின் பக்கம் திரும்பியது. மற்ற யானைகளும் அதைத் தொடர்ந்து சென்று நாயை மிதித்துக் கொன்றன. பின்னர் ஒரு யானை, வாதிகள் தங்கியிருந்த சாவடிக் குள் நுழைந்து அதைக் கீழே சாய்த்தது. எந்த யானையும் வாதி களை மிதிக்கவில்லை. சாவடியின் ஒரு பகுதி வாதி-மனைவியின் தலையில் விழுந்து அவளுக்குக் கடுமையான உடற்காயங்கள் ஏற்பட்டன. அவளுடைய கணவனுக்கு அதிர்ச்சி ஏற்பட்டது. இவ் வழக்கில் எதிர்வாதிகள் அந்த யானை வழக்கமாகச் சாது வானதென்றும், அது ஒரு மாட்டைவிட ஆபத்தானதன்றென்றும் வாதிட்டனர். அந்த யானை அபாயகரமான காட்டு விலங்காயினும் அது நன்கு பழக்கப்படுத்தப்பட்டதென்றும், காட்சியில் வித்தை காட்டப் பயிற்சியளிக்கப்பட்டதென்றும், அது பயந்துவிட்டதால் வாதியின் குடிசையைச் சாய்த்தது என்றும் எதிர்வாதிகள் வாதிட் டனர். இதை நீதிமன்றம் ஏற்கவில்லை. காட்டு விலங்குகளைப் பொறுத்தவரை அவற்றிற்குக் குற்றமனம் இருந்ததா? பழிவாங்கும் உணர்ச்சியிருந்ததா ? என்று ஆராயத் தேவையில்லை. ஒருவனைக் கடித்த நாய் அதன் பின்னர்ச் செய்யும் செயல்கள் அனைத்துக்கும் பொறுப்பாக்குவது சரியல்லவென்றாலும் ஒரு புலியை வைத்திருப் பவன் பொறுப்பை இவ்வகையில் கட்டுப்படுத்தலும் சரியாகாது.

எடுத்துக்காட்டாக, தூங்கிக்கொண்டிருக்கும் ஒரு மனிதன் நடு இரவில் விழித்துப் பார்க்கும்போது, அது அவனை அணைத்தவாறு அருகே படுத்திருப்பதைப் பார்த்தால் அவனுக்கு இதயத்துடிப்பு நின்றுவிடக்கூடும். அப்போது அங்கு வந்த புலி நல்லெண்ணத் துடனும், நட்புறவுடனும் வந்ததென்றும், அது பழக்கப்பட்ட தென்றும், இடர்விளைக்கும் நோக்கம் கொண்டதன்று என்றும் கூறினால் அது ஏற்றுக்கொள்ளக்கூடிய எதிர்வாதம் ஆகாது. நாயின் செயலாலேயே வாதிகளுக்குக் காயம் ஏற்பட்டது என்று சொல்வதையும் இவ் வழக்கில் ஏற்றுக்கொள்வதற்கில்லை. வாதி கள் தீங்கினை இசைந்தே ஏற்றுக்கொண்டார்கள் என்ற எதிர் வாதத்தை நீதிமன்றம் ஏற்காது. இங்கு அந்த விலங்கு காட்டு யானையாக இருந்தாலும் அல்லது மாட்டைப்போலச் சாதுவானதாக இருந்தாலும் எதிர்வாதிகளுக்கு ஏற்படும் பொறுப்பில் வேறுபாடு இல்லை. எனவே, அந்த யானை பழக்கப்பட்ட யானை என்று சொல்லப்பட்ட எதிர்வாதம் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. எனவே எதிர்வாதிகள் பொறுப்பாளியாகக் கருதப்பட்டனர்.

ஒரு விலங்கு வைக்கப்பட்டிருக்கும் கட்டடத்தின் சொந்தக் காரர் அந்த விலங்கினை உடையவராக இல்லாமல் இருக்கலாம். அப்போது அவரது அனுமதியுடன் அந்த விலங்கு அங்கு வைக்கப் பட்டிருந்தாலும், அதன் அபாயகரமானஇயல்பு அவருக்குத் தெரிந் திருந்தாலும் அவர் பொறுப்பாளியாவார்.

ஒருவர் வசத்திலிருந்து தப்பிச்சென்று தீங்கிழைக்கும் விலங் கிற்கு ஒருவன் எவ்வளவு காலத்திற்குப் பொறுப்பாளியாவான் என் பதற்கு விடைகூறுவது எளிதன்று. இயற்கையான சுதந்திரத் தோடு ஒரு பகுதியில் காணப்படும் விலங்கு, ஒருவனுடைய கட்டுப் பாட்டில் இருந்து தப்பிச் சென்று தனது இயற்கைச் சுதந்திர நிலையைத் மீண்டும் பெற்றதும், அவன் பொறுப்புத் தீர்ந்துவிடும். ஒரு கூண்டில் அடைபட்ட நரியையோ, பொறியில் சிக்கிய புலியையோ விடுவித்த பின்னர் அவை செய்யும் செயலுக்கு அவன் பொறுப்பாளியல்லன். இயற்கைச் சுதந்திர நிலையில் இல்லாத விலங்கினத்தைப் பொறுத்தவரை, வேறு ஒருவன் அதைச் சிறைப்பிடித்து, அதன் இடர்விளைக்கும் இயல்பை அறிந்துகொள்ளும் வரையிலுள்ள காலம்வரை முன்னர் அதை வைத்திருந்தவனுடைய பொறுப்பு நீடிக்கும். அதன்பின் அதன் புதிய உரிமையாளருக்குப் பொறுப்பு ஏற்படும்.

வீட்டு விலங்குகளை வைத்திருப்பவர்க்கு ஏற்படும் பொறுப்பு : ஊறு விளைவிக்காத, அல்லது வீட்டு விலங்குகளின் இனத்தைச் சேர்ந்த

ஒரு விலங்கு ஏற்படுத்தும் காயத்திற்கு எதிர்வாதியைப் பொறுப் பாளியாக்க வேண்டுமானால்,

(1) வாதி அந்த விலங்கு முன்னர் ஒருமுறையாவது மூர்க்கத் தனமான செயலைச் செய்ததாகவோ, செய்ய முயற்சி செய்ததாகவோ நிரூபிக்க வேண்டும். மற்றும் (2) அந்த விலங்கு அந்த மூர்க்கத்தனமான செயலைச் செய்தகென்பதையோ, செய்ய முயற்சி செய்த தென்பதையோ எதிர்வாதி அறிந்துள்ளார் என்பதை நிரூபிக்க வேண்டும். அந்த விலங்கின் சேட்டை அல்லது குறும்புத்தனம் அதன் இனத்திற்குப் பொதுவானதன்றென்றும் அவர் நிறுவ வேண்டும். எடுத்துக் காட்டாக, ஒருவர் தம்மை ஒரு நாய் கடித்ததாக வழக்கிடுகிறார். மனிதரைக் கடிப்பது நாய் இனத்தின் இயல்பான பண்பன்று. எனவே, தம்மை எதிர்வாதியின் நாய் கடித்ததாக வழக்கிடும் வாதி அந்த நாய் தான் சார்ந்துள்ள விலங்கினத்தின் இயல்புக்குப் புறம் பான முறையில் ஆபத்தானதாக இருந்தது என்பது எதிர் வாதிக்குத்தெரியும்என்று நிரூபிக்கவேண்டும்;எதிர்வாதிக்குத்தமது நாயின் உண்மையான இயல்பைத் தெரிந்துகொள்ளும் வாய்ப்பு இருந்த தென்றே, உரிய கவனத்தோடு நடந்து கொண்டிருந்தால் அவர் அதைத் தெரிந்துகொண்டிருப்பாரென்றே வாதி நிரூபித்தால் போதாது. அந்த நாய் முன்பு எவ்வாறு நடந்துகொண்டது என்று எதிர்வாதிக்கு உண்மையில் தெரிந்திருந்தால் மட்டுமே அவர் பொறுப்பாளியாவார். அந்த நாய் தன் இனத்திற்குரிய இயல்பிலிருந்து மாறுபட்ட இயல்புடையதாக இருந்ததென்று வாதி நிரூபிக்க வேண்டும். பிற விலங்குகளையோ, மனி தரையோ கடித்துக் காயப்படுத்தும் இயல்புடையதாக அது இருந் திருக்க வேண்டும். ஆனால், அந்த நாய் உண்மையில் முன்பு ஒரு வரைக் கடித்தது என்று நிரூபிக்க வேண்டியதில்லை. அந்த நாய் யாரையும் தாக்கியிராவிட்டாலும், தாக்க முயற்சி செய்தது என் பதையாவது நிரூபிக்க வேண்டும். அது தாக்கும் நோக்கம் கொண்டது என்று எதிர்வாதி அறிந்திருக்க வேண்டும். இங்கி லாந்தில் 1906-ல் இயற்றப்பட்ட நாய்கள் சட்டப்படி ஒருவரது நாய் பிறரது கோழிகளையோ ஆடு மாடுகளையோ கடித்துக் காயப் படுத்தினால் அவர் பொறுப்பாளியாவார். இதற்காக வழக்கிடும் வாதி அந்த நாய் முன்னர் இவ்வாறு செய்துள்ளது எதிர்வாதிக்குத் தெரியும் என்றே அவர் கவனமின்றியிருந்தார் என்றே நிரூபிக்க வேண்டியதில்லை என்று இச் சட்டம் கூறுகிறது. எதிர்வாதியைப் பொறுப்பாளியாக்க மேலே கூறிய தெரிவுறுநிலை விதிகளை நிரூபிக்க வேண்டும்.

ஆனால், வாதி சொல்லும் தீங்கைச் செய்யும் இயல்பு அவ் விலங்குக்கு இருந்ததாக அவர் நிரூபிக்க வேண்டும். அதாவது எந்தத் தீங்கை அவ் விலங்கு செய்ததாக வாதி முறையீடு செய் கிறாரோ அந்தக் குறிப்பிட்ட தீங்கை முன்னர் அது செய்ததாகவோ, செய்ய முயன்றதாகவோ எதிர்வாதி அறிந்திருந்தார் என்று வாதி நிரூபிக்க வேண்டும். எடுத்துக்காட்டாக, எதிர்வாதி யின் குதிரை தம்மைக் கடித்ததாகச் சொல்லும் வாதி முன்னர் அந்தக் குதிரை வேறு குதிரைகளைக் கடித்துள்ளது என்றும், அதை எதிர்வாதி அறிவார் என்றும் சொன்னால் போதாது. அது முன்னர் ஒரு முறையேனும் மனிதனைத் தாக்கியதாகவோ, தாக்க முனைந்த தாகவோ அவர் நிரூபிக்க வேண்டும்.

ஹட்சன் v. ராபர்ட்ஸ் (Hudson v. Roberts) வழக்கில் வாதி அணிந்திருந்த சிவப்புக் கைக்குட்டையைக் கண்டு எதிர்வாதியின் எருது மிரண்டு சாலையில் சென்றுகொண்டிருந்த அவள்மேல் பாய்ந்து தாக்கிக் காயப்படுத்தியது. இதற்கு முன்பே அது இவ்வாறு மனிதர்களைத் தாக்கும் இயல்பினைக் காட்டியிருந்தது. இதை எதிர்வாதி அறிவார். எனவே, அவர் பொறுப்பாளியென்று கருதப்பட்டார்: சிவப்பு நிறத்தைக் கண்டாலே அந்த எருதுக்குப் பிடிக்காது. இதைச் சிவப்பு அங்கி அணிந்த ஒருவரை அது ஒரு முறை துரத்தியடித்ததன் மூலம் எதிர்வாதியறிவார். ரீட் v. எட்வர்ட்ஸ் (Read v. Edwards) வழக்கில் 'ஆ'-வுக்குச் சொந்த மான சிறிய புருக்களைத் துரத்திச்சென்று 'அ'-வின் நாய்கொன்றது. 'அ' என்பவர் அவருடைய நாய் பறவைகளைத் துரத்திச் சென்று கொல்லுகின்ற மூர்கக இயல்பினையுடையதென அறிவார் என்று சான்று மூலம் இவ் வழக்கில் நிரூபிக்கப்பட்டது. எனவே, எதிர் வாதி தம்முடைய நாயின் இடர்விளைக்கும் இயல்பினை அறிந் திருந்தும், அதை வாதியின் நிலத்தருகே திரிய அனுமதித்ததால் பொறுப்பாளியென்று கருதப்பட்டார்.

ஒரு நாயைப் பார்த்துக்கொள்ளும் பணியாளுக்கு அதன் இடர்விளைக்கும் பண்பு தெரிந்திருந்தால் அவருடைய பணித் தலைவர் அதைத் தெரிந்துகொண்டிருப்பவராகவே சட்டம் உட் கிடையாகக்கருதும். ஆனால், ஒரு விலங்கு ஒருவர் உடைமையிலோ அவருக்குச் சொந்தமாகவோ இல்லாமல் இருந்தால் அது புரியும் இடருக்கு அவர் பொறுப்பாளியல்லர். பணியாளின் நாய் ஒருவரைக் கடித்துவிட்டால் அதற்குப் பணித்தலைவர் பொறுப் பாளியல்லர். பகரப்பொறுப்பின்படி ஒரு விலங்கின் இடர்விளைக்கும் பண்பு முகவருக்குத் தெரிந்திருந்தாலும் அது முதல்வருக்குத் தெரிந்திருந்ததாகவே கருதப்படும்.

வாதிக்கு ஒரு விலங்கினால் எந்த இடத்தில் காயம் ஏற்பட்டது என்பதை நாம் பார்க்கத் தேவையில்லை. விலங்குகளை வைத்திருப்பவரின் கட்டடத்திலோ, காயம்பட்டவர் வாழும் இடத்திலோ சாலையிலோ அது கடித்திருக்கலாம். எதிர்வாதியின் விலங்கினால் வாதிக்கேற்படும் காயம் அவ்விலங்கின் செயலினால் ஏற்படும் சேய்மையான விளைவாக இருக்கக் கூடாது. கிளின்டன் v. லயான்ஸ் & கம்பெனி (Clinton v. Lyons & Co-) வழக்கில் எதிர்வாதிகளின் இசைவுடன் வாதி தான் ஆசையாக வளர்க்கும் நாயுடன் எதிர் வாதிகளின் தேநீர் விடுதிக்குச் சென்றாள். அங்குக் குட்டிகளோடு இருந்த பூனையொன்று நாயின்மேல் பாய்ந்து கடித்தது. வாதி நாயைத் தன் கணவனிடம் கொடுத்தாள். பின்னர் அந்தப் பூனை அவள்மேல் பாய்ந்து அவள் கையைக் கடித்தது. இவ்வாறு அவளுக்கு ஏற்பட்ட காயம் பூனையின் செயலால் ஏற்படக்கூடிய சேய்மையான விளைவாகவே கருதப்பட்டது. எனவே, எதிர்வாதி பொறுப்பாளியல்லரென்று தீர்ப்பளிக்கப்பட்டது.

புரூக் v. குக் (Brook v. Cook) வழக்கில் வாதியின் தோட்டச் சுவரின்மேல் உட்கார்ந்திருந்த ஒரு சிறிய மேற்காப்பிரிக்கக் குரங்கு வாதியை அச்சுறுத்தியது. அவள் அங்கிருந்து திரும்பிச் செல்லும் போது தவறி விழுந்து மணிக்கட்டில் காயம் ஏற்பட்டது. இது அக் குரங்கு அவளைத் தாக்கியதன் விளைவாக ஏற்பட்டதென்று சொல்லமுடியாது.

ஒரு கனடிய வழக்கில் எதிர்வாதியின் நாய் கடித்ததால் வாதிக்கு உடனடியாக ஏற்பட்ட காயத்திற்கு எதிர்வாதியால் பொறுப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது. வாதி ஒரு மருத்துவரிடம் கையைக் காட்ட, அவர் சாதாரணமான முறையில் நரப்பிசிவு நோய்த் தடுப்பு மருந்துக்கு எதிர்விளைவு (tetanus allergy)உண்டா என்று பரிசோதித்து நரப்பிசிவுத் தடுப்பு மருந்தை ஊசிமூலம் கையில் செலுத்தினார். இதன் விளைவாக வாதியின் உடலில் நஞ்சு சார்ந்த விளைவுகள் ஏற்பட்டு நிணநீர் ஊசியால் உண்டாகும் நரம்பு நோய் (serum neuritis) ஏற்பட்டது. இந்தத் தடுப்பூசி போட்டதன் விளைவாக ஏற்பட்ட நோய்க்கு எதிர்வாதி பொறுப்பாளியாவார் என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

தெரிவுறுநிலை விதிப்படி இடர் அல்லது குறும்பு செய்யும் இயல்புடைய விலங்கின் உரிமையாளரும், அதன் இயல்பைத் தெரிந்தும் அதைப் பேணி வளர்த்துத் தமது உடைமையில் வைத்திருப்பவரும் அது விளைவிக்கும் ஊறுக்குப் பொறுப்பாளியாவார். இதைப் போலவே ஒரு குதிரை மூர்க்கத்தனம் உடையது என்றும், பிறரைக்

கடிக்கும் பண்புடையது என்றும் தெரிந்திருந்தும், அதன் உரிமையாளரிடம் செய்துகொண்டிருந்த ஒப்பந்தத்தின்படி, தமது கொட்டிலில் வைத்துப் பழக்குபவர் அதற்குப் பொறுப்பாளியாவார். இதைப் போலவே தமது முன்னாள் பணியாளுக்குச் சொந்தமான மூர்க்கத் தனமான நாயைத் தம்முடைய கட்டடத்திலேயே வைத்திருப்பவர் அதற்குப் பொறுப்பாளியாவார். ஆனால், தெருவிலே சுற்றித்திரியும் நாய் புகைவண்டி நிலையத்தில் நுழைந்து அங்கிருந்த வாதியை கடித்தால் அதற்கு இரயில்வே கம்பெனி பொறுப்பாளியன்று.

விலங்குகள் சட்டப்படி (1971) விலங்கினங்கள் காட்டு விலங்குகள், வீட்டு விலங்குகள் என்பதற்குப் பதிலாக நாட்டின் சூழ்நிலைகளின்படி ஆபத்தானதாகக் கருதப்படும் விலங்குகள் என்றும், ஆபத்தான இனங்களைச் சேராத விலங்குகள் என்றும் பிரிக்கப்பட்டிருக்கின்றன. ஆயினும் பெயர்களில் ஏற்பட்டுள்ள இந்த மாற்றத்தால் பொறுப்புப் பற்றிய கொள்கைகளில் மாற்றம் ஏற்பட்டுள்ளதாகத் தெரியவில்லை. ஆபத்தான இனத்தைச் சேர்ந்த விலங்குகள் வைத்திருப்பவர், அவற்றால் ஏற்படும் இழப்புக்கு இந்தச் சட்டப்படி கடும்பொறுப்புக் குள்ளாவார். இதைப் போலவே ஆபத்தான இனங்களைச் சேராத விலங்காயினும், கடுமையான ஊறினை ஏற்படுத்தக் கூடிய ஆபத்தான இயல்புகளை அது கொண்டதென அதை வைத்திருப்பவர் அறிந்திருந்தால் அவர் பொறுப்பாளியாவார். அபாயகரமான இனங்களைச் சேராத விலங்காயின், அதை வைத்திருப்பவருக்கு அதன் அபாயகரமான இயல்பு தெரியும் என்று இந்தச் சட்டத்தின்படி நிரூபிக்கவேண்டும் ஆயினும், எதிர்வாதிக்கே அது தெரியும் என்று நிரூபிக்கத் தேவையில்லை. ஒரு வீட்டில் உள்ள 16 வயதான ஒருவர் ஒரு விலங்கினுக்கு உரியவராகவோ உடைமை கொண்டவராகவோ இருப்பின், அந்த வீட்டின் தலைவர் அந்த விலங்கினை வைத்திருந்ததாகவோ அதற்கு உரிமை கொண்டவராகவோ கருதப்படுவார். எனவே, அந்த வீட்டில் அந்த விலங்கை வைத்திருப்பவர் அதனுடைய ஆபத்தான இயல்பை அறிந்திருந்ததாக நிரூபித்தால் போதுமானது. இதைப்போலவே ஒரு விலங்கு அதை வைத்திருக்கும் ஒருவரின் பணியாளின் பொறுப்பில் விடப்பட்டிருந்தாலும் பணியாளுக்கு அதன் ஆபத்தான தன்மை தெரியும் என்று நிரூபிக்கப்பட்டால் அந்த விலங்கை வைத்திருப்பவர் பொறுப்பாளியாவார்.

காட்டு விலங்குகளின் நடத்தைக்குக் கடும்பொறுப்பு இருக்க வேண்டும் என்ற கருத்துக்கு எதிர்ப்புக் குறைவே. ஆயினும், வீட்டு விலங்குகளைப் பொறுத்தவரை தவறுக்கு இன்னும் பொறுப்பு

பொறுப்பு ஏற்படுவதற்கு எதிர்ப்பு இருக்கிறது. அவற்றின் மூர்க்கத் தனத்தைப்பற்றி எதிர்வாதிக்கு தெரிந்திருந்தது என்று நிரூபித்தல் கடினமாக இருக்கலாம். இதைப்போன்ற பொறுப்பினை மாற்றிக் கவனமின்மைக்காக எதிர்வாதியைப் பொறுப்பாக்குவதால் எந்தக் கேடும் நேரப்போவதில்லை. இந்த முறையில் விலங்குகளை இனம் பிரிப்பதற்குப் பதிலாகச் சமுதாயத்திற்குப் பயன்படும் விலங்குகள், சமுதாயத்திற்குப் பயன்படாத விலங்குகள் என்ற முறையில் விலங்குகளைப்பாகுபாடு செய்யலாம் என்று ஒரு தீங்கியல் ஆசிரியர் கருத்துத் தெரிவித்திருக்கிறார். தற்காலத்தில் இப்பாகுபாடே சிறந்தது. சமுதாயத்திற்குப் பயனற்ற விலங்குகளைப் பொறுத்துக் கடும் பொறுப்பும், சமுதாயத்திற்குப் பயனுள்ள விலங்குகளைப் பொறுத்துக் கவனமின்மைக்காகப் பொறுப்பும் வைத்துக் கொள்ளலாம். இந்தக் கருத்து தெரிவுறுநிலைக் கொள்கையையும், நெடுஞ்சாலைக்குத் தப்பிச் செல்லும் விலங்குக்கான பொறுப்பையும் இணைக்கிறது. சியர்ல் v. வால்பேங் வழக்கில் சொல்லப்பட்ட கருத்தின்படி சில வகை வீட்டு விலங்குகளை வேலியிட்டு வைத்திருக்க வேண்டியதில்லை. எனவே, எதிர்வாதியின் கவனமின்மையின் காரணமாக அது நெடுஞ்சாலைக்குத் தப்பிச் சென்றுவிட்டால் அவனுக்குப் பொறுப்பேற்படுவதில்லை. சியர்ல் வழக்கில் பாதுகாப்புப் பெற்ற விலங்குகள் சமுதாயத்திற்குப் பயன்படும் விலங்குகள். ஏனெனில், அவை கால்நடைகள் போன்ற பண்ணை விலங்குகள். எனவே, கவனமின்மையிருந்தால்தான் அவை தப்பியோடியமை நெடுஞ் சாலைக்காயினும் பொறுப்புண்டு. இவ் விதிக்குப் புறத்தே, நாய்கள் உள்ளிட்ட விலங்குகள் கடும்பொறுப்புக்குள்ளாகும்.

எதிர்வாதங்கள்

1. வாதிக்கு ஏற்பட்ட காயத்திற்கு அவனே காரணமாக இருந்தால் அவன் தீங்கிடு கேட்கமுடியாது. எடுத்துக் காட்டாக, சங்கிலியால் நன்கு கட்டிவைக்கப்பட்டுள்ள வரிக்குதிரையைத் தடவிக் கொடுப்பவன் அது தன்னை உதைத்துவிட்டது என்று முறையீடு செய்ய முடியாது என்று மார்லர் v. பால் (Marlor v. Ball) வழக்கில் சொல்லப்பட்டது. இந்த வழக்கில் ஒரு வரிக்குதிரையை வாதி தடவிக்கொடுக்கவும் அது அவனை உதைத்துத் தள்ளியது. அவன் அடுத்திருந்த கொட்டிலில் விழுந்தான். அங்கிருந்த வேறொரு வரிக்குதிரை அவன் கையைக் கடித்து விட்டது. அவன் கையை வெட்டியெடுக்க வேண்டியதாயிற்று. இங்கு அவனுக்கு ஏற்பட்ட ஊறு அவனே தேடிக்கொண்டது. எனவே, அவன் தீங்கீடு கேட்கமுடியாதென்று அப்பீல் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. ஆனால், வாதியின் தவறினால்தான் அவனுக்குக்

காயம் ஏற்பட்டது என்பதை எதிர்வாதிதான் நிரூபிக்க வேண்டும். எனவே, வாதி கவனமின்றி இருக்கவிட்டால், வெறும் எச்சரிக்கை அறிவிப்பை மட்டும் மாட்டிவைத்து எதிர்வாதி பொறுப்பிலிருந்து தப்பமுடியாது எனலாம். இந்த எச்சரிக்கை அறிவிக்கையை வாதி பயன்படுத்திக்கொள்ளக்கூடிய நிலையில் இருக்க வேண்டும். எடுத்துக்காட்டாக, 'நாய்கள் ஜாக்கிரதை' என்ற அறிவிப்போ, 'சிங்கம் அபாயம்' என்ற அறிவிப்போ போதுமானது என்று சொல்ல முடியாது. ஒரு குழந்தையைப் பொறுத்தவரை எதிர் வாதியின் எச்சரிக்கை அறிவிப்புப் போதுமானதாக இல்லாமல் இருக்கலாம். ஒருவன் அறிந்துகொள்ளத்தக்க விதத்தில் ஆபத்தான விலங்குகள் இருப்பதைப்பற்றிய எச்சரிக்கை அறிவிப்பை எதிர் வாதி வைத்திருந்து, அந்த அபாயகரமான விலங்கு வைக்கப் பட்டிருக்கும் இடத்திற்குச் செல்ல வாதிக்கு உரிமை இல்லையெனின் அவன் தீங்கீடு கேட்க முடியாது. வாதியின் தற்கவனமின்மையும் அவனுக்கு ஏற்பட்ட ஊறுக்கு ஒரு காரணமாக இருந்தால் சட்டத் திருத்தச் (தற்கவனமின்மை) சட்டத்தின்படி (1945) இழப்பீடு தீர்மானிக்கப்படும்.

2. தெய்வச் செயலின் காரணமாக ஒரு விலங்கு அது பாது காப்பாக வைக்கப்பட்டுள்ள இடத்திலிருந்து தப்பிச் சென்று ஊறு விளைத்தது என்பது ஓர் எதிர்வாதமாகும். இது ரைலண்ட்ஸ் v. பிளெட்சர் வழக்கில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள விதிவிலக்காகும்.

3. வாதி எதிர்வாதியின் கட்டடத்தில் விலங்கு வைக்கப் பட்டிருந்த இடத்தில் அத்துமீறி நுழைந்தான் என்று எதிர்வாதி கூறலாம். ஆனால், வாதிக்குக் காயம் ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன் வேண்டுமென்றே ஒரு விலங்கை அவ்விடத்தில் வைத்திருந்தால் எதிர்வாதி பொறுப்பாளியாவான். எதிர்வாதியின் சொத்தையோ, வீட்டிலுள்ளவர்களையோ பாதுகாப்பதற்காக ஒரு விலங்கை வைத்திருக்கலாம். எனவே, ஒரு வீட்டிலுள்ள நாய் அங்கு நுழையும் கள்வனைக் கடித்துவிட்டால் அந்த விலங் கிற்குரியவர் பொறுப்பாளியாக மாட்டார் (சைகாமோர் v. லெவி). ஆனால் ஒருவர் தம்மையும், தம்முடைய சொத்தையும் பாதுகாப்ப தற்காக ஒரு சிங்கத்தை வீட்டில் வைத்திருப்பது முறையான செயல் ஆகாது.

4. வாதியே விலங்கினால் ஏற்படக்கூடிய காயத்தை இசைந்து ஏற்றுக்கொண்டார் என்று எதிர்வாதி வாதிடலாம். எனவே, இரு நாய்கள் ஒன்றோடொன்று சண்டை போட்டுக்கொண்டிருக்

கும்போது வாதி அதில் குறுக்கிட்டு அவற்றினால் கடிக்கப்பட்டிருந்தால் முறையீடு செய்ய முடியாது. சில்வெஸ்டர் v. சேப்மேன் (Sylvester v. Chapman) வழக்கில் எதிர்வாதியின் பணியாளாகிய வாதிக்கு விலங்குகளைப் பார்த்துக்கொள்ளும் வேலை தரப்படவில்லை. அவன் ஒரு நாள் சிறுத்தையின் கூண்டையும் மக்கள் அனுமதிக்கப் பட்டுள்ள பகுதியையும் பிரிக்கின்ற பாதுகாப்பு வேலியின்மேல் ஏறி வைக்கோலில் புகைந்துகொண்டிருந்த ஒரு சிகரெட்டை அணைக்க முயலும்போது சிறுத்தை தன்னுடைய கால்களை நீட்டி அவனைத் தாக்கிக் காயப்படுத்திவிட்டது. அதைக் சென்று அந்தச் சிகரெட்டை ஆபத்தின்றி அணைப்பதற்குத் தகுதியுள்ள வேறு பணியாளர்கள் அப்போது இருந்தார்கள். எனவே, அவனுடைய செயல் தேவையற்றதாகும். அது அவன் தானே ஏற்றுக் கொண்ட பணியாகும். எனவே, அவனுக்கு ஏற்பட்ட ஊறுக்கு எதிர்வாதி பொறுப்பாளியாகமாட்டார் என்று தீர்ப்பளிக்கப்பட்டது. ஆனால், ஒரு விலங்கை வைத்திருப்பவருடைய பணியாள் அவருடைய பணியோடு தொடர்புகொண்ட ஒரு பணியினைச் செய்யும் போது அந்த விலங்கினால் காயப்படுத்தப்பட்டிருந்தால், அவர் தமக்கேற்பட்ட ஆபத்தைத் தம்மிச்சையாக ஏற்றுக்கொண்டார் என்று சொல்ல முடியாது. பணித்தலைவர் தம்முடைய பணியாள் கள் தேவையற்ற ஆபத்திற்குள்ளாகாமல் இருக்க உரிய கவனங் காட்ட வேண்டும்.

43. ஆபத்தான கட்டடங்களால் ஏற்படும் பொறுப்பு

(Liability For Dangerous Premises)

இப் பகுதியில் மற்றொருவருடைய கட்டடத்தில் ஒருவர் இருக்கும்போது அவருக்குக் காயம் ஏற்பட்டால் அவர் தீங்கீடு பெற முடியுமா என்பதைப்பற்றிக் காண்போம். ஒரு கட்டடம் ஆபத்தான நிலையில் இருந்தால், அதில் நுழையாதவர்க்கு ஆபத்து ஏற்பட்டிருந்தால் அதைத் தொல்லையென்று கருதுகின்றோம். இதற்குப் பொறுப்பினைத் தீர்மானிக்க என்னென்ன உட்கூறுகள் நிரூபிக்கப்படவேண்டுமென்பதைத் தொல்லை என்ற பகுதியில் அறிந்தோம். ஒருவருக்கு அபாயகரமான கட்டடம் ஒன்றில் இருக்கும்போது ஏற்படக்கூடிய காயத்திற்குக் கட்டடத்தை உடையவருடைய பொறுப்பினைத் தீர்மானிக்கும் விதிகள் வேறுனவை. இவற்றைப் பற்றியே இங்குக் காண்போம். எனவே, விபத்து எங்கு ஏற்பட்டதென்பதும், வாதி அந்த இடத்தில் ஏன் இருந்தார் என்பதும் நாம் அறிய வேண்டியவையாகும்.

கட்டடம் என்று சொல்லும்போது நாம் நிலம், வீடு ஆகியவற்றோடு அங்கு வாதி பயன்படுத்த அனுமதிக்கப்பட்டுள்ள கருவிகளையும், பொருள்களையும் சேர்த்தே சொல்கின்றோம். எடுத்துக் காட்டாக, இது கட்டுமானங்கள், மேடைகள், கப்பல்கள், விமானங்கள் போன்றவற்றிற்கும் பொருந்தும். அசைவியல் பொருள்களால் ஆபத்து ஏற்பட்டிருப்பின், அந்த ஊர்திகளின் அமைப்பிலுள்ள அபாயகரமான தன்மையினால் ஊறு ஏற்பட்டிருக்க வேண்டும்.

இங்கிலாந்தில் இயற்றுச் சட்டத்தின்படி கட்டடத்தில் நுழைபவரின் தன்மையைப் பொறுத்துக் கட்டடத்தை உடையவர் காட்டவேண்டிய கடமை மாறுபட்டிருந்தது. இவ்வாறு ஒரு கட்டடத்திற்குள் நுழைபவரைப் பின்வரும் வகையில் பிரிக்கலாம்:

(1) ஒப்பந்தத்தின்படி நுழைபவர்

(2) கட்டடத்திற்கு அழைக்கப்பட்டவர் (invitee)

(3) கட்டடத்தில் அனுமதி பெற்று நுழைபவர் (licensee)

(4) கட்டடத்தில் அத்துமீறி நுழைபவர் (trespasser)

மேற்கூறியவர்பால் இடத்தை உடையவர் காட்டவேண்டிய கடமை மாறுபட்டிருந்தது. கட்டடத்தை உடையவர் ஒப்பந்தத்தின்படி நுழைபவருடைய உடலுக்கு ஊறு ஏற்படாமல் இருக்கவும் அவருடைய சொத்திற்குச் சேதம் ஏற்படாமல் இருக்கவும் மிக அதிகமான அளவில் கவனம் காட்டவேண்டி இருந்தது. எந்த ஒப்பந்தமும் இல்லாமல், தமக்கும் கட்டடத்தை உடையவருக்கும் பொதுவான காரியமாக நுழைபவர்பால் அதைவிடச் சற்றுக் குறைந்த கவனம் காட்டவேண்டியிருந்தது. இதைவிடக் குறைவான கவனத்தைத் தம்முடைய நலன்பற்றிய காரியத்திற்காக மட்டும் கட்டடத்தில் அனுமதியுடன் நுழைபவர்பால் அவர் காட்ட வேண்டியிருந்தது. அத்துமீறி நுழைபவர்பாலோ கவனம் காட்ட வேண்டியதில்லை. இவ்வாறு ஒரு கட்டடத்தில் நுழைகின்ற நால் வகை வகுப்பினருக்கும் காட்டவேண்டிய கவனத்தின் அளவு குறைந்துகொண்டே வரும் தன்மையுடையதாக இருந்தது. இனி இயற்றுச் சட்டத்தின்படி மேற்கூறிய நான்கு வகுப்பினர்க்கும் காட்டப்படவேண்டிய கடமையைப்பற்றிக் காண்போம்.

1. ஒப்பந்தத்தின்படி தோன்றும் கடமை (Duly under Contract)

'அ' என்பவர் 'ஆ' என்பவரோடு செய்துகொண்ட ஒப்பந்தத்தின்படி உரிமை பெற்று 'ஆ'-வின் கட்டடத்திற்குள் நுழைந்தால் 'ஆ' என்பவர் அவர்பால் காட்டவேண்டிய கடமை அவர்களிடையே செய்துகொண்ட ஒப்பந்தத்தைப் பொறுத்தது. சாதாரணமாக, ஒப்பந்தத்தில் இந்தக் கடமையைப்பற்றி வெளிப்படையாகச் சொல்லப்பட்டிராது. எனவே, ஒப்பந்தத்தில் உட்கிடையாக அமைந்துள்ளதெனக் கருதப்படும் வாசகத்தைப் பொறுத்துக் கடமை அமையும். இது ஒப்பந்தத்தைப் பொறுத்து மாறுபட்டிருக்கலாம். ஆயினும், நடைமுறையில் இயற்றுச் சட்டம் இருவகையான கடமைகள் உட்கிடையாக இருப்பதாகக் கருதியது. அவற்றில் ஒன்று கட்டடத்தைப் பயன்படுத்துவதே ஒப்பந்தத்தின் முக்கியமான நோக்கமாயின், அதை நிறைவேற்றிக்கொள்ள எந்த அளவுக்கு ஒருவர் தகுந்த கவனமும் திறமையும் காட்டி அக் கட்டடத்தைப் பத்திரமானதாகவும், பாதுகாப்பானதாகவும் ஆக்க இயலுமோ அந்தக் கவனத்தையும் திறமையையும் காட்டப்பட்டுள்ளதாகக் கட்டடத்தையுடையவர் தரும் நம்புறுதியாக அமைந்துள்ள

கடமையாகும். இது உயர்ந்த அளவில் அமைந்துள்ள கடமை யாகும். இரண்டாவது கடமை ஒருவர் செய்துகொண்ட ஒப்பந்தத்திற்குச் சார்பான முறையில் கட்டடத்தைப் பயன் படுத்தும்போது, கட்டடத்தை உடையவரும் அவருடைய ஒப்பந்தக்காரர்களும் அக் கட்டடம் தகுந்த பாதுகாப்புடன் இருக் கும்படி பார்த்துக்கொள்ளத் தகுந்த கவனம் காட்டுவதாகும்.

2. கட்டடத்திற்கு அழைக்கப்பட்டவர்

அழைக்கப்பட்டவருக்கும் அழைப்பவருக்கும் இடையே பொதுவான, அல்லது கூட்டுநலன் (Common or joint interest) இருக்கவேண்டும். அந்த நலன் பொருள் அல்லது பணம் பற்றிய தாக இருக்கத் தேவையில்லை. எடுத்துக்காட்டாக, ஒருவர் ஒரு கடையில் அல்லது வாணிகம் செய்யுமிடத்தில் ஒரு பொருளை வாங்கவோ வாணிகம் செய்யவோ செல்கிறார். அவர் கட்டடத்தை உடையவரால் அழைக்கப்பட்டதாகக் கருத வேண்டும். அவர் அங்கு உண்மையில் ஒரு பொருளை வாங்காமல் இருந்தாலும் அல்லது வாணிகம் செய்யாமல் இருந்தாலும் அழைக்கப்பட்டவராகவே கருதப்படுவார். அழைப்பு என்பது கட்டடத்தை உடையவருடைய காரியங்களுக்காக அதில் நுழையு மாறு கேட்டுக்கொள்ளப்படுவதாகும். அனுமதி என்பது கட்டடத் தில் நுழைபவர் தம்முடைய நலன் அல்லது காரியத்திற்காக நுழைவதாகும். அழைப்பவர் 'என்னுடைய காரியத்திற்காக வருமாறு கேட்டுக்கொள்கிறேன்' என்கின்றார். அனுமதி தருப வரோ 'உன்னுடைய காரியத்திற்காக என்னுடைய கட்டடத்தில் நுழைய அனுமதிக்கின்றேன்' என்கின்றார். எனவே, அழைக்கப் பட்டவர் என்பவர் ஒரு கட்டடத்தை உடையவரின் இசைவுடன் தமக்கும் அவருக்கும் பொதுவான நலனுள்ள காரியத்திற்காக நுழைபவராவார்.

ஒரு கட்டடத்தை உடையவர் அழைக்கப்பட்டவருக்குக் காட்டவேண்டிய கடமையை 1866-ல் இண்டர்மாயர் v. டேம்ஸ் (Indermayur v. Dames) வழக்கில் தெளிவாகச் சொல்லப்பட்டுள் ளது. இவ் வழக்கில் எதிர்வாதியின் சர்க்கரை தூய்மைப்படுத்தும் ஆலையில் ஒரு குறிப்பிட்ட வேலையைச் செய்ய ஒருவர் ஒப்புக் கொண்டார். அவருடைய பணியாளாகிய வாதி அங்கு வாயுக் குழாய் சரியானபடி பொருத்தப்பட்டிருக்கிறதா என்பதைச் சோதனையிடும்போது மேல்தளங்களில் ஒன்றிலிருந்து வேலிபோடப் படாத ஒரு குழியில் விழுந்து காயமுற்றார், இந்த விபத்து வாதியின் தவறுகையால் ஏற்படவில்லை. அவருக்கு எதிர்வாதி பொறுப்பாளி

யாவார் என்று தீர்ப்பளிக்கப்பட்டது. இவ்வாறு கட்டடத்தை உடையவரின் காரியமாக அவருடைய அழைப்பின்பேரில் செல்பவருக்குக் காட்டப்பட வேண்டிய கவனத்தின் தன்மைபற்றி இவ்வழக்கில் சொல்லப்பட்டது. அவர் தம்முடைய பாதுகாப்புக்குத் தேவையான தகுந்த கவனத்தைக் காட்டுவதோடு, அக் கட்டடத்தில் கட்டடத்தை உடையவருக்குத் தெரிந்துள்ளதும், அல்லது தெரிந்திருக்க வேண்டியதுமான வழக்கமில்லாத ஆபத்துகளால் (unusual dangers) தமக்கு ஊறு ஏற்படாமல் தடுக்கக் கட்டடத்தை உடையவர் தகுந்த கவனம் காட்டுவார் என்பதையும் எதிர்பார்க்க உரிமையுண்டு. எடுத்துக்காட்டாக, இத்தகைய ஆபத்துகள் இருப்பதை அறிவிப்பு, விளக்கு, வேலி, தடுப்பு ஆகியவற்றின் மூலம் கட்டடத்தில் நுழைபவருக்குப் புலப்படுத்தலாம். இதைச் செய்யத் தவறியிருந்தால் கட்டடத்தையுடையவர் கவனமின்றி இருந்ததாகக் கருதலாம். கட்டடத்தை உடையவர் தாம் அறிந்துள்ள, அல்லது அறிந்திருக்க வேண்டும் என்று கருதப்படக் கூடிய வழக்கமில்லாத ஆபத்துகள் இருந்தால்தான் பொறுப்பாளியாவார். அவருடைய கடமை வழக்கமில்லாத ஆபத்துகள் இல்லாமல் தடுப்பதன்று. அவற்றுல் ஊறு விளையாமல் தடுக்கத் தகுந்த கவனம் காட்டுவதேயாகும். அழைப்பவருக்கும் அனுமதிப்பவருக்குமுள்ள முதன்மையான வேறுபாடு என்னவென்றுல் அழைப்பவர் தாம் அறிந்துள்ள ஆபத்துகளுக்கு மட்டுமல்லாமல் அறிந்திருக்க வேண்டிய ஆபத்துகளுக்கும் பொறுப்பாளியாகின்ருர். அழைக்கப்பட்டு ஒரு கட்டடத்தில் நுழைபவர் அங்குள்ள ஆபத்தின் தன்மையையும், அளவையும்பற்றித் தெளிவாகவும், முழுமையாகவும் அறிந்திருப்பாராயின் கட்டடத்தையுடையவர் தமது கடமையிலிருந்து தவறினுர் என்று சொல்லமுடியாது. அழைக்கப்பட்டவர் தாம் அழைக்கப்பட்டுள்ள பகுதிக்கு வெளியே செல்வாராயின் அவர் அத்துமீறியவராகவோ வெறும் அனுமதி பெற்றவராகவோ கருதப்படுவார். அவர் சாதாரண முறையில் கட்டடத்தைப் பயன்படுத்தும்போது நியாயமாக எந்த இடத்திற்குப் போகலாம் என்று எதிர்பார்க்கலாமோ அங்குச் செல்லும்போது ஏற்படக்கூடிய ஆபத்திற்கே பொறுப்புண்டு.

ஒரு கடையில் உள்ள வாடிக்கையாளர்களையும், ஒரு மருத்துவமனையில் நோயாளியாக உள்ள உறவினர்களைப் பார்க்கச் செல்பவர்களையும், உறவினர்களைச் சந்திக்கப் புகைவண்டி நிலையத்திற்குச் செல்பவர்களையும், தீயணைப்பவர்களையும், துணை ஒப்பந்தக்காரர்களிடம் பணிபுரியும் தொழிலாளர்களையும் அழைக்கப்பட்டவர்களுக்கு எடுத்துக்காட்டுகளாகச் சொல்லலாம்.

வழக்கமில்லாத ஆபத்துகளால் ஆபத்து ஏற்படாமல் தடுக்க வேண்டிய கடமை அழைப்பவருக்கு உண்டு என்று கண்டோம். குறிப்பிட்ட அழைக்கப்பட்டவரைப் பொறுத்து அது வழக்கமில் லாதது என்பதோடு, அவர் தமக்களிக்கப்பட்ட அழைப்பைப் பயன்படுத்தும் குறிப்பிட்ட சூழ்நிலைகளில் எதிர்பாராததாகவும் இருக்கவேண்டும். அவர் தம்முடைய பாதுகாப்பிற்காக உரிய கவனம் காட்டி நியாயமாக நடந்துகொண்டிருந்தால், அவர் ஆ ப த் து இருப்பதைப்பற்றியோ, அதன் தன்மையைப் பற்றியோ உணர்ந்துகொள்ளவில்லையாயின் அது அவருக்கு வழக்கமில்லாத ஆபத்தாக இருக்கும். அவருக்கு விபத்தை ஏற்படுத்திய ஆபத்து மறைவான ஆபத்தாக இருக்கத் தேவை யில்லை. ஓர் ஆபத்து இருப்பதை அவர் அறிந்திருக்கலாம். ஆனால், அவர் தகுந்த கவனம் காட்டியிருந்தாலும், அவரால் விபத்து ஏற்படுவதைத் தவிர்க்க முடியாவிடின் கட்டடத்தை யுடையவர் பொறுப்பாளியாவார். கட்டடத்தையுடையவர் அந்த ஆபத்தை அழைக்கப்பட்டவர் அறிந்திருந்தார் என்பதோடு, அதை இசைந்தேற்றுக் கொண்டார் என்பதையும் நிரூபிக்க வேண்டும்.

டர்னர் *v.* ஆர்டிங் & ஹாப்ஸ் லிமிடெட் (**Turner *v.* Arding & Hobbs Ltd.**) வழக்கில் வாதி எதிர்வாதியின் கடையில் ஒரு பொருள் வாங்கிக்கொண்டிருந்தார். அப்போது அக் கடையில் ஒரு சில வாடிக்கையாளர்களே இருந்தனர். அவர் கீழே கிடந்த காய்கறித் துண்டு ஒன்றை மிதித்து வழுக்கியதால் கீழே விழுந்து காயமுற்றார். வாடிக்கையாளர்கள் பயன்படுத்தத் தகுந்த முறையில் பாதுகாப்புள்ளதாக அந்தத் தரை இருக்குமாறு பார்த்துக்கொள்ள உரிய கவனம் காட்ட வேண்டியது எதிர்வாதி யின் கடமை. இக் கடமையிலிருந்து அவர் தவறியதால் அவர் பொறுப்பாளியாகக் கருதப்பட்டார்.

லீ *v.* லூப்பர் (**Lee *v.* Luper**) வழக்கில் வாதி தம்முடைய சங்கக் கூட்டம் நடைபெற்ற எதிர்வாதியின் உணவு விடுதிக்குச் சென்றார். அவர் அங்கிருக்கும்போது சிறுநீர் கழிப்பிடத்தைத் தேடி வெளிச்சமில்லாத வழியாகவும், தனிப்பட்டது என்று குறிட் பிடப்பட்டிருந்த ஒரு கதவின் வழியாகவும் சென்றார். அவர் அங்கு விளக்கினைப் போட முயன்று முடியவில்லை; மேலும், தொடர்ந்து அடியெடுத்து வைக்கும்போது சில படிகளில் இடறி விழுந்து காயமுற்றார். அவர் அந்த உணவுவிடுதிச் சொந்தக்கார ரிடமிருந்து தீங்கீடு பெறமுடியவில்லை. அந்தக் கட்டடத்தில் பொதுமக்கள் செல்லக்கூடும் என்று எதிர்பார்க்க முடியாத பகுதி

ஊர்ப் பத்திரமான முறையில் வைத்திருக்கவேண்டிய கடமை கட்டடத்தை உடையவருக்கு இல்லை.

வைகால் v. வெஸ்ட்மினிஸ்டர் ஆஸ்பிடல் (Weigall v. Westminister Hospital) வழக்கில், மருத்துவ மனையில் பணம் கொடுத்து ஒரு தனியறையை எடுத்து ஒரு நோயாளி தங்கியிருந்தார். அங்கிருந்த ஒரு கௌரவ மருத்துவரிடம் சிகிச்சை பெற அந்த நோயாளியின் தாயாகிய வாதி ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டிருந்தார். அவர் தம்முடைய மகனுக்குச் சிகிச்சைபற்றிய அறிவுரையைப் பெற விரும்பினர். அந்த மருத்துவர் அங்கிருந்த ஓர் அறைக்கு வாதியை அழைத்தார். அந்த அறையின் தரை மிகவும் வழவழப்பாக இருந்தது. அதன்மேல் போடப்பட்டிருந்த பாயின்மேல் அவள் நடக்கும்போது அது அவளுடைய காலுக் கடியில் நகர்ந்து கொள்ளவே, அவள் வழுக்கி விழுந்து காயமுற்றாள். இங்கு அந்தப் பாய் வழக்கமில்லாத ஓர் ஆபத்தாக இருந்தது என்பதை மருத்துவமனை அதிகாரிகள் அறிந்திருக்க வேண்டும். எனவே, அவர்கள் பொறுப்பாளிகளாகக் கருதப்பட்டார்கள்.

நாகின்லால் ஹிராலால் v. புஷ்பா பென் (Naginlal Hiralal v. Pushpa Ben) வழக்கில் சிலர் பணம் கொடுத்து அனுமதிச் சீட்டு வாங்கி ஒரு திரைப்படத்தைப் பார்த்துக்கொண்டிருக்கும்போது திரைப்படக் கட்டடச் சுவர் விழுந்ததால் காயமுற்றனர். அவர்கள் அங்கு அழைக்கப்பட்டவர்களாகக் கருதப்பட்டனர். அந்தக் கட்டடத்தை உடையவர் அக் கட்டடத்தில் மறைந்துள்ள ஆபத்தை அறிந்திருந்தும் பார்வையாளர்க்கு அதனால் காயம் ஏற்படாமல் தடுக்கத் தகுந்த கவனம் காட்டத் தவறினர். எனவே, அவர் காயமுற்றவர்களுக்குத் தீங்கீடு தரவேண்டும் என்று தீர்ப்பளிக்கப்பட்டது. ஜென்னிங்ஸ் v. கோல் (Jennings v. Coal) வழக்கில், ஒரு கட்டடத்தை உடையவர் தாம் வேலைக்குச் செல்லும்போது நோயாளியான தம் மனைவியை அவ்வப்போது சென்று கவனித்துக் கொள்ளும்படி அண்டை வீட்டுக்காரரைக் கேட்டுக்கொண்டார். அண்டை வீட்டுக்காரரும் அதற்கிசைந்து செல்லும்போது ஒரு நாள் அக் கட்டடத்தில் இறங்குமிடத்தில் வழுக்கி விழுந்து அவருக்குக் காயம் ஏற்பட்டது. அண்டை வீட்டுக்காரர் அந்த வீட்டிற்கு வருவதில் அந்த வீட்டை உடையவருக்கு நலன் இருந்ததால் அண்டை வீட்டுக்காரர் அழைக்கப்பட்டவர் ஆவார். எனவே, வீட்டையுடையவர் அக் கட்டடத்தில் உள்ளதாக அறிந்துள்ளதும், அறிய வேண்டியுள்ளதுமாகிய வழக்கமில்லாத ஆபத்துகளால் ஆபத்து ஏற்படாமல் பார்த்துக்

கொள்ள வேண்டிய கடமையுள்ளவர். ஆனால், இந்த வழக்கில் வழக்கமில்லாத ஆபத்து எதுவும் இருக்கவில்லை. எனவே, கட்டடத்தையுடையவர் பொறுப்பாளியாகமாட்டார் என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

ஸ்டோவெல் v. இரயில்வே எக்சிகியூட்டிவ் (Stowell v. Railway Executive) வழக்கில் புகைவண்டியில் வரும் தம்முடைய மகனையும் அவளுடைய குடும்பத்தினரையும் காண வாதி எதிர் வாதிக்குச் சொந்தமான புகைவண்டி நிலையத்திற்குச் சென்றிருந்தார். புகைவண்டி மேடைக்கு வந்து சேர்ந்ததும், அவர் மகனைத் தேடி ஒவ்வொரு பெட்டியாகப் பார்த்துக் கொண்டு சென்றார். அவ்வாறு செல்லும்போது அவர் அறியாமல் எண்ணெய் சிந்தியிருந்த தரையில் வழுக்கி விழுந்து காயமுற்றார். அவர் கவனமின்மைக்குத் தீங்கீடு கோரி வழக்கிட்டார். அங்கு எண்ணெயைச் சிந்தியிருக்கவே கூடாது. எதிர்வாதியின் பணியாள்கள் கவனத்தோடு இருந்திருந்தால் அந்த எண்ணெயை அங்கிருந்து அகற்றித் தங்குமேடையைப் பாதுகாப்புடையதாகச் செய்திருக்கலாம். அது பயணிகளுக்கு வசதியாக இருந்திருக்கும். தவிர, வாதி அவர் சந்திக்க வந்துள்ள பயணிகளின் சுமையை எடுத்துச் செல்ல உதவியது மூலமாகத் தங்குமேடையில் உள்ள பொருள்களை அகற்ற எதிர்வாதிக்கு உதவி புரிந்தவராகிறார். எனவே, அவர் எதிர்வாதியின் புகைவண்டி நிலையத்திற்கு வருவதில் எதிர் வாதிக்கு நலன் அல்லது பயன் இருந்தது. இதுவே வாதியை அழைக்கப்பட்டவராகக் கருதப் போதுமானது. அவர் ஒவ்வோர் அடி எடுத்துவைக்கும்போதும் கீழே பார்க்கவேண்டும் என்று எதிர்பார்க்க முடியாது. தங்குமேடையில் எந்தத் தடையும் இடைஞ்சலும் இராது என்று அவர் எதிர்பார்க்க உரிமையுண்டு. தங்குமேடையில் எண்ணெய் சிந்திக்கிடந்தது வழக்கமில்லாத ஆபத்தாகும். எனவே, எதிர்வாதிகள் பொறுப்பாளிகளாகக் கருதப்பட்டார்கள்.

3. கட்டடத்தில் அனுமதிபெற்று நுழைபவர்

அனுமதி பெற்றுக் கட்டடத்தில் நுழைபவர் அக் கட்டடத்தை உடையவருடைய அலுவல் அல்லது பொருள் நலனுக்காக இல்லாமல், தம்முடைய சொந்தக் காரியங்களுக்காக நுழைய அனுமதிக்கப்பட்டவராவார். இந்த அனுமதி வெளிப்படையாகவோ உட்கிடையாகவோ பெறப்பட்டிருக்கலாம். கட்டடத்தையுடையவர் அக் கட்டடம் பாதுகாப்பானதாக இருக்கும்படி செய்யவேண்டிய கடமை கொண்டவர் அல்லர். அனுமதி

பெற்றவர் கட்டடம் இருக்கும் நிலையிலேயே அதை ஏற்றுக் கொள்ளவேண்டும். அனுமதியுடன் கட்டடத்திற்கு வருபவர் தம்முடைய உரிமைகளைக் காத்துக்கொள்ள வேண்டுமாயின், தமக்கு அனுமதி தரப்பட்ட எல்லைக்குள்தான் இருக்கவேண்டும். கட்டடத்தை உடையவர் தமக்குத் தெரிந்துள்ள மறைந்து கிடக்கும் ஆபத்து (Concealed danger) அல்லது பொறி (trap) ஆகியவற்றுல் அனுமதிபெற்று வருபவருக்கு ஆபத்து எதுவும் ஏற்படாமல் தகுந்த எச்சரிக்கை செய்ய வேண்டும். ஆனுல், அந்த ஆபத்து மறைவாக இல்லாமல், வெளியில் புலப்படக்கூடிய தாயின் கட்டடத்தையுடையவர் பொறுப்பாளியாகமாட்டார். அனுமதி பெற்றவர் அதை எதிர்பார்த்து எச்சரிக்கையோடு நடந்து கொள்ளவேண்டும். கட்டடத்தை உடையவர் அனுமதி பெற்றவர்களைப் பாதுகாக்க எதுவும் செய்யாமல் புதிய பொறிகளை ஏற்படுத்தக்கூடாது. ஒரு பொறி என்று சொல்லும்போது அது மறைந்துள்ளது என்றும் பார்வைக்குப் பாதுகாப்பானதாகத் தோன்றினுலும் உண்மையில் ஆபத்தை மூடி மறைத்துள்ள ஒன்று என்றும் பொருள் கொள்கின்றேம். எடுத்துக்காட்டாக, ஒருவன் தன் நிலத்தின் வழியாக மக்கள் செல்வதை அறிந்திருந்தும், அவர்களுக்கு எச்சரிக்கை தராமலும், அறிவிக்காமலும் அந்த நிலத்தைத் கடந்து செல்பவர்களுக்கு ஊறு விளைவிக்கக்கூடிய ஒரு மூர்க்கத் தனமான விலங்கை அங்கு வைத்திருக்கும் உரிமையில்லை. ஒரு நிலத்தில் செல்ல ஒருவர் அனுமதிக்கப்படுவதால் அவர் உரிமையெதுவும் பெறுவதில்லை. ஆனுல், அவர் அத்துமீறி நுழைந்தவரல்லர் என்பதைக் காட்டத் தமக்கு அங்குச் செல்ல அனுமதி வழங்கப்பட்டிருப்பதை நிரூபிக்கலாம். கட்டடத்தை உடையவர் அவருக்குக் காயம் இழைக்க வேண்டும் என்ற கருத்தோடு ஒன்றைச் செய்யாதவரை அனுமதி பெற்றவர் குறைசொல்ல முடியாது.

ஒரு வீட்டில் உள்ள விருந்தாளி, தம்முடைய வாணிகச் சரக்கினை விற்பனை செய்ய ஒரு கட்டடத்தில் நுழைபவர், அங்குப் பிச்சை எடுக்கச் செல்பவர், கட்டடத்தை உடையவரிடமிருந்து ஒரு தகவல் அறியச் செல்பவர், ஒரு பொதுப்பூங்கா அல்லது விளையாடுமிடத்திற்குச் செல்பவர் முதலியோரை அனுமதிக்கப்பட்டவர்களுக்கு எடுத்துக்காட்டுகளாகச் சொல்லலாம்,

ஹாக்கின்ஸ் v. கூல்ட்சன் & பர்லி அர்பன் டிஸ்ட்ரிக்ட் கௌன்சில் (Hawkins v. Couldson & Purley Urban District Council) வழக்கில் அனுமதி பெற்றவராகிய வாதி ஒரு நாள் இரவில் எதிர்வாதியின் உடைமையிலும் கட்டுப்பாட்டிலும்

இருந்த ஒரு வீட்டின் முன்னுள்ள படிகளில் இறங்கிக்கொண்டிருந் தார். அவற்றில் ஒரு படி பழுதாக இருந்ததாலும், அங்குப் போதிய விளக்கொளி இல்லாததாலும் அவர் படியில் இடறிவிழுந்து காய முற்றார். அது மறைவாக இருந்த ஆபத்தென்று கருதப்பட்டது. அந்த ஆபத்தை எதிர்வாதி அறிந்திருந்தார். ஆனால், அவர் அப் படியினால் விபத்தேற்படுமென்று உணர்ந்திருக்கவில்லை. அந்த ஆபத்தைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்காததால் எதிர் வாதி கவனமின்றி இருந்ததாகக் கருதப்பட்டு அவர் வாதிக்கு ஏற்பட்ட காயத்திற்குத் தீங்கீடு தரவேண்டும் என்று தீர்ப்பளிக் கப்பட்டது.

பிட் v. ஜேக்சன் (Pitt v. Jackson) வழக்கில் எதிர்வாதியின் வீட்டில் அவரது உறவினளாகிய வாதி ஒரு நடைவழியில் செல்லும்போது அங்கிருந்த வழவழப்பான லினோலியத் தளத்தில் வழுக்கி விழுந்து காயமுற்றாள். அத் தரை வழவழப்பாக இருந் ததை வாதி பார்த்திருந்தாலும் அது வழுக்கக்கூடும் என்று அவள் நினைக்கவில்லை. இவ் வழக்கில் லினோலியத் தளம் ஒரு பொறியாக அமைந்திராததால் எதிர்வாதி பொறுப்பாளியல்லர். அவர் வாதி யின்பால் காட்டவேண்டிய கடமையிலிருந்து தவறவில்லை.

சட்டன் v. பூட்டில் கார்ப்போரேஷன் (Sutton v. Bootle Corporation) வழக்கில் 9 வயது சிறுமியாகிய வாதி எதிர்வாதி யின் கட்டுப்பாட்டில் இருந்த ஒரு விளையாடுமிடத்தில் வைக்கப்பட் டிருந்த ஒரு பலகை ஊஞ்சல் ஆடிக்கொண்டிருக்கும்போது அதை நிறுத்தி, அதில் ஏறி அமர முயற்சி செய்தாள். அது அவளை இழுத்துக்கொண்டு ஓடியது. அவள் தன்னைக் காப்பாற்றிக் கொள்ளும் முயற்சியில் காயமடைந்ததால் அவளுடைய இடக் கையின் ஆள்காட்டி விரல் வெட்டியெடுக்கப்பட நேர்ந்தது. அந்த ஊஞ்சலை ஒரு புகழ்வாய்ந்த நிறுவனம் உற்பத்தி செய்திருந்தது. அந்த நிறுவனம் அதைப் போன்ற ஊஞ்சலைப் பலருக்கு விற்றிருந் தது. இந் நிகழ்ச்சிக்கு முன்னர் இதைப்போன்றதொரு விபத்து ஏற்பட்டதில்லை. அந்த ஊஞ்சலில் இருந்ததாகச் சொல்லப்பட்ட குறையைப்பற்றி எதிர்வாதி மாநகராட்சிக்குத் தெரியாது. அவர் கள் அனுமதியுடன் வருபவர்கள்பால் காட்டவேண்டிய கவனத்தை வாதிக்குக் காட்டினால் போதுமென்றும், அவர்களுக்கு உண்மையி லேயே தெரிந்திருந்த ஆபத்துகளைப்பற்றி வாதிக்கு எச்சரித்திருந் தால் போதுமென்றும் இவ் வழக்கில் சொல்லப்பட்டது. அந்த ஊஞ்சலில் ஆபத்து இருந்ததென எதிர்வாதிக்குத் தெரியாததால் அவர்கள் பொறுப்பாளிகளல்லர்.

4. கட்டடத்தில் அத்துமீறி நுழைபவர்

ஒருவருடைய அழைப்போ அனுமதியோயின்றி அவருடைய கட்டடத்திற்குச் செல்பவரை அத்துமீறியவர் என்று சொல்கின்றோம். அவர் அங்குச் செல்வது கட்டடத்தை உடையவருக்குத் தெரியாது. தெரிந்திருந்தால் அனுமதித்திருக்கமாட்டார். அத்துமீறி நுழைபவருடைய பாதுகாப்பிற்காகக் கட்டடத்தையுடையவர் தகுந்த கவனம் காட்ட வேண்டியதில்லை. மறைவாகக் கிடக்கும் ஆபத்துகளிலிருந்து அவரைக் காக்க வேண்டிய கடமையும் இல்லை. அத்துமீறி நுழைபவர் தம்முடைய சொந்தப் பொறுப்பிலேயே கட்டடத்தில் நுழைகிறார், கட்டடத்தில் உள்ள குறைபாடு களைப்பற்றி அவருக்கு எச்சரிக்கவும், அவருடைய பாதுகாப்புக்காக நடவடிக்கை எடுக்கவும் தேவை இல்லை. அனுமதிச் சீட்டில்லாமல் பயணம் செய்து புகைவண்டி விபத்தில் காயம் அடைபவனுக்கு இரயில்வே கம்பெனி பொறுப்பாளியாகாது. ஒரு நிலத்தில் ஏதோ குற்றம் நடக்கிறது என்று சந்தேகப்பட்டு இரவில் அங்கு நுழையும் காவல்துறை அதிகாரி அங்குள்ள ஒரு குழியில் விழுந்து காயமுற்றால் அவருக்கு நிவாரணம் கிட்டாது. ஏனெனில், அவருக்கு அங்கு நுழைய உரிமையில்லை. அத்துமீறி நுழைபவனை ஒரு கட்டடத்திலுள்ள நாய் கடித்தால் அவன் முறையீடு செய்ய முடியாது.

அத்துமீறி நுழைபவருக்குப் பாதுகாப்பளிக்க வேண்டிய கடமை எதுவும் இல்லையென்றாலும், அவருக்குக் காயம் ஏற்படும் படியாக வேண்டுமென்றே ஒரு செயலைச் செய்யக்கூடாது. எடுத்துக்காட்டாக, அவரைச் சுடுதல், கட்டிவைத்து உதைத்தல், பாய்ந்துசுடும் விசைத்துப்பாக்கி (spring gun), மனிதரை வீழ்த்தும் பொறி (man trap) போன்றவற்றை வைத்து ஊறு விளைவித்தல் கூடாது. இது துப்பாக்கியால் அத்துமீறியவரைத் தானே நேராகச் சுடுவதற்குப் பதிலாக, அவரைச் சுடுவதற்கு ஏற்பாடு செய்வதைப் போன்ற செயலாகும். இதற்கு எடுத்துக்காட்டாக, முன்பு சொல்லப்பட்ட பர்ட் v. ஹால்புரூக் வழக்கைச் சொல்லலாம். இவ் வழக்கில் ஒரு நிலத்தில் தன்னுடைய கோழியைத் தேடிச் சென்ற சிறுவன் அங்கிருந்த விசைத்துப்பாக்கியை மிதித்து அது வெடித்ததால் காயமுற்றான். அவனுக்கு ஏற்பட்ட காயத்திற்காகத் தீங்கீடு பெற்றான். அங்கு விசைத்துப்பாக்கி வைக்கப்பட்டிருந்தது அவனுக்குத் தெரியாது. இதைப் போன்றதொரு வழக்கில் ஆபத்திருந்ததை வாதி அறிந்திருந்தான். எனவே, அவனுல் தீங்கீடு பெறமுடியவில்லை (இலாட் v. வில்க்ஸ்). அத்துமீறியவர் சிறுவனாகவோ, வழிதவறி வந்தவராகவோ, குழந்தையாகவோ

இருந்தாலும் அவர்கள்பால் கட்டடத்தை உடையவர் காட்ட வேண்டிய கடமையில் வேறுபாடு இல்லை. முறையின்றி ஒரு கட்டடத்தில் நுழைபவன் தனது சொந்தப் பொறுப்பிலேயே அங்கு நுழைகின்றான். அங்கு அவனுக்கு ஏற்படும் ஆபத்திற்குக் கட்டடச் சொந்தக்காரர் பொறுப்பாளியாகமாட்டார். மாடிப்படியில் இடறிக் கீழே விழும் திருடன் படிக்கட்டுகள் நன்கு பொருத்தப் படவில்லை என்று முறையீடு செய்ய முடியாது. ஒரு கட்டடத்தில் அத்துமீறி நுழையும் பிச்சைக்காரர் அங்குள்ள ஒரு நாய் கடித்து விட்டது என்று கூறித் தீங்கீடு பெறமுடியாது. அத்துமீறி நுழைந்தவர் கட்டடத்தில் உள்ளார் என்பதை அறிந்திருந்தும், வேண்டுமென்றே அவருக்குக் காயமேற்படுத்தக் கூடிய செயலைச் செய்யக் கூடாது என்பதைத் தவிரக் கட்டடத்தை உடையவருக்கு வேறு எந்தக் கடமையும் இல்லை. அத்துமீறியவனுக்கு ஒரு கட்டடத்தில் இருக்கவே உரிமை இல்லாதபோது, அவனைக் காப்பாற்ற வேண்டிய கடமையைக் கட்டடத்தை உடையவர்மேல் சுமத்தமுடியாது. எனவே, ஒரு கட்டடத்தில் மண்டிக் கிடக்கும் புதரில் யாரேனும் ஒளிந்திருக்கக் கூடும் என்று கருதி ஒருவர் கட்டட வேலைகளை நிறுத்திவைக்கத் தேவையில்லை.

ஆனால், அத்துமீறி ஒருவர் தம்முடைய கட்டடத்தில் நுழையாமல் தடுக்கக் கட்டடத்தை உடையவர் தகுந்த பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்கலாம். எடுத்துக்காட்டாக, அவர் தம் முடைய நிலத்தைச் சுற்றி முள்கம்பியால் வேலிபோடலாம்; உடைந்த கண்ணாடித் துண்டுகளைச் சுவரில் பதிக்கலாம்; மூர்க்கத்தன முடைய நாயைக் காவலுக்கு வைத்திருக்கலாம். இவை தீங்காகா. ஓரிடத்தை உடையவர் அத்துமீறி ஒருவர் தமது இடத்தில் இருப்பதை அறிந்தோ, இருக்கக்கூடும் என்றறிந்தோ அவர்களுக்கு ஆபத்து விளைவிக்கக் கூடிய செயலைச் செய்வதைத் தான் சட்டம் அனுமதிக்காது. ஒருவருடைய உயிரைவிடச் சொத்துரிமை முக்கியமானதன்று. இருப்புப்பாதையில் அத்துமீறி நடந்து செல்பவரைப் பார்த்த புகைவண்டி ஓட்டுநர் அவர்மேல் புகைவண்டி ஏறுமல் இருக்க ஒலியை எழுப்பியும், தேவைப் பட்டால் வண்டியை மெதுவாக ஓட்டியும், நிறுத்தியும் தகுந்த எச்சரிக்கையும் கவனமும் காட்டவேண்டும்.

லோயரி v. வாக்கர் (Lowery v. Walker) வழக்கில் எதிர்வாதியினுடைய தோட்டத்தின் வழியாகப் பொதுமக்கள் புகைவண்டி நிலையத்திற்குச் செல்வதை 35 ஆண்டுகளுக்கு மேலாக வழக்கமாகக் கொண்டிருந்தனர். இதை அவன் பொதுவாகத் தடுக்கவில்லை. சில சமயங்களில் இவ்வாறு பொதுமக்கள் செல்வதற்கு

அவன் எதிர்ப்பைக் காட்டியிருந்தாலும், இதைத் தடுக்கத்தக்க நடவடிக்கை எடுக்கவில்லை. அங்கு அவன் ஒரு மூர்க்கத்தன முடைய குதிரையை வைத்திருந்தான். அது மூர்க்கத்தனம் உடையது என்று அவனுக்குத் தெரியும். வாதி அவனுடைய தோட்டத்தின் குறுக்கே செல்லும்போது அந்தக் குதிரை அவனைத் தாக்கிக் காயப்படுத்தியது. இங்கு வாதி அத்துமீறியவரல்லர் என்றும், எதிர்வாதியின் அனுமதியுடனேயே அங்கிருந்ததாகக் கருதவேண்டுமென்றும் சொல்லப்பட்டது. இவ் வழக்கை விசாரித்த பிரபுக்கள் சபை, அவனுக்கு ஏற்பட்ட காயத்திற்கு எதிர்வாதி பொறுப்பாளியென்று தீர்ப்பளித்தது.

ஒரு கட்டடத்திற்கு அழைக்கப்பட்டுள்ளவர் தாம் அழைக்கப் பட்ட பகுதியிலிருந்து வெளியே சென்றிருந்தால் அவரை அத்து மீறியவராகக் கருதவேண்டுமா என்பதைச் சூழ்நிலையைப் பொறுத்துத் தீர்மானிக்கவேண்டும். அவர் நுழையக்கூடாது என்று தடை செய்யப்பட்டுள்ள பகுதி தகுந்த முறையில் வரையறை செய்யப்படவில்லையென்றால் அவரை அத்துமீறியவராகக் கருதமுடி யாது. பியர்சன் v. கோல்மன் (Pearson v. Coleman) வழக்கில் வட்டரங்குச் சொந்தக்காரர்களாகிய எதிர்வாதிகள் ஓர் இடத்தில் கூடாரமடித்து விளையாட்டு, வேடிக்கைக் காட்சிகளை நடத்திக் கொண்டிருந்தனர். அதற்கருகில் ஒரு தனிப்பகுதியில் விலங்கு களைக் கூண்டுகளில் அடைத்துவைத்திருந்தனர். 7 வயது சிறுமி யாகிய வாதி அக் காட்சியைக் காணச் சென்றிருந்தாள். அவள் சிறுநீர் கழிக்கத் தகுந்த இடம் தேடிக் கொட்டகையை விட்டுச் செல்லும் வழியில் ஒரு சிங்கம் இருந்த கூண்டின் அருகே வரும் போது அதில் போடப்பட்டிருந்த கம்பிகளின் ஊடே கால்களை நீட்டிச் சிங்கம் அவளைக் காயப்படுத்திவிட்டது. எதிர்வாதிகள் விலங்குகள் வைக்கப்பட்ட பகுதியை மற்றப் பகுதியிலிருந்து போது மான அளவு பிரித்து வைத்திருக்கவில்லை. குழந்தை சர்க்கஸ் காட்சி நடந்த இடத்திற்கு மட்டுமல்லாமல் அதைச் சிங்கம் தாக்கிய பகுதியிலும் அழைக்கப்பட்டிருந்ததாகவே கருத வேண்டும். எனவே, எதிர்வாதிகள் அக் குழந்தைக்குப் பொறுப்பாளிகள் ஆவார்கள் என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

செரூபின் கிரிகரி v. ஸ்டேட் ஆஃப் பீகார் (Cherubin Gregory v. State of Bihar) வழக்கில் ஒரு கட்டடத்தை உடையவர் அவ ரது கட்டடத்திலுள்ள மலங்கழிக்குமிடத்தை அத்துமீறி நுழைபவர் கள் பயன்படுத்தாமல் தடுக்க அங்கு முழுவதும் மின்சாரம் பாய்ச்சப்பட்ட கம்பிகளைப் போட்டிருந்தார். அங்கு அத்துமீறி

மலங்கழிக்க நுழைந்தவர் அக் கம்பியை மிதித்ததால் மின்சாரம் தாக்கி மாண்டார். அங்கு மின்சாரம் பாயும் கம்பி போடப் பட்டிருந்ததைப்பற்றி எந்த எச்சரிக்கையும் வைக்கப்பட்டிருக்க வில்லை. இவ் வழக்கை விசாரித்த இந்திய உச்சநீதிமன்றம் எதிர் வாதியைப் பொறுப்பாளி என்று தீர்ப்பளித்தது. அத்துமீறி நுழை பவரைப் பாதுகாக்கக் கட்டடத்தையுடையவர் தகுந்த நடவடிக்கை எடுக்கத் தேவை இல்லையென்றாலும், அவர் அங்கு இருப்பதைத் துச்சமாக மதித்தோ, வேண்டுமென்றே ஊறு விளைவிக்கும் செயலைச் செய்யக்கூடாது. அவரை நேரடியாகத் தாக்குவதற்குப் பதிலாக மறைமுகமாக அவருக்குக் கடுமையான ஊறு விளைவிக்கு மென்று அவர் அறிந்துள்ள செயல்களையும் செய்யக் கூடாது.

ராபர்ட் ஆடி & சன்ஸ் லிமிடெட் v. டம்ரக் (Robert Addie & Sons Ltd. v. Dumbreck) வழக்கில் 4 வயது பையன் ஒருவன் எதிர்வாதிகளுக்குச் சொந்தமான இயந்திரத்தின் சக்கரத்தில் சிக்கி நசுங்கி மாண்டான். எதிர்வாதிகளிடம் பணிபுரிந்த அதிகாரிகள் சக்கரம் அமைக்கப்பட்டுள்ள நிலத்தில் குழந்தைகள் விளையாடி யதை அறிந்திருந்தனர். சில சமயங்களில் அவர்கள் குழந்தை களைத் தொலைவில் செல்லுமாறு எச்சரித்து விரட்டியும் இருந்தனர். ஆயினும் அவர்களுடைய எச்சரிக்கையைக் குழந்தைகள் பொருட் படுத்தவில்லை. விபத்து நேர்ந்தபோது சக்கரத்தைச் சுழலவைத்த தொழிலாளர்கள் அங்கிருந்த இடத்திலிருந்து குழந்தைகளைப் பார்க்கமுடியாத தூரத்திலும், திசையிலும் இருந்த னர். இவ் வழக்கில் குழந்தை அத்துமீறி நுழைந்திருந்தான். எதிர்வாதிகள் அவன் சாவுக்குப் பொறுப்பாளிகளாகமாட்டார்கள் என்று தீர்ப்பளிக்கப்பட்டது. ஆயினும், இதே போன்ற சூழ்நிலை யில் விபத்தேற்பட்ட எக்ஸல்ஷியர் ஒயர் ரோப் கம்பெனி v. கேலன் (Excelsior Wire Rope Co. v. Callan) வழக்கில் சக்கரத்தைச் சுழலவைக்கச் சைகை காட்டிய நபர் சக்கரத்திலிருந்து 20 கெஜத் தொலைவில்தான் இருந்துகொண்டிருந்தார். அந்த இடத்திலிருந்து நகராமலே பின்புறம் திரும்பிச் சுற்றிப் பார்த்திருந்தாலே அவர் சக்கரத்தையும், குழந்தையையும் பார்த்திருக்க முடியும். எனவே, அத்துமீறி நுழைபவர் இருக்கக்கூடுமென்று எள்ளளவும் பொருட் படுத்தாது அவர் நடந்துகொண்டார். ஆகவே, எதிர்வாதிகள் பொறுப்பாளிகள் என்று தீர்ப்பளிக்கப்பட்டது. கமிஷனர் ஃபார் ரெயில்வேஸ் v. குவின்லன் (Commissioner for Railwlys v. Quinlan) வழக்கில் அத்துமீறி நுழைபவர் ஒரு நிலத்தில் இருப்பது கட்டடத்தை உடையவருக்குத் தெரிந்திருக்க வேண்டும் அல்லது அவர் அங்கு இருக்கக்கூடும் என்பதை அவர் எதிர்பார்த்திருக்க வேண்டும். அப்போதுதான் கட்டடத்தை உடையவருக்குப் பொறுப்பு ஏற்படும் என்று சொல்லப்பட்டது.

குழந்தைகளைப் பொறுத்துள்ள கடமைகள்

அத்துமீறி ஒரு கட்டடத்தில் நுழையும் குழந்தைகள்பால் கட்டடத்தை உடையவர் காட்டவேண்டிய கவனம்பற்றி இரு வேறுபட்ட கருத்துகள் உள்ளன. 'கண்டிப்பான' அல்லது 'இரக்கமற்ற' கருத்தின்படி அத்துமீறலில் குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும் வேறுபாடு இருக்க முடியாது. ஏனெனில், கவனத்தோடு இருக்கவேண்டிய கடமை இல்லையென்றால் அது அத்துமீறியவரைப் பொறுத்து மாறுபடாது, எனவே, ஒரு கட்டடத்தில் அத்துமீறி நுழையும் குழந்தைக்கேற்படும் ஆபத்துக்குப் பிறரைப் பொறுப்பாக்க முடியாது. அது தான் செய்வதை என்னவென்று அறியமுடியாத அளவுக்குச் சிறிய குழந்தையாக இருந்தால் அதைக் காப்பாற்ற வேண்டியது அதன் பெற்றோருடைய பொறுப்பாகுமேயல்லாது அது அழைப்பின்றி நுழைந்துள்ள நிலச் சொந்தக்காரர் பொறுப்பாகாது.

எட்வர்ட்ஸ் v. இரயில்வே எக்சிகியூட்டி (Edwards v. Railway Executive) வழக்கில் 9 வயது சிறுவனுகிய வாதி இருப்புப்பாதைக்கும் விளையாடும் இடத்துக்கும் இடையில் போடப்பட்டிருந்த வேலியினுள் நுழைந்து இருப்புப்பாதைக்கு மறுபுறம் விழுந்துவிட்ட பந்தை எடுப்பதற்காகத் தடுப்புச்சுவரின் மீதேறினான். அப்போது சென்றுகொண்டிருந்த ஒரு புகைவண்டி மோதி அவன் காயமுற்றான். பல ஆண்டுகளாகக் குழந்தைகள் கம்பியை முறித்து வேலி வழியாக நுழைந்து அந்தத் தடுப்புச் சுவரில் சறுக்கி விளையாடி வந்தனர். இரயில்வே நிர்வாகத்தினருக்கு இது தெரியும். அவ்வப்போது வேலிக்குச் சேதம் ஏற்பட்டபோதெல்லாம் அவர்கள் அதைப் பழுதுபார்த்து வந்தனர். இரயில்வே நிர்வாகத்தினரின் நிலத்தில் நுழைய வாதி-சிறுவனுக்கு அனுமதி இருந்ததென்று சொல்ல எந்தச் சான்றும் இல்லை. அவனுக்கு ஏற்பட்ட காயங்களுக்கு எதிர்வாதிகள் பொறுப்பாளியாகக் கருதப்பட்டனர்.

மற்றோர் 'இளகிய' அல்லது மனிதப் பண்புடைய கொள்கையின்படி குழந்தைகளை ஒரு நிலத்தில் கவர்ந்திழுக்கக்கூடிய ஆபத்து இருந்தால் அங்கு அவர்கள் செல்லக்கூடுமாதலால் அவர்களுக்கு ஆபத்து ஏற்படாமல் அந்த நிலத்தை உடையவர் பார்த்துக் கொள்ள வேண்டும். குழந்தைகளின் நல்வாழ்வில் சமுதாயத்தின் நலன் இருக்கிறது. இது நிலத்தை உடையவர்கள் தங்கள் சொத்தினை விரும்பியவாறு அனுபவிப்பதைவிட முக்கியமானது. இக் கருத்து அமெரிக்காவில் நீதிமன்றங்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள ஒன்றாகும். ஆனால், இங்கிலாந்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள கொள்கையே சிறந்ததாகப்படுகிறது. இருப்புப்பாதை

களின்மேல் சின்னஞ்சிறு குழந்தைகள் அத்துமீறி நடக்காமல் தடுக்கவேண்டியது பெற்றோரின் கடமையே அன்றி இரயில்வே கம்பெனியின் கடமை அன்று. ஆனால், ஒரு கட்டடத்தை உடையவர் தமது கட்டடத்தில் மிகவும் ஆபத்தான தொழிலைச் செய்வதன் விளைவாக அங்கு அத்துமீறி நுழைந்த குழந்தைக்கு ஆபத்து ஏற்பட்டிருந்தால் அதற்கு அக் கட்டடத்தை உடைய வரைப் பொறுப்பாளி ஆக்குவதே முறையாகும். ஒரு குழந்தை அத்துமீறிக் கட்டடத்தில் நுழைந்ததை அறிந்த கட்டடத்தை உடையவர் அது அங்கிருப்பதைப் பொருட்படுத்தாமல் நடந்து கொள்ளவோ, வேண்டுமென்றே அதைக் காயப்படுத்தவோ கூடாது.

அனுமதியுடன் நுழையும் குழந்தைகள்

சில சமயங்களில் குழந்தை அத்துமீறி நுழைவதைக் கட்டடம் அல்லது நிலத்தை உடையவர் வழக்கமாகத் தெரிந்தே அனுமதித் திருக்கலாம். அப்போது அக் குழந்தைகளை அத்துமீறியவர்கள் என்று கருதாமல் உட்கிடையான அனுமதியுடன் நுழைந்தவர்கள் என்றே கருத வேண்டும், இங்குக் குழந்தைகள் அத்துமீறி நுழைவதை அறிந்திருந்தும் நிலத்தை உடையவர் அதைத் தடுக்காமல் வாளாவிருப்பதால் அவர் அக் குழந்தைகள்பால் கவனம் காட்ட வேண்டிய கடமையில் தவறியவராகிறார். அவர்களைப் பாதுகாக்க வேண்டிய கடமையும் அவருக்கு உண்டு.

குக் v. மிட்லண்ட் கிரேட் வெஸ்டர்ன் இரயில்வே ஆஃப் அயர்லண்ட் (Cooke v. Midland Great Western Railwuy of Ireland) வழக்கில் 4 வயது குழந்தையாகிய வாதி தன் தோழர் களுடன் எதிர்வாதி இரயில்வே கம்பெனியின் நிலத்தில் இருந்த இருப்புப்பாதையில் வண்டியைத் திசைதிருப்பும் ஒரு வட்டச்சுழல் மேடையில் விளையாடிக் கொண்டிருக்கும்போது காயமடைந்தான். அந்தச் சுழல்மேடை பூட்டப்படாமல் வைக்கப்பட்டிருந்தது. அது சாலைக்கு அருகிலும் இருந்தது. அந்தச் சுழல்மேடையில் விளையாடுவதற்காகச் சாலையிலிருந்து இரயில்வே கம்பெனியின் நிலத்திற்குக் குழந்தைகள் வழக்கமாக வருவதை இரயில்வே கம்பெனியின் பணியாள்கள் அறிந்திருந்தார்கள். ஆனால், அங்குக் குழந்தைகள் வருவதைத் தடுக்கவோ, அந்தச் சுழல்மேடையினால் குழந்தைகளுக்கு ஆபத்து ஏற்படாமல் இருக்க அதைப் பூட்டி வைக்கவோ எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. எனவே, அவர்கள் கவனமின்றி இருந்ததாகக் கொள்ளவேண்டும். வழக்க மாகவே அங்குக் குழந்தைகள் விளையாட அனுமதிக்கப்பட்டிருந்த

தால் அவர்களை அத்துமீறியவர் என்று கருதமுடியாது. ஆனால், தனக்கு ஒரு கட்டடத்தில் நுழைய அனுமதி இருந்ததென்று வாதியே நிரூபிக்க வேண்டும்.

வயது வந்தவர்களைவிடக் குழந்தைகள் கவனம் குறைந்தவர்களே. இதைக் கட்டடத்தை உடையவர்கள் எதிர்பார்த்து அதற்குத் தகுந்தவாறு குழந்தைகள்பால் கவனம் காட்டவேண்டும். வயது வந்தவர்களுக்கு வெளிப்படையாகவும், எளிதாகவும் தோன்றக்கூடிய ஆபத்துகள் குழந்தைகளுக்குப் புலப்படாத, மறைவான ஆபத்துகளாக இருக்கின்றன. எனவே, குழந்தைகளை வீழ்த்த இடறு குழி வெட்டாமல் இருப்பதோடு அவர்கள் ஆவலைத் தூண்டுமாறு எதையும் செய்யக்கூடாது. எனவே, ஒரு குழந்தை ஒரு நிலத்திலுள்ள கவர்ச்சியாக அமைந்துள்ள ஆபத்தில் சிக்கிக் காயமுற்றால் நிலத்தையுடையவர் பொறுப்பாளியாவார். குழந்தையைத் தூண்டுவதே அழைப்பாகாது எனினும், அவர்களை நிச்சயமாகக் கவரக்கூடிய ஒரு பொருளை நன்கு தெரியும்படியாக, வேலியிடாமல் வைத்திருந்தால் குழந்தைகள் தூண்டிலை நாடி ஓடும் மீனைப்போல அதைப் பின்தொடர்ந்து வருவார்கள். எனவே, அவர்களுக்கு அழைப்புத் தரப்பட்டதாகவே கருத வேண்டும். ஒரு குறிப்பிட்ட பொருள் குழந்தையின் கருத்தைக் கவரக்கூடியதாகவும், அதன் உயிரைப் பறிக்கக் கூடியதாகவும் உள்ள பொறி என்று சொல்லக்கூட முடியுமா என்பது ஒரு சட்டப் பிரச்சினையாகும்.

கிளாஸ்கோ கார்ப்பரேஷன் v. டெய்லர் (Glasgow Corporation v. Taylor) வழக்கில் எதிர்வாதிகளின் கட்டுப்பாட்டில் ஒரு பொதுப் பூங்கா இருந்தது. ஒரு 7 வயது குழந்தை அந்தப் பூங்காவில் இருந்த புதரில் வளர்ந்திருந்த, பார்வைக்கு அழகாக இருந்த தீங்கனிகளைப் பறித்து உண்டது. அவை நஞ்சாக இருந்ததால் அக் குழந்தை இறந்தது. குழந்தைகளுக்கு அந்தத் தீங்கனி கவர்ச்சி வாய்ந்ததாக இருந்தது. அவற்றைப்பற்றிக் குழந்தைகளுக்குப் புரியத் தக்க விதத்தில் மாநகராட்சி எச்சரிக்கத் தவறி விட்டது. எனவே, எதிர்வாதிகள் பொறுப்பாளிகள் என்று கருதப்பட்டனர். ஆனால், கவர்ச்சியான பொருள் அல்லது கண்ணி அல்லது ஆபத்தான பொருள் நிலத்தில் வைக்கப்பட்டிராத போது நிலத்தை உடையவர் பொறுப்பாளியாகமாட்டார். லாதம் v. ஆர். ஜான்சன் & நெவ்பூ லிமிடெட் (Latham v R. Johnson & Nephew Ltd) வழக்கில ஒரு கற்குவியலின்மேல் விளையாடிய குழந்தை காயமுற்றது. அதற்கு நிவாரணம் கிட்டாது.

என்று தீர்ப்பளிக்கப்பட்டது. நிலத்தில் கற்களைக் கொட்டி வைப்பது ஆபத்தானது என்று கருதமுடியாது. அது பொறி அல்லது கண்ணி என்று கருதமுடியாது.

சின்னஞ்சிறு குழந்தைகள்

அனுமதி பெற்று ஒரு நிலத்தில் நுழையும் ஒரு சின்னஞ்சிறு குழந்தைக்கு ஆபத்தாக இல்லாத பொருளே இல்லை எனலாம். அதன் கண்களில் படும் ஆபத்தை அதனால் புரிந்துகொள்ள முடியாமல் இருக்கலாம்.

பிப்ஸ் v. ரோசஸ்ட்டர் கார்ப்பரேஷன் (Phipps v. Rochester Corporation) வழக்கில் 5 வயது சிறுவனுடைய வாதி தன்னுடைய 7 வயது தமக்கையுடன் எதிர்வாதிகள் வீடுகள் கட்டிக்கொண்டிருந்த ஒரு திறந்த வெளி, நிலத்தின் வழியாக முட்செடியில் பழம் பறிக்கச் சென்றான். அந்தத் திறந்த வெளியின் நடுவில் சாய்க்கடைக்காக இரண்டரை அடி அகலத்தில் ஓர் ஆழமான குழியை எதிர்வாதிகள் தோண்டியிருந்தனர். அதிலிருந்து தோண்டி எடுக்கப்பட்ட மண்ணை அக் குழியின் பக்கத்தில் 4 அடி உயரத்திற்குக் குவித்து வைத்திருந்தனர். வயது வந்தவர்களுக்கு அதிலிருக்கும் ஆபத்து வெளிப்படையானதாகும். வாதியின் தமக்கை அந்தக் குழியின் எல்லையைச் சுற்றி நடந்தாள். வாதியோ குழியில் விழுந்து காலை முறித்துக்கொண்டான் அவன் அந்தக் குழியைப் பிறர் உதவியின்றித் தானே தாண்டக்கூடிய வயதுள்ளவனல்லன். அவனது தமக்கை அவனுக்கு உதவக் கூடிய வயதுள்ளவளல்லள். குழந்தைகள் அங்கிருக்க உட்கிடையான அனுமதி பெற்றிருந்ததாகக் கருதப்பட்டது. குழந்தைகள் எதிர்வாதிகளின் நிலத்தில் அடிக்கடி போய் வந்தார்கள் என்றும், அவர்களை அங்கு வராமல் தடுக்க எதிர்வாதிகள் எதுவும் செய்யவில்லை என்றும் சொல்வதற்குச் சான்று இருந்தது. ஒரு பொறுப்புள்ளவர் உடன்வர வாதி வந்திருந்தால்தான் அவன் அனுமதி பெற்றவனாகக் கருதப்படவேண்டுமென்பதை நீதிபதி ஏற்கவில்லை. சிறு குழந்தைகளைப் பொறுத்து அனுமதி தருபவர்களின் கட்டமையைத் தீர்மானிக்கும்போது கவனமுள்ள பெற்றோர்களின் வழக்கத்தைக் கருத்தில் கொள்ளவேண்டும். திறந்த வெளியில் இரு சிறு குழந்தைகளைத் தனியே செல்ல அனுமதித்தது கவனமுள்ள பெற்றோர் செய்யக்கூடியதன்று. அந்த இடத்தில் குழந்தைகளுக்கு ஆபத்து இருக்கிறதா, இல்லையா என்பதை அவர்கள் அறிந்து, ஆபத்து இருந்தால் குழந்தைகள் அங்குச் செல்லாதவாறு தடுத்திருக்க வேண்டும். இவ்வாறு வனத்தோடு பெற்றோர்கள் நடந்துகொள்வார்கள் என்று எதிர்பார்க்க எதிர்வாதி

களுக்கு உரிமை உண்டு. எனவே, எதிர்வாதிகள் வாதியின்பால் கவனம் காட்டவேண்டிய கடமையிலிருந்து தவறவில்லை என்று சொல்லலாம். தகுந்த காப்பாளர்உடன்வராமல் வாதியைச் சுற்றித் திரிய அவனுடைய பெற்றோர் அனுமதிப்பர் என்று எதிர்வாதி கருத எந்தக் காரணமும் இல்லை. வாதி அனுமதி பெற்றவனாக இந்த வழக்கில் கருதப்பட்டாலும், எதிர்வாதிகள் அவன்பால் காட்ட வேண்டிய கடமையிலிருந்து தவறவில்லை என்று தீர்ப்பளிக் கப்பட்டது. தகுந்த காப்பாளர் துணையாக வராமல் விளையாடு மிடங்கள் போன்றவற்றிற்குத் தனியே செல்லக் குழந்தைகளைப் பெற்றோர் அனுமதிக்கலாமென்றாலும், குழந்தைகளைப் பார்த்துக் கொள்ள வேண்டிய முதன்மையான பொறுப்பு பெற்றோர்க ளுடையது ஆகும்.

இயற்றுச் சட்டத்தின்படி ஒரு கட்டடத்தை உடையவர் அதில் நுழைகின்றவர்பால் காட்ட வேண்டிய கடமைகளைப்பற்றி அறிந்தோம். இவை மிகவும் சிக்கலானதாகவும், குழப்பம் நிறைந்ததாகவும் அமைந்திருந்தன. 1957-ல் இயற்றப்பட்ட கட்டடத்தை உடையவர் பொறுப்புச் சட்டத்தின்படி (Occupiers' Liability Act, 1957) இவை மிகவும் எளிதாக்கப்பட்டு விட்டன. இந்தச் சட்டம் ஏற்படுத்தியுள்ள மாற்றங்கள் பின்வருமாறு :

(1) அழைக்கப்பட்டு அல்லது அனுமதியுடன் சட்டப் படி ஒரு கட்டடத்தில் வந்திருப்பவர்களுக்கு அக் கட்டடத்தை உடையவர் காட்டவேண்டிய கடமையில் மாற்றம் இல்லை. எனவே, கட்டடத்திற்கு அழைக்கப்பட்டவர், அனுமதிக்கப்பட்டவர் என்ற வேறுபாட்டை நீக்கி அவர்களைப் பொறுத்துக் கவனம் காட்ட வேண்டிய கடமையிலுள்ள வேறுபாட்டை இச்சட்டம் நீக்குகிறது. பழைய சட்டத்தின்படி அழைக்கப்பட்டவர், அனுமதிக்கப்பட்டவர், அத்துமீறியவர் என்ற மூன்று வகை நபர்களும் அவர்களைப் பொறுத்துப் படிப்படியாக அளவில் குறையும் கடமையும் இருந்தது. புதிய சட்டப்படி இரண்டுவகை நபர்களே உண்டு; அதாவது சட்டப்படி கட்டடத்தில் உள்ள வருகையாளர்கள், (Lawful visitors) அத்துமீறியவர்கள் (Trespassers).

(2) இயற்றுச் சட்ட விதிகளுக்கு மாறுபட்ட முறையில் புதிய சட்டம் வருகையாளர்களைப் பொறுத்தவரை கடமைகளை வரை யறை செய்தது. அது கவனத்தோடு இருக்க வேண்டிய பொது வான கடமை என்று சொல்லப்பட்டது. அதாவது, கட்டடத்தை உடையவரால் எதற்காக ஒரு வருகையாளர் அழைக்கப்பட்டு அல்லது அனுமதிக்கப்பட்டு உள்ளாரோ அந்த நோக்கத்தை

நிறைவேற்றிக் கொள்வதற்கு அக் கட்டடத்தைப் பயன்படுத்துவதில் தகுந்த பாதுகாப்போடு இருக்க, அந்தச் சூழ்நிலைக்குத் தகுந்த கவனத்தைக் கட்டடத்தை உடையவர் காட்ட வேண்டும். இக் கடமை சட்டப்படி கட்டடத்திற்கு வருபவர்பால் காட்டப்பட வேண்டிய பொதுவான கடமையாகும். கவனமின்மைத் தீங்கில் பொதுவாகக் கூறப்பட்டுள்ள சாதாரணக்கவனம் காட்டவேண்டிய கடமையை இங்குக் குறிப்பிட்ட சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு பயன் படுத்த வேண்டும். பழைய சட்டத்தில் இக் கடமை நுழைபவரைப் பொறுத்துத் தனிப்பட்ட முறையில் அமைந்து கடும் பொறுப்பாகப் பேசப்பட்டு வந்தது. புதிய சட்டப்படி வருகையாளரோடு ஒப்பந்தம் செய்துகொண்டு கட்டடத்தை உடையவர் கவனம் காட்டவேண்டிய தம்முடைய கடமையை விலக்கவோ, மாற்றவோ, அதிகமாக்கவோ, குறைக்கவோ முடியும்.

(3) கடமையின் அளவைப் பாதிக்கக்கூடிய சூழ்நிலைகளையும் இச் சட்டம் சொல்கிறது. இவை இயற்றுச் சட்டத்தில் நிலவிய குழப்பமான நிலையை மாற்றப் பயன்பட்டன. இவற்றில் ஒரு வருகையாளரிடம் எதிர்பார்க்கக்கூடிய கவனம் அல்லது கவன மின்மை ஆகியவற்றின் அளவும் அடங்கும். கட்டடத்திற்கு வரும் வருகையாளர் குழந்தையாக இருந்தால் அது கவனத்தோடு இராது என்பதை எதிர்பார்க்கலாம். வயது வந்தவர்களைவிடக் குழந்தைகள் கவனக்குறைவானவர்கள். எனவே, குழந்தைகளைப் பொறுத்து அவர்களுடைய பாதுகாப்புக்காகக் கட்டடத்தை உடையவர் தனிப்பட்ட கவனம் காட்ட வேண்டும். ஒரு வருகையாளர் தம்முடைய தனிப்பட்ட தொழிலைச் செய்ய ஒரு கட்டடத்திற்கு வரும்போது அத் தொழிலைச் செய்வதில் சாதாரணமாக ஏற்படக்கூடிய தனிப்பட்ட ஆபத்தினை உணர்ந்து முன்னெச்சரிக்கையோடு இருப்பார் என்று எதிர்பார்க்கலாம். ரோல்ஸ் v. நாதன் (Roles v.Nathan) வழக்கில் எதிர்வாதியினுடைய கட்டடத்திற்குச் சுட்ட நிலக்கரிமூலம் எரி மூட்டப்பட்ட ஒரு கொதிகலத்தால் சூடேற்றப்பட்டிருந்தது. அக் கட்டடத்தில் இருந்த புகைபோக்கியில் ஏற்பட்ட ஓர் ஓட்டையை அடைக்கப் புகைபோக்கி ஓட்டடை அடிப்பவர் இருவர் அமர்த்தப்பட்டிருந்தனர். அவர்கள் அவ் வேலையைச் செய்துகொண்டிருக்கும்போது கார்பன் மானாக்சைட் ஆவியால் மூச்சுத்திணறி மாண்டனர். அவர்களுக்கு அந்த ஆபத்தைப்பற்றி எச்சரிக்கை செய்யப்பட்டிருந்தது. கொதிகலன் பற்றவைக்கப்பட்ட பின்னர் வேலைசெய்ய வேண்டாம் என்று அவர்களிடம் சொல்லப்பட்டிருந்தது ஆயினும், அவர்கள் அந்த எச்சரிக்கையைப் புறக்கணித்தனர். இந்தச் சூழ்நிலையில் அவர்

களுடைய தொழிலில் சாதாரணமாக ஏற்படக்கூடிய ஆபத்து என்று அது கருதப்பட்டது. எனவே, அவர்கள் அந்த ஆபத்தினை உணர்ந்திருந்ததாகவே கருதப்பட்டனர். ஒருவன் தன்னுடைய வீட்டில் உள்ள ஓர் இணைப்பைப் பழுதுபார்க்க ஒரு நிபுணரை அமர்த்தியிருந்தால் அந்த இணைப்பிலுள்ள குறைபாட்டினால் தோன்றக்கூடிய ஆபத்தினை உணர்ந்து எச்சரிக்கையாக அவர் இருப்பார் என்று நியாயமாக எதிர்பார்க்கலாம். ஒரு குறிப்பிட்ட ஆபத்து இருக்கிறது என்று ஒரு கட்டடத்தை உடையவர் எச்சரிக்கை தருவதால் மட்டுமே அவர் தமது கடமையைச் செய்து விட்டார் என்று முடிவாகச் சொல்ல முடியாது. ஆயினும், ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் அவர் தரும் எச்சரிக்கை கட்டடத்திற்கு வருபவர் தகுந்த பாதுகாப்போடு இருக்கப் போதுமானதாயின் அவர் தமது கடமையைச் செய்துவிட்டதாகக் கருதலாம். அவர் ஒரு வேலையைச் செய்யத் தகுதிவாய்ந்த ஒப்பந்தக்காரரை நியமித்து, அந்த வேலை முறையாகச் செய்யப்படும்படி கவனித்துக் கொண்டால் பொறுப்பாளியாக மாட்டார். தவிர, வருகையாளர் தாமே இசைந்தேற்கும் தீங்குகளுக்குக் கட்டடத்தை உடையவர் பொறுப்பாளியாக மாட்டார். மேற்கூறிய விதிகள் அழைக்கப்பட்டோ அனுமதிக்கப்பட்டோ வந்து கட்டடத்தைப் பயன்படுத்துபவர்பால் கட்டடத்தை உடையவர் காட்ட வேண்டிய கடமை களைப் பற்றியனவாகும்.

(4) இயற்றுச் சட்டத்தில் உள்ள கட்டடத்தை உடையவர், அழைக்கப்பட்டவர், அனுமதி பெற்றவர் ஆகிய சொற்றொடர்களின் பொருள் பற்றிய கருத்துகளில் கட்டடத்தை உடையவர் பொறுப்புச் சட்டத்தில் எவ்வித மாற்றமும் செய்யப்படவில்லை. எடுத்துக்காட்டாக, ஒரு கட்டடத்தில் நுழைபவருக்கு அழைப்போ அனுமதியோ உண்மையில் வழங்கப்பட்டிராவிட்டாலும் சில சூழ்நிலைகளில் அவை உட்கிடையாகக் கட்டடத்தை உடையவரால் அளிக்கப்பட்டதாகக் கருதலாம்.

(5) மேற்கூறிய விதிகள் நிலையான சொத்திற்கு மட்டுமல்லாமல், அசைவியல் சொத்துகள் அல்லது பொருள்களுக்கும் பொருந்தும். எடுத்துக்காட்டாக நிலம், கட்டடம் போன்றவற்றிற்கு மட்டுமல்லாமல் வண்டி, கப்பல், விமானம், இயங்கேணி (lift) ஆகியவற்றிற்கும் பொருந்தும். மேற்கூறிய விதிகள் வருகையாளர்களுக்கு ஏற்படும் பொருள் நட்டத்திற்கு மட்டுமல்லாமல், வருகையாளரல்லாத நபர்களுடைய சொத்திற்கேற்படும் சேதத்திற்கும் பொருந்தும்.

(6) ஒப்பந்தத்தின்படி ஒரு கட்டடத்திற்கு வருபவர்பால் கட்டடத்தை உடையவர் கொண்டுள்ள கடமை அவர்கள் தங்களிடையே செய்துகொண்டுள்ள ஒப்பந்த வாசகத்தைப் பொறுத்தது. அந்த ஒப்பந்தத்தின் உட்கிடையான வாசகத்தின்படி கடமையிருப்பின் முன்னர்க்கூறிய கவனத்தோடு இருக்கவேண்டிய பொதுவான கடமையைக் கட்டடத்தை உடையவர் காட்ட வேண்டும். ஒருவரோடு செய்துகொண்ட ஒப்பந்தத்தின்படி அவர் தம்முடைய கட்டடத்தைப் பார்வையிட ஆள்களோ அனுமதிக்க வேண்டியிருந்தால் சட்டப்படி அமைந்துள்ள கவனத்தோடு இருக்க வேண்டிய பொதுவான கடமையைக் காட்டவேண்டும். இக் கடமையைத் தளர்த்தவோ, விலக்கவோ இயலாது. அவர்களுடைய நன்மைக்காகவோ வேறு காரணத்திற்காகவோ ஒப்பந்தத்தில் இப் பொதுவான கடமைக்கு மேலான ஒரு பொறுப்பை அவர் ஏற்றுக்கொண்டிருந்தால் அதையும் அவர் நிறைவேற்ற வேண்டும். இதை ஒப்பந்தத்தில் ஏற்காமலும் இருக்கலாம்.

இந்திய வசதியுரிமைச் சட்டத்தில் 57, 58ஆம் பிரிவுகளில் அனுமதி தருபவர் அனுமதி பெறுபவருக்குக் காட்டவேண்டிய கடமைகளைப்பற்றி விரிவாகச் சொல்லப்பட்டுள்ளது அனுமதி பெற்றவருடைய உயிருக்கும், சொத்துக்கும் ஆபத்தானதாக அனுமதிக்கப்பட்டுள்ள இடத்தில் குறைபாடு ஏதேனும் இருப்பது அனுமதி தருபவருக்குத் தெரிந்திருக்கலாம். அதை அனுமதி பெறுபவர் அறியாதிருந்தால் அதை வெளியிட வேண்டிய கடமை அனுமதி தருபவருக்குண்டு. மற்றும் அந்த இடத்தில் பொறிகள் அல்லது மறைவான ஆபத்துகள் அல்லது வெளியிற் காணப்படாத குறைபாடுகள் இருப்பதை அனுமதி தருபவர் மட்டுமே அறிந்திருந்தால், அவர் அதை அனுமதி பெறுபவருக்குச் சொல்ல வேண்டிய கடமையுண்டு. இதைத்தவிர, அனுமதி பெறுபவரின் உடலுக்கும் சொத்திற்கும் ஆபத்தினை ஏற்படுத்தும் எச் செயலையும் அனுமதி தருபவர் அனுமதி வழங்கப்பட்ட சொத்தில் செய்யக் கூடாது.

44. ஆபத்தான பொருள்களால் ஏற்படும் பொறுப்பு

(Liability for Dangerous Chattels)

இப் பகுதியில் ஆபத்தான பொருள்களை வைத்திருப்பவர்க்குத் தீங்கியலில் ஏற்படக்கூடிய பொறுப்பைப்பற்றிக் காண்போம். இவ்வகு நாம் ஒப்பந்தச் சட்டத்தின்கீழ் ஏற்படக்கூடிய பொறுப் பையும் காணவேண்டியுள்ளது. ஆபத்தான பொருள்களைப் பயன் படுத்துமாறு ஒருவர் அனுமதிக்கப்பட்டிருக்கலாம்; அல்லது அழைக்கப்பட்டிருக்கலாம். அவர்களுக்கு ஏற்படக்கூடிய பொறுப்பு ஆபத்தான கட்டடத்தில் நுழைபவர்களுக்குக் காட்டப்படவேண் டிய பொறுப்பினை ஒத்தது. இதைத் தவிர ஓர் ஆபத்தான பொருளைப் பெற்றவர் அதனால் ஊறு அல்லது இழப்பு அடைந் திருக்கலாம். அவர்பால் கவனம் காட்டப்படவேண்டிய கடமை யைப்பற்றி இங்குக் காண்போம் 'அ' என்பவர் ஆபத்தான தன்மையுடைய ஒரு பொருளின் உரிமையை 'ஆ' என்பவருக்கு மாற்றுகிறார். 'ஆ' என்பவருக்கு அந்த ஆபத்தான பொருளால் ஊறு அல்லது இழப்பு ஏற்படக் கூடும். இதைத் தவிரச் சில சமயங் களில் 'ஆ' என்பவர் 'இ' என்பவருக்கு அதன் உரிமையை மாற்றக் கூடும். அவர் அதை 'ஈ' என்பவருக்கு மாற்றக் கூடும். இவ்வாறு அப் பொருள் பல கைகள் மாறி இறுதியாய்ச் சென்றடையும் நப ருக்கு ஆபத்தினை ஏற்படுத்தக் கூடும். இங்கு நாம் 'அ'விட மிருந்து அப் பொருளின் உரிமையைப் பெற்றுள்ள 'ஆ' என் பவர்பால் 'அ' கொண்டுள்ள பொறுப்பைப் பற்றியும், அப் பொருள் இறுதியாய்ச் சென்றடையும் நபர்பால் 'அ' கொண்டுள்ள பொறுப் பினைப் பற்றியும் சுருக்கமாகக் காண்போம்.

ஒரு பொருளின் உரிமையை நேரடியாகப் பெறுபவரைப் பொறுத்துள்ள கடமை (Liability towards the immediate transferee)

ஒரு பொருள் ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு ஓர் ஒப்பந் தத்தின்படி உரிமை மாற்றம் செய்யப்படலாம், அல்லது ஒருவர்

பொருள் ஒன்றை மற்றொருவருக்குக் கொடையாகவோ கடனாகவோ தரலாம். ஒப்பந்தத்தின்படி ஓர் ஆபத்தான பொருளை எதிர்வாதி வாதிக்குக் கொடுத்திருந்தால் எதிர்வாதிக்கு ஏற்படும் பொறுப்பு அவர்கள் செய்துகொண்ட ஒப்பந்த வாசகங்களைப் பொறுத்ததாகும். இந்த ஒப்பந்த வாசகங்கள் வெளிப்படையாகவோ, உட்கிடையாகவோ அமைந்திருக்கும். எடுத்துக்காட்டாக, ஒரு வாணிபச் சரக்கு விற்பனைக்காகச் செய்யப்படும் ஒப்பந்தத்தில் அதை ஒருவர் எதற்காக வாங்குகிறாரோ அதற்கு அப் பொருள் பயன்படக்கூடியது என்றஉட்கிடையான நம்புறுதி உண்டு. எனவே, அப் பொருளில் ஆபத்தான குறைகள் இருந்து அதை வாங்கியவருக்குக் காயம் ஏற்படுத்தியிருந்தால் அதை விற்றவர் பொறுப்பாளியாவார். காட்லி v. பெர்ரி (Godley v. Berry) வழக்கில் 6 வயது சிறுவனுகிய வாதி எதிர்வாதியிடம் விலைக்கு வாங்கிய ஒரு கவண் அறுந்ததால் காயமுற்றான். வாணிபச் சரக்கு விற்பனைச் சட்டத்தின்படி (Sale of Goods Act, 1893) உட்கிடையாக அமைந்துள்ளதாகக் கருதப்படும் ஒப்பந்த வாசகங்களை எதிர்வாதி மீறியதற்காகப் பொறுப்பாளியாகக் கருதப்பட்டார். ஒரு வாணிபச் சரக்கில் ஊறு விளைவிக்கக் கூடிய பொருள்கள் அடங்கியிருந்தால் அதற்கு அப் பொருளை விற்றவர் பொறுப்பாளியாவார். கிராண்ட் v. ஆஸ்திரேலியன் நிட்டிங் மில்ஸ் லிமிடெட் (Grant v. Australian Knitting Mills Ltd.) வழக்கில் கிராண்ட் என்பவர் சில்லறை வியாபாரிகளிடமிருந்து 'கோல்டன் ஃபிளீஸ்' (Golden Fleece) கம்பளி உள்ளாடைகள் வாங்கினார். அவற்றில் மிதமிஞ்சிய சல்பைட்டுகள், (sulphites) இருந்ததால் அவருக்குத் தோல் அழற்சி நோய் வந்தது. உற்பத்தி செய்பவர் கவனமின்மையால் இது ஏற்பட்டதாகும். தகுந்த முறையில் சோதனை செய்திருந்தாலும் இந்தக் குறைபாட்டைக் கண்டுபிடித்திருக்கமுடியாது. வாதி கிராண்டுக்கு அப் பொருளை விற்ற சில்லறை வணிகர் உட்கிடையான நிபந்தனை அல்லது நம்புறுதியை மீறியதற்காக வாணிபச் சரக்கு விற்பனைச் சட்டத்தின்படி பொறுப்பாளியாகக் கருதப்பட்டுத் தீங்கீடு தர நேர்ந்தது. இதைத் தவிர அப் பொருளை உற்பத்தி செய்தவர்கள் கவனம் காட்டத் தவறியதற்காகத் தீங்கியலில் பொறுப்பாளியாகக் கருதப்பட்டார்கள். இதைப்போலவே ஒரு வணிகரிடமிருந்து வாங்கப்பட்ட சுடுநீர்ப்புட்டி முறையாகப் பயன்படுத்தப்பட்ட போது வெடித்ததற்காக அவர் பொறுப்பாளியாகக் கருதப்பட்டார்.

ஓர் ஆபத்தான பொருள் ஒப்படைவு ஒப்பந்தத்தின்கீழ் உரிமை மாற்றம் செய்யப்பட்டிருந்தால் ஒப்படைவு செய்பவருக்கு

ஏற்படும் பொறுப்பு அப் பொருள் வாடகைக்குக்கொடுக்கப்பட்டதா அல்லது மறுபயன் பெருமல் தரப்பட்டதா என்பதைப் பொறுத்ததாகும். அது வாடகைக்காக ஒப்படைவு செய்யப்பட்டிருந்தால் அப்பொருளில் அடங்கியுள்ள அசாதாரணமான ஆபத்துகளை ஒப்படைவு செய்தவர் அறிந்திராவிட்டாலும் அவற்றால் ஏற்படும் ஊறுக்குப் பொறுப்பாளியாவார். ஆனால், மறுபயன் பெருமல் அப் பொருள் ஒப்படைவு செய்யப்பட்டிருந்தால் ஒப்படைவு செய்பவர் அப் பொருளில் உள்ளதாக அவர் அறிந்துள்ளதும், அதைப் பயன் படுத்துவதற்கு இடையூறாகவோ ஒப்படைவு பெறுபவரை அசாதாரணமான ஆபத்திற்கு உள்ளாக்கக் கூடியதாகவோ உள்ள குறைபாடுகளைச் சொல்லவேண்டிய கடமையுண்டு. ஹைமன் v. நை அண் சன்ஸ் (Hyman v. Nye & Sons) வழக்கில் எதிர்வாதியிடமிருந்து குறிப்பிட்ட பயணம் ஒன்றுக்காக ஒரு வண்டியையும் குதிரைகளையும் வாதி வாடகைக்குப் பெற்றிருந்தார். வண்டியில் இருந்த கோளாறால் குடை சாய்ந்து விழ வாதிக்குக் காயம் ஏற்பட்டது. வண்டி எந்த நோக்கத்திற்காக வாடகைக்குப் பெறப் பட்டதோ அதற்குப் பயன்படத் தக்கதாக இல்லாததால் எதிர்வாதி பொறுப்பாளியாகக் கருதப்பட்டார். அது வாடகைக்குப் பெறப் பட்ட நோக்கத்திற்குப் பயன்படத் தகுதியுள்ளதாகச் செய்வதில் எதிர்வாதி தக்க கவனமும் திறமையும் காட்டவேண்டும். அது அச்சு முறிந்து சாய்ந்தால் விபத்தினாலேயே அது ஏற்பட்ட தென்றும் கவனமும் திறமையும் காட்டியிருந்தாலும் அதைத் தடுத்திருக்கமுடியாதென்றும் எதிர்வாதியே நிரூபிக்க வேண்டும். விற்பனை ஒப்பந்தத்தை ஒத்துள்ள வாணிபமாகிய தவணைமுறைப் பொருள் விற்பனையின்கீழ், கார் விற்பனை செய்பவர் ஒரு நிதி வழங்கும் நிறுவனத்தின் மூலம் ஒரு காரை விற்கும்போதும் இத்தகைய நிபந்தனை அல்லது நம்புறுதி உட்கிடையாக இருப்பதாகக் கருதப் படும். டானகு v. ஸ்டீவன்சன் (Donoghue v. Stevenson) வழக்கில் சொல்லப்பட்ட தீர்ப்பிற்குப் பின்னர் மறுபயனின்றி உரிமை மாற்றம் செய்யப்பட்ட பொருளிலுள்ள ஆபத்தை எதிர்வாதி அறியாதிருந்தால் அவருக்குப் பொறுப்பேற்படாது என்று உறுதியாகச் சொல்லமுடியவில்லை. அப்பொருள் உரிமை மாற்றம் செய்யப் பட்ட சூழ்நிலைகளின்படி, அதிலுள்ள ஆபத்தை அவர் அறிந்திருக்க வேண்டியவர் என்று கருதப்பட்டால் அவர் பொறுப்பாளியாகலாம். உரிமை மாற்றம் செய்பவர் அதை மறுபயன் பெருமல் தந்தார் என்பதை அவர் காட்டவேண்டிய கவனத்தின் அளவைத் தீர்மானிக்கும்போது கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். ஆனால், அவர் மறுபயன் பெருமல் தந்தார் என்பதாலேயே அவருக்கு அப் பொருளைப் பெற்றவர்பால் கவனம் காட்டவேண்டிய கடமை இல்லையென்று சொல்ல முடியாது.

ஆனால், வாதியும் எதிர்வாதியும் ஒப்பந்தம் செய்துகொள்ளும் போது ஒப்பந்தத்தின்கீழ் ஏற்படக்கூடிய பொறுப்பிலிருந்து எதிர் வாதிக்கு விலக்களிக்கும் வாசகத்தை அவர்கள் விரும்பினால் சேர்த்துக்கொள்ள எந்தத் தடையும் இல்லை. அவ்வாறு அவர்கள் இணங்கியிருந்தால் எதிர்வாதி உண்மையில் அறிந்துள்ள மறை வான ஆபத்துகளைகூடத் தெரிவிக்க வேண்டியதில்லை. வார்டு v. ஹாப்ஸ் (Ward v. Hobbs) வழக்கில் வாதிக்கு எதிர்வாதி 32 பன்றிகளை ஏலத்தில் விற்றார். அவற்றிற்கு டைபாய்டு காய்ச்சல் கண்டிருந்தது. அப் பன்றிகளில் ஒன்றைத் தவிர மற்றவை அனைத் தும் விரைவில் அக் காய்ச்சலால் மாண்டன. வாதி மற்றவர்களிட மிருந்து வாங்கிய சில பன்றிகளுக்கும் இந்த நோய் பரவி அவை களும் மாண்டதாக வாதி கூறினார். எதிர்வாதிக்குத் தாம் விற்ற பன்றிகளுக்கு டைபாய்டு காய்ச்சல் இருப்பது தெரிந்திருந்தும் அவர் அவற்றை விற்றபோது வாதியிடம் சொல்லவில்லை. ஆனால், அவர் வாதிக்கு அவற்றை விற்றபோது செய்துகொண்ட ஒப்பந்த வாசகங்களின்படி அவர் அதற்குப் பொறுப்பாளியல்லர். எனவே, எதிர்வாதி வாதிக்குத் தீங்கீடு தரவேண்டியதில்லை என்று தீர்ப் பளிக்கப்பட்டது.

ஆனால், ஒப்பந்தத்தின்படி ஒருவர் ஒரு பொருளை வேறு ஒருவ ருக்குக் கொடுத்திருந்தாலும் ஒப்பந்தச் சட்டப்படி மட்டுமல்லாமல் கவனமின்மைக்காகவும் பொறுப்பேற்படலாம். கிளார்க் v. ஆர்மி அண்ட் நேவி கோ-ஆபரேடிவ் சொசைட்டி லிமிடெட். (Clarke v. Arms & Navy Co-operative Society Ltd.) வழக்கில், வாதி எதிர்வாதிகளின் கடையிலிருந்து ஒரு டின் பூச்சிகொல்லி மருந்து வாங்கினாள். அதை அவள் வழக்கமான முறையில் ஒரு ஊரண்டி மூலம் மூடியைத் துளைத்துத் திறக்க முயலும்போது அதன் உள்ளே யிருந்த மருந்து படீரென்று வெடித்து அவள் முகத்தில் அடித்த தால் அவள் கண்களில் காயம் ஏற்பட்டது. இவ்வாறு அதைத் திறக்கும்போது ஏற்படக்கூடிய ஆபத்தைப்பற்றி எதிர்வாதிகளுக் குத் தெரியும். இருப்பினும் அவளுக்கு எச்சரிக்கை தரத் தவறி விட்டனர். இது அவர்கள் கவனமின்மையைக் காட்டும். எனவே, அவர்கள் தீங்கியலில் பொறுப்பாளிகளாகக் கருதப்பட்டனர்.

ஒரு பொருளின் உரிமையை இறுதியாகப் பெறுபவரைப் பொறுத்துள்ள கடமை (Duty towards the ultimate transferee)

'அ' என்பவர் 'ஆ' என்பவருக்கு ஓர் ஆபத்தான பொருளை விற்கிறார் அல்லது கொடுக்கிறார் என்று வைத்துக்கொள்வோம். அதை 'ஆ' என்பவர் 'இ' என்பவருக்கு விற்கிறார் அல்லது

கொடுக்கிறார். அந்த ஆபத்தான பொருள் 'இ' என்பவருக்குக் காயத்தை ஏற்படுத்துகிறது. 'அ' என்பவர் 'இ' என்பவருக்குப் பொறுப்பாளியாவார். இங்கு 'அ' என்பவர் 'ஆ' என்பவரோடு செய்துகொண்ட ஒப்பந்தத்தை மீறியதன் விளைவாக 'இ' என்பவருக்குக் காயம் ஏற்பட்டிருக்கிறது. 'அ' என்பவருக்கும் 'இ' என்பவருக்கும் இடையே எந்த ஒப்பந்தமும் இல்லாததால் 'இ' என்பவர் 'அ' என்பவர்மேல் ஒப்பந்த மீறலுக்காக வழக்கிட முடியாது. ஆனால், அவர் 'அ' என்பவர்மேல் தீங்கியலில் வழக்கிட முடியுமா என்பதை இனிக் காண்போம்.

1. மோசடி

எதிர்வாதி தாம் விற்கும் பொருள் மிகவும் பத்திரமானது என்று அதை வாங்குபவரிடம் மோசடியாகச் சொல்லி அவரை நம்பவைக்கிறார். ஆனால், அது உண்மையில் ஆபத்தானதாக இருந்து வாதிக்குக் காயம் ஏற்பட்டிருந்தால் எதிர்வாதி பொறுப்பாளியாவார். லேங்கிரிட்ஜ் v. லெவி (Langridge v. Levy) வழக்கில் வாதி பயன்படுத்துவதற்காகவே அவரது தந்தையிடம் ஒரு துப்பாக்கியை எதிர்வாதி விற்றார். அதை அவர் விற்கும் போது அது புகழ்பெற்ற உற்பத்தியாளராகிய நாக் என்பவரால் நல்ல முறையில் செய்யப்பட்டதென்றும், பாதுகாப்பானது என்றும் பொய் கூறினார். வாதியின் தந்தை வாதிக்கு அதைத் தந்தார். வாதி சுடும்போது அது வெடித்து அவருக்குக் கையில் காயம் ஏற்பட்டது. இவ் வழக்கில் எதிர்வாதி வாதியின் தந்தையிடம் மோசடியான தகவலைச் சொல்லியிருந்தாலும், அத் தகவல் வாதி கேட்டு நடக்கவேண்டும் என்பதற்காகவே சொல்லப்பட்டது. வாதியும் அதை நம்பி நடந்ததால் காயமுற்றார். எனவே, வாதிக்கும் எதிர்வாதிக்குமிடையே ஒப்பந்தம் எதுவும் இல்லையெனினும், வாதி எதிர்வாதியிடமிருந்து தீங்கீடு கோரி வழக்கிட முடியும் என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

2. கவனமின்மை

எதிர்வாதி வாதியின்பால் கொண்டுள்ள கவனத்தோடு இருக்க வேண்டிய கடமையிலிருந்து தவறியிருந்தால் பொறுப்பாளியாவார். இத்தகைய கவனத்தோடு இருக்க வேண்டிய கடமை பின்வரும் சூழ்நிலைகளில் தோன்றும் :

(i) இயல்பாகவே ஆபத்தான பொருள்கள் : பொருள்களை இயல்பாகவே, ஆபத்தானவை என்றும், ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் ஆபத்தானதாக உள்ளவை என்றும் இருவகையாகப் பிரிக்கலாம்

ஒரு பொருள் இயல்பாகவே அபாயகரமானதாயின் அதனோடு தொடர்புகொள்ளக் கூடியவர்களை ஆபத்திற்குள்ளாகாமல் காப்பாற்ற வேண்டிய ஒரு தனிப்பட்ட கடமை உண்டு. இவற்றிற்கு எடுத்துக்காட்டுகளாக, குண்டு நிரப்பப்பட்ட துப்பாக்கி, வெடி மருந்துகள், நஞ்சுகள் போன்றவற்றைச் சொல்லலாம். இவற்றை விற்பவர்களும், நிறுவுகின்றவர்களும் அவற்றோடு நெருங்கிய தொடர்பு கொள்பவர்களைக் காப்பாற்றத் தகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கவேண்டும். தாமஸ் v. வின்செஸ்டர் (Thomas v. Winchester) வழக்கில் ஒரு மருந்து மொத்த வணிகர் ஒரு சில்லறை மருந்துக்கடைக்காரருக்கு டாண்டிலியன் செடியின் சாறு என்று சொல்லி ஒரு புட்டியை விற்றார். டாண்டிலியன் ஆபத்தற்ற ஒரு மருந்துச் செடியின் சாறாகும். அவர் விற்ற புட்டியின்மேல் அது டாண்டிலியன் செடியின் சாறு என்றுதான் ஒட்டப்பட்டிருந்தது. ஆனால், அதில் உண்மையில் பெல்லாடோனா என்ற நஞ்சு இருந்தது. மருந்துக் கடைக்காரரின் பணியாள் கவனமின்றித் தவறுதலாக அந்தப் புட்டியில் ஒட்டியிருந்தார். அந்த சில்லறை வணிகர் அதை ஒரு மருத்துவருக்கு விற்றார். அந்த மருத்துவரிடமிருந்து அதை வாங்கி அருந்திய வாதி கடுமையான நோயுற்றார். இவ் வழக்கில் மருந்து மொத்த வணிகர் வாதிக்குப் பொறுப்பாளியாவார் என்று தீர்ப்பளிக்கப்பட்டது. முன்னெச்சரிக்கையாக நடவடிக்கை எடுக்க வேண்டிய கடமை இருக்கும்போது, எதிர்வாதியல்லாத வேறு ஒரு நபர் குறுக்கிட்டிராவிட்டால் விபத்து ஏற்பட்டிராது என்று சொல்வதை ஏற்றுக் கொள்ள முடியாது. ஒருவர் அருந்தாவிட்டால் நஞ்சினால் ஆபத்தில்லை; விசையை இழுக்காவிட்டால் துப்பாக்கி வெடியாது. ஆயினும், மேற்கூறிய சூழ்நிலைகளில் விபத்தேற்படுவதற்கு எதிர்வாதியின் கவனமின்மையே காரணமாயின் பொறுப்பாளியாகக் கருதப்படுவார்.

இவ்வாறு பொருள்களை இயல்பாகவே ஆபத்தானதென்றும் ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் ஆபத்தானதாக உள்ளதென்றும் பிரிப்பது கண்டனத்திற்குள்ளாகியிருக்கிறது. எல்லாக் காலங்களிலும் எல்லாச் சூழ்நிலைகளிலும் அபாயகரமான பொருள் எதுவும் கிடையாது. ஒவ்வொரு பொருளிலும் ஆபத்து இருக்கிறது. எனவே, ஒரு பொருள் ஆபத்தானதா என்று பார்ப்பதை விடச் சில புறச் சூழ்நிலைகளின் காரணமாக அது ஆபத்தானதாகக் கூடுமா என்று காணவேண்டும். எனவே, சூழ்நிலைக்கேற்றவாறு எதிர்வாதியால் காட்டப்படவேண்டிய கவனத்தின் அளவு வேறுபடுகிறது. ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் காட்டப்பட வேண்டிய தகுந்த கவனத்தைக் காட்டாமல் இருப்பதைக் கவனமின்மை என்று வைத்துக்

கொள்ளலாம். எனவே, உண்மையில் ஆபத்தான பொருள்கள் என்று எதுவும் இல்லை. ஒரு நீதிபதி அரைகுறைக் கல்வியைவிட உலகில் ஆபத்தானது எதுவும் கிடையாது என்று குறிப்பிட்டுள்ளார். சில பொருள்களைப் பொறுத்தவரை அதிகக் கவனம் தேவைப்படுகிறது; சிலவற்றைப் பொறுத்தவரை குறைந்த கவனம் தேவைப்படுகிறது. நஞ்சுபோன்ற இயல்பாகவே ஆபத்தான பொருள்களுக்கும், குறிப்பிட்ட சூழ்நிலையில் ஆபத்தானதாக உள்ள பொருள்களுக்கும் உள்ள வேறுபாட்டைப் புரிந்து கொள்வது எளிதன்று. இரண்டாவதாகச் சொல்லப்பட்டதே உண்மையில் அதிக ஆபத்தானதாகும். அதை ஓநாய் என்று நேரடியாகச் சொல்லாமல் ஆட்டுத்தோல் போர்த்திய ஓநாய் என்று சொல்வதற்கு ஒப்பாகும்.

(ii) தெரிந்துள்ள ஆபத்தினை வெளியிடாதிருத்தல் : எதிர்வாதிக்கு அவன் கொடுக்கும் பொருள் இடர் விளைக்கும் இயல்புடையதென்று உண்மையில் தெரிந்திருந்தும் அதைப் பெறுபவருக்கு எச்சரிக்கை தரத் தவறியதன் காரணமாக மூன்றாவது நபருக்குக் காயங்கள் ஏற்படலாம். இப்போது அவன் கொடுத்த பொருள் இயல்பாகவே ஆபத்தானதன்றெனினும் மூன்றாவது நபர்களுக்கு அதனால் ஏற்படும் காயங்களுக்கு அவன் பொறுப்பாளியாவான். அதாவது, ஒரு பொருள் இயல்பாகவே ஆபத்தானதன்றெனினும் அதிலுள்ள ஆபத்தான குறைபாட்டைப்பற்றி அறிந்திருந்தால் அது ஆபத்தான பொருள்களின் வகையில் சேர்க்கப்படும். ஒருவர் தாம் விற்கும் பொருள் ஆபத்தானதென்று அறிவாராயின் அதை வாங்குபவரை எச்சரிக்கவேண்டும். அப்போதுதான் வாங்குபவர் போதிய தற்காப்பு நடவடிக்கை எடுக்க இயலும். இவ்வாறு அவரிடமிருந்து அப் பொருளை அடுத்துப் பெறுபவருக்குமட்டுமல்லாமல், அப் பொருளினால் ஆபத்து ஏற்படக்கூடிய மற்ற நபர்களுக்கும் அவர் எச்சரிக்கை தரவேண்டும். எடுத்துக்காட்டாக ஃபாரண்ட் v. பார்னஸ் (Farrant v. Barnes) வழக்கில் எதிர்வாதி நைட்ரிக் அமிலம் அடங்கிய ஒரு மூங்கிற் கூடை அஃணப்புடைய பெரிய உருண்டைக் கண்ணாடிப்புட்டியை எடுத்துச் செல்வதற்காகச் சரக்கேற்றிச் செல்பவரிடம் கொடுத்தார். அவர் அதிலுள்ள பொருளின் ஆபத்தான தன்மையைப்பற்றி அவரிடம் சொல்லவில்லை. சரக்கேற்றிச்செல்பவரின் பணியாளாகிய வாதி அதைத் தம் தோளில் சுமந்து செல்லும்போது வெடித்ததால் காயமுற்றார். இதற்கு எதிர்வாதி பொறுப்பாளியாகக் கருதப்பட்டார்.

ஆனால், ஒரு பொருளை விற்பவர் அதன் ஆபத்தான தன்மையைப்பற்றி ஏற்கெனவே அறிந்துள்ள ஒருவருக்கு அதைக் கொடுத்

திருந்தாலும், அல்லது அதைப்பற்றித் தகுந்த முறையில் எச்சரித் திருந்தாலும் பொறுப்பாளியாகமாட்டார். இப்படி அவரால் எச்சரிக்கப்பட்டவர் இறுதியாக அப் பொருளைப் பெறும் நபருக்கும் எச்சரிப்பார் என்று அப் பொருளை முதலில் கொடுத்தவர் எதிர் பார்க்க உரிமையுண்டு. ஹோம்ஸ் v. ஆஷ்ஃபோர்டு (Holmes v. Ashford) வழக்கில் ஒரு முடி திருத்துபவர் வாதியின் தலையில் நரைமயிர் கருக்கும் சாயத்தைத் தடவினர். அதனால் வாதிக்குத் தோல் அழற்சி நோய் ஏற்பட்டது. சில குறிப்பிட்ட தோல்களுக்கு அந்தச் சாயத்தைப் பயன்படுத்துவதால் ஆபத்து ஏற்படும் என்றும், எனவே அதைப் பயன்படுத்தும் முன்னம் சோதித்துப் பார்த்தே பயன்படுத்த வேண்டுமென்றும் போதிய எச்சரிக்கை அடங்கிய குறிப்பு ஒன்றும் அந்தச் சாயத்துடன் அனுப்பப்பட்டி ருந்தது. இந்த எச்சரிக்கையைப் பயன்படுத்தத் தவறியதாலேயே வாதிக்கு ஊறு ஏற்பட்டது. எனவே, அந்த நரைமயிர் கருக்கும் சாயத்தை உற்பத்தி செய்தவர் பொறுப்பாளியல்லரென்று தீர்ப் பளிக்கப்பட்டது. ஆயினும், ஒரு தகுதியற்ற நபருக்கு ஓர் ஆபத் தான பொருள் ஒன்று தரப்படுமாயின் வெறும் எச்சரிக்கை தந் தால் மட்டுமே கவனம் காட்டியதாகக் கருதமுடியாது. எடுத்துக் காட்டாக, ஒரு சிறுவனுக்கு பெட்ரோல் அல்லது துப்பாக்கி விற்ப தைச் சொல்லலாம்.

(iii) இயல்பாகவே ஆபத்தானவையாக அல்லது அதைக் கொடுப்பவர்க்கு ஆபத்தானவை என்று தெரிந்ததாக இல்லாவிட்டாலும் உண்மை யில் ஆபத்தாக உள்ள பொருள்கள்

இங்கு ஒரு பொருளில் உள்ளதெனத் தெரிந்திராத ஆபத்து கூறைப் பொறுத்த கவனமின்மைபற்றிக் காண்போம். 'அ' என்பவர் 'ஆ' என்பவருக்கு ஒரு பொருளைக் கொடுக்கிறார்; 'ஆ' என்பவர் 'இ' என்பவருக்கு அதைக் கொடுக்கிறார். 'இ' என்பவருக்கு அப் பொருளால் காயமேற்படுகிறது. அப் பொருள் இயல்பாகவே ஆபத்தான வகையைச் சேர்ந்ததாகவோ 'அ' என்பவருக்கு ஆபத்தானதெனத் தெரிந்ததாகவோ இல்லாவிட்டால், 'இ' என்பவருக்கும் 'அ' என்பவருக்கும் எந்த ஒப்பந்தமும் இல்லை யென்றால், 'இ' என்பவருக்கு ஏற்படும் ஊறுக்கு 'அ' பொறுப்பாளி ஆகமாட்டார் என்று 1932 வரைகருதப்பட்டது. இந் நிலை 1932-ல் சொல்லப்பட்ட டானகு v ஸ்டீவன்சன் தீர்ப்பின் விளைவாக மாற்றப்பட்டுவிட்டது இவ் வழக்கின்படி ஒரு பொருளை உற்பத்தி செய்பவர் அதை இறுதியாக நுகர்பவரோடு எந்த ஒப்பந்தமும் செய்து கொண்டிராவிட்டாலும் கவனமின்மைக்குப் பொறுப்பாளி யாவார். அவர் மோசடி புரிந்திராவிட்டாலும் கவனமின்மைக்குப்

பொறுப்பாளியாவார். இவ் வழக்கின் விவரங்களை முன்னரே கண்டோம். இவ் வழக்கில் தீர்ப்பளித்த பெரும்பான்மையான பிரபுக்கள் சபை நீதிபதிகளின் கருத்தின்படி, ஒரு பொருளை உற்பத்தி செய்பவர் தாம் உரிய கவனம் காட்டத் தவறினால் அதைப் பயன்படுத்துவோர் பாதிக்கப்படக் கூடும் என அறிந்திருந்தும், அந்தப்பொருளை இடைநிலையில் எவரும் சோதித்துப் பார்க்கும் வாய்ப்பின்றி அவர்களைச் சென்றடைய வேண்டும் என்ற கருத்தோடு விற்பனை செய்தால் அதைப் பயன்படுத்துவோரின் உயிருக்கு அல்லது சொத்துக்குச் சேதம் ஏற்படாமல் இருக்க உரிய கவனம் காட்டவேண்டும். இந்தக் கடமையிலிருந்து அவர்கள் தவறினால் அப் பொருளை உட்கொள்பவர்களுக்கும் பயன்படுத்துபவர்களுக்கும் பொறுப்பாளியாவார். இவ் வழக்கில் எதிர்வாதி அனுப்பிய புட்டியிலிருந்த மது தூய்மையற்று இருந்ததால் அதை அருந்திய வாதிக்குக் கடுமையான வயிற்றுப் போக்கும், அதிர்ச்சியும் ஏற்பட்டது. வாதிக்கும் எதிர்வாதிக்கும் இடையே எவ்வித ஒப்பந்தமும் இல்லையெனினும் எதிர்வாதி கவனமின்மைக்குப் பொறுப்பாளியானார் இங்கு அப் பொருள் எவரும் சோதித்தறிய முடியாதவாறு, எதிர்வாதிகள் தங்களிடமிருந்து அப் பொருள் சென்றபோதிருந்த நிலையிலேயே நுகர்வோரைச் சென்றடைய வேண்டும் என்று கருதி விற்பனை செய்திருந்ததால் பொறுப்பாளியானார். இத் தீர்ப்பு நியாயமானதாகும்.

ஒரு பொருளை உற்பத்தி செய்பவருக்கு மட்டுமல்லாமல் இத் தீர்ப்பில் சொல்லப்பட்ட பொறுப்பு ஒரு பொருளைப் பழுது பார்ப்பவர்கள், இணைப்பவர்கள், கட்டுபவர்கள், வழங்குபவர்கள் ஆகியோருக்கும் பொருந்தும். அதாவது, ஆபத்தினை உருவாக்கும் செயலினைச் செய்தவர் அனைவருக்கும் இப் பொறுப்பு ஏற்படும் என்ற கொள்கை விரிவாக்கப்பட்டது. பிரௌன் v. காட்டரில் (Brown v. Cotteril) வழக்கில் குழந்தையாகிய வாதி தன் பாட்டியின் கல்லறையின்மேல் மலர்களை வைப்பதில் உதவி செய்து கொண்டிருந்தபோது அடுத்திருந்த கல்லறை சாய்ந்து விழுந்து காயமுற்றாள். அக் கல்லறை எதிர்வாதிகளால் கவனமின்றிக் கட்டப்பட்டிருந்தது. வாதிக்கு ஏற்பட்ட காயத்திற்கு எதிர்வாதிகள் பொறுப்பாளிகளாவார்கள் என்று தீர்ப்பு அளிக்கப்பட்டது. சிலசூழ் நிலைகளில் ஒரு பொருள் மற்றவர்களுக்கு வழங்குபவர்களும் உரிய விசாரணையும், சோதனையும் செய்ய வேண்டிய தேவை ஏற்படலாம். அதிலுள்ள ஆபத்தை அவர் தெரிந்திருக்க வேண்டுமாயின் அதைப் பயன்படுத்தப் போகின்றவரை அவர் எச்சரிக்கவேண்டும். அவ்வாறு அவர் செய்யத் தவறினால் கவனமின்றி இருந்ததாகவே கருத வேண்டும். ஆன்ட்ரூஸ் v. ஹாப்கின்சன் (Andrews v. Hopkinson) வழக்கில் எதிர்வாதி 18 ஆண்டுகள் நிறைந்த ஒரு

பழைய காரை ஒரு நிதிக்கம்பெனிக்கு விற்றார். அவர்கள் அதைத் தவணை முறையில் வாதிக்கு விற்றனர். காரின் இயந்திரத்தில் இருந்த கோளாறால் வாதிக்கு விபத்தேற்பட்டது. உரிய கவனம் காட்டியிருந்தால் அதிலிருந்த கோளாற்றை எதிர்வாதி கண்டுபிடித் திருக்க முடியும். பழைய கார் விற்பனையாளராகிய எதிர்வாதியிடம் அந்தக் கார் ஒரு வாரத்திற்குமேல் உடைமையில் இருந்தும் அது சாலையில் ஓட்டத் தகுதியானதா என்று அறியத் தவறிவிட்டார். அவர் அதைப் பரிசோதிக்கத் தவறியதோடு தாம் அவ்வாறு பரிசோதிக்கவில்லை என்று வாதிக்கு எச்சரிக்கை செய்யத் தவறி யிருந்தார். எனவே, எதிர்வாதி பொறுப்பாளியாகக் கருதப்பட்டார். இதைப்போலவே ஒரு மருந்தினை விற்பனை செய்பவர் அந்நிலுள்ள ஆபத்தினைப்பற்றி உரிய முறையில் எச்சரிக்க வேண்டும் என்று ஒருவர் எதிர்பார்க்கலாம். ஆனால், சில்லறையாக மளிகைப் பொருள்களை விற்பவர் தாம் விற்கும் தகரக் கலத்தில் அடைத்த உணவில் கலப்படம் இருக்கிறதா என்பதைக் கண்டறிய வேண்டும் என்று எதிர்பார்க்கமுடியாது. அவரது கவனமின்மையால் அது கலப்படமாகியிராதபோதும் அதிலுள்ள கலப்படத்தை அவர் அறிந்திராதபோதும் அவரைப் பொறுப்பாளியாக்குவது முறை யாகாது.

இவ்விதி உணவுப் பொருள்களுக்கும், குடிக்கும் பொருள் களுக்கு மட்டுமல்லாமல் உள்ளாடை, கார், மயிர்ச்சாயம், கல்லறை முதலியவற்றிற்கும் பொருந்தும். ஊறு விளைவிக்கும் பொருள் வேறு ஒரு பொருளாக இருக்க வேண்டியதில்லை; அந்தப் பொரு ளின் ஒரு பகுதியாகவேகூட இருக்கலாம். எடுத்துக்காட்டாக, கோழிக்குஞ்சு இறைச்சியினால் செய்யப்பட்ட உணவுப்பண்டத் தில் கோழிக்குஞ்சின் எலும்பு இருந்து ஊறு விளைவிக்கலாம். ஆபத்தான அப் பொருள் உற்பத்தியாளருடைய முத்திரையுடன் நுகர்பவரைச் சென்றடையத் தேவையில்லை. எதிர்வாதியிடமிருந்து அப் பொருள் அனுப்பப்பட்டபோது அதிலிருந்த அதே குறைபாட் டுடனேயே அது நுகர்பவரைச் சென்றடைந்தது என்பதை நிரூ பித்தால் போதும். முன்பு சொன்ன கிராண்ட் v. ஆஸ்திரேலியன் நிட்டிங் மில்ஸ் வழக்கில் உள்ளாடை உற்பத்தியாளர் ஓவ்வொன் றிலும் 6 ஜோடிகள் உள்ளாடைகள் கொண்ட அட்டைப் பெட்டி களை அனுப்பினர். அவற்றில் இரண்டை மட்டும் ஒரு சில்லறை வணிகரிடமிருந்து வாங்கிப் பயன்படுத்திய வாதிக்கு அதில் மித மிஞ்சியிருந்த சல்ஃபைட்களால் தோல் அழற்சி நோய ஏற்பட்டது என்று கண்டோம் எனவே, உற்பத்தியாளர் அனுப்பிவைத்த முத்திரையிட்ட பெட்டியையே நுகர்பவர் வாங்கியிருக்கத் தேவை யில்லை.

ஆனால், அப் பொருளை எந்தச் செயல் நோக்கத்துக்காகப் பயன் படுத்த வேண்டும் என்று உற்பத்தியாளர் எதிர்பார்த்தாரோ அதற் காகப் பயன்படுத்தாமல் வேறு நோக்கத்திற்காகப் பயன்படுத்திய தால் அவருக்கு ஊறு ஏற்பட்டது என்று எதிர்வாதி கூறலாம். வாதிக்கு ஏற்பட்டுள்ள விபத்து முன்னறியத் தகுந்த வகையைச் சேர்ந்ததாக இருக்க வேண்டும்.

உற்பத்திக் குறைபாட்டினால் அல்லது வேறு ஒரு குறைபாட்டி னால் வாதிக்கு ஊறு விளைந்திருக்கக்கூடுமென்றால் உற்பத்தியாளர் பொறுப்பாளியாகமாட்டார். இச் சூழ்நிலையில் உற்பத்தியாளரின் கவனமின்மையே தனக்கேற்பட்ட ஊறுக்குக் காரணம் என்று வாதியால் நிரூபிக்க முடியாமல் போய்விடுகிறது. இவான்ஸ் v. ட்ரிப்லக்ஸ் சேஃப்டி கிளாஸ் கம்பெனி (Evans v. Triplex Safety Glass Co. Ltd.) வழக்கில் வாதி வாங்கிய காரின் காற்றுத் தடுப்புக் கண்ணாடி எதிர்வாதியால் செய்யப்பட்டது. ஓராண்டு கழித்து அது திடீரென்று தூள் தூளாய் உடைந்தது. அதனால் அந்தக் காரில் பயணம் செய்தவர்கள் காயமுற்றனர். உற்பத்தியின்போது ஏற்பட்ட குறைபாட்டின் காரணமாகத்தான் அது உடைந்தது என்பதற்குப் போதிய சான்று தரப்படவில்லை. அதை வாங்கிய பின்னர் பல நாள்கள் கழித்தே விபத்தேற்பட்டது. தவிர, அந்தக் கண்ணாடி அதன் சட்டத்தில் பொருத்துவதற்காக அழுத்தப் படும்போது கண்ணாடி விரிசல் அடைந்தது. இதைத் தவிர அந்தக் காரை இடையில் விற்றவர் அதை இடையில் சோதித்துப் பார்க்கும் வாய்ப்பும் இருந்தது. தவிர, கண்ணாடி உடைந்ததற்கு உற்பத்தி செய்யும்போது ஏற்பட்ட குறைபாடு மட்டுமன்றி வேறு காரணமும் இருந்திருக்கலாம். எனவே, விபத்திற்கு எதிர்வாதிகள் பொறுப்பாளிகள் ஆக மாட்டார்கள் என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

டானகு வழக்கில் சொல்லப்பட்ட விதி பொருந்த வேண்டு மாயின் இடைநிலையில் ஆய்வு செய்ய எந்த வாய்ப்புமின்றி அப் பொருள் இறுதியாக நுகர்பவரைச் சென்றடைந்திருக்க வேண்டும். எனவே, ஒரு பொருளைப் பயன்படுத்துமுன் அது பரிசோதிக்கப்பட வேண்டும் என்று அறிவிப்பதன் மூலம் உற்பத்தியாளர் பொறுப்பி லிருந்து தப்பித்துக்கொள்ளலாம். குபாக் v. ஹாலண்ட்ஸ் (Kubach v. Hollands) வழக்கில், ஒரு சில்லறை விற்பனையாளருக்கு ஓர் இரசாயனப் பொருளை விற்ற உற்பத்தியாளர் அதைப் பயன்படுத்து முன் பரிசோதித்துப் பார்க்கவேண்டுமென்று வெளிப்படையாக எச்சரித்திருந்தனர். அதை அவர் அவ்வாறு பரிசோதிக்காமல் ஒரு பள்ளிக்கூடத்திற்கு விற்றார். அவர் அதைச் சோதிக்க வேண்டு மென்று பள்ளி ஆசிரியருக்கு அறிவுறுத்தத் தவறிவிட்டார். பள்ளி ஆய்வுக்கூடத்தில் ஒரு பள்ளிச் சிறுமி அதைப் பயன்படுத்திய

போது அது வெடித்ததால் அவள் காயமுற்றாள். கவனமின்மைக் காக அச் சிறுமிக்கு ஏற்பட்ட காயத்திற்குச் சில்லறை விற்பனை யாளர் பொறுப்பாளி ஆனார். இவ் வழக்கில் உற்பத்தியாளர் பொறுப்பாளிகளல்லர் என்று தீர்ப்பளிக்கப்பட்டது. இங்கு உற்பத்தி யாளர் தமது கடமையிலிருந்து தவறவில்லை; உரிய எச்சரிக்கை யோடேயே அவர் தமது பொருளை வழங்கியிருந்தார்.

ஒரு பொருளிலுள்ள குறைபாட்டை வாதி கண்டுபிடித்திருந் தால் அப் பொருளால் அவருக்கேற்படும் ஆபத்திற்கு அதன் உற் பத்தியாளர் பொறுப்பாளியாகமாட்டார். அப் பொருளிலுள்ள குறை அல்லது ஊறுபாடு அதைப் பயன்படுத்துவோருக்குத் தெரியாம லும், மறைவாகவும் இருந்தால்தான் டானகு வழக்கில் சொல்லப் பட்ட விதி பொருந்தும். ஊறு பயக்கக்கூடியது என்று தெரிந்தே ஒரு பொருளை ஒருவன் உண்டால், அல்லது பயன்படுத்தினால் அதனால் அவனுக்கேற்படும் ஊறினுக்காக வழக்கிட முடியாது. ஏனெனில், அவன் அதில் ஆபத்திருப்பதை உணர்ந்தே தன் னிச்சையாக விரும்பி ஒரு செயலைச் செய்கின்றான். ஃபார் v. பட்டர்ஸ் பிரதர்ஸ் அண்ட் கம்பெனி (Farr v. Butters Brothers & Co.) வழக்கில் ஒரு பாரந்தூக்கி இயந்திரத்தின் உற்பத்தியாளர்க ளாகிய எதிர்வாதிகள் அதைப் பகுதிபகுதியாக அனுப்பினார்கள். அது வாங்கியவர்களே பொருத்திக்கொள்ள வேண்டியிருந்தது. வாங்கியவர்களின் பணியாள் ஓர் அனுபவம் வாய்ந்தவர். அவருக்கு அது குறைபாடு கொண்டது என்று தெரியும், இருந்தாலும் அதை அவர் பொருட்படுத்தாமல் பொருத்தி வேலை செய்தபோது ஏற் பட்ட விபத்தில் மாண்டுபோனார். இங்கு அவர் தெரிந்தே ஆபத் திற்குட்பட்டிருக்கிறார். எனவே, எதிர்வாதிகள் பொறுப்பாளிகளல் லர் என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

உற்பத்தியாளர் அனுப்பும் பொருள் பாதுகாப்பானதாக இருக்கத் தகுந்த கவனம் காட்டுவதோடு அது வைக்கப்பட்டுள்ள பெட்டியும் நிரப்பப்பட்டுள்ள புட்டியும் அதற்குத் தகுந்ததாக இருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டும். அவற்றின்மீது ஏற்ற முத்திரைகளையும், பயன்படுத்தும் குறிப்புகளையும் ஒட்டி அனுப்பு வதில் உரிய கவனம் காட்ட வேண்டும். அவை சரியானபடி எழுதப்பட்டிருக்க வேண்டும். குறிப்பிலுள்ள தவறான தகவலினால் அப் பொருளைப் பயன்படுத்துபவருக்கு ஆபத்து ஏற்படக்கூடும்.

ஒரு பொருளிலுள்ள கோளாறு அல்லது குறைகளினால் ஒரு வருக்கு உடற்காயமும், சொத்துக்குச் சேதமும் ஏற்படுவதோடு பணநட்டமும் ஏற்படலாம். ஹெட்லிபர்ன் வழக்கில் சொல்லப் பட்ட தீர்ப்பிற்குப் பின்னர் இத்தகைய பொருள் நட்டத்திற்கும் ஈடு கோரி வழக்கிடத் தடையில்லை என்றே தோன்றுகிறது.

45. குடும்ப உறவுக்கும் பணி உறவுக்கும் இழைக்கப்படும் தீங்குகள்

(Injuries to Family and Service Relationships)

அந்நாளில் ஒருவனுடைய மனைவியும், மக்களும் அவனுடைய சொத்தாகக் கருதப்பட்டனர். இதனால் அவனுடைய குடும்பத்திற்கு ஊறு செய்வோர் அவனுடைய சொத்திற்கு ஊறு செய்பவராயினர். இந்த அடிப்படையில் கணவன் அல்லது தந்தை என்ற முறையில் ஒருவன் இயற்றுச் சட்டத்தில் வழக்கிட்டு நிவாரணம் பெற முடிந்தது. இங்கு அவனுடைய இல்வாழ்வு அல்லது குடும்ப உறவுகளில் பிறர் குறுக்கிடுவதால் இயற்றுச் சட்டத்தில் தோன்றும் தீங்குகளைப் பற்றி முதலில் காண்போம்.

1. இயற்றுச் சட்டப்படி ஒருவனுடைய மனைவியை மற்றொருவன் மயக்கிக் கவர்ந்து சென்றால் (enticement), அல்லது அவளை ஒரு மறைவிடத்தில் அடைத்து வைத்திருந்தால் (harbouring) அல்லது போதிய காரணமோ, நியாயமோ இன்றி அவளைக் கணவனிடமிருந்து பிரிந்து வாழுமாறு தூண்டிவிட்டிருந்தால் அவன் மீது கணவன் வழக்கிடலாம். அவள் தானே விரும்பிக் கணவனை விட்டுச் சென்றிருந்தாலும் அவளுக்கு மற்றொருவன் தஞ்சம் அளிக்க முடியாது. ஒருவனுக்கு அவனுடைய மனைவியின் தோழமையையும், பணியையும், அன்பையும் இடையருது பெற உரிமையுண்டு. இதைக் கலந்துறைவு (consortium) எனலாம். மேற்கூறிய செயல்களைச் செய்பவன் ஒருவன் தன் மனைவியுடன் கலந்துறையும் வாழ்வினை இழக்கச் செய்கிறான். எனவே, கணவன் அவன்மீது வழக்கிட முடிந்தது. ஒருத்தியை அவளுடைய கணவனைவிட்டு வருமாறு முறையின்றித் தூண்டுபவன் அவள் தன் கணவனுக்கு ஆற்றவேண்டிய இல்லறக் கடமைகளைப் புறக்கணிக்குமாறு செய்கின்றான். இதனால் அவன் தீங்கியலில் பொறுப்பாளியாகின்றான். இதைப் போலவே ஒரு பெண் மற்றொரு

பெண்ணின் கணவனை மயக்கி அவனைவிட்டு வருமாறு செய்தலும் தீங்காகவே கருதப்பட்டது. கலந்துறை வாழ்வு உரிமை கணவன் மனைவி ஆகிய இருவருக்கும் பொதுவானதாகக் கருதப்பட்டது. எனவே, இந்த உரிமையில் எவர் குறுக்கிட்டிருப்பினும் கணவன் அல்லது மனைவி தீங்கியலில் வழக்கிட முடிந்தது. இங்கிலாந்தின் இயற்றுச் சட்டத்தில் உள்ளதுபோலவே, இந்தியச் சட்டத்திலும் ஒருவன் தன் மனைவியைக் கவர்ந்து சென்றவன்மீது வழக்கிட முடியும். அவளைக் கவர்ந்து சென்ற காலத்தில் கணவன் வெளியூரில் இருந்திருப்பினும் அவன் வழக்கிட முடியும். திருமண ஒப்பந்தத்தின்படி கணவன் பெற்றுள்ள உரிமைக்கு விளைவிக்கப் படும் ஊறாக இது கருதப்பட்டது.

இதைத் தவிர, இயற்றுச் சட்டத்தில் ஒரு பெண்ணை மற்றொருவனுடைய மனைவி என்று தெரிந்தே அவளுடைய இசைவின்றிப் புணர்ந்தவன்மீது அவள் 'குற்றத் தொடர்பு' (criminal conversation) கொண்டதாகத் தீங்கீடு கோரி வழக்கிடலாம். இதன் அடிப்படையும் கலந்துறை வாழ்வினைக் கணவன் இழத்தலாகும். எனவே, முன்பே ஒரு பெண் தன் கணவனோடு வாழாமல் தனித்திருந்தால், அவளைப் புணர்ந்தவன்மீது 'குற்றத் தொடர்புக்'காக வழக்கிட முடியாது. ஏனெனில், இங்கு அவன் கலந்துறை வாழ்வினை இதனால் இழக்கவில்லை.

மற்றும், இயற்றுச் சட்டத்தில் ஒருவன் தன் மனைவிக்கு உடற் காயம் ஏற்படுத்தியவன்மேல் வழக்கிட முடியும். இதற்காகக் கணவன், மனைவி ஆகிய இருவரும் வழக்கிட முடியும். மனைவி தனக்கேற்பட்ட காயத்திற்கு இழப்பீடு கோரி வழக்கிடலாம்; கணவன் அவளுடைய தோழமை, பணி ஆகியன உள்ளிட்ட கலந்துறை வாழ்வினை இழந்ததாகக் கூறி வழக்கிடலாம். இவ் விரண்டு வழக்குகளையும் ஒன்றாக, அல்லது தனித்தனியாக இடலாம். ஒருவன் தந்தை என்ற முறையில் தன் மகனைக் கெடுத்தவன்மீது வழக்கிட முடியும். குடும்பத் தலைவன் என்ற முறையில் அவனுக்கேற்பட்ட அவமதிப்புக்கு ஈடு செய்யப்பட வேண்டும்; என்ற அடிப்படையில் இத் தீங்கு அமையவில்லை அவனுடைய குழந்தையின் பணியை அவன் இழந்துவிட்டான் என்ற அடிப்படையிலேயே அவனுக்குத் தீங்கீடு அளிக்கப்படுகின்றது. ஒரு பணித்தலைவர் தம் பணியாளுக்கு ஊறு அல்லது காயம் விளைவிக்கப்பட்டிருந்தால் வழக்கிட உரிமையைப் பெற்றுள்ளதைப் போலவே ஒரு தந்தையும் தம் குழந்தையின் பணியை அது காயமுற்றதால் இழந்திருந்தால் வழக்கிட உரிமையைப் பெற்றுள்ளார். ஆனால், குழந்தை காயமுற்ற காலத்தில்

ஏதாவது சிறிய பணியொன்றையாவது ஆற்றக் கூடிய வயது வந்ததாக இருப்பதோடு தந்தையின் இல்லத்தில் அவர்க்குப் பணி யாற்றி வந்ததாக நிரூபிக்கப்பட வேண்டும். அது தந்தையின் இல்லத்தில் வாழ்ந்ததாக நிரூபிக்கப்பட்டால், பணியாற்றியதற்குப் போதுமான சான்று தரப்பட்டதாகக் கருதப்படும். ஒருவன் தன் னுடைய மகளை மற்றொருவர் தாக்கியதால் அவளுடைய பணியை இழந்துள்ளதாக வழக்கிடலாம். ஆனால், ஒருவனுடைய மகளை மற்றொருவர் கெடுத்ததன் விளைவாக அவன் அவளுடைய பணியை இழக்கவில்லையாயின் வழக்கிட முடியாது.

மேற்கூறிய சட்டங்கள் கடுமையான கண்டனத்திற்குள்ளா யின. இறுதியாக, கலந்துறை வாழ்வுக்காக வழக்கிடுதலைத் தவிர மற்ற நிவாரணங்கள் யாவும் இங்கிலாந்தில் சட்டத்தால் நீக்கப் பட்டுவிட்டன. இந்த மாற்றத்தையேற்படுத்திய சட்டம் சட்டத் திருத்த (பல்பொருள் வழிவகை) சட்டம், 1970 (Law Reform Miscellaneous Provisions Act, 1970.) இச் சட்டம் இங்கிலாந்தில் 1971 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 1 ஆம் தேதி நடைமுறைக்கு வந்தது. இதன் விளைவாகக் கற்பழித்தல், கவர்ந்து செல்வது போன்ற முறைகளிலல்லாது வேறு முறைகளில் ஒருவன் தன் குழந்தையின் பணியை யிழந்திருந்தால் தன் குழந்தையின் பணித்தலைவர் என்ற முறையிலேயே தீமை செய்தவர்மீது வழக்கிட முடியும். கலந் துறை வாழ்வு இழப்பினைப் பொறுத்தவரை சட்டத்தால் மாற்றம் நிகழவில்லை. இது தற்கால நிலைமைகளுக்குப் பொருத்தமில்லாத தென்று கருதப்படுகிறது. எதிர்வாதியின் கவனமின்மையால் வாதி தன் மனைவியுடன் கலந்துறை வாழ்வை இழந்திருந்தால் வழக்கிடும் உரிமை அவனுக்கு நெடுங்காலமாக இருந்து வந்திருக்கிறது. எனவே, இதை மறுக்க நீதிமன்றங்கள் தயங்குகின்றன. இன்றைய நிலைமைக்கு இந்த நிவாரணம் பொருந்தாதென்ற காரணத்திற்காகப் பிரபுக்கள் சபை பெஸ்ட் v. சாமுவேல் பாக்ஸ் & கம்பெனி லிமிடெட் (Best v. Samuel Fox & Co. Ltd.) வழக்கில் கணவனுடன் கலந்துறை வாழ்வை இழந்ததற்காக ஒரு பெண்ணிற்கு நிவாரணம் அளிக்க மறுத்துவிட்டது. எனவே, கணவனுக்குள்ள இந்த உரிமை மனைவியைப் பொறுத்து விரிவாக்கப்படவில்லை. இவ் வழக்கில் ஒருவன் தனக்குரிய பணியைப் புரியும்போது அவனுடைய பணித் தலைவரின் கவனமின்மையால் ஏற்பட்ட விபத்தினால் அவன் தன் மனைவியுடன் தொடர்ந்து உடலுறவு கொள்ள முடியாத நிலையேற் பட்டது. இதனால் மனைவியின் உடல்நலம் கெட்டது. அவள் தன் கணவனுடன் கலந்துறை வாழ்வினை இழந்ததற்காகத் தீங்கீடு கோரி வழக்கிட்டாள். அவள் எதிர்வாதியின் செயலால் தன்

கணவனுடன் கூடி மேலும் குழந்தைகள் பெறும் வாய்ப்பையும், உடலுறவு கொள்ளும் இன்பத்தையும் இழந்ததாக வாதிட்டாள். இதற்காக அவள் வழக்கிட முடியாதென நீதிமன்றம் கூறியது. இதற்காக அவள் வழக்கிட்டு நிவாரணம் பெற ஆங்கிலச் சட்டத்தில் ஆதாரமாக எந்த வழக்கோ, கொள்கையோ இல்லையென்று நீதிமன்றம் கருதியது. அவள் வழக்கில் தோல்வியுற்றாள்.

பணியாள் - பணித்தலைவர்

1. ஒரு பணியாளை முறையின்றி அவரது பணித்தலைவரிடமிருந்து கவர்ந்து சென்று, அவர் செய்துகொண்டிருந்த பணி ஒப்பந்தத்தை மீறும்படி செய்தல் தீங்காகும். இதுவே, ஒப்பந்த மீறலுத் தூண்டிவிடுதலாகிய தீங்காக வளர்ச்சி பெற்றுள்ளது.

2. ஒரு பணியாளை அவர் வேலையை விட்டு நீங்கிய பின்னர், அவர் பணியாற்ற ஒப்பந்தப்படி கடமைப்பட்டுள்ள காலத்தில் வேறு ஒருவர் அவருக்கு இடமளித்துப் (Harbouring) பணியாளாக வைத்திருப்பது தீங்காகும். பணித்தலைவர் தம் பணியாளுக்கு எதிர்வாதி இடமளித்ததாக வழக்கிடும்போது, அதனால் தமக்கு இழப்பேற்பட்டதாக நிரூபிக்க வேண்டும். அதாவது எதிர்வாதி இடம் அளித்திராவிட்டால் பணியாள் தம்மிடம் திரும்பி வந்திருப்பார் என்று காட்டவேண்டும்; இது எளிதன்று.

3. பணியாளை அடித்தும், ஓரிடத்தில் அடைத்து வைத்தும் அவர் பணிபுரிய இயலாதவாறு செய்தல் தீங்காகும்.

4. இயற்றுச் சட்டத்தில் தொடக்க காலத்திலிருந்தே, பணியாளைத் தாக்கி அல்லது வேறு ஒரு தீங்கான செயலைச் செய்து அவரது பணியை யிழக்குமாறு செய்தவர்மீது பணித்தலைவர் அத்துமீறலுக்காக வழக்கிடலாம் என்று கருதப்பட்டது (Perquod servitium amisit). பணியாளுக்கு இழைக்கப்படும் தீங்காகமட்டுமல்லாமல் பணித்தலைவரின் சொத்துரிமைக்கு இழைக்கப்படும் ஊருகவும் இது கருதப்பட்டது. பணியாளுக்கு ஏற்பட்ட காயத்தின் விளைவாகப் பணியை அவரால் ஆற்றமுடியாத போது பணித்தலைவர் இவ் வழக்கிடலாம். இதற்காக வழக்கிடும் பணித்தலைவரோடு பணியாள் பணியாற்றும் ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கத் தேவையில்லை. அவர் பணியாற்றியிருந்தாலே போதும். அப்பீல் நீதிமன்றம் குடும்பத்தில் ஒருவராகக் கருதப்படும் வீட்டு வேலைக்காரர் போன்ற கீழ்நிலைப் பணியாள்களின் பணியைப் பணித்தலைவர் இழக்கும்போதுதான் இம் முறையில் வழக்கிட முடியும் என்று இன்லாண்ட் ரெவின்யூ கமிஷனர் v. ஹேம்

புரூக் (Inland Revenue Commissioners *v.* Hambrook) வழக்கில் கூறியது. இவ் வழக்கில் அரசு ஊழியர் ஒருவர் தம் வேலைநேரம் முடிந்த பின்னர் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருக்கும் போது எதிர்வாதியினால் ஓட்டப்பட்ட மோட்டார் வண்டி மோதியதால் காயமுற்றார். இதன் விளைவாக 9 மாதங்களுக்கு மேலாக அவர் வேலை செய்ய முடியாதுபோயிற்று, இந்தக் காலத்தில் அரசு தானுகவே அவரது முழுச் சம்பளத்தையும் கொடுத்தது. அரசு அவரது பணியிழப்புக்காக எதிர்வாதியிடமிருந்து தீங்கீடு கோரி வழக்கிட்டதில் பணித்தலைவரின் குடும்பத்தினர் என்ற முறையில் பணியாற்றும் மனைவி, மக்கள், வேலைக்காரர் ஆகியோருக்குக் காயமேற்பட்டதன் காரணமாகப் பணியிழப்பு நேர்ந்திருந்தால்தான் பணித்தலைவர் இதற்காக வழக்கிடமுடியும் என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

வாதியிடமிருந்து அவனது பணியாளைக் கவர்ந்து சென்ற போது வாதிக்கேற்பட்ட உண்மையான இழப்பு என்னவென்று கணித்து அவனுக்களிக்கப்பட வேண்டிய தீங்கீட்டுத் தொகையைத் தீர்மானிக்க வேண்டும். பணியாள் வேலையைவிட்டு நீங்குமாறு செய்ததால் பணித்தலைவருக்கு ஏற்படும் ஊறு, அல்லது இழப்புக்கே ஈடு செய்யப்பட வேண்டும். எதிர்காலத்தில் இழக்கக் கூடிய பணி இழப்புக்காக ஈடு பெறலாம். ஆனால், பணித்தலைவர் இரக்கப்பட்டுத் தாமே விரும்பித் தரும் ஓய்வூதியம் (pension), நோய் ஊதியம் (sick pay) ஆகியவற்றின் மதிப்பை நிவாரணமாகக் கேட்கமுடியாது.

46. ஒப்பந்த முறிவைத் தூண்டுதல்

(Inducement of Breach of Contract)

இப் பகுதியில் ஒருவரது வாணிக நலன்களில் சட்ட முரணான வழியில் முறையின்றிக் குறுக்கிடும் ங்குகளைப் பற்றிக் காண்போம். அவற்றில் முதலாவதாக, ஒப்பந்த முறிவினைத் தூண்டிவிடுதலாகிய தீங்கினைப்பற்றிக் காண்போம்.

'அ' என்பவர் 'ஆ' என்பவரோடு ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டிருக்கிறார் என்று வைத்துக்கொள்வோம். இந்த ஒப்பந்தத்தில் சட்டத்திற்கிசைந்த காரணமோ, நியாயமோ இல்லாமல் 'இ' என்பவர் கருதியே குறுக்கிட்டு, 'ஆ' என்பவரை ஒப்பந்தத்தை முறித்துக் கொள்ளுமாறு தூண்டிவிடுகிறார்; அல்லது 'ஆ' என்பவரை அந்த ஒப்பந்தத்தை நிறைவேற்ற முடியாதவாறு வேறு ஒரு தீங்கான செயலைச் செய்கிறார். இதன் விளைவாக 'அ' என்பவருக்கு இழப்பு அல்லது ஊறு நேர்கிறது. இதற்காக, 'அ' என்பவர் 'இ' என்பவர் மேல் வழக்கிடலாம். ஒருவருடைய பணியாளைக் கவர்ந்து செல்வதற்காக வழக்கிடும் உரிமையிலிருந்து இத் தீங்கு தோன்றிய தெனலாம். பின்னர் வெறும் பணியைச் செய்பவர்களுடைய ஒப்பந்த முறிவினைத் தூண்டிவிடும் செயல்களுக்கு மட்டுமல்லாமல், வாழ்க்கைத் தொழிலாகக்கொண்ட பணியைச் செய்பவர்களை ஒப்பந்தத்தை முறித்துக்கொள்ளுமாறு தூண்டிவிடும் செயல்களுக்கும் வழக்கிடமுடியும் என்று கருதப்பட்டது. லம்லி *v.* கை (Lumley *v.* Gye) வழக்கில், அரசியின் அரங்கில் (Queens Theatre) குறிப்பிட்ட காலத்திற்குப் பாடுவதாக அந்த அரங்கினைக் குத்தகைக்கு எடுத்தவரும், மேலாளருமாகிய வாதியுடன் செல்வி யோகன்னா வேக்னர் ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டிருந்தாள். எதிர்வாதி அவளுக்குப் பெருந்தொகை யொன்றையளித்து, வாதியுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தை முறித்துக் கொள்ளும்படியும், தமக்காகப் பாடும்படியும் கேட்டுக் கொண்டார். இவ்வாறு எதிர்

வாதி தீங்கெண்ணத்துடன் அப் பாடகியைத் தூண்டிவிட்டு அவள் வாதியுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தை முறிக்குமாறு செய்தார். எதிர்வாதி பொறுப்பாளியாவார் என்று தீர்ப்பளிக்கப் பட்டது. பணியாற்றும் ஒப்பந்தங்களுக்கு மட்டுமல்லாமல் வேறு ஒப்பந்தங்களுக்கும் மேறிகூறிய கொள்கை பொருந்தும். டெம்பர்டன் v. ரஸ்ஸல் (Temperton v. Russell) வழக்கில், கட்டடம் கட்டுவோர் சிலர் கட்டடம் கட்டத் தேவையான சாமான்களை வாங்குவதற்கு வாதியுடன் ஒப்பந்தங்கள் செய்துகொண்டிருந்தனர். தொழிற்சங்க அதிகாரிகளாகிய எதிர்வாதிகள் வாதியை வற்புறுத்தித் தங்கள் கோரிக்கைகளுக்கு இணங்கச் செய்யும் நோக்கத்துடன் கட்டடம் கட்டுவோரை வாதியுடன் செய்துகொண்டுள்ள ஒப்பந்தங்களை முறித்துக் கொள்ளுமாறும், அவர்கள் அவ்வாறு செய்ய மறுத்தால் தொழிலாளர் தகராறு செய்வர் என்றும் அச்சுறுத்தி அவர்களை வாதியுடன் செய்துகொண்டிருந்த ஒப்பந்தங்களை முறித்துக்கொள்ளச் செய்தனர். அப்பீல் நீதிமன்றம் எதிர்வாதிகள் பொறுப்பாளிகளாவரென்று தீர்ப்பளித்தது.

வாதியும் மற்றொருவரும் செய்துகொண்டிருந்த ஒப்பந்தத்தை எதிர்வாதியே முறியச் செய்தார் என்று நிரூபிக்கவேண்டும். எனவே, எதிர்வாதியின் நடத்தைக்கும், ஒப்பந்த முறிவுக்கும் உள்ள காரண காரியத் தொடர்பை நிரூபிக்கவேண்டும். எனவே, ஒருவர் செய்துகொண்ட ஒப்பந்தத்தை முறித்துக் கொள்ளுமாறு சட்டத்திற் கிசைந்த முறையில் அவரைத் தூண்டிவிடும் செயல் தீங்காகாது. எடுத்துக்காட்டாக, வயது வராத இளவரோடு செய்யப்பட்ட முறையற்ற கொடுமையான ஒப்பந்தம், பந்தயம் அல்லது பகடைப் பணய ஒப்பந்தம் (Wagering contract) சட்டப்படி செல்லாதவை. எந்த உரிமையையும் தோற்றுவிக்காதவை. இவை சட்டத்தில் அமல் இல்லாதவையாகும். எனவே, இத்தகைய ஒப்பந்தத்தை முறித்துக்கொள்ளுமாறு ஒருவரைத் தூண்டுதல் தீங்காகாது. எதிர்வாதி தூண்டியதன் விளைவாக ஒப்பந்த முறிவு உண்மையில் ஏற்படவில்லையென்றாலும் எதிர்வாதி நேரடியாக, வேண்டுமென்றே ஒப்பந்தத்தில் குறுக்கிட்டிருந்தால் பொறுப்பாளியாகக் கருதப்படுவார்.

ஒப்பந்த முறிவின் விளைவாகத் தனக்கு இழப்பு ஏற்பட்டதென வாதி நிரூபிக்க வேண்டும். அதனால் வாதிக்கு எந்த இழப்பும் ஏற்பட்டிராவிட்டால் அவன் வழக்கிட முடியாது. வாதி தனக்குக் குறிப்பிட்ட, தனித்த இழப்பு ஏற்பட்டதென்று நிரூபிக்கவேண்டிய தில்லை. அவனுக்குச் சாதாரண வாணிக நடைமுறையில் ஒப்பந்த

முறிவினால் ஏற்படக்கூடிய இழப்பாக இருந்தால் போதும்; நீதி மன்றம் அவனுக்கு இழப்பு ஏற்பட்டதென ஊகித்துக்கொள்ளும்.

ஒப்பந்த முறிவினைத் தூண்டிய எதிர்வாதிக்கு ஒப்பந்தம் இருந்ததைப் பற்றித் தெரிந்திருக்க வேண்டும். ஒப்பந்த வாசகங் களைச் சரிவர முழுவதும் எதிர்வாதி அறிந்திருந்தார் என்று வாதி நிரூபிக்கத் தேவையில்லை; எதிர்வாதி தெரிந்தே ஒப்பந்த முறிவு ஏற்படச் செய்தார் என்றே, ஒப்பந்த முறிவைப் பொருட் படுத்தாமல் இருந்தார் என்றே நிரூபிக்கப்பட்டால் போதும். இதற்கு எதிர்வாதி ஒப்பந்தத்தைப்பற்றி அறிந்திருந்தால்தான் முடியும். அவர் ஒப்பந்தத்தை முடிவுக்குக் கொண்டுவரக் கருதினார் என்று வாதி நிரூபித்தால் போதும்.

வாதியுடன் ஒப்பந்தம் செய்துகொண்டுள்ள நபரை எதிர் வாதி நேரடியாக அணுகி ஒப்பந்தத்தை முறித்துக்கொள்ளுமாறு தூண்டிவிட்டிருக்கலாம். இதற்கு எடுத்துக்காட்டாக, லம்லி v. கை வழக்கைச் சொல்லலாம். ஒரு பணியாளுக்கு அதிகக் கூலி தருவதாகச் சொல்லி, அவர் பணித்தலைவரோடு செய்துகொண் டுள்ள ஒப்பந்தத்தை முறித்துக் கொள்ளுமாறு எதிர்வாதி தூண்டி விடலாம். ஆனால், ஒப்பந்தத்தை முறித்துக் கொள்ளுமாறு எதிர் வாதி வெறும் அறிவுரை அல்லது ஆலோசனை கூறியிருந்தால், அதைத் தூண்டுதலாகக் கருதி வழக்கிடமுடியாது. எடுத்துக் காட்டாக, ஒரு பெண் ஒரு கயவனை மணக்க ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கலாம். அவனைப்பற்றிய உண்மையைத் தெரிந்த பெற்றோர் அந்த ஒப்பந்தத்தை முறித்துக் கொள்ளுமாறு தங்கள் மகளுக்கு அறிவுரை கூறியிருக்கலாம். ஒரு மருத்துவர் தம்மிடம் சிகிச்சை பெறும் நோயாளியிடம் அவர் உடல்நலத்தைக் கருதி அவர் செய்துகொண்டுள்ள ஒப்பந்தத்தை முறித்துக்கொள்ளு மாறு அறிவுரை வழங்கியிருக்கலாம். தூண்டுதல் என்று சொல்லும் போது, ஒப்பந்தத்தை மீறுவதற்கான காரணம் ஒன்றைக் கருதியே ஏற்படுத்துவது என்று பொருள் கொள்கிறோம். 'அதிக கூலி தருகிறேன்' என்று சொல்லி ஒரு பணியாளை வேலையை விட்டு வருமாறு தூண்டிவிடுதல், அல்லது அப் பணியில் அவன் தொடர்ந்து இருந்தால் அவனுக்கு ஊறு விளைவிப்பதாக மிரட்டுதல் முதலியன தூண்டுதலாகும். எனவே, ஒப்பந்த முறிவினை ஒருவர் தூண்டினார் என்றால், அதை மீறுவதற்கான காரணம் ஒன்றை அவர் தோற்றுவித்தார் என்று பொருளாகும். ஒப்பந்தத்தை மீறும் படி ஒருவர் அறிவுரை அல்லது ஆலோசனை கூறினால் என்றால், ஒப்பந்தத்தை மீறுவதற்காக ஏற்கெனவே, அல்லது முன்னதாகவே உள்ள காரணங்களையே சுட்டிக் காட்டினார் என்பதே பொருளாகும்.

இதற்கு வழக்கிட முடியாது. ஆனால், ஒப்பந்தத்தை மீறும்படி தூண்டியிருந்தால் வழக்கிடமுடியும்.

இதைத் தவிர, எதிர்வாதி வன்முறையைக் கையாண்டு ஒருவர் வாதியுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தை மீறுமாறு செய்திருக்கலாம். எடுத்துக்காட்டாக, ஒருவர் செய்துகொண்ட ஒப்பந்தத்தை மீறச் செய்வதற்காக அவரைக் காவலில் வைக்கலாம்; அல்லது அவர் தமது ஒப்பந்தத்தை நிறைவேற்றுமல் செய்ய அவருக்கு இன்றியமையாமல் தேவைப்படும் தொழிற்கருவிகளையும் இயந்திரங்களையும் உடைத்துவிடலாம். இச் செயல்களைச் செய்யும் எதிர்வாதிக்கு ஒப்பந்தம் இருப்பது தெரிந்திருக்க வேண்டும்; தவிர, அவர் ஒப்பந்த மீறலை ஏற்படுத்தும் கருத்தோடு அச் செயல்களைச் செய்திருக்கவேண்டும்; இல்லையேல் அவர் பொறுப்பாளியாக மாட்டார்.

ஒப்பந்தம் செய்துகொண்டுள்ள தரப்பினரில் ஒருவர் செய்திருப்பின் ஒப்பந்த மீறல் ஆகும் என்று சொல்லக்கூடிய செயலை, எதிர்வாதி தெரிந்தே செய்திருக்கலாம். இதுவும் நேரடியாகப் பிறர் ஒப்பந்தத்தில் குறுக்கிடுதலேயாகும். ஜி. டபிள்யூ. கே. லிமிடெட் v. டன்லப் ரப்பர் கம்பெனி, லிமிடெட் (G. W. K. Ltd. v. Dunlop Rubber Co. Ltd.) வழக்கில் 'ஆ' என்பவர் கார்களை உற்பத்தி செய்பவர். அவர் 'இ' என்பவரோடு செய்துகொண்ட ஓர் ஒப்பந்தப்படி, 'ஆ' என்பவரால் செய்யப்பட்ட கார்கள் கண்காட்சிகளில் காட்சிப் பொருளாக வைக்கப்படும்போது, அவற்றில் 'இ' என்பவரால் செய்யப்பட்ட ரப்பர் டயர்களையே பொருத்த வேண்டியிருந்தது. அக் கார்கள் ஒரு கண்காட்சிக்கு அனுப்பப்பட்டிருந்தபோது, டயர் உற்பத்தியாளராகிய 'அ' என்பவர் அக் கார்களிலிருந்த டயர்களை இரகசியமாக எடுத்துவிட்டு, தாம் உற்பத்திசெய்த டயர்களை அவற்றிற்கு மாற்றிப் பொருத்திவிட்டார். 'ஆ' என்பவரும் 'இ' என்பவரும் செய்துகொண்டிருந்த ஒப்பந்தத்தைப் பற்றி 'அ'-வுக்குத் தெரியும். 'ஆ' என்பவரின் வாணிகச் சரக்குகளில் அத்துமீறல் செய்ததற்கும் 'ஆ' என்பவரும் 'இ' என்பவரும் செய்துகொண்ட ஒப்பந்தத்தில் சட்டமுரணான வகையில் குறுக்கிட்டதற்காகவும், 'அ' என்பவர் பொறுப்பாளியாகக் கருதப்பட்டார்.

மேற்கூறிய வழிகளைத் தவிர, எதிர்வாதி மூன்றாவது நபர் ஒருவர் மூலம் செயலாற்றி ஒப்பந்த மீறலை ஏற்படுத்தலாம். இது மறைமுகமாக எதிர்வாதி ஒப்பந்தத்தில் குறுக்கிடுவதாகும். இதற்கு அவர் பொறுப்பாளியாவார். எடுத்துக்காட்டாக, வாதியுடன்

ஒப்பந்தம் செய்துகொண்டுள்ள அவருடைய வாடிக்கையாளர் களில் ஒருவரை விற்கோ ஒப்பந்தத்தை முறித்துக்கொள்ளச் செய்யலாம்; அல்லது அந்த வாடிக்கையாளரின் பணியாளைப் பணி ஒப்பந்தத்தை முறித்துக்கொள்ளுமாறு தூண்டிவிட்டிருக்கலாம். இதற்கு எதிர்வாதி பொறுப்பாளியாவார். J T. ஸ்ட்ராட்போர்ட்& சன் லிமிடெட் v. லிண்ட்லி (J. T. Stratfords & Son Ltd. v. Lindley) வழக்கில், 'இ' கம்பெனி இருவகையான ஒப்பந்தங்களின் படி தொழில் செய்துவந்தது. முதல் ஒப்பந்தப்படி அது 'ஆ1' என்பவருக்குச் சொந்தமான படகுகளைப் பழுதுபார்த்தது; இரண் டாவது ஒப்பந்தப்படி அது பல்வேறு நபர்களுக்கு (ஆ2) படகுகளை வாடகைக்குக் கொடுத்தது. அது படகோட்டிகள் யாரையும் பணிக்கு அமர்த்தியிருக்கவில்லை. அக் கம்பெனியின் கட்டடத் திற்கு 'ஆ1' என்பவரின் படகுகளை அவரது படகோட்டிகளே கொண்டுவந்தனர். 'ஆ2'-வுடன் செய்துகொண்ட ஒப்பந்தப்படி அவர்களுடைய படகோட்டிகளே படகுகளை எடுத்துச்சென்று வேலை முடிந்ததும் 'இ' கம்பெனியிடம் திருப்பித் தந்தனர். எதிர் வாதிகளாகிய 'அ' என்பவர்கள் ஒரு தொழிற்சங்க அதிகாரிகள். அச் சங்கத்தில் இலண்டன் மாநகரில் உள்ள படகோட்டி களில் ஒருசிலரைத் தவிர எல்லோரும் உறுப்பினராக இருந்தனர். 'இ' கம்பெனிக்கு உரிமையாளரான ஸ்ட்ராட்போர்டு என்பவர் வேறு ஒரு கம்பெனிக்கும் தலைவராக இருந்தார். அந்தக் கம்பெனியோடு எதிர்வாதிகளின் தொழிற்சங்கத்துக்கு ஒரு தொழிற் தகராறு இருந்தது. எனவே, 'இ' கம்பெனித் தலைவரைத் தங்கள் கோரிக்கைக்கு இணங்குமாறு வற்புறுத்த 'அ' என்பவர்கள் தமது சங்கத்தில் உறுப்பினர்களாக இருந்த தொழிலாளர்களை 'இ' கம்பெனிக்குச் சொந்தமான படகுகளை ஓட்டவோ பழுதுபார்க்கவோ, கட்டி யிழுக்கவோ வேண்டாமென்று கூறினர். சுமையேற்றப்பட்ட படகுகள் வேலை முடிந்து காலியான பின்னர் அவற்றை நங்கூரச் சங்கிலியிட்டுப் பிணைக்குமாறும் அவர்கள் தொழிலாளரிடம் கூறி னர். இந்தத் தடையாணையின் கருத்து 'இ' கம்பெனியின் தொழிலை முழுவதுமாக நிறுத்துவதாகும். இதன் விளைவாக 'இ' கம்பெனியின் தொழிலை இயங்க முடியாமல் போய்விட்டது; பழுதுபார்க்கும் வேலையும் நின்றுவிட்டது. பழுது பார்க்கப்படவேண்டிய படகு களைக் கொண்டுவரப் படகோட்டிகள் மறுத்தனர். பழுதுபார்க்கப் பட்டவற்றை எடுத்துச் செல்ல முன்வரவில்லை. வாடகைக்குப் படகு விடும் தொழிலும் நின்றுவிட்டது. வாடகைக்கு விடப்பட் டிருந்த படகுகள் காலியாக உள்ளபோது திருப்பித் தரப்படவில்லை. இடைக்காலத்தடையுறுத்துக் கட்டளை கோரி 'அ' என்பவர்களுக்கு எதிராக 'இ' கம்பெனி வழக்கிட்டது. 'ஆ' கம்பெனியுடன் செய்து

கொள்ளப்பட்டிருந்த ஒப்பந்தத்தைப் பற்றி 'அ'-வுக்குத் தெரியும் என்பதற்குப் போதுமான சான்றுகள் இல்லாததால், அதைப் பொறுத்தவரை 'அ' பொறுப்பாளியாக மாட்டார் என்று நீதி மன்றம் கருதியது. ஆனால், வாடகை ஒப்பந்தங்களை 'ஆ' மீறி யதற்கு 'அ' பொறுப்பாளியாவார் என்று நீதிமன்றம் கருதியது. 'இ' கம்பெனியுடன் செய்துகொண்ட ஒப்பந்தப்படி காலியான படகுகளை அக் கம்பெனிக்குத் திருப்பித் தரவேண்டிய பொறுப்பு 'ஆ'-க்கு உண்டென்று 'அ' அறிந்திருக்க வேண்டும். அவற்றைத் திருப்பித் தருவதைத் தடுக்கும் நடத்தை தீங்கானதாகும் என்று இவ் வழக்கில் பிரபுக்கள் சபை தீர்ப்பளித்தது.

பணியாள் தனக்குரிய பணியை நேர்மையாகப் புரியும்போது, பணித்தலைவர் மற்றவரோடு செய்துள்ள ஒப்பந்தத்தை மீறுமாறு செய்திருந்தால், ஒப்பந்தத்தில் குறுக்கிட்டதாகப் பணியாள்மேல் வழக்கிட முடியாது. அவர் பணித்தலைவரின் மறுபடிவமாகக் (alter ego) கருதப்படுகிறார். எனவே, பணித்தலைவரைப் பணியாள் தூண்டிவிடுவது, பணித்தலைவர் தம்மையே தூண்டிவிட்டுக் கொள்வதாகும். எனவே, பணியாள் இதற்குப் பொறுப்பாளியாக மாட்டார். செட் v. பட் (Said v. Butt) வழக்கில் வாதி 'அ' என் பவரின் அரங்கிற்கு ஓர் அனுமதிச் சீட்டு வாங்க விரும்பினர். அவருக்கும் 'அ' என்பவருக்கும் தகராறு இருந்ததால் அவருக்கு 'அ' என்பவர் அனுமதிச் சீட்டு விற்கமாட்டார் என்று தெரியும். எனவே, அவர் தம் நண்பர் ஒருவரைத் தமக்காகத் தம் பெயரைச் சொல்லாமல் ஓர் அனுமதிச் சீட்டு வாங்கித் தருமாறு கேட்டுக் கொண்டார். இவ்வாறு அவர் அனுமதிச் சீட்டைப் பெற்று அரங்கிற்குச் சென்றதும், 'அ'-ன் பணியாளாகிய எதிர்வாதி வாதி வந்திருப்பதைக் கண்டுபிடித்து உள்ளே விட மறுத்துவிட்டார். மேலே கூறப்பட்ட காரணத்திற்காக எதிர்வாதி பொறுப்பாளியாக மாட்டார் என்று தீர்ப்பளிக்கப்பட்டது. ஆனால், பணியாள் நேர் மையாக நடந்துகொண்டிராவிட்டால் அவர் பணித்தலைவரின் மறு படிவமாக இயங்கமாட்டார்.

ஒப்பந்த மீறலைத் தூண்டிவிட எதிர்வாதி தமக்குப் போதிய காரணமிருப்பதாகவும் தம் செயல் சரியென்றும் நிரூபித்தால், அவர் பொறுப்பாளியாக மாட்டார். ஒப்பந்தத்தின் தன்மை, தரப் பினரின் நிலை, ஒப்பந்தத்தை முடிவுக்குக் கொண்டுவரக் கையாளப் பட்ட வழிகள், ஒப்பந்தத்தை மீறியவருக்கும் அதை மீறச் செய்த வருக்கும் உள்ள தொடர்பு, அதை மீறச் செய்தவரின் நோக்கம் போன்ற எல்லாச் சூழ்நிலைகளையும் கருத்தில் கொண்டே இதைத் தீர்மானிக்க முடியும். பிரைம்லோ v. காஸ்ஸன் (Brimelow v.

Casson) வழக்கில் நாடக அரங்கின் உரிமையாளரை வாதியுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தை முறித்துக் கொள்ளுமாறு நடிகர்கள் பாதுகாப்புக் கழகம் தூண்டியது. இதற்குக் காரணம், வாதி நாடக அரங்கத்தில் பாடற் குழுவுடன் பங்கு கொள்ளும் பெண்களுக்கு மிகக் குறைவான ஊதியம் கொடுத்ததால், அவர்கள் விலைமகளிராக மாறி வருவாய் தேடவேண்டிய நிலைக்குத் தூண்டப்பட்டனர் என்பதே. எனவே, எதிர்வாதிகளின் செயலுக்குப் போதிய காரண மிருப்பதாகக் கருதப்பட்டு, அவர்கள் பொறுப்பாளியல்லர் என்று தீர்ப்பளிக்கப்பட்டது. தொழில் தகராறு காரணமாகச் செய்யப் படும் செயலால் ஒருவர் தம் பணி ஒப்பந்தத்தை மீறும்படி தூண்டப்பட்டிருந்தாலும் மற்றொருவனுடைய வாணிகம், தொழில், பணி ஆகியவற்றில் குறுக்கிடப்பட்டிருந்தாலும், வழக்கிடமுடியா தென இங்கிலாந்தின் தொழிற் தகராறுகள் சட்டத்தில் சொல்லப் பட்டுள்ளது. இதைப்போன்ற காரணங்களுக்காகப் பதிவு செய்யப் பட்டுள்ள தொழிற்சங்கமோ, அதன் அதிகாரிகளோ, உறுப் பினர்களோ பொறுப்பாளியாக மாட்டாரென இந்தியத் தொழிற் சங்கங்களின் சட்டம் (Indian Trade Unions Act) சொல்கிறது.

47. அச்சுறுத்தல்
(Intimidation)

ஒருவர் தாம் விரும்பியவாறு செயலாற்றும் உரிமையைச் சட்டம் அவருக்கு வழங்கியுள்ளது. சட்டமுரணான வழிகளைப் பயன்படுத்தி அவரை மிரட்டி, அவரது உரிமையில் குறுக்கிட்டு ஊறு விளைவித்தலே அச்சுறுத்தல் என்று சொல்கிறோம். இத் தீங்கு இரண்டு வகைப்படும். (1) வாதியின் செயல்சுதந்திரத்தில் எதிர்வாதி குறுக்கிட்டிருக்கலாம். அதாவது வாதியை நேரடியாக எதிர்வாதி மிரட்டி, வாதி தமக்கே ஊறு நேரும் வண்ணம் நடந்து கொள்ளுமாறு கட்டாயப்படுத்தியிருக்கலாம். (2) மற்றவர்களின் செயல்சுதந்திரத்தில் எதிர்வாதி குறுக்கிட்டு, வாதிக்கு இழப்பு ஏற்படச் செய்திருக்கலாம். அதாவது பிறரை அச்சுறுத்தி, அவர்கள் வாதிக்கு ஊறு அல்லது இழப்பு ஏற்படும்படியாக நடந்து கொள்ளச் செய்திருக்கலாம்.

வாதிக்கு இழப்பு ஏற்படுத்த வேண்டும் என்ற கருத்துடன் எதிர்வாதி சட்டமுரணான செயல் ஒன்றைச் செய்யப் போவதாக வாதியை மிரட்டி, அவர் தமக்கு இழப்பு ஏற்படும் வண்ணம் ஒரு செயலைச் செய்யக் கட்டாயப்படுத்தியிருக்கலாம். இதற்கு எதிர் வாதி பொறுப்பாளியாவார். எடுத்துக்காட்டாக, வாதி தாம் செய்யும் வாணிகத்தை உடனே நிறுத்தாவிட்டால் அவரைக் கொல்லப்போவதாக எதிர்வாதி மிரட்டலாம். இதனால் அச்ச முற்ற வாதி தம் வாணிகத்தை நிறுத்தும் நிலை ஏற்படலாம். கடன் வாங்கியவர் தாம் தரவேண்டிய தொகையைவிடக் குறைவான தொகையொன்றைக் கடன் கொடுத்தவர் ஏற்றுக்கொண்டு கடன் தொகை முழுவதும் கொடுத்துத் தீர்ந்ததாகக் கணக்கு வைத்துக் கொள்ளாவிட்டால் எத் தொகையையும் தாம் தரப்போவதில்லை என்று மிரட்டலாம். இவை அச்சுறுத்தலாகக் கருதப்படும். ஆனால், எதிர்வாதி தான் செய்யப்போவதாக மிரட்டும் செயல் சட்ட முரணான செயலாக இருக்க வேண்டும். ஒருவர் சட்டப்படி ஒரு செயலைச் செய்ய முடியுமானால், அதைச் செய்யப்போவதாக மிரட்டுவது தீங்காகாது. இதைப்போலவே எதிர்வாதி மிரட்டிய தன் விளைவாக வாதிக்கு எந்த ஊறும் ஏற்படவில்லையென்றாலும் அவர் வழக்கிட முடியாது. எடுத்துக்காட்டாக, வெங்கட சூர்ய

ராவ் v. நந்திபதி முத்தையா (Venkata Surya Rao v. Nandipathi Muthayya) வழக்கில் ஒரு பணக்கார உழவர் நிலவரிப்பாக்கியைக் கொடுக்கத் தம்மிடம் பணவசதியில்லையென்று முறையிடவே, கிராம மணியக்காரர் எந்தப் பொருளும் அதற்காகத் தப்படா விட்டால் அவரது காதில் அணிந்திருந்த நகைகளைப் பற்றுகை செய்யப் போவதாக அச்சுறுத்தி, அவற்றைக் கழற்றப் பொற் கொல்லரை அழைத்துவரச் செய்தார். பொற்கொல்லர் அங்கு வந்ததும் அப் பணக்காரர் தரவேண்டிய தொகையை அக் கிராமத்தைச் சேர்ந்த வேறு ஒரு நபர் கொடுத்துவிட்டார். இவ் வழக்கில் சட்ட முரணான செயல் ஒன்றைச் செய்யப்போவதாகச் சொல்லி மணியக்காரர் அச்சுறுத்தவில்லையென்றும் வாதியை அவ ருக்குக் கெடுதலான செயல் ஒன்றைச் செய்யும்படி அவர் வற் புறுத்தவில்லை யென்றும் கருதப்பட்டது. எனவே, மணியக்காரர் அச்சுறுத்தல் செய்யவில்லை என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

இரண்டாவதாக, வாதிக்கு இழப்பு ஏற்படும்படியாக மூன் றாவது நபர்கள் ஒரு செயலைச் செய்யுமாறு எதிர்வாதி அச்சுறுத்தி யிருக்கலாம். மூன்றாவது நபர்களுக்குச் சட்டப்படி செய்ய உரிமை யுள்ள செயலைச் செய்யுமாறு மிரட்டி வாதிக்கு இழப்பு ஏற்படுத்தி யிருக்கலாம். இதுவும் அச்சுறுத்தலேயாகும். எடுத்துக்காட்டாக, வாதியின் வாடிக்கையாளர்களை எதிர்வாதி அச்சுறுத்தி அவர்கள் வாதியின் கடையில் வாணிகம் செய்வதை நிறுத்தியிருக்கலாம். வாதியின் வாடிக்கையாளர்களுக்கு வாதியின் கடையில் பொருள் களை வாங்கவோ, வாங்காமல் இருக்கவோ உரிமையுண்டென்றாலும் அவர்களை வாதியின் வாடிக்கையாளர்களாக இருக்கக்கூடாதென்று கட்டாயப்படுத்த எதிர்வாதிக்கு உரிமையில்லை. ரூக்ஸ் v. பர்னட் (Rookes v. Barnard) வழக்கில் வாதி பி.ஓ.ஏ.சி.-ன் பணியாள். அவர் இலண்டன் விமான நிலையத்தில் வேலை செய்து வந்தார். அவர் தாம் சார்ந்திருந்த 'அசோசியேஷன் ஆஃப் என்ஜினீரிங் அண்டு ஷிப் பில்டிங் டிராப்ட்ஸ்மென்' தொழிற்சங்கத்தின் நட வடிக்கைகள் பிடிக்காததால் அதிலிருந்து விலகிக்கொண்டார். அவர் மீண்டும் அந்தத் தொழிற்சங்கத்தில் உறுப்பினராகச் சேர மறுத்துவிட்டார். படம் வரைபவர்கள் (Draughtsmen) அனை வரும் அந்தத் தொழிற்சங்கத்தில் உறுப்பினராக இருக்க வேண்டும் என்று அந்தத் தொழிற்சங்கம் விரும்பியது. எனவே, அச் சங்கத்தின் இலண்டன் விமான நிலையக் கிளை கூடி, வாதியை மூன்று நாள்களுக்குள் வேலையை விட்டு நீக்காவிட்டால், தொழிற் சங்க உறுப்பினர்கள் வேலைநிறுத்தம் செய்யப்போவதாக பி. ஓ, ஏ. சி-க்கு அறிவித்தனர். எதிர்வாதிகளில் இருவர் பி. ஓ. ஏ. சி.-ல்

பணிபுரியும் அத் தொழிற்சங்க உறுப்பினர். மற்றொருவர் அங்குப் பணிபுரியாத தொழிற்சங்க அதிகாரி. இவர்கள் அனைவரும் தொழிற் சங்கம் வாதியை வேலையைவிட்டு விலக்குமாறு பி. ஓ. ஏ. சி.யை வற்புறுத்தும் தீர்மானத்தை ஆதரித்துப் பேசியவர்கள். பி. ஓ. ஏ. சி. வாதியுடன் செய்துகொண்டிருந்த ஒப்பந்தத்தின் வாசகங்களின் படி உரிய அறிவிக்கை தந்து அவரை வேலையிலிருந்து நீக்கியது. பி. ஓ. ஏ. சி. ஒப்பந்தத்தை மீறவில்லை; தீங்கும் இழைக்கவில்லை. எனவே, வாதி பி. ஓ. ஏ. சி.யின் மேல் வழக்கிட முடியவில்லை. எனவே, தம்மை வேலையைவிட்டு நீக்குமாறு பி. ஓ. ஏ.சி.யைத் தூண்டியதாக எதிர்வாதிகளின் மேல் வாதி வழக்கிட்டார். பி. ஓ. ஏ.சி.யும் தொழிற்சங்கமும் செய்து கொண்டிருந்த வேலைநிறுத்தம் செய்யாமலிருக்கும் உடன்பாட்டை மீறும் வகையில் முறையற்ற செயலாக எதிர்வாதிகளின் அச்சுறுத்தல் அமைந்திருந்தது. வாதியை வேலையை விட்டு நீக்கும் கருத்தோடு அவர்கள் முறை யற்ற செயல்களைச் செய்யப்போவதாக அச்சுறுத்தினர். இதன்விளை வாக அச்சமுற்ற பி. ஓ. ஏ. சி. ஒரு வாரத்தில் வேலை நீக்க அறி விக்கை கொடுத்து வாதி சூக்ஸை வேலையிலிருந்து நீக்கியது. எனவே, எதிர்வாதிகள் பொறுப்பாளிகளாகக் கருதப்பட்டனர். அப்பீலைக் கேட்ட பிரபுக்கள் சபை, தீங்கிழைக்கப் போவதாக மிரட்டுவதற்கும், ஒப்பந்தத்தை மீறப் போவதாக மிரட்டுவதற்கும் கொள்கையளவில் எந்த வேறுபாடும் இல்லையென்று கூறியது. எதிர்வாதிகள் தீங்கினை இழைக்கப் போவதாகவோ, வன்முறை யைப் பயன்படுத்தப் போவதாகவோ மிரட்டியிருந்தால்தான் அச்சுறுத்தலாகுமென்றும், ஒப்பந்தத்தை மீறப் போவதாக மிரட்டும் செயல்மட்டும் அச்சுறுத்தலாகாது என்றும் வாதிட்டனர். இதைப் பிரபுக்கள் சபை ஏற்கவில்லை. கம்பெனி அல்லது கூட்டுருக் களைப் பொறுத்தவரை, தீங்கிழைக்கப் போவதாக மிரட்டுவதை விட ஒப்பந்தத்தை மீறப் போவதாக அச்சுறுத்துவதே எதிர்வாதி எதிர்பார்க்கும் பலனைத் தரவல்லது ஆகும்.

48. சதி

(Conspiracy)

சதி என்பது இருவரோ அதற்கு மேற்பட்டவரோ சட்டத்திற்கு முரணான செயலைச் செய்யவோ, செய்ய ஏற்பாடு செய்யவோ, அல்லது சட்டத்திற்கு முரணல்லாத செயலாக இருப்பின் அதைச் சட்டத்திற்கு ஒவ்வாத வழிகளில் செய்வதற்காகவோ உடன்பட்டு ஒன்றுசேர்வதாகும். அதாவது, இருவர் அல்லது அதற்கு மேற்பட்டவர் சட்டமுரணான செயலைச் செய்யவோ சட்டத்திற்கு இசைந்த செயலைச் சட்டத்திற்கு முரணான வழியில் செய்யவோ உடன்படுவதாகும். ஆனால், அவர்களிடையே வெறும் உடன்பாடு மட்டும் இருந்தால் போதாது. அந்த உடன்பாட்டின் அடிப்படையில் உடன்பட்டவர்களில் ஒருவரோ அதற்கு மேற்பட்டவரோ மற்றவருக்கு ஊறு அல்லது இழப்பினை ஏற்படுத்தும் ஏதாவதொரு வெளிப்படையான செயலைச் செய்திருக்க வேண்டும். அந்தச் செயலானது அவர்களுடைய உடன்பாட்டின் இறுதியான நோக்கமாக இருக்க வேண்டியதில்லை.

இவ்வாறு சதியில் ஈடுபட்டு வாதிக்கு இழப்பு அல்லது ஊறினை ஏற்படுத்தும் எதிர்வாதிகள் அனைவர்மீதோ அவர்களில் ஒருவர் மீதோ வாதி வழக்கிடலாம். எதிர்வாதிகள் தங்களிடையே செய்துகொள்ளும் உடன்பாடு மட்டும் சதியாகாது. அந்த உடன்பாடும் அதன்படி செய்யப்படும் செயலால் வாதிக்கு ஏற்படும் ஊறு அல்லது இழப்பும் சேர்ந்தே சதியாகும். எதிர்வாதிகள் சதி எனக் கருதத்தக்க செயலைமட்டும் செய்திருந்தால் வாதி அவர்களின்மீது தீங்கியலில் வழக்கிட முடியாது. அவர்கள் செயலின் விளைவாக வாதிக்குத் தனித்த இழப்பு அல்லது ஊறு ஏற்பட்டிருக்கவேண்டும். அவருக்கு எந்த இழப்பும் ஏற்பட்டிராவிட்டால் அவர் வழக்கிட முடியாது. குற்றவியல் சட்டத்தில் சட்டமுரணான செயலைச் செய்யவோ, சட்டத்திற்கிசைந்த செயலைச் சட்டத்திற்கு

முரணான வழிகளில் செய்யவோ அவர்களிடையே உடன்பாடு இருந்தாலே வழக்கிடலாம். அவர்கள் தங்கள் உடன்பாட்டின்படி எச் செயலையும் செய்திருக்க வேண்டியதில்லை.

வாதிக்கு இழப்பு ஏற்படுத்திய செயல் ஒருவருடைய செயலாக இல்லாமல், இருவர் அல்லது அதற்கு மேற்பட்ட தொகையினரின் கூட்டுச் செயலாக இருந்தால் அவர்கள் எந்த நோக்கத்தோடு கூட்டுச் சேர்ந்தார்கள் என்று நாம் பார்க்கத் தேவையில்லை.

இத் தீங்கில் எழுந்துள்ள சில முக்கியமான வழக்குகளைப்பற்றி இனிக் காண்போம்.

1. மொகல் வழக்கு (The Moghul Case)

இவ் வழக்கில் சைனா தேநீர் வாணிகத்தில் கூட்டமைப்பு நிறுவனமாகிய எதிர்வாதிகள் ஈடுபட்டிருந்தனர். வாதியும் இதே வாணிகத்தில் ஈடுபட்டிருந்தார். வாதிக்கும் எதிர்வாதிக்கும் பொதுவாகச் சில வணிகர் சீனாவில் முகவர்களாக இருந்தனர். எதிர்வாதிகள் அந்த முகவர்களை வாதியின் முகவர்களாகத் தொடர்ந்திருக்கக் கூடாது என்று வற்புறுத்தியதோடு, அந்த முகவர்கள் தொடர்ந்து வாதிக்கு முகவர்களாகச் செயல்பட்டால் தங்கள் நிறுவனத்தின் முகவையை (agency) விலக்கிக் கொள்வோம் என்றும் எச்சரித்தனர். தவிர, வாதிக்கு இழப்பு ஏற்படுத்த அவர்கள் சரக்குக் கட்டணத்தையும் குறைத்துவிட்டனர். இச் செயல்களை வாதிக்கு இழப்பு ஏற்படுத்த வேண்டுமென்றே அவர்கள் செய்தனர் என்று அவர் வாதிட்டார். இதை விசாரித்த பிரிவுக்கள் சபை இது சட்டப்படி தீங்காகாது என்றும், ஒருவரே வாதி, எதிர்வாதி ஆகிய இருவருக்கும் முகவராக இருத்தல் பொருந்தாது என்பதால் அதைத் தடுத்தல் முறையற்ற செயல் ஆகாது என்றும் கூறியது. எனவே, எதிர்வாதி நிறுவனம் தங்கள் வாணிக நலனைக் கருத்தில் கொண்டு பொருள் ஈட்டவும், வாணிகத்தைப் பெருக்கவும் மேற்கொண்ட செயல்கள் சட்டத்திற்கிசைந்தவையே. இவற்றின் விளைவாக வாதிக்கு இழப்பு ஏற்பட்டிருந்தாலும், அது தீங்கெனக் கருதப்படாத இழப்பாகும். முதலாளித்துவப் பொருளாதார அமைப்பின்படி எதிர்வாதியின்செயல்கள் முறையானவையே எனவே, எதிர்வாதிகள் சதி செய்தவர்கள் ஆகமாட்டார்கள் என்றும் நீதிமன்றம் கூறியது.

சதியை நிரூபிக்க எதிர்வாதிகள் வேண்டுமென்றே தமக்கு இழப்பு உண்டாக்கக் கூட்டுச் சேர்ந்தனர் என்று வாதி நிரூபிக்க வேண்டும். எதிர்வாதிகளின் தீங்கெண்ணத்தையோ, அவர்

கள் கருத்தையோ நிரூபிப்பது எளிதன்று. நீதிமன்றங்கள் எதிர்வாதிகள் எதற்காகக் கூட்டுச் சேர்ந்தனர் என்றும், அந்தக் கூட்டின் நோக்கம் என்னவென்றும், அது வாதிக்கு இழப்பு ஏற்படுத்த விரும்பி ஏற்பட்டுள்ளதா என்றும் ஆராய வேண்டியுள்ளது. எனவே, வழக்குகளில் உள்ள சூழ்நிலைகளுக்குத் தகுந்தவாறு தீர்ப்பு அமையும்.

2. ஆலன் *v.* ஃபிளட் (Allen *v.* Flood)

இவ் வழக்கில் வாதிகள் ஒரு கப்பலின் மரப்பகுதியில் தச்சு வேலை செய்ய அமர்த்தப்பட்டனர். அதே கப்பலில் இரும்புப் பகுதியில் வேறு சில தொழிலாளர்கள் கொல்லர்களாகப் பணி புரிந்தனர். வாதிகளாகிய தச்சர்கள் முன்னர் வேறு கப்பலில் கொல்லர்களாக வேலைபார்த்தவர்கள் என்ற விவரம் கொல்லர்களுக்குத்தெரியவரவே, அவர்கள் தங்கள் சங்கக் கூட்டத்தில் வாதிகளோடு ஒன்று சேர்ந்து பணிபுரிவதில்லையென்றும், வாதிகள் வேலையை விட்டு விலக்காவிட்டால் வேலை நிறுத்தம் செய்வதாகவும் முடிவு செய்தனர். அவர்களது முடிவைத் தொழிற்சங்க அதிகாரியாகிய ஆலன் பணித்தலைவருக்கு அறிவிக்கவும், அவர் வாதிகள் வேலையிலிருந்து விலக்கினர். ஆயினும் வாதிகள் அக் கப்பலில் வேலையில் இருக்கும் போது தாற்காலிகமாக நாள்கூலிக்கு அமர்த்தப்பட்டவர்கள். எனவே, பணித்தலைவர் அவர்கள் வேலையைவிட்டு விலக்கியது ஒப்பந்தத்தை மீறிய செயல் அன்று. வழக்கை இறுதியாகக் கேட்ட பிரபுக்கள் சபை எதிர்வாதி தீங்கிழைக்கவில்லையென்று முடிவு செய்தது. ஏனெனில், ஆலன் அவரது சங்கத்தைச் சேர்ந்தவர்கள் கூடி, அவரது தலையீடு இன்றி எடுத்த முடிவைத்தான் வாதியின் பணித்தலைவர்களிடம் எடுத்துச் சொன்னதாகவும், அந்த முடிவைச் சொல்லித்தான் விவகாரத்திற்குத் தீர்வு காண அவருக்குரிமை இருந்தது என்றும் நீதிமன்றம் கருதியது. இந்த வழக்கின்படி எதிர்வாதிகள் கூடி இயங்கவில்லை. எனவே, எதிர்வாதிகளின் நோக்கம் எதுவாக இருந்தாலும் அது முக்கியமன்று. இச் சூழ்நிலையில் எதிர்வாதிகள் வேண்டுமென்றே, தீங்கெண்ணத்துடனே வாதிக்கு இழப்பு ஏற்படுத்தியிருந்தாலும், அவருக்குச் சட்டப்படி உள்ள உரிமைகளுக்கு ஊறு நேராதபோது அவர் எதிர்வாதிகளின்மேல் வழக்கிட முடியாது. சுருக்கமாகச் சொன்னால் தொழிலாளர்களிடையே உள்ள போட்டியும் வாணிகத்தில் உள்ள போட்டியைப் போன்றதே.

3. குவின் *v.* லீதம் (Quinn *v.* Leatham)

சில ஆண்டுகள் கழித்துக் காற்றுத் திசைமாறி வீசியது. அயர்லாந்திலிருந்து வந்த இந்த அப்பீலில் தொழிற்சங்கத்தில உறுப்பின

ராக இல்லாத சில தொழிலாளரை வேலைக்கு அமர்த்தியது சம்பந்தமாகத் தொழிற்சங்க அதிகாரிகளான எதிர்வாதிகளுக்கும், இறைச்சிக் கடைக்காரரான வாதிக்கும் தகராறு ஏற்பட்டது. தொழிற்சங்க உறுப்பினரல்லாத தொழிலாளரை வேலையை விட்டு விலக்குமாறு வாதியை எதிர்வாதிகள் கேட்டுக்கொண்டனர். அதற்கு அவர் மறுத்துவிட்டார். எனவே, அவரைத் தங்கள் கோரிக்கையை ஏற்க வற்புறுத்தும் நோக்கத்துடன் வாதியின் முக்கிய வாடிக்கையாளராகிய மன்ஸ் என்பவரை எதிர்வாதிகள் அணுகி அவரை வாதியிடம் இறைச்சி வாங்க வேண்டாம் என்றும் அவ்வாறு இறைச்சி வாங்கினால் அந்த வாடிக்கையாளரிடம் பணி புரியும் தங்கள் தொழிற்சங்க உறுப்பினர்கள் வேலைநிறுத்தம் செய்வர் என்றும் கூறி மிரட்டவே அவர் வாதியிடம் இறைச்சி வாங்குவதை நிறுத்திவிட்டார். முக்கியமான வாடிக்கையாளரை எதிர்வாதி தடுத்து நிறுத்திவிட்டதால் வாதிக்கு இழப்பு ஏற்பட்டது. இதற்கு எதிர்வாதிகளே பொறுப்பாளிகள் என்று நீதி மன்றம் தீர்ப்பளித்தது. இங்கு எதிர்வாதிகள் தீங்கெண்ணத்துடன் செயல்பட்டதாகக் கருதப்பட்டது. ஆயினும், இதைப் போன்றதொரு வழக்கு இன்று ஏற்பட்டால் முடிவு வேறு விதமாக இருக்கும். நிறுவனங்களில் தொழிற்சங்க உறுப்பினர் மட்டுமே வேலைக்கு ஏற்றுக் கொள்ளப்படவேண்டும் என்று தொழிற்சங்கம் கட்டுப்பாடு விதிப்பது இன்று முறையானதாகக் கருதப்படுகிறது.

ஆனால், தனிப்பட்ட நபர்களோ கம்பெனிகளோ ஒன்றுகச் சேர்ந்து தங்களுடைய பொருள்களின் விலையைக் கட்டுப்பாடு செய்ய உடன்பாடு செய்து கொள்ளலாம். இதன் விளைவாக அவர்களுடைய கூட்டில் சேராதவர்களுக்கு இழப்பு ஏற்படலாம். ஏனெனில், அவர்களால் குறைந்த விலைக்குப் பொருள்களை விற்க முடியாமல் போகலாம். ஆயினும் இது சதியாகாது. இங்குக் கூட்டுச் சேர்ந்தவர்களின் நோக்கம் வாதிக்கு இழப்பு ஏற்படுத்துவது அன்று. மாறுக, தங்கள் சொந்த நலன்களைக் காப்பதேயாகும்.

4 கிராப்டர் கம்பெனி வழக்கு (The Crofter Company's Case)

தற்காலத் தொழிலமைப்பில் ஏற்பட்டுள்ள மாறுதல்களைக் கருத்தில் கொண்டு இன்றைய சட்டம் என்ன என்பதைத் தெள்ளத் தெளிவாக இவ் வழக்கு விளக்குகிறது. லூயிஸ் தீவில் நெசவாளர்கள் அத் தீவிலேயே கையால் நூற்கப்பட்ட நூலினைக் கொண்டு கைத்தறியில் ஹேரிஸ் ட்வீட் ஆடைகளை நெய்தனர். பின்னர் அத் தீவில் உள்ள ஆலைகளிலேயே நூல் நூற்கப்பட்டது என்றாலும், அந்த நெசவாளர்களால் தொடர்ந்து கைத்தறியில்

ஆடை நெய்யப்பட்டது. அந்தத் தீவில் உள்ள ஆலைகளில் நூற்பு வேலையில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்களில் 90%-ம், அத் தீவின் துறைமுகமாகிய ஸ்டோர்ஜேவேயில் பணியாற்றிய தொழி லாளரும் போக்குவரத்து மற்றும் பல்துறைப்பணியாள்களின் சங்கச் தில் (Transport and General Workers Union) உறுப்பினராக இருந்தனர். தொழிற்சங்கத் தலைவர்கள் சங்க உறுப்பினர்களையே நெசவாளர்களாக ஆலை உரிமையாளர்கள் பணியில் அமர்த்த வேண்டுமென்றும், நூற்பு வேலையில் ஈடுபட்டுள்ள தொழிலாளர் களுடைய கூலியை உயர்த்த வேண்டுமென்றும் கோரினர். ஆனால், ஆலை உரிமையாளர்கள் தீவில் நூற்கப்படும் நூலைவிடக் குறைந்த விலையுள்ள நூலை வாதிகள் வெளியிலிருந்து தீவில் இறக்குமதி செய்து கைத்தறி நெசவாளர்களிடம் தந்து ஆடைகளாக நெய்து குறைந்த விலைக்கு விற்றுத் தங்களோடு போட்டியிடுவதால் தொழி லாளர்களுடைய கூலியை உயர்த்துவது இயலாது என்று கூறினர். தொழிலாளர்கள் அனைவரும் சங்கத்தில் உறுப்பினராக இருப்பது சங்க நலனுக்கு உகந்தது என்பதாலும், வாதியின் போட்டியைத் தவிர்ப்பது ஆலை உரிமையாளர் நலனைப் பாதுகாக்கும் என்பதாலும் வாதி வெளியிலிருந்து கொணரும் நூலைக் கப்பலில் இருந்து இறக்க வேண்டாம் என்றும், வாதிகள் அந்த நூலிலிருந்து நெய்த துணி களைக் கப்பலில் ஏற்றக் கூடாது என்றும் துறைமுகத் தொழிலாளர் களை எதிர்வாதிகள் கேட்டுக் கொண்டனர். அதன்படி, ஒப்பந்தம் எதுவும் மீறுத வகையில், துறைமுகத் தொழிலாளர் அவர்களது ஆணையின்படி நடக்கவே வாதிக்கு இழப்பு ஏற்பட்டது. இவ் வழக்கில் ஆலை உரிமையாளர்களுக்கும் எதிர்வாதிகளுக்குமிடையே கூட்டு இருப்பதாக வைத்துக்கொண்டாலும், அவர்கள் தங்கள் நலன்களைத் தக்க முறையில் காக்கவே கூட்டுச் சேர்ந்தனர் என்ப தால் வாதிக்கு அவர்கள் பொறுப்பாளியல்லர். எதிர்வாதிகள் தங்கள் செயல் ஹோரிஸ் ட்வீட் ஆடைத் தொழிலைப் பாதுகாக்கக் கூடியதென்று நேர்மையாக நம்பினர். அவர்கள் நோக்கம் வாதிக்கு ஊறு விளைவிப்பதாகாது. ஆனால், எதிர்வாதிகள் கூட்டுச் சேர்ந்ததன் நோக்கம் மற்றொருவருடைய தொழில், வாணிகம் அல்லது மற்ற முறையான நலன்களுக்கு ஊறு ஏற்படுத்துவதையே முக்கியமாகக் கொண்டிருந்து, அதன் விளைவாக அவருக்கு இழப்பு ஏற்படுமானால் சதி இழைக்கப்பட்டதாகக் கருதப்படும்.

5. சாரெல் v. ஸ்மித் (Sorrell v. Smith)

இவ் வழக்கில் சில்லறையாகச் செய்தித்தாள் விற்பனைசெய்து வந்த வாதி தாம் வழக்கமாகச் செய்தித்தாள் வாங்கிக் கொண்டி நிருந்த 'அ' என்பவரிடம் செய்தித்தாள்கள் வாங்குவதை நிறுத்தி,

ஆ'என்பவரிடமிருந்து செய்தித்தாள்களை வாங்கத் தொடங்கினர். 'எதிர்வாதிகள் லண்டன் நாளிதழ்களை விநியோகிக்கும் மேலாளர் குழுவின் உறுப்பினர்கள் ஆவார்கள். அவர்கள் செய்தித்தாள்களை 'ஆ' தொடர்ந்து வாதிக்கு விற்பனைக்குக் கொடுத்துவந்தால் 'ஆ'வுக்குச் செய்தித்தாள்களை வழங்குவதையேநிறுத்திவிடநேரும் என்று எச்சரித்தனர். எதிர்வாதிகள் தங்கள் வாணிக நலன்களைக் காக்கவே செயல்பட்டனர் என்பதால் அவர்கள் பொறுப்பாளிகள் அல்லர் என்று தீர்ப்பளிக்கப்பட்டது. (1) இவ் வழக்கின்படி வாதிக்குத் தொழிலில் இழப்பு ஏற்படுத்துவதற்காக வேண்டுமென்றே எதிர்வாதிகள் கூட்டுச்சேர்ந்திருந்தால் அதுசட்டத்திற்கு முரணானது. அவ்வாறு எதிர்வாதிகள் கூடி இழைத்த செயலால் வாதிக்கு இழப்பு ஏற்பட்டிருந்தால் அவர் வழக்கிடலாம். (2) எதிர்வாதிகள் கூட்டுச் சேர்ந்ததன் நோக்கம் வாதிக்கு ஊறு ஏற்படுத்துவதற்காக இல்லாமல், உண்மையில் தங்கள் கூட்டில் சேர்ந்துள்ளவர்களின் நலன்களைப் பாதுகாப்பதற்கும், வளர்ப்பதற்குமாக இருக்கலாம். அதன் விளைவாக மற்றவருக்கு இழப்பு ஏற்பட்டிருந்தாலும் அது தீங்காகாது. ஆனால் எதிர்வாதிகள் தங்கள் நலனைக் காக்கும் நோக்கத்தை நிறைவேற்ற வன்முறை, மோசடி போன்ற சட்ட முரணான வழிகளைக் கையாண்டு இருந்தால் பொறுப்பாளியாவார். ஆனால், அவர்கள் நோக்கம் முறையானதாயின், அதை நிறைவேற்றப் போவதாக அச்சுறுத்துவது தீங்காகாது. இங்கு எதிர்வாதிகள் மேற்கொள்ளும் செயலுக்குத் தகுந்த காரணமும், முகாந்திரமும் இருக்கிறது என்பதால் அவர்கள் பொறுப்பாளியாக மாட்டார்கள்.

எதிர்வாதிகள் தங்கள் முறையான நலன்களைக் காப்பதற்காக இல்லாமல் வாதிக்கு இழப்பு ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தோடு ஒன்றுகச் சேர்ந்து செயல்பட்டிருந்தால் வாதி அவர்கள் மேல் சதிக்காக வழக்கிடலாம். ஹன்ட்லி v. தார்ன்டன் (Huntley v. Thornton) வழக்கில் சங்க உறுப்பினரான வாதி வேலைநிறுத்தம் செய்யுமாறு சங்கம் கொடுத்த வேண்டுகோளை ஏற்க மறுத்து விட்டார். அந்தச் சங்கத்தின் செயலாளரும், சில உறுப்பினர்களுமாகிய எதிர்வாதிகள் அவரைச் சங்கத்திலிருந்து வெளியேற்ற விரும்பினர். ஆனால் சங்கத்தின் ஆட்சிக் குழு அவ்வாறு செய்ய மறுத்துவிட்டது. எனவே, வாதியை வேலையிலிருந்து விலக்குமாறு செய்ய எதிர்வாதிகள் முயற்சி செய்தனர். சங்கத்தின் ஆட்சிக்குழு முடிவு செய்தபின்னர் எதிர்வாதிகள் மேற்கொண்ட நடவடிக்கைகள் தொழிற்சங்கத்தின் நலனை வளர்க்கும் முறையில் அமைந்திருக்கவில்லையென்பதாலும், அவர்கள் பழிவாங்கும் உணர்வோடும், தீங்கெண்ணத்தோடும் நடந்துகொண்டனர் என்பதாலும் வாதிக்குப் பொறுப்பாளியாவார் என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

எதிர்வாதிகள் தங்கள் பொருளாதார நலன்களைக் காப்பதற்கு மட்டுமன்றிப் பிறர் நலன்களையும் காக்கக்கூட்டுச்சேரலாம். ஸ்காலா பால்ரூம் (உல்வர்ஹாம்ப்டன்) லிமிடெட் v. ரேட்கிளிஃப் (Scala Ballroom (Wolverhampton) Ltd. v. Ratcliffe) வழக்கில் நடன இசை அரங்குக் கலைஞர்களாகிய கறுப்பர்களைத் தம்முடைய நடன அரங்கில் அனுமதிக்க வாதி மறுத்துவிட்டார். இவ்வாறு கறுப்பர்களுக்கு எதிராக வாதி விதித்த தடையை எடுக்கும்படி அவரை வற்புறுத்துவதற்காக இசைவாணர் சங்கத்தின் அதிகாரிகளாகிய எதிர்வாதிகள் கறுப்பர்களாகிய கலைஞர்களுக்கான தடை நீங்கும்வரை தங்கள் சங்க உறுப்பினர்கள் எவரும் நடன அரங்கில் உள்ள இசைக்குழுவில் கலந்து கொள்ளமாட்டார்கள் என்று வாதிக்கு அறிவித்தார்கள். அந்த இசைவாணர் சங்கத்தில் கறுப்பர்களும் உறுப்பினர்களாய் இருந்தனர். தொழிற்சங்கத் தலைவர்கள் தங்களுடைய முடிவை நிறைவேற்றமுடியாமல் செய்ய வாதி கேட்டிருந்த உறுத்துக் கட்டளையை நீதிமன்றம் வழங்க மறுத்தது.

தொழில்தகராறுகள் சட்டப்படி தொழிற்சங்கத்தினாலும் அதன் சார்பாகவும் செய்யப்பட்டதாகக் கூறப்படும் எந்தத் தீங்கான செயலுக்காகவும் அதன்மேல் வழக்கிட முடியாது, எதிர்வாதியின் செயலால் வாதிக்குஏற்படும் இழப்பு வேலையிழப்பாகவும் அல்லது தொழில்,வாணிகம் ஆகியவற்றில் ஏற்படும் இழப்பாகவும் இருக்கலாம். இதைத் தவிர வேறு முறைகளிலும் இழப்பு ஏற்பட்டு இருக்கலாம். ஒரு நாகபுரி வழக்கில் வாதி, தன்னுடைய சாதியைச் சேர்ந்த எதிர்வாதிகள் கூட்டாகச் சேர்ந்து தன்னுடைய இல்லத்தில் நடந்த ஈமச்சடங்கொன்றில் தன் சாதியினரைக் கலந்து கொள்ளக்கூடாதுஎன்று தூண்டியதாக இட்ட வழக்குத் தள்ளுபடி செய்யப்பட்டது. வாதி தன்னுடைய மன அமைதி குலையும் வண்ணம் ஒரு செயலை எதிர்வாதி செய்ததாக மட்டும் கூறி வழக்கிட முடியாது. அவரது பணிக்கோ, சொத்துக்கோ இழப்பு ஏற்படாதபோது மனக்கவலையோ அமைதிக் குலைவோ அவனுக்கேற்பட்டிருந்தாலும் அதை இழப்பெனக் கருதமுடியாது.

49. ஏமாற்றுதல்
(Deceit)

ஒருவருடைய சொற்கள் பொய்யானவையாக இருப்பின் மற்றவருக்குப் பல வழிகளில் ஊறு அல்லது இழப்பு நேரலாம். எடுத்துக்காட்டாக, எதிர்வாதி வாதியைப்பற்றி ஓர் அவதூறினை வெளியிடுகிறார். அதனால் வாதியின் புகழுக்கு ஊறு நேருகிறது. சவிர ஒருவர் புகலும் சொற்கள் மற்றவருக்கு மன அதிர்ச்சி ஏற்படுத்தி நேரடியான ஊறு விளைவிக்கலாம். இதுமட்டுமல்லாது அச் சொற்களை உண்மையென நம்பி ஒருவர் நடப்பதால் அவருக்கு இழப்பு ஏற்படலாம். அல்லது அவற்றை நம்பி அவர் நடப்பதன் மூலம் பிறருக்கு இழப்பு ஏற்படலாம். இவற்றில் முதலாவதாகச் சொன்னதை அவதூறு என்னும் பகுதியில் படித்தோம். இரண்டாவது வகையை மன அதிர்ச்சி என்ற பகுதியில் அறிந்தோம். இங்கு இறுதியாகச்சொல்லப்பட்ட வகைகளைப்பற்றிக் காண்போம்.

வஞ்சித்தல் அல்லது திரித்துரைத்தல் என்று சொல்லப்படும் தீங்குகள் இரண்டு வகைப்படும். முதலாவது, வாதியிடம் ஒரு பொய்த் தகவல் கூறி அவனை ஏமாற்றி, அதை நம்பி அவனே புரியும் தவருன செயலால் அவன் இழப்பினை அடையச் செய்தல். இது ஏமாற்றுதல் என்று அழைக்கப்படும். இரண்டாவது பிறரை ஏமாற்றி அவர்களைத் தவருன செயலொன்றைச் செய்ய வைத்து வாதிக்கு இழப்பினை ஏற்படுத்துதல். இது தீங்கான பொய்ம்மை (injurious falsehood) எனப்படும். ஏமாற்றுதல் எனப்படும் தீங்கில் வாதியிடமே ஒரு பொய்த் தகவல் சொல்லப்படுகிறது. தீங்கான பொய்ம்மையிலோ வாதியைப்பற்றிப் பொய்த் தகவல் சொல்லப்படுகிறது.

ஏமாற்றுதல் என்னும் தீங்கு பாஸ்லி ν. ஃபிரீமன் (Pasley ν, Freeman) என்னும் வழக்கில் சொல்லப்பட்ட தீர்ப்பினை அடிப்படையாகக் கொண்டு எழுந்தது. ஒருவர் ஒரு பொய்யான தகவலைப்

பிறர் அதை நம்பி நடக்கவேண்டும் என்று கருதிச் சொல்லி, அவரும் அதை நம்பி நடப்பதன் விளைவாக நட்டம் அடைந்தால் அந்தப் பொய்யான தகவலை வெளியிட்ட செய்கை ஏமாற்றுதல் எனப்படும். இவ் வழக்கில் வாதி உலர்ந்த பூச்சிவகையிலிருந்து எடுக்கப்படும் செஞ்சாயப் பொருள் (cochineal) விற்பனை செய்பவர். அவரிடம் அந்தச் சரக்கு நிறையத் தேங்கிவிட்டது. எனவே, அவற்றை விற்க விரும்பினர். இதையறிந்த எதிர்வாதி அவரிடம் சென்று தமக்குத் தெரிந்த பால்ஷ் என்பவர் அதை வாங்க விரும்புகிறார் என்று சொன்னர். வாதி அந்தப் பால்ஷ் என்ற நபர் பணவசதி உள்ளவரா, நாணயமானவரா என்று எதிர் வாதியைக் கேட்டார். எதிர்வாதி அவரை நம்பி விற்கலாம் என்று வாதிக்கு உறுதியளித்தார். ஆனால் எதிர்வாதிக்குப் பால்ஷ் நாணய மற்றவர் என்றும் பண வசதி அற்றவர் என்றும் தெரியும். இதைத் தெரிந்தே அவர் வாதியிடம் பொய்த் தகவல் கூறினர். எதிர் வாதியின் கூற்றை நம்பிய வாதி சுமார் £3,000 மதிப்புள்ள 16 மூட்டை செஞ்சாயப் பொருளைக் கடனுக விற்றார். அதற்குரிய பணத்தைக் கொடுக்க வேண்டிய காலம் வரும்போது பால்ஷ் நொடித்துப் போனவர் என்று தெரியவந்தது. பால்ஷிடம் தாம் விற்ற பொருளின் விலையைப் பெற முடியாத வாதி தமக்கு எதிர்வாதி பொய்த் தகவல் கூறியதால் இழப்பு ஏற்பட்டது என்று கூறி எதிர்வாதியின்மேல் வழக்கிட்டார். எதிர்வாதி பால்ஷைப்பற்றிய பொய்த் தகவல் கூறியதால் வாதிக்கேற்பட்ட இழப்பின் அளவுக்குப் பொறுப்பாளியாவார் என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

இந்தத் தீங்கில் நான்கு முக்கியமான கூறுகள் உள்ளன:

(1) ஒன்றைப்பற்றிப் பொய்யான தகவல் சொல்லப்பட்டிருக்க வேண்டும். (2) அந்தத் தகவல் பொய்யானது என்று தெரிந்தே சொல்லப்பட்டிருக்க வேண்டும். (3) அந்தத் தகவலை வாதியோ வாதி உள்ளிட்ட ஒரு வகுப்பினரோ உண்மையென நம்பி அவர்களுக்கு இழப்பு ஏற்படும்படி நடக்கவேண்டுமென்ற கருத்துடன் எதிர்வாதி சொல்லியிருக்க வேண்டும். (4) வாதி அதை நம்பி நடந்ததால் அவனுக்கு இழப்பு ஏற்பட்டிருக்க வேண்டும்.

1. பொய்யான தகவல் அல்லது கூற்று: இது வாய்மொழியாகவோ, எழுத்து வடிவிலோ அமைந்திருக்கலாம். அல்லது அவன் நடத்தையிலிருந்து ஊகித்துக்கொள்ளக்கூடியதாக இருக்கலாம். ஒருவன் நடந்துகொள்ளும் முறையைக் கொண்டு ஒரு பொருள் உண்மையில் இருப்பதாக மற்றவன் நம்பும்படி

ஏமாற்றுதல், சட்டப்படி அந்தப் பொருள் உண்மையில் இருக்கிறது என்று சொல்வதற்குச் சமமாகும். எடுத்துக்காட்டாக, ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக் கழக மாணவர்கள் அணிகின்ற தொப்பியும் மேலாடையும் அணிந்து பிறரை ஏமாற்றிப் பொருள்களைக் கடனுகப் பெறும் செயலைச் சொல்லலாம் (R. V. பர்னர்ட்); அல்லது ஒருவர் விற்பனை செய்த பொருள்களில் உள்ள குறையை மறைக்கும் வேலையில் ஈடுபடுவதைச் சொல்லலாம் (ஹார்ஸ்பால் v. தாமஸ்). ஒரு வீட்டை விற்றவர் அந்த வீட்டின் சுவரில் விரிசல் இருந்ததால் அதைப் பூசி அதன்மேல் தாளை ஒட்டி மறைத்து விட்டால் ஏமாற்று தலுக்காக வழக்கிடலாம். ஓர் உண்மையின் ஒரு பகுதியை வேண்டுமென்றே சொல்லாமல் விடுவதால், எஞ்சியுள்ளதைப் பற்றிச் சொல்லிய தகவல் பொய்யானதாகலாம். மற்றும் ஒன்றைப் பற்றி வேண்டுமென்றே சொல்லாமல் மறைப்பதானது அது உண்மையிலேயே இல்லையென்று கூறுவதற்கு ஒப்பாகும். ஒரு பொருளைப் பற்றிய உண்மையை மறைத்தல் அந்தப் பொருளைக் கண்டுபிடிக்காமல் இருக்கும் நோக்கத்துடன் செய்யப்படும் செயலைக் குறிக்கும். அதாவது ஒரு பொருளை விற்பவர் அந்தப் பொருளில் உள்ள குறைகளை மூடி மறைக்கும் செயல் அந்தப் பொருளில் குறைபாடுகளே இல்லையென்று சொல்லுவதற்குச் சமம். தவிர, எதிர்வாதி உண்மையென்று நம்பி ஒரு தகவலைச் சொன்ன பின்னர், அதை நம்பி வாதி செயல்படும் முன்னர், அந்தத் தகவல் பொய் என்று எதிர்வாதிக்குத் தெரிய வந்தால் அவர் வாதியிடம் உண்மையைச் சொல்லி விடவேண்டும். இதைப் போலவே எதிர் வாதி உண்மையான தகவலையே சொல்லியிருந்தாலும், பின்னர் வாதி அத் தகவலை நம்பி நடக்கு முன்னர் அது பொய்யாகிவிட்டால் உண்மையை வாதியிடம் கூற வேண்டிய கடமை அவருக்குண்டு; இடையில் திருத்தப்படாத பொய்த் தகவலை நம்பி வாதி நடந்தால் தான் தீங்காகும். எனவே, எதிர்வாதி சொல்லும்போது பொய்யாய் இருந்த தகவல் வாதி பின்பற்றி நடக்கும்போது உண்மையாகி விட்டால், எதிர்வாதி பொய்த் தகவல் கூறியதாக ஆகாது. மற்றும் உண்மையான தகவலையே வெளியிட வேண்டிய கடமை சட்டப் படி எதிர்வாதிக்கு இருந்தால் அத் தகவலை வெளியிடாமல் இருப் பது தீங்காகும். எடுத்துக்காட்டாக, கம்பெனிச் சட்டப்படி கம்பெனி அறிக்கையில் சில செய்திகளைச் சொல்ல வேண்டிய கடமையுண்டு.

எதிர்வாதியின்மேல் வழக்கிட வேண்டுமானால் அவர் கூறியது பொய்யான தகவலாக இருக்க வேண்டுமேயல்லாது, வெறும் வாக்குறுதி மீறலாக இருக்கக் கூடாது.

2. எதிர்வாதி தாம் சொன்ன தகவல் பொய்யானதென்று அவருக்குத் தெரிந்திருக்க வேண்டும் அல்லது அவர் தாம் சொல்லிய தகவல் உண்மையானது என்று நேர்மையாக நம்பியிருக்கக் கூடாது. ஒரு நேர்மையான மனிதனை ஏமாற்றுபவன் என்று சொல்லமுடியாது. எனவே, எதிர்வாதி தாம் சொல்லிய தகவல் உண்மையென்று நேர்மையாகவே நம்பியிருந்தால் அவர் ஏமாற்றியதாகச் சொல்ல முடியாது. எனவே, ஒரு பொய்யான தகவலை ஒருவர் கவனமின்றி மட்டும் சொல்லியிருந்தால் அவர் ஏமாற்றுபவராகக் கருதப்படமாட்டார். டெர்ரி v. பீக் (Derry v. Peek) வழக்கில் ஒரு டிராம்வே கம்பெனிக்குத் தொழில் வாரியத்தின் (Board of Trade) இசைவுடன் நீராவிச் சக்தியைப் பயன்படுத்தி டிராம் வண்டியை ஓட்ட அதிகாரம் அளிக்கப்பட்டது. அந்த இசைவு இல்லாவிட்டால் அவர்கள் குதிரைகளைப் பயன்படுத்தித்தான் டிராம் வண்டியை ஓட்ட முடியும். அந்தக் கம்பெனியின் இயக்குநர்கள் குதிரைகளுக்குப் பதிலாக நீராவிச் சக்தியைப் பயன்படுத்தச் சட்டப்படி தங்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது என்ற தகவலைத் தாங்கள் வெளியிட்ட திட்ட விளக்க அறிவிப்பில் சொல்லியிருந்தார்கள். இந்தத் தகவலை உண்மை என்று நம்பிய வாதி அந்தக் கம்பெனியின் பங்குகளை வாங்கினார். தொழில்வாரியம் நீராவிச் சக்தியைப் பயன்படுத்த இசைவு தர மறுத்துவிட்டது. அந்தக் கம்பெனியின் இயக்குநர்கள் நீராவியைப் பயன்படுத்தும் அதிகாரம் தங்களுக்கு இயல்பாகவே கிடைக்கும் என்று நேர்மையாக நம்பித்தான் அந்தத் தகவலை வெளியிட்டிருந்தனர். இது அவர்களின் கவனமின்மையையே காட்டும். அந்தக் கம்பெனி பின்னர் மூடப்பட நேர்ந்தது. அந்தக் கம்பெனியின் இயக்குநர்கள்மேல் பொய்த் தகவல் கூறி ஏமாற்றியதாக இடப்பட்ட வழக்கில் அவர்கள் கவனமின்றி அத் தகவலைச் சொல்லியிருந்தாலும், அது உண்மைஎன்றுநேர்மையாகவே நம்பிச் சொல்லியிருந்தால் அவர்கள் பொறுப்பாளிகள் ஆகமாட்டார்கள் என்று தீர்ப்பளிக்கப்பட்டது. எதிர்வாதி தாம் சொன்ன தகவல் உண்மையானதென்று நேர்மையாக நம்பிச் சொல்லியிருந்தால் தான் பொறுப்பாளியாகமாட்டார் என்று டெர்ரி v. பீக் கூறுகிறது. ஆனால், எதிர்வாதி சொல்லிய தகவல் பொய்யென்று அவருக்குத் தெரிந்திருந்தால்தான் பொறுப்பு ஏற்படும் என்பதில்லை. அவர் அதை உண்மையென்று மனப்பூர்வமாகவும் நேர்மையாகவும் நம்பாமல் இருந்தாலும் பொறுப்பாளியாவார். ஒவ்வொரு தகவலும் அதைச் சொல்பவரால் வெளிப்படையாகவோ, உட்கிடையாகவோ நம்பிச் சொல்லப்படுவதாகும். எனவே, அந்த நம்பிக்கை இல்லையாயின் அவன் சொல்லிய தகவல் தெரிந்தே, வேண்டு

மென்றே சொல்லப்பட்ட பொய்த்தகவலாகும். எவ்வளவு கவன மின்றி ஒரு தகவல் சொல்லப்பட்டிருந்தாலும் அது ஏமாற்றுதல் ஆகாது.

3. எதிர்வாதி அந்தத் தகவலை வாதி உண்மையென்று நம்பி அதன்படி நடக்க வேண்டும் என்று கருதிச் சொல்லியிருக்க வேண்டும். எதிர்வாதி 'அ' என்பவரிடம் பொய்யான தகவலைக் கூறுகிறார். அத் தகவலை 'ஆ' என்பவர் நம்பி நடப்பார் என்று அவருக்குத் தெரிந்திருந்தாலோ, அவ்வாறு கருதத்தகுந்த காரணம் இருந்தாலோ அவர் 'ஆ' என்பவருக்கும் பொறுப்பாளியாவார். அவர் அத்தகவலை 'அ' என்பவரிடம் மட்டுந்தான் சொன்னேன் என்று சொல்ல முடியாது. லேங்கிரிட்ஜ் v. லெவி (Langridge v. Levy) வழக்கில் எதிர்வாதியிடமிருந்து வாதியின் தந்தை தாமும் தம்முடைய மகனும் பயன்படுத்துவதற்காக ஒரு துப்பாக்கியை வாங்கியிருந்தார். எதிர்வாதி அந்தத் துப்பாக்கி ஒரு புகழ்பெற்ற உற்பத்தியாளரால் செய்யப்பட்டது என்றும், அது மிகவும் பாதுகாப்பானதென்றும் மோசடியாகக் கூறியிருந்தார். வாதி அதைப் பயன்படுத்தும்போது வெடித்து, அதன் விளைவாக வாதிக்குக் காயம் ஏற்பட்டது. இங்கு வாதியின் தந்தைக்கே எதிர்வாதி மோசடியான பொய்த் தகவலைக் கூறியிருந்தாலும், வாதி அவர்மேல் வழக்கிடலாம் என்று தீர்ப்பளிக்கப்பட்டது. இங்கு அத் தகவல் வாதி நம்பி நடக்க வேண்டும் என்ற கருத்தோடும், அது அவருக்கு அவர் தந்தையால் சொல்லப்படும் என்று தெரிந்தும் எதிர்வாதியால் சொல்லப்பட்டது.

ஆனால் எதிர்வாதி தாம் சொல்லிய தகவலை வாதி நம்பி நடக்க வேண்டும் என்று கருதாமல் இருந்திருக்கலாம். எதிர்வாதி யார் தம்முடைய பொய்த்தகவலை நம்பி நடந்து நட்டமடைய வேண்டும் என்று எதிர்பார்த்து அதை வெளியிட்டு இருக்கிறாரோ அவருக்கு ஏற்படும் இழப்பிற்கு மட்டுந்தான் பொறுப்பாளியாவார். அவர் வெளியிட்ட பொய்த்தகவலை நம்பி நடப்பவர்க்கெல்லாம் அவர் பொறுப்பாளியாகமாட்டார். எடுத்துக்காட்டாக, பீக் v. கர்னி (Peek v. Gurney) வழக்கில் ஒரு கம்பெனியை உருவாக்கிய வர்களாகிய எதிர்வாதிகள் வெளியிட்டிருந்த மோசடியான திட்ட விளக்க அறிவிப்பில் சொல்லப்பட்டிருந்த ஒரு பொய்யான தகவலை நம்பி ஒரு நபர் அந்தக் கம்பெனியின் பங்குகளை வாங்கி இழப் படைந்தார். இதற்கு இந்தக் கம்பெனியை உருவாக்கியவர்கள் பொறுப்பாளிகள் அல்லர் என்று தீர்ப்பளிக்கப்பட்டது. ஏன் என்றால் கம்பெனி திட்டவிளக்க அறிவிப்பு வெளியிடுவதன்

நோக்கம் அக் கம்பெனிக்கு நேராகப் பங்கு கேட்டு ஒருவர் விண்ணப்பிக்கத்தானே தவிர முன்பு வெளியிடப்பட்டுவிட்ட பங்குகளைப்பங்குச்சந்தையில் வாங்கத்தூண்டுவதற்கன்று. ஆனால் எதிர்வாதி வெளியிட்ட ஒரு பொய்த்தகவல் ஒரு குறிப்பிட்ட நபரை மட்டும் ஏமாற்ற வேண்டும் என்ற கருத்துடன் வெளியிடப் பட்டதாக இருக்க வேண்டியதில்லை. பொதுமக்களில் எவர் வேண்டுமானாலும் அத் தகவலை ஏற்றுச் செயல்படலாம் என்கின்ற நோக்கத்துடனும் வெளியிடப்படலாம். அவ்வாறு பொதுமக்களில் எவரேனும் அதை நம்பி நடந்து இருந்தால் எதிர்வாதி பொறுப் பாளியாவார். வர்தி திரித்துரைக்கப்பட்ட தகவலை உண்மையி லேயே நம்பியிருப்பின், அவ்வாறு அவர் நம்பியது அவருடைய அறிவீனத்தையோ கவனமின்மையையோ காட்டும் என்றே அவருக்கு உண்மையைக் கண்டறியும் முழு வாய்ப்பு இருந்த தென்றே எதிர்வாதி கூறமுடியாது. வாதி தம்மை ஏமாற்றும் கருத்துடன் எதிர்வாதி சொல்லும் பொய்த்தகவலை நம்பி நடக்கச் சட்டப்படி அவருக்கு உரிமையுண்டு. மற்றும் நல்லறி வுள்ள மனிதன் எவனும் தான் சொன்ன தகவலை உண்மையென நப்பியிருக்க மாட்டான் என்று எதிர்வாதி சொல்லமுடியாது. இங்கு நாம் கருதவேண்டியது எதிர்வாதி கூறிய பொய்த்தகவலை உண்மையென்று நம்புமாறு வாதி தூண்டப்பட்டிருந்தாரா என்பது தான்.

4. எதிர்வாதி சொன்ன பொய்த்தகவலை நம்பிய வாதி நட்ட மடைந்திருக்க வேண்டும். வாதியை ஏமாற்ற எதிர்வாதி வெறும் முயற்சிமட்டும் செய்திருந்தால் ஏமாற்றுதல் ஆகாது. வாதி அவ்வாறு நடந்து கொண்டதற்குப் பல காரணங்களில் ஒன்றுக எதிர்வாதியின் பொய்த்தகவல் இருந்தாலும் போதும். ஆனால், எதிர்வாதி அந்தப் பொய்யான தகவலைச் சொல்லியிராவிட்டாலும் வாதி வேறு முறையில் நடந்திருக்க மாட்டார் என்றால் எதிர்வாதி பொறுப்பாளியல்லர். ஏனென்றால், அவர் எதிர்வாதியின் மோசடி யால் ஏமாற்றப்படவில்லை, வாதிக்கு ஏற்படும் இழப்பு அல்லது நட்டம் அவர் ஏமாற்றப்பட்டதால் ஏற்பட்ட இயல்பான விளைவாக இருக்கவேண்டும். எடுத்துக்காட்டாக, எதிர்வாதி சொன்ன பொய்த்தகவல் எந்த முக்கியத்துவமும் இல்லாத, அற்பமான பொய்த்தகவலாக இருந்தால், வாதி அதை நம்பி நடப்பதற்குக் காரணமாய் இருந்திருக்க முடியும் என்று சொல்ல முடியாது. எடுத்துக்காட்டாக, ஸ்மித் v. சேட்விக் (Smith v. Chadwick) வழக்கில் சொல்லப்பட்ட தகவலாகிய கம்பெனியின் சொத்து மதிப்பு பவுன் 801000 என்பதில் பவுன் 3000 வேறுபாடு இருந்தது இந்த வேறுபாடு அற்பமானது. எனவே, இந்த வேறுபாடு வாதி

அந்தக் கம்பெனியின் பங்கை வாங்கக் கொண்டிருந்த எண்ணத்தை மாற்றியிருக்காது.

வாதிக்கேற்பட்ட இழப்பு பொருளிழப்பாக இல்லாமல் உடற் காயமாகவோ, சொத்திற்குச் சேதமாகவோ இருக்கலாம். பொய்யான தகவல் சொல்லப்படாமல் இருந்தால் வாதி இருந்திருக்கக் கூடிய நிலையை அவர் எய்த உரிய இழப்பீடு தரப்படும். எதிர்வாதியின் பொய்த்தகவலின் விளைவாக உண்மையில் வாதிக்கு ஏற்பட்ட இழப்புகள் அனைத்துக்கும் எதிர்வாதி ஈடு செய்ய வேண்டும். பொய்த்தகவலை நம்பி வாதி ஒரு சொத்தை விலைக்கு வாங்கியிருந்தால் அவர் கொடுத்த விலைக்கும், விற்ற காலத்தில் அச் சொத்தின் உண்மை விலைக்கும் உள்ள வேறுபாட்டை அவர் இழப்பீடாகப் பெறுவதோடு, அதன் விளைவாக ஏற்படும் சேய்மையல்லாத இழப்புக்கும் ஈடு பெறலாம்.

டெர்ரி v. பீக் வழக்கில் சொல்லப்பட்ட விதிக்குச் சில விலக்குகள் உண்டு. அவையாவன:

(1) கவனமின்றிச் சொல்லப்படும் தகவலின் காரணமாக ஏற்படும் பொருள் இழப்பிற்கு ஹெட்லி பர்ன் v. ஹெல்லர் (Hedley Byrne v. Heller) வழக்கில் சொல்லப்பட்டபடி பொறுப்புண்டு. இவ் வழக்கில் விளம்பர முகவராகிய வாதிகள், ஈசிபவர் என்ற கம்பெனிக்கு நம்பிக் கடன் தரலாமா? என்று அறிய விரும்பினர். ஏனெனில் அக் கம்பெனியின் சார்பில் வாதிகள் பல விளம்பர ஒப்பந்தங்கள் செய்திருந்தார்கள். எனவே, வாதிகள் தங்கள் வங்கியை அணுகி மேற்படி கம்பெனியின் பொருளாதார நிலையைப் பற்றி விளக்கம் கேட்கவே, அந்த வங்கி மேற்படி கம்பெனி கணக்கு வைத்திருந்த எதிர்வாதி வங்கியிடம் தகவல் கேட்டது. எதிர்வாதி வங்கி இருமுறை மேற்படி கம்பெனியைப் பற்றி நல்ல கருத்துத் தெரிவிக்கவும் அது வாதியின் வங்கியால் வாதிக்குத் தெரிவிக்கப்பட்டது. வாதியை யார் என்றுகூட எதிர்வாதிக்குத் தெரியாது. தவிர அவர்கள் கொடுத்த தகவலில் அதை இரகசியம் என்றும், தனிப்பட்ட முறையில் பயன்படுத்திக் கொள்வதற்காக என்றும் குறிப்பிட்டு இருந்தனர். அவர்களுக்கு இந்தத் தகவல் விளம்பர ஒப்பந்தம் சம்பந்தமாகக் கேட்கப்படுகிறது என்ற விவரம் தெரியாது. தகவலைக் கேட்டிருந்த வங்கி தனது வாடிக்கையாளருக்குச் சொல்வதற்காகக் கேட்டது என்று மட்டும் எதிர்வாதி வங்கிக்குத் தெரியும். இந்தத் தகவலை நம்பி வாதிகள் செலவு செய்தார்கள். பின்னர் ஈசிபவர் கம்பெனி நொடித்துப்போனதால்

வாதிக்குப் பொருள் இழப்பு ஏற்பட்டது. எதிர்வாதிகள் கவன மின்றி ஈசிபவர் கம்பெனியைப் பற்றிச் சாதகமான தகவல் கொடுத்த தால்தான் தங்களுக்கு இழப்பு ஏற்பட்டது என்று சொல்லி அதற்கு ஈடுகேட்டு வாதிகள் வழக்கிட்டனர். பிரபுக்கள் சபை எதிர்வாதிகள் இதற்குப் பொறுப்பாளியாகமாட்டார்கள் என்று தீர்ப்பளித்தது. ஆயினும் இவ் வழக்கில் எதிர்வாதிகள் கவன மின்றியிருப்பதாக வைத்துக்கொண்டாலும், அவர்கள் தங்களுக்கு எவ்விதமான பொறுப்பும் இல்லையென்று கூறியே தகவல் தந்தி ருந்தமையால் அவர்கள்மேல் பொறுப்பில்லையென்று கூறப்பட்டது. ஆயினும் தகவல் கொடுக்கும்போது கவனத்தோடு கொடுக்க வேண்டிய பொறுப்பு சட்டப்படி ஏற்பட வழியுண்டு என்று ஏற்றுக் கொள்ளப்பட்டது. இவ் வழக்கில் தவருன தகவலால் பொருள் நட்டம் ஏற்பட்டது; தவருன செயலால் அன்று. இவ் வழக்கிற்கு முன்புவரை ஒப்பந்தமோ, நம்பிக்கை காட்டுகிற உறவோ இல்லாதவிடத்தும், உடலுக்கோ சொத்துக்கோ இழப்பு ஏற்படாத விடத்தும் கவனமின்றிச் சொல்லப்படும் தவருன தகவ லுக்குப் பொறுப்பில்லை என்ற நிலை இருந்தது. ஆயினும், குறிப் பிட்ட சில சூழ்நிலைகளில் பொறுப்பு ஏற்படக்கூடும் என்று இவ் வழக்கு நிலைநாட்டியது.

(2) ஒருவர் ஓர் அபாயகரமான நிலையிலுள்ள கட்டடத் தையோ, அல்லது பொருளையோ பாதுகாப்பானது அல்லது பத்திரமானது என்று கவனமின்றிச் சொல்கின்றார். அந்தக் கட்ட டத்திற்குச் செல்லும் ஒருவருக்கோ, அந்தப் பொருளைப் பயன்படுத்தும் ஒருவருக்கோ, உடல்காயம் ஏற்பட்டால் அவர் பொறுப்பாளியாவார். இங்கு டெர்ரி v. பீக் வழக்கில் சொல்லப்பட்ட விதி பொருந்தாது. இவற்றிற்குத் தீங்கியலில் வேறு வகையில் தனிப் பொறுப்பு உண்டு.

(3) வாதியும், எதிர்வாதியும் ஓர் ஒப்பந்தம் செய்துகொண் டிருக்கலாம். அந்த ஒப்பந்தப்படி தாம் கொடுக்கும் தகவலில் கவனத்தோடு கொடுக்கவேண்டிய கடமை எதிர்வாதிக்கு இருக்க லாம். சட்டப்படி ஏற்படாத ஒரு கடமையை ஒருவர் ஒப்பந்தப் படி ஏற்றுக்கொள்ளலாம். இச் சூழ்நிலையில் எதிர்வாதி ஒப்பந் தத்திற்கு முரணுகக் கவனமின்றி நடந்து கொண்டிருந்தால் வாதிக்குப் பொறுப்பாளியாவார். இங்கு டெர்ரி v. பீக்கில் சொல் லப்பட்ட விதி பொருந்தாது. ஆயினும், எதிர்வாதியின் கவனமின் மையால் ஏற்படும் ஊறு அவரோடு ஒப்பந்தம் செய்துகொண்டி ருந்த வாதிக்கே ஏற்பட்டிருக்க வேண்டும் ஒப்பந்தத்தை மீறிய செய்கையால் மூன்றாவது நபருக்கு இழப்பு ஏற்பட்டிருந்தால் எதிர் வாதி பொறுப்பாளியாகமாட்டார். எடுத்துக்காட்டாக

டிக்சன் v. ராய்டர்ஸ் டெலிகிராம் கம்பெனி (Dickson v. Reuter's Telegram Co.) வழக்கில் எதிர்வாதி கம்பெனி வேறு ஒருவருக்கு அனுப்ப வேண்டிய தந்தியில் கவனமில்லாமல் வாதிகளின் முக வரியைஎழுதி அவருக்கு அனுப்பினர். அந்தத்தந்தியில் வால்பரை சோவிலிருந்து இங்கிலாந்திற்குப் பார்லியைக் கப்பலில் ஏற்றி அனுப்புமாறுகேட்கப்பட்டிருந்தது. அது தமக்கு அனுப்பப்பட்ட தந்தி எனவாதிகள் கருதி அவ்வாறே அனுப்பிப் பெரும் பொருள் இழப்பு எய்தினர். ஆயினும், எதிர்வாதி அவர்களுக்குப் பொறுப் பாளி அல்லர் என்று தீர்ப்பளிக்கப்பட்டது. ஒப்பந்தத்தை மீறிக் கவனமின்றித் தகவல் கொடுக்கப்பட்டாலும் எதிர்வாதி தந்தி கொடுத்தவரோடு மட்டும் ஒப்பந்தம் செய்துகொண்டிருந்தாரே யொழிய வாதிகளோடன்று. எனவே, தந்தியைப்பெற்றவர் மூன்றும் நபர். ஆகையால், எதிர்வாதி அவர்களுக்குப் பொறுப்பாளியல்லர்.

(4) சில சமயங்களில் ஒருவரை நம்பிச் செயல்பட வேண்டிய உறவு தரப்பினரிடையே அமைந்திருப்பதன் காரணமாக நேர்மை நெறியின்படி தனிப்பட்ட கடமையும் இருக்கலாம்; அல்லது குறிப்பிட்ட சூழ்நிலையின்படி இத்தகைய கடமை தோன்றி இருக்க லாம். அப்படிப்பட்ட கடமையிருப்பின் எதிர்வாதிக்கு ஏமாற்றும் நோக்கம் இல்லையாயினும், திரித்துரைத்ததற்கும், மோசடிக்கும் பொறுப்பாளியாகக் கருதப்படலாம். இந் நிலையில் வாதி தீங்கீடு பெற முடியாதாயினும், தனக்கேற்பட்ட இழப்புக்கு ஈட்டுறுதி பெறலாம். நாக்டன் v. ஆஷ்பர்ட்டன் (Nocton v. Ashburton) வழக்கில், எதிர்வாதி வாதியின் அந்தரங்க வழக்கீட்டு ஆலோசகர் என்ற முறையில் அடைமான ஈடாக வைக்கப்பட்ட சில சொத்து களை விடுவிக்குமாறு தவருக அறிவுறுத்தினர். அதன் விளைவாக ஈடாக வைக்கப்பட்ட சொத்துப் போதுமானதாக இல்லாமற் போகவே வாதிக்கு இழப்பு ஏற்பட்டது. இங்கு அவரை நம்பிச் செயல்பட வேண்டிய நெருங்கிய உறவு வாதிக்கு இருந்தது. எனவே, எதிர்வாதிக்கு ஏமாற்றும் நோக்கம் எதுவும் இல்லை யெனினும் பொறுப்புக்குரிய உறவினால் எழும் கடமையிலிருந்து தவறியதற்கு வாதிக்குப் பொறுப்பாளியானார். இதைப் போன்ற உறவு ஒரு வங்கிக்கும் வாடிக்கையாளர்க்கும் உண்டு.

(5) ஒருவருடைய முகவராகத் தம்மை அறிவித்துக்கொண்டு மற்றொருவருடன் ஒப்பந்தம் செய்து தம்முடைய அதிகாரத்தை நம்பிச் செயலாற்றுமாறு செய்பவர் தமக்கு அவ்வாறு அதிகாரம் உண்டென்று கூறுவதாகக் கொள்ள வேண்டும். எனவே, தமக்கு அதிகாரம் இருப்பதைப்பற்றியோ, அதன் அளவைப்பற்றியோ அவர் திரித்துரைத்தால் அவரோடு வாணிகம் செய்பவர்

களுக்கு அதனால் ஏற்படும் இழப்புக்குப் பொறுப்பாளியாவார். இங்கு டெர்ரி v. பீக் வழக்கில் சொல்லப்பட்ட விதி பொருந்தாது.

(6) சில சமயங்களில் பொய்யான தகவல் மோசடியாக இல்லாவிட்டாலும் முரண்தடை (estoppel) காரணமாகத் தீங்கீடு பெறவேண்டிய பொறுப்பேற்படலாம். எடுத்துக்காட்டாக, ஒரு கம்பெனி மோசடியாக உரிமை மாற்றம் செய்யப்பட்ட பங்கிஞப் பதிவு செய்வதாக வைத்துக்கொள்வோம். அப்போது அந்தக் கம்பெனி வழங்கிய பங்குச் சான்றிதழிஞ (share certificate) நம்பி ஒருவர் பங்கு வாங்கினால், அந்தக் கம்பெனி தான் வழங்கிய சான்றிதழ் உண்மையன்றென்றும், வாதிக்கு அதில் உரிமை யில்லை என்றும் சொல்ல அனுமதிக்கப்படமாட்டாது (ரி பாகியா v. சான்பிரான்ஸிஸ்கோ இரயில்வே).

(7) நாடாளுமன்றத்தால் இயற்றிய சட்டப்படி சிலவற்றில் சரியான தகவல் கொடுக்க வேண்டிய கடமை விதிக்கப்படலாம். டெர்ரி v. பீக் தீர்ப்பிஞத் தொடர்ந்து இங்கிலாந்தில் நாடாளு மன்றம் இயக்குநர்களின் பொறுப்புச் சட்டத்தை 1890-ல் (Director's Liability Act, 1890) இயற்றியது. ஒரு கம்பெனியின் இயக்குநர்கள் தாங்கள் வெளியிட்ட திட்ட விளக்க அறிவிப்பில் தவருன தகவல்களைக் கவனமின்றிச் சொல்லியிருந்தால், அதை நம்பி நடந்து இழப்பிஞ எய்துபவர்களுக்குத் தீங்கீடு தர வேண்டும். இது கம்பெனிகளின் சட்டத்திலும் சொல்லப் பட்டுள்ளது.

50. தீங்கான பொய்ம்மை

(Injurious falsehood)

ஏமாற்றுதல் என்பது எதிர்வாதி வாதியிடமே பொய்யான கூற்று ஒன்றைச் சொல்லி, அவர் தடக்கு இழப்பு ஏற்படுமாறு நடக்கும்படி செய்யத் தூண்டுதல் என்று கண்டோம். தீங்கான பொய்ம்மை என்பது வாதியைப்பற்றிய பொய்யான கூற்றினைப் பிறரிடம் எதிர்வாதி சொல்லி, அவர்கள் அதை உண்மையென நம்பி நடப்பதால் வாதிக்கு இழப்பினை ஏற்படுத்துவதாகும். ஏமாற்றுதலில், வாதியிடமே பொய்யான கூற்றினை எதிர்வாதி சொல்கின்றான். தீங்கான பொய்ம்மையிலோ வாதியைப்பற்றி எதிர்வாதி பொய்யான தகவலைச் சொல்கின்றான்.

ஒருவரைப் பற்றியோ அவரது சொத்தைப்பற்றியோ தீங்கெண்ணத்துடன் பொய்யான தகவல் ஒன்றினைக் கேட்டவர்கள் ஏமாறி அவருக்கு இழப்பு ஏற்படுமாறு நடந்துகொள்ளலாம். இவ்வாறு இழப்பினை அடைந்தவர் அதற்காகப் பொய்யான தகவலைச் சொன்னவர்மேல் வழக்கிடலாம். தீங்கான பொய்ம்மையிலும் அவதூறிலும், வாதிக்கு ஊறு விளைவிக்கக்கூடிய தகவலை எதிர்வாதி கூறுகிறான். ஆனால், அவதூறில் வாதியின் புகழுக்கு ஊறு ஏற்படுகிறது. தீங்கான பொய்ம்மையில், வாதியின் புகழ் தாக்கப்படுவதில்லை. தீங்கான பொய்ம்மைக்கு எதிர்வாதியைப் பொறுப்பாளியாக்க வேண்டுமானால், அவன் வாதியைப்பற்றிய தகவலைத் தீங்கெண்ணத்துடன் சொல்லியிருக்க வேண்டும். தீங்கான பொய்ம்மையின் விளைவாக வாதியின் பொருளாதார நலன் பாதிக்கப்படுகிறது.

தீங்கான பொய்ம்மையின் முக்கியமான வகைகளாக (1) சொத்துரிமை பற்றிய பொய்ம்மை(Slander of Title), (2) வாணிகப் போலி (Pssing off). (3) மற்றவரது வாணிகப் பெயரை முறையின்றி ஒருவர் தம்முடைய வாணிகத்திற்குப் பயன்படுத்துதல் போன்றவற்றைச் சொல்லலாம்.

சொத்துரிமை பற்றிய பொய்ம்மைக்கு எடுத்துக்காட்டாக, ஏலத்தில் விற்கப்படும் வாதியின் சொத்தை எதிர்வாதி தம்முடைய தென்றே, வேறு ஒருவருடையதென்றே பொய்யாகச் சொல்லி விற்பனையை நிறுத்துமாறு செய்தலையும், வாதி விற்கின்ற சரக்குகள், புனைபொருள் அல்லது ஆக்குபொருள் உரிமையையோ (Patents) பதிப்புரிமையையோ (Copy right) மீறி விற்கப்படுபவை என்று பொய்யுரைப்பதையும் கூறலாம். இதன் விளைவாக வாதியின் தொழில் பாதிக்கப்படும். அவனுக்குப் பொருள்நட்டம் ஏற்படும். இதைத் தவிர வாதி உற்பத்தி செய்து சந்தையில் விற்கும் சரக்குகள் கீழ்த்தரமானவை என்று எதிர்வாதி பொய்யாகத் தீங்கெண்ணத்துடன் கூறி வாதியின் வாணிகத்தைப் பாதிக்கும் செயலும் தீங்கான பொய்ம்மையே. ஆனால், ஒருவர் தாம் விற்கும் சரக்குகள் தம்மோடு போட்டியிடும் வணிகருடைய சரக்குகளைவிடச் சிறந்தவை என்று தீங்கெண்ணத்துடன் சொல்லியிருந்தாலும் அதற்காக வழக்கிட முடியாது. இது தீங்கான பொய்ம்மைக்கு ஒரு விதிவிலக்காகும். ஏனென்றால், இதற்காக வழக்கிட அனுமதித்தால் வணிகர்கள் தம்முடைய பொருள்களுக்கு விளம்பரம் செய்யும் குறுக்கு வழியாக வழக்கினைப் பயன்படுத்தி விடுவார்கள்.

இவற்றைத் தவிர எதிர்வாதி நியாயமான காரணமோ, முகாந்தரமோ இல்லாமல் ஒருவனுக்கு இழப்பு அல்லது ஊறினை ஏற்படுத்தியிருந்தாலும் அதற்காக அவர் வழக்கிடலாம். ரேட்கிளிஃப் v. இவான்ஸ் (Ratcliffe v. Evans) வழக்கில், எதிர்வாதி ஒரு செய்தித்தாளில் வாதி வாணிகம் செய்வதை நிறுத்தி விட்டார் என்று பொய்யாக, வேண்டுமென்றே ஒரு செய்தியை வெளியிட்டிருந்தார். இதன் விளைவாக வாதியின் வாணிகம் பெரிதும் பாதிக்கப்பட்டது. இதற்காக வாதி எதிர்வாதிமீது வழக்கிட்டதில் எதிர்வாதி தீங்கீடு தரவேண்டும் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது. கேசி v. ஆர்னுட் (Casey v. Arnott) வழக்கில், வாதியின் கப்பல் கடல்பயணத்திற்குத் தகுதியற்றது என்று எதிர்வாதி பொய்யாகக் கூறியதன் விளைவாக அக் கப்பலின் மாலுமிகள் அதிலேறிக் கடலில் செல்ல மறுத்தனர், இதற்கு எதிர்வாதி பொறுப்பாளி என்று கருதப்பட்டார்.

தீங்கான பெரும்பான்மைக்காக இடப்படும் வழக்கில் நிவாரணங்களாகக் கிடைப்பனவற்றுள் தீங்கீட்டைவிட, உறுத்துக்கட்டளையையும் உரிமையைச் சுட்டும் விளம்புவகைத் தீர்ப்பையும் முக்கியமாகச் சொல்லலாம்.

சொத்துரிமை அல்லது வாணிகச் சரக்குப்பற்றிய தீங்கான பொய்ம்மையில் பின்வரும் கூறுகளை வாதி நிரூபிக்கவேண்டும்:

(1) எதிர்வாதியின் கூற்று அல்லது தகவல் பொய்யானதாக இருக்க வேண்டும். எதிர்வாதி சொன்ன தகவல் பொய் என்றும், உண்மை அல்லவென்றும் வாதிதான் நிரூபிக்கவேண்டும். எதிர்வாதி வெளியிடும் தகவல் வாய்மொழியாகவோ, எழுத்து வடிவிலோ அமைந்திருக்கலாம்.

(2) இவ்வாறு எதிர்வாதி பொய்யான தகவல் வெளியிட்டதால் வாதியின் சொத்துக்கோ, வாணிகத்திற்கோ பங்கம் அல்லது கேடு ஏற்பட்டிருக்க வேண்டும். இதன் விளைவாக வாதியின் புகழுக்கு இழுக்கு ஏற்பட்டிருந்தால் அவன் அவதூறுக்காகவும் வழக்கிடலாம். ஆனால், எதிர்வாதி தன்னுடைய வாணிகச் சரக்கினைப்பற்றி உயர்வாகச் சொல்ல அவனுக்கு உரிமையுண்டு. எடுத்துக்காட்டாக, கடைவீதியில் விற்கப்படும் சரக்குகளிலேயே தன்னுடையதே மிகச் சிறந்தது என்றோ வாதியின் சரக்கினை விடத் தன்னுடையது உயர்ந்தது என்றோ அவன் சொல்லலாம். இது தீங்காகாது. வாடிக்கையாளர் எவரும் இதை அப்படியே நம்பிவிடுவதில்லை. அவர்கள் தாமே ஒரு முடிவுக்கு வந்து சரக்கினை வாங்குகிறார்கள். ஒயிட் v. மெல்லின் (White v. Mellin) வழக்கில் மருந்துக்கடைக்காரராகிய எதிர்வாதி தம்முடைய கடையில் விற்கப்பட்ட வாதியின் 'மெல்லின்ஸ் உணவு' புட்டிகளின்மீது ஒட்டப்பட்ட தாள்களில் எதிர்வாதியின் குழந்தை உணவு வேறு எந்தத் தயாரிப்புகளையும்விட அதிகச் சத்துள்ளது என்றும், உடல் நலத்துக்கு உகந்தது என்றும், அதையே மக்கள் வாங்க வேண்டும் என்றும் அனுமதியின்றிக் கூறியிருந்தார். இதற்கு எதிர்வாதி பொறுப்பாளி அல்லரென்று தீர்ப்பளிக்கப்பட்டது. ஆனால், அவர் வாதியின் பொருள்களைப்பற்றிப் பொய்யான தகவல் எதையாவது வெளியிட்டிருந்தால் பொறுப்பாளியாவார்.

(3) எதிர்வாதி வேண்டுமென்றே இந்தப் பொய்யான தகவல் வெளியிடப்பட்டதன் நேரடி விளைவாக வாதிக்குத் தனித்த நட்டம் ஏற்பட்டிருக்க வேண்டும். எடுத்துக்காட்டாக, அவனது வாணிகம் பாதிக்கப்பட்டிருக்கலாம்; அவன் தன்னுடைய வாடிக்கையாளரை இழந்திருக்கலாம்; அவனுடைய வாழ்க்கைத் தொழில், பணி அல்லது அலுவல் பாதிக்கப்பட்டிருக்கலாம்; அவனுடைய வருமானம் குறைந்துபோய் இருக்கலாம்; அவன் தனது உரிமையைக் காப்பதற்காகச் செலவு செய்ய நேரிட்டிருக்கலாம்.

பேரட் v. அசோசியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் (Barrett v. Associated News Papers Ltd.) வழக்கில், 'டெய்லி மெயில்' செய்தித்தாளில் வாதியின் வீட்டில் ஒரு கிழவனின் ஆவி நடமாடுவதாகச் செய்தி வெளியிடப்பட்டிருந்தது. வாதி தம்முடைய வீட்டில் பேய் இருப்பதாகச் சொல்லப்பட்டதால் தம்முடைய சொத்திற்கு உள்ள புகழ் பாதிக்கப்பட்டதாகக் கூறிச் சொத்துரிமைபற்றிய பொய்ம்மைக்காக வழக்கிட்டார். இந்தச் செய்தி செய்தித்தாளில் வெளியிடப்படுவதற்கு முன்பு நெடுங்காலமாகவே அந்த வீட்டில் பேய் உலவுவதாகப் பரவலாக நம்பப்பட்டது. இவ் வழக்கில் வாதி தனக்குத் தனித்த நட்டம் ஏற்பட்டதென நிரூபிக்க முடியாததால் தோல்வியுற்றார். இதைப் போன்ற சூழ்நிலைகளில் ஒருவன் தனக்குத் தனித்த நட்டம் ஏற்பட்டதென்று நிரூபிப்பது சான்றியலில் உள்ள விதிகளால் முடியாததாகும். எனவே, இக்குறையைப் போக்க இங்கிலாந்தில் இயற்றப்பட்ட அவதூறுச் சட்டம், 1952-ல் வழி செய்துள்ளது. அவதூருக்குக் கருதப்படும் கூற்று வாதிக்குப் பொருள் நட்டம் ஏற்படுத்துவதாக அமைந்து, அது எழுத்து மூலமாகவோ நிலையான வடிவத்திலோ இருப்பின் தனித்த நட்டம் ஏற்பட்டதெனக் கூறும் வாதி அதை நிரூபிக்கத் தேவையில்லை.

(4) எதிர்வாதியின் கூற்றுத் தீங்கெண்ணத்துடன் வெளியிடப்பட்டிருக்க வேண்டும். அதாவது அவன் நேர்மையற்ற நோக்கத்துடனே, முறையற்ற நோக்கத்துடனே அந்தப் பொய்யான கூற்றினைச் சொல்லியிருக்க வேண்டும். எதிர்வாதிக்குத் தீங்கெண்ணம் இருந்தது என்று வாதிதான் நிரூபிக்க வேண்டும். ஆனால், ஒருவன் தன்னுடைய நலன்களைக் காப்பதற்காக ஒரு வாணிகச் சரக்கில் தனக்குரிமை உள்ளதென்று நல்லெண்ணத்துடன் நம்பி அதைச் சொல்லியிருந்தால், அது தவருக இருந்தாலும் தீங்கெண்ணம் உடையது என்று கருதப்படாது.

வாணிகப் போலி (Passing off)

வாணிகப் போலி என்பது எதிர்வாதி தான் விற்கும் வாணிகச் சரக்கினை உண்மைக்கு மாருக வாதியினுடையவை என்று சொல்வதாகும். இவ்வாறு எதிர்வாதி தன்னுடைய விற்பனையைப் பெருக்கத் தன்னுடைய சரக்குகளை மற்றவருடைய சரக்குகள் என்று சொல்வது தீங்காகக் கருதப்படுகிறது. இவ்வாறு முறையற்ற வழிகளில் தீங்கிழைப்பதற்கு எடுத்துக்காட்டுகளாக, வாதி விற்கும் சரக்குகளுக்கும், செய்யும் வாணிகத்துக்கும் தந்துள்ள பெயரையும், வாணிகக் குறியையும் விளக்கத்தையும் எதிர்வாதி தன்னுடைய சரக்குகளுக்கும் வாணிகத்திற்கும் பயன்படுத்தி

அவை வாதியினுடையவை என்று மக்கள் ஏமாறச் செய்தலேச் சொல்லலாம். இவ்வாறு எதிர்வாதி செய்தால் வாணிகப் போலி எனும் தீங்கை அவர் இழைத்ததாகக் கருதி அவர்மேல் வழக்கிடலாம். ஒருவர் தம்முடைய சரக்கை மற்றவருடையது என்று சொல்ல அவருக்கு உரிமை இருக்க முடியாது. ஒருவருடைய சரக்கை மற்றவருடைய பொருள் என்று சொல்வதும், ஒருவருடைய வாணிகத்தை மற்றவருடையது என்று காட்டுவதும் தீங்கான பொய்ம்மைக்கு முக்கியமான எடுத்துக் காட்டுகளாகும். வாணிகப் போலியின் சாரம் என்னவென்றால் எதிர்வாதியின் சரக்குகள் தம்மைப்பற்றி ஒரு பொய்யினைச் சொல்லுகின்றன. அதாவது, மற்றவர்களை ஏமாற்றும் நோக்கத்தோடு ஒன்றினைச் சொல்கின்றன எனலாம். இந்த வாணிகப் போலியின் விளைவாக ஒரு வணிகர் தாம் பாடுபட்டுச் சேர்த்த வாணிகப் புகழின் பயனை மற்றவர் ஏமாற்றும் வழிகளைக் கையாண்டு தட்டிச் செல்கிறார். எனவே, சட்டம் இத்தகைய முறையற்ற வாணிகப் போட்டியிலிருந்து வணிகரைக் காக்கின்றது.

இனி, வாணிகப் போலியின் மற்ற வகைகளைப்பற்றிக் காண்போம்.

(1) எதிர்வாதி தான் செய்யும் தொழில் அல்லது விற்கும் சரக்கு வாதியினுடையவை என்று நேரடியாகவே சொல்லுவது. இதற்கு எடுத்துக்காட்டாகப் பின்வரும் வழக்கைச் சொல்லலாம். பைரன் v. ஜான்ஸ்டன் (Byron v. Johnston) வழக்கில் புகழ்பெற்ற ஆசிரியர் ஒருவரின் பெயரை அவர் எழுதாத ஒரு நூலின் தலைப்பில் குறிப்பிட்டு அதை அவர் எழுதிய நூல் என்று விற்றல் அவர் வழக்கிடலாம் என்று கூறப்பட்டது.

(2) மக்கள் ஏமாறும் வண்ணம் வாதி வாணிகம் செய்யும் பெயரோடு நெருங்கிய முறையில் வைத்திருக்கும் பெயரை வைத்துக்கொண்டு எதிர்வாதி வாணிகம் செய்தல். ஹென்ரிக்ஸ் v. மாண்டேகு (Hendriks v. Montagu) வழக்கில் யுனிவர்சல் லூப் அஷ்யூரன்ஸ் சொசைட்டி என்ற பெயரில் ஒரு கம்பெனி பதிவு செய்யப்பட்டிருந்தது. அதற்குப் பின்னர்க் கூட்டுறவாக்கம் (Incorporation) பெற்ற ஒரு கம்பெனி யூனிவர்சல் லூப் அஷ்யூரன்ஸ் அசோசியேஷன் என்ற பெயரில் தொழில் செய்வதைத் தடுக்க யுனிவர்சல் லூப் அஷ்யூரன்ஸ் சொசைட்டி உறுத்துக் கட்டளை பெற்றது. ஏனென்றால், இரண்டாவதாக உருவான கம்பெனி முதலில் ஏற்பட்ட கம்பெனியின் பெயரை மிகவும் ஒத்திருந்ததால் மக்கள் ஏமாற வாய்ப்புண்டு.

(3) வாதியால் விற்கப்படும் சரக்குக்கு உரிய வாணிகப் பெயரிலோ அதைப் போன்றதொரு பெயரிலோ எதிர்வாதி தமது சரக்கை வாதியினுடையவை என்று மக்கள் தவருகக் கருதுமாறு விற்பனை செய்தல்.

வாணிகப் பெயர் என்பது ஒருவர் தாம் விற்கும் சரக்குக்கும் உற்பத்தி செய்கின்ற சரக்குக்கும் வைத்துள்ள பெயராகும். இது நாளடைவில் பழக்கத்தின் காரணமாக அந்த வாணிகச் சரக்கு யாருடையது என்று மக்களுக்கு நன்கு அறிமுகமாகிவிடுகிறது. இக் கொள்கை வெறும் வாணிகத்திற்கு மட்டும் பொருந்துவதில்லை. ஒரு பாடகர் அல்லது ஓவியர், அல்லது ஓர் எழுத்தாளர் ஒரு குறிப்பிட்ட பெயரில் மக்களுக்கு அறிமுகமாகியிருந்தால் அது அவருக்குத் தொழில் மூலதனமாக ஆகிவிடுகிறது. அப் பெயர் தமக்கே உரியது என்றும், அதை மற்றவர் வைத்துக்கொண்டதால் தமக்கு ஊறு ஏற்பட்டதென்றும் கூற அவருக்கு உரிமையுண்டு. ஆனால், அவர் வேறு எதற்கும் யாரும் பயன்படுத்த முடியாதவாறு ஒரு கற்பனைப் பெயர் அல்லது புனைபெயர் தமக்கே உரியது என்று உரிமை கொண்டாட முடியாது. எடுத்துக் காட்டாக ஒரு வழக்கில் பி. பி. சி. வானொலியில் குழந்தைகள் வேளை நிகழ்ச்சியை நடத்திய 'மேக்மாமா'வுக்கும், 'மேக் மாமா'வின் கோதுமைப் பொரி விற்பனை செய்த எதிர்வாதிகளுக்கும் பொதுவான நடவடிக்கை எல்லை எதுவும் இல்லை. அவர்கள் இருவரும் ஈடுபட்டுள்ள தொழில்கள் வெவ்வேருனவை. எனவே, எதிர்வாதியின் நடவடிக்கையால் வாதிக்குத் தனித்த இழப்பு ஏற்பட்டதென்று சொல்லமுடியாது. எதிர்வாதியின் நடவடிக்கையால், அவரது தொழில், வாணிகம் ஆகியனவற்றை வாதியினுடையவையோ என்று மக்கள் குழப்பம் அடையுமாறு செய்திருந்தால் தான் வாதிக்கு இழப்பு ஏற்படும். ஒரு நடிகருக்கு அவருடைய குரல் அவருக்கே உரிமையுள்ள சொத்தாகக் கருதப்படும். எனவே, அவரைப் போலவே குரலை மாற்றிப்பேசி எதிர்வாதி ஒரு நிகழ்ச்சியை நடத்தியிருந்தால் அதனால் வாதிக்கு இழப்பு ஏற்படும். அப்போது அவர் எதிர்வாதியின்மேல் வழக்கிடலாம்.

(4) வாதியின் வாணிகக் குறியையே தன்னுடைய பொருளுக்கும் எதிர்வாதி பயன்படுத்திச் சரக்கை விற்றல். வாணிகக் குறி என்பது ஒரு சரக்கை உற்பத்தி செய்பவரோ விற்பவரோ அதை மற்றவர்களுடைய சரக்கில் இருந்து வேறுபடுத்திக் காட்டுவதற்குப் பயன்படுத்தும் குறியாகும். இது நிலைபெற்று, வழக்கத்தால் அவருடைய வாணிகக் குறியென்று மக்களால் கருதப்படுகிறது. இது பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும். வாணிகச்

சின்னங்கள் சட்டப்படி (Trade Marks Act) பதிவு செய்யப்பட்ட வாணிகக் குறியைப் பிறர் பயன்படுத்தினால் அதற்குரியவர் வழக்கிடலாம். ஆனால், இவ்வாறு வாணிகச் சின்னங்கள் சட்டப்படி பதிவு செய்யப்படாத சின்னத்தை ஒருவர் பயன்படுத்தினால் அவர் அதை மற்றவர்கள் பயன்படுத்துவதற்கு எதிராக வாணிகக்குறிகள் சட்டத்தின்கீழ் வழக்கிடமுடியாது. ஆயினும், இச் சட்டம் வாணிகப் போலிக்காகத் தீங்கியலில் வழக்கிடும் உரிமையைப் பாதிக்க வில்லை.

(5) மக்களை ஏமாற்றுவதற்காக வாதியின் சரக்கினுடைய தோற்றமும் அமைப்பும் மட்டுமே ஒத்த, அகப்பண்பற்ற போலிச் சரக்கினை விற்பனை செய்தல். வாதியின் சரக்கு, தோற்றத்திலோ அமைப்பிலோ அவருடைய விற்பனைப் பொருள் அது என்று காட்டக்கூடிய தனித்தன்மை கொண்டதாக இருந்து, அதைப் பார்த்ததும் அது வாதியின் சரக்கே என்று சொல்லக் கூடியதாக இருந்தால், எதிர்வாதி ஏமாற்றும் நோக்கத்துடன் அந்தச் சரக்கின் தோற்றமும் அமைப்பும் கொண்டுள்ள ஒரு போலிச் சரக்குத் தயாரிப்பது தீங்கெனக் கருதப்படும். ஒயிட் ஹட்சன் கம்பெனி லிமிடெட் v. ஆசியன் ஆர்கனேசேஷன் கம்பெனி (White Hudson Co. Ltd. v. Asian Organisation Co.) வழக்கில் 1953ஆம் ஆண்டு முதல் சிங்கப்பூரில் வாதிகளின் இருமல் மருந்து மிட்டாய்கள் சிவப்பு செலோஃபேன் தாளில் சுற்றப்பட்டு, ஹாக்ஸ் (Hacks) என்ற பெயர் எழுதப்பட்டு விற்பனையாகி வந்தன. 1958-ல் அதைப்போலவே இருந்த தாளில் எதிர்வாதிகள் பெக்டோ (Pecto) என்ற சொல்லுடன் சிங்கப்பூரில் இருமல் மருந்து மிட்டாய் விற்கத் தொடங்கினர். சிங்கப்பூரில் இதை வாங்குபவர்களின் பெரும்பான்மையினருக்கு ஆங்கிலம் படிக்கத் தெரியாது என்பதும், 1958ஆம் ஆண்டு அளவில் மக்கள் சிவப்புத்தாள் இருமல் மருந்து மிட்டாய் வேண்டுமென்று கேட்டு வாங்கும் வழக்கத்தைப் பெற்றிருந்தனர் என்பதும் நிரூபிக்கப்பட்டது. 1953-க்குமுன் சிவப்புச் செலோஃபேன் தாள் சுற்றிய இருமல் மருந்து மிட்டாய்கள் சிங்கப்பூரில் விற்கப்பட வில்லை. 1953முதல் 1958 வரை வாதிகளின் இருமல் மருந்து மிட்டாய்தான் அவ்வாறு விற்கப்பட்டது. அதைக் கருத்தில் கொண்டு பிரிவிகவுன்சில், வாதிகளின் இருமல் மருந்து மிட்டாயிலிருந்து தங்களுடையதை வேறுபடுத்திக் காட்டாமல், 'பெக்டோ'த் தாளுடன் இருமல் மருந்து மிட்டாய் எதிர்வாதிகள் விற்பனை செய்யாமல் இருக்க உறுத்துக்கட்டளை பிறப்பித்தது. எதிர்வாதி வேண்டுமென்றே ஒரு பணியிலோ செய் முறையிலோ வாதியின் சின்னமுள்ள பொருளைப் பயன்படுத்தியிருக்கலாம். எதிர்வாதி

வாதியிடம் அனுமதி பெருமல் அவருடைய சின்னமுள்ள பொருளைச் செயல்முறையில் பயன்படுத்தினால் தீங்காகும். பழைய சரக்கினைப் புதிய சரக்கென்று விற்றாலும் அது பொய்ம்மையே யாகும்.

வாணிகப் போலியால் வாதிக்குள்ள சொத்துரிமை பாதிக்கப்படுகிறது. அந்தச் சொத்துரிமை என்னவென்றால் மக்களுடைய ஆதரவால் அவருடைய வாணிகத்திற்குக் கிடைத்துள்ள நற்பெயரைக் காத்துக்கொள்ளும் உரிமை ஆகும்.

வாணிகப் போலியால் நட்டமுறும் வாதி (1) உறுத்துக் கட்டளை மற்றும் (2) தீங்கீடு அல்லது எதிர்வாதிக்குக் கிடைத்த இலாபத்திற்குக் கணக்கு கேட்பது ஆகிய நிவாரணங்களில் ஒன்றைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். இழப்போ இழப்பேற்படும் வாய்ப்போ ஏற்பட்டுள்ளதென வாதி நிரூபிக்கவேண்டும். எதிர்வாதியின் செயல் வாணிக நடைமுறையில் மக்களை ஏமாற்றக் கூடிய இயல்புடையது என்று வாதி நிரூபித்தால் போதும். ஒருவர் சரக்கை வேறு ஒருவருடையதென்னும் பொய்க்கூற்றே இத்தீங்கின் சாரம். எதிர்வாதி வாணிகப்போலி செய்து ஒரு சரக்கை உண்மையில் விற்காவிட்டாலும், அவர் விற்க முனைந்ததற்காக அவர்மேல் வழக்கிடலாம். அவருடைய செயலால் மக்கள் ஏமாறக்கூடுமா என்றறிய நாம் வரையளவாகக் கொள்வது சாதாரண, விவரம் தெரியாத, கவனமில்லாத பொதுமக்களையே, பொருள்களை வாங்குவதில் மிகவும் திறமை உள்ளவர்களையன்று.

ஒத்த பெயர்களைப் பயன்படுத்துவதால் நேரும் குழப்பம்

ஒரு பெயர் முதலில் ஒன்றின் விளக்கமாக இருந்து அதை யார் வேண்டுமானாலும் பயன்படுத்தக்கூடிய நிலையில் இருக்கலாம். பின்னர் இது மாறி வாதியின் சரக்கை மட்டுமே குறிப்பிடப் பயன்படுத்தப்பட்டு அதன் வாணிகப் பெயராக இரண்டாவது பொருளைப் பெறக்கூடும். அப்போது மற்ற வாணிகப் பெயர்களைப் பொறுத்து ஏற்பட்டுள்ள விதிகள் இதற்கும் பொருந்தும். அப்போது மற்றவர் அதைப் பயன்படுத்த முடியாது. மக்கள் ஏமாற்றப்படுவதைத் தடுக்கப் போதிய முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்காவிட்டால் அவர் பொறுப்பாளியாவார். எடுத்துக்காட்டாக, ஒட்டக மயிர் வார் (Camel hair belting) என்ற சொற்றொடர் வாதியின் சரக்கிற்கு மட்டுமே பயன்படுத்தப்பட்டு வந்ததால், ஒட்டக மயிரால் செய்யப்பட்ட வார் என்று பொதுவாகக் குறிப்பிடாமல், வாதியினால் செய்யப்பட்ட வாரையே குறிப்பிடுவதாகப் பொருள் கொண்டது என்று ரெட்டவே v. பென்ஹேம் (Reddaway v. Ben-

ham) வழக்கில் தீர்ப்பளிக்கப்பட்டது. எனவே, மக்கள் ஏமாறுமல் இருக்கப் போதிய எச்சரிக்கை நடவடிக்கை எடுக்காமல் அப் பெயரை மற்றவர் பயன்படுத்தக் கூடாது.

சேல்ஸ் அஃபிலியேடட் லிமிடெட் v. லிஜீன் லிமிடெட் (Sales Affliates, Ltd. v. Le Jean) வழக்கில், வாதி ஜமால் நிலை யான முடி அலைகளுக்கான (Jamal Hair Wave) கருவிகளையும் பொருள்களையும் விற்றனர். முடி அலங்கரிக்கும் கலைஞர்களாகிய எதிர்வாதிகள் அவர்களுடைய வாடிக்கையாளர் ஜமால் முடி அலை செய்யுமாறு கேட்டபோது வாதியின் பொருள்கள் அல்லாதன வற்றைப்பயன்படுத்தி எதிர்வாதிகள் தங்கள் செய்முறை, வாதியின் வாணிக நற்பெயரோடு இணைந்துள்ளதென்றும், தொடர்புள்ளது என்றும் பொய்கூறி அதைப் பயன்படுத்தியதால் வாதிக்கு இழப்பு ஏற்பட்டது. ஒரு சரக்கிற்கு இரண்டாவது பொருள் உண்டென்று நிரூபிப்பது எளிதன்று. ஒரு மொழியில் பொதுவாகப் பயன் படுத்தப்படும் சொற்களை ஒரு குறிப்பிட்ட நபருடைய தொழிலுக்கு மட்டுமே உரியதாக ஆக்க நீதிமன்றங்கள் எளிதில் இணங்குவ தில்லை.

மாறுக, ஒரு சரக்கின் வாணிகப் பெயர் பொதுவாக அனை வராலும் பயன்படுத்தப்பட்டு, ஒரு குறிப்பிட்ட நபரின் சரக்கு அது என்று குறிப்பாகச் சொல்லமுடியாமல் போகலாம். அது விளக்கப் பெயராகவும், அனைவருக்கும் உரியதாகவும் ஆகலாம். எடுத்துக் காட்டாக, லீபிக்ஸ் எக்ஸ்ட்ரேக்ட் ஆஃப் மீட் (Liebig's Extract of Meet) என்பது லீபிக் என்பவரோ அவரிடமிருந்து உரிமை பெற்றவரோ தயாரிக்கும் இறைச்சியுணவைக் குறிக்க வில்லை. இதில் எதிர்வாதி அச் சொற்றொடர் சின்னம் அல்லது குறி அதன் முதற்பொருளை இழந்துவிட்டது என்றும், அப் பெய ரைப் பயன்படுத்துவதால் வாங்குபவர் ஏமாறமாட்டார் என்றும் நிரூபிக்க வேண்டும்.

வாதியும் எதிர்வாதியும் போட்டியாக வாணிகத்தில் ஈடுபட்ட வர்களாக இருக்க வேண்டும் என்பதில்லை. ஒரு வழக்கில் எதிர் வாதி 'தி டைம்ஸ்' (The Times) செய்தித்தாள் நிறுவனத்தைத் தம்முடைய மிதிவண்டி வாணிக நிறுவனத்தின் முதல்வர் அல்லது தம்முடைய வாணிகக் கூட்டாளி என்று பொய்யாகக் கூறியதற் காக உறுத்துக்கட்டளை பிறப்பிக்கப்பட்டது. ஒரு வங்கி தன்னு டைய பெயரில் எதிர்வாதி வட்டித் தொழில் தொடங்குவதை எதிர்த்து வழக்கிட்டார். ஏனெனில், அதனால் மக்கள் தம்மையும் வட்டித்தொழில் செய்பவர் என்று கருத நேரும் என்றும், தம்

முடைய புகழுக்கு இழுக்கு நேரும் என்றும் வாதி கூறி, அந்தப் பெயரை எதிர்வாதி வைப்பதைத் தடுக்க நீதிமன்றத்தின் உத்தரவைப் பெற்றது (ஹெர்ராட்ஸ் லிமிடெட் (v. V. R. ஹெர்ராட்ஸ் லிமிடெட்). எதிர்வாதியின் நடத்தையினுல் வாதியின் புகழ் குலையும் என்ற காரணத்திற்காக மட்டுமல்லாமல், வாதி பணமும், காலமும் செலவழித்து ஈட்டிய புகழையும், நற்பெயரையும் எதிர்வாதி செலவு செய்யாமல் அடைவதையும், இந்த நடத்தை சட்டத்திற்கு ஒவ்வாதது என்பதையும் கருத்தில்கொண்டு நீதிமன்றம் எதிர்வாதிக்கு எதிராகத் தீர்ப்பு வழங்குகின்றது. இதே காரணத்தினுல்தான் 'கோடாக்' புகைப்படக் கருவிகள் உற்பத்தியாளராகிய வாதிகள், எதிர்வாதிகள் தமது மிதிவண்டிகளுக்குக் 'கோடாக் மிதி வண்டிகள்' என்று பெயரிடுவதைத் தடுக்க உறுத்துக்கட்டளை பெற்றனர். (ஈஸ்ட்மென்ஃபோட்டோ கிராபிக் மெட்டீரியல்ஸ் கம்பெனி லிமிடெட் v. ஜான் கிரிஃபித்ஸ் சைக்கிள் கார்ப்பரேஷன்லிமிடெட் & கோடாக் சைக்கிள் கம்பெனி லிமிடெட்.)

ஒருவர் தமது சொந்தப் பெயரில் வாணிகம் செய்கிறார் என்று வைத்துக் கொள்வோம், அதே பெயரையோ, அதையொத்த பெயரையோ கொண்டுள்ள வேறு ஒரு நபரும் அப் பெயரிலேயே வாணிகம் செய்தால் குழப்பமேற்படும். வாடிக்கையாளர் ஏமாற வாய்ப்புண்டு. ஆனுல், இம் முறையில் குழப்பம் ஏற்பட்டாலும், தமது சொந்தப் பெயரிலேயே வாணிகம் செய்ய அவருக்குரிமை உண்டு. ஒருவர் 'ஸ்ட்ரீட்லண்ட்ஸ்' என்ற தந்திமுகவரியை அப்படியே ஒரு வங்கி பயன்படுத்துவதைத் தடுக்க உறுத்துக்கட்டளை பெற முடியவில்லை (ஸ்ட்ரீட் v. யூனியன்பேங்க் ஆஃப் ஸ்பெயின்). இதனுல் நேரக்கூடிய குழப்பத்தைத் தவிர்க்கவோ, குறைக்கவோ அவர் எந்தத் தனிப்பட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கையும் எடுக்கத் தேவையில்லை. ஆறுமுகம் என்ற பெயர் கொண்ட இரண்டு மளிகைக் கடைக்காரர்கள் இருந்தால் இருவருக்கும் அப் பெயரிலேயே வாணிகம் செய்ய உரிமையுண்டு. முதலில் வாணிகத்தைத் தொடங்கியதாலேயே ஒருவருக்கு அப் பெயரில் முதல் உரிமையும், தனியுரிமையும் ஏற்பட்டுவிடாது. ஒருவருடைய வாணிகமும் மற்றொருவருடைய வாணிகமும் இந்த முறையில் ஒத்திருப்பதால் குழப்பம் ஏற்படலாம். இதனுல் ஒருவர்க்கு வசதிக் குறைவேற்படலாம். ஆயினும், அவர் நீதிமன்றத்தில் இதற்காக வழக்கிடமுடியாது. ஒரு பெயரை அல்லது குடும்பப் பெயரை ஒருவருடைய சொத்தாகச் சட்டம் கருதாது. ஆனுல், ஒருவன் தன்னுடைய இயற்பெயரல்லாத வேறு ஒரு பெயரில் அழைக்கப்படுவானுயின் அவன் அப் புகழ் காரணமாக இரண்டாவது பெயர் ஒன்றைப் பெறக் கூடும். அப்போது நேர்மை

யான முறையில் அவன் அப் பெயரைப் பயன்படுத்துவதைத் தடுக்க முடியாது (ஜேய்ஸ், லிமிடெட்டு v. ஜேகோபி - Jays Ltd v. Jacobi). எதிர்வாதி ஒரு பெண்கள் உடை தயாரிக்கும் கடையில் மேலாளராக வேலை பார்த்து வந்தாள். 15 ஆண்டுகளாக அவள் செல்வி ஜே (J) என்ற பெயரிலேயே அனைவராலும் அழையப்பட்டு இருந்தாள். அப் புகழ் காரணமாக அவளுக்கு அப் பெயர் நிலைத்து விட்டதால் அப் பெயரை அவள் பெற்றுவிட்டாள். எனவே, நேர்மையான முறையில் அப் பெயரில் வாணிகம் செய்யும் உரிமை அவளுக்குண்டு. அப் பெயர் வாதியின் பெயரே போன்று அமைந்திருந்தாலும். வாதி ஒன்றும் செய்யமுடியாது.

மோசடி செய்யும் கருத்தோடு வாணிகத்தில் ஒருவர் பெயரை மற்றொருவர் பயன்படுத்துவதைச் சட்டம் அனுமதிக்காது. மாஸ்ஸாம் v. தோர்லீஸ் கேட்டில் ஃபூட் கம்பெனி (Massam v. Thorley's Cattle Food Company) வழக்கில் ஜோசப் தோர்லீ என்பவர் தாம் இரகசியமாக வைத்திருந்த ஓர் உற்பத்தி முறையின்படி கால்நடைத் தீவனம் தயாரித்து அதைத் 'தோர்லீஸ் ஃபூட் ஃபார் கேட்டில்' என்ற பெயரில் விற்பனை செய்தார். அவர் இறந்தபின்னர் அவர் உயில் வாசக நிறைவேற்றுளர் (Executor) அவ் வாணிகத்தைத் தொடர்ந்து செய்து வந்தனர். அவர் இறந்த சிறிது காலத்தில் மற்றவர்கள் 'ஜே. டபுள்யூ. தோர்லீஸ் கேட்டில் ஃபூட் கம்பெனி' யென்ற பெயரில் ஒரு கம்பெனியை நிறுவினர்கள். அதில் இறந்தவரின் உடன்பிறந்தவராகிய ஜே. டபுள்யூ. தோர்லீ Is பங்கு எடுத்திருந்தார். அவருக்கு அந்தக் கால்நடைத் தீவன உற்பத்தி முறையின் இரகசியம் தெரிந்திருந்தது. எனவே, அக் கம்பெனி அதை நடத்த அவரை வேலைக்கு அமர்த்தியது. அக் கம்பெனி அதே பொருளைத் 'தோர்லீஸ் ஃபூட் ஃபார் கேட்டில்' என்ற பெயரில் விற்றது, எதிர்வாதிகள் தங்கள் கால்நடைத் தீவனத்தை மூல நிறுவனமாகிய ஜோசப் தோர்லீனுடையது என்று மக்கள் கருதாமல் இருக்கத்தக்க நடவடிக்கை எடுக்காமல் தங்கள் கால்நடைத் தீவனத்தை விற்கக் கூடாது என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

உண்மையில் மோசடி எதுவும் செய்யப்படவில்லையென்றால் ஒருவர் வழக்கிட முடியாது. டே v. பிரௌன்ரிக் (Day v. Brownrigg) வழக்கில் 'அ' என்பவரின் வீடு 60 ஆண்டு காலமாக 'ஆஷ்போர்டு லாட்ஜ்' (Ashford Lodge) என்று வழங்கப் பட்டது. அவரது வீட்டுக்கு அருகில் இருந்த வீடு 'ஆஷ்போர்டு வில்லா (Ashford Villa) என்று 40 ஆண்டு காலமாக வழங்கப் பட்டது. அந்த ஆஷ்போர்டு வில்லாவின் சொந்தக்காரர் 'ஆ' என்பவர் தமது இல்லப் பெயரில் 'ஆஷ்போர்டு லாட்ஜ்' என்று

மாற்றினர். இதனால் 'அ'-வுக்கு வசதிக்குறைவும், தொந்தரவும் ஏற்பட்டது. அவர் 'ஆ' தமது இல்லப் பெயரில் இவ்வாறு மாற்றுவதைத் தடுக்க உறுத்துக்கட்டளை வேண்டினர். இவ் வழக்கில் 'ஆ' என்பவருக்குத் தீங்கெண்ணமோ, 'அ'-வுக்கு இழப்பு ஏற்படுத்தும் கருத்தோ உண்டென்று கூறப்படவில்லை. எனவே, நீதிமன்றம் இவ் வழக்கில் உறுத்துக்கட்டளை பிறப்பிக்கவில்லை. ஆனால், இருவரும் போட்டியிடும் வணிகராயின் முடிவு வேறு விதமாக இருந்திருக்கலாம்.

இதைத்தவிரப் பொய்யான கூற்றாலும் வாதிக்கு இழப்பு ஏற்பட வேண்டும் என்று கருதி எதிர்வாதி ஒரு செயலைச் செய்திருந்தாலும் வாதி வழக்கிடமுடியும். எடுத்துக்காட்டாக, ஒரு வழக்கில் வாதியை மணக்க நிச்சயம் செய்திருந்த ஒருவரிடம் எதிர்வாதி சென்று வாதி மணமானவள் என்றும், அவள் தன்னுடைய மனைவி என்றும் பொய்யாகக் கூறியதால் வாதியின் திருமணம் நடைபெறவில்லை. இதற்காக வாதிக்கு எதிர்வாதி தீங்கீடு தரவேண்டும் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது. வேறு ஒரு வழக்கில் வாதியின் கடையில் அவருக்கு உதவியாய் இருந்த அவருடைய மனைவி கற்பிழந்தவள் என்று எதிர்வாதி பொய்யான கூற்றைச் சொன்னதால் வாதியின் வாணிகம் வீழ்ச்சியுற்றது. இதற்கு எதிர்வாதி பொறுப்பாளியாவார் என்று தீர்ப்பளிக்கப்பட்டது. இதைப் போலவே வாதியின் கடையில் பணிபுரியும் ஒருவருக்குத் தொற்று நோய் உள்ளதென்று எதிர்வாதி பொய்யான கூற்றை வெளியிட்டால், அவரிடம் தீங்கீடு கோரி வாதி வழக்கிடலாம்.

51. தீங்கெண்ணத்துடன் குற்றவழக்கிடல்

(Malicious Prosecution)

நீதியை நிலைநாட்ட ஏற்பட்டுள்ள சட்ட நெறிமுறைகளைத் தவருன நோக்கங்களுக்காகப் பயன்படுத்துவதை ஒடுக்கவேண்டியது நாட்டின் கடமையாகும். ஆகவே. தீங்கெண்ணத்துடன் குற்றவழக்கிடுவது தீங்காகக் கருதப்படுகிறது. நிரபராதிகளின்மீது பொய்யான குற்றச்சாட்டுகளைச் சுமத்துவதைத் தடுப்பதற்காகவே இவ்வாறு வழக்கிட அனுமதிக்கப்படுகிறது. எதிர்வாதி தீங் கெண்ணத்துடன் குற்றவழக்கிட்டதாகச் சொல்லும் வாதி தான் நிரபராதியென்றும், தன் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை விசாரித்த நீதிமன்றம் தன்னைக் குற்றமற்றவன் என்று தீர்ப்பளித்த தென்றும் நிரூபிக்க வேண்டும். மற்றும் அவன் தன்மீது வழக்கிட தியாயமானதும் ஒப்பத்தகுந்ததுமான காரணம் எதுவும் இல்லை யென்றும் நிரூபிக்கப்பட வேண்டும். அதாவது வழக்கின் சூழ் நிலைகளை ஆய்ந்ததில் அவன்மீது வழக்கிட நியாயமான, ஒப்பக் கூடிய உண்மையென நம்பத்தக்க காரணம் எதுவும் இருக்கமுடியா தென நீதிபதிக்குப் புலனுக வேண்டும். எதிர்வாதி ஆதாரம் ஏது மின்றிக் குற்றம் சாட்டியுள்ளதாக அவர் கருத வேண்டும். இதைத் தவிர வாதியின்மீது தீங்கெண்ணத்துடன் அதாவது நீதியை நிலை நாட்டும் நோக்கம் எதுவும் இல்லாமல் முறையற்ற நோக்கத்தோடு எதிர்வாதி வழக்கிட்டார் என்றும் நிரூபிக்கப்பட வேண்டும்.

எதிர்வாதி தன்மீது தீங்கெண்ணத்துடன் குற்ற வழக்கிட்ட தாகச் சொல்லும் வாதி பின்வரும் கூறுகளை நிரூபிக்க வேண்டும்:

(1) வாதியின் மீது எதிர்வாதி குற்ற வழக்கிட்டார்.

(2) எதிர்வாதி அவ்வாறு இட்ட வழக்கு வாதிக்குச் சாதகமாக முடிந்தது.

(3) எதிர்வாதி நியாயமானதும், ஒப்பத்தகுந்ததுமான காரணம் (Reasonable and probable cause) எதுவு மின்றி வாதியின் மீது வழக்கிட்டார்.

(4) எதிர்வாதி தீங்கெண்ணத்துடன் வழக்கிட்டாரேயன்றி, சட்டத்தை நிலைநாட்டுவதற்காக அன்று.

(5) எதிர்வாதி குற்றவழக்கிட்டதன் விளைவாக வாதிக்கு இழப்பு ஏற்பட்டது.

(1) எதிர்வாதி இட்ட குற்ற வழக்கு (Prosecution) : இங்கு இரண்டு உட்கூறுகளை வாதி நிரூபிக்க வேண்டும். (அ) குற்ற வழக்கு இடப்பட்டது, (ஆ) அந்தக் குற்றவழக்கை எதிர்வாதி தொடுத்தார். இங்கு வழக்கு என்பது குற்றத்துறை நீதிபதி (Magistrate) முன்னுல் இடப்படும் வழக்காகும். காவல் அதிகாரி கள் எடுக்கும் நடவடிக்கைகள் குற்றவழக்கிற்கு முன்னர் எடுக்கப் படும் நடவடிக்கைகளாகும். எதிர்வாதி காவல்துறையினருக்குக் குறையீடு அல்லது புகார் (Complaint) கொடுத்து அவர்கள் அதை விசாரித்து நீதிமன்றத்தில் வழக்குப் பதிவு செய்யாமல் இருந்து விட்டால், தீங்கு இழைக்கப்பட்டதாகக் கொள்ளமுடியாது. எதிர் வாதி தாமோ, தமது முகவர் மூலமோ, வழக்கறிஞர் மூலமோ நீதிமன்றத்தில் குறையீடு கொடுத்திருக்கலாம். அல்லது அவர் காவல்துறை அதிகாரிக்குத் தாமே தகவல் தந்து வழக்கிடச் செய்திருக்கலாம். வாதி உண்மையாகவே குற்றம் செய்துள்ளார் என ஐயம் உள்ளதாக எதிர்வாதி காவல்துறை அதிகாரிக்குத் தகவல் கொடுத்து அதன் அடிப்படையில், எதிர் வாதியின் தலையீடு இல்லாமல் காவல்துறை அதிகாரி தாமாகவே விசாரணை நடத்தி, வாதியின்மேல் குற்றவழக்கிட்டிருந்தால் எதிர் வாதி பொறுப்பாளியாகமாட்டார். எடுத்துக்காட்டாக, 'அ' என்பவன் காவல்துறை அதிகாரியிடம் சென்று அவனுடைய பொருள் ஒன்று காணுமல் போய்விட்டதாகவும் அதை இறுதியாக அவன் 'ஆ' என்பவன் வசத்தில் இருப்பதைக் கண்டதாகவும் கூறுகிருன் என்று வைத்துக்கொள்வோம். அதன் பின்னர் அவன் குறுக்கீடு எதுவும் இன்றிக் காவல்துறை அதிகாரி விசாரணை நடத்தி 'ஆ' என்பவனைக் கைது செய்து அவன்மேல் குற்றவழக்கிடுவதாக வைத்துக்கொள்வோம். இங்கு வழக்கிற்கு 'அ' என்பவன் மூல காரணமாக இருந்தாலும், அவன் செய்ததெல்லாம் ஐயம் என்ற விதையைத் தூவியதேயாகும். நாகேந்திரநாத் ராய் v. பசந்த தாஸ் பைராக்யா (Nagendranath Ray v. Basanta Das Bairagya) வழக்கில் எதிர்வாதி காவல்துறை அதிகாரியிடம் தன் வீட்டில் வாதி களவு புரிந்ததாக ஐயப்படுவதாக முறையீடு செய்யவும்

வாதியைக் காவல்துறை அதிகாரி கைது செய்தவர்களோடு வாதியைச் சம்பந்தப்படுத்தக் காவலர் அறிக்கையில் எந்தச் சான்றும் இல்லையென்று கூறிக் குற்றத்துறை நீதிபதி அவனை விடுதலை செய்தார். தீங்கெண்ணத்துடன் குற்றவழக்கிட்டதாக எதிர்வாதியின்மேல் இடப்பட்ட வழக்கில் வெறும் காவலர் நடவடிக்கையை வழக்கிடல் என்று கருதமுடியாதெனச் சொல்லி வாதியின் வழக்குத் தள்ளுபடி செய்யப்பட்டது. குற்ற வழக்கிடல் என்பது சட்டத்தை இயங்க வைத்தல் ஆகும். அதாவது, அதை விசாரிக்கும் உரிமையுள்ள நீதித் துறை அதிகாரிகள்முன் முறையீடு செய்வதன்மூலம் இது நடைபெற்றிருக்கவேண்டும்.

எதிர்வாதி தெரிந்தே பொய்யாகக் குற்றம் சாட்டித் தனக்குச் சாதகமாகப் பொய்ச்சாட்சிகளைக் கொணர்ந்தும் காவல்துறை அதிகாரிகளை நம்ப வைத்திருக்கலாம். அல்லது, தன்னுடைய செல்வாக்கை முறையின்றிப் பயன்படுத்தி ஒரு நிரபராதியின்மேல் வழக்கிடக் காவல்துறை அதிகாரிகளைத் தூண்டிவிட்டிருக்கலாம். இவ்வாறு அவன் செய்திருந்தால் அவனே குற்றவழக்கிடக் காரணம் என்று சொல்லலாம். குற்ற வழக்கில் ஒருவர் சாட்சி சொன்ன தாலேயே அவர் தீங்கெண்ணத்துடன் குற்ற வழக்கிட்டதாகச் சொல்லமுடியாது. வேண்டுமானால் அவர்மேல் பொய்யாகச் சான்றுரைத்தார் என்று வழக்கிடலாம். இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள் சதிசெய்து குற்ற வழக்கிட்டிருந்தாலும் அவர்கள் எல்லோரும் தீங்கெண்ணத்துடன் குற்ற வழக்கிட்டதற்குப் பொறுப்பாளியாவார். ஒருவர்மேல் கூறப்பட்ட குறையீட்டுக்குப் பதில் சொல்லுவதற்காக நீதிமன்றத்தின்முன் அவன் வரவழைக்கப் படும் முன்னர் அவன்மேல் குற்றவழக்குத் தொடங்கிவிட்டதாகச் சொல்ல முடியாது. ஒருவன் அவதூறு இழைத்தான் என்று குறையீடு செய்ததன்பேரில் அவனுக்கு அழைப்பாணை (Summons) அனுப்பாமல் வெறும் அறிவிக்கை (Notice) மட்டும் நீதிபதி அனுப்பிப் பின்னர் இருவரையும் விசாரித்துக் குறையீட்டை நிராகரித்திருந்தால் குற்ற வழக்குத் தொடங்கப்பட்டதாகச் சொல்ல முடியாது.

(2) எதிர்வாதியிட்ட குற்றவழக்கு வாதிக்குச் சாதகமாக முடிந்திருக்க வேண்டும். எனவே, குற்றவழக்கு முடிவதற்குமுன் அதாவது, குற்ற வழக்கு நடந்துகொண்டிருக்கும்போது, எதிர்வாதியின் மீது வழக்கிட வாதிக்கு உரிமை இல்லை. குற்றவழக்குத் தீர விசாரிக்கப்பட்டு வாதி குற்றமற்றவர் என்று விடுதலை செய்யப்பட்டு இருக்கலாம். இதைத் தவிர எதிர்வாதியும் குற்ற முறையீட்டு மனுவில் உள்ள சட்டமுறைப்பட்ட குறைகளுக்காக இடையி

லேயே வாதியின்மேல் உள்ள வழக்குத் தள்ளுபடி செய்யப்படலாம். அல்லது, எதிர்வாதி குற்றவழக்கைத் தொடர்ந்து நடத்தாமல் விட்டிருந்தால் குற்றம் சாட்டப்பட்டவர் விடுவிக்கப்பட்டிருக்கலாம். எனவே, வாதிக்குச் சாதகமாக முடிந்தது என்று சொல்லுவது நீதிமன்றம் அவனை நிரபராதி என்று தீர்ப்பளித்தது என்ற பொருளிலன்று; அவன் குற்றம் இழைத்ததாகத் தீர்மானிக்கவில்லை என்ற பொருளில்தான். எனவே, வாதிக்கு எதிராகக் குற்றவழக்கில் முடிவாகாவிட்டால் அவனுக்குச் சாதகமாகவே முடிந்ததாகக் கருத வேண்டும். ஆனால், குற்றவழக்கில் வாதி தண்டிக்கப்பட்டிருந்தால் அவர் எதிர்வாதியின் மீது வழக்கிட முடியாது. அவர் தாம் உண்மையில் குற்றமற்றவர் என்றும், தாம் தவருகத் தண்டிக்கப் பட்டதாகவும் கூறுவதை நீதிமன்றம் ஏற்காது. இதைப் போன்ற சூழ்நிலைகளில் அவர் தீர்ப்பை எதிர்த்து அப்பீல் செய்து, அப்பீலில் அவருக்குச் சாதகமாகத் தீர்ப்பு வழங்கப்பட்டால் அவர் எதிர்வாதியின்மேல் வழக்கிடலாம் வாதி குறுகிய, சுருக்கமான நடைமுறை (summary procedure) பின்பற்றப்படும் வழக்கில் தண்டிக்கப்பட்டதால் அப்பீல் செய்யமுடியாமல் போனதென்று கூறமுடியாது.

(3) நியாயமான காரணமும், நிகழத்தக்கதென நம்பக் கூடிய அல்லது ஒப்பத்தக்கதுமாகிய காரணமும் இன்றி வாதியின்மீது குற்ற வழக்கிடப்பட்டிருக்க வேண்டும். வாதியின்மீது குற்ற வழக்கிட நியாயமான, நிகழக்கூடிய காரணம் உள்ளதென்று எதிர்வாதி நம்பினார் என்று நாம் சொல்லும்போது, வாதி குற்ற மிழைத்ததாக எதிர்வாதி நம்பினார் என்றும், அவ்வாறு அவர் நம்ப அந்தச் சூழ்நிலையில் நியாயமான காரணம் இருந்தது என்றும் நாம் பொருள் கொள்கிறோம். எதிர்வாதி நம்பிய தகவல் உண்மை யானதா என்று நாம் பார்க்கத் தேவையில்லை. அவர் அத் தகவலை உண்மையென நம்பினாரா என்று பார்த்தால் போதும். அவர் நம்பியது உண்மையில் நடக்காததாக இருந்தாலும் அது இருந்த தாக அவர் நேர்மையாக நம்பியிருந்தால் போதும். வாதி இவ் விரண்டில் ஏதாவது ஒன்றை உண்மையல்லவென்று நிரூபித் தாலே போதும். இதை நிரூபிக்க வேண்டியது வாதியின் பொறுப்பே யாகும். எதிர்வாதி தான் குற்றவழக்கிட நியாயமானதும், நம்பக் கூடியதுமான காரணங்கள் இருந்தன என்று நிரூபிக்கத் தேவை இல்லை. எதிர்வாதி உரிய விசாரணை நடத்தி வாதி குற்றம் புரிந் திருக்கிறார் என்று நம்பியிருக்க வேண்டும். வாதி குற்றம் இழைத் திருந்தார் என்று எதிர்வாதி உண்மையில் நம்பாதபோது, அவர் வழக்கிட நியாயமானதும் ஒப்பக்கூடியதுமாகிய காரணங்கள்

இருந்தனவாகக் கொள்ளமுடியாது. எனவே, எதிர்வாதி தனக்குச் சில தகவல்கள் தெரியாமல் இருந்தன வென்றும், அவற்றை வைத்துப் பார்க்கும்போது வாதியைக் குற்றவாளியென்று சொல்ல முடியும் என்றும் கூறுவதை ஏற்கமுடியாது. அதைப்போன்ற சூழ்நிலையில் வாதியின்மீது வழக்கிட எதிர்வாதிக்கு நியாயமான காரணங்கள் எதுவுமில்லை என்பது மட்டுமல்லாது, அவர் வாதியின் மேல் தீங்கெண்ணம் கொண்டிருந்தார் என்பதை அவர் நடத்தை நிரூபிக்கும். வாதி தான் குற்றமிழைத்ததாக எதிர்வாதி நம்பிய தாக நிரூபிக்க முடியாவிட்டால், அச் சூழ்நிலையில் எதிர்வாதியின் நடத்தைக்குத் தகுந்த, ஒப்பக்கூடிய காரணம் எதுவும் இல்லை என்று நிரூபிக்க வேண்டும். சரியாக விசாரிக்காமலும், அவசரப் பட்டும், தனக்குக் கிடைத்த தகவல்கள் உண்மையானவையா என்று ஆராயாமலும் எதிர்வாதி வழக்கிட்டிருந்தால் அவர் நடந்துகொண்டவிதம் நியாயமானதன்றென்று சொல்லலாம். எதிர்வாதி தமக்குக் கிடைத்த தகவல்களை அப்படியே திரித்துரைக் காமல் காவல்துறை அதிகாரியிடமும், வழக்கறிஞரிடமும் சொல்லி யிருந்தால் அவர் நடத்தையில் குறைகாண முடியாது. வாதியின் மீது வழக்கிடுமுன்னர் எதிர்வாதி தகுதியுள்ள ஒரு வழக்கறிஞரிடம் சென்று தமக்குத் தெரிந்த தகவல்கள் அனைத்தும் சொல்லியிருந் தால், அவர் அறிவுரையின்படி வழக்கிட்டதாக வாதிடலாம். இது ஏற்றுக்கொள்ளக்கூடிய எதிர்வாதமாகும். ஆனால், எதிர்வாதி தாம் பொய்யென அறிந்துள்ள தகவல்களைச் சொல்லி வழக்கறிஞ ரிடம் அறிவுரை பெற்றிருந்தால் அவர் வழக்கிடத் தகுந்த காரணம் இருந்ததாகச் சொல்லமுடியாது. எதிர்வாதி தம்மீது வழக்கிடத் தகுந்த காரணங்கள் இல்லை என்று முதற்கண் வாதிதான் சான்று தரவேண்டும். அவ்வாறு அவர் சான்று தந்தால் எதிர்வாதி தான் வழக்கிடத் தகுந்த காரணங்கள் இருந்தன என்று நிரூபிக்க வேண் டியது அவனுடைய கடமையாகிறது. ஒப்பக்கூடிய அல்லது நிகழக்கூடிய காரணம் என்று சொல்வதற்கும் போதுமான காரணம் என்று சொல்வதற்கும் வேறுபாடு உள்ளது. ஒரு சாதாரண நல்லறி வுள்ள, எச்சரிக்கையுள்ள மனிதனையே வரையளவாகக் கொண்டு எதிர்வாதியின் நடத்தையைத் தீர்மானிக்க வேண்டும். வாதியின் மேல் வழக்கிடத் தகுந்த, ஒப்பக்கூடிய காரணம் இருந்ததென்று காட்டுமாறு எதிர்வாதியை உத்தரவிடு முன்னர் வாதி வழக்கிற்குத் தகுந்த, ஒப்பக்கூடிய காரணம் இல்லையென்பதற்கு ஏதாவது சான்று கொணரவேண்டும்.

ஆப்ராத் v. வடகிழக்கு ரெயில்வே கம்பெனி (Abrath v. NorthEastern Rly. Co.) வழக்கில் ரயில் விபத்தொன்றில் தமக்கு ஏற்பட்டதாகச் சொல்லப்பட்ட காயங்களுக்காக ஒரு பயணி எதிர்

வாதி-இரயில்வே கம்பெனியிடமிருந்து ஒரு பெருந்தொகையைத் தீங்கீடாகப் பெற்றார். எதிர்வாதி அந்தப் பயணிக்குக் காயம் பட்டதாக வாதி-மருத்துவர் பொய்யான சான்றிதழ் வழங்கி இழப்பீடு பெற உடந்தையாக இருந்தார் என்று விசாரித்தறிந்தது. எதிர் வாதி வழக்கறிஞர்களைக் கலந்தாலோசித்து, அவர்கள் அறிவுரையின்படி, வாதி தன்னை ஏமாற்றச் சதி செய்ததாகக் குற்ற வழக்கிட்டது. ஆயினும், அவ் வழக்கில் மருத்துவராகிய வாதி விடுதலை செய்யப்பட்டார். அவர் இரயில்வே கம்பெனியின்மேல் தீங்கெண்ணத்துடன் குற்ற வழக்கிட்டதாக வழக்கிட்டார். அவரது குற்றமின்மையை இரயில்வே கம்பெனி ஒத்துக்கொண்டாலும் வாதியால் வழக்கில் வெற்றி பெற முடியவில்லை. எதிர்வாதி இரயில்வே கம்பெனி உண்மையை அறிந்துகொள்வதில் தகுந்த கவனம் காட்டியது என்றும், தனது குற்றச்சாட்டை உண்மையென நம்பினார்கள் என்றும் நீதிமன்றம் கருதியதால் எதிர்வாதி பொறுப்பாளியல்லரென்று தீர்ப்பளிக்கப்பட்டது. ஆனால் 'அ' என்பவர் 'ஆ' என்பவர் குற்றம் ஒன்று புரிந்ததைத் தாம் கண்ணால் கண்டதாகச் சொல்லி, அவர்மேல் குற்றவழக்கிடுவதாக வைத்துக் கொள்வோம். அவ் வழக்கில் 'ஆ' என்பவர் அந்தக் குற்றம் நடந்த வேளையில் தாம் குற்றம் நடந்த இடத்திலேயே இல்லை யென்று நிரூபித்து விடுதலையாகின்றார் என்று வைத்துக்கொள்வோம். அதுவே எதிர்வாதி நேர்மையற்ற முறையில் வாதியின் மேல் குற்றவழக்கிட்டார் என்பதற்கு முடிவான சான்றாக அமையும். எதிர்வாதி நேர்மையாகவே வாதி குற்றமிழைத்ததாகக் கருதி வழக்கைத் தொடங்கியிருக்கலாம். பின்னர் அவருக்கு வாதி குற்றமற்றவர் என்ற உண்மை தெரியவரலாம். இந்த உண்மையைத் தெரிந்துகொண்ட பின்னரும் எதிர்வாதி வழக்கைத் தொடர்ந்து நடத்தியிருந்தால் அவர் வழக்கிடத் தகுந்த காரணங்கள் இல்லை என்றாகும். வழக்கு விசாரணையின்போது தெரியவந்த உண்மைகள் வழக்கிடும்போது எதிர்வாதிக்குத் தெரியாமல் இருக்கலாம். அப்போது எதிர்வாதி பொறுப்பாளியாக மாட்டார்.

எதிர்வாதி வழக்கிடத் தகுந்த, ஒப்பக்கூடிய காரணம் நூற்றுக்கு நூறு என்ற அளவில் இருக்கத் தேவை இல்லை. எடுத்துக் காட்டாக, ஒருவன் 100ரூபாய் களவு செய்தான் என்று குற்றம் சாட்டப்பட்டால், அதில் 95 ரூபாய் களவாடியதாகக் கருதத் தகுந்த காரணங்கள் இருந்தாலும் எதிர்வாதி வழக்கில் வெற்றி பெறுவான். அவன் குற்றச்சாட்டு முழுமையாக உண்மையன்று என்றாலும் கணிசமான அளவுக்கு நியாயமானதாக இருக்கிறது.

(4) எதிர்வாதி தீங்கெண்ணத்துடன் வாதியின்மேல் குற்றஞ் காட்டியிருக்கவேண்டும். அதாவது எதிர்வாதி பொது நீதியையோ

தனிப்பட்ட உரிமையையோ நிலைநாட்டும் நோக்கம் எதுவும் இல்லாமல் வழக்கிட்டிருக்க வேண்டும். வாதி தன்மீது எதிர்வாதி குற்றவழக்கிடுவதற்குத் தகுந்த, ஒப்பக்கூடிய காரணம் எதுவும் இல்லை என்பதோடு, தீங்கெண்ணத்துடன் வழக்கிட்டான் என்றும் நிரூபிக்க வேண்டும். அதாவது வாதிக்கு ஊறு விளைவிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு எதிர்வாதி வழக்கிட்டிருக்க வேண்டும். இங்குத் தீங்கெண்ணம் என்பது எதிர்வாதியின் முறையற்ற, தீங்கான உள்நோக்கத்தைக் குறிக்கும். ஆனால், எதிர்வாதிக்கு வாதியின்மேல் காழ்ப்புணர்ச்சியோ. வன்மமோ இருக்க வேண்டியதில்லை. எடுத்துக்காட்டாக, எதிர்வாதி ஏதாவது ஒரு பயன்கருதி வாதியின்மேல் வழக்கிட்டிருக்கலாம். உரிமை (Civil) வழக்கு ஒன்றில் இணங்கிப் போகும்படி வாதியைக் கட்டாயப்படுத்துவதற்காக எதிர்வாதி அவர்மீது குற்றவழக்கிட்டிருக்கலாம். இத் தீங்கில் எதிர்வாதிக்குத் தீங்கெண்ணம் இருந்ததென்று வாதி முதற்கண் நிரூபித்தாக வேண்டும். தீங்கெண்ணம் எதிர்வாதிக்கு இருப்பதை வாதிக்கும் எதிர்வாதிக்கும் இடையே முன்பகை இருந்ததைக் கொண்டு நிரூபிக்கலாம். தவிர, எதிர்வாதி பொய்ச் சாட்சிகளைக் கொணர்ந்திருக்கலாம்; குற்றச்சாட்டை விளம்பரம் செய்திருக்கலாம். சரியாக விசாரிக்காமல், அவசரப்பட்டோ பழிவாங்கவோ வாதியின்மீது வழக்கிட்டிருக்கலாம். இவை யாவும் அவனுக்குத் தீங்கெண்ணம் இருப்பதைக் காட்டும்.

எதிர்வாதி குற்ற வழக்கிடத் தகுந்த காரணம் இல்லை என்பதாலேயே அவனுக்குத் தீங்கெண்ணம் இருந்ததாகச் சொல்லிவிட முடியாது. சிந்தித்துப் பார்த்து, உண்மை எதுவெனப் புரிந்து கொள்ளாமலோ, கவனமின்றியோ எதிர்வாதி வழக்கிட்டிருக்கலாம். இது அவன் வழக்கிடத் தகுந்த காரணங்கள் இருக்கவில்லை என்பதைக் காட்டினாலும், அவன் தீங்கெண்ணத் செயல்புரிந்ததாகாது. மாறுக, ஒருவனுக்குத் தீங்கெண்ணம் இருக்கலாம். ஆனால், மற்றவர்மேல் வழக்கிட அவனுக்குத் தகுந்த காரணம் இருக்கலாம். எனவே, எதிர்வாதிக்குத் தீங்கெண்ணம் இருந்ததென்பதையும், அவன் வழக்கிடத் தகுந்த காரணங்கள் இல்லையென்பதையும் தனித்தனியே நிரூபிக்க வேண்டும். எதிர்வாதிக்குத் தீங்கெண்ணம் இருந்ததா என்பது ஒரு சட்டப் பிரச்சினையாகும்.

(5) எதிர்வாதி குற்றவழக்கிட்டதன் விளைவாக வாதிக்கு இழப்பு ஏற்பட்டிருக்கவேண்டும். எதிர்வாதி இட்ட குற்றவழக்கில் வாதி விடுதலையானாலும் அதன் விளைவாக அவனுக்கு இழப்பு அல்லது நட்டம் ஏற்படும். இவ்வாறு வாதிக்கு ஏற்படும் இழப்பு மூன்று வகைப்படும்:

(அ) அவன் புகழுக்கேற்படும் இழப்பு. அவன் கேவலமான நடத்தையுள்ளவன் என்று குற்றம்சாட்டினால் அவன் புகழுக்கு இழுக்கு ஏற்படும்.

(ஆ) அவன் உடலுக்கோ உயிருக்கோ ஆபத்து ஏற்பட்டு இருக்கலாம்.

(இ) அவனுடைய சொத்துக்கு இழப்பு ஏற்பட்டிருக்கலாம்.

வாதி தன்மீது சுமத்தப்பட்ட குற்றத்திலிருந்து தன்னைக் காப் பாற்றிக்கொள்ளப் பொருள் செலவழிக்க வேண்டியிருக்கலாம். எடுத்துக்காட்டாக, அவன் குற்றவழக்கில் தன் சார்பில் வழக்கறி ஞரை நியமித்து அவரது கட்டணத்தைத் தந்திருக்கலாம். ஆனால், தொகை எதுவும் அவன் செலவு செய்யாதிருந்தால் இதற்காக அவனால் தீங்கீடு பெறமுடியாது. அவன்மீது இடப்பட்டது குற்ற நடவடிக்கை வழக்காக இல்லாமல் இருந்தால், அவன் தனக்குத் தனித்த இழப்பு ஏற்பட்டதென்று நிரூபிக்க வேண்டும். இந்த இழப்புப் பொருளிழப்பாக இருக்கத் தேவை இல்லை என்பதை மேலே கண்டோம். அவனுக்கு ஏற்பட்ட இழப்பு அவன்மேல் குற்றவழக்கிட்டதன் பயனாய் நிகழத்தக்க விளைவாக இருக்க வேண்டும்; அதன் சேய்மையான விளைவாக இருக்கக் கூடாது. வாதி தனக்கு இழப்பு ஏற்பட்டதென நிரூபிக்க வேண்டியதில்லை. அது ஊகித்துக் கொள்ளப்படும்.

முறையற்ற சட்ட நடவடிக்கைகளுக்காகவும் ஒருவர்வழக்கிட லாம். எடுத்துக்காட்டாக, ஒரு வணிகர் நொடித்துப்போனவர் என்று தீர்ப்பளிக்க வேண்டுமென்று எதிர்வாதி சட்டப்படி நட வடிக்கை எடுத்திருக்கலாம். அல்லது, ஒரு கம்பெனியைக் கலைப்ப தற்காக நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கலாம். இது வணிக ருடைய புகழையும், அந்தக் கம்பெனியின் புகழையும் கெடுக்கும். எனவே, இந்த நடவடிக்கைகளைத் தீங்கெண்ணத்தோடும், தகுந் ததும் ஒப்பக்கூடியதும் ஆகிய காரணமின்றி எடுத்திருந்தால் வழக்கிடலாம். இதைப் போலவே முனிசிபல் சட்டப்படி ஒருவர் மீது வேண்டுமென்றே தகுந்த, ஒப்பக்கூடிய, நியாயமான காரண மின்றி வழக்கிட்டிருந்தால் எதிர்வாதியின்மீது வழக்கிடலாம். இதைப் போலவே ஒருவரைப் பைத்தியக்காரன் என்று அறிவிக்க வேண்டும் என்று எதிர்வாதி கேட்டிருக்கலாம். அல்லது ஒருவனது சொத்தைப் பற்றுகை செய்யவேண்டுமென்றோ, அவனது இல்லத் தைச் சோதனை இடவோ, ஒருவனைக் கைது செய்யவோ முறையின்றி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கலாம். அதன் விளை வாக அவனுக்கு இழப்பு ஏற்பட்டிருக்க வேண்டும். தீங்கெண்

ணத்துடன் குற்ற வழக்கிடல் எனும் தீங்கில் சொல்லப்பட்ட கூறுகள் இயன்றவரை இங்கும் பொருந்துவனவாகும். ஒருவனைக் கைது செய்தாலோ, அவனது சொத்தைப் பற்றுகை செய்தாலோ அவனது மதிப்பிற்கு இழப்பு அல்லது ஊறு விளைந்துள்ளதாக ஊகிக்கலாம். குற்றவழக்கிடல் என்னும் கருத்தை இங்குப் பொதுவாகத்தான் கொள்ள வேண்டும். ஏனெனில், முறையற்ற சட்ட நடவடிக்கைகள் நீதிமன்றத்தில் நீதிபதிகள் முன் எழுபவை அல்ல. அவை நிர்வாக நடவடிக்கைகளேயாகும். குற்றவழக்கில் பொது நீதியை நிலைநாட்டுவது நோக்கமாகும். தீர்ப்பாணையை நிறைவேற்றும் வழக்கில் தனிப்பட்டவரின் உரிமையைப் பெறுவதே முறையான நோக்கமாகும்.

52. வழக்குதவியும்
பங்கு விழை வழக்குதவியும்
(Maintenance and Champerty)

சட்டமுறையான காரணம் இல்லாமல், உரிமையியலில் வழக்காடுபவர்களுக்குப் பண உதவி போன்ற உதவிகளைச் செய்தல் தீங்காகவும் குற்றமாகவும் கருதப்பட்டது. இத் தீங்கின் சாரம் யாதெனில், ஒருவர் தமக்கு எந்த நலனும் இல்லாத வழக்கொன்றில் குறுக்கிடுதலாகும். இத் தீங்கின் மற்றொரு வகை, இவ்வாறு குறுக்கிட்டு உதவும் நபர், வழக்கில் அல்லது நடவடிக்கையில் வெற்றி பெற்றுச் சம்பந்தப்பட்ட நிலம் அல்லது பொருள்களைப் பெறும்போது அவற்றில் ஒரு பகுதியைத் தாம் அடையவேண்டும் என்ற நிபந்தனையுடன், அவ் வழக்கை அல்லது நடவடிக்கையை வாதி அல்லது எதிர்வாதிக்காக நடத்துவதாகும். முந்தியது (maintenance), முறையின்றி வழக்கில் உதவுவதாகும். பிந்தியது (Champerty), பங்குவிழை வழக்குதவி ஆகும். பிறர் வழக்கில் குறுக்கிடுபவர்க்கு வழக்கிடும் பொருளில் ஏதேனும் நலன் இருந்தால் வழக்குதவி செய்தல் சட்டத்திற்கிசைந்த செயலாகும். இதைத் தவிர ஒருவர் இரக்க உணர்ச்சியால் உந்தப்பட்டுச் செல்வர் ஒருவரின் கொடுமைக்கு ஆளாகியுள்ள ஏழைக்கு வழக்கில் உதவி செய்தலும் முறையானதாகவே கருதப்பட்டது.

இங்கிலாந்தில், குற்றவியல் சட்டப்படி (Criminal Law Act, 1967) குற்றம், தீங்கு என்று இவை கருதப்படா; ஆயினும், ஒப்பந்தவியல் சட்டப்படி, பங்குவிழை வழக்குதவி உடன்பாடு சட்டப்படி செல்லாதாகும். இந்தியாவில் வழக்கில் வெற்றி பெற்றுப் பெறும் சொத்தில் பங்கு தரப்படவேண்டும் என்ற நிபந்தனையுடன் வழக்கில் உதவி செய்வதாலேயே அது பொது நலனுக்கு முரணாகாது என்று சொல்லப்பட்டிருக்கிறது; இந்தக் காரணத்தினால் அந்த ஒப்பந்தம் செல்லாமல் போகாது. ஆனால்,

பிறருக்கு ஊறு விளைவிக்கவும், வழக்கைச் சூதாட்டக் கருவியாகப் பயன்படுத்தவும், நேர்மையின்றி, முறையில்லாத நோக்கத்திற்காக இந்த ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தால், அது சட்டப்படி செல்லாது. இதைத் தவிர, கடன் பெறுபவரிடம் அநியாயமான முறையில், மனச்சான்றுக்கு எதிராகப் பணம் பறிக்கும் நோக்கத்துடன் இப்படிப்பட்ட ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தாலும், அதைச் சட்டப்படி அமல் செய்ய முடியாது. இத்தகைய ஒப்பந்தம் ஒழுக்கக் கேடான முறையில் தேவையில்லாத வழக்குகளை வளர்ப்பதே யாகும். எனவே, இதனால் குடும்பங்களில் நிலவும் அமைதி குலையும். இத்தகைய ஒப்பந்தங்களை நீதிமன்றங்கள் ஒடுக்கக் கடமைப்பட்டுள்ளன. முறையின்றி ஒரு வழக்கில் உதவி செய்யப் பட்டதாகச் சொல்பவர் தமக்குத் தனித்த இழப்பு ஏற்பட்டதாக நிரூபிக்கவேண்டும். முறையின்றி இடப்பட்ட வழக்கு வெற்றி பெற்றிருப்பினும், வழக்கு உதவி செய்யப்பட்டதாகத் தீங்கீடு கோரி வழக்கிடத் தடையில்லை.

53. வேறு சில தீங்குகளும் தீங்கென உறுதியாகச் சொல்லமுடியாத தீமைகளும்

இதற்குமுன் சொல்லப்பட்டவை தவிர, வேறு சில முறையற்ற செயல்களும் தீங்காகக் கருதப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக, ஒருவர் அரசியலில் பெற்றுள்ள வாக்குரிமையில் (Franchise) மற்றொருவர் சட்ட முரணான வகையில் குறுக்கிடுதலைச் சொல்லலாம். இதற்கு எடுத்துக்காட்டாக, முன்னரே சொல்லப்பட்ட ஆஷ்பி v. வைட் வழக்கைச் சொல்லலாம். இவ் வழக்கில் நாடாளுமன்றத் தேர்தலில் வாதியின் வாக்கை முறையின்றி ஏற்க மறுத்த தேர்தல் அதிகாரிகள் அவருக்குத் தீங்கீடு தரவேண்டுமென்று தீர்ப்பளிக்கப்பட்டது.

இதைத் தவிர, ஒருவர் குறிப்பிட்ட இடத்திலும், காலத்திலும் சந்தையையோ அங்காடியையோ வைத்து நடத்தத் தனி உரிமை பெற்றிருந்தால், மற்றொருவர் அதைப் போன்றதொரு சந்தையையோ அங்காடியையோ அருகில் நடத்துவதைத் தடுக்கலாம். அவருக்குத் தரவேண்டிய சுங்க வரியைத் தராமல் ஏய்ப்பதற்காக ஒருவர் அந்தச் சந்தை அல்லது அங்காடிக்கு மிக அருகில் தமது வாணிகச் சரக்கினைக் கொண்டு வந்து விற்பனை செய்தால், அவர் மீது வழக்கிடலாம். இதைப்போலவே பயணக்கூலி பெற்றுக் கொண்டு தோணியிலேற்றிப் பொதுமக்களை ஆறு, வாய்க்கால் ஏரி போன்றவற்றின் குறுக்கே ஒரு கரையிலிருந்து மறு கரைக்குக் கொண்டு செல்ல ஒருவருக்குத் தனித்த உரிமையளிக்கப்பட்டிருக்கலாம். இந்த உரிமையில் குறுக்கிடுபவர்மீது அவர் வழக்கிடலாம். ஆனால், படகுதுறையின் அருகே ஒரு பாலம் கட்டப்பட்டதால், தமது படகில் பயணஞ் செய்வோர் எண்ணிக்கை குறைந்துவிட்டதென அவர் முறையிடமுடியாது. அரசுதான்

இந்த உரிமையை ஒருவருக்குப் பட்டயமாக அளிக்க முடியும் என்றும், நீடனுபோகத்தால் இதைப் பெற முடியாதென்றும் இந்தியாவில் சில உயர்நீதி மன்றங்கள் கருதுகின்றன. ஒருவர் சமுதாயத்திற்கோ, அதிலுள்ள ஒரு குறிப்பிட்ட பகுதி யினருக்கோ கடமையாற்றுவதற்காக ஊதியம் பெற்றே பெருமலோ ஏற்றுள்ள பொதுவான பதவி அல்லது பணியில் மற்றொருவர் குறுக்கிடுதல் தீங்காகும். இதற்காக அவர்மீது வழக்கிட்டுத் தீங்கீடு பெறமுடியும்.

தீங்கென உறுதியாகச் சொல்லமுடியாதவை

(1) தற்காலத்தில் தன்னுட்சி உரிமை பெற்றுள்ள பொது மருத்துவக்கழகம் (General Medical Council), வழக்கறிஞர் குழாம் (Bar Council), பல்கலைக்கழகம் போன்ற அமைப்புகள் பல உள் ளன. இவை அவற்றின் உறுப்பினர்மீது கீழ்நிலை நீதிமன்றத்தைப் போல ஆட்சி செலுத்தும் உரிமை கொண்டவை எனலாம். இந்த அமைப்புத் தனது உறுப்பினரோடு செய்துகொண்டுள்ள ஒப்பந்தம் அல்லது உடன்பாடு, அல்லது சட்டம், அல்லது இயற்கை நீதி ஆகியவற்றிற்கு முரணுகச் செயல்பட்டு அவரை விலக்கியோ வேறு முறையில் தண்டித்தோ இருந்தால், அவர் தாம் சார்ந்துள்ள அந்த அமைப்பின்மீது வழக்கிடலாம். ஒருவன்மேல் சாட்டப்பட்டுள்ள குற்றத்தைப்பற்றி அவனுக்குப் போதிய, முறை யான அறிவிக்கை கொடுக்காமலும், அவன் தன்னைக் காத்துக் கொள்ள வாதிட வாய்ப்பளிக்காமலும் அவனைப் பதவியிலிருந்து விலக்கவோ வேறு வகையில் தண்டிக்கவோ முடியாது. இதை மீறி ஓர் அமைப்புத் தன் உறுப்பினர் மீது நடவடிக்கை ஏதேனும் எடுத்திருந்தால், அது சட்டப்படி செல்லாதெனத் தீர்ப் பளிக்கப்படும். ஆனால், இதற்காக ஒப்பந்தவியலில்தான் வழக்கிட முடியும் என்றும், தீங்கியலில் வழக்கிட முடியாதென்றும் வின்ஃபீல்ட் கருதினர்.

(2) தனித்திருக்கும் உரிமை **(Right of Privacy)** : இது முறை யற்ற விளம்பரங்களிலிருந்து ஒருவர் விலகி வாழவும், தாமும் தம் குடும்பமும் பிறர் குறுக்கீடின்றித் தனித்திருக்கவும், தமது சொந்த வாழ்க்கையில் பிறர் முறையின்றித் தலையிடு வதைத் தடுக்கவும் பெற்றுள்ள உரிமையைக் குறிக்கும். இந்த உரிமையில் குறுக்கிடுவது தீங்காகுமென்று பெரும்பான்மையான அமெரிக்க நீதிமன்றங்கள் தீர்ப்பளித்துள்ளன. உண்மையை விளம்ப வைக்கும் மருந்துகள், நாடாவில் ஒலிப்பதிவு செய்யும் கருவி, தொலைநோக்கிப் புகைப்படக் கருவி (Telescopic Camera),

தொலைக்காட்சி (Television) போன்ற அறிவியல் சாதனங்கள் தோன்றியுள்ள இக்காலத்தில் மனிதனின் தனித்திருக்கும் உரிமையைக் காக்கவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. ராபின்ஸ் v. கொலம்பியா பிராட்காஸ்டிங் கார்ப்பரேஷன் (Robins v. Columbia Broadcasting Corporation) என்னும் அமெரிக்க வழக்கில், வாதி ஒரு தொலைக்காட்சிக் கம்பெனியின் நிகழ்ச்சியொன்றின் தரத்தைப் பற்றிக் குறைசொல்லி அந்தக் கம்பெனிக்கு ஒரு கடிதம் எழுதினார். நிகழ்ச்சி அறிவிப்பாளர் வாதியின் பெயரையும், முகவரியையும் திரையில் காட்டி, வாதியின் நடத்தையைப்பற்றி என்ன நினைக்கிறார்களென்பதை வாதிக்குக் கடிதங்கள் மூலமும், தொலைபேசியின் மூலமும் தெரிவிக்குமாறு நிகழ்ச்சியைக் கேட்பவர்களை வேண்டிக்கொண்டார். வாதியைக் கண்டித்தும், தாக்கியும் ஏராளமான கடிதங்கள் வாதிக்கு வந்ததோடு, தொலைபேசியில் அவரைத் தொடர்ந்து பலர் தொந்தரவு செய்து வந்ததால், அவர் தொலைபேசியின் தொடர்பை அறுத்துக்கொள்ள நேர்ந்தது. அவருக்கு இதனால் மிகுந்த வசதிக்குறைவும் நச்சரிப்பும் ஏற்பட்டன. எதிர்வாதி அவருக்குத் தீங்கீடு தரவேண்டுமென்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

சில சமயங்களில் வாதியின் தனி வாழ்க்கையைப் பற்றியோ நடத்தையைப் பற்றியோ எதிர்வாதி பிறரறியும்படியாக ஒரு தகவலை வெளியிட்டு வாதிக்கு மன உளைவையும், தடுமாற்றத்தையும் ஏற்படுத்தியிருக்கலாம். எடுத்துக்காட்டாக, வாதி கடன்களைத் திருப்பித் தருவதில்லை என்று எதிர்வாதி தகவல் வெளியிடலாம். மெல்வின் v. ரைட் (Melvin v. Reid) வழக்கில், தொடக்கத்தில் வாதி விலைமகளாக வாழ்க்கை நடத்தியதைப் பற்றிய தகவலை எதிர்வாதி உலகறிய வெளியிட்டிருந்தார். அத் தகவல் வெளியிடப்பட்ட காலத்தில் வாதி தன் கேவலமான பழைய வாழ்க்கையை விட்டொழித்து, மதிக்கத்தக்க உயர்குடியில் ஒருத்தியாக மாறியிருந்தாள். அவள் எதிர்வாதியின்மீது வழக்கிட்டுத் தீங்கீடு பெற்றாள்.

இங்கிலாந்துச் சட்டத்தில், தனித்திருப்பு உரிமைக்கு விளைவிக்கப்படும் ஊறு தீங்காகக் கருதப்படுவதில்லை; இந்தியச் சட்டத்தில் தனித்திருக்கும் உரிமையை உள்ளூர் வழக்கம், மானியம், தனிப்பட்ட அனுமதி ஆகியவற்றின் மூலமாக ஒருவர் பெற முடியும். இந்திய வசதியுரிமைகள் சட்டத்திலும் இந்த உரிமை ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. அடுத்துள்ளவர் தமது வீட்டில் பிறர் பார்வையிடக் கூடாதவாறு மறைவாக வைத்துள்ள பகுதிகளைப் பார்க்கும் கருத்தோடு புதிய கதவுகள், சன்னல்கள், சாளரங்கள்

வைப்பதும், பழைய சன்னல்களைப் பெரியவையாக்குவதும் அவரது தனித்திருக்கும் உரிமையில் தலையிடுவதாகும். இது ஒருவரது சொத்தோடு இணைந்துவரும் உரிமையாகும். எந்தக் கால அளவுக்கு ஒரு சொத்துப் பயன்பட்டிருந்தால் தனித்திருக்கும் உரிமையை எய்த முடியும் என்பது இடத்தின் தன்மையையும், மக்களின் நாகரிகத்தையும் பொறுத்தது. இது சொத்தின் உரிமையாளர் எந்த மதத்தைச் சார்ந்தவர் என்பதைப் பொறுத்ததன்று. இந்த உரிமையைக் கட்டடத்தின் எல்லாப் பகுதிகளுக்கும் ஒருவர் நாட முடியாது. குஜராத், வங்காளம் ஆகிய மாநிலங்களில் இந்த உரிமை ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. எனவே, ஒரு பெண்கள் கல்லூரி விடுதியினுள் காணும் நோக்கத்தோடு, அதை அடுத்துள்ள வீட்டுச் சொந்தக்காரர் பெரிய சன்னல் ஒன்றைத் திறந்தால் அவர் மீது வழக்கிடலாம்.

அண்டை வீட்டில் சன்னல்கள் திறக்கப்பட்டுள்ளதால் ஒருவருடைய தனித்திருக்கும் உரிமை பாதிக்கப்பட்டிருந்தாலும், அவர் வழக்கிட முடியாதெனச் சென்னை உயர்நீதிமன்றம் கூறியுள்ளது. இவ்வாறு ஒருவருடைய தன்மை பாதிக்கப்பட்டிருந்தால், அவர் தமது நிலத்தில் கட்டடம் கட்டி, அடுத்துள்ளவர் தமது சன்னல் வழியாகப் பார்க்க முடியாதபடி செய்துவிடலாம் என்று இந்த நீதிமன்றம் கூறியது.

தனித்திருக்கும் உரிமையில் பிறர் குறுக்கிட்டதாகக் கட்டடச் சொந்தக்காரர் மட்டுமல்லாமல், அதில் குடியிருப்பவரும் வழக்கிடலாம்.

மேற்கோள் நூற்பட்டியல்

(Bibliography)

The Law of Torts	—	Salmond
The Law of Torts	—	Winfield
The Law of Torts	—	Harry Street
The Law of Torts	—	Ramaswamy Iyer
The Law of Torts	—	Ratanlal and Dhirajlal
Modern Tort cases	—	Fridman

கலைச்சொற்கள்

அச்சுறுத்தல்	—	Intimidation
அசைவியல் சொத்து	—	Movable property
அடிமுதலே அத்துமீறல்	—	Trespass ab initio
அடுத்துள்ள காரணம்	—	Immediate cause
அண்டியிருப்பவர்	—	Dependant
அத்துமீறல்	—	Trespass
அத்துமீறி நுழைபவர்	—	Trespasser
அத்துமீறியவற்றைக் கைப்பற்றுதல்	—	Distress damage feasant
அதிகார எல்லை	—	Jurisdiction
அதிகார வரம்புக்குட்பட்ட	—	Intra vires
அதிகார வரம்பினை மீறிய	—	Ultra vires
அரசு முறை நடவடிக்கைச் சட்டம்	—	Crown Proceeding Act
அழைப்பாணை	—	Summons
அழைக்கப்பட்டவர்	—	Invitee
அமைதி நடுவர்	—	Justice of Peace
அவதூறு	—	Defamation
அற்ப இழப்பீடு அல்லது அற்பத் தீங்கீடு	—	Contemptuous damages
அறிவிக்கை	—	Notice
அறிவிக்கப்பட்ட குற்றவாளி	—	Proclaimed offender
அறுதியிடப்பட்ட தீங்கீடு	—	Liquidated damages
அறுதியிடப்படாத தீங்கீடு	—	Unliquidated damages
அனுமதி பெற்றவர்	—	Licensee
ஆபத்தான தன்மையுடைய காட்டு விலங்குகள்	—	Ferae Naturae
ஆபத்தான பொருள்	—	Dangerous chattel
ஆயுட்கால அருக்கத்தை ஏற்படுத்தல்	—	Shortening the expectation of life

ஆவணம்	—	Document
ஆழ்கடல்	—	High seas
ஆள்நிலத்தை வேறுநாட்டுக்குத் தன்னிச்சையாக அளித்தல்	—	Cession
ஆளுநர்	—	Governor
ஆற்றல் வாய்ந்த அல்லது பயனுறுதியுடைய காரணம்	—	Effective cause
இசைவு	—	Consent
இடர்முன் வழக்கு	—	Quia timet action
இடைக்கால உறுத்துக் கட்டளை	—	Interlocutory injunction
இடைக்கால வருமானம்	—	Mesne profits
இடையில் குறுக்கிடும் புதிய செயல்	—	Novus actus interveniens
இந்தியக் கூட்டாண்மைச் சட்டம்	—	Indian Partnership Act
இந்திய வசதியுரிமைச் சட்டம்	—	Indian Easements Act
இயங்கேணி	—	Lift
இயற்றுச் சட்டம்	—	Common Law
இயல்பானதும், நிகழக்கூடியதுமான விளைவு விதி	—	Test of natural and probable consequence
இரண்டக நிலை அல்லது வேண்டாத இரு வழிகளில் ஒன்றே தேறப்படவேண்டிய நிலை எனும்	—	The dilemma Principle or
கோட்பாடு அல்லது இரண்டில் ஒன்று உறுதியான ஆபத்து எனும் தத்துவம்		The doctrine of alternative danger
இரைப்பை, குடல் அழற்சி நோய்	—	Gastro enteritis
இளவர் அல்லது உரிமை வயது வராதவர்	—	Minor
இழப்புக்கான ஆறுதல் தொகை, ஆற்றரவு	—	Solatium
இறுதி வாய்ப்பு விதி	—	Last opportunity rule
இறைமை அல்லது அரசு அதிகாரம்	—	Sovereign power
இறைமை நிலைச்செயல்	—	Act of State
ஈட்டுறுதி	—	Indemnity
உச்ச நீதிமன்றம்	—	Supreme Court
உட்கிடையான அதிகாரம்	—	Implied authority

உடனடிக் காரணம்	—	Causa causans
உடைமை	—	Possession
உண்மையான தீங்கீடு	—	Real damages
உயர் நீதிமன்றம்	—	High Court
உயர்நிலை நீதிமன்றம்	—	Superior Court
உரிமம்	—	Licence
உரிமையைக் காட்டும் விளம்புவகைத் தீர்ப்பு	—	Declaratory judgment
உரிமைபற்றி விளம்பல்	—	Declaration of right
உரிமையியல் நடைமுறைச் சட்டம்	—	Civil Procedure Code
உள்நாட்டு நீதிமன்றம்	—	Municipal Court
ஊறு அல்லது இழப்பின் சேய்மை	—	Remoteness of damage
எச்சரிக்கைத் தீங்கீடு	—	Exemplary damages
எதிர் வழக்குரை	—	Written statement
எதிர்பார்க்கக்கூடிய ஆயுட் கால இழப்பு	—	Loss of expectation of life
ஏற்று உறுதிசெய்தல்	—	Ratification
ஏமாற்றுதல்	—	Deceit
ஏடுங்கு சொத்து	—	Servient heritage
ஒத்திசைவும், நிறைவு பெறுதலும்	—	Accord and satisfaction
ஒப்பந்தம்	—	Contract
ஒப்பந்தப் போல்வு	—	Quasi-contract
ஒப்பந்த முறிவு	—	Breach of contract
ஒப்பந்த முறிவைத் தூண்டுதல்	—	Inducement of breach of contract
ஒப்படைவு	—	Bailment
ஒப்படைவு செய்பவர்	—	Bailor
ஒப்படைவு பெறுபவர்	—	Bailee
ஓங்கு சொத்து	—	Dominant heritage
கட்டாய நிலை	—	Necessity
கட்டுப்பாடின்றிப் பணிபுரியும் ஒப்பந்தக்காரர்	—	Independent contractor
கடலாண்மை வழக்கு விதிகள்	—	Admiralty rules
கடனுறுதிச் சீட்டு	—	Promissory Note
கடும் பொறுப்பு	—	Strict liability
கருத்து அல்லது நோக்கு	—	Intention
கலந்துறைவு	—	Consortium
கவனமின்மை	—	Negligence

களவு	—	Theft
காசோலை	—	Cheque
கால்நடைகளின் அத்துமீறல்	—	Cattle trespass
காப்பீட்டுக் கழகம்	—	Insurance Company
காரண காரியத் தொடர்பினை ஏற்படுத்தும் சங்கிலி	—	Chain of causation
கீழ்நிலை நீதிமன்றம்	—	Inferior Court
குற்றம்	—	Crime
குற்றவியல் சட்டம்	—	Criminal Law
குற்றவியல் நடைமுறைச் சட்டம்	—	Criminal Procedure Code
குற்றஞ் சார்ந்தவர்	—	Accused
குற்றமனம்	—	Mens rea
குற்றத்துறை நீதிபதி	—	Magistrate
குற்றமாகும் தீங்குச் செயல்	—	Felonious tort
குற்றத் தொடர்பு	—	Criminal conversation
குற்ற நீதிச் சட்டம்	—	Criminal Justice Act
குறிப்பிட்ட சொத்தை மீட்டொப்படைவித்தல்	—	Specific restitution of property
குறிநோக்கு	—	Motive
குறையீடு அல்லது புகார்	—	Complaint
கூட்டாகத் தீங்கிழைப்பவர்	—	Joint tortfeasors
கூட்டுருவாக்கம்	—	Incorporation
கூட்டுருவாக்கம் பெறுத அமைப்புகள்	—	Unincorporated bodies
கைப்பற்றுதல்	—	Seizure
கையாடல்	—	Conversion
சட்டத் திருத்தச் (தற்கவன மின்மை) சட்டம், 1945	—	Law Reform (contributory Negligence) Act, 1945
சட்டத் திருத்தச் (பல்பொருள் வழிவகை) சட்டம், 1934	—	Law Reform (Miscellaneous Provisions) Act, 1934
சட்டபூர்வமானதும் இயல்பானதுமாகிய	—	Legal and natural
சட்டமுரண் நிலை	—	Conflict of Laws
சட்டம் விதிக்கும் செயல்	—	Act under statutory authority
சதி	—	Conspiracy
சமநிலையறிவுள்ள மனிதன் (அ) நல்லறிவுள்ள மனிதன்	—	Reasonable man
சாதுவான வீட்டு விலங்குகள்	—	Mansuetae uaturae

சான்றியல் சட்டம்	—	Evidence Act
சாலையில் உள்ள வழிதரும் விளக்கு	—	Traffic light
சிறப்புரிமை	—	Privilege
செயல்	—	Act
செயல் தவிர்ப்பு		Omission
செயலுறுத்துக் கட்டளை	—	Mandatory injunction
சேய்மையான விளைவு	—	Remote consequence
சொத்துரிமை பற்றிய பொய்ம்மை	—	Slander of title
தகுதி	—	Capacity
தகைமை நெறியின்படி அமைந்த கடப்பாடு	—	Equitable obligation
தந்தை முறை இழப்பு	—	Patrimonial loss
தமது சொந்தக் களியாட்டத் திற்காக	—	On a frolic of his own
(மாநில அரசின்) தலைமை வழக்கறிஞர்	—	Advocate-General
தற்கவனமின்மை	—	Contributory negligence
தவறுகை அல்லது பிழை	—	Fault
தவிர்க்க முடியாத விபத்து	—	Inevitable accident
தவிர்க்க முடியாத காரணம்	—	Causa sinequanon
தவறு	—	Mistake
தடையுறுத்துக் கட்டளை	—	Prohibitory injunction
தனித்த தொல்லை	—	Private nuisance
தனிமுறைத் தீங்கீடு	—	Special damages
தனித்திருக்கும் உரிமை	—	Right of privacy
தற்காப்புரிமை	—	Right of private defense
தாக்க முனைதல்	—	Assault
தாக்குதல்	—	Battery
தாயின் கருப்பையில் உள்ள சேய்	—	En Ventre Sa mere
தாங்கு வசதியுரிமை	—	Right of support
திட்டவிளக்க அறிக்கை	—	Prospectus
தீர்ப்பாணை	—	Decree
தீர்ப்பாயம்	—	Tribunal
தீங்கு	—	Tort
தீங்கியல் சட்டம்	—	Law of Torts
தீங்கு தீரும் வகைகள்	—	Discharge of torts
தீங்கு இழைக்கப்பட்ட நாட்டின் சட்டம்	—	Lexloci delicti

தீங்கெண்ணத்துடன் குற்ற வழக்கிடல்	—	Malicious prosecution
தீங்கான பொய்ம்மை	—	Injurious falsehood
தூக்கத்தில் நடந்து செல்லும் நோய் உள்ளவர்	—	Somnambulist
தெய்வச் செயல்	—	Act of God
தெரிவுறுநிலை விதி	—	Scienter rule
தொல்லை	—	Nuisance
தொல்லையை அகற்றுதல்	—	Abatenent of nuisance
தொடர்ந்து நிகழும் அத்து மீறல்	—	Continuing trespass
தொடர்புவழி அத்துமீறல்	—	Trespass by relation
தொலைக்காட்சி	—	Television
தொலைநோக்கிப் புகைப்படக் கருவி	—	Telescopic camera
நம்புறுதி	—	Warranty
நரப்பிசிவு நோய்த் தடுப்பு மருந்துக்கு எதிர் விளைவு	—	Tetanus allergy
நலன்	—	Interest
நிணநீர் ஊசியால் உண்டாகும் நரம்பு நோய்	—	Serum neuritis
நியாயமானதும், ஒப்பத் தகுந் ததுமான காரணம்	—	Reasonable and probable cause
நில அளவையர்	—	Surveyor
நிலத்தில் மீண்டும் நுழைதல்	—	Re-entry on land
நிபந்தனையுடன் கூடிய அதிகாரம்	—	Conditional authority
நிலைக்கால உறுத்துக்கட்டளை	—	Perpetual injunction
நிலைவடிவ அவதூறு	—	Libel
நிலையா வடிவ அல்லது வாய்ச் சொல் அவதூறு	—	Slander
நிலையியல் சொத்து	—	Immovable property
நிவாரணம்	—	Remedy
நீதி, நேர்மைநெறி, நன் மனச் சான்று	—	Justice, equity and good conscience
நீதிமன்றத்துக்கு வெளியே பெறக்கூடிய நிவாரணங்கள்	—	Extra-judicial remedies
நீதிப் பேராணை	—	Writ
நீதிமுறை அதிகாரம்	—	Judicial authority
நீடனுபோக உரிமை	—	Prescription
நெருங்கிய காரணம்	—	Proximate cause

நேர்மை நெறி	—	Equity
நேர்மையான கருத்துரை அல்லது விமரிசனம்	—	Fair comment
நொடிப்பு நிலை	—	Bankruptcy
நொடித்துப் போனவர்	—	Insolvent
நொடிப்பு நிலை எய்தியவரின் சொத்தை நிர்வகிக்கும் பொறுப்புரிமையர்	—	Trustee in bankruptcy
பகரப் பொறுப்பு	—	Vicarious liability
பங்குச் சான்றிதழ்	—	Share certificate
பங்கு விழை வழக்குதவி	—	Champerty
பதிப்புரிமை	—	Copyright
பந்தய அல்லது பகடைப் பணய ஒப்பந்தம்	—	Wagering contract
பணித் தலைவர்	—	Master, employer
பணியாள்	—	Servant, employee
பணியிழப்பு	—	Loss of service
பயனுளி	—	Beneficiary
பற்றுரிமை	—	Lien
பிடியாணையின்றிக் கைது செய்யத் தக்கதாகவும், பிணையில் விடத்தக்க தாகவும் உள்ள குற்றம்	—	Cognizable and bailable offence
பிறன் மனை புணர்தல்	—	Adultry
புனைபொருள் அல்லது ஆக்கு பொருள் உரிமை	—	Patent
பெயரளவுத் தீங்கீடு	—	Nominal damages
பொதுமுறைத் தீங்கீடு	—	General damages
பொது மருத்துவர் கழகம்	—	General Medical Council
பொதுவான அல்லது கூட்டு நலன்	—	Common or joint interest
பொதுத் தொல்லை	—	Public nuisance
பொருள்களை மீட்டல்	—	Re-caption of chattels
பொருளின் உரிமையை உட னடியாகப் பெறுபவர்	—	Immediate transferee
பொறுப்புரிமை	—	Trust
பொறுப்புரிமையர்; மற்றவர் பயனுக்குரிய சொத்தை நிர்வகிக்கும் பொறுப்பை உரிமையாகக் கொண்டவர்	—	Trustee
மதிப்புள்ள மறுபயன்	—	Valuable consideration

மயக்கிக் கவர்ந்து செல்லுதல் — Enticement
மரணத்தையேற்படுத்தும் விபத்துகள் சட்டம் — Fatal Accidents Act
மறுபடிவம் — Alter ego
மறுபயன் — Consideration
மறைந்து கிடக்கும் ஆபத்து — Concealed danger
மறைவிடத்தில் அடைத்து வைத்தல் — Harbouring
மறைமுக அவதூறு — Innuendo
மன அதிர்ச்சி அல்லது நரம்பு மண்டலத்தைப் பாதிக்கும் அதிர்ச்சி — Nervous shock
மனிதரை வீழ்த்து பொறி — Man trap
மாற்றுமுறை ஆவணம் — Negotiable instrumen
மிகவும் குறிப்பிடத்தக்க தொடர்பு — Most significant connection
மீட்சி — Rescue
முகவை — Agency
முதன்மையான அல்லது மேம்பட்ட காரணம் — Dominant cause
முரண் தடை — Estoppel
முறையீடு அல்லது வழக்குரை — Plaint
முறையீட்டு நீதிமன்றம் — Appellate Court
முறையான குற்றச் சாட்டு — Formal complaint
முழுமையான அதிகாரம் — Absolute authority
முற்றுகை — Blockade
முறையின்றிச் சிறைப்படுத்தல் — False imprisonment
முன்தீர்ப்பின் தடை — Res judicata
முன்னறியத்தக்க நிலை — Reasonable foresee ability
மோசடி — Fraud
வசதியுரிமை — Servitude
வஞ்சித்தல் அல்லது ஏமாற்றுதல் — Deceit
வட்டரங்கு — Circus
வரம்பில்லாச் சிறப்புரிமை — Absolute privilege
வரம்புக்குட்பட்ட சிறப்புரிமை — Qualified privilege
வருகையாளர் — Visitor
வல்லிணைப்பு — Annexation
வலிய, திறமுள்ள காரணம் — Effective cause
வழக்குமூலம் — Cause of action

வழக்குதவி	—	Maintenance
வழக்கிடும்கால வரையறைச் சட்டம்	—	Statute of limitations
வழக்கிடும் உரிமையை மாற்றுதல்	—	Assignment of right of action
வழக்குரிமைப் பொருள்	—	Chose in action
வழக்கமில்லாத ஆபத்து	—	Unusual danger
வழக்கறிஞர் குழாம்	—	Bar Council
வாக்குரிமை	—	Franchise
வாடகை ஒப்பந்தம்	—	Charter party
வாணிகச் சரக்கு	—	Goods
வாணிக முத்திரைத்தாள்	—	Trading stamps
வாணிகச் சின்னம்	—	Trade mark
வாணிக நற்பெயர்	—	Goodwill
வாணிகப் போலி	—	Passing off
வாதுரை	—	Pleading
விட்டுக் கொடுத்தல்	—	Waiver
விடுதலை செய்தல்	—	Release
விளம்பு வகைத் தீர்ப்பு	—	Declaration
வெளிநாட்டில் இழைக்கப் படும் தீங்குகள்	—	Foreign torts

இலத்தீன் சொற்றொடர், வாக்கியங்களின்தமிழ் மொழியாக்கம்

அறிந்து ஏற்பது தீங்காகாது	—	Scienti non fit injuria
ஆளைப் பொறுத்த வழக்கு ஆளுடன் முடியும்	—	Actio personalis moritur cum persona
இசைந்து ஏற்பது தீங்காகாது	—	Volenti non fit injuria
எந்த வழக்காயினும் அதற் கொரு முடிவிருக்கவேண்டும் இதுவே நாட்டு நலனுக்குகந் தது	—	Interest rei publicae ut sit finis litium
ஒருவன் தன்னிடம் இல்லாத ஒன்றைத் தரமுடியாது	—	Nemo dat quod non habet
ஒருவனுடைய புறச்செயல் அவனது மறைவான உட் கருத்தைப் புலப்படுத்து கின்றது	—	Acta exteriora indicant interiora secreta
செயலே புலப்படுத்துகின்றது	—	Res ipsa loquitur
சேதம் இல்லாத்தீங்கு	—	Injuria sine demno
நமது வேலையைப் பிறரைக் கொண்டு செய்கின்றவர் தாமே அவ் வேலையைச் செய்தவராகக் கருதவேண்டும்	—	Qui facit peralium facit per se
தீங்கில்லாக் கேடு அல்லது சட்டத் தீங்கற்ற சேதம்	—	Damnum sine injuria
நிவாரணம் கிடைக்காத உரிமை ஏதுமில்லை	—	Ubi jus ibi remedium
நீதிப் பேராணையின்றேல் உரிமை ஏதுமில்லை	—	Ubi remedium ibi jus
மற்றவர் சொத்துக்கு ஊறு நேராவண்ணம் உன்னுடைய சொத்தைப் பயன்படுத்து வாயாக	—	Sic utere tuo ut alienum non lacdas
முதல்வரே தீங்குக்குப் பதில் சொல்ல வேண்டும்	—	Respondeat superior

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

சென்னை-600031

•

தமிழில் பயில்பவர்க்குக் கல்லூரிப் பாடநூல்கள்

(Tamil Medium Books For Colleges)

1975 ஏப்ரல் வரை 650 நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன

•

மேலும் விரைவில் வெளிவருபவை

பொறியியல்	—	39	நூல்கள்
சட்டம்	—	17	,,
மருத்துவம்	—	18	,,
இயற்பியல்	—	23	,,
வேதியியல்	—	20	,,
தாவரவியல்	—	13	,,
விலங்கியல்	—	14	,,
கணிதம்	—	17	,,
வணிகவியல்	—	37	,,
பொருளாதாரம்	—	21	,,
புவியியல்	—	11	,,
வரலாறு	—	29	,,
மனையியல்	—	1	,,
தத்துவம்	—	4	,,
உளவியல்	—	8	,,
புள்ளியியல்	—	8	,,
கல்வி	—	14	,,
நிலப்பொதியியல்	—	6	,,
அரசியல்	—	19	,,

கிடைக்குமிடம் :

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனக் கிடங்கு

(கல்லூரிக் கல்வி இயக்குநரீ அலுவலகச் சுற்றுக்குள்)

கல்லூரிச் சாலை, நுங்கம்பாக்கம்;

சென்னை - 600006

கல்லூரிப் பாடநூல்களுக்கு 20% கழிவு வழங்கப்படும்